|4|

சுதேச மித்திரன்

தொகுதி - 29. பகுதி. 18 முதல் : 22 வரை

1958

ப

JL
211, N30
N58.29.18-22
162243


சுதேச
மித்திரன்
MS.5548

புதிதாக அமுலுக்கு வரும்

மெட்ரிக் முறை



இந்தியாவில் புழக்கத்திலிருக்கும் அளவுகளிலும் எடைகளிலும் பொதுவான முறை பின்பற்றப்படவில்லை. சற்றேறக் குறைய 143 முறைகள் நடைமுறையிலிருக்கின்றன. பல வேறு முறைகள் இருப்பது எத்துக்களுக்கும் ஏமாற்றுகளுக்கும் இடமளிக்கிறது. ஏற்கனவே தசாம்ச நாணய முறை அமுலுக்கு வந்திருக்கிறது. ஆகையால் எடைகளையும் அளவுகளையும் மெட்ரிக் முறைப்படி ஒரேவண்கயாகக் கணக்கிடும் வழக்கம் ஏற்பட்டால் எல்லா வகைக்கும் அது சௌகரியமாக இருக்கும். 1956-ஆம் ஆண்டின் எடைகள் அளவுகள் தர நிர்ணயச்சட்டம். மெட்ரிக் முறையை அடிப்படையாகக் கொண்டே அடிப்படை அளவுகளை நிர்ணயித்திருக்கிறது. எடை-அளவு முறைகளில் ஏற்படும் இச் சீர்திருத்தம் பொது மக்களுக்குத் தொல்லை ஏற்படாத வகையில் மெதுவாகவே அமுல் நடத்தப்படும்.

நாட்டின் ஒரு குறிப்பிட்ட பகுதியிலோ, வியாபாரத்திலோ மெட்ரிக் முறை அமுலுக்கு வந்த பிறகும் கூட, இப்போதுள்ள எடைகளும் அளவுகளும் முதல் மூன்று ஆண்டுகள் வரை கூடவே புழக்கத்திலிருக்கும்.

மெட்ரிக் முறை
1958
அக்டோபரிலிருந்து
அமுலுக்கு வருகிறது.

புதிய மெட்ரிக் எடைகள்

எடைக் கணக்கீட்டில் அடிப்படை அளவு
கிலோகிராம் = 1 சேர் 6 தோலா
(அல்லது 86 தோலா)
அல்லது 2 பவுண்டு 3 அவுன்ஸ்

மற்ற அளவுகள்
10 மில்லி கிராம் = 1 செண்டி கிராம்
10 செண்டி கிராம் = 1 டெசி கிராம்
10 டெசி கிராம் = 1 கிராம்
10 கிராம் = 1 டெகா கிராம்
10 டெகா கிராம் = 1 ஹெக்டா கிராம்
10 ஹெக்டா கிராம் = 1 கிலோ கிராம்

பெருக்கங்கள்
100 கிலோ கிராம் = 1 குயிந்தல்
10 குயிந்தல் அல்லது 1000 கிலோ கிராம் = 1 மெட்ரிக் டன்

DA-57/240

இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது

162243
சென்னை-600 008

பொருளடக்கம்

XXIX] விளம்பி ஹூ வைகாசி மீ 19உ ஜூன் 1, 1958 [No. 18

புதுச்சேரிப் பூசல்		3
காற்று வாக்கிலே	—அரட்டை	4
உலகப் பலகணி	—கே. பி. எஸ்.	6
வீட்டுக் கணக்கு	—டி. என். பி.	7
தலைநகர் தபால்		12
தொட்ட மனம்	—எம். பி. சுப்ரமண்யன்	13
மலர் மஞ்சம்	—தி. ஜானகிராமன்	19
உலகத்திலோர் புதுமை	—ராஜம்	24
இருள் நீங்கியது	—மிதுனம்	25
ஆதித்தன் காதல்	—ஆர்வி	27
நீ இல்லாவிட்டால்	—இ. ஸ்ரீ. க.	33
உலகியல் கதைகள்	—சாலிவாஹனன்	35
தங்கப் பதுமை	—அஸ்வத்தாமா	36
அப்பாக்கள் சுத்த மோசம்	—ஸ்ரீவத்ஸன்	39
யாரோ ஒருவன்	—சரோஜா ராமமூர்த்தி	40
கவி உலகில் கம்பன்	—ச. து. சு. யோகியார்	45
நாராயணீயம்	—அனந்தராம தீக்ஷிதர்	47
மீனு என் மனைவியல்ல	—கலாபாரதி	49
கலா மண்டபம்		52
நகர அரங்கம்	—ஸஞ்சாரி	54
வாசுதேவாச்சார் கீர்த்தனை		55

"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளிவரும் கதைகளில் பெயர்கள் சம்பவங்கள் எல்லாம் கற்பனையே அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.



புகலெது நெஞ்சுக் கிகலெது மண்ணில்
புழுவென உயிரிங் குழல்வ தலால்?

வீணை நரம்பை விரல்கொடு வருடி
 மீட்டி லயிக்க நினைத்திட்டால்
கானம் தருமுயிர் தந்திய றுந்தே
 கலைந்து. சிதைந்து கிடந்திட்டால்...? (புக)

தேடி யெடுத்தொரு தெய்வக் கற்பனை
 தீங்கவி யாக்க நினைத்திட்டால்
நாடிய சொற்களும் ஓடி யொளிந்திட
 நைந்தொரு ஏடும் கிடந்திட்டால்...? (புக)

இயற்கை வண்ணச் சோபிதம் கண்டு
 என்னை மறந்திட நினைந்திட்டால்
துயருறு நெஞ்சில் உருகிய கண்ணீர்த்
 துளிகள் விழியைத் திரையிட்டால்...? (புக)

புன்மை யழித்திடும் புன்னகை கண்டிட
 புண்ணியச் சந்நிதி விரைந்திட்டால்
முன்னுறு கதவம் இடைவழி நடுவே
 மூடி யிருந்தே மறைத்திட்டால்...? (புக)

வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்
சுதேசமித்திரன்
வாரப்பதிப்பு

★

புதுச்சேரிப் பூசல்

புதுச்சேரியில் ஆலோசகர் சபை கலைக்கப்பட்டு விட்டது. நிர்வாகப் பொறுப்பு முழுவதையும் சட்டப்படி அங்குள்ள பிரதமக் கமிஷனர் ஏற்றுக்கொண்டு விட்டார். வேறு சில ராஜ்யங்களைப்போல் புதுச்சேரியிலும் காங்கிரஸ் கட்சிக்குள் தலையெடுத்துள்ள பூசல்களே இந்த அவல நிலைக்குக் காரணம். அங்கு அசெம்பிளியில் காங்கிரஸ் அங்கத்தினர்கள் 26 பேர் இருக்கின்றனர். எதிர்க் கட்சியினரின் எண்ணிக்கை 12 தான். எனினும், காங்கிரஸ் கட்சி தன்னிடமுள்ள மெஜாரிட்டி பலத்தைக் கொண்டு ஆலோசகர் சபை (மந்திரி சபை) அமைக்கக் கூடவில்லை. புதுச்சேரி எப்போதுமே பூசல்களுக்குப் பெயர் பெற்றது. எனினும், அதிகாரம் பிரான்ஸிடமிருந்து ஸ்தல மக்கள் கைக்கு மாறிய பிறகாவது அங்குள்ள ஜனப்பிரதிநிதிகள் ஒன்றுபட்டு, ஜனநாயக ரீதியில் ஆட்சியை நடத்தி, சமுதாய க்ஷேமத்தை வளர்ப்பதில் ஒருமனத்தோடு முனைவரென்று பலரும் எதிர்பார்த்தனர். ஜனங்களும் 1955-ம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் காங்கிரஸிடம் நம்பிக்கை வைத்து, அதற்கு விசேஷமான ஆதரவளித்தனர். ஆனால், பின்னர் அக்கட்சி இயங்கி வந்திருக்கும் வகை கண்டு அவர்கள் கொடிய ஏமாற்றமடைந்திருப்பது திண்ணம். காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிளவை சீர்படுத்தச் சமீபத்தில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி செய்த முயற்சியை அனைவரும் அறிவர். ஆனால், அது உருப்படாமல் போய் விட்டது. காங்கிரஸ் வாதிகள் ஒருவரையொருவர் காலை வாருவதிலும், அதிகாரத்தைக் கைப்பற்றும் ஆசையுடன் அருவருக்கத்தக்க முறைகளைக் கையாள்வதிலும் ஈடுபட்டு வந்திருப்பதன் பலன் தான் இன்றைய நிலை.

அடுத்தபடியாக ஆகஸ்டு மாதத்தில் புதுச்சேரி அசெம்பிளி கூடவிருக்கிறது. அதற்குள்ளாவது காங்கிரஸ் கட்சியினர், தங்களிடையுள்ள தகராறுகளை ஒருவாறு தீர்த்துக் கொண்டு ஒருமித்து வேலை செய்ய வேண்டும். அடுத்த அசெம்பிளி கூட்டத்திலும் ஆலோசகர்கள் தேர்தல் விஷயத்தில் காங்கிரஸ் கட்சி கட்டுப்பாடாக இயங்கவில்லையாயின், அதைத் தொடர்ந்து அசெம்பிளி கலைக்கப்பட்டு விடலாம். இதன்பலனாக அக்கட்சியிடம் வாக்காளருக்குள்ள நம்பிக்கை மேலும் எந்த அளவு அதிர்ச்சியுறும் என்று சொல்லத் தேவையில்லை. எனவே, அக்கட்சியின் எதிர்காலம் முழுவதுமே தற்போது அவர்கள் தம் பொறுப்பை உணர்ந்து ஒருமுகமாகச் செயல்படுவதைப் பொறுத்திருக்கிறது. இப்போதும் புதுச்சேரியில் ஏதாவதொரு வகையில் பிரெஞ்சு ஆதிக்கம் நீடிப்பதற்கு ஆதரவான கும்பல் இருப்பதைக் காங்கிரஸ் கட்சியினர் மறந்து விடக்கூடாது. அங்கு ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியை அத்தகைய பிற்போக்காளர்கள் தங்களுக்குச் சாதகமாக உபயோகித்துக் கொள்ளக்கூடும். மேலும், பிரான்ஸிலும் ஏகாதிபத்திய விடாக்கண்டர்கள் பலர் இருந்து வருவதை அனைவரும் அறிவர். புதுச்சேரியில் பிரெஞ்சு அதிகார மாற்றத்திற்கு சட்டபூர்வமான அங்கீகாரம் இன்னும் கிடைக்காமலிருப்பதற்கு இவர்கள் போட்டு வரும் முட்டுக்கட்டைதான் காரணம். தற்போது பிரெஞ்சு அரசியலில் ஏற்பட்டுள்ள குழப்பத்தைக் கவனித்து வருவோர் அங்கு மறுபடி ஏகாதிபத்திய வெறியர்களின் கை ஓங்கி விடுமோ என்று அஞ்சுவது இயற்கை. பிரெஞ்சுக்காரர்கள் இனி எந்த நிலையிலும் புதுச்சேரியைத் தங்கள் ஆதிக்கத்திற்குள்ளாக்கிக் கொள்ள முடியுமென்று நாம் ஒரு கணமும் எண்ணவில்லை. ஆனால், அதிகார மாற்றத்திற்குச் சட்டபூர்வமான அங்கீகாரம் அளிப்பதை மேலும் ஒத்திப் போடுவதற்கு புதுச்சேரியில் ஜனப்பிரதிநிதிகளிடையுள்ள பிளவுகளை அவர்கள் ஒரு பிரசாரக் கருவியாக உபயோகித்துக் கொள்ளக்கூடும். எனவே, எந்த நோக்குடன் பார்த்தாலும், அங்குள்ள காங்கிரஸ் கட்சியினர் தங்களிடையுள்ள மாச்சரியங்களை மறந்து, பொது நலத்தைப் பிரதானமாகக் கொண்டு, ஒத்துழைக்க முன்வருவதில் சிறிதும் தாமதம் செய்யக்கூடாது.

காற்று வாக்கிலே

தேவை ! சிந்தனை தேவை !

அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த தேர்தல் முடிவு தெரிந்து விட்டது. தேவிகுளத்தில் கம்யூனிஸ்ட் ஜெயபேரிகை. காங்கிரஸ் மண்ணைக் கவ்வியது. இந்த இடைத் தேர்தலில் கம்யூனிஸ்ட் அபேட்சகரைத் தோற்கடித்து விட்டால், கேரள சட்டசபையில் அக்கட்சியின் பலம் குறைந்துவிடும்; கம்யூனிஸ்ட் சர்க்காரைத் தோற்கடித்துவிடலாம் என்று எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணித் திட்டமிட்டனர். சாதாரண நாட்களில் ஒருவரையொருவர் வெட்டி, குத்திக் கொள்கிறவர்கள், அபூர்வமான நட்புறவு கொண்டனர். காங்கிரஸுக்கு உண்மையான எதிர்க் கட்சியாக இருக்கப் போவதாகத் தம்பட்டமடித்து வரும் பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, ஒரிஸ்ஸாவில் கம்யூனிஸ்ட் ஆதரவுடன் காங்கிரஸல்லாதார் சர்க்காரை ஏற்படுத்தத் தீவிரமாக முயன்ற பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, கேரளத்தில் காங்கிரஸுடன் கூட்டு சேர்ந்தது! வகுப்பு வாதத்தை வெறுக்கும் காங்கிரஸும், அப்பட்டமான வகுப்புவாத ஸ்தாபனமான முஸ்லிம் லீகும் அரவணைத்து நின்றன! இடது சாரி ஓட்டுகளையும் பிளக்கப் புரட்சிகர சோஷலிஸ்டுகள் கட்சி கட்டினர். எதிராகத் திரண்டிருந்த சக்திகளின் அணியைக் காணும்போது இந்த உப தேர்தலில் கம்யூனிஸ்ட்களின் வெற்றி மிக முக்கியத்துவம் பெறுகிறது. சென்ற தேர்தலைக் காட்டிலும் அதிகம் வாக்குகள் பெற்று வெற்றி. கம்யூனிஸ்ட் கட்சிக்குச் செல்வாக்கு குறைந்து வருகிறது; தொழிலாளி மக்களிடையே அவர்கள் செல்வாக்கு வீழ்ந்தே விட்டது என்று ஆரூடம் கூறி வந்தவர்களுக்கு, வாக்காளர் நல்ல படிப்பினை கற்பித்தனர். ஜோதிடமும் பொய்த்தது! படாத பாடு பட்டும் படுதோல்வி; முடிவு கண்டு மாற்றுக் கட்சியினர் தவிப்பு. டில்லிக் காங்கிரஸ் தலைமையில் திகைப்பு, திகில். பல்லாயிரம் ஓட்டுகள் அதிகம் பெற்றுக் கம்யூனிஸ்டுகள் ஜெயிப்பார்கள் என்று மேலிடம் கனவிலும் கருதவில்லை. கேரள காங்கிரஸோ திக்குமுக்காடுகிறது. மீசையில் மண் ஒட்டவில்லை என்ற ஜம்பப் பேச்சுக்குமட்டும் குறைவில்லை. தேவிகுளம் தேர்தல் முடிவு நமக்கு ஒரு அதிர்ச்சி வைத்தியமே என்றார் சென்னை வந்த மத்திய மந்திரி. இந்த வைத்தியமாவது பலனளிக்குமா?

கேரளம் இதற்குமுன் கண்டிராத அளவு தீவிரப் பிரசாரம் நடந்த தேர்தல். தில்லுமுல்லு, திருகுதாளம், தகிடுதத்தம், புளுகு, புனைசுருட்டு, கடைசி நிமிஷ அயோக்கியத்தனம் அத்தனையும் நடந்த தேர்தல்.

ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கும் நிலையில் தேர்தல்களை எப்படி நடத்த வேண்டும் என்பதைக் கம்யூனிஸ்ட் மந்திரிகள் செய்து காட்டிய தேர்தல்! தேர்தல் முனைக்கு வருவதேயில்லையென அவர்கள் விரதம்; அதற்கு முற்றிலும் மாறாக ஊரை விட்டு ஊர் சென்று, நமது அருமை அமைச்சர்கள் அமர்க்களமாகப் பிரசாரம்! சொந்த ராஜ்யத்தில் அமைச்சர்கள் தேர்தல் பிரசாரம் செய்வதே தவறென்றால், மாற்றுக் கட்சி ஆட்சி நடத்தும் வேறொரு ராஜ்யத்தில் அந்த ஆட்சியாளரை எதிர்த்துப் பக்கத்து மாநில மந்திரிகள் பிரசாரம் செய்வது என்ன லட்சணமோ? கம்யூனிஸ்டுகள் அதிகாரத்திலிருக்க லாயக்கில்லை என்று மாற்றுக் கட்சியினர் நினைப்பு. தேவிகுளம் வாக்காளர் கருத்தோ வேறு விதம். கம்யூனிஸ்ட் கட்சி இந்த நாட்டின் பண்புக்கு அறவே ஒவ்வாது; அதனை நம்பாதீர் என்று ஸ்ரீமன் நாராயணனே எச்சரிக்கை செய்யலாம். ஆனால், கம்யூனிஸ்ட் மந்திரி சபையின் ஓராண்டு கால சேவைக்கு மக்கள் நன்மதிப்புக் கொடுக்கிறார்கள் என்பதுதானே தேவிகுளம் தந்த தீர்ப்பு? மக்களை விழிப்புறச் செய்ய வேண்டுமானால், பெண்களைத்தான் முதலில் விழிப்புறச் செய்ய வேண்டும்; பெண்கள் விழிப்பு பெற்றுச் செயலாற்றத் துணிந்தால், முன்னேற்றம் நிச்சயம் என்றும் சமீபத்தில் எடுத்துரைத்தார், பண்டிதர். தேவிகுளம் தேர்தலிலே ஆண்களைவிட அதிகமாகப் பெண்களே ஓட்டளிக்க முன் வந்தனராம். 'ஓட்டில்லா, ஓட்டில்லா, கள்ளக் காளைக்கு ஓட்டில்லா! மந்திரிக்கன் பறைஞ்சாலும் கள்ளக் காளைக்கு ஓட்டில்லா! வெள்ளிக் காசை அள்ளி விதைச்சாலும் கள்ளக் காளைக்கு ஓட்டில்லா' என்று மலைவாழ் மலையாளிகளும், அவர்களுடன் கூடி வாழும் தமிழ் சகோதரர்களும் கோஷமெழுப்பினர். கேரள கம்யூனிஸ்ட் சர்க்காரின் தலைவிதியை இறுதியாக நிர்ணயித்தவர்கள் தமிழர்களே! ஒரிஸ்ஸாவில் காங்கிரஸ் மந்திரி சபைக்கே மக்கள் ஆதரவு உண்டு என்பதை அங்கு நடந்த உப தேர்தல்கள் நிரூபித்துவிட்டதாகக் குட்டித் தலைவரொருவர் குதூகலிக்கிறார். ஆளத் தெரிந்தவர்கள் காங்கிரஸ் கட்சிக்கு வெளியேயும் இருக்கிறார்கள் என்பதை மெய்ப்பித்து வரும் கேரள கம்யூனிஸ்ட்களுக்கு மக்கள் ஆதரவுக்குத் தேவிகுளம் முடிவு சரியான சான்றுதானே?'

நிர்வாகத் திறமை மட்டும் போதாது; குணம் வேண்டும்; நடத்தையும் நன்றாக இருக்க வேண்டும் என்று பொதுஜனங்கள் விரும்புவது தெளிவு. பாமரர், பாட்டாளிகள் மனோபாவம் என்ன என்பதைச் சரிவரக் கணக்கிடாத தவறு சரியான உதை வாங்கிக் கொடுத்திருக்கிறது. காங்கிரஸில் 'கொஞ்சம்' அபஸ்வரம் இருப்பதாக அண்மையில் பேரமைச்சர் கூறினார். 'கொஞ்சம்' என்பதற்கு மக்கள் அகராதியில் அர்த்தம் வேறுவிதமாக இருக்கிறது. அன்றாட நிகழ்ச்சிகளும் அவர்கள் கருத்தையே வலுப்படுத்துகின்றன. புதுவையில் காங்கிரஸ் கட்சிக்குள் பூசல்களால் அவல நிலை. சட்டசபையில் பெரும்பான்மை பலமிருந்தும் ஆலோசகர் சபை அமைக்க முடியாத அவலட்சணம். ஓயாத கோஷ்டிச் சண்டையைத் தீர்த்து வைக்க, கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் உடைப்பைச் சரிக்கட்டப் பொதுச் செயலாளரே நேரில் வந்து, என்னென்னவோ ஒட்டுப் போட்டும் பலிக்கவில்லை. ஊழல் மலிந்த, பதவி வேட்டைக்காரர்கள் நிறைந்த புதுவைக் காங்கிரஸை வைத்திருப்பதா, கலைத்து விடுவதா? மேலிடத்தின் தலைவலி. 'ஜில்லாவுக்கு ஒரு உண்மை ஊழியர் கிடைத்தால் போதுமே! பதவி மோகமின்றி, முழு நேரமும் பணியாற்றக்கூடிய ஒரு தொண்டர் கிடைத்தால் அவரை மக்கள் காங்கிரஸின் சின்னமாகக் கருதுவார்களே! காந்தி மகான் தலைமையில் வளர்ந்த ஸ்தாபனத்தில், அத்தகைய ஒரு நபர் ஒரு ஜில்லாவுக்குக் கிடைப்பது அரிதாகி விட்டதே!' ஸ்தாபனப் பெரியாரில் ஒருவர் அலறுகிறார். அந்தோ, பரிதாபம்! காங்கிரஸுக்குப் பிரசாரம் செய்ய 'கூலி'க்கு ஆள் திரட்டவும் ஏற்பாடு! தேவிகுளம் தீர்ப்பு, நல்ல சமயத்தில் படிப்பினை. உதாசீனம் செய்வதற்கில்லை. காங்கிரஸ் ஸ்தாபனம் சார்பட்ட காங்கிரஸ்காரர்களின் சிந்தனையின் போக்கு இனியாவது அடியோடு மாறுமா?

—அரட்டை.

தட்டை மிராசுதார் ஸ்ரீ ஆர். ரகுநாத ஐயங்காரின் புத்திரர் சிர. ஆர். ஸ்ரீனிவாஸ (எ. ஐ. ஓ. டபிள்யூ. சென்ட்ரல் ரயில்வே)னுக்கும், மிராசுதார் ஸ்ரீ என். திருநாராயண ஐயங்கார் புத்திரி செள. ஜானகிக்கும் குடந்தையில் சமீபத்தில் சிறப்பாக விவாகம் நடைபெற்றது.





லெபனானில் அமளி

சமீப சில மாதங்களாக அமைதி நிலவிய மத்தியக் கிழக்கில் மீண்டும் குமுறல் ஏற்பட்டுள்ளது. லெபனான் நாட்டில் அரசாங்கத்துக்கெதிராகக் கலகம் வலுத்ததைத் தொடர்ந்து உலக வல்லரசு கோஷ்டிகள் பரஸ்பரக் குற்றச்சாட்டுப் படலத்தை மீண்டும் தொடங்கி விட்டன.

லெபனான் மந்திரி சபை ராஜிநாமா செய்ய வேண்டும் என்று எதிர்க் கட்சியினர் நோட்டீஸ் கொடுத்ததைத் தொடர்ந்து, கலவரம் மூண்டது. வேலை நிறுத்தம் செய்யுமாறும் எதிர்க் கட்சி வேண்டுகோள் விடுத்தது. துருப்புகளின் உதவியை அதிகாரிகள் நாடினர். அதன் பேரில் கடைகள்மீது கலகக்காரர்கள் கற்களை வீசினர். இராக் பெட்ரோல் கம்பெனியின் எண்ணெய் குழாய்கள் துண்டிக்கப்பட்டன. வெடி குண்டு வீச்சுக்களும் ஏற்பட்டன. கலகம் காரணமாக சிரியாவுடன் உள்ள எல்லையை லெபனான் சர்க்கார் மூடினர். ஊரடங்கு பிறப்பிக்கப் பட்டது. இரு நாடுகளுக்குமிடையே பிரயாணம் நிறுத்தப்பட்டது.

லெபனான் மக்களை அரசாங்கத்துக்கெதிராகத் தூண்டிவிடும் நோக்கத்துடன் அந்நாட்டு உள்விவகாரங்களில் ஐக்கிய அரபுக் குடியரசு அதிகாரிகள் தலையிட்டு வருவதாக லெபனான் சர்க்கார் ஆட்சேபம் தெரிவித்தது. இந்தப் புகாரை ஐக்ய அரபுக் குடியரசு மறுத்துள்ளது.

கலவரங்களில் போலீஸ் தளபதி கொல்லப்பட்டார். பலர் இரு தரப்பிலும் காயமடைந்தனர்.

சிரியாவிலிருந்தும் எகிப்திலிருந்தும் ஆயுதபாணிகள் லெபனானுக்குள் ஊடுருவியுள்ளதாயும், அவர்கள்தான் லெபனானில் கலவரத்தைத் தூண்டியுள்ளதாயும் மேலை நாடுகள் கூறுகின்றன.

லெபனான் சர்க்காருக்குத் துருப்புகள், ஆயுதங்கள் அனுப்பத் தயாரென்று அமெரிக்கா, பிரிட்டன் அறிவித்ததைத் தொடர்ந்து ரஷ்யா எச்சரிக்கை விடுத்தது. லெபனானின் சொந்த விவகாரங்களில் அன்னிய ஆளும் வட்டாரங்கள் தலையிட முயற்சிப்பது மத்யக் கிழக்கில் சமாதானத்திற்கும் பந்தோபஸ்திற்கும் ஆபத்தான நிலைமையை உண்டாக்குமென சோவியத் சர்க்கார் கருதுவதாக 'டாஸ்' செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

மேலைநாட்டுச் சார்புள்ள கொள்கையைக் கைவிடப் போவதில்லை என்று லெபனான் ஜனாதிபதி சாமூன் அறிவித்ததுடன், ராஜிநாமாச் செய்யவும் மறுத்து விட்டார்.

ஐஸன்ஹவர் கோட்பாட்டின்படி லெபனானில் அமெரிக்கா தலையிடுவதற்கான சாக்குதான் ஐக்ய அரபுக் குடியரசு தலையிடுவதென்ற புகார் என்று ஐக்ய அரபுக் குடியரசு வட்டாரத்தினர் கூறினர். லெபனான் விவகாரம் ஐக்ய நாடுகள் சபையில் விவாதத்திற்கு வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

டிகாலேக்கு ஆதரவு

அல்ஜீரியாவில் பூரண சிவில், ராணுவ, அதிகாரங்களைப் பெற்றுள்ள ஜெனரல் சலான் பிரான்ஸில் ஜெனரல் டிகாலே தலைமையில் பொதுஜன பந்தோபஸ்து அரசாங்கம் ஏற்பட வேண்டுமென்று பகிரங்கமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார். அல்ஜீரியாவில் பொதுஜன பந்தோபஸ்துக் கமிட்டி நிறுவப்பட்டதைத் தொடர்ந்து, அவர் இவ்வாறு விருப்பம் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, பிரஞ்சு சட்ட சபையின் அதிகாரங்களைக் குறைத்து, அரசாங்கத்தின் அதிகாரங்களை அதிகரிக்கும் வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்தும் முயற்சியில் புதுப் பிரஞ்சுப் பிரதமர் பிளிம்ளின் மும்முரமாக ஈடுபட்டுள்ளார்.

கார்ஸிகாவில் புரட்சி

கார்ஸிகா தீவும் பிரஞ்சு ஆதிக்கத்திலிருந்து நழுவியது. அங்குள்ள பிரஞ்சு நிர்வாக அலுவலகத்தையும் இதர அலுவலகங்களையும் ராணுவத்தினர் கைப்பற்றி விட்டனர். இத்தகவலை அறிவித்த பிரஞ்சு பிரதமர் பிளெம்ளின், கலகக்காரர்கள் உள்நாட்டுப் போரில் நாட்டை இழுப்பதாகக் குறிப்பிட்டார்.

கார்ஸிகாவில் சில தினங்களுக்கு முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தையொட்டி நிறுவப்பட்ட பொதுஜன பந்தோபஸ்துக் கமிட்டிதான் இப்போது அத்தீவில் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது.

இக்கமிட்டிக்கு கீழ்ப்படியக் கூடாதென அங்குள்ள அதிகாரிகளுக்கும் பாரிஸ் சர்க்கார் உத்தரவிட்டுள்ளது.

ஒரிஸ்ஸா

இம்மாதம் 9-ந் தேதியன்று சமர்ப்பித்த தனது மந்திரி சபை ராஜிநாமாவைக் காங்கிரஸின் மேலிடத்தின் ஆலோசனையின்பேரில் டாக்டர் ஹரே கிருஷ்ண மஹ்தாப் வாபஸ் பெற்றுக் கொண்டார். சமீப உபதேர்தல்களில் காங்கிரஸ் வெற்றி பெற்றதன் பயனாகக் காங்கிரஸ் கட்சிக்கே சட்ட சபையில் மெஜாரிடி பலமிருப்பதால், ராஜிநாமாவை வற்புறுத்த வேண்டாமென்று கவர்னர் சுக்தங்கர் வேண்டுகோள் விடுத்துள்ளதையொட்டி, காங்கிரஸ் ஆட்சியே தொடர்ந்து நடைபெற முடிவு செய்யப் பட்டுவிட்டது.

புதுச்சேரி மந்திரி சபை கலைப்பு

புதுச்சேரி ராஜ்ய மந்திரி சபை (ஆலோசக சபை)யைப் பிரதமக் கமிஷனர் கலைத்து விட்டார். புதிய மந்திரி சபை நிறுவக் காங்கிரஸ் கட்சி செய்த முயற்சி பலிக்கவில்லை என்பதைச் சட்டசபையின் விசேஷக் கூட்டத்தில் கட்சித் தலைவர் குபேர் அறிவித்ததைத் தொடர்ந்து, சட்ட சபைக் கூட்டம் கலைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பழைய மந்திரிகள் 6 பேரும் ராஜிநாமா செய்தனர். அவற்றைப் பிரதமக் கமிஷனர் ஸ்ரீ கிர்பலானி ஏற்றுக்கொண்டு, அடுத்த ஆகஸ்டுவரை ஆலோசனை சபை இல்லாமல் தாமே நிர்வாகத்தை நடத்தப் போவதாக அறிவித்தார். ஆகஸ்டில் அசெம்பிளி கூடும்போது புதிய ஆலோசனை சபை நிறுவ முயற்சி செய்யப்படும்.

காங்கிரஸ் கட்சிக்குள்ள பலத்தில் பாதி பலம்கூட எதிர்க் கட்சியான மக்கள் முன்னணிக்கு இல்லாததால், எதிர்க் கட்சியை சர்க்கார் அமைக்குமாறு அழைக்கும் பிரச்னை எழவில்லை.

போலீஸார் மீது வழக்கு

கோடம்பாக்கம் போலீஸ் ஸ்டேஷனில் ஆறுமுகம் என்பவரிடமிருந்து திருட்டு வழக்குச் சம்பந்தமாக ஒப்புதல் வாக்கு மூலம் பெறுவதற்காக அடித்து உதைத்து மரணம் உண்டுபண்ணியதாக சப் இன்ஸ்பெக்டர்கள் நடராஜன், ராஜாங்கம் ஆகியவர்கள்மீதும் ஜகந்நாதன், கேசவன், ஆர். நடராஜன் ஆகிய 4 கான்ஸ்டபிள்கள்மீதும் பிரதம மாகாண மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் போலீஸ் கமிஷனர் புகார் தாக்கல் செய்தார். புகார் ஏழாவது மாகாண மாஜிஸ்டிரேட் கோர்ட்டிற்கு மாற்றப்பட்டுள்ளது. 63 சாட்சிகள் விசாரிக்கப்படுவர். இவ்வழக்கை நடத்த விசேஷ பிராஸிகூடர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ் எழுத்தாளர் சங்க மகாநாடு

சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் 6வது மகாநாடு மே மாதம் 31 ஜூன் 1ந் தேதிகளில் நாகர் கோவிலில் சங்கத் தலைவர் ஸ்ரீ வே. சாமிநாத சர்மா தலைமையில் நடைபெறும். 'தின மலர்' நிர்வாக ஆசிரியர் ஸ்ரீ டி., வி. ராமசுப்பய்யர் வரவேற்புக் குழுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இந்திய அரசாங்க விஞ்ஞான கலாசார இலாகா உதவி மந்திரி பேராசிரியர் ஹுமாயூன் கபீர் மகாநாட்டைத் திறந்து வைப்பார். சென்னை அமைச்சர் ஸ்ரீ பக்தவத்ஸலமும் மகாநாட்டில் கலந்து கொள்ளுவார். இது சம்பந்தமாகச் சங்கத்தின் சஞ்சிகை 'பாரதி' சிறப்பு மலராக, இலக்கிய மணம் கமழ வெளிவரும்.

—கே. பி. எஸ்.

(எங்கெல்லாமோ சுற்றி அலைந்து விட்டுப் பரபரப்புடன் வீட்டிற்குள் நுழைந்ததும், நுழையாததுமாய், நேரே 'கோட் ஸ்டாண்ட்' இருக்குமிடம் சென்று, அதில் தொங்கிக் கொண்டிருந்த ஆபீஸ் கோட்டில் ஒரு பைகூட விடாமல் கையை விட்டுப் பார்த்து, எதையோ தேடினான் குமார். தன் சட்டைப் பையிலிருந்த இரண்டொரு சில்லறையை ஒரு நூறு தடவை திருப்பித் திருப்பி எண்ணிப் பார்த்தான். முதல் தடவை எண்ணும்போது எவ்வளவு இருந்ததோ, அவ்வளவுதான் நூறுவது தடவையும் இருந்தது. கைவிரல்களைத் தலை மயிருக்குள் சொருகிக்கொண்டு நெற்றியைச் சுருக்கி, ஒரு நிமிஷம் யோசனையில் ஆழ்ந்தான். அடுத்த விநாடி வெறி பிடித்தவன்போல் ஒரு அலமாரி விடாமல், ஒரு பெட்டி விடாமல், ஒரு துணி விடாமல் அலசித் தேடிவிட்டான். வீட்டைக் கண்கொண்டு பார்க்கச் சகிக்கவில்லை. மனைவி சுசீலாவும், அரை டிக்கெட் மகன் பாலுவும் இதையெல்லாம் பார்த்தும் பாராமலிருந்தார்கள்.)

குமார்:—(சலிப்புக் குறையாமல்) என்ன இது? பாக்கி பணமெல்லாம் எங்கே போச்சு? நேத்து மத்தியானந்தானே அஞ்சு ரூபா மாத்தினேன்?...சுசீலா அதிலே ஏதாவது எடுத்தாளோ?...சுசீலா...சுசீலா...ஒரு ரூபா ரெண்டணாக் குறையுதே?...

சுசீலா:—(சமையலறையிலிருந்து வந்துகொண்டே) சூப்பிட்டீங்களா?... அடடா! இதென்ன கரிக்கடை மாதிரி இப்படி லூட்டி செய்திருக்கீங்க? இப்பத்தானே எல்லாத்தையும் சுத்தஞ் செய்து வச்சேன்?

குமார்:—(சற்று கோபத்துடன்) நீ சுத்தஞ் செய்யறதுலே, எதுவுமே பாக்கி வைக்க மாட்டேன்னு தெரியுது.

சுசீலா:—(காதில் போட்டுக் கொள்ளாமல்) வண்ணான் வந்திருக்கானா என்ன? துணிமணியெல்லாம் இப்படிச் சிதறிக் கிடக்குது.

பாலு:—(குறுக்கிட்டு) இல்லேம்மா... அப்பா காசெத் தொலைச்சுப்புட்டு தேடிக் கிட்டிருக்கா...

குமார்:—(தலையில் கையை வைத்துக் கொண்டு) வெச்சது வெச்சபடி இருக்கமாட்டேங்குது இந்த வீட்டுலே. சுவரையும், கதவையும் பேக்க முடிஞ்சா, அதுவும் இனிமேலே காணாமெ போயிடும்... சுசீலா, உன்னெத்தான் கேட்டுக்கிட்டிருக்கேன், நான் வெச்சதெ எதையாவது எடுத்தியா நீ?

சுசீலா:—நீங்க என்ன வச்சிருந்தீங்க?

பாலு:—ஒரு ரூவாயைக் காணுமாம்மா...

குமார்:—(எரிச்சலுடன்) அதுக்குள்ளற ரெண்டணாவை ஜிலேபிமாதிரி முழுங்கிப்பிட்டியேடா...ஒரு ரூபா ரெண்டணாடா, ஒரு ரூபா ரெண்டணாடா! தெரியுதா?

சுசீலா:—வேறென்ன வேலை உங்களுக்கு? எங்கியாவது காணாமெவுட்டுப்பிட்டு, மத்தவங்களெ உயிரெடுப்பீங்க. எங்கே வெச்சீங்க?

குமார்:—எங்கே வெச்சேனா? அசட்டுக் கேள்வி. அது தெரிஞ்சா உன்னைக் கேட்பேனா?

சுசீலா:—தனக்காகவும் தெரியாது, மத்தவங்க சொன்னாலும் தெரியாது... எனக்குத் தெரியாமெ செலவு செஞ்சிருப்பீங்க.

குமார்:—நீ இந்த வீட்டுக்குக் கான்ஸ்டேபிளா என்ன? எனக்குத் தெரியாமே, உனக்குத் தெரியாமேன்னு, என்ன பேச்சு இது, சுசீலா? நான் தினம் பணத்தை வைக்கிறதும், அதைத் தேடிக்கிட்டு ஓடறதும் ஒளியறதும், இதுவே பெரிய தொல்லையாப் போயிடுச்சு!...

சுசீலா:—மூஞ்சியைத் தூக்கிக்கிட்டு என்ன பிரயோசனம்?

குமார்:—நீ ஏன் இப்படிக் கொஞ்சங் கூடப் பொறுப்பில்லாமெ பேசுறே? காசெ கண்ணாலெ பாத்தியான்னு கேக்கக் கூடாதா?

சுசீலா:—'டாம் டீம்'னு செலவு செஞ்சுப்பிட்டு, பாக்கிச் சில்லறையெக்கூட வாங்க மறந்து போயிருப்பீங்க.

குமார்:—வாங்கிறபோது கூட நின்னுக்கிட்டு இருந்த மாதிரி பேசறியே...!

சுசீலா:—கூட இருந்தாத்தான் தெரியுமா?

குமார்:—குபேரனுக்கு மாப்பிள்ளை, பாரு! பணம் பணமா கடலுலே வாரிக் கொட்டிக்கிட்டிருக்கேன்.

சுசீலா:—சில்லறையை வாங்காமெ மறந்து போவறத்துக்கு, குபேரனுக்கு மாப்பிள்ளையாத்தான் இருக்கணுமோ?... எங்களுக்குப் பணமில்லேன்னு நீங்க குத்திக் காட்ட வேணும், ஆமாம்.

குமார்:—இதோ பாரு. நீ உன்னிஷ்டப்படி வார்த்தைகளை அப்படியே கலப்பை கலப்பையா அள்ளி வீசவேணுமிப்போ. உன்னையும் உங்க வீட்டையும் யாரு குத்திப்பிட்டாங்க, குத்தி.

சுசீலா:—குத்தறதுன்னு சொன்னா, கோணி ஊசியெ எடுத்துத்தான் குத்தணுமா, என்ன?

குமார்:—நான் 'டாம் டீம்'னு செலவு செய்துட்டு, பாக்கியைக்கூட வாங்க மறக்கிறவனாயிருந்தா, ஒண்ணு குபேரனுக்கு மாப்பிள்ளையா இருக்கணும்; இல்லே, படு முட்டாளா இருக்கணும்!

சுசீலா:—எங்க அப்பா குபேரனுமில்லே, கோடீசுவரனுமில்லே.

குமார்:—அப்பொ என்னைப் படுமுட்டாளுன்னு சொல்லு.

சுசீலா:—நான் என்னாத்துக்கு அதெல்லாம் சொல்லணும்?

குமார்:—இல்லே, எத்தனை தடவை, நீ சொல்ற மாதிரி சில்லறையை வாங்காமெ வந்துட்டேன், சுசீலா?

சுசீலா:—ஏன், தீவாளிக்கு மொத நாளு, நீங்க விலை பேசிச் சாமானுங்க வாங்கிற லட்சணத்தை நான் பார்த்துக்கிட்டுத்தானேயிருந்தேன்?

குமார்:—ஆமா, அந்தப் பட்டாசுக்காரன் என்னை ஏமாத்துனதெச் சொல்லுவே.

சுசீலா:—(கழுத்தை நொடித்துக் கொண்டு) சொல்லமாட்டேனா, ஏமாந்ததோடெ மட்டுமில்லாமெ, முழு எலுமிச்சம்பழத்தெ முழுங்கிட்டு முழிக்கிற மாதிரி...

குமார்:—போதும், போதும். நீ ஒருத்தி கூட நின்னுக்கிட்டு இருந்ததினாலே எனக்கு நாடி ஒடுங்கிப் போய் வேலை

சுதேசமித்திரன்

வெலத்துப் போயிடுச்சு. புச்வாணத்துக் கும் மத்தாப்புக்கும் வித்யாசம் தெரியாமெ போயிடுச்சு.

சுசீலா:—உங்களுக்கு என்னிக்கு என்னத் தெரிஞ்சுது, போங்க?

குமார்:—இத பாரு சுசீலா, என் கோட்டுலேயிருந்து ஏதாவது பணம் கிணம் எடுத்தியான்னு ஒரு நாளியா கேட்டுக்கிட்டிருக்கேன், நீ இப்படிப் பழைய குப்பையைக் கிளறிக்கிட்டிருக்கே.

சுசீலா:—யாருக்குத் தெரியும்?

குமார்:—(உரத்த குரலில்) அதென்ன இப்படிப் பட்டுக்காமெ பேசறே, நீ. ஒரு ரூபா ரெண்டணாவைக் காணும் தெரியுமா, ஒரு ரூபா ரெண்டணா!

சுசீலா:—(அலுப்புடன்) அப்பப்பா! ஏன் இப்படி 'லவுட் ஸ்பீக்கர்' மாதிரிக் கத்திறீங்க? அந்தக் கொத்தமல்லி தாத்தாவுக்கு ரெண்டணா எடுத்துக் குடுத்தேன். பாலுவுக்குக்கூடத் தெரியுமே...ஏய்...பாலு?

குமார்:—சரி சரி. நீ சாட்சிக்குக் கூப்பிட வேண்டாம். ஒரு ரூபா ரெண்டணாவெ காணுமுனு சொன்னா, ரெண்டணாக்குக் கணக்கு சொல்றே.

பாலு:—கோட்டே நல்லா குலுக்கிப் பாருப்பா...

சுசீலா:—ஆமாங்க. ஆற அமரக் குலுக்கிப் பாருங்க. ஒருவேளை...

குமார்:—எல்லாம் பார்த்தாச்சு. மருந்து பாட்டிலா என்ன, சும்மா சும்மா குலுக்கிப் பாக்கிறதுக்கு. இனுமே குலுக்கினா, களுத்து வேறெ, கை வேறெயா பிச்சுக்கிட்டு அள ஆரம்பிச்சுடும். சமாதானம் செய்ய அப்புறம் தையக்காரனைத் தேடி அலையணும். அது இருக்கிற லட்சணத்தைப் பாரு, ஒரு தையக்காரனாவது கிட்டே நெருங்குவானா?

சுசீலா:—இப்படிக் கோட்டை விட்டுக் கிட்டே போயிக்கிட்டிருந்தா...?

குமார்:—கோட்டை எங்கேயும் விடலே, இங்கியேதான் இருக்கு கோட்டு?

சுசீலா:—பொளுது விடிஞ்சா, பொளுது போறத்துக்குள்ளே, இதுமாதிரி எத்தெயாவது காணுங் காணுமுனு பெரிய ரோதனையாப் போச்சு—

பாலு:—(தலையைச் சொறிந்து கொண்டு) அப்பா, அப்பா...

குமார்:—ஏய் பாலு! நீ சும்மா இருக்க மாட்டே. இப்பொ என்னைத் தொந்தரவு செய்யாதே. (மனைவியிடம்) வேணுமுனு காணும் காணுமுன்னு சொல்லி, விளையாடறேன், இல்லே? என்னா, வேறெ என்னொடெ விளையாட ஆசாமியே இல்லே பாரு.

சுசீலா:—(சலிப்புத் தாங்காமல்) கிளிஞ்ச தலகாணியிலேயிருந்து பஞ்சுவர மாதிரி, கோபம் மட்டும் பொத்துக்கிட்டு வருது. எனக்கெதுவும் தெரியாது. நீங்க உண்டு, உங்க சமாசாரம் உண்டு.

பாலு:—(விடாமல்) அப்பா...அப்பா.

குமார்:—(கண்கள் இரண்டையும் பிதுக்கிக்கொண்டு) டேய், நீ சும்மாயிருக்க மாட்டே? பூசை கிடைக்கும், பூசை.

நீ இந்த வடடுக்குக் கான்ஸ்டபிளா என்ன !

சுசீலா:—(குறுக்கிட்டு) அவன் ஏதோ சொல்லணுமுனு அப்பேத்தொட்டு நின்னுக்கிட்டிருக்கான்?

பாலு:—(சற்று தைரியம் வந்தவனாய்) ஆமாம்பா...வந்து...ஒண்ணுமில்லே...

குமார்:—நீயே பாரு, அவன் ஒண்ணுமில்லேன்னு சொல்றான்.

பாலு:—இல்லேப்பா, எங்கப் பள்ளிக் கூடத்துலே டிராமா போடப் போறாங்க.

குமார்:—போடட்டுமே, எனக்கென்ன? என்னை நடிக்கச் சொல்றயோ?

பாலு:—அதுக்கப்பா தலைக்கு...

குமார்:—பிடிச்சது சனியன் எங்களுக்கெல்லாம். சரிதான் போடா, உன் வேலையைப் பார்த்துக்கிட்டு.

பாலு:—கேளுப்பா, அதுக்குத் தலைக்கு ஒரு ரூபாயாவது கொடுத்துத்தான் தீரணுமாம்.

மூளையைப் போட்டு சேருக் குழப்பி...

குமார்:— (கோபந்தாளாமல்) கொடுக்காட்டி என்ன பண்ணிடுவே?

சுசீலா:— (காதைப் பொத்திக்கொண்டு) அப்பப்பா, என்ன கண்றாவி குறுக்கு விசாரணை இது? ஏங்க, ஒரு ரூபாதானே கேக்கறான், தலையைச் சுத்தி விட்டெறியறதை உட்டுப்புட்டு...

குமார்:— (தணியாமல்) வாளப்பளத் தோலி பாரு. நீ சொல்ல மாட்டே, உரல் மாதிரி உளச்சு சம்பாதிக்கிறவனுக்குத்தானே தெரியும்? டேய் பாலு, நீ என்ன, ரூபாயைக் கேட்டு வாங்கிப் போக நிக்கிறியா அல்லது எடுத்துக்கிட்டேன்னு சொல்ல நிக்கிறியா?

பாலு:—ஒரு ரூபா கொடுப்பியான்னு கேக்கத்தாம்பா நிக்கிறேன்.

குமார்:—அப்பொ நின்னுக்கிட்டேயிரு. கால் வலிக்கிறபோது குந்திக்கோ. (தனக்குள்) பெரிய தொல்லையாப் போச்சு. பணம் வரதுதான் தெரியுது, போறவழி தெரியாமெ குடும்பம் தத்தளிக்குது...சே...

சுசீலா:—(தைரியம் சொல்பவள்போல்) சும்மா அனாவசியமா மூளையைப் போட்டு சேருக் கொளப்பிக்காதீங்க. அப்புறம் அது என்னத்துக்காகும்?

குமார்:—(தனக்குள் தொடர்ந்து) வரும்படியோ, கிணத்துலே விழுந்த கல்லாட்டம் நின்னு போயிடுச்சு. செலவு மட்டும் ஓட்டைப் பிச்சுக்கிட்டு ஓடுது. இது மாதிரி வண்டி ஓடிக்கிட்டிருந்தா, கொடெ சாஞ்சிடும். நிச்சயம் கொடெ சாஞ்சிடும்.

சுசீலா:—வா பணத்தைத் திட்டமா செலவு செய்தா என்ன?

குமார்:—ஆமா, நீ சொல்லமாட்டே.

பாலு:—(குறுக்கிட்டு) ஏம்பா, உனக்கு எவ்வளவு சம்பளம்?

குமார்:—அடச் சீ. அதிகப் பிரசங்கி. வெளியே போடா. பெரியவங்க பேசறப்போ குறுக்கே பேசிக்கிட்டு... வாண்டுப் பயல்!

சுசீலா:நான்தான் எல்லாத்தியும் செலவு செய்யற மாதிரியும், நீங்க உலகமே தெரியாமெ மூக்கைப் பிடிச்சுக்கிட்டுக் குந்தியிருக்கிற மாதிரியும் பேசறீங்களே!

குமார்:—அடடா, ஒரு மனுசன் கொஞ்சம் இறைஞ்சுகூட யோசனை செய்யக் கூடாதுபோலேயிருக்கு.

சுசீலா:—வேணுமுனா இந்த மாசம் நான் செய்த செலவைச் சொல்லிப்பிடறேன்.

குமார்: போதும், போதும், நீ இப்பொ ஜாபிதா ஒப்பிக்க வாணாம். நான் தினமும் ஆபீசுலே பாக்கிற கணக்கே தலையைச் சுத்துது.

சுசீலா: ஆபீசுலே அடுக்கடுக்கா கணக்கு எளுதறீங்களே, வீட்டுக் கணக்கெ, ஒரு கால் கடுதாசுலே எளுதினா என்னவாம்?

குமார்: (நெற்றியைச் சுளித்துக் கொண்டு, யோசனை செய்தவண்ணம்) வீட்டுக் கணக்குதானே...உம்! அதுவும் சரிதான்...ஆனால், அது ஒரு பெரிய பசிபிக் மகாசமுத்திரமாச்சே அது! அதிலே நீஞ்சிக் கரையேற முடியுமா சுசீலா? யோசனை செய்து சொல்லு.

சுசீலா: யோசிக்க என்னங்க இருக்கு?

குமார்: சரி. முடிவு செஞ்சிட்டேன். இனி மேலாவது போகிற காசு எந்தப் பக்கம் போவுதுன்னு தெரியும் இல்லியா?

சுசீலா: அதெச் சொல்லிட்டு, ஏன் அடுக்களையைப் பாக்கறீங்க?

குமார்: உன் குத்தமுள்ள நெஞ்சு, ஏன் குறுகுறுங்குது; கேக்கறேன்?

சுசீலா: நான் ஒரு குத்தமும் செய்யலே...நான் சொல்றதெ கேளுங்க.

குமார்: நீ என்ன சொல்றது, நானே நிச்சயஞ் செய்துட்டேன். இதோ பாரு. நாளைக்கி ஒண்ணாந் தேதி. நாளையிலிருந்து 'ஹவுஸ் அக்கௌண்ட்', வீட்டுக் கணக்கு என்ன?

சுசீலா: ஏதோ தீர்மானமாவது பலமாயிருக்கே, அதுவே போதும்.

குமார்: பரிகாசம் கிடக்கட்டும், நாலு நாளுலே தெரியும் பாரு, பணம் எந்தப் பக்கமா போவுதுன்னு.

2

(நெற்றி வியர்வை நிலத்தில் விழ, வீட்டுக் கணக்கு எழுத ஆரம்பித்து விட்டான் குமார். பகலெல்லாம் ஆபீஸிலும், இரவெல்லாம் வீட்டிலும், கணக்கு வெள்ளத்தில் மூழ்கித் திணறிக்கொண்டிருந்தான்.)

சுசீலா: (சோர்ந்த முகத்துடன்) நீங்க எந்த வேளையிலே கணக்கெளுத ஆரம்பிச்சீங்களோ, வீட்டுலே காலணாவைக் கூடக் கண்ணுலே படமாட்டேங்குது. முந்தியாவது அரையணா, ஒரணா இந்தப் பிறையிலே கிடக்கும். இப்பொ குளிப்பாட்டி வச்சிருக்கீங்க.

குமார்:—ஆமாம்; நான் கணக்கு எளுதறதுலே உனக்கு ஏன் அவ்வளவு அலுப்பு? உனக்கு எவ்வளவு பணம் வேணுமோ, அதைக் கேட்டிட்டுப் போயேன். இருந்தா, இருக்குதுன்னு சொல்றேன். இல்லாட்டி இல்லேன்னு சொல்லிட்டுப் போறேன்.

சுசீலா: இல்லேன்னு சொல்லமாட்டீங்க? எனக்காகத்தான் எண்ணிக் குடுக்கிற மாதிரி பேச்சு. பொளுது விடிஞ்சா காய்கறிக்கு, செல்லாத காசுகூடக் கையிலெ இல்லே.

குமார்: என்ன? நேத்து குடுத்த அஞ்சு ரூபா என்னவாச்சு? அதுக்குள்ளாவா கரைஞ்சு போச்சு?

சுசீலா: கரைஞ்சும் போகலே, தேஞ்சும் போகலே.

குமார்:—உன் கையிலே பணம்மட்டும் சும்மா இருக்காதுபோலேயிருக்கு.



காலணாகூடக் கண்ணுலே படமாட்டேங்குது

சுசீலா: என்னமோ தீபாவளிக்கு இனும் தரேன்னு சொன்னீங்களாமே, உங்க ஆபீசு பியூனுக்கு?

குமார்: (திடுக்கிட்டு) அவனுக்கு என்ன வந்திடுச்சு இப்பொ?

சுசீலா: மென்னியைப் பிடிச்சு இரண்டு ரூபா வாங்கிட்டுப் போயிட்டான்.

குமார்: மென்னியைப் பிடிச்சானா? என்ன சொல்றே, சுசீலா நீ? ஆபீசு பியூன் இங்கே ஏன் வரான்? என்னைக் கேட்டுக்கச் சொல்லக்கூடாதா?

சுசீலா: போதுமே. நான் சொல்லியா அவன் கேக்கப் போறான்?

குமார்: என்னதான் சொன்னான் அந்தப் பயல்?

சுசீலா: நீங்க எங்கிட்டேயிருந்து வாங்கிக்கிட்டுப் போகச் சொன்னதாகச் சொல்லி...

குமார்:—அட பாவிப் பயலே, நல்ல வேலே செய்துட்டே என்னப்பனே... இதொ பாரு சுசீலா... எங்க ஆபீசுலெ வேலே செய்யற என் சினேகிதன் ஒருத்தன் எங்கிட்ட வாங்கின இரண்டு ரூபா கடனைத் திருப்பித் தர வளியாக்காணும். அந்தப் பணத்தை வேணுமுனா உனக்கு இனுமா வாங்கிக்கோன்னு, பியூனுக்கிட்ட சொன்னேன். இவ்வளவுதான் நடந்துது.

சுசீலா: (நொடித்துக்கொண்டு) நல்லாயிருக்கு, நீங்க கடன் கொடுக்கிறதும், பிறகு அதைச் சரிக்கட்டறதும்...பணம் எந்தப் பக்கம் போகுது பாருங்க...



வீடே பாத்திரக் கடை ஆயிடும்

குமார்:—ரெண்டு ரூபாயிக்குக் கணக்கு சொல்லிட்டே, பாக்கி மூணு ரூபா என்ன ஆச்சு?

சுசீலா: ஏதோ செலவு செய்தேன்னு வச்சுக்குங்க.

குமார்: அதெப்படி முடியும் சுசீலா? மூணு ரூபாயை 'சும்மா' செலவுன்னு எளுதரத்துக்கு, கணக்குப் புத்தகம் வெச்சுப் பானேன்?

சுசீலா: (சற்று குழைந்த குரலில்) இதொ பாருங்க, ரொம்ப நாளா, நமக்கு ஒரு சின்ன கூஜா வேணுமுனு...

குமார்: (தலையில் கை வைத்துக் கொண்டு) காலம் இருக்கிற இருப்புலே, இப்ப ஒரு கூசா இல்லாட்டி என்னவாம்?

சுசீலா: நான் எதாவது வாங்கணுமுனு சொல்றபோது, கோபம் என்னமோ அப்படிப் பொத்துக்கிட்டு வருது.

குமார்:—எனக்குக் கோவம் வருதுன்னு சொல்லமட்டும் தெரியுதே, இப்பொ கூசா இல்லாட்டி என்ன குடி முளுகிப் போயிடுமா? நம்ம கலியாணத்திலே குடுத்தாங்களே, அந்தக் கூசா போதாதா?

சுசீலா:—அது எம்மூஞ்சிமாதிரி நசுங்கிக் கிடக்குது.

குமார்: இப்பொ, அந்த நசுங்கின கூசா போதாது?

சுசீலா:—என்னமோ வாங்கலாமுனு வாங்கினேன், நேத்து வெங்கலப் பாத்திரக்காரனுக்கு, பளைய துணிமணியைப் போட்டு! அதுக்கு இன்னும் ஒரு மூணு ரூபா கையைவிட்டுக் குடுக்க வேண்டியதாப் போச்சு.

குமார்: அப்படி வா வளிக்கு. நான் கன்னாபின்னான்னு செலவு செய்யறதாகச் சொல்லிக்கிட்டுப் போவியே, இப்பொ தெரியுதா, யார் மாட்டிக்கிறாங்கன்னு?

சுசீலா: ஆமா, எத்தினியோ வருது, போவுது. இந்த மூணு ரூபா காசுலே என்ன வந்திரிச்சாம்?

குமார்: குடுக்கற அஞ்சு ரூபாயிலே, மூணு ரூபா இந்த மாதிரிக் கரைஞ்சுதுன்னா, நான் சம்பளப் பணத்தை முளுக்க ஓங்கிட்ட கொடுத்தா, வீடே பாத்திரக் கடையா ஆயிப்பூடும்.

சுசீலா: (துக்கம் மேலிட்டவளாய், விக்கிக்கொண்டு) ஆமா, பெரிய தப்பு செய்துப்பிட்டேன் பாருங்க. முன்னேயாவது எதுனாச்சம் ஒண்ணு ரெண்டு பொறுக்கிப் போட்டு வச்சிருப்பேன். இப்பொ அதுவும் கிடையாது. எனக்காக ஒரு சின்ன கூஜாகூட வாங்கிக்கச் சுதந்திரமில்லே...

குமார்:— இப்பொ உன்னை என்ன சொல்லிப்பிட்டாங்க? ஒரேயடியா சுதந்திரம் கேக்கறே. நீ தினம் வாங்கிச் செலவு செய்றதெ இந்த நோட்டுப் புத்தகத்திலே குறிச்சு வை, குறிச்சுவைன்னு நூறு தடவை களுதை

யாக் கத்திரிக்கேன். நீ காதுலே போட்டுக்கிட்டாத்தானே?

சுசீலா:—வீட்டு வேலையைச் சரியா செய்து முடிக்கவே பொழுதில்லே, இனிக் கணக்குப் புத்தகத்தெ வேறு வைச்சுக் கிட்டு மண்டையை ஒடச்சுக்கணுமாக்கம். யாருக்கு ஞாபகமிருக்கு இந்தத் தட்டி முட்டிச் செலவெல்லாம்?

குமார்: அப்பொ எப்படி கணக்குச் சரியா வரும்? நீயும் ஒத்துழேக்க வேண்டாமா, சுசீலா? இந்த ஒரு வாரக் கணக்கிலே, நீயே பாரு, வரவும் செலவும் முட்டி மோதிக்குது.

சுசீலா: என்னே என்ன செய்யச் சொல்றீங்க? என்னலெ முடிஞ்சதை அப்பப்போ ஒங்க கிட்ட கணக்கு சொல்லிக்கிட்டுத் தானே இருக்கேன்? வேறென்னதான் செய்யறது?

குமார்:—(அலுத்துக்கொண்டு) அடாடாடா, நான் சொல்றதையே புரிஞ்சிக்காமெ பேசறே. நீ தினம் தினம் கணக்குச் சொல்லி என்ன பிரயோசனம்? பாக்கி கைலெ நிக்கற சில்லறைக்கும், நம்ப புத்தகக் கணக்குக்கும் சம்பந்தமே இல்லாமெ இருக்குதே.

சுசீலா:—(சுருக்கென்று) அதுக்கு நானு காரணம்?

குமார்: காரணம் நீயோ, நானே தெரியாது. எங்கட்சி என்னன்னு, கணக்கு எழுதினு ஒழுங்கா எழுதணும், இல்லாட்டி கடவுள் விட்ட வழின்னு தொலேச்சு முழுகணும்.

சுசீலா: நான் கேக்கறேன், தெரியாத செலவுகளெ, அப்படியே மொத்தமா 'இதர செலவு'ன்னு எழுதிடுங்களேன்?

குமார்: அதெ சொல்லத்தான் வாயெடுத்தேன். மொத்தமா, 'இதர செலவு'ன்னு, புரியாத கணக்கு எழுதறத்துக்குக் கணக்கே எழுதுவானேன்?

சுசீலா: அதென்னவோ, நீங்க வீட்டுக் கணக்கு எழுதறதுலே எடுத்துக்கிற அக்கறையிலே, பாதி அக்கறை ஆபீசுலே எடுத்துக்கிட்டீங்கன்னு, ஒரே மாசத்துலே உத்தியோகம் ஒசந்திடும்.

குமார்: விளையாட்டு இல்லே, சுசீலா. வீட்டுக் கணக்கு எழுத ஆரம்பிச்சதும், தினம் ஆபீசுலேகூடத் தூக்கம் வரமாட்டேங்குது. தவறி கண்ணசந்துட்டா, கணக்கு எல்லாம் பூதங்களாக மாறி, மூளையைக் கொளப்பி, ஆளே உருட்டித் தள்ளிடுது. கண்ணே முழிச்ச உடனே, பைத்யக்கார ஆஸ்பத்திரிலேந்து பிடிச்சுத் தள்ளினமாதிரி தோணுது. ஒரோரு சமயம் எனக்கே பைத்தியமோன்னுகூடச் சந்தேகமாயிடுது.

சுசீலா:—எனக்கு அந்தச் சந்தேகம் கொஞ்சங்கூட இல்லே.

குமார்: எல்லாம் உன் கைலெதான் இருக்குது. நீ உதவி செய்ய மறுத்தா இந்தக் கணக்கு, மனக்கணக்குதான்.

சுசீலா: என் கைலெ என்ன இருக்கு? அம்மன் காசுகூடக் கிடையாது.

3

(குமார் கணக்குப் புத்தகமும் கையுமாகிவிட்டான். எங்கு எதைப் பார்த்தாலும் கூட்டிக் கழித்துக் கொண்டிருந்தான். பாவம்! கணக்குப் பித்தே பிடித்துவிட்டது. வரவும் சரி, செலவும் சரி உதைத்துக்கொண்டிருந்தன. நல்ல சரீரம் இளைத்துத் துரும்பாகிவிட்டது! அந்தத் துரும்பு, கணக்குக் கடலில் மிதந்து கொண்டிருந்தது.)

எப்பப் பாத்தாலும் காதுலே பென்சல்

குமார்: (பென்சிலேக்கடித்துக்கொண்டு) ஆச்சு தேதி பதினஞ்சு, ஏளாந்தேதி வரை கூடக் கணக்கு சரியா வரமாட்டேங்குதே. சே. சே... பெரிய ரோதனையாப் போச்சு. காசு என்னவோ எங்க ரெண்டு பேருக்கு நடுவிலேதான் நடமாடுது. கணக்கோ தலேகால் புரியாமெ ஓடுது. உம்?...

(அந்தச் சமயம், பக்கத்து வீட்டு சினேகிதர் கோபு வருகிருர்.)

கோபு: (வந்துகொண்டே) என்ன மிஸ்டர் குமார், சௌக்கியந்தானே? கொஞ்ச நாளாகவே, ஆபீசுலேந்து வந்ததும், புழுமாதிரி வீட்டுலே அடஞ்சு கிடக்கீங்க. வெளியிலே தலேயை நீட்டறதில்லே.

குமார்: அந்த வயத்தெரிச்சலே ஏன் கேக்கறீங்க, கோபு சார்? காலேயிலே எழுந்து, ராத்திரி கண் மூடறவரைக்கும் ஒரு கணக்கு வெள்ளம். நீஞ்சி நீஞ்சிக் கையெல்லாம் சளச்சிப் போச்சு. ஆபீசுக் கணக்கு போதாதுன்னு, வீட்டுக் கணக்கு வேறெ வெச்சுக்கிட்டிருக்கேன்.

கோபு: வீட்டுக் கணக்கா? அது ஒரு கொள்ளுவாய்ப் பிசாசு, மிஸ்டர் குமார். என்னுடைய சொந்த அனுபவம்.

குமார்: நீங்க ஞானிமாதிரி பேசறீங்க. என்ன செய்யறது, அவனவன் ஒரு தடவையாவது வாழைப்பழத் தோலியிலே சறுக்கி விழுந்தாத்தானே, அதை எடுத்து எறியத் தெரியும்?

கோபு: வாழைப் பழத் தோலியாவது தேவலாமே. இந்த வீட்டுக் கணக்கு, மண்டை உடைச்சு, பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலே கொண்டு போய்விட்டுடும்.

குமார்: (திகைத்தவனுய்) அப்படியா?

கோபு: நானும் இப்படித்தான் கொஞ்ச நாள் முந்தி, கணக்கெழுத ஆரம்பிச்சேன். கடைசியிலே 'விறுவிறு'ன்னு டாக்டர்கிட்டே போகும்படியாயிடுச்சு. ஒரு நாளேக்கு 'திடீர்'னு ஒரு ஞானேதயம் உதிச்சுது பாக்கணும்!

குமார்: ஞானேதயமா?

கோபு:—ஆமாம் சார், ஆமாம். இந்த கொள்ளுவாப் பிசாசை, மெதுவா நம்ம சம்சாரத்துக்கிட்டே தள்ளிப்பிட்டேன். பிறகு பாருங்களேன், அவ ஆடற ஆட்டம்! இப்பொ கொஞ்ச நாளாக இந்தக் கணக்குத் தொல்லே விட்டுது.

குமார்: நீங்க பரவாயில்லே, சுலபமா காரியத்தை முடிச்சுப்பிட்டீங்க.

கோபு: ரூபா இருந்தா என்ன, போனு என்ன? பர்செ பாக்கிறது. பணமிருந்தா செலவு செய்யறது. இல்லாட்டி சும்மா இருக்கிறது. இதுதான் நான் கையாள்ற தத்துவம்.

குமார்: அநேகமா அதே முடிவுக்குத் தான் நானும் வந்துட்டேன்.

கோபு:—இன்னும் ஒரு விசயம் பாருங்க; நம்ம சம்சாரம் கணக்குப் புத்தகத்தை வெச்ச இடம் தெரியலேன்னு சொல்லித் தப்பி ஓடப் பாக்கிரு...

குமார்: சரிதாங்க. வரவையும் செலவையும் இந்தக் காலத்திலே ஏணி வெச்சுத் தானே பிடிக்க வேண்டியிருக்குது? அதுவும் எங்க வூட்டுலே பல பிரச்னே பூதம் மாதிரி கிளம்பிடுது. உதாரணமா, என் சம்சாரம் நேத்து ஒரு புது கூசா வாங்கினளாம். (அடுக்களேப் பக்கம் திரும்பி) சுசீலா...அந்தப் புது கூசாவெக் கொண்டு வாயேன். (தொடர்ந்து கோபுவிடம்) நம்ம சம்சாரத்துக்கு, எது, எப்போ அவசியமுன்னு தெரியாது...

சுசீலா: (உள்ளேயிருந்து வந்து கொண்டே) அந்தக் கூசா எதுக்கு?

குமார்: நல்லாயிருக்கு. நாலு பேர் பார்த்து, உனக்கு 'சர்டிபிகேட்' கொடுக்க வாணுமா?

சுசீலா: கூசாவும் வாங்கலே, கொடமும் வாங்கலே.

குமார்: என்னது? வாங்கலேயா?...இது என்ன புதுவிதமாயிருக்கு, உன் வழி? கூசா வாங்கினது, வாங்காதது தெரியாமலா போயிடும் எனக்கு?

சுசீலா: தெரிஞ்சா என்னவாம்?

கோபு: (கணவன்—மனேவி தர்க்கத்தில் குறுக்கிட விரும்பாதவராய்) மிஸ்டர் குமார்! இதெல்லாம் நீங்க பேசிக்க வேண்டிய விஷயம். நான் வந்து...

குமார்: (கோபுவை உட்கார வைத்து) அதெல்லாம் ஒண்ணுமில்லே. ஒரு மூணு ரூபா, கணக்கிலே துண்டு விழுந்தது. அது என்ன ஆச்சுதுன்னு கேட்க வாயெடுத்தேன். அது ஒரு யுக்தியா பதில் சொல்லிட்டதாக எண்ணி, இப்பொ விஷயம் அம்பலத்துக்கு வந்துடுச்சு. அவ்வளவு தான்.

கோபு: இதையெல்லாம் காதும் காதும் வெச்சமாதிரி வுட்டுப்பிடணும், சார்.

குமார்: ஏதோ ஒண்ணுரெண்டு கைச் செலவுக்கு வேணுமுன்னு எனக்குத் தெரியாதுங்களா? நான் என்ன அப்படிக் கண்டிப்பான பேர்வழியா நீங்களே சொல்லுங்க?

சுசீலா: மத்தவங்க இருக்கப்போ, தேனுத்தான் பேசறீங்க.

குமார்:—மிஸ்டர் கோபுவுக்கு என்னேப் பத்தி தெரியாதாக்கம். நீ என்ன புதுசா சொல்லப் போறே? எல்லாம் என்னலெயின்னு சொல்லுவே. ஊருக்கு இளேச்சவன் எலிமெண்டரி ஸ்கூல் வாத்தியாருன்னு சொல்லுவாங்க. அதுமாதிரி உனக்கு நான்.

கோபு: இதெல்லாம் வேண்டாம், குமார். நான் சொன்னதுபோல கணக்குப் பொறுப்பை, அப்படீ, அவுங்க கிட்ட தள்ளிப் பிடுங்களேன்!

சுசீலா:—ஐயையோ! அந்த வன்டிமசியை எம்மேலே கொட்டாதீங்க. பிடிச்சா விடாது. கோமதி படறபாடு போதாதுங்களா?

கோபு: ஆமாம். நம்ம சம்சாரம் கோமதி வீட்டுக் கணக்கு எழுதற விஷயம் இவ்வளவு தூரம் வந்திடுச்சா?

சுசீலா: முன்னெமாதிரியா இருக்காள் கோமதி? பாவம்; எப்போ பார்த்தாலும் காதுலெ பென்சில் சொருகிக்கிட்டு, கணக்குப் பிள்ளேமாதிரி...

குமார்:—நீயும் வேணுமுன்னு ஒரு பென்சிலே வாங்கிக் காதுலே மாட்டிக்கயேன்.

கோபு: ஒரு விஷயம் பாருங்க. கோமதி ரொம்ப கெட்டிக்காரி. ரெண்டு நாள் முன்னெ, நான் வீட்டுக் கணக்கு நோட்டை எடுத்துக் கணக்குப் பார்த்தேன். ஒரு மூணு ரூபாய்க்கு செலவு தெரியலே. எனக்குக் கொஞ்சம் பண முடை இருந்ததாலே, அந்தப் பாக்கி மூணு ரூபா கோமதி கிட்டெதான் இருக்குமுன்னு நெனச்சு, கேட்டேன்.

குமார்: அங்கேயும் மூணு ரூபா துண்டு விழுந்துச்சா? இப்படித் துண்டுதுண்டா பெரிய ஜமக்காளமாயிடும் போலிருக்கு.

கோபு: கேளுங்க. காலேயிலே இல்லேன்னு சொன்ன கோமதி, சாயந்திரம் மூணு ரூபாயைக் கொண்டுவந்து கொடுத்திட்டா. எனக்குப் பூமியே வெடிச்ச மாதிரி தோணிச்சு. மூணு ரூபா இப்படி 'திடீர்'னு குதிக்குமுன்னு தெரிஞ்சிருந்தா, அஞ்சு, பத்து சேத்துக் கேட்டிருக்கலாமேன்னு நெனச்சேன்.

சுசீலா: (திடீரென்று விழுந்து விழுந்து சிரிக்கிருள்) கோமதி தேவலாமே. அவள் எனக்கே சொல்லாமல் வேடிக்கை செஞ்சிருக்கா! (கோபுவும் குமாரும் விழிக்கிருர்கள்.)

குமார்: எனக்கு ஒன்னும் விளங்கலேயே?

சுசீலா: என்னுடைய கூசாவைப் பத்தி விசாரிச்சீங்களே. நான் கூசாவும் வாங்கலே, சீசாவும் வாங்கலே. கோமதிக்கு ஒரு மூணு ரூபா கைமாத்தாக் கடன் குடுத்தேன். அதைச் சொல்ல வேண்டாமுன்னு...

குமார்: (விளங்கியவனுய்) மறைக்கப் பாத்து, உன் சினேகிதியைக் காப்பாத்தப் பார்த்தியாக்கம்.

கோபு: அதுதான் அந்த மூணு ரூபாயைப் பத்தி நான் கேட்கிறபோதெல்லாம் கோமதி பிடிகொடுத்துப் பேசவில்லே.

குமார்: நம்ம முடிவெல்லாம் ஒரே 'பணல்' ஆயிடுச்சு மிஸ்டர் கோபு.

கோபு: ஒரு முடிவு மட்டும் 'கரெக்ட்'. கணக்கு எழுதற சாமர்த்தியம் மட்டும், கூடப் பொறக்கணும்...ஒரு மூணு ரூபா குறையுதே, அதைக் கண்டுபிடிச்சுடப் போருங்கனு கோமதி, கடன் வாங்கியிருக்கா, உங்க சம்சாரத்துக்கிட்டே.

குமார்:—கடன் குடுக்கிற வழக்கம், எனக்குக் கட்டோட பிடிக்காதுனு தெரிஞ்சு, கூசா வாங்கினதாக நம்ம சம்சாரம் ஒரு புளுகு தட்டிவிட்டா.

சுசீலா: (குறுக்கிட்டு) ஒருத்தருக்கொருத்தர் சமயத்துலெ உதவி செய்துக்க இல்லாமெ, பணத்தை வெச்சுக்கிட்டு என்ன செய்யறது, கேக்கறேன்?

கோபு:—இந்தப் பெருந்தன்மை எல்லாருக்கும் இருந்துட்டா, யாராவது ஒருத்தர் சம்பாதிச்சாலே போதும்.

★

அட்டைப் படம்

காரின் நம்பர் பிளேட்டிலே தெரியும் எண்களேக் கூட்டிப் பார்த்தால், மொத்த எண் என்ன வருகிறது? அதுதான் சவாரிக்குத் தயாராக நிற்கும் தருணியின் வயதாகவுமிருக்கலாம்! யௌவனம் துள்ளும் இளஞ் ஜோடி வெளியே சென்று வெப்பத்தைத் தணித்துக் கொள்ளத் திட்டமிட்டிருக்கின்றனர், அதற்கு ஆயத்தமாக நிற்கும் கார், காரிகை, சாரதி ஆகிய மூவரையும் ஸாகர் சித்தரிக்கும் காட்சியே இவ்விதழின் அட்டைப் படம்.

இயற்கை வைத்தியப் பயிற்சி முகாம் சென்ற வாரம் தலைநகரில் ஆரம்பமாயிற்று. ஆரோக்ய வாழ்விற்கு இன்றியமையா இயற்கை வழிகளை, அனுபவ மிக்க அறிஞர்கள் பலர் சொல்லிக் கொடுக்கிறார்கள். நோயிலிருந்தும் ஔஷதங்களிலிருந்தும் விடுதலை பெறுவதற்கான ஆரோக்ய முறைகளை விளக்குகிறார்கள். இந்திய இயற்கை வைத்யக் கழகத்தின் ஆதரவில் நடக்கும் இந்த முகாமில் 60 பேர் இருக்கிறார்கள்.

தில்லி நிர்வாகத்தின் பொதுஜன உறவு இலாகாத் தலைவர் ஸ்ரீ கோபிநாத் அம்மான் தலைமையில் ஸ்ரீமதி ஸரஸ்வதி கோபிடியா இந்த முகாமைத் துவக்கி வைத்தார். இயற்கை வைத்தியத்தின் மேன்மையை மக்கள் நன்குணர வேண்டியது அவசியம் என்று தலைவர் கூறினார். 25 ஆண்டுகளுக்குமுன் தாம் இயற்கை வைத்திய முறையின் மேன்மையை உணர்ந்ததாக ஸ்ரீமதி ஸரஸ்வதி கோபிடியா சொன்னார். மற்றும் பல பிரமுகர்களும் தத்தம் அனுபவம் வாயிலாகக் கண்ட உண்மைகளை விளக்கினார்கள்.

இயற்கை வைத்தியத் துறையில் சிறந்த பேரறிஞரும் அதைப் பரப்பிப் பணி செய்வதையே வாழ்க்கை லட்சியமாகக் கொண்டவரும் ஆன புதுக்கோட்டை லக்ஷ்மண சர்மா, இயற்கை வைத்தியம் தெய்வீகத் தன்மை வாய்ந்த விஞ்ஞான முறை என்று கூறினார். நாகரீக முதிர்ச்சியின் தீயவிளைவுகளையும் அவர் கண்டித்தார். பன்னெடுங்காலமாக நீடித்து நிலைத்து வந்துள்ள இயற்கை வைத்தியத்திற்கு ஈடானதும் ஒப்பானதும் வேறில்லை என்றும் கூறினார்.

இந்தியக் கழகத்தின் தில்லிக் கிளைக் காரியதரிசி ஸ்ரீ எல். கணேச சர்மா, கிளையின் வரலாற்றையும் சாதனைகளையும் எடுத்துரைத்தார். தில்லியில் சென்ற ஐந்தாண்டுகளில் இயற்கை வைத்தியத்தில் ஆர்வத்தோடு ஈடுபடுவோரின் தொகை மும்மடங்காகப் பெருகியிருக்கிறது. தலைநகரில் இயற்கை வைத்தியம் என்ற பேச்சு வந்தாலே ஸ்ரீ ஸ்வாமிநாதன், ஸ்ரீ கணேச சர்மா ஆகியோரின் நினைவு கட்டாயம் வரும்; ஜாண்டிஸ் நோய் தீவிரமாகப் பரவியிருந்த காலத்தில் அவர்கள் வெற்றிகரமாகப் பணி ஆற்றினார்கள். இயற்கை வைத்திய முறைகளைத் தம் வாழ்க்கையிலேயே அனுசரித்துக் காட்டி வருபவர்கள். இந்திய அரசாங்கத்தில் உத்தியோகம் பார்க்கும் அந்த இருவரும், ஓய்வு நேரத்தையெல்லாம் இயற்கை வைத்தியப் பணிக்கெனவே அர்ப்பணித்து வருபவர்கள்.

தலைநகர்த் தபால்

ஃ ஃ ஃ

அருமையான கர்நாடக இசை விருந்தைக் கேட்டு மகிழும் வாய்ப்பு சென்ற ஞாயிறன்று கிடைத்தது. அகில இந்திய ரேடியோவின் தேசீய இசை நிகழ்ச்சிக்கெனத் தலைநகர் வந்திருந்த ஸ்ரீ எம். ஏ. கலியாணகிருஷ்ண பாகவதரின் சாஸ்திரீய இசை விருந்திற்குத் தில்லி தக்ஷிண பாரத் சமாஜம் ஏற்பாடு செய்திருந்தது; வீணை வாசிப்பதிலும் அபார தேர்ச்சி வாய்ந்த ஸ்ரீ பாகவதர், அபூர்வ ராகங்களைப் பாடிக் காட்டி, கர்நாடக இசையின் மேன்மையை விளக்கினார். ஏராளமான சங்கீத ரசிகர்கள் வந்திருந்தார்கள். தக்ஷிண பாரத் சமாஜத்தின் புத்தகாலய – நூல் நிலையத்து உதவி நிதிக்காக இந்தக் கச்சேரி நடைபெற்றது.

ஃ ஃ ஃ

இந்தியாவிற்கும் அரபு நாடுகளுக்கும் இடையே ஆதிகாலந்தொட்டு இருந்து வந்துள்ள தொடர்புகள் சம்பந்தமாகப் பேரறிஞர் ஒருவர் நிகழ்த்திய சுவையான பிரசங்கம் ஒன்று சென்ற புதனன்று இருந்தது. கலிபோர்னியா சர்வ கலாசாலையில் பேராசிரியராக விருக்கும் இக்பால் அலிஷா என்பவர் இந்திய கலாசார உறவுகள் சபையின் ஆதரவில் பேசுகையில், ‘குர்ரான்’ முதன் முதலில் ஹிந்து மன்னர் ஒருவரின் விருப்பப்படி இந்திய மொழியில் பெயர்க்கப்பட்டது என்று கூறினார். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் குஜராத் மன்னன் ஒருவன் ‘குர்ரானை’ புராதன குஜராத்தி மொழியான குஜ்ஜோரியில் மொழிபெயர்க்க ஏற்பாடு செய்தான். தவிர, குர்ரானின் உபதேசங்களையும் அவன் அடிக்கடிப் படித்து வந்தான் என்று அவர் தெரிவித்தார்.

மேற்கு நாடுகளில் நாகரீகத்தைப் பரப்பியவர்கள் அரப் மக்கள் என்ற நம்பிக்கையையும் அந்த அறிஞர் குறிப்பிட்டார். அந்த அரப் மக்கள் கிரீஸிலிருந்து நாகரீகம் பயின்றதாகக் கூறுவது முழு உண்மையல்ல. இந்தியருக்கும் அராபியர்களுக்கும் பல்லாண்டுகளாகப் போக்குவரத்தும் தொடர்பும் இருந்துவந்ததால், அராபியர் மேற்கு நாடுகளில் பரப்பிய நாகரீக வளர்ச்சியில் இந்தியாவிற்கும் முக்கிய பங்குண்டு என்றும் அவர் விளக்கினார்.

‘இந்திய – அரபு தொடர்புகள் இதிகாச காலத்திற்கும் முற்பட்டவை’ என்று இக்பால்ஷா கூறினார். மகாபாரதத்தில் அராபியர் பற்றிப் பிரஸ்தாபம் இருப்பதாகச் சொன்னார். ‘படை வீரர் பலர், அராபியர்களிடமிருந்து யுத்த நுணுக்கங்களைப் பயின்றவர்கள்’ என்று பிரஸ்தாபிக்கப்படுகிறது. அராபியர்களின் மிகப் பழைய நூல்களிலும் இந்தியா பற்றிச் சொல்லப்படுகிறதாம்.

பிரசித்திபெற்ற பக்தாத் மன்னன் நோயுற்றிருந்தபோது அரபு வைத்தியர்கள் எவ்வளவோ பேர் வந்தும் ஏதும் செய்ய இயலாதிருந்த சமயம், இந்திய வைத்தியர் ஒருவர், மன்னனைக் குணப்படுத்தியதாகவும் அதன்மூலம் இந்தியா, அரபு உலகில் உயர்மதிப்பு பெறலாயிற்று என்பதாகவும் அந்தப் பேராசிரியர் கூறினார். தவிர, காலம்பற்றிய சித்தாந்தத்தை அராபியர்மூலம் மேற்கத்திய நாடுகளுக்கும் தந்த பெருமை இந்தியாவினுடையது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கலாசார உறவுகளுக்கான பாரத சபை, இந்தியாவிற்கும் பிறநாடுகளுக்குமிடையே ஆன பிணைப்புகளை வலுப்படுத்துவதற்காகப் பணியாற்றும் சிறந்த ஸ்தாபனம். சரித்திரம், கலாசாரம் ஆகிய துறைகளில் பிரசித்திபெற்ற அறிஞர்களின் சுவைமிகுந்த உரை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்து வருகிறது. மாணவர்களும் கலாபிமானிகளும் சரித்திரப் பிரியர்களும் தவறாமல் கேட்டு அனுபவிக்கக்கூடிய பிரசங்கங்களைச் சபையினர் ஏற்பாடு செய்கிறார்கள்.

திருவல்லிக்கேணி பாண்டுரங்க மந்திரத்தில் மே 12-ந் தேதி முதல் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஸ்வாமிகள் ஆசியுடன் மாயூரம் ஸ்ரீ ராமனுத தீக்ஷிதரின் தேவி பாகவதப் பிரவசனம் நடைபெற்றது. 'மித்திரன்' துணை ஆசிரியர் ஸ்ரீ எஸ். லட்சுமி நரசிம்மன் பாராட்டிப் பேசுகையில் எடுத்த படம்.

சித்திரை மாதம் மத்தியானம் ஒரு மணி. வெய்யில் தெருவிலிருந்த தாரைப் பாகாக உருக்கிக் கொண்டிருந்தது. சென்னை, பிராட்வே பக்கத்திலிருந்து இரு கைகளிலும் பெரிய பிளாஸ்குகளுடன் சுமார் பனிரெண்டு வயதுச் சிறுவன் தெருவைத் தாண்டி, சட்டக் கல்லூரியை நோக்கி வந்தான். பித்தானில்லாத சட்டை, சிறிய அரைக்கால் சிராய்–இதுதான் அவன் அணிந்திருந்தது.

கலாசாலை வாயிலில் வந்து நின்று சுற்றுமுற்றும் பார்த்தான். தான் எதிர் பார்த்ததைக் காணுத ஏமாற்றம் அவன் முகத்தில் தோன்றியது. சிறிது நேரம் ஒன்றும் தோன்றாது நின்றான்.

‘ஏய், ஐஸ்கிரீம்! இங்கே வா மான்’, என்று சிறிது தூரத்திலிருந்த மரத்தடியிலிருந்து ஒரு குரல் கேட்டது. சிறுவனின் முகம் மலர்ந்தது. வேகமாக அந்த மரத்தண்டை போனான்.

‘வாட் மான்’ என்றான் அங்கிருந்த முனுசாமி. இதைக் கேட்டு வேலுவும் சீனியும் சிரித்தனர்.

‘ஏண்டா இங்கே வந்து குந்திட்டீங்க?’ என்றான் மதுரை.

‘உன்னை ஏமாற்றத்தான்; நீதான் எங்களைக் காணோமே என்று முழிச்சியே!’ என்றான் சீனி. எல்லோரும் சிரித்தனர்.

சீனி, வேலு, முனுசாமி, மதுரை— நான்கு சிறுவர்களும் பெரம்பூர் ஓட்டேரியைச் சேர்ந்தவர்கள். வயது பத்திலிருந்து பதினாறுக்குள்தான் இருக்கும். புரசைவாக்கத்திலிருந்த ஐஸ்கிரீம் தொழிற்சாலையொன்றிலிருந்து ஐஸ்கிரீம் கொண்டுவந்து, தெருத் தெருவாக விற்றுப் பிழைப்பதுதான் அவர்கள் தொழில். சீனியும் வேலுவும் கர்னாடிக் மில்லில் கூலி வேலை செய்யும் தொழிலாளர்களின் பிள்ளைகள். மதுரையின் தகப்பனார் அவன் குழந்தையாக இருக்கும்போதே, பரலோகம் போய்விட்டார். தாயார் ஏதோ கூலி வேலை செய்து பிழைத்து வந்தாள். முனுசாமியின் தகப்பனார் ரிக்ஷாக்காரர்.

வறுமையின் காரணத்தால் இந்த இளம் வயதிலேயே ஜீவனத்திற்காகத் தொழில் நடத்த வேண்டியிருந்தது. இந்தப் பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினால், இரட்டிப்பு நஷ்டம்! அவர்களால் வரும்படியில்லை. புத்தகம், பென்ஸில், சம்பளம் இப்படிச் செலவு வேறு.

ஓட்டேரியை அடுத்த காக்காத் தோப்பிலுள்ள குடிசைகளில்தான் இந்த நான்கு சிறுவர்களும் வசித்து வந்தனர். காலையில் எட்டு மணிக்கு வீட்டை விட்டுப் புறப்பட்டுப் புரசைவாக்கம் வருவார்கள். ஆளுக்கு இரண்டு பிளாஸ்கில் ஐஸ்கிரீம் குச்சிகளை நிரப்பிக் கொடுப்பார் முதலாளி, கதிரேசன். நால்வரும் ஒன்றாகப் புறப்படுவார்கள். வழியில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மார்க்கமாகப் பிரிவார்கள். ஒருவன் ஜம்ராத் தோட்டம் போவான்—அதாவது சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு அடுத்துள்ள இடம், முத்தியால்பேட்டை பக்கம் ஒருவன், பச்சையப்பன் பள்ளிக்கூடப் பக்கம் ஒருவன், கோட்டை கோர்ட் இந்தப் பக்கமாக ஒருவன்–என்று இப்படிப் பிரிவார்கள். மத்தியானம் சுமார் ஒரு மணிக்குச் சட்டக் கல்லூரிமுன் எல்லோரும் திரும்பவும் கூடுவார்கள். சிறிது அரட்டை அடித்தபின், ஹைகோர்ட் எதிரிலுள்ள அரண்மனைக்காரத் தெருவில் போய் சோறு விற்கும் ஆயாவிடம் ஆளுக்கு அரையணு கொடுத்துச் சாப்பிடுவார்கள். பிறகு சட்டக் கல்லூரிப் பக்கம் வந்தால், கதிரேசனுடைய ஆள் பெருமாள், கைகளில் பெரிய பிளாஸ்குகள் நிறைய ஐஸ்கிரீம் கொண்டுவந்திருப்பான். சிறுவர்கள் பிளாஸ்கில் எண்ணி நிரப்புவான். இரண்டு மணிக்குமேல் திரும்பவும் பிளாஸ்கைத் தூக்கிக் கொண்டு சுற்றுவார்கள். மாலை ஆறு மணிக்கு மூர்மார்க்கெட்டிற்குப் பின்னால் இருக்கும் மைதானத்தில் சந்திப்பார்கள். ஒன்றாகச் சேர்ந்து புரசைவாக்கம் ஐஸ்கிரீம் கடைக்கு வந்து முதலாளியிடம் கணக்கு ஒப்புவித்தால், ஆளுக்கு மூன்றணு, நாலணு கிடைக்கும். ரூபாய்க்கு ஒரு அணு கமிஷன். அதைப் பெற்றுக்கொண்டு குஷாலாகப் பாடிக்கொண்டே பாரக்ஸ் ரோட் வழியாக இரவு சுமார் எட்டு மணிக்கு இந்த நால்வரும் போவதைப் பார்க்கலாம். இது தான் அவர்கள் அன்றாட வாழ்க்கை.

ஃ ஃ ஃ

மரத்தினடியில் உட்கார்ந்து அரட்டையடித்துக்கொண்டிருந்தனர், நால்வரும். முனுசாமி அன்று தான் கண்ட ஒரு மிஸ்ஸி அம்மா நடப்பதுபோல நடந்து காண்பித்தான். எல்லோரும் கைகொட்டிச் சிரித்தனர். முனுசாமிக்குத்தான் ஆங்கிலம் நன்றாகத் தெரியும்! ‘எஸ், நோ, குட் மார்னிங்’ எல்லாம் சொல்லுவான். விலைகூட அவனுக்கு ஆங்கிலத்திலேயே சொல்லத் தெரியும். ‘ஒன் அணுஸ், டூ அணுஸ்’ என்றுகூடச் சொல்லுவான்!

நான்கு பேருமாக அரண்மனைக்காரத் தெருவிற்குப் போனார்கள்.



'ஏண்டா இன்னும் காணமேன்னு பார்த்தேன், சீக்கிரம் வாங்கடா, நல்ல குழம்பெல்லாம் இருக்கு', என்று கூறி அழைத்தாள், வழக்கமாக அவர்களுக்குச் சோறு போடும் கிழவி.

தினம் பலருக்கு அவர்கள் வீட்டிலிருந்து சோறு கொண்டு வந்துகொண்டிருந்தாள் அந்தக் கிழவி. அவர்கள் சாப்பிட்ட பின், மிகுதி இருந்த சாதம், குழம்பு முதலியவைகளை ஏழைகளுக்கு விற்பாள். இந்த நான்கு சிறுவர்களும் தினம் ஆளுக்கு அரையணா கொடுத்து, அந்தக் கிழவியிடம்தான் சாப்பிடுவார்கள். வேறு யாராகிலும் அதிகம் கொடுப்பதாகக் கூறினாலும் சிறுவர்களுக்கு இல்லை என்று கூறமாட்டாள் கிழவி.

'நல்லா இருக்குது ஆயா குயம்பு', என்று உற்சாகத்தோடு கூறிக்கொண்டே, சாப்பிட்டார்கள் சிறுவர்கள்.

சாப்பாடு முடிந்து சட்டக் கல்லூரிப் பக்கம் வருவதற்கும் பெருமாள் சைகிளில் வருவதற்கும் சரியாக இருந்தது. பிளாஸ்குகளில் எண்ணி ஐஸ்கிரீம் குச்சிகளை நிறைத்து, தன் கையிலுள்ள கணக்குப் புஸ்தகத்தில் எழுதிக் கொண்டு போனான் பெருமாள்.

'டே, சீனி! நீ என்கூட வாடா. என் கிட்டே பாத்தியா என்னயிருக்கு?' என்று தன் சட்டைப் பையில் இருந்த பெரிய பீங்கான் கோலியை எடுத்துக் காண்பித்தான் வேலு. காலையில் தெருவில் கிடைத்தது அது. இதுவரை தன் நண்பர்களுக்கு அதைக் காண்பிக்க மறந்தே போய்விட்டான்!

நல்ல நீல நிறத்தில் இருந்த அந்தக் கோலியைக் கண்டதும், எல்லோரும் அதிக ஆவலுடன் அதை வாங்கப் போனார்கள்.

'டேய்! எனக்குக் குடு', என்று எல்லோருக்கும் முன் கையை நீட்டினான் முனுசாமி.

'போடா கொடுப்பேனு', என்று பின்வாங்கினான் வேலு. சிறிது நேரம் முன்பு அவன் வைத்த பிளாஸ்கின்மீது அவன் கால் பட்டு அது கீழே விழுந்தது. 'களுக்' என்று சப்தம் கேட்டது. நடுங்கிக்கொண்டே பிளாஸ்கை எடுத்துத் திறந்து பார்த்தான் வேலு. பாக்கி மூவரும் கவலையுடன் வேலு அருகில் வந்து பார்த்தனர். பயந்தபடியே பிளாஸ்க் உடைந்துவிட்டது. வேலுவுக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது. விம்மி விம்மி அழத் தொடங்கினான். ஒன்றும் கூறத் தெரியாமல் அவனைச் சுற்றி 'திரு திரு'வென்று விழித்துக் கொண்டே நின்றனர் பாக்கி மூவரும்.

ஒருவாறு ஆறுதலடைந்த முனுசாமி, 'டேய் வேலு! அழுவாதேடா, அதோ பிராட்வேலே இருக்கிற கடையிலே பிளாஸ்க் விக்கிறான். புச்சா வாங்கியாந்தாடறேன், துட்டுக் கொடுங்கடா', என்று எல்லோரிடமுமிருந்த சில்லறையை வாங்கிக்கொண்டு போனான். அவனுடன் போனான் சீனி. வேலுவும் மதுரையும் முகத்தில் கையை வைத்துக்கொண்டு அங்கேயே உட்கார்ந்திருந்தனர்.

பிராட்வேயிலுள்ள ஒரு பெரிய பீங்கான் கடையில் பிளாஸ்குகள் நிறைய வைத்திருப்பதைப் பார்த்தார்கள், சீனியும் முனியனும்.

'ஸார், இந்த பிளாஸ்க் என்ன விலை?' என்று ஒரு பெரிய பிளாஸ்கை சுட்டிக் காட்டிக் கேட்டான் முனுசாமி.

'முப்பத்தைந்து ரூபாய்' என்று பதில் வந்தது.

முனுசாமிக்கும் சீனுவுக்கும் என்ன சொல்வதென்றே தெரியவில்லை, பேசாமல் திரும்பி வந்தார்கள்.

'முப்பத்தைந்து ரூபாயாம்' என்றான் சீனி. அவன் குரல் கம்மியது.

சிறிது நேரம் அங்கேயே உட்கார்ந்திருந்தனர். முனுசாமி சொன்னான், 'வாங்கடா போய் எஜமான்கிட்டே சொல்லிப்பூடலாம்' என்று. எல்லோரும் சேர்ந்து புரசைவாக்கத்தை நோக்கி மெதுவாக நடந்தனர்.

பனிக்கட்டி மார்க் ஐஸ் கடை சொந்தக்காரர், மத்தியானம் மூன்று மணிக்கு கிழக்கு சென்னைப் பக்கம் தன் கம்பெனியின் பெயரை விளம்பரப்படுத்திக் கொண்டும், வியாபாரத்தை நடத்திக் கொண்டும் இருக்க வேண்டிய பையன்கள், தன் முன்னால் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு நிற்பதைக் கண்டதும், என்னவோ ஏதோ என்று திகிலடைந்தார்.

'என்னடா இப்பவே வந்திட்டீங்கோ?' என்றார் கலவரத்துடன்.

'ஒண்ணுமில்லீங்கோ, ஒரு சைகில் மோதி நம்ம வேலுவுடைய பிளாஸ்க் ஒண்ணு உடைஞ்சு போச்சு' என்றான் முனுசாமி. முனுசாமிக்குத்தான் தைரியமும் சமயோசித புத்தியும் அதிகம்.

முனுசாமி சொன்னதை ஆமோதித்து, தலையை அசைத்தனர் பாக்கி மூவரும். பிளாஸ்குகளைக் கீழே வைத்தனர். உடைந்த பிளாஸ்கை முன்னால் வைத்தான் வேலு. அவன் அழுகை இன்னும் நின்றபாடில்லை.

ஏதோ என்னவோ என்று எண்ணிய கதிரேசனுக்கு, ஒரு பிளாஸ்குதான் உடைந்தது என்று கேட்டதும், சிறிது ஆறுதல் ஏற்பட்டது. இதற்காக நான்கு பேர்களும் திரும்பிவிட்டார்கள் என்பதைப் பார்த்த அவருக்குக் கோபம் எல்லை மீறி வந்தது.

'ஆமாண்டா, அவன் ஒரு பிளாஸ்கை உடைத்ததற்காக நீங்களெல்லாம் சாட்சி சொல்ல வந்திட்டீங்களோ!' என்று அதட்டினார்.

ஒன்றும் கூறாது நின்றனர் சிறுவர்கள்.

'ஏண்டா வேலு, மக்கு! ஏண்டா ரோடில் பராக்குப் பாத்துண்டே நடந்திருப்பே, எவனோ வந்து இடிச்சான், உன் அப்பன் சொத்தென்னடா போச்சு! அது விலை ஐம்பது ரூபாய், யார் கொடுக்கிறது' என்று எரிந்து விழுந்தார். 'எல்லோரும் ஒண்ணா வந்திட்டானுங்க! எல்லாத்தையும் வச்சிட்டுப் போங்கடா, கழுதைகளா!' என்று கத்தினார்.

பிளாஸ்குகளை வைத்த இடத்திலேயே வைத்துவிட்டு, மெதுவாக வெளியே வரத் தொடங்கினர் நால்வரும்.

'ஏண்டா இன்னிக்கு வித்த துட்டு எங்கேடா? கீழே வச்சிட்டுப் போங்கடா, பேசாமே கம்பி நீட்டறீங்களே!' என்றார் கதிரேசன்.

சிறுவர்கள் தங்கள் பையிலிருந்த சில்லறையை அவர் எதிரில் கொண்டு போய் வைத்துவிட்டுத் திரும்பினர். எல்லோருடைய கண்களிலும் கண்ணீர் அரும்பி நின்றது. துக்கம் தாங்காமல் அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது. நான்கு பேரும் கடையை விட்டு சோடு வழியே ஓட்டேரியை நோக்கி நடந்தனர்.

ஓட்டேரி பாலத்தினருகில்தான் அவர்கள் பிரிவது. அங்கு வந்ததும், முகத்தைச் சட்டையால் நன்றாகத் துடைத்துக்கொண்டனர்.

'முனியா, வீட்டிலே துட்டுக் கேப்பாங்களேடா, என்ன சொல்றது?' என்றான் வேலு. அவன் தகப்பனாரின் கோபத்தை நினைக்கும்பொழுதே, பயமாக இருந்தது அவனுக்கு.

'துட்டெ எங்கேயோ செலவு செய்தாட்டே என்று பூசை போடுவாங்க' என்றான் சீனி.

'இன்னிக்கு மிஷின் கெட்டுப் போச்சு, ஐஸ் கிரீம் கொடுக்கலே, இம்மா நேரம் காத்திருந்தோம் என்னு புளுகலாம்டா' என்றான் முனுசாமி.

எல்லோரும் அதை ஆமோதித்தனர். அன்றைய நிகழ்ச்சிகளை மறந்து சந்தோஷமாக வீட்டிற்குப் போனார்கள்.

மறு நாள் காலை வழக்கம்போல் ஓட்டேரிப் பாலத்தினருகில் ஒன்றாகச் சேர்ந்து, புரசைவாக்கம் ஐஸ்கிரீம் கடைக்குப் புறப்பட்டனர். வேலு நடு நடுங்கிக்கொண்டே வந்தான்.

கடை அருகில் வந்ததும் மெதுவாகப் பதுங்கிக்கொண்டே ஒருவர்பின் ஒருவராக உள்ளே சென்றனர்.

'வந்துட்டானுங்க சோம்பேறிங்க' என்று கத்தினார் கதிரேசன். பிறகு, 'டேய், நீங்க மூணு பேரும் வேணு போய் வியாபாரம் பண்ணுங்கோ, அந்த உதவாக்கறைக்கு இனிமே என் கடையிலே வேலையில்லே. நல்ல புதிய பிளாஸ்கை உடைச்சிட்டான் கழுதை!' என்றார்.

இதைக் கேட்டதும் வேலுவுக்கு அழுகை வந்து விட்டது.

'இனிமே ரொம்ப சாக்கிரதையா இருக்கேனுங்கோ' என்றான் தன் மழலை மொழியில். அவன் இளம் உள்ளம் விவரிக்க முடியாத துக்கத்தால் துடித்தது.

'போடா உதவாக்கறை' என்று கூறி, 'டேய் பெருமாள்! மீதி பசங்களுக்கு பிளாஸ்குகளைக் கொடு' என்றார், கதிரேசன்.

ஐஸ்கிரீம் குச்சிகள் நிறைத்துத் தயாராக வைத்திருந்த பிளாஸ்குகளிலிருந்து ஆறு பிளாஸ்குகளைக் கொண்டு வந்து வைத்தான் பெருமாள்.

முனுசாமி மற்ற மூவரிடமும் ஏதோ பேசினான். எல்லோருமாகப் பிளாஸ்குகள் முன்னால் உட்கார்ந்துவிட்டனர்.

'என்னடா அது! உட்கார்ந்துவிட்டீங்கோ!' என்று அதட்டினார் முதலாளி.

'ஸ்டைக் போடறோம்' என்றான் முனுசாமி.

'ஸ்டிரைக்காமில்லே ஸ்டைக்; பெரிய புரட்சிவாதி இவரு! எழுந்து போங்கடா தீவட்டிகளா' என்று கூறி, ஓடிவந்து முனுசாமியை விட்டார் இரண்டு அறை.

இதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை முனுசாமி. 'ஐயோ, யம்மா, இதோ போறேனுங்க' என்று கையில் பிளாஸ்குகளை எடுத்துக்கொண்டு ஓடினான், சீனியும் மதுரையும் கூடவே தங்கள் பிளாஸ்குகளுடன் ஓடினர். வேலு எல்லோருக்கும் முன்பே வெளியே ஓடிவிட்டான்.

நால்வரும் சிறிது தூரத்தில் ஒன்று சேர்ந்தனர். பேசாமல் மூர்மார்க்கெட் வரை வந்தனர். அப்போது முனுசாமி சொன்னான்: 'டேய், நாம வேலுவுக்கு தினம் நம்ம கமிஷன்லே பங்கு குடுத்துடணும்' என்று.

இதற்கு எல்லோரும் சம்மதித்தனர். ஆனால், வேலு சொன்னான்: 'நாகூட விக்கிறேன், எனக்கொரு புட்டி கொடு' என்று.

மதுரையின் ஒரு பிளாஸ்கை வேலு கொண்டுபோக வேண்டியது என்று தீர்மானமாயிற்று, பிறகு எல்லோரும் வழக்கம்போலப் பிரிந்தனர்.

பகல் சுமார் ஒரு மணிக்கு சட்டக் கல்லூரியின் அருகில் சந்தித்தனர். சாப்பாட்டிற்கு அரண்மனைக்காரத் தெருவுக்குச் சென்றனர்.

வேலுவையும் மதுரையையும் பார்த்து, 'ஏண்டா ஆளுக்கு ஒரு புட்டிதான் வச்சிருக்கீங்கோ' என்று கேட்டாள் கிழவி. நடந்த விவரத்தைக் கூறினான் முனுசாமி.

'ஐயோ பாவம்! கொழந்தெ கையிலேந்து உடைஞ்சு போனதுக்கா இப்படிப் பண்ணினான் படுபாவி!' என்று சபித்தாள்.

'டே, வேலுவுக்குக் காசில்லாமெ சோறு போடறேன்' என்றாள்.

இப்படியே இரண்டு மூன்று நாட்கள் கழிந்தன. புரசைவாக்கம் கடைப் பக்கம் மாத்திரம் வரமாட்டான் வேலு. மந்திரியானம் பெருமாள் வரும்பொழுதும் எங்காவது மறைந்துகொள்வான். தினம் வேலுவுக்குத் தங்களுக்குக் கிடைத்த கமிஷனில் பங்கு கொடுத்து வந்தனர் மற்றவர்.

அன்றும் வழக்கம்போல் சாப்பாட்டிற்குப் போனார்கள். ஆயாவைக் காணோம். ஆயா உட்காரும் இடத்தருகில் சோறு விற்கும் வேறு ஒரு பெண்மணி சொன்னாள்: 'ஆயா காரிலே அடிபட்டு ஆஸ்பத்திரிக்குத் தூக்கிட்டு போனாங்களாம்' என்று.

சிறுவர்களுக்கு உலகமே சுற்றுவது போலிருந்தது.

'இன்னிக்கு எங்கிட்டத்தான் சோறு தின்னுங்க' என்றாள் அந்தம்மாள்.

அவர்களுக்குச் சோறே வேண்டியிருக்கவில்லை. 'பாவம், ஆயா என்ன கதியா இருக்காளோ!' என்ற எண்ணம் தான் அவர்கள் மனதில் தோன்றியது.

'சோறு வாணும், பசி இல்லே' என்றான் சீனி. மற்ற மூவரும் தங்களுக்கும் சோறு வேண்டாமென்று கூறிவிட்டனர்.

'டேய் வாங்கடா! ஜம்ராத் தோட்ட ஆஸ்பத்திரியிலேதான் இருப்பாங்கோ, போய்ப் பார்க்கலாம்' என்றான் முனுசாமி. எல்லோரும் புறப்பட்டனர்.

சட்டக் கல்லூரி அருகில் வந்ததும் சீனி சொன்னான்: 'இப்போ பெருமாள் வருவான். புட்டிலே ஐஸ்கிரீம் நெரப்பிக்கினு போவலாம். இல்லாட்டி எஜமான்

கிட்டே நம்மைக் காணோம்னு சொல்லிப் போடுவான்.'

அவன் யோசனைப்படியே பெருமாளுக்காகக் காத்திருந்தனர். வேலு தூரமாகச் சென்று மறைந்து நின்றுகொண்டிருந்தான். பெருமாள் வந்து சரக்குக் கொடுத்த பின்பு புறப்பட்டனர்.

ஆஸ்பத்திரிக் கதவண்டை சிப்பந்தி உட்கார்ந்திருந்தான். பிளாஸ்குகளுடன் இவர்களைக் கண்டதும், 'ஏண்டா! இன்னு ஆஸ்பத்திரிலே போய் விக்கப் போறீங்களா?' என்று கேட்டுவிட்டுச் சிரித்தான்.

'இல்லீங்கோ, எங்க ஆயா இருக்காங்கோ பாக்கணும்' என்றான் முனுசாமி.

'அதுக்கு நாலு மணிக்கு வாங்க. பாஸ் கொண்டாரணும், இல்லாட்டி உள்ளே விடமாட்டேன்' என்றான்.

பாஸுக்கு எங்கே போவார்கள் அவர்கள். முனுசாமி சொன்னான், 'டேய், எனக்கு ஒரு நர்ஸ் அம்மா தெரியும். அதோ அங்கே அவங்கொ வீடுங்கொ இருக்கே, அங்கே ஐஸ்கிரீம் வாங்கியிருக்காங்கோ, போய்ப் பார்க்கலாம்' என்று. எல்லோரும் அங்கு நடந்தனர்.

நர்ஸுகள் விடுதியைச் சுற்றிச் சுற்றி வந்தனர். முனுசாமிக்குத் தெரிந்த மிஸ்ஸி அம்மாவைக் காணவில்லை. வேறு வழி ஒன்றும் தோன்றாது, ஆஸ்பத்திரியை நோக்கித் திரும்பவும் வந்தனர். அப்பொழுது ஆஸ்பத்திரியிலிருந்து சில நர்ஸ்கள் விடுதியை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

தூரத்திலேயே முனுசாமி மிஸ்ஸி அம்மாவைக் கண்டு விட்டான். 'அதோ வராங்கடா நர்ஸ் மிஸ்ஸி' என்று கூறி, அவளை நோக்கி நடந்தான். அவளை நெருங்கியதும், 'மிஸ்ஸி அம்மா, எங்க ஆயா ஆஸ்பத்திரிலே இருக்காங்க பாக்கணும், உள்ளே இட்டிகினு போங்களேன்' என்றான் பரிதாபமாக.

'எந்த வார்டில்' என்று கேட்டாள் நர்ஸ்.

ஒன்றும் புரியாது விழித்தான் முனுசாமி.

'எங்கெ இருக்காங்கோன்னு தெரியாமே எப்படிப் பார்க்கிறது, நாளைக்குத் தெரிஞ்சு வாங்கோ, நாலு மணிக்கு வாங்கோ' என்று கூறி, விடுதிக்குப் போனாள் நர்ஸ்.

முனுசாமிக்கும் அவன் நண்பர்களுக்கும் அவள் கூறியது ஒன்றுமே புரியவில்லை. ஆஸ்பத்திரியில் இருக்கிறாள் என்றால், எங்கே என்று கேட்டால், என்ன சொல்வது! ஏன் நர்ஸம்மா இப்படிச் சொல்றாங்கோ என்று வியந்தான் முனுசாமி. எதற்கும் மறு நாள் வரலாம் என்று அங்கிருந்து போனார்கள்.

மறு நாள் சாப்பாட்டு வேளைக்கு அரண்மனைக்காரத் தெருவிற்குப் போனார்கள். முன்னாள் ஆயாவிற்கு அடிபட்ட விஷயம் சொன்ன பெண்மணியிடம் போய் சோறு சாப்பிட்டனர்.

'ஆயா ஜம்ராத் தோட்ட ஆஸ்பத்திரியிலே 22 நம்பர் ரூமிலே இருக்காங்கோ' என்றாள், அவள். அதைத்தான் நர்ஸ் அம்மா கேட்டாள் என்று இப்பொழுது புரிந்தது முனுசாமிக்கு.

அன்று மூன்று மணிக்கு சட்டக் கல்லூரி அருகே கூடி, ஆயாவைப் பார்க்க ஆஸ்பத்திரிக்குப் போவது என்று தீர்மானித்தனர்.

மூன்று மணிக்கு முன்பே நால்வரும் ஒன்று சேர்ந்துவிட்டனர். புறப்பட்டதும் வேலு சொன்னான், 'எங்கப்பா ஒருவாட்டி எங்கம்மாவைப் பாக்க ஆஸ்பத்திரி போனாங்க, அப்பொ சாத்துக்குடி பழம் வாங்கிக்கினு போனாரு' என்று.

ஆயாவிற்கு சாத்துக்குடி பழம் வாங்கிக்கொண்டு போக வேண்டுமென்று பஸ் நிற்குமிடத்தில் சாத்துக்குடி விற்றுக் கொண்டிருந்த கிழவியிடமிருந்து ஒரு அணா கொடுத்து ஒரு சாத்துக்குடி பழம் வாங்கினார்கள்.

மூன்றரை மணிக்கெல்லாம் நர்ஸ் விடுதிக்கெதிரில் வந்து ஒரு மரத்தினடியில் நர்ஸ் அம்மாவிற்காகக் காத்திருந்தனர்.

சுமார் நாலு மணிக்கு நர்ஸம்மா வேறு சில நர்ஸ்களுடன் வந்தாள். அவளைக் கண்டதும் பயபக்தியுடன் அவளருகில் போனார்கள். 'அட! சரியா வந்துவிட்டீர்களே, எனக்குக்கூட ஞாபகம் இல்லை' என்று கூறி, 'எந்த வார்ட் தெரியுமா' என்றாள்.

'இருபத்திரண்டு ரூம்' என்றான் முனுசாமி.

'ஓ டொனோவன் வார்டா? ஆக்ஸிடெண்ட் கேஸ், சரி வாங்கோ!' என்றாள்.

'இந்தாம்மா ஐஸ்கிரீம்' என்று ஒரு இரண்டணா ஐஸ்கிரீம் கட்டியை எடுத்து அவளிடம் நீட்டினான், முனுசாமி.

அவள் முகத்தில் புன்முறுவல் பூத்தது. 'இப்போ வேண்டாம், பின்னே வாங்கிக்கிறேன்' என்று கூறினாள்.

சிறுவர்களை வார்டில் கொண்டுபோய் விட்டாள் நர்ஸ். ஒரு மூலையிலிருந்த கட்டிலில் தலையில் பெரிய கட்டுகளுடன் படுத்திருந்த ஆயாவைப் பார்த்துவிட்டான் மதுரை.

'அதோ ஆயா' என்றான்.

'சரி; நீங்க ஆயாகிட்ட பேசிவிட்டுப் போங்கள்; நான் போகிறேன்' என்று கூறிவிட்டுப் போய்விட்டாள் நர்ஸ்.

கண்ணை மூடிக்கொண்டு தன் நாதியற்ற நிலைமையை எண்ணி வருந்திக் கொண்டிருந்த ஆயாவின் கையில் மிருதுவான ஸ்பரிசம் பட்டது. மெதுவாகக் கண்ணைத் திறந்து பார்த்தாள். தன் அருகில் தன்னையே பார்த்துக்கொண்டு அடுக்கடுக்காக நிற்கும் சிறுவர்களைக் கண்டதும், அவள் மனம் எல்லையற்ற சந்தோஷமடைந்தது.

'எங்கேடா வந்தீங்க?' என்று தீனக் குரலில் கேட்டாள் கிழவி.

'உன்னைப் பார்க்கத்தான் ஆயா' என்றான் முனுசாமி. அவன் கூறுவதை ஆமோதித்து எல்லோரும் தலையை ஆட்டினர். சீனி தன் கையிலிருந்த சாத்துக்குடிப் பழத்தை ஆயாவின் கையில் வைத்தான். கிழவிக்கு ஆனந்தத்தால் கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது.

அங்கு வந்த நர்ஸ் சொன்னாள்: 'ஏன் பாட்டி, உனக்கு யாருமே உறவினர் இல்லையென்று சொன்னாயே, இதோ அடுக்கடுக்கா நாலு பேரப் பிள்ளைகள் இருக்கிறார்களே!'

அதைக் கேட்டதும் கிழவியின் மனம் ஆனந்த பாவசமடைந்தது. எல்லையற்ற சந்தோஷத்தால் அவளால் பேச முடியவில்லை. தொண்டை அடைத்துக் கொண்டது. அருகிலிருந்த சீனியின் தலையை வாஞ்சையோடு தடவினாள்.

சிறிது நேரம் நான்கு சிறுவர்களையும் ஆர்வத்தோடு பார்த்துக்கொண்டேயிருந்தாள். பிறகு, 'ஏண்டா யார் கிட்டே சோறு தின்றீங்கோ?' என்றாள். 'உன் பக்கத்திலே இருப்பாங்களே சின்னம்மா, அவுங்ககிட்டே' என்றான் முனுசாமி.

வேலு கையில் பிளாஸ்க் இல்லாததைப் பார்த்து, 'ஏண்டா இன்னும் அந்தச் சண்டாளன் உனக்குப் புட்டிங்கோ கொடுக்கலே வியாபாரம் பண்ண?' என்றாள்.

'இல்லே ஆயா' என்றான் வேலு. அவன் முகத்தில் துக்க ரேகை படர்ந்தது.

'என்ன மனுசன் அவன்' என்று அங்கலாய்த்துக்கொண்டாள் கிழவி.

வெகு நேரம் கிழவி சிறுவர்களுடன் பேசிக்கொண்டிருந்தாள். பார்க்க வந்த

வர்கள் எல்லோரும் வெளியே போக வேண்டும் என்று கூறிக்கொண்டே போனான் ஒருவன். பக்கத்திலிருந்த நோயாளிகளைப் பார்க்க வந்தவர்கள், விடை பெற்றுக்கொண்டு போய்க்கொண்டிருந்தனர். மறு நாள் வருவதாகக் கூறி, சிறுவர்களும் விடை பெற்றுக்கொண்டு சென்றனர்.

அடுத்த நாளும் ஆயாவைப் பார்க்கச் சாத்துக்குடியுடன் மூன்று மணிக்கே நர்ஸ் விடுதியருகில் வந்துவிட்டனர் நால்வரும்.

மணி நாலுக்கு மேலாகியும் நர்ஸ் அம்மாவைக் காணவில்லை. பல நர்ஸ்கள் ஆஸ்பத்திரியிலிருந்து விடுதிக்கும், விடுதியிலிருந்து ஆஸ்பத்திரிக்கும் போய்க்கொண்டிருந்தனர். ஆனால், முனுசாமிக்குத் தெரிந்த அந்த நர்ஸைக் காணவில்லை.

வெகுநேரம் அங்கேயே உட்கார்ந்திருந்தனர். நல்ல பட்டு புடவை அணிந்து, அலங்காரமாக இருந்த ஒரு நங்கை விடுதியிலிருந்து வந்து வெளியில் காத்திருந்த காரில் ஏறப் போனாள். முனுசாமி பார்த்து விட்டான். அவனுக்குத் தெரிந்த நர்ஸம்மாதான் அது. தலை தெறிக்க ஓடினான்.

'நர்ஸம்மா ஆயாவைப் பார்க்க கூட்டிப் போங்க' என்று கெஞ்சினான்.

காரில் ஏறப் போனவள், சிறுவனின் விண்ணப்பத்தைக் கேட்டு, சிறிது தயங்கி நின்றாள். இதற்குள் மற்றவர்களும் ஓடிவந்தனர். ஏதோ வரப்பிரசாதத்தை எதிர்பார்ப்பவர்கள்போல நர்ஸின் முகத்தையே நால்வரும் ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தனர்.

'இன்னிக்கு முடியாது, நாளைக்குக் கூட்டிக்கொண்டு போகிறேன்' என்று

கூறி, காரில் பகட்டான உடையணிந்து மிடுக்குடனிருந்த யுவனருகில் உட்காரப் போனாள். சீனி தன் கையிலிருந்த பழத்தை அவளிடம் நீட்டினான். இதைக் கண்ட நர்ஸ், 'யாருக்கு உங்க ஆயாவுக்கு வாங்கி வந்ததா?' என்றாள்.

சீனி 'ஆமாம்' என்று தலையை அசைத்தான்.

இதற்குள் காரை ஸ்டார்ட் செய்துவிட்டான் அந்த இளைஞன்.

அவள் பெண் மனதில் என்ன தோன்றியதோ, புறப்படவிருந்த காரிலிருந்து இறங்கி, 'இதோ ஐந்து நிமிடத்தில் வந்து விடுகிறேன் குமார்' என்று கூறி, சிறுவர்களைப் பார்த்து, 'வாங்கள்! ஆயாவிடம் கூட்டிக்கொண்டு போகிறேன்' என்றாள்.

சிறுவர்கள் அவள் பின்னால் குதூகலத்துடன் ஓடினார்கள்.

காரிலிருந்த குமார், அந்தச் சோம்பேறிப் பிச்சைக்காரப் பிள்ளைகளைக் கண்டு, தன் காதலி மஞ்சுளா போனதைப் பார்த்து, அச்சிறுவர்களைத் தன் வாயாரத் திட்டினான். அவன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

சிறுவர்களை வார்டில் கொண்டு விட்டுத் திரும்பினாள் மஞ்சுளா.

'என்ன பாட்டி! உன் பேரப்பிள்ளைகளைக் காணோமென்று இத்தனை நாழி சொல்லிண்டிருந்தீங்களே, இதோ வந்து விட்டார்களே!' என்றாள் ஒரு நர்ஸ்.

'இவ்வளவு நாழி வரலையே, இன்னிக்கு வரமாட்டீங்களோன்னு நினைச்சேன்' என்றாள் கிழவி.

'இல்லே ஆயா! மூணு மணிக்கெல்லா வந்துட்டோம்; உள்ளே கூட்டிவரத் தெரிஞ்ச நர்ஸைக் காணலே! அதுதான் நேரமாய் போச்சு' என்றான் முனுசாமி.

'நாளைக்குச் சீட்டு வாங்கித் தறேன்; தினம் கஷ்டமில்லாம வரலாம்' என்றாள் கிழவி.

கிழவி சிறுவர்களுடைய க்ஷேம லாபங்களை விசாரித்துக் கொண்டிருந்தாள். வேலுவைப் பார்த்து, 'டே வேலு! உனக்கு ஒரு பரிசு கொடுக்கப் போகிறேன், இங்கே வா!' என்று அழைத்தாள் கிழவி. வேலு அருகில் வந்ததும், அவனை அணைத்துக்கொண்டு உச்சி முகர்ந்தாள். அவன் வியர்வை உடம்பையும் அழுக்கு சட்டையையும் அவள் பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை. அவைகள் அவளுக்கு இணையில்லாத இன்ப வாசனையாகத் தோன்றினபோலும். அவள் உள்ளத்தில்தான் வரையற்ற பாசம் குடிகொண்டு விட்டதே!



கிழவி மெதுவாக எழுந்து, தன் அருகிலிருந்த சிறிய அலமாரியைத் திறந்து, ஒரு பெரிய பிளாஸ்கை எடுத்தாள். வெளிச்சத்தில் வெள்ளிபோல மின்னியது அது.

'இந்தா வேலு! உனக்குத்தான் இது' என்று கூறி, அவன் இரு சிறு கரங்களையும் பற்றி, அதில் பிளாஸ்கை வைத்தாள். வேலு ஒன்றும் புரியாது விழித்தான்.

'இதைக் கொண்டு போய் அந்தப் படுபாவி ஐஸ்கிரீம்காரன்கிட்டே கொடு, நீ உடைச்ச புட்டிக்கு புதிசா; இனியாவது உன்னை வியாபாரம் செய்யச் சேர்த்திக்கச் சொல்லு' என்றாள்.

'இன்னா ஆயா இது! எங்கிருந்து ஆயா இது!' என்றான் முனுசாமி.

'அதெல்லாம் உனக்கென்னடா!' என்று ஆசையுடன் கடிந்துகொண்டாள் கிழவி.

அப்பொழுது அங்கு வந்த வார்ட் பையன் சொன்னான்: 'நான்தான் இன்னிக்கு வாங்கியாந்தேன். முப்பது ரூபா. ஆமா, பெரிய தொரெக் கம்பெனிலேந்து வாங்கியாந்தேன், ஆயா வாங்கியாரச் சொன்னாங்க.'

வேலு அந்த பிளாஸ்கின் அழகையே பார்த்துக்கொண்டிருந்தான். மற்றவர்களும் அவனைச் சுற்றி நின்று, அதன் அழகைத் தொட்டு அனுபவித்துக்கொண்டிருந்தனர்.

'சீக்கிரமா போங்கடா. அந்தக் கடன்காரன்கிட்டே கொண்டுபோய் கொடுங்கோ, பத்திரமா போங்கோ' என்று அவர்களை விரட்டினாள் கிழவி.

சிறுவர்கள் உற்சாகத்தோடு' புரசைவாக்கத்தை நோக்கிப் புறப்பட்டனர்.

தன் உறவினர் ஒருவரைப் பார்க்க ஆஸ்பத்திரிக்கு வந்த பனிக்கட்டி ஐஸ்கிரீம் கடைச் சொந்தக்காரர் கதிரேசன், தன் கடை ஐஸ்கிரீம் விற்கும் சிறுவர்கள் ஆஸ்பத்திரிக்குள் போவதைப் பார்த்து, எதற்காகப் போகிறார்கள் என்று பார்க்க அவர்கள் பின்னாலேயே வந்திருக்கிறார். அங்கு நடந்த காட்சியை எல்லாம் பார்த்தார். அவருக்கு விஷயம் விளங்கி விட்டது.

அங்கிருந்த வார்டு பையனைத் தனியாக அழைத்து, கிழவி யார் என்றும் அந்தச் சிறுவர்களுக்கு ஏன் பிளாஸ்க் வாங்கிக் கொடுத்தாள் என்றும் கேட்டார்.

'பாவம்! அந்தப் பசங்க ஐஸ் கிரீம் வித்துப் பிழைக்கிறவங்க ஸார். ஏதோ பிளாஸ்க் உடைந்து போச்சுன்னு முதலாளி பையனை அடிச்சு துரத்திப்புட்டாராம். அவங்களுக்குத் தினம் சோறு விக்கிற கிழவி, பாவம்! என் கிட்டே எண்ணி நாப்பது ரூபாய் கொடுத்து, நல்ல பிளாஸ்கா வாங்கியாரச் சொன்னாங்க. அதைத்தான் இப்போ பசங்க கிட்டே கொடுத்தாங்கோ. அந்தக் கிழவி யாரோ, பசங்க யாரோ! ஏழைங்களுக்கு இருக்கிற இரக்கம், எங்கே பணக்காரங்களுக்கு இருக்கு? கஷ்டப்படறவங்களுக்கு இல்லே தெரியும் பிறர் கஷ்டம்' என்று ஒரு சின்ன பிரசங்கம் பண்ணி விட்டுப் போனான் 'வார்டு' பையன்.

கதிரேசனுக்கு ஆயிரம் ஈட்டிகள் கொண்டு தன்னைக் குத்துவதுபோலிருந்தது. தன் செய்கையை நினைந்து அவர் மனம் அவமானத்தால் குன்றியது. அவரைக் கட்டிச் சவுக்கால் அடித்தால்கூட அவ்வளவு அவமானம் தோன்றியிருக்காது. சோறு கொண்டு போடும் ஒரு ஏழைக் கிழவிக்கு இருக்கும் புத்தியும் இரக்கமும், கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்ற தனக்கு இல்லையே என்று எண்ணியபொழுது, அவருக்கு மனதை என்னவோ செய்தது. சொல்லொண்ணுத் துயரத்தால் துடித்தார். இனியும் தான் அங்கிருந்தால், தான்தான் அந்தக் கொடூர முதலாளி என்று அறிந்து, அவமானத்திற்கு இடமாகலாம் என்ற பிரமை தோன்றியது. உடனே ஆஸ்பத்திரியிலிருந்து கிளம்பினார்.

சிறுவர்கள் உற்சாகத்துடன் புரசைவாக்கத்தை அடைந்தார்கள். ஆனால், 'ஐஸ்கிரீம் பாக்டரி' அருகில் வந்ததும், சிறிது பயமாகத்தானிருந்தது அவர்களுக்கு. முதலாளி என்ன செய்வாரோ என்ற பயம்!

மெதுவாக ஒருவர்பின் ஒருவராக உள்ளே சென்றனர். வேலு புதிய பிளாஸ்குடன் தயங்கித் தயங்கி எல்லோருக்கும் பின்னால் வந்தான்.

இவர்களுக்கு முன்பே கதிரேசன் கடைக்கு வந்துவிட்டார். சிறுவர்கள் பயந்துகொண்டு தயங்கி வருவதைக் கண்டதும், அவர் மனம் சங்கடப்பட்டது. பால்ய வயதிலே பள்ளிக்கூடம் போய், பயமறியாமல் கன்றுகள்போல் துள்ளி ஓடி ஆடிச் சந்தோஷமாக இருக்க வேண்டிய காலத்திலே, வாழ்க்கையின் கொடுமையால் வயிறு வளர்க்க இந்த வயதிலேயே அல்லும் பகலும் தகிக்கும் வெய்யிலில் அலைந்து திரிந்து வியாபாரம் செய்ய வேண்டியிருக்கும் அவர்கள் நிலைமையை நினைத்தார்; கண்களிலே கண்ணீர் சுரந்து உருண்டோடியது.

வேலு பிளாஸ்கைக் கொண்டு போய் பயபக்தியுடன் கதிரேசன் முன் வைத்தான்.

'உடைந்து போன பிளாஸ்கிற்குப் பதில் வேறு கொண்டுவந்து விட்டாயா? சரி, நாளையிலிருந்து நீயும் வா. நாளையிலிருந்து உங்கள் கமிஷன் ரூபாய்க்கு ஒரு அணு இல்லை, ஒன்றரை அணு!' என்றார்.

சிறுவர்கள் முகம் உவகையால் மலர்ந்தது.

'இந்தாங்கடா போய் 'நாஸ்தா' பண்ணிட்டு வீட்டுக்குப் போங்க' என்று கூறி, ஆளுக்கு நாலணு வேறு கொடுத்தார் கதிரேசன்.

சிறுவர்களுக்கு ஒரே கொம்மாளம். தங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட புயல் நீங்கி, இப்பொழுது எதிர்பாராத அதிருஷ்டம் அடித்துவிட்டதாக எண்ணினர்.

சாலை வழியாக அவர்கள் போகும் ஜோரைத்தான் பாருங்களேன்! சீனிக்கு சினிமா பாட்டுகளை நன்றாகப் பாடத் தெரியும். தன் மெல்லிய குரலில் அதோ அவன் பாடிக்கொண்டே போகிறானே,

'புதுப் பெண்ணின் மனதைத்
தொட்டுப் போனவரே
உங்க எண்ணத்தை சொல்லி
விட்டுப் போங்க
இளம் மனதைத் தாண்டிவிட்டுப்
போனவரே
அந்த மர்மத்தைச் சொல்லி
விட்டுப் போங்க...'

★

இருள் நீங்கியது!

வாகர் நதி இனிய கீதம் பாடியது. தழுவிச் சென்ற தென்றல் தண்மையை அளித்தது. மலைப்பிராந்தியம் முழுவதும் மூடிக்கிடந்த பசுமை, கண்களுக்கு விருந்தாக அமைந்தது. பொழுது சாய்ந்து விட்டதென அறிந்து மகிழமரம் பூக்களை உதிர்த்தது. மகிழ மலர் வாசனை நாசியின் வழியாகப் பாய்ந்து உள்ளத்தில் லாகிரியை உண்டுபண்ணியது. புள்ளினங்கள் விடை பெற்றுச் சென்றன. ஆனால் ஐந்து புலன்களையும் அடக்கிய ஆனந்தரின் மனம் இயற்கையின் அரவணைப்பில் ஈடுபடவில்லை. தெய்வீகக் கற்பனையில் ஆழ்ந்திருந்த அவர் நெஞ்சம், மனித அறிவுக்கு அப்பாற்பட்ட புதிர்களை அவிழ்த்துக்கொண்டிருந்தது.

வளைந்து செல்லும் வாகர் நதிக்கரையில் அமைந்திருந்த அஜந்தா குகைகள் புத்த பிக்ஷுக்களின் இருப்பிடமாக விளங்கி வந்தன. தூய்மை மணம் பரப்பிய அந்த இடத்திலே விஹாரங்கள், புத்தர் போதித்த உண்மைகளை எதிரொலித்தன. புத்த பிக்ஷுவின் உளிகள் அவர்களுடைய சிற்பத் திறமையை வெளிப்படுத்தியிருந்தன. ஆழ்ந்து அகன்று, உயரமாகச் செதுக்கப்பட்டிருந்த ஸ்தூபிகள் உயர்ந்த லட்சியங்களைத் தோற்றுவித்தன. வட இந்தியாவில் மஹாயான புத்த மதம் ஊன்றிவிட்டபோதிலும் தென்னாட்டிலே இன்னும் ஹீனயான புத்த மதமே ஓங்கியிருந்தது.

தன் தோளில் கரம் பட்ட உணர்ச்சியினால் திரும்பிய ஆனந்தர், விஹாரத் தலைவர் விபுலர் நிற்கக் கண்டார்.

'ஆனந்தா! நேரமாகி விட்டதே. சங்கத்திற்குச் செல்ல வேண்டாமா?' என்று அன்பு ததும்பக் கூறினார்.

'ஸ்வாமி! நான் இங்கு வந்த நாள் முதல் என் மனம் தத்தளிக்கிறது. புத்த மதத்தைத் தழுவியது சரிதானு என்று எனக்குத் தெரியவில்லை' என்று மனம் சோர்ந்து சொன்னார் ஆனந்தர்.

'சிறிது நேரம் தியானத்தில் ஆழ்ந்தால் மனக்குழப்பம் தீர்ந்துவிடும். நானும் உன்னைப்போலிருந்த பொழுது சஞ்சலமடைந்தேன். ஆனால், அறவழியில் மனதைச் செலுத்தி சில நாட்களில் என் மனம் பக்குவம் அடைந்தது. வா! போகலாம்' என்று கூறிய விபுலரைத் தொடர்ந்து ஆனந்தர் விஹாரத்திற்குள் நுழைந்தார்.

∴ ∴ ∴

ஆனந்தரின் பூர்வாச்ரமப் பெயர் விக்கிரமன். ஹிந்து மதத்தைப் போற்றி வளர்த்த ராஷ்டிரகூட அரசன் கிருஷ்ணரின் ஆட்சியில் வளர்ந்தவன், மன்னன் கற்றறிந்தவன். மக்களின் நன்மையைப் பேணுபவன். ஆனால், அவனைச் சுற்றி இருந்த இந்து மதப் பிரசாரகர்கள் பரப்பி வந்த கொள்கைகள் மக்களிடையே புரட்சியை உண்டுபண்ணின. யாகம் செய்தவர்களுக்குத்தான் சுவர்க்கம் கிட்டும் என்ற எண்ணத்தை அடைந்த மக்கள், புத்த மதத்தில் சேரலாயினர். அரசன் இந்தப் புரட்சிக்கு விடை காண முயன்றான்.

'சேனாபதி! சமீப காலத்தில் நம் நாட்டில் நடந்து வரும் சமய இயக்கத்தைக் கவனித்தாயா?' என்று விசனத்துடன் வினவினான் வேந்தன்.

'ஆம் அரசே! சில நாட்களாகவே இந்த இயக்கத்தைப்பற்றித் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்பினேன். மக்களின் சிந்தனையை வளர்ப்பதாகு[illegible] உதவி புரியவேண்டிய மதாச்சாரியார் அதைக் கட்டுப்படுத்த என் உதவியை நாடுகிறார்' என்று வருந்தினான் சேனாதிபதி விக்கிரமன்.

'விளக்கிச் சொல் விக்கிரமா! மனம் விட்டுப் பேசு. வேந்தன்—சேனாதிபதி என்ற முறையில் அல்ல; நாம் இருவரும் நெடுநாளைய நண்பர்கள் என்பதை மறந்து விடாதே!'

'அரசே! வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட துறையில் ஈடுபட்டு, சமூகத்திற்கு உழைக்க வேண்டும் என்பதற்காக இந்து மதத்தில் நான்கு சாதிகள் ஏற்பட்டன. அவற்றில் ஏற்றத் தாழ்வு கிடையாது. எவருக்கும் உய்வு உண்டு என்பது தாங்கள், மதாச்சாரியார், நான் எல்லோரும் கற்றறிந்த உண்மை.'

'அந்த உண்மைக்குப் புறம்பாக மக்களின் உள்ளத்தில் ஏற்றத் தாழ்வுகளைப் பற்றிய போதனைகள் கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. அதனால் புத்த சமயத்தைத் தழுவ ஆரம்பித்திருக்கிறார்கள். அப்படித்தானே?' என்று தெளிவாகப் பேசினார், கிருஷ்ணர்.

'ஆம் அரசே! மதம் என்பது மனிதனின் சிந்தனைக்குத் திறவு கோல். சிந்தனைக்குத் தடை விதித்தால் மனம் குமுறுகிறது. வேறு சமயங்கள் உண்டாகின்றன. அது மனித இதயத்தின் மறுமலர்ச்சி. அந்தமட்டில் சிறந்தது. ஆனால், இந்து மதம் சீர்கேடடைவது பற்றி விசனமாக இருக்கிறது.'

'அதற்கு வழி? ஆச்சாரியாரிடம் கூறினால் பலனில்லை. வெகுண்டெழுவார், அதனால் நாமே விடை காணவேண்டும். உனக்கு ஏதாவது புலப்படுகிறதா?'

'அரசே! இந்து மத உண்மைகளும், புத்த மத போதனைகளும் ஒன்றே. ஆனால், அவற்றைக் கடைப்பிடிக்கும் முறைகள்தான் வேறு. ஆதலால், இந்த ஒற்றுமையை விளக்கும் வகையில் ஏதாவது செய்ய வேண்டும்' என்று நிதானமாகக் கூறினான் விக்கிரமன்.

'ஆம்! நீ கூறுவது முற்றிலும் உண்மை..... எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது!' என்று சொல்லிய மன்னன் முகம் மலர்ந்தது.

'என்ன யோசனை அரசே!' விக்கிரமன் முகம் ஆவலைக் காண்பித்தது.

'நீ புத்த மதத்தில் சேர வேண்டும்!'

'என்ன அரசே! ஏதோ புதிர் போடுகிறீர்களே!'

'அருகில் வா! நான் கூறுவது யார் காதிலாவது விழுந்துவிடப் போகிறது!'

அரசன் கூறியதைக் கேட்ட விக்கிரமனின் மேனி சிலிர்த்தது.

'அரசே! நீங்கள் பாரதத்திற்கே ஒரு எடுத்துக்காட்டாக விளங்கப் போகிறீர்கள், நீங்கள் எனக்கு அளித்திருக்கும் பணியை சிரமேற்கொண்டுள்ளேன். இன்னும் இரு வருடங்களில் உங்களை மீண்டும் சந்திப்பேன். சென்று வருகிறேன், [illegible]' என்று மொழிந்துவிட்டு, [illegible] விக்கிரமன்,

'புத்தம் சரணம் கச்சாமி', 'சங்கம் சரணம் கச்சாமி' என்ற கோஷங்கள் பாறைச் சுவர்களில் எதிர்த்துச் சிதறின. அழியா வர்ணங்களில் தூரிகைகளைத் தோய்த்து உயிர்ச் சித்திரங்களை எழுதிக்கொண்டிருந்தனர். கரடுமுரடாகக் கிடந்த பாறைகள், சிற்பிகளின் உளிகளினால் கலைச் சிற்பங்களாக எழுந்தன. ஆனந்தரின் கைகளும் துரிதமாக வேலை செய்தன. கற்பனை முழுவதையும் செலுத்தி, சிலை சமைத்துக் கொண்டிருந்தார்.

'ஆனந்தா! என்ன இது? மனித உருவத்தைச் செதுக்கிக்கொண்டிருக்கிறாய்?' என்று கேள்விக் குறி தோன்ற வினவினார் விபுலர்.

'ஸ்வாமி! வெகு நாட்களாகப் புத்த தேவர் எப்படி இருப்பார் என்று எண்ணிப் பார்த்திருக்கிறேன். சிறந்த பண்புகளை எல்லாம் ஒருங்கே திரட்டி, ஒரு உருவத்தை அமைத்தால் அது எம்பெருமானின் திரு உருவமாகத் திகழலாம் என்ற ஆசையினால், இந்தப் பணியைத் தொடங்கியிருக்கிறேன்.'

'சித்தார்த்தரைத் தொழக் கூடாது என்று உனக்குத் தெரியுமல்லவா? அவர் ஒரு இலட்சிய மனிதனாகத் திகழ்ந்தார். அவர்போல் நாமும் இருக்க முயல வேண்டும். தொழுதால் பயனில்லை. அவர் அளித்த எட்டு விதிகளைக் கடைப்பிடித்தால், நீயும் புத்தனாகி விடுவாய்.'

'ஆண்டவனைத் தொழுவதால் தவறொன்றுமில்லையே?'

'ஆண்டவன் என்று ஒருவன் இருப்பதாக சித்தார்த்தர் கூறவில்லை ஆனந்தா! அற வழி நடந்தால் மனிதன் நிர்வாணத்தை அடைகிறான் என்றுதான் போதித்தார்!'

'ஸ்வாமி! ஆண்டவன் இல்லை என்றும் கூறவில்லையே. நிர்வாணம் என்பது கடவுளுடன் ஒன்றி விடுவதுதானே?'

'ஆனந்தா! புத்த சமய விதிகளுக்குப் புது இலக்கணம் வகுத்து விடுவாய் போலிருக்கிறதே! மக்களுக்கு எளிதாகச் செயல் முறையில் கொண்டு வரக்கூடிய விதிகளை அளித்து; ஒவ்வொரு மனிதனுக்கும் உய்வு உண்டு; அது யாசித்துப் பெறக் கூடியதல்ல; உழைத்துப் பெற வேண்டியது என்று விளக்கிச் சென்றார் புத்தர். கடவுளைப் பற்றிய சர்ச்சை இதில் எழ வேண்டிய அவசியம் இல்லையே?'

'உண்மை ஸ்வாமி! கடவுளேகூட வாழ்ந்து, மகிழ்ந்து, துன்பமெல்லாம் சகித்து வழிகாட்டியாக இருந்தபொழுதும், பரம்பொருளை மனிதன் கண்டுகொள்ளுவதில்லை.'

'அப்படியானால் புத்தர் ஒரு சாதாரண மனிதர் இல்லை என்று கூறுகிறாய்! அப்படித்தானே?'

'அவர் ஒரு அவதார புருஷர் என்று கூறுகிறேன் ஸ்வாமி! மக்களிடையே தீமைகள் மலிந்து, நன்மைகள் மறைந்து, நம்பிக்கை குன்றியிருக்கும் காலத்தில், கையில் விளக்கேந்தி வழிகாட்ட வந்தவர் ஸ்வாமி!'

'ஆனந்தா! அப்படியே வைத்துக் கொள்ளுவோம். அதற்கும் புத்தருக்குச் சிலை சமைப்பதற்கும் சம்பந்தம்?'

'தலைவா! கற்பனை உருக்கொடுத்து வழிபடுவது என்பது பக்குவ நிலைக்கு வந்த மனிதனுக்குத்தான் முடியும். கேவலம் என்போன்றவர்களுக்குக் கண்களுக்குப் புலப்படக்கூடிய உருவத்தைக் கண்டால் தான் மனதிற்குள் படியும். ஒரு எடுத்துக் காட்டாகத் திகழும்.'

'ஆம்! நீ கூறுவதிலும் ஓரளவு உண்மை இருப்பதாகத் தோன்றுகிறது. இன்று சங்கத்தில் இதைப்பற்றி விவாதிப் போம்.'

சங்கத்தில் ஆனந்தரின் புதிய கொள்கை ஓரளவு புரட்சியை ஏற்படுத்தியது. இரு கட்சிகள் தோன்றின. புத்தரைக் கடவுளாகப் போற்றியது ஒன்று. மற்றொன்று புத்தரை இலட்சிய மனிதனாகவே நினைத்தது. அன்று முதல் அஜந்தா குகைகளிலே புத்தரின் உருவங்கள் உயிர் பெற்றன. அவருடைய திருவிளையாடல்கள் என்றும் மங்காத வர்ணங்களில் தீட்டப்பட்டன. ஹீனயானம் மறைந்து, மஹாயான புத்த மதம் உருப் பெற்றது.

ஃ ஃ ஃ

'விக்கிரமா! இந்து மதத்தைக் காப்பாற்றி விட்டாய். இனி புத்த மதம் மறைந்து விடும். இது மாபெரும் வெற்றி!' என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினார் அரசர் கிருஷ்ணர்.

'அரசே! வெற்றி தோல்வி என்ற வார்த்தைகளுக்கு அர்த்தமே இல்லை!'

'விக்கிரமா! நீ கூறுவது புரியவில்லையே?'

'அரசே! நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டு விட்டோம். மதங்களிலே சிறந்தது என்று பாகுபாடு செய்வது தவறு. எல்லா மதமும் ஒரே ஆண்டவனுக்கு அஞ்சலி செலுத்துகின்றன.'

'அப்படியானால் இந்து மதம்...'

'நிலைக்கும் மன்னவா! பயப்படாதீர்கள். சகிப்புத் தன்மை வேண்டும்; அவ்வளவுதான். புத்தபிரான் கடவுளின் அவதாரம். இந்தக் கொள்கையை இந்துக்கள் ஏற்றுக்கொண்டால், புத்த மதமும் இந்து மதமும் இணைந்து விடும்.'

'அந்தப் பணியை இன்றே தொடங்குவோம். ஆனால், அதை எப்படிச் செய்வது?' என்று கேட்டான் மன்னன்.

'அதற்குச் சிறந்த வழியிருக்கிறது வேந்தே! எம்மதமும் சம்மதம் என்ற உண்மையை விளக்க, கலைப்பணி செய்யுங்கள். அருகில் வானளாவி நிற்கும் விந்திய மலைக் குன்றுகளிலே இந்து மதக் கடவுள், புத்த மதக் கடவுள், ஜைன மதக் கடவுள் மூன்றிற்கும் ஒருங்கே சிற்பக் கோயில்கள் அமையுங்கள். பல உருவங்கள் இருந்தபோதிலும் பரம்பொருள் ஒன்றே என்ற மறுக்க முடியாத உண்மையை அவை எடுத்துக் காட்டும். எல்லாச் சமயங்களையும் போற்றி வளர்த்தார் ராஷ்டிரகூட மன்னர் கிருஷ்ணன் என்று உலகம் போற்றும். காலத்திற்கு அப்பாற்பட்ட கலை ஒன்றுதான் கடவுளின் சிறப்பை விளக்க முடியும்' என்று தெளிவாகக் கூறிய ஆனந்தரை மெய்சோர அணைந்தார் அரசர்.

'விக்கிரமா! என் கண்களைத் திறந்து விட்டாய். நீ என் நண்பன் மட்டுமல்ல. எனக்கு வழிகாட்டியும்கூட. இந்தத் திருப்பணியையும் நீயே எடுத்துச் செய்ய வேண்டும் என்பது என் அவா' என்று கண்களிலே நீர் மல்கக் கூறினார் அரசர். ஆனந்தக் கண்ணீரில் கரைந்து விட்ட அஞ்ஞானம், உண்மையறிவுக்கு இடம் அளித்தது. இருள் நீங்கி, ஆதவன் எழுவதை ஒத்திருந்தது அது.

'உன் விருப்பப்படியே ஆகட்டும்' என்று மொழிந்தார் ஆனந்தர்.

விந்தியத்தின் மடியிலே தூங்கிக் கிடந்த எல்லோராக் குன்றுகள், கல்லுளிகளின் இன்னிசையிலே விழித்தெழுந்தன. கற்கள் கவிதை பாடின. வனாந்தரமாகக் காட்சியளித்த மலைச்சாரல், கலைக் கூடமாக மாறியது. அரசர் கிருஷ்ணர் ஆரம்பித்து வைத்த திருப்பணி, அவர் காலத்தில் முடியவில்லை. பிற்காலத்திய மன்னர்கள் கிருஷ்ணரின் லட்சியத்தைப் பூர்த்தி செய்தனர். எல்லோரா கலைக் கோயில்கள் இன்றும் பாரதத்தின் பண்பைப் பறை சாற்றுகின்றன.

★

பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி" REGD

குழந்தைகளின் ஈரல் குலேக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் அசல் விஜயகரம் மருந்து. எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும். போலிகளைக் கண்டு ஏமாறுதீர்.

Dr. பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

19, தெற்குமாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்-4. போன்: 71354

கும்பகோணம் கிளை: 7, சாரங்கபாணி கோவில் கீழ வீதி.



22. இன்பக் கனவு

அபிநயக் கலைக்கென்று அவள் தோன்றினாளா, அல்லது அவளுக்கென்றே அந்த அருங்கலையை ஆக்கி வைத்தார்களா என்று அதிசயமுற்று நின்றான் விஜயன்.

உள்ளத்து உணர்ச்சிகளையும் உயர் பண்புகளையும் உடலுறுப்புக்களைக் கொண்டு ரஸபாவத்தோடு கருத்தைக் கவரும் வகையில் வெளியிடுகிற அபிநயக் கலையில் அவள் தோய்ந்து சிறந்து விளங்கியது கண்டு, சிந்தையைப் பறிகொடுத்து நின்றான் அந்த இளம் சிற்பி. அந்த அவிர்மதிக் கணிகை அமத்தியின் அங்க லாவண்ணியத்தைக் கண்டு, அவனுடைய கலைக் கண்கள் அழகின் சொரூபத்தையே உணர்ந்தன.

அரசன் அபராஜிதனின் பேச்சும் அரமகளன்ன அமத்தியின் அபிநயமும் அவனை ஒரு கணம் அலமரச் செய்து விட்டன. கடல் கடந்து பல நாடுகள் சென்று அவன் திரும்பியிருக்கிறான். ரோமச் சிற்ப வகைகளையும் யவனத்துச் சிற்ப வடிவங்களையும் பார்த்தும் பயின்றும் வந்திருக்கிறான். ஆயினும் இத்தகைய அனுபவம் அவனுக்கு இதுவரையில் உண்டானதேயில்லை. இன்றுதான் அவன் அகக்கண் பூரணமாகத் திறந்தது போல அவன் அலர்கண் விரிய லயித்து நின்றான். இந்த நாட்டுச் சிற்பக் கலை சிறந்து விளங்கும் காரணமே இன்றுதான் அவனுக்குப் பளிச்செனப் புரிந்ததாகத் தோன்றியது. அது மற்றக் கலைகளோடு ஒன்றி, இயைந்து நிற்கும் சிறப்புப் பெற்றிருப்பதோடு நின்றுவிடவில்லை; இயற்கையை ஒட்டியே அது அமைந்திருக்கும் அருமைப்பாடும் தெளிவாகத் தெரிந்தது. சிருங்காரம் சிந்த, ஒய்யாரத்துடன் உடலை லாகவமாக வளைத்து, இடது புஜத்தை அழகு பெற ரேசிதமாக நீட்டி, வலது புஜத்தை மடக்கி, அபய முத்திரை காட்டி அகம்பித நிலையில் நின்றாள் அமத்தி. அவளுடைய எழிலைக் கண்டுதான் சாமுத்திரிகா லட்சணங்கள் வகுக்கப்பட்டனவோ என்று பிரமிப்புத் தட்டியது அவனுக்கு. இத்தனை அலங்காரமான முறையில் உள்ளக் கருத்துக்களை வெளியிடும் சிறப்பை நம்முடைய அபிநயக் கலை கொண்டிருப்பதனால்தான், நம்முடைய சிற்பங்களில் அழகும் உயிர்த் துடிப்பும் மிளிர்கின்றன என்பதை அவன் கண்டான். இத்தகைய தனிச் சிறப்பை அவன் வேறு எந்த நாட்டுச் சிற்பங்களிலும் காணவேயில்லை. அழகை வெளிப்படுத்தும் கலைக்கு மனித உருவில் இனிமையான சில மாறுதல்கள் அவசியம்தான் என்பதை அவனுடைய பிரக்ஞை உணர்த்தியது. 'புலனுக்கும் எட்டாத இடத்திலிருந்து வருகிற கற்பனையே அழகு; அந்த அழகு சிறக்கச் சிறக்கக் கலை சிருஷ்டி சிறக்கிறது; அதன்மூலம் நிரந்தரமான, சாசுவதமான உண்மை வெளியாகிறது' என்றெல்லாம் எண்ணியது அவன் உணர்வு.



'நன்றாகப் பார்த்துக்கொண்டாயா?' என்றான் அபராஜிதன். சிற்பியைப்போலவே அவனும் சிறிது நேரம் அழகினால் தாண்டப் பெற்ற கலையுணர்ச்சியோடு நின்றிருந்தான்.

விஜயன் ஆக நெகிழ்ச்சியிலிருந்து விடுபட்டவன்போல் தலையை அசைத்தான். 'அமத்தியின் பொன்னிறமான மேனியின் அழகிலிருந்து அவன் கண்கள் இன்னும் விடுபடவில்லை. சர்ப்பங்களைப் போல நெளியும் கரங்களையும் கண்களின் ஒளியையும் கல்லாலான வடிவங்களிலே அவன் எப்படிப் பொறிக்கப் போகிறான்? கைகளில் வளையல்கள், முழங் கைக்கு மேல் கடகம், கழுத்திலே முத்து மணி மாலைகள், காதுகளிலே பத்ர குண்டலங்கள், மலர் சூடி அணிந்த கூந்தல், குறுகிய இடை, கச்சணிந்த உடை எல்லாவற்றையும் சிற்பமாகச் செதுக்கிவிடலாம்; ஆனால், ஒளி, ஒலி, மணம் இவற்றை எப்படி அவன் அவற்றிலே சிறை செய்யப் போகிறான்? அவளுடைய அங்கங்களிலே அழகைக் காட்டலாம்; ஆனால், அதில்

தவழும் அந்தக் குழைவை எப்படிக் காட்டுவது? கயல் கண்களின் நேர்த்தியைக் காட்டிவிடலாம்; ஆனால், அந்தக் கண்களின் நோக்கிலே சுரந்து கசியும் கவர்ச்சியை எங்ஙனம் உருவாக்குவது? அவளுடைய புற அழகை எப்படியும் சிற்ப லட்சணப்படி வடித்துவிடலாம்; ஆனால், அவளது அக அழகைச் சிலையிலே பொருத்திக் காட்டுவது எவ்வாறு?

விஜயன் வைத்த கண்ணை வாங்கவில்லை. அழகுதான் கலைகளுக்கெல்லாம் தூண்டுகோல் என்று எண்ணியிருந்த அவனுக்கு, இப்போது வேறு ஓர் ஐயப்பாடு உண்டாயிற்று. அழகு கலைகளைத் தூண்டி விடுகிறதா! அல்லது கலைகளே அழகைப் படைக்கின்றனவா? அந்த மயக்கத்தில் அவன் பக்குவப்படாமல் நின்று கொண்டிருந்தான். அழகுக் குறிகளைக் கண்டு, அருங்கலைச் சிற்பங்களை உருவாக்கும் ஆராய்ச்சியும் பயிற்சியும் படைத்த அவன், அயர்ந்து நின்றான். அமத்தியும் நேர வளர்ச்சியை உணராதவள்போலவே நின்றாள். அவனை அவள் முன்பின் அறிந்ததில்லை; கேள்விப்பட்டதுமில்லை. ஆயினும் அவ்[illegible] அவளுக்கு இப்போது அவசியமாகப்படவில்லை. அழகையும் உயிர்த் துடிப்பையும் [illegible] பார்க்க முயல்கின்ற அந்தக் கலைநோக்கு அவளுக்கு நன்கு பரிசயமானதுதான்.

அதுபோதும். உள்ளத்து அனுபவத்திலிருந்து அபிநய முத்திரையாக வெளிப்பட்ட சிருங்கார பாவம் உண்மையாகவே இப்போது கண்களில் ஒளி வீசத் தொடங்கியது. அந்த நுட்பமான மாறுதலைக் கண்டு அந்தச் சிற்பியே மனம் கலங்கினான்.

அமத்தி சட்டென்த் தன் அபிநயத்தை நிறுத்திக் கொண்டு, பார்வையை அபராஜிதன்மீது திருப்பினாள். அவன் முகத்திலே ஒருபுறம் பெருமையும் ஒருபுறம் அவநம்பிக்கையும் படர்வதாகத் தோன்றியது. ஊர்வசிபோல அவள் அந்தச் சோலையிலே இறங்கி வந்து நிற்பதாக ஒரு தோற்றம் எழுந்தது அவனுக்கு. காவிய நாயகனை புரூரவஸ் மன்னனைப்போலத்தான் அவளுக்கு அபாராஜிதனும் தோன்றினான்.

'முடியுமா இது, உன்னால்?' என்று குரலிலேயே அவநம்பிக்கை தொனிக்கக் கேட்டான் அபராஜிதன்.

அதுவரையில் கருத்தையும் பார்வையையும் வேறு எங்கோ செலுத்தி யிருந்த சிற்பியின் கண்கள், இப்போது பளீரிட்டன. [illegible] கொண்ட உள்ளங்கைகளை ஒரு முறை கூட்டுறத் தேய்த்துக் கொண்டு, 'முடியுமா என்று கேட்காதீர்கள், அரசே! விருப்பமா என்று வேண்டுமானால் தயவு செய்து கேளுங்கள். அருள் நிறைந்த மனிதனால் முடியாததே ஒன்றுமில்லை. அருள் இல்லாத மனிதனால் முடிவதும் ஒன்றுமில்லை. அனுமதி கிடைத்தால் இறைவன் திருவருளை முன்னிட்டு முயன்று பார்க்கலாம்!' என்றான். புலன்களுக்கும் எட்டாத ஒன்றை அவன் உணர்வு உள்முகமாகத் தேடி ஆராய்ந்துகொண்டிருந்தது.

"அப்படியானால் இதை எப்பொழுது எதிர்பார்க்கலாம்? இப்பொழுதே என் அனுமதியைக் கொடுத்து விட்டேன்!'

'அதையும் அரசர்பிரானுடைய விருப்பத்துக்கே விட்டு விட எண்ணுகிறேன். எப்பொழுது வேண்டும் என்றாலும் சிலை சித்தமாக இருக்கும்.'

'அப்படியா? நான் நாளையே இந்தச் சிலையைக் காண ஆசைப்படுகிறேன். ஆனால், உனக்கு இந்த அவகாசம் போதும் என்று எண்ணுகிறாய்?'

இதில் நான் எண்ணுவதற்கே ஒன்றுமில்லை. நாளை எந்த நேரத்துக்கு இங்கே வந்தாலும் சரிதான்; இந்த உளி அரசரை ஏமாற்றத்துடன் திருப்பியனுப்பாது!'

அவனுடைய தன்னம்பிக்கையைக் கண்டு அபராஜிதன் தனக்குள் வியந்துகொண்டான். இளம் வயதினனாக இருந்தாலும், இதைவிடப் பெரிய காரியங்களைச் சாதிக்க வல்லவன் அவன் என்று தோன்றியது அவனுக்கு. ஓராண்டு முயன்றாலும் செய்ய முடியாத ஒன்றைச் சில சந்தர்ப்பங்களில் ஒரே இரவில் செய்து முடித்து விடுகிற பேராற்றல் படைத்தவர்களை அவன் அனுபவத்திலே கண்டிருக்கிறான். ஆகவே, அவன் சிற்பியின் முன்னே வந்து நின்று, அவனுடைய கண்களை ஊடுருவி நோக்கினான். கனவு

காண்பதுபோல் விளங்கிய அந்தக் கண்களிலே, அவன் என்ன புதுமையைக் கண்டானோ, தெரியவில்லை! உதட்டிலே மகிழ்ச்சிப் புன்னகை ஒன்று அரும்ப, மெல்ல அவன் தோள்மீது கையை ஊன்றி, 'நண்பா!' என்று அன்போடு அழைத்தான்.

அரசன் இத்தனை தூரம், இவ்வளவு எளிதில் தன்னைப் பெருமைப்படுத்துவது போல அழைப்பான் என்று விஜயன் எதிர்பார்க்கவில்லை. அரசனுடைய கம்பீரமான பார்வையைக் கண்டு, வியந்து நின்றான்.

'என் கண்களிலிருந்து உன்னால் எதையாவது காண முடிகிறதா?' என்று கேட்டான் அபராஜிதன்.

'அவை கனவு காண்பதுபோல எனக்குத் தோற்றமளிக்கின்றன!'

அபராஜிதன் இதைக் கேட்டு கடகடவென்று தோழமையோடு சிரித்தான். 'ஆமாம் விஜயா, ஆமாம். நானும் உன்னைப் போல் கனவுதான் காண்கிறேன். பார்க்கப் போனால் நானும் ஒரு வகையில் உன்னைப் போன்றவன்தான். நீ சிலையை உருவாக்குகிற சிற்பி; நான் சாம்ராஜ்யத்தை உருவாக்குகிற சிற்பி. இதோ, எதிரே கிடப்பது என்வரையில் ஒரு துண்டுப் பாறைதான்; ஆனால், உனக்கு அது வெறும் பாறையல்ல. உன் கலையுள்ளம் உணர்ந்து கொண்டுவிட்ட எழில் வடிவமாகவே இதை நீ காண்கிறாய். அதன் கலைச் சொரூபம்தான் உன் கண்ணுக்குத் தெரிகிறது. அந்தச் சொரூபத்தைச் சுற்றியிருக்கிற பிற பகுதிகளைக் களைந்தெறியும்வரையில், உன் உளி ஓய்ந்திருக்கப் போவதில்லை. அப்படித்தானே?' என்றான் அபராஜிதன்.

'ஆம்' என்று மறுமொழி கூறுவது போல் தோன்றினான் விஜயன்.

'நாளைக்குள் அமத்தியின் சிலையை அடிப்பது உன்னால் சாத்தியமோ, சாத்தியமில்லையோ நான் அறியேன். ஆனால், இது மட்டும் எனக்குத் தெரியும். கலையின் சொரூபத்தைச் சிந்தித்துச் சிந்தித்து ஆராய்ந்து அறிவது என்பது இயலாது. உணர்ந்துதான் காண வேண்டும். உணர்ந்துகொண்டு விட்ட பிறகு எந்தக் கலையுமே இடம், பொருள், ஏவலுக்காகப் பொறுத்திருப்பதில்லை. அது கலைச் சிருஷ்டியாக வெளிப்படவே துடிதுடித்துக்கொண்டிருக்கிறது. உன்னுடைய விடையில் அந்தத் துடிப்பைத்தான் நான் காண்கிறேன். உன் கண்களில் அந்த அருள் ஒளியைத்தான் நான் பார்க்கிறேன். உன் தன்னம்பிக்கை என்னைக் கவர்ந்துவிட்டது. உறக்கத்திலிருந்து அது என்னைத் தட்டி எழுப்பி விட்டு விட்டது. என் சாம்ராஜ்யக் கனவில் நீயும் ஒரு புதிய பாத்திரம்தான். உன் பங்கை நீ சிறப்புறச் செய்து முடிப்பாய் என்று நம்புகிறேன். இதற்குமேல் உன் கனவைக் கலைக்க நான் விரும்பவில்லை. நாளை சந்திப்போம்!' என்று தீவிரமான குரலில் கூறிவிட்டு, அமத்தியைப் பார்த்தான்.

நிலைகொள்ளாமல் உலவியவாறு பேசிக்கொண்டிருந்த அபராஜிதனின் மனவேகத்தை ஒருவாறு ஊகித்துவிட்ட அமத்தியின் வதனத்திலே பெருமை ததும்பிக்கொண்டிருந்தது. கட்டழகனும் கலா ரசிகனுமான ஒருவனுடைய காதலுக்குப் பாத்திரமாக இருப்பதை எண்ணி, அவளுடைய உள்ளம் உவகையால் பூரித்து விம்மியது. நெஞ்சம் நெகிழ்ந்தது. தளிர்க் கொடி கொழு கொம்பைச் சுற்றிக்கொள்வதுபோல அவன் கைகளைத் தழுவி அணைய வேண்டும் என்ற தாபம் எழுந்தது. வெம்மையைத் தணிக்கும் தன்மை தன்னிடம் சுரப்பதுபோல அவளுக்கு ஓர் உணர்வு உண்டாயிற்று. கண்கள் சொக்க, உடல் துவள நின்றாள். புலவியின்போது அவனிடம் இருப்பதாகக் காணப்பட்ட பல வீனம், இன்று எங்கு மறைந்ததோ தெரியவில்லை. அது இப்போது தன்னிடத்தில் வந்து தஞ்சம் புகுந்து விட்டதாகத் தோன்றியது. அவனுடைய கம்பீரமான ஆகிருதியைக் காணவே, அவள் நாணம் மிகுந்தாள்.

'ம்ம்—' என்று ஊக்கிவிட்டு, அவன் முன்னால் நடந்தான்; அவன் அடிச்சுவட்டைத் தொடர்ந்து அவள் பின்னால் சென்றாள். அவர்களை ஏற்றிச் செல்ல அந்தக் கொடி சதம் சற்றுத் தூரத்திலே காத்திருந்தது. ஆனால், அவர்கள் இளமலர்ச் சோலைப் பக்கமாக நடந்து சென்றார்கள்.

நடுவில் அபராஜிதன் நின்றான். அமத்தி அருகில் வந்ததும், 'இப்பொழுது என்ன சொல்கிறாய்?' என்று அவள் கையைத் தன் கையில் எடுத்துக்கொண்டு கேட்டான்.

'எதற்கு?' என்று அவள் கூச்சத்தோடு கைகளை விடுவித்துக்கொண்டாள்.

'நம்முடைய காதலை உலகம் இன்று மட்டுமல்ல; என்றுமே அறியப் போகிறது. அதைச் சிலாசாஸனமாகச் செய்யப் பணித்தாயிற்றே!' என்றான்.

அந்தியின் ஒளி அவள் முக மண்டலத்தை மேலும் சிவப்பாக்கியது. வெட்க மிகுதியால் அவள் மலர்க் கண்களில் பனி முத்துக்கள் துளிர்த்தன. 'சரி சரி; முன்னால் நடந்து செல்லுங்கள். ஒற்றர்களும் மற்றவர்களும் கவனிக்கப் போகிறார்கள்!' என்று கண்களைக் கவிழ்ந்து கொண்டு திரும்பினாள்.

'அதோ பார்த்தாயா, அங்கே? அந்தக் கடற் கோயில்களைப் பார்க்கும்போது, உனக்கு என்ன தோன்றுகிறது? இப்படித் திரும்பி நன்றாகத்தான் பாரேன்!' என்று அவன் அவளுடைய மோவாயைத் திருப்பிக் கேட்டான்.

அவள் ஏதோ விடை கூற வருமுன்பாக அவனே அவசரம் தாளாமல், 'யாருடைய கனவிலோ உருவாகிய வியனுலகு நனவாக எழும்பி நிற்பதாக உனக்குத் தோன்றவில்லையா?' என்று எட்டாத் தொலைவிலிருந்து பேசுபவன்போல் கூறினான். அவள் தலையை அசைத்து ஆமோதிப்பதற்குள்ளாகவே மீண்டும் அவன், 'யாருடையவோ என்ன, அமத்தி! மாமல்ல பல்லவ தேவர் என்ற மகா சிற்பியின் கனவிலே உருவான கலைக் கோயில்கள் அவை. இவற்றை உளிகொண்டு உருவாக்கிய சிற்பியை நான் குறிப்பிடவில்லை. சிற்பி என்ன, அந்தச் சாம்ராஜ்ய நிர்மாணச் சிற்பிக்கு, ஓர் உளியைப் போன்ற கருவிதானே!' என்றான்.

'இன்று என்ன வந்துவிட்டது என் கோவுக்கு?' என்றாள் அமத்தி.

'தெரியவில்லையா அன்பே உனக்கு? எனக்கு விழிப்பு வந்து விட்டது என்பதை நீ இன்னும் உணரவில்லையா? வடக்கிலும் தென் கோடியிலும் அந்த மகா சிற்பி எழுப்பிய சாம்ராஜ்யத்தைப் பகைவர்கள் அவ்வப்போது சிதைத்து வருகிறார்களே! அந்தப் பின்னங்களைச் செப்பனிட்டுச் சீர்திருத்தி, மேலும் விரிவாக்க வேண்டாமா? இளவரசாக இருந்த வரையில் உறங்கியது போதாதா? மங்குவதுபோல் தோன்றும் புகழை மறுமலர்ச்சி கொள்ளச் செய்ய விரும்புகிறேன்! இன்று என் கண்கள் திறந்து விட்டன. பல்லவக் கடல்துறையெங்கும் கடல் மல்லையைப்போல் கோயில்கள் எழுப்ப வேண்டும் என்பது என் கனவு. நாளை உல்லாசப் பயணத்தை இதற்காகவே செலவிடப் போகிறேன்!' என்றான் அபராஜிதன்.

இள மலர்ச் சோலையில் அமைந்திருந்த உல்லாச மண்டபத்தில் போய் அவர்கள் தங்கியிருந்தார்கள். அரசனை முன்னிட்டுத் திரண்ட சிறு பரிவாரம் சோலைக்கு வெளியே காவல் காத்து நின்றது. கீழ்க் கோடியிலே பழுக்கக் காய்ச்சிய வட்டம் போலப் பௌர்ணமிச் சந்திரன் தோன்றினான். அலை கடலைப்போல, அபராஜிதனின் உள்ளமும் இன்பக் கனவு கண்டு துள்ளிப் பொங்கிக்கொண்டிருந்தது.



23. கலம் புறப்பட்டது.

முழு மதி வீசும் இரவில் அந்தக் கோல விழிச் செல்வி அமத்தி அபூர்வ சோபையோடு விளங்கினாள். குறு மண்டபம் கொண்ட இள மலர்ச் சோலையிலே, பூத்த மது மணப் புஷ்பமென அவள் திகழ்ந்தாள். குந்த மலர்போல் வெண்மை வாய்ந்த மேனியெங்கும் இளமை இன்ப மெனப் பொங்கி வழிந்துகொண்டிருந்தது. தேனுண்டு களித்த வண்டென மயங்கிய அபராஜிதன், அந்த வடிவழகியின் விரி இதழ் மடியிலே தலை வைத்துத் துயின்றான். அடுத்த ஜாமத்திலே—

மணி விளக்கு ஒளிரும் அந்த மண்டபத்தினுள்ளே, நிலாக் கற்றை சாமரம் வீச, கடல் அலை காதற் கீதம் இசைக்க, இன்ப ரசம் கசிந்த செவ்விய உதடுகளிலே சிறு முறுவல் தவழ, அவனுடைய விரி தோள் மார்பிலே நறுங் கூந்தல் புரள, அவள் கண் வளர்ந்துகொண்டிருந்தாள்.

கடல் மல்லை நகரமே துயிலில் ஆழ்ந்திருந்தது. அவர்கள் இள மலர்ச் சோலையில் அந்த இரவைக் கழிக்கும் செய்தியை ஊர் அறிந்திருக்கும் என்றுதான் எண்ணியிருந்தார்கள். ஆனால், அதை ஒருவருமே அறியாதவாறு செய்து முடித்திருந்தான் அகளங்க காடவராயன். அரசன் எப்படி வேண்டுமானாலும் இருந்து விடலாம்; ஆனால், அவனுடைய உப்பைத் தின்று ஊழியம் புரியும் ஒற்றர் படையின் உபதலைவன், கண்டவர் கண்டவாறு பேச இடம் கொடுத்து விடலாமா? அரசர் ஒரு புறமும் அமத்தி நகரின் மறு புறமும் தனித்தனியே தங்கியிருப்பதாகத் தோன்றும்படி அவன் தக்கவாறு காவல்களை அமைத்திருந்தான். ஏவலாளிகளையும் திட்டம் செய்திருந்தான். எல்லாம் முடிந்த பிறகும் அவன் துயில் கொள்ள விரும்பவில்லை. வேட்டை நாயைப்போல அவன் இரவெல்லாம் சோலையைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்தான். அரச சேவை என்றால் துளிப் பிசகிவிடலாமா?

உச்சி நிலவு சாயும் வேளையில் எங்கெங்கோ அலைந்து திரிந்துவிட்டு, இள மலர்ச் சோலைக்கு எதிரே வந்து நின்றது ஓர் உருவம். அகளங்கன் விரைந்தோடி வந்து பார்த்தான். மது நெடி வீச, நடை தடுமாற நின்ற அந்த உருவத்தைக் கண்டதும், 'யார் இது, பாகூர்ப் பிடுகரா? எங்கே இந்த நேரத்துக்குமேல்?' என்று வியப்புத் தொனிக்க வினவினான்.

'இந்த நேரமா? இது எந்த நேரமென்று உமக்குத் தெரியவில்லையா? பார்வைகூட விளங்கவில்லையா?' என்று நாக்குழற, நடை புரள, கை ஒரு பக்கமும் கால் ஒரு பக்கமுமாக இழுக்கக் கேட்டான் நாக்கன். அவனைத்தான் விருதுப் பெயரோடு அழைத்தான் அகளங்க காடவராயன்.

'எல்லாம் தெளிவாக விளங்குகிறது. வாரும், மணலில் உட்கார்ந்து பேசலாம்!' என்று அவன் தோளை இறுகப் பற்றி இழுத்துச் சென்றான் அகளங்கன்.

'ஆமாம்; அரசர் எங்கே? அந்த ஆடல் கணிகை எங்கே?'

'எல்லோரும் இருக்க வேண்டிய இடத்தில் இருக்கிறார்கள். வாரும், சொல்கிறேன்?'

'அட, கையை விடுங்கள் ஐயா, காடவராயரே! கைப் பூட்டெல்லாம் வலிக்கிறது...அவளைத் தேடித் தேடி என் கால் எல்லாம் நொந்து போய்விட்டது ஐயா!' என்று இடக்குச் செய்துகொண்டே அவனோடு நடந்தான் நாக்கன்.

'அவளை எதற்காகத் தேடியலைந்தீர்கள்?'

'ஓய்! காடவராயரே! இதோ பாரும் ஐயா? அவளை...எதற்காக...தேடியலைந்தேன் என்று தெரியாததுபோல் கேட்கிறீர்?' என்று போதையிலேயே கண்ணைச் சிமிட்டிக் காட்டினான் நாக்கன். 'ஆமாம்...அரசரும் அந்தத் தாசியும் வெகு நாளாகவே நேசமோ? அவளைப் போலவே சிலையடிக்கச் சொல்லியிருக்கிறாரே! உம்...? அப்படித்தானே! சும்மாச் சொல்லும் ஐயா! இப்படி...எவ்வளவு நாளாக...'

அகளங்கன் அவன் தோளைப் பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கி உலுக்கினான். 'அரசரைப் பற்றியோ அந்தக் கலையரசியைப் பற்றியோ பேசாதீர். ஆமாம்; தவறிப் பேசினீரோ, நாக்கைப் பிடித்திழுத்து, அறுத்து விடுவேன்!' என்று மிரட்டினான் அகளங்கன்.

'அட சும்மா நிறுத்து ஐயா! ஆணைப் பட்ட கோட்புலியாரைப் பார்த்து விட்டேன். விஜயாலய சோழரைப் பார்த்து விட்டேன்! உம்முடைய மிரட்டலுக்கா நான் பயந்து விடுவேன்? ஆதித்தன் கையிலே அகப்படாமல் தப்பித்துக் கொண்ட முத்தரையர், இப்பொழுது எங்கே இருக்கிறார், தெரியுமா உமக்கு? ஹஹ்ஹா! உமக்குத் தெரியாது; ஒரு காலும் தெரியாது! ஆனால், இந்த நாக்கனுக்கு...எந்த நாக்கனுக்கு? இந்த நாக்கனுக்கு அத்தனையும் தெரியும். தெரியுமா?, என்கிட்டே யாரும் வாலாட்ட முடியாது. யாரும்...வாலாட்ட...முடியாது! ஆமாம்! தெரிந்ததா? முடியவே...முடியாது! தஞ்சைபுரி தெரியுமா, தஞ்சைபுரி! உமக்கு ஓர் இழவும் தெரியாது...எனக்குத் தெரியும். முத்தரையர் அங்கேதான் போயிருக்கிறார். ஆதித்தன், பாவம்! செம்பியன் பெண்சாதி கடம்பாவைக் காப்பாற்ற ஓடிவந்தான் அல்லவா? ஹஹ்ஹஹ்ஹா! பாவம்! கோட்டை இடித்தானே தவிர, முத்தரையரைப் பிடிக்க முடியவில்லை! எது? முடியவே...யில்லை... புரிந்ததா, இல்லை, இதுவும் புரியவில்லையா?' என்று ஒரு தொடர்பும் இன்றிப் பேசினான்.

'அதெல்லாம் புரிகிறது பிடுகரே, இந்தச் சிற்பியை எங்கே கண்டுபிடித்தீர்கள்? அதுமட்டும்தான் புரியவில்லை' என்றான் அகளங்கன்.

'ஹ்ஹஹூஹூ ஹூம்...அதுதான் சொன்னேனே, உமக்கு ஒரு இழவும் புரியாது... எப்படிப் புரியும்? சரியான போதை! அதுதானே...? எனக்குத் தெரியும்... சோனகத்துப் பானை மதுதானே? உஸ்... அப்பா! அடாடாடா! என்ன வாசனை, என்ன வாசனை! தோலில் வைத்த மதுதானே? அற்புதம்! அப்படியே அமிர்தம் தான். இல்லையா? ஆகா, என்ன ருசி! என்ன ருசி!' என்று பிதற்றத் தொடங்கினான்.

அதற்குமேல் அகளங்கனால் பொறுக்க முடியவில்லை. 'ஐயா நாக்கப் பிடுகரே! இப்படியே இந்த மணலில் சிறிது படுத்துக்கொண்டிரும். நான் போய் அந்தக் கணிகையை உம்மிடம் அழைத்து வருகிறேன்!' என்று சொல்லிவிட்டு, சோலையை நோக்கி நடந்தான்.

'அது...அருமையான...யோசனை.....இந்தாரும் பண முடிப்பு! செலவுக்கு இருக்கட்டும்...எப்படியாவது அவளை அழைத்து வந்து விடுங்கள்! தூங்காமல் நான் இங்கேயே காத்துக்கொண்டிருப்பேன்!' என்று



கூறியவாறே, அவன் கடல் மணற் பரப்பில் தடுமாறி விழுந்தான்.

அப்போது விழுந்தவன்தான்! அப்புறம் அவன் எழுந்திருக்கவேயில்லை. அவன் கண்ணை மறுபடி திறந்தபோது, வெயில் சுள்ளென்று அவனைச் சுட்டுக்கொண்டிருந்தது. உடலெல்லாம் வெப்பத்தால் புழுங்கியிருந்தது. கடல் முகத்திலே ஒரே ஆரவாரமாக இருந்தது அவன் காதில் விழுந்தது. அவன் கண்களை நன்றாகக் கசக்கி விட்டுக்கொண்டு, உன்னிப்பாகக் கவனித்துப் பார்த்தான்.

சந்தேகமேயில்லை; அரசரும் அமத்தியும் ரதத்திலிருந்து இறங்கி வருவதைக் கண்டுதான், அங்கே இத்தனை ஆரவாரமாக இருந்ததாகத் தோன்றியது.

'உச்சி வெயில் நேரம்வரையிலா தூங்கித் தொலைத்து விட்டேன்? ஆமாம்; இந்த மணல் பரப்புக்கு நான் எப்படி வந்து சேர்ந்தேன்? எங்கிருந்து வந்து சேர்ந்தேன்? என்னை ஒருவருமே கவனிக்காமலா போயிருக்கிறார்கள்?' என்று தனக்குத்தானே வாய்விட்டு அரற்றிக் கொண்டான். அவன் கால்கள் மெல்ல மரக்கலங்கள் நின்ற கடல் முகத்தை நோக்கி நடக்கத் தொடங்கின. வெயில் நன்றாக உறைக்க உறைக்கத்தான் அவனுக்கு முதல் நாள் இரவு நடந்ததெல்லாம் மின்மினிப் பூச்சி பறப்பதுபோல நினைவுக்கு வரத் தொடங்கியது. அமத்தியைத் தேடி இரவெல்லாம் அலைந்ததால் உண்டான வலியை இப்போது மெதுவாக உணரத் தொடங்கினான். தூரத்திலே அபராஜிதனின் உல்லாசப் பயணத்துக்காக அலங்கரிக்கப்பட்டு நிற்கும் சுவர்ணமுகிக் கலத்தின் கம்பீரமான பாய்மரக் கொடிகள் நான்கும் அவனை, 'அவசரமாக ஓடி வா! ஓடி வா!' என்று காற்றிலே படபடவெனப் பறந்து அழைப்பதுபோல் தோன்றியது. அவன் கால் வலியை மறந்து ஓடத் தொடங்கினான்.

அவ்வாறு ஓடி வந்துதான் என்ன பயன்? துறைமுகத்திலே நின்ற கூட்டத்தை விலக்கிக்கொண்டு, முன்னால் போக முடிந்தால்தானே?

எருதுச் சின்னம் பொறித்த தங்க முகப்புத் தகடு அழற்கதிரோன் ஒளிபட்டு, அனைவருடைய கண்களையும் கூசச் செய்தது. சிம்மக் கொடிகளும் விடைக் கொடிகளுமாக நாலு கொடிகள் காற்றிலே பல்லவர் புகழ்போலப் பறந்து வீசிக்கொண்டிருந்தன. குருத்தோலைகளாலும், குலை வாழைகளாலும் அழகுபடுத்தப்பட்டிருந்தது அந்தக் கலத்தின் நடு வயிற்புறம். பாய்மரக் கயிறுகளிலெல்லாம் மாவிலைத் தோரணங்கள்! மகாமனும் மற்றச் சிப்பந்திகளும் பார்க்குமிடமெங்கும் நின்று, சுறுசுறுப்பாகக் காணப்பட்டார்கள். அகளங்க காடவராயன் அந்த முகப்பிலே நின்று, அரசன் அபராஜிதனை வரவேற்றுக்கொண்டிருந்தான். அரசனுடைய ஒளி நிழல் வடிவைப்போல ஏந்திழை அமத்தி படகிலிருந்து மரக் கலத்தில் ஏறிக்கொண்டிருந்தாள். அதே சமயத்திலே மற்றொரு படகில் மரக் கலத்தை நோக்கி வருவது யார்? நாக்கன் பெருவியப்போடு கண்களை ஒரு முறை நன்றாக மூடித் திறந்து பார்த்தான். சந்தேகமேயில்லை; அவன் சிற்பி விஜயன்தான்!

இவனையுமா அரசன் தன்னோடு வர அழைத்திருக்கிறான்? ஒரு சிற்பி என்றால் ஒரு மண்டல அதிகாரியைவிட உயர்ந்தவனா, என்ன? மற்றவர்களுக்கு இல்லாத சலுகை அவனுக்குமட்டும் கிடைக்க வழி உண்டா, என்ன? அரசனின் விருப்பப்படி அந்த ஒரே இரவில் அந்த நடனக் கணிகையின் சிலையைச் செய்து முடித்திருப்பானோ? அவன் சோனகத்து மது வருந்தி சொக்கித் திரிந்துகொண்டிருந்த நேரமெல்லாம் விஜயன் கல்லும் உளியும் உறவாட விழித்திருந்திருப்பானோ?

அப்படித்தான் தோன்றியது.

விஜயன் இப்போது மரக் கலத்திலே ஏறி, அரசனுக்குப் பின்னே பணிவாக நிற்பது தெரிந்தது. அரசனுடைய தனியறையான சர்ப்ப மந்திரத்தின் சாளரங்களிலே, கடல் மல்லைச் சேடியர் இருவர், இருவராக எண்மர் நின்றுகொண்டிருந்தார்கள்.

சேமக்கலம் ஒலித்தது. மங்கள ஆரத்தி முடிந்தது. அரசன் கரையில் நின்ற திரள் கூட்டத்தைப் பார்த்துக் கை கூப்பி நிற்க, அத்தனை கூட்டமும் விண்ணளாவ வாழ்த்தொலி எழுப்பிக் கூவியது.

'அரசர் பிரான்!'

'வாழ்க, வாழ்க!'

'அபராஜித மகா பல்லவ தேவர்!'

'வாழ்க, வாழ்க!'

வான மண்டலத்தைச் சாடும் இந்த வாழ்த்தொலியைத் தொடர்ந்து சங்கொலி எழுந்தது; மங்கல வாத்தியங்கள் முழங்கின. முரசு ஒலித்தது. கலத்தைக் கரையிலே பிணைத்திருந்த தளைகளை ஒவ்வொன்றாக அவிழ்த்து விட்டார்கள். கடைசி பந்தமும் விலகிய பிறகு, சுவர்ணமுகி மெல்லத் தலையசைத்து நகரத் தொடங்கியது.

அதுவரையிலும் ஒன்றும் செய்யத் தோன்றாதவாறு நின்றிருந்த நாக்கன், அப்பொழுதுதான் அருகிலே ஒரு படகு இருப்பதை உணர்ந்தான். அடுத்த கணமே அதிலே தாவி ஏறினான். அசைந்து அசைந்து மரக் கலம் மெல்லக் கீழ்த் திசை நோக்கித் திரும்பிக்கொண்டிருந்த போது, அவன் அவசர அவசரமாகப் படகின் துடுப்பை வலித்தான்.

ஒற்றர் படை உபதலைவன் அகளங்கன் பெயரை உரக்கக் கூவிக்கொண்டே, அவன் சுவர்ணமுகியின் உடலை நெருங்கி விட்டான்.

'திரும்பிப் போ! போய்விடு!' என்பது போல அகளங்கன் கையால் சைகை காட்டுவதைக் கண்டுவிட்டான் அபராஜிதன். 'திரும்ப வேண்டாம்; நூலேணியை விட்டு அவனையும் ஏற்றிக் கொள்! முதலில் அவன் நினைவே இல்லாமல் போய்விட்டது!' என்று கட்டளையிட்டான்.

(தொடரும்)

அப்பாக்கள் சுத்தமோசம்!

ஸ்ரீவத்ஸன்

'டேய் கோபு, வா இங்கே.'

'ஏம்பபா?'

'எங்கே போனே, இவ்வளவு நாழி?'

'பாபு வீட்டுக்கு.'

'சைக்கிள் விட்டியா?'

'ஆமாம்.'

'உன்னைத்தான் அவனுடைய சைக்கிளை விடக்கூடாதுன்னு சொல்லியிருக்கேன், இல்லையா?'

'சைக்கிள் விட ஆசையாய் இருக்கு அப்பா.'

'ஆசையாய் இருந்தால் வாயை மூடிக் கொண்டிருக்கணும் தெரிஞ்சுதா? அவன் சைக்கிளைப் போய் தொட்டால், காலை முறிச்சுடுவேன்'.

'அப்படின்னா நீ ஒரு சைக்கிள் வாங்கித் தா அப்பா'.

'சைக்கிள் ஒண்ணுதான் குறைச்சல்'.

'அப்போ நான் அவன் சைக்கிளைப் போய் விடுவேன்.'

'போவாயா– போவாயா– போறுமா உதை?'

'வலிக்கிறது. ஐயோ! வலிக்கிறது. இனிமே போகமாட்டேன் அப்பா. அடிக்காதே'.

⁂ ⁂ ⁂

'கோபு, வாடா சைக்கிள் விடலாம்.'

'நான் மாட்டேன். எங்க அப்பா அடிக்கிறார். நான் வல்லே'.

'உங்கப்பா ஆபீசுக்கு போயிட்டாடா. வா போய் சைக்கிள் விடலாம்'.

'அப்பா வந்துட்டா என்ன செய்யறது? அப்போ வாங்கின அடி இன்னும் வலிக்கிறது'.

'அதுக்குள்ளே வந்துடலாம். நீ இல்லாமல் என்றால் தனியா சைக்கிள் விடப் பிடிக்கல்லே'.

'சரி, வா. போகலாம்'.

⁂ ⁂ ⁂

'பாபு அதோ, உங்க அப்பாடா'.

'வரட்டும்'.

'டேய், பாபு. சைக்கிளை எடுத்து உள்ளே வைக்கப் போறியா இல்லியா?'

'நாங்க விளையாடறோம் அப்பா'.

'நீமட்டும் விளையாடு. கண்டவங்களுக்கு சைக்கிள் கொடுக்கக் கூடாது'.

'கோபுதானே அப்பா விடறான்? பாவம் அப்பா. அவன் வீட்டிலே சைக்கிள் இல்லேப்பா'.

'அதுக்கு நாமா ஜவாப்தாரி? அவன் இனிமே சைக்கிளைத் தொட்டால் உன் கையை முறிச்சுடுவேன்'.

'கொஞ்ச நாழி விட்டும் அப்பா. அவன் ஆசைப்படுகிறான்'.

'எலே கோபு, இனிமே இங்கே வந்து சைக்கிளை தொட்டியோ கையை ஒடிச்சுடுவேன்'.

⁂ ⁂ ⁂

'ஏண்டா கோபு, ஏன் அழறே?'

'பாபு அப்பா, என் கையை ஒடிப்பாராம்'.

'ஏண்டா?'

'பாபு சைக்கிளை நான் தொடக்கூடாதாம்'.

'நீ ஏதுக்கு அவன் சைக்கிளைத் தொடறே?'

'சைக்கிள் விட ரொம்ப ஆசையாய் இருக்கு. நீதான் வாங்கித் தாயேன்.'

'உனக்கு சைக்கிள் ஒண்ணுதான் குறை. அங்கே போனே எலும்பே எண்ணி எடுத்திடுவேன்.'

⁂ ⁂ ⁂

'ஏண்டா, உன்னைத்தான் இங்கே வரக் கூடாது, சைக்கிளை தொடக்கூடாதுன்னு சொன்னேன் இல்லையா?'

'சைக்கிள் விட ஆசையாய் இருந்தது'.

'அதுக்கு உங்க அப்பனை வாங்கித் தரச் சொல்றது'.

'அவ, அப்பாகிட்டே காசு இல்லேப்பா'.

'காசு இல்லாட்டால் சும்மா இருக்கிறது'.

'நாங்கள் சண்டைப் படாமல் சைக்கிள் விடறோம் அப்பா'.

'முடியாது. இனிமே அவன் இங்கே வந்தால், உனக்கு உதை விழும். போடா வீட்டுக்கு'.

'அவனை ஒண்ணும் சொல்லாதே அப்பா.'

'வேண்டாம் பாபு. நான் போயிடறேன்'.

⁂ ⁂ ⁂

'கோபு, என்பேரிலே கோபமா உனக்கு?'

'இல்லேடா பாபு'.

'உனக்கு சைக்கிள் கொடுக்கக் கூடாது என்கிறார் என் அப்பா. அப்பா ஆபீஸ் போனதும் தெரியாமல் விடுவோம்'.

'உன் சைக்கிளை தொடக்கூடாது என்று என் அப்பா சொல்கிறார். அடிப்பாராம். பயமாயிருக்கு'.

'நான் உனக்குக் கொடுத்தால் எங்கப்பா ஏதுக்குக் கோபிக்கணும்?'



'நாம ஒத்துமையா விளையாடறது உங்க அப்பாவுக்கும் எங்க அப்பாவுக்கும் பிடிக்கவில்லை.'

'பெரியவா சுத்த மோசம்டா'.

⁂ ⁂ ⁂

'ராகவன், உம்ம பையன் கோபுவை நீர் கண்டிக்கப் போகிறீரா நான் கண்டிக்கட்டுமா?'

'நீர் உங்க பாபுவைக் கண்டிக்கப் போறீரா நான் கண்டிக்கட்டுமா?'

'என் பையன் சைக்கிளை உம் கோபு தொடக்கூடாதுன்னு எவ்வளவோ சொல்லிப் பார்த்துட்டேன். கேக்கல்லே. இனிமே அடிதான் விழும். கண்டிச்சு வையும்'.

'அவன் முதுகிலே கையை வையும். அப்புறம் நடக்கிறது என்ன என்று பாரும்!'

'அவ்வளவு ரோசம் உள்ளவர் பையனுக்கு ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுப்பதுதானே? அதுக்கு விதியில்லே.'

'யாருக்கு விதியில்லை என்கிறீர்.'

'உமக்குத்தான்.'

'இன்னிக்கு எங்க கோபுவுக்கு ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுக்காவிட்டால் என் பெயர் ராகவன் இல்லே.'

'கிழிச்சீர். வாங்க மாட்டீரா நீர்'.

'வாங்கிக் காட்டுகிறேன். இப்போதே'.

⁂ ⁂ ⁂

'கோபு, உனக்கு உங்க அப்பா புது சைக்கிள் வாங்கிக் கொடுத்து மூன்று நாள் ஆகிறதே. நீ ஏன் விடறதே இல்லை'.

'நீயும் மூன்று நாளா, ஏன் பாபு, சைக்கிள் விடறதே இல்லை'.

'எப்போ, எங்க அப்பா என் சைக்கிளை நீ தொடக்கூடாதுன்னு சொல்லி, உன்னைக் கோபித்துக்கொண்டாரோ அதிலேயிருந்து நான் என் சைக்கிளைத் தொடறதில்லேன்னு வச்சுட்டேன்'.

'நான் ஆசைப்பட்டு சைக்கிள் வாங்கித் தான்னு அப்பாவை ஆயிரம் தடவை கேட்டேன். வாங்கிக் கொடுக்க முடியவில்லை. உங்கப்பா கிட்டே வீம்பு பண்ணியதற்காக இப்போ சைக்கிள் வாங்கி விட்டார். நானும் தொடப்போறதில்லை'.

⁂ ⁂ ⁂

'ராகவன்! பார்த்தீரா நம் பிள்ளைகள் நமக்குப் பாடம் கற்பித்துவிட்டார்கள்?'

'ஆமாம். எங்கள் கோபு சைக்கிள், சைக்கிள் என்று பறந்தான். இப்போ புது சைக்கிளைத் தொடவே மாட்டேங்கிறான். மூலையிலே கிடக்கு'.

'எங்க பாபுவும் அப்படியே. சைக்கிளைக் கையாலே தொடல்லே; மூலையிலே கிடக்கு!'

'பையன்கள் இருவரும் ஒற்றுமையாக விளையாடினார்கள். நாம் குறுக்கே புகுந்து அவர்கள் ஒற்றுமையைக் குலைத்தோம்.'

'பிஞ்சு உள்ளங்கள் ஒன்றுபட்டிருக்கின்றன'.

'பெரிய உள்ளங்கள் மாறுபட்டு நிற்கின்றன'.

'நமக்குப் பாடம் கற்றுக்கொடுத்துவிட்டார்கள் அந்தப் பிஞ்சுகள்.'

'இனிமே நாம் அவா வழியிலே குறுக்கிடக்கூடாது'.

⁂ ⁂ ⁂

'கோபு ரெடியா?'

'ஓ! நான் ரெடி'.

'இனிமே இந்தத் தெரு பூராவாக ஜோடியா நீயும் நானும் சைக்கிள் விடலாம், ராத்திரி பகல் எல்லாம்'.

'உங்கப்பா நல்லவர்டா.'

'உங்க அப்பாவும் நல்லவர்தான்'.

★

நீல மலைத் தொடர்கள். அதிலே தழைத்திருக்கும் தருக்கள். அவைகளில் மலர்ந்திருக்கும் வண்ண மலர்கள். பாலெனப் பொழியும் நிலவிலே வழிந்தோடும் அருவி. அருவியிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொண்டு, வன போஜனம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடத்துக்கு அன்ன நடை போட்டுச் சென்றுகொண்டிருந்தாள், பாமா. காற்றிலே அலை மோதும் கூந்தல் கற்றைகளை ரிப்பனால் கட்டி வண்ண மலர்ச் சரத்தை அதன்மீது வளைவாகச் சூட்டிக்கொண்டிருந்தாள். உடம்போடு ஒட்டினாற்போல 'கிரேப்' புடவை. அதன் நிறம் பால் நிலவில் குளித்தெழும் அருவியின் நிறத்தைப் போலவே இருந்தது. அவளது பெரிய கரு விழிகள் சுழன்று அங்கும் இங்கும் பார்த்தன. யாரைத் தேடுகிறாள் அந்தப் பெண்?

கொஞ்சம் தொலைவிலே கொன்றை மரத்தடியில்

யாரோ ஒருவன்

சரோஜா ராமமூர்த்தி

சாய்ந்து நின்று கொண்டிருந்த சங்கரனுக்கு, அவளுடைய எழில் போதையை ஊட்டியது. அப்படியே ஓடிச்சென்று அவளுடன் ஆயிரம் பேச்சுக்கள் பேச வேண்டும் என்று ஆசைப்பட்டான். ஆனால், சங்கரனுக்கு மன அடக்கம் அதிகம். விரைவில் வெளியில் எதையும் காட்டிக்கொள்ள மாட்டான்.

முசாபிர் பங்களாவில் பேச்சுக் குரல் பலமாகக் கேட்டது. 'சங்கரன் எங்கே? சாப்பிடும் நேரமாயிற்றே? அந்தப் பெண் பாமாவையும் காணோம்' என்று கூறி விட்டு, ஜம்புலிங்கம் ஒரு மாதிரியாகச் சிரித்துக்கொண்டார்.

'எங்கே போனாளோ? தண்ணீர் கொண்டுவர ஆள் இல்லையா என்ன? நான்தான் எடுத்து வருவேன் என்று குடத்தைத் தூக்கிக்கொண்டு கிளம்பிப் போயிருக்கிறாள்' என்று சலிப்புடன் கூறினாள் அம்புஜம்.

'தண்ணீர் கொண்டு வந்தாச்சு அம்மா' என்று சொல்லிக்கொண்டே, பாமா உள்ளே வந்தாள்.

'நானும் வந்தாச்சு' என்று கூறிக் கொண்டே சங்கரன், மாமா ஜம்புலிங்கம் எதிரில் வந்து நின்றான்.

'இருவரும் வந்தாயிற்றே. இல்லையோ, இனிமேல் நான் சாப்பிட வேண்டியது தான்' என்று குமார் சொல்லிக்கொண்டே எழுந்தான்.

குளிர்ந்த நிலவிலே வன போஜனம் அமர்க்களமாக நடந்துகொண்டிருந்தது. பாலில் வேக வைத்துச் செய்த சர்க்கரைப் பொங்கல். கெட்டித் தயிரில் பிசைந்த தயிர் சாதம். கமகமவென்று மணக்கும் புளியோதரை. கோடை விடுமுறைக்காகத் தங்கள் மாமாவின் வீட்டுக்கு வந்திருந்தனர் சங்கரனும் குமாரனும்.

எல்லோரும் வட்ட வடிவமாக உட்கார்ந்திருந்தனர். நிலவொளியில் தகதகவென்று மின்னும் எவர்சில்வர் தட்டுக்களில் உணவைப் பரிமாறிக்கொண்டு வந்தாள் மாமி அம்புஜம். அவளுக்கு உதவியாக அவள் மகள் பாமா பட்சணங்களைப் பரிமாறிக்கொண்டு வந்தாள்.

'வேண்டாம், வேண்டாம்' என்று சங்கரன் கைகளை முன்னால் நீட்டித் தட்டின் மீது குனிந்துகொண்டான்.

'வேண்டாம் என்றால் நானா விடுகிறவள்? உங்களுக்குத் தித்திப்பு என்றால் மிகவும் பிடிக்கும் என்கிற விஷயம் எனக்குத் தெரியும். பேசாமல் சாப்பிடுங்கள் அத்தான்!' என்று உபசரித்தாள் பாமா.

'தித்திப்பு பிடிக்குமென்றால் அதற்கும் ஒரு அளவு இருக்கிறதல்லவா! அளவுக்கு மீறிவிட்டால், அதுவும் திகட்டித்தானே போகும்!' அத்துடன்கூட அவனுக்குப் பட்சணங்களையோ சாப்பாட்டையோ ரசித்துச் சாப்பிட முடியாமல், அவன் எதிரிலேயே நீ வேறு நிற்கிறாய். அவனுக்கு உன்னைப் பார்த்து ரசிப்பதற்குத்தான் பொழுது சரியாக இருக்கிறது' என்று கூறி நிறுத்திவிட்டுக் குமாரன் சங்கரனைக் கேலியாகத் திரும்பிப் பார்த்தான்.

குமாரன் என்ன சொல்கிறான் என்று ஆவலுடன் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த பாமா, வெட்கத்துடன் கண்களை நிலத்தில் பதிய விட்டாள். தண்ணென்றிருக்கும் அந்த நிலவில்கூட அவள் முகத்தில் வியர்வைத் துளிகள் முத்துப்போல் அரும்பி இருந்தன.

'உங்களுக்கு வேண்டுமானால் கேட்டு விட்டுப் போகிறதுதானே, குமாரு அத்தான்! அதற்கு இல்லாததும் பொல்லாததுமாகச் சொல்லி, என்னை ஏன் திணற அடிக்க வேண்டுமாம்!' என்று கூறிவிட்டு, பாமா நாலைந்து ஜாங்கிரிகளை ஒரேமுட்டாக எடுத்துக் குமாரன் இலையில் போட்டாள்.

குமாரன் கடகடவென்று சிரித்து விட்டு, 'இல்லாததும் பொல்லாததும் என்னவாம்? ஸ்ரீமான் சங்கரனுக்கும், ஸ்ரீமதி பாமாவுக்கும் கூடிய சீக்கிரம் கல்யாணம் நடந்துவிடும் என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதானே அம்மா?' என்றான்.

'தெரிந்த விஷயத்தையே குழந்தை மறந்துவிட்டாள்போல் இருக்கிறது!' என்று கேலி செய்தார் பாமாவின் தகப்பனார் ஜம்புலிங்கம்.

'அதை நன்றாக நினைவு படுத்தத்தான் நீங்கள் வேறு அருகில் இருக்கிறீர்களே, அது போதாதா? குழந்தை எங்கே தப்பித் தவறி மறந்து விடுவாளோ என்று கவலை வேறு உங்களுக்கு. உங்களுக்கும் வேலை இல்லை, அவளுக்கும் வேலை இல்லை' என்று கோபத்துடன் பொரிந்து தள்ளிக் கொண்டே, கையிலிருந்த பாத்திரத்தை 'நக்'கென்று கீழே வைத்தாள் அம்புஜம்.

தேவாமிர்தமாக இருக்கும் உணவில் எங்கோ ஒரு சிறு கல் 'நறுக்'கென்று தட்டுப்பட்டதுபோன்ற உணர்ச்சி சங்கரனுக்கு உண்டாயிற்று. பாதி கடித்துச் சுவைத்த ஜாங்கிரியைத் தட்டின் ஓரமாக நகர்த்திக்கொண்டே, மாமியைத் திரும்பிப் பார்த்தான் அவன்.

பாமாவின் எழில் வதனத்தில்தான் எத்தனை பாவங்கள்! அதற்குள் கரு விழிகள் கலங்கிவிட்டிருந்தன. ரோஜாக் கன்னங்கள் திடீரென்று வெளுத்துப் போயின. நாணமும் மென்மையும் மிதந்துகொண்டிருந்த அந்த முகத்தில், சோகம் பரவி விட்டிருந்தது.

குமாரன் எதிலுமே கொஞ்சம் அவசரப் பேர்வழி. 'புதிதாக எந்த ஐ. ஏ. எஸ். மாப்பிள்ளையைப் பிடித்திருக்கிறீர்கள் மாமி?' என்று நறுக்கென்று கேட்டான் அம்புஜத்தைப் பார்த்து.

'அடேடே! நீ ஒன்று! வேடிக்கைக்கு எதாவது சொன்னால், அதைப்போய் நீ வினையாக்குகிறாயே தம்பி!' என்று மென்று விழுங்கிக்கொண்டே கூறிவிட்டு, இலையைவிட்டு எழுந்தார் ஜம்புலிங்கம்.

'வேடிக்கையாவது? விநோதமாவது? உண்மையாகத்தான் சொல்கிறேன். நமக்குப் புது சம்பந்தமே பயமாகத்தான் இருக்கிறது'—அம்புஜம் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகத்தான் பேசினாள்.

'என்ன? காமாட்சி அத்தை புதியவளா? அவள் மகன் சங்கர அத்தான் நமக்குப் புதியவரா? என் அப்பாவுடன் பிறந்த சகோதரி என் தாய்க்குப் புதியவளா? அம்மாவுக்கு மூளைக் கோளாறுதான் ஏற்பட்டிருக்க வேண்டும்' என்று பயந்தாள் பாமா.

நிலாச் சாப்பாட்டை உற்சாகமாக ரசிக்க வேண்டும் என்று நினைத்திருந்த ஜம்புலிங்கம், அயர்ந்து போனார். சங்கரன் நிலத்தைக் கையால் கீறிக்கொண்டே உட்கார்ந்திருந்தான். 'ஊருக்குக் கிளம்ப மூட்டை கட்டலாமா?' என்று கேட்டுக் கொண்டே மேலுங்கீழும் உலவினான் குமாரன். அம்புஜம்மட்டும் அமைதியாகப் பாத்திரங்களை அலம்பிக் கூடையில் நிரப்பிக் கொண்டாள்.

இரவின் நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டு கார் வேகமாக ஊரை நோக்கிக் கிளம்பி விட்டது. காரில் உட்கார்ந்திருந்தவர்கள் யாருமே உற்சாகமாக இல்லை. அங்கு நிலவியிருந்த மௌனத்தைக் கலைத்துக் குமாரன் அதட்டும் குரலில், 'நாளைக் காலையில் ஊருக்குப் புறப்படுகிறோம் மாமா. வந்த வேலை ஆயிற்று. வெறுமனே வீண் பொழுது போக்குவானேன்?' என்றான்.

'வந்த வேலை முடிந்துவிட்டதா? பாமாவுடன் தனித்துச் சில மணிகள்கூடப் பேசவில்லையே. வந்து இரண்டு நாளைக்குள் வன போஜனம் என்று மாமா இழுத்து வந்து விட்டார். இதற்குள் ஊருக்கு என்ன அவசரம்?' என்று எண்ணமிட்டபடி உட்கார்ந்திருந்தான் சங்கரன்.

'குமாரு அத்தானுக்கு எப்பொழுதுமே முன் கோபம் அதிகம். அவர் அப்படித்தான் பேசுவார். நீங்கள் அவர் வார்த்தைகளைக் கேட்காதீர்கள் அத்தான்' என்று சிரித்தபடிச் சொல்லிக்கொண்டே, பாமா சங்கரனைத் திரும்பிப் பார்த்தாள். அந்த முகத்தில்தான் எவ்வளவு கவர்ச்சி? அவளை நான்கு வயதில் பார்த்தபோது சங்கரன் அவளைத் திரியும் பட்டாம் பூச்சிக்கு ஒப்பிட்டான். வண்ண வண்ணமாகப் பாவாடைகள் உடுத்தி, கலகலவென்று சிரித்து, அவன் சிந்தையை மகிழ்வித்தவள் அவள். அப்புறம் பத்து வயதில், பள்ளியில் தான் படிக்கும் பாடங்களில் புரியாத சிக்கல்களை விளக்கித் தரும்படி அவனிடம் வந்து மன்றாடுவாள். பிறகு பதினைந்து வயதில் முகத்திலே நாணமும் நடையிலே மென்மையும், பேச்சிலே இனிமையும் நிறைந்து அவன் கைக்கு எட்டிய பொருளாகப் பூமியில் உலவும் மதியம்போல அவனுக்குத் தோன்றினாள். இன்று பதினெட்டு வயதில் 'உனக்காக நான் தவங் கிடக்கிறேனே!' என்று சொல்லாமல் சொல்லும் முகபாவங்களால் அவனைக் கவர, அவள் கற்றுக்கொண்டுவிட்டாள். 'அத்தானுக்கு இது பிடிக்கும். அத்தானுக்கு நான் அஜந்தாக் கொண்டை போட்டுக்கொண்டால்தான் பிடிக்கும்' என்று தன்னைச் சிங்காரித்துக்கொள்ளும் அளவுக்கு வந்து விட்டாள்.

⁂ ⁂ ⁂

'என்ன மௌன விரதமோ? நீங்கள் எந்தச் சாமியாருக்காவது உறவா?' அடுத்த நாள் மாலையில் மாடியில் சிந்தனையில் மூழ்கி உட்கார்ந்திருந்த சங்கரனை அவள் கேட்ட கேள்வி இது.

'ஊஹூம்—' என்று தலையை ஆட்டினான் சங்கரன்.

'பின்னே என்னவாம்? என்னவோ குடி முழுகிப் போனமாதிரி முகத்தை 'உர்'

ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு வருஷ பலன் மாதவாரி எழுத ரூ. 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூபா. 2. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை

பண்டித காழியூர்

ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்

தபோ நிதி

தியாகராய நகர், மதராஸ்-17

தபால் பெட்டி 1417

ரென்று வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறீர்களே அத்தான்!'

'பாமா! இதோ பார், முன்பின் தெரியாதவர்களுடன் புது சம்பந்தம் கூடாதென்று உன் அம்மா நேற்று சொல்லவில்லையா? அதன் அர்த்தம் விளங்காமல்தான் முழித்துக்கொண்டிருக்கிறேன். உனக்கு எல்லாமே விளையாட்டுத்தான். விளையாட்டுத்தனமாக எல்லாவற்றையுமே தள்ளிவிட முடியாது. எதற்கும் ஒரு வரம்பு உண்டல்லவா?'

பாமா உண்மையிலேயே கலங்கிப் போனாள். கூரிய வேலைவிடக் கடுமையாகப் பாயும் சக்தி சுடு சொற்களுக்கு உண்டு என்பது அவளுக்கு அப்பொழுதுதான் புரிந்தது.

திடீரென்று தாயின் மனதில் ஏற்பட்ட இந்த மாறுதலை அறிந்துகொள்ள அவளும்தான் ஆசைப்பட்டாள். நிறைந்த மனத்துடன் வந்த சங்கரன், மாமன் வீட்டை விட்டு வெறிச்சென்ற உள்ளத்துடன் வெளியே போனான். நேற்றுவரையில் நெருங்கியவனாக இருந்த அவன், இன்று அன்னியனாக மதிக்கப்பட்டுவிட்ட பின்பு, அவனுக்கு அங்கு என்ன வேலை இருக்கிறது? ஊருக்குப் புறப்படும் முன்பு நீர் நிறைந்த விழிகளுடன் அவன் பாமாவிடம் விடை பெற்றுக்கொண்டான்.

'திரும்பவும் எப்பொழுது வருவீர்கள் அத்தான்?' என்று இனிமையாகக் கேட்டுப் புன்முறுவல் பூத்தாள் பாமா.

'திரும்பவுமா? அது உன் அம்மாவின் மனப்போக்கைப் பொறுத்திருக்கிறது. திரும்பவும் என்னை இந்த வீட்டுக்கு மருமகனாக வரவேற்க அவளுக்கு ஆசை இருக்குமானால், இன்னும் சில மாதங்களில் கட்டாயம் வருவேன் பாமா.'

பாமாவின் கண்களில் கண்ணீர் தேங்கி நின்றது. 'போய்விட்டு வருகிறேன்' என்னும் பாவனையில் தலையைமட்டும் அசைத்தான் சங்கரன். 'புறப்படுகிறேன் மாமா' என்று சுருக்கமாகவே கூறிவிட்டுக் குமாரன் சற்று விறைப்பாகவே வண்டியில் ஏறி உட்கார்ந்தான்.

தெருக்கோடி வரைக்கும் வண்டி செல்லும் திசையில் கண்களை ஓட்டினாள் பாமா. சில நாட்களுக்கு முன்புகூட முளைத்துத் தழைத்து வளர்ந்து வரும் நிலையில் பசுமையாக இருந்த அவர்கள் காதல் விருட்சம், இன்று ஏதோ ஒரு காரணத்தால் உலுக்கப்பட்டுச் சீரழிந்து நின்றது.

பாமா கண்களைத் துடைத்துக்கொண்டு 'விருட்'டென்று உள்ளே போய்விட்டாள்.

ஃ ஃ ஃ

ஊருக்குத் திரும்பி வந்த சங்கரன், மனதைத் துளைத்து வந்த கேள்வியைத் தன் தாயிடம் கேட்கத் துடித்துக்கொண்டிருந்தான்.

'ஊருக்குப் போய் வந்தாயே சங்கரா, மாமா ஏதாவது கல்யாணப் பேச்சை எடுத்தாரா? பாமாவுக்குப் படிப்பு முடிந்துவிட்டதே. இன்னும் மேலே படிக்க வைக்கப் போகிறார்களா என்ன? வெறுமனே



பிரமுகர்:—"நீர் வருவதற்குமுன் நாலைந்து பேர் வந்தார்கள்...யாரையும் பார்க்க முடியாது என்று சொல்லி விட்டேன்...நீர் அதிருஷ்டசாலி......!"

மற்றவர்:—"அந்த நாலைந்து தடவை வந்ததும் நான்தான்; வேறு யாருமில்லை...!"

பெண்களுக்கு எதற்கு அப்பா படிப்பு? அதனால் உத்தியோகம் பார்த்து ஒரு குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் இருந்தாலொழிய மேல் படிப்புப் படித்து என்ன செய்யப் போகிறாள் அவள்?'

'அவர்கள் வீட்டுப் பணத்தைச் செலவு செய்து படிக்க வைத்தால், நமக்கு என்ன அம்மா?' என்று எதிலும் படாமல் பேசினான் சங்கரன்.

'பெண்ணை உயர் படிப்புப் படிக்க வைத்தால்தானே நாளைக்குச் சரிசமமாக உயர்ந்த படிப்புப் படித்த மாப்பிள்ளையாகத் தேர்ந்தெடுக்க முடியும்?'

குமாரன் ஆத்திரத்துடன் தாயிடம் கூறிவிட்டு, அங்கிருந்து போய்விட்டான்.

'அவர்கள் என்னதான் அப்பா சொன்னார்கள்?' ஆதுரத்துடன் கேட்கும் தாயின் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தான், சங்கரன். பிறகு துக்கம் நிரம்பிய குரலில், 'எனக்கு பாமாவை மண முடித்துக் கொடுத்தால், அது புது சம்பந்தமாம். முன் பின் அறிமுகமில்லாதவர்களாம்' என்றான்.

'அப்படியா?' என்று சிறிது நேரம் ஸ்தம்பித்து நின்றாள் அவன் தாய். அவள் மனதில் கடந்த காலத்தில் நடந்த நிகழ்ச்சிகள் ஓடுவதைச் சங்கரனால் அறிந்துகொள்ள முடிந்தது.

'ஏனம்மா! நாம் எல்லோருமே மாமா வீட்டாருக்குப் புதிதா? அல்லது நான் மட்டும் அவர்களுக்குப் புதியவனா?'

அவன் தாய் மறுபடியும் திடுக்கிட்டாள். நெற்றியில் வியர்வை பெருகி வழிய அவள் உடம்பு இரண்டு தரம் நடுங்கி ஓய்ந்தது. வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட உணர்ச்சியில் சிக்கி, அவள் மனம் தடுமாறினாள்.

'என்ன அம்மா?' என்றான் மகன் மறுபடியும்.

'உம்...உம்...' என்று தலையைக் கைகளால் தாங்கிக்கொண்டாள் அவள். சங்கரனுக்கு அழுகை வெடித்துக்கொண்டு கிளம்பியது. கம்மிய குரலில், 'நான் உன் தங்கையின் மகன்தானே அம்மா? அப்படித்தானே அம்மா நீ என்னிடம் இதுவரையில் கூறி வந்தாய்? அதுதானே அம்மா உண்மை? நான் அயலானா? ஊர் பெயர் தெரியாதவனா? அப்படித்தானே?' என்று பொங்கும் துயரை விழுங்கியவாறு கேட்டான் சங்கரன்.

'சங்கரா! நீ என் மகன்தான். பிறந்து பதினைந்து நாட்களுக்கு அப்புறம் நீ என் மகனாகத்தான் வளர்ந்து வருகிறாய்.'

அவள் கண்களிலிருந்து அருவிபோல் கண்ணீர் பெருகியது.

ஆழ்கடலின் ஆழத்தில் மறைந்துகிடக்கும் நல் முத்துக்களையே உலகோர் கண்டெடுத்து விடுகிறார்களே, மனித வாழ்வில் நடக்கும் ரகசியங்கள் எவ்வளவு காலத்துக்குத்தான் மறைந்து கிடக்கும்? இருபத்தைந்து வருஷங்களாகத் தன் மனசில் புதைந்து கிடந்த எண்ணங்களை அவன் தாய் அவனிடம் கூற ஆரம்பித்தாள்.

ஃ ஃ ஃ

அவளுக்கும் சங்கரனின் தந்தைக்கும் அப்பொழுது வயது ஒன்றும் அதிகமாக ஆகிவிடவில்லை. இருந்தாலும் குழந்தையில்லையே என்கிற குறை அவள் மனத்தை அதிகமாக அரித்து வந்தது. தெருவிலே ஆடித் திரியும் குழந்தைகளைக் கண்டால் மெய்மறந்து வாசற்படியிலேயே நின்றுவிடுவாள். அவள் வீட்டுச் சுவரில் குழந்தைக் கண்ணனின் உருவப் படங்களும், பால முருகனின் ஓவியங்களும் வரிசைக் கிரமமாக மாட்டி இருந்தார்கள். சஷ்டியன்று சிறு பிள்ளைகளைக் கூப்பிட்டுப் பாலும் பழமும் கொடுத்து மகிழ்ந்தாள் அவள். கனவிலும் நனவிலும் 'குழந்தை குழந்தை' என்று ஏங்கியது அவள் மனம். 'உனக்குப் பைத்தியம்தான் பிடிக்கப் போகிறது' என்று அவள் கணவர் அவளைக் கேலி செய்வார்.

ஐப்பசி மாசத்தில் கந்த சஷ்டி உற்சவம் பார்ப்பதற்குத் தம்பதி இருவரும் வைத்தீஸ்வரன் கோவிலுக்குக் கிளம்பினார்கள். ரயிலை விட்டு இறங்கியதும் வண்டிக்காரன் இவர்களை அசலூர் என்று தெரிந்துகொண்டு விட்டான். அவர்கள் அவனை விவரம் விசாரிக்கும்முன்னர் அவனாகவே தகுந்த இடமாகப் பார்த்துப் போய்த் தன் வண்டியை நிறுத்தினான். அந்த ஊருக்கு வருகிறவர்களில் பெரும்பான்மையோர் தங்க வசதி செய்து கொடுத்து வந்தார் அந்தப் பண்டாரம். அன்று அவர்கள் போய்ச் சேர்ந்த வேளை நல்ல வேளையில்லை.

'ஐயா?' என்று குரல் கொடுத்தான் வண்டிக்காரன்.

'என்ன அப்பா தொந்தரவு செய்கிறாய்? இன்று இங்கே ஒருவரையும் அழைத்து வராதே...' என்றார் பண்டாரம்.

அதற்குள் சுப்பிரமண்யம் வண்டியிலிருந்து இறங்கி தெரு நடைப் பக்கம் சென்று உள்ளே பார்த்து, 'ஐயா! கொஞ்சம் பெட்டி, படுக்கையை மட்டும் வைக்க அனுமதி கொடுங்கள். மற்றபடி உங்களைத் தொந்தரவு செய்யவில்லை' என்று கேட்டார்.

உள்ளே பெண்களின் கூட்டம் நிரம்பி இருந்தது. வேதனையும் விம்மலுமாக ஒரு பெண் கூடத்து அறையில் முனகிக் கொண்டிருந்தாள். அந்தப் பெண் பிரசவ வேதனைப்படுகிறாள் என்பது சுப்பிரமண்யத்துக்குத் தெரிந்துவிட்டது. ஆனால், அங்குக் கூடி இருந்தவர்கள் அவள் வேதனையை மகிழ்ச்சியுடன் அனுபவிக்கவில்லை. பிறக்கப் போகும் குழந்தையை விடத் தாயின் உடல் நிலையைப்பற்றித்தான் எல்லோரும் கவலைப்படுவதாகத் தெரிந்தது. குழந்தை எப்படி வேண்டுமானாலும் பிறக்கட்டும். அது உயிரோடு இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி; அந்தப் பெண் பிழைத்தால் போதும் என்று அபிப்பிராயப்பட்டார்கள். பண்டாரம் நொடிக்கொரு தரம் வாசல் கோபுரத்தைப் பார்ப்பதும் 'வைத்யநாதா' என்று கையெடுத்துக் கும்பிடுவதுமாக இருந்தார்.

'இந்தா! இப்படி இறங்கி வா உள்ளே' என்று சுப்பிரமண்யம் வண்டியில் உட்கார்ந்திருந்த மனைவியைக் கூப்பிட்டார்.

காமாட்சி இறங்கி உள்ளே சென்றாள். சற்றுமுன் அங்கு எழுந்த வேதனையின் ஒலி குறைந்துகொண்டே வந்தது. புது ஜீவன் ஒன்றின் வருகையை அறையிலிருந்து எழுந்த அழுகுரல் அறிவித்தது. அறையின் கதவைத் திறந்துகொண்டு வைத்தியர் வெளியே வந்தார்.

'பண்டாரத்தய்யா! நீங்கள் பலருக்குச் செய்து வரும் அறம் பொய்த்து விட்டது. நான் எவ்வளவோ முயன்றேன். உங்கள் மகள் தன் குறை நீங்காமலேயே போய்விட்டாள். தன் நினைவாக ஒரு ஆண் குழந்தையைக் கொடுத்துவிட்டுத்தான் அவள் மறைந்து விட்டாள்' என்றார் வைத்தியர்.

'வைத்திய நாதா! உன் அருள் இப்படியா இருக்கிறது அப்பனே! மனத்தாலும் ஒரு ஜீவனுக்கு இன்னல் நினைக்காத என்னைப் பெரிய சோதனைக்கு ஆளாக்கிவிட்டாயே...அம்மா தையல் நாயகி! உன் சன்னிதி விளங்குவதுபோல் என் மகளும் வாழ்வாள் என்று உன் பெயரை வைத்தேனே!' என்று கதறினார் பண்டாரம்.

காமாட்சியும், சுப்பிரமணியமும் தல யாத்திரை வந்த இடத்தில் வாழ்க்கையின் கொடுமைகளையும், இறைவனின் புரியாத விளையாட்டுக்களையும் பார்க்க நேர்ந்தது. கவனிப்பாரற்று, உதாசீனம் செய்யப்பட்டு, அழுது வாடும் அந்தப் புது உயிரை அங்கு யாரும் கவனிக்கவில்லை. காமாட்சிக்கு சுவாமி தரிசனத்தில் மனம் செல்லவில்லை. தங்கக் கவசம் பூண்டு, பார்ப்பவர் உள்ளத்தைத் தன்பால் இழுக்கும் பரமனை அவள் கண்கள் தரிசித்தாலும் உள்ளம் ஓயாமல் அந்தக் குழந்தையைப்பற்றியே நினைத்துக் கொண்டிருந்தது. பன்னீர் மாலைகள் புரளும் முத்துக்குமாரனை அவள் பார்த்தாலும் பண்டாரத்தின் வீட்டில் அழும் குழந்தையின் குரல் அவள் செவிகளில் விழுந்துகொண்டிருந்தது.

ஊருக்குக் கிளம்புவதற்குமுன் சுப்ரமண்யம் பண்டாரத்திடம் ஆறுதலாக இரண்டு வார்த்தைகள் பேச எண்ணினார்.

'ஐயா! உங்களுக்கு வந்த கஷ்டம் மலை போன்றது. இறைவன்தான் துன்பத்தைத் துடைக்க வல்லவன்' என்றார்.

பண்டாரம் தம் எதிரே இருந்த கோபுரத்தைப் பார்த்தார். 'ஐயா! இறைவன் என் துன்பத்தைத் துடைக்கவா போகிறான்? இல்லை, துன்பம் ஒன்றைப் புதிதாகச் சேர்த்திருக்கிறான். தாய்ப் பாலுக்கும் தாய் அன்புக்கும் ஏங்கும் அந்தக் குழந்தையின் அழுகையைக் கேளுங்கள். 'பண்டாரம்! மகளுக்குக் கல்யாணம் ஆனவுடன் உலக பந்தம் விட்டது என்று இறுமாந்தாயே...பார்...' என்று இறைவன் எனக்குச் சவால் விடுவதுபோல் இல்லையா?' என்று கேட்டார் கண்களில் கண்ணீர் மல்க.

காமாட்சி கண்ணீர் பெருக்கினாள். சுப்பிரமண்யம் சிறிது நேரம் ஆழ்ந்து யோசித்தார். பிறகு நிதானம் ததும்பும் குரலில், 'ஐயா! இந்தக் குழந்தை உங்களுக்குப் பாரமாக இருக்குமென்று நினைத்தால், குழந்தை இல்லாத எங்களுக்கு அதைக் கொடுத்து விடுங்கள். ஒரு குழந்தையை யாசிக்கத்தான் நாங்கள் தல யாத்திரை புறப்பட்டோம்' என்றார்.

பண்டாரத்துக்கு அப்போது இருந்த மன நிலையில், அது சரியென்றே தோன்றியது. காமாட்சி அந்த ஆண் குழந்தையை வாங்கி, மார்புடன் அணைத்துக்கொண்டாள். அவர்களின் தல யாத்திரையும் அத்துடன் முடிந்தது.

பிறகுதான் கடவுளின் கருணையால் குமாரன் பிறந்தான். காமாட்சி தன்னைப் பெற்றெடுத்த தாயல்ல என்ற உண்மை சங்கரனுக்குத் தெரியாது. தன்னுடைய சகோதரியின் மகன் என்று அவள் அவனிடம் கூறி இருந்தாள். தகப்பன் வெகு நாட்களுக்கு முன்பே எங்கோ போய்விட்டதாக அறிவித்திருந்தாள். பெற்ற தாயைவிடப் பரிவு காட்டும் அவளைத் தாயெனவே நினைத்து, அவன் அன்பு செலுத்தினான். சுப்பிரமண்யம் எதைச் செய்தாலும் சங்கரனுக்கு முதலில் செய்துவிட்டுத்தான் தன் மகனைக் கவனிப்பார். ஆகவே, அவன் மனதில் எந்தவிதமான வேற்றுமையும் எழவில்லை.

தான் பிறந்த சூழ்நிலையையும், வளர்ந்த விதத்தையும் கேட்டு, அவன் இதயம் துன்பத்தால் வாடியது. 'நான் அயலான் என்பதில் என்ன சந்தேகம்? அந்தக் குடும்பத்துக்கும் தனக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? பாமாவைக் கல்யாணம் செய்துகொள்ளத் தனக்கு உரிமை இல்லைதான்' சங்கரன் மனதுக்குள் குமைந்து போனான். அவனுக்கும் அவனை வளர்த்தவர்களுக்கும் இடையில் ஒரு பெரிய பிளவு ஏற்பட்டிருப்பதை உணர்ந்தான். இனி அவ்வீட்டில் இருந்தால், சொத்து உடைமைகள்பற்றிய தகராறுகள் எழும். விரைவில் வீட்டைவிட்டு வெளியேறிவிட ஆசைப்பட்டு, அதன்படியே சுப்பிரமண்யத்துக்கு ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு, சங்கரன் கிளம்பிவிட்டான்.

பிறருடைய தயவை நாடாமல் பிழைக்க வேண்டும் என்கிற எண்ணம் எழுந்தவுடன், சங்கரனுக்கு ஒரு வேலையும் சுலபத்தில் கிடைத்தது. தென் பிராந்திய ரயில்வேயில் மின்சாரப் பகுதிக்கு அவனைத் தணிக்கையாளனாகப் போட்டார்கள். மாதத்தில் இருபத்தைந்து தினங்கள் ஊர் ஊராகச் சுற்றவேண்டியிருந்தது. பல ஊர்களைப் பார்த்தான். தெற்கே குமரி முனையிலிருந்து சென்னை வரை பல தடவைகள் சுற்றினான். ஆனால், வைத்தீஸ்வரன் கோயில் ரயில் நிலையத்தைப் பார்க்கும்போதெல்லாம் அவன் உள்ளத்திலே சிறு ஆசை ஒன்று எழும். அவன் தாத்தா அந்தப் பண்டாரத்தையா மட்டும் உயிரோடு இருந்தால், அவனுடைய மனிதர் என்று சொல்லிக் கொள்ளலாமல்லவா? ஊருக்குள்ளே சென்று விசாரிக்கப் பல தடவைகள் ஆசைப்பட்டான். அவன் பிறந்தபோதே அவருக்குக் கிட்டத்தட்ட அறுபது பிராயம் இருக்கும் என்று காமாட்சி கூறி இருந்தாள். இப்பொழுது கிட்டத்தட்ட எண்பத்தைந்து வயசு இருக்கலாம். போன இடம் புல் முளைத்துப் போயிருக்கும் என்று நினைத்து, வைத்தீஸ்வரன் கோவிலைத் தாண்டிக்கொண்டு மாயூரம் போய்விட்டான் ஒரு தடவை.

மாயூரம் சந்திப்பில் அவனுடன் வேலை செய்யும் நண்பன் ஒருவன் தன் குடும்பத்

வாலிபத்தில் மறுமலர்ச்சி வேண்டுமா?
தங்க பஸ்பம்
நரம்புத்தளர்ச்சியை நீக்கி, புதுப்பலத்தையும் முறுக்கையும் தந்து, வாழ்க்கையில் இன்பத்தை அளிக்கிறது.
அனுபானத்துடன், ரூ 25-0-0
மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.

துடன் வைத்தீஸ்வரன் கோவிலுக்குப் பிரார்த்தனை செலுத்தக் கிளம்பி, சீர்காழிக்கு வந்திருந்தான். நண்பர்கள் முதலில் உத்தியோக விஷயமாய் பேசிக்கொண்டார்கள். பிறகு குடும்ப விஷயமாகப் பேச்சு ஆரம்பித்தது.

'வாயேன், சுவாமி தரிசனம் செய்துவிட்டு வரலாம்' என்று நண்பன் அழைக்கவே, சங்கரன் தான் பிறந்த ஊரையாவது பார்க்கலாமே என்கிற ஆசையுடன் புறப்பட்டான்.

ஃ ஃ ஃ

அன்று முத்துக்குமாரனுக்குத் தேர் விழா. வைத்தியநாதனும் தையல்நாயகியும் தாங்கள் விசேஷமாக எந்த உற்சவங்களிலும் ஈடுபடாமல், தங்கள் செல்வக் குமாரனுக்குப் பல விழாக்களை ஒதுக்கிவிட்டார்களாம். செல்வக்குமரன் தேரில் அமர்ந்து, பன்னீர் மாலைகள் புரளப் பவனி வந்தான்.

விழாவின் கோலாகலங்களைப் பார்த்துக்கொண்டே, சங்கரன் சன்னிதித் தெருவில் ஒரு பழைய ஓட்டு வீட்டில் சென்று உட்கார்ந்தான். நண்பனின் குழந்தை மிகவும் அழுது தொந்தரவு செய்யவே, அதைச் சிறிது தூங்கப்பண்ண ஏதாவது ஒரு இடத்தைத் தேடிப் பிடிக்கும் நோக்கத்துடன் அந்த அமைதியான சிறு வீட்டை அடைந்தான், சங்கரன்.

வீட்டினுள் யாருமில்லை. கூடத்தில் கிழக்கு முகமாக முருகனின் படம் மாட்டியிருந்தது. குத்துவிளக்கு ஏற்றி வைக்கப்பட்டிருந்தது.

'ஐயா!' என்று குரல் கொடுத்தான் சங்கரன். நண்பனும் அவன் மனைவியும் வாசல் திண்ணையில் உட்கார்ந்திருந்தார்கள். கொல்லைப் பக்கத்திலிருந்து குடலை நிறைய மலர்களை எடுத்துக்கொண்டு, குறுகி, வற்றிப்போன ஒரு கிழவர் கூடத்துக்கு வந்தார். சற்று அவனைக் கூர்ந்து நோக்கிவிட்டு, 'யாரப்பா!' என்று கேட்டார்.

'நாங்கள் அசலூர். சுவாமி தரிசனத்துக்கு வந்தோம்.. குழந்தையைத் தூங்க வைக்கச் சிறிது இடம் வேண்டும்...'

'நிறைய இருக்கிறது. இப்படிப் படுக்க வை அப்பா...'

நண்பரின் மனைவி குழந்தையைக் கொண்டு வந்து கூடத்தில் படுக்க வைத்தாள்.

கிழவர் பூசை செய்ய ஆரம்பித்தார். நண்பனும் அவன் மனைவியும் கோவிலைச் சுற்றப் போய்விட்டார்கள்.

சங்கரன் பக்தியுடன் அவர் பூசை செய்வதைப் பார்த்துக்கொண்டே இருந்தான். பூசை முடிந்ததும் இரண்டு வாழைப் பழங்களையும், பாலையும் கொண்டுவந்து சங்கரனிடம் கொடுத்தார்; அவர். தூங்கும் குழந்தையைச் சிறிது உற்றுப் பார்த்துவிட்டு, கிழவர் தனக்குள் விரக்தியாகச் சிரித்துக்கொண்டார்,

'என்ன தாத்தா சிரிக்கிறீர்கள்?'

'ஒன்றுமில்லை அப்பா. இந்த வீட்டில் இப்படி ஒரு குழந்தை படுத்துத் தூங்கி, எத்தனை காலம் ஆயிற்று!'

'ஏன் தாத்தா, உங்களோடு யார் இருக்கிறார்கள்?' என்று சங்கரன் கேட்டவாறு, வீட்டைச் சுற்றுமுற்றும் பார்த்தான்.

கிழவர் மீண்டும் விரக்தியாகச் சிரித்தார்.

'என்னோடு யார் இருக்கிறார்கள் என்று தானே அப்பா கேட்கிறாய்? யார் இருப்பார்கள்? இம்மையிலும் மறுமையிலும் துணை வரும் புண்ணியம் ஒன்றுதான் என்னோடு இருப்பதாக நினைத்திருக்கிறேன்....'

சங்கரனின் மனம் உருகிப் போயிற்று 'தள்ளாத கிழவர். இன்றோ நாளையோ என்று இருப்பவர். அவரை ஆதரவுடன் காப்பாற்ற யாரும் இல்லையே' என்று எண்ணிப் பெருமூச்செறிந்தான் அவன். ஆனால், அடுத்த விநாடியே அவன் தனக்குள் சிரித்துக்கொண்டான். அவனுக்கு மட்டும் யார் இருக்கிறார்கள்? பெற்றவர்களா, உடன் பிறந்தவரா, சுற்றத்தாரா? யாரும் இல்லை. இன்று இளமையும் வலுவும் இருக்கிறது. உற்சாகமாக இருக்கிறான்.

'என்னைப் பற்றி இருக்கட்டும் அப்பா. நான் உலகில் வாழ்ந்தாயிற்று. நீ எந்த ஊர்ப் பிள்ளை? கல்யாணம் ஆகிவிட்டதா உனக்கு?' என்று கேட்டார் அவர்.

சங்கரன் பளிச்சென்று பதில் சொன்னான்.

'நானும் ஒரு நாடோடிதான் தாத்தா. எனக்கு யாரும் கிடையாது...'

'பொய் சொல்கிறாய்..' என்று சிரித்தார் கிழவர்.

'ஏன் தாத்தா அப்படி நினைக்கிறீர்கள்?...'

வந்தவர்:—"என்னங்க நீங்கி, எப்பொழுது வந்து கேட்டாலும் பணம் இல்லேன்னு சொல்றீங்க! திருப்பிக் கொடுக்கப் போறீங்களா இல்லையா சொல்லிப்பிடுங்க!"

வீட்டுக்காரர்:—"ஸார்! நீங்க புறப்படுகிற நேரம் சரி இல்லீங்க! நீங்க நல்ல நேரமாகப் பார்த்துப் புறப்பட்டு வாங்க! அப்பொழுதான் என்னிடம் பணம் இருக்கும்!"

'நல்ல வேலையில் இருப்பவனாகத் தெரிகிறது. நன்றாகப் படித்திருக்கிறாய். பண்பாடு நிரம்பியவனாக இருக்கிறாய்.. நல்ல சூழ்நிலையில் வளர்ந்தவன் அப்பா நீ...'

'உங்களைப் பற்றிச் சொல்லுங்கள் தாத்தா. அப்புறம்தான் நான் என்னைப் பற்றிக் கூறுவேன்...' என்று பிடிவாதம் பிடித்தான் சங்கரன்.

கிழவர் இரண்டு தடவை 'வைத்திய நாதா' என்று தமக்குள் சொல்லிக்கொண்டார். என்றோ மக்கி, மறைந்துபோன நினைவைத் தோண்டி எடுப்பதுபோல் தம் கண்களை மூடிப் பழைய சம்பவங்களை நினைத்துப் பார்த்துக்கொண்டார்.

அவர் மகள் தையல்நாயகி ஒரு மகனைப் பெற்றுப் போட்டுவிட்டுப் போனதைக் கூறிவிட்டு, அந்தப் பிள்ளை யாரோ ஒரு புண்ணியவானிடம் வளர்ந்து பெரியவனாகி இருக்கலாம்...என்று முடித்தார்.

சங்கரனுக்கு அவர் தன் பாட்டனார் என்பது புரிந்து போயிற்று. நேராகக் கிழவரிடம் தன்னை வெளியிட்டு அதிர்ச்சி ஏற்படுத்துவதைவிட, தன் வரலாற்றைக் கூறிக் கொஞ்சம் கொஞ்சமாக அவர் உலர்ந்து போன இதயத்தில் பாசத்தைப் புகுத்தினான்.

'சுப்பிரமண்யம் என்கிற புண்ணியவானும், காமாட்சி அம்மாளும் அந்தக் குழந்தையை அனாதை ஆக்காமல் காப்பாற்றினார்கள். அவன் வளர்ந்தான். பெரியவனானான். ஆனால், 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்கிற தத்துவத்தை உலகம் புரிந்துகொள்ளவில்லை. அவர்களை விட்டு விலகி, இரண்டு மூன்று வருஷங்களாக அந்தப் பிள்ளை வெளியில் சுற்றுகிறான்...'

கிழவர் பதறவில்லை. 'பேரப்பிள்ளையே' என்று அவனைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு, கண்ணீர் பெருக்கவில்லை.

'அப்பா! நீ தைலம்மாவின் மகனா? நன்றாக இருக்கிறாயா 'அப்பா! உன்னை அவர்கள் வளர்க்க எடுத்துப் போன சில காலம் வரையில் எனக்குத் தகவல் கிடைத்து வந்தது. அப்புறம் நான் அவர்களுக்கு எழுதுவதில்லை.'

'ஏன் எழுதப் போகிறீர்கள் தாத்தா? சனியன் விட்டது என்று இருந்துவிட்டீர்களாக்கும்' என்று சங்கரன் கோபித்துக் கொண்டான்.

'அப்படியில்லை அப்பா. உலக பந்தத்திலிருந்து விடுதலை கிடைத்துவிட்டது. எப்படியோ ஆயுசு கெட்டியாக இருந்தால், வளர்ந்து வருவாய் என்று நம்பி இருந்தேன்...'

'இனிமேல் அப்படி இருக்க உங்களை விடமாட்டேன் தாத்தா. கிளம்புங்கள் என்னோடு. ஊர் பெயர் தெரியாதவன் என்று எனக்குப் பெண் கொடுக்க மறுத்தவர்கள் எதிரில் வந்து நில்லுங்கள்... போதும்...'

பல வருஷங்களாக விலகி இருந்த பாசம், கிழவரைப் பலமாகப் பிடித்துக்கொண்டது. தம் பேரனுடன் பெண் கேட்கப் பண்டாரத்தையா பயணமானார்.

★

கவி உலகில் கம்பன்

ச.து.சு.யோகியார்

மரா மரா மந்திரம் ராம ராம ஈலனை யாகும் வழியைக் கண்டோம். இந்த மரா மராவே மராமரப் படலமாக மாறியது என்றும் கூறினோம். மராமரப் படலம் என்பதை மரா—அமரப்—படலம் எனப் பிரித்து, மரணத்தை மடித்து அமரத்வம் தரும் படலம் என்றும் கொள்ளலாம். இந்த வகையில் மராமராவும் மரா–அமரா என மாதவத்திற்கு ஏற்ற மகிமை பெறுகிறது.

எல்லாம் சரிதான். மராமரா மந்திரத்திற்கும், எங்கோ உள்ள மரங்களுக்கும், அம்மரங்களைப்பற்றிய சம்பவங்களுக்கும் உள்ள சம்பந்தம் என்ன? பார்ப்போம். இதில் சம்பந்தப்பட்டவர்கள் நால்வர்—சுக்ரீவன், வாலி, அனுமான், ராமன்.

சுக்ரீவன் சூர்ய புத்ரன், ஒளியின் மகன்; சுகமான, சுபமான கழுத்தை உடையவன்–அதாவது இனிய சொல்லான். சூர்யன் ஜகத்தின் ஆன்மா, மோட்ச லோகத்தின் வழி–எனவே, சுக்ரீவன் யோக மார்க்கத்தில் நின்று உண்மை காண விரும்புபவன்.

வாலி இந்திரனது புதல்வன், இந்திரிய வலிமையால் செருக்குற்றவன்; போகத்தின் பொக்கிஷம், புலன்களின் வீர்யம், பொறிகளின் வீக்கம்–இத்தனைக்கும் அறிஞன், மாயாவி என்னும் மயக்கத்தை வென்று தன் அறிவால் அகங்கார, மமகாரங்களைக் கூர்மையுறச் செய்தவன். பொதுவாக உடலின் வலிமையே வாலி.

ஹனுமான் வாயு புத்திரன், வாசி மார்க்கம், உயிர்ப்பின் வீறு, யோகத்தின் குரு; சிவாம்சம் எனப்படும் சூரியோன்–அதாவது சிவங்காணும் சீவன் முக்தன்; வாழ்வின் வரம்பு கண்டவன்; பிரம்மச்சர்யத்தால் விளைந்த பிராணசக்தி.

ராமன் பகவதவதாரம்; பாவம் போக்கிப் பவித்திர நெறியைக் காட்ட வந்த பரமாத்மா.

மற்றொரு விஷயம். வாலி மூத்தவன், சுக்ரீவன் இளையவன்; மோஹம் மூத்தது, யோகம் இளையது. போகியாயிருப்பவனே அப்பால் யோகி ஆகிறான். எனவே, போகம் முன்னது, யோகம் பின் வருவதாற் பின்னது.

பிறிதொன்று. இந்திரிய வயப்பட்ட மனம் எவற்றையும் கபளீகரம் செய்துவிடும், நல்லதையும் தன் மயமாய் மூடி நலிந்துவிடும். இதனாலேயே வாலி தன் முன் அகப்பட்டவன் பலத்தில் பாதியைப் பங்கு கொள்ளுவதாக ஐதிகம்.

புலன் பொறி உணர்ச்சியோடுகூடிய போகமாகிய வாலி, யோகத்தின் ஒளியாகிய சுக்ரீவனை ஓட்டிவிடுகிறான். சுக்ரீவனாகிய யோகம், ஹனுமானாகிய பிராண சக்தியோடு ரிஷிஸமுகமான ரிஸ்ய முகத்தில் ஒடுங்கியுள்ளது. அச்சமயத்தில் பக்தருக்கு அருள்புரியும் பகவான், ராம வடிவத்திலே இலக்குவனோடு வருகின்றார். இவ்வரவைக் கண்ட குருவாகிய ஹனுமான், உண்மையை உணருகிறான்; உணர்ந்து,

'துன்பினைத் துடைத்து மாயத்
தொல்வினை தன்னை நீத்து
தென்புலத்து அன்றி மீளா
நெறி உய்க்கும் தேவரோதாம்?'

என, துயரம் தீர்த்துப் பழ வினைப்பாடுகளைப் போக்கி, எமனுலகு செல்லும் உயிரை மீட்டுப் பிறப்பிறப்பற்ற பேரின்பம் தரும் பெருமான்களே இவர் என்று நாடு நினைத்து, நிச்சயங் கொண்டு, சுக்ரீவனிடம்,

செம் கண்வில் கரத்து இராமன் அத்
திரு நெடு மாலே

என்று உபதேசிக்கிறான். உபதேசித்தும் தெளியாத சுக்ரீவனது சந்தேகம் தீரச் சாதனமாக மராமரங்களைச் சுட்டிக் காட்டுகிறான். அம்மராமரங்கள் என்ன? எதைக் குறிக்கின்றன? இதைக் கம்பன் ஒன்பது பாடல்களால் விளங்க வைத்துள்ளான். வான்மீகனது 'பெரியவையாய்க் கிளைத்த' பெரு மரங்கள் அரியவையாய்த் தழைத்த அருமரங்களாய்ப் போகத்திற்கும் போதத்திற்கும் இடையில் ஊடாடும் மனமாக வளர்ந்துள்ளது. எனவே,

'வள்ளல் இந்திரன் மைந்தற்கும்
தம்பிக்கும் வயிர்த்த
உள்ளமே என ஒன்றின் ஒன்று
உள் வயிர்ப்பு உடைய'

என்கிறான் கவி. அதாவது ஒன்றைக் கொன்று விரோதமுற்று வைரங்கொண்ட வாலியாம் போகத்திற்கும் சுக்ரீவனும் போதத்திற்கும் உறைவிடமாய்ச் சஞ்சலமுற்ற உள்ளமே மராமரம். போகத்தில் உழன்று போதத்தையும் நினைந்து, பேதமடைந்து மாறுபட்டு மயங்கும் மனத்தை, யோகத்தில் ஏற்றி உண்மையைக் காட்டத் தெய்வத்தின் திருவருளால்தான் முடியும். ராமன் உண்மையிலேயே தெய்வமானால், மனத்துள்ள மாசுகளைத் துளைத்து மாட்சி தரும் சக்தி அவனுக்கு இருக்க வேண்டும். மனத்தை ஊடுருவக் கூடியவனே வாலியைக் கொல்லக் கூடியவன். இவ்வகையிலேயே கம்பன் இப்பலப் பரீட்சையை இயற்றியுள்ளான்.

இதில் இன்னும் ஒரு விசேஷம். சால விருட்சங்களைக் கம்பன் மாமரங்களாக மாற்றுவானேன்? தமிழில் மா என்னும் ஓரெழுத்தொருமொழி, முப்பதுக்கும் மேலான பொருள்களை உடையது.

'மாவே, பெருமையும், கருமையும்,
சூதமும்,
மேவிய நாற்கால் உடையவும், வண்டும்
பூஉறை திரு என ஆறையும்
பொருந்தும்'
'பொறி மா ஆக்கம், செல்வி, பொன்,
பூமகள்'

'குதிரையும், யானையும், பன்றியும்
மாவே'

என்றெல்லாம் திவாகரமும்,

'மா வண்டு, பெருமை, பிண்டி, வாசி,
கூப்பிடல், வெறுத்தல், காஉறும்
விலங்கு,
செல்வம், கருநிறம், கமலை பத்தாம்'
'வேண்டாமை, உவர்ப்பே மாவே'
'விடப்படாத்திணையே, மர்வே,
வேலிபூ
நிலம் நாற் பெயரே'

எனச் சூடாமணியும் கூறுவது காண்க. மா எனில் அழகு, அறிவு, அளவு, எடை, மாகாணி, உரைகல், கறுப்பு, மை, வர்ணம், மேன்மை, பெருமை, மாவு, இடிமா, அரைமா, பொடி, தூசி, ஒளி, ப்ரபை, வயல், நிலம், செல்வம், கட்டு, திருமகள், கலைமகள், ஞானம், மயக்கம், மையல், மாயம், தாய், உந்திக்கொடி, வண்டு, விலங்கு, குதிரை, பன்றி, யானை, வெறுப்பு, வாசி, மரணம், வலிமை, மிகுதி, அகங்காரம், மமகாரம், மாமரம் யாவும். அநேகமாய் இவையெல்லாம் கம்பனது மராமரத்திற்குப் பொருந்தும். அழகு என்ன அழியும் அழகையும்; வர்ணம், ஒளி, பிரபை என்ன அவற்றின் மால்தரும் திகழ்ச்சிகளையும், அறிவு, ஞானம் என்ன உலகியல் அறிவையும்; அளவு, எடை, மாகாணி, உரைகல் என்ன உலகப் பொருள்களைப் பகுத்துணரும் கூர்மையையும்; வயல், நிலம், செல்வம் என்ன மண்ணாசை, பொன்னாசைகளையும்; மாவு, இடிமா, அரைமா, பொடி, தூசி என்ன உலகப் பொருள்களின் சிதைவையும்; கறுப்பு, மை, மயக்கம், மையல், மாயம் என்ன இவைகளால் மனத்துக்கு ஏற்படும் மயக்கத்தையும்; கட்டு என்ன பந்தத்தையும்; கலைமகள் திருமகள் என்னப் படிப்பையும், பணத்தையும்; வண்டு என்ன ஒன்றை விட்டு ஒன்று பற்றும் சஞ்சலத்தையும்;



விலங்கு, குதிரை, பன்றி, யானை என்ன மிருக உணர்ச்சிகளையும்; தாய் என்ன இவைகளின் மூலமான உள்ளத்தையும்; தாயாம் சக்தியின் அருளால் இவை நீங்கி, ஈசனை உணரும் தன்மையையும்; உந்திக்கொடி என்ன உணவின் இச்சையையும்; வெறுப்பு என்ன விருப்பு வெறுப்புகளையும்; வாசி என்ன மூச்சையும், இவ்வாறு வலிமை பொருந்திய அகங்கார மமகார மதோன்மத்தமாய் மரணத்துக்கேகும் மார்க்கத்தையும் உடைய மனமென்பதையே கம்பன் மாமரமாக்கியுள்ளான்.

உயிருடன் கூடிய உள்ளமாகிய பறவை உடலாகிய விருட்சத்தில் ஊடாடி நின்று உலக போகத்திற்கும் உயர் வானத்திற்கும் இடையே ஊசலாடி உழல்கிறது. உடலாகிய விருட்சத்தினூடே துளைத்துச் சென்று, உச்சம் காண்பவனே ஞானி; இஞ்ஞானம் பெற ஈசனருள் வேண்டும். அவ்வருளே ராம பிரான் மராமரங்களைத் துளைக்கும் கதையாக உருவம் கொள்ளுகிறது. இவ்வுடல் விருட்சத்தை மாமரம் என்பதே பண்டைய தமிழ் ஞானிகளாம் சித்தர்கள் வழக்கம்.

'மாங்காய்ப் பாலுண்டு மலைமேல்
இருப்போர்க்குத்
தேங்காய்ப் பால் ஏதுக்கடி'

என்ற குதம்பைச் சித்தனின் பாட்டு யாவருக்கும் தெரியும். மாங்காய்—உடல், மாங்காய்ப் பால்—உடலில் ஊறிய காமப் பால்; தேங்காய்—தலை, அல்லது மூளை; கோயிலில் தேங்காய் உடைப்பது தம் தலையை, அறிவைக் கடவுளுக்குப் பலி கொடுப்பது என்னும் அர்த்தத்திலேயே தேங்காய்ப் பால்—வெறும் மூளையின் வரட்டறிவு. மலை—கைலாய மலை, தலையின் உச்சம், சிரோமணி என்றும், சிந்தாமணி என்றும் கூறப்படும் ஜீவப்ரஹ்ம ஐக்ய சிவபதம் அல்லது லிங்க ஸ்தானம். மலைமேல்—அந்த ஸ்தானத்தின் மேலுள்ள ஈசன். எனவே, உடற்பாலான காமத்தை உண்டு மலையுச்சி மகேசனுடன் ஒன்றான ஞானிக்கு வெத்து மூளையின் வீண் விவகாரங்கள் எதற்கு என்கிறான் சித்தன்

இந்த வகையில் உடலோடு ஒன்றி உடலேயான உள்ள விருட்சத்தையே மராமரமாகிய மாமரம் என்று உருவகம் செய்கிறான் கம்பன். ராமனது ஈச்வரத்வம் இம்மரத்தைத் துளைப்பதாலேயே ஏற்படுகிறது. இத்தகைய ஈசன், சக்தியைத் தன் தவத்தின்மூலம், மராமர, ராமராம ஜபத்தின்மூலம், வேட்டுவனாகிய விலங்கு நிலை மாறி, வீட்டையடையும் மார்க்கம் கண்ட ஞான விறலின்மூலம் தன்னுள் தானே உணர்ந்தவன் வான்மீகன். எனவே,

'வைதவவின் மராமரம் ஏழ் தொளை
எய்த எய்தவாக்கு எய்திய மாக்கதை
செய்த செய்தவன்'

என்று சிறப்புக் கூறி, வான்மீகனைக் கம்பன் அறிமுகப்படுத்துகிறான்.*

(தொடரும்)

பம்பாய் ஸ்ரீ டி. வி. ராமாநுஜம் குமாரி சௌ சரோஜாவிற்கும், சென்னை அட்வகேட் ஸ்ரீ டி. எஸ் ராகவாச்சாரியார் புத்திரன் சி. சாரநாதனுக்கும் பம்பாயில் சென்ற மே 12-ந் தேதி வெகு விமரிசையாகத் திருமணம் நடைபெற்றது. ஸ்ரீமான்கள் ராஜாஜி, எஸ். கே. பட்டீல், மொரார்ஜி ஆர். தேசாய், ஸ்ரீ பிரகாசா, கே. காமராஜ், பி. வி. ராஜமன்னார் முதலியோர் ஆசிச்செய்திகள் அனுப்பியிருந்தனர். ஸ்ரீமான்கள் ஆர். ஸ்ரீநிவாஸன், அரியக்குடி ராமாநுஜ ஐயங்கார், டி. சதாசிவம், ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலட்சுமி முதலியோர் நேரில் விஜயம் செய்து, வாழ்த்துக் கூறினர்.



என். ஜி. ஒக்கன் கட்டிட நிதிக்காக பொள்ளாச்சி ஸ்ரீ ராஜராஜேஸ்வரி மில் மண்டபத்தில் சமீபத்தில் பாரத் சகோதரிகளான குமாரிகள் ஜயா, உமாவின் பரத நாட்டியக் கச்சேரி சிறப்பாக நடைபெற்றது. பொள்ளாச்சி சப் கலெக்டர் ஸ்ரீ டி. வி அந்தோணி தலைமை தாங்கினார். ஸ்ரீ என் மகாலிங்கம் எம். எல் ஏ கலைஞர்களுக்கு வெள்ளி பூக்கூடைகளைப் பரிசாக வழங்கினார்.

நாராயணீயம்

செங்காலிபுரம் அனந்தராமதீக்ஷிதர்

18-வது தசகம்

10. அரசனுக்கு ஆத்ம ஞானம் உபதேசித்தல் (தொடர்ச்சி)

அங்கு அவர் தவம் செய்த விதம் ஸ்ரீமத் பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது:—

कन्दमूलफलाहार : शुष्कपर्णाशनः
क्वचित्।
अब्भक्षः कतिचित्पक्षान् वायु
भक्षस्तत : परम् ॥
4-23-5

ग्रीष्मे पञ्चतपा वीरो वर्षास्वा-
सारषाण्मुनि :।
आकण्ठमग्नः शिशिर उदके
स्थण्डिलेशयः ॥
4-23-6

तितिक्षुर्यतवाग्दान्त ऊर्ध्वरेता
जितानिलः।
आरिराधयिषुः कृष्णमचरत्तप
उत्तमम् ॥
4-23-7

கந்தமூல பலாஹார: சுஷ்கபர்ணாசன:
க்வசித்
அப்பக்ஷ: கதிசித்பக்ஷான்
வாயுபக்ஷஸ்தத: பரம்
க்ரீஷ்மே பஞ்சதபா வீரோ
வர்ஷாஸ்வாஸாரஷாண் முனி:
ஆகண்ட மக்ன: சிசிர உதகே
ஸ்தண்டிலே சய:
திதிக்ஷுர்யதவாக்தாந்த
ஊர்த்வரேதா ஜிதாநில:
ஆரிராதயிஷு: க்ருஷ்ணமசரத்தப—
உத்தமம்

கிழங்கு, வேர், ஜலம் இவற்றை உட்கொண்டும், சில சமயம் சருகுகளை ஆகாரமாகக்கொண்டும், ஜலத்தை உட்கொண்டு சில காலமும், பிறகு காற்றையே ஆகாரமாகக் கொண்டும் தவம் செய்தார். கோடையில் மேலே சூர்யன், நாற்புறமும் நெருப்பு, ஆக ஐந்து அக்னிகளுக்கு இடையிலும், மழை காலத்தில் மழை தாரையாகப் பெய்யும்பொழுது அதில் இருந்து கொண்டும், குளிர் காலத்தில் கழுத்துவரை உள்ள நீரில் இருந்து கொண்டும், இவ்வாறு சீதோஷ்ணங்களைப் பொறுத்தவராய் வாக்கையும், புலன்களையும் அடக்கி, ப்ராணாயாமத்தோடு தவம் மேற்கொண்டார். இத்தகைய கடுந்தவத்தோடு, ஸனகாதிகள் கூறிய ஆத்யாத்மிக யோக முறைப்படி ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவைப் பஜித்தார். சில காலம் இவ்வாறு தவத்துடன் பகவானை நன்கு ஆராதித்து, சித்தி பெற்று பரமாத்மாவினிடம் ஜீவாத்மாவைக் கலக்கச் செய்து, பகவத் ஸாயுஜ்யம் பெற்றுத் தன் பூதவுடலை விட்டார். இதை ஸ்ரீமத் பாகவதத்தில்,

एवं स वीरप्रवरः संयोज्यात्मान
मात्मनि।
ब्रह्मभूतो दृढं काले तत्याज स्वं
कलेवरम् ॥
4-23-13

ஏவம் ஸ வீரப்ரவர: ஸம்யோ
ஜ்யாத்மானமாத்மனி
ப்ரஹ்மபூதோ த்ருடம் காலே தத்யா
ஜஸ்வம் கலேவரம்

என்ற ச்லோகத்தால் கூறியிருக்கிறது.

அர்சிஸ் என்ற ப்ருது மஹாராஜனின் பத்னியும் அதுவரை கூட இருந்து, ரிஷி பத்னிகளைப்போலவே தவ வாழ்க்கை மேற்கொண்டு சிச்ருஷை செய்து வந்தாள். அவ்வாழ்க்கையில் உள்ள ப்ரயாஸையால் மனத்தளர்வோ, துயரமோ அடையவில்லை. கணவனுக்குப் பணிவிடை செய்வதால் எல்லையற்ற ஆனந்தத்தை அடைந்தாள். அந்த உத்தம பத்னியான அர்சிஸ் என்னும் தேவி, கணவன் ப்ரம்ம ஸாயுஜ்யம் பெற்று உடலை நீத்ததும், சற்று புலம்பிய பின்னர், மலையின் தாழ் வரையில் சிதையை அடுக்கி, அதில் தன் பதியின் உடலை ஏற்றினாள். செய்ய வேண்டிய கர்மாக்களைச் செய்து, ஜலதர்ப்பணம் கொடுத்து, தேவர்களை நமஸ்கரித்து சிதையை மும்முறை வலம் வந்து, தன் பர்த்தாவின் பாதங்களை த்யானித்தவளாய், அதே அக்னியில் உடன்கட்டை ஏறினாள். இதைக் கூறும் ஸ்ரீமத் பாகவத ச்லோகம் வருமாறு:—

नत्वा दिविस्थांस्त्रिदशांस्त्रिः परीत्य
विवेश वह्निं ध्यायती भर्तृपादौ ॥
4-23-22

நத்வா திவிஸ்த்தாம்ஸ்த்ரித
சாம்ஸ்த்ரி:
பரீத்ய விவேச வன்ஹிம்
த்யாயதீபர்த்ருபாதௌ

இவ்வாறு வீர ச்ரேஷ்டனான தனது பர்த்தாவை மறு உலகிலும் நீங்காது பின் தொடர்ந்த இந்த உத்தமியை, ஆயிரக்கணக்கான தேவர்கள் தங்கள் பத்னிமார்களுடன் வந்து, கண்டு, கொண்டாடி, பூமாரி பொழிந்தனர். தேவ வாத்யங்களை முழக்கினர். பிறகு, ஒருவர்க்கொருவர் பேசத் தொடங்கி, 'யஜ்ஞேசனான நாராயணனை ஸ்ரீ தேவி என்ற பத்னி எவ்வகையிலும் தொடர்ந்து பற்றியிருப்பதுபோல ப்ருதுவாகிய தன் கணவனைப் பின் தொடர்ந்த இந்த அர்சிஸ் தேவியே பாக்யசாலி. வெகு ப்ரயாஸையால் கிடைக்கும் மனிதப் பிறவியைப் பெற்று, நிஷ்காம்யமான பகவத் பக்தியைச் செய்து, பகவானை அடைய முயலாமல், விஷய சுகங்களில் ஈடுபட்டுத் தங்கள் ஆத்மாவுக்குத் தாங்களே கேடு தேடுபவர்கள் உண்மையில் ஏமாந்தவர்கள்' என்று சொன்னார்கள்.

இவ்வாறு தேவர்கள் கூடிப் பேசிக் கொண்டிருக்கையிலேயே, ப்ருது அடைந்த உத்தம லோகத்தையே ப்ருது பத்னியும் அடைந்தாள்.

இவ்வாறு ஸ்ரீமத் பாகவதத்தில் ப்ருது மஹாராஜன் தபோவனம் சென்று மோக்ஷமடைந்த வரலாற்றை விஸ்தாரமாகக் கூறியிருப்பதை ஸ்ரீ நம்பூதிரி

स्वात्मानं स्वयमगमः वनान्तसेवी ।

(ஸ்வாத்மானம் ஸ்வயமகம:
வனாந்தஸேவீ)

என்று ஒரு அடியால் சுருக்கிக் கூறியிருக்கிறார்.

(ப்ருது சரித்திரம் முற்றிற்று)

19-வது தசகம் முகவுரை

மஹா புண்ய புருஷரான மனுவம்சத்தை ஸ்ரீ சுகர் பரீக்ஷித்துக்குக் கூறியிருக்கிறார். அந்த மனு வம்சத்தில் பரம பக்தனான த்ருவனின் சரித்திரம் கூறப் பட்டது. அந்த த்ருவனின் வம்சத்தில் பிறந்த மஹா பாகவதனான ப்ருது சக்ரவர்த்தியின் சரித்திரத்தையும், அரசனுக்கு ஸனகாதிகள் உபதேசித்ததையும், அரசன் மோக்ஷமடைந்ததையும் ஸ்ரீசுகர் வர்ணித்திருக்கிறார். அதன் சாரமாகிய ப்ருது சரித்திரத்தை முன் தசகத்தில் ஸ்ரீ நாராயண நம்பூதிரி வெகு அழகாய் வர்ணித்திருக்கிறார். இனி அந்தப் புண்ய புருஷனான ப்ருதுவின் வம்சத்திலுதித்த பிராசீன பர்ஹிஸ் முதலியவர்களின் சரித்திரத்தைப் பக்தர்கள் அனுபவிக்க வேண்டி இப்பத்தொன்பதாவது தசகத்தை ஆரம்பிக்கிறார்.

ஸ்ரீ நாராயண நம்பூதிரி பாகவதத்தின் சாரத்தைச் சுருக்கமாகக் கூற முற்படினும் புண்ய புருஷர்களான ஒவ்வொருவரின் பெயரையும் விடாது சொன்னது படிப்போருக்கு மஹத்தான புண்யம் கிட்ட வேண்டியேயாகும். நமது மதத்தில் படித்தாலும், கேட்டாலும், நினைத்தாலும் புண்யம் உண்டாகும் என்ற உண்மை கூறப்பட்டிருக்கிறது. இதனாலேயே ஸ்ரீசுகர் அரசனுக்கு ஏழு நாட்களில் பாகவதத்தைச் சொன்னபோதிலும் புண்யசாலியான ஒவ்வொரு அரசனின் பெயரையும் விடாமல் கூறியிருக்கிறார்.

முதலில் வேதத்தில் சொல்லிய காம்ய கர்மங்கள் யாவையும் முறையே செய்த பிராசீன பர்ஹிஸ்ஸின் சரித்திரத்தையும், அவனுடைய புத்திரர்களான பிரசேதஸ் என்ற பத்து பேர்களின் சரித்திரத்தையும், அவர்கள் தவம் செய்ததையும், அவர்களுக்கு ஸ்ரீ பரமசிவன் தரிசனமளித்து உபதேசித்த ஸ்தோத்திரத்தையும், அவர்களுடைய புத்திரனான தக்ஷனின் சரித்திரத்தையும் ஸாரமாய் இந்த தசகத்தில் ஸ்ரீ நம்பூதிரி வர்ணிக்கப் போகிறார்.

இக்கதைகள் யாவும் ஸ்ரீமத் பாகவதத்தில் நான்காவது ஸ்கந்தம் முடிய வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

பிராசீன பர்ஹிஸ் என்ற அரசனின் கதை

ச்லோகம் 1.

पृ. नप्ता पृथु धर्म कर्मठः
प्राचीनबर्हिर्युवतौ शतद्रुतौ ।
प्रचेतसो नाम सुचेतसस्सुतान्
अजीजन त्वत्करूणाङ्कुरानिव ॥

ப்ருதோஸ்து நப்தா ப்ருது தர்ம
கர்மட:
ப்ராசீன பர்ஹிர் யுவதௌ
சத த்ருதௌ
ப்ரசேதஸோ நாம
ஸுசேதஸஸ்ஸுதான்
அஜீஜனத் த்வத் கருணாங்குரானிவ

பதவுரை:—ப்ருது தர்ம கர்மட:-ப்ருதுவினுடைய தர்மத்தைக் கையாண்டவரும் வைதிக கர்மாக்களை விடாது அனுஷ்டித்தவரும், ப்ருதோ:-ப்ருது சக்ரவர்த்தியினுடைய, நப்தா-பேரனின் பிள்ளையுமான, ப்ராசீன பர்ஹி:-ப்ராசீன பர்ஹிஸ் என்ற அரசன், யுவதௌ-யுவதியான, சத த்ருதௌ-சத த்ருதி என்றவளிடத்தில், த்வத் கருணாங்குரானிவ-தங்கள் கருணையின் முளைகள்போல. ஸுசேதஸ:-நல்லபுத்தி படைத்தவர்களான, ப்ரசேதஸோ நாம-ப்ரசேதஸ் என்ற பெயருள்ள, ஸுதான்-புத்திரர்களை, அஜீஜனத்-உண்டு பண்ணினன்.

கருத்துரை:—'ஓ குருவாயூரப்பா, ப்ருது என்ற அரசனின் பேரனுடைய பிள்ளை ப்ராசீன பர்ஹிஸ், அவன் ப்ருதுவைப்போல் தர்மங்களைச் செய்தான். வைதிக கர்மாக்களையும் அனுஷ்டித்து வந்தான். தன் மனைவியான சதத்ருதி என்பவளிடத்தில் நல்ல மனமுடைய பத்து புத்திரர்களை தங்களுடைய கருணையின் முளைகள்போல் பெற்றானே' என்று ஸ்ரீ நம்பூதிரி கேட்க, ஸ்ரீ குருவாயூரப்பனும் தலையசைத்து, 'ஆம்' என்று சொல்லி அங்கீகாரம் செய்தாராம்.

விளக்கவுரை:—ப்ராசீன பர்ஹிஸ் என்ற அரசன் ப்ருதுவினுடைய பேரனின் பிள்ளை. அதாவது ப்ருதுவின் பிள்ளை விஜிதாச்வன். விஜிதாச்வனின் பிள்ளை ஹவிர்தானன். ஹவிர்தானனின் பிள்ளை பர்ஹிஷ்மத். இவனையே ப்ராசீன பர்ஹிஸ் என்றும் சொல்லுவார்கள். உலகம் முழுவதும் கிழக்கு நுனியாகத் தர்ப்பங்களைப் பரப்பி யாகம் செய்ததால், இவனுக்கு இப்பெயர் ஏற்படலாயிற்று. அதாவது ப்ராசீன-கிழக்குமுகமான. பர்ஹிஸ்-தர்ப்பங்களை உடையவன் என்பது பொருள்.

வம்சத்தில் உள்ள முன்னோர்கள் நம்பிக்கையுடன் தர்மத்தை அனுஷ்டித்திருந்தால்தான் பின்வரும் ஸந்ததியினரும் அம்மாதிரி தர்மத்தை அனுஷ்டிப்பார்கள். அதைக் காட்டவே ப்ருதுவைப் போல அவனுடைய கொள்ளுப் பேரனை ப்ராசீன பர்ஹிஸ் ப்ராசீன தர்மங்களையும், கர்மாக்களையும் அனுஷ்டித்ததாக

पृथु धर्मकर्मठः (ப்ருது கர்மட:)

என்று கூறப்பட்டிருக்கிறது.

(தொடரும்)

★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஸ்ரீ குருவாயூரப்பன் மஹிமை

கலியுகத்தில் ப்ரத்யக்ஷ தெய்வமாக விளங்கி வரும் குருவாயூரப்பன், இன்னும் பல அற்புதங்கள் நிகழும்படிச் செய்து வருகிறார். அதற்கு உதாரணமாக சமீபத்தில்கூட ஓர் சம்பவம் நிகழ்ந்தது.

சமீபத்தில் கிருஷ்ணையர் என்ற பக்தர் ஒருவர் தன் ஸம்ஸாரத்துடன் நிர்மால்ய தர்சனத்திற்காகக் குருவாயூர் சென்றிருந்தார். அங்கு விடியற்காலை 3 மணிக்குக் குளத்தில் ஸ்னானம் பண்ணினார். பண்ணிவிட்டு, குளத்தின் படியில் ஏறும்போது அங்கு ஒரு தங்கக் காசு மாலை காணப் பட்டது. அருகில் யாரும் இல்லாததால் 'காசு மாலை யாருடையது?' என்று விசாரித்து அறிந்துகொள்ளவும் முடியவில்லை. அதனால் 'சூரிய உதயத்திற்குப் பிறகு 'யாருடையது' என்று அறிந்து கொடுத்துவிடலாம்' என்று எண்ணி, அதை எடுத்துக்கொண்டு வந்து தமது பெட்டியில் வைத்துக்கொண்டார். சிறிது நேரத்துக்கெல்லாம் அவரது தலையில் கனமும், கிறுகிறுப்பும், ப்ரக்ஞையின்மையும் ஏற்படலாயிற்று. என்னமோ போல் அவர் இருப்பதைப் பார்த்து அவருடைய ஸம்ஸாரம் அவரைக் காரணம் விசாரித்தார். அதற்கு அவர் தனக்கும் ஒன்றுமே புரியவில்லை என்று கூறவே, அவர் ஸம்சாரம், 'அந்தக் காசு மாலையை அதற்கு உரியவரிடம் கொண்டு சேர்த்து விடுங்களேன்' என்று சொன்னார். அவரும் 'இப்பொழுது எப்படி சேர்ப்பது? உதயமானவுடன் தேவஸ்தான ஆபீஸில் கொடுத்து, அதற்குரியவரிடம் சேர்த்து விடலாம்' என்று சொன்னார். அவ்விதமே உதயமானவுடன் தேவஸ்தான ஆபீஸரிடம் அக்காசு மாலையைக் கொடுத்து, கிடைத்த விதத்தையும் கூறினார். ஆபீஸரிடம் கொடுத்ததுமே, அவரது தலை கனம், கிறுகிறுப்பு, நிலை தவறுதல் முதலியன நீங்கி, பழையபடி நன்றாகப் பேச ஆரம்பித்தார். பிறகு ஸ்வாமி தரிசனம் செய்தார்.

இவ்வாறு, காசு மாலையைக் கெட்டுப் போக்கினவரும் தனது பக்தராதலால், அவரது மனக் கவலையை நீக்கும் பொருட்டு, கிருஷ்ணையர் என்ற இந்தப் பக்தருக்குத் தலைகனம் முதலியவற்றை ஏற்படுத்தி, பிறகு நீக்கி, இரு பக்தர்களுக்கும் ஸந்தோஷத்தை உண்டாக்கினார். இதிலிருந்து 'பகவானை நம்பினவர்கள் கைவிடப்படுவதில்லை' என்பதை ப்ரத்யக்ஷமாகவே இக்கலியிலும் செய்து காட்டுகின்ற குருவாயூரப்பனின் மகிமையை ஆஸ்திகர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஆம்-உலகத்தின் கண்ணே தாசே மீனு, என் மனைவியல்லதான்! ஆனால், எங்கள் உள்ளமும் உயிரும் ஊடுருவி ஒன்றிப் போனதை யாரறிவர்? பாவம்... சற்றுத் தாமதித்து விட்டாள்... பயன்?... வேறு ருத்தி முந்திக்கொண்டு அவள் இருக்க வேண்டிய பீடத்தில் அமர்ந்து விட்டாள்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு மணமாகவில்லை. என் தங்கைக்கு இருபது வயதுக்கு மேலாகியும் அப்போது கலியாணமாகாமலிருந்தது. அதைச் செய்து வைத்த பின்தான் நான் மணம் செய்துகொள்வதென்று இருந்தேன். அவள் கல்யாணம் செவ்வனே நடந்தேறிவிட்டது. எனக்கு எவ்வளவோ ஜாதகங்கள் வந்து குவியலாயின. அவைகளில் எனக்கென வரவேண்டியவளுக்காக நான் அமைத்துக்கொண்ட லட்சண- லட்சியங்கள் நிறைந்தவை ஒன்றிரண்டு வந்தும், என் ஜாதகத்துக்குப் பொருந்தவில்லை என்ற காரணத்தால், நிராகரிக்கும்படியாகி விட்டது. எனக்கு ஜாதகங்களில் ஓரளவு நம்பிக்கையும், பெரியவர்கள் நல்லதெனச் சொல்லும் வார்த்தைகளுக்குக் கட்டுப்படும் தன்மையும் உண்டு. எனக்குப் பொருத்தமான ஜாதகம் கிடைப்பதே துர்லபமாகி விட்டது. ஏதோ தோஷமுள்ளது என் ஜாதகம் என்றும் அதற்குத் தகுந்தாற்போல்தான் சேர்க்க வேண்டுமென்றும் ஜோஸ்யர்கள் சொன்னார்கள். அப்படியே ஏதேனும் ஒன்றிரண்டு சரியாக இருந்தால், அவை நான் எதிர்பார்த்த அளவுக்குத் திருப்தியளிக்கும் வகையில் அமையவில்லை. எனக்கோ வயது முப்பதை எட்டிப் பிடித்துக்கொண்டிருந்தது. இத்தகைய சூழ்நிலையில் என் உறவினர்களும், பெரியவர்களும் ஜாதகம் பொருந்திய ஒரு இடத்தைச் சிபாரிசு செய்தார்கள். கடைசியில் நம் லட்சியப்படி ஒன்றுமிருக்காது போனும், கடவுள் விட்டபடி விடட்டும் என்று என் சம்மதத்தைத் தெரிவித்து விட்டேன்.

என் கல்யாணம் முடிந்ததும், என் இலக்கிய ரசிகை ஆனந்தா என்னை விசாரித்தாள். அவள் என் கல்யாணத்துக்கு வரவில்லை.

'எழுத்தாளரே! உங்கள் கதைகளில் பிரமாதமாக உமது வருங்கால மனைவியைப் பற்றியெல்லாம் வருணித்திருந்தீர்களே! அதைப்போலவே வந்திருக்கிறாளா? நிறையப் படித்திருக்கிறாளா? குறிப்பறிந்து நடக்கும் நிறைந்த புத்திசாலியா? கலா ரசிகையாக இருக்கிறாளா? அழகு, பாட்டு எல்லாம் அபாரமாக இருக்கிறதா? என்ன? எத்தனை மார்க்கு கொடுக்கலாம் சொல்லுங்கள்' என்று கேட்டாள்.

'ஆனந்தா... ஏழைகளின் வாழ்வை வருணிக்கும் எழுத்தாளன், கஞ்சியைக் குடித்துக்கொண்டு குடிசையில் வசிப்பதில்லை. காலேஜ் காதலைப்பற்றி எழுதுபவனெல்லாம் காரிலே போய்க்கொண்டிருப்பதில்லை. கற்பனையில்தான் உல்லாசபுரியிலே உலவ முடியுமே தவிர, அவனது தனிப்பட்ட வாழ்க்கையில் எல்லாம் நீ நினைப்பதுபோல் அப்படி இல்லை. என் மனைவி சுலோசனா ஒரு சாதாரணப் பெண். நல்லவள். என்மீது அன்புமிகுந்தவள். படிப்பு, பாட்டு, அழகு, புத்திசாலித்தனம் எல்லாவற்றிற்குமாக 'பாஸ் மார்க்'குக்குமேல் ஐந்து அதிகமாகக் கொடுக்கலாம். நான் மட்டும் என்ன அப்படி அழகனா?' என்றேன்.

'அதற்கில்லை...பொதுவாகப் பெண்ணுக்கு அழகும், குணமும், ஆணுக்கு அறிவும், ஆண்மையும்தான் முதலில் முக்கியமென்று சொல்வார்கள். எழுத்தாளரான உங்களுக்குத்தான் அறிவிலும், விரலிலும் சரஸ்வதி கடாட்சம் தாண்டவமாடுகிறதே! நல்ல பண்பும், குணமும் உடையவர்... அது போதாதா?' என்று என்னை மடக்கினாள்.

என் மனைவி என் வீட்டுக்கு வந்து சேர்ந்து ஆறு மாதங்களாகி விட்டன. குழம்பிக்கொண்டிருந்த என் மனக்குட்டை ஒருவிதமாகத் தெளிந்து, நிம்மதியாக நிச்சலனமாக இருந்துகொண்டிருந்தது. சுலோசனாவும் என் பயிற்சியில் என்னைப் புரிந்துகொண்டு எனக்குத் தகுந்தபடி என் நோக்கமறிந்து நடந்து கொண்டாள்.

அன்று வெள்ளிக்கிழமை. வெகுநாளாய்ப் பூட்டிக் கிடந்த என் எதிர் வீட்டிலிருந்து, மாலை நேரத்துக்குப் பொருத்தமான பூரிகல்யாணி ராகத்தில் தம்பூரா சுருதியுடன் இணைந்து 'மீனாக்ஷி- மே முதம் தேஹி...' என்ற தீக்ஷிதர் சாஹித்தியம் பாடும் இனிய பெண் குரல் என்னை வெகுவாகக் கவர்ந்தது. 'மீனலோசனி... பாசமோசனி...' என்ற அடியை எவ்வளவு உருக்கமாகத்தான் பாடுகிறாள்? குரலில் தேனையும், தேவாமிருதத்தையுமல்லவா குழைத்து வைத்திருக்கிறாள்? மெய்மறந்து இசையையும் இசைப் பொருளையும் ரசித்துக் கொண்டிருந்தேன். பாட்டு முடிந்து சற்று நேரத்துக்கெல்லாம் மீனாக்ஷி அம்மனே உருப்பெற்று வந்தது போல், வாசலில் வந்து நின்றாள் ஒரு யுவதி. அவள் அவயவங்களில் அழகு

என்பது அணு அணுவாய் விகசித்தது. உரமிட்டு வளம்பெற்ற உதகமண்டலத்துத் தக்காளியின் ஊட்டமும், மினுமினுப்பும் அவள் உடலில் பொலிந்தன.

என் மனைவி அப்போது என் பக்கத்தில் வந்து, 'பாட்டைக் கேட்டீர்களா? எவ்வளவு நன்றாய்ப் பாடுகிறாள்? இன்று காலையில்தான் குடி வந்தார்கள். நல்ல பெண்ணாக இருக்கிறாள். மீனலோசனி என்று பெயராம். காலேஜில் வாசிக்கிறாளாம். அவள் அப்பா வடக்கே எங்கேயோ வேலையாக இருக்கிறாராம். அம்மாவும், பெண்ணும் மட்டும்தான். அவள் படிப்பு, கல்யாணம் எல்லாவற்றையும் உத்தேசித்து, இங்கு ஜாகை வந்திருக்கிறார்களாம்...' என்று அதற்குள் அவளைப் பற்றிய விவரங்களைச் சாங்கோபாங்கமாகச் சொல்லி விட்டாள்.

மீனா அடிக்கடி என் வீட்டிற்கு வந்து என் மனைவியோடு பழகினாள். இலக்கிய ரசிகை என்ற முறையில் என்னிடமும் என் கதைகளைப்பற்றி விமரிசனம் செய்வாள். அவளைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு ஒரு பெருமூச்சு வரும். என் கற்பனையிலே உலவிய என் லட்சியப் பெண் —சகல அம்சங்களும் பொருந்தி ஒருவிதக் குறையும் காணமுடியாத உன்னத லட்சியப் பெண்— கிடைத்து விட்டாள். நிம்மதி பெற்றிருந்த என் மனக் குளத்திலே கல்லைப் போட்டு விட்டாள். சலனம் ஏற்பட்டது ஓயவே இல்லை.

திருஷ்டி பட்டு விடும், பிரும்மனின் உன்னத சிருஷ்டியவள். பார்த்தால் மீண்டும் பார்க்கத் தூண்டும் தூண்டில் விழிகள். அவள் நோக்கிலே ஏதோ ஒரு பரிவும், பாசமும் பொங்கிப் பெருகியது. கயல் விழிகளிலே கனிவும், காதலும் களிநடம் புரிந்தன. அவளைக் காணும் போதெல்லாம் என் உடல் புல்லரித்தது. உள்ளம் மகிழ்ந்தது, உவகை பூத்தது, உணர்ச்சி மேலிட்டது. அவள் பழகும் பாணியிலே பண்பும், பணிவும், பதவிசும் இருந்தன. அவளுக்கென அமைந்த அற்புத அழகு, அறிவு, அன்பு,அடக்கம், அந்தஸ்து அனைத்தாலும் என்னை அடிமையாக்கி ஆட்கொண்டு விட்டாள்.

'இவளல்லவோ என் மனைவியாயிருக்கத் தகுந்தவள்! நான் இவ்வளவு நாட்கள் தேடியும் கிடைக்காதவள், எனக்கு மணமாகி ஆறு மாதத்திற்குப் பிறகா கிடைக்க வேண்டும்? 'விவாக இணைப்புகள் சுவர்க்கத்தில் கடவுளால் செய்யப்படுகின்றன' என்கிறார்களே... அப்படி இருக்க, இந்தக் கடவுள் ஏன் இப்படி எனக்குப் பொருத்தமானவளை விட்டுவிட்டு, வேறொருத்தியை மனைவியாக்க வேண்டும்? கடவுள் என் விஷயத்தில் செய்த மாபெரும் தவறு இது... ஏன்? 'முட்டாள் தனம்' என்றுகூடச் சொல்லுவேன்...'

மீனாவைப் பற்றி அடிக்கடி நான் எண்ணுவதே தவறு; என் மனைவிக்குத் துரோகம், என் மனச்சாட்சிக்கும் விரோதம் என்பது தெரியும். இருந்தும் என் செய்வது? மீனாவை நான் என் மானசீக மனைவியாய் வரித்து விட்டேனே!

என் மனைவி சுலோசனா என்னைப் பார்த்து, என் நடவடிக்கைகளில் மாறுதலைப் பார்த்து, என் மனம் சலனமடைந்திருப்பதைப் புரிந்துகொண்டு, அன்றொரு நாள் வெகு பயத்துடனும், சங்கோசத்துடனும், விநயமாகவும், நாசூக்காகவும் கேட்டாள்.

'மீனா அழகாக இருக்கிறாளல்லவா? நீங்கள் கதையில் வருணிப்பீர்களே... அதேபோல் உங்களுக்கேற்ற லட்சியப் பெண் இல்லையா...?' என்று என்னை ஆழம் பார்த்தாள். அவள் பொறுமையையும், பண்பையும் என்னால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. 'சே...நீ என் பட்ட மகிஷி இருக்கும்போது, இன்னொருத்தி வர முடியுமா? தற்போதைய சட்டம்தான் இடம் கொடுக்குமா?' என்று சொல்லும் போது, இரண்டாவது வாக்கியம் என்னையறியாமல் வெளிவந்து என் உள்ளத்தைச் சுட்டிக் காட்டிக் கொடுத்து விட்டது அவளுக்கு. என் பேச்சில் தொனித்த சூட்சுமத்தை அவள் புரிந்துகொண்டதாக அவள் முகம் காட்டியது.

மீனாவின் தாயார் ஒருநாள் அவள் ஜாதகத்தை என்னிடம் கொடுத்து, என் காரியாலயத்தில் வேலை பார்க்கும் கலியாணமாகாத பையன்களின் ஜாதகங்களை வாங்கித் தரும்படிக் கேட்டிருந்தாள். மீனாவுக்கு நான் வரன் பார்த்துக் கலியாணம் செய்து வைப்பதா? எனக்கே உரித்தானவள்— மாற்றானின் மனைவியாவதை என் மனம் சகிக்குமா? அவள் எங்கு சென்றாலும், என் வாழ்வில் அசைக்க முடியாத இடமல்லவோ பெற்றுவிட்டாள்! அன்று வேறு இரு பையன்களின் ஜாதகங்களை அவள் ஜாதகத்துடன் காட்டிப் பொருத்தம் பார்ப்பதுபோல், என் ஜாதகத்தையும் சேர்த்து நீட்டினேன்—முன்பின் தெரியாத ஒரு ஜோஸ்யரிடம்.

ஜோஸ்யர், 'இந்தப் பெண்ணுக்கு இன்னும் ஆறு மாதம் கழித்துக் கல்யாணம் பண்ணினால்தான் நல்லது. இந்த ஜாதகத்தோடு பொருந்துகிறது' என்று என் ஜாதகத்தைக் குறிப்பிட்டார். எனக்கு எப்படி இருக்கும்? இது மீனாவின்மீது எனக்கிருந்த ஆசையையும் அன்பையும் இன்னம் அதிகரித்தது.

என் மனைவி சுலோசனா அப்போது ஊருக்குப் போயிருந்தாள். மீனாவை ஓரிரு சந்தர்ப்பங்களில் நான் என் வீட்டில் தனித்துச் சந்திக்க நேர்ந்தது. ஜோஸ்யர் சொன்ன பொருத்தம் முதற்கொண்டு என் மனதில் உள்ளவைகளையெல்லாம் ஒளிவு மறைவின்றி அவளிடம் சொல்லி விட்டேன். அவள் பண்பும், ஒழுக்கமும் நிறைந்த பெண்ணல்லவா? ஒரே சொல்லில் ரத்தினச் சுருக்கமாக அவள் பதிலைச் சொல்லி விட்டாள்.

'உங்கள் உள்ளத்தையும், உணர்ச்சியையும், அன்பையும் நான் நன்கு அறிவேன். உங்களையடைய இந்தப் பிறவியில் எனக்குப் பாக்கியமில்லை...' என்று சொல்லி விட்டுப் போய்விட்டாள்.

ஊரிலிருந்து சுலோ எனக்குக் கடிதம் எழுதியிருந்தாள். தன் அன்பைக் கொட்டி அவள் எழுதிய கடிதம் அது. அத்துடன் அவளுக்கு உடல்நலம் சரியில்லை என்றும் ஒரு வாரம் லீவில் தன்னை வந்து பார்த்துவிட்டுப் போகும்படியும், மீனாவை விசாரித்ததாகச் சொல்லவும் என்றும் அந்தக் கடிதத்தில் கண்டிருந்தது.

நான் ஒரு வார லீவில் ஊருக்குப் போயிருந்தேன். சுலோவுக்கு 'ப்ளூ' ஜுரம் கண்டு, அன்று அவளுக்குச் சற்று அதிகமாகவே இருந்தது. தூக்கத்தில் பிதற்றினாள். நான் பக்கத்திலேயே இருந்தேன். திடீரென்று எழுந்து உட்கார்ந்து, 'நான் பிழைப்பேனா? எனக்கு என்னமோ வேதனை செய்கிறதே... நான் செத்துப் போனால், நீங்கள் கட்டாயம் மீனாவைக் கல்யாணம் செய்துகொண்டு சௌக்கியமாக இருங்கள்... என்ன?... மீனாவைக் கல்யாணம் செய்து கொள்ளுவதாகச் சத்தியம் செய்து கொடுங்கள்... மீனா...நல்ல பெண்... புத்திசாலி... உங்களுக்கு சகல விதத்திலும் ஏற்றவள்... உங்களிருவருக்கும் பெண் குழந்தை பிறந்தால், என் பெயரை ஞாபகமாக வையுங்கள்' என்று வேண்டினாள்.

எனக்குப் 'பகீ' ரென்றது. ஜன்னியில் பிதற்றுகிறாளா, திடீரென்று சித்தசுவாதீனமில்லாமல் மூளை கலங்கிப் போய் விட்டதா என்று ஒன்றுமே புரியவில்லை.

'சே... அசடு... உனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை, கவலைப் படாதே... பயப் படாதே... அனாவசியமாய் மனதில் எதையோ ஏற்றிக்கொண்டு ஜுரத்தை வரவழைத்துக் கொண்டு, அவஸ்தைப்படுகிறாய்... நிம்மதியாய்த் தூங்கு... ஒன்றுமில்லை... தைரியமாய் இரு... நான் உன் பக்கத்திலேயே இருக்கிறேன்...' என்று சமாதானம் சொல்லி, அவள் தலையைத் தடவிக் கொடுத்துத் தூங்கச் செய்தேன்.

சுலோவைக் கவனிப்பதற்காக அதிகப்படி மூன்று நாள் லீவுக்கு எழுதியிருந்தேன். லீவு முடிந்து ஊருக்குக் கிளம்பினேன். சுலோசனாவுக்கு உடம்பு அன்று நன்றாய்க் குணமாகி இருந்தது. மனதில் ஏதோ என்னைப்பற்றி நினைத்துக் கொண்டதன் விபரீத விளைவுதான் அவளுக்கு ஜுரமாக வந்து விட்டதை உணர்ந்தேன். அதை அகற்ற முயற்சி செய்துவிட்டு, ஊருக்குப் புறப்பட்டேன்.

ரயிலில் ஏறி உட்கார்ந்ததும், மீனா என் நினைவில் வந்துவிட்டாள். 'சுலோ இறந்து விட்டாள்...மீனாவுக்கு மாலையிடுகிறேன்...அவள் என் மனைவியாகிறாள்...' இதுபோன்ற விபரீதக் கனவு கண்டேன். விழித்துக்கொண்டேன். மகாபாபி நான்...என் சுயநலத்துக்காக...துர் எண்ணம், துரோகம் மேலிட்டு என் அருமை சுலோவைப் பலியிடக்கூடத் தயங்காமல் துணிந்துவிட்டேனே...என்னை நானே சபித்துக் கொண்டேன்.

ஆனால், மனம் குரங்குதானே...எண்ணத்திற்கு இடங் கொடுத்தால் ஆசை உண்டாகிறது...ஆசைக்கு இடங் கொடுத்தால், பொருளை அடைய முற்படுகிறது... அடையும் வழியையும், அடைவதால் ஏற்படும் விளைவுகளையும் அப்போது நினைக்கிறதா? ஆசை, வெட்கம், பயம், வரப் போவது எதையுமே அறியாது அல்லவா? ஊர் நெருங்க நெருங்க, மீனா என் கண் முன் வந்து நினைவில் புகுந்து நெஞ்சில் நெருங்கி, இதயத்தில் 'ஜம்'மென்று அசைக்க முடியாமல் உட்கார்ந்து விட்டாள். சுலோவையும், மீனாவையும் ஒப்பிட்டு, எடை போட்டுப் பார்த்தது...மீனா...என் மனைவியாகாமல் என்னால் உயிர் வாழ முடியாது...அவள் என் மனைவியுமாகாமல் உயிரோடிருந்து வந்தால்கூட எனக்கு நிம்மதி இருக்காதுபோலிருந்தது. அவளை எப்படியாவது அடைந்தே தீருவது என்ற வெறியில் துடிதுடித்துக் கொண்டு, வீட்டை நோக்கிப் பறந்தேன்.

மீனாவின் வீடு பூட்டியிருந்தது. நான் என் வீட்டினுள் புகுந்ததும், என் தாயார் என்னைக் கட்டிக்கொண்டு 'கோ'வென்று அழுதாள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நான் ஊரிலிருந்து வீடு வந்து சேருவதற்குள், 'சுலோசனாவுக்கு ஏதாவது ஆபத்து' என்று தந்தி வந்திருக்குமோ என்று பதறினேன். என் தாயார் அதற்குள் 'எதிர்த்த வீட்டு மீனா போய் விட்டாளடா...மூன்று நாள் ஜுரமாயிருந்து, உடம்பு ஜாஸ்தியாகிப் போய், ஆஸ்பத்திரியில் சேர்த்த பின், நேற்று திடீரென்று இறந்து விட்டாளடா...பச்சைக் கிளி எல்லாரையும் பதறவிட்டுப் பறந்து போய் விட்டாளடா...ஊரே அலறுகிறது...தெருவே கதறுகிறது...' என்று புலம்பினாள். என் இதயம் சில விநாடிகள் இயங்க மறுத்துவிட்டது. என்மேல் இடி விழுந்து விட்டது போலிருந்தது. செயலற்று நின்றிருந்தேன். பெருமூச்சும், கண்ணீரும், புயலும் வெள்ளமுமாய்ப் பெருகின.

இயந்திரம்போல் வாசலுக்குப் போனேன். லக்ஷ்மி கடாக்ஷம் பொங்கியிருந்த எதிர் வீடு, பழையபடி வேதாளம் சேர்ந்து வெள்ளெருக்குப் பூத்து வெறிச்சோடி விட்டது.

மீனாவின் தாயார் இருக்குமிடம் விசாரித்து, போய், துக்கம் கேட்டுவிட்டுத் திரும்பினேன்.

லீவுக்குப்பின், ஆபீசுக்குப் போனதும், என் நண்பர்கள் என்னை விசாரித்த போதுதான் என் அகத்தில் இருப்பது முகத்தில் தெரிந்தது என்பது புரிந்தது.

'ஏண்டா...ஊருக்குப் போய்ப் பெண் ஜாதியைப் பார்த்துவிட்டு வந்தவன் முகம் மாதிரியே உன்னைப் பார்த்தால் தெரியவில்லையே... பெண்டாட்டியைப் பறி கொடுத்தவன்போலல்லவா முகத்தை வைத்துக்கொண்டிருக்கிறாய்...?' என்று கேட்டார்கள். உண்மையில் என் மானசீக மனைவி மீனாவைப் பறிகொடுத்து விட்டு, நான் துடித்துக்கொண்டிருந்ததை அவர்கள் அறிவார்களா?

மீனா என் சிந்தையிலே சிதையாத சிறந்ததொரு சிற்பத்தைச் செதுக்கி விட்டுச் சென்றுவிட்டாள். காலமென்னும் திரை, அதைச் சற்றே மறைத்து வருகிறது. கடவுளின் செயலை நான் தவறு, முட்டாள்தனம் என்று அப்போது சொன்னேன். உண்மையில் 'அது' அவர் தவறல்ல என்பதை இரண்டு விஷயங்கள் எனக்கு உணர்த்தின.

ஒன்று: மீனா இன்று உயிரோடிருந்தாலோ—மாற்றான் மனைவியாயிருந்தாலோ என் நெஞ்சம் வெடித்து விடும். ஏற்கெனவே கலைந்த என் நிம்மதி அடியோடு குலைந்துவிடும். எனக்குப் பைத்தியம் பிடித்தாலும் ஆச்சரியமில்லை.

இரண்டாவது: அவள் என் மனைவியாகி, இதுமாதிரி மடிந்து போயிருந்தாலும் அதே கதிதானே...ஆசைப்பட்டுப் பெற்ற பண்டம் நாசமடைந்து போவதை நெஞ்சம் தாங்குமா? அதைத்தான் ஜோஸ்யர்கூட மறைமுகமாக, ஆறு மாதங்கள் கழிந்த பின்தான் இந்தப் பெண்ணுக்குக் கல்யாணம் செய்ய வேண்டுமென்று சொன்னார்போலிருக்கிறது.

'உலகில் ஒரு குறையும் இல்லாமல், சகல யோக்யதாம்சங்களும் நிறைந்திருக்கிற பொருள் ஈஸ்வரார்ப்பணம் ஆகும்' என்று பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அதன் பொருளை உண்மையாக்கிச் சென்றுவிட்டாள் மீனா.

மீனாவைக் கொண்டு சென்று, என் அன்பை முழுமூச்சுடன் சுலோசனாவிடம் திருப்பச் செய்து, மீண்டும் நிம்மதியை நிரந்தரமாக நிலைக்கச் செய்துவிட்டார். குழம்பியிருந்த என் மனக்குட்டை, சலனம் நீங்கி மீண்டும் தெளிந்தது.

மீனா, இப்பிறவியில் என் மனைவியல்ல—சுலோதான் நிச்சயமாக என் மனைவி. மீனாவின் மரணத்தைப்பற்றிச் சுலோவுக்குத் தெரிவித்தேன். அவள் அனுதாபம் தெரிவித்து எழுதியிருந்த கடிதத்தில், சஞ்சலமுற்றிருந்த அவள் மனமும் தெளிவுற்றிருந்தது தெரிந்தது. அவளுக்கு 'வளைகாப்பு' செய்யப் போவதாகக் கடைசியில் குறிப்பிட்டிருந்தது, எங்கள் தாம்பத்ய வாழ்க்கையின் பிணைப்பை உறுதிப்படுத்தியதற்குச் சான்றாக அமைந்திருந்தது.

என் சுலோவுக்குப் பெண் பிறந்தால் அவள், 'மீனா'—என் மனைவியல்ல—குழந்தை.

★



அடையாறு கலா நிலையம் சென்ற மாதம் ஸ்ரீ கி வா. ஜகந்நாதனால் திறந்து வைக்கப்பட்டது. வைபவத்துக்கு ஸ்ரீ சுப்பராய அய்யர் தலைமை வகித்தார்.



மாயூரம் முனிஸிபல் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஸ்ரீ எஸ். சேஷகிரி அய்யர் குமாரன் சிர. எஸ். நடராஜனுக்கும், ஸ்ரீ டி. எஸ். ராமச்சந்திர சாஸ்திரிகள் குமாரத்தி சௌ. சாரதாவுக்கும் சென்ற மாதம் மாயூரத்தில் விவாகம் நடைபெற்றது.

கலைமண்டபம்

சென்னை பிலிம் சொஸைடி

சென்னை பிலிம் சொஸைடி என்ற ஸ்தாபனத்தார் படக் கலைக்குத் தங்களாலான சேவை செய்து வருகின்றனர். குறிப்பாகப் படம் பார்ப்பவர்களின் ரசனையை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் சில திட்டவட்டமான காரியங்களை இவர்கள் செய்து வருகின்றனர். அவ்வப்போது சிறந்த படங்களாகச் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து, அதைத் திரையிட்டு, அன்று படக் கலை சம்பந்தமாக ஏதாவது ஒரு முக்கிய அம்சத்தைப்பற்றி அந்தத் துறையில் அனுபவம் வாய்ந்த பிரபலஸ்தரைக்கொண்டு சொற்பொழிவு புரிவதற்கும் ஏற்பாடுசெய்கின்றனர். மற்ற சங்கங்களைப்போல் இல்லாமல் பட ரசிகர்களுக்கும் தயாரிப்பாளர்களுக்கும் ஒரு இணைப்புச் சங்கிலிபோல் இந்த ஸ்தாபனம் பயன்பட வேண்டுமென்று ஸ்ரீமதி அம்முஸ்வாமிநாதன், ஸ்ரீமதி ராஜம்மாள் அனந்தராமன், காரியதரிசி ஸாமுவேல் போன்றவர்கள் சிரத்தையுடன் உழைத்து வருகின்றனர்.

சமீபத்தில் இவர்கள் அமெரிக்க நீக்ரோப் பாடகியான மேரியான் ஆண்டர்ஸனின் ஆசிய சுற்றுப் பிரயாண செய்திப் படத்தைத் திரையிட்டனர். அன்றையக் கூட்டத்திற்கு விசேஷச் சொற்பொழிவாளராக சங்கீத ஆராய்ச்சியாளர் ஸ்ரீ சாம்பமூர்த்தி பேசினார். அவர் தன் உரையில் கர்நாடக சங்கீதம் தமிழ்ப் படங்களில் எவ்வளவு அலட்சியப் படுத்தப்படுகிறது என்பதையும், காப்பி அடிக்கப்பட்ட மூன்றாந்தர சங்கீதம் படக் கலையில் புகுந்து ஆட்சி செலுத்துவதையும், தமிழ்நாட்டின் பெருமையை விளக்கக் கர்நாடக சங்கீதத்தில் எந்தெந்த அம்சங்களைப் படங்களில் புகுத்தி, அன்னிய நாட்டார் கண்டு அதிசயிக்கும் படிச் செய்யலாம் என்றும் அழகாக விளக்கினார். பிலிம் சொஸைடியின் இம் மாதிரி சொற்பொழிவுகளைப் பிரதிகள் எடுத்துப் படத் தயாரிப்பாளர்களுக்கு அவ்வப்பொழுது அனுப்பினால், அவர்கள் தங்களைத் திருத்திக்கொள்ளாவிட்டாலும் கர்நாடக சங்கீதத்தின் பெருமையையாவது புரிந்துகொள்ளலாம் அல்லவா?

நடிகை ராஜம்மாவின் நன்கொடை

அன்ன சத்திரம் ஆயிரம் கட்டுவதை விட ஆங்கொரு ஏழைக்கு எழுத்தறிவித்தலே சிறந்த தர்மம் என்று மகா கவி பாரதியார் பாடினார். நடிகை எம். வி. ராஜம்மா அதை நடைமுறையில் செய்து காட்டிவிட்டார். அவர் பிறந்த ஊரான அக்கண்ட பள்ளியில் ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடத்தைக் கட்ட ரூ. 10,000 நன்கொடை அளித்துள்ளார். கவர்னர் ஸ்ரீ மேதி சமீபத்தில் இதற்கு அஸ்திவாரக் கல் நாட்டினார். இன்றே தன் வாழ்வின் கனவு பூர்த்தியானதென்று நடிகை ராஜம்மா தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

'பெற்ற மகனை விற்ற அன்னை'யில் மனோஹர்.

ஸ்ரீ ப்ரொடக்ஷன்ஸாரின் தமிழ்ப் படம்

சென்ற வாரம் இப்படத்திற்காகச் சில காட்சிகள் விஜயா ஸ்டுடியோ (மாஜி ரேவதி)வில் படமாக்கப்பட்டது. இக் காட்சியில் ஜெமினி கணேசனும், கண்ணாம்பாவும் மிக உருக்கமாக நடித்தனர். கணேசன் இதில் ஒரு வக்கீலாகவும் கண்ணாம்பா அவனது தாயாகவும் நடிக்கின்றனர். தன் தந்தை சிறையிலிருப்பதையும் அவர் நிரபராதி என்பதையும் கேட்ட மகன், தான் எப்படியாவது அவரை விடுதலை செய்வதாகக் கூறுகிறான். இப்படத்தில் சாவித்திரி, எம். என். ராஜம், டி. ஆர். ராமச்சந்திரன் மற்றும் பலர் நடிக்கின்றனர். வங்காளிப் படக் கதையொன்றைத் தழுவித் தமிழில் 'மாறன்' வசனங்களை எழுதுகிறார். டைரக்ஷன் டி. பிரகாச ராவ்.

மங்கையர் உலகம்

குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை விளக்கும் இந்தப் படத்திற்காக சமீபத்தில் வாஹினி ஸ்டுடியோவில் சில காட்சிகள் படமாக்கப்பட்டன. வி. எஸ். ராகவனும் பம்பாய் மீனாட்சியும் இக் காட்சியில் போலீஸ் அதிகாரியாகவும் அவரது மனைவி சந்திரிகாவாகவும் முறையே நடித்தனர். நரசிம்மன் என்ற புதிய நடிகர் கதாநாயகன் மனோகராக நடிக்கிறார். மற்றும் கே. ஆர். செல்லம், பண்டரிபாய், சாரங்கபாணி, மனோகர், மாலி மற்றும் பலர் நடிக்கின்றனர். பட உலகில் நீண்டநாள் அனுபவமுள்ளவரும், சிறந்த ரசிகருமான எம். ஆர். விட்டல் இப்படத்தை டைரக்ட் செய்கிறார். படத்தைத் தயாரிப்பவர் ஸ்ரீபாத சங்கர்.

ஜூபிலியின் சமூகப் படம்

ஜூபிலி பிலிம்சார் தங்களுடைய மகத்தான தயாரிப்பான 'பார்த்திபன் கனவு'க்கிடையே ஒரு சமூகப் படத்தைத் தயாரித்து முடித்து விடுவதென்று தீர்மானித்து, வேகமாக ஒரு படத்தைத் தயாரித்து வருகின்றனர். இப்படத்திற்கு இன்னும் பெயரிடப்படவில்லை. விவாக ரத்துப் பிரச்னையை அடிப்படையாகக் கொண்ட இதன் திரைக் கதை வசனத்தை 'மாறன்' எழுதி வருகிறார். இப்படத்தில் ராஜேந்திரன், பாலாஜி, ரங்க ராவ், டி. ஆர். ராமச்சந்திரன், பண்டரி பாய், மைனுவதி, சூர்யகலா, பிரமீளா, லட்சுமி பிரபா, மனோரமா ஆகியோர் நடிப்பார்கள். பாடல்களை ராமையா தாஸ் இயற்றுகிறார். யோகானந்த் டைரக்ட் செய்வார். இதைத் தயாரிப்பவர் வி. கோவிந்தராசன்.

பங்கஜா புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் 'அட்வகேட் அமர'னில் எம்.ஜி. ராமச்சந்திரன், டி. ஆர். ராமச்சந்திரன்.

ஜகஜ்ஜோதியின் "ஓடி விளையாடு பாப்பா"

பாரதி பாடிய புதுமைப் பெண் எப்படி இருப்பாள் என்பதைக் காண வேண்டுமானால், சற்றுப் பொறுத்திருங்கள். ஜகஜ்ஜோதி பிலிம்ஸார் தயாரிக்கும் 'ஓடி விளையாடு பாப்பா' என்ற படத்தில் காணலாம்.

சமீபத்தில் இப்படத்திற்காக சரோஜா தேவி நடிக்கும் சில காட்சிகள் பிலிம் செண்டரில் படமாக்கப்பட்டன. இளம் பெண் ஒருத்தியைக் கிழவனுக்குக் கல்யாணம் செய்ய நிச்சயித்துள்ளதை இப்படத்தின் கதாநாயகி ராதா (சரோஜா தேவி) தன் தோழியருடன் சென்று மறியல் செய்து, தடுத்து விடுகிறாள். இதற்காகத் தன் தோழியர்முன் இந்தக் குமரி—கிழவன் விவாகத்தின் பயங்கரக் கொடுமையை எடுத்து விளக்கிப் பிரசங்கம் செய்யும் காட்சியே அன்று படமாக்கப்பட்டது. கே. அப்பன் ராஜ் என்பவர் எழுதிய இக்கதையை 'முதலாளி' புகழ் வி. ஸ்ரீநிவாசன் டைரக்ட் செய்கிறார். எஸ். எஸ். ராசேந்திரன், டி. கே. பாலசந்திரன், சகாதேவன், சிவசூரியன், ராகவன், ஜி. சகுந்தலா மற்றும் பலர் நடிக்கின்றனர்.

விஜயா பிலிம்ஸாரின் புதிய படம்

சென்ற வாரம் இப்படத்திற்காகச் சில காட்சிகளை டைரக்டர் ஆர். எஸ். மணி வாஹினி ஸ்டுடியோவில் படமாக்கினார். இக்காட்சியில் சிவாஜி கணேசனும் பத்மினியும் சங்கராகவும் பார்வதியாகவும் நடித்தனர். 'தாக்' என்ற ஹிந்தி படத்தைத் தழுவிய இக்கதையின் வசனங்களை ஸ்ரீதர் எழுதியுள்ளார். படத்தில் கண்ணாம்பா, தங்கவேலு, வி. கே. ராமசாமி, டி. ஆர். ராமச்சந்திரன் மற்றும் பலர் நடிக்கின்றனர். காலஞ்சென்ற கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனின் சகோதரரான என். எஸ். திரவியம் இப் படத்தைத் தயாரிக்கிறார்.

"ரிஸ்ய சிருங்கர்"

கீதா பிக்சர்ஸார் 'ரிஸ்ய சிருங்கர்' என்ற கதையைத் தமிழ், தெலுங்கு இரு பாஷைகளில் படமாகத் தயாரித்து வருகின்றனர். தமிழ் 'ரிஸ்ய சிருங்கரில்' பாலாஜி கதாநாயகனாக நடிக்கிறார். அவருடன் டி. ஆர். ராமச்சந்திரன், சேதுராமன், நாராயண ராவ் ஆகியோர் நடிக்கின்றனர். கதாநாயகியாக ராஜ சுலோசனா நடிக்கிறார். மற்றும் கிரிஜா, குசலகுமாரி ஆகியோரும் நடிக்கின்றனர். முக்கமாலா கிருஷ்ணமூர்த்தி படத்தை டைரக்ட் செய்கிறார். தஞ்சை ராமையா தாஸ் வசனம் பாடல்களை எழுதுகிறார். ஒளிப்பதிவாளர் ஆதி. இரானி. சமீபத்தில் படப் பிடிப்பு கோஷ்டி ஒன்று உதகை சென்று, அழகான இயற்கைக் காட்சிகள் பலவற்றைப் படமாக்கிக் கொண்டு வந்தது.

மகாதேவன் படத்தில் இரண்டு கணேசன்

ஜெமினி கே. ஜே. மகாதேவன் சொந்தத்தில் தயாரிக்கும் படத்தில் இரண்டு கணேசனும் நடிப்பார்கள். டைரக்டர் மகாதேவன் சுதர்சன் பிக்சர்ஸ் என்ற பெயரில் ஒரு கம்பெனியை ஆரம்பித்துள்ளார். பத்மினி, சந்தியா இருவரும் இப் படத்தில் நடிப்பார்கள். மற்றும் டி. கே. ராமச்சந்திரன், சந்திரபாபு, எம். என். ராஜம், ராகினி ஆகியோரும் நடிப்பார்கள். கதையை மகாதேவனே எழுதி இருப்பார் என்று முன்பே நான் கூறியுள்ளது உண்மையாயிற்று. வசனங்களை வே. லட்சுமணன் எழுதுகிறார். சங்கீத அமைப்பு ராஜேஸ்வர ராவ். படப் பிடிப்பு வேலைகள் விரைவில் ஆரம்பமாகும்.

ஜூபிடரின் "தங்கப் பதுமை"

'தங்கப் பதுமை'க்காக சிவாஜி கணேசன் நடிக்கும் காட்சிகள் சில சமீபத்தில் படமாக்கப்பட்டன. இக்காட்சியில் எம். என். ராஜமும் நடித்தார். படப் பிடிப்பு வேலைகள் பூர்த்தியடைந்து வரும் இப் படத்தில், ராஜகுமாரி நம்பியார், மதுரம், பத்மினி, மதராஸ் சகோதரிகள் மற்றும் பலர் நடிக்கின்றனர். ஏ. எஸ். ஏ. சாமி டைரக்ட் செய்கிறார்.



'ஜூபிடர் தங்கப்பதுமை'யில் பத்மினி.

நிகோ அரங்கம்

மைதிலி

நடிகைகளையும், மிஞ்சுமளவுக்குப் பெண் வேஷங்களை ஏற்கும் சில இளைஞர்கள், தத்தம் நடிப்பில் தனிப்பட்ட நயம் காட்டி, அமெச்சூர் நாடக ரசிகர்களின் உள்ளங்களை வெகுவாகக் கவர்ந்து வருகின்றனர். பெண் வேடங்களைத் தரிப்பதற்கு நல்ல முகவெட்டுடைய ஆண்களைத் தேடிப் பிடிப்பது மகா சிரமம். அப்படியே அகப்பட்டாலும் சிலருக்கு அபார மேடைக் கூச்சம் வந்து விடுகிறது. வேறு சிலருக்கோ அரைகுறை 'மேக்கப்' ஆளைக் காட்டிக் கொடுத்து விடுகிறது. இப்படியெல்லாம் இல்லாமல் ஒரு சில வாலிபர்களாவது அசல் நடிகைகளைப்போல் அழகாகவும், இயற்கையாகவும் நடிக்க முன் வந்து, முன்னேறிக்கொண்டிருக்கிறார்களென்றால், அவர்களை மேன்மேலும் உற்சாகப்படுத்தி ஆதரிக்க வேண்டியது சபையோரின் கடமையாகும்.

அப்படி யார், யார் முன்னேறிக்கொண்டிருக்கிறார்களென்பதை அறிய 'மைதிலி' என்கிற சமூக நாடகத்தைப் பார்த்தால் போதும்.

காலஞ்சென்ற ஸ்ரீ 'தேவன்' அருமையான ஹாஸ்யச் சுவையுடன் எழுதியுள்ள அந்நாடகத்தை மதராஸ் அமெச்சூர்ஸார் ஸ்ரீ திருவட்டீஸ்வரர் சபை ஆதரவில் மே 25-ந் தேதி திருவல்லிக்கேணி என். கே. டி. கலா மண்டபத்தில் நடித்தனர்.

கதாநாயகி 'மைதிலி'யாகத் தோன்றிய கிருஷ்ணா, 'ஸ்ரீமதி'யாக வந்த டி. பிச்சுமணி, 'கருப்பாயி'யாகவும் கோபால் சாஸ்திரியின் மனைவியாகவும் நடித்த ரங்கன் ஆகிய மூவரையும் குறிப்பாகப் பாராட்ட வேண்டும். ரங்கனின் நடிப்பும், பேச்சும் நாடகத்துக்கு நாடகம் நிறைய அபிவிருத்தி அடைந்து வருகின்றன. 'மைதிலி'யின் முகம் இன்னும் கொஞ்சம் மந்தஹாசமாக இருக்கலாம். ஸர் சந்தானத்தை 'திக்கண்ணு' அழைத்து வந்து காண்பிக்கும் கட்டத்தில் 'ஸ்ரீமதி' டி. பிச்சுமணியின் கோபாவேசமான நடிப்பு மெச்சத் தக்கதாக இருந்தது.

'ஸ்ரீமதி'யின் கணவர் 'பட்டணம் பஞ்சு'வாகத் தோன்றிய கே. ஹரிஹர சுப்ரமணியம் கனஜோராக நடித்தார். மேலே கூறிய கட்டத்தில் இவரது நடிப்பும் நன்கு களை கட்டியது.

'செல்லமணி'யாக பி. என். ராமசாமி சீராக, அதிகப் பரபரப்புக் காட்டாமல் நடித்தார்.

'செங்கண்ணு' வி. சந்தான கோபாலனின் பேச்சும், நடிப்பும் மிகக் கச்சிதம். மற்றும் ஏ. ரங்கராஜன், எஸ். கே. கஸ்தூரி ரங்கன், எஸ். பார்த்தசாரதி ஆகியோரும் கூடியமட்டில் திறம்பட நடித்தனர்.

'ஆத்மநாத அய்யர்' பாகத்துக்கு வேறு நபரைப் பார்க்கலாம். 'கோண்டு பெரியப்பா'வுக்கு 'மேக்கப்' சரியாயில்லை. கோபால் சாஸ்திரியின் ஹோட்டல் ஸீன் பூரணமாக இல்லை. 'தாயாதி' ஆர். கிருஷ்ணன் தேவலை.

இசை அமைப்பு சுமார். காட்சி ஜோடனைகளில் அதிகம் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. திருவல்லிக்கேணி பைன் ஆர்ட்ஸ் கிளப்பைச் சேர்ந்த ஸ்ரீ ஆர். ஸ்ரீநிவாஸ கோபாலன் டைரக்ஷன் பொறுப்பேற்று இருந்தார்.

படத் தயாரிப்பாளர் ஸ்ரீ எச். எம். ரெட்டி நாடகத்துக்குத் தலைமை வகித்து, நடிகர்களின் திறமையைப் பாராட்டினார். அமெச்சூர் குழு உபதலைவர் பேராசிரியர் மெஸ்திரி தலைவரை வரவேற்றதுடன், கடைசியில் வந்தனோபசாரமும் கூறினார்.

மத்திய சர்க்கார் பாதுகாப்பிலாகா உப காரியதரிசி ஸ்ரீ ஆர். கே. சுந்தரேசனின் புதல்வி குமாரி சியாமளா சுந்தரேசன் 20-4-58-ல் டேராடூன் தக்ஷிண பாரத சங்கத்தின் ஆதரவிலும் 27-4-58-ல் பஞ்சாப் கவர்னர் ஸ்ரீ ஸி. பி. என். ஸிங் முன்னிலையிலும் 3-5-58-ல் ரூர்க்கி தென்னிந்திய கலாசார சங்கத்தின் ஆதரவிலும், 9-5-58-ல் மசூரியில் மத்திய சர்க்காரால் நடத்தப்பட்ட அகில இந்திய குடிசைத் தொழில் மகாநாட்டின் விருந்தினர்கள் முன்னிலையிலும் பரத நாட்டியமாடி சிறப்புப் பெற்றார். இசைப்புகழ் ஸ்ரீமதி லலிதா நாகராஜனின் மதுரகான முன்னணிப்பாட்டுக்கள் மெருகூட்டும் வகையில் அமைந்திருந்தன.

"நாம் ஒன்று நினைத்தால்"

கடந்த பிப்ரவரி மாதம் உருப்பெற்ற ஷண்முகானந்த சபை வட மயிலைப் பகுதிக்கு இசை மன்றம் ஒன்று இல்லாத குறையைப் போக்கி நன்கு வளர்ந்து வருகிறது. அதன் ஆதரவில் விவேகானந்தா கல்லூரி திறந்த வெளி அரங்கில் மயிலை அமெச்சூர்ஸார் 'நாம் ஒன்று நினைத்தால்' என்கிற நாடகத்தை மே 24-ந் தேதி நடித்தனர்.

'தர்மலிங்கம்' எம். கே. பட்டண்ணா நடிப்பும், பேச்சும் எடுப்பாக இருந்தன. 'லீலா' பாகம் ஏற்ற குமாரி சரோஜா உயர்தரமாக நடித்தார்.

'மாகதம்' பாத்திரம் ஏந்திய குமாரி வி. பத்மா, முன்னுக்கு வரக்கூடிய ஓர் நடிகை. பேச்சுக்கு ஏற்ப அளவோடு நடிக்க அவர் பழகிக்கொள்ள வேண்டும்.

'வேதாந்தம்' டி. எஸ். ராமசாமி நன்கு ஜமாய்த்தார். காசி விசுவநாதன், டி. எஸ். வி. ரமணி ஆகிய இருவரது நடிப்பும் நேர்த்தியாக இருந்தது.

'பார்வதி' பாகத்தில் வந்த ஸி. ஆர். சீனுவாசன் இயற்கையாகப் பேசி, அழகாக நடித்தார்.

வி. நடராஜன், கே. சீனிவாசன், ஏ. என். கண்ணன், எஸ். கபாலீஸ்வரன், சாரி முதலியோரும் இந்நாடகத்தில் பங்கு கொண்டனர்.

கதை, வசனம், பாடல்களை அமைத்தவர் 'கலாதர்'. நாடக மேற்பார்வை டாக்டர் எம். எஸ். ராமச்சந்திரன்.

—ஸஞ்சாரி



பம்பாய் மாதுங்கா நாடக சங்கத்தினர் ஸ்ரீ என். வி. நடராஜன் எழுதிய "களத்து மேடு" என்கிற நாடகத்தை அந் நகரில் மே 3-ந் தேதி நடித்தனர். அதில் ஜி. சரோஜாவும், எஸ். ஸ்ரீநிவாசனும் தோன்றும் ஒரு காட்சி.

மைசூர் வாசுதேவாச்சார் கீர்த்தனைகள்

ராகம் : பூர்வகல்யாணி] [தாளம் : சதுரச்ர த்ரிபுடை

ஆரோகணம் : ஸரிகமபதநிபதபஸ்
அவரோகணம் : ஸ்நிதபமகரிஸ

பல்லவி

பாவயாச்யுதம் வாஸுதேவம்
4 3
தேவகீ க்ருதநுதிம் கேசவம் (பாவ)

அநுபல்லவி

ஸ்ரீ வரம் ஹத ஸகல தானவம்
3
ஜீவநேதார மமித விபவம் (பாவ)
4

சரணம்

வாரிஜாஸன முக ஸுரவிநுதம்
3 2
வாரிராசி சாயின மகாஹிதம்
4
சௌரி மகிலலோக ஸம்பூஜிதம்
2 3
பூரி காருண்ய யுதம் ஸுசரிதம் (பாவ) (83)
4

பல்லவி:— அச்சுதனை ஹ்ருதயத்தில் பூஜிக்க வேண்டும். (தன்னை அண்டியவர்களைத் தாழ்ந்து போகாமல் காப்பவனை) வாஸுதேவனை, தேவகியாகிய தாயாரால் துதிக்கப் பட்டவனை, கேசவனை —(பூஜிக்க வேண்டும்).

அ-ப:— லக்ஷ்மியின் மணாளனை, ஸர்வ ராக்ஷஸர்களையும் ஸம்ஹாரம் செய்தவனை, ஜீவர்களைக் கரை ஏற்றுகிறவனை, அளவற்ற மஹிமையுள்ளவனை,
—(நீ பூஜிக்க வேண்டும்).

சரணம்:— பிரும்மாதி தேவர்களாலே துதிக்கப்பட்டவனை, பாற் கடலில் பள்ளி கொண்டவனை, பாபமற்றவனை, வஸுதேவனின் புத்திரனை, ஸர்வ உலகங்களிலும் பூஜிக்கப்பட்டவனை, அளவற்ற கருணையோடு கூடினவனை, நந்நடத்தை உள்ளவனை.
—(மனமே நீ என்றும் பூஜிப்பாயாக).

ராகம்: பூர்வ கல்யாணி.]   [தாளம்: சதுரச்ர த்ரிபுடை.

ஆ: ஸரிகமபதநிபதபஸ். அ: ஸ்நிதபமகரிஸ.

பல்லவி

I	0	0
பா பம கமகாரீ ஸா	,ரிஸரி ததா	ஸரிகரி கா
பா வ. யா .ச்யுதம்.	.வா.. .ஸா.	தே. .. வம்
பா பம க்ரிகமதா நிதநிப	தா ஸ்ா ரிஸ்	நிதபம கரிகம
தேவ. தி. . . .. க்ருத.	நு. திம் கே.	. . ச. வம்...
பதநிதபம கம தமகா ரிஸா	,ரிஸரிததா	ஸரிகரி கா
பா. . . வ. யா . . .. ச்யுதம்	.வா. . .. ஸா.	தே.. . வம்
பா பமகரிகமபத நிமதா	ஸ்ா ஸ்ரிக்ா க்ரி	ஸ்நிதநி நிதபம
தே.வு. தி ..... க்ருத .	நு.. தம்.. கே..	. . ச. வம்...

(பாவயாச்யுதம்)

அநுபல்லவி

,பதாபஸ்ா தஸ்ரிஸ்ரி ஸ்நி	தா ஸ்ரிக்க்ரிஸ்	நிதஸ்ப தாஸ்ா
.ஸ்ரீ. ...வ ரம் ...., ஹ..	த. ஸ. க. .ல.	தா ... ன வம்
,பதாபஸ்ா தஸ்ரிஸ்ரி ஸ்ரி	க்ா ரிக்ப்ம்க்ரி	ரிஸ்ரித ஸ்பதா
.ஸ்ரீ.. வ. ரம் . . .. ஹ..	.த ஸ. க . ல.	தா. . . . ந, வம்
,ஸ்ாஸ்நி ஸ்நிக்ரிஸ்நி ஸ்நிதநி	நித மதஸ்	நிதபம-கரிகம
.ஜீ. வ. தே . . . . தா. . .	ர.. மமித	வி. ப., வம்...

(பாவயாச்யுதம்)

சரணம்

,கா,க கமபமகரி கா மா	பா மா ததபா	பமகரி கா
.வா.ரிஜா. . . , ஸ. ந.	மு. க. ஸா. ர.	வி. நு தம்
கம தமகரி ஸா நித ஸரிகரி	காகம பமகரி	கமபம பா
வா . . ரி. ரா சி. சா . .	யி ன . ம. க.	ர. ஹி தம்

ஸௌரிமகிலலோக ஸம்பூஜிதம்
பூரிகாருண்யயுதம் ஸாசரதம்
(அநுபல்லவி மாதிரி)

இலங்கைக் கடிதம்

பிரஜாவுரிமை விஷயத்தில் பல்லா யிரக்கணக்கான இலங்கை இந்தியர் களுக்கு இலங்கை அரசாங்கம் எவ்வளவு பெரிய அநியாயம் செய்து வந்திருக் கிறது என்பதை அறிவுறுத்தும் முறையில் பிரிவி கவுன்ஸில் இவ்வாரம் இரண்டு முக்கியமான தீர்ப்புகளை வெளியிட் டிருக்கிறது. இந்நாட்டிலுள்ளவர்கள் இந்தியாவிலுள்ள பத்திரிகைகள், புத்த கக் கம்பெனிகள், தர்ம ஸ்தாபனங்கள், கோவில்கள் முதலியவைகளுக்கோ அல் லது வயோதிகப் பெற்றோர்களுக்கோ பணமனுப்ப பர்மிட் கோரினால், தங்களை இலங்கையின் 'தற்கால வாசி' என்று எழுதிக் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது. அப்படி எழுதிக் கொடுத்தால்மட்டுமே பணமனுப்பலா மென்பது சட்டம். இதற்குப் பலரும் தயங்கியபொழுது, இவ்விதம் எழுதிக் கொடுப்பது பிரஜாவுரிமையைப் பாதிக்க மாட்டாது என்று உறுதி கூறினர்கள்.

பிறகு பிரஜாவுரிமை மனுக்களைப் பரி சீலனை செய்யும் காலம் வந்தபொழுது, தற்காலிக வாசிகளென்று எழுதிக் கொடுத்தவர்கள் தற்காலிக வாசிகளே தவிர, இலங்கையில் நிரந்தரமாகக் குடி யேறியவர்களல்லவென்றும் ஆகையால் இலங்கைப் பிரஜாவுரிமை பெற அவர் களுக்கு யோக்கியதையில்லையென்றும் சொல்லிப் பல்லாயிரக்கணக்கான இந்தி யர்களின் பிரஜாவுரிமை மனுக்களை நிராகரித்துவிட்டார்கள். இவ்விதம் உரிமை மறுக்கப்பட்டவர்களில் பெரும் பாலோர் அன்றாடம் உழைத்து ஜீவனம் செய்யும் எளிய ஜனங்கள். அவர்களில் எத்தனை பேர் அரசாங்க உத்தரவை ஆட் சேபித்து சுப்ரீம் கோர்ட்டில் வாதாட முடியும்? ஒரு சிலர் மட்டுமே அப்பீல் செய்தனர். இந்த அப்பீல்கள் சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தபொழுது பரீட்சார்த்தமாக இரண்டு அப்பீல்கள் மட்டுமே விசாரிக்கப்பட்டன. இந்தியா வுக்குப் பணமனுப்பிய ஒரே காரணத் துக்காக பிரஜாவுரிமை மறுப்பது அநி யாயமென்று சொல்லி, அரசாங்கத்தின் நிராகரிப்பு உத்தரவை சுப்ரீம் கோர்ட் ரத்து செய்தது.

நீதி நேர்மையுடன் நடக்கும் என் ணம் இருந்தால், நாட்டின் உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பை அரசாங்கம் கண்ணியமாக ஒப்புக்கொண்டிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யத் தயாராயில்லை, தங்களுடைய உயர்நீதி மன்றத்தையே அலட்சியம் செய்து பிரிவி கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்தார்கள். பணமனுப்புவதற்குத் தற்கா லிக வாசிகளென்று எழுதிக் கொடுக்கு மாறு இந்தியர்களை நிர்ப்பந்தம் செய்து பிறகு அதையே பயன்படுத்திப் பிரஜா வுரிமை மறுக்கும் குயுக்தியை இலங்கை சுப்ரீம் கோர்ட் எவ்விதம் ஏற்க மறுத் ததோ அதேபோல பிரிவி கவுன்ஸிலும் ஏற்க மறுத்து அரசாங்கத்தின் அப்பீலைத் தள்ளுபடி செய்திருக்கிறது. பிரிவி கவுன்ஸிலின் இந்தத் தீர்ப்பு பல்லா யிரக்கணக்கான இந்தியர்களுக்கு இலங்கை அரசாங்கம் எவ்வளவு பெரிய அநீதியை இழைத்துள்ளதென்பதை இடித்துக் காட்டியிருக்கிறது. இந்தத் தீர்ப்பைத் தழுவி உரிமை மறுத்த பல ஆயிரம் இந்தியர்களுக்குப் பிரஜா வுரிமை வழங்குவதுதான் நியாயம். இதற்குத் தற்சமயமுள்ள சட்டத்தைத் திருத்தினாலொழிய நிராகரிக்கப்பட்ட மனுக்களைப் புனராலோசனை செய்ய வழியில்லை, சட்டத்தை அரசாங்கம் திருத்துவதாகவுமில்லை. அநீதியைத் துடைக்க உடன் வழி செய்ய வேண்டு மென்றும் இலங்கை இந்திய அரசாங்கப் பிரதிநிதிகளும் பாதிக்கப்பட்ட மக்க ளின் பிரதிநிதிகளும் கூடிப் பேசி, நிலை மையை ஆதியோடந்தமாகப் பரிசீலனை செய்ய இதுவே பொருத்தமான தருண மென்றும் பொறுப்பு வாய்ந்தவர்கள் இப் பொழுது வற்புறுத்தி வருகிறார்கள்.

—ரவி



பாரகன் பிக்சர்ஸ் 'அன்னையின் ஆணை'யில் சாவித்திரி

Regd. No. 2514,
Registered as a Newspaper in CEYLON.

புதுமைப் பொலிவையும் வனப்பையும் உங்களுக்களிப்பது ஹிமாலயா புக்கே

இதமும் குளுமையும் தரும் இந்த ஸ்நோவைத் தடவிக் கொண்டு, அதன் மணங் கமழும் புதுமை இன்பத்தை அனுபவியுங்கள்!

ஹிமாலயா புக்கே ஸ்நோ



மிருதுவான இந்த வாசனைப் பவுடரைப் பூசிக்கொண்ட பின், பூர்த்தி பெறும் உங்கள் பேரழகைப் பாருங்கள்!

ஹிமாலயா புக்கே டாய்லெட் பவுடர்

HBS. 14A-X52 TM

Printed and Published by N. Rajagopalan, at the 'Swadesamitran' Press, 'Victory House' Mount Road, Madras. Editor: C. R. Srinivasan, B. A.

14 சுதேச மித்திரன்
ஜூன் 8 1958 ★ நயே பைசே 25

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 - JUL 1958
MADRAS

பொருளடக்கம்

Vol: XXIX] விளம்பி ஸு வைகாசி மீ 26உ ஜூன் 8, 1958 [No. 19

ஜனநாயகத்துக்குச் சிறை		3
காற்று வாக்கிலே	—அரட்டை	4
உலகப் பலகணி	—கே. பி. எஸ்.	5
திருந்திய மனம்	—ஜமீலா	6
பாடலால் பெயர் பெற்றவர்கள்	—மா. ரா. இளங்கோவன்	11
வாட்ச்மேன் வஜ்ரசாமி	—வை. சுப்ரமண்யன்	13
பிறந்த விதமும்...	—என். பி. ஹரிஹரன்	18
மலர் மஞ்சம்	—தி. ஜானகிராமன்	19
பிரதிஷ்டை	—ஜி. சாமிநாதன்	24
ஆதித்தன் காதல்	—ஆர்வி	28
நவ நாகரிகக் குறிப்புகள்	—காசினி	34
உலகியல் கதைகள்	—சாலிவாஹனன்	35
தங்கப் பதுமை	— அஸ்வத்தாமா	36
சிறுவர் அறிவு அரங்கம்		39
கண்ணன் என் புதிர்	—புஷ்யன்	40
ரிஸல்ட்	—உமாபதி	44
தெரியாத்தனம்	—பி. ராஜலட்சுமி	46
செய்தி	—முன்ஷி	49
கலா மண்டபம்		52
தீக்ஷிதர் கீர்த்தனை		55

"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளிவரும் கதைகளில் பெயர்கள் சம்பவங்கள் எல்லாம் கற்பனையே அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

அட்டைப் படம் : போட்டோ—என். ராமகிருஷ்ண



வாழிய செந்தமிழ்
சுதேசமித்திரன்
வாரப்பதிப்பு
வாழ்க நற்றமிழர்

★

ஜனநாயகத்துக்குச் சிறை

பிரான்ஸில் ஜனநாயகத்திற்கு ஆறு மாத காலச் சிறை! அக்கால இறுதியில் அதன் கதி என்னுகும் என்று யாரும் சொல்ல முடியாது. இப்போதைக்கு ஜெனரல் டிகால் சர்வாதிகாரியாகி விட்டார். இவ்வளவும் அங்குள்ள சட்டப்படி, பார்லிமென்டின் மெஜாரிட்டி முறைப்படி நடந்தேறியிருக்கிறது. டிகாலுக்கு இத்தகைய சர்வாதிகாரம் கொடுப்பதற்கு பார்லிமெண்டில் 329 பேர் சம்மதம் தெரிவித்தனர். எதிர்த்தோர் 224 பேர். அதாவது, பார்லிமெண்டரி முறைப்படித் தேசத்தை ஆளத் தங்களுக்குத் திறனில்லை; எனவே, டிகால் சர்வாதிகாரம் செலுத்துவதன் மூலமே தற்போதைய சீர்கெட்ட நிலை ஒழுங்குபட முடியுமென்று பார்லிமெண்டிலுள்ள மெஜாரிட்டி பகிரங்கமாக ஒப்புக்கொண்டு விட்டது. ஆனால், பிரஞ்சு அரசியலின் சீர்கேடு ஏற்கெனவே உலகம் அறிந்ததுதான். அங்கு மந்திரி சபைகள் மாறி வந்திருக்கும் வேகத்தைக் கேலி செய்யாதவரில்லை. அரசாங்கத்தின் பலவீனத்தைக் கண்டு அல்ஜீரியா, கார்ஸிகா போன்ற இடங்களில் பிரஞ்சு ராணுவத்தினர் ஸிவில் அதிகாரத்தைக் கைப்பற்றத் துணிந்ததில் ஆச்சரியமில்லை.

உண்மையில் இவ்வாறு ராணுவக் கலகமாக ஆரம்பமானது பிரான்ஸுக்குப் பரவி உள்நாட்டுப் போர் மூளுமோ என்ற அஞ்சத்தக்க நிலையில் தான் கம்யூனிஸ்டுகளைத் தவிர மற்ற பெரும்பாலான பிரஞ்சு அரசியல் கட்சிகள் சேர்ந்து டிகாலை சர்வாதிகாரியாக வரித்திருக்கின்றன. இக்கட்சிகள் சென்ற யுத்த முடிவைத் தொடர்ந்து சிறிது பிரத்தியட்ச உணர்வுடன் நடந்துகொண்டிருந்தால் பிரான்ஸுக்குத் தற்போது இந்த கதி ஏற்பட்டிருக்காது. யுத்த முடிவில் அந்நாடு தனது நிலையையும், தன்னுதிக்கத்திற்குட்பட்ட நாடுகளின் விழிப்பையும் கண்டு பிரிட்டனைப்போல் அவ்வாதிக்கச் சுமையைத் தானாகத் துறந்திருக்க வேண்டும். அதற்கு மாறாக, இந்தோ-சீனாவிலும், வட ஆப்பிரிக்காவிலும் தேசீய இயக்கங்களை ஒடுக்குவதில் தனது ஆள் பலத்தையும், பொருள் வளத்தையும் மேன்மேலும் விரயமாக்குவதில் மூழ்ந்தது. அந்தப் பாதை தற்கொலைக்கு வழி என்று பிரஞ்சு மக்களுக்குத் துணிகரமாகச் சுட்டிக் காட்டி, அவர்களை வேறு மார்க்கத்தில் நடத்திச் செல்லத்தக்க திறன் வாய்ந்த அரசியல் கட்சி அல்லது தலைவர் யாருமில்லை. முக்கியமாக இதன் பலன்தான் இன்று அந்நாடு பலவகைகளிலும் சீர்கெட்டு, இறுதியாக இப்போது ஜனநாயக முறையையும் கைவிட்டு டிகாலின் காலில் விழ நேர்ந்திருப்பது.

அடுத்தபடி டிகால் என்ன செய்வார்? உள்நாட்டைப் பொறுத்தவரை, உடனடியாக அமைதியை நிலைநிறுத்தி, அரசியல் அமைப்பை சீர்திருத்தத் திட்டம் வகுக்கப் போவதாக அவர் அறிவித்துள்ளார். அத்திட்டத்தைப் பார்லிமெண்டுக்குப் பதிலாக ஜனங்கள் முன் சமர்ப்பித்து, அதன் அங்கீகாரத்தைக் கோரப் போவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். அத்தகைய ஒரு திட்டத்தில் எந்த அளவு ஜனநாயகச் சாயையைக் காண முடியுமென்று இப்போது யாரும் சொல்வதற்கில்லை. ஆறு மாத காலம் சர்வாதிகார ருசியைக் கண்டபின், சரேலென்று அதைத் துறக்க அவருக்கு மனம் வருமா என்பதும் பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விஷயம். ஆனால், அல்ஜீரியாவில் பிரஞ்சு சர்க்கார் போதியளவு தீவிர முறைகளைக் கையாளவில்லை என்ற காரணத்தினாலேயே அங்குள்ள பிரஞ்சு ராணுவத்தினர் அதிகாரத்தைக் கைப்பற்றினர். மேலும் முக்கியமாக அவர்களுடைய 'வற்புறுத்தலின் பலனாகவே, பிரஞ்சு பார்லிமெண்டு அதிகாரமனைத்தையும் டிகாலிடம் ஒப்படைக்க நேர்ந்திருக்கிறது. எனவே, அல்ஜீரியாவில் தேசீய விடுதலை இயக்கத்தை ஒடுக்குவதில் டிகால் பிரஞ்சு ராணுவத்தை முழு மூச்சுடன் ஏவி விடுவாராயின், அதுகண்டு யாரும் ஆச்சரியப்படப் போவதில்லை. ஆனால் அந்த வழி பிரான்ஸ் இன்னும் சீரழிவதிலேயே போய் முடியும். டிகால் அதிகாரத்திற்கு வந்திருப்பது புதுச்சேரி மக்களுக்கும் தம் கட்சிப் பூசல்களை நிறுத்தி ஒன்றுபட ஒரு தெளிவான எச்சரிக்கை.

காற்றுவாக்கிலே.........

அந்தோ, சோஷலிஸமே !

ரொம்பப் பெரிய மனிதர்கள் பிரஜா சோஷலிஸ்ட் கட்சித் தலைவர்கள். அசகாய சூரர்கள். இரண்டே இரண்டு சிறிய குறைபாடுகள்தான். தமக்காகவும் தெரியாது; சொன்னாலும் தெரியாது. மற்றபடி மகா மேதாவிகள். ஜனநாயகத்தின் பெருந் தூண்கள்!

தேவிகுளம் முடிவு கண்டு பட்டம் பல்லைக் கடிக்கிறார். தாங்க முடியாத கோபம், கொதிப்பு. கேரள ராஜ்யத்தில் பெரும்பான்மை மக்கள் அறிவீனர்கள் என்று ஆத்திரம் தீரத் திட்டித் தீர்த்து விட்டார். பி. சோ. தனியாகப் போரிட்டால் கம்யூனிஸ்ட் கட்சி தோற்காதே என்று முஸ்லிம் லீகையும், காங்கிரஸையும் கட்டித் தழுவிக்கொண்டு நின்றபோதிலும் அந்த விசித்திரக் காதலைச் சற்றேனும் ரசிக்கத். தெரியாத கேவலம் வாக்காளர்களிடம் ஜனநாயகப் புனித யுத்த வீரர் சீறுகிறார். மூன்று கட்சிகளும் கூட்டு சேர்ந்து ஏக சக்தியாகத் திரள நிச்சயிக்கப்பட்டிருக்கிறது; சீக்கிரத்தில் காட்டுகிறோம் சொரூபத்தை என்று மிரட்டுகிறார். வண்ணானுக்கு வண்ணாத்தி மேல் ஆசை. வண்ணாத்திக்கு...? காங்கிரஸுடன் அட்டைபோல் ஒட்டிக்கொள்ள அவருக்கு ஆசைதான். ஆனால், அந்தப் பொல்லாத காங்கிரஸோ அன்பரைக் காலை வாரிவிடத் தாக்கீது தயாரித்து வருகிறதாமே? பி. சோ. தனியாக இயங்குவதில் இன்னொரு முன்னாள் மந்திரிக்கும் துளியும் நம்பிக்கையில்லை. கம்யூனிஸ்ட் அல்லாத கட்சிகளெல்லாம் கேரளத்தில் காங்கிரஸுடன் இணைய வேண்டியதுதான் என்று அவர் தீர்ப்புக் கூறிவிட்டார்.

இந்த லட்சணத்தில் காங்கிரஸுக்கு ஒரே மாற்று பிரஜா சோஷலிஸ்ட் கட்சியே என்று தேசீய மகாநாட்டில் தம்பட்டம். படாடோபமாகத் தீர்மானங்கள். இவர்களது வருகைக்காகத்தான் ஆட்சி பீடமே காத்திருப்பதுபோல, தலையில் தாமே அட்சதையைப் போட்டுக்கொண்டு, கழுத்தை நீட்டுகின்றன முந்திரிக் கொட்டைகள்! குழந்தைப் பருவத்திலிருக்கும் ஜனநாயகத்தில் பொறுப்புகளும், சோதனைகளும் அதிகரித்து வந்தபோதிலும் இந்தியாவின் தவப்புதல்வர்கள் மிகவும் பொறுமையுடனிருந்து வருவது குறித்துப் பெருமைப்படுகிறது பி. சோ. கட்சி. தனக்கு ஏற்பட்டுள்ள பொறுப்பையே பூரணமாக உணராத ஒரு கட்சியை விட்டு வைத்திருக்கிறார்களே; இந்திய மக்களின் சகிப்புத் தன்மை குறித்து நாமும் பெருமைப் படுகிறோம்!

'கட்சிக்குள் மனஸ்தாபங்கள் அனைத்தும் களையப்பட்டு விட்டன; சோஷலிஸ்டுகள் அனைவரும் ஒன்றுபடுக; காங்கிரஸுக்கு மாற்றாக ஒன்றரை ஆண்டிலேயே வலுப் பெறுவோம்'—கூவுகின்றனர்; கொக்கரிக்கின்றனர். மகாநாட்டுப் பக்கமே தலை காட்டவில்லை பழம் பெரும் தலைவர் ஆச்சார்யர். நிர்வாகக் குழுவில் அவரைத் தலைகாட்ட விடவில்லை பரமானந்த சீடர்கள். நேற்றுவரை சகாவாயிருந்த முரட்டு டாக்டரோ மறுநாளே எள்ளி நகையாடுகிறார். கையாலாகாதது பி. சோ. கட்சி; கம்யூனிஸ்ட் அல்லது சோஷலிஸ்ட் கட்சிக்கு வால் பிடிக்கலாமே யொழிய தனியாக ஆட்சி பீடத்தை அலங்கரிக்கலாம் என்று கனவுகூடக் காண முடியாது என்று துச்சமாகப் பேசுகிறார். சோஷலிஸ்ட் ஒருமைப்பாடுதான் என்னே!

கட்சிக்கும், தலைமைக்கும் கருத்து ஒற்றுமையோ மிகமிக அற்புதம்! 'முன்னுக்குப்பின் முரணானது உங்கள் நடத்தை; சற்றும் தெளிவற்றது'—தலைவர்களது திறமைக்கு உறுப்பினர் வழங்கும் நற்சாட்சி! அவர்களென்ன செய்வர்? கேரளத்தில் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராகக் காங்கிரஸுடனும், பம்பாயில் காங்கிரஸுக்கு-எதிராகக் கம்யூனிஸ்டுகளுடனும் கைகோத்து நிற்பது மக்கள் மனதில் மட்டுமின்றி, அவர்களுக்கும் பெருங் குழப்பம் விளைவிக்கிறது. கேரளத்தில் காங்கிரஸுக்குத் தற்போது மதிப்பே இல்லை என்று படபடக்கிறார் அந்த ராஜ்ய பி. சோ. கிளைத் தலைவர். கம்யூனிஸ்ட் ஆட்சியில் மக்களின் உயிர் உடைமைகளுக்கு மட்டுமின்றி, பெண்டிரின் கற்புக்கும்கூட அபாயம் என்று பதறுகிறார். சட்டத்தின் காவலரது அச்சத்தைச் சிறிதும் பொருட்படுத்தாது ஓட்டுப் போட்டு விட்டனரே, ஊர் ஜனங்கள்!

கம்யூனிஸ்டுகளை இந்நாட்டிலிருந்து அறவே களைந்தெறிய வேண்டுமென்று ஒரு தலைவர் துடிப்பு. அவர்களோடு ஒத்துழைப்பு தவிர்க்க முடியாததாயிற்றே என்று இன்னொருவர் தவிப்பு. தாங்களே கொள்கை வீரர்கள், லட்சியவாதிகள் என்று வார்த்தைகளைக் கொட்டிப் பிரளய மாடுகின்றனர். 'அரசியல் பதவி மோகம் இந்தியாவில் இன்று ஆபாசமான அளவிற்கு வளர்ந்திருக்கிறது' பூமிதான இயக்கத்தில் ஈடுபட்டு, பி. சோ. கட்சியிலிருந்து விலகி நிற்கும் பெருந் தலைவர் அவல நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறார். பொதுவாகத்தான் அவர் பேசினார். உருத் தெரியாது நிலைகுலைந்து நிற்கும் கட்சி, ஒருமுகமான வேலை முறையில்லாத கட்சி, தன்னைப் பின்பற்றும்படி நாட்டு மக்களைக் கோர உரிமையேது? ஆசை வெட்கமறியாது!

சோஷலிஸம் என்று சொற்பந்தல். எவ்வகையான சோஷலிஸம் இந்நாட்டில் நிலவப் போகிறது? உருவான, தெளிவான முடிவுரை ஏற்படவில்லை. பல்லாண்டுகள் சிந்தனையும், சோதனையும் செய்து பார்த்துத்தான் மனத் தெளிவு ஏற்பட வேண்டும். சோஷலிஸ தத்துவம் பற்றி சோஷலிஸ்ட் கட்சிகளிடையேதான் பெருங் குழப்பம் ஏற்பட்டிருப்பதாக முன்னாள் நிதிக் கமிஷன் தலைவர் கூறுகிறார். விநோதமான நிலை. ஜெயப்பிரகாஷ் நாராயணனைத் தலைவராகக் கொண்டவர்கள், சர்வோதய, பூமிதான இயக்கங்களையே சோஷலிஸமாகக் கருதுகின்றனர். மற்றொரு பிரிவினரோ மார்க்கிஸத்தை ஒப்புக்கொண்டு, கம்யூனிஸ்டுகளை வெறுக்கின்றனர்! பகற் கனவு காணாது, பிரத்யட்ச நோக்குடன் நடந்துகொள்ள யாரால் முடியும்? தீரமுடன், சந்தேகமற்ற வகையில் வழிகாட்ட முடியவில்லையென்றால், குட்டை குழப்பாமலாவது இருக்கலாம்.

பி. சோ. கட்சியை நினைத்தாலே, 'அந்தோ, சோஷலிஸமே!' என்றுதான் பரிதாபப்பட வேண்டியிருக்கிறது. போதிய மனோ வளர்ச்சியில்லாத குழந்தைகளுக்கு மருத்துவம் செய்யச் சென்னை பெரிய ஆஸ்பத்திரியில் தனிப் பிரிவு ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கட்சிக்கும் சிகிச்சை செய்ய முடியுமோ? அல்லது சிந்தையை அடக்கிச் சும்மாயிருப்பதே சிறந்தது என்று தாயுமானவர் உபதேசத்தை நினைவுறுத்துவதுதான் சிலாக்யமான மார்க்கமா?

—அரட்டை



★

ஸ்ரீ ஏ. ஏ. சோமயாஜுலுவின் புத்ரி செள. புச்சம்மாளுக்கும் எஸ்டிரில்லா பாட்டரி கம்பெனியைச் சேர்ந்த சிர. எஸ். சுப்பிரமணியத்துக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தேறியது.

★



பிரான்ஸில் 'புரட்சி'

எதிர்பார்த்தபடியே பிரான்ஸில் புரட்சி ஏற்பட்டு விட்டது. அதுவும் அமைதியாக ஏற்பட்டு விட்டது. பிளிம்லின் சர்க்கார் ராஜிநாமா செய்து விட்டது. இதைத் தொடர்ந்து புதிய சர்க்காரை அமைக்குமாறு ஜெனரல் டிகாலை ஜனாதிபதி கோடி கேட்டுக்கொண்டார். சில நிபந்தனைகளுக்கிணங்கினால் தாம் அதிகாரப் பொறுப்பை ஏற்பதாக ஜனாதிபதியிடம் கூறியுள்ளார். அவரும் அதற்கு இசைந்து விட்டார். நெருக்கடியான நிலையில் நாட்டை நடத்திச் செல்ல அவசியமான பூரண அதிகாரங்களை அளிக்க வேண்டுமென்றும், அரசியல் சட்டத்தில் செய்யப்பட வேண்டிய மாறுதல்களைத் தயாரித்து, அவற்றைப் பொதுஜன வாக்கெடுப்பிற்குச் சமர்ப்பிக்கத் தமது சர்க்காருக்குக் கட்டளை கிடைக்க வேண்டும் என்பதே அவரது நிபந்தனைகள். பிரான்சுக் குடியரசின் நன்மைக்காக இந்த நிபந்தனைகளை ஏற்றால்தான் ஆட்சிப் பொறுப்பை தாம் ஏற்க முடியுமென டிகால் கூறியுள்ளார். இப்பூரண அதிகாரம் 6 மாதத்துக்குப் போதுமென்றும், இறுதியில் அரசியலமைப்புத் திருத்தம்மீது ஜன வாக்கெடுப்பு எடுக்கலாமென்றும் அதன் முடிவு என்னவாயினும் தாம் அதிகாரத்திலிருந்து 6 மாதங்கள் ஆனவுடன் விலகி விடுவதாயும் டிகால் கூறியிருக்கிறாராம்.

மந்திரி சபை அமைக்கவிருக்கும் பிரதமர்தான் பார்லிமெண்டிலுள்ள இதர கட்சித் தலைவர்களைச் சந்தித்து மந்திரி சபை அமைப்பு குறித்துப் பேசுவது சம்பிரதாயம். ஆனால், இப்போது ஜனாதிபதி கோடியே மாற்றுக் கட்சிகளை சந்தித்துப் பேசியிருக்கிறார். டிகாலேயின் நிபந்தனைகளைக் கட்சித் தலைவர்களிடம் தெரிவித்து, சுமுகமான ஏற்பாட்டைச் செய்ய முயற்சிப்பது பிரான்ஸ் நாட்டில் முன்பின் அறியாத ஒரு புதுமை. டிகாலேயிடம் அதிகாரத்தை ஒப்படைத்து, நாட்டில் உள்நாட்டுப் போரைத் தவிர்ப்பதே ஜனாதிபதி நோக்கம் என்று கூறப்படுகிறது.

இரண்டாவது மகா யுத்தத்துக்குப் பிறகு பிரான்ஸில் ஏற்படும் 26—வது மந்திரி சபையாகும் இது. பிளிம்லின் மந்திரி சபை ராஜிநாமாவைத் தொடர்ந்து பாரிஸில் குதூகலம் ஏற்பட்டது.

லெபனானில் கலகம் நீடிக்கிறது

மத்யக் கிழக்கில், லெபனானில் சர்க்கார் கோஷ்டிக்கும் எதிர்ப்பாளர் கோஷ்டிக்குமிடையே கைகலப்பு தொடர்ந்து நடைபெறுகிறது. முன்னாள் பிரதமர் சலாம் தலைமையிலான விரோதிகள், தலைநகரான பெய்ருட்டில் பிடித்த பிரதேசத்தை மீட்கப் பிரதமர் சாமி சோலாவின் சர்க்கார் துருப்புகள் முயன்று வருகின்றன. பொது வேலை நிறுத்தத்தை வாபஸ் பெறுமாறு எதிர்ப்பாளருக்கு ரேடியோ மூலம் வேண்டுகோள் விடுத்து. பின்னர் 48 மணி நேரத்திற்குள் சலாம் தலைமைக் கேந்திரத்தைச் சர்க்கார் துருப்புகள் தாக்கின. லெபனான் அதிபரின் கோரிக்கையின்பேரில் லெபனானுக்கு உதவ ஜார்டன் ஆயுதங்களையும், துருப்புகளையும் அனுப்பியுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது.

லெபனானின் உள்நாட்டு விவகாரங்களில் ஐக்கிய அரபுக் குடியரசு தலையிடுவதாயும் இத்தலையீடு நீடித்தால் உலக சமாதானத்துக்குப் பங்கமேற்படும் என்றும் லெபனான் ஐக்கிய நாடுகள் பந்தோபஸ்து சபையில் புகார் தாக்கல் செய்துள்ளது. லெபனான் தகராறில் அரபு லீக் சமரச முயற்சி செய்ய வசதியளிக்கும் பொருட்டு, இராக் பிரதிநிதி கொண்டு வந்த திருத்தப் பிரேரணை ஏற்கப்பட்டு, சபை ஒத்திவைக்கப்பட்டது.

ஜனாதிபதி சாமூன் மீண்டும் பதவியில் தொடருவதை எதிர்க்கட்சியினர் ஆட்சேபிக்கின்றனர். சாமூன் மேற்கு நாடுகளின் நண்பராதலால், அவர் இரண்டாம் முறையாக ஜனாதிபதியாவதை முறியடிக்கும்பொருட்டே 18 நாட்களாகப் பொது வேலை நிறுத்தத்தை எதிர்ப்பாளர் நடத்தி வருகின்றனர். அந்த வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து சர்க்கார் துருப்புகளுக்கும் எதிர்ப்பாளர் கோஷ்டிக்குமிடையே கைகலப்புகள் நடைபெற்று வருகின்றன.

ஜனாதிபதியாக மீண்டும் சாமூன் பதவிக்கு வர வசதி செய்யும் வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்தப் போவதில்லை என்று பிரதமர் சாலோ அறிவித்துள்ளது எதிர்ப்பாளர்களுக்குத் திருப்தியளிக்கவில்லை. சாமூன் பதவி ஆசையை விடாமலிருக்கையில், பிரதமர் இப்படி அறிவிப்பதில் அர்த்தமில்லை. பிரதமரை ஜனாதிபதி நீக்கி விட்டால், இந்தப் பிரதமரின் வாக்கு அடுத்தபடி வரும் பிரதமரைக் கட்டுப்படுத்தாது என்று எதிர்ப்பாளர்கள் கூறுகின்றனர்.

இலங்கையில் பயங்கரம்

இலங்கையில் மொழியின் காரணமாகத் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையே நிலவி வந்த மனக்கசப்பு பயங்கர வகுப்புக் கலவரமாக விசுவரூபமெடுத்து விட்டது. தமிழ் பேசும் மக்கள் தெருவோரங்களிலிருந்தும் கார்களிலிருந்தும் இழுக்கப்பட்டு அடிக்கப்பட்டனர். இந்திய ஹை கமிஷனராலய குமாஸ்தாக்கள் அடித்து நொறுக்கப்பட்டனர். தமிழர்களின் கடைகள் கொள்ளை அடிக்கப்பட்டு, தீ வைப்பு வேலையும் நடைபெற்றது. சிங்களவரின் இந்த வெறியாட்டத்தின் விளைவாக இலங்கை பூராவிலும் நெருக்கடி நிலைமை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதித்வ ஸ்தாபனமான பெடரல் கட்சிக்கும் சமீபத்தில் நிறுவப்பட்ட சிங்கள ஸ்தாபனமான பொராமுன கட்சிக்கும் தடை விதிக்கப்பட்டது. ஆத்திரமடைந்த கும்பல்கள் மீது போலீசார் பன்முறை துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பலர் மாண்டனர். நிலைமை திருந்தி வருவதாகத் தோன்றியதற்கு மாறாக நிலைமை மேலும் மோசமடைவதாகத் தகவல்கள் வருகின்றன. தமிழர்கள் அதிகமாக வாழும் வட மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் ராணுவ பலம் அதிகரிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தின் காங்கேசன் துறை விமான நிலையத்தில் குடியிருப்புகள் தீக்கிரையாக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலிருந்து விமானங்கள் புறப்படவோ அங்கு வரவோ கூடாதென தடை விதிக்கப்பட்டுள்ளது. வட மாகாணத்தில் ஒரு பாலம் வெடி வைத்து நாசமாக்கப்பட்டதாகத் தகவல் வந்துள்ளது. தனிப்பட்ட ரேடியோ டிரான்ஸ்மிட்டர்கள்மூலம் அதிகாரிகளுக்கு எதிராகப் பிரசாரம் செய்யப்படுவதால், தனிப்பட்ட டிரான்ஸ்மிட்டர்களைக் கைப்பற்றச் சர்க்கார் உத்தரவிட்டுள்ளது.

—கே. பி. எஸ்.

கடந்த பத்து வருஷ காலமாகச் செக்கை இழுத்த மாடுபோல் உழைத்துப் பொறுமையின் சிகரமாக விளங்கியதன் பயஞக, பதவி உயர்வுடன் இடம் பெயர்ந்து, அனந்த சயனத்தில் ஆழ்ந்திருக்கும் பத்மனுபனின் இருப்பிடத்திற்கு அடியேன் போய்ச் சேர்ந்தபோது, 'இந்தக் கோள நாட்டில் எந்த 'முக்கில்' போய் தங்குவது ஆண்டவனே!' என்று இதயம் பிரலாபித்த வேளையில் பிரபல எழுத்தாளரான 'கருப்பட்டி'யின் நினைவு என் சிற்றறிவில் சுழன்றதும், 'பிழைத்தேன்! பிழைத்தேன்!' என்று என்னையுமறியாது கூவிக்கொண்டு, குஞ்சம் பலே ஜோராக ஆடும் துருக்கிக் குல்லாவைச் சரிப்படுத்திக்கொண்டு என் எழுத்தாள நண்பரின் இல்லத்தை நோக்கி 'சவாரி' விட்டேன்!

'வாரும் வாரும்...' என்று தமிழனுக்கே உரித்தான இன்முகத்துடன் கரம் நீட்டி வரவேற்ற சிநேகிதர் 'கருப்பட்டி', உடனே ஓலைப் பாயைத் தரையில் விரித்து என்னை அரவணைத்த நித்திரைக்கு வழி செய்து வைத்தார். கொசுக்களின் கோஷ்டி கானம் இரவெல்லாம் என்னை மகிழ்வித்துக் கொண்டிருந்த சுப வேளையில், திடீரென்று வீதியில் உண்டான ஆரவாரத்தைக் கேட்டுச் சட்டென்று எழுந்து நின்ற என்னைக் கண்ட 'கருப்பட்டி', 'இந்த விருச்சிக மாதத்தில் நிகழும் களேபரம்தான் இது சாஹேப்!' என்று நழுவிய வேஷ்டியைப் பிடித்துக்கொண்டு, சுகமாகக் கொட்டாவி விட்டார். 'சரணம்...சரணம்...ஐயப்பா சரணம்... சாமியே சரணம்...ஹரிஹர புத்திரனே சரணம்' என்று முழக்கிக்கொண்டு கருமஞ ஆறுபோல் திரண்டு வந்த கூட்டத்தை ஜன்னலின் வழியாகப் பார்த்ததும், என் நெஞ்சு 'பக்பக்' என்று அடித்துக்கொண்டது.

'சாஹேப்...கருப்புச் சட்டைகளைக் கண்டு 'காப்ரா' ஆகிவிட்டீரோ ஓய்!' என்ருர் நண்பர் மூக்குக் கண்ணாடியைத் துடைத்துக்கொண்டு. தொடர்ந்தார்:—

'ஓய்...நம்ம பக்கத்தில் திருத்தணி வண்டியில் 'கோவிந்தா கோவிந்தா' கூட்டத்தையும், கோடம்பாக்கத்தில் 'வடபழனி அப்பனே!' என்று வாய்விட்டு அரற்றும் கோஷ்டியையும் பார்த்திருப்பீர்கள்! இல்லையா?'

ஆடுபோல் கழுத்தை ஓர் வெட்டு வெட்டினேன் நான்.

''ஐயப்பா சரணம்' என்று கூப்பாடு போடும் இந்தக் 'கருப்புச் சட்டைக்' கூட்டம், சபரி மலைக்குச் செல்லும் பக்தர்கள் சாஹேப்!' என்ருர் 'கருப்பட்டி' தவளைக் குரலில்.

'வருஷ முழுவதும் இப்படித்தானே?' என்றேன் நான், சற்று பீதியுடன்.

'இந்த மலையாளப் பகுதியில் விருச்சிகம், தனு—இந்த இரண்டு மாதங்களிலும்—நாள் தவருது 'வெளுப்பான் காலத்திலும்', 'படு ஞாயிறு வேளையிலும்...'

'அப்படின்னு?'

'அதான் ஓய்...காலையிலும் மாலையிலும் என்று அர்த்தம். ஐயப்பனை 'தர்ம சாஸ்தா' எழுந்தருளியிருக்கும் ஆலயத்திற்குத் தவருது சென்று வழிபட்டும், சைவ உணவை மாத்திரம் அருந்தியும், நெறி பிறழாது இந்த அறுபது நோன்பு நாட்களைக் கழித்தபின், தனு மாதக் கடைசி வாரத்தில் சபரி மலைக்குப் புறப்படுவார்கள் இந்தப் பக்தர்கள். அடர்ந்த காடுகளையும், கரடுமுரடான பாறைகளையும் தாண்டி, கால்நடையில் செல்லும் இந்தப் புண்ணியவான்கள் 'மகர விளக்கு' நாளன்று சபரி மலையின் உச்சியில் எழுந்தருளியிருக்கும் ஹரிஹர புத்திரனை ஐயப்பனின் அருளைப் பெறுவார்கள்...கொடுத்து வைத்தவர்கள் ஓய்!'

'ஓ...அப்படியா சமாசாரம்? அது இருக்கட்டும். தேனினுமினிய தமிழை முழம் முழமாக நீட்டிப் பேசியும், நடுநடுவே ஓய்...ஓய் என்று அன்புடன் அழைக்கிறீரே...அதுதான் எனக்குப் புரியாத புதிராக இருக்கிறது' என்றேன் நான், என் மன வருத்தத்தை நாசூக்காகக் காட்டிக்கொண்டு.

'சாஹேப்...! இந்த அப்பாவியின் மீதும், தாய் மொழி மீதும் குற்றம் சாட்டாதீர். ஒன்பது மாதம் இந்த வட்டாரத்தில் வீசிய 'வாடையை' சுவாசித்த பலன்தான் இது ஓய்!' என்ருர் 'கருப்பட்டி' கலகலவென்று சிரித்துக்கொண்டு.

'இன்னென்றையும் இப்பொழுதே கேட்டு விடுகிறேன் ஸார்...' என்று நான் சொன்னதும், நண்பர் பேந்தப் பேந்த விழிப்பதை ஜாடையாகக் கண்டுவிட்டு மேலும் தொடர்ந்தேன்: 'என்னை இங்கே கொண்டு வந்து தள்ளிய ஜட்காக்காரனிடம் நீர் தமிழில்தானே பேசினீர்?'

'அது மலையாளங்காணும்! தமிழும் சமஸ்கிருதமும் ஒன்று சேர்ந்த நடைங்காணும்!'

'இருக்காது ஸார். தமிழ்தான். ஏதோ நொண நொணன்னு 'ஓங்'கா்ரம் ஒலித்தது. 'அவ்வளவுதான்.'

'ஓய்...இந்த மலையாளப் பகுதியில் வருஷம் பூராவும் ஓயாத மழைங்காணும். மே, ஜூன் மாதங்களை 'இடவப் பாதை' என்று இங்கே சொல்லுவார்கள். அப்போது அடிக்கிற மழையைப் பார்க்கணுமே! பகீரதன் கங்கையை வருவித்த இடம்தான் இது என்று ஆராய்ச்சி இல்லாமல் அடித்துச் சொல்லுவேன்! இங்கே ஒருத்தர் மூக்கு அடைத்துக் கொண்டால் அவ்வளவுதான். விமோசனம் கிடையாது ஓய்!' என்ருர் 'கருப்பட்டி' சற்று உணர்ச்சியுடன்.

'சரிதான்...பைந்தமிழைக் கவின் மலையாளமாக மாற்றிவிட்டது இந்தப் பாழும் மூக்கு என்று சொல்லுங்கோ!'

'ஓய்! உமக்கு ஏன் இந்த வம்பெல்லாம்? ஐயப்பனுக்குத்தான் வெளிச்சம். சும்மா இரும்' என்று அடித் தொண்டையில் சொல்லிக்கொண்டு, தமது கிளி மூக்கை நண்பர் 'கருப்பட்டி' மெல்லச் சொரிந்து கொள்வதற்கும், 'சாமியே சரணம்... ஐயப்பா சரணம்' என்று கோஷித்துக் கொண்டு ஜனக் கூட்டம் வீட்டிற்கு முன்னுல் வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது.

'அதோ பார்த்தீரா... நீல நிற வேஷ்டியும், கருப்புச் சட்டையும், தலைமீது மூட்டையும், அழகான தாடியுடன் கூட்டத்திற்கு முன்னுல் நிற்கிறுரே ஓர் குட்டையான ஆசாமி' என்று எனக்கு அவரைச் சுட்டிக் காட்டிவிட்டு, தொடர்ந்தார் 'கருப்பட்டி':—

'அந்த பக்தர்தான் இந்த நகரத்து பிரபல வைத்தியரான டாக்டர் மாதவ மேனன் ஓய். ஹிந்து தர்மத்தில் நன்ருக ஊறிப்போன வைதீகக் குடும்பத்தில் உதித்த ஓர் இளைஞர், மேல் நாட்டுப் படிப்பாலும், மோகத்தாலும் நாஸ்திகஞக

மாறி, கடைசியில் வாழ்வில் ஏற்பட்ட ஒரு சிறு 'பூகம்பத்தின்' விளைவாக ஐயப்பனின் தாஸராக எப்படி மாறி விட்டார் என்று ஒரு கணம் நினைக்கும்போது...' என்று நண்பர் உணர்ச்சியுடன் சொல்லிக்கொண்டிருக்கும்போது, 'பொஹுத் அச்சா...கதை சொல்வதற்கு 'கருப்பட்டி' அடிகோலுகிருர்' என்று எனக்கு விளங்கிவிடவே, என் குல்லாவும் குஷியுடன் எகிறிக் குதித்தது.

'தெய்வ நம்பிக்கையை உதறித் தள்ளிவிட்டு, மனம் போனபடி வாழ்ந்த இந்த டாக்டர் மாதவ மேனனின் மன நிலையை மாற்றியது உம்மைப்போன்ற ஒரு சாஹேப்தான்!' என்று ஜலவாயு குண்டை நண்பர் தூக்கிப் போட்டதும், அந்தரத்தில் ஓர் பல்டி அடித்தேன், நான். சட்டென்று பெட்டியைத் திறந்தார் 'கருப்பட்டி'. ஒரு கால் வீசை காகிதக் கட்டை எடுத்து என்னிடம் திணித்துவிட்டு, 'டாக்டர் மேனனைப்பற்றிய கதைதான் இது. தூக்கம் என்னை வாட்டுவதால் நீரே இதைப் படித்துவிடும்' என்று சொல்லிவிட்டு, தலையணையை எடுத்து இரண்டு தட்டுத் தட்டிவிட்டு, படுக்கையில் சாய்ந்தார் 'கருப்பட்டி'.

நித்திரா மங்கை அடியேனையும் அணைந்துகொண்டு பேரின்பத்தில் தள்ளுவதால், எழுத்தாளர் 'கருப்பட்டி' அன்புடன் அளித்த அந்தக் காகிதக் கட்டை வாசகர்களிடம் சமர்ப்பித்துவிட்டு, நான் விடை பெற்றுக்கொள்கிறேன்!

ஃ ஃ ஃ

கதை இதுதான்:

வாழ்வில் 'மலை'போன்ற கீர்த்தியைக் குறுகிய காலத்தில் பெற்றுவிட்ட டாக்டர் மாதவ மேனன், கடந்த ஒரு மாதமாக 'ஆழம்'போன்ற வேதனை வாவியில் தத்தளித்துக்கொண்டு இருந்ததற்கு முக்கிய காரணம் 'மலை ஆழம்' என்ற மலையாளப் பிராந்தியத்தில் தம் ஜீவனத்தைத் துவக்கியதுதான் என்று நாம் முடிவு செய்து விடுவது உகந்ததல்ல. உயர்ந்த பட்டங்களையும் கணக்கில்லா விருதுகளையும் வைத்தியத் துறையில் பெற்ற அவரை 'மஹா வைத்தியன்' என்று சகா டாக்டர்மார்களே போற்றி வந்த காலத்தில், ஒரு அற்ப சிக்கலான பிரச்னையில் சிக்கிக்கொண்ட அன்னுருடைய உள்ளம் பலே ஜோராக 'கதகளி' ஆடுவதை அறிந்துகொள்ளப் பலர் தவறிவிட்டார்கள்!

திருவனந்தபுரத்தில் வழுதைக் காடு என்ற பகுதியில் தென்னையும் கமுகமும், காச்சில், சேய்க் கிழங்கு, சேனக் கிழங்கு செடிகளும் மண்டிக் கிடந்த சிவப்பு நிறக் கொயிலான் ஓடுகள் அலங்கரித்த எழில் கொழிக்கும் சிறிய பங்களாவில் 'தாமஸித்து' வந்த டாக்டர் மாதவ மேனனின் மாத வருவாய் 'கஞ்சி வெள்ளம்' வயிற்றை வளர்க்கும் பிராந்தியத்தில் ஆயிரம் ரூபாய்க்கு ஒரு 'சக்கரம்'கூடக் குறையாமல் இருந்தது என்ற ரகசியத்தை மாத்திரம் மயிலையில் எழுந்தருளியிருக்கும் டாக்டர்கள் மாத்திரம் அறிந்திருப்பார்களாகுல், தங்கள் தங்கள் 'ஸ்டெதஸ் கோப்பு'களைத் தூக்கியெறிந்துவிட்டு, 'ஏ கபாலீஸ்வரா!' என்று நெடுமூச்சு விட்டிருப்பார்கள். எளிய குடும்பத்தில் உதித்த டாக்டர் மேனன், இந்த உன்னத நிலைக்கு வருவதற்கு மூல காரணகர்த்தாவாக இருந்தவர் அவர் குடும்ப நண்பராயிருந்த சாஸ்தமங்கலம் குஞ்சு முகம்மது சாஹேப்தான்!

ஒரு 'இலை அப்பத்திற்கும்' ஒரு துண்டு 'வல்சன்' பணியாரத்திற்காகவும் சந்து முக்குகளிலிருந்த சாயாக் கடைகளைப் பார்த்துக் கீழ்உதட்டை நாவினுல் தடவி, பசியை அடக்கிக்கொண்டு திரிந்த இளைஞர் மாதவ மேனனின் சாதுர்யத்தையும், மதியின் கூர்மையையும் கண்ட குழந்தை

குட்டிகளில்லாத குஞ்சு முகம்மது, 'இந்தப் பாலகனை நேந்திரங்காய் விற்பதற்கும், 'சாயா' கடையைத் திறப்பதற்கும் விட்டுவிடக் கூடாது. நன்றாகக் கல்வி புகட்டி முன்னுக்கு வரச் செய்ய வேண்டும். எஞ்சி நிற்கும் சொத்தை இதற்காகச் செலவழித்துவிட்டால், மக்காவிற்கு 'ஹஜ்' புண்ணிய யாத்திரை செய்தது போலாகும்' என்று உள்ளத்தில் தீர்மானித்துக்கொண்ட சுப நிகழ்ச்சி, மாதவ மேனனின் விதியின் 'தமாஷா' என்றே முடிவு கட்ட வேண்டும். அச்சிறுவனின் பெற்றோர்களின் சம்மதத்தைப் பெற்று, தம் லட்சியத்தை செய்கையிலும் காட்டி விட்டார் குஞ்சு முகம்மது. பதினெட்டு வருஷ காலமாக அத்தயாளர் செய்த தொண்டின் பயனாக மாதவ மேனன், டாக்டர் மாதவ மேனன் எம். பி. பி. எஸ். என்ற பலகையுடன் புது உலகில் பிரவேசித்தார். பரீட்சையில் பல பரிசுகளுடன் தேர்வு பெற்றதால். மேல் நாட்டு வைத்தியத் துறையில் மேலும் பல பட்டங்களை அவர் பெற வேண்டும் என்று கருதிய சர்க்கார், தன் அன்புக் கரத்தையும் அவர்பால் நீட்டி விட்டது.

டாக்டர் மாதவ மேனன் இங்கிலாந்து போய்ச் சேர்ந்தார். எல். ஆர். ஸி. பி., எம். ஆர். ஸி. எஸ். பட்டங்களைப் பெற்றுக்கொண்டு, தாய்நாட்டுக்குக் கப்பலேறினார். பெட்டி படுக்கையுடனும், புத்தக மூட்டைகளுடனும் பாரத நாட்டுக் கடற்கரையில் அவர் காலடியெடுத்து வைத்தபோது, அவருடன் ஒன்றி நின்ற அகம்பாவமும், மண்டை கர்வமும் கூடவே சேர்ந்து இறங்கின. தாம் ஒரு புதிய மனிதர் என்ற விசித்திர 'சைத்தான்' எண்ணம் அவர் நெஞ்சைக் கௌவியிருந்த காரணத்தினால், தனக்கு உபகாரிகளாயிருந்தவர்களின் ஞாபகமே அவருக்கு இல்லாமற் போனது விந்தையிலும் விந்தையாகும். 'திண்ணைத் தூங்கியாக இருந்த தன்னை, மகன்போல் வளர்த்து ஆளாக்கிய குஞ்சு முகம்மது என்ற ஒருவர் இருக்கிறாரா?' என்ற சந்தேக எண்ணம்கூட அவர் அறி

ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு வருஷ பலன் மாதவாரி எழுத ரூ 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூபா. 2. ஜாதகப் அல்லது எழுதும் நேரம் தேவை

பண்டித காழியூர்

ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்

தபோ நிதி

தியாகராய நகர், மதராஸ்-17

தபால் பெட்டி 1417



வில் தலை விரித்தாடிற்று! அத்தகைய மன நிலையில், ஈசுவரன் சயனித்திருந்த தலத்தில், டாக்டர் மாதவ மேனன், மார்த்தாண்ட ராஜாபோல் வாழ் நாட்களைப் போக்கிக்கொண்டிருந்த காலத்தில், அவர்முன் பரட்டைத் தலையுடனும், பஞ்சடைந்த நயனங்களுடனும் ஓர் பாலகன் ஆஜரானான்.

'யார் நீ?'—அதட்டினார் மாதவ மேனன்.

'தாத்தா சீக்காகக் கிடக்கிறார். உங்களைக் கையோடு கிராமத்திற்கு அழைத்து வரச் சொன்னார்!' என்றான் சிறுவன் நடுங்கும் குரலில்.

'வேறு பெரியவர்கள் யாராவது உன்னோடு வந்திருக்கிறார்களா?' என்றார் மேனன் இமைகளை இறுக மூடிக்கொண்டு.

'இல்லையே ஸாரு. நான் சாஸ்தமங்கலம்.'

'நீ போய் அவர்களைப் பணத்தோடு வரச் சொல்லு'—கீழ் உதட்டை மெல்லக் கடித்துக்கொண்டார் மேனன்.

'எங்க குடும்பம் ஏழையாய் போயிடிச்சுங்க. இடியப்பம் வாங்க ஒரு 'சக்கரமும்' நேந்திரக்காய் வாங்க ஒரு 'காசும்' எங்க கிட்ட இல்லே ஸாரு'—என்றான் பையன் பரிதாபகரமான தொனியில்.

'இது என்ன தர்ம வைத்தியசாலையா? போ...போ... என்னால் வரமுடியாது என்று சொல்லிவிடு!' இரைந்தார் மேனன் சினமுடன்.

'எங்கள் தாத்தாவுக்கு உங்களை நன்றாகத் தெரியுமாம்லே. அவரு பேரு குஞ்சு முகம்மது ஸாரு'—பிஞ்சு விரல்களினால் தன் கண்களைக் கசக்கினான் சிறுவன்.

'குஞ்சு முகம்மதோ...முகம்மது குஞ்சோ. எந்தக் கோழிக் குஞ்சும் எனக்கு ஞாபகமில்லை, போய்விடு' என்று ரௌத்ராகாரமாகக் கர்ஜித்துவிட்டு, அந்தச் சிறுவனை 'இரக்கமற்ற பிரபஞ்சத்தில்' தவிக்க விட்டுவிட்டு, தடதடவென்று மாடிப் படிகளில் ஏறினார் டாக்டர் மாதவ மேனன். இந்தத் துயரம் தோய்ந்த நிரல் நிகழ்ந்து ஒரு மாதம் சென்றபின், டாக்டர் மாதவ மேனனின் வாழ்வில் 'ஆழம்' கண்டது!

தம் ஒரே மைந்தனை அப்புக்குட்டன் நாளுக்கு நாள் துரும்பாக இளைத்துப் போவதைக்கண்ட டாக்டர் மேனனுக்கு, உண்மையில் திகிலுண்டாயிற்று. எத்தனையோ 'பரீக்ஷைகள்' நடத்திப் பார்த்தும் நோயின் தன்மையை அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. தனயனின் தளிர்மேனியில் ஏற்றாத ஊசிகள் இல்லை; தொண்டைக்குள் தள்ளாத மாத்திரைகள் இல்லை. எட்டாத தொலைவுக்கெல்லாம் சென்ற எண்ணங்கள், கொட்டாவி விட்டு மறைவதைக் கண்டு 'காப்ரா' அடைந்த மேனன், விரல்களை நொடித்துக்கொண்டும், வழுக்கைத் தலையைச் சொரிந்துகொண்டும், உன்மத்தம் பிடித்தவர்போல் நாட்களை உதறி வந்தார். மேல்நாட்டு வைத்திய முறையிலும், பகட்டு நாகரிகத்திலும், நாஸ்திகப் பண்பாட்டிலும் திளைத்து நின்ற அவருக்கு, ஆயுர்வேதம், யூனானி, மந்திரம், தெய்வ பக்தி போன்ற 'கண்ட்ரி' முறைகளில் நாட்டம் செல்லவில்லை. இந்த மேதினியின் வழக்கப்படி அந்த மேதாவிக்குப் பாரியாளாக அமைந்த ஏட்டுக் கல்வியறிவில்லாத பட்டிக்காட்டு வாசியான சந்திரவதனா, 'இந்த 'உன்னி'யை எடுத்துக்கொண்டு சபரிமலைக்குப் போவோமே. ஐயப்பன் அருள் கிடைக்கும்' என்று தன் இளநெஞ்சில் வட்டமிட்ட அந்தரங்க அவாவைக் கூறுவாள். 'ஐயப்பனாவது!... சரணமாவது! அடி பேதை!' என்று ஏளனமாகக் கலகலவென்று சிரிப்பார் மேனன். அந்த மூடக் கொள்கைகளின்மீதுள்ள தம் வெறுப்பைக் காட்டுவதுபோல் தம் துணைவியின்மீது ஆத்திரங்கொண்டு ஆர்ப்பரிப்பதும் அவருக்கு சகஜமாயிருந்தது.

ஒரு வாரம் குழப்பத்தில் ஆவியாகி விட்டது.

ஃ ஃ ஃ

தாம் படுக்கையைவிட்டு எழுவதற்கு முன்பே தன் வாழ்க்கைத் துணைவி அப்புக் குட்டனை அழைத்துக்கொண்டு வீட்டை விட்டு எங்கேயோ கிளம்பி விடுவதையும், பகலவனின் பொற்கதிர்கள் தம் மனையைத் தீண்டுவதற்கு முன் அவள் வீடு திரும்பி விடுவதையும் நான்கைந்து நாட்களாக மௌனமாகக் கவனித்து வந்த மாதவ மேனனுக்கு, ஒரே புரியாத புதிராக இருந்தது.

ஐந்து காத தூரத்திலுள்ள பத்மனாப சுவாமியின் சந்நதிக்குச் சென்று, அவ்வளவு குறுகிய காலத்தில் திரும்பி விடுவது எவராலும் சாத்யமில்லை! மேலும் மஹாராஜா தினமும் வைகறையில் அங்கே விஜயம் செய்து, சுவாமி தரிசனம் முடித்துவிட்டுத் திரும்பும் காரணத்தால் பிறர் அவ்வேளையில் அங்கே செல்வது சாதாரண விஷயமல்ல என்பது மேனனுக்குத் தெரிந்த விஷயமாகும். பின் எங்கே சந்திரவதனா செல்கிறாள்? ஏன் இப்படி நாள்தோறும் போகிறாள்? ஒருக்கால் தன்மீது நம்பிக்கையை இழந்துவிட்ட அந்தப் 'பெற்ற வயிறு' மற்றொரு வைத்தியனை நாடிச் செல்கிறதா! அதே சமயத்தில் மகன் அப்புக்குட்டனின் தேகநிலை நாளுக்கு நாள் அபிவிருத்தியடைந்து வருவதைக்கண்ட மேனனுக்கு, ஒரே வியப்பாக இருந்தது. எப்படியாவது இந்த 'மர்மத்தை' அறிந்துகொள்ள அவர் உள்ளம் படாதபாடு பட்டது. இந்த ஒரு 'கவலை' அவ்விரவை நித்திரையின்றிக் கழிக்கும்படிச் சதி செய்து விட்டது என்று தீர்மானித்து விடலாம்!

பலபலவென்று பொழுது புலரும் சமயத்தில் புள்ளினங்களின் உதயகானத்தைச் செவிமடுத்த டாக்டர் மாதவ மேனன், சட்டென்று கட்டிலை விட்டுத் துள்ளியெழுந்தார். வெளிக்கேட்டு 'கிரீச்' என்று எழுப்பிய ஒலியைக் கேட்டு, மாடிச் சுவரை இரண்டு தாவுத் தாவி நெருங்கினார். குழந்தையை இடுப்பில் தூக்கிக்கொண்டு தும்பைப் பூ போன்ற தூய உடையுடன் எதிர்ப்புற ரஸ்தாவில் சென்றுகொண்டிருந்த சந்திரவதனாவின்மீது அவர் பார்வை வீழ்ந்ததும், உடனே அவ்விடத்தை விட்டு அகன்று, மேல்துண்டைத் தோளில் போட்டுக்கொண்டு விறுவிறுவென்று மாடிப் படிகளை விட்டிறங்கி, தம் துணைவியைப் பின் தொடர்ந்து செல்லலானார். ஆறு, ஏழு வீதிகளையும் கடந்து, பாளையம் என், பகுதியில் தன்னையுமறியாது செருப்புகூட இல்லாமல் கால் நடையில் வந்துவிட்டதை உணர்ந்ததும், டாக்டர் மேனனுக்கு யாவும் பகற்கனவுபோல் தென்றிற்று.

இடுப்பில் துலங்கிய குழந்தையுடன் சந்திரவதனா அப்பகுதியிலிருந்த மசூதிக்கு முன்னால் ஆவல் தோய்ந்த கண்களுடன் யாரையோ எதிர்பார்த்துக்கொண்டு சோர்வுடன் நின்றுகொண்டிருந்ததை மறைவான இடத்திலிருந்து பார்த்துவிட்டதும், மேனனின் தலை கிறுகிறுத்தது. இந்த 'வெளுப்பான் காலத்'தில் முஸ்லிம்மார்களின் பள்ளிவாசலுக்கு முன்னால் இவள் ஏன் நிற்க வேண்டும்? பத்மனாபனின் தாஸனுக்கு இங்கே என்ன ஜோலி கிடக்கிறது? சபரிமலை பக்தனுக்கு இந்த இடமா? குலாம் காதருக்கும் கோகுலாஷ்டமிக்கும் சம்பந்தமா? சிரத்தை இறுகப் பிடித்துக்கொண்டு 'காஷாண்டித்' தலையான தம் வழுக்கைத் தலையை உருட்டித் தடவிக்கொண்டு பேந்தப் பேந்தக் கோட்டான்போல் விழித்தார் மேனன்.

மசூதியில் சலசலப்பு உண்டாயிற்று. குல்லாக்களையும் துப்பட்டாக்களையும் அணிந்த பாய்மார்கள் ஒருவர் பின் ஒருவராக வெளியே வந்துகொண்டிருந்த காட்சி 'நமாஸ்' முடிந்து விட்டதைப் பறை சாற்றியது. வலைத் தொப்பியையும், பஞ்சவர்ண லுங்கியையும் தரித்த ஓர் வயோதிகர், படிக்கட்டுகளை விட்டுத் தள்ளாடித் தள்ளாடி இறங்கியதும், குழந்தையுடன் சந்திரவதனா மிக்க பணிவுடன் அவ்வரை நெருங்குவதையும், அந்தக் கிழவர் ஏதோ ஜபித்துவிட்டு, அப்புக் குட்டனின் உச்சிமீது ஊதுவதைக் கண்டதும் டாக்டர் மாதவ மேனனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவர் தம் கண்களையே நம்பவில்லை. கால்கள் பின்னிக்கொண்டன. நெற்றி வியர்த்தது. நெஞ்சம் படபடத்தது. இழந்த தைரியத்தை வலுவில் மீட்டுக்கொண்டு, அடிமேல் அடி வைத்து அங்கே அவர் நெருங்கியதும்

'அஸ்ஸலாமு அலைக்கும் டாக்டர் சாஹேப்! வாங்கோ... வாங்கோ' என்று புன்சிரிப்புடன் வரவேற்றார் அக்கிழவர். வெடுக்கென்று கழுத்தைத் திருப்பிய சந்திரவதனா, தன் கணவன் மருங்கில் நிற்பதைக் கண்டு திணறிப் போனாள்.

'நீங்களா! இங்கே எப்படி வந்தீர்கள்?'

'இப்பெரியவர் ஓதிவிட்டு ஊதிய ஜபம் தான் நம் அப்புக்குட்டனைக் காப்பாற்றியது. நம் வேலைக்காரி சுராஜாவின் பையனும் இப்படித்தான் சீக்காகக் கிடந்தானாம். அவளும் இங்கே வந்து குழந்தைக்கு மந்திரம் ஓதிப் போவாளாம். அவள் இதைச் சொன்ன பிறகுதான் நான் இங்கே வரலானேன். நீங்கள் கோபிப்பீர்கள் என்று இதை நான் உங்களிடம் மறைத்து வைத்தேன்' என்று சந்திரவதனா தயங்கித் தயங்கிப் பகர்ந்தபோது, அப்பேதையின் வாய் குழறியது. அவள் கூறின ஒவ்வொரு சொல்லும் மாதவ மேனனின் இதயத்தைத் துளைத்தது. அவர் நினைவெல்லாம் எங்கேயோ புதைந்து கிடந்தது.

'டாக்டர் சாஹேப், இந்த நேரத்தில் உங்களைச் சந்தித்தது அல்லாவின் செயல் தான்' என்றார் கிழவர்.

என் குழந்தைக்கு உயிர்ப் பிச்சை கொடுத்தவர் தாங்கள்தானா?' என்றார் மேனன் ஹீனக் குரலில் ஒரே பதற்றத்துடன். இதயம்துடித்தது.உடல்குறுகியது.

'சே...அப்படிப் பேசாதீர்கள் டாக்டர். அந்த ஆண்டவனிடம் நன்றியைத் தெரிவியுங்கள்' என்றார் கிழவர் நிதானமாக. மேனனின் விழிகள் கலங்கின. பெருமூச்சு உடலை உலுக்கியது. அங்கங்கள் வெடவெடவென்று அடித்துக்கொண்டன. அப்பெரியவரின் இரு கரங்களையும் இறுகப்பற்றித் தம் கண்ணில் ஒற்றிக்கொண்டு, நா தழுதழுக்க, 'இந்த மஹாபாதகனின் குடும்பத்திற்கா நீங்கள் கருணை காட்டினீர்கள்!' என்றார். தொடர்ந்தார் மேனன்: 'மகனைப்போல் என்னை வளர்த்து, பணத்தை வெள்ளம் போல் வாரியிறைத்துக் கல்வி புகட்டி, இந்த நிலைக்கு என்னைக் கொண்டு வந்த உபகாரியாகிய தங்களுக்கு, எப்படிப் பட்ட துரோகம் நான் இழைத்து விட்டேன்? படுத்த படுக்கையாகக் கிடக்கிறீர்கள் என்று உங்கள் பேரன் தன் பிஞ்சு விரல்களினால் என்னைப் பிடித்து இழுத்தபோது, மமதையாலும் மண்டைக் கர்வத்தாலும் மதியை இழந்த நான், அந்தப் பாலகனை விரட்டி விட்டேன். இந்தப் பாவியை நீங்கள் மன்னித்தால் தான், என் மீதி வாழ்நாள் அமைதியாகக் கழியும். இந்தக் கணமுதல் நான் பழைய மாதவனாக மாறிவிட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள்...மன்னித்துவிடுங்கள்'—என்று உணர்ச்சி தாளாது கதறிய டாக்டர் மேனனை, அப்படியே மார்போடு இறுகத் தழுவிக்கொண்டார், குஞ்சு முகம்மது.

'அருமை மாதவ! 'இன்ஸானின்' வாழ்வில் சர்வசாதாரணமாக நிகழும் அத்தியாயங்களில் இதுவும் ஒன்றுதான்! வருந்தாதே! நான் உனக்குக் கூறப்போவது ஒன்றுதான். அவரவர் சமயம் காட்டிய மார்க்கத்தையும், அந்த 'தயாளன்' மீதுள்ள நம்பிக்கையும், செய்த உபகாரத்தை மறவாமையும்—ஒருக்காலும் புறக்கணித்து விடாதே!' என்று இதமாக இயம்பிவிட்டு, புன்சிரித்தவண்ணம் அவ்விடத்தை விட்டு அகன்றார் சாஸ்தமங்கலம் குஞ்சு முகம்மது.

ஃ ஃ ஃ

'ஓய் படித்து விட்டீரா கதையை!' என்று நண்பர் 'கருப்பட்டி' என்னை உருட்டி எழுப்பியதும், 'கதையா! எங்கே அது?' என்று அலறிப் புடைத்துக் கொண்டு விழித்தேன் நான்.

'சரிதான். அனந்தசயனத்தில் ஆழ்ந்து விட்டீரோ! தொலையட்டும்; இதுவரை டாக்டர் மாதவ மேனனும் அவரது கோஷ்டியும் சபரிமலையை அடைந்திருப்பார்கள்' என்றார். 'கருப்பட்டி' ஜமக்காளத்தை உதறிக்கொண்டு ஒன்றிரண்டு மூட்டைப் பூச்சிகளை சுழலும் விழிகளுடன் ஆவலுடன் அவர் நோக்கிக்கொண்டிருந்தபோது, செம்மறியாடு திருடின 'வஸ்தாத்'போல் திருதிருவென்று விழித்தேன், கும்பகர்ணனான அடியேன்!

SAGAR

4 PILLS FOR MAKING MONTHLY PERIODS OF LADIES REGULAR AND PREVENTING CHILD BIRTH RS. 10/-, SUPER RS. 15/-

ELECTRIC PILL

NERVE TONIC RESTORES YOUTHFUL VIGOUR, ENERGY. ACTIVITY SPIRIT. MAKES LIFE HAPPY. COURSE 50 PILLS RS. 7/-, EXTRA SUPER RS 10/-

PTHILIN TABLET

SAVES THE LIFE WHEN TAKEN AT FIRST STAGE BY REMOVING SLOW FEVER, COUGHING, BLOOD IN COUGH. RS. 5/-

DIABETIN TABLET

ATOM BOMB OF DIABETES WITH SUGAR AND WITHOUT SUGAR RS 5/-

(A Reserch Home. Cent percent benefit)

ORIENTAL MEDICAL HOME

3A, Sagar Dutt Lane,

Calcutta-12

சங்கீத உலகில் பிரபலமான சங்கீத கலாநிதி மைசூர் வாசுதேவாச்சாரியாரின் பிறந்த தினத்தை தலைநகர் இசை அபிமானிகள் சிறப்பாகக் கொண்டாடி, அவரது பணியைப் பாராட்டி வாழ்த்துக் கூறினார்கள். தில்லி கலாசார மன்றத்தின் ஆதரவில் நடந்த இந்த நிகழ்ச்சிக்கு ராஜ்ய சபாவின் துணைத் தலைவர் ஸ்ரீ எஸ். வி. கிருஷ்ணமூர்த்தி ராவ் தலைமை தாங்கினார். ரேடியோவில் கர்நாடக இசைப் பகுதியின் தலைவரான ஸ்ரீ டி. கே. ஜயராமய்யர், ஸ்ரீ வாசுதேவாச்சாரியாரின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைத்தார். 'அபூர்வமான சாஹித்தியங்களை இயற்றி பெரும் புகழ் கொண்டுள்ள அவர், சங்கீதத் துறையில் உயர் நிபுணராகவும் சாஸ்திரங்களையெல்லாம் நன்கு பயின்ற அறிஞராகவும் ஸம்ஸ்கிருதத்தில் நல்ல பாண்டித்யம் மிக்கவராகவும் விளங்குகிறார்' என்று ஸ்ரீ ஜயராமய்யர் கூறினார். 'அவரது சாகித்யங்கள் உள்ளத்தைத் தொடுபவை; அபூர்வ சிருஷ்டிகள்' என்று அவர் பாராட்டினார். ஸ்ரீ வாசுதேவாச்சாரியார் விளம்பரப் பிரியரல்லர்; சில ஆண்டுகளுக்கு முன் சங்கீத நாடக அகடெமி கௌரவித்தபோதும், அவர் விளம்பரத்தை மறுத்தார் என்றும் ஸ்ரீ ஜயராமய்யர் சொன்னார்.

நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய ஸ்ரீ எஸ். வி. கிருஷ்ணமூர்த்தி ராவ், இசை மேதையின் சிறப்புப் பணியைப் பாராட்டினார். மைசூர் மன்னர்களை ஆதியில் அவர் கவர்ந்ததையும் மன்னர்களின் போஷாதரவுக்குப் பாத்திரமானதையும் அவர் குறிப்பிட்டார். திறன் மிக்க இசைப் பேரறிஞர் ஒருவரை தமது கலாக்ஷேத்ரத்தில் பணி ஆற்றுவதற்காகக் கொண்ட ஸ்ரீமதி ருக்மிணி தேவி அருண்டேலையும் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ராவ் பாராட்டினார். சங்கீத கலாநிதி பல ஆண்டு காலம் திடஆரோக்யத்துடன் வாழ்ந்து மேன்மேலும் சிறப்புப் பணி ஆற்றி வரவேண்டும் என்றும் அவர் வாழ்த்தினார்.

சங்கீத நிபுணரைப் பாராட்டியதோடு நின்றுவிடாமல், அவரது அமர சாஹித்

தலைநகர்த் தபால்

யங்கள் சிலவற்றை, பிரமாதமான சாரீரமும் நல்ல இசை ஞானமும் கொண்ட அவரது சிஷ்யை ஒருவர் உணர்ச்சியுடன் பாடுவதற்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள். அடையாறு கலாக்ஷேத்ரத்தில் இசைப் பயிற்சி அடைந்தவரும் தில்லிப் பாடகிகளில் சிறப்பானவருமான ஸ்ரீமதி மணி கிருஷ்ணஸ்வாமி, தமது ஆசிரியரின் பாடல்கள் சிலவற்றை அபூர்வ ராகங்களில் பாடிக் காட்டி மகிழ்வித்தார்.

ஃ ஃ ஃ

இந்தியாவின் தொழில், வர்த்தகம், கலை, கலாசாரம் ஆகியவற்றையெல்லாம் நன்கு விளக்கவல்லதாக, இவ்வருஷம் அக்டோபர்–நவம்பர் மாதங்களில், அகில பாரதக் காட்சி ஒன்று தலைநகரில் ஏற்பாடாகப் போகிறது. மத்ய நிதி இலாகாவும் வர்த்தகத் தொழிலியல் இலாகாவும் கூட்டாக ஏற்பாடு செய்யும் இந்த காட்சியில், நாட்டில் உள்ள பல்வேறு தொழில் வகைகளுக்கும் நிறைவேறிவரும் அபிவிருத்தி வேலைகளுக்கும் நல்ல முக்யத்வம் அளிக்கப்படும். இந்தியப் பண்டங்கள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாவதற்கும் ஊக்கம் அளிக்கும் வகையில் அது அமைந்திருக்கும். இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்தை இணைப்பான முறையில் விரிவாக விளக்கும் இந்தக் காட்சி, வெளி தேச வர்த்தகர்களுடனும் தொழில் அதிபர்களுடனும் இந்தியா தொடர்பு கொள்ளவும் வகை செய்வதாயிருக்கும். சர்வதேச சீரமைப்பு அபிவிருத்தி பாங்கி, சர்வதேச நிதிக் கார்ப்பொரேஷன், சர்வதேச நிதி ஸ்தாபனம், சர்வதேச விமானப் போக்குவரத்து ஸ்தாபனம் ஆகிய ஐக்கிய நாடுகள் ஸ்தாபனங்களின் வருஷாந்திர மகா நாடுகள் புதுடில்லியில் நடைபெற விருப்பதைப் பயன்படுத்திக்கொண்டு, அரசாங்கம் இந்தப் பெரிய காட்சிக்கு ஏற்பாடு செய்யப் போகிறது; பாரத நாட்டின் எல்லா அம்சங்களையும் வந்திப் பார்த் அமையவிருக்கும் இத்தகைய அவரால் முதல்தரமானதாக இருக்குலே. தனைய பார்க்கலாம்.

ஃ ஃ

?த ஊசிகள்
ளாத மாத்

தலைநகரின் முக்கிய பகு தொலைவுக் கொலை, களவு, கொள்ளை ப்கள், கொட் ளது. பட்டப் பகலில் கத்திக் கண்டு கொள்ளையடிப்பது சில நாட் விரல்களை மாகிவிட்டது. கரோல்பாக்கைத் தலை ரில் மூன்று நான்கு வ உன்மத்தம் கொலை, கொள்ளை சம்பவங் உதறி வந் தாக தினம் செய்திகள் வநமுறையிலும், யிருக்கின்றன. ஆயிரக்கணக்ஸதிகப் பண் வசிக்கும் இந்தப் பெரும் அவருக்கு, பரவியிருக்கும் பீதியைப் ரம், தெய்வ உயிருக்கும் உடைமைகளுக்குமுறைகளில் முண்டா? மாபெரும் இந்தியக மேதினி ரில் நீதியும்பத்திரமுமிருக்கி தாவிக்குப் கூடத் திகைப்புறும் நிலை கல்வியறி ளது. காலிகளின் அட்டகாசம் அான சந் விற்கு பெருகியிருக்கிறது. ந்துக்

இதோ ஒரு உதாரணம்:—கரோ ாமே. தேவ் நகரில் சென்ற திங்கட்கி தன் யன்று நான்கு பேர் கடை ஒன்று ங்க திடும் பிரவேசம் செய்து, கடை ு!... லாளியை கல்லாப் பெட்டியிலிருளன பணத்தை எல்லாம் கொடுத்துவிடும் ன். கத்தியைக் காட்டி மிரட்டினார்கள். முள லாளி முடியாதென மறுக்கவே அவர் முதுகில் கத்திக்குத்து விழுந்தது. வெளியே நூற்றுக்கணக்கான பேர் திரண்டிருந்தார்கள் எனினும் ஒருவராவது துணிந்து தலையிட முன் வரவில்லை; அந்த அளவிற்கு அந்தப் பகுதியில் பீதி நிறைந்திருக்கிறது. பணம் பறிக்கும் குண்டர்களிடமிருந்து தம்மைப் பாதுகாப்பதற்குத் தகுந்த வசதிகள் இல்லாதிருப்பதைக் கண்டிப்பதற்கு, அந்தப் பகுதியிலுள்ள வர்த்தகர்கள் தமது கடைகளை பல வாரங்களாக மூடியிருந்தார்கள். பின்னர் அரசியல் தலைவர்களும் ஸ்தலப் பிரமுகர்களும் பந்தோபஸ்து கிடைக்கும் என்று உறுதி கூறிய தன்பேரில், மீண்டும் கடையைத் திறந்தார்கள். ஆனால், வியாழக்கிழமை யன்று ஒரு டீக் கடைக்குள், சில பேர் நுழைந்து டீ அருந்திவிட்டு முதலாளியுடன் சச்சரவு ஒன்றை கிளப்பி அதன்மூலம் எழுந்த சண்டையில், முதலாளியின் தம்பியை குத்திவிட்டுப் போய்விட்டார்கள்.

இவற்றிற்கு போலீசாரின் திறனின்மையே காரணமாகும் என்று பலர் கருதுகிறார்கள். ஆனால், காலிகளின் தொகை பெருகிவிட்டதாகவும், அதன் விளைவாக கரோல்பாகில் நிலைமையை சமாளிக்கும் அளவிற்குப் போலீஸ் படை போதிய அளவில் இல்லை என்றும் கூறுகிறார்கள். மூன்று லட்சம் பேர் வசிக்கும் பெரிய பகுதியான கரோல்பாகிற்கு சுமார் நூறு போலீஸ்காரர்கள் போதுமா?—என்கிறார்கள். எப்படியாயினும் தலைநகரில் இந்த அவலநிலை நீடிப்பது குறித்து வெட்கித் தலைகுனிய வேண்டியிருக்கிறது.

☆



—— ✶ ——

இயற்கை வைத்திய நிபுணர் ஸ்ரீ லக்ஷ்மண சர்மாவை தலைநகரில் குதூகலமாக வரவேற்றார்கள்.

—— ★ ——

அவர் உ
இந்த ஒரு
ரின்றிக் க
டது என்று
பலபலவெ
யத்தில் பு
தைச் செ
மேனன், ச
துள்ளியெழு
'கிரச்' என்
கேட்டு, மா
தாலி நெரு
பில் தாக்
போன்ற
ஸ்தாவில்
திரவதனுவ
நத்தும், உ
அகன்று,
டுக்கொண்
படிகளை
பின்
ஏழு
என்
செரு
வத
மே
தோ
ச

பாடலால் பெயர் பெற்றவர்கள்

மா. ரா. இளங்கோவன்

ஓரிற்பிச்சையார்.

சகுனம் பார்த்தல் நம்மிடையே ஊறியுள்ள பழக்கமாகும். நாம் மேற்கொள்ளும் செயல்கள் வெற்றியளிக்க வேண்டுமே யென்பதால்தான் அச்செயல்களை நல்ல சகுனத்தில் தொடங்க வேண்டும் என்னும் விழைவு ஏற்படுகிறது. கோவலன் கண்ணகியின் காற்சிலம்பையேந்தி மதுரை நகர்க்குள் நுழையும்போது, அவனை எதிர்க்கின்றது ஏறு ஒன்று. ஆனால், கோவலன் அதுபற்றிக் கவலைப்படாமல் தொடர்ந்து செல்கின்றான்; குற்றவாளி என்று குற்றம் சாட்டப்பட்டுக் கொல்லப் படுகின்றான். கோவலன் அந்நகர்க்குள் சிலம்புடன் செல்லாமலிருக்க நேர்ந்த ஒரு தடையே ஏறு எதிர்ந்தமை. ஆனால், அவன் அதனை அவ்வாறு கொள்ளவில்லை; துன்புற்றான். இதனை இளங்கோவடிகள்,

'பல்லான் கோவல ரில்ல நீங்கி
வல்லா நடையின் மறுகிற் செல்வோன்
இமிலேறு எதிர்ந்தது இழுக்கென
அறியான்

தன்குலம் அறியும் தகுதியன் றாதலின்'

என்று கூறியுள்ளார்.

நற்சகுனம் பார்க்க வேண்டும் என்னும் விழைவால் பல மூட நம்பிக்கைகள் நம்மிடையே வளர்ந்துள்ளன. மணி அடித்தல், இசைக் கருவிகள் முழங்கல் போன்றவை நல்ல சகுனங்களாகும் என்று கூறுகிறார்கள். நல்ல செயலை எண்ணிப் புறப்படுகையில், நயிர்க் குடத்துடன் தயிர்க்காரி வருவாளே யானால், அச்செயல் நிச்சயமாக வெற்றி பெறும் என்றும் நம்புகின்றனர். நாம் ஏதேனும் நல்ல செயல்களைப்பற்றி எண்ணிக்கொண்டிருக்கும் பொழுதோ அல்லது நண்பர்களிடம் பேசிக் கொண்டிருக்கும் பொழுதோ யாரேனும் தொடர்பில்லாத நிலையில் 'கட்டாயம் நடந்து விடும்', 'அடேயப்பா! அது முடியாமலா போகும்?' என்றெல்லாம் கூறினால், நம்முடைய காரியம் வெற்றியடைந்துவிடும் என்ற நம்பிக்கை நமக்கு ஏற்படுகிறது. இவையெல்லாம் மன உணர்ச்சிகள்தாம். நம்முடைய செயல்களை நாம் ஊக்கமுடன் செய்ய இவை துணை செய்கின்றன. சில வேளைகளில் ஒன்றும் விளங்காத நிலையில் துன்புற்றுக் கொண்டிருக்கும்போது, 'கட்டாயம்நடந்துவிடும்' 'அடேயப்பா! அது முடியாமலா போகும்?' என்னும் சொற்கள் நம் துன்பத்தைப் போக்குவனவாய் அமையும். பிறர்மூலம்—அவர்தம் சொற்கள் மூலம் நம் மனம் ஆறுதல் பெறுதல் முடிகிறது.

சோதிடனிடம் கையை நீட்டிவிட்டு, அவன் சொல்வதையெல்லாம் அமைதியாயிருந்து கேட்டுக்கொள்பவர்களை நாம் காண முடியும். சோதிடன் தான் கூற வேண்டுவதையெல்லாம் கூறிவிட்ட பின்பு சோதிடம் கேட்பவர் மீண்டும் மீண்டும் சிலவற்றைப்பற்றிக் கேட்பார்.

இஃதொத்த நிகழ்ச்சியொன்றைக் குறுந்தொகை கொண்டு அறிவோம்:—

தலைவன் வாடைக் காலத்தில் வருவதாகக் கூறிச் சென்றான். அவனுடைய பிரிவாற்ற முடியாமல் தலைவி வருந்தினாள். தோழி அவளை ஆற்றுவிக்க எவ்வளவோ முயன்றும் பயனில்லாமல் போயிற்று. அவள் வருத்தத்தைத் தடை செய்ய முடியவில்லை. தலைவன் வருவதாகக் கூறிச் சென்ற வாடைக்காலம் வருதற்குரிய நாட்கள் பலவாக உள்ளன என்பதையும் தோழி அறிவாள்; எப்படித் தலைவியை அமைதிப்படுத்துவது என்று எண்ணிக்கொண்டிருந்தாள். அப்போது அங்கு வந்தார் ஒருவர். அவர் அறிவர்.

அறிவர் என்பவர் துறவுள்ளமும் முக்காலத்தையும் அறியும் ஆற்றலும் உடைய பெரியோர். இவர்களை முக்காலமும் உணர்ந்த முனிவரென்பர் புறப்பொருள் வெண்பாமாலை உரையாசிரியர். இவர்களைப்பற்றித் தொல்காப்பியம் பின்வருமாறு கூறுகின்றது:—

'அறிவர் நல்லவற்றைக் கற்பிப்பர்; தீயவற்றைக் கடிந்துரைப்பர். தலைவன் தலைவியரது ஏவலைச் செய்து நிற்பர்; அவர்களை இடித்துரைத்து, நல்ல நெறியில் நிறுத்துவர். யாவரும் அறிவர் கூற்றைக் கேட்டு அதன் வழி நடப்பர்.'

அறிவரைக் கண்டதும் தோழி மகிழ்ந்தாள். அவர் அவள் வீட்டில் பிச்சையூண் பெற்றுச் செல்ல வந்திருந்தார். அறிவர் துறவுள்ளத்தவராதலின், துறவியரைப் போலவே பிச்சை பெற்று உண்பர். தம் மில்லில் பிச்சை பெற்றுச் செல்ல வந்த அறிவரைக் கண்டதும் அவரைக் கொண்டே தலைவியின் மனக் குறையினைப் போக்க வேண்டும் என்று எண்ணினாள். 'வாடைக்காலம் நெருங்கிவிட்டது; தலைவர் வந்து விடுவார்' என்று எவ்வளவு சொல்லியும் தலைவி கேட்கவில்லை. 'வாடைக் காலம் நெருங்கிவிட்டது' என்று அறிவர் சொன்னாலாவது தலைவி துயர் ஒழிக்க மாட்டாளா என்று அவள் நினைத்தாள். அதனால் அறிவரைப் பார்த்துப் பேசத் தொடங்கினாள்:

'அறிவ, எம் தலைவி நடுங்குவதற்குக் காரணமான வாடைக்குரிய காலம் எது வென்று சொல். ஏனென்றால், அப்போது தான் எம்முடைய தலைவர் வருவதாகக் கூறிச் சென்றார். எனவே, வாடைக்குரிய காலம் எதுவென்று சொல்லுவா... ...வ் வாறு நீ சொல்வாயேயானால் ...ற்றமற்ற தெருவில் நாயில்லா அகன்ற மனையில் நெய்பெய்து செய்யப்பட்ட செந்நெற் சோற்று உருண்டையை—ஒரு வீட்டில் இடும் பிச்சையை வயிறார உண்ணுவாயாக. அத்துடன் முன்பனிக் காலத்தில் விரும்பத்தக்க வெந்நீரையும் பெறுவாய்.'

'வாடைக்காலம் நெருங்கிவிட்டதேயம்மா' என்று அறிவர் சொல்ல வேண்டும் என்பதுதான் தோழியின் விழைவு. அவ்வாறு சொன்னவுடன், தலைவி கவலையை விட்டுக் கணவன் வருவதை எதிர்நோக்கத் தொடங்குவாள். மனவியலை உணர்ந்தவல்ல இப்பாடலைப் பாடிய புலவர்தம் பெயரை நாம் அறிய முடியவில்லை.

இப்பாடலில் அறிவர் பெறும் உணவை 'ஓரிற்பிச்சை' என்று சிறப்பித்தமை

பற்றிப் புலவர்க்கு 'ஓரிற்பிச்சையார்' என்பது பெயராக அமைந்தது. பல வீடுகளில் சென்று இரவலர் பிச்சையெடுப்பர். ஆனால், ஒரு வீட்டிற் பெற்றுண்ணும் பிச்சையாதலின், அறிவர் பெறும் பிச்சை 'ஓரிற்பிச்சை' என்று கூறப்பட்டுள்ளது.

'ஆசி றெருவி னியில் வியன்கடைச்
செந்நெ லமலை வெண்மை வெள்ளிழு
தோரிற் பிச்சை யார மாந்தி
அற்சிர வெய்ய வெப்பத் தண்ணீர்
சேமச் செப்பிற் பெறீஇயரோ நீயே
மின்னிடை நடுங்குங் கடைப்பெயல்
வாடை
எக்கால் வருவ தென்றி
அக்கால் வருவரெங் காத லோரே.'
—(குறுந்தொகை 277).

பதடி வைகலார்

திருவள்ளுவர், மற்ற உயிர்களது துன்பத்தைத் தன் துன்பம்போல் உணரும் இயல்பினை அறிவின்பயன் என்று கூறியுள்ளார். இந்த ஆற்றல் யாவர்க்கும் உள்ள பொதுவியல்பாக உள்ளது. தன் குழந்தை வண்டியில் அடிபட்டுத் துன்புறும்போது ஒருவன் எவ்வளவு வருந்துவானே அவ்வாறே அவன் பிறருடைய குழந்தை அடிபட்டுத் துன்புறும்போதும் வருந்துகிறான். அடிபட்டுக் குருதியோடு விழுந்து விடும் பறவையையோ பிற விலங்கினங்களையோ கண்டபோதும் அவன் மனமுருகி வருந்துகிறான். இந்த நிலை நிறைவு பெறும் துறையாக இருப்பது காதல் வாழ்க்கை. பிறர் துன்பத்தைத் தன் துன்பம்போல் உணருவதுதான் அறிவின் பயன் என்று வள்ளுவம் பேசுகின்றது. காதலர் வாழ்வு வள்ளுவத்தின் கருத்தினை விஞ்சிவிடுகின்றது. கணவன் தன் துயரை மறந்து, மனைவியின் துயரையே எண்ணுகிறான். மனைவியும் தன் துயரை மறந்து கணவன் துயரையே எண்ணுகிறாள்.

கோவலனும் கண்ணகியும் மதுரை நோக்கி நடக்கின்றார்கள். மண்மகள் அறிந்திராத கண்ணகியின் மலரடிகள் வழியின் கொடுமையால் துன்புறுமே என்றெண்ணிக் கோவலன் கலங்கினான். அந்தப் பாதை அவனுக்கும் நான் துயரைக் கொடுத்திருக்கும். ஆனால், அவன் தன் துயர் மறந்து, தன் காதலியின் துயரையே எண்ணி வருந்தினான்.

கோவலன் பிரிந்து விட்டதையும் அவனுடைய நெறி பிறழ்ந்த வாழ்க்கையையும் எண்ணி எண்ணிக் கண்ணகி வருந்தினாள்; அவளுடைய மாமனும் மாமியும் வருந்தினர். அவர்களிருவரும் மிகுதியாக வருந்தக்கூடாதே என்பதால், கண்ணகி முறுவல் கொண்டாள். கோவலன் பிரிவை அவ்வளவாகப் பொருட்படுத்தாததுபோலக் காட்டி நடித்தாள். மாதரி மனையில் 'எழுகென எழுந்தாய், என் செய்தனை?' என்று கோவலன் கேட்டபோதும் கண்ணகி, தான், அவன் பிரிவால் துயருற்றதாகவும் அந்தத் துயரினைப் போக்கிக்கொள்ளவே மறுமொழி பேசாது புறப்பட்டதாகவும் கூறவில்லை. மாறாக, 'பெற்றவர்' உள்ளம் வருந்தப் போற்றா ஒழுக்கம் புரிந்தாய். நான் எந்நிலையிலும் உனக்கே உரியவளாதலின், உடனே புறப்பட்டேன்' என்றாள். கண்ணகி தன் துயரை மறைத்துப் பேசினாள். கவுந்தியடிகள் கண்ணகியை மாதரியிடம் அறிமுகப்படுத்தும்பொழுதும், 'தன் துயர் காணாத் தகைசால் பூங்கொடி' என்றே கூறுகின்றார்.

காதலர் உள்ளம் மென்மையானது; பண்பாடுடையது. உலகம் சொல்லும் அறிவுரைகளெல்லாம் காதல் வாழ்க்கையில் சில பல மாறுதல்களோடு இடம் பெறுகின்றன. நம்மை வெறுத்தாரை நாம் வெறுக்க வேண்டும் என்று உலகம் சொல்கிறது. ஆனால், காதலர் உலகம் வெறுத்தவரையும், புறக்கணித்தவரையும் மீண்டும் மீண்டும் நாடுவதால், அன்பு வளரும் என்று கூறுகின்றது. திருவள்ளுவர் இது பற்றி விரிவாகக் காமத்துப் பாலில் கூறியுள்ளார். நம்மை வெறுத்தவரை நம்மால் வெறுத்துப் புறக்கணிக்க முடியவில்லையே என்று துயருறும் காதலர்களை நாம் திருக்குறளில் காணலாம்.

தலைவன் தலைவியர் பிரிவுறாமல் வாழ வேண்டும் என்று எண்ணுவார்கள். அன்றில் பறவையைப்போல வாழ வேண்டும் என்று தலைவி விரும்புவாள். ஆனால், சில வேளைகளில் பிரிவு நேருவதும் உண்டு. பொருளுக்காகப் பிரிதலே சிறப்பிடம் பெறும். அந்தப் பிரிவின் நோக்கம் முடிவடைந்ததும் தலைவன் தலைவியை எண்ணுவான்; விரைந்து சென்று அவளைக் காணத் துடிப்பான்; அதுகாறும் அவளைக் காணாமையால் தான் பட்ட துயரை மறந்து, அவள் என்ன துயருற்றிருப்பாளோ என்று எண்ணிக் கலங்குவான். அவளோடு வாழாத நாட்களெல்லாம் பயனற்ற நாட்களாகும் என்று எண்ணுவான். இவ்வாறு அமைந்த நிகழ்ச்சியொன்றினைக் காணுவோம்:

தலைவன் பொருள் தேடச் சென்றான். அவன் நாடிச் சென்ற செயல் முடிந்துவிட்டது. ஊருக்குத் திரும்பத் தேரேறினான். தேரோ மெல்ல நகர்ந்தது. தலைவனால் அந்த நிலையைப் பொறுக்க முடியவில்லை. தேர்ப்பாகனைப் பார்த்துப் பேசலானான்:

'முல்லை மலர் மணம் கொண்ட நெற்றியையுடையவள் தலைவி. தலைவியின் இரண்டு தோள்களிலே துஞ்சி கழியும் நாட்களே இவ்வுலகில் வாழும் நாட்களாகக் கருதப்படும். அவ்வாறில்லாத நாட்கள் எல்லாம் உள்ளீடில்லாத கருக்காயைப் போன்றவை. அவற்றால் பயனில்லை.'

தலைவன் தேர்ப்பாகனை நோக்கி இவ்வாறு பேசியமைக்குக் காரணம் யாது? தேர்ப்பாகன் தேரை விரைந்து செலுத்த வேண்டும் என்று எண்ணியே அவ்வாறு கூறினான் என்று கொள்ளலாம். தலைவியோடு அளவளாவாத நாட்களெல்லாம் பயனற்ற நாட்கள் என்று கூறுவதால், அவன் உள்ள வேட்கையையும் நாமுணரலாம். அந்த நாட்களில் இன்பம் இல்லையானமையின், அவ்வாறு கூறினான். இன்பமாகிய உள்ளீடு இல்லாமையால் அந்த நாட்களைப் புலவர் 'பதடி வைகல்' என்றார்.

தலைவியோடு அளவளாவாத நாட்களைப் 'பதடி வைகல்' எனத் தலைவன் கூறியதாக அமைத்த சிறப்பால் புலவர் 'பதடி வைகலார்' என்னும்பெயர் பெற்றார்.

'எல்லா மெவனோ பதடி வைகல்
பாணர் படுமலை பண்ணிய வெழாலின்
வானத் தெழுஞ்சுவர் நல்லிசை வீழப்
பெய்த புலத்துப் பூத்த முல்லைப்
பசுமுகைத் தாது நாறு நறுநுதல்
அரிவை தோளிணைத் துஞ்சிக்
கழிந்த நாளிவண் வாழு நாளே.'
—(குறுந்தொகை 323).

காட்சி 1.

[நீலமேகம் ஒரு உத்தியோகஸ்தர் அவருக்கு வெளியூருக்கு மாற்றல் உத்தரவு வந்திருக்கிறது அவருடைய அத்யந்த ஆபீஸ் வாட்ச்மேன் மேற்பார்வையில் அவரது வீட்டுச் சாமான்கள் பாக் செய்யப்படுகின்றன]

வஜ்ரசாமி:— , (ஆட்களிடம்) இந்தாப்பா! பாத்து தட்டுங்க. ஆணிஅடிக்கிற சாக்கிலே சாமான்களை உடைச்சுடாதீங்க.

ஒரு ஆள்: சரிதாம்பா! எங்களுக்குத் தெரியாததை புதுசா சொல்ல வந்துட்டே. எம்மாம் வூடுங்கள்ளே சாமான் பாக் பண்ணியிருப்போம், தெரியுமா?

(வேலைக்காரி பாக்கியம் வருகிறாள்)

வஜ்ரசாமி:— வந்தியா, வா! நீ ஒரு நபர்தான் இங்கே பாக்கி.

பாக்கியம்:— ஏனய்யா! என்னைக் கண்டா ஏன் அப்படி கமறிக்கிட்டு வருது?

வஜ்ரசாமி:— நீ இப்போ என்னுமோ முணுமுணுத்துக்கிட்டு வந்தியே, அது என்ன? சொல்லிப்பிடு!

பாக்கியம்: இந்த ஆளுங்கள்ளாம் வேலைதான் செய்றாங்களா, தூங்குறாங்களான்னு எனக்குள்ளாற சொல்லிக்கிட்டு வந்தேன்.

வஜ்ரசாமி:— இந்த வேலை நடக்கிறதிலே உனக்குச் சந்தோஷமா? அப்புறம் எனக்குக் கோபம் என்னுமா வரும், தெரியுமா? ஊக்கும்!

பாக்கியம்:— அட,நான் சொன்னதிலே என்ன தப்பு வந்திடுச்சாம்?

வஜ்ரா: இந்தா, ஏ பாக்கியம்! நீ இங்கே வேலைக்கு வந்து எத்தினி மாசம் ஆவுது?

பாக்கியம்:— மாசம் ஏது? நாளுதான் -இருபத்திமூணு நாளு!

வஜ்ரா:— இருபத்திமூணு நாளு! நான் எத்தினி வருஷமா, இங்கே வாட்ச்மேன் வேலை பார்க்கிறேன், தெரியுமா? இருபத்து மூணு வருஷம்! இத்தினி காலம் இந்த வூட்லே பளகிட்டு, இவங்க உப்பையும் தண்ணியையும் சாப்பிட்டுட்டு, அவங்க ஊரை விட்டுப் போகும்போது, சந்தோசமா மூட்டை கட்டி அனுப்ப மனசு வருமா?

பாக்கியம்:— ஊரை விட்டேவா போறாங்க?

வஜ்ரா: பின்னே என்னவாம்? இங்கிலீஷிலியா பேசிக்கிட்டிருந்தம் இப்பி?

பாக்கியம்:— அடி ஆத்தி! அப்படின்னா அம்மாகிட்டே போய் பல்லைக் காட்டினா, பழம் புடவை அம்புட்டையும் எடுத்துப் போடுவாங்களே.... நான் இப்பவே போறேன்.

வஜ்ரா: அட பைத்தியமே! உன் புத்தியாலே அவ்வளவுதான் எட்டிச்சா? எனக்கு அவுங்களைப் பிரிஞ்சு எப்படிடா காலம் தள்ளுறதுன்னு இருக்கு....

காட்சி 2.

[பேக்கிங்குகள் மேல் சுத்தியால் தட்டுகிறார்கள் , வேலைக்காரர்கள் நீலமேகம் வருகிறார்.]

நீலமேகம்:— என்னப்பா இன்னுமா முடியலை உங்க பேக்கிங்...? வஜ்ரசாமி! நீ கொஞ்சம் கிட்டே இருந்து கவனிக்கக் கூடாதா? லாரி காத்துக்கிட்டிருக்கே.

வஜ்ரா:— எல்லாம் முடிஞ்சு போச்சு, எஜமான். (சுத்தியால் அவனும் தட்டுகிறான்.)

லாரி டிரைவர்:— சாமி, லாரி ஒரு அவரா காத்துக்கிட்டிருக்குங்க... எங்களை—

வேலைக்காரன்:—இதோ, ஆயிடுச்சுப்பா ... இந்தாப்பா... தூக்குங்க சாமானை.

நீலமேகம்:— வஜ்ரசாமி, நீ போய் ஒரு டாக்ஸி கொண்டா முதல்லே.

வஜ்ரா:—(நா தழதழக்க) எஜமான்...

நீலமேகம்:— என்னப்பா இது வஜ்ரசாமி! என்ன சமாசாரம்? சின்னக் குழந்தை மாதிரி கண்ணாலே ஜலம் விடறியே!

வஜ்ரா:— என்னாலே தாள முடியலே,எசமான். உங்களையெல்லாம் பிரிஞ்சு என்னாலே எப்படி இருக்க முடியும்? இந்த பந்தம் இல்லாட்டி, நானும் நாய்போல உங்க பின்னாலேயே வந்துடுவேன்...

சங்கம்:— நாங்க போனா என்னப்பா? இந்த வீட்டை நீதான் பார்த்துக்கணும் பொறுப்பா. நாங்க சமயம் நேரும் போது இங்கேயே வந்துடுவோம் மறுபடியும்.

வஜ்ரா:—(கம்மிய குரலில்) பங்களாவை ஸினிமாக்காரங்களுக்கு வித்துட்டுப் போறீங்கன்னு கேள்விப்பட்டேனம்மா..

சங்கம்:— யார் சொன்னது அப்படி? வாடகைக்கு விட்டுட்டுப் போறோம்.

இன்னும் நாலு வருஷமோ ஐந்து வருஷமோ கழிச்சு இங்கேதான் வருவோம். அதுவரைக்கும் நீதான் பொறுப்பா வீட்டைப் பார்த்துக் கொள்ளணும்.

நீலமேகம்:— உன்னேயே வாட்ச்மேனு வச்சுக்கச் சொல்லி நான் அவங்களிடம் ஏற்பாடு பண்ணியிருக்கேன்.

வஜ்ர:— இருபத்தைஞ்சு வருஷம் உங்ககிட்டே தாயா புள்ளேயா, அண்ணன் —தம்பியா பளகினப்பறம், யாருகிட்டேங்க நிலேச்சு கைகட்டி வேலே பாக்க முடியப் போறது என்னுலே? என்னுமோ பாப்பம்!

நீலமேகம்; சரி, நீ போய் டாக்ஸி கொண்டா. அப்புறம் பேசிக்குவோம். நான் போய் சாமானே புக் பண்ணிட்டு வரணும்.

காட்சி 3

[வஜ்ரசாமியின் வீடு. அவனும் அவன் மனைவி வடிவாம்பாளும்]

வடிவாம்பாள்:— என்ன நீ பண்றது கொஞ்சம்கூட நல்லா இல்லே. எத்தினி நாளு இப்படியே முகத்தைத் தொங்கப் போட்டுக்கிட்டு இருப்பியாம்? மனசைச் சமாதானம் பண்ணிக்கிட்டு சந்தோசமா இருக்கப் பளகிக்கணும். அதான் புத்தி சாலித்தனம்.

வஜ்ர:— வடிவம், நீ என்னமோ சுலபமா சொல்லிப்போடறே. என் ஸ்தானத்திலே நீ கொஞ்சம் இருந்து பாத்தியானு தெரியும். இருபத்திஅஞ்சு வருஷம் அந்தக் குடும்பத்திலேயும் ஆபீஸிலேயும் பளகிட்டு, அவங்களேப் பிரிஞ்சு இருக்கிறதுன்னு, சாமானிய காரியமாவா இருக்குது? எனக்கு என்னமோ பித்து கொண்டாப்பலே இருக்குது.

வடிவாம்:— ஏன், ஒனக்குதான் சர்வீஸ் இருக்குதே! 'வாட்ச்மேன் வஜ்ர சாமி'ன்னு இந்த வட்டாரம் பூரா தெரியுதே. எங்கனு வேலேக்கு—'

வஜ்ர:— வேலேக்கு என்ன இப்ப கேடு! அது கைமேலே கிடக்குது.

வடிவாம்:— அடி சக்கை! அது ஏது? எப்ப சம்பாரிச்சே?

வஜ்ர:— நான் என்ன சம்பாரிக்கிறது! அவுங்களே அவுங்க பங்களாவிலே குடிவந்திருக்கின்ற மனுசாள்கிட்டச் சொல்லி ஏற்பாடு பண்ணிட்டாங்க. அங்கே தானே நாலு நாளா போய் வாரேன்?

வடிவாம்:— இன்னும் என்ன கொறை உனக்கு? அந்த பங்களாவை ஒம் பேருலே எளுதி வைக்காமே போய்ட்டாங்கங்குறியா?

வஜ்ர:— அட சீ! வடிவு! பேசத் தெரியாதபோனு சும்மா வாயை மூடிக்கிட்டாவது கெட. அந்தக் குடும்பத்திலேயும் அவுங்க ஆபீஸிலேயும் வாட்ச்மேனு வேலே பார்த்தப்புறம் எனக்கு இன்னெரு இடத்திலே வேலே பார்க்கவே பிடிக்கலே— அதுவும் கட்டோடே பிடிக்கலே. அந்த ஐயா சிபாரிசு பண்ணிட்டுப் போன இடம் இருக்குதே, போதும், போதும்!

வடிவாம்:—ஏன், என்னுவாம்? உனக்குத் தகுந்த இடமா இல்லேயா அது?

வஜ்ர:— அது ஒரு ஸினிமா கம்பெனி. போயும் போயும் ஸினிமா கம்பெனியிலே வேலே பார்க்க முடியுமா? என்னமோ...ம், சரி, எனக்கு நேரமாவுது. போய்ட்டு வரேன், கதவைச் சாத்திக்க. (கதவு சாத்தும் சப்தம்)



''பிள்ளே குட்டிக்காரன் சாமி! என்னே விட்டுவிடுங்க! பிழைச்சுப் போறேன்! இனிமே இந்த மாதிரித் தப்புத்தண்டாவுக்கு வரமாட்டேன்!''
''டேய்! நானும் பிள்ளேக்குட்டிக்காரன்தாண்டா! உன்னே விட்டுவிட்டு நான் பிழைக்கிறது எப்படி?''

காட்சி 4.

[ஸினிமா கம்பெனி: ஒரு பக்கத்தில வாத்திய-இசைக்கருவி சங்கீதம் கேட்கிறது; நாட்டியக் கஜ்ஜைகளின் ஒலியும் ஒலிக்கிறது.]

ஸினிமா முதலாளி:— மிஸ்டர் கே.வி. எஸ். ராவ்! நீங்க இன்னைக்கி எப்படியும் அவுட் டோர் ஷூட்டிங்கை முடிச்சுடுங்க. நான் கொஞ்சம் வெளியூர் போறேன்.

கே. வி. எஸ். ராவ்:— அதெல்லாம் ஓ. கே. ஸார்! இன்னியோடே ஆல் அவுட் டோர் ஸீன்ஸ் கம்ப்ளீட். நாளேக்கி ரெஸ்ட். அடுத்த வாரம் ஆரம்ப முதலே பாக்கி ஸ்டுடியோ ஸெட் பினிஷ் பண்ணிடறேன், என்ன?

ஸி. முதலாளி:— அதுதான் வேண்டியதுங்க. நாம்ப போட்ட திட்டப்படிப் படம் 'ரிலீஸ்' ஆகணுமேன்னு கவலேயாயிருக்கு.

கே. வி. எஸ். ராவ்:— நீங்க கவலேயே பட வாணும். (ஸிகரெட் ஒரு தம் இழுத்து விடுகிறார்.. வந்து..ஒரு விஷயம்.. எனக்கு ஒரு 'தௌஸண்ட்' ருபீஸ்க்கு ஒரு செக் கொடுங்களேன்... கொஞ்சம் அவசரம்.

ஸி. முதலாளி:—அடேடே! செக் புக்கை வீட்டிலே வச்சிட்டேனே... யாரையாவது என்கூட அனுப்புங்க. கொடுத்தனுப்பறேன்...டேய்...யார்ரா அங்கே.... (காலிங் பெல்லேத் தட்டுகிறார்)

வஜ்ர:— ஸார், இதோ வந்தேன்...

ஸி. முதலாளி:—அட! நீ என்னடா கிழப் பயல்! வேறே இளவெட்டுப் பசங்க இல்லேயா இங்கே?..

வஜ்ர:— இல்லீங்க, எல்லாரும் நைட் டூட்டி பார்த்தாங்க, வீட்டுக்குப் போய்ட்டாங்க.

ஸி. முதலாளி:— சரி, நீதான் என் பின்னுலே வா. ஒரு செக் தரேன். அதைக் கொண்டாந்து ஐயாகிட்டே கொடு...

வஜ்ர:— இப்பவே கொண்டாந்துடணுங்களா? காலமே வரச்சொல்ல கொண்டாரட்டுங்களா?

கே. வி. எஸ். ராவ்:—சீ! எல்லாம் உன் இஷ்டம்போலிருக்கு. இப்பவே வேணும்... உடனே ஓடி வாரணும். தெரியுமா?

உதவி டைரக்டர்:— அதோடே இவன் அவுட் டோர் ஸீன்லே வாட்ச்மேனு நடிக்கிறான். இவன் இப்பவே வந்தாகணுமே—ட்ராக் கிளம்பரத்துக்கு முன்னடி...?

ஸி. முதலாளி:— வாட்ச்மேனே வாட்ச்மேனு நடிக்கிறானு? பலே!

கே. வி. எஸ். ராவ்:— வாட்ச்மேனு நடிச்சுதானே, காலம் கடத்தறான் இவன்! வாட்ச்மேன் உத்தியோகம் பார்த்தா சம்பளம் வாங்கறான்?

வஜ்ர:— ஸார், அப்படியெல்லாம் ஏன் பேசுறீங்க? எனக்கு இடற வேலேயை இடுங்க; செய்யறேன், அவ்வளவுதானே?

ஸி. முதலாளி:— டேய்! என்ன ரொம்ப எதுத்துப் பேசறே?

உதவி டைரெக்டர்:— வஜ்ரசாமி, போய் வெளியே நில்லு. ஐயா வந்ததும் அவங்களோடே வீட்டுக்குப் போகலாம். போ! (வஜ்ரசாமி வெளியே போகிறான், தாமதம்)

வஜ்ர:— (தனக்குள்) சே! நல்ல பிழைப்படா இது! எவ்வளவு கௌரவமா உத்தியோகம் பார்த்துட்டுக் கிடந்தோம்... சே சே! இதுக்கு ஒரு 'புல் ஸ்டாப்பு' வைக்க வேண்டியதுதான்.

காட்சி 5.

[வஜ்ரசாமியின் வீடு]

வடிவாம்பாள்:— டிபன் ஸெட்டுலே சாப்பாடு எடுத்து வைக்கிறதா? இன்னைக்கி டூட்டி எப்படி?

வஜ்ரசாமி:— இன்னிக்கி டூட்டி நான் தீர்மானிக்கிறபடிதான்...

வடிவாம்:— என்ன நீங்க போடற புதிரும் விடுகதையும்! எனக்கு ஒண்ணும் புரியலேயே!

வஜ்ர:— ஸினிமா கம்பெனி வேலேயை நேத்தோடு ஏறக் கட்டிட்டேன்.

வடிவாம்:— ஆ! என்ன? அப்புறம் சாப்பாட்டுக்கு...?

வஜ்ர:—ஒரு வெத்திலே பாக்குக் கடை வச்சு கால் மேலே கால் போட்டுக் குந்தி வியாபாரம் செய்றேன்! இல்லே...பிச்சையெடுக்கிறேன்... எப்படியோ காலம் ஓடிடும்...அடேயப்பா! அவுங்க ஜபர்தஸ்தைப் பார்த்தா... ராவெல்லாம் பகலு, பகலெல்லாம் ராவு. ஆபீஸிலே வாட்ச்மேன் வேலே, ஸினிமாவிலே நடிக்கிறதுலே வாட்ச்மேன் வேலே; முதலாளி வீட்டுலே வேலே; டைரக்டர் வீட்டுலே படுக்கை உதறிப் போடணும்... பித்து பிடிச்சுடும்போல இருந்திச்சு எனக்கு... ஒரு ஒழுங்கா, காயிதாவா ஒண்ணும் கிடையாது...

வடிவாம்:— சனி, உட்டுது போங்க... ஆமாம். இப்பதான் நெனேப்பு வருது அந்த அட்டண்டரு...அவுரு பேரு என்ன...

வஜ்ர:— நல்ல நாயகமா?

வடிவாம்:— ஆமாம், ஆமாம். அவரு என்னுமோ சொன்னுரே. அவுங்க ஆபீஸுக்கு ஒரு நைட் வாட்ச்மேன் வேணுமின்னு கேட்டாரு...உங்களே வந்து பார்க்கச் சொன்னுரே... இன்னைக்கே போங்களேன்...

வஜ்ர:— இன்னைக்கே என்ன மொடை, இன்னைக்கே? நாளக்கிதான் போறேனே.

காட்சி 6.

[நல்ல நாயகம் வேலே பார்க்கும் காரியாலயம்.]

வஜ்ர:— யாருப்பா அது, நல்லநாயகமா அது? இங்கே என்னமோ நைட் வாட்ச்மேன் வேலே ஒண்ணு காலியிருக்குன்னுங்க...

நல்லநாயகம்:—ஆமாம், உன்னேத்தான் வந்து பார்க்கச் சொல்லிட்டு வந்தேன். நீ என்னமோ இவ்வளவு கிராக்கி பண்ணிக்கிட்டு, ரொம்ப சாவகாசமா வர்றியே...

''ராவு பகலா இருக்கு, பகல் ராவா இருக்கு''

வஜ்ர:— அந்த வேலேக்கு இப்ப ஆள் வச்சிட்டாங்களா?

நல்ல:— அதைக் கேளு முதல்லே! ஏம்பா இதுக்கு முந்தியே வரக் கூடாதுன்னு கேட்டா....

வஜ்ர:— அதை ஏனப்பா கேக்குறே? எனக்குத் தகவலே நேத்துதான் தெரியும். இதுக்கு முந்தி ஒரு சினிமா கம்பெனியிலே டூட்டி பார்த்தேன். அது தோதுப்பட்டு வால்லே, உட்டுட்டேன். உடனே இங்கே ஓடியாந்தேன்.

நல்ல:— சினிமா கம்பெனியை ஏன் அப்பா உட்டே? சினிமா கம்பெனியிலே கிடைச்சா, நானு போயிடுவேனே இப்போ! உனக்குக் கதாநாயகன் வேஷம் கொடுக்கணும்னு கேட்டியோ ஒரு வேளே!

வஜ்ர:— அட! இன்னும் கொஞ்ச நாளு இருந்தா, அந்த வேசத்தையும், அவுங்களா எனக்குக் கொடுத்திருப்பாங்க... நான் ஏன் கேக்கணும்? 'வாட்ச்மேன் வாழ்க்கை'ன்னு ஒரு படம் பிடிக்கப் போறோம். நீதான் கதாநாயகனு நடிக்கணும்னு சொன்னுலும் சொல்லுவாங்க... அந்தக் கதையையெல்லாம் ஏம்பா கேக்கறே? அப்பறமா சொல்றேன். இப்ப இந்த வேலேக்கு உன்னுலே ஏதாவது பண்ண முடியுமா பாரு.

(காலிங் பெல் சப்தம் கேட்கிறது)

நல்லநாயகம்:— (அது காதில் விழாமல்) இங்கேயும் ஒரே சள்ளேயாயிருக்குது. இதோ பாரேன். ப்யூனேக் காணும். எங்கேயோ தொலேஞ்சு போயிட்டான்... இப்ப நான்தான் போகணும். மணி அடிச்சு உயிரை எடுக்கிறான், பார்! (மணிச் சத்தம் கேட்டுக் கொண்டிருக்கிறது) இரு, வரேன்.

(நல்ல நாயகம் உள்ளே போகிறான்.)

வஜ்ர:—'அப்படிச் சொல்லுடா வழக்கை! அவன் கையிலே கொடடா உழக்கை'ன்னும்! இவுரு அட்டெண்டரா! என்னுமோ எழவு இவனுக்கு சரிசமனு பேசிப்புட்டேன்போல இருக்கு...நமக்கு எங்கே தெரியுது இந்த உலகப்போக்கு

நல்ல:—ஸார், இதோ வந்தேன்!

பால்ராஜ்:— எங்கடா தொலேஞ்சு போய்ட்டீங்க எல்லாரும்!

நல்ல:— எங்கேயும் இல்லே, ஸார்!...

பால்ராஜ்:— அரை மணி நேரம மணியைத் தட்டி, என் கையைத்தான் வலிக்கிறது!... இந்தா இந்த மூணு லெட்டரும் 'அர்ஜண்ட்'டுன்னு சொல்லி டெஸ்பாட்சிங்கிலே கொடு... அப்படியே சிவசாமியை வரச்சொல்லு. ..இந்தா ஏ,நல்ல நாயகம்! அவரை வரும்போது 'பப்ளிஸிடி பைலேக் கொண்டு வரச்சொல்லு..

நல்ல:— சரி, ஸார்!

(சிவஸாமியிடம்)

ஸார், உங்களே முதலாளி வரச் சொல்றாரு...

சிவசாமி:—வரச் சொல்றாரா? ரொம்ப சந்தோஷம்! சும்மா வரச் சொன்னாரா, வெத்திலே பாக்கும்கூட அனுப்பியிருக்கிறாரா?... இப்படி அடிக்கொரு தடவை கூப்பிட்டுக்கிட்டே இருந்தா, வேலே எப்படி முடியும்? சாயங்காலமா 'ஒரு வேலேயும் ஆகலே; ஒண்ணுமே ஆகலே'ன்னு குதிப்பாரு..



"தூங்கறத்துக்குத்தான் உன்னை நியமனம் பண்ணி இருக்கா."

நல்ல:— ஸார், அப்படியே முதலாளி கிட்டே பேசிவிட்டுத் திரும்பச் சொல்ல நைட் வாட்ச்மன் அப்பாய்ண்ட்மெண்ட் விஷயமா பேசிவிட்டு வாங்க... வாசல்லே ஒரு ஆள் வந்து காத்துக் கிடக்குது.

சிவசாமி:—அடா! அவரு எதைக் கேட்டு 'வள்ளுன்னு' விழக் கூப்பிட்டிருக்காரோ, இப்ப போய் 'நைட் வாட்ச்மன்' அது இதுன்னு.

நல்ல:— அட சும்மா சொல்லுங்க, ஸார்! அவரு வள்ளுனு விழாத சமயம் எப்போ, சொல்லுங்களேன்?

சிவசாமி:— சரி, கேட்டுப் பார்க்கிறேன்...அதிருக்கட்டும்; இந்த வேலையை அந்த ஆளுக்குப் பண்ணி வைக்கிறதுக்கு நீ ஏன் இப்படிக் கவலைப் படறே? என்ன விஷயம்..ஊம்..? சொல்லுப்பா..

நல்ல:— அதெல்லாம் அப்புறம் கேட்டுக் கிடலாம். போய்ப் பேசிட்டு வாங்க முதல்லே.

சிவசாமி:— என்ன ஸம்திங்கா?.. என்னையும் கவனிச்சிக்கிடு அப்பா, மறந்துடாதே!.. (போகிறார்)

காட்சி 7.

[வஜ்ரசாமியின் வீடு.]

வடிவாம்பாள்:— அடி ஆத்தி! இது என்ன உன் முகம் இப்படிச் செவந்து கிடக்குதே!

வஜ்ர:— எல்லாம் இந்த 'நைட் டூட்டி'யாலே வந்த வினைதான். ராவெல்லாம் எனக்குப் பகலு... சரி, சரி. சீக்கிரமா அந்தக் கம்பளியை மடிச்சு சாக்குக்குள்ளார சொருகிக் கொண்டா. ரெண்டு வெத்திலை சருகு இருந்தா கொடு.

வடிவாம்:— நீயேதான் சருகு கணக்கா ஆயிட்டியே, இன்னும் என்ன சருகு வேண்டிக் கிடக்குது... ஆமாம்; தெரியாமேதான் கேட்கிறேன். 'நைட் டூட்டி'ன்னு கொஞ்சம் படுத்து, கண்ணை அசரக் கூடாதா?

வஜ்ர:— மூச்சு விடலாமா? அது மாத்திரமில்லே. ஒவ்வொரு மணிக்கும் ஆபீஸ் மணியை அடிச்சாகணும்..இவங்க பாக்டரி இருக்குது பக்கத்துலே. அங்கே கேக்கரதுக்காக அந்த மாதிரி ஒரு மணி, அரை மணி எல்லாம் பார்த்து அவ்வப்போ அடிச்சாவணும்...இப்பகூடச் சொல்றேன். அந்த நீலமேக எசமானை மறக்க முடியுமா? டூட்டியிலே அவரும் கரெக்ட். என்னையும் கரெக்டா பார்க்கும் படிதான் வச்சிருந்தாரு. மாசக் கடோசி நாளன்று கைமேலே சம்பளம்...

வடிவாம்:— அது போறது பழங்கதை! அதை ஏன் பேசறே! நாழியாகிடப் போறது. பார்த்துப் போ!

வஜ்ர:— போய் வாரேன், வடிவாம்பா. கதவைப் போட்டுக்க.

(போகிறான்).

(வஜ்ரசாமி டியூடியில் இருக்கும் போது.)

குரல் 1:— காவல்கார ஐயா! ஒரு நிமிஷம் உங்களோடே பேசணும்...

வஜ்ர:— என்னப்பா? நீ யாரு? இந்த பன்னிரண்டு மணி இருட்டிலே இங்கே எங்கே வந்தே?

குரல்:— 1 (கொஞ்சம் மெதுவாக) இங்கே வர்றது எங்கே? எங்க இடமே இந்தப் பக்கந்தானே... உங்களுக்குப், புண்ணியமாப் போயிடும்... கொஞ்சம் இந்த முன்பக்கத்துக் கதவைத் துறந்து விட்டிங்கன்னு தேவலை...

வஜ்ர:—ஏதுக்கப்பா? முதலாளிக்குத் தெரிஞ்சா கொன்னு போட்டுடுவாரே!

குரல் 2:— அண்ணாத்தே! கையிலே இருக்கிறதைக் குடுக்காமெ பேசிக்கினே போனா, அந்த ஆளுக்குத்தான் எப்படி நெகா புரியும்?...

குரல் 1:—இந்தாங்க, இதை வச்சுக்குங்க...

வஜ்ர:— என்னது! ரூபாயா? எனக்கா? எனக்கு எதுக்கப்பா பணம் கொடுக்கிறிங்க?

குரல் 1:— இங்கே நாங்க நாலு பேர் ராத்திரி சீட்டாட வேணும். கதவைத் தொறந்து விட்டிங்கன்னு... அந்த மெத்தைப் படிக்குக் கீழே குந்தி ஆடுவம்...

வஜ்ர:— சீ! கழுதைங்களா! அதுக்கு வேறே ஆளைப் பாருங்க...

குரல் 1:— ஏய்! என்ன சொன்னே?

[தற்செயலாக ஒரு போலீஸ் காரர் வருகிறார்]

போலீஸ்காரன்:— சொல்றது என்னடா? நான் சொல்றேன்; வா என்னோடே ஸ்டேஷனுக்கு.

வஜ்ர:— போலீஸ்கார ஐயாவா? வாங்க, வாங்க! நல்ல சமயத்துக்கு வந்திங்க. இல்லாத போனா என்ன நடந்திருக்குமோ...

போலீஸ்:— நாங்கதான் கண்ணுலே விளக்கெண்ணெயைக் கொட்டிக்கிட்டு ரோந்து சுத்திகிட்டே வர்றோமே. நான் பின்னாலே வர்றதையும், நிக்கறதையும் கூட இந்த மைனருங்க கவனிக்கலே. சீட்டாட இடம் பிடிக்கிறாங்க, இடம்! வாங்கப்பா, ஸ்டேஷனுக்கு நடவுங்க.

குரல் 1-2:— இல்லே ஸார், உட்டுடுங்க ஸார்... ஸார், ஸார்...

(சப்தம் மறைகிறது......)

காட்சி 8.

[வஜ்ரசாமி வேலை பார்க்கிற கம்பெனி. இரவு நேரம்.]

பிச்சைக்காரன்:— சாமி... சாமி...

வஜ்ர:—அப்பா இது ஆபீஸ். அதுவும் தவிர, ராத்திரி வேளை! இங்கே ஒண்ணும் பிச்சை போட மாட்டாங்க யாரும்.

பிச்சை:— பிச்சை இல்லே, சாமி...

வஜ்ர: பின்னே என்ன?

பிச்சை:—குளிரு வெடவெடன்னு நடுக்குது, சாமி. இம்மாம் இடம் குடுத்திங்கன்னு முடங்கிக்கிடுவேன்... தாங்க முடியலே ஐயா, ஊதை...

வஜ்ர:—சரி, வா. ஆள் இருக்கிற இடம் தெரியப்படாது. முடங்கிக்க. நீ இருக்கிறது யாருக்காவது தெரிஞ்சிட்டா, என் வேலையும் போயிடும். நானும் கம்பி எண்ண வேண்டியதுதான்.

பிச்சை:— சரி, சாமி. உங்க புண்ணியம்!

[மோட்டார் ஹார்ன் சப்தம்]

பால்ராஜ்:— வாட்ச்மேன், வாட்ச்மேன்!

பால்ராஜ்:— ஏய்! யாரங்கே படுத்திருக்கிறது?

பிச்சை:— சாமி...

பால்ராஜ்:— அட! சீ! பிச்சைக்கார சாவடியா போயிட்டுதா கம்பெனி...? (உரக்க) ஏ வாட்ச்மேன்!

வஜ்ர:— ஸார்! தண்டம்!

பால்ராஜ்:— தண்டம்! என்ன தண்டம்! நீதான் வெறும் தண்டம்! இவனையும் சேர்த்துக்கிட்டு இன்னிக்கி கம்பெனியிலே கன்னம் வைக்கதானேடா திட்டம் போட்டிருக்கே? நான் திடீர் விஸிட் வராத போனா, இன்னிக்கு அதோகதி தான் எல்லாம்...

வஜ்ர:—ஸார், ஸார்! அப்படியெல்லாம் இல்லை ஸார்! பிச்சைக்காரனுச்சேன்னு குளிருக்காக இடம் கொடுத்தேன்...

பால்ராஜ்:—அது சரி! உனக்கு என்ன உத்தியோகம் இங்கே? தூங்கறதுக்குத் தான் உன்னை நியமனம் பண்ணியிருக்கா?

வஜ்ர:—மன்னிச்சுக்குங்க, எஜமான்! இந்த ஐஞ்சு வருஷ ஸர்விஸிலே இன்னிக்கித்தான் இப்படி அசந்துட்டேன்... அது கூட இப்பதான்... இண்ணைக்கி பெரும் சோதனையாப் போச்சு...

பால்ராஜ்:—'ஐந்து வருஷமா இப்படித் தான் நடக்கிறது. நீ இன்னிக்கி வந்து பார்த்து என்னமோ உளர்றியே'ங்கிறயா? வாஸ்தவம்தான். நாளைக் காலையிலே வந்து கணக்கு தீர்த்துக்கொண்டு போயிடு...

வஜ்ர:— ஸார், ஸார்...

பால்ராஜ்:— ஸார் என்னடா மோர்...!

(கார் போகிறது)

காட்சி 9.

(ஒருவர் பத்திரிகை படித்துக் கொண்டிருக்கிறார் வஜ்ரசாமி அவரிடம் வருகிறான்.)

பத்திரிகை படிப்பவர்:— என்னய்யா அப்படி பேப்பர்லே தினம் தினம் விசேஷமாக இருக்கும் உனக்காக?

வஜ்ர:— ஒண்ணுமில்லைங்க. எனக்கு எங்கேயும் வேலை கிடைக்கலை. எங்கேயாவது வேலை காலி—

ப. படிப்பவர்:— டைபிஸ்ட் வேலைக்கு ஆள் கேக்கறாங்க—போறியா?

வஜ்ர:—என்னாங்க இப்படிக் கேலி பண்றீங்க— எதனா வாட்ச்மேன், கீட்ச்மேன்...

ப. படிப்பவர்:— ஆமாம்! வாட்ச்மேன் வேலைக்குப் போயி பேப்பர்லே போடறாங்க. போய்யா. இதுக்குதான் நெதம் நான் பேப்பர் பார்க்கிற சமயத்துக்கு வந்திடறயா?

வஜ்ர:— ஏன் சாமி போட மாட்டாங்க? இந்த நாளிலேதான் நல்ல நாயா வேணுமின்னுக்கூடப் பேப்பர்லே போடறாங்களே...

ப. படிப்பவர்:—சரி, சரி. வியாக்யானம் பண்ண வேண்டாம் நீ, ஏதாவது வேலை காலியிருந்தா, உனக்காக நெதம் பேப்பரைப் பார்த்து, நானே லெட்டர் போடறேன், போ. அட்ரஸை மாத்திரம் கொடுத்திட்டுப் போ.

வஜ்ர:— சரிங்க, ஸார்...

ப படிப்பவர்:— இருப்பா, இரு...இரு... உனக்கும் அதிர்ஷ்டம் அடிக்கும்போல இருக்கே... இதைப் படிக்கிறேன் கேளு. 'வேலைக்கு ஆள் தேவை. இரவு பகல் வாட்ச்மேனாக இருந்து வேலை செய்ய ஆள் தேவை. மாதச் சம்பளம் முப்பது ரூபாய். குடியிருக்க இடம் தரப்படும்..' இந்த வேலைக்குப் போயேன் ஐயா!

வஜ்ரசாமி:— இப்பவே போறேன், சாமி! விலாசம் என்ன? (விலாசம் எழுதி வாங்கிக் கொள்ளுகிறான்.)

காட்சி 10.

(நீலமேகம் வீடு)

வஜ்ர:—எசமான்! அம்மா...! நீல வேணி...!

ரங்கம்:— வஜ்ரசாமியா? அட! நிசம்மா நீயா? எங்க விளம்பரத்தைப் பார்த்தியா?

வஜ்ர:— ஆமாம்மா!... உங்களையெல்லாம் மறுபடி பார்ப்பேனான்னு ஆயிடிச்சம்மா.

நீலவேணி:— வஜ்ரசாமி! என்னப்பா இப்படி இளைச்சுப் போயிட்டியே?

வஜ்ரசாமி:—நான் இளைச்சுப் போனா போறேம்மா... குழந்தை! நீ நல்லா வளர்ந்து சௌக்கியமா இருக்கியே, அது போறும்மா எனக்கு? என் மனசு இப்ப எப்படி இருக்கு தெரியுமா?

ரங்கம்:— எங்கேயாவது வேலை பார்த்தியா, வஜ்ரசாமி?

வஜ்ர:— நாறு இடத்திலே பார்த்தட்டேம்மா... ஒண்ணும் சரிப்பட்டு வரல்லே! இந்த ஐந்து வருஷத்திலே ஆறு நூறு வருஷம் ஓடின மாதிரியிருக்கு எனக்கு..

நீலமேகம்:— யாரு வஜ்ரசாமியா? வாப்பா வா! என்ன உன்னைப்பத்தி அந்தச் சினிமா கம்பெனிக்காரர் ஒரு தகவலும் கொடுக்கிறதில்லே... அப்புறம் பங்களாவை அவங்களுக்கே வித்தப்பறம் நானும் லெட்டர் எழுதறதை நிறுத்திட்டேன்... ஏனப்பா கண்ணிலே தண்ணி?... சௌக்யமா?

வஜ்ர:— சௌக்யந்தாங்க. மறுபடியும் என் இடத்திலே வந்து நான் சேந்தப்பறம் சௌக்யத்துக்கென்னங்க குறைச்சல்?

நீலமேகம்:— அப்படியா? ம்... சில பார்ஸல்லாம் பிரிக்காமெ கிடக்கு. எல்லாத்தையும் உடைச்சு எடு, பார்க்கலாம்!

வஜ்ர:— இதோ, எடுக்கிறேன் எசமான்...

பாக்கியம்:— எடுக்கிறேன்னு நிக்காமெ உடனே வேலை செய்யணும், தெரியுமா?

வஜ்ர:—அட, வேலைக்கார பாக்யமா? நீ இங்கே எங்கே வர்றே?

பாக்கியம்:—எங்கே வந்தியா? நீ எங்கே வந்தியோ, அங்கேதான் நானும் வந்தேன்- வேலை செய்ய வந்தேன்!

வஜ்ர:— ஓஹோ! எல்லாரும் ஒன்னா கூடிட்டமா? ரொம்ப சரி!

✶

குழந்தைகளின் வயிற்றுவலிகளை துரிதமாக சமனம் செய்வது

க்ரைப்பானில்

(க்ரைப் மிக்ஸ்சர்)

ஒரு 'டஸ்ஸனல்' கார்க்களின் தயாரிப்பு

TA

பிறந்த விதமும் வளர்ந்த கதையும்

என்.பி.ஹரிஹரன்

செண்ட் மேரிஸ் கோயில்

சென்னை கவர்னராக இருந்த 'ஸ்ட்ரெயின் ஷாம் மாஸ்டர்' என்பவர் ஆற்காடு நவாபைச் சந்திக்க அவரது சென்னை அரண்மனைக்கு ஒரு நாள் சென்றிருந்தார்.

இச்சம்பவம் நடந்தது 1678-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஆகும். அரண்மனையில் உள்ள வரவேற்பு அறையை அடைந்ததும் அங்குள்ள சுவர்களைப் பார்த்து, சில நிமிடங்கள் பிரமித்து நின்றார். அச்சுவர்களில் அவருடைய உருவம் பிரதிபிம்பிக்கப்பட்டிருந்தது.

நவாப் வாலாஜா, கவர்னரின் அருகில் வந்து 'துரையே! தாங்கள் எதைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?' என்று கேட்டார்.

கவர்னர் மாஸ்டர், 'ஒன்றுமில்லை நவாப் ஸாஹிப்! இந்த அறையின் சுவர்களைத் தான் பார்த்தேன். இவ்வளவு பெரிய சலவைக்கல் எங்கிருந்து தருவித்தீர்கள்? இத்தாலியிலிருந்தா? ஸ்பெயினிலிருந்தா? அது எந்தக் கப்பலில் சென்னை வந்து சேர்ந்தது?' என்று வினவினார்.

நவாப் வாலாஜாவுக்குச் சிரிப்புதான் வந்தது. ஆனால், அடக்கிக்கொண்டு, 'இது ஸ்பெயினிலிருந்தும் வரவில்லை; இத்தாலியிலிருந்தும் வரவில்லை. இது நமது சிற்பிகளால் செய்யப்பட்டது' என்றார்.

'அப்படியா? சென்னையில் இம்மாதிரி சலவைக்கல் கிடைக்குமா?'

'நீங்கள் ஏமாந்து போனீர்கள். இது சலவைக்கல் அல்ல. இந்தச் சுவர் சென்னை சுண்ணாம்பால் கட்டியது. காரையை வெண்ணெயைப்போல் அரைத்துப் பூசினால் சலவைக்கல் மாதிரியே தோன்றும்.'

'என்ன ஆச்சரியம்! உங்கள் சிற்பிகள் மிகவும் சாமர்த்தியசாலிகளாகத் தான் இருக்க வேண்டும்' என்ற கவர்னர் மாஸ்டருக்கு சென்னை சிற்பிகளுடைய சாமர்த்தியத்தைப்பற்றிப் பிரமிப்புத் தட்டியது. ஜியார்ஜ் கோட்டையில் உள்ள தம்முடைய இருப்பிடத்திற்குத் திரும்பிச் சென்றதும் கிழக்கு இந்தியக் கம்பெனிக்காரரின் மற்ற டைரக்டர்களைக் கூப்பிட்டுத் தான் கண்ட அதிசயத்தை வெளியிட்டார். 'செயின்ட் மேரி கோயிலை செயின்ட் ஜியார்ஜ் கோட்டையில் சென்னை சுண்ணாம்பை உபயோகித்துக் கட்ட வேண்டும்' என்று எல்லோரும் ஏக மனதுடன் தீர்மானித்தார்கள்.

இதற்கு வேண்டிய பண வசூல் துவங்கலாயிற்று. இரண்டு மாதத்துக்குள் 805 பகோடா (7 ரூபாய் = ஒரு பகோடா) வசூலாயிற்று. கோயில் கட்டுவதற்கு லண்டன் பிஷப்பிடம் இருந்து அனுமதியும் கிடைத்தது.

1678-ம் ஆண்டு 25-ம் தேதி அஸ்திவாரக் கல்லும் நாட்டப்பட்டது. இரண்டரை வருடங்களுக்குப் பிறகு கோயில் கட்டி முடிக்கப்பட்டு பூஜையும் துவங்கப் பெற்றது.

அப்பொழுது சென்னையில் வசித்த போர்த்துகீஸியருடைய செளகரியத்தையொட்டி, அவர்களுடைய பாஷை தெரிந்த இரண்டு பாதிரிகளை இங்கிலாந்திலிருந்து தருவித்தார்கள். அவர்கள் வாரத்திற்கு ஒருமுறை போர்த்துகீஸிய பாஷையில் பூஜை நடத்தினார்கள். இந்தக் கோயிலுக்கு செயின்ட் மேரிஸ் கோயில் என்று கவர்னர் மாஸ்டர், பெயர் இட்டார். இந்தக் கட்டிடத்தின் சுவர்களும், கோயிலுக்குள் உள்ள அலங்காரங்களும் பலி பீடங்களும் எல்லாம் சென்னை சுண்ணாம்பை உபயோகித்து, இந்த நாட்டுச் சிற்பிகளால் எழுப்பப்பட்டவைகளே.

இவ்வளவு சிறப்புடன் நிர்மாணித்த இக்கோயிலுக்கு ஒரு பெரிய ஆபத்து தோன்றியது. மைசூர் ஹைதர் அலி சென்னையைத் தாக்கினான். பரங்கிமலை அவன் ஆட்சிக்குக் கீழ் வந்தது. மயிலைலஸ் பகுதியைத் தன்னுடைய ராணுவக் கேந்திரமாக்கிக்கொண்டு அங்குள்ள மாதா கோயில் தோட்டத்தில் தன்னுடைய குதிரைகளையும் யானைகளையும் கட்டினான் ஹைதர். ஜியார்ஜ் கோட்டையை எப்பொழுது தாக்குவானோ என்று ஆங்கிலேயர் பயந்துகொண்டு இருந்தனர். மேரீஸ் கோயிலில் உள்ள கற்களையும் அதன் அருகில் உள்ள சமாதிகளில் உள்ள கற்களையும் எடுத்து, ஆங்கிலேயர் பீரங்கி பீடங்களாக உபயோகித்தனர்.

இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் ஐரோப்பாவில் யுத்தம் துவங்கிய போது அப்போரை இந்தியாவில் உள்ள இரு ராஜ்யத்தவரும் தொடர்ந்து நடத்தினார்கள். பிரெஞ்சுப் படைத் தலைவனை கௌண்ட் டிலாலி சென்னையை ஆக்கிரமித்து ஜியார்ஜ் கோட்டையைக் கைப்பற்றினான். சுமார் 10 வருட காலம் அந்தக் கோட்டையும், சென்னை நகரமும் பிரெஞ்சு ஆட்சிக்கு உட்பட்டு இருந்தது. பிரெஞ்சுக்காரர்கள் அனைவரும் கத்தோலிகர். ஆங்கிலேயரோ பிராடஸ்டண்ட்காரர்கள். இப்பிரிவினர்களுக்கு எப்பொழுதுமே சண்டைதான். அதனால் அவர்கள் மேரி கோயிலுக்கும் அந்தக் கோயில் பாதிரியாருக்கும் கொடுக்க வேண்டிய மரியாதையைக் காட்டவில்லை என்றதுமல்லாமல், அந்தத் தேவாலயத்தைத் தங்களுடைய தண்ணீர்ப் பந்தலாகவும் உணவு விடுதியாகவும் உபயோகித்தனர். பிரெஞ்சுக்காரர்கள் சென்னையை விட்டுப் போனபோது அந்தத் தேவாலயத்தில் உள்ள பெரிய மணியும் சுருதிப் பெட்டியும் காணப்படவில்லை. மணிபோன போக்கு யாருக்குமே தெரியவில்லை. ஆனால், சுருதிப் பெட்டியைப் புதுச்சேரியில் கண்டு பிடித்துத் திரும்பச் சென்னைக்குக் கொண்டு வந்தார்கள்.

இக்கோயிலின் கோபுரம் மாலுமிகளுக்கு மிகவும் உபயோகமாய் இருந்தது. இதைக் கட்டும் வரையில் மாலுமிகள் சான்தோம் கோயிலையும் எண்ணூர் தடாகத்தையும் வைத்துக்கொண்டுதான் சென்னைத் துறைமுகத்தை நிர்ணயித்து வந்தனர்.

1795-ம் வருடம் இந்தக் கோபுரத்தை ஒரு கலங்கரை விளக்கமாக உபயோகிக்கலாம் என்ற யோசனை கிளம்பிற்று. கோபுரத்தின் மேல் ஒரு விளக்கு ஏற்றி இருந்தால், அதன் ஒளி கடலில் சுமார் 7, 8 மைல் தூரம் தெரியும் என்றும், அந்த மாதிரி ஒரு விளக்கை ஸ்தாபிப்பதால் ஆங்கிலேய மாலுமிகளுக்குப் பெரிய அனுக்கிரகமாக இருக்கும் என்றும் அதிகார வட்டாரத்தில் நம்பப்பட்டது. ஆனால், பாதிரிகள் அந்த யோசனையை எதிர்த்தனர். தேவாலயத்தை ஒரு நாளும் மதச்சார்பற்ற விஷயங்களுக்கு உபயோகிக்கக் கூடாது என்று வாதித்தனர். அவர்கள் இதோடு நிற்கவில்லை. லண்டன் பிஷப்பிற்கு விண்ணப்பம் இட்டும், மற்றும் பிரபல ஆங்கிலேயப் பார்லிமெண்ட் அங்கத்தினர்களை எச்சரிக்கை செய்தும் அந்த யோசனையை முளையிலேயே கிள்ளிவிட்டார்கள்.

அதனால் கலங்கரை விளக்கத்தை அங்குள்ள எக்ஸ்சேஞ்சு கட்டிடத்தின் கூரையில் ஸ்தாபித்தார்கள். கண்ணாடிபோட்ட ஒரு இரும்புக் கூட்டில் 12 விளக்குகள் ஏற்றப்பட்டன. எரிவதற்கு மெழுகுவர்த்தியோ இதர எண்ணெய்களோ இங்கிலாந்திலிருந்து கொண்டு வரவில்லை. வேறு எந்த எண்ணெய் உபயோகித்தார்கள் தெரியுமா? சென்னையில் செக்கில் பிழிந்து எடுத்த தேங்காய் எண்ணெயைத்தான்! பல எண்ணெய் விளக்குகளின் பிரகாசத்தை ஆராய்ச்சி செய்த பிறகுதான் ஆங்கிலேய நிபுணர்கள் இந்தத் தீர்மானத்துக்கு வந்தார்கள்.

மேரி தேவாலயம் நமது நாட்டில் முதன்முதல் தோன்றிய பிராடஸ்டண்ட் கோயில் என்று கருதப்படுகிறது. இந்தக் கோயில் தமிழ் சிற்பிகளின் திறமையை வெளிப்படுத்தும் சின்னமாக விளங்குகிறது.



மலர் மஞ்சம்

15

பாட்டு முடிந்தது. மறுபடியும் சூட ஒளி காண்பித்ததும் சுண்டலை வாங்கிக் கொண்டு, குஞ்சு குளுவான்களை இழுத்துக்கொண்டு வந்த கூட்டம் முழுவதும் வீட்டுக்குக் கிளம்பிற்று. பின்னால் தங்கித் தங்கிக் கோயிலுக்குள்ளேயே நின்றார் ராமையா. எல்லோரும் போன பிறகு அந்தச் சின்னப் பிராகாரத்தை ஒன்பது தடவை போல வலம் வந்தார்.

'இன்னும் நீங்க கிளம்பலியா?' என்று குருக்கள் கேட்டுக்கொண்டே நைவேத்யப் பாத்திரத்தை எடுக்க உள்ளே போனார். 'கிளம்பிட்டுத்தான் இருக்கேன்' என்று ராமையா பதில் சொன்னதை நின்று காதில் வாங்கிக்கொள்ளவில்லை. ஏதோ கேட்டு வைத்தார்.

ராமையா குழந்தையை அழைத்துக் கொண்டு மீண்டும் குளக்கரையில் வந்து உட்கார்ந்தார். யாரோ அங்கு வாயைக் கொப்பளித்துக் கொண்டிருந்தார்கள்.

'யாரு அங்கே?'

'நான்தான் மாமா—தனபாக்யம்.'

'வீட்டுக்குப் போகலே நீ இன்னும்?'

'உங்ககிட்ட ஒரு சேதி சொல்லணும்னு தான் நிக்கிறேன்.'

'வீட்டிலே வந்து சொல்லேன். இங்க என்ன?'

'அதுவரையில் எனக்குப் பொறுக்காது—இந்தக் குடியைக் கெடுக்கற பய உங்க மனசை ரொம்ப நோக அடிக்கிறான். நான் கண்ணிலே விரலைக் கொடுத்து ஆட்டிப்பிடறேன்.'

'யாரைம்மா?' என்று நாலு பக்கமும் பார்த்துக்கொண்டே கேட்டார். அந்தத் தனிமையில் அவளோடு பேசுவதே அவருக்குப் பயமாக இருந்தது. உள்ளே குலையில் லேசாக ஒரு நடுக்கம்.

'அவனைத்தான் மாமா, அந்த வையன் ஒருத்தி இருக்கே. அந்த மானங்கெட்ட கழுதையைத்தான்.'

ராமையாவுக்குத் திகைப்பாக இருந்தது. ஒரு வருஷமாகக் கட்டின கணவன் மாதிரியே அவள் அவனைப்பற்றிப் பேசுகிற பேச்சையும் நெளிகிற நெளிவையும் கண்டு ஊர் சிரித்துக்கொண்டிருந்தது. 'அவங்க, அவங்க' என்று பெயரைச் சொல்லாமல்தான் அவனைப்பற்றிக் குறிப்பிடுவாளாம். 'அவங்க அவங்கன்னு யாரு?' என்று ஒரு நாள் காவேரி விஷமமாகக் கேட்டாளாம். 'அவங்கதான், சுந்தரி வீட்டுக்காரு' என்றாளாம் தனபாக்கியம். 'வையன்னவா! அவங்க அவங்கன்னு மூடிமூடிச் சொல்லிக்கிட்டு வறியே என்னமோ?' என்றாளாம் காவேரி.

'அது என்னக்கா அப்படிச் சொல்லிப்பிட்டே? ஊரிலே நெல்லும் நீரும் தெம்பும் திராணியுமா இருக்கறது ஒருத்தரு—இவளும் அவருக்குக் கொஞ்சமா செஞ்சு போடலே. அவ சீக்காயிருந்தா வருசக் கணக்கிலே. அப்படி இருக்கான்னு நெனப்பே அவங்களுக்கு வாரதப்படிப் பார்த்துக்கிட்டா இவ...பெயரைச் சொன்னாத்தான் ஆச்சா?' என்று கண்ணைக் கிண்ணைச் சிமிட்டாமல் திறந்த கண்ணிலேயே குறும்பை வழிய விட்டுக்கொண்டு எதிர்க் கட்சிப் பேசினாளாம் யோகம். இதை நின்று புன்னகையோடு கேட்டுக் கொண்டிருந்த தங்கக் கிளி, வடிவக்காளிடம் சொல்லி, வடிவக்காள் ராமையாவிடம் ஆறு மாதம் முன்னால் சொன்னாள்.

அப்படியிருந்தவளா இன்றைக்குக் கண்ணில் விரலைக் கொடுத்து ஆட்டுவதாக ஆடுகிறாள்!

'அப்படியெல்லாம் சொல்லாதே—'

'நல்லாச் சொல்லுவேன். உங்களை அழ அழ அடிச்சானும். நீங்க பாருங்களேன்!'

எதற்கு, என்ன என்றெல்லாம் காரணம் கேட்க ராமையாவுக்குத் துணிவில்லை. இரவு வேளையில், ஊருக்கு வெளியே, எல்லாரும் போன பிறகு...ஏற்கெனவே மண்டையை உருட்டுகிறது ஊர்க்காலி நாலு.

'சரி; காலமே பேசிக்கலாம்...நீ போ' என்றார் அவர்.

'காலமே என்ன மாமா பேச்சு? இது தான் உங்ககிட்ட சொல்லணும்னு துடிச்சுது. சொல்லிப்பிட்டேன். நீங்க கவலைப் படாதிங்க...' என்று சொல்லிக்கொண்டே, தெருவை நோக்கி நடந்தாள்.

'ஏம்பா கோச்சுக்கறாங்க இப்படி?' என்று பாலி கேட்டது.

'எனக்கும்தான் தெரியலே.'

'சும்மா சும்மா இப்படித்தாம்பா கோச்சுக்கறாங்க இவங்க.'

'சும்மா சும்மா கோச்சுக்கமாட்டாங்களே!'

தி.ஜானகிராமன்

'உனக்குத் தெரியாதுப்பா. நான் கொப்பளம் ஊதறத்துக்காகக் காட்டாமணிப் பால் வடிக்கறதுக்குக் கொல்லெச் சந்திலே போயிக்கிட்டிருந்தேன்...அப்ப வந்து இவங்க வீட்டுக் கொல்லையிலே அடுத்த வீட்டுச் சுவத்தைப் பாத்துக்கிட்டே கத்திக்கிட்டுக் கிடந்தாங்க இவங்க. மாட்டுக் கொட்டில்லே வையன்னு மாமா நின்னுக்கிட்டு, சுவத்தைப் பாத்துக்கி டே கேட்டுக்கிட்டிருந்தாரு. ரண்டு மூணு நாளு ான் பாத்தேன்.'

'என்ன கத்தினு?'

'அஉ என்னமோ, சத்தம் போட்டுக் கோவமாப் பேசினுங்க.'

'சரி, சரி—அதெல்லாம் நீ கேக்காதே.'

'நான் கேட்டுக்கிட்டு நிக்கலேப்பா. கேட்டுக்கிட்டே பாலு எந்தினேன், வந்துப்பிட்டேன்.'

'அதைப் பாத்தியா தண்ணிப் பாம்பு!' என்று குளத்தைச் சுட்டிக் காண்பித்தார் ராமையா.

'ஆமாம்பா. எம்புா உடம்பெல்லாம் தண்ணிக்குள்ளார போட்டுக்குது. தலையை மாத்திரம் மேலே நீட்டிக்குது' என்று அந்தப் பேச்சுக்குப் பாய்ந்துவிட்டாள் பாலி. அவள் கண்கள் தண்ணீர்ப் பாம்பைப் பின் தொடர்ந்தன. அது பார்வையைவிட்டு மறைந்ததும் மீன்கள் துள்ளி நீர் சிலிர்ப்பதை விடாமல் பார்த்துக்கொண்டிருந்தாள்.

குழந்தையின் அழகையும் குளத்தையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டிருந்த ராமையாவின் மனம், வேறு எங்கோ சுற்றிக்கொண்டிருந்தது.

இவளுக்கும் பொல்லாதவனாயிட்டியா நீ! ரண்டு பேரும் இழைஞ்சு இழை! என்னடாது? கொல்லெ கொத்தினேன், திண்ணையிலே உக்காந்து குறக்களி பண்ணினே! வேலய்யாவைத் தள்ளிட்டுப்பிட்டேன்னு ஊரெல்லாம் கூட்டி கட்சகட்டினே! எல்லாம் போருதுடாய்யான்னு எனக்குத் தத்து வேறல்ல எடுக்கணும்ங்கறே. கருமாதி செய்யப் புள்ளையில்லேன்னு எத்தனை அக்கறை! என்ன அங்சலாய்ப்பு! ஏண்டா, அப்படியெல்லாமா அசைச்சிப்பிட முடியும்னு பாக்கறே! என்னையா! என்னையா! பாக்கறியா?



தன்னையறியாமல் ஒரு கனைப்புக் கனைத்தார் அவர். குழந்தை திரும்பிப் பார்த்தது. 'என்னப்பா?'

'ஒண்ணுமில்லியே.'

'சரி.'

திடீர்னு என்ன கோபம் அவன் மேலே உனக்கு? எதுக்கு சுவத்தைப் பார்த்துக்கிட்டு சத்தம் போடறியாம்! கசந்து போயிடிச்சா?

'ஏம்பா ராத்திரி முச்சுடும் இங்கியே இருக்கப் போறியா?'

'க்கும்.'

'என்னத்துக்கு?'

'என்ன கேட்டே?'

'ராத்திரி முச்சுடும் இங்கியே இருக்கப் போறியான்னு கேட்டேன்.'

'இல்லியே. வீட்டுக்குப் போகலாமா?'

'அப்பறம்—போலாம்—சித்தெ நாளிகளிச்சு—நீ ஒரு கதை சொல்லுப்பா.'

'கதைதானே! சொல்றேன்!'

'சொல்றேன் சொல்றேன்னு ஏமாத்திப்பிடுவே. நீ இப்பவே சொல்லு.'

'எந்து வா. சொல்லிக்கிட்டே வரேன். நீ ம்ம்னு கேட்டுக்கிட்டே வா.'

'ம்.'

16

அன்று ராத்திரி தூக்கத்தில் மூன்று நாலு தடவை எழுந்துகொண்டு விட்டார். அவர் மூச்சு விடுவதும் இருமுவதும் தொண்டையைக் காறுவதுமாகப் புரண்டு புரண்டு படுத்தார். இரவு கொட்டுக் கொட்டென்று விழித்துக்கொண்டிருந்தது; இருட்டுக் கண்களுடன் அவரைப் பார்த்துக் கன்னத்தில் கை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தது. அவர் நடுநிசிக்கப்பால் ஒரு தடவை விழித்து உட்கார்ந்து கமறுவதைப் பார்த்து, யதேச்சையாக விழித்துக்கொண்ட வடிவு, 'நீ இன்னும் தூங்கலே?' என்று கேட்டாள்.

'தூக்கம்வல்லே. ரண்டு தடவை துர்ச் சொப்பனமா வந்துது.'

'துர்ச் சொப்பனமா?'

'ஆமாம்.'

'இதோ வந்திட்டேன்' என்று எழுந்து பூஜை அலமாரியிலிருந்து கொஞ்சம் துண்ணூற்றைக் கொண்டுவந்து, 'இந்தா இட்டுக்க' என்று நீட்டினாள். இருளைத் தடவி அவள் கையிலிருந்து எடுத்து, நெற்றியில் ஒரு விரலால் கோடு இட்டுக் கொண்டார் அவர்.

'என்ன சொப்பனம் கண்டே?'

'யாரையோ தத்து எடுத்துக்கறாப்பல சொப்பனம் கண்டேன் வடிவு.'

'என்னது!' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் வடிவு. 'தத்து எடுத்தாப்பல காண்றது கெட்ட சொப்பனமா? யார்ரு இந்தத் தத்துவம் சொல்லிக் கொடுத்தா உனக்கு?'

'எனக்கு என்ன தத்து இப்ப? பாலிக்குப் பொறக்கப் போற குழந்தையெல்லாம் என் குழந்தைங்க தானே?'

'அது சரி, அதுக்காக அது துர்ச் சொப்பனமா?'

'அதுவும் துர்ச் சொப்பனம்தான். ரண்டாம் தடவை கண்டதும் துர்ச் சொப்பனம்தான். ரண்டாம் தடவை இந்த வையன்னுப் பயலைத் தத்து எடுத்துக் கருப்பல சொப்பனம் கண்டேன்.'

வடிவுக்குச் சிரிப்பு வந்தது.

அந்தச் சொப்பனம் கண்டு உண்மையாகவே உளறியடித்துக்கொண்டு விட்டார், ராமையா.

மறுநாள் முழுவதும் அவருக்கு மனசு சரியாயில்லை. இடுப்பில் கைவைத்துக்

கொண்டு இடத்துக்கு இடம் சூன்யத்தைப் பார்த்து நின்றுகொண்டிருந்தார்.

அன்று வயல் வெளியெல்லாம் சுற்றிவிட்டுத் தெருவிற்குள் நுழையும்போது, வையன்னு வீட்டு வாசலில் திடீர் என்று இரைச்சல் கேட்டது. எதிர் வீட்டு வாசலில் இரண்டு மூன்று பேர் நின்றுகொண்டிருந்தார்கள்.

'அடிக்கிறுங்களே, அடிக்கிறுங்களே, பாவிங்களா, பாவிங்களா, இந்த ஊர்லெ அக்ரமத்தைக் கேக்க ஆள் கிடையாதா?...ஏண்டா! பொம்மனாட்டியையா அடிக்கிறீங்க? அந்தக் கூறு கெட்டவன் சொன்னான்னு உங்களுக்கு எங்கடா புத்தி போச்சு...அம்மா அம்மா...இங்க வாங்களேன்!'

தனபாக்கியத்தின் குரல் மாதிரி இருந்தது. மாட்டுக் கொட்டில் கதவு சாத்தியிருந்தது. சட்டென்று எதிர் வீட்டுத் திண்ணையில் ஏறி நின்று எட்டிப் பார்த்தார் ராமையா. தலைவிரிகோலமாகத் தனபாக்கியம் வெறிபிடித்தாற்போல ஓடி ஒரு அரைச் செங்கல்லை எடுத்து வீசினாள். இரண்டு மூன்று ஆட்கள், கொட்டிலில் நின்றுகொண்டிருந்தவர்கள், கல்லிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக மூலைக்கு மூலை ஓடினார்கள். ஆனால், கல் ஒருவன் மண்டையில் விழுந்தது. தனபாக்கியம் சுவருக்கப்பால் மறைந்தாள். கதவு தாளிடும் சத்தம் கேட்டது.



லையன்னு திடுதிப்பென்று கொட்டில் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்து முறைத்துக்கொண்டே தன் வீட்டுக்குள் நுழைந்தார். ராமையா நின்றிருந்த வீட்டுக்கு அடுத்த வீடு. ராமையா நின்றதையோ, தெருவில் ஆங்காங்கு வீட்டு வாசல்களில் ஓரிரண்டு பேர் நின்று நடப்பதைக் கேட்டுக்கொண்டிருப்பதையோ அவர் பார்க்கவில்லை. வேட்டியை மார்பில் கட்டிக்கொண்டு வெறும் மார்புடன், வெறுப்பும் கோபமும் முகத்தில் பொரிய, உள்ளே போய்விட்டார். சற்றுக் கழித்து தனபாக்கியத்தின் வீட்டிலிருந்து ஆத்திரத் தழதழப்புடனும் விசிசலுடன் கோப இரைச்சல் கேட்டது.

'மூணு ஆளு விட்டு ஒரு பொம்மனாட்டியை அடிக்கச் சொல்ருன். அவங்களும் மென்னியை மடக்கிட்டு அடிக்கிருன். கேக்கறதுக்கு ஆளில்லாதப் போச்சா, இந்த ஊர்லெ? ஐயையோ, கையை முறிச்சிப்பிட்டானே...ஏய் இரு, உனக்குத் தெய்வம் கூலி கொடுக்கப் போறது? அதுக்கு முன்னடி நானே உன்னைப் பார்த்துக்கறேன்–'

இரைச்சல் தனபாக்கியத்து வீட்டு வாசல் பக்கத்து உள்ளேயிருந்து கேட்டது. தெரு கேட்க வேண்டும் என்றே அங்கே வந்து கூச்சல் போட்டுக்கொண்டிருந்தாள். ஆளைக் காணவில்லை.

மாட்டுக் கொட்டிலில் அடிபட்ட ஆளின் நெற்றியில் பசும் சாணத்தை எடுத்து நெற்றிக் காயத்தில் அப்பிக்கொண்டிருந்தான், இன்னொருவன். கை மறைகிற சமயம். காயத்தை இங்கிருந்தபடிச் சரியாகப் பார்க்க முடியவில்லை.

இரைச்சல் கேட்டுக்கொண்டிருந்தது. ஆனால், ஒரு பிராணியாவது அருகே போய் என்ன, ஏது என்று கேட்கவில்லை. அவரவர்கள் அப்படியே வீட்டுக்குள் நழுவி விட்டார்கள்.

இரைச்சல் நிற்காததைக் கேட்டு, பக்கத்து வீட்டு வாசலிலிருந்து சத்தம் கேட்டது. 'சும்மா இருக்கியா இல்லியா? இன்னும் ஒரு நொடி போச்சின்னு, இப்ப பட்டதெல்லாத்தையும் தடவிக் கொடுத்துதுன்னு சொல்லும்படியாக ஆயிடும்' என்று லையன்னு இரைச்சல் போடுவது கேட்டது. பக்கத்து வீட்டுத் திண்ணையில் இருந்ததால், அவன் கண்ணுக்குப் படவில்லை. அந்த அதட்டலைக் கேட்டோ என்னவோ ஒரு நிமிஷத்திற்கெல்லாம் இரைச்சலின் ஸ்தாயி குறைந்தது.

என்னவென்று யாரைப் போய் விசாரிப்பது? லையன்னுவைப் போய்க் கேட்க ராமையாவுக்கு விருப்பமில்லை. தனபாக்கியத்தைக் கேட்க வேண்டும் போலிருந்தது. ஆனால், கூச்சமாயிருந்தது. அப்படிப் போய்க் கேட்பது வெறும் அசட்டுத் துணிச்சலாக இருக்குமேயொழிய லாபம் ஒன்றுமிராது என்று தோன்றிற்று. இருக்கிற கோபத்தில் தன் மேலும் வந்து பாய்ந்தாலும் பாய்வான். திண்ணையைவிட்டு இறங்கிச் சிறிது நேரம் நின்றார். இரைச்சல் கேட்ட அறை நிசப்தமாயிருந்தது. இறங்கி வீட்டை நோக்கி அவர் நடந்த

மனைவி:—என்னுங்க இது இந்த விசிறியிலே. கொஞ்சங்கூடக் காத்தே வரலியே! இதை எங்கே வாங்கினீர்கள்?

கணவன்:—பீச்சுலே வாங்கினேன்!

போது, ஜன்னல்களில் பெண்கள் நாலைந்து வீட்டில் நிற்பது தெரிந்தது. அப்பால் உள்ள வீடுகளுக்குச் செய்தியே தெரியாதுபோலிருந்தது. வீட்டுக்குள் வந்தார். ஜகது வாசலில் நின்றுகொண்டிருந்ததைப் பார்த்து, அவளைப் பொதுவாகக் கேட்கலாம் என்று தோன்றிற்று. அருகில் போவதற்குள், 'இதோ வந்திட்டாங்க அப்பா' என்று பாலியின் குரல் கேட்டது.

'இங்கேதான் இருக்கியா?'

'ஒரு நாழியா எனக்குக் கதை சொல்லியாவுது' என்று ஜகது சிரித்தான்.

'என்ன கதை?'

குழந்தை விவரங்கள் சொல்லத் தொடங்கியதும், அவருக்கு எல்லாம் மறந்துவிட்டது.

'சரி, இப்ப வர்றியா? அப்பறம் வர்றியா?'

'நீ போப்பா, அப்பறமா வர்றேன்.'

'சரி.'

குழந்தையை ஜகதுவிடமேயே விட்டுவிட்டு வீட்டுக்குள் வந்தார் அவர். பூஜை அலமாரிக்குமுன் குத்து விளக்குச் சொர்ணச் சுடருடன், நிச்சலமாகக் கை கூப்பிக்கொண்டிருந்தது. அலமாரிக்கு எதிரே யாரோ வணங்கிக்கொண்டிருந்தார்கள். வடிவக்கா, 'ராமையாகூட வந்திட்டாண்டிம்மா' என்ருள்.

உருவம் எழுந்தது. தன்பாக்கியம்தான்! அவளை அடையாளம் கண்டதும், ராமையாவுக்கு வாயடைத்துவிட்டது.

'மாமா! நீங்கதான் மாமா என்னைக் காப்பாத்தணும்!' என்று அவரிடம் வந்து காலில் விழுந்து எழுந்தாள்.

'என்னம்மாது?...எந்திரு சொல்றேன்.'

'என்னை அடி அடின்னு அடிச்சுப் போட்டுட்டாங்க...பாருங்க கைவளை எப்படி நசுங்கியிருக்கு! கொல்லைத் தாவாரத்திலே நின்னுக்கிட்டிருந்தேன். ரண்டு மூணு ஆளா வந்தான் பாருங்க. என் தலை மயிர்லெ கையைப் போட்டு லாவினுங்க. தரதரன்னு இழுத்துக்கிட்டு அடுத்தாப்பல மாட்டுக் கொட்டிலுக்கு இளுத்துக்கிட்டுப் போய் தலை முதுகெல்லாம் பத்து பதினஞ்சு அடி வச்சுப்பிட்டான். நானும் கூச்சப் போட்டேன். ஒரு ஆளு வாணுமே! நீங்க தர்மபுத்திரர் மாதிரி இருக்கீங்களே! நீங்க இந்த ஊர்லெ இருக்கறப்பவா இப்படியெல்லாம் நடக்கும்?'

'என்னத்துக்காக அடிச்சாங்க?'

'என்னத்துக்காவது இருக்கட்டும். அதுக்காகப் பொம்பளையை அதுவும் ஒண்டிப் பொம்பளையை வீட்டிலேந்து இழுத்துக்கிட்டுப் போய் அடிக்கிறதுன்னு, இது என்ன ஆம்பிளைத்தனமா?...இந்தப் தான் மாமா அடிக்கச் சொன்னன்! அடிக்கறப்ப பாத்துக்கிட்டே நிக்கிருன்.'

'யாரு?'

'இந்தக் குடியைக் கெடுக்கிற பயதான் லையன்னு.'

'எனக்கு ஒண்ணும் புரியலேம்மா நீ சொல்றது. நான் ஏதாவது சொன்னக் கோச்சுக்க மாட்டியே.'

'எனக்கு என்னத்துக்குக் கோபம்?'

'இதைச் சொன்ன யாருக்கும் கோபம் வரும்; உன்னைப்பத்தி ஊரிலே நல்ல பேச்சில்லேங்கறது தெரியுமா?'

'தெரியும் மாமா–நல்லாத் தெரியும். நான் ஒரு புள்ளை, அதுக்கு சாட்சி வச்சிருக்கனே.'

'அட பாவி.'

'பாவிதான் மாமா. ஊரெல்லாம் தெரிஞ்சு சிரிக்கிறப்ப நான் சொல்லிக்கிறதிலே என்ன? கழுத்தை முறிச்சுப் போட முடியுமா அதை?' அவள் பேச்சு ஆரம்பத்திலிருந்தே தழதழப்பில் குழம்பிக் குழம்பி உருச்சிதைந்து வந்தது.

'வாண்டாம். சாட்சி சொல்லிக்கிட்டே இருக்கட்டும்...ஆன, இப்ப என்ன திடீர்னு அடிக்கும்படியா வந்திரிச்சு?'

குரலைத் தாழ்த்திக்கொண்டு சொன்னாள் தனபாக்கியம். 'மாமா, நான் உண்மையைச் சொல்லிப்பிடறேன் மாமா, அவன் பொண்டாட்டி உடம்பா ஆசுபத்திரியிலே கிடந்தான்னுதான் சமைச்சுப் போடப் போனேன். அதிலே வந்த வினைதான் மாமா. நிலமா எழுதிவைக்க வாண்டாம், ஒரு வேலி நிலம் வாங்கி வச்சுக்கும்படியா பணம் தரேன் தரேன்னு சொல்லிட்டேயிருந்தான். கடசிலே அவ வந்தா. அப்பறம் அந்தப் பேச்சே நின்னு போச்சு. ஜாடைமாடையாச் சொல்லிப் பாத்தேன். கடசிலே ஒரு பசுமாடு அறுபது ரூவாயிலே கொண்டு கட்டினன். அதுவும் ரண்டு ஈத்து ஆயிடிச்சு. ஒரு நாத்தம்பது ரூபாய் கடன் வாங்கியிருந்தாங்க அவங்க.'

'யாரு?'

'இவங்கதான்...வீட்டுக்காரரு...அதைக் கொண்டா கொண்டான்னு புடுங்கிப்பிட்டான். சும்மா மேலுக்கு வெரட்ருன். ரூபாயை எங்கிட்ட கொடுப்பான்; நான், எங்கிட்ட இருக்குன்னு அவங்க கிட்ட கொடுப்பேன். அவங்க அவன்கிட்ட இந்தாடா உன் பணம்னு தலைசுத்தி எறியருப்பல கொடுக்கப் போருருன்னெல்லாம் நான் நெனச்சிட்டிருந்தேன். கடசியிலே அந்த மாட்டை ஒரு நாளைக்கு இழுத்து வந்து தன் வீட்டுக் கொல்லையிலே கட்டிக்கிட்டான். எனக்கு வயிறெல்லாம் எரிஞ்சுது. பால் வாடிக்கை ரண்டு வீட்டுக்குக் கொடுத்திட்டிருக்கேன். அவங்களுக்குப் பதில் சொல்ல முடியலே. இவனுக்கு என்ன தைரியம்! இப்படிப் போனவங்க ஏமாந்து போன, வெளியிலே சொல்ல முடியாது, அவமானம், பழி எல்லாத்தையும் ஓசைப்படாம கடிச்சு முளுங்க வேண்டியதுதானேன்னு நெனச்சான்! நான் என்னத்துக்கு அப்படியிருக்கணும்? ஒருத்தருக்கு துரோகம் பண்ணியாச்சு. எனக்கும் துரோகம் பண்ணிக்கன்னு சொன்ன, நான் கேப்பனு? அவ்வளவு கூறுகெட்டவளா, பிச்சைக்கார அனதியா நான்? அதான் சத்தம் போட ஆரமிச்சேன். வெசேன். முந்தாநாத்து குட்டைக் கோவிந்துகிட்ட சொல்லியனுப்பிச்சான். பேசாம இருக்காளா, இல்லாட்டி உதை வாங்கிக்கருளான்னு கேளுடான்னன். நான் ராமையா மாமா இல்லேடா பொறுத்துக்கிட்டுப்போக, எதுவந்தாலும். நாலு கொடுத்தா ஒண்ணுவது திருப்பிக் கொடுப்பேன்னு கத்தினேன். நேத்து அதான் உங்ககிட்ட சொன்னேன். நேத்தும் சத்தம் போட்டேன். இன்னக்கிம் போட்டேன். இப்படி அடிக்கருங்க. ஊர்லெ யாராவது ஒரு காக்கா, ஒரு ஈ வந்து ஏன்னு கேட்டிச்சா?'

பாதி பேச்சிலேயே தனபாக்கியத்துக்குத் தழதழப்பெல்லாம் மறைந்துவிட்டது. சாதாரணமாகப் பேசிக்கொண்டே வந்தாள். ஊரைப்பற்றிச் சொல்லும் போதுமட்டும் நெஞ்சையடைத்து வந்தது அவளுக்கு. சிறிது மூச்சுவிட நிறுத்தினள்.

'நீங்க அந்த இடத்திலே இருந்திருந்தா, தடுத்திருப்பீங்களா, மாட்டீங்களா?'

இதைக் கேட்டதும் ராமையாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

'ஒரு பய வல்லியே. வேடிக்கை பாத்து நின்னுக்கிட்டிருந்தாங்களே, இது எந்த ஊர்லெ அடுக்கும்?'

'நான் சொல்றேன். அவன் என்ன கேக்கறவனு?...நீ இப்ப என்ன செய்யணும்ங்கறே?'

'எனக்கு அந்தப் பயகிட்டேருந்து ஒண்ணும் வாண்டாம். நான் கேஸ் போட்டு அவனைக் கோர்ட்டிலே இளுக்கப் போறேன். அப்ப நீங்க வந்து எனக்காகச் சொல்லணும்' அடிச்சது நெஜம் தான்னு. நீங்க பாத்தீங்களான்னு கேட்டா, சத்தம் கேட்டிச்சுன்னவது சொல்லணும்.'

'நீ இதுக்காகக் கேஸ் போடப் போறியா?'

'பின்னே? ஊரிலேயும் யாரும் கவனிக்கலே. கவனிக்கமாட்டாங்க.'

'நான் போய்க் கேக்கறேன்.'

'உங்ககிட்ட அவன் எத்தினி மதிப்பு வச்சிருக்கான்னு எனக்குத் தெரியும் மாமா. நானும் எதிர்த்த வீட்டிலேதான் இருக்கேன். என்ன நையாண்டி! என்ன கேலி! அதைத்தான் ஊரிலே யாராவது தடுத்தாங்களா? கூத்துக்கு இப்பிடி தொண்டைத் தண்ணி பறி கொடுத்தீங்களே–ஒரு முட்டை நெய்க்கு இவங்களுக்கு வக்கு உண்டா, உங்களுக்கு வாங்கிக் கொடுக்க? நன்றிகெட்ட கும்பல்: ஊரே நன்னிகெட்ட ஊரு. ஒரு கூடை செங்கல்லு அத்தனியும் பிடாரி...'

'போனப் போருங்க.'

'நீங்க அப்படித்தான் சொல்லுவீங்க. நான் விடமாட்டேன். நான் பிராது போடத்தான் போறேன். நீங்க வந்து எனக்கு ஒத்தாசையா ரண்டு வார்த்தை சொன்னப் போதும்... இப்ப அதுக்குத் தான் வந்தேன்..... நடந்தது ஒண்ணும் உங்களுக்குத் தெரியாதுன்னலும் தெரிஞ்சாப்பல ஈரெட்டாச் சொன்னலும் போதும்'

'சரி, பாத்துக்கலாம் போ.'

'உங்களைத்தான் நம்பியிருக்கேன் நான்.'

'என்னை நம்பி என்ன பண்றது? ஆண்டவனைல்ல நம்பணும்?'

'ஆண்டவன்தான் ஆள்றவன் இல்லே. அவன் சமயத்துக்கு எதையும் செய்ய மாட்டான். நம்ம செல்லப்பன் பண்ணை வேலை பார்க்கருப்பல'

ராமையாவுக்கு அதைக் கேட்டதும் சிரிப்பு வந்துவிட்டது. செல்லப்பனின் ஒன்றரைக் கண்ணும், நீண்டு, குச்சியாகக் கறுத்த உடலும், பரபரவென்று எதையும் சரியாகக் காதில் போட்டுக்கொள்ளாமல் அவன் ஓடுகிற ஓட்டமும் அவர் கண்முன் நின்றன. செல்லப்பனை ஒரு காரியத்தைச் —செய்ய அனுப்பினுல் போதும். நடுவில் வேறு யாராவது அவனைக் கூப்பிட்டு, 'செல்லப்பா, கொஞ்சம் கடையிலே சக்கரை வாங்கிக் கொடுத்திட்டுப் போயேன்' என்ருல், உடனே அந்த வேலைக்குக் கிளம்பிடுவான். சர்க்கரை வாங்கப் போகும்போது மேலத் தெருவில் போய் குசவ நடேசனை நான் வரச் சொன்னேன்னு சொல்லிட்டு வருவியா என்று யாராவது அம்மாள் சொல்லுவாள். ஆகக் கடைசியில் கொடுக்கிற வேலைதான் முதலில் நடக்கும். ஆனல் அவன் ஓடுகிற ஓட்டமும் உடம்பில் துடிக்கிற சுறுசுறுப்பும் ஏதோ சொன்ன மாத்திரத்தில் எதுவும் நடந்துவிடப் போகிறது என்று தான் யாருக்கும் தோன்றும்.

அந்த செல்லப்பனின் உருவம் அவர் கண்முன் நின்றது. 'உனக்கு நன்ருக வேணும்' என்று ஆண்டவனிடம் சொல்ல வேண்டும்போலிருந்தது அவருக்கு.

'ஆண்டவனை நம்பறது எல்லாரும்தான் செய்யருங்க. ஒரு மனுசங்களை ஆண்டவன நினைச்சு நம்புறதுதான் கயிட்டம். நான் உங்களை அப்படித்தான் நெனச்சிருக்கேன்'

குடுமிக்குப் பூ சுற்றுகிருளா, உண்மையாகவே சொல்கிருளா என்று சந்தேகம் வந்தது ராமையாவுக்கு.

'என்னலே முடிஞ்சதைச் செய்யறேன்' என்ருர் அவர்.

'அது சொன்னப் போதும்...நான் போய்ட்டு வரேன். நான் வாரேன்க்கா, உங்க கிட்டல்லாம் மானம் வெக்கத்தையெல்லாம் விட்டுப்பிட்டு என்னென்னமோல்லாம் சொல்லிப்பிட்டேன்.' என்னலே சொல்லாமியும் இருக்க முடியலே. இப்பதான் மொதமொத உங்ககிட்டே சொல்லியழுதேன். வேற யார்கிட்டவும் சொல்லவும் மாட்டேன். சொல்லவும் முடியாது. நான் வர்றேங்க்கா. வரேன் மாமா' என்று அவரை மறுபடியும் வணங்கிவிட்டுக் கொல்லை வழியாலேயே சென்ருள் அவள். இருட்டி இரண்டு நாழிகையாகியிருந்தது. ஆனல், அவள் யாருக்கு, எதற்குப் பயப்படப் போகிருள்?

ராமையாவுக்கு அவள்மீது பல வருஷமாக இருந்த கோபம் போய்விட்டது.

'கொல்லைக் கதவைத் தாப்பாள் போட்டுங்கக்கா' என்று அவள் சாத்திக் கொண்டு போகிற வரையில் பார்த்துக் கொண்டே நின்ருர்.

(தொடரும்)

குழந்தைகளின்
எந்த வியாதிக்கும் உயர்ந்த
சிகிச்சை அளிப்பது

"பாலசாதி"

முற்றிலும் ஆயுர்வேத முறையில் தயாரிக்கப்பட்டது. குழந்தைகளுக்கு ஏற்படும் மாந்தம், காய்ச்சல் இருமல், மலச்சிக்கல், பல் முளைக்கும்போது ஏற்படும் வலி முதலியவைகளை அடியோடு அகற்றிவிடுகிறது.

ஒரு டப்பியின் விலை ரூ. 1.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

விவரங்களுக்கு கீழ்க்கண்டவருக்கு எழுதுக:

VAIDYA J. G. VARADH OFFICE, NADIAD.

ஸ்டாக்கிஸ்டுகள்:—

தாமோதர் & கம்பெனி.
113, நைனியப்ப நாயக்கன் தெரு,
சென்னை-3.

உலகத்தையே காத்து அருள் புரிகின்ற தெய்வ மாதாவின் அழகுத் திரு வுருவத்தைச் சமைத்துக் கொண்டிருந்தான் விஜயன். கலைக் கடவுளிடத்தில் அன்பும் பக்தியும் பூண்டவன் விஜயன். அவன் காம்பட்ட கல்லெல்லாம் கவினுறும் சிலையாகும். அவ்வளவு கலைத் திறன் நிரம்பப் பெற்றவன். ஆழ்கடலின் அடக்கம், சாந்தம் பொலியும் முகம். அருள் பொங்கும் கண்கள்.

'ணங் ணங்' என்று கல்லுளி கல்லிலே பட்டுப் பட்டு எழுந்தது. அதனை இயக்குகின்ற கரங்கள் பக்தி சிரத்தையுடன் வேலை செய்தன.

அப்போது அங்கே வந்தாள் அருண்மொழி.

'அத்தான், கையிலே சுத்தியை எடுத்துக் கொண்டு விட்டால் வீடு, வயிறு எல்லாவற்றையும் மறந்து விடுகிறீர்களே!'

கிண்டல் ஏதும் செய்யாமல் பேசி அறியாள் அருண்மொழி!

ஆனால் காரியத்திலேயே கண்ணாக இருந்த விஜயனோ, இதைச் சற்றும் கவனிக்கவே இல்லை.

'அத்தான்...!' இப்போது குரல் கொஞ்சம் அதட்டும் தொனியில் இருந்தது.

'ஓ...அருண்மொழியா...!' வா.... என்ன வேண்டும்....?

கையிலிருந்த உளியைக் கீழே வைத்துவிட்டுச் சற்றே அமர்ந்தான் விஜயன். 'கலகல'வென நகைத்தாள் அருண்மொழி.

'வயிறு என்று ஒன்று இருப்பதே மறந்து விட்டதோ!'

'இல்லை இல்லை. இதோ வந்து விடுகிறேன். இன்னும் ஐந்தே நாட்கள்தான் இருக்கின்றன கும்பாபிஷேகத்திற்கு. அதற்குள் தேவியின் சிலையைச் செய்து முடித்தாக வேண்டும்.'

'மிகவும் அழகாகத்தான் செய்திருக்கிறீர்கள்! எங்கே, நான் போய் அதன் பக்கத்திலே நின்று பார்க்கிறேன்!'

அருண்மொழி தேவியின் சிலையருகில் போய் நின்று கொண்டாள்.

'அட, என்னைப் போலவே சிலையும் இருக்கிறதே. அதே உயரம், பருமன்...அத்தான், என்னையா நினைத்துக்கொண்டு, சிலையைச் செதுக்குகிறீர்கள்?'

விஜயன் தனக்குள் சிரித்துக் கொண்டான்

அந்தச் சமயம் 'க்கும்' என்று கனைக்கும் குரல் கேட்டது. வந்தவன்—அமலன்!

'தம்பி, சாப்பிட்டு விட்டாயா?'

'இல்லை அண்ணா...'

'சிலை, சிலை என்று சிலையாய் உட்கார்ந்திருக்கிறாயே! தெய்வம் சோறு போடும் என்று நம்புகிறாய்?' அமலனின் கேள்வியிலே விஷமம் நிறைந்திருந்தது.

விஜயன் பேசவில்லை. அமலனின் குணம் அவனுக்கு நன்றாகத் தெரியும். அமலன் உலகம் தானே தோன்றியது என்ற தான்தோன்றிக் கொள்கை கொண்டவன். ஆனாலும் அன்பின் பிடிப்பினால் தன் கொள்கையை அவ்வளவாகத் தன் தம்பியின் மீது சுமத்த விரும்பவில்லை அவன். இருந்தாலும் அவ்வப்போது தன்னுடைய கொள்கையைத் தன் தம்பிக்குக் கூறுவதில் தவறமாட்டான்.

அமலன் சிலையருகில் சென்றான்.

'இது என்ன? பெண்ணா?'

'ஆம்; அன்னை!'

'நம் அன்னைதான் இறந்து ஐந்து வருடங்கள் ஆகின்றதே! அவள் இப்படி இல்லையே?'

'இவள் உலகுக்கே அன்னை. இவள் இப்படித்தான் இருந்தாள், இருக்கிறாள், இருப்பாள்.'

'ஓஹோ, இது எதற்கு?'

'குந்தளூர்க் கோயில் கும்பாபிஷேகத்துக்கு'.

அமலன் ஏளனமாகச் சிரித்து விட்டுப் போய்விட்டான். அவன் போவதை வெறுப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள் அருண்மொழி.

'என்ன இருந்தாலும் அவர் இப்படி இருக்கக்கூடாது.'

'யாரைச் சொல்கிறாய், அருண்மொழி!'

'எல்லாம் உங்கள் அண்ணாவைத்தான். விதையில்லாமல் செடி போடுகிற ஆள் அவர். எனக்கென்னமோ அவரையும் அவர் பழகும் கூட்டத்தையும் கண்டால் கொஞ்சமும் பிடிக்கவில்லை.'

'பிடிக்கவில்லையா? வேடிக்கைதான். அவனைத்தானே நீ மணந்துகொள்ளப் போகிறாய்!'

'நானா? இல்லவே இல்லை. எனக்கு...'

குப்பென்று சிவந்தது அவள் முகம்.

'நன்றாயிருக்கிறது. அண்ணனுக்கு முறைப்பெண் நீ...'

'மணம் செய்துகொண்டால் உங்களைத்தான் செய்து கொள்வேன்...'

அவள் தைரியத்துடன் பேசியதைக் கேட்டு ஸ்தம்பித்து நின்றான் விஜயன்.

'அம்மாகூட அதைத்தான் சொல்கிறாள். அவளுக்கும் அமலனைக் கண்டால் பிடிக்கவில்லை...' என்றாள் முகத்தைக் குனிந்துகொண்டு.

அவள் சொல்வதும் விஜயனுக்கு சரியாகத்தான் பட்டது. ஆனால், மனசிலே பெருங்குழப்பம்.

'ஆ... நான் கேட்ட கேள்விக்குப் பதிலே சொல்லவில்லையே அத்தான்...'

'நீ என்ன கேட்டாய்...?

'என்னை நினைத்துக் கொண்டா இந்தச் சிலையைச் செய்தீர்கள்?'

அவள் விழிகள் ஆவலை உமிழ்ந்தன.

'என்ன, உன்னை நினைத்துக்கொண்டா செய்தேன் என்கிறாய்?'

'ஆமாம், என்னைப்போலவே சிலை இருக்கிறதே.'

'அது தேவியின் சிலை'—விஜயன் அழுத்தந் திருத்தமாகக் கூறினான்.

'உன்னை நினைத்துக்கொண்டு செய்திருந்தேனென்றால் அது வெறும் சிலையாகத்தான் இருக்கும். இது என் மனத்திலே ஆரோகணம் செய்துகொண்டுள்ள அன்னையின் பிரதிபிம்பம்.'

அருண்மொழி ஏமாந்து விட்டாள்.

'அத்தான்...' என்று ஏங்கும் குரலுடன் குழந்தைபோல அவனருகில் உட்கார்ந்துகொண்டு கேட்டாள்.

அவள் குரலில இருந்த குழைவு அவனை உருக்கி விட்டது. அவளை நன்றாக ஒரு முறை பார்த்தான். என்றைக்குமில்லாத ஒரு பொலிவு அவள் முகத்திலே இருந்தது. சின்னஞ் சிறு திலகம் விண்மீனைப் போல் ஒளி சிதறியது. கன்னங்களிலே படிந்திருந்த இளஞ்செம்மை, அவனை மெய் மறக்கச் செய்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாக வேகமாகப் புரண்ட சிறு கூந்தல் கற்றைகள் அவனருகே விளையாடின.

'அருண் மொழி...'

இதுவரைக்கும் அழைக்காத அன்புக் குரலிலே அழைத்தான் விஜயன்.

'அத்தான்...' என்று ஆவலுடன் கேட்டாள் அருண்மொழி.

'உன்னை நினைத்துக்கொண்டுதான் சிலை செய்ய ஆரம்பித்தேன்.'

மறுபடியும் உளியை எடுத்துக்கொண்டான் விஜயன். அருண்மொழி அளவில்லாத ஆனந்தத்துடன் அவனருகே நின்று கொண்டாள்.

பாதி அவளையும், பாதி சிலையையும் பார்த்துக்கொண்டே உளியால் செதுக்கினான் விஜயன். உள்ளம் என்றுமில்லாத போதையினால் நிறைந்திருந்தது. இதற்கு முன் அனுபவித்திராத உணர்ச்சி உடலின் ஒவ்வோர் அணுவிலும் நர்த்தனம் ஆடியது. அந்தக் கிறுகிறுப்பிலே—

தேவியின் முதுகுப் புறத்தை அழகு செய்யும்போது சிலையின் சிறிய பாகம் பெயர்ந்து விட்டது. கோலி அளவுக்குப் பள்ளம். ஆனால் விஜயன் இதைக் கவனிக்கவில்லை.

'நான் போய் வருகிறேன் அத்தான், அம்மா தேடுவாள்' எனக் கூறிச் சிட்டாய்ப் பறந்து விட்டாள் அருண்மொழி.

அவள் செல்கின்ற அழகைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான் விஜயன்.

ஃ ஃ ஃ

'ஊர் முழுவதும் பிரசாரம் செய்வதில் குறைச்சலில்லை. ஆனால் வீட்டினுள் வேறு விதமாயிருக்கிறது' என்றான் ஒருவன்.

'நீ சொல்வது எனக்குப் புரியவே இல்லை...' என்று கேட்டான் அமலன்.

'புரியாதுதான். நீயோ பகுத்தறிவுப் பிரசாரம் செய்துகொண்டிருக்கிறாய். நம்முடைய கூட்டத்திற்குத் தலைவனாயும் இருக்கிறாய். ஆனால் உன் தம்பியோ இன்னொரு துருவமாயிருக்கிறான்...'

'அது அவன் சொந்த விஷயம். அதில் நான் எப்படிக் குறுக்கிட முடியும்?'

அமலன் விஜயனிடத்தில் அளவிலாயான அன்பு கொண்டவன்.

இன்னொருவன் சொன்னான்:

'அது கிடக்கட்டும். உன்னுடைய மாமனுடைய பெண் அருண்மொழி இருக்கிறாளே, அவளுடன் விஜயன் அதிகமாகப் பழகுவது...?'

'அதனால் என்ன?'

கூடியிருந்தவர்கள் 'கொல்'லெனச் சிரித்தனர்.

'உன்னுடைய முறைப் பெண் அருண்மொழி. நாளைக்கு உன்னை மணந்து கொள்ளப் போகிறவள்.'

'ஆமாம்...'

'அப்படித்தான் நீ நம்பிக்கொண்டிருக்கிறாய். ஆனால்... ஆனால்... ஊருக்குத் தெரியும் இந்த விஷயத்தைப் பற்றி. அருண்மொழி நிச்சயம் விஜயனைத்தான் மணம் புரிந்துகொள்ளப் போகிறேனென்பாள்.'

'என்ன?'

அமலன் திடுக்கிட்டான்.

'ஆமாம். இருவரும் கூடிக்கூடிப் பேசிக் கொள்வதை நீ கவனித்தாலும் கவனிக்கா விட்டாலும் ஊர் கவனித்துக்கொண்டிருக்கிறது. உன் கொள்கைக்குத்தான் உன் தம்பி எதிரி என்று நினைக்காதே! உன் உரிமைக்குக்கூட எதிரிதான்!'

அமலன் பதிலே பேசவில்லை.

'உன் உரிமைக்குக்கூட எதிரிதான்' என்ற சொற்கள் மனத்திலே பெருங் குழப்பத்தை உண்டாக்கி விட்டன.

அருண்மொழியை மனக் கண்முன் நிறுத்திப் பார்த்தான். 'அழகிதான்' என்று அவன் வாய் முணுமுணுத்தது.

'சரி போய் வருகிறேன்' என்று சொல்லிவிட்டு, விர்ரென்று அங்கிருந்து கிளம்பினான் அமலன்.

தன் உரிமைக்கு எதிரி தன் தம்பி. அவனால் இதை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. தந்தையோ அவன் பிறந்தபோதே இறந்து விட்டார். தாயும் இறந்து ஐந்து வருடங்கள் ஆகிவிட்டன. இறக்கும்போது விஜயனின் கையைப் பிடித்து, அமலனிடம் ஒப்படைத்து விட்டுக் கண்ணை மூடிவிட்டாள். அமலனும் விஜயனைத் தன் மகன்போலவே வளர்த்து வந்தான்.



அமலன் வீட்டிற்குள் நுழைந்தபோது விஜயன் தன் வேலையில் கண்ணும் கருத்துமாக இருந்தான்.

'என்ன? காரியம் பூர்த்தியாகி விட்டதோ?' என்ற கடுமையான குரலைக் கேட்டுத் திடுக்கிட்டான் விஜயன்.

'என்ன அண்ணா கேட்கிறீர்கள்?'

'சிலை முடிவு பெற்றுவிட்டதா?' என்று கேட்கிறேன்.

'முடித்து விட்டேன்; இரண்டு நாட்களிலே கும்பாபிஷேகம். அன்று பிரதிஷ்டை செய்யப் போகிறார்கள்.'

பொறாமைத் தீயிலே வெதும்பிய அமலன் இதைக் கேட்டான்.

'ஹோ ஹோ' வெனக் கோரச் சிரிப்புச் சிரித்தான்.

'எனக்கு என்று கொள்கையும், கோஷ்டியும் உண்டு என்று தெரியுமோ?'

விஜயன் பீதி கொண்ட முகத்துடன் அமலனை நோக்கினான்.

'இந்தக் கும்பாபிஷேகத்திற்கு நாங்கள் விருந்தாளிகளாக வரப்போகிறோம்?'

'அப்படியென்றால்...'

'அது பிறகு தெரியும்...'

விஜயனுக்குப் பகீரென்றது.

'ஐயோ! கும்பாபிஷேகம் நன்றாக நடைபெற வேண்டுமே!' என்ற பயம் மிகுந்து விட்டது.

தேவியின் சிலையை ஏங்கும் கண்களுடன் பார்த்தான் விஜயன்.

ஃ ஃ ஃ

அன்று குந்தளூரிலே கும்பாபிஷேகம். கோயிலைச் சுற்றிப் பிரமாதமான பந்தல் போடப்பட்டிருந்தது. மூலைக்கு மூலை வா[illegible]மரங்கள் கட்டப்பெற்றிருந்தன. சாம்பிராணிப் புகையும், சந்தன மணமும் அந்தச் சூழ்நிலையை மேலும் இன்பமுடையதாக ஆக்கின. உள்ளத்திலே கள்ளமிலாத மக்கள் தேவியின் சிலை பிரதிஷ்டை செய்யப்படுவதைப் பார்க்கத் திரண்டிருந்தனர். எங்கும் பக்தி மணம்.

விஜயன் கண்களிலே கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. அருண்மொழி அவனருகே நின்றுகொண்டிருந்தாள்.

தூரத்தே இருந்தனர் அமலனும் அவனுடைய கூட்டத்தாரும்.

'பார்த்தாயா? தான் செய்த சிலையைத் தானே வணங்குகிறான்!' என்றான் அமலன். கூட்டம் கும்மாளமிட்டுச் சிரித்தது.

சிலையைப் பிரதிஷ்டை செய்யப் போகும் நேரம் நெருங்கியது. எங்கும் அண்ட சராசரங்களைக் காக்கின்ற அன்னையின் நாம கோஷம். இன்பத்தின் உச்ச நிலையாக எல்லோருக்கும் புல்லரித்தது.

அப்போது திடீரென்று 'தீ தீ!' என்ற கூக்குரல் கேட்டது. பந்தல் தீச்சுவாலையிட்டது. கூடியிருந்த மக்கள் சூடு காண்பித்த தேன்கூட்டைப் போலச் சிதறி ஓடினர்.

'ஐயோ அன்னையே!' என்று கூக்குரலிட்டான் விஜயன்.

அருண்மொழி பயத்தினால் அவனைப் பற்றிக் கொண்டாள்.

யாரோ அநாவசியமாக அடித்துவிட்டதால், ஆத்திரத்துடன் அழுகின்ற குழந்தையைப்போலப் பற்றியெரிந்து, தன்னைக் குலைத்துக்கொண்டு விட்டது அந்த அலங்காரப் பந்தல்.

விஜயன் சிலையின் அருகே நின்று நெஞ்சம் குமுறி அழுதான். கும்பாபிஷேகம் ஒத்திப் போடப்பட்டது. திடீரென்று விஜயனுடைய கண்கள் அகல விரிந்தன. அவன் கண்கள் சிலையின் முதுகுப் புறத்தில் இருந்த ஊனத்தைக் கண்டுவிட்டன.

'ஆ! தேவி!' என்று கூவினான் விஜயன். அவன் கால்கள் விட்டுக்கொண்டன. சிலை முன் தொப்பென்று விழுந்தான். 'உன்னை நினைத்துக்கொண்டு தான் சிலை செய்தேன்' என்று அருண்மொழியிடம் கூறியது மறுபடியும் மனத்திலே படம்போல ஓடியது. இதைச் சொன்னவுடன் தேவியின் சிலை ஆடுகிறது, அவள் கண்கள் ஜ்வாலையைக் கக்குகின்றன, அந்த ஜ்வாலை பந்தலே... எண்ணங்கள் கனவுபோல நெஞ்சத் திரையில் ஓடின.

'ஐயோ போதும்!' என்று கூவினான் விஜயன்.

அருண்மொழி அவனைத் தேற்றி எழுப்ப முயன்றாள்.

'என்னைத் தொடாதே!'

அருண்மொழி திடுக்கிட்டாள்.

'உன்னை நினைத்துக்கொண்டே செய்ததால், இந்த ஊனம் ஏற்பட்டது. அது தேவிக்குப் பொறுக்காது, பொறுக்கவே பொறுக்காது!' என்று அலறினான் விஜயன்.

தூரத்திலே பந்தல் எரிவதைப் பார்த்துக்கொண்டிருந்தனர், அமலனும் அவன் கோஷ்டியாரும். தாங்கள் போட்ட திட்டப்படி நடந்ததில் அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி!

'நம்மை தேவி வந்து தடுக்கவில்லை பார்த்தாயா?' என்று தெய்வத்துக்குச் சவால் விட்டான் ஒருவன்!

வீட்டிலே ஒருபுறத்தைத் திரை போட்டு மறைத்தான் விஜயன். பெருங்கல் ஒன்றை நிறுத்திப் புதிதாகச் சிலை ஒன்று செய்ய ஆரம்பித்தான். அவனுடைய ஒரே நோக்கம் தேவியின் சிலையை நன்றாகச் செய்வதுதான். உணவு, உறக்கம் எல்லாவற்றையும் மறந்தான். இவன் தேவியின் சிலை செய்வது யாருக்குமே தெரியாது. அமலனே எப்போதாவதுதான் வீட்டிற்கு வருவான்.

கோயிலிலே பிரதிஷ்டை செய்வதற்கு வைத்திருந்த சிலை ஊனமுடையது என்பதும் யாருக்கும் தெரியாது. யாரும் அறியாதபடிச் சிலையைக் கொண்டுபோய் பிரதிஷ்டை செய்யவேண்டிய இடத்தில் வைத்துவிட்டு, பழைய சிலையை எடுத்துக்கொண்டு வந்து விடவேண்டும் என்பது அவன் திட்டம்.

ஃ ஃ ஃ

'அந்தச் சிலை இன்னும் அங்கேதான் இருக்கிறதுபோல இருக்கிறது. அதையும் ஒரு கை பார்த்தால்தான்..!' என்று கூறி, அமலன் முஷ்டியை உயர்த்தினான்.

கும்பாபிஷேகத்திற்காக இருந்த ஊனமுள்ள சிலையை உடைத்துவிடுவது என்று தீர்மானம் ஆயிற்று. தம்பியின் மேல் இருந்த பொறாமை அமலனைத் தூண்டியது.

'நானே அந்த ஆக்க வேலையை இன்று இரவு செய்யப் போகிறேன்!' என்று தீர்மானமாகக் கூறினான், அமலன். அவன் குரலிலே பழிக்குப் பழி வாங்கும் மனோபாவம் நிறைந்திருந்தது.

அன்று இரவு.

வீட்டிலே அமலன் இல்லை. விஜயன் முடித்திருந்த சிலையைக் கோயிலுக்குக் கொண்டு போவதற்காகக் கைவண்டியொன்றை ரகசியமாக வீட்டின் முன்புறம் நிறுத்தியிருந்தான்.

இன்னும் ஒரு மணி நேரத்திலே சிலையைக் கொண்டுபோய்க் கோயிலிலே சேர்த்தாக வேண்டும்.

நேரம் ஊர்ந்தது. நடுச்சாமம் நெருங்கியது. அற்புதமாக அமைந்திருந்த தேவியின் சிலை முன்னே மெழுகாக உருகினான் விஜயன்.

அப்போது 'அத்தான்' என்று அழைக்கும் குரல் கேட்டது.

அருண்மொழி!

'ஏன் இந்த நேரத்திலே இங்கு வந்தாய்!'

'வேலையாகத்தான் வந்திருக்கிறேன். என் வாழ்விலே பசுஞ்சோலைக்கு இடமுண்டா என்பதை முடிவாகத் தெரிந்து கொண்டு போக வந்திருக்கிறேன்.'

விஜயன் பதில் பேசாமல் இருந்தான்.

'உண்மையாகச் சொல்லுங்கள். என் மீது உங்களுக்கு அன்பு உண்டா இல்லையா?'

'உண்மையாக இருந்தது! இப்போது இல்லை.'

அருண்மொழி விசித்தாள்.

'காரணம்?'

'காரணம், என் கலையைத்தான் நான் நேசிக்கிறேன். அந்தக் கலைக்குக் களங்கம் நேரிடும் அளவுக்கு நான் மற்றவரிடம் அன்புகொள்ளத் தயாராக இல்லை.'

'என்னை நினைத்துக்கொண்டுதான் தேவியின் சிலையைச் செய்ததாகச் சொன்னீர்களே!' அவள் கேவினாள்.

'உன்னை நினைத்துக்கொண்டு செய்ததினால்தான் ஊனம் ஏற்பட்டது. அவள் தேவி!'

'நானும் பெண்தானே!'

விஜயன் பேயாகச் சிரித்தான்.

'அவள் பெண், அன்னை. நீ பெண்ணல்ல. கலையைக் கெடுக்க வந்த பிசாசு. பெண் உருவத்திலுள்ள பேய். போய் விடு. என்முன் நிற்காதே! நான் உன்னை விரும்பவில்லை.' விஜயன் பைத்தியம் பிடித்தவனைப்போலக் கூவினான்.

தன் ஆசைக் கனவுகள் அனைத்தும் தவிடுபொடியாவதைக் கண்டு, அருண்மொழிக்குப் பொறுக்கவில்லை.

'மற்றவரிடம் அன்புகொள்ளக் கூடாதென்றால் அந்தக் கலை வேண்டவே வேண்டாம். அந்தக் கலை ஒழிந்துபோகட்டும். கலையின் உருவமாக இருக்கின்ற சிலைகளும் நாசமாகட்டும்.' அருண்மொழி அவன் கையிலிருந்த உளியைப் பிடுங்கினாள். அங்குள்ள சிலையின்மீது வெறி பிடித்தவள்போல் எறியக் கை ஓங்கினாள்.

'நிறுத்து...' என்று அவள் கையைத் தாவிப் பிடித்தான் விஜயன். அவள் திமிறினாள். அப்போது அவள் கையிலிருந்த உளி அவள் மேலேயே விழுந்தது. உயிர்ச் சிலைக்குக் குருதி அபிஷேகம்.

'அத்தான்...' என்ற முனகலுடன் கீழே சாய்ந்தாள் அருண்மொழி.

பரபரவென்று விஜயன் சிலையை வண்டியின்மீது ஏற்றினான். கல்சிலை அவன் உள்ளத்தைப்போலக் கனத்தது. 'அத்தான்' என்ற சோகக் குரல் எதிரொலி செய்தது. அவன் நெற்றியிலே வியர்வை ஆறாகப் பெருகியது. அருண்மொழி எதிரே நின்று அழைப்பது போலப் பிரமை.

ஊரடங்கும் வேளையிலே வீட்டுக்கு வந்த அமலன், செங்குளி குளித்திருந்த அருண்மொழியைக் கண்டு திடுக்கிட்டான்.

'அருண் மொழி' என்று கூவினான் அமலன்.

அருண் மொழி கண் விழித்தாள்.

'என்னை அடித்துவிட்டு...அவர்...ஓடி விட்டார்...போங்கள்...'

'என்ன...விஜயனா...நான் போய் அவனை எங்கிருந்தாலும்...'

'வேண்டாம்; அவர் போனால் போகட்டும்...என்மீது வெறுப்பை வளர்த்த... அந்த...அந்தச் சிலை...கோயிலிலே இருக்கும். அந்தச் சிலையைப் போய் நாசம்... செய்துவிட்டு வாருங்கள்...'

பரபரவென்று அவள் மண்டையிலே கட்டைப் போட்டான் அமலன்.

'அருண்மொழி! அதற்குத்தான் நானே போய்க் கொண்டிருக்கிறேன். இந்தப் பித்தர்களுக்குச் சரியானபடிப் பாடம்...'

'செல்லுங்கள். சீக்கிரம் காரியத்தை முடியுங்கள்...'

அமலன் கோயிலை நோக்கி ஓடினான்.

அவன் சென்ற சில நிமிஷங்களிலே அருண்மொழி தன்னிலை அடைந்தாள்.

'வந்தவன் அமலன். அப்படியானால் விஜயன் எங்கே!'

மெல்ல எழுந்து போய்ப் பார்த்தாள், அருண்மொழி. அங்கே கட்டியிருந்த திரையை விலக்கிப் பார்த்தாள். அங்கேயிருந்து ஏதோ இழுக்கப்பட்டிருப்பது தரையைப் பார்த்ததிலிருந்து தெரிந்தது. பளிச்சென்று விஜயன், 'உன்னால் தான் தேவியின் சிலைக்கு ஊனம் ஏற்பட்டது' என்று சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. தவிர, அவளைத் திரைக்கு உள்ளே வரக்கூடாது என்று சொல்லியிருந்ததும் நினைவுக்கு வந்தது.

'ஒரு சமயம், சிலை ஒன்று செய்து, அதைக் கோயிலிலே பழைய சிலைக்குப் பதில் வைக்கப் போயிருக்கிறாரோ?' என்ற சந்தேகம் உடனே எழுந்தது.

'ஐயோ, அமலனும் அங்குதான் சென்றிருக்கிறார். இருவருக்கும் சண்டை ஏற்பட்டு...' என்ற பயங்கர எண்ணம் அருண்மொழிக்குத் தோன்றியது.

கால்கள் தள்ளாடின. உடல் சோர்ந்தது. கண்கள் உள்ளே செருகிக்கொண்டன. இருந்தாலும் இந்த எண்ணம் தோன்றியவுடன், கோயிலை நோக்கி விரைந்தாள், அருண்மொழி. கால்களோ ஒன்றோடு ஒன்று பின்னிக்கொண்டன. விஜயனது கள்ளமற்ற உள்ளத்தையும், அவனது வெறுப்பின் காரணத்தையும் அவள் நன்றாக உணர ஆரம்பித்தாள்; நடையின் வேகம் ஓட்டமாக மாறியது.

கோயிலை நெருங்கிய விஜயன் வண்டியிலிருந்து சிலையை இறக்கினான். கல் உடைக்கும் உளி பூட்டையும் உடைத்தது. கோயிலுக்குள் எரிந்தது சிறு விளக்கொன்று. பழைய சிலையை வைத்திருந்த இடத்திற்குச் சென்று ஒரு நிமிடம் நின்றான்.

திறந்து வைத்திருந்த கதவு வழியே ஆவலுடன் பாய்ந்த காற்று, அந்தச் சிறு விளக்கையும் அணைத்துவிட்டது.

உடலெல்லாம் வியர்வை. தேவியைச் சுமந்தது உலகத்தையே சுமந்ததுபோலக் கனத்ததால், சிறிது ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

பிறகு பழைய சிலையின் அடிப் பாகத்தைப் பெயர்த்தான். அவனது வாய் மெல்ல இறைவியின் திருநாமங்களை உச்சரித்தது.

சிலை நிலை பெயர்ந்து முன்னே விழுந்தது. அடுத்த கணம்...

கோயிலே கிடுகிடுத்துப் போகும்படி அமைதியைக் கிழித்துக்கொண்டு 'அம்மா' என்று எழுந்தது ஓர் கூக்குரல். சரசரவென்று புதிய சிலையை அந்த இடத்தில் வைத்துவிட்டு, முன்னே ஓடினான் விஜயன்.

'ஆ தேவி...அன்னையே...!' என்று பழைய சிலையினடியில் ஓர் மனிதன் அலறினான். விஜயன் அவனைக் கையால் வாரிக்கொண்டு வெளியே ஓடி வந்தான்.

'ஆ...அமலனா...அண்ணாவா...?'

அமலனது வலது கரம் நசுங்கிய வாழைப் பட்டையாக...

'ஆமாமடா கண்ணே...! தேவி தண்டித்து விட்டாளடா! சிலையை உடைக்க வந்தேன். என்மீது விழுந்தது. அலறித் துடித்துத் தலை நிமிர்ந்தபோது, தேவி புதுக் கோலத்துடனே காட்சி தந்தாளடா!'

'அண்ணா!' என்று அலறினான் விஜயன். அவனைத் தூக்கிக்கொண்டு வீட்டுக்கு ஓடினான். எதிரே வந்தாள் அருண்மொழி!

'ஐயோ அத்தான்...!'

'ஆமாமம்மா. அன்னை என்னை நன்றாகத் தண்டித்து விட்டாளம்மா, என்னுடைய குணத்திற்கு ஒரு கையைப் பலியாக்கிக் கொண்டு விட்டாள் உமையன்னை. சிலையுடைக்கப் போன கரத்தைச் சீரழித்து விட்டாளம்மா!'

அமலன் குமுறிக் குமுறி அழுதான்.

ஃ ஃ ஃ

மேளம் கொட்டியது; தாளம் முழங்கியது. எங்கும் குதூகலம். எங்கும் இறைவனின் தேஜஸ்.

'ஆம்! அன்றுதான், குந்தளூர்க்கோயில் கும்பாபிஷேகம்.

அன்னை, அருட்கண்கொண்டு பார்த்தாள்.

அவள் முன்னிலையில் மாலை மாற்றிக் கொண்டனர் அருண்மொழியும் விஜயனும். கண்களிலே நீர் பெருக ஒற்றைக் கரத்துடன் வணங்கிக் கொண்டிருந்தான், அமலன்.



நண்பர்:—இங்கே இவ்வளவு வெயில் கொளுத்துகிறதே: என் வீட்டில் கொஞ்சம் கூடத் தெரியாது!
வீட்டுக்காரர்:—உங்கள் வீடு எங்கே ஸார் இருக்கிறது?
நண்பர்:—ஊட்டியில்!

பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி" REGD

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் அசல் விஜயகரம் மருந்து. எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்.

Dr பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

19, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்-4. போன்: 71354

கும்பகோணம் கிளை: 7, சாரங்கபாணி கோவில் கீழ வீதி.



24, அமுந்தியின் கிளர்ச்சி

சுவர்ணமுகி என்னும் அந்தப் பொற்கலம் திரைக் கடலிலே அசைந்தாடிச் சென்று கொண்டிருந்தது. அபராஜித வர்மனுடைய அந்தரங்க அறையிலே சோபனப் பெண்ணைப்போல நாணம் மிகக் கொண்டு, உள்ளம் கிளர்ச்சியுற்று ஒதுங்கி நின்றாள், சுந்தரி அமுந்தி. அவளது மோகனாகாரமான பின்னழகையும் கொண்டைப் பின்னலழகையும் கண்டும் களித்தும் சலிப்புறாத அபராஜிதன், சர்ப்ப மந்திரத்தின் சயன மஞ்சத்திலே அமர்ந்திருந்தான்.

அச்சிலே, வார்த்த சிற்பம்போல, கடைந்தெடுத்த வடிவு கொண்டு நின்றாள் அந்தச் சிங்கார நங்கை. இத்தகைய பெரியபேறு தனக்குக் கிடைக்கும் என்று அவள் என்றுமே எண்ணியதில்லை; கனவும் கண்டதில்லை. ஆகவே, அவள் உள்ளம் பரபரப்புற்று நின்றது. நெஞ்சு விம்மியது; நெகிழ்ச்சியும் கொண்டது. என்னதான் இது பெறுதற்கரிய பாக்கியமாகத் தோன்றினாலும் இத்தனை பெருமைக்கும் தான் ஏற்றவளல்ல என்ற எண்ணம் ஒருபுறம் அவளுக்கு மேலோங்கி வந்தது. மாமல்லையின் ஆயிரக் கணக்கான பெருமக்களுக்கு எதிரிலே அரசனோடு தனிமையில் உல்லாசப் பயணம் செல்ல நேர்ந்தது, தன்னுடைய புகழில் மாசு தோன்றியதைக் குறிப்பதாகவே தோன்றியது அவளுக்கு. அதுவே பெண்களுக்குரிய பெரும் கூச்சத்தையும் விவரிக்க இயலாத ஒருவித அச்சத்தையும் கொடுத்தது. அவளுக்கே தன் சௌபாக்கியம் ஏற்கவில்லை. மாமண்டலங்களுக்கெல்லாம் மகிபனான அபராஜித பல்லவ வர்மன், கேவலம் தன்போன்ற ஒரு கணிகைப் பெண்ணொருத்தியோடு கலம் ஏற முன் வருவதா என்று தோன்றியது. பாண அரசனின் களவழி பிறந்த அவள் எங்கே? பல்லவ மகா சாம்ராஜ்யத்தின் மகோன்னதமான அரியணையில் அமரும் அபராஜித வர்மன் எங்கே? ஆயினும் இது எப்படி நேர்ந்திருந்தாலும் அவள் எப்படி வர இசைந்தாள்? வெறும் சரீர சௌந்தரியமா அவளுக்கு இப்படிப்பட்ட ஒரு வாய்ப்பை வலிந்து வந்து கொடுத்தது? இல்லையென்றால், அவள் கற்றுத் தேர்ந்திருந்த அபூர்வ வித்தைதான் இதற்குக் காரணமாக இருந்ததா? அழகும் அருங்கலையும் படைத்துப் பயின்ற ஏந்திழை மடந்தையருக்குப் பல்லவ நாட்டிலே அப்படியா பஞ்சம் வந்துவிட்டது? எல்லாம் இருந்தாலும் பலபேர் முன்னிலையில் அரசனோடு படகேறி வர அவளுக்கு எங்கிருந்து ஒரு துணிச்சல் வந்தது? அப்பொழுதே அவள் ஏன் வர மறுக்காமல் போனாள்? அத்தனை நகர மாந்தரும் அவளைப்பற்றி என்ன நினைத்திருப்பார்கள்? என்னதான் நினைக்காமல் இருந்திருப்பார்கள்?

மேலே தொடர்ந்து எண்ணிப் பார்க்கவே திறனிழந்து சோர்ந்து நின்றாள் அவள்.

துறைமுகக் கரையிலே தூரத்தில் நின்ற புரையப் பெண்ணை விட, தான் எவ்வளவோ கீழானவள் என்ற உணர்ச்சி அவளுக்கு

இப்போது உண்டாயிற்று. அங்கே நின்ற சாதாரண எளிய பெண்ணைக் காட்டிலும் தான் எவ்விதத்திலும், எதனாலும் உயர்ந்தவளாகிவிட வில்லை என்ற ஞானோதயம் இப்பொழுது தான் அவளுக்கு ஏற்பட்டது. அவள் தன்னையே நொந்துகொண்டாள். கற்றைக் கருங்குழல் பெரும் சுமையாகக் கனத்தது. மைதீட்டிய கூர் விழிகள் வேலாக அவள் உள்ளத்தைக் குத்தின. மென்தோளும் வளை மார்பும் சிற்றிடையும் சீரடிப் பாதங்களும் அங்கங்கே நோக நொந்தன. சற்றும் தகாத ஒன்றைப் பெறுவது தனக்கே பெரும தீங்கைத் தரும் என்று நிச்சயமாகப் பட்டது. தனக்கு ஏவல் செய்ய வந்திருந்த யவனப் பணிப்பெண்டிரை விடத் தான் உயர்ந்தவளில்லை என்று அவளுக்கு வேதனை மூண்டது. அந்த மகா வேதனையைப் பார்த்து அடுக்கடுக்கான அலைவரிசைகள் எல்லாம் பரிகசிப்பதுபோல் தோன்றின. அந்தப் பரிகாசத்தின் இகழ்ச்சி நெடுங்கடலை விட வரிந்த தன்மை கொண்டதாய்த் தோன்றியது.

அவள் உட்புறம் திரும்ப விரும்பாமலே விக்கித்து நின்றாள். சர்ப்ப மந்திரத்தின் சப்ரகூட மஞ்சம் அவளுடைய தன்மானத்தைச் சரிப்பதுபோல் காட்சியளித்தது. அசிற் கலத்திலிருந்து சுழன்ற தாம ரேகை, அவளுடைய லஜ்ஜையற்ற தன்மையை அம்பலப்படுத்தியது. மலர்ச் சரங்கள் எல்லாம் அவளுடைய மாசு கொண்ட மேனியைப் பழித்தன. களபக் கலவையும் செம்பஞ்சுக் குழம்பும் அவளது களங்கத்தை வர்ணம் பூசிக் காட்டுவது போல் தோன்றியது. மதுரசங்களும் கனி வகைகளும் அவளுடைய அற்ப லாபத்தைப் பறைசாற்றிக்கொண்டிருந்தன, ஏலமும் லவங்கமும் வைத்துக் கட்டிய காளாஞ்சி அவளுடைய பெண்மையை எள்ளி நகையாடுவதாகத் தோற்றியது.

ஆனால், அபராஜிதன் முற்றிலும் மாறான மனோமய உலகிலே சுற்றிக்கொண்டிருந்தான். முன் இரவின் மயக்கத்திலிருந்து அவன் இன்னமும் மீளவேயில்லை. அன்று உதயத்திலிருந்தே அவன் கனவுலகில் சஞ்சரிப்பவன்போல் காணப்பட்டான். அமத்தியின் எழில் வடிவை அந்தச் சிற்பி எங்கே வடித்திருக்கப் போகிறான் என்கிற ஐயத்தோடுதான் அவன் வந்திருந்தான்.

'விஜயா! சிலை எவ்வளவு தூரம் ஆகியிருக்கிறது?' என்று அலட்சியக் குரல் காட்டித்தான் கேட்டான்.

'சிலை அடித்து சித்தமாக இருக்கிறது மகாராஜா!' என்றான் விஜயன். அப்போதே அவன் வியப்பு எல்லையை எட்டிவிட்டது.

'பார்க்கலாமா?'

சிலையை மூடியிருந்த துணியை விலக்கினான் சிற்பி. அவன் என்ன சாதாரண சிற்பியாகவா தோன்றினான்? மயனே மறு பிறவி எடுத்து வந்தவன்போல அவன் எதிரே நின்றிருந்தான். பெரும் கலா ரசிகனான அபராஜிதனின் ஊனக் கண்களுக்குத் தோன்றாத அக அழகெல்லாம் சிந்த அமத்தியின் சிலை எதிரே நிறுத்தப்பட்டிருந்தது. துருவித் துருவிக் கண்டும் காணாத நுணுக்கமான எழில் வண்ணம் கொண்டு விளங்கியது அந்தச் சிலை. இரவிலே அவன் மடியிலே விளையாடிய அமத்தியின் அருமையெல்லாம் இந்தச் சிலையைப் பார்த்த பிறகு தான் புலனுக்குப் புரிவதுபோல் தோன்றியது.

'ஆகா, நீ நான்முகனை விடச் சிலாக்கியமானவன், விஜயா! அவன் உயிரூட்டிய சிலைகள் அழிந்துவிடும்; ஆனால், இதற்கு உயிரை ஊட்டாமலே அழியாது படைத்து விட்டாய்!' என்று தன் நிலை கருதாது, அவனைக் கட்டிக்கொண்டான். அவனுடைய பரவசத்தைக் கண்டு அமத்தி எட்டவே நின்றாள். பிறர் பார்க்கத் தான் காண அவள் அஞ்சி வெட்கினாள்.

'பார்த்தாயா, அமத்தி?'

அவள் சோலையைப் பார்த்துக்கொண்டு தலையை அசைத்தாள்.

'உன் சிலையைப் பார்க்க உனக்கு ஏன் இந்த வெட்கம்? இனி உன் எழிலைச் சுமக்க அவன் நெஞ்சத்திலே இடம் கிடையாது. அதனை உளி மூலம் சிலையாக உருவாக்கிக் கொடுத்துவிட்டான். ஆகவே நீ கூசாமல் பார்க்கலாம்; குற்றம் குறை இருந்தால் கூறலாம்... எங்கே?'

அமத்தி விருட்டென ரதம் நோக்கிச் சென்றுவிட்டாள். சற்றுப் பொறுத்து அவளோடு வந்து சேர்ந்துகொண்ட அபராஜிதன், 'என் நோக்கம் இரண்டில் ஒன்றை நிறைவேற்றிவிட்டேன். உன்னிடம் கொண்ட காதலை நான் இனி ஒளித்து வைத்திருக்கவில்லை என்பதைக் கண்டிருப்பாய். மற்றொன்று, இந்த மாமல்லைக்கு நிகரான மற்றொரு சிற்பபுரியை நிர்மாணிக்க வேண்டும் என்பது என் அடுத்த நோக்கம். அதைச் செய்து தர வல்ல சிற்பியை நான் இதோ கண்டெடுத்துவிட்டேன்! இன்று மதியமே மரக்கலம் நம்மை ஏற்றிச் செல்லும்!" என்று புளகாங்கிதத்தோடு கூறினான்.

'சரி சரி!' என்றாள் அமத்தி. அவன் அரசனானாலும் பெண்ணிடம் வசப்பட்ட ஆடவன்தானே? அவளுக்காக இல்லாவிட்டாலும் மற்றவர்களை முன்னிட்டுத் தன் உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தான்.

இப்போதுதான் அந்தக் கட்டுப்பாட்டிலிருந்து அவனுக்கு விடுதலை கிடைத்திருந்தது. அலையிலே நௌிந்தாடும் அப்சர மங்கையைப்போல, சுவர்ணமுகி நடுக்கடலில் விரைந்து சென்றுகொண்டிருந்தது. அவன் உள்ளமும் அமத்தி வழங்கிய இன்பக் கடலிலே திளைத்துக் கொண்டிருந்தது.

தென் திசை நோக்கிக் கலம் செல்வதையறிந்த அபராஜிதன், அவள் தோள்மீது கையை வைத்து, 'அன்பே!' என்று ஆசையையெல்லாம் மூச்சிலே இழைத்து அழைத்தான்.

அவள் சட்டென அவன் கையைத் தள்ளிவிட்டு, மேலும் ஒடுங்கிக்கொண்டு நிற்க முயன்றாள்.

'அசட்டுப் பெண்ணே! இப்படித் திரும்பிப் பார்!' என்று முரட்டுத்தனமாக அவளது மோவாயைப் பிடித்து இழுத்தான் அவன். விரல் பட்டு அதரம் வெளுத்துச் சிவந்தது.

அவள் திரும்பினாள். கண்களை அங்கும் இங்கும் ஓட்டினாள். ஆமாம்; அங்கிருந்த சேடியரெல்லாம் எங்கே சொல்லாமல் ஓடிப் போனார்கள்? அவளுக்குக் கொஞ்சம் நஞ்சம் இருந்த துணிவும் பறந்துவிட்டது. அவள் செயலிழந்து நின்றாள்.

'அமத்தி! நேரத்தின் அருமை தெரியாமல் இப்படிக் கால்கள் நோக ஏன் இங்கே நிற்கிறாய்? மென்மை பொருந்திய உனக்கு இந்தக் கடல் காற்றினால் குடலைப் புரட்டும். இப்படி வா!' என்று மெல்ல அவளை மலரணை நோக்கி நடத்தி அழைத்து வந்தான்.

கண்டவரையெல்லாம் கலங்க வைக்கும் அமத்தி, அவன் பிடியிலே உளம் கலங்கி நின்றாள். அவன் உன்மத்தம் பிடித்தவன் போலத் தோன்றினான். பேச்சும் செயலும் குழம்பின. அந்த நிலையில் அவனைக் காண அவளுக்குக் கலக்கம் மட்டு

மில்லை; சிறிது வெறுப்பாகவும் இருந்தது. இன்றல்ல; நாளையல்ல; ஆனால் வெகு விரைவில், உச்சியில் ஏற்றிய தன்னை உயரத்திலிருந்து கூசாமல் கீழே தள்ளிவிடச் சிறிதும் இவன் தயங்கப் போவதில்லை என்பதை அவள் அவன் கண்ணிலேயே கண்டாள். அடுத்தவனை எள்ளி எறிவதும், பகைவனை வலிந்து அணைத்துக் கொள்வதும் அரசர்களுக்குச் சர்வ சகஜம். அதேபோலத்தான் அவர்கள் காதலிலும். அபராஜிதன் அதற்கு விலக்கல்ல என்றே அவளுடைய உள்ளுணர்வு கூறிக்கொண்டிருந்தது. அத்தனை வெறுப்பை விரைவிலே காட்டக்கூடிய ஒருவனிடம்தான் இத்தனை அவசரமும் வேகமும் இருக்கும் என்று அவளுக்குப் பட்டது. அவளுடைய கலையுள்ளம் கொண்ட அறிவுக்கு இந்தத் தீவிரம் ஏற்றதாகவேயில்லை. நுண்மையும் மென்மையும் வாய்ந்த இந்த உறவிலே இவ்வளவு தீவிரத்துக்கு இடமில்லை; இப்படிப்பட்ட அவசரத்துக்கும் அவசியமில்லை. அப்படித்தான் அவள் உணர்ந்தாள். அந்த உணர்ச்சியே சிறிது வெறுப்பை உண்டாக்கியது.

கரை கண்ணுக்குத் தெரிகிற தூரத்திலேயே சுவர்ணமுகி சென்று கொண்டிருந்தது. நீர்ப்பரப்பில் இருந்தாலும் காற்றிலே ஒரு வெம்மை கலந்திருந்தது. ஆனால், நேரம் செல்லச் செல்ல அது விரைந்து குளிர்ந்து வந்தது. அமத்தியின் அயர்வுக்கு அந்தக் குளுமை அவசியமாக இருந்தது. சர்ப்ப மந்திரத்தின் தனிமை அவளுக்குப் புழுக்கத்தை உண்டாக்கியது. ஈவு இரக்கமற்றவளைப்போல அவள் வெகுண்டு எழுந்தாள்.

'அரசருடைய ஆசை போனால் வராது என்பதுபோல் இருப்பதை நான் விரும்பவில்லை. என்னுடைய மன உல்லாசத்தையே இந்தப் பயணம் வீணாக அடித்துவிடுமோ என்று அஞ்சுகிறேன். ஆகவே, என்னைத் தடுக்காதீர்கள். மேல் தளத்திலே போய் நின்று, மரகத மாலைபோல் தெரியும் கரையின் எழிலைக் காண என்னை அநுமதியுங்கள்!' என்று சொல்லிவிட்டு, அவன் இசைவை எதிர்பாராமலே அவள் அந்த மந்திரத்தைவிட்டு வெளியேறினாள். வேறு வழியின்றி, திருப்தியற்ற உள்ளத்தோடு அவனும் அவளைப் பின் தொடர்ந்து சென்றான்.

சுதேசமித்திரன், சென்னை - 2

அறிவிப்பு

1—6—58 முதல் கல்கத்தாவில் நம் மித்திரன் வாரப்பதிப்பை விற்பனை செய்யவும் சந்தாதாரர்களுக்கு பட்டுவாடா செய்யவும் கீழ்க்குறித்துள்ள விலாசதாரை எமது ஏஜண்டாக நியமித்துள்ளோம். அன்னாரிடம் சந்தா செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளுமாறு மித்திரன் அன்பர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஸ்ரீ R. விஸ்வநாதன்,
நியூஸ் ஏஜண்ட்,
27A, ராஜா பஸந்த் ராய் ரோடு,
கல்கத்தா.

சர்க்குலேஷன் மானேஜர்.

கிழக்குக் கரையோரமாக மேகத் திட்டுக்களைப் போலக் குன்றுகளின் வரிசை தெரிந்தது. அதன் உச்சிமீது தவழ்ந்து வரும் அந்தி வெயிலிலே அவனது ஆசையை நிறைவேற்றாத அமத்தியின் எழில் வதனம், ஒளிமயமாகத் தோன்றியது. அந்த முககாந்தி அவனை நிலை தடுமாறச் செய்தது. வேலொத்த விழிகள் அவன் இதயத்தைப் பாய்ச்சி நின்றன. 'இங்கே இப்படி வந்து நிற்கத்தானா ஓடி வந்தாய்? இரு, இரு! இன்பமெல்லாம் வீணாகும் இந்த இனிமையை உன்னிடமிருந்து வட்டிபோட்டுப் பெற்றுக்கொள்கிறேன்!' என்று தனக்குள்ளாகவே கறுவிக்கொண்டான். நெஞ்சிலே தோன்றிய எண்ணம் சொற்களாக வெளிவரவில்லை. வாயைவிட்டு வெளிப்பட்ட பேச்சிலே வீணான குழைவும் மோக விழைவும்தான் தொனித்தன. அதிலே பௌருஷம் இல்லை; பெண்டிரின் உள்ளத்தைப் பணிய வைக்கும் கம்பீரம் இல்லை; அதை மெல்ல மெல்லத் தன் வசப்படுத்தும் ஆண்மை இல்லை. சொல்லிலே, சொல்லாதவற்றையும் சுட்டிப் புலப்படுத்துகிற வீரியம் இல்லை; உள்ள மர்மத்தைத் தொட்டு உலுக்கும் மந்திர சக்தி இல்லை; நெஞ்சத்தோடு இரண்டறக் கலந்து ஒட்டச் செய்கிற வன்மை இல்லை.

நீல நெடுவான் பரப்பிலே வெள்ளைப் புள்ளிகளெனப் புள்ளினங்கள் கூட்டமாகக் கரையை நோக்கிப் பறந்து சென்றன. அந்தக் கவின்மிகு காட்சியை அவள் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அரசனின் அபிமானத்தைவிட இயற்கையின் பேரெழிலில் ஈடுபட்டு நிற்பது அவளுக்கு இதமாக இருந்தது. அவள் உள்ளத்தின் ஆழத்திலே அவளுக்கே தெரியாமல் அடங்கியிருந்த ஒன்றை இன்று யாரோ கண்டு கொண்டு விட்டதாகத் தோன்றியது. அதனால் கிளர்ச்சியுற்று நின்றாள் அவள்.

25. நிலவிலே கண்ட தீவு

விரிகதிரோன் மலை வாயில் மறைவதற்கு முன்னதாகவே கொடிமரத்தில் ஏறியிருந்த திசையறிவோன் கொம்பு எடுத்து ஊதினான். கீழே சிற்பி விஜயனும் பழுவூர் நாக்கனும் அகளங்கனோடு பேசிக் கொண்டிருந்தார்கள். மறுபுறத்திலே அமத்தியும் அபராஜிதனும் நின்று, நெடுங்கடலையும் நீள்கரையையும் நோக்கியவாறு தம் தம் கனவிலே லயித்திருந்தார்கள். கொம்பு ஊதும் சத்தம் கேட்டதும் அனைவரும் கொடிமரத்தை அண்ணாந்து பார்த்தார்கள். அங்கிருந்தவன் வானத்திலே பறந்த வெண் குருகுக் கூட்டம் ஒன்றைக் கீழேயிருந்தவர்களுக்குச் சுட்டிக் காட்டினான். சிற்பி விஜயன் முகத்திலே இதைக் கண்டதும் ஒரு மலர்ச்சி ஏற்பட்டது.

ஆவலோடு அவன் வெண் மணல் பரவிய கரையைப் பார்க்க முயன்றான். பச்சையாகத் தெரிந்த கரையைக் கண்டதும் அவன் அகளங்கனை நோக்கி, 'மரக்கலத்தை நிறுத்தச் சொல்லுங்கள்!' என்றான்.

சிறு நாரைக் கூட்டம் திரும்பிச் சேருகின்ற இடமே சிறந்த இடமாக இருக்கும் என்பதை அவன் அநுபவத்திலே கண்டிருக்கிறான். கடற்கரைக் கோயில்கள் அமைப்பதற்கு ஆசை கொண்டிருந்த அபராஜிதன், அந்த இடத்தைத் தேர்ந்தெடுக்கிற பொறுப்பை அவனிடம் விட்டிருந்ததால், உடனே அவன் விருப்பப்படி சுவர்ணமுகி கரையை நோக்கி வரத் தொடங்கியது.

அகளங்கன் மெல்ல எட்டிப் பார்ப்பதற்கும் அபராஜிதன் அவனைப் பார்ப்பதற்கும் சரியாக இருந்தது. அகளங்கன் நெருங்கி வந்து, 'அதோ அந்த இடத்தைப் பார்க்கலாம் என்பது சிற்பியின் யோசனை! அரசர் பிரானின் ஆணையைத் தெரிந்துகொள்ளக் காத்திருக்கிறேன்!' என்றான்.

கலம் கரையை நெருங்க நெருங்க, சோலையும் மேடுமாக இருந்த நிலப் பகுதி தெளிவாகத் தெரியலாயின. அபராஜிதனும் அமத்தியும் சிற்பியும் அகளங்கனும் காட்டிய அந்த நிலத் திட்டுப் பகுதியைப் பார்த்தார்கள். அது ஓர் அழகிய தீவுபோல் தோற்றமளித்தது.

'இது என்ன தீவுபோலிருக்கிறதே!' என்றான் அபராஜிதன்.

'ஆமாம்; ஆனால் நிலத்தோடு ஒரு முனை இணைந்திருக்கிறது...இத்தனை சீக்கிரத்திலேயே இப்படிப்பட்ட ஓர் அருமையான இடம் அகப்படும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால், நாக்கன் சொல்லிய குறிப்பிலிருந்து இது நம்முடைய நோக்கத்துக்கு ஏற்ற நிலமாக இருக்கும் என்கிற நம்பிக்கை உண்டாகி விட்டது!' என்றான் விஜயன்.

'ஆனால், நாக்கனுக்கு இது எப்படித் தெரியும்?'

'அவர் முன்பே இதைப் பார்த்திருப்பதாகத் தோன்றுகிறது. பர்கூர்க் கோட்டத்துக்கும் இந்த வளத்திட்டுக்கும் அதிகத் தூரமில்லையாம்!'

மரக்கலம் நிலம் தட்டும் இடம் வரையில் வந்து நின்றது. பாய்மரங்களைச் சுருட்டுவோரும் படகுகளை இறக்குவோருமாகப் பணியாட்கள் சுறுசுறுப்பாக இருந்தார்கள். அடுத்த ஒரு நாழிகை நேரத்துக்குள் அவர்கள் இரண்டு படகுகளில் கரையை நோக்கிச் சென்றார்கள். கிழக்கே வட்ட நிலவு வந்துவிட்டது. அலைகள் ஆர்ப்பாட்டமின்றி நெளிந்துகொண்டிருந்தன. கரையிலே அடர்ந்த சோலையும் சோலையிலே சலசலத்த பட்சி ஜாலங்களும் குளிர்ந்த கடற்காற்றும் தண்ணிலவும் கனவு உலகத்தைக் கண்முன்னே கொணர்ந்து நிறுத்தின. அபராஜிதனும் அமத்தியும் ஒரு படகிலும் மற்ற மூவரும் பின் படகிலுமாகச் சென்றார்கள்.

இத்தனை இயற்கையழகு கொண்ட தீவையும் அதை ஒட்டிய நிலப் பரப்பையும் இதற்குமுன் யாருமே கண்டிருக்க முடியாது என்று தோன்றியது. அடவியும் அருவியும் சிறு சிறு குன்றுகளும் ஏரிகளும் அந்த நிலப் பகுதியிலே இருப்பதை அவர்களால் உணர முடிந்தது.

ஆனால், இதென்ன எங்கேயோ முணுக்கென்று சிறு வெளிச்சம்!

அபராஜிதன் அதைப் பற்றி விசாரிப்பதற்குமுன் அந்த வெளிச்சம் மறைந்துவிட்டது. ஆயினும் அங்கே யாரோ வசிக்கிறார்கள் என்று நிச்சயமாகப் புலப்பட்டது. இந்த இனிய இரவுப் பொழுதை இந்தச் சிறிய தீவிலேயே கழிக்கவேண்டும் என்ற ஆசை தோன்றியது அபராஜிதனுக்கு. அந்த அகண்ட வானமும் கடலும் அவனுடைய கற்பனையை அதிகப்படுத்தின.

'என்ன சொல்கிறாய், அமத்தி! இந்த இரவை இப்படித்தான் கழிப்போமே!' என்றான் அவன், கரைகடந்த மகிழ்ச்சியோடு. நிலவிலே அவள் கண்கள் பாலைப் பூசியதுபோல் பளபளத்தன. பறவைகளின் தீங்குரல் ஒலியிலே அவள் லயித்ததைக் காட்டியது அவள் முகம்.

'உம்; ராமன் இருக்கும் இடம்தானே அயோத்தி! அரசருக்கு என்ன? அரை நொடியில் இந்த இடத்தை அந்தப்புரமாக்க எத்தனை நேரமாகும்? அறுசுவை உண்டியும் பஞ்சணையும் கலந்திருந்து, படகிலே கரைக்கு வந்து சேர எத்தனை நேரமாகும்?' என்றாள் அமத்தி.

வியனுலகிலே வந்திறங்கிய உணர்ச்சியில் அவர்கள் இருவரும் மிதந்தார்கள். கடல் மணலிலே காலை வைத்து நடக்கும் போதெல்லாம் விண்ணுலகில் வாசம் செய்வதுபோல மனோல்லாசமாக இருந்தது. அமத்தி சட்டெனக் கொடியென மாறிவிட்டாள். மற்றவர் அறியாமல் ஒருவர் கையை ஒருவர் சீண்டி, உணர்ச்சியைத் தூண்டிக் கொண்டார்கள்.

மணல் மேட்டிலே போய் அமர்ந்து கொண்டாள் அமத்தி. அவளுடைய உள்ளம் எதனாலோ பரவசமுற்றுத் திகழ்ந்தது. தனக்கு அருகே தன்னை உண்மையாக உணர்ந்து அறிந்த யாரோ ஒருவர் காற்றைப் போலச் சூழ்ந்து நிற்பதாக அவளுக்குத் தோன்றியது. அந்த ஒருவரை அபராஜிதன்கூட அறியமாட்டான். அவளும் குறிப்பாக அறிந்துவிட்டதாகக் கூறுவதற்கில்லை. ஆயினும் புலனுக்கும் எட்டாத அறிவு ஒன்று அவளைத் தெம்பு கொள்ளச் செய்தது; குரலையே மாற்றியது; நடையையே துவளச் செய்தது. அங்கமெல்லாம் பூரிக்க, அவள் மணலிலே படுத்தாள்.

'உட்காருங்களேன்!' என்று அபராஜிதனையும் அழைத்தாள். ஆனால், அவளுடைய அழைப்பு உருவில்லாது சூழநின்ற ஒருவரைத் தன்னருகே அழைப்பதுபோல் இருந்தது.

அகளங்கனும் சிற்பி விஜயனும் நாக்கன் முன்னே செல்ல, நிலவின் மாயத்திரையிலே மறைந்து சென்றார்கள். அரசரின் கனவு நனவாகும் என்று ஆராய்வதுபோல, அந்த நிலப் பகுதியிலே சுற்றித் திரிந்தார்கள். மனிதரைத் தவிர மற்ற ஜீவராசிகள் அனைத்தும் அங்கே வாழ்வதாகத் தோன்றியது. கரும் சிறுத்தையின் உறுமல் ஒன்று கேட்டது. முயல்கள் வெள்ளையாகத் துள்ளிப் பாய்வது தெரிந்தது. கலைமான்கள் கொம்புகளைப் போட்டுத் தேய்ப்பது தெரிந்தது. தவளைகள் கத்துவது கேட்டது; பட்சிகளின் இறக்கைகள் படபடப்பது கேட்டது. வானம்பாடி பேடையை அழைப்பது கேட்டது. சிள் வண்டு ரீங்காரம் செய்வது கேட்டது.

'அற்புதமான இடம்!' என்று விஜயன் நாக்கனைப் பார்த்துப் பாராட்டினான்.

அதே சமயத்திலே தீவிலே அமர்ந்திருந்த அபராஜிதன், 'அமத்தி! என் கனவு பலித்துவிடும். நான் எண்ணுகிறபடி இங்கே இன்பபுரி ஒன்று தோன்றிவிடும்!' என்றான்.

எதனாலோ சட்டென்று அவனுக்கு ஆதித்தனுடைய நினைவு கண்முன்னே வந்து நின்றது. கடற் கோயிலிலிருந்து அவன் சிந்தனை காஞ்சிக் கோமகள் அநுபமா தேவியிடமும், பிறகு அவளிடமிருந்து ஆதித்தனிடமும் விரைந்து சென்றதெல்லாம் மனத்துள்ளே விளைந்த நிகழ்ச்சிகள் என்பதை அமத்தி புரிந்துகொள்ளவில்லை.

'இப்பொழுது எனக்கு இன்னொரு யோசனை தோன்றுகிறது. நாளையே ஆதித்தனுக்கு இங்கிருந்து ஓலை ஒன்று கொடுத்தனுப்புகிறேன்!' என்று தன் மனத்தோடு கூறிக்கொண்டான். ஆயினும் அவனுடைய அகக்குரலை அப்படியே செவியுற்றவள்போல அவள், 'ஆதித்த சோழரை இங்கே அழைக்கப் போகிறீர்களா, என்ன? ஏன்?' என்று கேட்டாள்.

அவன் அதைக் காதிலேயே போட்டுக் கொள்ளாமல், 'அப்படித்தான் செய்ய வேண்டும்! அதுதான் சரியான யோசனை!' என்று கூறிக்கொண்டான்.

தூரத்திலே மற்ற மூவரும் அவர்கள் இருந்த இடத்தை நாடி வருவது தெரிந்தது.

(தொடரும்)



"ஏண்டா உள்ளேயிருந்து குதிச்சு, குதிச்சு, ஓடி வருகிறே......!?"
"எங்கப்பா...எனக்கு......ரப்பர் பந்து வாங்கி தந்திருக்கிறார்டா......!"

★ விவாக வழக்கங்கள்

'ஆவ்!' என்றுசொல்லி நாசூக்காகக் கை குட்டையால் வாயைப் பொத்திக்கொண்டு கண்ணம்பாள் கொட்டாவி விட்டாள்.

'ஏன்? ராத்திரி சினிமா முடிய நேர மாச்சாக்கும்? என்ன படம்?' என்று கேட்ட ராஜம்–நாதன் 'ஆவ்!' என்று தானும் ஒரு கொட்டாவி விட்டாள்.

'கூத்தி தனி வழியே போனாலும், கொட்டாவி தனி வழியே போகாது!' என்றாள் என் அத்தை; எல்லோரும் 'கொல்' என்று சிரித்தோம்.

'சினிமாவும் இல்லே; நாடகமும் இல்லே! இன்னிக்கு என் தூர உறவினர் ஒருவர் பெண்ணுக்குக் கலியாணம். நேத்தே பிடிச்சு அவா வீட்டில்தான் இருந்தேன். ஜான்வாஸம், நிச்சயதார்த்தம் முடிச்சு, சாப்பாடு முடிவதற்குள் சுமார் பன்னிரண்டு மணி ஆகிவிட்டது. படுக்கையில் தலையைச் சாய்த்தேன்; அதற்குள் காலை ஏழு மணி முகூர்த்தம், விரதம் நடக்கணும் என்று எழுப்பி விட்டார்கள். சேஷோமம், ஆசீர்வாதம் எல்லாம் முடிச்சு, இப்போதான் சாப்பாடு ஆயிற்று! ஒரே அலைச்சல்!' என்றாள் கண்ணம்பாள்.

'ஏன்தான் இப்படி இந்த நாளிலும் ஒரு பழக்க வழக்கம் பாக்கி இல்லாமல் எல்லாம் நடக்கணும் என்கிறார்களோ? நாலு நாளையக் கலியாணத்தை ஒரே நாளில் செய்வதால், இப்படி அலுப்புத்தான் தட்டறது! கலியாணத்தை ரசித்து அனுபவிக்க முடிகிறதில்லே!' என்றாள் வேதவல்லி–சாரி.

'நாலு நாளா? பந்தக் கால் நட்டு, சுமங்கலிப் பிரார்த்தனை பண்ணி, சுவாமிக்கு தீபம் வைச்சு, கட்டுசாத மூட்டை வைக்கும்வரையில் பத்து நாட்கள் ஆகுமே? நாங்களும் நலங்கு என்றும், ஊஞ்சல் என்றும் குதூகலமாக இருப்போம்! ஒரு கலியாணம் என்றால் சந்தோஷப்படுவோம்! இப்படியா எல்லாம் ஒரே நாளில் நடக்கணும் என்று கஞ்சியைக் காலில் கவிழ்த்துக்கொண்டு, ஆலாய்ப் பரப்பா? வர உறவினர்கள் அதுக்கு மேல், கடமையே என்று தலையைக் காட்டுகிறார்கள். அனுபவிக்கக் கொடுத்து வைக்க வேண்டாமோ?' என்றாள் என் அத்தை.

'உங்க நாளில் வேறு வேலை இல்லை. இதுக்கெல்லாம் நேரம் இருந்தது! எங்கள் மாதிரியா?' என்றாள் பார்வதி.

'நீங்கள் என்னத்தைச் சாதிக்கிறீர்கள்? சினிமா, நாட்டியம், கச்சேரி என்று வெளியே போகத் தெரியறது. வீட்டு வேலைக்கு ஆள் வேண்டி இருக்கிறது! நீளப் பேசத் தெரியறது!' என்றாள் என் அத்தை.

இவர்களுக்குள் வாக்குவாதம் வளரப் போகிறது என்று, 'வெள்ளைக்காரர்கள் பாடு தேவலே. மாதா கோவிலோ, ரிஜிஸ்தர் ஆபீசோ, சட்புட்டென்று ஒரே மோதிரத்தைப் போட்டுக்கொண்டு, கை ஒப்பம் இட்டு, அரைமணியில் காரியத்தை முடித்து, தம்பதி சமேதராக 'ஹனிமூன்' புறப்பட்டு விடறா? இப்படிப் பந்தாவும் பத்ததியும் இல்லே!' என்று வேதவல்லி–சாரி குறுக்கிட்டாள்.

'உண்மை; இந்த வழக்கங்களை எல்லாம் குறைக்க வேண்டியதுதான். வெள்ளைக்காரர்களிடமிருந்து இதை அவசியம் நாம் கற்றுக் கொள்ளத்தான் வேண்டும்!' என்றாள், ராஜம்–நாதன்.

'அவாளுக்குள் பழக்க வழக்கங்களா இல்லே? பத்ததிக்கும், பந்தாவுக்கும் ஒரு குறைச்சலும் இல்லே! என் மதனி நாலு வருஷம் இங்கிலாந்தில் இருந்தாள். அவள் சொல்ல நான் கேட்டிருக்கேன். நவ நாகரிகத்தை ஒட்டிச் சிலர் ரிஜிஸ்தர் கலியாணம் செய்துகொள்ளுகிறார்கள். மற்றப்படி எல்லாம் அவர்களுக்குள்ளும் எத்தனையோ வழக்கங்கள்!' என்றாள் கண்ணம்பாள்.

'அப்படியா?' என்று என் அத்தை வியப்புடன் கேட்டாள்.

'நானும் இதுவரையில் நமக்குள்தான் இந்தப் புராதன வழக்கங்கள் என்று நினைச்சுண்டிருந்தேன்!' என்றாள் வேதவல்லி–சாரி. நமக்குள்தான் கலியாணத்தின்போது ஏகக் கட்டுப்பாடுகள் என்று நீயும் எழுதி இருந்தாயே? இதைப் படித்துப் பார்–கண்ணம்பாள் சொன்ன பழக்க வழக்கங்கள்:—

மாப்பிள்ளையின் பெற்றோர், மணமகனின் தோழன், மணமகளின் தோழிகள் இவர்களைத் தவிர்த்து, கலியாணத்துக்கு மூன்று வாரத்துக்கு முந்தி மண அழைப்பு மற்றவர்களுக்கு அனுப்ப வேண்டும். அதாவது மேற்குறித்தவர்கள் அவசியம் வருபவர்கள்; அவர்களைப் பத்திரிகை அனுப்பி அழைப்பது முறையில்லை. மணமகளின் தோழிகள் கோவிலுக்கு முன்பே சென்று, அவள் வந்ததும் அவள்பின் ஜதை ஜதையாகச் செல்லுவார்கள். அவளிடமிருந்து பூச்செண்டு, கைக்குட்டை இவைகளை வாங்கிக் கொள்வார்கள். மாப்பிள்ளைத் தோழன் கோவில் செலவுகள், சமயத்தில் மோதிரத்தை மணமகனிடம் கொடுத்தல் முதலிய வேலைகளைக் கவனிப்பான். மணமகள், அவள் தோழிகள் கையில் வைத்திருக்கும் பூச்செண்டுகள், கலியாண லைசென்ஸ், தோழிகளுக்குச் சிறிய சன்மானங்கள், மோதிரம், கோவிலில் இருந்து 'வரவேற்பு' இடத்திற்குச் செல்லும் வண்டிச் சத்தம், மாப்பிள்ளைத் தோழனுக்கு ஒரு சன்மானம்–இதெல்லாம் மணமகனைச் சார்ந்த செலவுகள்.

மணமகள் பெற்றோர் கூரை வாங்கி, கோவிலை அலங்காரம் செய்து, 'வரவேற்பு'ச் செலவுகளைச் செய்வார்கள். பெண்ணின் தாயார் கோவிலுக்கு முதலில் செல்லுவாள். பிறகு பெண் தன் தகப்பனுடன் வருவாள். மணமகன், தோழன் அவர்கள் மனிதர்கள் முன்பே வந்திருப்பார்கள். தோழன் மணமகன் வீட்டிற்குச் சென்று, அவனை அழைத்து வரவேண்டும். பெண் தன் தகப்பனின் வலப் பக்கம் நிற்க வேண்டும். மணமகள் முகத்தில் அணிந்துள்ள திரைச் சேலையை ரிஜிஸ்தரில் கையொப்பம் இடும்போதுதான் விலக்க வேண்டும். இப்படி எத்தனையோ பத்ததிகள்!

'என்ன இருந்தாலும் சம்பந்தி உபசாரம் என்று ஒன்று இல்லையே? இந்த மட்டும் க்ஷேமம்!' என்றாள் பார்வதி.

'என்ன என்னவோ வழக்கங்கள்! நேத்து ஒரு கலியாணத்தில் பெண்ணுக்கு மூன்று தரம் பொட்டுக் கட்டினா. அதுவும் இல்லாமல் பெண்ணைப் பிள்ளை மடியில் உட்காரச் சொன்னா. இரண்டு பேர் தலையையும் சேர்த்து வைச்சு ஒரு சடங்கு. சகிக்கலே போயேன்! பெண்ணுக்கு இருபத்தி ஐந்து வயசு; பிள்ளைக்கு முப்பத்தைந்து. இரண்டு பேரும் உத்தியோகஸ்தர்கள்! எப்படியோ இருந்தது!' என்றாள் ராஜம்–நாதன்.

'சின்ன வயசில் இதெல்லாம் வேடிக்கையாக இருந்தது. இப்போ மாற வேண்டியதுதான்! தானே மாறும். அப்போ கட்டுப்பாடுகள் எங்கும் இருக்கா?' என்றாள் என் அத்தை.

பேசா மடந்தை பேசின கதை—4.

[சாலிவாஹனன்]

......எட்டநின்ற மைந்தனைக் கால்
திருடனுட னனுப்பிக்கால் ரூபாய்பெற் றோடிவரச்
சொன்னபடி யவன்சென்றான் கடைத்தெருவிற் செட்டிகடை
ஜவுளிகளைச் சோதித்து ஜரிகைபட்டு ரகங்களிலே
ஒருபதினாயிர ரூபாய் ஒருங்குமதிப் புள்ளவற்றை
எடுத்துக்கொண் டக்கடையின் ஏதமிலாச் செட்டியிடம்
வண்டியந்தக் குளத்தருகில் வந்திருக்குப் பெண்டிரிடம்
கொண்டசரக் கிதைக்காட்டி கொடுக்கின்றேன் பணம்பெறற்குன்
தண்டல் கணக்கரைநீ தயவுசெய்து அனுப்பென்க
ஆளில்லை என்று செட்டி ஆலோசனை புரிய
என்னைய னிவனிங்கே நான் திரும்பி வரும்வரையில்
இருக்கட்டும் எனச்சொல்ல இச்சகத்தை நம்பிவிட்டார்
கால்திருடன் மூட்டையுடன் காதங் கடந்துவிட்டான்
போனவனைத் தேடியந்த நாவிதனும் வந்துவிடச்
செட்டியார் பணயமெனச் சிறுவனைதன் கடையினிலே
கட்டிவைத்து நாவிதன்பால் ஒப்புவிக்க மாட்டனெனக்
கூறிடவும் அரசனிடம் நாவிதன்போய் முறையிட்டான்
கால்திருடன் எத்தியதைக் கண்டறிந்த மன்னனும்தன்
தலையாரி தனைக்கூவி தந்திரத்தால் எத்திவிட்ட
திருடனைநீ விடிவதற்குள் சிறைப்பிடிக்கா விடிலுனக்கு
சிரச்சேதம் தவறாது சிறுவனைநீ ஒப்படைப்பாய்
எனக்கூறி இருக்கையிலே அரைத்திருடன் தனைக்கூவி.
தம்பியுந்தன் கால்திருடன் தைரியத்தைக் கண்டுவிட்டேன்
நம்பியுனை அனுப்புகிறேன் நாளை விடிவதற்குள்
அரைத்திருடன் நீசென்று அவ்வூர் புகழ்பரப்பித்
திருட்டுத் தொழில்புரிந்து தீரமுடன் திரும்பிடணும்
என்றனுப்பச் சென்றவ்வூர் இருள்பகல்போல் வெளிச்சமுள்ள
கடைத்தெருவில் புகுந்திங்கே காவல்மிகுங் காரணமேன்
என்றுசில பேரிடத்தில் இவன்கேட்கப பகற்பொழுதில்
ஒருதிருடன் எத்திவிட்டு ஓடிவிட்டான் ஆகையினால்
என்றுரைக்கத் தலையாரி எத்தகையான் என்பதற்குச்
சொந்த மகள் கணவன் தூரத் திரைக்கடலில்
முந்திப்போய் மீளவில்லை மூளிபோல் வீட்டிலுள்ளாள்
என்றுரைக்க நம்திருடன் எடுத்தானோர் புதுரூபம்

(தொடரும்)

7. பதினேழு வயதுப் பாலகனு போர்த் தலைவன்?



'டம டம டம'வென்று போர் முரசொலி முழங்கத் தொடங்கியது. 'பும் பும் பூம்' என்று வெண்சங்கம் ஆவேசமாக அலறியது. 'கண கண கண'வென அரண்மனையின் மேல் மாடத்திலே தொங்கிக்கொண்டிருந்த ஆட்சி மணி யுத்தத்துக்கு வெறியூட்டும் வகையில் ஆர்த்தது. எங்கெங்கும் யாவர் வாயிலும் 'போர், போர், போர்' என்ற முழக்கமே வீறு கொண்டு ஒலித்தது. 'மகதப் பேரரசனுக்கு மாளவம் சரியான பதில் கொடுக்கப் போகிறது! ஆணவத்தின் உச்சியில் நின்று கூத்தாடும் அந்தக் கயவனின் லிகிதத்துக்கு, இதோ போர் மூலம் சரியான பதிலளிக்கத் துவங்கிவிட்டார் நமது பேரரசர்!' என்று நாட்டுப் பற்றுள்ள மாளவப் பிரஜைகள் மிக மிக மிடுக்குடன் கூறிக்கொண்டனர். 'வாழ்க, வாழ்க, மன்னர் விஜயமார்த்தாண்டர்!' என்ற வாழ்த்தொலியையும் அவர்களது வாய்கள் உற்சாகமாக உதிர்த்தன.

கும்பல் கும்பலாகக் கூடி நடக்கப் போகும் போரைப் பற்றி விமரிசித்துக் கொண்டிருந்த அந்தப் பிரஜைகளின் மத்தியிலே ஒரு குரல் கணீரென்று ஒலித்தது: 'அண்ணன்மார்களே, தம்பிமார்களே! போரைப் பற்றி நாம் எவ்வளவோ உற்சாகமாகத்தான் பேசிக் கொள்கிறோம். ஏனெனில், நமது மாளவப் பேரரசு அந்தச் சுண்டைக்காய் மகத ராஜ்யத்திற்குச் சரியான உதை கொடுத்துப் பணியச் செய்யப் போகிறது என்பதில் நம்மில் யாருக்கும் சந்தேகமே கிடையாது. நமது நாட்டின் படை பலத்திலும், நமது வீரர்களின் வீரத் திறனிலும், நமது அரசரின் போராண்மையிலும் நமக்கு அளவிலாத நம்பிக்கை இருக்கிறது. ஆனால், இப்பொழுது நடக்கும் இந்த யுத்தத்தைப் பொறுத்த வரைமட்டும் எனக்குச் சிறிது சந்தேகம்தான். இதனால் நாட்டுக்கு ஏதும் பெரிய நஷ்டம் ஏற்படாமலிருக்க வேண்டுமே என்று கூட நான் அடிக்கடி நினைத்து வருகிறேன்...'

பேச்சை ஆரம்பித்த மனிதர் அதைத் தொடர்ந்து கூற முடியவில்லை. அதற்குள் கூட்டத்திற்குள் இருந்த மற்றொருவர் இடைமறித்து, முன்னால் பேசியவனின் கன்னத்தில் அறைவதுபோல் ஏளனமாகவும் காரசாரமாகவும் பேச ஆரம்பித்தார்: 'அடடே, யாரோ ஒரு சோசியர் வந்து குதிச்சிருக்காரு போல இருக்குடோய்! என்னமோ ஏதோன்னு ஆரம்பிச்சிட்டு, கடைசிலே 'பெரிய நஷ்டம், சின்ன நஷ்டம்' அது இதுன்னுன்னுல்ல பேச வந்திட்டாரு மனிசரு. இதோ, இப்பவே சொல்லிவிட்டேன் நான். இனிமே இந்த மாதிரி போரினாலே நாட்டுக்கு நஷ்டம் ஏற்பட்டிடும் அது இதுன்னு பேசினா, பல்லைத் தட்டிக் கையிலே கொடுத்திடுவேன்; ஆமா! எடுக்கச்சியே அபசகுனம் மாதிரி பேசற இதப் போல ஆளுங்களையெல்லாம் ஒதச்சி!' என்று அந்த மனிதர் அடுக்கிக்கொண்டே போனார்.

அதே சமயம் 'டக் டக் டக்' என்ற ஒலியுடன் சில குதிரைகள் அவர்கள் பேசிக் கொண்டிருந்த அந்தத் தெரு வழியே படுவேகமாக ஓடின. அவற்றின்மீது கையில் 'பள பள'வென்று வேல் ஏந்திய வீரர்கள். வீரர்களுக்கு உரிய ராஜரீக ஆடைகளுடன் அமர்ந்துகொண்டிருந்தனர். கண் இமைக்கும் நேரத்திற்குள் மற்றொரு தெருவிலிருந்து அந்தத் தெரு வழியாக ஓடிய அந்தக் குதிரைகளுக்கு வழிவிட்டு விலகி நின்று, வெறித்த பார்வையுடன் மௌனமாக இருந்த அந்தக் கூட்டத்தினரிடையே, குதிரைகள் சென்றதும் திரும்பவும் சலசலப்பு ஏற்பட்டது.

முன்னால் பேசிய மனிதர் ஒரு கனைப்புக் கனைத்துக்கொண்டு, மார்பை விறைத்துக்கொண்டு, மீசையை முறுக்கியவாறே, பேச ஆரம்பித்தார்: 'எனக்கு அப்புறம் பேசின ஐயா என்னென்னமோ தாறுமாறாகப் பேசிவிட்டார். நான் நினைத்தால் அவர் எலும்பை முறித்துவிட முடியும். ஆனால், விஷயம் தெரியாது உளறுகிறவனிடம் நம் வீரத்தைக் காட்டுவானேன் என்றுதான் சும்மா இருக்கிறேன் அவர் சங்கதி போகட்டும் அத்துடன். ஆனால், இந்தப் போரைப் பற்றி எனக்கு இருக்கும் பயத்தைத் தெளிவாகச் சொல்லிவிடுகிறேன். நம்ம பெரிய ராஜா போரை முன்னின்று நடத்தாமல், நமது இளைய ராஜா ஜயந்தனைத் தலைமை வகிக்கச் சொல்லியிருப்பதில்தான் எனக்குத் திகில் எல்லாம். இளவரசர் வீரப் பயிற்சிகளிலெல்லாம் நல்ல தேர்ச்சி பெற்றிருக்கிறார் என்பது உண்மைதான். ஆனால், போரை முன் நின்று நடத்தக்கூடிய திறமை கூட அவருக்கு இருக்கும் என்று யாரும் சொல்ல முடியாது. பதினேழு வயதுப் பச்சிளம் சிறுவன்,

படைகளையெல்லாம் முன் நடத்தி மாற்று நாட்டு அரசனை வென்று வருவது என்பது அவ்வளவு சாதாரண காரியம் என்று யாரும் சொல்ல முடியாது. அப்படியிருக்க, ஜயந்தனைத் தலைமை வகிக்கும்படி எப்படித்தான் துணிந்து முடிவு செய்தார்களோ, தெரியவில்லை! இந்த விஷயத்தில் முதன் மந்திரி அமாத்திய குலசேகரர் தான் மிகவும் மூர்க்கமாக இருந்தாராமே! 'மந்திரிக்கு அழகு வரும் பொருள் உரைத்தல்' என்ற வாசகத்தையே மறந்துவிட்டு, நாட்டை பெரும் பொருள் இழக்க வழி செய்ய முனைந்துவிட்டார் போலும்! என்னமோ, இந்த விஷயத்தில் முதன் மந்திரியின் போக்கில் எனக்குச் சந்தேகம் இருக்கத்தான் செய்கிறது; இந்தப் போர் பெரும் இழப்பு ஏதும் இல்லாமல் நல்ல முறையில் முடிவடைய வேண்டுமே என்பதிலும் எனக்குக் கவலை இருக்கத்தான் செய்கிறது. அதைத்தான் நான் இங்கு உங்களிடையே சொல்ல வந்தேன். இனி நீங்களே ஒரு முடிவுக்கு வாலாம்' என்று அந்த மனிதர் முடித்தார்.

இதைக் கேட்ட மற்றவர்கள் மிகவும் உள்ளம் குமுறிப் போய்விட்டார்கள். 'அப்படியும் ஏதாவது நேர்ந்துவிட்டால்...?' என்ற பதைபதைப்பு அவர்களை வாட்டியது. சிறிது நேரம் ஒன்றும் சொல்ல மாட்டாமல், கண் கலங்கி மௌனமாக நின்ற அவர்கள், 'ஆமாம், ஆமாம்; நீர் சொல்வதை நாங்கள் முழு மனத்துடன் ஒப்புக் கொள்கிறோம். நீர் சொல்லியது முற்றிலும் உண்மை. பதினேழு வயதுப் பாலகன் அதுவும், வம்சம் தழைக்க ஒரே கொழுந்தாக வந்து வாய்த்த தவப் புதல்வன்- மாபெரும் யுத்தத்தை முன்னின்று நடத்தவேண்டும் என்று முதன் மந்திரி எப்படித்தான் சொன்னாரோ? அவர்தான் சொன்னாரென்றால் தன் உயிரினும் மேலாக மகனை நேசிக்கும் மன்னர்தான் எப்படி ஒப்புக்கொண்டாரோ...?...போகும் போக்கைப் பார்த்தால் நாட்டுக்கே நல்லதில்லை என்றுதான் தோன்றுகிறது' என்று ஒருமித்த குரலில் முன்னவர் சொன்னதை அப்படியே ஆமோதித்தார்கள்.

அப்படிச் சொன்னபோது அவர்கள் முகத்திலே தோன்றியிருந்த வெறுப்பையும், உள்ளத்திலேயிருந்த கிலியையும், தேகத்திலே ஏற்பட்டிருந்த கொதிப்பையும் பார்த்துக் கொண்டிருந்த ஒரு கிழவர், ஒரு கனைப்பு கனைத்துக்கொண்டு,

மிகவும் நிதானமான குரலில், சீடர்களுக்குக் குரு உபதேசம் செய்வதுபோல் பேசத் தொடங்கினார்: ''என் அருமைச் சகோதரர்களே! பதற்றமடையாதீர்கள். படை திரண்டு மாற்றானை மண்ணில் மிதித்துத் திரும்பும் உறுதியுடன் புறப்படும் இந்தச் சமயத்தில், மனமார வாழ்த்துக் கூறி அனுப்புங்கள். இல்லாததையெல்லாம் எண்ணியெண்ணி மனம் புண்ணாகாதீர்கள்...'

இவ்வாறு படபடப்பில்லாமல் பேசத் தொடங்கிய அந்தக் கிழவர், தலையிலிருந்து கால்வரை தொங்கிய ஒரு அங்கி அணிந்திருந்தார். நரைத்த தலை மயிரில் சில சுருள்கள் நெற்றியிலே நெளிந்து அசைந்தாடிக் கொண்டிருந்தன. தாடியும், மீசையும் வெள்ளை வெளேரென்று வெள்ளிக் கம்பிகள்போன்று பளபளத்தன. அவர் கண்களிலே தோன்றிய அறிவுக் கூர்மையும், கனிவும், திண்மையும் யாவரையும் வசீகரிக்கக் கூடியனவாக இருந்தன. தலையிலே வட்ட வடிவமான பிரமிடைபோன்ற பட்டுத் தலைப்பாகை தரித்திருந்த அவர், ஏதோ வேற்று நாட்டிலிருந்து மாளவத்திற்கு யாத்திரை வந்தவர்போன்று, தோற்றமளித்தார். அத்தகைய அப்பெரியார், தெளிந்த குரலில் பேசுவதைக் கேட்ட அந்த மக்கள், துளியும் சந்தடி செய்யாமல் மௌனமாக நின்று கேட்கலாயினர். கிழவர் தொடர்ந்து கூறலானார்: '...முதன் மந்திரி அமாத்திய குலசேகரரைப் பற்றிச் சொன்னீர்கள். அவர் மீது இந்த விஷயத்தில் உங்களுக்குச் சந்தேகம் இருப்பதாகத் தெரிகிறது. மாளவத்தின் ஏக சக்ராதிபதி விஜய மார்த்தாண்டனும் ஜயந்தனைப் போருக்குத் தலைமை தாங்கச் செய்திருப்பதன் மூலம் அறிவை இழந்துவிட்டதாக நீங்கள் சந்தேகிக்கிறீர்கள். ஆனால், அதுதான் இல்லை...

'அமாத்திய குலசேகரர் கூறிய அந்த யோசனையும் அரசர் செய்த முடிவும் முற்றிலும்சரியானவையே யாகும். ஜயந்தனின் போராற்றல் உங்களுக்குப் புரியாதிருக்கலாம்; தெரியாதிருக்கலாம். ஆனால், முதன் மந்திரி அமாத்திய குலசேகரர் அறிந்தவர். இத்தனை ஆண்டுகள் அரசவையில், ஆட்சி முறையில், மிகுந்த அனுபவம் பெற்றுள்ள அந்த முதியவருக்கு அந்த விஷயம் தெரியாதென்றா நினைக்கிறீர்கள்? ஒருக்காலும் இல்லை. அத்துடன் இந்த நாட்டின் எதிர்காலம் சிறப்பாக இருக்கவேண்டும் என்று நினைப்பவர்களில் அவர் யாருக்கும் பின் வாங்கியவரல்ல. அவ்வாறாயின், இளவரசன் ஜயந்தன் நீடூழி காலம் வாழ வேண்டும் என்பதையும் அவர் அறிந்திருக்க வேண்டும் அல்லவா?...

'உங்களுக்கெல்லாம் ராமாயண காவியம் தெரிந்திருக்கும். வால்மீகியும், கம்பரும், துளசிதாஸரும் பாடிய அந்த ராமகதை அறியாத மனிதர்தான் யார் உண்டு? அந்தக் கதையிலே ஒரு சம்பவத்தை இப்பொழுது உங்களுக்குக் கூற விரும்புகிறேன். மாரீசன், தாடகைபோன்ற பல்லாயிரம் வீரர்களின் பலத்தை ஒரே சமயத்தில் பெற்றிருந்த ராட்சதர்கள் தமது யாகத்திற்குத் தொல்லை கொடுத்து வருவதாகவும், அந்த அரக்கர்களைக் கொன்று தமது யாகத்தை முடித்து வைக்க ராமனைத் தம்முடன் அனுப்பி வைக்குமாறும் அயோத்தி மன்னன் தசரதனை வேண்டினாராம் விச்வாமித்திர முனிவர். தவத்தினால் பெரும் ஆற்றல்களெல்லாம் பெற்றிருந்த அந்த மாமுனிவர், பல்லாயிரம் வீரர்களின் பலத்தைக் கொண்டிருந்த மாபெரும் அரக்கர்களை ஒழிப்பதற்காக யாசித்த ராமனுக்கு, அப்போது என்ன வயது தெரியுமா? ஜயந்தனைவிட ஒரு வயது குறைவு-பதினாறு வயது! அந்தப் பதினாறு வயது மைந்தன் ராமன் விச்வாமித்திரர் கோரியபடியே ராட்சசர்களையெல்லாம் ஒழித்து, உலகமே வியக்கும்படித் தனது வீரத்தை வெளிப்படுத்தவே செய்தான். அதுபோன்றுதான், ஜயந்தனுடைய விஷயமும். பிறப்பிலேயே வாய்த்துள்ள ஜயந்தனின் பெருவீரத்தை உலகறியச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடனேயே அமாத்திய குலசேகரர் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறார். அரசரும், அமாத்தியரின் சொல்லில் இருக்கும் உண்மையை உணர்ந்தே இதற்குச் சம்மதித்திருக்கிறார்...ஆகவே, என் அருமை சகோதரர்களே, அச்சத்தை விடுங்கள்; ஆண்மையை மேற்கொள்ளுங்கள்! போரை முன்னின்று நடத்தும் நமது இளவரசர் ஜயந்தனுக்கு வாழ்த்துக் கூறி அனுப்புங்கள்! 'மன்னர் வாழ்க! இளவரசர் வாழ்க! நாடு வாழ்க!' என்று வாயார வாழ்த்துங்கள்!'

கிழவனார் தமது நீண்ட பிரசங்கத்தை முடித்த அதே தருணம், யானை, குதிரை, தேர், காலாட்படை சகிதமாக சேனை புறப்படும் பேரொலி விண்ணெட்ட முழங்கியது. 'ஹா ஹா, ஹொய் ஹொய், ஹோ ஹோ' என்று பல வகை ஓசைகள் பல திசைகளிலிருந்தும் கேட்டன. படையை வீர வெறியுடன் முன் நடத்திச் செல்லும் வழிநடை வாத்தியங்களும், முரசொலியும், எக்காளம், வெண்சங்கம் போன்றவற்றின் பேரோசையும் மிக உரக்கக் கேட்டன.

அந்தப் பேரொலியைக் கேட்டதும், படபடப்பில்லாது பேசிக் கொண்டிருந்த அந்தக் கிழவரும் பரபரப்படைந்தார். தமது அங்கியைச் சற்றுத் தூக்கிக்கொண்டு வெகு வேகமாக அரண்மனைப் பக்கமாக நடையைக் கட்டினார். ஓட்டமும் நடையுமாகக் காலை வீசிவீசி நடந்தபோது, அந்தக் கிழவரின் தலைப்பாகை கீழே விழுந்துவிட்டது; அங்கியும் சிறிது சிறிதாகச் சாய ஆரம்பித்தது. அந்தக் கணமே கூடியிருந்தோரிடையே ஒரு சலசலப்பு ஏற்பட்டது. 'அமாத்திய குலசேகரர்! நமது முதன் மந்திரி அமாத்திய குலசேகரர்!! அந்தப் பெருந்தகையாளரா இத்தனை நேரம் நம்மைச் சமாதானம் செய்துவிட்டுச் சென்றார்!? போருக்கு எத்தனையோ திட்டங்களும், ஆயத்தங்களும் செய்துவிட்டு, அதே நேரத்தில் நம் மனத்தில் இந்தப் போரைப் பற்றி ஏற்படக்கூடிய சந்தேகங்களையும் போக்க வேண்டும் என்று இங்கு வந்து மாறு வேடத்துடன் நம்முடன் கலந்துகொண்ட அவர் பண்புதான் எத்தகையது!' என்று அத்தனை பேரும் ஆச்சரியப்பட்டுப் போயினர். மன்னரையும், இளவரசரையும், நாட்டையும் வாழ்த்திய அவர்கள், அதே வாயால், 'அமாத்திய குலசேகரர் வாழ்க!' என்று முதன் மந்திரியையும் வாழ்த்திவிட்டுக் கலைந்தனர்.

(தொடரும்)

எத்தனை மாம்பழங்கள்?

ஒரு பழ வியாபாரியிடம் ஒரு பெரிய கூடை நிறைய மாம்பழங்கள் இருந்தன. இரண்டு மாணவர்கள் வியாபாரியை நோக்கி 'கூடையில் மொத்தம் எத்தனை மாம்பழங்கள் இருக்கின்றன?' என்று கேட்டனர்.

அதற்கு வியாபாரி, 'இக்கூடையிலுள்ள பழங்களில் எனக்குச் சொந்தமானவை 32 பழங்கள். அவைகளைத் தனியாக எடுத்துவிட்டு, பாக்கியைத் தலைக்கு 3 பழங்கள் வீதம் கொடுத்தால், 42 நபர்களுக்குக் கொடுத்த பின் 1 பழம்மீதியாகும். எனக்குச்சொந்தமான பழங்களையும் மொத்தப் பழங்களுடன் சேர்த்துத் தலைக்கு 2 பழங்கள் வீதம் பங்கிட்டாலும் மீதி 1 பழம் இருக்கும். கணக்கைப் போட்டுப் பார்த்துக் கொள்' என்றான். அப்படியானால் கூடையிலுள்ள பழங்கள் மொத்தம் எத்தனை?

விடை:— மொத்தம் 159 மாம்பழங்கள்

—ரகமி.

சிறுவர் அறிவு அரங்கம்

அஸ்வத்தாமா

செயற்கை ரப்பர் உண்டா?

ரப்பர் மரங்களிலிருந்து பால் வடித்து, அவற்றைப் பல வழிகளில் சிறந்த ரப்பராகச் செய்வதுதான் இயற்கையான முறையாகும். ஆனால், எதற்கெடுத்தாலும் செயற்கை முறையைக் கடைப்பிடிக்கும் இந்த நாளில், செயற்கை ரப்பர் மட்டும் இல்லாமல் இருக்குமா, என்ன? நிச்சயம் இருக்கிறது! அது எப்படிச் செய்கிறார்கள் தெரியுமா?

நிலக்கரியைச் சுண்ணம்போடு கலந்து சுடவைத்தால், ஏற்படும் கால்ஷியம் கார்பைட் என்னும் பொருளில் நீரைச் சேர்க்கிறார்கள். அவ்வாறு நீரைச் சேர்த்தால் அஸிடெலின் காஸ் என்னும் ஒரு வகை வாயு உண்டாகிறது. அத்துடன் வைட்ரோ க்ளோரிக் அமிலத்தைச் சேர்த்துத்தான் செயற்கை ரப்பர் செய்கிறார்கள். விஞ்ஞான வளர்ச்சி மிகுந்துள்ள இந்த நாளில், ரப்பரின் உபயோகமும் பெரும் அளவு பெருகியுள்ளதால், இந்த செயற்கை ரப்பர் செய்யும் முறையால் ஏராளமான ரப்பர் தயாரிக்கிறார்கள். இப்படித் தயாரிக்கப்படும் ரப்பர், இயற்கை ரப்பரைக் காட்டிலும்கூடச் சிறந்ததாக இருக்கிறதாம்.

ராஜா மீன்!

'மீன்களில் ராஜா' என்றால், மீன்களுக்குள்ளேயே மிகுந்த வலிமையும், பருமனும் உள்ள மீன் என்றுதானே பொருள்? அத்தகைய இனத்தைச் சேர்ந்த மீன் எது? மிகப் பெரிய உருவமும், பளுவும் உள்ள திமிங்கிலமாகத்தானே இருக்க வேண்டும்? ஆகவே, திமிங்கிலம்தான் 'ராஜா மீன்!' மீன்களுக்கெல்லாம் ராஜாவாகிய திமிங்கிலம் மீன் பிடிப்போரிடம் பிடிபட்டால், அது யாருக்கு உரியது தெரியுமா? ராஜாவுக்கு! 'எந்த ராஜாவுக்கு, எந்த நாட்டில் இந்த வழக்கம் இருக்கிறது?' என்று கேட்கிறீர்கள் அல்லவா? பிரிட்டிஷ் ராஜ்யத்தில்தான் இப்படிப்பட்ட ஒரு வழக்கம் இருக்கிறது.

அதுவும் சட்டப்படி. திமிங்கிலம், அதைப்போன்ற மிகப் பெரிய மீன்கள் பிடிபட்டால், அவற்றை அரசாங்கத்திடம் ஒப்படைத்துவிட வேண்டுமாம். அத்தகைய மீன்களுக்கு 'அரசுக்குரிய மீன்கள்' என்றே பெயரிடப்பட்டிருக்கிறது! பாவம், 'ராஜா மீன்'களுக்கும் ஒரு ராஜா இருக்கிறார் போலிருக்கிறது!

மாபெரும் அரண்மனை!

உலகிலேயே மிகப் பெரிய அரண்மனை எங்கு இருக்கிறது தெரியுமா? ரோமாபுரியிலுள்ள வாடிகன் என்ற இடத்திலுள்ள 'வாடிகன் அரண்மனை'தான் உலகத்திலேயே மாபெரும் அரண்மனையாகும். இந்த அரண்மனை கத்தோலிக்கக் கிறிஸ்தவத் தலைவர் போப்பாண்டவரைச் சேர்ந்ததாகும். இந்த அரண்மனையில் பதினோரு அறைகள் உள்ளனவாம். மிக மிகச் சிறந்த ஓவியர்களும், சிற்பிகளும் என்றுமே அழியாத பெரும் புகழ் படைத்த ஓவியங்களையும், சிற்பங்களையும் இந்த அரண்மனையில் படைத்துள்ளனராம். கண்களையும், அறிவையும் கவரத்தக்க மிக அரிய புத்தகசாலையொன்றும் இங்கே இருக்கிறதாம். மிகத் தொன்மையான சுவடிகளும், கையெழுத்துப் பிரதிகளும் இந்தப் புத்தகசாலையில் உள்ளனவாம்.

ராட்சஸப் பறவைகள்!

சுமார் முப்பத்தைந்து பவுண்டு கனமுள்ள ஒரு பறவை பூமிக்கு மேலே பறக்கிறதென்றால், ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? ஆனால், ஆச்சரியமே படவேண்டாம்; ட்ரம்பட்டர் ஸ்வான் என்ற ஒருவகைப் பறவைதான் அப்படிப் பறக்கக் கூடிய ராட்சஸப் பறவையாகும்.



அத்தோடு நிற்கவில்லை; க்ரேட் பஸ்டர்ட் என்ற ஒருவகை ராட்சஸப் பறவையும் கூட இப்படிப் பறக்கிறது! இறக்கை விரித்துப் பறக்கும்போது, இறக்கைகளின் நீளம் மட்டும் எவ்வளவு இருக்கும் தெரியுமா? 8 அடி நீளம்!

கண்ணன் - என் புதிர்

புஷ்யன்

வைத்தியநாதனுடைய மனம் பித்துப் பிடித்தாற்போல இருந்தது. சாயந்திரம் தினமும் காரியாலயத்திலிருந்து வந்ததும் அவனை அன்புடன் எதிர்கொண்டழைக்கும் ஜானகியும், 'அப்பா' என்று ஓடி வந்து கால்களைக் கட்டிக்கொள்ளும் குழந்தை கண்ணனும் ஊரில் இல்லை. பெற்றோர்களும், சகோதர சகோதரிகளும், மூத்த சகோதரனுடைய குழந்தைகளுமிருந்தும், வீடு அதனால் கலகலப்பாக இருந்தபோதிலும், அவனுடைய மனம் மட்டும் இருண்டாற்போலிருந்தது.

கண்ணனுக்கு மூன்று வயதுதான் ஆகியிருந்தது. செக்கச் செவேலென்று, உருண்ட முகமாய், கன்னங்கள் கொழுவி ஆப்பிள் பழங்கள்போல—திராட்சைக் கறுப்புக் கண்களுடன் விளங்கினான். அவனுடைய சாதுரியப் பேச்சில் வைத்தி மகிழ்வான். பெருமை கொள்வான். கண்ணன் தன் வயதுக்கு மீறிய அறிவுடன் பேசும்போது பிரமிப்பான்.

நான்கு மாதங்களுக்கு முன் ஒரு நாள் கண்ணனுடன் வைத்தி வேடிக்கையாகப் பேசி விளையாடிக் கொண்டிருந்தபோது, 'அப்பா! அம்மா வயித்துலே ஒரு பாப்பா இருக்குப்பா!' என்று ஆச்சரியத்துடன் சொன்னான்.

'அட, பயலே! உனக்கெப்படிடா தெரியும்?' என்று கேட்டான் வைத்தி.

'பாட்டி சொன்னப்பா...' என்றான் கண்ணன். பிறகு, 'அப்பா...! என்ன பாப்பா அது? என்னட்டம் இருக்குமா? இல்லாட்டா, பெரிம்மா பாப்பா மாதிரி இருக்குமா?' என்று கேட்டான். அவனுடைய பெரியம்மாவுக்கு ஒரு பெண் குழந்தை இருந்தது.

'உனக்கு என்ன பாப்பா வேண்டும், சொல்லு!' என்று திருப்பிக் கேட்டான் வைத்தி.

'எனக்குத் தம்பிப் பாப்பாதான் வேண்டும்' என்றான் கண்ணன்.

ஜானகி பிறந்தகம் போனதும் வைத்தி இம்மாதிரிக் கண்ணனுடைய பேச்சுக்களை நினைந்து நினைந்து சிறிது ஆறுதல் பெற்று வந்தான். அடிக்கடிக் கடிதம் எழுதி, இருவர் சுகத்தையும் அறிந்து வந்தான்.

ஜானகிக்கு—கண்ணன் ஆசைப்பட்டபடியே—ஒரு 'தம்பிப் பாப்பா'தான் பிறந்தாள். சுகப் பிரசவமானது அறிந்து மிகவும் சந்தோஷமடைந்தான் வைத்தி. புண்ணியாக வாசனத்துக்கு வைத்தியை வரச் சொல்லி எழுதியிருந்தார்கள். ஜானகியும் பிரத்தியேகமாய் அவனுக்குக் கடிதம் எழுதியிருந்தாள், அவனை வரச் சொல்லி. 'கண்ணன் தம்பியை ஆசையோடு வெளியேயிருந்தபடியே எட்டிப் பார்க்கிறான். 'அம்மா, பாப்பாவை என் மடியிலே வையம்மா' என்று கேட்கிறான்' என்றெழுதியிருந்தாள்.

வைத்தியநாதன் ஜானகியையும், கண்ணனையும், புதுக் குழந்தையையும் காணப் போயிருந்தான். அவனைக் கண்டதும் கண்ணனுக்குச் சந்தோஷம் பிடிபடவில்லை.

'அப்பா, அம்மாவுக்குக் குட்டிப் பாப்பா பிறந்திருக்கப்பா...வெள்ளை வெளேர்னு... கையும், காலும் குட்டி குட்டியாய்... கண்ணைக் கொஞ்சம் கொஞ்சமாய்த் திறந்து முழிச்சு முழிச்சுப் பார்க்கிறதுப்பா... ஆ...ஆ...ஆ...ன்னு அழறதுப்பா...பாப்பா பொல்லாது...' என்று தன் தம்பியைப்பற்றிப் பெருமையுடன் விவரிக்க ஆரம்பித்து விட்டான்.

இரண்டு நாட்கள் இன்பமாய்க் கழிந்தது. கண்ணனுடன் குலவுவதிலும், ஜானகியுடன் இன்பமாய்ப் பேசுவதிலும், புதுக் குழந்தை ராஜனைக் கொஞ்சுவதிலும் நேரம் போனதே தெரியவில்லை.

அடுத்த நாள் காலை, கண்ணன் வைத்தியிடம் வந்து, 'அப்பா, நீ மதராஸுக்குப் போய் போறயா?' என்று கேட்டான்.

'ஆமாம்...உனக்கு யாருடா சொன்னா?' என்று கேட்டான் வைத்தி வியப்புடன்.

'அம்மா சொன்னப்பா...எப்போ போய் போறே? ராத்திரிக்கா?'

'ஆமாம்...ஏண்டா? சமத்தா அம்மா வண்டே இருப்பயோல்லியோ?'

'உஹும்...நானும் வரேம்பா மத்ராஸுக்கு உன்னோடே...' என்று சிணுங்கினான் கண்ணன்.

வைத்திக்கும் கண்ணனை அழைத்துப் போக ஆசையாயிருந்தது. அவனை அழைத்துக்கொண்டு போய்த் தன்னிடம் வைத்துக் கொள்ளலாம் என்றுதான் முதலில் நினைத்திருந்தான். ஆனால், அவன் தன் அம்மாவை விட்டுவிட்டு இருப்பானா என்று சந்தேகமாய் இருந்தது. இதுவரை அவன் அவ்விதம் அம்மாவை விட்டு இருந்ததில்லை.

வைத்தி கண்ணனை அழைத்துச் செல்வதற்கு முதலில் தயங்கியபோதிலும் இப்போது அவனாகவே வருகிறேன் என்றதும், 'ஏண்டா, நீ மத்ராஸுக்கு வந்தப்புறம் அம்மாகிட்டே போகணும்னு அழுவாயேடா...' என்று கேட்டான் வைத்தி.

'அழமாட்டேன்...' என்றான் கண்ணன்.

'இங்கே சின்ன பாப்பா இருக்கே... அதோடு நீ விளையாட வேண்டாமா?'

'மத்ராஸுலே தியாகுவுடன் விளையாடிக்கிறேன்...இந்தச் சின்னப் பாப்பாவோட எப்படி விளையாடறது? அது சும்மாப் படுத்துண்டே இருக்கு...'

கண்ணன் உறுதியாகக் கூறவே, அவனை அழைத்துப் போகத் தீர்மானித்தான் வைத்தி. ஜானகியிடம் சொன்னான்.

'அவன் இருப்பானோ?' என்று கேட்டாள் அவள்.

'அழாமல் சமத்தாய் இருப்பாயாடா கண்ணா?' என்று அவனைக் கேட்டாள்.

'இருப்பேன்...அழ மாட்டேன்...' என்றான் கண்ணன்.

'அழைச்சுண்டு போய்ப் பார்க்கிறேன். அப்படி அழுதான்னா கொண்டு வந்து விட்டுடறேன்' என்றான் வைத்தி. பக்கத்தில், திண்டிவனத்தில்தானே ஜானகியின் பிறந்தகம்?

கண்ணனை அழைத்து வந்து விட்டான் வைத்தி. கொஞ்சம்கூட அழவில்லை, பிடிவாதம் பிடிக்கவில்லை. ரயிலில் வேடிக்கை பார்த்தவாறே வந்துவிட்டான்.

காலையில் காரியாலயத்துக்குப் போகும்போது வைத்திக்குக் கண்ணன் அழுவானோ என்று பயமாய் இருந்தது. ஏனென்றால், அவன் தாய் தகப்பன் இருவரையும் பிரிந்து இருந்ததே இல்லையே...

ஆனால், வைத்தி காரியாலயத்துக்குப் போகும்போது கண்ணனும் தியாகுவும்—வைத்தியின் மூத்த சகோதரனுடைய பிள்ளை—வாயிலில் வந்து 'டாடா' என்று வழியனுப்பினார்கள்.

'கண்ணா, அப்பா ஆபீஸிலிருந்து வரும் வரை சமத்தாய் அழாமல் தியாகுவுடன் விளையாடிண்டிருக்கணும், தெரியுமா?' என்றான் வைத்தி.

'சரிப்பா...இருட்டினதும் வந்துடணும்...என்ன?' என்றான் கண்ணன்.

காரியாலயத்தில் வைத்திக்கு அன்று வேலையே ஓடவில்லை. கண்ணன் மத்தியானத்தில் திடீரென்று தன் அம்மாவை நினைத்துக்கொண்டு அழ ஆரம்பித்து விடுவானோ என்று மனது கவலைப்பட்டுக் கொண்டே இருந்தது. ஜானகி இருந்தபோதே கண்ணன் சாதம் சாப்பிடப் படுத்துவான். அவனுக்கு எத்தனையோ சமாதானங்களைச் சொல்லி, விளையாட்டுக் காட்டினால்தான் ஒரு வழியாகச் சாப்பிடுவான். இப்போது அவன் பாட்டி, பெரியம்மாவுக்கடங்கி ஒழுங்காகச் சாப்பிடுவானோ என்று கவலையாக இருந்தது.

சாயந்திரம் கறுப்பு திராட்சையும், ஆப்பிள் பழங்களும் வாங்கிக்கொண்டு போனான். வீட்டுப்படியேறும்போதே, கண்ணனின் அழுகைக் குரல் வருகிறதா என்று உற்றுக் கேட்டவாறே போனான். அழுகை ஓசையே இல்லை. உள்ளே போனதும் அங்கு கண்ணனும், தியாகுவும் பெரியம்மாவின் அருகில் உட்கார்ந்து கொண்டு, அவள் சொல்லும் கதையை ஆவலுடன் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்ததைப் பார்த்ததும்தான் வைத்தியின் மனம் சமாதானமடைந்தது.

கண்ணன் தன் தகப்பனாரைக் கண்டதும், 'அப்பா' என்றோடி வந்து காலைக் கட்டிக்கொண்டான். அவன் கையிலிருந்த பையை வாங்கிக்கொண்டு, 'அப்பா, என்ன வாங்கி வந்திருக்கிறீர்?' என்று சோதனை போட ஆரம்பித்துவிட்டான்.

'டேய் கண்ணா, அப்படியே பாட்டிகிட்டே குடு. திராட்சைப் பழமும், ஆப்பிளும் தருவாள்...' என்றான் வைத்தி.

அதேபோல் பாட்டியிடம் கொடுத்துவிட்டு, அவளருகில் உட்கார்ந்து கொண்டான். அவள் நறுக்கிக் கொடுத்த ஆப்பிள் துண்டுகளையும், திராட்சைப் பழங்களையும், 'இந்தாப்பா, உனக்கு, இந்தா பெரீப்பா...உனக்கு...டே தியாகு! இந்தாடா...தாத்தா, பெரீம்மா...உனக்குக் கொடுக்கச் சொன்னா பாட்டி...' என்று ஒவ்வொருவருக்கும் கொடுத்துவிட்டுப் பிறகுதான் வாங்கிச் சாப்பிட்டான்.

'நான் ஆபீஸுக்குப் போன பிறகு, கண்ணன் அழுதானா? பிடிவாதம் பிடித்தானா?' என்று கேட்டான் வைத்தி, தன் தாயாரிடம்.

'கொஞ்சம்கூட அழவில்லை...பிடிவாதம் பிடிக்கவில்லை...தியாகுவுடன் அவன் ஏதேதோ பேசி விளையாடிக்கொண்டிருந்தான்' என்றாள் வைத்தியின் தாயார்.

'சாப்பிடப் பிடிவாதம் பிடிக்கவில்லையா?'

'இல்லவே இல்லை...கொஞ்சம்கூடப் பிடிவாதம் பிடிக்கவில்லை...கீழே ஒரு பருக்கைகூடச் சிந்தாமல் சாப்பிட்டு விட்டான்.'

கண்ணன் எப்படி இவ்வளவு சமத்தாக மாறிவிட்டான் என்று வைத்திக்கு ஆச்சரியமாயிருந்தது. அவன் எப்போதும் தன் அம்மாவுடனும், அப்பாவுடனும்தான் ஒட்டுதலாய் இருந்தான்...வீட்டுக்குள்ளேயே மற்றவர்களுடன் அதிகம் பழக மாட்டான். ஒரு நிமிஷம் அம்மாவைக் காணாவிட்டாலும் அழ ஆரம்பித்துவிடுவான். அவனுடைய பாட்டி என்ன சொன்னாலும் அடங்கமாட்டான். பெரியம்மா தேற்றினாலும் தேறமாட்டான். அவன் இப்போது அம்மாவைப் பிரிந்து இங்கு இருப்பதோடல்லாமல், பாட்டி, பெரியம்மா முதலியவர்களுடன் ஒன்றியும் இருந்து, அவர்கள் பேச்சைக் கேட்டு சமத்தாய் இருக்கிறான் என்றால், வைத்திக்கு ஆச்சரியமாய் இருந்தது. கண்ணனைப்பற்றி ரொம்பவும் பெருமையாய் இருந்தது.

இரவு கண்ணன் வைத்தியினருகில் படுத்துக்கொண்டான். தன்னுடைய பிஞ்சுக் கைகளால் தன் அப்பாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு கால்களை அவன் மேல் போட்டுக்கொண்டு படுத்துக்கொண்டான். வைத்திக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. 'என் கண்ணா...சமத்துக்குட்டி...' என்று அணைத்துக்கொண்டான் அன்புடன். அந்த அன்பணைப்பிலே சூழ்ந்து, அப்படியே தூங்கிவிட்டனர், கண்ணனும் வைத்தியும்.

அன்று ஜானகியிடமிருந்து கடிதம் வந்தது. கண்ணனுக்கும் தனியாக ஒரு கடிதம் எழுதியிருந்தாள்.

'அன்புள்ள கண்ணா!

உன் அம்மா எழுதறது என்னவென்றால், நீ அங்கே சமத்தாக இருப்பதாக அப்பா எழுதியதைப் பார்த்து ரொம்ப சந்தோஷம். நீ இங்கேயிருந்து அப்பாவுடன் புறப்பட்டுப் போனதிலிருந்து எனக்கு எப்பவும் உன் ஞாபகமாகவே இருக்கு. நீ அங்கே உன் அம்மாவை நினைத்துக் கொள்கிறாயா? மறந்துவிட்டாயா? இங்க உன் தம்பி ராஜன் சமத்தாய் விளையாடிண்டிருக்கிறான். ஒரு நாள் கவிழ்ந்து கொள்ளப் பிரயத்தனப்பட்டுக் கவிழ்ந்து கொண்டு விட்டான். அவன் தன் 'ங்கு'ப் பாஷையில் 'என் அண்ணன் கண்ணன் எங்கே? எப்போ வருவான்?'னு கேட்டான். நீ எப்போ உன் தம்பிப் பாப்பாவைப் பார்க்க வருவே? 'உன் 'அப்பிச்சி அம்மா' எப்பவும் உன் ஞாபகமாகவே இருக்கா. உன்னை வரச் சொல்லி எழுதச் சொன்னா. அப்பாகிட்டே சொல்லி, உன்னை இங்கே அழைச்சுண்டு வந்துவிட்டுப் போகச் சொல்றயா? சீக்கிரம் வந்துடறயா?

உன் அன்புள்ள
அம்மா.'

காரியாலயத்திலிருந்து சாயந்திரம் வந்ததும், அந்தக் கடிதத்தைக் கண்ணனுக்குப் படித்துக் காட்டினான் வைத்தி.

கண்ணன் மிகவும் கவனத்துடனும் பெருமையுடனும் கேட்டான்.

'பெரிம்மா, பெரிம்மா...எங்கம்மா எனக்கு லெட்டர் எழுதியிருக்கா. டே, தியாகு! எங்கம்மா கடிதாசு எழுதியிருக்காடா' என்று சந்தோஷத்துடன் ஓடிப் போய்க் கூறினான்.

'என்னடா எழுதியிருக்கா?' என்று கேட்டாள் அவனுடைய பெரியம்மா.

'அன்புள்ள கண்ணா...நீ எப்போ அம்மாவைப் பார்க்க வருவே...ராஜன் கவுந்துக்கறான்னு எழுதியிருக்கா...' என்று பெருமையுடன் சொன்னான்.

'நீ எப்போ ராஜனைப் பார்க்க ஊருக்குப் போறே...' என்று கேட்டாள் பெரியம்மா.

'போகமாட்டேன்...இங்கேயே தான் இருப்பேன்...' என்றான் கண்ணன்.

'ஏண்டா? ராஜனைப் பார்க்க வேண்டாமா?'

'பார்க்கணும்...'

'பின்னே...'

'அம்மாதான் பாப்பாவை எடுத்துண்டு இங்கே வரட்டுமே...' என்றான் கண்ணன்.

அதைக் கேட்டு வைத்தி பிரமித்து விட்டான்.

'என்னடா கண்ணா...உன்னை அம்மா திண்டிவனத்துக்கு வரச் சொல்லி எழுதியிருக்கிறாளேடா...! 'அப்பிச்சி அம்மா' உன்னைப் பார்க்க வேணும்னு ஆசைப் படுகிறாளாமடா...பால் கோவா பண்ணித் தருவாள்...திண்டிவனத்துக்குப் போயேண்டா...' என்றான், வைத்தி.

'போப்பா...நான் திண்டிவனத்துக்குப் போகமாட்டேன்...இங்கேதான் இருப்பேன்...' என்று சிணுங்கினான்.

கண்ணன் எப்படி இவ்வளவு தூரம் தன் அம்மாவைப் புறக்கணித்து அப்பாவுடனே இருக்க வேண்டுமென்று ஆசைப் படுகிறான் என்று வைத்திக்குப் புரியவில்லை.

'அப்பிச்சி அம்மா' என்று ஜானகி தன் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது கண்ணனுடைய பாட்டியை—ஜானகியின் தாயாரை. அவளுக்குப் பிள்ளைக் குழந்தையில்லையே என்ற குறையைக் கண்ணன் பேரனாகப் பிறந்து போக்கினான். அவன்மேல் அபார பிரேமை அவனுடைய பாட்டிக்கு. சதா அவன் நினைவாகவே இருந்தாள். ஜானகி பிறந்தகம் போனபோதெல்லாம் அவனைக் கொஞ்சினாள். கண்ணனும் பாட்டியிடம் ஒட்டுதலாய் இருந்தான். அவனுடைய பாட்டி அவனுக்கு விதம்விதமான பட்சணங்கள் அடிக்கடிச் செய்து கொடுத்ததால், அவளை 'அப்பிச்சி அம்மா' என்று கூப்பிட்டான்.

ஒரு சமயம் அவன் தன் பெற்றோருடன் இருந்தபோதே 'அப்பிச்சி அம்மாவிடம் போறேன்' என்று பிடிவாதம் பிடித்தான். அப்பேர்ப்பட்டவன், இப்போது அம்மாவும் வேண்டாம், அப்பிச்சி அம்மாவும் வேண்டாம் என்றும் 'நான் மதராஸிலேயே இருக்கேன்' என்றும் கூற ஆரம்பித்து விட்டான் என்றால், அது அதிசயமாக, புரியாத புதிராகத்தான் இருந்தது வைத்திக்கு.

வீட்டுக்காரப் பாட்டி அவனைப் பார்த்து, 'டேய் கண்ணா, உனக்குத்தான் பாப்பா வாண்டாங்கறயே...நான் எடுத்துண்டுடட்டுமா?' என்றாள் ஒரு நாள்.

'உதைப்பேன்...' என்றான் கண்ணன் பாட்டியை.

'அப்படியெல்லாம் சொல்லக் கூடாது பாட்டியை...' என்றான் வைத்தி.

'பின்னே, பாட்டி பாப்பாவை எடுத்துண்டுடுவேன்னு சொல்றாளே...!' என்றான் கண்ணன் கோபத்துடன்.

'நீதான் ராஜன் வேண்டாங்கறயே...'

'ஐயே...நான் எப்போப்பா வேண்டாம்னு சொன்னேன்?'

'பாப்பாவைப் பார்க்க நீதான் போக மாட்டேங்கறயே...'

'பாப்பாவை எடுத்துண்டு அம்மாவை இங்கேயே வரச் சொல்லுப்பா...' என்றான் கண்ணன் உடனே.

சில நாட்கள் கழித்து வைத்தி கதையொன்றை எழுதிக்கொண்டிருந்தபோது, கண்ணன் அவனிடம் வந்து, 'என்ன எழுதறேப்பா? அம்மாவுக்கு லெட்டரா எழுதறே...?' என்று கேட்டான்.

'இல்லேடா...கதை எழுதறேன்...'

'போப்பா...கதை ஒண்ணும் எழுத வேண்டாம்...அம்மாவுக்கு லெட்டர் எழுதுப்பா...ராஜனை எடுத்துண்டு, அப்பிச்சி அம்மாவையும் கூட்டிண்டு வரச் சொல்லுப்பா...' என்றான் கண்ணன்.

ஃ ஃ ஃ

'கண்ணா, நாளைக்கு அம்மா, ராஜன், அப்பிச்சி அம்மா, சித்தி எல்லாம் வராளாம்' என்று சந்தோஷத்துடன் கூறினான் வைத்தி, அன்று காரியாலயத்திலிருந்து வந்தவுடனே.

கண்ணன் சந்தோஷத்தால் என்ன பதில் சொல்வதென்று புரியாமல் தவித்தான். அவனுடைய முகமெல்லாம் பூரிப்பால் மலர்ந்திருந்தது. 'டேய், தியாகு! நாளைக்கு எங்கம்மா வரப் போறாடா? ராஜன் தெரியுமா, ராஜன் பாபு...அவனை எடுத்துண்டு வரப்போறா...'அப்பிச்சி அம்மா'வும் பால்கோவா பண்ணிண்டு வருவா...உனக்கும் கொடுக்கச் சொல்றேன்...' என்றான் பெருமையுடன்.

'அப்பா, ராஜன் என்னோடு பேசுவானோ?' என்று கேட்டான் கண்ணன்.

'ஓ, நன்னாப் பேசுவான்...' என்றான் வைத்தி, அவனுக்கு உற்சாகமளிப்பதற்காக.

'போப்பா...உனக்கு ஒண்ணுமே தெரியலையே. பாப்பா போய் எங்கயானும் பேசுமா? ஒண்ணும் பேசாது...என் மாதிரி பெரியவனானதும்தான் பேசும்... இல்லையாடா தியாகு?' என்று தியாகுவின் அபிப்பிராயத்தைத் தன் பக்கம் இழுத்துக்கொண்டான் கண்ணன்.

'கண்ணா, அம்மா, ராஜன் வந்ததும் நீ அப்பிச்சி அம்மாவுடன் ஊருக்குப் போறயா?' என்று கேட்டான் வைத்தி.

சிறிது நேரம் மௌனமாய் இருந்தான் கண்ணன். மறுபடி கேட்டதும், 'போப்பா.. நான் இங்கேதான் இருப்பேன்...' என்றான்.

'போடா...பாவம்...அப்பிச்சி அம்மா உன்மேல் ரொம்ப ஆசையாயிருக்கா... கொஞ்ச நாள் இருந்துட்டு வாயேண்டா...'

'அம்மாவும் வருவாளோ?'

'அம்மா வரமாட்டாள்...இங்கேயே இருப்பாள்...'

'ராஜன்கூடவா?'

'ஆமாம்...'

'அப்போ...நீ வாப்பா...நாம் திண்டிவனத்துக்குப் போகலாம்...'

'ஐயோ...நான் ஆபீஸுக்குப் போகணுமே...'

'அப்போ அப்பிச்சி அம்மாவை இங்கேயே இருக்கச் சொல்லு...'

'அப்பிச்சி அம்மா இங்கே இருக்க மாட்டாள்...'

'அப்பிடின்னா...நான் இங்கேதான் இருப்பேன்...ராஜனுடன் நான் விளையாட வேண்டாமா?' என்றான் கண்ணன்.

கண்ணனுடைய அம்மா வந்து விட்டாள். சின்னக் குழந்தை ராஜன் கண்களை அகல விரித்து விழித்து எல்லோரையும் பார்த்துத் தன் பொக்கை வாயால் சிரித்து மயக்கிவிட்டான். கண்ணன் அவன்மேல் குனிந்து முகத்தை அவன் முகத்தருகே வைத்துக் கொஞ்சினான்.

'அப்பிச்சி அம்மா'வைக் கண்டதும், கண்ணன் அவளுடைய பின்னால் சுற்ற ஆரம்பித்துவிட்டான்.

அவனுடைய அம்மா வந்த அன்றிரவு 'கண்ணா, வா, படுத்துக்கலாம்' என்று கூப்பிட்டான் வைத்தி வழக்கம்போல்.

'நான் அப்பிச்சி அம்மாகிட்டே படுத்துக்கறேம்பா!' என்றான் கண்ணன்.

'என்னடா...இத்தனை நாள் எங்கிட்டே தானே படுத்துண்டே...இப்போ அப்பிச்சி அம்மாகிட்டே படுத்துக்கறேங்கறயே...?'

கண்ணன் கண்களைக் கசக்கிக் கொண்டே, 'நான் அப்பிச்சி அம்மாகிட்டேதான் படுத்துக்குவேன்...' என்றான்.

'சரி, பாவம் படுத்துக்கட்டுமே...ஏன் அவனை அழவிடுகிறீர்கள்?' என்றாள் ஜானகி.

நான்கு நாட்கள் கழித்து வைத்தி காலை காரியாலயத்துக்குப் போகும்போது ஜானகி அவனிடம், 'கண்ணனை அம்மா அழைத்துக்கொண்டு போகிறேன் என்கிறாள்...ஒரு மாசம் கழித்து அழைத்துக்கொண்டு வந்து விட்டுவிடுகிறாளாம்... அனுப்புகிறீர்களா?' என்று கேட்டாள்.

'கண்ணனையா? அவன்தான் திண்டிவனத்துக்குப் போக மாட்டேன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறானே...நீயும், ராஜனும் வேறு வந்துவிட்டீர்கள். இனியும் அவன் அங்கு போகச் சம்மதிப்பானா என்ன?' என்றான் வைத்தி.

'இப்போ கேட்டுப் பாருங்களேன்...'

வைத்தி கண்ணனைக் கூப்பிட்டான். 'என்னப்பா...?' என்று கேட்டுக்கொண்டே வந்தான், அவன்.

'அப்பிச்சி அம்மாவோட ஊருக்குப் போகப் போறயா என்ன?'

'ஆமாம்' என்று தலையாட்டினான்.

'அம்மாவும், ராஜனும், நானும் இங்கேயேதான் இருப்போம்...நீ மட்டும் போகணும், தெரியுமா?' என்று கேட்டான் வைத்தி. ஒரு வேளை ஜானகியும் வருகிறாள் என்றெண்ணிக்கொண்டு தானும் போவதாகக் கூறுகிறானோ கண்ணன் என்று வைத்திக்குச் சந்தேகமாயிருந்தது.

'உம்... சரி... போறேன்...'

'என்னடா, மின்னேயெல்லாம் திண்டிவனத்துக்குப் போக மாட்டேன்னயே...'

கண்ணன் மௌனமாயிருந்தான். என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை.

'திண்டிவனத்துலே ரேடியோ இல்லையேடா! இங்கே ஜம்னு ரேடியோ கேட்கலாம், ராஜனோடு விளையாடலாம், பீச்சுக்குப் போகலாம், தியாகுவோட விளையாடலாம்... திண்டிவனத்துலே என்னடா இருக்கு? ஒண்ணுமே இல்லையே...!' என்று அவனுக்கு இங்கேயே இருக்க ஆசைகள் காட்டினான், வைத்தி.

'அப்பிச்சி அம்மாவுக்கு அங்கே பொழுது போகலையாம்பா... அப்பிச்சி அம்மாவோட விளையாடிக்கிறேன்...' என்றான் கண்ணன்.

'அழாமல் சமத்தா இருப்பாயோ... அம்மா அம்மான்னு அழுவாயோ?'

'அழமாட்டேன், சமத்தாய் இருப்பேன்...'

'அப்பிச்சி அம்மாவைப் பால்கோவா பண்ணிக் கொடு, அது வாங்கித்தா, இது வாங்கித்தான்னு தொந்தரவு பண்ணுவாயா?

'தொந்தரவு பண்ணமாட்டேன்...... சமத்தா இருப்பேன்...' என்றான் மீண்டும் கண்ணன்.

'சரி, அப்போ போயிட்டு வா...' என்று கூறிவிட்டு, காரியாலயத்துக்குப் போய் விட்டான், வைத்தி.

சாயந்திரம் வைத்தி வீட்டுக்கு வந்த போது கண்ணன் அவனை வரவேற்கவில்லை. அவன் கையிலிருந்து பையைப் பிடுங்கிக்கொண்டு, அதைச் சோதனை செய்யக் கண்ணன் அங்கு இல்லை. வைத்திக்கு என்னவோ குறையாய் இருந்தது.

ஜானகியிடம், 'கண்ணன் உன்னையும், என்னையும் நினைத்துக்கொண்டு அழுகிறானோ என்னவோ? அவசரப்பட்டு அழைத்துக் கொண்டு போகச் சொல்லி விட்டேன். இப்போது ஏன் அனுப்பினேம் என்றிருக்கிறது' என்றான் வைத்தி.

டைரக்டர்:—நீர் இக்காட்டின் வழியாக வேகமாய், உங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடிவர வேண்டும் இதோ, இந்தக் கூண்டில் இருக்கும் புலி சரியாக 200 கஜ தூரம் உம்மைத் துரத்தி வரும் அவ்வளவுதான். புரிந்ததா உமக்கு?

நடிகர்:—எனக்குப் புரிந்தது. புலிக்குப் புரியணுமே, அதற்குப் புரிய வையும்!

'எனக்குக்கூட ரொம்பவும் அழுகை வந்துவிட்டது, சாயந்திரம். குழந்தை என்னவோ ஊருக்குப் போக வேண்டும் என்ற ஆசையில் போகிறேன் என்று சொன்னதை நம்பி அனுப்பிவிட்டேன். அவன் அழுது கொண்டிருக்கிறானோ என்னவோ' என்றாள் ஜானகி தொண்டையடைக்க.

'உனக்கு ரொம்பவும் கல் நெஞ்சு ஜானகி... அவன் என்னிடம் இரண்டு மாதங்களுக்குமேல் இருந்தான்... பரவாயில்லை என்று நான்தான் சம்மதித்தேன்.. நீ எப்படி அனுப்பினாய்? அவனை இரண்டு மாதங்களாய்ப் பிரிந்து திண்டிவனத்தில் இருந்தாய். இங்கு வந்ததும் உடனே உன் அம்மாவுடன் அனுப்பி விட்டாய்... உனக்கு அவனைப் பிரிந்திருக்க மனசு எப்படி வந்தது?' என்று கேட்டான் வைத்தி.

'என் மனதை மேலும் குத்தாதீர்கள்..., என்னவோ அவசரப்பட்டு அம்மாவின் ஆசைக்காக அனுப்பினேன்... வீடு வெறிச்சின்னு அம்மா தவிப்பாளேன்னு அழைச்சுண்டு போகச் சொன்னேன்... ஆனால், இப்போ கிடந்து தவிக்கிறது மனசு...' என்றாள் ஜானகி.

'கண்ணனுடைய மனப்போக்கு விசித்திரமாய் இல்லை?' என்று கேட்டான் ஜானகியை.

'ஆமாம், எனக்கும் பிடிபடவில்லை. இத்தனை நாள் மதராஸுக்குப் போவேன் என்று பிடிவாதம் பிடித்து, உங்களுடன் வந்து இருந்தான். இப்போது நம் இருவரையும் பிரிந்து திண்டிவனத்துக்கு எப்படிப் போனான்?' என்றாள் ஆச்சரியத்துடன் ஜானகி.

வைத்தி வெகு நேரம் யோசித்தான். பிறகு, 'எனக்கு ஒன்று தோன்றுகிறது' என்றான்.

'என்ன?' என்று ஆவலுடன் வினவினாள் ஜானகி.

'ராஜன்மேல் பொறுமையாய் இருக்கும்...'

'அய்ய...'

'பொறுமை என்றால் உண்மையாக இல்லை ஜானகி. ராஜன் பிறந்ததுமே தனக்கு உன்னிடமிருந்த ஏகபோக உரிமை போய்விட்டது; அந்த உரிமையில் பங்கு கொள்ள ஒருவன் வந்து விட்டான் என்ற உணர்வு அவனையுமறியாமல் உள்ளத்தில் தோன்றியிருக்கிறது. அதனால் தன்மேல் ஏகபோக அன்பு செலுத்துபவர் யார் என்று பார்த்து, அவர்களிடம் போகப் பிரியப்பட்டிருக்கிறான். நான் திண்டிவனத்துக்கு வந்தபோது, என்னோடு மதராஸுக்கு வந்தால் என்மேல் தன் உரிமையை ஸ்தாபிக்கலாம் என்று தோன்றியிருக்கிறது. நீ இங்கு வந்ததும் நம் இருவர் கவனமும் ராஜனிடம் செல்லும் என்று உணர்ந்து, உன் அம்மாவிடம் சென்றால் அங்கு தன்மேலேயே முழு அன்பும் செலுத்தப்படும் என்பதை உணர்ந்து திண்டிவனத்துக்குப் போய்விட்டான்...' என்றான் வைத்தி.

'அவ்வளவு சூட்சமம் எல்லாம் குழந்தைக்கு என்ன தெரியும்?'

'சூட்சமம் என்றால் வெளிப்படையாக நினைத்து அல்ல அவன் செய்தது...அவனையுமறியாமலே அப்படி மனம் அவனை நடத்திச் செல்கிறது...'

'அப்போ ராஜனைக் கண்டால் பிடிக்கவில்லையென்றா சொல்கிறீர்கள்? அவனை எப்படிக் கொஞ்சினான்?'

'ராஜனைக் கண்டால் அவனுக்கு இஷ்டம்தான். ஆனால், நம் கவனம் அவன் மேலேயே இத்தனை நாள் முழுதும் இருந்தது; இப்போது இருவரிடமும் செல்லுகிறது என்று சற்று நம்மேல்தான் வெறுப்பு.'

'என்ன? பச்சைக் குழந்தையைப் பற்றிச் சொல்கிறீர்களே, என்னென்னவோ?'

'அதுதான் முன்னமே சொன்னேனே... அவனையுமறியாமல் மனம் அப்படி அவனை நடத்திச் செல்கிறது. சிறு குழந்தைகளின் உள்ளமே அப்படித்தான். திடீரென்று தன்மேல் உள்ள அன்பு வேறொருவர்மேல் பாய்வதைப் பொறுப்பதில்லை. அதற்காகத் தனக்குப் போட்டி இல்லாத இடம் ஒன்றை மனம் தேடுகிறது. அவ்வளவுதான். நாளடைவில் அந்த உணர்வு மறைந்துவிடும்...' என்றான் வைத்தி.

'என்னவோ, நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை. அவன் சமத்தாய் அழாமல் இருந்தால் சரி...அவ்வளவுதான்... மனத்துக்கு இப்போதுதான் சிறிது சமாதானமாய் இருக்கிறது' என்றாள் ஜானகி.

வைத்தி மௌனமாய் கண்ணனுடைய போட்டோவை—மரக் குதிரையின்மேல் உட்கார்ந்துகொண்டு சவாரி செய்து கொண்டிருந்த போட்டோவை—பார்த்தவாறே, மேலும் மனோதத்துவ ஆராய்ச்சியில் ஆழ்ந்தான்.

★

ரிஸல்ட்
என்ன ஸார் பேப்பர்லே செய்தி...
ஒரு செய்தியுமில்லே! எல்லாம் டூடோரியல் காலேஜ் விளம்பரங்கள்
நம்ம ராமுவை 'பெயில்' ஆயிட்டானேன்னு உங்க டூடோரியல் காலேஜ்லே சேர்த்துட வேணும்! அவன்மாட்டுப் பெண்ணிடமே பாடம் கத்துண்டாப் போதும்!
ரெண்டு அவுன்ஸ் அக்னித்திராவகம் கொடுங்கோ
முதல்லே உங்க பையனுக்கு பெண் புடிச்சிருக்கா. சொல்லுங்கோ! அப்புறம் காலேஜ்லே சேக்கறதுக்கு சிபார்சு பண்றதைப் பத்தி சொல்றேன்
எதுக்கும் அவசரம் ஏண்டா! ஒருவேளை நாளை பேப்பர்லே பிழை திருத்தம்னு பாஸ் ஆனவங்க லிஸ்ட்லே நம்ம நம்பர் வந்தாலும் வரும்டா!


வந்தது!
பரீக்ஷையில் பெயில் ஆனவர்களை ஆறு-குளங்களில் விழாமல் தடுக்க வீட்டிலேயே காவலில் வைத்தால் என்ன?
வஸந்தா டூடோரியல் காலேஜ்
எம். சேஷகிரி
பிரின்ஸ்பால்
நீந்தத் தெரிந்தவங்களைக் கொண்டு பெயில் ஆகி குளம் குட்டைகளில் விழுந்தவர்களை நம்ம காலேஜ்லே அட்மிட் பண்றோம்
ஸார் உங்க பெயர்?
வயசு என்ன?
கோத்திரம் என்ன?
ப்ளீஸ் உங்க அட்ரஸ்
பாவம்! பாஸ் செய்தவர்கள் பாடும் பரிதாபத்துக்குரியதே!
LESLY COLLEGE
மற்றவர்கள் முந்திக்கொள்ளுமுன் 'பட்டம்' வாங்கிய 'சூட்டோடு' காலேஜ் வாசலிலேயே மாலையிட்டு மணம் முடித்தால் என்ன?

‘வாங்கய்யா, போகலாம். எல்லாம் பூவம் பிஞ்சுதான். நான் நேத்தே பாத்துட்டேன்’ என்றாள் வேலாயி. அவள் வயது எட்டு நிறைந்து ஒன்பது நடந்துகொண்டிருந்தது.

‘சித்தெ பொறு. அந்தச் சப்பாத்திக் கள்ளி ஓரத்திலே போய்ப் பாத்திட்டு வரலாம்’ என்றான் தகப்பன்.

‘போகலாம் வாங்கய்யா. ஒண்ணும் இருக்காது. இன்னும் பத்து நாள் பிடிக்கும்; அதுக்குள்ளே காய் ஏது? நான் எல்லாம் சுத்திப் பாத்துட்டேன்.’

‘உனக்குத் தம்பிப் பய பிறக்கப் போறான், வேலாயி. குளம்புக்கு இன்னைக்கு ஒரு பூசனிக் கொட்டை (இளம் காய்) கிடைக்காத போயிடும்? நாளைக்கிக் கிடச்சி என்ன பிரயோசனம்?’

‘இதென்ன பேச்சய்யா? இருந்தாத்தான் கிடைக்கும்?...’

‘நீ இந்தப் பக்கம் வந்திருக்க மாட்டெ...இதோ, பெருங் கொட்டை!’

‘அடியாத்தே! நான் அங்கே தேடல்லே, மெய்தான். அது உங்களுக்கு எப்படி ஐயா தெரிஞ்சது?’

‘சப்பாத்திக் கள்ளி புதர்கிட்டெ நீ போயிருக்க



மாட்டே.’

‘என்ன அப்படிச் சொல்லிட்டீங்க? பாம்புக்கெல்லாம் நான் பயப்பட மாட்டேன்–யா!’

‘வேலாயி துணிஞ்ச கட்டை, அவளுக்குப் பாம்புன்னு பயமில்லை. அவளுடைய கால் இருக்குதில்லே அதுதான் பயந்தாங்குள்ளி! அது ஓடிப் போகும்!’ என்று சொல்லிச் சோலமலை சிரித்தான்.

வேலாயி சிரித்து நெஞ்சுக்கும் காலுக்குமுள்ள அபிப்பிராய பேதத்தை ஒப்புக் கொண்டாள்.

பூசனிக் கொட்டை பதமாய் இருந்தது. தரையின்மேல் படிந்திருந்த பக்கம் சற்று வெளுத்திருந்தது. ஒரு கல் அழுத்திய இடத்தில் கொஞ்சம் குழிந்திருந்தது. மற்றப்படி அது குண்டாகவும் கரும் பச்சை நிறமாகவும்–நல்ல அழகு. வேலாயி அதை அன்புடன் அணைத்து ரஸித்துக்கொண்டிருந்தாள்.

அப்பொழுது தெற்கே இரண்டு மைல் தூரத்திலிருந்து ரெயில் வண்டித் தொடர் என்ஜின் ஊதிற்று. கணவாய்க் காற்று (மலைகளின் ஊடே வரும் தென்மேற்கு பருவக் காற்று) வேகமாய் அடித்துக்கொண்டிருந்ததால், ஒலி அருகே அரை மைல் தூரத்திலிருந்து வருவதுபோல் தோன்றிற்று. தொடர்ந்து பல எதிரொலிகளும் சேர்ந்து கொண்டதால் சத்தம் க்ரீச் என்று கடுமையாக இல்லாமல், வெல்வெட்போல் மெத்தென்று, உயர்ஜாதி வெள்ளரிப் பழம் போல் மிருதுவாக, இனிமையாக இருந்தது. சோலமலை காது கொடுத்துக் கேட்டான். அந்தக் காட்சி வேலாயிக்குப் புதிதல்ல. அவர்கள் வீட்டுக் காராம் பசுவும் அப்படித்தான் ஓசைகளை உன்னிப்பாகக் கேட்கும். ஆனால், சோலமலைக்குக் காதை நிமிர்த்திக் குத்தாக நிறுத்த வராது. அவ்விஷயத்தில் வெற்றி காராம் பசுவுக்குத்தான். ஆனால், ஒலியின் கருத்தைப் பசு மாடு விளக்காது. சோலமலை விளக்குவான்.

‘என்னைய்யா கேக்கறீங்க, நம்ம காரி கணக்கா?’ என்று வேலாயி குறும்பாகக் கேட்டாள்.

‘பிள்ளை பிறந்திருச்சான்னு பாத்தேன்’ என்றான் அவன்.

‘அதெப்படித் தெரியும்?’

‘அதெல்லாம் தெரியும் – இன்னும் புறக்கல்லே.’

‘பிள்ளை, பிள்ளை–ங்கறீங்களே ஐயா; அது பொட்டையா இருந்துட்டா?’

‘புறக்கவேண்டியது ஆணு இருந்துட்டா, அது பொண்ணு எப்படிப் புறக்கும்? மாயமா, மந்திரமா?’ என்றான் தகப்பன், சர்வசாதாரணமாக.

வேலாயிக்குத் தர்க்க ரீதியாக அதை ஆட்சேபிக்கத் தெரியவில்லை. அவளுக்கும் தம்பி வேண்டியிருந்ததால் அந்த முடிவை ஒப்புக்கொண்டு விட்டாள். தன் தகப்பனாரின் ஒலி–ஆருடத்தில் அவளுக்குப் பூர்ண நம்பிக்கையுமுண்டு.

திடீரென்று ‘குளந்தை எப்படி ஐயா பிறக்குது?’ என்று மகள் கேட்டாள்.

‘நானு பெக்கறேன்? உன் ஆத்தா இல்லே பெறுது! அவளைக் கேளு. என்னைக் கேட்டா?’ என்று பொய்யாக அதட்டித் தகப்பன் தீர்க்காட்டினான்.

‘சொல்லுங்கய்யா!’ என்று மகள் கொஞ்சி வற்புறுத்தினாள்.

‘பூசனிக் கொடியிலே காய் பிடிக்கிதில்லே? அப்படித்தான்னு வச்சிக்கோ. இதோ பாரு, பிஞ்சுப் பூவு. ரெண்டு நாள்லே பூ வாடிப்போகும். காய் பெருக்கும்.’

வேலாயி, ‘அதெல்லாம் இல்லை. என்னை ஏமாத்திறீங்க, ஐயா,’ என்று தன் அதிருப்தியைத் தெரிவித்தாள்.

ஆனால் அவளுக்கு முற்றிலும் தெரியாமல் இல்லை. அவளுக்குத் தம்பி பிறக்கப் போகிறான். அவள் அக்காள் ஆகிவிடுவாள். அக்காள் பதவிக்கு உயர்வு ஏற்பட்ட பிறகு, அது தெரியாது, இது புரியாது என்று இருக்க முடியுமா? எவ்வளவோ தெரியவேண்டுமே! தம்பிப் பயல் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லவேண்டுமே!

பக்கத்துத் தோட்டத்தில் கமலை இறைக்கும் சின்னுத் தேவன் சும்மா உட்கார்ந்து கொண்டிருப்பதை சோலமலை கவனித்தான். மாடுகள் நுரை ஒழுக அசை போட்டுக் கொண்டிருந்தன. அவற்றிற்கு ஓய்வு இஷ்டமாயிருந்தாலும் அந்தச் சரிவான பாதையில் தசை நார்களை இறுக்கிச் சரிக் கட்டிக்கொண்டு சமாளித்து நிற்பது சுகமாய் இல்லை. அவிழ்த்துவிட்டால் சமவெளியில் இயற்கையாக நிற்கலாம்; அல்லது சற்று படுக்கலாம்.

சோலமலை, ‘ஏன் சும்மாக் குந்திகிட்டிருக்கே, சின்னுத் தேவா?’ என்று கேட்க, ‘வேறொண்ணுமில்லை. தம்பிப் பய ஓடையோரமாய்ப் போயிருக்கான்,’ என்ற விடை கிடைத்தது.

‘நான் தண்ணி கட்டறேன், நீ இறை’ என்று சொல்லி, சோலமலை பாத்திகளை நோக்கி நடந்தான். இருங்குச் சோளம் அவனைவிட உயரமாக வளர்ந்து செழிப்பாய் இருந்தது. கதிர்களிலிருந்து தொங்கும் நிற நிறப் பட்டுக் குஞ்சலங்கள் வேலாயியின் கன்னத்தைத் தடவிக் கொடுத்து, அவளை மகிழ்வித்தன. இருந்த போதிலும் தம்பியை நினைத்து அவள், ‘ஐயா, வீட்டுக்கு...’ என்று எதிர்ப்பு நடவடிக்கை ஆரம்பித்தாள்.

‘இரு. ரெண்டே நிமிசம். ஜாலி மாத்தின் கீழே உக்காந்து வாய்க்காத் தண்ணியிலே விளையாடிகிட்டிரு,’ என்று தகப்பன் சமாதானம் கூறினான்.

ஜாலி மரத்தின் தூரிகைபோன்ற பூக்களை அவள் விதவிதமாக ஜோடித்து விளையாடினாள். மஞ்சள், ஊதா, சிவப்பு. தன் சிறு விரல் அளவு நீளம். மென்மையான ரோமங்கள். மிகச் சிறிய பூனைக் குட்டியின் வெண்மையான வாலை சாயங்களில் நனைத்தெடுத்தால், காய்ந்த பிறகு, சுமாராக அப்பூக்களைப்போல இருக்கும். அவள் பூக்களைத் தண்ணீரில் மிதக்க விட்டாள்; தனியாகவும், புல்லால் நெய்த பாயாகவும் மிதக்கவிட்டு, கைதட்டிச் சிரித்தாள். கால்களைத் தண்ணீரில் தொங்கவிட்டு, கொம்மாளமடித்து மனம் களித்தாள். மண்ணைப் பிசைந்து ஆப்பமும் வடையும் சுட்டாள். பிறக்கப் போகும் தம்பியை – இதற்குள் பிறந்திருப்பானோ – தகப்பன் இவ்வளவு கவலையற்றிருக்கிறாரே! – கற்பனை செய்து பார்த்தாள். ‘தங்கச்சி’தான் அகக்கண் முன் தோன்றினாள். அவள் அதை ஒப்புக் கொள்ளாமல், பள்ளிக்கூடத்தில் டீச்சர் மங்களம் கரும்பலகையில் அழிப்பது போல் மனத்திரையிலிருந்து ஆவேசத்துடன் அழித்தாள். அப்பொழுது திரையில் கன்றுக் குட்டியும் ஆட்டுக் குட்டியும் கோழிக் குஞ்சும் தோன்றின. ‘சீச்சீ!’ என்று வெறுத்து, அவற்றையும் வேக வேகமாகத் துடைத்தாள். உடனே கறுப்பாய், குண்டாக ஒரு பூசனிக்கொட்டை தோன்றிற்று. அதன் முகவாய்க்கட்டையின் அருகே ஒரு குழி இருந்தது. அவள் பக்–கென்று சிரித்தாள்.

எண்ணெய்ப் பசை அறியாத கமலை ராட்டினம், தன் அழுகையை அழுது கொண்டிருந்தது. சோலமலை கூலியில்லாமல் தண்ணீர் கட்டிக் கொண்டிருந்தான். சின்னுத் தேவனின் தம்பி, தன் ஜோலியை முடித்துக்கொண்டு திரும்பியவன், ‘என்ன சோலமலை, வீட்லே பேர்காலமில்லே?’ என்று வினவினான்.

‘ஆமா’ என்றான் சோலமலை, காரியத்தில் கண்ணாக.

‘நீ இங்கே இருக்கே!’

‘நான் அங்கேருந்து என்ன செய்ய? முக்கவா? முனகவா? என் மாமியார் வந்திருக்காங்க. ஆசுபத்திரியிலேருந்து கிளவி சூசையம்மா வந்திருக்குது. திண்ணையிலே என் ஐயா இருக்காரு. வேலாயி ‘அம்மா ஏன் இப்படிக் கத்துது?’ – ன்னு கேட்டுகிட்டே இருந்திச்சு. எனக்கும் இருப்புக் கொள்ளல்லே. நிளலைப் பாத்தா பொழுது நகரவே இல்லை. சரி போ–ன்னு வேலாயியை இழுத்துகிட்டு இங்கே வந்துட்டேன். அதைப் பாரு, தன்னை மறந்து விளையாடிகிட்டிருக்குது.’

‘சோசியன் என்ன சொன்னான்? ஆணு பெண்ணு?’

‘சோசியரு சொல்லி ரொம்ப பலிக்குதிக்கும்! போன வருசம் வந்தாரே மலையாளத்து அய்யரு, அவருஞ்சியும் கையைத் தேச்சி மோந்து பாத்து, சரியாச் சொல்வாரு.’

‘நீ சோசியரைக் கேக்கல்லையாக்கும்!’

‘அவரை என்ன கேக்க? ஆணுதான் புறக்கும்.’

‘அதென்ன அவ்வளவு நிச்சயம்!’

‘எனக்கு அப்படித்தான் தோணுது. நமக்கும் வேணுமில்லே ஒரு பய, வாரிசுக்கு. ராசாவானாலும் மகனில்லாதெ சாகலாம், குடியானவனுக்கு அதெப்படி!’

தர்க்க சாஸ்திரத்தின் சிகரம்!

அப்பொழுது தலைக்குமேல் தாழ்வாக ஆகாய விமானம் ஒன்று பறந்தது. அதன் ஓசையை சோலமலை உன்னிப்பாகக் கவனித்தான்.

‘ஏ சோலமலை, உங்க எஜமான், சின்னவரு, போன ட்ரிப்பு பறவைக் கப்பல்

உலகப்பிரசித்தி பெற்ற தொண்டை மற்றும் மார்பு உபாதைகளுக்குக்குணமளிக்கும்

பெப்ஸ் வில்லைகள் உட்கொண்டு பிராங்கைடிஸ் விரைவில் அகன்றது.

தொண்டைப் புண் பிராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷம் முதலியவை பெப்ஸ் தொண்டை மற்றும் மார்பு உபாதைகளுக்குக் குணமளிக்கும் வில்லைகளை உட்கொண்ட உடனேயே அகலுகின்றன. பெப்ஸ் வில்லைகளைச் சுவைத்து, நோய்க்குக் காரணமான கிருமிகளைக் கொல்லவும், வலியைக் குறைக்கவும் செய்யும். அதன் குணமளிக்கும் ஆவியை அனுபவியுங்கள்.

பெப்ஸ் தொண்டை மற்றும் மார்பு உபாதைகளுக்குக் குணம் அளிக்கும் வில்லைகள்

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்.

FPY-56-TAM

ஸோல் ஏஜண்டுகள்: தாதா & கோ. 85, நைனியப்ப நாயகன் தெரு. சென்னை-3.



ஏறிதான் மருதையிலேருந்து பட்டணத்துக்குப் போனாமே, நீ எப்போ, ஏறப் போறே?' என்று கேட்டான் சின்னத் தேவன்.

'புதையல் கிடைக்கட்டும், போகலாம்; ...ஆனா, டிக்கட்டு வாங்கினப் போதாதே. துணிமணி பெட்டி படுக்கையெல்லாம் ரொம்ப பாஷனா இருக்கணுமாம், இங்கிலீசு பேசனுமாம், அதில்லாட்டி அதிலே ருக்கிற வெள்ளைக்காரச்சி கதவைத் திறந்து, கீழே உருட்டி விட்டுவிடுவாளாம்! தெரிஞ்சிகிட்டேயில்லே?'

'போப்பா, சும்மானுச்சியும் – கதை!'

'இல்லே, சின்னத் தேவா, மெய்யா.'

சின்னத் தேவனின் தம்பி 'நீங்க பறவைக் கப்பல் சங்கதி சொல்றீங்க. நான் இன்னும் ரெயிலே ஏறினதில்லே. வயசாகுது, எருமைக்கடாக் கணக்கா. சித்திரைத் திருவிளாவுக்கு எல்லாரும் மருதைக்குப் போனுங்களே, அப்போ ரெயில்லே போகலாமன்னேன். பஸ்—ஸிலேயே போயிட்டாங்க. நீங்க என்னடான்னா...' என்று தன் வருத்தத்தைத் தெரிவித்தான்.

அப்பொழுது டாண், டாண் என்று கோவில் பெரிய மணி முழங்கிற்று. மறுபடி சோலமலே காது கொடுத்துக் கேட்டான். அவன் முகம் பலர்ந்தது. மேகங்கள் இடையே சஞ்சரிக்கும் கழுகுபோல் அவன் பார்வை விரித்து நிமிர்ந்து நின்றான், சென்ற நிமிஷம் ஒரு வளர்த்தியான பையனைத் தோற்றமளித்தவன், வேலாயியின் அண்ணன்போல இருந்தவன், இப்பொழுது ஒரு மனிதன் ஆனான், பொறுப்பும் திறமையும் வாய்ந்த ஒரு குடும்பத் தலைவன் ஆனான். 'வா, வேலாயி, தம்பிப் பய புறந்துட்டான்' என்று அவன் ஆவலுடன் கூவினான்.

சின்னத் தேவன் அதிசயித்து 'அதெப்படிச் சொல்றே, சோலமலே?' என்று கேட்டான்.

'மனசிலே தெரியுதில்லே!' என்றான் சோலமலே சரளமாக.

'அதெப்படித் தெரியும்? எங்களுக்குத் தெரியல்லேயே' என்று சொல்லி, உருவற்ற ஒன்றைத் தேடுவதுபோல் நாலாபுறமும் பார்த்தான்.

'ஏன் தெரியாது? நீ யோசிச்சிருக்க மாட்டே. உன் சமுசாரம் வெங்காய சாம்பார் வச்சா வாசனத்திலேருந்து உனக்குத் தெரியல்லே?' அடே தாலி கட்டின புருசனே, நீ சந்தோசமா சாப்பிடணும்–னு சொல்லி, வக்கணையா வெங்காய சாம்பார் வச்சிருக்கேன்'–னு கூப்பிட்டுச் சொல்லவா வேணும்?' நாவில் நீர் சொட்ட, சிரிப்பு.

'அது வாசனம்...!'

'நாய் கத்தறதைக் கேட்டு – இது நாயிக்கும் நாயிக்கும் சண்டை; இது மாட்டை விரட்ற இரைச்சல்; இது வயித்து வலியாலே ஊளையிடுது; இது பாம்பாட்டியோட பாம்பைப் பாத்து பயந்து குலேக்குது–ன்னு வித்தியாசம் தெரிஞ்சிகொள்றுமா இல்லையா?'

'அதெல்லாம் சரித்தான், பலமுறை பாத்த பழக்கம்...'

'அப்போ?...இன்னொண்ணு சொல்றேன் கேளு. 'அடே, உனக்கு மகன் புறந்திருக்கான், சந்தோசப்படு'–ன்னு நான் கூவிச் சொல்றேன். நீ கேட்டுகிட்டு நிக்கறே, சந்தோசப்பட்றே. உனக்கு அந்தச் சேதி புரியுது. உன் பக்கத்திலே ஒரு வெள்ளைக்காரன், தமிளு தெரியாதவன் நின்னுகிட்டிருந்தா...'

'அவனுக்குப் புரியாது.'

'ஏன்? அவன் காதிலேயுந்தான் அந்த வார்த்தை விளுது.'

'வார்த்தையிலே என்ன இருக்குது? அர்த்தமில்லே முக்கியம்!'

வேலாயி தன் தகப்பனின் கையைப் பிடித்துப் பாதி தொங்கியவண்ணம், 'வாங்கய்யா, போகலாம். பொழுது சாயற வரையும் பேசிகிட்டிருப்பீங்க' என்று அலுத்துக்கொண்டு சிங்–சிங் என்று குதித்தாள்.

'இதோ வந்துட்டேன். ஒரு வார்த்தை... 'அர்த்தமில்லெ முக்கியம்'னு சொன்னயே, அந்த அர்த்தம் எப்படி வார்த்தையிலே ஒட்டிக்கிறது? 'பணம்' என்னதும் தான் பல்லே இளிச்சி சிரிக்கிறேன். 'பிணம்' என்னதும் ஐயோன்னு அளுகறேன். ஏன்?'

'என்னைக் கேட்டா? வா, நம்ம வாத்தியார் அய்யாவைக் கேக்கலாம்'.

'எனக்குத் தோணுது, குதிரை மேலே ஆளு சவாரி செய்றதுபோலெ, இந்த வார்த்தை மேலெ அதன் அர்த்தம் சவாரி செய்யுது...அதுகூட சரியில்லே, இரு வந்துட்டேன், அந்த வெங்காய சாம்பார் சொன்னேன் இல்லே...'

'போதுமப்பா. தலே சுத்துது. என்ன வேலாயி? வீட்டுக்குப் போகணுமா? உங்கம்மாவுக்கு ஆம்பிள்ளைக் குளந்தை பிறந்திருக்குதுன்னு உங்கய்யா சோசியம் சொல்லுது. நீ என்ன சொல்றே?'

'எங்கய்யா சொன்னா சரியாத்தான் இருக்கும். ஆம்பிள்ளைதான்.'

'நான் போய் வாறேன், சின்னத் தேவா. வேலே முடிஞ்சதும் ரெண்டு பேரும் வாங்க. வெத்தலே பாக்கு சக்கரை வாங்கிக்கோங்க.'



'என்ன சரசா! இந்தக் கச்சேரியையும் தட்டிவிட்டாயே? விளையாட்டா இது? இதுவரை இரண்டு ஆச்சு. இது மூன்றுவது. ரொம்பப் பொறுத்துப் பார்த்துவிட்டேன். இனிமேல் முடியாது. உன்னுடைய போக்கே புரியவில்லையே! உடம்பில் ஏதாவது கோளாறு? அதையாவது சொல்லித் தொலைக்கக் கூடாதா?' என்று விசு சீறினான்.

சரசா பதில் கூறவில்லை. ஆனால் கண்கள்மட்டும் கலங்கிவிட்டன. அவள் கண் கலங்கியதைக் கண்டதும் விசுவின் கோபம் ஓரளவு அடங்கிவிட்டது. 'இங்கே வாயேன்' என்று குழைவுடன் கூப்பிட்டான்.

சரசா வருபவளாகத் தெரியவில்லை. கைகளைப் பற்றி அழைத்து, சோபாவில் அவளை அமர்த்தித் தானும் உட்கார்ந்து கொண்டான் விசு.

'என்மேல் கோபமா?' என்று நயமாக மறுபடி ஆரம்பித்தான்.

'எனக்கு யார்மேலும் கோபமில்லே' என்று முகத்தைத் திருப்பாமலே ஒரே பாணமாகப் போட்டுவிட்டாள்.

'அப்படி இல்லாமல் போனால் உன் மேலேயே உனக்குக் கோபம் வருவானேன்? வருகிற கச்சேரிகளையெல்லாம் உதறிவிட்டு, வேதனை வழிய வளைய வந்தால்? என்னிடம் ஒளிக்காமல் சொல்லக் கூடாதா?'

சரசாவுக்கு அளவு கடந்த துக்கம் பொங்கிவிட்டது. புடவைத் தலைப்பால் முகத்தை மூடியபடி எழுந்து உள்ளே சென்றுவிட்டாள்.

அதற்குப் பிறகு மனைவியிடம் பேச வேண்டும் என்று விசுவிற்குத் தோன்றவில்லை. சரசா பேச முற்பட்டபொழுது கூட, அவன் பாறைபோலத்தான் இருந்தான்.

சரசாவுக்கு நாட்கள் போய்க் கொண்டிருந்தன. விசுவுக்கு மட்டும் போகவில்லை. வாழ்வு ரொம்பக் கசந்து வழிந்தது. முதல் தரப் பாடகி என்ற நிலையை எட்டிக் கொண்டு வந்த சரசாவுக்குத் திடீரென்று என்ன வந்துவிட்டது? யோசித்து யோசித்துப் பார்த்தும் தலைகால் ஒன்றும் புரியவில்லை, அவனுக்கு.

திடீரென்று ஒரு யோசனை தோன்றிற்று. சரசாவுக்கு அவளுடைய குருவிடத்தில் அபார பக்தியும், மரியாதையும் உண்டு என்று அவனுக்குத் தெரியும். அவரிடம் போய்ச் சொன்னால், நிச்சயம் சிக்கல் அறுந்துவிடும்; தட்டிக் கழிப்பதன் மர்மம் விளங்கிவிடும் என்ற நம்பிக்கை எழுந்தது.

அன்றே வாத்தியார் பழங்குடி நாராயணஸ்வாமி வீட்டிற்கு விசு சென்றான். சென்றபோது பூஜையை முடித்துவிட்டுச் சிவப்பழமாக அவர் வெளியே வந்தார். விசுவைக் கண்டதும் சந்தோஷத்துடன் குசலம் விசாரித்தார். ஆனால், விசு ரத்தினச் சுருக்கமாகப் பதிலளித்தான்.

'என்ன, கச்சேரிகளெல்லாம் நன்றாக நடந்துகொண்டிருக்கின்றனவா?' என்றார் நாராயணஸ்வாமி.

விசு உடனே பதில் சொல்லவில்லை.

பதில் வராதது நாராயணஸ்வாமிக்கு மிக ஆச்சரியமாயிருந்தது. இன்னொரு முறையும் அதே கேள்வியைக் கேட்டார். விசு ஒருவாறு சமாளித்துக்கொண்டு தன் வேதனையைச் சொல்ல ஆரம்பித்தான்.

'இரண்டு மாதத்திற்கு முன்பு தாங்கள் அனுப்பியவர்கள் வீட்டுக் கல்யாணக் கச்சேரிதான் கடைசி கச்சேரி.'

'என்ன? அதற்குப் பிறகு?'

'அப்புறந்தான் அவளுக்கு சைத்தான் பிடித்துவிட்டதே! அந்த வேதனையைத் தான் சொல்ல வந்தேன்.'

'ஆ! சைத்தானா? சைத்தான் என்றால்?'

'அந்தக் கல்யாணக் கச்சேரி ரொம்ப அமைப்பாக இருந்தது. அதில் அவளுக்குப் பிரமாத



பி. ராஜலட்சுமி

பேர். நான்கூட ரொம்பப் பெருமைப் பட்டேன். என் திருஷ்டியோ, என்னவோ? அதற்குப் பிறகு வந்த மூன்று கச்சேரிகளையும் என்னென்னவோ சால்ஜாப்பு சொல்லி, சரசா தட்டிவிட்டாள். என்னவென்று கேட்டாலும் அழுகிறாளே தவிர, பதில் சொல்வதில்லை. அவள் போக்கே புரியவில்லை. நாம்தான் ஏதாவது, கச்சேரிக்குப் போவதைப் பற்றி வாய் தவறிச் சொல்லியிருப்போமா,—என்றெல்லாம் குழம்பி எவ்வளவு ஞாபகப்படுத்திக் கொண்டாலும் அப்படி ஒன்றும் தெரியவில்லை. தூரபந்துக்கள் ஏதாவது பேசியிருப்பார்களா என்பதற்கு, அவர்கள் நான் இருக்கும் திக்கிற்குக்கூட வரவில்லை. ஒன்றும் புரியாமல் தாமரை இலைத் தண்ணீரைப் போல் தத்தளித்துக்கொண்டிருக்கிறேன். உங்களிடம் சொல்ல என்ன வெட்கம்? இப்பொழுது வீட்டில் எனக்கும் அவளுக்கும் பேச்சுவார்த்தைகூடக் கிடையாது' என்று நிறுத்தினான்.

இதைக் கேட்டதும் நாராயணஸ்வாமிக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'விஷயத்தை ஆரம்பத்திலேயே வந்து சொல்லியிருக்கக் கூடாதா? சாதாரண விஷயத்தை இப்படி முற்ற வைத்துவிட்டீர்களே! போகட்டும். திடீரென்று அந்தக் குழந்தைக்கு ஏன் இப்படிப் புத்தி போயிற்றென்று புரியவில்லையே? புத்திசாலிதான்; காரணம் இல்லாமல் சண்டியாக மாட்டாளே! எல்லாவற்றிற்கும் நீ போ. நாளை வீட்டுக்கு வருகிறேன்.' என்று பாதி விசுவுக்கும், பாதி தனக்குமாக வாத்தியார் சொல்லிக்கொண்டார்.

'நான் வந்ததாக அவளிடத்தில் காட்டிக்கொள்ள வேண்டாம்' என்று எச்சரிக்கை செய்துவிட்டு, விசு புறப்பட்டுவிட்டான்.

மறுநாள் காலை பழங்குடி நாராயணஸ்வாமி சரசா வீட்டிற்கு வந்தார். வாத்தியாரைப் பார்த்ததும் சரசா சந்தோஷ பாவனையுடன் நமஸ்காரம் செய்தாள். ஆனால், மனதில்மட்டும் விஷயம் ஒருக்கால் அவருக்கு எட்டியிருக்குமோ என்ற சந்தேகம் தலை காட்டிற்று. சஞ்சலத்தை மறைப்பதற்காகக் காபி கொண்டுவரும் சாக்கில் உள்ளே போனாள். அந்த சமயம் பார்த்து வாத்தியாருக்கு வணக்கம் செலுத்திவிட்டு, விசு வெளியே கொஞ்சம் வேலையிருப்பதாகச் சொல்லிச் சென்றுவிட்டான். உள்ளே சென்ற சரசா, திரும்பி வந்து காபியை வாத்தியார் முன்பு வைத்தாள்.

'உனக்கு உடம்பு சரியாயில்லையென்று கேள்விப்பட்டேன்' என்று துவங்கினார்.

'உடம்பு ஒன்றுமில்லை. மனதுதான் சரியாக இல்லை'

'திடீரென்று மனதிற்கு என்ன வரும்?'

'மனதிற்கும் ஒன்றுமில்லை' என்று இழுத்தாள்.

'சமீபத்தில் கச்சேரி ஏதாவது உண்டா?'

'சமீபத்தில் நான் கச்சேரிக்குப் போகவேயில்லை.'

'போகவில்லையா? ஏன்? ஏன் போகவில்லை?' 'உடம்புக்கும் ஒன்றுமில்லை, மனத்திற்கும் ஒன்றுமில்லை என்றாய். பின்னே உன் மாமனாரோ, விசுவோ ஏதேனும் ஆட்சேபம் செய்கிறார்களா?'

'அதெல்லாம் இல்லை.'

'பின்?'

'அவரைக் கல்யாணம் செய்து கொள்ளாமலிருந்தால் ஒரு சங்கடமும் ஏற்பட்டிருக்காது' என்று அவளையும் மீறி வார்த்தைகள் வந்துவிட்டன.

வாத்தியாருக்கு இதைக் கேட்டதும் பிரமை தட்டிற்று. சரசாவின் பேச்சை நம்ப முடியவில்லை.

'நீதானா பேசுகிறது? ஏம்மா சரசா, நீதானா பேசுகிறாய்? உன்னைப் பாப்பாங்குடி கிருஷ்ணமூர்த்தி அழைத்து வந்தான். இந்தக் குழந்தை அனாதை; நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும். சாரீரம் கூட நன்றாக இருக்கிறது என்று சொன்னது இப்பொழுதுபோல் தோன்றுகிறது. எதோ தோன்றிற்று. சரி என்று விட்டேன். நீயும் நன்றாகவே பாட ஆரம்பித்தாய். அந்தச் சமயத்தில் இந்த விசு மிருதங்கத்துடன் என்னிடம் வர ஆரம்பித்தான். ஞாபகம் இருக்கிறதா?'

'ஆமாம்.'

'நானும் அடிக்கடி உனக்கு விசுவை வாசிக்கச் சொன்னேன். என் மனதுக்குப் பொருத்தமாகப் பட்டது. நானும், என் மனைவியும் உங்களைச் சேர்த்து விடுவதென்று எண்ணினோம். என் மனைவி உன்னை அழைத்துப் பார்த்தபொழுது, நீ தடங்கல் சொல்லவில்லை. சந்தோஷமாகவே சம்மதப்பட்டாய். கல்யாணத்தையும் செய்து வைத்தோம். கல்யாணம் ஆன புதிதில் எல்லாம் சரியாகத்தானே இருந்தது? ஆனால், இப்பொழுது வந்து கல்யாணம் செய்ததினால் வந்த வம்பு என்றால்? ஒளிக்காமல் சொல்லேன்.'

'இப்பவும் அவரைக் கல்யாணம் செய்துகொண்டதினால் எனக்கு எந்தவிதமான குறைவும் கிடையாது. அவருடன் கச்சேரி செய்வதிலிருந்துதான் இந்தச் சிக்கல்.'

'என்ன, அவனுடன் கச்சேரி செய்வதிலிருந்து சிக்கலா? அவன் வாசிப்பில் அப்படி என்ன குறை கண்டாய்?' என்றார் வாத்தியார் கொஞ்சம் கடுமையாக.

'எவ்விதக் குற்றமும் நான் காணவில்லை. ஆனால், பொது ஜனங்கள் அவ்வாறில்லையே என்றுதான் வருந்துகிறேன்.'

'பொது ஜனங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லுவார்கள். விசுவின் நாதம் பிரமாதம் என்று சொல்ல முடியாவிட்டாலும், அவன் உன் பாட்டை எவ்வளவு சோபிதப்படுத்துகிறான் என்று என் போன்றவர்களுக்குத்தானே தெரியும்! பொதுஜனங்கள் எதைச் சொன்னால் என்ன?'

நெஞ்சை அடைக்கும் குரலில் சரசா ஆரம்பித்தாள். 'அவரைக் கலியாணம் செய்துகொண்ட பிறகு கச்சேரியில் மாலை போடும்போது ஒவ்வொரு தாமும் முன்கூட்டியே மாலையை நான் வாங்கி வைத்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டேன். அவருக்கு முன்னால் மாலை போட்டுக்கொள்ள எனக்குப் பிடிக்கவில்லை.'

'பேஷ்! பேஷ்! அப்புறம்'.

'இந்தச் சங்கடத்தோடு போயிருந்தால் பரவாயில்லை. ஒவ்வொரு சமயத்தில் மிருதங்கம் வாசிப்பதைப் பற்றிச் சி... குறை கூறியது என் காதில் பட்டும் படாததுமாக விழுந்தபோது, அளவிட முடியாத வேதனையாய் இருந்தது'.

'எல்லோருக்கும் ஒரே ருசியாக இருக்க முடியுமா?'

'அப்பொழுது முளைத்த மனவேதனை வளர்ந்துகொண்டே வந்தது.'

'அசடு! அப்புறம்.'

'அப்புறம் நீங்கள் அனுப்பியவர்கள் வீட்டுக் கச்சேரியில் ஒன்று நிகழ்ந்தது. அதற்குப் பிறகுதான் முடிவு செய்தேன்.'

'அவர்கள் ஏதாவது....?'

'இல்லை; இல்லை. கச்சேரி முடிந்து ஊருக்குக் கிளம்பக் காரில் ஏறி உட்கார்ந்தேன். என் காதில் விழட்டுமே என்றுதானோ என்னவோ ஒரு கூட்டம் பேசிக்கொண்டே சென்றது. 'அந்தம்மா பாடுவதற்கு மிருதங்கம் போதாது. இந்த லட்சணத்தில் இவரைப் போய்க் கல்யாணம் வேறு செய்துகொண்டு விட்டாளாம். அந்தம்மா கணவனாக இருப்பதைப்பற்றி நமக்கு ஒன்றுமில்லை செட்டுக்குப் பொருந்தவில்லை' என்றான் ஒருவன். 'உடனடியாக அந்தம்மா மிருதங்கத்தை மாற்றிவிட்டால் அந்தம்மாவிற்கே நல்லதல்ல' என்றான் மற்றொருவன். 'அவர் வேறொன்றும் செய்ய வேண்டாம். கச்சேரியில் வாசிப்பதை நிறுத்திக் கொண்டால், நாம் இத்தனைப் பேரும் ஆளுக்கு இவ்வளவு காசு என்று போட்டு, நூற்றெட்டு தேங்காய் வாங்கி உடைக்கலாம் டோய்!' என்று ஒரு விஷமி கிண்டல் செய்தான். இதை எல்லாம் என் காதில் கேட்கவே முடியவில்லை.'

'அதனால் உனக்கென்ன? கோல் பிடித்தவனெல்லாம் ராஜாவா?'

'பேசியவர்களையெல்லாம் மென்னியைப் பிடித்து, பேய் பிடித்தவள் மாதிரி உலுக்கவேண்டுமென்று தோன்றிற்று. மௌனமாக வண்டியில் ஊருக்குத் திரும்பும் வரையில் உட்கார்ந்திருந்தேன்.'

'அதிலிருந்து எனக்கு மனச் சமாதானமே இல்லை. நான் பாடுவது, என் கணவர் மிருதங்கம் வாசிப்பது என்பதனால் வந்த வம்புதானே என்று தோன்றிற்று! அவருக்கு அவமரியாதையைச் சம்பாதித்துக் கொடுப்பதற்காகவா நான் பாட வேண்டும்? இது எனக்குப் பெருமையா? இப்படித் தோன்றிய பிறகு, ஒரே முடிவுதான் தோன்றிற்று. அதன்படிச் செய்துவிட்டேன்.'

'நீ சொல்வது ஓரளவு சரிதான். யாரோ சொல்லிக்கொண்டு போனால், அதை இவ்வளவு பெரிதாக்கலாமா? போகட்டும். விஷயம் இப்படி என்று அவனிடம் சொல்லியிருக்கக் கூடாதா?'

'இதைச் சொல்லி அவரை நோக வைக்கப்படாது என்று தோன்றிற்று.'

'நீ சுத்த அசடு. சின்னப் பெண்தானே! நான் சொல்வதைக் கேள்'

வாத்தியார் சொல்லி முடிப்பதற்குள் வெளியே சென்றிருந்த விசு திரும்பி வந்துவிட்டான். வந்ததும், வாராததுமாக வாத்தியார் விசுவிடம் பேசத் தொடங்கிவிட்டார். உடனே எழுந்து போய்விட வேண்டும் என்று சரசாவிற்குத் தோன்றிற்று. ஆனால், கால்கள் செல்ல மறுத்தன.

சரசா புலம்பிக் கொட்டின அவ்வளவு விஷயத்தையும் வாத்தியார் சரசாவின் முன்னிலையிலேயே, சிரித்துக்கொண்டே விசுவிடம் தெரிவித்தார். 'இப்பொழுது புரிந்ததா?' என்று முத்தாய்ப்பு வைத்தார்.

'அவ சுத்த அசடு என்றுதான் என் அபிப்பிராயம். பாடத் தெரிந்தால்மட்டும் போதுமா? இந்த எழவை என்னிடம் சொல்லித் தொலைத்திருந்தால் என்ன? எனக்கே கொஞ்ச நாளாக இந்த மாதிரி ஒரு நினைப்பு வந்துகொண்டிருந்தது. இப்பொழுதுகூட இது விஷயமாகத்தான் போயிருந்தேன். வீணை சொல்லி அனுப்பியிருந்தாள். எப்பொழுதும் அவள் கச்சேரிக்கு மிருதங்கம் வாசிக்க வேண்டும் என்று வெகுநாளாக வற்புறுத்திக்கொண்டிருந்தாள். நான் தட்டிக் கழித்துக் கொண்டிருந்தேன்.'

'பழம் நழுவிப் பாலில் விழுந்துவிட்டது, என்கிறாயா?' என்றார் வாத்தியார்.

'இனிமேல் அவளிடம் சொல்லிவிடலாம். என்ன இருந்தாலும் இவள் அசடுதான். இது ஒரு தொழில் என்ற சின்ன விஷயம் இவளுக்குத் தெரியவில்லையே' என்று விசு சிரித்தான்.

மோடம் கலைந்துவிட்டது என்று வாத்தியார் சிரித்துக்கொண்டே வெற்றிலைத் தட்டைப் பக்கத்தில் இழுத்து வைத்துக்கொண்டார். ஒரு வாரம் கழித்து வந்த பத்திரிகையில் சரசாவின் கச்சேரியைப் பற்றிய விளம்பரத்தில் ஒரு புதுமை தென்பட்டது. மிருதங்கம் 'கிட்டு' என்று போடப்பட்டிருந்தது.

★

ஜான்ஸ்டன்! என்னும் வழக்கறிஞர் சென்னையில் ஒரு செஷன்ஸ் வழக்கை நடத்திக்கொண்டிருந்தார். சட்ட நுட்பங்களைப்பற்றி ஜூரியாக இருந்தவர்களுக்கு விளக்கிக் கொண்டிருந்தார். நீதிபதிக்கு அவர் கூறும் விளக்கம் சரியல்ல என்று தோன்றியது.

'நீங்கள் சட்டத்தைத் தவறாகக் கூறுகிறீர்கள்' என்றார் நீதிபதி.

'சரி; அதைத் தாங்களே செய்யுங்கள்' என்றார் வழக்கறிஞர்.

தப்பான சட்டத்தை நீதிபதியே கூற வேண்டும் என்று பொருள் தோன்றியதால் கோர்ட்டிலுள்ள வக்கீல்கள் சிரித்தனர். ஜான்ஸ்டனுக்கு அப்பொழுதுதான் தான் கூறியதன் விபரீத அர்த்தம் விளங்கியது. தன் தவறுக்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

ஃ ஃ ஃ

அயர்லாந்தில் பிரசித்திபெற்ற கர்ரான் என்ற வழக்கறிஞர் ஒரு வழக்கை நடத்திக்கொண்டிருந்தார். ஜூரிகளைப் பார்த்து அவர் தமது வாதங்களை எடுத்துரைக்கையில், நீதிபதி அடிக்கடி தன் தலையை இடது பக்கமும் வலது பக்கமுமாக ஆட்டிக்கொண்டிருந்தார். இது அவர் பழக்கம். இதை அறியாமல், தன் வாதம் சரியல்ல என்று நீதிபதி குறிப்பதாக ஜூரிகள் எண்ணுதிருக்க வேண்டுமே என்று நினைத்து 'நீதிபதி தலையை ஆட்டுவதை நீங்கள் பொருட்படுத்த வேண்டாம். அதில் ஒன்றும் இல்லை' என்றார் வக்கீல்!

ஃ ஃ ஃ

நீதிபதிக்கும் வக்கீலுக்கும் பல தடவை வாக்குவாதம் நடந்தது. நீதிபதி நல்ல பொறுமைசாலி; நல்ல குணம் படைத்தவர். கோபமுறும் வக்கீலை சாந்தப்படுத்தப் பல தடவை முயன்றார்; பயனில்லை. சலிப்புடன் 'சமாதானம் ஏற்பட நான் என்னால் ஆனஅளவு முயன்றாய் விட்டது. ஆனால், முடிவு 'கிழவனும் கழுதையும்' என்ற பழங்கதையைத்தான் நினைவூட்டுகிறது' என்றார்.

வக்கீலின் முகத்தில் தீப்பொறி பறந்தது. படபடப்போடு 'அதில் என்னை யாருக்கு உவமையாக்குகிறீர்கள்?' என்று நீதிபதியைப் பார்த்துக் கேட்டார்.

'குறிப்பாக எதுவுமில்லை' என்று கூறிவிட்டு, 'ஆனால் நம்முடைய இருவருடைய



வயதையும் பார்க்கும்போது நான்தான் கிழவன் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள்' என்றார் நீதிபதி நிதானமாக.

இங்கிலாந்தில் ஒரு கோர்ட்டில் வழக்கொன்று நடந்துகொண்டிருந்தது. கோர்ட்டினுள் உட்கார்ந்துகொண்டு செய்திப் பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தார் ஒரு வக்கீல். கோர்ட்டினுள் இவ்வாறு செய்வதைப் பலமாகக் கண்டிக்க எண்ணினார் நீதிபதி.

'கோர்ட்டிற்குள் உட்கார்ந்து பத்திரிகை படிப்பது கோர்ட்டை அவமதிப்பதாகும், தங்கள் பேரில் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது?' என்று பொருமினார் நீதிபதி.



'அடுத்த வழக்கில் நான் ஆஜராகிறேன். இன்று காலையில் வந்த 'டைம்ஸ்' பத்திரிகையில் ஒரு வழக்கைப்பற்றிய தீர்ப்பு பிரசுரமாகியிருக்கிறது. அது என் வழக்கிற்கும் உபயோகப்படும். அந்த வழக்கைப்பற்றிய விவரம் வேறு எந்த சட்டப் பத்திரிகையிலும் இன்னும் வரவில்லை. அதனால்தான் இந்தப் பத்திரிகையைப் படித்துக்கொண்டிருக்கிறேன்' என்றார் வழக்கறிஞர் நிதானமாக.

நீதிபதி என்ன பதில் கூறுவார் பாவம்! எக்கச்சக்கமாகப் போய் அகப்பட்டுக்கொண்டோமே என்ற எண்ணம் தோன்ற முகத்தில் அசடு வழிந்தது.

—வழக்கறிஞர்.

கலா மண்டபம்

வாழ்க ஷீலா-சந்திரபாபு!

★

சென்ற வாரம் தென்னிந்திய பட வட்டாரத்தில் நடந்த பெரிய நிகழ்ச்சிகள் இரண்டில், ஹாஸ்ய நடிகர் சந்திரபாபுவின் திருமணம் ஒன்று. மற்றொன்று படத் தொழில் பிரமுகர்களுடன் இந்திய பாதுகாப்பு மந்திரி ஸ்ரீ கிருஷ்ண மேனன் விருந்துண்டு, படத் தொழில் நிலைமை பற்றி அளவளாவியது.

சந்திரபாபுவைப் பற்றி பட வட்டாரங்களில் இரண்டு விதமான அபிப்பிராயம் நிலவுகிறது. அவர் ஒரு சிறந்த மேதை என்பது ஒரு பகுதியினருடைய அபிப்பிராயம். மற்றொரு பகுதியினர், 'சந்திரபாபுவா! அடே அது ஒரு பைத்தியமல்லவா?' என்பார்கள். ஆனால், ஹாஸ்ய நடிகர் சந்திரபாபு இந்த இரண்டு கருத்துக்களையுமே மெய்யாக்கி வருகிறார். பைத்தியம் என்று அவரை நினைப்பவர்கள் முன் பைத்தியம் மாதிரியே நடித்துக் காரியத்தைச் சாதித்துவிடுவார். மேதை என்று அவரை நினைப்பவர்களிடம் வாஸ்தவத்திலேயே தன் மேதா விலாசத்தைக் காட்டத் தயங்குவதில்லை.

சந்திர பாபு தமிழ்நாட்டுக்குக் கிடைத்த ஒருஒப்பற்ற கலைஞன். சிறந்த ஹாஸ்ய மேதை என்பதில் சந்தேகமே இல்லை. மேதைகளின் வாழ்க்கையை ஆராய்ந்தவர்களுக்கு அவர்களுடைய செயல்கள் சில சமயம் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றலாம். ஆனால், அதுவே பிறகு மனித வர்க்கத்திற்குப் பெரும் நன்மையாக முடிந்து விடுவதுமுண்டு.

தமிழ் நடிகர்களிலே பொறுக்கி எடுக்கக்கூடிய ஐந்தாறு நடிகர்களுக்குள் ஒருவராக சந்திரபாபுவையும் கொள்ளலாம். தேசபக்தி நிறைந்த கண்யமான குடும்பத்தில் பிறந்தவர் சந்திரபாபு. தந்தை ஸ்ரீரோட்ரிக்ஸ் சிறந்த தேசபக்தர்; மாஜி எம். எல். ஏ. சந்திரபாபு போதுமான அளவு ஆங்கிலக் கல்வி பயின்றவர். வாழ்க்கையின் அனுபவங்களைக் கலைக் கண்கொண்டு பார்ப்பவர். ஆங்கிலத்தில் 'அப்ஸர்வேஷன்' (ஊடுருவிப் பார்த்தல்) என்று சொல்லுகிறார்களே இது அவரிடம் நிறைய இருக்கிறது. ஆகவே, இன்றைய சமூக வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சங்களையும் அவர் ஹாஸ்யக் கண்கொண்டு பார்த்து, அதற்குக் கலை மெருகு கொடுத்துத் திரைக்கு அனுப்பும்போது நம்மையறியாது உண்மையான ஹாஸ்யத்தை – வாழ்க்கையின் கேலிக்கூத்தை – கண்டு சிரித்து அனுபவிக்கிறோம்.

கற்பனா சக்தியுடன் நடிப்புத் திறமையும் உள்ள சந்திரபாபு, இலக்கியம், சங்கீதம் இரண்டிலும் போதுமான ஞானம் படைத்தவர். அவருடன் நெருங்கிப் பழகியவர்களுக்கே இது விளங்கும். ஆங்கில சங்கீதத்தை அவரைப் போல் இன்றுள்ள சங்கீத டைரக்டர்கள்கூடக் கையாள முடியாது. இதில் அலாதியான ஒரு பயிற்சியை அவர் பெற்று, அந்த சங்கீத ரசனையை நன்கு வளர்த்துள்ளார்.

படக் கதைகளைப் பற்றி அவரிடம் பேச்சுக் கொடுத்தால் போதும்; அப்போது அவருக்குள்ள இலக்கியப் பரிசயம் விளங்கும். இலக்கியப் பயிற்சியே, பாத்திரங்களை எவ்வாறு உருவாக்க வேண்டும் என்பதற்கு அவருக்கு அஸ்திவாரமாக அமைந்துள்ளன என்று கூறலாம். தனக்கு சந்தர்ப்பமே இல்லாத ஒரு பாத்திரத்தை அவருக்கு அளித்தாலும், அதில் தனக்கென்று ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொண்டு, நாம் மறக்க முடியாவண்ணம் நடித்து விட்டுப் போய்விடுவார்.

ஸ்டுடியோவிலே படப் பிடிப்பு நடக்கும்போது அவருடன் பழகும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்திருக்கிறது. சந்திரபாபு திரையில் தோன்றி மக்களை மட்டும் சிரிக்க வைக்கிறார் என்று நினைக்காதீர்கள். ஸ்டுடியோவில் படப் பிடிப்பின் போது அவர் நடிக்க வந்தால் அங்குள்ள எல்லோரையுமே சிரிக்க வைத்துக்கொண்டிருப்பார். நிமிஷத்திற்குள் புதிய புதிய ஹாஸ்யக் கருத்துக்களைக் கொட்டுவார். ஒளிப் பதிவாளரிடம் சென்று கணத்திற்குள் அவரைச் சிரிக்க வைத்துவிட்டு, நல்ல பிள்ளைபோல் தன் இடத்தில் வந்து நின்று, 'ஸார், நான் ஃபோக்கஸில் இருக்கிறேனா பாருங்கள்!' என்பார். அவர் ஸெட்டுக்குள் வந்துவிட்டாரானால் பொழுது போவதே தெரியாது.

படம் பிடிக்கும் இடத்திற்கு வரும் அதிதிகளிடம் தன் திறமையைக் காட்டித் தமிழ் நாட்டின் கலைஞர்கள் சாமான்யப்பட்டவர்கள் அல்ல என்ற முத்திரையைப் பதிய வைப்பதில் சமர்த்தர்.

ஒரு சமயம் ரஷ்யாவிலிருந்து வந்த ஒரு நண்பருடன் சந்திரபாபுவைச் சந்திக்கச் சென்றேன். சந்திரபாபு நடித்த தமிழ்ப் படமொன்றின் சில காட்சிகளை அவர் பார்த்தார். ஆகவே, இந்த ஹாஸ்ய நடிகரை நேரில் சந்திக்க வேண்டும் என்றார். சந்திரபாபுவிடம் இதைக் கூறிய நேரம், அவர் மிக மகிழ்ச்சியுடன் மறு நாள் தன் மோட்டாரை அனுப்புவதாகவும், நண்பரை அழைத்துக்கொண்டு வாஹினி ஸ்டுடியோவுக்கு வருமாறும் கூறினார்.

மறு நாள் சந்திரபாபுவின் மோட்டார் குறித்த நேரத்திற்கு வந்தது. ரஷ்ய நண்பரும் நானும் வாஹினி ஸ்டுடியோவுக்குச் சென்றோம். சந்திரபாபு அன்று ஆர். ஆர். பிக்சர்ஸ் 'காத்தவராயன்' படத்தில் குடுகுடுப்பைக்காரனாக நடித்துக்கொண்டிருந்தார். அவருடன் பாலையா, எம். என். ராஜம், தங்கவேலு மற்றும் பலர் நடித்தனர். அன்று சுமார் பதினைந்து நிமிஷங்களில் அவர் அந்த ரஷ்யரின் மனத்தைக் கவர்ந்து, தமிழ் நாட்டில் எப்படிப்பட்ட மணியான நடிகர்கள் இருக்கிறார்கள். சந்தர்ப்பம் கிடைத்தால் உலக மேடையில் எங்கள் திறமையைக் காட்ட முடியும் என்பதை வெகு அழகாக கருத்துச் செறிவுடன் ஹாஸ்யமாகவே பேசி அவர் மனதில் பதிய வைத்தார். அந்த ரஷ்ய நண்பர் ஊருக்குப் போகும் வரை சந்திரபாபுவின் ஹாஸ்யப் பேச்சைப் பற்றிக் குறிப்பிட்டுக்கொண்டே இருந்தார்.

சந்திரபாபு தனக்குக் கல்யாணம் என்று பத்திரிகை அனுப்பியதே மிகப் புதுமையாக இருந்தது. பனை ஓலைச் சுவடியைப்போல் ஆர்ட் காகிதத்தில் மிக அழகாக அச்சடித்து அனுப்பியிருந்தார். சிறந்த கலைப் பொருள் போல் உள்ள அதை நான் எடுத்து வைத்துள்ளேன். இப்படிப்பட்ட சிறந்த கலைப் பண்பு நிறைந்த கல்யாணப் பத்திரிகையை அனுப்புவதிலும் அவர் தனக்கே இயல்பான ஹாஸ்யத்தைப் புகுத்தாமல் இல்லை. நெருங்கிய நண்பர்களாக இருந்தவர்களில் சிலருக்கும், பத்திரிகையாளரில் சிலருக்கும் தன்கைப்படவே விலாசம் எழுதி, அதில் குறைவான கட்டண ஸ்டாம்பை ஒட்டி அனுப்பிவிட்டார். தபால்காரன் எங்கள் ஒவ்வொருவரிடமும் ஐந்தணா வசூலித்துவிட்டான்.

சந்திரபாபுவிடம் கேட்டால், 'பத்திரிகை உங்கள் கையில் கிடைக்க இதுதான் சரியான வழி' என்று தன்னுடைய வழக்கமான ஹாஸ்யத்துடன் கூறிவிட்டார். அவர் ஹாஸ்ய நடிகர்; எதையும் வேடிக்கையாகச் செய்ய உரிமை உண்டு.

நண்பர் சந்திரபாபு தன் வாழ்க்கைத் துணைவியைத் தானே தேர்ந்தெடுத்து, மணம் செய்து கொண்டிருக்கிறார். சௌபாக்கியவதி ஷீலா, படித்த பண்புள்ள பெண். சந்திரபாபுவின் வாழ்க்கைக்கே ஒரு விளக்கைப்போல் இருப்பார் என்பதே எல்லோரும் அன்று வழங்கிய ஆசீர்வாதம். காலை மயிலாப்பூர் மாதா கோயிலில் திருமணமும், மாலை மந்திரி ஸ்ரீமதி லூர்தம்மாள் சைமன் வீட்டில் வரவேற்பு வைபவமும் நடந்தன. பட உலகமே திரண்டு அங்கு வந்திருந்தது. பட உலகப் பிரமுகர்கள், டைரக்டர்கள், நடிகர்கள், பத்திரிகாசிரியர்கள் யாவருமே அங்கு நின்று வந்தவர்களை வரவேற்றனர். யாரை யார் வரவேற்பதென்பதே புரியவில்லை. எல்லோருமே வரவேற்பாளராகவும், விருந்தினராகவும் மாறியதிலிருந்தே கலைஞர்கள் சந்திரபாபுவிடம் எவ்வளவு அன்பும் மதிப்பும் வைத்துள்ளார்கள் என்பது விளங்குகிறது.

சந்திரபாபு ஹாஸ்ய மேதை என்று ஏற்கெனவே குறிப்பிட்டேன். மேதைகள் சில சமயம் தங்கள் நிலையை மறந்து கற்பனை உலகில் சஞ்சரிப்பார்கள். அப்போது அவர்களுக்கு தங்கள் கடமை என்னவென்பதே ஞாபகத்திற்கு வராது. அவர்களிடம் இதை ஞாபகப்படுத்தவும் பிறர் பயப்படுவார்கள். ஆனால், குமாரி ஷீலா இந்தப் பொறுப்பைத் திறம்படச் செய்து, இந்த ஹாஸ்ய மேதைக்கு உறு துணையாக நின்று சகல சௌபாக்கியங்களுடன் வாழ வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து, ஹாஸ்ய தம்பதிக்கு வாசகர்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் வாழ்த்துக் கூறுகிறேன்.

ஜுபிடர் தங்கப் பதுமையில் பத்மினி.

பிரபல ஹாஸ்ய நடிகரான சந்திரபாபு 29-ந்தேதி வியாழக்கிழமை ஷீலாவை தமது சகதர்மிணியாக்கிக் கொண்டார். சாந்தோம் மாதா கோவிலில் கிறிஸ்தவ முறைப்படித் திருமணம் நடைபெற்றது மாலையில் மந்திரி ஸ்ரீமதி லூர்தம்மாள் இல்லத்தில் நடந்த வரவேற்பு வைபவத்தின்போது பிரபல நடிகர், நடிகைகளும், பிரமுகர்களும் விஜயம் செய்து, மணமக்களை வாழ்த்தினர் ஏராளமான பரிசுப் பொருள்களும் குவிந்தன. சாயி சுப்புலட்சுமியின் நடனக் கச்சேரியும் நடைபெற்றது.

சபாஷ் மீனா

பத்மினி பிக்சர்ஸ் தயாரிக்கும் இப்படத்திற்காக பரணியில் சமீபத்தில் சில காட்சிகள் படமாக்கப்பட்டன. இந்தக் காட்சியில் ஹாஸ்ய நடிகர் சந்திரபாபு ஒரு ரிக்ஷாக்காரனாக நடித்தார். கதாநாயகி சரோஜாதேவி புரட்சிவாதியாக நடித்தார். சந்திரபாபு தனக்குப் பசிக்கிறதென்று காசு கேட்டதற்கு, அந்தப் புரட்சிவாதி கூறிய பதிலைக் கேட்டு, மதராஸ் ரிக்ஷா பாஷையில் பேசிய காட்சி அன்று படமாக்கப்பட்டது. சந்திரபாபுவின் ரிக்ஷாக்காரன் நடிப்பு அபாரமாக இருந்தது. இப்படத்தில் சிவாஜி கணேசன், மாலினி, ரங்கராவ், ராஜகோபால், டி. பாலசுப்பிரமணியம் ஆகியோர் நடிக்கின்றனர். ப. நீலகண்டன் வசனங்களை எழுதியுள்ளார். பி. ஆர். பந்துலு டைரக்ட் செய்கிறார்.

குறவஞ்சி

மேகலா பிக்சர்ஸார் தயாரித்துவரும் 'குறவஞ்சி' என்ற படத்திற்கான ரசமான காட்சிகள் சிலவற்றை சமீபத்தில் பாரமவுண்ட் ஸ்டுடியோவில் டைரக்டர் காசிலிங்கம் படமாக்கினார். அன்று வகாப் காஷ்மீரியும், ஜெமினி வனஜாவும் மற்றும் பல பெண்களும் நடிக்கும் நடனக் காட்சி ஒன்று படமாக்கப்பட்டது. மு. கருணாநிதி இப்படத்தின் கதை வசனத்தை எழுதியுள்ளார். எஸ். எஸ். ராஜேந்திரன், மைனாவதி, ராஜசுலோசனா, ஓ. ஏ. கே. தேவர் மற்றும் பிரபல நடிக நடிகையர் பலர் இப்படத்தில் நடிக்கின்றனர்.

அசோகா பிக்சர்ஸாரின் அடுத்த தயாரிப்புகள்

அசோகா பிக்சர்ஸார் அடுத்தபடியாக மூன்று படங்களைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளனர். இவைகளில் 'ரத்னமாலா' என்ற படத்தை எல்லிஸ். ஆர். டங்கன் டைரக்ட் செய்யப் போகிறார். இதன் கதை வசனத்தை கயிலை ராஜன் என்பார் எழுதியுள்ளார். ஆரண்ய காட்சிகளும், மிருகங்களும் நிறைந்த படமாக இது இருக்கும்.

மற்றொரு படம் 'பெண் குலத்தின் விளக்கு'. இது ஏற்கெனவே வெளிவந்த தெலுங்குப் படம் ஒன்றின் கதையாகும். அந்தத் தெலுங்குப் படத்தை டைரக்ட் செய்த விட்டலாச்சாரியார் என்பவர் இதை டைரக்ட் செய்வார். இப்படத்தின் வேலைகள்தான் முதலில் ஆரம்பமாகின்றன. இதற்கு முகவை ராசமாணிக்கம் வசனம் எழுதுகிறார். நம்பியார், எம். என். ராஜம், கருணாநிதி ஆகியோர் நடிக்கப் போகின்றனர். கதாநாயகன், கதாநாயகி

பாகத்தில் யார் நடிப்பார்கள் என்பது இன்னும் நிச்சயிக்கப்படவில்லை. பிரபல நடிக நடிகையர் நடிக்கக் கூடும்.

மூன்றாவது படம், 'குமார விஜயம்'. இதை ஏராளமான பொருட் செலவில் சிறந்த முறையில் எடுப்பார்கள்.

பக்ஷி ராஜாவின் அடுத்த படம்

'மலைக் கள்ளன்' என்ற படத்தைப் பல பாஷைகளில் தயாரித்து வெற்றி கண்ட பக்ஷிராஜா ஸ்டூடியோ அதிபர் ஸ்ரீராமுலு நாயுடு தன்னுடைய அடுத்த படத்தின் வேலைகளை ஆரம்பித்துவிட்டார். 'கருங் குயில் குன்றத்துக் கொலை' என்ற பிரபலமான துப்பறியும் நாவலை இப்போது முதலில் தமிழில் தயாரிக்கிறார். தமிழில் வெற்றியடைந்ததும் முறையே, தெலுங்கு, ஹிந்தி, கன்னடம், மலையாளம், சிங்களம் இன்னும் இதர பாஷைகளில் தயாரிக்கக் கூடும். தற்போது இப்படத்தில் நடிக்க சிவாஜி கணேசன், எம். கே. ராதா ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். இதர நடிக நடிகையர்களின் விவரம் விரைவில் தெரியும்.

ராஜ நர்த்தகி

அமிர்தா ப்ரொடக்ஷன்ஸார் தயாரித்து வரும் 'ராஜநர்த்தகி' என்ற படத்திற்காக சமீபத்தில் கோல்டன் ஸ்டூடியோவில் சில காட்சிகள் படமாக்கப்பட்டன. இதில் ஒரு ரஸமான ஹாஸ்யக் காட்சி வருகிறது. அங்கமுத்துவின் மகளாக முத்துலட்சுமி நடிக்கிறாள். ராஜ நர்த்தகியின் நாட்டியத்தைக் கண்டு தன் மகளுக்கும் இந்த நாட்டியக் கலையைக் கற்றுக் கொடுத்துவிட வேண்டும் என்று விரும்புகிறாள் தாய் அங்கமுத்து. மகளும் இதற்காக ஒரு வேலை செய்கிறாள். தன் காதலனையே நடன ஆசிரியாக வரவழைத்து விடுகிறாள். இந்த நடன ஆசிரியாக ஹாஸ்ய நடிகர் கருணாநிதி நடிக்கிறார். கருணாநிதி, முத்துலட்சுமி நடிக்கும் காட்சிகளில் ஒன்று படமாக்கப்பட்டது. 'ராஜ நர்த்தகி' படத்தில் கதாநாயகனாக சிவாஜி கணேசனும் கதாநாயகியாக வைஜயந்தியும் நடிக்கின்றனர். மற்றும் வனஜா, அசோகன் முதலியோரும் நடிக்கின்றனர். ஸ்ரீதர் டைரக்ட் செய்கிறார்.

செய்திப் படங்கள் இனி 13 பாஷைகளில் வெளிவரும்

தற்போது இந்திய சர்க்கார் செய்திப் படங்களை தமிழ், தெலுங்கு, ஹிந்தி, வங்காளி ஆகிய நாலு பாஷைகளின் விளக்கத்துடன் வெளியிட்டு வருகிறார்கள். இனி இந்திய சர்க்காரின் செய்திப் படங்கள் இந்தியாவின் முக்கியமான, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒரியா, குஜராத்தி, மராட்டி, ஹிந்தி, வங்காளி, அஸ்ஸாமி, பஞ்சாபி, உருது, ஆங்கிலம் ஆகிய பதின்மூன்று பாஷைகளிலும் வெளி வரும்.

ஜயந்தியின் இரு பாஷைப் படம்

ஜயந்தி ப்ரொடக்ஷன்ஸார் கே. வி. ரெட்டியின் டைரக்ஷனில் தமிழ், தெலுங்கு இரு பாஷைகளிலும் ஒரு சமயப் படத்தைத் தயாரித்து வருகின்றனர். சமீபத்தில் விஜயா ஸ்டூடியோவில் இப் படத்திற்காகச் சில காட்சிகள் படமாக்கப்பட்டன.

இக்காட்சியில் ஜமுனா, நாகேஸ்வர ராவ், முத்துலட்சுமி ஆகியோர் நடித்தனர். இப்படத்தின் தமிழ் வசனம் பாடல்களை தஞ்சை ராமையாதாஸ் எழுதுகிறார். படப் பிடிப்பு வேலைகள் வேகமாக நடந்து வருகின்றன.

நாடோடி மன்னனில் காதல் காட்சிகள்

எம். ஜி. ஆர். நடித்து, டைரக்ட் செய்து தயாரித்து வரும் 'நாடோடி மன்னன்' என்ற படத்தில் கடைசி சில சுருள்கள் வர்ணப் படமாக எடுக்கப்படுவதாக ஏற்கெனவே அறிவித்திருந்தேன். இப்போது மேற்கொண்டு இன்னும் சில விவரங்கள் கிடைத்துள்ளன. அதாவது இதில் வரும் காதல் காட்சியொன்று தண்ணீருக்குள் நிகழ்வதாகப் படம் எடுக்கப்படும். இது ஒரு கனவுக் காட்சி. காதலனும் காதலியும் கனவில் இவ்வாறு தண்ணீருக்குள் உல்லாசமாக பாட்டுப் பாடி காதல் புரிவதாக காட்சிகள் எடுக்கப்படுகின்றன. இதுவும் வர்ணப் படமாகவே எடுக்கப்படுகிறது. நாடோடி மன்னன் இம்மாத இறுதிக்குள் நிச்சயம் திரைக்கு வந்துவிடும். சமீபத்தில் எம். ஜி. ஆர்., எம். என். ராஜம் நடிக்கும் காட்சிகள் சிலவற்றை எம். ஜி. ஆர். கவனமாகப் படமாக்கினார்.



ஜூபிடர் அரசிளங் குமரியில் எம் சரோ ஜாவும் தோழியரும் பூஜைக்குக் கிளம்பு கிறார்கள்.

☆

ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் கீர்த்தனைகள்

சங்கீத கலாநிதி டி.எல்.வேங்கடராமய்யர் உதவியது

ஸ்வரப்படுத்தியவர்: ஸ்ரீ அரியக்குடியின் சிஷ்யரான ஸ்ரீ பி. ராஜம் அய்யர் அவர்கள்

பல்லவி

மஹா லக்ஷ்மீ கருணாரஸ லஹரீ
மாமவ மாதவ மனோஹரீ (மஹா)
4

அநுபல்லவி

மஹா விஷ்ணு வக்ஷஸ்தல வாஸினி
2
மஹாதேவ குருகுஹ விச்வாஸினி
3 3 3
மஹாபாப ப்ரசமனி மனோன்மணி
மாரஜனனி மங்கள ப்ரதாயினி (மஹா)
3 3

சரணம்

க்ஷீரஸாகரஸுதே வேதநுதே
3 3
க்ஷிதிசாதி மஹிதே சிவஸஹிதே
4
பாரதீரதீ சசீபூஜிதே
4
பக்தி யுக்த மானஸ விராஜிதே
4

மத்யம காலம்

வாரிஜாஸன த்யமர வந்திதே
3 4
நாரதாதி முனிப்ருந்த வந்திதே
3 3 3 3 3
நீரஜாஸனஸ்தே ஸுமனஸ்தே
2
ஸாரஸஹஸ்தே ஸதாநமஸ்தே (மஹாலக்ஷ்மீ) (61)

மஹாவிஷ்ணுவின் மார்பில் வஸிப்பவளும், மஹாதேவன், குருகுஹன் இவர்களிடம் விச்வாஸம் கொண்டவளும், மஹா பாபங்களை அகற்றுபவளும், மனதிற்கு ரம்மியமானவளும், மன்மதனுக்குத் தாயும், மங்களங்களைக் கொடுப்பவளும், பாற்கடலாலும், வேதங்களாலும் துதிக்கப்பட்டவளும், அரசர்களால் பூஜிக்கப்பட்டவளும், சிவனுடன் கூடியவளும், கலைமகள், ரதிதேவி, சந்திரன் இவர்களால் பூஜிக்கப்பட்டவளும், நான்முகன் முதலான தேவர்களாலும், நாரதர் முதலான முனிவர்கள் சமூகத்தாலும் நமஸ்கரிக்கப்பட்டவளும், தாமரை மலரில் வீற்றிருப்பவளும், மங்களமான மனதில் வீற்றிருப்பவளும், (புஷ்பத்தில் வீற்றிருப்பவளும்,) தாமரை மலரைக் கையிலேந்தியிருப்பவளும், கருணைக் கடலும், மாதவன் மனதை அபஹரிப்பவளுமாகிய மஹாலக்ஷ்மீ தேவியே! உனக்கு நமஸ்காரம்! என்னைக் காப்பாற்றுவாயாக.

ராகம்: மாதவமனோஹரி. (22-வது மேளத்தில் ஜன்யம்) தாளம்: ஆதி.

I	0	0

பல்லவி

மா பா ; மா ப ம ம ரி கா, ரி க ம	ரி கா ரீ ஸா	ஸ நி கா ரீ கா
ம ஹா . ல . . . . . க்ஷ்மீ க ரு ்	ரு . . ர ஸ	ல . ஹ ரி .
மா ;/நீ தா மா ; ம ப கா ரீ	ா,ரி நீ தா நீ	ஸா ; நி க ரி க
மா ம வ மா . த . . வ	ம . னோ . ஹ	ரி . ஸ்ரீ . . .
		(மஹாலக்ஷ்மீ)

அநுபல்லவி

மா கா ; க ரி ரீ மா க ரி ரீ	மா ; ம க மா	பா ; ப ம நி த
ம ஹா . வி . . ஷ்ணு வ . .	க்ஷ ஸ்த . ல்	வா . ஸி . னி .
த ம கா ; க ரி ரீ கா மா பா	ப நீ நி த தா	/நீ ; ஸ்ா ரீ
ம . ஹா . தே . . . வ கு ரு	கு ஹவி . .	ச்வா ஸி னி

மத்யம காலம்

ஸ்ரீ க்ம் க்ரிஸ் நி த ரி நி ஸ்ா நி த	மா ப த ப ம க ம	க ரீ நி ஸா ரி க
மஹாபா . ப . ப்ர ச மனி மனோன்மணி	மா ர ஜனனி மங்.	கள ப்ரதாயினி
		(மஹாலக்ஷ்மீ)

சரணம்

ரீ : கா ஸா ; கா ரீ ஸா,ரி	ஸ நி தா நீ தா	நீ ஸா ரீ ;
க்ஷீ ர ஸா . க ர நு . .	தே . . வே .	த நு தே .
க க மா,ரி க க ரீ ரி ஸா ரி கா	மா ; பா பா,த	மா,ப கா ரீ ;
க்ஷி . தி . . சா . . தி . மஹி	தே . தி வ . .	ஸ . . ஹிதே .
ஸா,நி க க ரீ,நி க ரி கா ;	மா /நீ : நி த	தா நீ ஸ்ா ரீ
பா . . ர . தி . ர தி .	ச சி பூ .	. ஜிதே .
ரீ க்ா ரீ\தா நீ தா\பா ;	பா ப த பா க ரி	ஸ ரி கா ரீ ஸ்ா ;
ப . க்தி யு . க்த மா .	ன ஸ . வி ரா .	. . . ஜிதே .

மத்யம காலம்

\நீ க ரீ நி க ரி ம க ம பா க மா	மா நி தா நி க்ரி	நீ க்ரீ நி ஸ்ா
வா ரி ஜா . ஸ ஞ த்ய ம ர வந் தி தே	கா ர தா தி முனி	ப்ருந்த வந் தி தே
நீ நி த ம த ப ம க ரி ப ம க ரி ஸா	ஸ்ா நி த நீ ஸ்ா	த பா ம க ரி கா
நீ ர ஜா . ஸன . . ஸ்தே ஸு மன ஸ்தே	ஸா ர ஸ ஹஸ்தே	ஸதா ந ம . ஸ்தே
		(மஹாலக்ஷ்மீ)



சென்ற வாரம் சென்னைக்கு விஜயம் செய்த மத்திய பாதுகாப்பு மந்திரி ஸ்ரீ வி. கே. கிருஷ்ண மேனன் கடற்கரையில் பொதுக்கூட்டமொன்றில் பேசினர்.

மாடர்ன் தியேட்டர்ஸாரின் 'பெற்ற மகனை விற்ற அன்னை'யில் விஜயகுமாரி

Regd. No. 2514.
Registered as a Newspaper in CEYLON.
The Swadesamitran Weekly.

புதுமைப் பொலிவையும் வனப்பையும் உங்களுக்களிப்பது ஹிமாலயா புக்கே

இதமும் குளுமையும் தரும் இந்த ஸ்நோவைத் தடவிக் கொண்டு, அதன் மணங் கமழும் புதுமை இன்பத்தை அனுபவியுங்கள் !

ஹிமாலயா
புக்கே ஸ்நோ

மிருதுவான இந்த வாசனைப் பவுடரைப் பூசிக்கொண்ட பின், பூர்த்தி பெறும் உங்கள் பேரழகைப் பாருங்கள் !

ஹிமாலயா புக்கே
டாய்லெட் பவுடர்

HBS. 14A-X52 TM

லண்டனிலுள்ள இராஸ்மிக் கம்பெனி லிமிடெட் சார்பாக, ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெடினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

Printed and Published by N. Rajagopalan, at the 'Swadesamitran' Press, 'Victory House' Mount Road, Madras. Editor: C. R. Srinivasan, B. A.

சுதேச
மித்திரன்
ஜூன் 15
1958
நயேபைசே
25



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1- JUL 1958
MADRAS

சுதேசமித்திரன் புத்தகசாலை

தலைமை ஆபீஸ்:

விக்டாரி ஹவுஸ், மவுண்ட் ரோடு, சென்னை-2.

அடியிற்கண்ட ரயில்வே ஸ்டேஷன்களில் எமது புத்தகசாலைகள் இருக்கின்றன.

ரயில்வே ஸ்டால்கள்:

1. பெங்களூர் க. மெண்ட்
2. செங்கற்பட்டு ஜங்.
3. கோயமுத்தூர் ஜங்.
4. திண்டுக்கல் ஜங்.
5. ஈரோடு ஜங்.
6. காரைக்குடி ஜங்.
7. கும்பகோணம்
8. மதராஸ் பீச்
9. மதுரை ஜங்
10. மானாமதுரை ஜங்.
11. மாயவரம் ஜங்.
12. ஒலவக்கோடு ஜங்.
13. பொள்ளாச்சி ஜங்.
14. ரெய்ச்சூர்
15. தாம்பரம்
16. தென்காசி ஜங்.
17. திருநெல்வேலி ஜங்.
18. திருப்பதி (கிழக்கு)
19. திருவாரூர் ஜங்.
20. திருச்சி ஜங்.
21. தூத்துக்குடி
22. விழுப்புரம் ஜங்.
23. விருதுநகர் ஜங்.
24. விருத்தாசலம் ஜங்.

மேற்படி இடங்களில் எல்லா விதமான இங்கிலீஷ், தமிழ் புத்தகங்களும், தினசரி, வாரப் பத்திரிகைகளும், அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, ரஷ்யா முதலிய இடங்களில் பிரசுரமாகும் வாரப் பத்திரிகைகளும்; மாதப் பத்திரிகைகளும் கிடைக்கும்.

மானேஜர்,

சுதேசமித்திரன் புத்தகசாலை,

விக்டாரி ஹவுஸ், மவுண்ட் ரோடு, சென்னை-2.



கல்யாண காலத்தில் மணப் பெண்ணிற்கும் தோழிகளுக்கும், ஏனைய குடும்பத்தினருக்கும் கொடுப்பதற்கு ஏற்றதான பட்டுப் புடவைகள் எடுப்பது சிரமமான காரியந்தான்.

ஆனால், நாட்டின் பல பாகங்களிலிருந்து, மிக நேர்த்தியானதாகவும், நியாய விலையுள்ளதாகவும், எங்களிடமிருக்கும் கும்பகோணம், காஞ்சீபுரம், ஆரணி, பனாரஸ், காஷ்மீர் பட்டுப் புடவைகளிலிருந்து உங்களுடைய தேவைகளை சுலபமாக பூர்த்தி செய்துகொள்ளலாம்.

ஹேண்ட்லூம் ஹௌஸ்

9, ரத்தன் பஜார், சென்னை-3.

சென்னை-600 008.
162243

பொருளடக்கம்

Vol: XXIX] விளம்பி ஆனிமீ 1உ ஜூன் 15, 1958 [No 20

டிகால் சொரூபம்		3
காற்று வாக்கிலே	—அரட்டை	4
உலகப் பலகணி	—கே. பி. எஸ்.	6
கவி உலகில் கம்பன்	—ச. து. சு. யோகியார்	7
பூளமேடு பிரேமா	—அவாரா	9
தலைநகர் தபால்		11
இலங்கை லிகிதம்		12
இருளில் ஒளி	—நா. நாகேஸ்வரன்	13
மலர் மஞ்சம்	—தி. ஜானகிராமன்	19
உதவி கிடைத்தது	—திருச்சி வாஸுதேவன்	24
ஆதித்தன் காதல்	—ஆர்வி	27
நாராயணீயம்	—அனந்தராம தீக்ஷிதர்	33
உலகியல் கதைகள்	—சாலிவாஹனன்	35
தங்கப் பதுமை	—அஸ்வத்தாமா	36
சிறுவர் அறிவு அரங்கம்		39
உலகத்திலோர் புதுமை	—ராஜம்	40
கற்றுக்கொடுத்த பாடம்	—ராமப்ரியா	41
உங்கள் கால பலன்	—பி. வி. ராவ்	45
கவியரசர் நிதி	—கே. ஆர். எஸ்.	51
கலா மண்டபம்		52
வாசுதேவாச்சார் கீர்த்தனை		55

"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளிவரும் கதைகளில் பெயர்கள் சம்பவங்கள் எல்லாம் கற்பனையே அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.



வாழிய செந்தமிழ் — சுதேசமித்திரன் — வாழ்க நற்றமிழர்
வாரப்பதிப்பு

★

டிகால் சொரூபம்

பிரான்ஸின் புதிய பிரதமர் ஜெனரல் டிகால் அந்நாட்டுச் சரித்திரத்தில் புகழ்பெற்ற ஒரு விடுதலை வீரனாக விளங்கலாம். அவர் வேறு பல சிறந்த குணங்கள் வாய்ந்தவராகவும் இருக்கலாம். ஆனால், அவரது சிந்தனை மட்டும் பத்து வருஷங்களுக்கு முன்னிருந்த கட்டத்திலேயே தேங்கி விட்டதென்பது தெளிவு. அல்ஜீரியா விஷயத்தில் அவர் இப்போது வெளியிட்டுள்ள திட்டமே அதற்குச் சான்று. அல்ஜீரியாவிலுள்ள ஜனங்கள் எல்லோரும் ஒரே வகைதான்; அதாவது அவ்வளவு பேரும் பிரஞ்சுக்காரர்களாகவே மதிக்கப்படுவர்; அவர்கள் அனைவருக்கும் உள்ள கடமைகள், உரிமைகள் இரண்டிலும் எவ்வித வித்தியாசமுமிராது என்று அவர் அறிவிக்கிறார்.

அல்ஜீரியாவில் அராபியர் எண்ணிக்கை 90 லட்சம்; அங்குக் குடியேறிய பிரஞ்சுக்காரர்கள் 10 லட்சம் பேர் இருக்கின்றனர். இரு தரப்பினருக்கும் சம உரிமைகள் அளிக்கும்பட்சத்தில், ஜனநாயக ரீதிப்படி நடக்கும் தேர்தல்களில் அராபியர் பெரும்பாலான ஸ்தானங்களைக் கைப்பற்றி விடுவர். அந்நிலையில், அங்கு பிரஞ்சுக்காரர்களுக்குத் தற்போதுள்ள விசேஷ பாத்தியதைகள் அனைத்தும் மறைந்துவிடும். ஆனால், அத்தகைய ஒரு நிலைமை ஏற்பட விடுவது ஜெனரல் டிகாலின் கருத்தாயிருக்க முடியாது. முஸ்லீம்களுக்குச் சம உரிமைகள் அளிக்கத் தயாராயிருப்பதாக ஆசை காட்டி, அல்ஜீரியாவைப் பிரான்ஸின் ஒரு பாகமாக்குவதே டிகாலின் திட்டமாக இருக்க முடியும். பிரான்ஸும், அல்ஜீரியாவும் அவ்வாறு இணைக்கப்படும் நிலையில், மெஜாரிட்டி பலம் பிரஞ்சுக்காரர்களிடமே இருக்கும். எனவே, டிகாலின் திட்டத்தால் அல்ஜீரிய மக்களுக்கு உருவான லாபம் எதுவுமிருக்க முடியாது.

ஆனால், இத்திட்டத்தில் புதிது ஒன்றுமில்லை. பத்து வருஷங்களுக்கு முன் வெளியான ஒரு யோசனையையே டிகால் இப்போது சிறிது மெருகு கொடுத்து மறுபடி வெளியிட்டுள்ளார். புதுச்சேரியிலும் விடுதலைக் கிளர்ச்சி உச்ச நிலையை அடைந்தபோது அதை பிரான்ஸுடன் இணைப்பது பற்றி ஒரு யோசனை வெளியானது அனைவருக்கும் நினைவிருக்கும். போர்த்துகல்கூட இதே ரீதியில்தான் கோவா தன்னுடன் இணைந்துவிட்டதாகவும், அது தன்னில் ஒரு பாகமேயென்றும் தம்பட்டமடித்து வருகிறது. ஆதிக்க ருசி கண்டவர்கள் அதிகாரத்தைக் கைவிடாமலிருப்பதற்குக் கையாளும் பல சூழ்ச்சிகளில் இந்த 'இணைப்புத் திட்ட'மும் ஒன்று.

ஆனால், அல்ஜீரிய மக்கள் வேண்டுவது சிறிதும் கலப்படமில்லாத பூரண சுதந்திரம்; வேறெந்த நாட்டினுடையவும் ஒரு பகுதியாகி, அவர்கள் தங்கள் தனித்தன்மையை இழக்கத் தயாராயில்லை. உண்மையில் அல்ஜீரியா பிரான்ஸினின்றும் ஒரு தனிப்பட்ட நாடு. அல்ஜீரியர்களின் ஜாதி, கலாச்சாரம், வாழ்க்கை முறை முதலியவை முற்றிலும் வேறு. அவர்கள் எவ்வாறு பிரஞ்சுக்காரர்களாக முடியும்? டிகாலின் திட்டம் அவர்களுக்கு விடுதலையையும் மறுத்து, அவர்களது தனிப்பட்ட பெயரையும் பறிக்கக்கூடியதாயிருக்கிறது. அவர் அதிகாரத்திற்கு வந்தால் அல்ஜீரியப் பிரச்னை நேர்மையாகத் தீரலாம் என்று எதிர்பார்த்தவர்கள் ஒரு சிலருண்டு. ஆனால், டிகால் தமக்கென வகுத்துக்கொண்டுள்ள பாதை வேறு என்பது தெளிவாகி விட்டது.

பிரஞ்சு-அல்ஜீரிய இணைப்பை அல்ஜீரியரிலேயே பெருவாரியான மக்கள் ஆதரிப்பதுபோல் பிரஞ்சு அதிகாரிகள் வெளிச்சம் போடுவதைக் கண்டு யாரும் ஏமாறப் போவதில்லை. அல்ஜீரியாவில் குடியேறியுள்ள பிரஞ்சுக்காரர்களின் நியாயமான பாத்தியதைகளுக்குத் தக்க பாதுகாப்பு ஏற்படுத்திக்கொண்டு அல்ஜீரியரின் விடுதலைக் கோரிக்கையைப் பூர்த்தி செய்வதுதான் பிரஞ்சு சர்க்கார் நாணயமாகக் கையாளவேண்டிய முறை. ஆனால், அல்ஜீரியாவிலுள்ள ஏகாதிபத்திய வெறியர்களின் கிளர்ச்சியால் அதிகாரத்திற்கு வந்துள்ள டிகாலுக்கு அந்த முறை யுக்தமாகத் தோன்றுததில் ஆச்சரியமில்லை. அல்ஜீரியாவோடு டுனிஷியா, மொராக்கோ இவற்றையும் ஒன்று சேர்த்து பிரஞ்சு ஆதிக்கத்திற்குள்ளாக்கவும் பிரஞ்சு ஏகாதிபத்தியப் பித்தர்கள் ஒரு திட்டம் வகுத்திருக்கின்றனர். இந்தத் துராசை பற்றி டிகாலின் கருத்தென்னவென்று திட்டமாகத் தெரியவில்லை. எனினும் அவர் அதிகாரத்திற்கு வந்ததன்மூலம் வட ஆப்பிரிக்கக் கொந்தளிப்பு சிறிதும் தணியுமெனத் தோன்றவில்லை.

குற்றம் எங்கே?

'கண்மூடித்தனமாகக் குறை கூறக்கூடாது; நிர்வாகத்தில் நடக்கும் வேலையின் யோக்கியதாம்சத்தை வைத்துக்கொண்டுதான் பேச வேண்டும்' மதிப்புக்குரிய முதலமைச்சர் அண்மையில் அறிவுறுத்தினார். சரியான பேச்சு. நிர்வாகத்தின் திறமையையும், தகுதியையும் தெரிந்துகொள்ளத்தான் நமது அருமை அமைச்சர்கள் அன்றாடம் உதவுகின்றனரே!

தொழிலாளி, குடியானவன், குமாஸ்தா, ஆசிரியர் ஆகிய ஒவ்வொருவரும் நாட்டின் செல்வத்தைப் பெருக்கத் தங்கள் பங்கைச் செலுத்த வேண்டும் என்று உதகைக் கூட்டத்தில் உள்நாட்டமைச்சர் உபதேசம். காங்கிரஸின் குடையின்கீழ் கடும் உழைப்பிலிறங்கக் கோரிக்கை. சோம்பலை விட்டுச் சுபிட்சத்துக்குத் தீவிரமாக உழையுங்கள்; அறிவுரைகளை அள்ளி வழங்கக் குட்டி மந்திரிகளும் சளைப்பதில்லை. குஷியான வாழ்க்கை; ஊருக்கெல்லாம் உபதேசம். உழைத்து உழைத்து உடல் தேய்ந்ததுதான் உழைப்பாளி கண்ட லாபம். பாட்டாளி நோயாளியாகிறான். பணக்காரன் மேன்மேலும் கொழுக்கிறான். வறுமை, வேலையின்மை காரணமாக நாட்டில் பல தற்கொலைகள் நடக்கின்றன; பட்டினியைத் தாங்க முடியாமல் பலர் சுண்டெலிகளையும், பாம்புகளையும் பிடித்துத் தின்கிறார்கள்; காங்கிரஸ் அக்கிராசனர் படம் பிடித்துக் காட்டும் அவல நிலை. சகலமும் கொழிக்கும் சமதர்ம சமுதாயத்தின் அறிகுறி இதுதானோ?

உணவுப் பிரச்னையின் அடிப்படையே இன்னும் தீர்க்கப்படவில்லை. பந்த் பதறுகிறார். நூற்றுக்கு எண்பது பேர் விவசாயிகள் இந்நாட்டில். ஆனாலும் உணவுக்கு அன்னியரிடம் கையேந்த வேண்டிய நிலை. பயிரிட நிலமிருக்கிறது. பயிர்த் தொழில் செய்ய மக்கள் இருக்கிறார்கள். உணவு உற்பத்தி பெருக ஊக்கமும், உற்சாகமும் தரத்தக்க விதம் ஆட்சியாளரின் போக்கு அமைந்திருந்தால், 'அரிசி வேண்டாம், கோதுமை சாப்பிடுங்கள்' என்று இன்று கெஞ்சிக் கேட்கத் தேவையிருக்குமா? நிர்வாகத்தவரின் நடவடிக்கைகளெல்லாம் பிரசார அளவுக்குமேல் சென்றனவா? சொல்லுக்கும், செயலுக்கும் இடையே மகத்தான முரண்பாடு. திட்டக் கமிஷன் சிபார்சுப்படி அப்படி நிலவுடைமைக்கு வரம்புகட்டுவதைக்கூட எதிர்க்கிறார் ஆந்திர ராஜ்ய காங்கிரஸ் மந்திரி. நிலப் பிரபுக்களின் குடும்பங்களுக்காகக் கண்ணீர் வடிக்கிறார்! வறுமை, பஞ்சம், பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம்பற்றி இனி அவருக்கென்ன கவலை? அபிவிருத்தித் திட்டங்களின் விளைவாகத் தமது நிலை உயர்ந்துவிட்டதாகக் கிராமவாசிகள் உணர்ந்ததாகவே தெரியவில்லை; அத்திட்ட வேலைகளில் பொதுஜனப் பிரதிநிதிகளையும் கவர முடியவில்லை. உண்மையைச் சொல்லத் துணிவிருந்த மந்திரி ஒப்புக்கொள்கிறார். சமுதாய அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபட்டவர்களே அவை சரிவர முன்னேறவில்லை என்று மனமொடிகின்றனர்.

இன்னொரு துறை. ரயில்வேயில் திருட்டுக்கள் அதிகரிப்பு. மாம்பழங்கள் அனுப்பினால் காலிக் கூடையே போய்ச் சேருகிறது. வேலியே பயிரை மேய்கிறது. உதவி மந்திரி ஓலம். நிர்வாகத்தில் நடக்கும் வேலையின் யோக்கியதாம்சத்தை ரயில்வே லஞ்ச ஒழிப்பு விசாரணைக் கமிட்டி அம்பலமாக்குகிறது. சாமான்கள் அனுப்ப வண்டிகளே கிடையாதென்று கைவிரிப்பர்; சிப்பந்தி கையில் கொஞ்சம் காசை வைத்து அழுத்தியவுடன், முதலில் காணக் கிடைக்காத வாகன், எங்கிருந்தோ பறந்தோடி வந்துவிடும்! நிர்வாகஸ்தர்களும் புதுமைப் பித்தர்களல்லவா? லஞ்சம் வாங்குவதிலும் நூதனமான முறைகளைக் கையாள்கின்றனர். லஞ்சம் கொடுப்பவரே காரணம்! மந்திரி படபடக்கிறார். கண் ஜாடை காட்டி வலை விரித்தவள்மீது குற்றமல்ல; வலையில் சிக்கியவனே அயோக்கியன்! எப்படியிருக்கிறது நியாயம்?

அரசியலில் ஈடுபடுவது ஆசிரியர் சமூகத்துக்குத் தீங்கு; ராஜ்யக் கல்வி மகாநாட்டில் மேதாவி மந்திரியின் மதியுரை. அரசியல் சுழலில் சிக்கினால், ஆசிரியர் தொழிலும், கௌரவமும் பாதிக்கப்படுமாம்; அதே அரசியலில் மூழ்கிப் பட்டமும் பதவியும் பெற்றுவிட்ட பேராசிரியர், உச்சாணிக் கொம்பிலிருந்து உபதேசம் செய்கிறார். உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கவில்லை. பள்ளி வாசலை மிதிக்காத சாதாரண வேலைக்காரன்கூட ஆரம்பப் பள்ளி ஆசிரியரைவிட அதிகச் சம்பளம் வாங்குகிறான். அகவிலையோ நாளுக்கு நாள் விஷம்போல் ஏறி வருகிறது. ஆட்சியாளருக்கு அதனை அறிவுறுத்த மனையரசிகளும் ஆர்ப்பாட்டம், அணிவகுப்பு நடத்துகின்றனர். குறைகளையும், நலன்களையும் ஆட்சியாளரே கவனிக்க விட்டுவிட்டு, ஆசிரியர்கள் தங்கள் வேலையைக் கவனிக்க வேண்டும் என்கிறார் மந்திரி. அன்றாட வாழ்க்கை நடத்த அல்லல்படும் ஆசிரியர்களும் அப்படியே நம்பி இரு கரங்களையும் குவித்து மன்றாடும்போது, சாக்குப் போக்கும், சால்ஜாப்புமல்லவா கிடைக்கிறது! அந்த நிலையில் அவர்கள் குறைகளைச் சில அரசியல் கோஷ்டிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டால், அது யார் குற்றம்?

இந்தியா என்ற பரந்த நோக்குடனன்றி, வடக்கு—தெற்கு என்ற பிரிவினை மனப்பான்மையுடன் மக்கள் சிந்திப்பது வளர்ந்து வருகிறதே என்று புலம்பல். செழிப்பான, பொதுவான பாரம்பர்யமே நாட்டின் அடிப்படை ஒற்றுமையல்லவா என்று பசப்பல். பேருண்மைகளை யாரும் மறுக்க முடியாது; மறைக்கவும் முடியாது. எல்லோரும் ஒரே தேச மக்கள் என எண்ணவே ஆவல். ஆனால், தென்னாட்டில் நெய்வேலியில், அறுபது கோடி ரூபாய் செலவில் ஒரே ஒரு பெரிய தொழில்தான் நிர்மாணம்; அதே சமயம் வட நாட்டில் தொழில் வளர்ச்சிக்காகப் பல்லாயிரம் கோடி செலவு என்று அரசியல் சார்பற்ற பிரமுகரும் எடுத்துக் காட்டும்போது சிந்தனை தடுமாறுவதில் தவறென்ன?

சீனாவில் புரட்சி நடந்ததற்கு மக்களின் வறுமையே தூண்டுதலாக இருந்ததென்று சீனத்தின் ஜனாதிபதி விமர்சனம் செய்கிறார். ஏழை மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள். செயலாற்றலை விரும்புகிறார்கள். காகிதத் திட்டங்களையல்ல. உள்ளதைச் சொன்னால் உடர் பொரிகிறது. அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்தித் தவறான வழி காட்டுவதாகப் பத்திரிகைகளின் போக்கால் பூமிதானப் பிதாவுக்கும் அதிருப்தி. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு! கிராம தான இயக்கத்தின் முக்கியத்தைப் புரிந்துகொண்டு பிரமாதப்படுத்தவில்லை என்று பத்திரிகைகள்மீது கோபம். உண்மையில் பெரிதாக நடக்கும் விஷயமென்றால், கொட்டைகொட்டையாக, பத்திபத்தியாகச் செய்தி வாராதோ? பத்திரிகைகளைப் படிப்பதையே நிறுத்திவிட்டாராம். பூனை கண்ணை மூடிவிட்டால்.........!

—அரட்டை

காலச்சக்கரம்



இலங்கையில் கெடுபிடி

இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்குப் பாடுபடும் கட்சி எனப்படும் பெடரல் கட்சியைச் சேர்ந்த பத்து தலைவர்கள் கொழும்புவில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். எந்தக் கட்சி அல்லது ஸ்தாபனத்தைச் சேர்ந்த யாரையும் கைது செய்து காவலில் வைக்க அரசாங்கத்துக்கு அதிகாரமளிக்கும் உத்தரவைக் கவர்னர் ஜெனரல் பிறப்பித்ததைத் தொடர்ந்து, இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் சில மாகாணங்களில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே வகுப்புக் கலவரம் மூண்டு பரவியதனுல், மே 27-ந் தேதியன்று அவசர நிலைமைப் பிரகடனம் செய்யப்பட்டதுடன், பெடரல் கட்சி சட்ட விரோதமென அறிவிக்கப்பட்டது நினைவிருக்கும். சிங்கள மொழிக்குச் சமமான அந்தஸ்து தமிழ் மொழிக்கு அளிக்கப்பட வேண்டுமென்று கடந்த ஈராண்டுகளாகப் பெடரல் கட்சி போராடி வந்துள்ளது. மோட்டார் வண்டிகளின் இலக்கப் பலகைகளில் 'ஸ்ரீ' என்ற சிங்கள எழுத்து பொறிக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்துச் சில மாதங்களுக்கு முன்பு இக்கட்சி கிளர்ச்சி செய்ததும், தன் மொழிக் கொள்கைக்கு ஆதரவாகப் பொதுஜன சத்யாக்ரகத்தை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்ததுமே கலவரத்திற்குக் காரணம் என்று இலங்கை சர்க்கார் கருதுகிறது. இக்கட்சியார் சாத்வீக எதிர்ப்புப் போர்வையில் அரசாங்கத்தை எதிர்த்து இயக்கம் நடத்துவதாகப் பிரதமர் புகார் கூறியுள்ளார். கலவரங்களுக்கு வெளியார் தூண்டுதல் காரணமாக ஏற்பட்டதா என்பதை சர்க்கார் விசாரிக்குமென்று இலங்கை மேல் சபையில் நிதி மந்திரி டிஸில்வா கூறியுள்ளார்.

சுதேசமித்திரன், சென்னை - 2

அறிவிப்பு

1—6—58 முதல் கல்கத்தாவில் நம் மித்திரன் வாரப்பதிப்பை விற்பனை செய்யவும் சந்தாதாரர்களுக்கு பட்டுவாடா செய்யவும் கீழ்குறித்துள்ள விலாசதாரரை எமது ஏஜண்டாக நியமித்துள்ளோம். அன்னாரிடம் சந்தா செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளுமாறு மித்திரன் அன்பர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஸ்ரீ R. விஸ்வநாதன்,
நியூஸ் ஏஜண்ட்,
27A, ராஜா பஸந்த் ராய் ரோடு,
கல்கத்தா.

சர்க்குலேஷன் மானேஜர்.

அல்ஜீரியாவுக்கு ஆசை வார்த்தை

புதிய பிரஞ்சு பிரதம மந்திரி டிகாலே அல்ஜீரிய மக்களுக்கு (முஸ்லிம்கள்) பிரஞ்சு பிரஜைகளைப்போல சம உரிமைகளை அளிக்கப் போவதாகக் கூறியுள்ளார். தாம் தயாரித்துவரும் அரசியல் திருத்தச் சட்டம் அடுத்த இலையுதிர் காலத்தில் நிறைவேற்றியவுடன் பிரான்ஸில் மட்டுமின்றி அல்ஜீரியாவிலும் பொதுத் தேர்தல் நடத்தப் போவதாயும் அவர் அறிவித்துள்ளார். அல்ஜீரியாவைப் பிரான்ஸுடன் இணைக்கும் திட்டத்தை அல்ஜீரிய விடுதலை முன்னணி நிராகரித்து விட்டது. அல்ஜீரியாவுக்குப் பூரண சுதந்திரம் அளிக்க வேண்டுமென அந்தத் தேசீய ஸ்தாபனம் வற்புறுத்துகிறது.

பர்மாவில் புது மந்திரி சபை

பர்மாவில் 20 மந்திரிகள் கொண்ட புதிய மந்திரி சபையை பிரதமர் ஊ நூ அறிவித்துள்ளார். பழைய மந்திரிகளில் 15 பேர் ராஜிநாமா செய்ததையடுத்துப் புதிய மந்திரி சபை அமைக்கப்பட்டது. பழைய மந்திரி சபையைவிட 10 பேர்களைக் குறைவாகக்கொண்ட இப்புது மந்திரி சபையில் 5 மந்திரிகள் புதியவர்கள்.

ஆளும் கட்சியான பாஸிஸ்ட் எதிர்ப்பு மக்கள் சுதந்திர லீக் கட்சியில் பிளவு ஏற்பட்டதையடுத்து, ஊ நூ மந்திரி சபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட்டது. அத்தீர்மானம் விவாதத்திற்கு வருமுன்பே மந்திரி சபை மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதனுல் சிலரது ஆதரவு கிடைத்திருப்பதால், நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்படுமென ஊ நூ நம்புகிறுர்.

பஞ்சாப் எல்லையிலும் பாக். விஷமம்

அஸ்ஸாம் எல்லையில் கடந்த சில காலமாக பாகிஸ்தான் துருப்புகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்து வந்தனரல்லவா? அது ஓயுமுன்னர் மேற்கு பஞ்சாப் எல்லையிலும் பாக். துருப்புகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்து ஓயாத தொல்லை கொடுத்து வருகின்றனர். பஸில்கா என்ற இடத்தில் பாக். துருப்புகள் சுட்டதில் 6 இந்தியர்கள் மாண்டனர். தவிர, இரண்டு, மூன்று நபர்கள் கடத்திச் செல்லப்பட்டனராம். இந்தத் தாக்குதலை அநாகரிகமான அதிக்ரமச் செயல் என்று பாரதப் பிரதம மந்திரி நேருஜி கண்டித்துள்ளார். அஸ்ஸாம் எல்லையில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகங்களையும் அவர் கண்டித்தார். பஞ்சாப் எல்லையில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தை ஆட்சேபித்துப் பாகிஸ்தான் வெளிநாட்டிலாகாவிடமும், டில்லியிலுள்ள பாக். ஹைகமிஷனரிடமும் பலமான கண்டனக் குறிப்பு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சம்பவத்தில் பலியான ஒவ்வொருவருக்காகவும் பாகிஸ்தான் நஷ்ட ஈடு தர வேண்டும். அந்தச் சம்பவத்திற்காகப் பாகிஸ்தான் அரசாங்கம் உடனடியாக மன்னிப்புக் கோர வேண்டுமென்று அக்குறிப்பில் இந்திய சர்க்கார் கோரியுள்ளது. எல்லைச் சம்பவங்கள் பற்றிப் புலன் விசாரணை தேவை என்று பாக். பிரதமர் இந்தியப் பிரதமருக்கு அனுப்பியுள்ள பதில் தந்தியில் கோரியுள்ளார்.

கதிரவன் கொடுமைக்குப் பலி

கிழக்கு இந்தியாவில் வெய்யிலின் கொடுமை இவ்வருடம் மிகவும் அதிகமாக மக்களை வாட்டி வருகிறது. பீஹார் மாகாணத்தில் 200 பேருக்குமேல் வெப்பம் தாங்காமல் மாண்டனர். வெய்யில் உக்ரத்தினுல் வீடுகள் தீப்பிடித்துக்கொண்டதில் சொத்துச் சேதமும் கால்நடைகளுக்கு மரணமும் ஏற்பட்டதாகச் செய்திகிடைத்துள்ளது. வரட்சி காரணமாகக் குடி தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டு, மக்கள் மட்டுமல்லாமல் மிருகங்களும் சொல்லொணுத் துன்பமனுபவிக்கின்றன. கால்நடைகள் மரித்தன.

மேல் வங்காளத்தில் கடும் வெய்யில் தாளாமல் 24 பேர்களுக்குமேல் பலியாயினர். அங்கு 104 முதல் 116 டிகிரிவரை வெய்யில் தகித்துள்ளது. கிணறுகள், நீர் நிலைகள் வரண்டு விட்டன. கடந்த 50 ஆண்டுகளில் இத்தகைய வரட்சியை வங்கம் கண்டதேயில்லை என்று விவசாயிகள் கூறுகின்றனர். ராஜஸ்தானில் 12 பேர் பலியாயினர்.

உத்தரப் பிரதேசத்திலும் வரட்சி காரணமாகத் தண்ணீர் பஞ்சமும் உணவுப் பற்றுக்குறையும் தாண்டவமாடுகின்றன. பம்பாய் மாகாணத்தில்கூட உணவுப் பற்றுக்குறை ஏற்பட்டு, அதைச் சமாளிக்கக் கஷ்ட நிவாரண திட்டங்களை சர்க்கார் அமுலாக்கியுள்ளனர்.

சென்னை நகரில்கூடச் சென்ற வாரம் வெய்யில் 105 டிகிரிவரை எட்டி, மக்களை வாட்டியெடுத்து விட்டது.

—கே. பி. எஸ்.

ஏழாம் எண்

★

எல்லாம் சரி; எனினும் ஒரு மரம் போதாதா? ஏழு மரம் எதற்கு? வான்மீகனாரது புறப்பாட்டில்,

'ஒரு பகல் எழுவர் எய்தியற்றே'

என எழுவரைக் கண்டோம். வான்மீகி ராமாயணத்தில் 'ஸப்தஸால' என ஏழு ஆச்சா மரங்களைக் காண்கிறோம். அதினும்,

'இமேச விபுலா சாலா:
ஸப்த ஸாக வலம்பின:'

என, ஸப்த (ஏழு) ஸாலத்திற்கும் இடையே நின்று இதோ, மிகப் பெரிய ஏழு கிளைகள் கிளைத்துள்ள ஏழு மரங்கள் என்பதைப் பார்க்கின்றோம். 'கம்பனது மராமரப் படலத்தில் பற்பல முறைகள் ஏழு, ஏழு ஏழு என எழுமைக்கும் மேலாய் வருகின்றது.

ராமபிரானைக் கண்ட அனுமான், எடுத்த எடுப்பிலேயே பரவசனுய்,

'மும்மை ஏழு உலகம் காக்கும்
முதல்வர் நீர்'

என்று முகமன் கூறுவதைப் பார்க்கிறோம். ராமன் சுக்ரீவனிடம்,

'உலகம் ஏழினேடு ஏழும் வந்து அவன்
உயிர்க்கு'

உதவினும் காப்பேன் என்று உறுதி கூறுவதைக் கேட்கிறோம். தவிர, சுக்ரீவன்,

'ஆக ஐந்தினேடு இரண்டு'

என அவற்றை எண்ணிக் கூறுவதும்; அம்மரங்கள் உலகைத் தாங்கும் அரிய பெரிய மலைகள்,

'ஏழும் ஆண்டு சென்று ஒரு வழி
நின்றென'த்

தோற்றம் அளிப்பதையும், மலை என்பதற்கு ஏற்ப,

'மலைகண்டோம் என்பது அல்லது
மலர் மிசை அயற்கும்
இலை கண்டோம் எனத் தெரிப்ப அரும்
தரத்தன ஏழும்'

எனவும், பின் முடிவாக ராமபாணத்தின் செயலைக் கூறும்போது ஏழு மரம், கீழ் ஏழு உலகம், மேல் ஏழு உலகம், ஏழு கடல், ஏழு மலை, ஏழு பரி, ஏழு முனிவர், ஏழு மங்கையர், ஏழிலாமையால், ஏழு கண்டபின், ஏழு பெற்றதோ என ஏழு மயமாய் இரண்டு பாடல்களை 11—ஏழிட்டு நிரப்புவதையும் காண்கின்றோம்.

இந்த ஏழு என்னும் எண் மிக மிக ரகஸ்யமான ஒரு எண்ணுக மிகமிகப் பண்டைக் காலத்திலிருந்தே இந்நாட்டில் மட்டுமன்றி எந்நாட்டிலும் கருதப்பட்டு வந்துள்ளது. நமக்குள் மேற்காட்டியவை தவிர ஏழு க்ரஹங்கள், ஏழு வாரங்கள், ஏழு கண்டங்கள், ஏழு த்வீபங்கள், ஏழு நகரங்கள், ஏழு மீன்கள், ஏழு வன்னிகள், ஏழு மேகங்கள், ஏழு வாயுக்கள், ஏழு சமித்துக்கள், ஏழு சந்தஸ்கள், ஏழு பிறவிகள், ஏழு ஜன்மங்கள், ஏழு வானங்கள், ஏழு நாகங்கள் ஏழு தாதுக்கள், ஏழு வர்ணங்கள், ஏழு ஓடதிகள், ஏழு லவணங்கள், ஏழு ரசங்கள், ஏழு ஸ்வரங்கள் என எத்தனை எத்தனையோ ஏழுகள்.

நம் நாட்டிற்போலவே மேல் நாட்டிலும் ஸரிகமபதநி என்னும் ஏழு ஸ்வரங்களுக்கு இணையாக தோ, ரி, மி. ஃப, ஸோல், லா, சி (Do, Re, Mi Fa, Sol, La,si) அல்லது சி, டி, இ, ஃப், ஜி, ஏ, பி என ஏழு (C, D, E, F, G, A, B) ஸ்வரங்கள் உள்ளன. இங்குபோலவே அங்கும் இவை ஏழு க்ரஹங்களால் ஆளப்படுகின்றன. பேன் (Pan) என்னும் தேவதை தன் எழுதுளைக் குழலில் எழு குரல் எழுப்புகிறுன் என்றும் கூறுவர்.

விவிலிய வேதத்தில் பல ஏழுகள் வருகின்றன; படைப்பின் ஏழு நாட்கள், ஏழு வானங்கள், ஏழு முத்திரைகள் (Seals) ஏழு ஸிம்ஹாஸனங்கள், ஏழு தேவ ஆவிகள், ஏழு தேவ தூதர்கள், ஆணவம், பேராசை, கோபம், காமம், பெருந்திண்டி, பொறுமை, சோம்பல் என ஏழு தீக்குணங்கள்; ஞானம், நற்சங்கம், கல்வி, அறிவு, பொறுமை, பக்தி, தெய்வத்திடம் பயமும் பணிவும் என ஏழு நற்குணங்கள்.

பழைமையான எகிப்தியர்களிடையே மிகமிக ரகஸியமான ஏழு ஏழுகள் இருந்தன. பாபிலோனியர்களிடையே ஏழு அரக்கர்கள் (Demons) வான் தெய்வமான அனு (Anu) வின் ஏழு புதல்விகள், கடல் தெய்வமான யா (Ea)வின் ஏழு தீய ஆவிகள் Spirits ஏழு அலித் தேவதைகள் (Sexless Spirits) ஏழு கார்த்திகைகள், எனப் பல ஏழுகள் வருகின்றன. ஒரு பாபிலோனிய மண் ஏடு (Clay tablet) கடவுளை 'வலிமிக்க ஏழு வகையான ஒருவன் நீ' (Powerful seven fold one are you) எனப் பாராட்டுகிறது.

தவிர, வடமொழி, தென்மொழி, எகிப்திய, பாபிலோனிய, அஸ்ஸீரிய, சீன, கிரேக்க, லத்தீன், ப்ரங்கிய, ஆங்கில, ஜர்மானிய மொழிகள் யாவிலும் ஏழு வாரங்களும், அவற்றின் ஏழு பெயர்களும், அவற்றை ஆளும் ஏழு கோள்களும் ஒன்றுகவே உள்ளன.

வாழ்வு ஏழின் மயம் எனக் கிரேக்க ஞானியான பிதாகோர (Pythagorus) ஸும், அவரது சீடர்களும் மனித ஆயுளை ஏழாகப் பிரித்தனர். இப்பிரிவின்படி, முதல் ஏழாவது வயதில் பல் முளைக்கிறது; ஈரேழில் (14) இளமை அரும்பு விடுகிறது; மூவேழில் (21) ஆண்மைக் குறிகுறியான மீசையும், தாடியும் தோன்றுகின்றன; நாலேழில் (28) இளமையின் வளமை பூர்த்தி பெறுகிறது; ஐந்தேழில் (35) இல்வாழ்வின் இன்பம் பூரணமாகிறது; ஆறேழில் (42) அறிவு மலர்கிறது; ஏழேழில் (49) அறிவு முதிர்ச்சி அடைகிறது; எட்டேழில் (56) அறிவும் ஒழுக்கமும் அிணைந்து சீரடைகின்றன; ஒன்பதேழில் (63) உள்ளுணர்ச்சியும், உள்நோக்கும் உயர்வடைகின்றன; பத்தேழில் (70) பண்பும் பயனுமுள்ள மேற்கூறிய வாழ்க்கை முற்றுப் புள்ளி பெறுகிறது என்பர். இக்கொள்கையைப் பழைய கிரேக்க வைத்ய நிபுணனை ஹிப்பாக்ரேட (Hippocrates) ஸும் ஒப்புக்கொள்ளுகிறுன்.

நம் நாட்டிலும் இத்தகையதோர் பாகுபாடு இருந்தது என்பதற்குச் சில பழைய நூல்கள் சான்று தருகின்றன. நம்மவர் மனிதருக்கு வயது நூறு என்று கொண்டனர். இவ்வயதை ஐந்து பருவங்களாகப் பிரித்தனர்., இப்பருவங்களின் அளவை, முதலில் ஏழில் ஆரம்பித்து ஒவ்வொரு பருவத்திற்கும் ஒவ்வொரு ஏழாக அளவை அதிகரித்துக்கொண்டே போயினர். இந்தப்படி

முதல் 7 வயது வரை—பாலப் பருவம்.

முதல் 7-ம் ஈரேழும் ஆன, 21 வயது வரை—கௌமாரப் பருவம்.

21-ம் மூவேழும் கூடிய 42 வயதுவரை—யௌவனப் பருவம்.

42-ம் நாலேழும் ஆன 70 வயதுவரை—மத்யமப் பருவம்.

70-ம் ஐந்தேழும் ஆன 105 வரை-முதுமைப் பருவமும், முடிவும். இதனுல் அப் பழங்காலத்து நம்மவர்கள் எவ்வளவு திடகாத்திரர்களாய் வாழ்ந்தனர் என்பது தெளிவாகிறதல்லவா? நூறு வயதுக்கு முன்னுல் ஒருவன் இறந்தால், அவன் பாவி எனப் பழைய நூல்கள் கருதுகின்றன. நிற்க,

இன்னும் எத்துணையோ ருசிகரமான ஏழுகள் உண்டு. நிறை மாதமாகாமல் பிறக்கும் குழந்தைகளுள் ஏழாம் மாதத்தில் பிறந்த குழந்தை உயிரோடு இருக்கும் என்றும், எட்டாம் மாதத்தில் பிறப்பது இறந்து போகும் என்றும் முன்னோர் நம்பினர். தற்கால ஆராய்ச்சியும் இதை ஒப்புக்கொள்ளுகிறது.

குழந்தை பிறந்த ஏழாவது மணியிலேயே அதன் வாழ்வு நிச்சயம் பெறுகிறது; ஏழாம் நாள் உந்திக்கொடி விழுகிறது; ஈரேழு பதினான்காம் நாள் கண் பார்வை காட்சிப் பொருள்களோடு இயங்குகிறது; மூவேழு இருபத்தி ஓராம் நாள் குழந்தை தலையை அசைத்துத் திருப்ப முயல்கிறது; ஏழாவது மாதத்தில் முதற் பல் முளை விடுகிறது; ஈரேழு (14) மாதத்தில் குழந்தை நேராக உட்காருகிறது; மூவேழு (21) மாதத்தில் பேச ஆரம்பிக்கிறது; நாலேழு (28) மாதத்தில் நன்றாக நடக்க ஆரம்பிக்கிறது. அப்பால் ஏழு ஏழான படிகளோடு வளர்ந்து வாழ்கிறது.

தற்கால வைத்ய சாஸ்திர முறைப்படி ஏழு வருடங்களுக்கு ஒருமுறை உடலில் மாறுதல்கள் ஏற்படுகின்றன. நம் உடலில் ஏழு தாதுக்கள் உள்ளன. காலிரண்டு, கையிரண்டு, வயிறொன்று, மார்பொன்று, சிரமொன்று என வெளி அங்கங்கள் ஏழு; நுரையீரல், இதயம், இரைப்பை, மண்ணீரல், ஈரல், இரு குண்டிக்காய்கள் என உள்ளுறுப்புகள் ஏழு. நம் ஒவ்வொருவர் முகத்திலும் கண்ணிரண்டு, காதிரண்டு, நாசி இரண்டு, வாய் ஒன்று என ஏழு வாயில்கள் உள்ளன. விலங்கு மூளை ஏழு வகையான மாறுதல்களுக்குப் பிறகே மனித மூளை ஆகிறதாம். ஒவ்வொருவர் வாழ்விலும் மூளையின் உள்ளுறும் ஸ்தானங்கள் ஏழு முறை ஏழு வகையான மாறுதல்களைப் பெற்று வளர்ச்சி அடைகின்றனவாம்.

இவ்வண்ணம், உடலாய், பிறப்பாய், வளர்ப்பாய், வாழ்வாய், யாவுமாய் ஏழு என்னும் எண் மிகமிக முக்கியமாக நிலவுகிறது. கம்பனுக்கு மட்டுமன்றிக் காசினி முழுவதுமே ஏழின் மயந்தான் என்பதைக் காட்டவே இவ்வளவு தூரம் எழுதினேன். இனி, இவற்றில் எந்த ஏழைக் கம்பன் தன் மராமரத்துடன் இணைக்கின்றான் என்பதைக் காண்போம்.

சுக்ரீவன் ராமனைக் கொண்டு சென்று, மராமரங்களைக் காட்டி, அவைகளைப் பற்றிக் கூறும்போது,

'மாகம் நீண்டன குறுகிட நிமிர்ந்தன
மரங்கள்
ஆக ஐந்தினோடு இரண்டில்'

என்று குறிப்பிடுவதை முன்னரே கண்டோம். இதற்கு வானமும் பின்னிடும்படி வளர்ந்த மரங்கள் எனவும் பொருள் கொண்டோம்; இன்னொரு அர்த்தமும் உண்டு. 'நீண்டன' என்ற பன்மைச் சொல்லை 'மாகம்' என்ற ஒருமையோடு கூட்டாமல், 'மரங்க'ளோடு கூட்டிப் பார்ப்போம். இதனால் முன் கொண்ட பொருள் தவறாகாது; 'மாகம்' என்பது 'வானங்கள் யாவும்.' நிற்க, இப்போது இப்புதுவகையில் ஏற்படும் புதுமையைக் காண்போம்.

மாகம் நீண்டன—வானளவு நீண்டன; நிமிர்ந்தன—அதற்கு அப்பாலும் சென்று நிமிர்ந்தன; எதற்காக? 'குறுகிட—குறுகுவதற்காக. அதாவது, மனித அறிவு வானமும் பின்னிடும்படி யாவற்றையும் அளக்கிறது. அவ்வாறு அளப்பது யாவும் அளந்து, அப்பாலும் விரிந்து ஆண்டவனோடு ஐக்யமாவதற்கல்ல. அவ்வறிவின் அகலத்தை ஆணவத்தின் அளவாகக் குறுக்கி, அகிலத்தின் அநித்ய போகங்களை அநுபவிக்கவே.

இவ்வறிவு ஒன்றேயாயினும் பல பொருள்களைச் சார்ந்து பலபடியாக மாறுவதால், பன்மையில் பேசப்படுகிறது. இவ்வாறு மாகம் நீண்டு குறுகிட நிமிர்ந்த அறிவு, மரங்கள் ஆக—மரங்களென்ன மாறியுள்ளன. எனவே, மராமரங்கள் உடலுடன் ஒன்றிய மாயையில் சிக்கிய மனமரங்களே என்பதைக் கம்பன் தெளிவாக்குகிறான்.

இம்மரங்கள் 'ஐந்தினோடு இரண்டு—ஐந்து கூடிய இரண்டு என ஏழாகின்றன. இந்த ஐந்தும் இரண்டும் யாவை? ஐந்தொடு, ஐந்துடன் என்பதால் இரண்டு உடைய பொருளாகவும், ஐந்து உடைமைப் பொருளாகவும் கொள்ள வேண்டும்.

ஐந்து—மண், நீர், தீ, காற்று, வானம் என் ஐந்து பூதங்கள், அவற்றின் தன்மைகளான நாற்றம், சுவை, உருவம், பரிசம், ஓசை என்னும் ஐந்து தன் மாத்திரைகள்; இவைகளை அறியும் மூக்கு, வாய், கண், மெய், செவி என்னும் ஐம்புலன்கள்; இவற்றைச் சார்ந்து தொழிற்படும் வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் என்னும் ஐங்கருவிகள். இவையே ஐந்தாம் அனுபவம். உயிர்ப் பறவை உள்ளத்தில் நின்று உடற்கூட்டின் ஐம்புலனாகிய சாளரங்களோடு, ஐம்பூதமயமான உலகை ஐந்து தன் மாத்திரைகளால் அறிந்து ஐங்கருவிகளால் அனுபவிக்கிறது.

இரண்டு—அறியும் அறிவு ஒன்று, அறியப்படும் உலகு ஒன்று என இரண்டு. எண்ணமாகிய எண்ணறிவு கண் காது மூக்கு செவி வாய் உடல் என, காட்சியறிவாய், கேள்வி அறிவாய், முகர்ப்பறிவாய், சுவையறிவாய், பரிச அறிவாய், உலகறிவாய் உலகை அறிகிறது. எனவே, ஓரறிவே ஏழறிவாகிறது. இதைத்தான் வான்மீகனாரும்

'ஒரு பகல் எழுவர் எய்தியற்றே'

என்று உரைத்துள்ளார். இவற்றையே கம்பன் 'ஏழு மாமரம்' என்கிறான். உண்மையில் இவ்வுலகத்தை நாம் அறியவில்லை; உலகின் புறத்தோற்றத்தையே புலன்களின்மூலம் அறிகிறோம். எனவே, இது பொய்யறிவு, இப்பொய்யறிவை வீட்டி மெய்யறிவு தர ஈசன் அருளாலேயே முடியும்; அவ்வருளே ராமபிரானாகிறது. இதனாலேயே கம்பன் சுக்ரீவனும் ராமனும் கூடி இருந்த நிலையை,



'அலா முதல் அறுத்த சிந்தை
அறனும் அரியின் வேந்தும்
உவாவுற வந்து கூடும்
உடுபதி இரவி ஒத்தார்'
'ஈட்டிய தவமும் பின்னர்
முயற்சியும் இயன்றது ஒத்தார்'
'கேட்டுணர் கல்வியோடு
ஞானமும் கிடைத்தது ஒத்தார்'

என மதியாம் மதியும், விதியாம் ரவியும்; தவமும் முயற்சியும், ஞானமும் கல்வியும் இணைந்த காட்சியென்று வர்ணிக்கிறான். இவற்றுள் மதிரவி உவமமே மதிப்புக்குரியது; மற்றவை அதன் வ்யாக்யானமே.

(தொடரும்)

வழக்கம்போல், தபால்காரனின் வரவை அன்றும் வழிமேல் விழிவைத்து, ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தேன். ஒரு எழுத்தாளன் எதற்காகத் தபால்காரனின் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கிறான் என்பது எல்லோரும் அறிந்த 'ரகஸ்யம்'தானே! 'எந்தப் பத்திரிகையிலிருந்து கதைகள் திரும்பி வருகின்றன; அப்படித் திரும்பி வருபவற்றை வேறு எந்தப் பத்திரிகைக்கு அனுப்பலாம்?' என்ற சிந்தனையுடன், நான் தெருவிலே பார்வையைச் செலுத்திக்கொண்டிருந்தேன். தெருக் கோடியில் தபால்காரனின் தலை தெரிந்தது.

உள்ளம் 'பட்பட்'டென்று அடித்துக்கொள்ள, ஒவ்வொரு வீடாக அவன் ஏறியிறங்குவதை இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தேன். ஆயிற்று! பக்கத்து வீட்டிற்கு ஒரு கடிதம்...அடுத்தது என் வீடு! நான் வாசலிலேயே நின்றுகொண்டிருப்பதைக் கண்டு, உதட்டிலே புன்னகையொன்றை நெளியவிட்டவண்ணம், 'இன்று எந்தப் பத்திரிகையும் உங்களை 'வஞ்சம்' தீர்த்துக்கொள்ளவில்லைபோலிருக்கிறது. ஒரே ஒரு கவர்மட்டும் வந்திருக்கு! 'புக் போஸ்ட்' எதுவும் கிடையாது என்றான் அவன், கவர் ஒன்றை என்னிடம் நீட்டியவாறு.

நான் கவரை வாங்கினேன். அறைக்குச் சென்று அமர்ந்துகொண்டு கவரைப் பிரித்தேன்.

நான் சற்றும் எதிர்பார்க்காத, எனக்கு முற்றிலும் புதியவரான நபரிடமிருந்து (தப்பு! ஒருத்தியிடமிருந்து) அந்தக் கடிதம் வந்திருந்தது. கடிதம் 'விநோதம்' காரியாலயத்துக்குச் சென்று, அங்கிருந்து எனக்குத் திருப்பி அனுப்பப்பட்டிருந்ததால், விநோதத்தில் சமீபத்தில் பிரசுரமான என்னுடைய கதையைப் பாராட்டி எழுதிய கடிதமாகவிருக்கும் என்று ஆவலுடன் படிக்கத் தொடங்கினேன்:

பீளமேடு,
16–6–57.

'எழுத்தாளர் ஏகலைவன் அவர்களுக்கு,

நீங்கள் இப்படி என் வாழ்வைக் குட்டிச் சுவராடித்து விடுவீர்கள் என்று நான் கனவிலும் கருதவில்லை. எழுத்தாளர்களெல்லாம் கற்பனை செய்துதான் கதை எழுதுவார்கள் என்று நான் நினைத்து வந்தேன். ஆனால், நீங்களோ?...உண்மைச் சம்பவத்தில் உமது கற்பனையைப்புகுத்தி, பெயர், ஊர் எல்லாவற்றையும் அப்படியே எழுதியிருக்கிறீர்கள். அதனால், உங்களுக்குச் சன்மானம் கிடைத்திருக்கும். ஆனால், எனக்கு...? வாழ்வு போயிற்று. ஆம்! வாழ்வு போயிற்று!

புரியாதவர்போல் பாவனை செய்யாதீர்கள்! நீங்கள் போன இதழ் விநோதத்தில் எழுதிய 'பீளமேடு பிரேமா' என்ற கதை (கதையா அது!) என்னை வைத்து எழுதப்பட்டது என்பதை இனி உங்களால் மறுக்க முடியாது. போன வாரம் தான் எனக்குக் கல்யாணம் நிச்சயமாகியிருந்தது. ஆனால், அதற்கு முன்பு உங்கள் கதை வெளி வந்து, எல்லாவற்றையும் கெடுத்துக் குட்டிச்சுவராடித்துவிட்டுப் போய்விட்டது. கலியாணத்தையே நிறுத்தும் கைங்கர்யத்தை உங்கள் கதை செய்துவிட்டது. அதுமட்டுமா? இனி எனக்கு எப்பொழுதுமே கலியாணமாகாதபடி—என்னை நிரந்தர கன்னியாகத் தினமும் ஏங்கி ஏங்கி வாடச் செய்யும் புண்ணியத்தையுமல்லவா கட்டிக்கொண்டது?

என் தாயின் 'நடத்தை' சரியில்லை என்று துணிந்து எழுதியிருக்கிறீர்களே! உங்களுக்குத் தெரியுமா அவள் நடத்தையைப்பற்றி? 'கையிலே பேனா இருக்கிறது; கடையிலே காகிதம் இருக்கிறது; நீங்கள் பிதற்றுவதை எல்லாம் பிரசுரிக்க ஒரு பத்திரிகை இருக்கிறது' என்று எதை வேண்டுமானாலும் கிறுக்கி விடுவதா? என் தாய் மீனாட்சி அன்பின் பிறப்பிடம்; தூய்மையின் உறைவிடம். அவரைப்பற்றி அவதூறாக எழுத உங்களுக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம்?

உங்கள் கதை வந்தது. என் வாழ்வு போயிற்று. இந்தக் கலியாணம் நின்றதோடு மட்டுமின்றி, உங்கள் கதை கட்டிவிட்ட புரளி ஊர் முழுவதும் பரவிவிட்டது. அம்மா கண்ணீர்க் குளத்தில் மிதக்கிறாள். நான் யாரை நோவது என்று தெரியாமல் திணறுகிறேன்! எதற்காக என் வாழ்வைப் பாழ் செய்தீர்கள்? அதனால் நீங்கள் அடையப்போகும் பலன் தான் என்ன? நான் நிரந்தரக் கன்னியாக வாழ்க்கையை நரகமாகக் கழிக்கப் போவது உங்களுக்கு ஆனந்தத்தையா மூட்டுகிறது? என் அம்மாவின் வேதனை உங்களுக்கு உற்சாகத்தையா மூட்டுகிறது? ஏன் இந்த விபரீத விளையாட்டு!

அபலை,
பிரேமா.'

கடிதத்தை ஒரு முறைக்கு இருமுறையாகப் படித்தேன். நான் சிலையானேன்!

நான் சமீபத்தில் 'பீளமேடு பிரேமா!' என்ற கதை எழுதியது உண்மைதான்! அது 'விநோத'த்தில் பிரசுரமானதும் உண்மை. ஆனால், அந்தக் கதை ஒரு பெண்ணின் வாழ்வைப் பங்கப்படுத்தும் என்று நான் அப்பொழுது கண்டேனா? என் வாழ்க்கையிலேயே எனக்கு ஏற்பட்ட முதல் அதிர்ச்சி!

'பீளமேடு பிரேமா'வில் 'பிரேமா' என்ற யுவதி வருகிறாள். தந்தையற்றவள்! தாய் மீனாட்சியுடன் வசிக்கிறாள். பருவக் குளத்திலே நீச்சலடிக்கும் தன் பெண்ணுக்குக் கல்யாணம் செய்வதற்காகப் படாத பாடுபட்டு, ஒரு வரனைக் கொண்டு வருகிறாள். பையனுக்குப் பெண்ணைப் பிடித்து விடுகிறது. கலியாணம் நிச்சயிக்கப்படுகிறது. ஆனால்...? மணத்துக்கு முதல் நாள் பிள்ளை வீட்டாருக்கு ஒரு கடிதம் வருகிறது. 'பிரேமாவின் தாய் 'நடத்தை' கெட்டவள்! அவளுடைய பெண்ணைக் கண் தெரிந்தவன் கட்ட மாட்டான். பாவம், விஷயம் தெரியாத நீங்கள் அகப்பட்டுக்கொண்டீர்கள். அவள் கணவனே மீனாட்சியின் 'நடத்தை'யில் சந்தேகம்கொண்டு விஷம் குடித்து இறந்தான். ஆனால், மீனாட்சி இதை மறைத்து விட்டாள்! ஜாக்கிரதை! கண்ணிருந்தும் பாழும் கிணற்றில் விழாதீர்கள்'. இது தான் அந்தக் கடிதம். பிள்ளை வீட்டார் மூட்டை முடிச்சைக் கட்டிக்கொண்டு, அந்த நிமிடமே ரயிலேறி விடுகின்றனர். விஷயம் காட்டுத் தீபோல் எங்கும் பரவி, பிரேமா முகராத மலராக, மணமாகாத மங்கையாக, காலமெல்லாம் கன்னியாக வாழும் நிலை ஏற்பட்டு விடுகிறது'—இது தான் கதை. ஆனால், இந்தக் கதை ஒரு பெண்ணின் வாழ்வுக்கு உலை வைத்தது என்று நினைக்கும்போது, என் நெஞ்சை நெருப்பாய்ச் சுட்டது.

என் மனச்சாட்சி சவுக்கடி கொடுக்கத் தொடங்கிவிட்டது. என்னாலல்லவோ

ஒரு பெண்ணின் வாழ்வு பாழாகியது! அந்தப் பெண்ணையும், அவள் தாயாரையும் எனக்கு முன்பின் தெரியாதுதான். அவர்கள் பெயரையும் நான் கேள்விப் பட்டதில்லை. ஏன்? பூளமேடு என்று ஒரு ஊர் இருக்கிறதாகவே எனக்கு அதுவரையிலும் தெரியாது. ஆயினும், என்னால் ஒரு பெண்ணின் வாழ்வு பாலைவனமாவதை எப்படிப் பார்த்துக்கொண்டிருப்பது?

நான்கைந்து நாட்களாக இதே யோசனை. இரவிலே தூக்கமில்லை. கண்ணை மூடினால் பூளமேடு பிரேமா எதிரே வந்து நின்றாள். 'இது நியாயமா? தர்மமா?' என்று கேட்பதுபோன்ற பிரமை. தப்பித் தவறித் தூங்கினாலோ கனவிலே வந்து கதறத் தொடங்கிவிட்டாள்.

யோசித்து யோசித்துக் கடைசியில் நான் அந்த முடிவுக்கே வந்துவிட்டேன். 'ஆம்! நானே அந்தப் 'பூளமேடு பிரேமாவை' மணந்துகொண்டு விடுவது!' இதுதான் நான் அவளுக்குச் செய்யும் பிராயச் சித்தம்.

நான் இருபத்தெட்டு வயது இளைஞன். அதுவரை எனக்குக் கலியாணம் என்றாலே கசப்பு! எவ்வளவோ பேர் என் மனத்தைக் கரைக்கப் பார்த்தார்கள். வெற்றி எனக்குத்தான். கடந்த மூன்று வருடங்களாகப் பலர் முயன்று தோல்வி கண்ட என் மன விஷயத்தில், இந்தப் பூளமேடு பிரேமா ஒரு கடிதத்தின்மூலம் என் வைராக்கியமென்னும் பாறையைத் தூள் தூளாகச் சிதற அடித்து விட்டாளே!

மறு நாள்!

பூளமேடு செல்வதற்காக என்னைத் தயார் செய்துகொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில்...?

வாசலில் ரிக்ஷா ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து சுமார் பதினெட்டு வயது மதிக்கத்தக்க அப்ஸரஸ் ஒருத்தி இறங்கினாள். இறங்கியவள் பூங்கொடி அசைந்தாடுவதுபோல் அன்ன நடை நடந்து என் வீட்டினுள் நுழைந்தாள்.

நான் திகைத்து நின்றேன்!

'இதுதானே மிஸ்டர், ஏகலைவனுடைய வீடு!' என்றாள் அவள், தன் செம்பவள வாயைத் திறந்து.

'ஆமாம்! இதேதான். நானேதான் நீங்கள் தேடி வந்த ஏகலைவன்' என்றேன் நான்.

'ஓ...நமஸ்காரம். நான்தான் பிரேமா...!'

என் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. 'அப்படியா? நானே இன்று உங்களைப் பார்க்க வரலாம் என்றிருந்தேன். அதற்குள்...'

'அதனால் என்ன? யார் வந்தால் என்ன?' என்றாள் அவள்.

உடனே அடுத்த வீட்டுப் பையனை ஹோட்டலுக்கு அனுப்பி, காபி வாங்கி வரச் சொன்னேன். அவள் மறுத்தாள். நான் பிடிவாதம் பிடித்தேன். கடைசியில் வெற்றி எனக்குத்தான்!

இருவரும் நெடுநாள் பழகியவர்கள் போல் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தோம். அந்தக் கடிதத்தைப்பற்றியே இருவரும் பிரஸ்தாபிக்கவில்லை. இப்படிப் பட்ட அழகு பிம்பத்தை மணந்துகொள்ளக் கொடுத்து வைத்திருக்க வேண்டாமா? வீண் புரளியை நம்பி இந்த அழகுச் சிலையை வெறுத்தொதுக்கிவிட்டுச் செல்பவன் அடிமுட்டாளாகத்தான் இருக்க வேண்டும். அதுவும் நன்மைக்குத்தானே! இல்லாவிட்டால் இப்படிப்பட்ட அழகு ஓவியத்தைப் பார்க்கும் பாக்கியம்தான் எனக்குக் கிட்டுமா? மணம் செய்து கொள்ளப்போகும் ஓர் அருமையான வாய்ப்பு தான் எளிதில் கிடைக்குமா? நான் கொடுத்து வைத்தவன்தான்!

நெடு நேரம் என்னிடம் பேசிக்கொண்டிருந்தவள், 'நான் வருகிறேன்' என்று கூறிவிட்டு எழுந்திருந்தாள். நானும் உடன் எழுந்திருந்தேன். இருவரும் வாசலுக்கு வந்தோம்.

வாசலுக்கு வந்தவள், தனது மடியிலிருந்து ஒரு கவரை எடுத்தாள். கவர் நன்றாக ஒட்டப்பட்டிருந்தது. கவரை என்னிடம் நீட்டியபடி, 'நான் போய் ஒரு மணி நேரம் கழித்துக் கவரைப் பிரித்துப் பாருங்கள். அதற்குள் அவசரப்பட்டுக்கொண்டு பிரித்து விடாதீர்கள். நான் வரட்டுமா?' என்று விடை பெற்றுக்கொண்டு கிளம்பினாள். அவள் அசைந்தாடிச் செல்லும் அழகை ரசித்தவாறு நான் நின்றுவிட்டேன்.

ஒரு மணி நேரம் ஓடி மறைந்தது. நான் கவரைப் பிரித்தேன். ஒரு காகிதத்திலே நான்கே வரிகள் எழுதப்பட்டிருந்தன. 'எனக்கு உங்களைப் பிடித்துவிட்டது. உங்களுக்கும் என்னைப் பிடித்திருக்கும் என்று நம்புகிறேன். உங்களுக்குச் சம்மதமானால் உடனே திருமண ஏற்பாடுகள்...'

என் உடல் புல்லரித்தது. அந்த அழகுச் சிலைக்கு என்னைப் பிடித்துவிட்டது! நிச்சயம் நான் கொடுத்து வைத்தவனே தான்!

எனக்கும் பூளமேடு பிரேமாவுக்கும் அன்று அமர்க்களமாகத் திருமணம் நடந்தது. நான் மூன்று முடிச்சுகளை பிரேமாவின் கழுத்தில் அழுந்தப் போட்டேன். இனி அவள் என் மனைவி. இந்தப் பிரம்மச்சாரி இனி சம்சாரி!

ஒரு வழியாகச் சடங்குகளெல்லாம் முடிந்தன. மாலை மணி ஆறிருக்கும். நானும் பிரேமாவும் தனித்துப் பேசும் வாய்ப்பு அப்பொழுதுதான் கிட்டிற்று.

'பிரேமா!' என்றேன் நான் அன்புடன்.

அவள் நிமிர்ந்தாள்!

'நினைத்துப் பார்க்கவே ஆச்சரியமாக விருக்கிறது. நான் எழுதிய ஒரு கதை நம்மிருவரையும் ஒன்றாக இணைக்கும் என்று நான் கருதவேயில்லை' என்றேன், நான்.

பிரேமாவின் கண்கள் அகல விரிந்தன. 'என்ன? நீங்கள் எழுதிய கதையா? நீங்கள் எழுத்தாளரா?' என்றாள் அவள், ஆச்சரியம் தொனிக்கும் குரலில்.

'என்ன அப்படிக் கேட்கிறாய்? 'பூளமேடு பிரேமா!' என்ற கதையை நான் எழுத, அதற்கு நீ கடிதம் எழுத...எல்லாம் மறந்துவிட்டதா...?'

'நான் உங்களுக்குக் கடிதமா...? நல்ல கூத்துதான்! நீங்களல்லவோ என்னுடைய 'ஏகலைவனின் ஏமாற்றம்' என்ற கதையைப் படித்துவிட்டு எனக்கு உருக்கமாகக் கடிதம் எழுதியிருந்தீர்கள்! உங்கள் கடிதத்தைப் பார்த்துவிட்டு மனமிரங்கித்தான் நான் அன்று உங்களைத் தேடி வந்தது...'

'என்ன? நான் உனக்குக் கடிதமெழுதினேனா...? நீயும் எழுத்தாளியா...? என்ன எல்லாம் குழப்பமாகவிருக்கிறதே!'

'குழப்பத்தை நான் தெளிவிக்கிறேன்' என்று ஒரு குரல் வெளியிலிருந்து ஒலித்தது. இருவரும் திரும்பினோம். விநோதம் ஆசிரியர் அம்பலவாணன் உள்ளே நுழைந்தார்.

இருவரும் அவரைப் பார்த்துக் கரம் குவித்தோம். அவரும் பதிலுக்கு வணக்கம் செலுத்திவிட்டு, 'மிஸ்டர் ஏகலைவன்! ஸ்ரீமதி பிரேமா! இருவரும் சற்று நான் சொல்லுவதைக் கேட்க வேண்டும்' என்றார்.

'சொல்லுங்கள்' என்றோம் இருவரும் ஒரே குரலில்.

'பிரேமா! இவர்தான் ஏகலைவன் என்ற பெயரில் கதை எழுதிவரும் எழுத்தாளர். இவர்தான் 'பிரேமா' என்ற பெயரில் கதைகள் எழுதிவரும் பிரபல எழுத்தாளி' என்றார் அவர்.

எழுத்தாளனும் எழுத்தாளியும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டோம்!

'இங்கே கவனியுங்கள், மிஸ்டர் ஏகலைவன்! நீங்கள் எப்படிக் கலியாணமே வேண்டாமென்று பிடிவாதமாக இருந்தீர்களோ, அதேபோல் பிரேமாவும் பிடிவாதமாக இருந்தார். தமிழ் எழுத்தாளர்களிலேயே இன்று தலை சிறந்து விளங்கும் உங்கள் இருவரையும் ஒன்றாக, தம்பதியாக ஆக்கிவிட்டால் என்ன என்று ஒரு நாள் எனக்குத் தோன்றியது. அதன் பலன், உடனே இரண்டு கடிதங்கள் நானே தயாரித்தேன். ஒன்று, நீங்கள் எழுதிய 'பூளமேடு பிரேமா'வை வைத்துக்கொண்டு, பிரேமா எழுதியதுபோல் ஒரு கடிதம் எழுதி, உங்களுக்கு அனுப்பினேன். அடுத்தது, பிரேமா எழுதிய 'ஏகலைவனின் ஏமாற்றம்' என்ற கதையை வைத்துக்கொண்டு, உருக்கமாக ஒரு கடிதம் நீங்கள் தயார் செய்ததுபோல் எழுதி, பிரேமாவுக்கு அனுப்பினேன். நீங்கள் இதற்கு முன்பு ஒருவரையொருவர் பார்த்திருக்காததால், என் குட்டு வெளிப்படவில்லை. விஷயத்தை உடைத்துச் சொல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டதால், இப்பொழுது கூறிவிட்டேன். பூளமேட்டிற்கும் பிரேமாவுக்கும் ஒருவிதச் சம்பந்தமுமில்லை; அதுபோல் ஏகலைவனுக்கும் ஏமாற்றத்துக்கும் யாதொரு தொடர்பும் கிடையாது' என்று கூறி முடித்தார் அம்பலவாணன்.

நாங்கள் இருவரும் அதிசயத்துடன் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டோம். கதைகளில் வரும் கல்யாணத்தைப்போல் அல்லவா எங்கள் கல்யாணமும் நடந்திருக்கிறது!

தில்லியில் திருவள்ளுவர் தினத்தை வழக்கம்போலத் தமிழ்ச் சங்கம் விமரிசையாகக் கொண்டாடிற்று. வள்ளுவர் பெருமையையும் குறளின் உயர்வையும் விளக்கி, அன்பர்கள் பலரும் சொற்பொழிவாற்றினார்கள். புத்தம் புதிய கோணங்களிலிருந்து குறளை ஆராய்ந்த இலக்கியப் பிரியர்கள் பலர், தத்தம் கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். பாலகன் ஒருவன் மடை திறந்தாற்போலத் தங்குதடையேதுமின்றிக் குறள் வாசகங்களைப் பொழிந்து தள்ளியதையும் குறள் தினத்தின் சிறப்பு அம்சமாகக் குறிப்பிட வேண்டும்; சுமார் இருநூறு குறள்களை மனப்பாடம் செய்துள்ள அந்த ஏழு வயதுச் சிறுவனின் மழலை மொழியில் குறளைக் கேட்பது ஒரு மகிழ்ச்சிகரமான அனுபவம்.

சங்க அக்ராசனரான டாக்டர் கிருஷ்ணன் தலைமையில் நடந்த இந்த நிகழ்ச்சியில் ஸ்தல அன்பர்கள் தவிர, சென்னையிலிருந்து வந்திருந்த பெண்மணி ஒருவரும் பேசினார். ஸ்ரீமதி இளம் கனகசவுந்தரி 'திருக்குறள் வெறும் வரட்டு நீதி நூல் அல்ல. உயரிய தத்துவங்களை விளக்கும் பெரும் நூல்; அந்த நூல் எல்லோரும் படித்துப் படித்து இன்புறக் கூடியது; வெவ்வேறு வகைச் சுவைகளையும் ஒருங்கேகொண்ட சிறந்த இலக்கியமாகும்' என்று கூறினார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆராய்ச்சி மாணவியாக இருந்துவரும் அவர், சிறந்த நாவன்மை கொண்டவர்; அவரது கணவர் ஸ்ரீசாலை இளந்திரையனும் பேசினார். வள்ளுவரின் சொற்களையும் கருத்துக்களையும் பிந்திய நூலாசிரியர்கள் தமது நூல்களில் பொன்னேபோலப் போற்றி, அங்கங்கே பொதிய வைத்திருப்பதை விவரித்தார். வானொலித் தமிழ்ச் செய்திப் பிரிவில் பணியாற்றும் ஸ்ரீ மு. ராமநாதன், உலக மக்களில் எல்லா மதத்தினருக்கும் பிரிவினருக்கும் ஏற்பதான வகையில், சிறந்த நூல் குறள் என்பதைத் தக்க எடுத்துக் காட்டுகளுடன் விவரித்தார். அவரது பாலகன் சுதர்சன் சுமார் முப்பது குறள்களைத் தங்குதடையின்றி உற்சாகமாக சபையில் எடுத்துரைத்ததை எல்லோரும் வியந்து பாராட்டினார்கள்.



"வர மாசத்திலேயாவது வீடு கிடைக்குமான்னு நம்ம ஜோஸ்யரைப் போய் கேட்டுட்டு வருகிறேன் தாத்தா..."

"அட எப்போதிலேந்து உனக்கு இந்த ஜோசியத்திலே நம்பிக்கை...!"

"அதெல்லாம் ஒண்ணுமில்லே...... நம்ம ஜோசியர் இருக்கிற வீட்டிலே ஒரு போர்ஷன் காலியாறதாம்...அது எப்போன்னு கேட்டுகிட்டு வந்தேன்."

விஞ்ஞானமாயினும் இலக்கியமாயினும் சுவை குன்றாமல் பேசி, கேட்போரை அப்படியே கவரும் உயர் திறன்கொண்ட டாக்டர் கிருஷ்ணன் தமது உரையில், குறள் உலகப் பெரு நூல்களில் சிறப்பான தென்பதை விளக்கினார். 'வாழ்க்கையைச் செம்மையாக உருவாக்க வழி காட்டும் சிறந்த நூல்கள் பிரிவில் திருக்குறளுக்கு உன்னத ஸ்தானம் உண்டு' என்று கூறினார். வள்ளுவர்பிரான் மேதையைப் புகழ்ந்து பாராட்டுவதோடு நின்று விடாமல், எல்லோரும் குறளைப் பயின்று பலனடைய வேண்டும். இளம் பிராயத்திலேயே குறளைப் படிக்கும் பழக்கம் பெருக வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

குறளைப்பற்றி நினைக்கையில், வ. வெ. சு. அய்யரின் ஆங்கில மொழி பெயர்ப்புப் பிரதிகள் எல்லாம் தீர்ந்துபோயிருக்கும் விஷயம் நினைவிற்கு வருகிறது. தில்லித் தமிழ்ச் சங்கம் ஊக்கத்தின்பேரில் ஸ்ரீ அய்யரின் குமாரர் பல ஆண்டுகளுக்கு முன் மொழி பெயர்ப்பை வெளியிட்டார். அந்தப் பிரதிகள் இப்போது தீர்ந்து போயிருப்பதால், பிறமொழி மக்கள் இந்தத் தமிழ்ச் செல்வத்தைப் படித்துப் பயனுறுவதற்கு வசதியாக, தில்லித் தமிழ்ச் சங்கம், ஆங்கில மொழி பெயர்ப்பிற்கு மறு பதிப்புப் போட்டு, மலிவான விலையில் விற்க ஏற்பாடு செய்யலாம். சிறந்ததொரு பணியாக அது விளங்கும். இதே மாதிரி இதர தமிழ்ச் செல்வங்களையும் வெளியிடும் பணியில் தமிழ்ச் சங்கம் ஈடுபடலாம். ஆனால், பண வசதிக் குறைவான இந்தத் தலைநகர் ஸ்தாபனத்திற்கு, தமிழகத்தின் மடாலயங்கள் பெரும் நிதி கொடுத்து உதவ முன்வர வேண்டும்.

ஃ ஃ ஃ

தில்லி 'ஸ்டடி சர்க்கிள்' என்ற ஆராய்ச்சிக் கழகத்தின் ஆண்டு தினம் சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று சிறப்பாக நடந்தேறிற்று. இந்திய அரசாங்கத்து மந்திரி ஸ்ரீ எஸ். கே. படீல் தலைமை வகித்தார். 1956-ல் நிறுவப்பட்ட இந்த ஸ்தாபனம், அறிவுப் பசியுள்ள இளைஞர்கள், தாம் இன்ன நூல்களைப் படித்துப் பலன் காணலாம் என்பதை உணர்த்துவதற்காக, அந்தந்தத் துறையில் சிறப்புமிக்க நிபுணர்களைக்கொண்டு பிரசங்கங்களுக்கு ஏற்பாடு செய்து, பலனுள்ள பணி செய்து வருகிறது. டாக்டர் கே. எஸ். கிருஷ்ணனைப் போஷகராகக்கொண்ட கழகம் இது.

'இந்தக் காலத்தில் ஏராளமான நூல்கள் வசதியாகக் கிடைக்கின்றன. எல்லாவற்றையும் படித்துப் பயனுறுவது விரும்பத்தக்கதே. எனினும், அதற்கான அவகாசமே பொதுவாக இருப்பதில்லை. ஆனால், நாளுக்கு நாள் வளர்ந்து வரும் சமூகப் பொருளாதார, அரசியல் துறைகளின் போக்குகளைக் கவனித்துப் பலன் காணுவதற்கு வழிகாட்டி உதவுவதற்கான இத்தகைய கழகங்கள் அவசியம்' என்று ஸ்ரீ படீல் கூறினார். வாழ்க்கையில் இறங்கிவிட்ட பின்னரும், அறிவு விருத்திக்கென நல்ல நல்ல நூல்களைப் படிப்பதற்கெனச் சற்று அவகாசம் இருக்கும்படிப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று மந்திரி அறிவுறுத்தினார்.

ஃ ஃ ஃ

'மலையாள மொழி வரலாறு' என்ற மலையாள மொழி நூலை சாஹித்ய அகாடெமி, ஆங்கிலத்திலும் இந்திய மொழிகளிலும் மொழி பெயர்த்து வெளியிடப் போகிறது. பிரபல சரித்திர ஆசிரியரான ஸ்ரீ பி. கே. பரமேஸ்வரன் நாயர் எழுதியுள்ள அந்த வரலாற்று நூல், விரைவில் இதர மொழிகளில் வெளிவரப் போகிறது. இந்திய மொழிகளின் வரலாற்றை, பல்வேறு மக்களும் நன்குணர்ந்து பரிச்சயம் செய்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன், ஒவ்வொரு மொழிபற்றிய வரலாறும் இப்போது தயாராகி வருகிறது; இதைப்போலவே தமிழ் முதலான நூல்களின் வரலாறுகளும் ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் வெளியிடப் போகிறார்கள். அந்த வரிசையில் இந்த மலையாள நூல் முதலாவதாகும்.

இலங்கைக் கலகம்

★

சென்ற சில தினங்கள்வரையில் இலங்கை மிகமிகப் பயங்கரமான சோதனைகளுக்கு உட்பட்டிருந்துவிட்டு, இப்பொழுதுதான் நிலைமை சற்று அமைதியடைந்திருக்கிறது. ஆயினும், அவசரகாலச் சட்டமும் ஊரடங்கு சட்டமும் இன்னமும் அமுலில் இருந்து வருகின்றன. இவை தளர்த்தப்பட்டால் நிலைமை என்னவாகுமோ என்று பலரும் பயப்படுவதை முன்னிட்டு, ஊரடங்குச் சட்டம் சிறிதும் தளர்த்தப்பட மாட்டாதென்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது. அவசர காலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு, மிகவும் கண்டிப்பான நடவடிக்கைகளை அரசாங்கம் தயவு தாட்சண்யமின்றி எடுத்துக்கொண்டதால்தான் கலகம் கட்டுக்கடங்கியதென்று கூறவேண்டும். இக்கடிதத்தைத் தொடருவதன் முன்னால் ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்துவது அவசியமாகிறது. அவசர காலச் சட்டமும் அதன்கீழ் பத்திரிகைகள் சம்பந்தமான அவசரச் சட்டமும் அமுலில் உள்ளபடியினால் அரசாங்கம் அதிகாரபூர்வமாக வெளியிட்டுள்ள செய்திகளைமட்டும் ஆதாரமாகக் கொண்டு இக்கடிதம் எழுதப்படுகிறது.

கலகத்தின் முதல் இரண்டு தினங்கள் மிக மிகப் பயங்கரமாயும் கவலைக்கிடமானதாயுமிருந்தன. கொழும்புவைச் சுற்றியுள்ள பல இடங்களையும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் தங்களுடைய சகல உடைமைகளையும் கைவிட்டு, உயிருக்குப் பயந்து அகதி முகாம்களுக்கு ஓடிவந்தார்கள். இவர்களில் இந்தியத் தமிழர்களும் பலர். இந்தியத் தமிழர்களை ஒரு தனி முகாமில் வைத்து இந்திய ஹைகமிஷனர் ஸ்ரீகண்டேவியா பராமரித்து வருகிறார். இலங்கைத் தமிழர்களை வேறு இரு முகாம்களில் வைத்து இலங்கை அரசாங்கம் பராமரித்து வந்தது. இதேபோல யாழ்ப்பாணத்திலும் சுமார் இரண்டாயிரம் சிங்கள அகதிகள் முகாம்களில் திரட்டி வைக்கப்பட்டிருந்தார்கள். இப்பொழுது தமிழ் அகதிகள் யாழ்ப்பாணத்துக்கும், சிங்கள அகதிகள் கொழும்புக்கும் விசேஷக் கப்பல்களின்மூலம் மாற்றப்பட்டுவிட்டனர். தடைப்பட்டிருந்த இலங்கை–இந்திய ரயில், தபால் தந்தி, விமானப் போக்கு வரத்துகளும் இப்பொழுது மறுபடி ஆரம்பமாகிவிட்டன.

இலங்கையில் நடைபெற்ற கலகம் மொழி வெறியர்களால் ஆரம்பிக்கப்பட்டதென்றாலும், உண்மையில் இதை வகுப்புக் கலகம் என்று சொல்லி விடுவதற்கில்லை. சேதமடைந்தது தமிழர்கள் மட்டும்தான் என்றும் கூறிவிட முடியாது. இரு தரப்பிலும் சேதம் ஏற்பட்டுள்ளது. காரணம் வகுப்பின் பெயரைச் சொல்லிக்கொண்டு காடையர்களும் மாஜி குற்றவாளிகளும் செய்த அநியாயங்களே பெரிய கலகமாக ஓய்ந்தது. கொலை, கொள்ளை, தீ மூட்டுதல் ஆகியவற்றுக்கு மிகக் கடுமையான தண்டனை விதிக்கப்படுமென்று பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள்.

மக்கள் மனதில் வகுப்பு வெறி உண்டுபண்ண ரகசிய ரேடியோ நிலையம் ஒன்று இயங்கி வருவதாயும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த ரேடியோ நிலையம் தாறுமாறாகப் பச்சைப் பொய்களை ஒலிபரப்பி, வகுப்பு வெறியைக் கிளப்பிவிட்டு வந்தது. அந்த நிலையத்தைக் கண்டுபிடிக்கத் தீவிரமான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இம்முயற்சி இது வரை வெற்றி பெற்றதாகத் தெரியவில்லை.

பத்திரிகை விஷயத்தில் பலமான தணிக்கை அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. தினசரி கவர்னர் ஜெனரல் நடத்தும் மகாநாட்டில் கொடுக்கப்படும் செய்திகளைத் தவிர, மற்றவைகளைப் பிரசுரிக்கக் கூடாதென்றும், வெளிநாடுகளுக்கு அனுப்பக் கூடாதென்றும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஊரடங்கும் சட்டம் அமுலில் இருப்பதனால் மாலை ஆறு மணிக்கெல்லாம் ஊர் ஓய்ந்து விடுகிறது. இராணுவமும், கடற்படையும், போலீசும் நாடு முழுவதிலும் காவல் புரிகின்றன.

—ரவி.

டாடா பவர் கம்பெனியைச் சேர்ந்த ஸ்ரீ எஸ். கிருஷ்ணஸ்வாமிக்கும், ஸ்ரீ ஸி. ஆர் சுந்தரராஜன் புத்திரி சௌ. கல்யாணிக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தது

நா. நாகேஸ்வரன்

'பால் ஆறிப்போய்விட்டதே, இன்னுமா சாப்படவில்லை?'

'என்ன கமலா! நீ இன்னும் தூங்கப் போகவில்லையா?'

'எனக்குத் தூக்கம் வரவில்லை.'

'உங்க அப்பா, அம்மா?'

'ரெண்டு பேரும் தூங்கிவிட்டார்கள்.'

படுக்கையில் சாய்ந்திருந்தபடியே மேஜைமீது வைத்திருந்த டம்ளரை எடுத்துக்கொண்டேன்.

'ஒரு சமாசாரம்...' என்று ஆரம்பித்தாள் கமலா.

'என்ன?'

'இந்த வாரம் சண்டமாருதத்தில் ஒரு சிறு கதைப் போட்டிபற்றி 'அனௌன்ஸ்' பண்ணியிருக்கிறார்கள்.'

'உனக்கு இந்தக் கதைப் பயித்தியம் இன்னுமா விடவில்லை?' என்றேன் சிரித்துக்கொண்டே.

'கேலியிருக்கட்டும். நாம் ஒரு கதை எழுதியனுப்பினால் என்ன?'

'கதையா? நம்ம வாழ்க்கையே பெரிய கதைதானே!' என்று அலுத்துக்கொண்டேன்.

'சரி, அதையே கதையாய் எழுதிவிட்டால் என்ன?' என்றாள் கமலா விடாமல்.

'பேஷ், பேஷ்! உன் யோசனை பிரமாதம். நீயே கதையாய் எழுதிவிடேன்!'

'எனக்கு எழுதத் தெரிந்தால் உங்களிடம் ஏன் வரவேண்டும்? உங்களுக்குத்தான் கற்பனா சக்தி ஜாஸ்தி. நீங்களே நம்முடைய வாழ்க்கையைக் கதையாக மாற்றிச் சொல்லுங்கள். நீங்கள் சொல்லச் சொல்ல நான் எழுதிக் கொள்கிறேன்' என்றாள்.

'நான் கதை சொல்லுகிற மூடில் இல்லை' என்று தட்டிக் கழிக்கப் பார்த்தேன்.

'கண்டிப்பாக முடியவே முடியாதா?' அவள் குரலில் தொனித்தது கோபமா, கொஞ்சலா என்று எனக்குப் புரியவில்லை. இரண்டும் கலந்திருந்ததுபோல் இருந்தது!

என்ன செய்வது? சரி என்று வேறு வழியில்லாமல் ஒப்புக்கொண்டேன்.

'ஆனால் ஒரு கண்டிஷன்', என்றேன்.

'என்ன?' என்று வினவினாள்.

'நிஜப் பெயர்களுக்குப் பதிலாக வேறு பெயர்களைப் போடவேண்டும்' என்றேன்.

'அதுதான் தெரிஞ்ச விஷயமாச்சே. கதையில் வரும் பாத்திரங்கள் அனைத்தும் கற்பனையே' என்றாள் கமலா.

'ஏதேது, கதையெழுதுவதற்கு முன்னாலேயே கதாசிரியர் பாஷையைப் பேசுகிறாயே!'

கமலா லேசாகச் சிரித்துக்கொண்டே ஒரு நாற்காலியை இழுத்து என் கட்டிலின் பக்கத்தில் போட்டுக்கொண்டு, உட்கார்ந்து கொண்டாள்.

'பேப்பர், பேனா?' என்றேன்.

'ரெடி!' என்றாள் அவள்.

நேரம் போனது எனக்குத் தெரியவேயில்லை.

'என்ன இன்னுமா யோசனை?' என்ற குரல் கேட்டதும்தான், 'எழுதிக்கொள், சொல்லட்டுமா?' என்றேன்.

'உம்' என்று பதில் வந்தது.

ஃ ஃ ஃ

நான் பிறக்கும்பொழுதே அனாதைப் பயல்...

'நன்னாயிருக்கு, ஆரம்பிக்கும்போதே பயல் கியல் என்று' என்றாள் கமலா.

'சரி, பயல் வேண்டாம்! வெறும் அனாதை மட்டும் இருக்கட்டும்' என்றேன்.

நான் தாயாரின் கர்ப்பத்தில் இருக்கும்பொழுதே, என் தந்தை இறந்துவிட்டார். குடிப்பழக்கம் அதிகம்; அதனால் தீமை என்று முடிவு ஏற்பட்டது என்று பின்னால் தெரிந்துகொண்டேன். நான் பிறந்து மூன்று மாதங்களுக்கெல்லாம் என் தாயாரும் இறந்துவிட்டாள். போஷாக்குக் குறைவினால் உடல் பலவீனமே காரணம் என்று டாக்டர்கள் சொன்னார்களாம். சுருங்கச் சொன்னால் நான் குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் கம்பு....

'சரியாப் போச்சு, கோடாலி, கீடாலின்னு கதையெழுதினா, நமக்குப் பரிசு கிடைச்ச மாதிரிதான்' என்றாள் கமலா.

'அப்ப நீயே எழுதிக்கோ' என்றேன் காயிதத்துக்கொண்டவன்போல.

'இல்லே இல்லே, சும்மாச் சொன்னேன்' என்று பொய் சிரிப்புச் சிரித்தாள் கமலா. கதை எங்கே முற்றுப் பெருமல் போய்விடுமோ என்று அவளுக்குப் பயம்!

நான் வளர்ந்ததெல்லாம் என் மாமா வீட்டில். என்னைச் சீராட்டித் தாலாட்டிப் பாலூட்டி வளர்த்ததெல்லாம் என் மாமா, மாமிதான். அவர்களுக்கு என் மீது அவ்வளவு பிரியம். எனக்கும் அவர்கள்தான் தாய் தந்தையைப்போல.

எனக்கு ஐந்து வயதானபோது மாமிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அது அவர்களின் ஏகபுத்திரி. எனக்கு அந்தக் குழந்தை விளையாட்டுப் பொம்மை மாதிரி! நான் அதைத் தூக்கிக் கொஞ்சி விளையாடும் ஆர்ப்பாட்டத்தைப் பார்க்கும்போதெல்லாம் மாமா மாமிக்குக் குழந்தை பத்திரமாய் இருக்க வேண்டுமே என்ற பயம்! இருபது வருஷங்களுக்குமுன் நான் அந்தக் குழந்தையிடம் விளையாடிய விளையாட்டை நினைத்தால், எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. நானு அப்படியிருந்தேன் என்ற சந்தேகமே ஏற்படுகிறது.

'சரி, அவளுக்கு என்ன பெயர் வைக்கலாம்?' என்று கமலாவிடம் கேட்டேன்.

'கனகாம்புஜம்' என்று யோசனை சொன்னாள்!

'பிடிக்கவில்லை'

'பாரிஜாதம்'

'ஊஹூம்...'

'கோமளவல்லி' என்றாள்!

'அய்யய்ய! அதெல்லாம் வேண்டாம். மீனு என்று வைக்கலாம்' என்றேன்.

மாமா வீட்டில் நான் இருந்த பதினெட்டு வருஷங்களை என் வாழ்க்கையிலேயே பொன்னான காலம் என்றுதான் சொல்லவேண்டும். அதாவது நான் பள்ளிக்கூடத்தை முடித்துவிட்டு இண்டர்மீடியட் பாஸ் பண்ணும்வரை, நான் வீட்டைவிட்டு வெளியே போவதே கிடையாது. யாருடனும் பழகுவதும் கிடையாது. அதனால் எனக்கு சங்கோஜப் பேர்வழி என்று பட்டம்! ஆனால், என்னைவிட சங்கோஜப் பேர்வழி மீனு! என்னைக் கண்டாலே ஓடி ஒளிந்து கொள்வாள். போதாக்குறைக்கு மாமா, மாமி வேறு என்னை 'மாப்பிள்ளை, மாப்பிள்ளை' என்று தமாஷாகக் கூப்பிட ஆரம்பித்தார்கள். 'மாப்பிள்ளைக்கு என்று என்ன டிபன் வேண்டும்?' என்றுதான் மாமி என்னிடம் கேட்பாள்! என்னை மாப்பிள்ளை என்று யாராவது கூப்பிட்டுவிட்டால் போதும், மீனுவின் முகத்தில் எங்கிருந்தோ ஒரு சிவப்பு ஓடி வந்துவிடும். மாமா, மாமி நான் மீனுவைத்தான் கல்யாணம் செய்துகொள்வேன் என்று நிச்சயமாக நம்பியிருந்தார்கள்.

மீனு பார்ப்பதற்கு எப்படியிருப்பாள் என்று சொல்ல வேண்டாமா? மிகவும் அழகாயிருப்பாள் என்று சொன்னால் குறைத்துச் சொன்னதாகும். நல்ல சிவப்பு, சந்திரன்போன்ற வட்டமான முகம், தந்தத்தில் செதுக்கியது போன்ற மூக்கு, எப்பொழுதும் ஒரு முல்லைச் சிரிப்பு, அகன்ற விழிகளிலிருந்து சதா குறுகுறுப்புப் பார்வை, நீண்டு தொங்கும் பின்னல், கொடிபோன்ற உடல். இவை அனைத்தையும் வைத்து ஒரு பெண்ணைக் கற்பனை செய்து பாருங்களேன்! அவள்தான் மீனு.

'ஏன் அனாவசியமாகப் பொய் சொல்லுகிறீர்கள்!' என்று என் சிந்தனையை இடைமறுத்தது கமலாவின் குரல்.

'பொய் இல்லை கமலா, நிஜமாகத்தான்' என்றேன்.

மீனுவுக்கும் எனக்கும் இருந்த உறவு என்ன என்று கேட்கிறீர்களா? ஏதோ காதல், காதல் என்கிறார்களே, அதுவா என்று கேட்கிறீர்களா? அது காதலோ, அன்போ அல்லது வெறும் பாசமோ எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்ததெல்லாம் மீனு என்றால் எனக்கு உயிர். அவளுக்கும் என்னிடம் அபரிமிதமான பிரியம் என்று நினைக்கிறேன். அதைத் தவிர, அவள் என்னைப்பற்றி என்ன நினைத்தாளோ எனக்குத் தெரியாது...

'நான் சொல்லட்டுமா?' என்றாள் கமலா.

'இங்கே பாரு கமலா! இந்தக் கதை நான் என்னுடைய வாழ்க்கையைக் கூறுவதுபோலத்தானே இருக்க வேண்டும்! மீனு மனத்துக்குள் என்ன நினைத்தாள் என்பதெல்லாம் எனக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்?' என்றேன்.

'சரி, மேலே சொல்லுங்கள்' என்றாள் கமலா. அவளுடைய குரலில் ஏமாற்றம் இருந்ததுபோல் ஒலித்தது.

இவ்வளவு சந்தோஷமும் சாந்தியும் நிரம்பிய எங்கள் வாழ்க்கையிலும், கதைகளிலே வருமே, வாழ்க்கைப் படகைக் கவிழ்க்க வந்த புயல் என்று, அந்த மாதிரி ஒரு புயல் தோன்றியது. அதற்குக் காரணம் என்ன? ஒன்றுமில்லை, சின்ன விஷயம்தான். வாழ்க்கையிலே நாம் எவ்வளவோ காரியங்களைச் செய்கின்றோம். அவற்றைச் செய்யும்பொழுது மிகச் சின்ன விஷயங்கள் என்றுதான் கருதுகிறோம். அவற்றைப் பற்றிச் சிந்திப்பதுகூட இல்லை. ஆனால், பின்னால் எதிர்பாராத விளைவுகள் பெரிய அளவில் ஏற்படும்போதுதான், அந்த விளைவுகளுக்கெல்லாம் மூலகாரணம் நாம் சின்ன விஷயம் என்று நினைத்த ஒன்றுதான் என்று ஞானோதயம் ஏற்படுகிறது. கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வதில் என்ன புண்ணியம்?

எங்கள் வாழ்க்கையில் புயல் தோன்றியது என்று சொன்னேனே. அதற்கும் காரணம் ஒரு சின்ன விஷயம், நாங்கள் செய்த ஒரு சின்ன முடிவு என்று இப்பொழுதுதான் விளங்குகிறது.

எங்கள் ஊர் ஒரு சாதாரண டவுன். நான் வீட்டைவிட்டு அதிகம் போகாததற்குக் காரணங்களில் அதுவும் ஒன்று. ஊரிலே ஒரே ஒரு காலேஜ்; அதுவும் செகண்ட் கிரேட் காலேஜ். நான் இண்டர்மீடியட் பாஸ் பண்ணிய பிறகு, என்ன செய்வது என்ற பிரச்னை எழுந்தது. என்னை டாக்டருக்குப் படிக்க வைக்க வேண்டுமென்று என் மாமாவுக்கு ஆசை. செலவு அதிகமாகும் என்று தெரியும் அவருக்கு. அப்படியொன்றும் நிறையச் சொத்தும் இல்லை. ஐந்து ஏக்கர் மானம் பார்த்த நிலம். பல வருஷங்கள் தாலூகா ஆபீசில் தொடர்ந்து உழைத்துவருவதன் பலனாகப் பாங்கில் கொஞ்சம் சேமிப்பு. கஷ்டப்பட்டோ படாமலேயோ என்னை எப்படியும் டாக்டருக்குப் படிக்க வைக்க வேண்டுமென்ற உறுதி. எனக்கும் ஆசைதான். ஆனால், மாமா மாமியைவிட்டு, மீனுவைப் பிரிந்து பட்டணத்தில் ஐந்து வருஷம் இருப்பது எனக்குக் கொஞ்சமும் இஷ்டம் இல்லை. எவ்வளவோ மறுத்தேன். ஊரிலேயே ஏதாவது உத்தியோகம் பார்த்துக்கொண்டு வீட்டோடு இருப்பதாகச் சொன்னேன். ஆனால், மாமா விடவில்லை. மீனுவும் அவர் பக்கம் சேர்ந்துகொண்டாள். என்னுடைய எதிர்காலத்தில் அவளுக்கு அவ்வளவு அக்கறை! நான் படித்துவிட்டு வந்து ஊரிலேயே போர்டு போட்டுக் கொள்ளலாம் என்றாள். இந்தக் கூட்டணிக்கு முன்னால் ஒருவன் எம்மாத்திரம்? வேறு வழியின்றி ஒப்புக்கொண்டேன்.

நான் வீட்டிலிருந்து புறப்பட்ட காட்சியை என்னால் மறக்கவே முடியாது. என்னைக் கட்டாயப்படுத்தி, தைரிய மூட்டிப் பட்டணத்துக்குப் போகச் சொன்ன மீனு, நான் வண்டியில் ஏறும்போது விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள். பெண்களை என்னவென்று சொல்வது?

'என்ன கமலா, பேச்சையே காணோமே! சொன்னதையெல்லாம் எழுதியாய்விட்டதா?' என்று கேட்டேன்.

'ஊம்' என்றாள் அவள்.

மெடிகல் காலேஜில் நான்கு வருஷங்கள் உருண்டோடின. அந்த நான்கு வருஷங்களில் விசேஷமாகச் சொல்லக்கூடியது ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. குறிப்பாக ஏதாவது சொல்ல வேண்டுமானால், ஒவ்வொரு விடுமுறையிலும் நான் ஊருக்கு வந்ததைத்தான் சொல்லவேண்டும். சின்ன ஊரிலேயே வளர்க்கப்பட்ட எனக்குப் பட்டணத்திலே மோகமே ஏற்படவில்லை. சாதாரணமாகப் பட்டிக்காட்டிலிருந்து பட்டணத்துக்கு வருபவன், பட்டிக்காட்டையே மறந்துவிடுவான் என்று சொல்வார்கள். எனக்கோ, பட்டணத்திலிருந்து ஊருக்கு விடுமுறையில் வரும்போது எல்லாம், பாலைவனத்திலிருந்து பசுஞ்சோலைக்குத் திரும்புவதுபோன்ற உணர்ச்சியே ஏற்படும். விடுமுறை கழிந்து பட்டணத்துக்குத் திரும்ப வேண்டுமென்றால், துக்கம் நெஞ்சையடைத்துக் கொள்ளும்.

ஒவ்வொரு முறை வரும்போதும் மீனுவின் தோற்றத்தில் புதுப் புது மாற்றம். உலகம் அறியாத சிறுமியாயிருந்த அவள், அழகே திரண்டெழுந்த நங்கையாகப் பரிணமித்துக்கொண்டிருந்தாள். இயற்கையில் சங்கோஜம் படைத்தவள் ஆனாலும் முன்பெல்லாம் என்னுடன் சில சமயங்களில் சகஜமாகப் பேசுவாள். இப்பொழுது என்னைப் பார்க்கும்போதெல்லாம் ஒரு முகம் மலர்ந்த புன்னகை. ஆனால், பவள வாய் திறக்காது!

'அடடே, கற்பனை கட்டுக்கடங்காமல் போகிறதே!' என்று கேலிச் சிரிப்புச் சிரித்தாள் கமலா.

'சும்மா இரு கமலா, உனக்கு மீனுவைப் பற்றி என்ன தெரியும்?' என்று ஒரு போடு போட்டேன்.

'ஓஹோ!' என்று சிரித்துக்கொண்டாள்.

நான்காவது வருஷம் கோடை விடுமுறை கழிந்து ஐந்தாவது வருஷப் படிப்புக்காகப் பட்டணத்துக்கு வந்தபோதுதான், என்னுடைய வாழ்க்கையில் புயல் உருவாகியது. அப்பொழுதுதான் நான் முதல் முதலில் சந்தித்தேன்...

'கமலா, அவளுக்கு என்ன பெயர் வைக்கலாம்?' என்றேன்.

'தாடகை அல்லது சூர்ப்பனகை என்று வையுங்களேன்!' என்றாள் கமலா.

'கமலா, உனக்கு ஏன் இப்படிக் கோபம் பொத்துக்கொண்டு வருகிறது? பொறாமைப்பட வேண்டியவள் மீனுதானே!' என்றேன்.

ஆம், அப்பொழுதுதான் நான் முதன் முறையாகச் சந்தித்தேன் சுந்தரியை. சுந்தரி அந்த வருஷம்தான் காலேஜில் சேர்ந்திருந்தாள். ஏறக்குறைய மீனுவின் வயதுதான். அவர்களுக்குள் ஒரே ஒரு வித்தியாசம்தான். மீனு பட்டிக்காட்டுப் பெண் என்றால், சுந்தரி அசல் பட்டணத்துப் பெண்! அதுவும் அழகும் சேர்ந்து கொண்டால் கேட்கவா வேண்டும்?

சுந்தரியை நான் முதல் தடவை சந்தித்தது—சந்தித்தது என்று சொல்வது தவறு, பார்த்தது—காலேஜ் 'காரிடோர்'ல்!



வகுப்பு முடிந்து நான் வெளியே வந்து கொண்டிருந்தபோது, நான் அவளைத் தாண்டிச் செல்ல நேரிட்டது. நான் அவளைக் கவனிக்கக்கூட இல்லை. என் எதிரில் வந்துகொண்டிருந்த ஒரு பெண், என்னைக் கடந்து செல்லும்போது அரைக் கணம் நின்று தன் கடைக்கண் பார்வையை என்மீது வீசியபோதுதான் நான் அவளைப் பார்த்தேன். அவளுடைய பார்வையிலேதான் எவ்வளவு போதை! நானும் அவளைப் பார்க்காததுபோல ஒரு கணம் தயங்கி நின்றேன். அதற்குப் பிறகு எங்களுக்குள் உறவு எப்படி மலர்ந்தது என்பதை நான் சொல்லத் தேவையில்லை. இந்தக் காலத்துக் காலேஜ் மாணவர்கள் யாரைக் கேட்டாலும் சொல்லுவார்கள்! அவளைச் சுற்றி நான் வட்டமிடுவது, எனக்காக அவள் காத்திருப்பது தனி இடங்களில் நாங்கள் சந்திப்பது எங்களைத் தவிர உலகத்தில் யாருமே இல்லை என்ற எண்ணம்! பீச், சினிமா ஜோடியாய்ப் போவது! என் பர்ஸ் கரைய ஆரம்பித்தது என்று நீங்களே ஊகித்துக் கொள்ளலாம்.

சுந்தரியின் வெறி தலைக்கேறியிருந்த எனக்கு, முதல் இரண்டு விடுமுறைகளில் ஊருக்குச் செல்ல இஷ்டமில்லை. பரீட்சைக்காகக் கஷ்டப்பட்டுப் படிக்க வேண்டுமென்றும், ஊருக்கு வந்தால் படிக்க முடியாமல் போய்விடும் என்றும் சாக்குச் சொல்லி மாமாவுக்கு எழுதி விட்டேன். மாமா, பாவம்! அப்பாவி மனுஷர்! மாமி, மீனுவுக்கு என்னைப் பார்த்து யுகம்போல் ஆகிவிட்டதாகும். ஆனால், என்னுடைய படிப்பே பிரதானம் என்றும், என்னுடைய இஷ்டத்துக்குக் குறுக்கே நிற்க விரும்பவில்லையென்றும் எழுதினார். செலவுக்கு வேறு மாதம் மாதம் பணம் அனுப்பிக்கொண்டிருந்தார். தன்னுடைய சொந்தத் தேவைகளைத் தியாகம் செய்து, எவ்வளவு சிரமப்பட்டு அனுப்பியிருக்க வேண்டும்? அந்தப் பணம் எல்லாம் சுந்தரியைக் குஷிப்படுத்தத்தான் பயன்பட்டது என்று அவருக்கு எப்படித் தெரியும்?

சுந்தரியைத் தவிர, எனக்கு வேறு நினைவேயில்லை. அவளையே கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்று தீவிர ஆசை. ஆனால், அவளிடம் கேட்கப் பயம். சுந்தரி பணக்காரப் பெண். நானோ அனாதை. ஏழைக் குடும்பத்தில் வளர்ந்தவன். பரீக்ஷையில் பாஸ் பண்ணி டாக்டர் வேலை ஆரம்பித்த பிறகு, அவளைக் கேட்கலாம் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது கேட்டால் சுந்தரியின் குடும்பத்தார் மறுக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை. அவர்கள் மறுத்தாலும் சுந்தரி 'என்னைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன் என்று விடாப்பிடியாக நிற்பாள் என்ற உறுதியும் எனக்கிருந்தது. அவள் என்னிடம் பழகிய விதத்திலிருந்து நான் வேறு என்ன முடிவுக்குத்தான் வர முடியும்?

ஃ ஃ ஃ

எப்படியோ பரீக்ஷையும் பாஸ் பண்ணி மீனு சொன்னபடிப் போர்டும் போட்டு விட்டேன். கத்துக்குட்டி டாக்டருக்கு 'பிராக்டிசு'ம் பரவாயில்லை. வீட்டிலே எல்லோருக்கும் சந்தோஷம். எனக்கும் சந்தோஷம்தான். ஆனால், என் மனம் வீட்டில் இல்லை. சுந்தரி என் மனதில் ஒரேயடியாக இடம் பெற்ற பிறகு, மீனுவைப் பார்க்கும்போது முன்பெல்லாம் எனக்கேற்பட்ட ஆனந்தம் எப்படி ஏற்பட முடியும்? என்னிடம் ஏற்பட்ட மாறுதலை அவர்கள் கவனித்தார்களோ, இல்லையோ தெரியாது. கவனித்தாலும் வெளியில் கர்ட்டிக்கொள்ளவில்லை.

ஒரு நாள் காலை எல்லோரும் சாப்பிட்டு முடிந்த பிறகு மாமா என்னிடம் வந்து,

'என்ன மாப்பிள்ளை, உன் கல்யாணத்தைச் சீக்கிரமாகவே முடித்துவிட வேண்டும். படிப்பும் முடிந்துவிட்டது. டாக்டர் வேலையும் ஆரம்பித்தாய் விட்டது. இனிமேல் தாமதிப்பதில் அர்த்தம் இல்லை' என்றார்.

எனக்கு விஷயம் புரிந்துவிட்டது. எனக்கும் மீனுவுக்கும் சீக்கிரத்திலேயே கல்யாணம் நடத்தி வைக்க வேண்டுமென்று அவருக்கு ஆசை! நான் என்ன பதில் சொல்லுவது? ஏதாவது பதில் சொல்லித்தானே ஆகவேண்டும்?

சிரித்துக்கொண்டே 'இப்ப என்ன அவசரம், மாமா?' என்றேன்.

'உனக்கு அவசரம் இல்லையென்றால் மீனுவுக்கு அவசரம் இல்லையா?' என்றார்.

நான் என்ன சொல்லுகிறேன் என்று தெரியாமல், 'மீனுவுக்கென்ன மாமா மாப்பிள்ளையா கிடைக்காமல் போய்விடுவான்? நான் நல்ல மாப்பிள்ளையாகத் தேடித் தருகிறேன்' என்று உளறிக் கொட்டினேன்.

மாமா பேச்சு மூச்சற்றுவிட்டார். மாமாவின் முகத்தில் ஏற்பட்ட மாறுதலை சிறந்த கதாசிரியராக இருந்தால், அழகாக எடுத்துச் சொல்லுவார். என்னால் எப்படி முடியும்? அதை நான் சொல்லாமல் இருந்தாலே நல்லது. மாமாவுக்கே இவ்வளவு அதிர்ச்சி என்றால், கதவோரத்தில் நின்றுகொண்டு, எங்கள் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்த மீனுவுக்கு எப்படி இருந்திருக்கும்? பாவம், என்னையே நம்பியிருந்த அந்தக் களங்கமற்ற பெண்ணுக்கு, என் சொற்கள் காதில் ஈயத்தை உருக்கி ஊற்றியதைப்போல் அல்லவா இருந்திருக்கும்? நான் அதைப் பற்றியெல்லாம் அப்பொழுது கவலைப்பட்டேனா என்ன? என்னுடைய நினைவு முழுவதும் சுந்தரியிடம்தானே?

என்னடா, இவ்வளவு நன்றி கெட்ட பாவி உலகத்தில் இருப்பானா என்று ஆச்சரியப்படுகிறீர்களா? நான் ஒருத்தன் இருந்தேன் என்று நானே சொன்னால், நீங்கள் நம்பித்தானே ஆகவேண்டும்?

அடுத்த சில நாட்கள் எனக்கு நரகத்தைப்போலிருந்தன. அந்த வீட்டில் தொடர்ந்து இருக்க எனக்குத் தைரியம் இல்லை. சீக்கிரமே சுந்தரிக்கு எழுதி, என் திருமணத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று யோசனை பண்ணிக் கொண்டிருந்தேன். மாமா, மாமி தங்கள் அதிர்ச்சியைக் காட்டிக் கொள்ளாமல் ஒன்றுமே நடக்காததுபோல் இருந்து விட்டார்கள். அவர்களுக்கு அவ்வளவு பெருந்தன்மை. மீனுமட்டும் என் கண்ணெதிரிலேயே தென்படுவதில்லை. அவள் மனது என்ன வேதனைப்பட்டதோ?

'கமலா, தூங்கிவிட்டாயா? எழுதிக் கொண்டிருக்கிறாயா?' என்று கேட்டேன்.

'இல்லை, எழுதிக்கொண்டுதான் இருக்கிறேன்' என்றாள்.

அவளுடைய குரலில் ஏன் ஒருவித மாறுதல்?

நாலைந்து நாட்கள் போனபின் ஒரு நாள் சுந்தரிக்கு லெட்டர் எழுதிக்கொண்டிருந்தேன். 'ஸார், தபால்' என்று என் பெயரைச் சொல்லித் தபால்காரன் அழைத்தான். ஓடோடியும் போய்க் கவரை வாங்கிக்கொண்டேன். நிச்சயமாகச் சுந்தரியிடமிருந்துதான் வந்திருக்கும் என்று எதிர்பார்த்தேன்.

பிரித்துப் பார்த்தால் உலகமே சுற்றுவதுபோலிருந்தது. அது சுந்தரியின் திருமண அழைப்பிதழ். சுந்தரி என்னை ஏமாற்றி விட்டாள். என்னுடைய நிலையைச் சொல்ல வேண்டுமானால், 'உடைந்தது உள்ளம், சிதைந்தது காதல்' என்றுதான் சொல்ல வேண்டும்.

கமலா அடக்க முடியாமல் சிரித்துக் கொண்டிருந்தாள்.

பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி" REGD

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் அசல் விஜயகரம் மருந்து. எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்

Dr. பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,
19, தெற்குமாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்-4. போன்: 71354
கும்பகோணம் கிளை: 7, சாரங்கபாணி கோவில் கீழ வீதி.

'அடேடே, என்ன திடீரென்று வீட்டுப் பாஷையிலிருந்து இலக்கியத் தமிழுக்கு இறங்கி விட்டீர்கள்!' என்றாள் மூச்சுத் திணறிக்கொண்டே.

எனக்கும் சிரிப்பு வந்து விட்டது!

'இந்த மாதிரி நெருக்கடியான கட்டங்களிலே இந்த மாதிரி பாஷையைப் பிரயோகிப்பதுதானே இப்பொழுது பாஷன்?' என்றேன்.

வேடிக்கைக்காகச் சொல்லவில்லை. நிஜமாகவே என்னுடைய மனோநிலை அப்படித்தான் இருந்தது. அன்றிரவு முழுவதும் தூக்கம் இல்லை. அடுத்த நாள் எழுந்திருக்கும்போதே லேசாகக் காய்ச்சலும், கை கால் நடுக்கமும். என்ன செய்வது? டாக்டருக்குக் காய்ச்சல் என்றால் வியாதியஸ்தர்கள் விட்டுவிடுகிறார்களா? வழக்கமாக வரும் ஒரு 'பேஷண்ட்' இஞ்செக்ஷன் போட்டுக் கொள்வதற்காகக் காத்துக் கொண்டிருந்தான். அவனுக்கு ஒரு தீராத வியாதி. அந்த வியாதிக்கு அமெரிக்காவில் ஒரு அற்புத மருந்து கண்டுபிடித்திருக்கிறார்கள் என்று எனக்கு வரும் பத்திரிகைகளில் படித்தேன். அந்த இஞ்செக்ஷன் மருந்தை அமெரிக்காவிலிருந்து தருவித்து இந்த 'பேஷண்டு'க்கு தினமும் ஒரு இஞ்செக்ஷன் கொடுத்துக் கொண்டு வந்தேன். அன்றைக்கும் வழக்கம்போல இஞ்செக்ஷன் 'ட்யூபி'ல் மருந்தை நிரப்பி, ஊசியைக் கண்ணெதிரே பிடித்துக்கொண்டு மருந்தின் அளவை 'அட்ஜெஸ்ட்' பண்ணிக்கொண்டிருந்தேன்.

விரல்கள் நடுக்கத்தால் வழக்கத்துக்கு மாறாக அதிகமாக அழுத்திவிட்டன. ஊசியிலிருந்து மருந்து பீறிட்டுக் கொண்டு என் கண்களில் அடித்து விட்டது. கண்களில் ஒரே எரிச்சல், நெருப்பைக் கண்ணில் போட்டது போன்ற உணர்ச்சி. அலறிக்கொண்டு கீழே விழுந்துவிட்டேன்.

'கமலா' என்று அழைத்தேன்.

'ஊம்.'

'எழுதிக்கொண்டுதானே இருக்கிறாய்?' என்று கேட்டேன்.

'ஊம்' என்றாள்!

என்னுடைய அலறலைக் கேட்டு மாமியும், மீனுவும் பதறியடித்துக்கொண்டு வந்தார்கள். மாமா வீட்டில் இல்லை. மார்க்கெட்டுக்குப் போயிருந்தார். என்னுடைய கண்களில் கொள்ளியை வைத்தது போல் இருந்தது. கண்களிலிருந்து குபு, குபு என்று நீர் பெருகிக்கொண்டிருந்தது. வலி தாங்க முடியவில்லை. 'ஐயோ, அப்பா, அம்மா!' என்று அலறிக்கொண்டிருந்தேன். மீனு ஓட்டமாக ஓடிப்போய்க் கண் டாக்டரை அழைத்துக்கொண்டு வந்தாள். டாக்டர் ஏதேதோ 'லோஷன்' 'ஆயின்ட்மெண்ட்' எல்லாம் போட்டு கண்ணை 'பேண்டேஜ்' செய்துவிட்டுப் போனார். ஒரு வாரத்துக்கு அதை அவிழ்க்கக்கூடாது என்று சொன்னார். வலி தெரியாமல் இருப்பதற்காக ஒரு இஞ்செக்ஷனும் போட்டார். எனக்கு உள்ளூரப் பயம். 'டாக்டர், பார்வை போய்விடாதே?' என்றேன் தழதழத்த குரலில். 'என்ன ஸார், டாக்டராய் இருந்துகொண்டு நீங்களே பயப்படலாமா? கண் லேசாக வெந்து போயிருக்கிறது. ஆனால், நீங்கள் பயப்படுவதுபோல் ஒன்றும் நேராது' என்று சமாதானம் சொல்லிவிட்டுப் போனார். எனக்கென்னமோ, அந்த வார்த்தைகள் நம்பிக்கை ஊட்டுவதாக இல்லை.

அந்த ஒரு வாரத்தை என்னவென்று சொல்வேன்! மாமா, மாமி என்னிடம் காட்டிய அன்பையும், மீனு இரவு பகலாக என் கட்டிலின் அருகே உட்கார்ந்து கொண்டு எனக்குச் செய்த சிகித்சையையும், எனக்குத் தைரியமூட்டும் வகையில் கூறிய ஆறுதல் மொழிகளையும் நினைத்தால், இப்பொழுதுகூட எனக்கு அழுகை வருகிறது. அவ்வளவு அன்புக்கும், தன்னலமற்ற சேவைக்கும் தகுதியுடையவனா நான்?

'என்ன, நிஜமாகவே அழ ஆரம்பித்து விட்டீர்கள்?' என்று பரிந்துகொண்டு தன் புடவைத் தலைப்பால் என் கண்களைத் துடைத்தாள், கமலா.

கண்களின் கட்டவிழ்க்கும் நாள் வந்தது. எல்லோரும் என்னைச் சுற்றிக் கூடியிருந்தார்கள். மீனுவுக்கு ரொம்ப உற்சாகம். கட்டவிழ்த்தார்கள். புண் ஆறி

Tushar
VANASPATI
2 பவு. 5 பவு. & 10 பவு. டின்களில் கிடைக்கும்.
துஷார் வனஸ்பதி
விடமின் ஏ & டி கூடியது.
துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிட்., கர்நூல்

விட்டது, ஆனால் பார்வை? ஒரே அந்தகாரம்! 'ஐயோ' என்று உரக்கச் சத்தம் போட்டு விட்டேன். 'கோ' என்று கதறினார்கள் என்னைச் சுற்றியிருந்த மூவரும்.

என்ன, விசித்திரம்! இரத்தத்திலே கலந்தால் தீராத வியாதியையும் குணமாக்குகிறது ஒரு மருந்து. அதே மருந்து கண்களில் பாய்ந்தால் ஒருவனைக் குருடனாக்கி விடுகிறது!

என்னுடைய வாழ்க்கையே முடிந்து விட்டது. என்னை நம்பி வாழ்ந்த மூவர் வாழ்க்கையைக் குலைத்துவிட்டேன். அவர்களுடைய கனவுகளைக் கலைத்து விட்டேன். அவர்களுக்குத் துணையாக இருக்க வேண்டிய நான், அவர்களுக்குப் பெரிய பாரமாகிவிட்டேன். கண்களை இழப்பதற்குப் பதிலாக ஒரேயடியாகச் செத்துப் போயிருந்தாலும் நல்லது என்ற எண்ணமே என்னை வாட்டியது.

'உன்னுடைய துரோகத்துக்கும், உன்னுடைய நன்றி கெட்ட செயலுக்கும் உனக்குக் கிடைத்த தண்டனை நியாயமானதுதான்' என்று சொல்லுகிறீர்களா? நீங்கள் சொல்லுவது உண்மைதான். நான் மறுக்கவில்லை. வாழ்க்கையிலே தவறு செய்யும் ஒவ்வொருவனும் தான் தவறு செய்வதாக உணர்ந்துதான் செய்கிறானா? அப்படியிருந்தால் உலகமே திருந்திவிடுமே! நல்லது, கெட்டது, பாவம், புண்ணியம் என்ற வித்தியாசத்துக்கு இடமேது?

என்னை வெறுக்க வேண்டிய மனு, என்னுடைய துரோகத்துக்காக நான் அடைந்த தண்டனையைப்பற்றி மகிழ்ச்சியடைய வேண்டிய மனு, என்னைக் கண்ணை இமை காப்பதுபோல என் (கண்களை என் இமைகள் காக்கத் தவறிவிட்டன!)க் காத்து வந்தாள். அதுதான் எனக்கு விந்தையாயிருந்தது. ஒரு நாள் இருவரும் தனியாக இருந்த சமயம், 'மனு, என்னைக் கட்டிக்கொண்டு இன்னும் எவ்வளவு நாள் அழப் போகிறாய்?' என்று கேட்டேன்.

'அப்படியெல்லாம் சொல்லாதீர்கள் அத்தான்?' என்று என்னை அன்போடு கடிந்துகொண்டாள்.

'நிஜமாகத்தான் கேட்கிறேன் மனு, கல்யாணம் செய்துகொண்டு சந்தோஷமாக இருக்க வேண்டிய நீ, எனக்காக ஏன் உயிரை விடவேண்டும்?' என்றேன்.

'உங்களைத் தவிர எனக்கு வேறு யார் இருக்கிறார்கள்? உங்களைத் தவிர வேறு யாரையும் கல்யாணம் செய்து கொள்ளப் போவதில்லை' என்றாள்.

'என்ன, என்னையா?' என்றேன்.

'ஆமாம், ஏன்?' என்று கேட்டாள்.

'இந்தக் குருடனையா?' 'என்று கேட்டேன்.

'ஆமாம்' என்றது பதில்.

அவளுடைய பதில் எனக்குச் சந்தோஷத்தைத் தருவதற்குப் பதிலாக என்னுடைய புண்களைக் கிளறுவதுபோல் இருந்தது. காதல், தியாகம் என்றெல்லாம் சொல்கிறார்களே, அவைகளுக்கு அர்த்தம் என்ன என்று அப்பொழுதுதான் எனக்குப் புரிந்தது.

என்னுடைய சுயநலத்துக்காக, மாசற்ற ஒரு இளம் பெண்ணின் வாழ்க்கையைப் பாழாக்க நான் விரும்பவில்லை. ஆனால், மனு அன்று கூறிய பதிலுடன் நின்றுவிடவில்லை. மாமா, மாமியையும் தன் பக்கத்தில் சேர்த்துக்கொண்டாள். எனக்காகத் தங்கள் சுகதுக்கங்களையும் பாராமல் தங்கள் வாழ்க்கையையே தியாகம் செய்த ஒரு குடும்பத்தின் ஏகோபித்த வேண்டுகோளை நான் எப்படி நிராகரிக்க முடியும்? அவர்களுக்கு நான் செய்த பாவத்துக்குப் பரிகாரமாக அவர்கள் கோரிக்கைக்கு ஒப்புக்கொண்டேன். ஊராரின் சிரிப்புக்கும், பழிச் சொல்லுக்கும் அஞ்சாமல் மாமா எனக்கும் மனுவுக்கும் திருமணத்தை எங்கள் வீட்டிலேயே ஆடம்பரமின்றி, அமரிக்கையாக நடத்தி வைத்தார். நானும் மனுவும் இப்போது கணவன் மனைவி.

குருடர்களின் வாழ்க்கை எப்படியிருக்கும் என்று நான் சின்ன வயதில் பல முறை யோசித்தது உண்டு. புறக்கண்கள் மூடிவிட்டால், அகக்கண்கள் திறக்கும் என்று சிலர் எழுதியுள்ளதை நான் படித்தது உண்டு. ஆனால், அதை நான் நம்பவில்லை. இப்பொழுதுதான் குருடன் வாழ்க்கையில் அன்பு கலந்துவிட்டால் அது எவ்வளவு இன்பகரமாயிருக்கும் என்று உணர்கிறேன். எனக்குச் சுற்றுமுற்றும் நடக்கும் விஷயங்களெல்லாம் எனக்கு எப்படியும் புரிந்துவிடுகிறது. மனுவின் முகத்தை என் கண்களால் பார்க்க முடியாவிட்டாலும், ஒவ்வொரு கணமும் அவள் முகம் என் எதிரிலே வந்து நிற்கிறது. அவளுடைய சந்திரன்போன்ற வட்டமான முகமும், குறுகுறுப்புப் பார்வையும், முல்லைச் சிரிப்பும் என் மனதைவிட்டு அகலுவதேயில்லை. இப்பொழுது மனுதான் என் கண்கள்; அவள்தான் என் ஊன்றுகோல்; அவளே என் வாழ்க்கையின் ஜீவநாடி.

மனு பெரிய டாக்டரையெல்லாம் கலந்தாலோசித்துவிட்டு, ஆபரேஷன் செய்தால் என் கண் பார்வை திரும்பிவிடும் என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறாள். அதற்கான ஏற்பாடுகளும் செய்து கொண்டிருக்கிறாள். எனக்கு அக்கறையில்லை. மனு எனக்கிருக்கும்பொழுது, குருடனாகவேயிருந்தால் என்ன!

கமலா விம்மிக்கொண்டிருந்தாள்.

'அசடு, எதற்காக அழுகிறாய்?' என்றேன்.

பதில் இல்லை.

'கதை இத்துடன் முடிந்துவிட்டதல்லவா?' என்று கேட்டேன்.

'ஊஹூம்' என்று அழுகைக்கிடையில் பதில்.

'என்ன முடியவில்லையா, இன்னும் என்ன பாக்கியிருக்கிறது?' என்று கேட்டேன்.

எனக்குப் பதிலளிக்கும் முறையில் என் கழுத்தைச் சுற்றிப் பிணைந்து கொண்டன, வளையலணிந்த இரு கரங்கள். என் உதடுகளில் மின்சாரம் பாய்வதுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

✶



DOLORES HART
Co-starring in Hal Wallis' production.
"WILD IS THE WIND"

MAX FACTOR
HOLLYWOOD

Color-fast LIPSTICK

stays on
stays brilliant . . .
stays color-fast

The only lipstick that actually softens the lips—YET STAYS ON LONGER.



Eight tantalizing new shades

Available at all Leading Cosmetic & General Stores

Rs. 9.00, 5.75, refill 3.75.

Sole Agents in India:
ORIENT COSMETIC PRIVATE LIMITED
MADRAS • BOMBAY • CALCUTTA

Alyars LS8

மலர் மஞ்சம்

தி. ஜானகிராமன்.

17

ராஜங் காட்டில் போர் மூண்டு விட்டது. தோட்டத்தில் உட்கார்ந்திருந்த ராமையாவைத் தேடிக்கொண்டு வந்தார் வையன்னா. சம்பவம் நடந்து ஏழெட்டு நாள் ஆகியிருக்கும். பாலி வழக்கம்போலச் சாலியைக் கால்மேல் போட்டு எண்ணெய் தேய்த்துக்கொண்டிருந்தது. ராமையா குடிசைக்குள் உட்கார்ந்து, பழைய சிந்தனைகளை மறந்து போகாமல் இருக்க வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டிருந்தார்.

'அப்பா, வையன்னா மாமா வந்திருக்காங்க' என்று குழந்தையின் குரலைக் கேட்டு, திகைத்துத் திரும்பிப் பார்த்தார் அவர்.

'யாரு?'

'நான்தான் மாமா என்றது வையன்னாவின் குரல்.

வையன்னா தோட்டத்திற்குள் நுழைந்து நாலைந்து வருஷமாகி விட்டது. ஒரே ஒரு தடவைதான் வந்திருக்கார் அவர். அப்போது இந்தப் பொட்டல் பச்சையாக மாறுகிற சமயம். இத்தனை நிழலும் குளிர்ச்சியும் இந்தக் குடிசையும் இல்லை. கிண்டலாகவோ, பேஷ் பேஷ் என்று முதுகில் தட்டிக் கொடுக்கிறாப் போலவோ ஏதோ சொல்லிவிட்டுப் போன ஞாபகம். அப்புறம் அவர் வரவேயில்லை. இந்த நிழலையும், அடர்த்தியையும் அவரால் பார்க்க முடியவில்லை போலிருக்கிறது.

'வாப்பா... உட்காரு.'

'பூஜையிலே இருக்கிங்களா?'

'இல்லே இல்லே. உட்கார்... எங்க இப்படி அபூர்வமா!'

'உங்களுக்கு சேதி தெரிஞ்சிருக்கும்னு நெனச்சேன்.'

'என்ன சேதி?'

'அதான்—இந்தச் சிறுக்கி இருக்காளே, தனபாக்யம் மகிஷாசுர மர்த்தினி மாதிரியில்ல கிளம்பியிருக்கா கண்ணுக்கு?'

'சண்டைக்கா! அசுரன் யாரு?'

'நான்தான் அவ கண்ணுக்கு இப்ப அசுரனாயிருக்கேன்!'

'என்ன சண்டை இப்ப?'

'பொறாமைக்காரக் கழுதை. எதிர்த்த வீட்டிலே வயித்தெரிச்சக்காரியா ஒருத்தி இருந்தா, நாம் என்ன செய்ய முடியும்? காச்சு மூச்சுன்னு புகுந்த நா குறுக்கே போகாது அப்படி இரைஞ்சுகிட்டுக் கிடந்தா, எத்தினி நாள்தான் பொறுக்க முடியும்! நான் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன்... நான் பொறுத்துக்கிட்டிருந்தா கூட, இருக்கறவங்களுக்குமா பொறுத்துக்க முடியும்? ரண்டு அடி போட்டுட்டான் அவளை.'

'கேள்விப்பட்டேன்.'

'நானும் அந்தப் பயல்களைத் தடுத்துப் பார்த்தேன். நீங்க சும்மா இருங்க கிடக்கு. இவ என்ன வார்த்தையெல்லாம் பேசறா! எங்களுக்கு அப்படியே... அப்படியே... ம்... என்று ஆட்கள் ஆத்திரம் வந்து பேச முடியாமல் தவித்ததைச் செய்து காட்டினார் வையன்னா...' ம்...இருங்க சொல்றேன். ரண்டிலே ஒண்ணு பார்த்துப்பிடறோம் இவளை இன்னிக்கி... உங்களைக் கோயில் கட்டித்தாங்க கும்பிடணும்... எப்படி இதெல்லாத்தையும் சகிச்சிக்கிட்டிருக்கீங்களோன்னிட்டல்ல கிளம்பிட்டானுக! போற வேகத்தைப் பார்த்தா, அப்படியே எலும்பையெல்லாம் நொறுக்கி முறிச்சிடுவார்கள் போலிருந்திச்சு. வாண்டாம்டா பாவிகளான்னு நான்தான் குறுக்கே விழுந்து மறிச்சேன்... நான் இல்லாட்டி இன்னிக்கிக் கருமாதி ஆயிருக்க வேண்டியது. இவ போய் கிரிமினல் கேஸில்ல போட்டிருக்கா...!'

'கேஸா?'

'கிரிமினல் கேசு மாமா, கிரிமினல் கேசு... இவளைச் சமையலுக்கு வச்சிட்டிருக்கப்பவே தெரியும்... இல்லாதவங்களைக் கொண்ட உங்க வீட்டிலே விட்டுப் பாருங்க! அதுங்க எதைப் பார்த்தாலும் வெறிச்சு வெறிச்சுப் பார்த்துக்கிட்டுநிக்கிறதும், கண்ணிலே கொள்ளியை வச்சுக்கிட்டே வயித்துக்குள்ளே குமையறதும்.. மாமா ஆனா... இத்தினி தூரம் வரும்னு நெனக்கலே... பணக்காரங்களா நாலு விரோதியை வீட்டிலே கொண்டு வச்சுக்கலாம் மாமா. ஆனா, அன்னக்காவடியா ஒரு சிநேகிதனைக் கொண்டாந்து வையிங்க, அவன் பாக்கறதுலேந்து, தொடறது வரைக்கும் அப்படியே கரி மாமா கரி... எனக்கு இதெல்லாம் இப்பல்ல தெரியுது... வீட்டிலே ஒரு சாமானை இருக்க விடுவாளா பாவி! ஒரு வேட்டி, ஒரு பாவாடை, ஒரு சட்டை, ஒரு தென்ன மட்டை; கண்ணிலே எது பட்டாலும் சரி...குழந்தைதான் பெரிசாப் போயிடுச்சே... இந்தச் சட்டை இனிமே சரியாயிருக்குமா அதுக்கு...? இப்படித்தான் எதைப் பாக்கட்டும்; உடனே கேட்டிற வேண்டியது...ஆள் அசந்திருந்தா லாவிட வேண்டியது... மாமா இந்த இல்லாதவங்க சங்காத்தமே வாண்டாம். அவங்க கோடி நல்லவங்களா இருக்கட்டும்... இப்ப நான் படறுப்பல மண்டை இடி பட வாண்டாம்.

'கேஸ் போட்டிருக்காளாம்.'

மேலும் விவரமெல்லாம் சொல்லிக் கொண்டு வந்தார் வையன்னா. நாலு மைலுக்கப்பாலுள்ள புதுக்கரை ஜில்லா போர்டு ஆஸ்பத்திரி டாக்டரிடம் காயங்களைக் காண்பித்து, அடிபட்டதாக சர்டிபிகேட் வாங்கி, புதுக்கரை போலீஸ் ஸ்டேஷனில் வாக்குமூலம் கொடுத்துவிட்டாளாம். ராமையாவையும் ஒரு சாட்சியாகப் போட்டிருக்காளாம்.

'பாருங்க, இதிலேயே தெரிஞ்சுப்பீங்க. உங்களுக்கு இந்தச் சேதியைப் பத்தி ஏதாவது தெரியுமோ? நீங்க தோட்டத்தில் உக்காந்து சிவனேன்னு பாராயணம் பண்ணிட்டிருப்பீங்க. உங்களைச் சாட்சி போடறதுன்னா, நீங்க அங்க இருந்தீங்களா? பாருங்க, ஒரு பொம்மனாட்டிக்கு இவ்வளவு தில்லு முல்லு தெரிஞ்சிருக்குறதுன்னா...

'என்னய்யாது...! பூனையை அடிக்கப் படாது, தொடப்படாது... அடிச்சா பாவம், கொன்னா மகா பாவங்கறாக...ஆனா அது பண்ற அட்டூழியத்தைச் சகிக்க முடியுதா? பொம்பனாட்டி ஒண்ணும் செய்யப்படாதுன்னு சொல்றோம்... ஆனா அவங்க பண்றதைச் சகிச்சிக்கிறதுன்னா ஒரு தனி உடம்பு, ஒரு தனி மனசு எல்லாம் அதுக்காகன்னு பண்ணி வச்சுக்கிட்டாத் தான் உண்டு.'

ராமையா சிறிது நேரம் ஒன்றும் பேசவில்லை. அவருக்குப் பயம் வந்து விட்டது. கோர்ட்டு, போலீஸ் என்று தன் வாழ்க்கையில் ஒரு கட்டம் வரும் என்று அவர் எதிர்பார்க்க வழியில்லை. வழியோடு போகிறவனை வம்புக்கிழுக்கிற சட்டத்தைக் கண்டு, அவருக்குக் கோபம் கோபமாக வந்தது. அதோடு பயம் வேறு.

சிறிது நேரம் பிரமித்துப் போய் உட்கார்ந்து விட்டார் அவர். ஊரை விட்டே ஓடிப் போய்விடலாம் என்று தோன்றிற்று அவருக்கு. நிலம், வீடு எல்லாவற்றையும் விற்று விட்டு, வந்த விலைக்கு அவசர அவசரமாகத் தள்ளி விட்டு, இந்தத் தெரிந்தவர்களே இல்லாத ஒரு இடத்திற்குப் போய்விட்டால் என்ன?

'மாமா, நான் ஒரே ஒரு சேதி கேட்டுக்கணும்னுதான் வந்தேன்' என்று அவர் மௌனத்தைக் கலைத்தார், வையன்னா.

'என்ன?'

'என் மேலே உங்களுக்கு வருத்தமிருக்கும். ஆனா நீங்க சத்யத்துக்கு மாறா ஒண்ணும் செய்யமாட்டீங்கன்னு தெரியும்—நிச்சயமாத் தெரியும் எனக்கு... இப்பவும் மாற மாட்டீங்கன்னு தைரியம் பண்ணிக்கிடலாம்னுதான் வந்தேன்.'

'எதுக்காகச் சத்தியத்தை விட்டு மாறணும்?'

'அப்படி உங்க வாயாலே சொன்னாப் போதும்.'

வழக்கு வேடிக்கையாகத்தானிருந்தது. ராஜங்காட்டில் பெரிய போர் மூண்டதைப்போலப்பரபரப்பு. காதுக்குக் காதாக வாய்க்கு வாயாகக் குதித்துப் பரவிக் கொண்டிருந்தது. திண்ணையில் பள்ளிக்கூடம் நடத்த விடாமல் வாத்தியாரை மறித்து, வழக்கைப் பற்றிப் பேசினார்கள். ஆற்றங்கரை, குறுவைக்களம் எங்கு பார்த்தாலும் வழக்குத்தான் எல்லா வாயிலும் புகுந்து புறப்பட்டுக்கொண்டிருந்தது.

எதிர்பார்த்தபடி அவ்வளவு சுலபமாக ஆரம்பிக்கவில்லை. வையன்னாவைக் கைது செய்து காவலில் வைக்கும் அளவுக்குப் போலீஸ் முனைந்து விட்டது. பணத்தைக் கொண்டு கட்டி ஜாமீனில் அவரை விடுவித்துக்கொண்டு வர வேண்டியிருந்தது. ராமையாவை அதற்கு இழுத்தார்கள், கோபாலுவும், கணேசனும். அவரும் போய்விட்டு வந்தார். ஒரே வண்டியில்தான் மூவரும் போய் வந்தார்கள். தனபாக்கியத்தின் புருஷன் பழனி ஊரிலிருந்து வந்து விட்டான். ஆனால் பெண்ஜாதிக்கு நடந்ததைக் கேட்டு வருத்தப்படுவதைத் தவிர, கையாலாகாமல் கோபப்படுவதைத் தவிர, வேறு ஒன்றும் அவனால் செய்ய முடியவில்லை. ராமையாவைக் கண்டவன் பேசாமல் முகத்தைத் திருப்பிக்கொண்டு போனான். ஜாமீன் வாங்க அவர் போனார் என்று கோபம் அவனுக்கு.

இருட்டி இரண்டு நாழிகையிருக்கும். திண்ணையில் உட்கார்ந்திருந்த ராமையாவைக் கூப்பிட்டாள் வடிவு.

'ராமையா, தனபாக்யம் வந்திருக்கா... உன்னோட கொஞ்சம் பேசணுமாம்.

ராமையாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அப்படியே எழுந்து தோட்டத்தைப் பார்க்கப் போய்விடலாமா என்றிருந்தது. ஆனால் மனம் உள்ளே இருந்தது.

'என்ன மாமா, நான் இவ்வளவு சொல்லியும் இப்படிப் பண்ணிவிட்டீங்களே' என்றாள் தனபாக்கியம்.

'வாம்மா எப்ப வந்தே?'

'இப்பதான் மாமா.'

'கேஸ் போட்டிருக்கியாம்.'

'நான் கேஸ் போட்டு என்ன பிரயோசனம்? நீங்கதான் நியாயம் கிடைக்காம பண்ணிடுவீங்க போலிருக்கே?'

'நானா!'

ஆரம்பத்திலேயே எதிர்க் கட்சிக்குப் போயிட்டீங்க. ஜாமீன் வாங்கப் போனீங்களாமே!'

'ஜாமீன் வாங்க நானா வரிஞ்சிக் கட்டிக்கிட்டுப் போகலே. கணேசனும், கோபாலுவும் வண்டியிலே தூக்கிப் போட்டுட்டுப் போகாத குறை— அப்படி வந்து கெஞ்சினாக. வந்து சும்மா நின்னாப் போதும்னாக. போனேன். சும்மாவே நின்னேன். வந்துப்பிட்டேன்...'

'நீங்க போயிருக்கப்படாது மாமா. எனக்குச் சாதகம் பண்றேன்னு சொல்லிப்பிட்டு, நீங்க போயிருக்கப்படாது.'

'ஒரு தடவை சொல்லியாச்சு. அப்புறம் சும்மாச் சும்மா சொல்றதையே சொன்னா, என்ன இருக்கு?... நம்ம ஊர்லே நம்மோடு வாழறவன். ஏதோ தப்பு பண்ணிப்பிட்டான். அதுக்காக முழுகற வரைக்கும் பாத்திட்டிருக்கிறதா? அது நியாயமா? ஒரு ஊர்லே இருக்கோம், ஒரு தெருவிலே இருக்கோம்ங்கறதுக்கு அப்பறம் என்ன அர்த்தம்?'

'அப்படித்தானே எனக்கும் இருக்கும்? ஜாமீன் கொடுக்க ஓடினீங்களே? ஒரே ஊர்க்காரியை ஒரே தெருக்காரியை அப்படி அடிச்சுப் போட்டப்புறம் போய்க் கேட்டீங்களா, ஏண்டா இப்படிச் செஞ்சேன்னு?'

ராமையாவுக்கு ஏன் மாட்டிக்கொண்டோம் என்றுதான் இருந்தது. ஜாமீன் கொடுக்கப் போய் இவள் வாயில் அகப்பட்டு விழிப்பது சிரமம்தான். ஆனால், உள்ளுக்குள்ளே அப்படிச் செய்ததும் அவருக்குத் தவறாகப் படவில்லை.

'மாமா, ஆனாலும் நீங்க பண்ணினது எனக்குப் பிடிக்கல்லே; நீங்க என்ன செய்வீங்க? காலத்தோட கோளாறு அது. கழுத்தைப் பிடிச்சுத் தள்றவங்க, கையைக் கொட்டித் திண்ணையிலே குந்திக்கிட்டுச் சிரிக்கிறவங்க இவங்களெல்லாம்; நாளைக்கு அப்படியெல்லாம் செய்யாம இருக்கணும்ல. அதுக்காகக் கரிசனமாப் போய்ட்டு வரவேண்டியதுதானே?'



'தனபாக்யம், அவன் இவ்வளவு சொன்னப்புறமும் நீ இப்படிப் பேசறது நல்லால்லே. நான் ஒண்ணும் பேச வாண்டாம்னு பாக்கறேன்' என்று சட்டென்று வடிவக்காள் குறுக்கிட்டாள். அவ்வளவுதான். தனபாக்யம் அடங்கி விட்டாள். சிறிது நேரம் வாய்மூடி நின்று 'சரிக்கா போய்ட்டு வரேன்... என்ன இருந்தாலும் எனக்குச் சொல்லாமெ இருக்க முடியலெ. ஆத்தாமையா இருந்தது. எனக்கு என்ன பணம் இருக்கா? காசு இருக்கா நாலு தெரிஞ்சவங்க வந்து சொல்றதுக்கு?' என்று சொல்லிக்கொண்டே, கொல்லை வழியாக நடந்து விட்டாள் அவள்.

போகிற போக்கில் சொன்ன இந்தத் தொனியில் சுருக் சுருக்கென்று கூர்மையும் உறைப்பும் குத்தின. முகத்தில் கோபத்தின் விகாரம் அணு அணுவாகப் படர்ந்து விட்டிருந்தது. இடது கையில் இன்னும் ஒரு ப்ளாஸ்திரி கட்டு அவிழ்க்கப்படாமல் அப்படியே இருந்தது.

18

சாட்சி மேல் சாட்சியாகக் கோர்ட்டில் விசாரித்தார்கள். தனபாக்யத்துக்குப் பலம் இருந்தது. தெருப் பக்கமே எட்டிப் பாக்காத இரண்டு பேர், அவளுக்காகச் சாட்சி சொல்லிக்கொண்டிருந்தார்கள். நேராகப் பார்த்ததுபோலவே சொல்லிக்கொண்டு வந்தார்கள்.

அவரைக் கூப்பிடுகிற வரையில் தைரியமாகத்தான் இருந்தது. ஆனால் கூண்டில் ஏற்றி 'சத்யமாச் சொல்றேன்' என்று மூன்று தடவை பிரமாணம் செய்தபோது, அவர் வாய், உடல் எல்லாம் நடுங்கின. 'சத்யமாச் சொல்றேன்' என்ற வார்த்தைகளை எத்தனை பேர் எவ்வளவு சாதாரணமாகச் சொல்கிறார்கள்! சாப்பிடுகிறேன், வருகிறேன் என்றெல்லாம் சொல்வதுபோல எவ்வளவு அலட்சியமாக, எவ்வளவு கவலையில்லாமல் சொல்கிறார்கள்!

'உங்க பேரு?'

'ராமையா!'

'உமக்கு இந்தத் தனபாக்கியத்தைத் தெரியுமா?'

'நல்லாத் தெரியும்.'

'இந்தக் கேஸைப் பத்தி ஏதாவது தெரியுமா?'

'தெரியும்.'

வையன்னா, கோவாலு, கணேசன், பஞ்சுப் பிள்ளை – எல்லோரும் அவரையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

'என்ன தெரியும் சொல்லுங்க!'

தெரிந்த எல்லாவற்றையும் சொல்லி விட்டார் ராமையா. அவர் அன்று மாலை அந்தி நேரத்துக்கு வந்தது, மாட்டுக் கொட்டிலில் சத்தம் கேட்டது, இவர் திண்ணையில் ஏறி நின்று பார்த்தது, தனபாக்யம் கல்லை விட்டெறிந்து ஆள் தலையைக் காட்டி எறிந்து காயப்படுத்தினது, வையன்னா வெளியே வந்தது எல்லாவற்றையும் சொல்லிவிட்டார். நடுநடுவே கோர்ட்டில் நின்ற கணேசன், வையன்னா எல்லோரையும் பார்த்தார். அவர்கள் முகம் கறுப்பது தெரிந்தது.

ஒரு கறுப்புச் சட்டைக்காரர் கேள்விகள் கேட்ட பிறகு, இன்னும் ஒருவர் எழுந்து கேட்கத் தொடங்கினார். அவர் கேட்ட கேள்விகளுக்கும் சளைத்துவிடவில்லை அவர்.

'நீர் ஏன் ஓடிப்போய்த் தடுக்கவில்லை?'

'நானும் நாலு வாங்கிக்கறத்துக்கா?'

'உமக்கும் வையன்னாவுக்கும் விரோதமுண்டா?'

'என்னத்துக்கு விரோதம்? ஜாமீன் கொடுக்க நானும் வந்தேனே கூட.'

அவரை விசாரித்து முடிந்து எல்லோரும் வெளியே வந்து சாலை வழியாக வரும்போது, 'ஓய் ஆஷாடபூதி!' என்று குரல் கேட்டது. வையன்னாவின் குரல் குரல்தான். திரும்பிப் பார்த்தார் அவர். வையன்னாவும் கணேசனும் வண்டியில் வந்து கொண்டிருந்தார்கள். வண்டி நின்றது. வையன்னா இறங்கினார்.

'ஓய் ஆஷாடபூதி'

'நானா ஆஷாடபூதி?'

'பின்னே உம்மைத் தவிர இந்த உலகத்திலே யார் அப்படி இருக்க முடியும்?'

'எதுக்காக அப்படிச் சொல்றே?'

'எதுக்காகவா. ஓய், உம்மைப்போல இத்தனை துடைச்சுவிட்ட நெஞ்சைப் பாத்ததில்லை ஐயா! என்ன துணிச்சல்! என்ன தைரியம்!'

'எதுக்கு?'

'அடிச்சதை நேரப் பாத்தேன்னு சொன்னீரேய்யா.'

"பையன் மேலே என்ன செய்வதாக உத்தேசம் சார்......?"

"மேலே பரணியிலேயிருந்து ஏதோ சாமான் எடுக்கப் போகிறான்!......"

"அட, அது இல்லே சார்......நான் கேட்டது இண்டர் பாஸ் பண்ணிவிட்டானே......மேலே என்ன, படிக்கப் போறானா? இல்லே, வேலையான்னு கேட்டேன்...!"

'நான் பாத்தேன். அதான் சொன்னேன்.'

'நீர் பாத்தீரா?'

'திண்ணையிலேர்ந்து எல்லாத்தையும் பாத்தேன். நீ வெளியிலே வரதையும் பார்த்தேன்.'

'எங்கிட்ட இத்தினி நாளா சொல்லவே இல்லியே!'

'உங்கிட்ட சொன்னா, நீ காலிலே விளுவே. அப்பறம் நான் பொய் சொல்லணும்.'

'அப்ப நீர் கோர்ட்டிலே சொன்னது அவ்வளவு நெசமா?'

'ஒவ்வொரு எழுத்தும் நிஜம்.'

'ஓய், நாங்கதான் பொய் சொல்றோம். பழக்கமாப் போயிடிச்சு. நீர் சொல்லாதீர். நல்ல மந்திரமும் தேவாரமும் சொல்ற வாயி. நாக்கு அளுகி இத்துத் தொங்கும்.'

'அப்படியா?'

'ஓய், இவ்வளவு பெரிய பொய்யைச் சொல்லுவீர்னு தெரிஞ்சிருந்தா, நான் முன்னாலேயே ஜாக்ரதையா இருந்திருப்பேன்...இப்பவும் கவலைப்படாதீர். உம்ம எண்ணம் நிறைவேறாது. என்னைக் கம்பிக்குள்ளார வச்சுப் பாக்கணும்னுதானே ஆசை, உமக்கு? அது இந்த ஜன்மத்திலே நடக்காதுய்யா நடக்காது; தெரிஞ்சுக்கும். ப்ரிவி கௌன்சில் வரையில் பாத்திரமாட்டேன்—?'

'வையன்னா, இந்த பாரு, சும்மா பேசிக்கிட்டே போகாதே. நீ குற்றவாளி இல்லேன்னு விடுதலையானா, எனக்குத்தான் ரொம்ப சந்தோஷமாயிருக்கும். ஆனா இப்ப சொன்னே பாரு, நான் உன்னை எப்படியோ பாக்க ஆசைப்படறேன்னு. அதெல்லாம் என்னைப் பாத்துச் சொல்லாதே! நான் அங்கே நின்னதை இந்தக் கேஸுக்கு சாட்சி சொன்னவங்க யாரும் பாக்கலே. பாத்த ரண்டு மூணு பேரும் சாட்சியா இந்தக் கேசுக்கு வரலெ. நான் திண்ணையிலே நின்னுபாத்தேன். ஆளுங்க அடிச்சதையும், கடசீலே அவ கையாலே அடிபட்டதையும். ஆனா அவளும் பார்க்கலே, நீயும் பார்க்கலே. வேற ரண்டு மூணு பேர் என்னைப் பாத்தாங்க. நான் இந்தக் கேசுக்கு வாமாட்டேன். தர்மசங்கடத்திலேந்து என்னை வைத்தீச்வரன் காப்பாத்திப்பிடுவார்னுதான் நெனச்சேன். ஆனா அவன் சித்தம் எப்படியோ இருக்கு. அவ பாக்காதவ என்னை என்னமா சாட்சி போட்டான்னு தெரியலே. வேற யாராவதுதான் சொன்னாங்களோ என்னவோ. நீ அன்னிக்கு என்னைத் தோட்டத்துக்குத் தேடிக்கிட்டு வந்தே. அப்ப முழு விவரமும் கேப்பேன்னு நெனச்சேன். நீ கேட்கலே. சத்யத்துக்கு மாறா போகமாட்டேங்கன்னு நம்பிக்கையா என்னைப்பத்திப் பேசிட்டுப் போனே. நானும் இப்ப சத்யம்தான் சொன்னேன். ஆனா ஒரே ஒரு சேதிமட்டும் சொல்லணும். கேஸுக்கும் இதுக்கும் சம்புந்தமில்லே. இந்த ஆத்திரத்துக்கெல்லாம் மூலம் என்ன! நீதானே? ஏதோ ஏழை. இல்லாத கொடுமை. உன்னோட பாவம் பண்ணத் துணிஞ்சுபிட்டா. நீயும் அத்தைக் கொடுத்துப்பிடறேன். இத்தைக் கொடுத்துப்பிடறேன்னு தாராளமாச் சொல்லிப்பிட்டே. அவ நெசமா நீ சொல்ற மாதிரி பொல்லாதவளாயிருந்தா, முன்னாடியே எல்லாத்தையும் உங்கிட்ட காட்டியிருப்பா. உன்னை நம்பினா அவ. நம்பி மோசம் போனா. ஆத்திரம் அவ இப்ப கெடந்து குதிக்கிறா... அவளுக்குப் பரிஞ்சிட்டுப் பேசறேன்னு நெனக்கவே வாணாம் நீ. தலைக்குமேலே வெள்ளம் சாண்போனா என்ன, முழம் போனா என்னன்னு கிளம்பிட்டா அவ. அவ தைரியசாலியா? ப்ரிவி கௌன்சில் வரைக்கும் போவேன்னு சாலைக்கரையிலே நின்னு தும்பை விட்டுட்டு, வாலைப் புடிக்கிறவங்க தைரியசாலியா? யாருன்னு எனக்கே சொல்லத் தெரியலே...என்னப்பா, கணேசா, இவங்க ரண்டு பேர் சேதியும் ஊர் முழுக்கத் தெரியும். இந்த வையன்னா இப்ப என்ன பாவம் பண்ணினேன்னு கேப்பாரு. அந்த மாதிரி கேக்கறது நியாயமாப் படலே எனக்கு–'

'சொல்லவேண்டியது இன்னும் நிறைய இருக்கா?' என்று குறுக்கிட்டார் வையன்னா.

'நான் சொல்லவேண்டியதைச் சொல்லியாச்சு.'

'அப்ப நடங்க...ஏர்று!'

வண்டியில் ஏறிக்கொண்டார் வையன்னா. கணேசன் ஏறியதும் இரண்டு நிமிஷத்தில் கண்ணை விட்டு மறைந்துவிட்டது. வண்டி போன திசையிலேயே ஊரை நோக்கி நடந்தார் ராமையா.

கேஸ் வெகு நாள் நடக்கவில்லை. வையன்னா பணத்தை வாரி இறைத்தார். நாலாயிரம், ஐயாயிரம் என்று செலவு ஆயிற்று. சவுக்க மரமாக வண்டி வண்டியாகப் போயிற்று. நெல்லு வண்டி வண்டியாகப் போயிற்று. புளி இறக்கிப் போயிற்று. தேங்காயும் வாழைக்காயுமாகப் போயிற்று. வையன்னாவின் ஒரு வருஷ மாசூல் முழுவதும் அவருடைய விடுதலைக்காக மன்றாடிற்று. பஞ்சுப் பிள்ளை அவருக்காக மன்னார்குடிக்கும் மதராஸுக்கும் அலைந்து கொண்டிருந்தார். எந்த எந்த அதிகாரிகளுக்கு எந்தக் காய்கறி பிடிக்கும், எப்படிப் பேசினால் பிடிக்கும் என்றெல்லாம் விசாரித்துக்கொண்டிருந்தார். அவருக்கு சொத்து ஒன்றும் கிடையாது. ஆனால் நெளிவு சுளுவு ஏராளமாகக் கற்று வைத்திருந்தார்.

கடைசியில் வையன்னா விடுதலையாகி விட்டார். சாயங்காலம் திரும்பி வரும்போது, பிரமாத இரைச்சலும் எக்காளமுமாக வெற்றி வண்டியிலிருந்து இறங்கி உள்ளே போயிற்று.

பெருமாள் கோயில் மணி கணகணவென்று ஒலித்தது. சிவன் கோயில் மணியும் எல்லையில்லாத உவகையுடன் தொண்டையைத் திறந்து முழங்கிற்று.

ராமையா வழக்கம்போலப் பாலிக்குக் கதை சொல்லிக்கொண்டு உட்கார்ந்திருந்தார். இருட்டுகிற சமயம். வழக்கத்திற்கு மாறாக, வாசலில் நடமாட்டம் ஓயாமல், சிரிப்பும் பேச்சுமாகக் கேட்டது. பெருமாள் கோயிலில் அபிஷேகம். சிவன் கோயிலில் அபிஷேகம். புளியோதரையும் சுண்டலும் வாங்கிக்கொண்டு குஞ்சும் குளுவானும் பெரிதும் சிறிதும் வந்து கொண்டிருந்தன. வையன்னாவின் விடுதலையைக் கோயில் அகல்கள் எல்லாம் கொண்டாடிக்கொண்டிருந்தன.

வையன்னா கடைசியில் வந்தார்.

'மாமா...மாமாதானா அது?'

ராமையாவின் வீட்டு வாசல் மாடத்தில் அகல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. இருளில் கண் தெரியாததுபோலக் கூப்பிட்டார் வையன்னா.

'யாரு வையன்னாவா, வாப்பா! ரொம்ப சந்தோஷச் சேதியாக் காதிலே விழுந்திச்சு. எதோ பகவான்தான் காப்பாத்தினாரு.'

'உங்களுக்குக் கூடவா சந்தோஷம்?'

'என்ன அப்படிக் கேக்கறே?'

'உமக்கு வருத்தமாயில்லியா? இந்த அயோக்கியப் பயல் தப்பிச்சுக்கிட்டு வந்தானேன்னு!'

'வையன்னா, இப்படி நெஞ்சைப் புண்ணா அடிக்கிறியே? உனக்கு என்ன லாபம்?'

'இனிமே இந்த ஆஷாடபூதித்தனத்தை எல்லாம் விட்டிடுங்கன்னு சொல்லத்தான் வந்தேன். கலகம் பண்றவங்களை சாமி சும்மா விடமாட்டாருன்னு சொல்லத்தான் வந்தேன். தண்ணியிலே புடிச்சுத் தள்ளிர முடியாது. ஆமாம். ஜாக்ரதையா இரும்—' என்று சொல்லிக்கொண்டே போனார் அவர்.

ராமையா குழந்தையைத் தடவிக் கொடுத்தார்.

'வீங்கய்யா நாமளும் கோயிலுக்குப் போயிட்டு வருவோம்' என்றது அது.

'சரி' என்று அவர் எழுந்து புறப்பட்டுப் போவதற்குள் பட்டர் கோயிலைச் சாத்துவது தெரிந்தது.

'இருங்கய்யா' என்று கத்தக்கூட அவருக்கு நேரமில்லை, பட்டர் தெருவை விட்டு வெளியேறிவிட்டார்.

ராமையாவுக்கு மனது சரியாக இல்லை. காரணம் தெரியாமல் பயந்துகொண்டேயிருந்தது மனம். சோறு வேண்டியிருக்கவில்லை. தூக்கமும் சரியாக வரவில்லை.

(தொடரும்)

| 5,00,000 கதிர்கள் | பருத்தி நூல்கள் | நெ. 80 வரை நூல்கள் |

மதுரை மில்ஸ் கம்பெனி
லிமிடெட், மதுரை.

மில்கள்: மதுரை, தூத்துக்குடி, அம்பாசமுத்திரம்.

★

கைத்தறி, இயந்திரத்தறி, பின்னல் தறிகளுக்கான சகலவிதமான நூல்கள்

★

விசேஷ ரகங்கள்:

கயிறுகள் - விழுதுகள் - கித்தான்கள் - நாடாக்கள் முதலியவைகளுக்கான விசேஷ நூல்கள் - தையல் நூல் - முறுக்கேற்றிய திரித்த சரடுகள் முதலியன.

மானேஜர்கள்:

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

பாண்டியன் பில்டிங்

மதுரை.

போன்: 420 (4 லைன்) தந்தி: "ஹார்வி"



பாத்திரங்கள் :

1. கண்ணப்பன் 3. பெரியநாயகம்
2 சோமு 4 கோமதி [பிள்ளை
மற்றும் தபால்காரர்

காட்சி 1.

சோமு:—கண்ணப்பா, கஷ்டம் வர்றது இயல்புதான்...அதற்காகக் கவலைப்பட்டுக் கொண்டு முயற்சியைக் கைவிடக் கூடாது...

கண்:—(எரிச்சலுடன்) முயற்சியாவது முள்ளங்கியாவது, சோமு! இந்தமாதிரி ஆறுதல் வார்த்தைகளாலே...

சோமு:—(குறுக்கிட்டு) தோல்விமேல் தோல்வியா ஏற்பட்டு வர்றதுனாலே உன் மனசு துவண்டு போச்சு!

கண்:—டேய், சோமு! கைப்புண்ணுக்கு நீ ஒண்ணும் கண்ணாடி காட்ட வேண்டாம்...உருப்படியா ஏதாவது உபகாரம் செய்ய முடிஞ்சா...சொல்லு...

சோமு:—ஆமா...அஞ்சு ஆறு மாசமா நீ எதுஎதுக்கெல்லாமோ அப்ளை பண்ணியிருந்தியே...ஏதாவது ரிப்ளை வந்ததா?

கண்:—வந்திருந்தா இந்நேரம் சொல்லாமல் இருப்பேனா?

சோமு:—கண்ணப்பா, நீ ரொம்பத் தைரியசாலிதான்; கிட்டத்தட்ட ஒரு வருஷமாச்சு, நீ பாஸ் பண்ணி. வேலை ஒண்ணும் கிடைக்கலே; அப்படியிருந்தும்.

கண்:—ஏன் தற்கொலை செய்து கொள்ளலேன்னு கேக்குறியா?

சோமு:—புத்தி உனக்கு ஏன் இப்படிப் போவுது!...

கண்:—காரணம் உனக்குப் புரியாது...

சோமு:—அப்படியா?

கண்:—ஆமா... பாஸ் பண்ணினவுடனே உனக்கு உத்தியோகம் கிடைச்சுட்டதினாலே, வேலையில்லாத் திண்டாட்டத்தின் வேதனையைப் பத்தி நீ அறிந்திருக்க முடியாது!

சோமு:—அப்படி நினைக்காதே, கண்ணப்பா! உன்னுடைய கஷ்டம் எனக்கு நல்லாத் தெரியும்...உனக்குச் சீக்கிரமா வேலை கிடைக்கணுமின்னு நான் எவ்வளவு தூரம் முயற்சி செய்து வர்றேன் தெரியுமா?

கண்:—உன்னுடைய ஒத்துழைப்புக்கு, என் உளங்கனிந்த நன்றி.

சோமு:—நன்றி கூறல் இருக்கட்டும். கோவிந்தா கூட்டுறவு பாங்குக்குக் கிளார்க் ஒருவர் தேவை. அதுக்கு நீ ட்ரை பண்ணினா, நிச்சயமாய்க் கிடைக்குமுன்னு நினைக்கிறேன்! ஆனா...

கண்:— அவசரப்படக்கூடாதுன்னு சொல்ல வர்றியா?

சோமு:—சரியாப் போச்சு. இன்னும் ஒரு வாரத்துக்குள்ளே விஷயம் முடியணும். அதற்குத் தகுந்த சிபாரிசைப் பிடிச்சு...

கண்:— (குறுக்கிட்டு—எரிச்சலாய்) இப்போ, நான் வேலையைத் தேடி அலைஞ்சு அவஸ்தைப் படுறது போதாதுன்னு, சிபாரிசையும் வேறு தேடி அலையணுங்கறே...

சோமு:—அப்படி ஒண்ணும் அலைய வேண்டாம். அதுக்கும் ஒரு சுருக்கு வழி சொல்றேன் கேளு. தர்மகர்த்தா பெரிய நாயகம் பிள்ளை இருக்காரே...

கண்:—(தயங்கி) யார்? பெரிய நாயகம் பிள்ளையா!...(நினைவுக்கு வந்ததும்) ஓ! அவரா? என்னைக் கொஞ்சங்கூடத் தெரியாதே, அவருக்கு!

சோமு:—பாதகமில்லே, அதனாலே! நான் ஒருவரிடம் லெட்டர் வாங்கித் தர்றேன்...அதன் மூலமாப் பெரிய நாயகம் பிள்ளையைப் பிடி. அவர் பாங்க் மானேஜருக்குப் போன் பண்ணினால்கூடப் போதும்...உனக்கு வேலை கிடைச்சுடும்!

கண்:—(பெருமூச்சுடன்) என்னவோ அதையும் முயற்சி செய்து பார்த்துட்டால் போச்சு...

சோமு:—ஒண்ணும் கவலைப்படாதே, கண்ணப்பா!...எல்லாம் 'சக்ஸஸ்ஸா' முடியும். அப்போ என்னைச் சாயங்காலம் வந்து பாரு...நான் வரட்டுமா?

கண்:—சரி...

(சோமு போகிறான்)

காட்சி 2.

[பெரிய நாயகம் பிள்ளை வெளியே புறப்பட்டுக் கொண்டிருக்கிறார். மின்சார அழைப்பு மணி சில விநாடிகள் ஒலிக்கிறது]

பெரிய:—கோமதி, யார் வந்திருக்கிறதுன்னு பாரு, வெளியிலே...

கோமதி:—இதோ, பார்த்துட்டு வர்றேன், அப்பா!

(வெளியே வருகிறாள்)

கண்:—சார், இருக்காங்களா?

கோமதி:—வெளியே புறப்பட்டுக் கொண்டிருக்கிறார்...ஹாலிலே வந்து உக்காருங்க!

(கண்ணப்பன் ஹாலுக்குள் வந்து ஒரு நாற்காலியில் உட்காருகிறான்.)

பெரிய:—யாரம்மா வந்திருக்கிறது?

கோமதி:—கண்ணப்பன் வந்திருக்கார், அப்பா...

பெரிய:—(மறந்துபோய்) கண்ணப்பனா...?

கோமதி:— (நினைவூட்டுபவள்போல்) ஆமப்பா! கோவிந்தா கூட்டுறவு பாங்க் மானேஜரிடம் நீங்க சிபாரிசு செய்யணுமுன்னு இரண்டு மூணு தடவை வந்தாரே...

பெரிய:—(சிறிது தயங்கி) ஓ! அந்தப் பையனா...சரி, சரி!

கோமதி:—(இரக்கத்துடன்) பாவம்! அவருக்கு ரொம்பக் கஷ்டம்போலேயிருக்கு...அந்த வேலையைச் சீக்கிரமா வாங்கிக் கொடுங்களேன்!

பெரிய:—மானேஜரை நாலஞ்சு நாளா நான் பார்க்கவே முடியலே! ஆனா...நேத்துச் சாயங்காலம்கூட, பாங்க் வழியாத் தான் ஒரு நண்பரோடு பேசிக்கிட்டு வந்தேன். மானேஜரைச் சந்திக்க மறந்து போச்சு!

ஹலோ-ஹலோ-போனை வச்சுட்டாரே..

கோமதி:—(வேடிக்கையாய்) உங்களுக்குத்தான் ஞாபக சக்தி ரொம்ப அதிகமாச்சே!

பெரிய:—அறுபது வயசுக்குமேலே உலகத்திலே என்ன வேண்டியிருக்கு, கோமதி!

கோமதி:—அப்பா, அவர் ஹாலிலே காத்துக்கொண்டிருக்கார். போய் நாளைக்கு வரச் சொல்லட்டுமா?

பெரிய:—வேண்டாம்மா... இதோ ஆச்சு...போய்ப் பார்க்கறேன்!

(ஹாலுக்கு வருகிறார்)

கண்:—(எழுந்து) வணக்கம்!

பெரிய:—வணக்கம். சும்மா அப்படியே உக்காருங்க தம்பி. (சோஃபாவில் அமர்ந்து கொள்கிறார்) என்ன சௌக்கியமா?

கண்:—(புன்னகை புரிய முயன்றபடி) ஏதோ, இருக்கேன்...அப்புறம் பாங்க் மானேஜரை நீங்க...

பெரிய:—(குறுக்கிட்டு) பார்க்கறதுக்கே முடியாமல் போவுது! 'டோண்ட் ஒரி!' நான் பார்த்துக்கறேன்.

கண்:—உங்களைத்தான் நம்பி இருக்கேன். இந்த வாரத்துக்குள்ளே முயற்சி செய்தால்தான் அந்த வேலை கிடைக்குமுன்னு சொல்றாங்க!

பெரிய:—(அலட்சியமாய்) இருக்கட்டும்...பார்க்கலாம்...(உட்பக்கம் திரும்பிப் பார்த்து) கோமதி...கோமதி!

கோமதி:—இதோ வந்து கொண்டிருக்கேன் அப்பா. (காபிக் கோப்பைகளை வைத்துக்கொண்டு வந்த தட்டை அங்கிருந்த முக்காலியொன்றில் வைக்கிறாள்.)

பெரிய:—(ஒரு கோப்பையை எடுத்துக் கொண்டு, மற்றொன்றைக் கண்ணப்பனிடம் காட்டி) காபி எடுத்துக்குங்க கண்ணப்பன்!

கண்:—இருக்கட்டும்...வர்ற பொழுது தான் சாப்பிட்டு வந்தேன்.

பெரிய:—சும்மாச் சாப்பிடு, தம்பி. வயசுப் பிள்ளையெல்லாம் இப்படிச் சொன்னா? நாங்களெல்லாம் அந்தக் காலத்திலே சாப்பிட்ட ஊட்டத்தாலேதான் இந்த மாதிரி...

கண்:—ஆமாமா...உண்மைதான் (விஷயத்தை நினைவுபடுத்துவதுபோல) ம்... கொஞ்சம் தயவு பண்ணி இன்னிக்கே மானேஜரைப் பார்த்துச் சொன்னீங்கன்னா, ரொம்ப உதவியாயிருக்கும் (காபியை எடுத்துக் குடிக்கிறான்).

பெரிய:—அடடா! நான்தான் சொல்லிட்டேனே, அதைப் பத்தி இனி ஒண்ணும் நினைக்க வேண்டாமுன்னு!

கண்:—(திடுக்கிட்டு) அப்படின்னா?

பெரிய:—கவலைப்படாதே தம்பி. ஆறிப் போயிடும், காபியைச் சாப்பிடுங்க: (சிறிது தயங்கி) நான் இப்போ எதுவோ சொல்ல வந்தேன். (நினைத்துப் பார்த்து) ம்... ஞாபகம் வந்துடுச்சு...ம்... வந்து... திருமந்திரத்திலே ஒரு பாட்டு இருக்கே தெரியுமா?

கண்:—நான், அந்த வம்புக்கெல்லாம் போறவன் இல்லீங்க!

பெரிய:—(வேடிக்கையாய்ச் சிரித்து) நல்ல பையன் தம்பி, நீ—திருமந்திரமுன்னு சொன்னதும், ஏதோ வசியப் படுத்துற உச்சாடனமுன்னு நினைச்சுட்டியோ? அது சைவத் திருமுறையிலே ஒண்ணு. அதை எதுக்குக் 'கோட்' பண்ண வந்தேன்னா...திருமூலர் சொல்றார்: (நிதானமாய் இராகத்துடன்).

'உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும்
மாட்டார்...'

அடுத்த அடி மறந்து போச்சே! ம்! (நினைத்துப் பார்த்து) வந்துடுச்சு: (பாடுகிறார்).

'உடம்பை வளர்க்கும் உபாயம்
அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வ...ந்
தேனே!'

பார்த்தியா தம்பி. மகா ஞானிகளே இப்படிச் சொல்றாங்க, உடம்பை நல்லாப் பாதுகாக்கணுமுன்னு.

(சுவர்க் கடிகாரம் ஒன்பது தடவை ஒலிக்கிறது.)

கோமதி:—அப்பா, மணி ஒன்பது அடிச்சுட்டுதே...!

பெரிய:—ஆமா, கோமதி. மறந்தே போயிட்டேன்! ஒன்பது மணிக்குள்ளே வந்து சந்திக்கறதாக வக்கீலிடம் சொல்லியிருந்தேன். இதோ ஆச்சு. (கண்ணப்பனிடம்) அப்புறம் தம்பி... (மறந்து போய்) நான் எதுக்குச் சொல்ல வந்தேன்னா...(மறந்து) அடடா...இப்போ என்ன சொன்னேன்...

கண்:—வக்கீலை ஒன்பது மணிக்குச் சந்திக்கணுமின்னு...

பெரிய:—அதுதான் இருக்கே. நான் சொல்லிக்கிட்டு வந்ததை மறந்துட்டியே, அதுக்குள்ளே...

கண்:—மன்னிச்சுக்கங்க, சரியா...

பெரிய:—பார்த்தீரா, அதான் இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கே 'மெ(ம்)மரி பவர்ங்கறது' இல்லே! இந்த வயசிலேயே இப்படியிருந்தா, என்னைப்போல ஆனதும் என்ன செய்வீங்க?

கண்:—வந்து...ம்...உடம்பு...உயிர் அப்படின்னு ஏதோ...

பெரிய:—ஆமாமா...அதைச் சொல்றதுக்குத்தான் மறந்து போய் இவ்வளவு நேரம் தவிச்சுட்டிங்க! எதுக்குச் சொல்ல வந்தேன்னா... நல்லாச் சாப்பிடணும். சும்மா அரை இட்டிலிக்கு மேலே சாப்பிட முடியாது; கால் கப் காபிதான்

கப்பல் கவுந்தமாதிரி கன்னத்திலே......

தெரிந்த பெயர்

தெரியாத விவரம்?

மேல்மாயில் மருந்து

Regd

சரீரத்தின்மேல் சிவப்பு படைகள், தடிப்புகள் ஏற்படுதல், குத்தல் வலி, சொறி, படையுள்ள இடங்களில் திமிர் உண்டாகுதல், ஊசியால் குத்தினும் வலி தோன்றாமை, நெருப்பு பட்டு கொப்புளங்கள் ஏற்படுவதும் தெரியாமை, துர்நீர் சர்வாங்கமும் பரவி ரத்தத்தில் கலந்து மதமதப்பு உண்டாகுதல், கைவிரல்கள் மடங்குதல், கொப்புளம் கிளம்புதல், நாசி அடைத்தல், பாதத்தில் குழிப்புண் உண்டாகுதல், கால் கைகளின் விரல்கள் குறைதல், மூக்கு சொட்டையாகுதல். பார்ப்பவர்கள் சகிக்கொணாத ரணங்கள் இவைகட்கு மிகச்சிறந்த நிவாரணி.

1 மண்டலம் எண்ணெயும் லேகியமும் 8 oz. ஸ்ரீ பரமாத்ம (ஸ்நான) தைலமும் தபால் செலவுடன் ரூ. 10-50.

முழு விவரங்களுக்கு எழுதுங்கள்



சித்தர் டாக்டர்

K. T. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரி & சன்ஸ்

5/22, மேல்மாயில் P. O. (N. A Dt)

குடிப்பேன்னு சொன்னு...(அவசரத்துடன்) அடடா...மணி ஆகுதே!...சரி... தம்பி...

கண்:—மறந்துடாமே இன்னிக்குச் சாயங்காலமோ, இல்லே நாளைக்கோ பாங்க் மானேஜரிடத்திலே...

பெரிய:—'நோ...நோ...' திருப்பித் திருப்பி கிளிப் பிள்ளைமாதிரி பேசுறிங்க தம்பி!...வந்து..ம்..நான் வெளியே போகணுமின்னு சொன்னேனே...

கண்:—ஆமாங்க!

பெரிய:—இல்லேன்னு சாவகாசமாப் பேசலாம்; சந்திப்போம்...

கண்:—சரிங்க, போய் வர்றேன்!

(எழுந்து புறப்படுகிறுன்.)

காட்சி 3.

[டெலிபோன் மணி அலறுகிறது. கோமதி எடுத்துப் பேசுகிருள்]

டெலிபோன் குரல்:—கண்ணப்பன் பேசுறேன்; ஐயா இருக்காங்களா?

கோம:—ஓ; நீங்களா! அப்பா வீட்டிலே இல்லையே...

டெ. கு:—எப்பொ வந்தா சந்திக்கலாம்?

கோம:—அடடா, நேத்து இரவுதானே அப்பா சென்னைக்குப் போயிருக்காங்க? வர்றதுக்கு நாலைஞ்சு நாள் ஆகும்.

டெ. கு.:—அப்படியா?

கோம:—நீங்க இப்பொ எங்கிருந்து பேசுறிங்க?

டெ. கு.:—உறையூர் கஃபேயிலேருந்து பேசுறேன்... இப்படிப் போறதாக என்னிடம் சொல்லலியே...

கோம:—என்ன விஷயம்?

டெ. கு.:—வேறு ஒண்ணுமில்லே. வேலை விஷயமாச் சொல்லியிருந்தேனே, 'குளோஸிங் டேட்' இன்னிக்குத்தான்...

கோம:—(பரிதாபத்துடன்) த்சு...த்சு! ஒரு கேஸ் விஷயமாப் போயிருக்காரு... எப்படியும் நாலு நாள் ஆகும்...

டெ. கு.:—(வருத்தமாய்) இப்படி நடக்குமுன்னு கொஞ்சமும் நான் நினைக்கலே...எப்படியும் உதவி செய்வார்ன்னு நம்பித்தான்...

கோம:—உண்மைதான்!... ஆறு... அப்பாவோடே குணத்தைத்தான் நீங்க தெரிஞ்சிருப்பிங்களே...அசாத்தியமான மறதிக் குணம் அவருக்கு...நானும் உங்க வேலை விஷயமா அடிக்கடி அவரிடம் ஞாபகப் படுத்திக்கொண்டுதான் இருந்தேன்!... இருந்தும்...

டெ. கு.:—என்னுடைய அதிர்ஷ்டம் அப்படியிருக்கு!...நீங்க ஒண்ணும் வருத்தப்பட வேண்டாம். 'தேங்க்ஸ்'.

கோம:—ஹலோ...ஹ(ல்)லோ! (தனக்குள்) அடே, போனை வைச்சுட்டாரே; பாவம். ஏமாற்றத்தாலே அவர் மனசு எவ்வளவு வருந்தும்!

(ரிஸீவரை வைத்துவிட்டு உள்ளே போகிருள்.)

காட்சி 4.

[கண்ணப்பன் கவலையுடன் உட்கார்ந்திருக்கிறுன். அப்பொழுது சோமு அங்கே வருகிறுன்.]

சோமு:—என்ன, கண்ணப்பா! கப்பல் கவுந்த மாதிரி கன்னத்திலே கையை வைச்சுக்கிட்டு...

கண்:—(கவலையுடன் பெருமூச்சு விட்டபடி) என்ன செய்யறது...?

சோமு:—பெரியநாயகம் பிள்ளையைச் சந்திச்சியே, என்ன ஆச்சு?...

கண்:—என்ன ஆச்சு? நடையா நடந்து பார்த்தாச்சு!

சோமு:—ஏன் சிபாரிசு செய்யமாட்டேன்னு சொல்லிட்டாரோ?

கண்:—(எரிச்சலாய்) சோமு, நீ வேறே அந்த வயித்தெரிச்சலை ஏன் கிளப்பறே?

சோமு:—(தனக்குள்) ஏன், அவர் இப்படி அசட்டையாய் இருக்காருன்னு தெரியலியே...(கண்ணப்பனிடம்) அவர் மனசிலே படுறமாதிரி சொல்லியிருந்தா...

கண்:—மனசிலேயாவது படுறதாவது... அவருடைய சொந்த விஷயத்தை ஞாபகப்படுத்தவே தொண்ணூறு பேர் வேணும். மற்றவன் விஷயம் எங்கே அவர் மனசிலே நிக்கப் போவுது?

சோமு:—(வியந்து) மனுஷனுக்கு அவ்வளவு மறதிக்குணமா?

கண்:—இந்த லட்சணத்திலே எனக்கு மறதிக் குணம் இருக்குதாம்; அதனாலே 'மெ(ம்)மரி பவரை' வளர்த்துக்கணுமுன்னு 'அட்வைஸ்' பண்ருரு.

சோமு:—அதெல்லாம் போகட்டும்; முடிவா என்ன ஆச்சு?

கண்:—அஞ்சு, ஆறு நாளும் அவர் வீட்டுக்கு நான் நடையாய் நடந்ததையெல்லாம் மறந்து போய் அந்தப் பாங்க் மானேஜரிடம் ஒண்ணும் சொல்லலே...முந்தா நாள் ராத்திரி சென்னைக்குப் புறப்பட்டுப் போயிட்டார்.

சோமு:—என்னிக்கு வருவாராம்?

கண்:—இனிமே என்னிக்கு வந்தா என்ன! இன்னிக்கு ஞாயிற்றுக்கிழமையா?...ம்...புதன் அல்லது வியாழன் வாக்கிலே வருவார்போலேயிருக்கு!

சோமு:—(தேற்றும் குரலில்) சரி... இதுக்காக ஒண்ணும் கவலைப்படாதே, கண்ணப்பா! பெரியநாயகம் பிள்ளை இத்தனை தூரம் பாராமுகமா இருப்பாருன்னு நான் கொஞ்சங்கூட நினைக்கலே. போகட்டும்...வேறே 'டிரை' பண்ணலாம்!

(அப்பொழுது தந்திப் பியூன் சைகிளில் வந்து இறங்குகிறுன்.)

தபால்:—சார், போஸ்ட்...

சோமு:—இன்னிக்கு ஏது தபால்? ஓ! 'எக்ஸ்பிரஸ்ஸா?'

தபால்:—கண்ணப்பன், யாரு சார்?

சோமு:—இவர்தான்!

தபால்:—இந்தாங்க...பதினுலுக்கு நேரே கையெழுத்துப் போடுங்க!

(கண்ணப்பன் கையெழுத்துப் போட்டுவிட்டு உறையை வாங்கிப் பிரிக்கிறுன்.)

சோமு:—எங்கிருந்து வந்திருக்கு?

கண்:—(அலுத்துக் கொள்கிறுன்) த்சு!

சோமு:—படிச்சுத்தான் சொல்லேன்...

கண்:—(படிக்கிறுன்) 'ஐயா, எமது கோவிந்தா கூட்டுறவு பாங்கியில் உம்மை 'எழுத்தர்' வேலைக்கமர்த்தத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால்...திங்கள் காலை 10 மணிக்கு எம் காரியாலயத்துக்கு வந்து உத்தியோக உத்தரவை நேரில் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று இதனுல் தெரிவிக்கப்படுகிறது. உமது உண்மையுள்ள, சிவ. சுப்பிரமணியம், நிர்வாகி, கோவிந்தா கூட்டுறவு பாங்க்.' சோமு எங்கே கைகொடு...அடியேனின் அநேக வந்தனங்கள்.

சோமு:—உன்னுடைய வந்தனங்களைப் பெற வேண்டியவர் சென்னையில் இருக்கார். வந்ததும் போய்ச் செலுத்து.

கண்:—பெரியநாயகம் பிள்ளை உண்மையிலேயே பெரிய மனுஷர்தான். எப்படியோ ஞாபகம் வைத்திருந்து, சிபாரிசு செய்திருக்காரே!

சோமு:—அவருக்கு ஞாபகம் இல்லைன்னு எப்படிச் சொல்றே?

கண்:—எப்படின்னு, நான் போய்ப் பார்த்த சமயத்திலே எல்லாம் எதைப் பத்திப் பேசினுர் தெரியுமா? திருமந்திரம், திருவாசகம், திருப்புகழ், திருக்குறள், சித்தர் பாடல் மயம்தான்! என் வேலையைப் பத்தி மொத்தம் அஞ்சு நிமிஷம்கூடப் பேசியிருக்க மாட்டோம்.

சோமு:—ஆமா...உன் விஷயத்தையே பத்திப் பேச ஆரம்பிச்சா, வேலையில்லாமல் அலையறதைப் பத்தியே ஒரு மூச்சு அழுதிருப்பே. அதை யாரு கேட்டுக்கிட்டு உக்காந்திருக்கறது?

கண்:—வேணுமின்னு அழறேம்?... நம்ம பாடு அது!

சோமு:—பாடுமாச்சு; காடுமாச்சு! கையிலே நாலு காசு இல்லைன்னு, மனசு பஞ்சப் பாட்டைத் தவிர வேறெதையும் நினைக்காது! உலகத்திலே நல்ல விஷயங்கள் நடக்கிறதுகூடத் தெரியாது. அதனுலேதான் உன் மனக்கோணலைச் சரிப்படுத்தறதுக்காக நல்ல விஷயங்களைப் பத்தியே பேசியிருக்காரு!

கண்:—பேசினது மட்டுமில்லாமல், செயலிலேயும் காட்டிட்டார்.

சோமு:—அதுதான் பெரியவர்களின் இயல்பு! (திரை)

ஆதித்தன் காதல்

26. ஓலை கொணர்ந்த ஒற்றன்

பழம் பெருமை வாய்ந்த உறையூர்ப் பெரு நகரின் புராதனமான அரண்மனை சோபையற்று விளங்கியது. அரச மாளிகை எங்கும் அழகற்ற அமைதியே நிலவியிருந்தது.

கொலுச் சபை கூடிப் பல நாட்களாகி விட்டன. நித்திய நிகழ்ச்சிகள்கூடச் சரிவர நடைபெறவில்லை. சமீபத்திலே நடந்த போரில் வல்லம் கோட்டைதான் வீழ்ந்ததா, உறையூர்க் கோட்டை வீழ்ந்ததா என்று மயங்கும்படி எங்கும் ஒரு சோர்வு காணப்பட்டது. சிங்கார வீதிகளிலும் சித்திர கூடங்களிலும் உலாவரும் சோலைகளிலும் ஆலய வழிச் சாலைகளிலும் எப்போதும் ஒரு கலகலப்பு மிகுந்திருக்கும்; களிப்பு நிறைந்திருக்கும். வீரர்கள் வருவார்கள்; போவார்கள். அறிஞர்கள் அங்கங்கே அளவளாவியிருப்பார்கள். காளையரும் கட்டழகியரும் வளையச் சுற்றி வருவார்கள்; திரிவார்கள். ஆயினும் ஒருவர் முகத்திலாவது வெற்றியின் எக்களிப்பைக் காணவில்லை; மாருகக் கலக்கமே கவலையாகப் படர்ந்திருந்தது.

தீரம் காட்டி, வீரமுடன் போரிட்டுத்தான் வல்லம் கோட்டையை வீழ்த்தியது சோழர் படை. ஆயினும் சோழர்களுக்கு அந்த வெற்றியினுல் பெரு மகிழ்ச்சியே போய்விட்டது. காரணம் களப்பிரர் தலைவனை முத்தரையர் தப்பிவிட்டது ஒன்று; மற்றொன்று விஜயாலய சோழரின் விலாவிலே பாய்ந்த விஷம் தோய்ந்த கத்தி.

போரிட்டுப் போரிட்டு விழுப்புண் ஏறிய சோழ வேந்தர் விஜயாலயர் அன்று முதலே படுத்த படுக்கையாகி விட்டார். அதிலிருந்தே அவருடைய உடல் நிலை நாளுக்கு நாள், பொழுதுக்குப் பொழுது கவலையளிப்பதாக மாறி வந்தது. நாட்டின் பெரு வைத்தியர்கள் எல்லாரும் அருகிலேயே தங்கியிருந்து அவ்வப்போது கண்காணித்து வந்தார்கள். அப்படியிருப்பினும் குருதியிலே பாய்ந்து கலந்துவிட்ட விஷத்தின் வேகத்தை முறிக்கவே முடியவில்லை.

வேறு எவராக இருந்திருந்தாலும் இத்தனை நாள் தாக்குப் பிடித்து நிற்க முடியுமா என்பதே 'நிச்சயமில்லாத காரியம் தான். ஆனுல், வீர விஜயாலய சோழ தேவர் ஆழமாகப் பதிந்துவிட்ட காயத்தின் உபாதையைச் சிறிதும் பொருட்படுத்தியதாகவே தோன்றவில்லை. வைத்தியர்கள் கவலைக் குறி காட்டியபோதுகூட அவர் முகம் தெளிவாகத்தான் விளங்கியது; வேதனையின் சிறு நிழல்கூடப் படியவில்லை. பேச்சும் போக்கும் திடமாகவே இருந்தன.

போர் முகத்திலே பாய்ந்த எதிரியின் கத்தியை அவரேதான் முள்ளைப் பிடுங்குவதுபோலப் பிடுங்கி எறிந்தார். 'என் உடலிலே தொண்ணூற்றுறு வடுக்கள் இருக்கின்றன. இன்னொரு காயத்துக்கு இடமில்லையே!' என்று சொல்லிக் கொண்டேதான் அவர் புரவிமீது சாய்ந்தார். அதற்குள் ஆதித்தனும் கோட்புலியாரும் ஓடிவந்து விட்டார்கள்.

ஆதித்தனுடைய தலைமையிலே தறுகண் வீரர் படை வீறுகொண்டு பாய்ந்த

தைக் கண்டபோது, அவர் உள்ளம் புளகாங்கிதம் கொண்டது; பெருமையால் அவர் நெஞ்சு விம்மியது. தம்மைக் காட்டிலும் தம் மகன் சிறந்து இளமையின் வேகம் கொண்டு விளங்குவதைக் கண்டு பெருமிதப்பட்டார். அவர் தம் மைந்தனை ஆரத் தழுவி, 'ஆதித்தா! என் கனவே உருவெடுத்து வந்தவனைப்போல் நீ விளங்குகிறாய்! இனி, நான் இதனால் இறப்பதாக இருந்தாலும் எனக்குக் கவலையில்லை! எத்தனையோ காலமாக இருண்டு கிடந்த குலத்தில் இன்று இரவிபோல நீ முளைத்து விட்டாய்! இந்த ஆறுதலே எனக்குப் போதும்!' என்று தமக்குள்ளாகவே கூறிக்கொண்டார்.

அதற்குப் பிறகு அவர் உடல் நிலை வரவர மோசமாகி வந்தது. அதைப்போலவே நாட்டின் நிலையும் வேறு போக்கில் மாறி வருவதை அவர் கண்டார். ஆயினும் ஆதித்தனைப் பார்க்கும் போதெல்லாம் அந்தத் தந்தையின் செவ்வரி படர்ந்த கண்கள் பளபளத்தன. எத்தகைய இடுக்கண் வந்தாலும் இந்தப் பெருமகனால் எதிர்த்து நிற்க முடியும் என்கிற நம்பிக்கையும் பெருமிதமும் அவர் முகத்திலே ஒளி வீசின.

அவர் வரையில் நெஞ்சுரத்தோடு இருந்தாலும், ஆதித்தன் தம் நிலை கண்டு நெஞ்சம் கலங்கியிருப்பதை அவரால் உணர முடிந்தது. இளம் கோட்புலியார் அவரைப் பார்க்க வரும்போதெல்லாம், 'அமைச்சரே! இந்த வைத்தியர்களை வைத்து என்னை ஏன் வேதனைப் படுத்துகிறீர்கள்? என்னைக் கவனிக்கும் இந்த முயற்சியை விட்டு, மனம் தளர்ந்து நிற்கும் இளவரசனுக்குத் தேறுதல் கூறலாகாதா?' என்று கேட்டார்.

பல்லவ காஞ்சியிலிருந்து வந்த செய்திகளிலிருந்து பழைய நிலைமை இப்பொழுது முற்றிலும் மாறிவிட்டதாகத் தோன்றியது. வல்லம் கோட்டை முற்றுகைக்கு உதவுவதற்காக வந்த பல்லவர் சேனை, காலம் கடந்துதான் வந்தது. அப்படி வந்ததுடன், சோழர்கள் கைப்பற்றிய இடங்களையெல்லாம் அந்தச் சேனையே இப்போது கண்காணித்து வந்தது. அதனாலேயே இளம்கோட்புலியார் வல்லத்தை விட்டுவிட்டு, உறையூர் திரும்பும்படியாகிவிட்டது. இதைக் கண்ட விஜயாலயரின் உள்ளம் ஒரு நிலையில் இல்லை. இனி, அரசியல் நிலை எப்படியெல்லாம் உருக்கொள்ளுமோ, யார் கண்டது?

'கோட்புலியாரே!... இந்தப் புண்ணைவிட்ப் பல்லவ சக்கரவர்த்தி நிருபதுங்க மகா பல்லவர் இறந்ததால் ஏற்பட்ட புண்ணே

ஆழமாகப் பதிந்திருக்கிறது. இனி அப்படிப்பட்ட உத்தம நண்பரும் உள்ளன்பு கொண்டவரும் எங்கே எனக்குக் கிடைக்கப் போகிறார்கள்?' என்று அவர் நெஞ்சு தழுதழுக்கக் கூறினார்.

'அபராஜித வர்மன் நமது இளவரசரிடம் ஏதோ சொந்தப் பகைமை கொண்டிருப்பதாகத் தெரிகிறது. பல்லவ சக்கரவர்த்தியின் மரணத்தை அவர் வேறு விதமாகப் பயன்படுத்திக்கொண்டு வருகிறார் என எண்ணுகிறேன்!' என்றார் கோட்புலியார்.

'இதெல்லாம் ஆதித்தனுக்குத் தெரியுமா?'

'தெரியும் என்றே எண்ணுகிறேன்!'

விஜயாலய சோழ தேவரின் முகத்திலே ஒரு வாட்டம் தோன்றியது.

'அபராஜிதன் நமது ஆதித்தனைப் பகைத்து, முத்தரையரின் நட்பைப் பேணுவதாகவா தோன்றுகிறது?'

'அப்படித்தான் தோன்றுகிறது, அரசே! முத்தரையருக்கு உதவியாகப் பாண்டியன் மீண்டும் உறையூரைத் தாக்க வரக்கூடும். ஆனால், அப்போது பல்லவர் உதவி நமக்கு அதுபோல் கிடைக்காது என்றே நான் எண்ணுகிறேன். பாண்டியர்களைத் தடுக்கவும் ஒடுக்கவும் நம்மைவிட முத்தரையரே மிகவும் பயன்படுவார் என்று அபராஜிதன் கருதுவதாகத் தோன்றுகிறது. பாண்டியர்களுக்குப் பதிலாக, பல்லவரே முத்தரையரை முன்னிட்டு நம்மை அடக்க முன்வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!' என்றார் கோட்புலியார்.

விஜயாலய சோழர் இதைக் கேட்டதும் தம் உடல் நிலையை மறந்து வெகுண்டெழுந்தார். 'அப்படியானால் நாம் தனியாகவே பல்லவரை எதிர்த்து நிற்போம்; அவசியமானால் பாண்டியர்கள் உதவியையும் கோரிப் பெறுவோம்!' என்று கர்ஜனை புரிந்தார். கோட்புலியார் கலங்கிப் போய்விட்டார். விஜயாலய சோழர் எத்தனை வேகமாக எழுந்து பேசினாரோ, அத்தனை வேகமாகப் படுக்கையில் மீண்டும் சாய்ந்தார். களைப்பினால் அவருடைய மூச்சுத் தணறியது.

'என்னை மன்னித்தருள வேண்டும். அரசருடைய உடல் நிலையறியாமல் ஏதேதோ நான் உளறிவிட்டேன்!' என்றார் கோட்புலியார்.

'இல்லை, இல்லை; நீர் உளறவில்லை. உம்முடைய மனத்தில் பட்டதைத்தான் கூறினீர்கள். பல்லவர்கள் பொறுத்திருந்து பார்ப்பது நன்றாகத் தெரிகிறது. பாண்டியர்களுடைய உதவியை நாம் பெற முடியாதபடிச் செய்துவிட்டு, அதற்குப் பிறகு எப்படி நம்மை வளைத்துப் பிடிக்கலாம் என்றே அவர்கள் ஆராய்ந்து வருகிறார்கள். ஆமாம்; அப்படித்தான் நான் எண்ணுகிறேன். அபராஜிதன் எப்படிப்பட்டவன் என்பது எனக்குத் தெரிகிறது. தனக்கு நிகரான மற்றொரு வீரனைக் காண அவன் சகிக்காதவன், அது நன்றாகத் தெரிகிறது. அதையும் தவிர, அவனுடைய விரோதம் சுலபத்தில் தீரக்கூடியதாக எனக்குத் தோன்றவில்லை. எதிலிருந்து இப்படிச் சொல்கிறேன், தெரியுமா? இதோ பாரும் ...இதை வேறு யாரும் அறியவேண்டாம்! ஆதித்தன் தெரிந்துகொள்வதைக் கூட நான் இப்போது விரும்பவில்லை!' என்று கூறிக்கொண்டே, தம் படுக்கையினடியில் வைத்திருந்த ஓலை ஒன்றை எடுத்து, கோட்புலியாரிடம் நீட்டினார்.

நினைத்தபடி நடந்தால்... சந்தனு.



அதை வாங்கிப் பிரித்துப் படிக்கத் தொடங்கிய கோட்புலியார் முகம், வியப்பினால் மாறுபட்டது. அந்த ஓலைச்சுருள் பல்லவ காஞ்சியிலிருந்து விஜயாலய சோழதேவருக்கே நேரிட எழுதப்பட்டிருந்தது. அதை ஒரு முறைக்கு இரு முறையாகப் படித்த கோட்புலியார், மேலே பேசத் தோன்றாமல் அப்படியே வீற்றிருந்தார்.

'நன்றாகப் படித்துப் பார்த்தீர்களா?'

'படித்துவிட்டேன்!'

'இப்பொழுது என்ன சொல்கிறீர்கள்? இதெல்லாம் உண்மையாக இருக்குமா? அப்படி மட்டும் உண்மையாக இருக்குமானால், அபராஜிதனுடைய விரோதம் எப்படி விலகும்?' என்று கேட்டார் விஜயாலய சோழர்.

கோட்புலியார் இதற்கு விடை கூறவில்லை. அதற்கு மாறாகத் தீவிர யோசனையில் ஆழ்ந்தார். பிறகு நிதானமான குரலில், 'இது உண்மையாகத்தான் இருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது. இளவரசர் போக்கிலிருந்து சொல்கிறேன். அவர் எதையோ மறைத்து வைத்து மறுகுவதாக நான் எண்ணினேன், அது இப்போது விளங்கிவிட்டது. பல்லவ சக்கரவர்த்தி அவரிடம் காட்டிய பரிவை நான் இங்கே நேரிலேயே கண்டிருக்கிறேன். ஆகவே, எல்லாவற்றையும் சேர்த்துப் பார்க்கும்போது இதில் காணப்படும் செய்தி உண்மையாக இருக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், பிற்பகுதியில் காணப்படும் செய்திதான் கவலை தருவதாக இருக்கிறது. நம்முடைய இளவரசர் மீது இப்படிப்பட்ட ஒரு குற்றத்தை மிகச் சுலபமாகச் சுமத்திப் பழி வாங்கவே அபராஜிதன் எண்ணுவதாகத் தோன்றுகிறது!' என்றார்.

'ஆனால், பல்லவ இளவரசியின் எண்ணம் இதுவாக இருக்குமானால்..இதுவாக இருக்குமானால்...'என்று சொல்லிக்கொண்டே வந்த விஜயாலய சோழரின் பேச்சு, காலடிச் சத்தம் கேட்டுத் தடைப்பட்டது.

ஆதித்தனே தந்தையைக் காண வந்துகொண்டிருந்தான். கோட்புலியாரிடமிருந்து சட்டென்று ஓலைச் சுருளை வாங்கித் தலையணைக்கு அடியில் வைத்துக்கொண்டார் பெரிய சோழர். ஆதித்தன் அதைக் கவனித்ததாகத் தெரியவில்லை. அரசர் சைகையால் ஏதோ உணர்த்தவே, கோட்புலியார் தம் இடத்தை விட்டு எழுந்து இளவரசனை வணங்கிவிட்டு, இருவரிடமும் விடை பெற்றுக்கொண்டு வெளியேறினார்.

சிறிது நேரம் தந்தையின் உடல்நிலை பற்றிய பேச்சே நடந்தது. விஜயாலயர் களைப்பினால் கண்களை மூடிக் கொள்பவர் போல் காணப்பட்டார். பிறகு, கண்களை மெதுவாகத் திறந்து, 'ஆதித்தா! பல்லவ இளவரசியை நீ பார்த்திருக்கிறாயா?' என்று கேட்டார்.

ஆதித்தன் திடுக்கிட்டு நின்றான். 'பார்த்திருக்கிறேன், அப்பா!' என்று உமிழ் நீரை விழுங்க முடியாமல் தடுமாறியவாறே கூறினான்.

அதற்கு மேல் விஜயாலய சோழர் பேசவில்லை. சிறிது நேரம் சிந்தையில் மூழ்கியவராக இருந்துவிட்டு, 'அபராஜிதன் அவளைத்தானே மணம் செய்து கொள்ளப் போகிறான்?' என்று கேட்டார்.

ஆதித்தன் மிக்வும் எச்சரிக்கையோடு 'அது எனக்குத் தெரியாது, அப்பா!' என்றான்.

விஜயாலய சோழர் இதைக் கேட்டு, மெதுவாக நகைத்தார். 'என்ன ஆதித்தா, உனக்குத் தெரியாது என்கிறாய்? உலகமெல்லாம் பேசிக் கொள்கிற ஒரு விஷயம் உனக்குமட்டும் எப்படித் தெரியாமல் போகும்? ஒருக்கால் உலகம் எண்ணிப் பேசுகிறபடி அப்படி ஒன்றும் நடைபெறாது என்று சொல்ல வருகிறாயா?' என்று வினவினார்.

ஆதித்தன் தன் தந்தையையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அவருடைய கேள்விக்கு வேறு நோக்கமோ பொருளோ இருப்பதாக அவனுக்கு எந்தவிதமான சம்சயமும் உண்டாகவில்லை. அவர் உண்மையைத் தெரிந்து கொள்ளக் கேட்பவர்போலவே தோன்றினார். ஆகவே, 'அதையும் நான் சொல்லவில்லை. அபராஜிதன் பல்லவ இளவரசியை மணந்துகொள்ளப் போவதாகத் தான் சக்கரவர்த்தி உயிருடன் இருக்கும்போதே வதந்தி இருந்தது. ஆனால், அவர் இறந்த பிறகுதான் எல்லாமே மாறி வருகிறதே! அபராஜிதன் எண்ணமும் மாறி இருக்கலாமோ என்றுதான் சொல்கிறேன். அவன் ஒரு கணிகையிடம் அன்பு வைத்திருக்கிறான். அதனால் இளவரசியை மணந்துகொள்ளும் விஷயத்தைப் பற்றி நிச்சயமாக ஒன்றும் என்னால் கூற முடியாது' என்றான்.

'அதிலிருந்து எப்படி இது தெரியாது என்று சொல்ல முடியும்? அரசர்களுக்கு இப்படியெல்லாம் நேருவது இயற்கைதான். ஆனால், இதைக்கொண்டு திருமணம் நடப்பதையே சந்தேகிக்க முடியுமா?'

ஆதித்தன் அதற்குமேல் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. பேசினால் தன்னையறியாமலே தன் உள்ளம் வெளிப்பட்டு விடுமோ என்று அவனுக்கு அச்சமாக இருந்தது.

தந்தையும் மகனும் ஒருவரை ஒருவர் நேருக்கு நேர் பார்த்துக் கொள்ளாமலே இவ்வளவு நேரம் உரையாடி விட்டார்கள். சற்று நேரம் அமைதியில் கழிந்தது. அந்த க்ஷண நேர அமைதிக்குள்ளே ஒவ்வொருவர் நெஞ்சத்துள்ளும் ஆயிரமாயிரம் சிந்தனைகள் உருவாகிச் சுழன்றுகொண்டிருந்தன.

கடைசியாகப் பெரிய சோழர்தான் மௌனத்தைக் கலைத்தார்:

'ஆதித்தா! அதோ இருக்கிறது பார், ஒரு தந்தப் பேழை! அதனுள் என்ன இருக்கிறது தெரியுமா, உனக்கு?' என்று கேட்டார்.

'தெரியும்; நவரத்தினங்கள் வைத்து இழைத்த பிடிபோட்ட உடைவாள்!'

'ஆனால், அது ஏது என்பது தெரியுமா உனக்கு?'

'அந்த உடைவாளை உங்கள் உயிரினும் மேலாக மதிக்கிறீர்கள் என்பது தெரியும். அதை விசேஷ நாட்களில் நீங்கள் எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொள்வதையும் கண்டிருக்கிறேன். கொலுச்சபையில், கொற்றவையில் அது உங்கள் இடையை அலங்கரிக்கும் என்பதும் எனக்குத் தெரியும். ஆனால், அதற்குமேல் அது ஏது என்பது எனக்குத் தெரியாது. அதைக் கூறினால் கேட்க ஆவலுடையவனாகத்தான் இருக்கிறேன்!' என்றான் ஆதித்தன்.

'அதைக் கூறத்தான் கேட்கிறேன். உனக்கு இவ்வளவு நாளும் அதைப் பற்றித் தெரியாதுதான். ஆனால், இனி அதைத் தெரிந்து கொள்ளாமலும் இருக்க முடியாதுதான். ஆயிரம் ஆண்டுகளாக நம்முடைய குலம் அடிமைப்பட்டுக் கிடக்கிறது. ராஜ வம்சமே அநேகமாக அழிந்துவிட்டது. நம்முடைய பழம் பெருமைகள் செத்தொழிந்து விட்டன. ஆனால், எல்லாமே அழிந்தொழிந்து விடவில்லை என்பதைக் காட்ட நம்மிடம் ஒன்றே ஒன்றுதான் இன்று எஞ்சி நிற்கிறது. அதுதான் அந்த உடைவாள்! மனுவின் வழிவந்த நம் குலத்தில் இன்று எஞ்சி நிற்பது நீயும் அந்த உடைவாளும்தான்! கரிகால் வளவனும் நெடுமுடிக் கிள்ளியும் நீதியும் அறமும் தழைக்க ஆண்ட உடைவாள் அது! பகைவர்களை ஒழித்து, பாரிலே சோழர் பெருமையை நிலை நாட்டிய பழம் பெருமை அதற்கு உண்டு. இன்று இது ஒன்றுதான் நம்மையும் நம் முன்னோர்களையும் இணைத்து நிற்கிறது. இந்த உடைவாளை அடிமையில் உழலும் என் கையிலே ஏந்தி, அரியணையில் அமர நான் விரும்பியதுமில்லை; துணிந்ததுமில்லை. அது சுதந்திர புருஷனை சோழன் ஒருவனுக்குத்தான் உரியது. அவனே இதை எடுத்து அணியத் தக்கவன். நம்முடைய புராதனப் பெருமையும் புகழும் மண்ணோடு மண்ணாக மறைந்து போய்விட்டன. அதையெல்லாம் மீட்டும் நிலை நாட்டும் திறம் படைத்த மாவீரனே இதைக் கையில் ஏந்தி, அரியணையில் அமர உரிமையுடையவனாவான். இன்று நீ சாதாரண குறுநில மன்னன்தான்; பல்லவர் செங்கோலுக்குக் கட்டுப்பட்டவன். அதனால் சுதந்திர அரசனுக்குரிய தனி மதிப்பு உனக்கு இல்லை. உன் தந்தை உன்னை அடிமையாகவே வைத்திருக்கிறான். ஆனால், அந்த அடிமைத் தளையிலிருந்து அகலும் பெரும் திறமை அந்த மகா சக்தி துர்க்கையின் அருளால் உனக்குக் கிடைக்கட்டும்!' என்றான், நாத் தழுதழுக்க.

ஆதித்தன் எழுந்து சென்று அந்தத் தந்தப் பேழையைக் கண்களில் நீர் சொரிய நோக்கி நின்றான். தந்தையும் மகனும் தம் தம் போக்கில் சிந்தையைச் செலுத்தியவாறு காணப்பட்டார்கள்!

'அரசருக்கு எல்லா மங்களமும் பெருகட்டும்!' என்று ஒரு குரல் கேட்டு, விஜயாலய சோழர் திரும்பிப் பார்த்தார்.

சோழ வீரர்கள் இருவர் பல்லவ ஒற்றனை அவர் முன்னே விட்டுவிட்டு விலகி நின்றார்கள்.

'எங்கே, காஞ்சியிலிருந்தா வருகிறாய்?'

காஞ்சி மண்டலாதிபதி, ஏக சக்ராதிபதி, ராஜவீர தீர மகா சக்கரவர்த்திப் பெருமான் அபராஜித கங்க பல்லவ வர்ம தேவரிடமிருந்து வருகிறேன்!' என்றான் அந்த ஒற்றன்.

தந்தப் பேழையைக் கண்டு கருத்தை எங்கோ செலுத்தியிருந்த ஆதித்தன், காதுகளில் சுநாதமான இசையின் சுருதி பிசகியதுபோல் இந்த அறிவிப்பு நாராசமாக ஒலித்தது. அவன் கட்டு மீறிய சினத்தோடு, வந்து நின்றவனை ஏறிட்டுப் பார்த்தான்.

'இளவரசர் பெருமானுக்கு எங்கள் மகா பல்லவர் அனுப்பிய ஓலையைக் கொடுத்து, விடையையும் பெற்றுப் போக வந்து நிற்கிறேன்!' என்றான் அந்த ஒற்றன்.

'எங்கே?' என்று அலட்சியமாக முன்னே வந்து, அந்த ஓலையை வெடுக்கென்று பற்றியிழுத்தான் ஆதித்தன். பிறகு, சுருட்டியிருந்த அந்த முடங்கலைப் பிரித்து, விருதுப் பெயர்களையெல்லாம் விலக்கிவிட்டு, விஷயத்தை மட்டும் படிக்கத் தொடங்கினான்.

'...கோமளத் தீவு வந்துள்ள நாம், கடற்கோயில் அமைக்கும் விஷயமாக உன்னுடைய ஆலோசனையும் பெற விரும்புகிறோம். அதிக நாள் இங்கே தங்கியிருப்பதற்கு இல்லையாகையால், அறுபது நாழிகைக்குள் உன்னுடைய வரவை எதிர்பார்க்கிறோம்...'

ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு வருஷ பலன் மாதவாரி எழுத ரூ. 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூபா. 2. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை

பண்டித காழியூர்
ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்
தபோ நிதி
தியாகராய நகர், மதராஸ்-17
தபால் பெட்டி 1417

ஆதித்தன் குரலிலே வெறுப்பும் வாக்கிய அமைப்பின் விநயமின்மையும் சேர்ந்து, அந்தச் சூழ்நிலையை வெம்மைப்படுத்தின. விஜயாலய சோழ தேவர் தம் மகனின் முக மாறுதலிலேயே லயித்திருந்தார்.

'இது என்ன ஓலை!' என்று கூறிக்கொண்டே, அதை ஒரே சுருட்டலாகக் கசக்கி எறிந்தான். பின்னர் கம்பீரமாகத் திரும்பி, 'யாரடா அங்கே! இப்பொழுது இளவரசருக்கு அலுவல்கள் அதிகம். அவருடைய ஆலோசனை அவசியமானால் கங்க பல்லவன் இங்கே வந்து போகலாம்!' என்று விடையெழுதி இவனிடம் அனுப்பச் சொல்லுங்கள். உம்... ஒற்றனே! விடை எழுதி வந்து சேரும்; வாங்கிக்கொண்டு போய்க் கொடு உங்கள் மகா மகா மகா பல்லவனிடம்!' என்று ஆத்திரத்தோடு மொழிந்துவிட்டு, தந்தப் பேழை இருந்த இடத்தை நோக்கிச் சென்றான். அந்த உடை வாளை எடுத்துக் கண்களிலே அடக்கவொடுக்கமாக ஒற்றிக்கொண்டான். பிறகு அதைப் பழைய படியே எடுத்து மூடி வைத்துவிட்டு, தந்தையின் எதிரே வந்து நின்றான்.

அந்த இடத்தைவிட்டு ஒற்றன் போன பின்னர்தான் அவன் உள்ளமும் ஒருவாறு பொங்கியடங்கியது.

27. சிவிகையிலே நிலவு முகம்

ஆதித்தனுக்கு அது தகாத காரியமாகத்தான் தோன்றியது. ஆயினும் அவனால் தன் உள்ளக் கிளர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தந்தைக்கு இழைக்கும் தவறாகவும் அதை அவன் கருதவில்லை.

அவன் ஆவலோடு தந்தைக்குப் பணிவிடை புரியும் சேடியை எதிர்பார்த்திருந்தான். அவள் வந்து அந்த ஓலையை அவன் கையிலே வைத்தபோது, அவன் உடலே வெடவெடத்து ஆடியது.

'இதை எப்படி எடுத்து வந்தாய்?' என்று நாக்குழறக் கேட்டான் அந்தச் சேடியை.

கறுப்பிலே குறிப்பான அழகு படைத்த அந்தப் பாவை மிகவும் தயக்கத்துடனே, 'இளவரசர் என்னை மன்னிக்க வேண்டும். அதைக் கேட்டு என்னை வற்புறுத்தலாகாது!' என்று உண்மையான விநயத்தோடு விடையிறுத்தாள்.

அதே ஓலைதான்! கோட்புலியாரின் கையிலிருந்ததைச் சட்டென்று பிடுங்கி, தம் தலையணைக்கீழ் வைத்துக்கொண்ட ஓலைதான்! இளவரசியைப் பற்றியும் நவரத்தினப் பிடியிட்ட உடைவாளைப்பற்றியும் இன்று தன்னிடம் பேச நேர்ந்ததற்குக் காரணமாக இருந்த ஓலையேதான்! அன்று அதிகாலையில் வந்திருந்ததாகத்தான் அதில் குறிப்பிட்டிருந்த நாள் குறிப்பிலிருந்து தெரிய வந்தது. இதை எழுதியது யார்? அனுப்பியது யார்? இங்கே பெரிய சோழரிடம் கொண்டு வந்து சேர்த்தது யார்?

அடுக்கடுக்கான கேள்விகள் மனத்திலே எழுந்து புரள, ஆதித்தன் அதில் எழுதியிருந்ததைப் படித்துத் திடுக்கிட்டான்.

'எங்கள் பல்லவ இளவரசி அநுபமா தேவியார் இப்பொழுது ஆழ்ந்த துக்கத்தில் இருக்கிறார்கள். தந்தைக்குப் பிறகு அரியணையையும் தன்னையும் ஒருங்கே விழுங்கக் காத்திருக்கும் அரக்கனிடமிருந்து தப்பும் வழியறியாது திகைத்து நிற்கிறார்கள். இளவரசியாரின் தந்தைக்குச் சமமான தங்களிடம் உண்மையை எவ்வாறு கூறுவது என்று தயங்குகிறார்கள். உறையூர் இளவரசர் இங்கே வந்திருந்தபோது அவர் உறுதுணையாக இருந்து உதவுவார் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால், காஞ்சிக் கோமகளின் கருத்தைக் கவர்ந்த இளவரசர் நடத்தை கண்டு, இப்போது அவர் மனம் பேதலித்து நிற்கிறது.

'சக்கரவர்த்தி மகா பல்லவரின் மரண தினத்தன்று இங்கே கோநகரில் அவர் இருந்திருப்பதாகத் தெரிகிறது. அது பல ஐயப்பாடுகளை உண்டாக்கியிருக்கிறது. அந்த அவதூறு ஆதாரமற்றது என்பதை நிரூபிக்கும் பெரும் சுமை இளவரசரைச் சார்ந்திருக்கிறது. பல்லவர் கோநகரில் எங்கள் இளவரசியாரால் தங்கியிருப்பதே இனி முடியாமல் போகலாம். இளவரசர் துணை அப்போது அவசியமும் ஆகலாம். ஒரு தந்தையிடம் ஒரு மகன் கூச்சமின்றிக் கூறமுடியாத செய்திகளை அறிவிப்பதே இந்த ஓலையின் உண்மைக் கருத்தாகும்...'

ஆதித்தன் எப்படியோ அந்த ஓலையைப் படித்து முடித்துவிட்டான். அவனுடைய உள்ளப் படபடப்பை அவனுடைய மெய் நடுக்கமே புலப்படுத்தியது. இப்பொழுதுதான் தன் தந்தையின் பேச்சுக்குரிய முழுக் கருத்தும் அவனுக்கு ஒருவாறு புலனாகத் தொடங்கியது.

'பெண்ணே! இதை நீ எவ்வாறு எடுத்து வந்தாய்? அதைச் சொல் முதலில்!' என்று கேட்டான் அந்தச் சேடியை.

அவள் தயங்கினாள். ஆனால், ஆதித்தன் வற்புறுத்தல் வலுக்கவே, அவள் பயந்தவாறு, 'இளவரசே, இதை நான் அரசருக்குத் தெரியாமல் எடுத்து வரவில்லை. அவர்களேதான் கொடுத்தார்கள்!' என்று மெய் நடுங்கக் கூறினாள்.

'அவராகவா கொடுத்தார்? உன்னை நான் இதை எடுத்து வரும்படி ஏவியதை அவர் அறிவாரா?' என்றான் ஆதித்தன்.

'அவர்கள் அறிவார்களோ மாட்டார்களோ எனக்குத் தெரியாது. ஆனால், ஊகித்திருப்பார்கள் என்று எண்ணுகிறேன். 'எங்கே போய்விட்டாய்?' என்று என்னைக் கேட்டார்கள். இளவரசரைப் பார்க்கப் போனதாக உண்மையைக் கூறினேன். சிறிது நேரம் எதையோ யோசித்து விட்டு, இந்த ஓலையை எடுத்து, 'இந்தா! இளவரசரிடம் இதைக் கொண்டு போய்க் கொடுத்துவிடு!' என்றார்கள். நான் வந்துவிட்டேன்!' என்று முடித்தாள் அந்தச் சேடி.

ஆதித்தனுக்கு அந்த வார்த்தைகள் ஆயிரம் ஈட்டிகள் அவன் மார்பிலே பாய்வதுபோல் இருந்தன. அவன் வெகு நேரம் விக்கித்துப் போய் நின்றான். பிறகு மெதுவாக, 'இதை எடுத்து வந்தவன் யார் என்றாவது உனக்குத் தெரியுமா?' என்று கேட்டான்.

'தெரியும். செம்பியன் என்ற ஒருவர் வந்திருப்பதாக நான்தான் அரசர் பிரானிடம் போய் அறிவித்தேன்.'

'யார், செம்பியனா? கருடா நதிக் கரையில் இருக்கும் செம்பியனா வந்தான் என்கிறாய்? நிச்சயமாகத் தெரியுமா உனக்கு?'

'தெரியும்' என்றாள் அந்தச் சேடி. 'பேச்சிலே கருடா நதிக் கரையைப் பற்றிய பிரஸ்தாபம் இருந்தது' என்றாள் அதைத் தொடர்ந்து.

ஆதித்தன் அதற்குமேல் அங்கே நிற்கவில்லை. நேராகத் தன் மாளிகையை நோக்கிச் சென்றான். தன்னுடைய புரவி மீது ஏறி, வடகிழக்குத் திசையாக அதைச் செலுத்தினான். வழியில் வந்தவர்களைக்கூடக் கவனியாதவாறு அவனுடைய குதிரை வாயுவேகமாகப் பறந்து சென்றது.

அவனுடைய நெஞ்சிலே நிறைந்திருந்ததெல்லாம் இதே கேள்விதான்: 'இந்த ஓலையை அனுப்பியது யார்? இதைச் செம்பியன் மூலமாக அனுப்புவது எப்படிச் சாத்தியமாயிற்று? இந்த ஓலை உண்மையாக எழுதியனுப்பிய ஒன்றா, அல்லது விஷமமாக வேறு யாராவது எழுதியனுப்பியதா?'

அதற்கு விடை காணத்தான் அவன் குதிரை அதிவேகமாக வந்துகொண்டிருந்தது. அதோ கருடா நதிக் கரை! அதோ அந்தச் சோலை! அதோ கடம்பா தேவி! அதோ—அது ஏது ஒரு சிவிகை!

ஆம்; கருடா நதியைக் கடந்து, கரையில் ஏறி, மாமரச் சோலையில் அவன் கடம்பா தேவியைக் கண்டபோது, ஒரு சிவிகை வெகு வேகமாக மரகதப் பாய் விரித்த பள்ளத்தில் இறங்கி, சாலையை அடைந்து, வடக்கு நோக்கிச் சென்றுகொண்டிருந்தது.

மேகத்திலிருந்து நிலவு வெளிப்பட்டுத் தெரிவதுபோல், அந்த மாலை நேரத்து மஞ்சள் ஒளியில் சிவிகைத் திரையிலிருந்து ஒரு பெண் முகம் பின்னால் எட்டிப் பார்ப்பது தெரிந்தது.

அந்தச் சிவிகையைத் தொடர்ந்து செல்வதா, செல்வது முறையாகுமா என்று அவன் தயங்கும்போது, கடம்பா தேவி அவனைப் பார்த்துவிட்டு எதிரே வந்து நின்றாள்.

(தொடரும்)



19-வது தசகம்

1. பிராசீன பர்ஹிஸ் என்ற அரசனின் கதை

(தொடர்ச்சி)

இங்கு ஸ்ரீமத் பாகவதத்தில் ப்ராசீன பர்ஹிஸ்ஸின் கதை விஸ்தாரமாகக் கூறப்பட்டிருப்பதாவது:—

ப்ராசீன பர்ஹிஸ் பல க்ஷேத்திரங்களிலும் கிழக்கு முகமாகத் தர்ப்பங்களைப் பரப்பி, பயனைக் கோரி யாகங்களை அனுஷ்டித்து வந்தான். இதனால் அவனுக்கு அவன் கோரிய பலன்களை கிடைத்து வந்தன. இவ்வாறு சிறந்த பயனைக் கொடுக்கும் யாகங்களைக் காம்ய கர்மாக்களுக்கே உபயோகப்படுத்தி வந்த ப்ராசீன பர்ஹிஸினிடம் கருணை கொண்ட ஸ்ரீ நாரதர், உபதேசம் செய்ய வந்து சொன்னதாகப் பாகவதத்தில் சொல்லியிருப்பதாவது—

प्राचीनबर्हिषं क्षत्तः कर्मस्वासक्त
मानसम् ।
नारदोऽध्यात्म तत्वज्ञः कृपालुः
प्रत्यबोधयत ॥
4-25-3

ப்ராசீன பர்ஹிஷம் க்ஷத்த: கர்ம
ஸ்வாஸக்த மானஸம்
நாரதோ அத்யாத்ம தத்வக்ஞ: க்ருபாலு: ப்ரத்யபோதயத்

சரீராதிகளைக் காட்டிலும் வேறுபட்ட ஆத்மாவை நன்கு உணர்ந்தவரும், இயற்கையாகவே கருணை படைத்தவருமான நாரதர், ப்ராசீன பர்ஹிஸிற்கு ஞானோபதேசத்தைச் செய்தார். இம்மாதிரி கர்மாக்களை நீ செய்வதால் துக்கம் விலகி, ஸுகம் எப்படி உண்டாகும்?—என நாரதர் கேட்டார். அதற்கு அரசனும் காம்ய கர்மங்களால் மனம் கலங்கியிருக்கும் எனக்குத் துக்கம் விலகி ஸுகம் ஏற்படுவதற்கான வழியைத் தாங்களே உபதேசிக்க வேண்டும்' என்று கூறினான். அதற்கு ஸ்ரீ நாரதர் சரீரம் முதலியவை பொய்யானவை என்றும் அவை அழியக் கூடியவை என்றும், ஆத்மா ஒன்றே அழிவற்றதென்றும், சரீரம் முதலியவை அழிவதால் ஏற்படும் துக்கத்தை ஜீவன் போக்கிக்கொள்ள ஸ்ரீ பகவானை உபாஸிப்பது ஒன்றே வழி என்றும் அரசனுக்குப் புலப்படுத்த வேண்டிப் பொய்யான ஒரு கதையைச் சொன்னார். அக்கதையின் கருத்து அரசனுக்கு விளங்காததால், மறுபடி விளக்கிக் கூறலானார். முதலில் மறைமுகமாகச் சொல்லியதாவது—

புரஞ்ஜனன் என்ற ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு அவிஜ்ஞாதன் என்ற ஓர் நண்பன் இருந்தான். அந்தப் புரஞ்ஜனன் என்ற அரசன் குடியிருக்க நல்ல அரண்மனையைத் தேடி ஊர்தோறும் அலைந்தான். ஆங்காங்கு கண்ட பட்டணங்கள் இவன் மனதிற்குப் பிடிக்கவில்லை. பிறகு ஹிமயமலையின் சாரலில் ஓர் அழகிய பட்டணத்தைக் கண்டான். அதற்கு ஒன்பது வாயிற்படிகள் இருந்தன. அப்பொழுது அப்பட்டணத்திலிருந்து ஓர் அழகிய பெண் வெளிவந்தாள். அவளைப் பின்பற்றிப் பத்து வேலைக்காரர்கள் வந்தனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் நூற்றுக்கணக்கான வேலைக்காரிகள் இருந்தனர். அப்பட்டணத்தை ஓர் ஐந்து தலை நாகம் காவல் புரிந்துவந்தது. அப்பெண்ணை அன்புடன் புரஞ்ஜனன் என்ற அந்த அரசன் மணந்துகொண்டான். இருவரும் நூற்றுக்கணக்கான வருஷங்கள் அப்பட்டணத்தில் சுக வாழ்வு வாழ்ந்து வந்தனர்.

அப்பட்டணத்திற்கு மேலே ஏழு வாசற்படிகளும் கீழே இரண்டு வாசற்படிகளும் இருந்தன. தன் மனைவி கோருபவற்றை நிறைவேற்றி வைப்பதுடன், தன் தோழனையும் மறந்து வாழ்ந்து வந்தான். தேவர்கள், பிதிருக்கள் முதலியவர்களை, பல பொருள்களை வேண்டி, யாகம் முதலியவற்றால் திருப்தி செய்வித்தான். நீ எவ்விதம் பல பொருள்களை வேண்டி யாகங்களைச் செய்தாயோ, அம்மாதிரி என்று ஸ்ரீ நாரதர் ப்ராசீன பர்ஹிஸைக் குறித்துச் சொன்னார். இது ஸ்ரீமத் பாகவதத்தில் கூறப்பட்டிருப்பதாவது:—

देवान्पितॄन्भूतपतीन् नानाकामो यथा
भवान् ॥
4-27-11

தேவான் பித்ருன் பூதபதீன் நா நா
காமோ யதா பவான்.

இவ்வாறு இருக்கையில் ஸ்திரீகளிடத்தில் அன்பு வைத்தவர்களுக்கு அப்பிரியமான காலமானது ஏற்பட்டது. சண்ட வேகன் என்ற அரசன் இப்பட்டணத்தை தகைய ஆரம்பித்தான். அவனுக்குப் பலசாலிகளான முன்னூற்றறுபது கந்தர்வர்களும், அதே எண்ணிக்கை உள்ள கந்தர்வ ஸ்திரீகளும் உதவிபுரிய ஆரம்பித்தனர். பல வருஷங்களாக அவர்கள் அப்பட்டணத்தை தகைந்து அழிக்க ஆரம்பித்தனர். பிரஜாகரன் என்பவன் அவர்களை எதிர்த்துப் போர் புரிய ஆரம்பித்தான். காலனுடைய பெண்ணான துர்பகை என்பவள் உலகம் முழுவதும் பதியைத் தேடிச் சென்றாள். ஒருவரும் அவளை மணம் புரிய இஷ்டப்படவில்லை. அவள் யவனர்களுக்குத் தலைவனான பயம் என்ற பெயருள்ளவனை அடைந்து, தன்னை மணக்கும்படி வேண்டினாள். அதற்கு அவன், 'உன்னை ஒருவரும் தெரிந்து, விவாஹம் செய்துகொள்ள மாட்டார்கள். அதனால் நீ மனிதர்கள் உன்னை அறியாதவாறு அவர்களுக்குள் புகுந்து அனுபவி. அதற்கு உதவியாக என்னுடைய சைன்யமான யவனர்களைக் கூட அழைத்துச் செல்' என்று சொன்னான். மேலும் எனக்கு ப்ரஜ்வாரன் என்பவன் ஸஹோதரனாவான். இதுபோல் நீயும் ஸஹோதரியாகக் கடவாய். உங்கள் இருவர்களுடனும் யவன சைனிகர்களுடனும் உலகம் அறியாதவாறு ஸஞ்சரிக்கிறேன் என்றான். உடனே துர்பகையானவள் சைன்யங்களுடன் உலகில் ஸஞ்சரித்துக்கொண்டு, புரஞ்ஜனபுரம் சென்றாள். கந்தர்வர்களாலும், கந்தர்வ ஸ்திரீகளாலும் ஆக்ரமிக்கப்பட்ட அந்த நகரத்தைத் துர்பகையும் தனது சைன்யங்களுடன் சென்று ஆக்ரமித்தாள். பயம் என்ற பெயருள்ள தன் ஸஹோதரனுடனும் சைன்யங்களுடனும் சென்று, அப்பட்டணத்தை முற்றுகையிட்டான். ப்ரஜ்வாரன் அப்பட்டணத்தைத் தீயிட்டுக் கொளுத்தினான். இவ்வாறு பலரால் பீடிக்கப்பட்டு, பட்டணம் எரிக்கப்பட்டதும், அப்பட்டணத்தின் அரசனான புரஞ்ஜனன் கதறி அழுதான். அப்பட்டணத்தை விட்டுவிட முயன்றான். இச்சமயத்தில் யவனர்களுக்குத் தலைவனான அரசன், இவனைப் பிடிக்க முயன்றான். அவனுடைய வேலைக்காரர்களான யவனர்கள், பயத்தினுடைய வீட்டிற்கு இவனை மிருகத்தைப்போலக் கட்டி இழுத்துச் சென்றனர். அப்பொழுது புரஞ்ஜனனைச் சேர்ந்தவர்கள் மிகத் துன்பத்தை அடைந்து, சோகத்துடன் கூடச் சென்றனர். அப்பட்டணத்தைக் காத்துவந்த பாம்பும் வெளியேறியது. அப்பொழுது புரஞ்ஜனன் தன் பட்டணம் தீக்கிரையாகித் தானும் வெளியில் இழுத்துச் செல்லப்படும்போதும் தன் தோழனான அவிஜ்ஞாதன் என்பவனை நினைக்கவில்லை. இப்படித் துக்கமடைந்த புரஞ்ஜனன், தன் மனைவியை நினைத்து நினைத்து வருந்

தினன். அதனால் மறு ஜன்மத்தில் விதர்ப்பன் என்ற அரசனுடைய வீட்டில் பெண்ணாகப் பிறந்தான். இந்தப் பெண்ணான வைதர்ப்பியை மலயத்வஜன் என்ற பக்தனான அரசன் விவாஹம் செய்து கொண்டான்.

வெகு காலம் இவ்வாறு இல்லறத்தில் இருந்து, பிறகு குலாசலத்திற்கு ஸ்ரீ கோபாலனை ஆராதிப்பதற்காகத் தன் மனைவியுடன் சென்றான். அங்கு பகவானை ஆராதித்ததன் பயனாகத் தன் ஆத்மாவைப் பகவானிடத்தில் (ப்ரம்மத்தினிடம்) கலக்கச் செய்தான். சரீரத்தை விட்டுப் பிரிந்த ஆத்மா, ப்ரம்மத்தினிடம் கலந்ததை வைதர்ப்பி உணரவில்லை. நித்தியம் தன் பர்த்தாவை ப்ரதட்சிணம் செய்து நமஸ்கரிப்பதுபோல அன்றும் செய்ய முயன்றாள். அப்பொழுது காலைத் தொட்டு வணங்குகையில், காலில் சூடு இல்லாததை உணர்ந்தாள். இதிலிருந்து தன் பர்த்தா விதேஹ கைவல்யமடைந்ததை அறிந்து, அழுது புலம்பினாள். மேலும் சிதை தயாரித்து பர்த்தாவுடன் சிதையில் ஏறத் தொடங்கினாள்.

அப்பொழுது பழைய நண்பனான ஓர் அந்தணன் அங்கு வந்து, 'நீ யார்? ஏன் துக்கப்படுகிறாய்? நான் உன் தோழனாயிற்றே! என்னை அறிகிறாயா? நாம் இருவரும் ஒன்று என்பதை அறிந்துகொள். பல வருஷங்கள் நமக்குள் பிரிவு ஏற்பட்டுவிட்டன. அதனால் என்னை அல்பஸுகங்களைக் கோரி மறந்துவிட்டாய். பிறகு உலகெல்லாம் திரிந்து ஒரு பெண்ணால் நிர்மாணிக்கப்பட்ட ஒன்பது வாயில்களுள்ள ஒரு பட்டணத்தை அடைந்தாய். அங்கு அப்பெண்ணுடன் சேர்ந்து, விஷய போகங்களில் ஈடுபட்டு, என்னை மறந்து இந்நிலையை அடைந்தாய். நீ விதர்ப்பனின் பெண்ணும் அல்ல. இந்த மலயத்வஜன் என்ற வீரனும் உனக்கு நண்பனல்ல. புரஞ்ஜனிக்கு நீ கணவனுமல்ல. முன்பு புருஷனாகவும், பெண்ணாகவும் ஆனதெல்லாம் என் மாயையே. நீ புருஷனுமல்ல ஸ்த்ரீயுமல்ல. நம்மிருவருடைய ஸ்வரூபமும் சுத்தமானதேயாகும். நானே நீ. நீயே நான். வேறல்ல. ஞானிகள் நம்மிருவருள் சிறிதும் பேதமிருப்பதாகக் கருதவில்லை. எப்படி ஒரு மனிதன் கண்ணாடியிலும், பிறருடைய கண்ணிலும் (வேறாக) தன் உருவத்தை இரண்டாகக் காண்கிறானோ அதுபோலவேயாம், நம்மிருவருக்கும் உள்ள பேதம். இவ்வாறு நினைப்பூட்டப் பெற்ற அப்புரஞ்ஜனன், தனது நண்பனும் தானும் ஒன்று என்பதை உணர்ந்தான். ஓ ப்ராசீன பர்ஹிஸே, ஸ்ரீ பகவான் மறைந்து இருப்பதில் ப்ரியம் கொண்டவனாகையால், இந்த ஆத்ம தத்துவத்தை உனக்கு மறைபொருளாகக் கூறினேன். என்று நாரதர் கூறினார். இதைக் கூறும் ஸ்ரீமத் பாகவத ஸ்லோகம் வருமாறு:—

बर्हिष्मन्नेतदध्यात्मं पारोक्ष्येण प्रदर्शितम् ।
यत्परोक्षप्रियो देवो भगवान् विश्वभावनः ॥

4-28-65

பர்ஹிஷ் மன்னேத தத்யாத்மம் பாரோக்ஷ்யேண ப்ரதர்சிதம்
யத் பரோக்ஷ ப்ரியோதேவோ பகவான் விஸ்வ பாவன:

ஓர் உண்மையான தத்துவத்தை உபதேசிக்க வேண்டி, பொய்யான கதையை நாரதர் ப்ராசீன பர்ஹிஸுக்கு உபதேசித்தார். இதைக் கேட்ட அரசன், 'எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஞானிகளுக்குப் புரியும். எனக்குப் புரியும்படிச் சொல்ல வேண்டும் என்று வேண்டினான். ஸ்ரீ நாரதர் மறுபடியும் கருணையினால் கீழ்க்கண்டவாறு உபதேசிக்கலானார்:—

1. புரஞ்ஜனன் – ஜீவாத்மா
2. அவிஜ்ஞாதன் – பரமாத்மா
3. பல பட்டணங்கள் – ம்ருகம் முதலிய சரீரங்கள்.
4. ஒன்பது வாசற்படிகள் உள்ள பட்டணம். – மனித சரீரம். (அதாவது கழுத்துக்கு மேல் ஏழு. இரு கண்கள். இரு காதுகள். இரு மூக்குகள். வாய். கீழே இரண்டு)
5. பட்டணத்திலிருந்து வெளிவந்த பெண் – புத்தி. இவளுக்கு ஐந்து ஞானேந்திரியம். ஐந்து காமேந்திரியம் ஆகப் பத்து வேலைக்காரர்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் நூறு வேலைக்காரிகள் என்பது இந்திரியங்களின் வ்ருத்திகளாகும்.
6. பட்டணத்தின் காவல்காரன் – ஐந்து தலைப் பாம்பு (ஐந்து பிராணன்கள்)
7. ஜீவாத்மா புத்தியுடன் சேருவது தான் – கல்யாணம்
8. ஸ்திரீகளிடத்தில் அன்பு வைத்தவர்களுக்கு அப்பிரியமான காலம் என்பது– வயது முதிர்ந்த காலம்.
9. சண்டவேகன் என்பது – திரும்பத் திரும்ப வரும் வருஷங்களாகும்.
10. 360 கந்தர்வர்களும் 360 கந்தர்வ ஸ்திரீகளும் – இரவு பகல்களாகும்.
11. ப்ரஜாகரன் என்பவன் – ப்ராண வாயு.
12. துர்பகை–ஜரை (கிழத்தனம்)
13. பயம் என்பவன்–ம்ருத்யு. தன்னை மணந்துகொள்ளும்படி ஜரை இவனை வேண்டினாள்.
14. உன்னை ஒருவரும் கல்யாணம் செய்துகொள்ள விரும்பமாட்டார்கள் —(ஜரையை ஒருவரும் விரும்பமாட்டார்கள் என்பது கருத்து)
15. யவனர்களோவெனில் – சரீர வியாதியும் மனோவியாதியுமேயாகும்.
16. ப்ரஜ்வாரன் என்பது வைஷ்ணவ ஜ்வரம்.
17. அவனே எனக்கு ப்ராதா – (அதாவது ஜீவனை சரீரத்திலிருந்து வெளிப்படுத்த உதவியாயிருப்பவன்)
18. நீயும் ஸஹோதரியாகக் கடவாய்– ஜீவனை சரீரத்திலிருந்து பிரிப்பதற்கு உதவியாக நீயும் இருக்கக் கடவாய் என்பதாகும்.
19. இரவு பகல்களாகிற கந்தர்வர்கள், கந்தர்வ ஸ்திரீகள், ப்ரஜ்வாரன் இவர்கள் புரஞ்ஜனபுரத்தை – தேகத்தைத் தகைந்தனர். பயம் ப்ரஜ்வாரனுடன் சென்று முற்றுகையிட்டான். ப்ரஜ்வாரன் அப்பட்டணத்தை எரித்தான்.
20. யவனர்களின் அரசன் – ம்ருத்யு பட்டணத்திலிருந்து – சரீரத்திலிருந்து. புரஞ்ஜனனை–ஜீவனைப் பிடித்து இழுத்தான்.
21. பயத்தினுடைய வீட்டிற்கு – யம லோகத்திற்கு.
யவனர்கள்–மனோவியாதிகள்.
22. புரஞ்ஜனனைச் சேர்ந்தவர்கள் — ப்ராணன்கள். இந்திரியங்கள். துக்கத்துடன்–ஜீவனோடு மிகத் துக்கத்துடன் கூடச் சென்றன.
23. புரஞ்ஜனன் – ஜீவன். தோழனை– பகவானை நினைக்கவில்லை.
24. மனைவியை–புத்தியை.
25. விதர்ப்ப தேசத்தில் பெண்ணாகப் பிறந்தான்–மரண சமயத்தில் எதை நினைக்கிறானோ, அப்பிறப்பை அடைகிறான் என்பது சித்தாந்தம். அதற்கேற்ப பெண் பிறப்பு உண்டாயிற்று.
26. இப்பெண்ணை மலயத்வஜன் விவாஹம் செய்துகொண்டான்.
27. மலயத்வஜன்–ஏகாந்தமான இடத்தை நாடிக் குலாசலத்தை அடைந்தான். அங்கு அவன் ஸ்ரீபகவானை ஆராதித்தான். அவனுக்கு வைதர்ப்பி பணிவிடை செய்து வந்தாள். மலயத்வஜன் ஸமாதி நிலையில் இருந்து வந்தான். அவனுடைய ப்ராணன் முதலியவை உள்ளேயே லயித்து விட்டன. இதுவே விதேஹ முக்தி எனப்படும். இப்படி விதேஹ முக்தி அடைந்ததை அறியாத வைதர்ப்பி, வழக்கம்போலக் கணவனை வணங்கினாள். அப்பொழுது காலில் உஷ்ணம் இல்லாததைக் கண்டு, முக்தியடைந்ததைக் கண்டு கொண்டாள். புலம்பினாள். அனாதையாகி விட்டோமே எனத் தவித்தாள். அப்பொழுது அங்கு ஓர் ப்ராமணன் வந்தான். அவன் பழைய நண்பனாவான். அவனே பரமாத்மா. அவன் வைதர்ப்பியைப் பார்த்து 'நீ பெண்ணுமல்ல புருஷனுமல்ல; நாமிருவரும் ஒன்றே' எனக் கூறி, ஜீவனும் ப்ரம்மமும் ஒன்றே என்பதை உணர்த்தினான். அதாவது புரஞ்ஜனனாக இருந்து மரண சமயத்தில் ஸ்த்ரீயை நினைத்து சோகப்பட்டதால், ஸ்த்ரீ ஜன்மத்தை அடைந்தாய். இவை யாவும் ஆத்மாவுக்கு ஏற்பட்டது மாயையினாலாகும். ஆத்மாவுக்கு ஸம்ஸாரமானது மாயையினால் ஏற்படுகிறது. இதைப் போக்க ஸ்ரீ பகவானிடத்தில் பக்தி செய்ய வேண்டும். அந்த பக்தியோவெனில், ஸாதுக்களை அண்டி பகவத்குண ச்ரவணம் செய்வதன்மூலமே உண்டாகும். உடனே வைராக்யமும் அதற்குமேல் ஜ்ஞானமும் உண்டாகி விடும் என்றெல்லாம் ஸ்ரீ நாரதர் ப்ராசீன பர்ஹிஸுக்கு உபதேசித்து விட்டு, ஸித்த லோகத்திற்குச் சென்றார்.

(தொடரும்)

பேசா மடந்தை பேசின கதை—5.

[சாலிவாஹனன்]

தலையாரி வீட்டிற் போய்த் தான்தான் மருமகனென்(று)
அரைத்திருடன் சாதித்து அத்தையென மாமனென
முறைவைத் தழைத்தவர்பெண் மோஹந் தவிர்த்துவிட்டுத்
தலையாரி யுடன்நகரில் ரோந்துசுற்றிப் போம்வழியில்
தொழுமரத்தில் தன் காலைத் தொடுத்துவைத்துக் காட்டென்னத்
தலையாரி மருமகனைத் தடுத்தந்தத் தொழுமரத்தில்
தன்காலை நுழைத்தாப்பை வலுவாய்க் கடாவிவிடத்
தலையாரி சிக்கிவிட்டான் தன்வீட்டிற் கோடிப்போய்க்
கொட்டாப் புளியுளியும் கொண்டோடி வாவென்று
மூடா ளனுப்பிவிட முன்னோடி யரைத்திருடன்
தலையாரி தனையரான் தண்டித்தான் நகைகளெலாம்
பறிமுதலாய் விடுமென்று தன்னிடத்தில் பத்ரமாய்
வைப்பதற்குத் தரச்சொன்னான் தந்திடெனப் பெற்றவற்றை
அப்படியே எடுத்தோடி அப்பனிடம் கொடுத்துவிட்டான்
பக்காத் திருடனந்தப் பரிசுகளில் மகிழ்ச்சியுற்று
முக்கால் திருடனைத்தன் முன்னழைத்து நீபோயுன்
திருட்டுக் கலைத்திறனை நிரமுடன் காட்டிவிட்டு
வாவென்றனுப்ப அவன் வளநகர்போய்க் கடைத்தெருவில்
ஊர்நிலைமை கேட்டறிய ஊரரசன் மந்திரியைத்
திருட்டுகளை நிதர்நடத்தும் திருடனை நீ இன்றிரவில்
பிடித்தழைக்கா விடிலுனக்குச் சிரச்சேதம் என்றுசொல்லி
விடுத்திருக்கான் மந்திரியும் விடிவதற்குள் பிடிப்பனெனச்
சபதமுரைத் தின்றூரில் சரியான காவல் வைத்தான்
என்பதனால் மந்திரியார் ஏகுகிற தாஸிப்பெண்
யாரென் றறிந்திவனும் ராஜ்யமதி மந்திரிபோல்
வேடந் தரித்துப்போய் வேசியிடம் லீலைசெயப்
பாடல் முடிந்தவுடன் பாவையிடம் இன்னொருத்தன்
வேடமிட்டு என்னைப்போல் வேசியுனைக் கூடிவிடத்
திரிகின்றா னிவ்வூரில் திருடனிவன் தனைப்பிடிக்க
முரட்டுத் தடியொன்றும் முறுக்குக் கயிற்கூருளும்
கொண்டுவந்து வைத்திரெனக் கொண்டுவந்தாள் மந்திரியும்
வழக்கம்போ லிந்தாளி வடிவழகுத் தேன்பருகிக்
கூடுதற்கு வந்தவுடன் கோல்கொண் டடித்தவனைக்
கட்டிவைத்துக் கணிகையிடம் கண்மணியே யுன்நகைகள்
தட்டி யழித்திடினும் தங்கம் அதிகரிக்கத்
திட்டமிட்டேன் பெட்டியைத்தா என்றவுடன் தாஸிப்பெண்
பெட்டி நகைகளெலாம் பெயர்த்தெடுத்து மூட்டைகட்டி
வைத்தவனோ டென்றுமிலா வைபோக ரதிக்கலவி
தந்ததனா லுடலயர்ந்து தளர்ந்திருக்கு மச்சமயம்
வந்தவன்போய் நீரெல்லாம் வடித்துருட்டிக் கவிழ்த்துவிட்டுக்
குளிப்பதற்குத் தண்ணீர்நீ கொண்டாடி மீறுநான்
குளித்திடனும் என்றுரைக்க......

(தொடரும்)

6. பதினெட்டு நாள்

பெரும் போர்

கூட்டத்தினரின் சந்தேகத்தைத் தெளியவைத்து விட்டுக் 'குடு குடு'வென்று ஓடிய அமாத்திய குலசேகரர், நேராகப் படைகளெல்லாம் திரண்டு புறப்படுவதற்கு ஆயத்தமாக நிற்கும் அரண்மனை முன் வாயிலை அண்டினார். அவர் ஓடோடி வருவதைக் கண்ட படை வீரர்களும் சேனாதிபதியும், படையைத் தலைமை தாங்கி நடத்துவதற்குச் சித்தமாகப் பெரியதொரு யானையின் மீதிருந்த அம்பாரியில் போருக்குரிய உடைகளுடன் அமர்ந்து கொண்டிருந்த இளவரசன் ஜயந்தனும் அளவற்ற மகிழ்ச்சி கொண்டு கைதட்டி ஆரவாரம் செய்து, பரபரப்புடன் வரவேற்பளித்தனர். படை வீரர்களையும், தமது அருமைத் திருக்குமாரன் ஜயந்தனையும் வழியனுப்பி வைக்கும் நோக்கத்துடன் அரண்மனை உப்பரிகையிலிருந்த வெளி முற்றத்தில் நின்றுகொண்டிருந்த பேரரசர் விஜயமார்த்தாண்ட வர்மரும்கூட அமாத்திய குலசேகரரின் வருகையைக் கண்டு, கண்ணீர் கசிந்து மன ஆறுதல் அடைந்தார்.

முதன் மந்திரி அமாத்தியர் இளவரசருக்கு அருகே இருந்த

பருத்துக் கொழுத்த யானையின் மீது ஏறி அமர்ந்துகொண்டார். அக்கணமே படை வீரர்களின் புறப்பாட்டு ஒலி முழங்கியது. 'ஜண் ஜண் ஜண்' என்று பறை ஒலியும், 'கிண் கிண் கிண்' என்று வெண்கல மணியோசையும், 'டம் டம் டம்' என்று போர் முரசத்தின் பேரொலியும், 'பும் பும் பும்' என்று வெண் சங்கத்தின் ஆவேசப் பெரு முழக்கமும், 'பூ...பூ...பூ' என்று எக்காளத்தின் எக்காளமும் ஒரே சமயத்தில் ஒலித்து மாபெரும் முழக்கமாக முழங்க, அசைக்க முடியாத பெருவலியுள்ள யானைகளும், குதிரைகளும், தேர்களும் அணி அணியாக நகர ஆரம்பித்தன. கையில் வேலும் வில்லும்

தாங்கிய காலாட்படை வீரர்களும் கூட கையிலும் மார்பிலும் கவசம் தாங்கித் தலையிலே எஃகுத் தலைப்பாகையுடன் அடியெடுத்துவைத்து, முன்னோக்கி நடந்தனர். மாபெரும் சமுத்திரம் போன்று எங்கு பார்த்தாலும் யானை, குதிரை, தேர், காலாட் படைகளாகவே காட்சியளித்த அந்தப் போர்ப் படையினர் 'ஹா ஹா ஹூ' என்று வாய்விட்டு முழங்கித் தமக்குத் தாமே ஒருவித வீராவேசத்தை எழுப்பிக்கொண்டு முன் நடந்தனர்.

படைகளுக்கெல்லாம் முன்னணியில் சென்ற யானைப் படையின் நடு மத்தியில்தான் இளவரசன் ஜயந்தன் கண்களில் வீரக் கனல் தெறிக்க அமர்ந்திருந்தான். அவனுக்கு வலதுபுறத்தில் முதன் மந்திரி அமாத்திய குலசேகரரும், இடதுபுறத்தில் சேனாதிபதியும் தனித் தனி யானைகளில் வீற்றிருந்தனர். அவர்களுடைய பார்வையெல்லாம், தங்களுக்கு முன்பு ஒரு வீரர் திருக்கூட்டம் மாளவ நாட்டின் கொடிகளைத் தாங்கி வீர நடை போடுவதையே எக்காளத்துடன் கவனித்துக் கொண்டிருந்தன. அந்தக் கொடியின் பெயருக்கு இழுக்கில்லாமல் போரில் வெற்றி பெற்று, மகத அரண்மனையிலும் கோட்டை கொத்தளங்களிலும் அதைநாட்டிப் பின்னர் நாட்டுக்கு வெற்றிவாகையுடன் திரும்பி வரவேண்டும் என்பதே அவர்களது ஒரே எண்ணமாக இருந்தது.

இவ்வாறு பத்து பகலும், நான்கு இரவுமாகப் படையை நடத்திச் சென்று மகதத்தின் எல்லையை மிதித்து விட்டனர், மாளவப் பெரும் வீரர்கள். பத்து நாட்களாக நடந்து நடந்து சலித்துப் போன அந்த மாபெரும் வீரர் திருக்கூட்டம், மகதத்தின் எல்லையைக் கண்டவுடனேயே விவரிக்க முடியாத பெரு மகிழ்ச்சி அடைந்தது. 'இளவரசர் வாழ்க! வெற்றி நமதே!' 'மகதத்தை நோக்கி முன்னேறு; தவிடுபொடியாக்கிக் கொடி நாட்டு!' என்பனபோன்ற பல வீராவேசச் சொற்கள் அவர்கள் வாயினின்று முழங்கி, அந்தப் படை முழுவதிலும் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது. அவர்களெல்லாம் எந்தத் தாக்குதலையும் சமாளித்து எதிர்த்து அடிக்க அக்கணமே தயாராகி விட்டார்கள்.

மாளவ நாட்டின் கடைசி எல்லைக் கோடும், மகதத்தின் எல்லைக் கோடும் ஒன்று சேரும் அந்த இடம் மட்டும் என்ன வெறும் பாழாகவா இருந்தது? இல்லை; மகதநாட்டு எல்லைக் கோட்டை ஒட்டினாற்போல அந்த நாட்டின் மாபெரும் படைகளும் கூடப் பெரும் திரளாகத் திரண்டு, வெறி முழக்கம் செய்து கொண்டுதான் இருந்தது. யானை, தேர், குதிரை, காலாட் படையினரின் எண்ணிக்கை மாளவநாட்டினரதைவிட மகதத்தினரது சற்று அதிகமாகவே இருந்தது என்றும் சொல்லலாம். முறுக்கி விட்ட மீசையும், 'கன்னங் கரேல்' என்று கருத்துப் பருத்துத் திரண்ட கட்டுமஸ்தான உடலுமாக யானைகள் மீதும், குதிரைகள் மீதும், தேர்களின்மீதும், காலாட் படையிலும் இருந்த மகத வீரர்கள் அசல் எம தூதர்கள்போலவே காட்சி தந்தனர். அவர்கள் பக்கத்திலும் போர் முரசமும், வெண் சங்கமும், எக்காளமும் ஆவேச ஒலி எழுப்பத்தான் செய்தது. மகதக் கொடி ஏந்திய அந்தப் பெரு வீரர்களும் எது வந்தாலும் தாங்கக் கூடிய மன வலிவுடன்தான் தலை நிமிர்ந்து நின்றுகொண்டிருந்தனர்.

மாளவப் படை தம்மை நெருங்கி விட்டதைக் கண்ட மகதப் படையினர் துள்ளியெழுந்து, தோள்களைப் புடைத்துக் கொண்டு, தாக்குவதற்குத் தயாராகினர். மகதநாட்டு மன்னனே அந்தப் படையை முன்னின்று நடத்தி வந்திருந்தான். ஒரு கண்ணசைப்பில் 'போர் தொடங்கலாம்' என்று அறிவித்தான் அந்த மன்னன். அந்தச் சைகையைப் புரிந்துகொண்ட மகதச் சேனாதிபதி உடனே 'யுத்தம் ஆரம்பமாகட்டும்' என்ற கோஷத்தை எழுப்பினான். அதே க்ஷணத்தில் எல்லையைத் தாண்டி மகதப் படை ஓட்டஓட்டமாக ஓடி, மாளவப் படையைத் தாக்கியது. 'மாற்றான் படை தம்மைத் தாக்கிய பிறகே தனது படை மாற்றான் படையைத் தாக்க வேண்டியது தருமமாகும்' என்று அதுவரை வாளாவிருந்த இளவரசன் ஜயந்தன், மகதப் படை தனது படையுடன் மோதுவது கண்டு, 'போர் துவங்கட்டும்' என்று வாய்விட்டு உரக்கக் கூறிக் கையை உயர்த்தினான். அந்த உத்தரவு ஜயந்தனின் வாயினின்றும் வெளிவந்த மறுகணமே மாளவச் சேனை வீரர்கள் தமது கைவரிசைகளையும், வேலெறியும் திறனையும், அம்பு விடும் ஆற்றலையும், கதை சுழற்றும் வலிமையையும் காட்டலாயினர்.

மகத சைன்யத்தில் அணி வகுத்து வந்திருந்த மாபெரும் யானைக் கூட்டங்களுடன் மாளவப் போர்ப் படையின் முன்னணியில் கம்பீர நடை போட்டுக்கொண்டு வந்திருந்த பெருவளம் படைத்த யானைகள் மோதின. 'விர்ர்...'ரென்று படு வேகமாகப் பாய்ந்து ஒன்றையொன்று மோதிப் படுகாயப் படுத்திய அதே கணம், அவற்றின் மீது

எஃகுக் கவசங்களுடனும், இரும்புத் தலைப்பாகையுடனும் அமர்ந்திருந்த பெருவீரர்களும் தமக்கு விற்பயிற்சியிலும், வேல் பயிற்சியிலும் இருந்த ஆற்றலையெல்லாம் காட்டி, மாற்றான் வீரர்களை முறியடிக்கத் தம்மால் ஆனதையெல்லாம் செய்துகொண்டிருந்தனர். இருபுறத்து வீரர்களும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்களாக இல்லை. வீரத் திறனிலும், மனோவலியிலும், தேக திடத்திலும் மாளவப் படைக்கு மகதப் படையோ, மகதப் படைக்கு மாளவப் படையோ சற்றும் பின் வாங்கியதாக இல்லை. அந்த மத்தகஜங்கள் (யானைகள்) ஒன்றையொன்று தமது மத்தகங்களால் மோதியும், தந்தங்களால் குத்தியும், கால்களால் மிதித்தும், தும்பிக்கைகளால் துழாவி அணைத்துத் தள்ளியும் ஆவேசப் போர் செய்த அந்தக் காட்சிதான் எத்தகைய மகத்தான காட்சி!

மாளவ முதன் மந்திரி அமாத்திய குலசேகரரும், சேனாபதியும் அந்த முதல் அணி வீரர்களுக்கு இடையே திலகமாகத் திகழ்ந்தார்கள். வீரர்களுக்கு ஆவேசமுண்டாக்கியும், யானைகளுக்குக் கிளர்ச்சியை ஏற்படுத்தியும், தாக்க வரும் மாறு வீரர்களில் பத்துப் பேருக்கு ஒரே சமயத்தில் சரியான பதில் அளித்தும் அவர்கள் காட்டிய அந்தப் போராற்றல் மகதப் படையினரிடையே கூடச் சிறிது சலசலப்பை ஏற்படுத்தத்தான் செய்தது.

பச்சிளங் குமரன் ஜயந்தன் காட்டிய வீரமும், முன்னின்று நடத்தும் தலைவனுக்கு உரிய வகையில் அந்த அந்தக் கணத்திலேயே எல்லா விஷயங்களையும் பார்த்து, ஆலோசித்து, உடனே தக்க நடவடிக்கை எடுக்க அவன் இட்ட உத்தரவுகளும் மாளவப் படையினருக்கே இதுவரை காணாத பெரும் அற்புதமாக இருந்தது. மாளவச் சேனாபதியும், முதன் மந்திரியும்கூட ஜயந்தனின் அளவற்ற நுண்ணறிவை அந்தப் போர்க்களத்திலே கண்டு பரவசப்பட்டுப் போனார்கள். அந்தப் படையை நடத்திச் செல்வதிலும், அணிவகுப்பில் அவ்வப்போது அந்த அந்த நிலைமைக்குத் தக்கவாறு கண்ணிமைக்கும் நேரத்தில் மாறுதல் செய்வதிலும், வீரர்களை உற்சாகப்படுத்திப் போராட்டத்திற்கு வலிவு உண்டாக்குவதிலுமே கருத்தாக இருந்த ஜயந்தன், தன்னைத் தாக்க வரும் வீரர்களுக்கும், அம்புகளுக்கும், வேல்களுக்கும்கூட அநாயாசமாகப் பதிலளித்து வந்தான்.

மகதப் படைப் பிரிவிலும், மாளவப் படையிலுமாகப் பல யானைகள் உடலெல்லாம் இரத்தம் தோய 'ஹாய்...' என்ற துக்கமயமான பிளிறலுடன் மலை சாய்வதுபோல் களத்திலே சாய்ந்தன. பல வீரர்கள் அடிபட்டும், குத்துப்பட்டும், மார்பு பிளந்தும், மண்டை சிதறியும் உயிரைத் துறந்தனர். இன்னும் பலர் கால்களும், கைகளும் வெட்டுண்டும், கண்களைப் பறிகொடுத்தும், இன்னும் சில அங்கங்களை இழந்தும் இரத்த வெள்ளத்திலே வீழ்ந்து, 'ஐயோ...ஐயோ...' என்று வலி பொறுக்க முடியாமல் முனகிக் கொண்டிருந்தனர். இத்தனை இக்கட்டான நிலையில் மீதமிருந்த யானைகளும், அதையடுத்து அணியணியாக மாற்று வீரர்களை மோதிய குதிரைகளும், தேர்களும்கூட அவர்களை இடறிக் கொண்டிருந்தன. ஆக, அன்றைய அந்தப் போர் இரு திறத்தாருடைய வலிமையும் வலியுறுத்துவதாக இருந்தது. இரு திறத்து வீரர்களும் சற்றும் சளைக்காத பெரு வீரர்கள் என்பதற்கு அன்றையப் போரே இணையற்ற எடுத்துக் காட்டாக விளங்கியது. இவ்வாறு பதினெட்டு நாட்கள் ஓயாமல் நடந்துகொண்டிருந்தது, அந்தப் போர். பதினெட்டாம் நாள் வரை மகத நாட்டுப் படையினர் மாளவப் படையை மகதத்திற்குள் பிரவேசிக்க விடவில்லை. அத்தனை உக்கிரமாகப் போரிட்டுத் தாக்குப் பிடித்துக்கொண்டிருந்தனர், அவர்கள். அவர்களது தேசப்பற்றை மனத்திற்குள்ளாகவே வியந்த மாளவப் போர்ப் படைத் தலைவன் ஜயந்தன், எப்படியாவது இவர்களை வென்று மகதக் கோட்டையிலுள்ள கொடி மரத்தில் மாளவக் கொடியை நாட்டிவிட வேண்டும் என்று துடிதுடித்தான். பதினெட்டு நாட்களுக்கு மேலும் அந்த யுத்தத்தை நீடிக்க விடக்கூடாது என்றும் தீர்மானித்துக் கொண்டான், அவன். ஆனால், எவ்வளவுதான் யோசித்தும் ஒரு முடிவு காணவே முடியவில்லை, ஜயந்தனால். அனுபவத்திலும், அறிவிலும், போர்த்திறனிலும் அளவற்ற ஞானம் படைத்திருந்த அமாத்தியரும், சேனாபதியுமே வியக்கும் நுண்ணறிவும், பெருவீரமும், நிகரற்ற சாதுரியமும், விவேகமும் படைத்திருந்த இளவரசன் ஜயந்தனாலேயே ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை, அந்தப் பதினேழு நாட்களும்!

அன்று பதினெட்டாம் நாள். 'பல பல'வென்று சூரியன் கிழக்குத் திசையில் தனது கிரணங்களை வீசிக்கொண்டு எழுந்த அதே சமயம், தமது கூடாரங்களில் இளைப்பாறிக்கொண்டிருந்த வீரர்களெல்லாம் தத்தமது ஆயுதங்களுடனும், வாகனங்களுடனும் போருக்குப் புறப்பட்டுவிட்டனர். அமாத்தியரும், சேனாபதியும் ஜயந்தனும்கூட யுத்த களத்துக்கு யானைகள்மீது ஏறிக்கொண்டு புறப்பட்டு விட்டனர். வழக்கம்போல் போர் துவங்கியது; வழக்கம்போலவே இருபுறத்திலும் சளைப்பில்லாமல் வீரர்கள் தமது ஆற்றலைக் காட்டினர்; வழக்கம்போலவே இரு புறத்திலும் ஏற்றத்தாழ்வே இல்லாமல் தலைகள் உருண்டுகொண்டிருந்தன. மாலை நான்கு மணிவரை இப்படி நடந்துகொண்டிருந்த அந்தப் போரைக் கண்டு, 'எப்படியும் நாம் தீர்மானித்தபடி இன்றைக்கே இந்த யுத்தத்தை முடிப்பது?' என்று, அத்தனை கலவரத்துக்கும் இடையே ஆழ்ந்து யோசித்துக் கொண்டிருந்த ஜயந்தன், திடீரென்று ஏதோ யோசனை தோன்றியவன்போல் அருகே குதிரைமீதமர்ந்து போராடிக் கொண்டிருந்த ஒரு வீரனைக் கை தட்டி அழைத்து, குனிந்து, காதோடு காதாக ஏதோ சொன்னான். அக்கணமே அந்த வீரன் குதிரையின் பின்புறத்தில் ஒரு தட்டுதட்டிக் கொடுத்து வெகுவேகமாகப் போர்க் களத்தை விட்டே ஓட்டமாக ஓடினான். (தொடரும்)

சிறுவர் அறிவு அரங்கம்

அஸ்வத்தாமா

உணவின்றியும் வாழ முடியும்!

பல ஆண்டுகள் உணவு கொள்ளாமலே வாழ முடியும்! இது உண்மை; முற்றிலும் உண்மை! இந்தக் கூற்றுக்குச் சில பிராணிகளே சான்றாக உள்ளன.

வௌவால், தவளை, அணில், துருவக் கரடிபோன்ற சில பிராணிகள் மழைக் காலங்களில் சில மாதங்கள் சிறிதும் உணவு கொள்ளாமல் ஒரே தூக்கமாகத் தூங்குகின்றனவாம். பிறகு அவை விழித்த பிறகே தமது இரையை ஒழுங்காக உண்கின்றனவாம். இதேபோன்று பல ஆண்டுகள் ஆகாரமே இன்றிக் காலத்தைக் கடத்தும் பிராணிகளும் இருக்கின்றன. இத்தகைய பிராணிகளில் நீர்க்கரடி, நத்தை ஆகியவை பிரசித்தமானவை.

நீர்க்கரடி பல ஆண்டுகள் உணவு இன்றியே சோர்ந்து படுத்துச் செத்ததுபோல இருக்குமாம். சேறும் சகதியும் உள்ள இடங்களிலேயே வாழப் பழகியுள்ள இந்தக் கரடி, நீர் வற்றி வறட்சியானதும் செத்ததுபோலச் சோர்ந்துபோய் விடுகிறதாம். பல ஆண்டுகள் இவ்வாறு இருந்தபோதிலும், இவற்றை நீருள்ள இடத்தில் கொண்டு சேர்த்தால், திரும்பவும் பழையபடியே பருத்துத் திரண்டு 'ஜம்'மென்று புது வாழ்வைத் துவக்குகிறதாம், இந்தக் கரடி! இதுபோன்றே நத்தைகளும் சில ஆண்டுகள் இரையின்றியே வாழக் கூடியவையாகும். ஆனால், இவ்வாறு இருக்கும் காலங்களில் இவை உயிருடன் இருந்தாலும் இறந்தவை போலவே காணப்படுமாம். ஆனால், இவ்வாறு பல ஆண்டுகள் உணவின்றியே வாழ்வதற்கு இவற்றால் எப்படிச் சாத்தியமாகிறது? இவற்றின் உடலில் சேர்ந்துள்ள பருத்துத் திரண்ட கொழுப்பே இம்மாதிரிக் காலங்களில் இவற்றிற்குத் தம்மையறியாமல் உணவாகின்றனவாம்!

எவ்வளவு பறி கொடுக்கிறார்கள்!

அப்பாவும், அண்ணாவும தினமும் தூங்கி எழுந்தால், கண்ணாடி முன் உட்கார்ந்துகொண்டு, முகத்தில் நன்றாக சோப்பைத் தடவிக் கொண்டு, 'ஷேவிங் ரேஸ'ரைக் கையிலெடுத்து, முகத்தில் கொஞ்சம் நஞ்சம் வளர்ந்துள்ள மயிரை நன்றாக மழித்துக்கொண்டு அழகு பார்க்கிறார்கள்! இந்தப் 'பெரிய காரியம்' முடிந்த பிறகுதான் மற்ற காரியங்களையே கவனிக்கிறார்கள், அவர்கள்! ஆனால், இதன்மூலம் அவர்கள் தினம் எவ்வளவு மயிர்களைப் பறிகொடுக்கிறார்கள் தெரியுமா?...

சுமார் இருபத்தாறாயிரம் மயிர்களை இவ்வாறு முகக்ஷவரம் செய்து கொள்வதன்மூலம் பறிகொடுக்கிறார்கள், அவர்கள்! பூதக் கண்ணாடியின் மூலம் பார்த்தால், க்ஷவர 'ப்ளே'டின் நுனி பாகம் எப்படித் தெரியும் தெரியுமா? கதிர் அறுக்கக்கூடிய அரிவாள், அதைப் போன்று பல கூரிய பற்களை உடையதாகத் தோன்றும்!

சிவலிங்கமும் பீரங்கியும்!

சிவலிங்கத்துக்கும் பீரங்கிக்கும் என்ன சம்பந்தம்? ஒரு சம்பந்தமும் இல்லைதான். ஆனாலும், ஒருவிதச் சம்பந்தம் இருக்கிறது! அது ஒருவகைப் பூவின் பெயரைப் பற்றிய மட்டில்.

ஓங்கி வளர்ந்து சிவப்புச் சிவப்பாகப் பூக்கள் பூக்கும் ஒருவகை மரத்திற்கு 'நாகலிங்கப் பூ மரம்' என்ற பெயர் வழங்கி வருவது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அதற்கு ஏன் அப்பெயர் வழங்குகிறது? அந்தப் புஷ்பத்தின் நடுவில் உள்ள மொட்டு சிவ லிங்கம் போன்ற உருவத்துடன் விளங்குவதாலேயே அதற்கு இப்பெயர் வழங்குகிறது.



இந்த மரம் நமது நாட்டுக்கு மட்டும் சொந்தமானதல்ல. தென்னமெரிக்க நாடுகளிலும் கூட இந்த மரம் காணப்படுகிறது. இலங்கையிலும் இதனை அழகுக்காக வளர்க்கிறார்கள். இதற்கு ஆங்கிலத்தில் உள்ள பெயர்தான் சிவலிங்கத்துக்கும் பீரங்கிக் குண்டுக்கும் முடிச்சு போடச் செய்திருக்கிறது! அதாவது, ஆங்கிலத்தில் இந்த 'நாக லிங்கப் பூ மர'த்திற்கு 'பீரங்கிக் குண்டு மரம்' (Cannon ball tree) என்று பெயர்! இதன் காய்கள் பீரங்கிக் குண்டுகள்போன்று ஒரே அளவில் உருண்டு திரண்டு விளங்குவதாலேயே இம்மரத்திற்கு இப்பெயர் இடப்பட்டிருக்கிறது, ஆங்கிலேயரால்.

மிக ஆழமான சுரங்கம்...

உலகிலேயே பூமிக்கு அடியில் மிக மிக ஆழமாக வெட்டப் பட்டுள்ள சுரங்கம் எங்கு இருக்கிறது தெரியுமா? தென் ஆப்பிரிக்காவில் உள்ள ஜோகான்ஸ்பர்க் என்ற இடத்தில் அத்தகைய மிக ஆழமான சுரங்கம் இருக்கிறது. அதற்கு 'கிரவுன் தங்கச் சுரங்கம்' என்று பெயர். இதன் ஆழம் 9876 அடிகளாம். இந்தச் சுரங்கத்தை முதன் முதலில் 1892–ல் தோண்டினார்களாம். கொஞ்சம் கொஞ்சமாகத் தோண்டித் தோண்டி இந்தச் சுரங்கத்திலிருந்து 1951–ம் வருஷம் வரையில் எடுக்கப்பட்ட தங்கத்தின் எடை என்ன தெரியுமா? 12,69,91,815 டன்கள்! ஆனால், இவை அத்தனையும் தங்கம் அல்ல; தங்கம் கலந்த மணலின் எடைதான் அவ்வளவு! தங்க மணலைப் பல வகைகளில் சுத்திகரித்தும் விலக்கியும்தான் அசல் தங்கம் கண்டெடுக்கப்படுகிறது.

அந்த மிக ஆழமான 'கிரவுன் தங்கச் சுரங்க'த்திற்கு அடுத்தாற்போல் மிக ஆழமான தங்கச் சுரங்கம், நமது தென்னாட்டிலுள்ள கோலார் தங்கச் சுரங்கம்தானாம். இதன் ஆழம் 9757 அடிகள்.



உலகத்தினோர் புதுமை!

ராஜம்

மலையாளி இஸ்ரேலியர்கள்

★

எங்கள் விமானம் அதி வேகமாய் இஸ்ரேலிய ஆகாயத்தை நோக்கிப் பறந்துகொண்டிருந்தது. அதிகாரிகளின் அறிவிப்பை யொட்டிப் பிரயாணிகள் தங்கள் இருப்பிடத் தோல்களைக் கழற்றிச் சுகமாக ஆசனங்களில் அமர்ந்துகொண்டனர். அப்பொழுது விமானமோட்டும் ஒருவர் தன்னுடைய அறையிலிருந்து வெளிப் போந்து, எங்கள் பின் பக்கமுள்ள ஓர் அறைக்குச் சென்றார். அவர் திரும்பி வரும் வழியில் என்னுடன் ஏதோ பேசுவதற்காகச் சில நிமிடங்கள் நின்றார்.

'நீங்கள் தென்னிந்தியாவிலிருந்து வருகிறீர்களா?' என்று ஆவலுடன் கேட்டார். 'ஆமாம்' என்று நான் சொல்லவே, அவர் முகம் மலர்ந்தது.

'கேரளத்திற்குத் தாங்கள் போனதுண்டா?' என்று அவர் விசாரித்தார்.

'நான் கேரளத்தில் பல வருடங்கள் தங்கியிருந்தேன். அந்தச் செழிப்பான இராச்சியத்தில் எனக்குப் பல உறவினர்கள் இருக்கின்றனர்' என்று நான் பதிலளித்தேன்.

அவ்வளவுதான்; காலியாக இருக்கும் எனக்கு அருகிலிருக்கும் ஆசனத்தில் அவர் அமர்ந்துகொண்டு இவ்வாறு கூறினார்: 'உண்மையில் நான் ஒரு தென்னிந்தியன்தான். ஒரு மலையாளிகூட ஆவேன். மத்திய கேரளத்தில் 'சேந்தமங்கலம்' என்று ஒரு கிராமம் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். அங்குதான் நான் பிறந்தேன். எர்ணாகுளத்திலுள்ள கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றேன். என் பெயர் 'அஸ்லாம் கேரளா'.

'தங்களைப் பார்த்தால் ஒரு உத்தம இஸ்ரேலியர் என்றல்லவா தோன்றுகிறது?' என்று நான் கேட்டேன்.

'ஆமாம். இப்பொழுது நான் ஒரு இஸ்ரேலியன்தான். 'இஸ்ரேல்' என்ற இராச்சியம் ஸ்தாபித்துச் சில வருடங்களுக்குப் பிறகு, நானும் என்னைப்போன்ற சில யூத வாலிபர்களும் இஸ்ரேலுக்கு வந்து, அந்த இராச்சியத்தின் பிரஜைகளானோம். எருஸலேமும் பாலஸ்தீனும் எங்களால் மறக்க முடியுமா? 2000 வருடங்களுக்குமுன் மிகச் சிறப்புடன் எங்கள் முன்னோர்கள் வாழ்ந்து வந்த நாடல்லவா அது?'

அவர் மேலும் கூறுகையில் சொன்னதாவது: 'கேரளத்தின் பண்பை நாங்கள் இங்குக் கொண்டு வந்திருக்கிறோம். அதை நாங்கள் சிறிது சிறிதாக எங்களது புது இராச்சியத்தில் பரவச் செய்யவும் செய்கிறோம். காளன், ஓலன், அவியல், எரிச்சேரி முதலிய அறுசுவை உண்டிகளை இஸ்ரேலிய மக்களின் போஜன இனங்களாக்கி விட்டோம். டெலவீவ், எருஸலேம் முதலிய பட்டினங்களிலுள்ள ஓட்டல்களில் மட்டுமல்ல; கிராமங்களிலுள்ள சிற்றுண்டிச்சாலைகளிலும்கூட இந்தக் கறிகள் கிடைக்கும். இட்டிலி, தோசை முதலிய உணவு வகைகள்கூட இங்கு மக்கள் விரும்பும் உணவுகளே!'

கண்களைக் கைக் குட்டையால் துடைத்துக்கொண்டு அவர் சொன்னார்: 'யூதர்களின் சரித்திரம் உலகப் பிரசித்தமானதல்லவா? பாலஸ்தீனை விட்டு அவர்கள் சென்ற தேசங்களிலெல்லாம் அவர்களை மக்கள் வெறுத்தனர். அரசாங்கம் அவர்களைத் துன்புறுத்தியது. அவர்களுக்கு ஆதரவளித்த இராச்சியம் இந்தியா ஒன்றுதான். அதை யூத மக்கள் ஒரு நாளும் மறக்க மாட்டார்கள்.'

'அஸ்லாம் கேரளா' சொன்னது முற்றிலும் உண்மையே. கி. பி. 68-ல் எருசலேம் நகரத்தை ரோமர்கள் அழித்து, அவர்களுடைய பிரபல தேவாலயத்தைக் கொள்ளையடித்தனர். பல யூதப் பெண்மணிகளின்மேல் ரோமர்கள் பலாத்காரம் செய்தனர். எருசலேம் நகரத்தை ஒரு நரகக் கேந்திரம் ஆக்கிவிட்டனர். அந்நகரத்திலிருந்து யூதர்கள் கூட்டங் கூட்டமாக அபயத்தைத் தேடிப் பல தேசங்களுக்குச் சென்றார்கள்.

ஒரு கூட்டம் இந்தியாவை நோக்கிப் புறப்பட்டது. 'ஜெட்டா' என்ற துறைமுகத்திலிருந்து கப்பல் ஏறிப் பல மாதங்கள் அரபிக் கடலில் யாத்திரை செய்த பிறகு, சேர மன்னர், இரவி வர்மன், (மான் பெருமானின் தலைநகரமான திருவஞ்சிக்குளத்தை அடைந்தனர். மன்னர் அவர்களுக்கு அபயம் அளித்ததோடு மட்டுமின்றி, அவருக்கு வேண்டிய உணவுகளும் இருப்பிடங்களும் தேவாலயங்கள் கட்டுவதற்கான வசதிகளும் செய்து கொடுத்தார். 'யூதர்களுடைய தலைவரான ஜோஸப் ரப்பானைத் தன் அரசாங்கத்தில் ஒரு பெருமகனாக்கி, அவனுக்கு ஸ்ரீ நந்தன் மாப்பிளா என்ற பட்டத்தையும் அளித்தார். மன்னரின் தானத்தைக்கொண்டு கட்டின தேவாலயங்கள் திருவஞ்சிக்குளம், பரூர், சேந்தமங்கலம் முதலிய இடங்களில் தோன்றின. அவைகளில் சேந்தமங்கலத்திலுள்ள யூத தேவாலயத்திற்கு ஒரு தனிச் சிறப்புண்டு. எருசலேத்தில் ரோமர்கள் அழித்த கோயிலின் அளவில்தான் இது கட்டப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் இது கிழக்கு தேசங்களிலுள்ள யூதர்களின் மிகப் பெரிய கோயிலாய் விளங்கிய போதிலும், இப்பொழுது அது ஒரு சிறிய கிராமக் கோயிலாகத்தான் இருக்கிறது. இந்தியாவிற்கு வந்த யூதர்களின் சரித்திரம் நம் நாட்டின் மகத்துவத்தை வெளிப்படுத்தும் நிகழ்ச்சி ஆகும்.

கற்றுக் கொடுத்த பாடம்!

ராமப்ரியா

அன்று ஞாயிற்றுக்கிழமை. எழுந்திருக்கும்போதே, 'அப்பாடா! இன்று ஒரு நாள் ஹாய்யாக இருக்கலாம்; அவசரம் அவசரமாய் அள்ளிப் போட்டுக்கொண்டு ஆபீஸுக்குப் போக வேண்டாம். சாவகாசமாகத் தினப் பத்திரிகை படித்துவிட்டு, ஆனந்தமாக எண்ணெய் தேய்த்துக்கொண்டு நீராடிவிட்டு, ஆற அமரக் குழந்தைகளோடு சாப்பிட்டு விட்டு மனைவியுடன் உல்லாசமாகப் பேசிக்கொண்டு நாளைக் கழிக்க மனம் பிளான் போட்டது.

காபியைச் சாப்பிட்டுவிட்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு பேப்பரைப் படிக்க உட்கார்ந்தேன்.

உள்ளே குழந்தைகள் பிரசாத்தும் ரமணியும் போட்ட கூச்சலில் மேலே படிக்க முடியவில்லை. ஒரே சண்டை, ரகளையில் ஆரம்பித்து, பெரிய அலறலில் நடந்துகொண்டிருந்தது.

என்ன ஆனாலும் சரி. குழந்தைகள் பாடு; அவர்கள் அம்மாவின் பாடு! எக்கேடு கெட்டுப் போகட்டும். உள்ளே போவதில்லை என்று என் பாட்டுக்குப் பேப்பரைப் பார்த்துக் கொண்டிருந்தேன். கண்கள்தான் எழுத்தைப் பார்த்ததே ஒழிய மனது போகவில்லை.

'அம்மா! ரமணி என் பென்சிலை எடுத்துக்கொண்டு கொடுக்கமாட்டேனென்கிறான். நீ எப்பவும் என்னைத்தான் அடிப்பே!' இது எட்டு வயதுப் பிரசாத்தின் விசும்பல்.

'அவன் மட்டும் என் ரப்பரை நேத்திக்கு எனக்குத் தெரியாமல் எடுத்துண்டானே!' இது ஆறு வயது ரமணியின் சவால். ரமணிக்கு அழவே தெரியாது. மகா துணிச்சல்காரன். பிரசாத் அழுதுதான் காரியத்தைச் சாதித்துக் கொள்வான். வெறும் கோழை.

அதை அடுத்து தபால், திபால் என்று இரண்டு குழந்தைகளும் அவர்கள் அம்மாவிடம் அடிபடுவது சத்தத்திலிருந்து தெரிந்தது.

இனியும் சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொள்ள மனசு இடம் கொடுக்குமா?

'இந்தத் தரித்திரம் பிடித்த வீட்டில் வாரத்தில் ஒருநாள் நிம்மதியாக இருக்க முடியுமா?' என்று இரைந்து சொல்லிக்கொண்டே, உள்ளே போனேன்.

'உங்களுக்கு வாரத்திற்கு ஒரு நாளாவது ஓய்வு இருக்கிறதே! என் ஜன்மத்திற்குச் சாகும்வரை கிடையாது! இந்தச் சனியன்கள் படுத்தும் பாட்டைப் பாருங்கள்! என்னைக் கொஞ்சமாவது வேலை செய்ய விட்டால்தானே? சதா இவர்கள் சண்டையைத் தீர்க்கத்தான் எனக்குப் பொழுது சரியாக இருக்கிறது. இப்பவே இப்படி மண்டையை உடைத்துக் கொள்கிறதுகள்! வயதாகி எங்கே ஒற்றுமையாக இருக்கப் போகிறார்கள்!' என்று



படபடவென்று பொரிந்து கொட்டினாள் லலிதா.

'இந்தா, லலிதா! உனக்குப் பொறுமையே கிடையாது. குழந்தைகளை நல்ல வார்த்தை சொல்லித் திருத்துவோம் என்ற சமத்தும் இல்லை. நீ உள்ளே போ! நான் இவர்களைப் பார்த்துக் கொள்கிறேன்!' என்று குழந்தைகளோடு உட்கார்ந்தேன். லலிதா என்னையும் குழந்தைகளையும் எரிக்கிறமாதிரி முறைத்துவிட்டு, சமையலறைக்குச் சென்றுவிட்டாள்.

கண்ணைக் கசக்கிக்கொண்டு முகம் சிவக்க அழுதுகொண்டு நின்றான் பிரசாத்.

கல்லுளி மங்கன் மாதிரி ஒன்றுக்கும் அஞ்சாமல் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு, திருதிருவென்று விழித்துக் கொண்டு இருந்தான் ரமணி.

குழந்தைகள் இருவரையும் அணைத்துக்கொண்டு, அருகில் உட்கார வைத்துக் கொண்டேன். கண்ணைத் துடைத்து முதலில் அழுகையைப் போக்கினேன்.

தொண்டையைக் கனைத்துக் கொண்டு இருவருக்கும் புத்தி புகட்டி வருங்கால பாரத நாட்டு வீரர்களாக்கும் பணியைச் செய்யத் தயாரானேன்.

'பிரசாத்! ரமணி! இங்கே பாருங்கள்! நீங்க இரண்டு பேரும் அண்ணன் தம்பி இல்லையா? அதனால் ஒற்றுமையாக இருக்கணும். வீணாகச் சண்டை போடக்கூடாது. நீங்க இரண்டு பேரும் சண்டை போட்டால், எனக்கும் அம்மாவுக்கும் மனசு எவ்வளவு கஷ்டப்படறது தெரியுமா? உன் கிட்ட ரப்பர் இருந்தா, அதை அவனுக்கு வேணுங்கிறபோது கொடுத்து ஒத்தாசை பண்ணணும். இரண்டு பேருக்கும் எது இல்லையோ அதை எங்கிட்ட கேட்டால் உடனே வாங்கித் தருகிறேன். அதற்காகச் சண்டை போடலாமா? சமத்தா இருக்க வேண்டாமா? குழந்தைகள் சமத்தாக ஒற்றுமையாக இருந்தால்தானே அப்பா அம்மாவுக்குச் சந்தோஷமாக இருக்கும்? இனிமே நீங்க இரண்டு பேரும் சண்டை போடாமல் சமத்தாக ஒற்றுமையாக இருக்கணும். தெரிந்ததா? அண்ணன் தம்பி எப்படி இருக்கணும்? சொல்லுங்கோ பார்க்கலாம்?' என்று அன்புடன் பண்பைப் போதித்தேன்.

குழந்தைகள், நான் சமாதானமாக அவர்களை அடிக்காமல் சொல்லிக் கொடுத்ததை வியப்புடன் கண்களை மலர வைத்துக்கொண்டு கேட்டார்கள்.

இருவரும் கோரஸ் மாதிரி ஏக காலத்தில், 'அண்ணன் தம்பி ஒத்துமையாகச் சண்டை போடாமல் சமத்தாக இருக்கணும்!' என்று கணீரென்று நான் சொல்லிக் கொடுத்த பாடத்தை அப்படியே ஒப்பித்தார்கள்.

'அட! என் சமர்த்துக் கண்களே!' என்று இருவரையும் கட்டியணைத்துக் கொண்டேன்.

'ஏய், லலிதா! இங்கே பாரு; குழந்தைகளை சொல்லிக் கொடுக்கிறபடிச் சொல்லிக் கொடுத்தால் தங்கக் கம்பிதான்! உனக்கு ஒரு இழவும் தெரியாது. பெற்றுவிட்டால் போதுமா? வளர்க்கவும் தெரிய வேண்டும். பொறுமையும் வேண்டும்!' என்றேன், பெருமையாக.

லலிதா ஒன்றும் பேசவில்லை. முகத்தை வலித்துக் கொண்டதை மட்டும் பார்த்தேன்.

அதன் பிறகு குழந்தைகள் சமத்தாக இருந்தார்கள். குளித்துவிட்டுக் குழந்தைகள் இருவருடன் நான் சாப்பிட உட்கார்ந்தேன்.

குழந்தைகள் இருவரும் பக்கத்தில் பக்கத்தில் உட்கார்ந்து, சண்டை போடாமல் சமத்தாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். நான் பெருமையுடன் லலிதாவை நிமிர்ந்து பார்த்தேன். லலிதா பார்க்காத மாதிரிப் பரிமாறிக் கொண்டிருந்தாள்.

சாதம் போட்டுவிட்டுக் குழந்தைகளுக்குத் தயிர் ஊற்ற அவர்களுக்கென்று தனியாக ஒரு சிறிய கிண்ணத்திலிருந்த தயிரை எடுத்து வந்தாள். ரமணிக்கு மேல் ஆடையை எடுத்துப் போட்டாள். இதைப் பார்த்துக்கொண்டிருந்த பிரசாத், பெரிதாகக் கத்த ஆரம்பித்துவிட்டான்.

'அம்மா ரமணிக்குமட்டும் ஆடையைப் போட்டாள். அதுதான் எனக்கு ரொம்பப் பிடிக்கும். எனக்கு ஆடையே இல்லை!' என்று பெரிதாக அழ ஆரம்பித்துவிட்டான்.

லலிதாவுக்குக் கோபம் தாங்க முடியாமல் வந்துவிட்டது.

'நீங்கள் சொல்லிக் கொடுத்தது எத்தனை நாள் தாங்கும்? பிறவிக் குணம் மட்டை வந்து கட்டினால் போகுமா? ஏண்டா தடியா கத்துகிறாய்? உனக்கும் தான் வைத்திருக்கிறேனே?' என்று தயிரைப் பெரும்பகுதி பிரசாத் இலையில் கொட்டினாள்.

எனக்கு எப்படி இந்தக் குழந்தைகளைத் திருத்துவது என்று பெரிய பிரச்னையாகப் போய்விட்டது. லலிதாமாதிரிக் கோபித்து அடித்து செய்தால், குழந்தைகள் முரண்டுதான் அதிகமாகும் என்பது என் கருத்து. எனக்கும் கோபம் வந்தாலும் பல்லைக் கடித்துக்கொண்டு அடக்கிக் கொண்டேன்.

'பிரசாத்! காலையில் சொன்னதை மறந்துட்டே பாத்தியா? ரமணி யாரு? உன் தம்பி! அம்மா வேணுமென்று அவனுக்கு ஆடையைப் போட்டுவிட்டு உனக்குப் போடாமலிருப்பாளா? கைதவறி விழுந்துவிட்டது அவன் இலையில். அப்படியே உனக்குப் பிடித்ததை உன் தம்பிக்குப் போடக்கூடாதா? அண்ணன் தம்பி எப்படி இருக்க வேண்டுமென்று காலையில் சொன்னேன்?' என்று பொங்கி வரும் கோபத்தைச் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டு, மேலுக்குச் சிரித்தவாறு சொன்னேன். என் நிலையை அறிந்து கொண்ட லலிதாவுக்கு, சிரிப்பு பொத்துக்கொண்டு வந்தது. அவள் எங்கோ பார்ப்பதுபோல் பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவர்களிருவரும் குழந்தைகள்தானே! சற்றுமுன் தயிருக்குச் சண்டை போட்டதை அரை நொடியில் மறந்துவிட்டான், பிரசாத்.

ரமணியும் பிரசாத்தும் ஏக குரலில், 'அண்ணன் தம்பி ஒத்துமையாகச் சண்டை போடாமல் சமத்தாக இருக்கணும்!' என்று பெரியதாகக் கத்தியவாறு சொன்னார்கள்.

குழந்தைகள் சொல்லிவிட்டு ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக்கொண்டனர். 'ரமணி! நீ ஆடையைப் போட்டுக்கோ' நான் கோபிச்சுக்க மாட்டேன்!' என்று சமாதான அறிக்கை விட்டான் பிரசாத்.

'பிரசாத்! என் இலையிலேருந்து ஆடையை நீ கொஞ்சம் போட்டுக்கிறியா?' என்று ரமணி குழைந்தான் அண்ணனிடம்.

லலிதாவுக்கும் எனக்கும் சந்தோஷம் பிடிபடவில்லை. சாப்பாடானதும் குழந்தைகள் சாதுவாகப் படுத்துறங்கினர். இருவரும் ஒற்றுமையாக விளையாடிக் கொண்டிருந்தனர். சண்டை வரும்போல இருந்தால், நான் சொல்லிக் கொடுத்தபடி 'அண்ணன் தம்பி ஒத்துமையாயிருக்கணும்!' என்ற தாரக மந்திரத்தைச் சொல்லிப் பார்த்துக்கொண்டு, சமாதானமாகப் போனார்கள். நானும் லலிதாவும் இவற்றையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தோம்.

'இருக்கிறது இரண்டு குழந்தைகள்! இவர்கள் சண்டையைத் தீர்க்கத்தான் சரியாக இருக்கிறது!' என்று அலுத்துக் கொண்டாள் லலிதா.

'இரண்டும் இரண்டுங்கெட்டான் குழந்தைகள். ஆனால், புத்திசாலிகள். இனித் திருந்தி விடுவார்கள்!' என்று உறுதி சொன்னேன்.

ஃ ஃ ஃ

சாயங்காலம் பிரசாத்தும் ரமணியும் சண்டை போடாமல் அழகாக விளையாடிக் கொண்டிருந்தனர். அதை நானும் லலிதாவும் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தோம். வாசலில் ஒரு ஆட்டோ ரிக்ஷா டப, டபவென்ற சப்தத்துடன் வந்து நின்றது.

யார் வருகிறார்கள் என்று நானும் லலிதாவும் வாசலில் எட்டிப் பார்ப்பதற்குள், பிரசாத்தும் ரமணியும் ஓடிவந்து, 'அப்பா! பாட்டியும் பெரியப்பாவும் வந்திருக்கிறார்கள்!' என்று மூச்சு வாங்கச் சொன்னார்கள்.

அம்மாவையும் அண்ணாவையும் வரவேற்க வாசலுக்கு எழுந்து சென்றேன். அம்மா, அண்ணாவுடன் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, லலிதா அவர்களுக்கு டிபன் தயாரிக்க உள்ளே சென்றாள். பிரசாத்தும் ரமணியும் பாட்டியை ஒருவரும், பெரியப்பாவை ஒருவருமாகப் பங்கு போட்டுக்கொண்டு, கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தார்கள். எங்களைப் பேச விடவில்லை.

என் அம்மா கிராமத்தில் பயிர்களைப் பார்த்துக்கொண்டிருக்கும் அண்ணாவிடம் தான் இருக்கிறாள். அவளுக்கு இந்தப் பட்டண வாசமும், நான்கு அறைகள் கொண்ட ஒண்டுக் குடித்தனமும் சரிப்பட்டு வராது. திடீரென்று கிராமத்திலிருந்து சொல்லாமல் கொள்ளாமல் வந்த காரணம் என்னவாக இருக்கும் என்று யோசனை செய்தேன். காரியமில்லாமல் அவர்கள் திடுதிப்பென்று வரப்பட்டவர்கள் இல்லை.

'கமலத்திற்குக் கலியாணம் நிச்சயமாகும்போலிருக்கிறதடா, அம்பீ!' என்றாள் அம்மா. கமலம் அண்ணாவின் மூத்த பெண்.

'யாரம்மா பையன்! என்ன வேலை? கண்ணுக்கு எப்படி இருக்கிறான்? எந்த ஊர்? எனக்கு எழுதவே இல்லையே!' என்று கேள்விகளைச் சரமாரியாக அடுக்கிக்கொண்டே போனேன், வெகு ஆவலோடு. கமலம் வீட்டிலேயே எல்லோருக்கும் ரொம்ப செல்லப் பெண். அவளுக்குக் கல்யாணம் என்றால், என் மனம் மிகக் குதூகலித்தது.

'அதற்குள் அவசரப்படுகிறாயே! உனக்குச் சொல்லாமல் நிச்சயம் பண்ணிவிடுவேனா? ஜாதகம் பொருந்தி இருக்கிறது! பையன் வடக்கே இன்ஜினீயராக இருக்கிறான். ரொம்ப நல்ல வரன். நம்ம சக்திக்குமேல் செலவாகுமே என்று யோசனை பண்ணுகிறேன். அம்மாதான் உன்னைக் கலந்தாலோசித்துக்கொண்டு வருவோம் என்றாள். உடனே புறப்பட்டு வந்தோம்!' என்று சொல்லிவிட்டு, நிறுத்தினான் அண்ணா.

அதற்குள் லலிதா பலகாரமும் காபியும் கொண்டு வந்தாள். எல்லோரும் சாப்பிட்டுக்கொண்டே பேசினோம். பிரசாத் அம்மா மடியிலும், ரமணி அண்ணா மடியிலுமாக உட்கார்ந்து, அவர்கள் தட்டிலிருந்தே சாப்பிட்டார்கள்.

'என்ன யோசனை அண்ணா! குழந்தைக்கு நல்ல வரன் என்றால், செலவைப் பார்க்கலாமா? எப்படியாவது முடித்துவிடுவோம் இந்த இடத்தையே!' என்றேன் உற்சாகமாக.

'அம்பி மறு சொல் சொல்லமாட்டான் என்று சொன்னேனே? பாருடா அம்பி! கமலத்தின் கல்யாணத்துக்கென்று அவனிடமிருக்கும் பணம் போறாதுபோலிருக்கிறது. உன் பணம் ஐயாயிரம் ரூபாயை துரை (அண்ணா)யிடம் கொடுத்து வைத்திருப்பதை இந்தச் சமயம் எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்கிறான். நெல் விற்றுப் பணம் வர வரக் கொஞ்சம் கொஞ்சமாய் உன் கணக்கில் கட்டிவிடுகிறேனென்கிறான். என்ன சொல்கிறாய்?' என்றாள் அம்மா.

அதற்கென்ன என்று சொல்ல வாயெடுத்தேன். சமையல் அறையிலிருந்து எனக்குமட்டும் தெரியும்படி லலிதா ஏதோ சைகை காட்டினாள். கொடுக்க வேண்டாமென்பதுபோல் தலையை அசைத்தாள்.

'ராத்திரிக்குள் யோசனை செய்து சொல்கிறேனே! இப்பொழுதுதான் வந்திருக்கிறீர்கள். ராத்திரி இதைப்பற்றிப் பேசுவோம்!' என்று சொல்லிவிட்டேன்.

அண்ணாவின் முகம் என் பதிலைக் கேட்டதில் வாடிப் போய்விட்டது. தன் சொல்லுக்குக்கூடக் கட்டுப்படாமல், பையன் பெரியவனாகப் போய்விட்ட மாதிரி பேசுகிறானே என்ற பாவம் அம்மாவின் முகத்தில் தெரிந்தது.

ஃ ஃ ஃ

'என்ன லலிதா தலையை ஆட்டுகிறாய்? கொடுக்க வேண்டாமென்கிறாயா?', என்றேன்.

'கொடுக்க வேண்டாமென்று சொல்ல நான் யார்? இப்படி ஒண்டுக் குடித்தனத்தில் எத்தனை நாள் திண்டாடுகிறது? அந்த ஐயாயிரத்தில் ஒரு சிறிய மனை வாங்கி, சர்க்கார் கூட்டுறவு சங்கத்தில் கடன் வாங்கி, சிறிய வீடாகக் கட்டிக் கொள்ளலாமென்று சொல்லிக்கொண்டிருந்தோமே! அதை மறந்துவிட்டீர்களா? உங்க அண்ணாவுக்கு இப்போ அந்தப் பணத்தைக் கொடுத்துவிட்டால், பிறகு இப்போதைக்குத் திரும்பித் தர முடியுமா? நம் கஷ்டமும் விடியாது. யோசித்துச் செய்யுங்கள்!' என்று விஷயத்தை என் மனதில் படும்படிச் சொல்லிவிட்டாள் லலிதா.

எனக்கும் அவள் சொல்வது சரி என்றே தோன்றியது. அண்ணாவுக்கு இப்போ கொடுத்துவிட்டால் இப்போதைக்குக் கேட்க முடியாது. நெல் விற்ற பணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக எனக்குத் தந்து, முழுப் பணமும் வசூலாகச் சுமார் ஐந்து வருடமாவது ஆகும். அது வரை இந்த ஒண்டுக் குடித்தனத்தில் கஷ்டப்பட வேண்டியதுதானா? என் மனம் தீவிரமாக யோசித்தது.

அந்தப் பணத்தில் மனை வாங்கிச் சிறிய வீடு கட்டிக்கொண்டு தோட்டத்தில் பூத்துக் குலுங்கும் செடிகளுடன் பிரசாத்தும் ரமணியும் விளையாடிக் கொண்டிருப்பதுபோலவும், அதைப் பார்த்து நானும் லலிதாவும் மகிழ்ந்து போய் அங்குள்ள சிறிய சிமெண்ட் பெஞ்சியில் காற்றாட உட்கார்ந்திருப்பது போலவும் மனதில் தோன்றியவுடன், உள்ளம் உவகையால் பூரித்தது. அண்ணாவுக்குக் கொடுப்பதில்லை என்று தீர்மானம் செய்துகொண்டேன்.

ராத்திரி சாப்பாடானதும் குழந்தைகள் பாட்டியிடம் கதை கேட்டுக்கொண்



டிருந்தனர். அண்ணாவும் நானும் பேசிக் கொண்டிருந்தோம்.

'அம்பி! யோசனை பண்ணினாயா? பணத்தை துரைக்குக் கொடுக்கச் சம்மதம் தானே?' என்றாள் அம்மா.

அண்ணா ஏக்கத்துடன் என் முகத்தையே பார்த்தான். என் மனம் ஒரு நிமிஷம் தடுமாறியது. புது வீட்டின் கற்பனையை மனதுள் நிறுத்திக்கொண்டு, திடமாக்கிக் கொண்டேன்.

'அம்மா! இந்த ஒண்டுக் குடித்தனத்தில் குழந்தைகளை வைத்துக்கொண்டு இருக்கவே முடியவில்லை. அந்தப் பணத்தில் ஒரு மனை வாங்கி வீடு கட்டலாம் என்று யோசனை பண்ணி இரண்டொரு மனைகளும் பார்த்து வைத்திருக்கிறேன். நானே ஊருக்கு வந்து அந்தப் பணத்தைக் கேட்டு வாங்கிவர நினைத்தேன். என்ன பண்ணுவது!' என்று ஒரு மாதிரியாகச் சொல்லி முடித்தேன்.

'அப்படியானால் இந்த வரனை விட்டு விட வேண்டியதுதான். அம்பி கொடுப்பானென்று எதிர்பார்த்தேன். பாவாயில்லை. அவனும் கஷ்டப்படாமல் ஒரு வீட்டைக் கட்டிக்கொள்ளட்டும்' என்றான் அண்ணா ஒரு பெருமூச்சுடன்.

'இப்போ உனக்கு வீட்டுக்கு என்ன அவசரமடா? ஆயிரங்காலத்துப் பயிர். அந்தக் குழந்தை கமலம். அவள் எதிர்காலம் நன்றாக இருக்க இந்தச் சிறு ஒத்தாசை நீ பண்ணக்கூடாதா? அவன் வயிற்றில் பிறந்தாலும், உன் பெண் மாதிரி நினைத்துக்கொண்டிருந்த குழந்தைக்கு, இல்லை என்று சொல்லிவிட்டாயேடா? துரையும் நீயும் எவ்வளவு ஒன்றாக, விண்டாமல் விரியாமல் இருப்பீர்கள். அம்பி! நாளைக்கு நான் ஊருக்குப் போகிறேன். அதற்குள் யோசித்துச் சொல்லடா! லலிதா! நீதான் அவனுக்குச் சொல்லக்கூடாதா? கமலம் உன்னிடம் வளர்ந்த குழந்தை இல்லையா?' என்று பலவாறாகக் கெஞ்சினாள் அம்மா. கோபத்தினால் அவள் முகம் சிவந்து காணப்பட்டது. வார்த்தைகள் படபடவென்று பொரிந்துகொண்டு வந்தன. அம்மாவின் முகத்தைப் பார்க்கவே அச்சமாக இருந்தது. என்னைப் பெற்று வளர்த்த தாய், கண்ணீர் விடுவதைப் பார்க்கச் சகிக்க முடியவில்லை. அண்ணாவின் முகம் தொங்கிப் போய்விட்டது. நான் என்ன செய்வேன்? பண விஷயமில்லையா? நூறு இரு நூறு இல்லை. ஆயிரக்கணக்கில் எப்படிக் கொடுப்பது? மனம் குழம்பித் தவித்தது.

அண்ணா வாசல் வராந்தாவுக்கு ஜமக்காளத்தையும் தலைகாணியையும் சுருட்டி எடுத்துக்கொண்டு போய்விட்டான், படுத்துக்கொள்ள. அம்மாவும் சமையலறைக்கு அடுத்தாற்போல் படுத்துக் கொண்டுவிட்டாள். எட்டரை மணிக்கே அவர்களுக்குத் தூக்கம் வந்தா படுத்துக் கொண்டார்கள்? என்னிடம் பேசப் பிடிக்காமல் படுத்துக்கொள்ளப் போய்விட்டார்கள்.

நானும் உள்ளே போய் படுத்துக் கொண்டேன். பலவித எண்ணங்கள் சுழன்றன. லலிதா குழந்தைகளுடன் படுத்துக்கொண்டிருந்தாள். அவள் மனமும் சரியாக இல்லையென்பது அவள் என்னுடன் பேசாமலிருந்ததிலிருந்து தெரிந்துகொண்டேன். வீடே மௌனத்தில் ஆழ்ந்திருந்தது.

'ரமணி! தூங்கிட்டாயாடா?' என்று ஒரே மௌனம் குடிகொண்டிருந்த இடத்தில் மெல்லிய குரலில் கேட்டான் பிரசாத்.

'தூங்கல்லெ. தூக்கம் வரவில்லை!' என்றான் ரமணி.

'அப்பாவுக்கும் பெரியப்பாவுக்கும் சண்டைடா ரமணி!'

பிரசாத்தின் இந்தக் குற்றச்சாட்டு என் இதயத்தைத் தாக்கியது. லலிதாவுக்கும் அதே நிலைதான் ஏற்பட்டிருக்க வேண்டும். எங்கள் இருவருக்கும் பேசவோ குழந்தைகளை அடக்கவோ தெரியவில்லை.

'பெரியவாகூடச் சண்டை போட்டுப் பாளா?' ரமணியின் பெரிய சந்தேகம்.

'பாட்டி அழும்போது எனக்கு அழுகை வந்து விட்டதடா!' என்றான் பிரசாத். அவன் குரலில் அழுகை கலந்திருந்தது.

'எனக்குக்கூடத்தான்?' என்று ஒத்துப் பாடினான் ரமணி.

'அண்ணன் தம்பி ஒத்துமையா சண்டை போடாமே சமத்தா இருக்கணும்னு அப்பா சொல்லிக் கொடுத்தாளே? அப்பாவும் பெரியப்பாவும் சண்டை போட்டுக்கிறாளே!' என்றான் பிரசாத்.

சுரீரென்று யாரோ அடித்த மாதிரி இருந்தது, பிரசாத்தின் கேள்வி. என் முகம் செத்துவிட்டது. குழந்தைகளைப் பார்க்கவே வெட்கமாக இருந்தது. எவ்வளவு விவேகமாக எனக்குப் பாடம் கற்பித்துவிட்டான், நான் பெற்ற குழந்தை!

'பெரியப்பா என்னமோ கேட்டார். அப்பா கொடுக்கமாட்டேனுட்டார்? அதுதான் சண்டை!' என்று விளக்கினான் ரமணி.

'அண்ணன் தம்பி ஒருத்தருக்கொத்தர் எது இல்லையோ அதைக் கொடுத்துக் கொள்ளணும்னு அப்பா சொன்னாளே!' மீண்டும் பிரசாத்தின் கேள்வி என் நெஞ்சைத் துளைத்தது. அதற்கு மேலும் என்னால் பொறுக்க முடியவில்லை. 'தூங்குங்களடா?' என்று குழந்தைகளை அதட்டிவிட்டு, லலிதாவைப் பார்த்தேன். அவளும் என்னையே பார்த்தாள்.

'லலிதா! நமக்கு வீடு இப்போ அவசரமில்லை. கமலத்தின் கல்யாணத்துக்கு அந்தப் பணத்தை எடுத்துக்கொள்ளச் சொல்லப் போகிறேன்!' என்றேன் தீர்மானமாக.

'நானே அதைத்தான் சொல்லணும்னு நினைத்தேன்!' என்றாள், என் சகதர்மிணி மெதுவாக.

மறுநாள் என் எதிர்பாராத முடிவைக் கேட்ட அம்மாவும் அண்ணாவும் சந்தோஷத்துடன் அதிர்ச்சி அடைந்தார்கள். அவர்கள் முகம் மலர்ந்ததைக் கண்டு, என் அகம் மலர்ந்தது. வீட்டில் சந்தோஷ ஒற்றுமையைக் கண்ட குழந்தைகளும் மகிழ்ச்சியுடன் பெரியப்பாவிடமும் பாட்டியிடமும் ஒட்டிக் கொண்டார்கள்.

★





உங்கள் கால பலன்

-பி.வி.ராவ்-

1958 ஜூன் 15உ முதல் (விளம்பி ஹு ஆனி மீ 1உ முதல் 31உ) 1958 ஜூலை 15உ முடிய.

[கீழ்க்கண்ட பலன்களை சந்திர ராசி, சூரிய ராசி, லக்ன ராசி மூன்றிலிருந்தும் பார்த்து மொத்தத்தில் பலன்களை மதிப்பிடலாம்.]

மேஷ ராசி — அசுவனி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய

பிரதான கிரகங்கள் இம்மாதம் அவ்வளவு சாதகமாக இல்லை. ராசியாதிபதிகூட சுயமாகக் கெடுதலைத் தேடிக் கொள்ளும் வீட்டிலிருக்கிறது. ஆனால், குரு பார்வை காரணமாகத் தொல்லைகள் குறைந்தபட்சமாயிருக்கும். அந்தஸ்து படைத்தோருடன் தொடர்பால் மாத முதல் பாதியில் அதிக வெற்றிகாண மார்க்கமுண்டு. நண்பர், உறவினர், அண்டை அயலாரின் சகாயம் பெற்று, பல விஷயங்களில் தீர்வுகாண 3-ல் புதன் வகை செய்யும். மாத முதல் பாதியில் பிரயாணமும் நேரலாம். பக்தி மார்க்கத்துக்கு ஏற்ற காலம் இது; பிரார்த்தனைமூலம் லட்சியம் சித்தியானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. புத்திரர்களில் ஒருவர் எதிர்பார்த்தபடி முன்னுக்கு வருவார். 21-ந் தேதி சுக்கிரன் ஸ்வக்ஷேத்திரமாகிய பிறகு, உமது எண்ணங்களைப் பிறர் மூலம் ஈடேற்றிக்கொள்வது இலகுவாகும். அப்போது உமது வார்த்தைக்கும் மதிப்பு இருக்கும்; பிராபல்யமும் பெருகும். சுபிட்ச அபிவிருத்தியில் மனைவிக்கும் பிரதான பங்கு இருக்கும். சமூக ஈடுபாடுகள் விஸ்தரித்து, அக்கறையும் தீவிரமாகும். விவாகப் பேச்சு ஒன்றில் உமது சிரத்தையும் முடித்து வைப்பதில் உதவியும் காணப்படுகிறது. சகோதர-சகோதரிகள், குழந்தைகள், கடிதப் போக்குவரத்து, பிரயாணம், ஏஜென்ஸிகள், சகாயிகளுடன் தொடர்பு முதல் பாதியில் உறவினருடன் சிறிய மனஸ்தாபம் ஆகியவற்றை 3-ல் சூரியன், குறிக்கிறது. பிரயாணமும், புதிய படிப்பும் விசேஷ ஆற்றல்களைத் தூண்டும். சொந்த அலுவல்கள், ஆரோக்கியம், அண்டை அயலாருடன் சௌஜன்யத்தைக் காட்டும் மாதப் பிற்பாதி நம்பிக்கையளிக்கிறது. அப்போது ராசியாதிபதி ஸ்வக்ஷேத்திரமாகி, 2-ல் சுக்கிரனுடன், சமூக அனுகூலங்களையும், நெருங்கியவர் நலன் பேணுதலையும், சௌஜன்ய சூழ்நிலையையும் ஊக்குவிக்கும்.

பண விவகாரம் :—கடும் செலவு, நிதிப் பொறுப்புகள் அதிகரித்தல்போன்ற தொல்லைகளிருப்பினும், கொடுத்த வாக்கைச் சுலபமாக நிறைவேற்ற இயலும். தனாதிபதி ஸ்வக்ஷேத்திரமாகி, குருவின் பார்வையும் பெறுவதால், 21-ந் தேதியிலிருந்து நிலைமை சரியாகிவிடும். நிதித் திட்டங்கள் எதிர்பார்த்தபடி முன்னேறும். 3, 6-க்குடைய புதன் சொந்த வீட்டிலும், புதன் வீட்டில் குருவும் இருப்பதால், சிலர் கை மாற்று வாங்க நேரலாம்.

குடும்பமும் சூழ்நிலையும் :—வீட்டில் சௌஜன்யமும் மகிழ்ச்சியும் நிலவும். வீட்டில் முதலீடு செய்யலாம். விவாகம் நிகழலாம். மாதக் கடைசியில் திடீர் தன லாபத்துக்கும் இடமிருக்கிறது.

உத்தியோகம் :— ஆபீஸ் விஷயங்களிலும், அபிலாஷைகளிலும் ஓரளவு ஏமாற்றத்தைப் பிரதான கிரகங்கள் குறிக்கின்றன. ஏதாவது திடீரென இடையூறுகூட ஏற்படலாம். ஆனால், குருவும் சுக்கிரனும் மாதக் கடைசிக்குள் முதலாளியின் அபிமானம் கிடைக்க வழி செய்யும்.

வியாபாரிகளுக்கு :—ஹேஷ்ய இனங்களில் எதிர்பார்த்த லாபத்துக்கு முதல் பாதி சாதகமாயில்லை. வியாபார விருத்திக்கான தோது மங்குவதாகக் காணப்படும். ஆனால், சீக்கிரமே பெருமளவில் சுறுசுறுப்பு மீண்டுவிடும். கூட்டில் புரசல் தென்படலாம்.

ஜூன்: 16, 17, 23, 29, ஜூலை: 1, 3, 4, 9, 14, 16 நல்ல நாட்கள்.

ஜூன்: 20 22, 25, 26, 30, ஜூலை 2, 7, 11, 12 நல்ல நாட்களல்ல.

ரிஷப ராசி — கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோஹிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் முடிய

சுப கிரக வீட்சண்யம் இம்மாதம் அதிகம் காணப்படுகிறது. முதல் வாரத்துக்குள்ளேயே ராசியாதிபதியும், தனாதிபதியும் ஸ்வக்ஷேத்திரமாகின்றன. பிற கிரகங்களுடன் இவை, உமது இஷ்ட பூர்த்திக்கு வெகுவாக உதவி புரியும். சூழ்நிலையின் ஆதரவும், காரியங்களில் வெற்றியும் எதிர்பார்க்கலாம். 2-ல் சூரியன், உமது ஜீவனோபாயம், வருமானம், வருவாய்த் துறை, செலவினங்கள், வெகுமதி, முதலீடு, உறவினருக்கு சகாயம், விவகாரங்களை விஸ்தரித்து வருமானப் பெருக்க முயற்சி, சொத்துடைமை, சீக்கிரம் பணம் புரட்ட முயற்சி ஆகியவற்றைக் குறிக்கிறது. சமூக, குடும்ப வாழ்க்கையில் உற்சாகம், மகிழ்ச்சியை புதன் சுட்டுகிறது. குடும்பத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். 11-ல் செவ்வாய், உமது மனதுக்கினிய எண்ணங்கள், லட்சியங்களை ஈடேற்றிக்கொள்ளப் பல்வேறு துறைகளையும் சக்தியையும், திறனையும் பிரயோகிக்கச் சாதகமாக இருக்கிறது. சுக்கிரன்-குரு திரிகோண நிலை, பிராபல்யத்துக்கும், நண்பர்கள் உதவி மூலமும் கூட்டு முயற்சியாலும் லாபமடையவும் ஏற்றது. உயர்மட்ட நண்பர்கள் குறித்துப் பெருமையடையலாம். அவர்கள் உதவியாலும் ஆதரவாலும், அபிமானிகள் உற்சாகத்தாலும் வீட்டிலும் வெளியிலும் மகிழ்ச்சிகர வாழ்க்கை நடத்த இயலும். மனம் உலகெங்கும் பறந்து திரிந்தாலும், கைக்கெட்டும் தூரத்திலிருப்பதை உதாசீனப்படுத்தாதிருந்தால் புதனும், குருவும் பல்வேறு நன்மைகள் புரிவர். புதிய எண்ணங்களால் அனுகூலம்

அடைவதையும், பெரும் அளவில் சிந்தனையைச் செலுத்திச் செயலாற்ற முற்படுவதால் அதிருஷ்டம் தேடிவரும் என்பதையும் கிரக அமைப்பு உணர்த்துகிறது. சுய முயற்சிக்கும், அதனால் அனுகூலத்துக்கும், நம்பிக்கை சுரக்கவும் புதன்–குரு வகை செய்கின்றன.

பண விவகாரம் :—ஸ்வக்ஷேத்திர தனாதிபதிக்கு குரு, சுக்கிரன் ஆதரவுமிருப்பதால், திகைக்க வைக்கும் வகையில் நிதி நிலைமை அபிவிருத்தியடையும். எதிர் பார்க்காத இடங்களிலிருந்து பணம் வரும். செலவு கடுமையாகிறது. ஜூலை 11–க்குப் பிறகு அவற்றைக் கட்டுப்படுத்த இயலாது.

குடும்பமும் சூழ்நிலையும் :—குடும்பத்தில் சௌஜன்யம் நிலவும். பணக்காரர் வீட்டில் முதலீடு செய்யலாம். ஜாகை மாற்றம் பற்றியும் ஆலோசிக்கப்படலாம். குழந்தைகளால் நிம்மதியும் அதிருஷ்டமும் உண்டு. வயிற்றுக் கோளாறினால் உடல் நிலை பாதிக்கப்படும்.

உத்தியோகம்—ஜீவன ஸ்தானத்துக்கு எந்தக் கிரகத்தின் பார்வையுமில்லை. காரியாலயத்தில், இருப்பதைக் கொண்டு திருப்தியடையும் உமது மனப் போக்கை இது குறிப்பிடுகிறது.

வியாபாரிகளுக்கு :—முன்னைவிட இம்மாதம் உற்சாகமளிக்கும் வெற்றியை எதிர்பார்க்கலாம். ஹேஷ்ய இனங்களில் லாபமுண்டு. முன்னைவிடப் பணக் குவிப்பு அதிகரிக்கும். கூட்டு வியாபாரமும் விருத்தியாகும். வெளிநாட்டு வாணிபமும் அனுகூலமாக நடைபெறும்.

ஜூன் :– 16, 17, 21, 22, 25, 28, 29. ஜூலை :–2, 4, 8, 11, 14, 16 அதிருஷ்ட தினங்கள்.

ஜூன் :– 18, 20, 26. ஜூலை :– 3, 5, 6, 9, 12 அதிருஷ்டமற்றவை.

மிதுன ராசி

மிருகசீரிஷம் 3 ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்வஸு 3-ம் பாதம் முடிய.

சுப கிரகங்களின் கடாட்சம் பிரதானமாகவிருப்பதால், இம்மாதம் லட்சிய சித்திக்குத் தோதாக அமைந்திருக்கிறது. 10–ல் செவ்வாய்க்குக் குரு பார்வையால், நட்புறவும் அபிலாஷைகளும் ஆக்கமுறும், மனதுக்கினிய விஷயமொன்று சுய முயற்சியால் நிறைவேறும். ராகு, நெப்டியூனுக்கு செவ்வாய் பார்வையால் மன உளைச்சலையும் குழந்தைகளுக்கு ஆரோக்கியக் குறைவையும் எதிர் பார்க்கலாம். மனதில் புதிய எண்ணங்கள் உதிப்பதோடு தெம்பும் பிறக்கும், சூழ்நிலையின் தன்மை புலப்பட்டு, அவற்றைச் சமாளிக்க வழி துறைகளும் கவனிக்கப்படும். குரு–செவ்வாய் கேந்திர நிலை, உமது தொழில், அபிலாஷை, உத்தியோகம், பெற்றோர் விவகாரம் ஆகியவற்றில் பிரத்யட்ச நோக்கை அவசியமாக்குகிறது. 6–ல் சனி சாதகமென்றாலும், செவ்வாய்க்குத் திரிகோணத்திலிருப்பதால், தவறு புரியும் மனவுக்குப் பிடிவாதமும், தான்தோன்றித்தனமும் காணப்படும். 8–க்கு சனி பார்வை, உமது நலனுக்காக ரகசிய பேரங்களுக்கும், சொந்த முறையில் தொடர்புக்கும் சாதகமாகும். சுக்கிரன் ஸ்வக்ஷேத்திரமாகி குரு பார்வை பெறுவதிலிருந்து, காரியங்களை வெற்றிகரமாக முடிக்கவும், பெரும் புள்ளிகளின் ஆதரவைப் பெறவும் அனுகூலமான காலம். 10–ல் செவ்வாய் இம்மாதம் முக்கிய அம்சமாகும்—அது, உமது செயல்களை, துடிதுப்புடன் செய்து முடிக்கத் தூண்டும். டாக்டர், என்ஜினீயர், எழுத்தாளர் போன்றோர் பிரகாசிப்பர். விவாகப் பேச்சு வெற்றிபெறும்.

பண விவகாரம் :—தனாதிபதி சந்திரன், ஏற்றத் தாழ்வுக்கும், முடைக்கும், அவசர பேரங்களுக்கும் காரணமாயிருக்கும். ஆகவே, பண விஷயங்களில் உஷாராயிருப்பது மேல். தேவைப்படும்போது நண்பர், உறவினர் சகாயமும் கிட்டும். கைமாற்று வாங்குவதிலும் சிரமமிராது.

குடும்பமும் சூழ்நிலையும் :—4–ல் குரு குடும்ப மகிழ்ச்சியில் நாட்டமுறச் செய்தாலும், பிற கிரகங்கள் வெளியிலேயே அதிக ஈடுபாட்டைக் குறிக்கின்றன. ராசியாதிபதி ஜன்மத்துக்கு வருவதிலிருந்து, சுயநலத்தை மறந்து சுறுசுறுப்பாகப் பலதரப்பட்ட அலுவல்களில் ஈடுபடக்கூடும். முதலீடு இம்மாதம் லாபகரமாயிருக்கும். சிலர் ஜாகை மாற்றலாம். சகோதரர் அல்லது தஸ்தாவேஜி காரணமாகச் சிறிது காலம் கவலை ஏற்படலாம்.

உத்தியோகம் :—செவ்வாயின் நிலை உத்தியோகத் துறையில் சுறுசுறுப்பாக்கும். இலாகாவின் பூரண ஆதரவு கிடைக்கும். சிலருக்கு வேலை மாற்றம் நேரலாம். முதியோருடன் தகராறு வேண்டாம்.

வியாபாரிகளுக்கு :—முன்னைவிட இது லாபகர மாதமாகும். புதிய தொழில் துறைகள் ஆராயப்படும். ஆனால், அமுலாகாது. சிப்பந்திகள் ஒழுங்காக நடந்துகொள்ள மாட்டார்கள்.

ஜூன் :– 16, 17, 20, 23, 25, 26, 29. ஜூலை :–1, 4, 8,9,14 16 சாதகமானவை.

ஜூன் :– 19, 28. ஜூலை :– 2, 5, 7, 12 சாதகமற்றவை.

கடக ராசி

புனர்வஸு கடைசி பாதம் முதல் புஷ்யம், ஆயில்யம் முடிய.

சென்றதைவிட இம்மாதம் சாதகமானதென்று சொல்வதற்கில்லை. 12–ல் சூரியனுக்கு செவ்வாய் பார்வையுமிருப்பதால், தஸ்தாவேஜி எழுதுதல், உறவினர் விவகாரம், பண விஷயங்கள், கோர்ட் விவகாரம் போன்றவற்றால் சுறுசுறுப்புமிருந்து கவலையும் மேலிடும். மேற்படி கிரகநிலை, அனாவசியத் தகராறு, மனஸ்தாபம், பணச் சண்டை ஆகியவற்றையும் முதல் பாதியில் எதிர்பார்க்கலாம். குருவுக்கு செவ்வாய் பார்வையால் ஒரு வியாஜ்யம் குறித்து மனதில் பரபரப்பு மிகும். மாதப் பிற்பாதியில் இது வெற்றிபெறும். ஜூலை 11–லிருந்து செவ்வாய் ஜீவனத்தில் உலவுவதால், உத்தியோக, குடும்ப விஷயங்களில் விசேஷ அக்கறையும் புதிய ஊக்கமும் பிறக்கும். பின்னர் உமது சொந்த, குடும்பப் பிரச்னைகள் பல தீர்வுபெறும். 21–ந் தேதியிலிருந்து சுக்கிரனும் ஸ்வக்ஷேத்திரமாகக் குருவுக்குத் திரிகோணத்திலிருப்பதால், சமூக உறவுகளில் மகிழ்ச்சியும் உற்சாகமும் நிலவும். நண்பர்கள் புதிது புதிதாகச் சேர்ந்து உமது விவகாரங்களில் பங்குகொண்டு புதிய அனுபவங்கள் ஏற்பட வகை செய்வர். வெளி விவகாரங்களில் பிரத்யட்ச மனப்பாங்கு நிலவுவது குறிப்பிடத்தக்க அம்சம். நண்பர் சகாயத்தால் இலகுவில் நிறைவேற இயலாத காரியங்களைச் சாதிக்கலாம். மகிழ்ச்சிகர சூழ்நிலையில் அன்புக்கினியவர் புடைசூழ வாழ்க்கை நடத்துவதால், மன நிம்மதியும் தன்னம்பிக்கையும் நிலவும். குருவின் நிலை, சமூக தொழில் துறைகளில் பிராபல்யம் மிக உதவி புரியும். அதோடு வேதாந்த மனப்பாங்கு மேலிட்டு, தீர்க்க திருஷ்டியுடன் அறிவாற்றல் விருத்தியாகும். 12–ல் புதன் ஓரளவு கவலைக்கும், கிலிக்கும் எரிச்சலுக்கும் காரணமாகும்.

பண விவகாரம்:—தனாதிபதி 12–லிருப்பது நிதி வசதிக்கு ஏற்ற அறிகுறியல்ல. செவ்வாய் பார்வையினால் திடீரெனக் கடும் செலவுகள் ஏற்படலாம். ஆனால், அவற்றைச் சமாளிக்க இயலும். லாபாதிபதி ஸ்வக்ஷேத்திரமாவது நம்பிக்கையூட்டவல்ல அம்சமாகும். புதிய வருவாய்த் துறைகளும் தென்படலாம்.

குடும்பமும் சூழ்நிலையும் :—ராகுவும் நெப்டியூனுமுள்ள 4–ம் வீட்டிற்கு செவ்வாயின் பார்வையுமிருப்பதால், தாயின் உடல் நிலை திருப்திகரமாயிராது. உமது ஆரோக்கியமும் பாதிக்கப்படும். சகோதரர்போன்ற நெருங்கிய உறவினருடன் தகராறுகளைத் தவிர்க்க வேண்டும்.

உத்தியோகம் :—காரியாலயத்தில் நம்பிக்கையூட்டக்கூடிய மாதமிது. பதவி உயர்வு அல்லது அனுகூலமான மாறுதல் இருக்கும். வருமானம் பெருக்கிற்கும் இடமிருக்கிறது. இடமாற்றத்தை விரும்பினால் இலகுவில் அதை சாதித்துக்கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு :—7–ம் அதிபதி அவ்வீட்டைப் பார்ப்பது சாதக அம்சமாகும். ஹேஷ்ய இனங்கள் வெற்றி பெற்று லாபமும் அளிக்கும். குருவின் பார்வையால் பொதுவாக வியாபாரம் விருத்தியாகும். ஜூலை 11 முதல் வெளிநாட்டு வாணிபமும் ஸ்திரப்படும். கூட்டு வியாபாரம் தழைக்கும்.

ஜூன் :– 17, 21, 23, 24, 25, 26, 28. ஜூலை: 4, 6, 11, 16 அனுகூலமானவை.

ஜூன் :– 19, 22, 29, 30. ஜூலை :–2, 5, 7, 9, 14 அனுகூலமற்றவை.

சிம்ம ராசி

மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய.

இம்மாதம், குறிப்பாக முதல் பாதியில் செவ்வாயும் சனியும் சாதகமான நிலையில் இல்லாததால் அனாவசிய பீதி, குடும்பத் தொல்லை, நண்பர்களுடன் மனஸ்தாபம், வருமானக் குறைவு, மன உளைச்சல் ஆகியவற்றை எதிர்பார்க்கலாம். 21ந்தேதியிலிருந்து சுக்கிரன் 10ல் உலவுவதும், சூரியனுடன் புதன் சேர்க்கையும், சுக்கிரனுக்குக் குரு பார்வையும் குறிப்பிடத்தக்க முக்கிய அம்சங்களாகும். இதனால் உமது அபிலாஷைகள், உத்தியோக அல்லது தொழில் பற்றிய எண்ணங்கள் ஆகியவை வலியுறுத்தப்படுகின்றன. ஜீவன ஸ்தானத்துக்கு இரு மருங்கிலும் செவ்வாயும், புதனும் வலுவாக இருப்பதால், உமது உத்தியோகமும், நாணயம், கௌரவம், புகழ் ஆகியவையும் சிறக்கும். வாழ்க்கையில் உன்னத லட்சியங்களுடன், பொது வாழ்வில் பிரக்யாதி பெறலாம். லட்சிய சித்திக்கும், படிப்படியாக முன்னேறிச் சோபிக்கவும் இது ஏற்ற தருணம். அவசரமும் ஆத்திரமும் மேலிட்டுச் செயலாற்ற செவ்வாய் தூண்டலாம். பின்னால் வருந்தவல்ல செயல்களை உஷாராகத் தவிர்ப்பது நலம். குரு—சுக்கிரன் திரிகோண நிலை, அசாதாரண அதிருஷ்ட நல்வாய்ப்பைக் குறிக்கிறது. வெற்றித் துறையின் கோடியும் காட்டப்படும். உத்தியோகத் துறையில், ஸ்திரத் தன்மையை நாடி, உமது அபிலாஷைகள் மாறுபடுவதையும் மேற்படி கிரகநிலை சுட்டுகிறது. புதிய சேர்மானங்களும், முன்னுக்கு வரும் சந்தர்ப்பங்களும் இதற்குக் காரணமாகும். வேறு எவரும் பிரவேசித்திராத, புதிய துறையில் உமது எண்ணம், செயல் அல்லது தொழில் திறமையைக் காட்டி, உமது பிரத்யேக முத்திரை பதிக்கப்பெறும் வகையில், ஏதாவது சாதிக்கத் தோன்றும். 11ல் சூரியன் காரியங்களில் வெற்றிக்கு உறுதுணையாகும். நண்பர்கள் புடைசூழ்ந்து பக்கபலமாக நிற்பர். பொது அலுவல்களிலும், புதிய நிகழ்ச்சிகளை உருவாக்கி, அபிமானத்துக்குப் பாத்திரமாகலாம்.

பண விவகாரம்:—ராசியாதிபதியுடன் தனாதிபதி மாத முதல் பாதியிலிருப்பது நம்பிக்கையூட்டும் அறிகுறியாகும். வருவாய்த் துறைகள் ஆராயப்படும். நண்பர், எழுத்து, ஏஜென்ஸிகள் மூலம் பணம் வரும். வீடு, நிலத்தில் முதலீட ஆலோசனை செய்யப்படும்.

குடும்பமும் சூழ்நிலையும்:—8ல் செவ்வாய், சனிக்குத் திரிகோணத்திலிருப்பது, வீட்டில் எரிச்சல், உறவினர் தொணதொணப்பு காரணமாக நிம்மதியுடனிருக்க விடாது. மாதப் பிற்பாதியில் நிலைமை சீர்பெறும். கடைசி வாரத்தில் குழந்தைகளில் ஒன்று முன்னுக்கு வரும். சமூக, பொது வாழ்க்கை வலியுறுத்தப்படுகிறது.

உத்தியோகம்:—ஆபீசில் முன்னேறக் கிரகநிலை மிக்க அனுகூலமாகும். மேலிடத்தவர் உதவியுடன் நற்பலன் விளைவிக்கும் மாறுதலை எதிர்பார்க்கலாம். மனதின் பின்னணியில் பற்பல கவலைகளிருப்பினும், உமது திறமை பாராட்டப்படும். முதலாளியின் அபிமானத்தைப் பெற்று, நன்கு சோபிக்கலாம்.

1958 ஜூன் 15-ந் தேதி கிரக நிலை

செவ்வாய்	சுக்கிரன் கேது	சந்திரன் புதன்	சூரியன்
	ஜூன் 17உ புதன் மிதுனத்தில் பிரவேசம் „ 25உ சுக்கிரன் விருஷபத்தில் பிர.		உரானஸ்
	ஜூலை 1உ புதன் கடகத்தில் பிரவேசம் „ 11உ செவ்வாய் மேஷத்தில் பிர.		
	சனி	ராகு நெப்டியூன்	குரு

வியாபாரிகளுக்கு:—9, 10, 11லுள்ள கிரகங்கள் பொதுவாக வர்த்தக விருத்திக்குச் சாதகமாகவுள்ளன. வியாபாரம் சுறுசுறுப்பாகிக் கணிசமான லாபம் கிடைக்கும். பிற்பாதி முந்தியதைவிட அதிருஷ்டமானது. கூட்டு நன்கு விருத்தியாகும். புதிய வியாபாரத் துறைகள் ஆராயப்படும். கிளைகள் ஸ்தாபிக்கப்படலாம். வெளிநாட்டு வர்த்தகம் வெற்றிகரமாக நடைபெறும்.

ஜூன் 16 17 21 23 25 26 28 ஜூலை 2 3 4 6 8 16 அதிருஷ்ட நாட்கள்.

ஜூன் 20 22 29 ஜூலை 7 9 11 12 14 அதிருஷ்டமற்றவை.

கன்னியா ராசி

உத்திரம் 2-ம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2-ம் பாதம் முடிய.

சனியும் குருவும் இம்மாதம் சாதகமாக இயங்குகின்றன. 10ல் சூரியனும், 9, 10, 11ல் ஜன்ம, ராஜ்யாதிபதி புதன் சஞ்சாரமும் குறிப்பிடத்தக்க அம்சங்கள். இவற்றால் எல்லா விஷயங்களிலும் உமது கை ஓங்கியே இருக்கும். மேலிடத்தவருடன் தொடர்பால் அனுகூலம் பெறுவதும், பொது வாழ்வில் பிராபல்யம் மிகுவதும், எதிர்ப்பின்றிக் காரியங்களை நடத்திச் செல்வதும் முக்கிய நிகழ்ச்சிகளாம். உத்தியோகம், தொழில் விஷயங்கள், நற்பெயர், புகழ், நாணயம், காரியாலயத்தில் மதிப்புக்குரிய பதவி, பெற்றோரின் அந்தஸ்து ஆகியவற்றைச் சூரியன் வலியுறுத்துகிறது. மேலும் முன்னேற அபிலாஷை, பொறுப்பு மிக்க கண்ணியமான வேலை, வாழ்க்கை குறித்துப் பரந்த மனோபாவம், அபிவிருத்திக்கான மார்க்கம் ஆகியவற்றைச் சூரியன் புதன் சேர்க்கை குறிக்கிறது. சர்க்கார் உத்தியோகத்திலிருப்போர் மேலதிகாரிகள் கவனத்தை ஈர்த்து சலுகைகள் பெறுவர். பிரயாணம் நேரலாம். மாதக் கடைசி வாரத்தில் சுக்கிரன் 9லிருப்பது மற்றொரு விசேஷ அம்சமாகும். மேலிடத்தவர் அபிமானத்தையும் ஆதரவையும் இலகுவில் பெற இயலும்.

பண விவகாரம்:—சுக்கிரன் 9க்கு வருவது நல்ல பண வசதிக்கு அறிகுறியென்றாலும், 12க்கு சனி பார்வையும், 12ம் அதிபதிக்கு செவ்வாய் பார்வையும் பாதக அம்சங்களாகும். ஆகவே, இடையூறுகள் வெகுவாகக் குறையும் எனலாம். பிற்பாதியிலிருந்து எதிர்பாராத செலவுகள் எதிர்ப்படலாம்.

குடும்பமும் சூழ்நிலையும்:—பாபிகள் செயலால் தொந்தரவுகளிருப்பினும் ஜன்மத்தில் சுகாதிபதியும், 9ல் சுக்கிரனும் சௌஜன்ய குடும்ப வாழ்க்கைக்கு வகை செய்யும். மனைவியின் ஆரோக்கியம் பாதிக்கப்படும். மாதப் பிற்பாதியிலிருந்து உமது உடல் நிலையும் திருப்திகரமாயிராது. முதலீட்டுக்கு இது ஏற்ற தருணம். விவாகப் பேச்சும் சுமுகமாகப் பழமாகும்.

உத்தியோகம்:—நம்பிக்கை பெருமளவில் சுரக்கும் மாதமிது. அவற்றில் பல நிறைவேறும் வாய்ப்பிருக்கிறது. ஆபீசில் நல்ல ஆதரவும் முதலாளியின் பூரண அபிமானமும் இருக்கும். மேலதிகாரியுடன் கருத்து வேற்றுமையால் முதல் பாதியில் கவலையிருக்கலாம். காரசாரமான வாக்குவாதமும், காரமுடன் கடிதப் போக்குவரத்தும் நடைபெறலாம். ஆனால், இறுதியில் எல்லாம் சரியாகிவிடும்.

வியாபாரிகளுக்கு:—முதல் பாதியில் வியாபார விருத்திக்கு செவ்வாய் தடையாயிருக்கும். ஆனால், நாணயம், புகழ், ஸ்தாபனப் பெயர் ஆகியவை வெற்றிகரமாக ஹேஷ்யபேரம் நடைபெற உதவும். பிற்பாதியில் நல்ல லாபம் கிடைக்கலாம். அப்போது கூட்டு நிபந்தனைகள் சாதகமாயிருக்கும். வெளிநாட்டு வாணிபம் நம்பிக்கையூட்டும்.

ஜூன் 16 17 20 21 23 25 28 29 ஜூலை 1 3 5 8 11 12 16 நல்ல நாட்கள்.

ஜூன் 19 22 24 26 30 ஜூலை 2 4 6 7 9 நல்ல நாட்களல்ல.

துலா ராசி

சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் முடிய.

ஜோதிட மரபுப் பிரகாரம் பிரதான கிரகங்கள் (ராகு உள்பட) இந்த ராசிக்காரருக்குச் சாதகமில்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால், இரு பிரதான கிரகங்கள் தாங்கள் இருக்க வேண்டிய வீட்டின் பலனையே தருமாதலாலும், பிற கிரகங்கள் அனுகூலமாக இயங்குவதாலும், வீட்டிலும் வெளியிலும் இம்மாதம் மிக்க பலனுள்ளதாக இருக்கும். 10க்கு அருகாமையிலுள்ள சூரியன், புதன், சுக்கிரன் ஆகியவை இம்மாதத்தை மிக வெற்றிகரமானதாக்கும். உம்மிடம் கவர்ச்சியைக் காணும் மேலதிகாரிகள், பெரிய மனிதர்களிடம் தொடர்பு கொள்ளவும், அவர்கள் உம்மை எதிர்கால முன்னேற்றத்துக்குத் தயார் செய்யவும், சரியான சந்தர்ப்பத்தைச் சரியான வகையில் பயன்படுத்திக்கொண்டால், அவர்களுடைய செல்வாக்கைப் பிரயோகித்துப் பயனடையவும் கிரகங்கள் வழி வகுக்கும். 9—ல் சூரியன், குறிப்பாகக் கடைசி வாரத்தில் செவ்வாய் ஸ்வக்ஷேத்திரமான பிறகு, ஊக்கமும் தெம்பும் அளித்தவண்ணமிருக்கும். நண்பர், சங்கங்கள், புதிய தொடர்புகள் மூலம் அனுகூலமடையலாம். 12ல் குரு நலன்கள் சித்திப்பதைத் தாமதப்படுத்துவதுபோல் தோற்றும். ஆனால், பாக்கியத்திலும் 10லும் உலவும் புதன், இறுதியில் வெற்றிக்குப் பொதுவாக வழி வகுத்துக்கொண்டேயிருக்கும். வியாஜ்யம் முதல் பாதியைவிடப் பிற்பாதியில் இலகுவாகச் சாதகமாக முடிவடையும். சர்க்காரின் ஆதரவு போதியளவு கிடைக்கும். எதிர்கால நலன் குறித்து ஏதாவது புதிய திட்டமொன்று உருப்பெறும். தொலைவிலிருந்து வரும் கடிதம், கடிதப் போக்குவரத்து ஆகியவற்றால் அனுகூலமுண்டு. தாய் வழி உறவினர் ஒருவர் முன்னுக்கு வந்து உங்களுக்கு உதவி புரிவார்.

பண விவகாரம்:—முதல் பாதியில் சனியின் நிலை, நிதி விஷயங்களைப் பாதிக்கும் வகையில் உள்ளது. கடும் செலவுகளும், இருப்பு கரைவதும் இம்மாத முக்கிய நிகழ்ச்சிகளாம். கடைசி வாரத்திலிருந்து பண வசதி பெருகும். தொலைவிடம், சர்க்கார், கம்பெனி, உறவினரிடமிருந்து பணம் வரலாம்.

குடும்பமும் சூழ்நிலையும்:—4ம் அதிபதி தன் வீட்டைப் பார்ப்பதால், கூடுமானவரை மகிழ்ச்சிகர வாழ்க்கை நடத்தலாம். ராசியாதிபதி நிலையும் உதவிகரம். கடைசி வாரத்திலிருந்து மேலும் சௌஜன்ய சூழ்நிலை நிலவும். ஜாகை மாற்றம் அல்லது முதலீட்டுக்கு ஏற்ற காலம்.

உத்தியோகம்:—முதலாளியின் நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருக்கிறீர்கள். இம்மாதம் மேலும் அபிமானத்துக்குப் பாத்திரமாகலாம். பண அனுகூலமும் இதனால் உண்டாகலாம். முதல் மூன்று வாரங்களில் சகாக்களுடன் தகராறைத் தவிர்க்கவும்.

வியாபாரிகளுக்கு:—வெளிநாட்டு வாணிபம் இம்மாதம் குறிப்பாக வலியுறுத்தப்படுகிறது. வெளிநாட்டு வர்த்தக ஸ்தாபனங்களுடன் நிதி சம்பந்தமான தொடர்புகளால் அனுகூலமுண்டு. கடைசி வாரத்திலிருந்து கூட்டு விருத்தியாகும். வியாபாரத்தில் ஏற்றத் தாழ்வும் காணப்படுகிறது.

ஜூன் 16 17 20 21 23 24 25 29 ஜூலை 1 4 5 6 8 9 11 16 நல்ல நாட்கள்.

ஜூன் 22 28 29 ஜூலை 2 7 12 14 நல்லவையல்ல.

விருச்சிக ராசி

விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய

இம்மாதக் கிரக அமைப்பு விசித்திரமானதொரு நிலையாகும். எல்லா விஷயங்களும் உங்களுடைய சுய முயற்சியையே பொறுத்திருக்கின்றன. 8ல் சூரியன், அதன் அதிபதியுடன் செவ்வாய், குருவுக்குக் கேந்திரத்திலிருப்பதால், முடிவு செய்யுமுன்னரும் பொறுப்புகளை மேற்கொள்ளும் முன்னரும் ரகசியத்தைக் காப்பாற்றி, முன் யோசனையுடன் நடந்துகொள்வது அவசியமாகும். உமது உடல்நிலை, உணவு, நெருங்கிய பந்துக்களுடன் உறவு, பணக் கவலை, பணப் பொறுப்புகள், வாரிசுரிமை வழக்கம்போல் மௌனமாகச் சொந்த விவகாரங்களைக் கவனித்துக்கொண்டு வாழ்க்கை நடத்துவது, எதிர்காலத் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்துத் தன்னம்பிக்கையின்மை, சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளத் தயாராக இல்லாமை, முக்கிய பிரயாணமொன்றால் அனுகூலம் ஆகியவற்றை 8ல் சூரியன் வலியுறுத்துகிறது. இம்மாதம் உமது சாமர்த்தியத்துக்கு ஒரு சவாலாகும். சீக்கிரமே அமுலாகவிருக்கும் வருங்காலத் திட்டத்தைப் பேணுவது அவசியம். நட்புறவு இம்மாத முக்கிய அம்சமாகும். நண்பர்கள் நல்ல ஆலோசனைகள் கூறித் தக்கபடி உதவியும் புரிவர். பரஸ்பர சகாயத் திட்டங்களில் நியாயமான பங்கு உமக்குக் கிடைக்கும். இஷ்டபூர்த்திக்கு வனுவில் சிநேகிதர்கள் சகாயமளிப்பர். ஆகவே, விட்டுக் கொடுத்து, ஒத்துப் பேசிப் போவதன்மூலம் கணிசமாகச் சாதிக்கலாம். பொறுமையையும், தன்னலக் கலப்பற்ற மனப்பாங்கையும் அவசியமாக்கும் நிலைமை எழும். 21ந்தேதி சுக்கிரன் 7க்கு வந்து, 11—ல் குருவுக்குத் திரிகோணத்திலிருப்பதால், உமது வாழ்க்கை மகிழ்ச்சிகரமாயிருக்கும். சமூக அலுவல்களும், உல்லாசப் பொழுது போக்கும், லாபகர முயற்சிகளும் ஆறுதல் தரும். விவாகப் பேச்சையும் குடும்ப சௌஜன்யத்தையும் சுக்கிரன் ஊக்குவிக்கும். செவ்வாய் தூண்டும் அவசரப் புத்தியையும், செயலையும் தவிர்ப்பது நலம். வரும் இரு மாதங்களில் தன லாபத்துக்குக் குரு வகை செய்யும்.

பண விவகாரம்:—தனாதிபதி லாபத்திலிருப்பது இரு மாதங்களுக்கு மிக்க ஏற்ற சூழ்நிலையாகும். பண பேரங்களிலும், நண்பர்கள் விஷயமாகவும் புதிய திருப்பம் காணப்படுகிறது. சிலருக்கு எதிர்பாராத தன லாபமும் உண்டு. கடைசி வாரத்தில் முக்கியக் காரியங்களுக்காகக் கடன் வாங்க நேரலாம். அப்போது செலவு கடுமையாகும். ஜாகை மாற்றம் அல்லது ஜாகைப் பிரச்னை சமாளிக்க வேண்டிய ஒன்றாகும்.

குடும்பமும் சூழ்நிலையும்:—குருவும், சுக்கிரனும், முந்தியதுக்குச் செவ்வாய் பார்வையும் வீட்டில் சௌஜன்யம் நிலவச் செய்யும். குழந்தைகளால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. நெருங்கிய உறவினர் உதவி புரிவார். வாழ்க்கையின் ஸ்திரத் தன்மைக்கு மனைவியின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

உத்தியோகம்:—10—ம் அதிபதி அஷ்டமத்திலிருந்தாலும் அபிலாஷைகள் பல எழலாம். அவை நிறைவேறும் என்ற நம்பிக்கையும் பிறக்கும். மாதப் பிற்பாதி முதலாளியின் அபிமானத்துக்கு ஏற்றது. இடமாற்றத்தை விரும்பினால் இலகுவில் பெறலாம்.

வியாபாரிகளுக்கு:—ஹேஷ்ய இனங்களுக்கு இது மிக்க சாதகமான காலம். கூட்டு வியாபாரம் நன்கு விருத்தியாகும். புதிய கூட்டாளியால் அனுகூலமுண்டு. வர்த்தகத் தொடர்புகள் ஏற்படுத்தப்படும். வெளிநாட்டு வாணிபம் ஓங்கும்.

ஜூன் 16 17 22 23 25 29 ஜூலை 2 4 8 12 14 16 அதிருஷ்ட தினங்கள்.

ஜூன் 19 20 26 30 ஜூலை 7 9 அதிருஷ்டமற்றவை.

தனுர் ராசி

மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய

வெளியுலகத் தொடர்பு, பிறர் சுபிட்சத்தில் உமது அக்கறை, உமது சொந்த, பொது விவகாரங்களில் கூட்டாளிகளின் செல்வாக்கு, தாம்பத்திய வாழ்க்கையின் முக்கியத்துவம் ஆகியவை குறித்து மன நிம்மதியளிக்கும் வகையில் கிரக அமைப்பு இருக்கிறது. ஜாதகத்தில் அங்ஙனமிருப்பின், சிலர் தாம்பத்திய வாழ்க்கை 7ல் சூரியனால் பாதகமுறும். ஸ்வக்ஷேத்திர புதன் விவாகப் பேச்சு வெற்றிபெறச் செய்யும். செல்வாக்கும் அந்தஸ்தும் படைத்த மாந்தரின் பரிச்சயம் மூலம் இஷ்டபூர்த்திக்கு வழி வகுக்கும். ஸ்வக்ஷேத்திர சுக்கிரன் உறவினருடன் மனஸ்தாபத்தைக் களைய உதவி புரியும். புதிய நண்பர்கள் சேருவர். அவர்களில் இருவரால் சச்சரவுகள் மூளக்கூடும். சுக்கிரன்—சனி நேர்பார்வையும், 7ல் புதனுக்குச் செவ்வாய் பார்வையும், பின்னர் வருந்த நேரும் காதல் விவகாரங்களைத் தூண்டலாம். ஸ்திரீ நண்பர்களும் ஏற்படலாம். இதற்கு ஜாதக பலமும் வேண்டும். வியாஜ்யங்களை ஒத்திப்போடுவது நலம். சகோதர, சகோதரிகளுடன் உறவு சுமுகமாயிராது. எதிர்பார்த்ததைவிடப் புத்திரர் ஒருவர் முன்னுக்கு வருவார். எதிரிகள், போட்டியிடுவோரின் தந்திரங்களைப் புரிந்துகொள்ள புதனும் சூரியனும் உதவி செய்யும். அந்தரங்க சகாக்களின் உதவியால் அவற்றைச் சமாளிக்க இயலும். கடைசி வாரத்தில் செவ்வாய் ஸ்வக்ஷேத்திரமான பிறகு, அவசரப்படாமலும் தன்னம்பிக்கை அல்லது சந்தேகம் அல்லது பீதி நிதானமிழக்கச் செய்யாமலும் நடவடிக்கை எடுப்பது அவசியம். எல்லாத் திட்டங்களையும் முன்னுக்கு நடத்திச் செல்லவும், முக்கிய முடிவுகள் எடுக்கவும் 10ல் குரு சாதகமாகும்.

பண விவகாரம்:—தனாதிபதி விரயத்திலிருப்பது கடும் செலவைக் கொடுத்தாலும், லாபாதிபதி பார்வை பெற்றுத் தன் சொந்த வீட்டையும் பார்ப்பதால் இறுதியில் நிலைமை திருப்திகரமாயிருப்பது ஆச்சரியமளிக்கும். ஆயினும் பண விஷயங்களிலும், கொடுக்கல்—வாங்கலிலும், எழுத்துமூலம் பொறுப்பேற்பதிலும் உஷாராயிருப்பது நலம். வருமானத்தைக் குறிக்கும் நல்ல அம்சங்களும் காணப்படுகின்றன.

குடும்பமும் சூழ்நிலையும்:—குடும்பத்திற்கு மத்தியில் சௌகர்யம், மகிழ்ச்சிக்குக் குறைவு வைக்கும் வகையில் செவ்வாயும் சனியும் உள்ளன. 6ல் சுக்கிரன் அனாவசிய சிக்கல்களையும் தொந்தரவுகளையும் உண்டு பண்ணலாம். முதலீடு நல்ல பலன் தரும். வாகன சுகமும் உண்டு.

உத்தியோகம்:—முதலாளியின் ஆதரவினால் மேலும் பதவி உயர்வை நாடலாம். ஆனால், இடையூறுகளே அதிகம் காணப்படுவதால், உமது முயற்சி பலிதமாவது சிரமம். சிலருக்கு வெற்றி கிட்டலாம்.

வியாபாரிகளுக்கு:—லாபகரமான மாதமிது. கூட்டு நன்கு விருத்தியாகும். புதிய கூட்டாளி சேருவதால் அனுகூலமுண்டு. விஸ்தரிப்புத் திட்டம் காரியகரமாகும். நல்ல வியாபாரத்தால் சுபிட்சம் பெருகும். வெளிநாட்டு வாணிபம் குறிப்பிடத் தக்க வெற்றியாகும்.

ஜூன் 16 17 23 24 25 26 28 ஜூலை 3 4 7 8 14 16 சாதகமானவை.

ஜூன் 20 22 29 ஜூலை 1 2 6 9 11 12 சாதகமற்றவை.

மகர ராசி

உத்திராடம் 2-ம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் முடிய.

பொதுவாக எல்லா விஷயங்களையும் ஊக்குவிக்கும் வகையில் இம்மாதக் கிரக அமைப்பு உள்ளது. அந்நியருடன் தொடர்பு, சேவகர்களுடன் சுமுக உறவு, தேகாரோக்கியம், உத்தியோக, தொழில் சம்பந்தமான வேலைகளில் கவனம், பிறர் பிரச்னைகளைத் தீர்க்க முயற்சி, இதுவரை பைசலாகாத பலவற்றிற்கு முடிவு காணுதல் ஆகியவற்றை 6ல் சூரியன் குறிக்கிறது. ராசியாதிபதி வக்கிர கதியிலிருப்பதால், சில முக்கிய விஷயங்களைப் புனராலோசித்துத் திருத்த நேரலாம். சுமந்துள்ள பழைய வேலைகளைக் கவனித்து முடிப்பது முக்கிய அம்சமாகும். நண்பர்களின் பிரச்னைகளைப் பொறுமையுடன் நிதானமாகத் தீர்க்க இயலும். பந்துஜன அளவளாவல் உள்பட வீட்டில் பல்வேறு அலுவல்களை சுக்கிரன் குறிக்கிறது. பௌர்ணமியை அடுத்து அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டு, நியாயமான வகையில் பொறுப்புகளை நிறைவேற்றுவீர். புதிய நடவடிக்கைகள், மாறுதல்கள் சொந்த முயற்சிகள் முதலியன எடுக்கப்படுவதால், கொஞ்ச காலத்துக்கு மனதில் சந்தேகம், அச்சம் இருக்கலாம். தவிர்க்க முடியுமாயின் அனாவசியமாகப் பிறர் கவலைகளையெல்லாம் இழுத்துப் போட்டுக்கொள்ளாமலிருப்பது நலம். 21ந்தேதிக்குப் பிறகு குரு—சுக்கிர திரிகோண நிலை திருப்தியளிக்கும் லாபம் அல்லது வெகு காலமாக வாங்கக் காத்திருந்த ஒன்றை வாங்குவதற்கு அறிகுறியாகும். பலருக்கு வாழ்க்கையை அனுபவிக்கவும், மகிழ்ச்சியுடனிருக்கவும் வசதி ஏற்படும். உமது அதிர்ஷ்டம் பெருகுவதோடு, முதியோர், மேலதிகாரிகள், மேலிடத்தவருடன் தொடர்பினாலும் அனுகூலம் உண்டு. 4க்கு செவ்வாய் பிரவேசம், நண்பர் புடைசூழுதல், ஜாகை மாற்றம், பெற்றோர்போன்ற நெருங்கிய உறவினர் சந்திப்பு ஆகியவற்றைக் குறிக்கிறது. 5ல் சுக்கிரனின் பிரவேசம், குழந்தைகளின் க்ஷேமாபிவிருத்தியையும், பிறருக்கு வழிகாட்டுதலையும், அறிவு வளர்ச்சியையும் குறிக்கிறது. சிலருக்குக் குழந்தை பிறக்கலாம்.

பண விவகாரம்:—6ல் சூரியனுக்கு செவ்வாய் பார்வையினால் பணமுடை ஏற்படும். செலவு அதிகரிப்பு, விலைவாசி உயர்வு போன்றவற்றைக் கண்காணித்து விரயத்தைத் தவிர்க்க வேண்டும். 4க்கு செவ்வாய் வந்த பிறகு பணவசதி பெருகும். எல்லாவித முதலீட்டுக்கும் இது ஏற்ற தருணம். ஜாகை மாற்றம் பற்றி ஆலோசிக்கப்படலாம்.

குடும்பமும் சூழ்நிலையும்:—அபிப்பிராய பேதங்களைக் களைவதன்மூலம் சௌஜன்யம் நிலவச் செய்யலாம். வீட்டில் மகிழ்ச்சி நிலவத் தாயார் ரொம்ப உதவி புரிவார். குழந்தைகளாலும் சந்தோஷத்துக்கு இடமுண்டு. விவாகப் பேச்சு எளிதில் வெற்றி பெறும்.

உத்தியோகம்:—ஆபீஸ் அலுவல்களுக்கும் முதலாளியின் அபிமானத்தைப் பெறவும் இம்மாதம் சாதகமாகும். பதவி உயர்வும், வேலை மாற்றமும் அதிகப் பொறுப்புடன்

நேரலாம். பிந்தியதைவிட முதல் பாதி சிலாக்கியமல்ல. தன லாபத்துக்கும் இடமிருக்கிறது.

வியாபாரிகளுக்கு:—வியாபாரத்துக்கும் ஹேஷ்ய பேரங்களுக்கும் அதிர்ஷ்டகர மாதம் இது. அளவுக்கு மீறி ஹேஷ்ய பேரங்களில் முனைந்தாலும் கணிசமான லாபம் கிடைக்கும். கூட்டு நன்கு விருத்தியாகும். வெளிநாட்டு வாணிபம் நம்பிக்கையூட்டும். வெளியில் புதிய தொடர்புகள் ஏற்படும்.

ஜூன் 16 17 21 23 25 28 29 ஜூலை 3 4 7 11 16 சாதகமானவை.

ஜூன் 19 20 24 26 ஜூலை 1 2 9 12 சாதகமற்றவை.

கும்ப ராசி

அவிட்டம் 3-ம் பாதம் முதல் சதயம். பூரட்டாதி 3-ம் பாதம் முடிய.

சென்றதைவிட இம்மாதம் சிலாக்கியமாக இல்லை. குருவும் சனியும் பாதகமாக இயங்குவதால், வெற்றியில் தாமதம், தொந்தரவு, ஏமாற்றம், விரோதிகளால் தொல்லை, முதியோருடன் கருத்து வேற்றுமை, பண விஷயங்களில் தகராறு, ஆபத்தான சமயங்களில் சுயநாச வழியில் செயல் ஆகியவற்றை இம்மாதம் எதிர்பார்க்கலாம். 5ல் சூரியன் ஓரளவுக்கு நற்பலனையளிக்கும். சுக்கிரனும் புதனும்கூடக் குடும்ப சௌஜன்யம், ஜாதகப் பிரச்னை, விவாகப் பேச்சு, குழந்தைகளின் நலன் ஆகியவற்றிற்கு ஆதரவாக மன நிம்மதியளிக்கின்றன. சூரியன்-புதன் சேர்க்கை ஒரு ராஜ யோகமாகும். இதனால் தாமதமானாலும் வெற்றி கிட்டும். நெருங்கிய உறவினருடன் தொடர்பால் உமது கை ஓங்கும். எதிர்காலத் திட்டத்தின் பயனை நீங்கள் முன்னணிக்கு வருவீர். புதிய அறிவு, புத்திரனின் சுபிட்சம், சிலருக்கு புத்திரோத்ஸவம், சூழ்நிலையின் ஆதரவைப் பெற்று, மனதுக்கினிய விஷயங்களை நாடியடைதல் ஆகியவற்றிற்குப் புதன் சாதகமாகும். மனைவி, உறவினர், அண்டை அயலாருடன் நல்லுறவு நிலவ இம்மாதம் பிரயத்தனப்பட வேண்டும். உமது துரித, சாதுர்ய முடிவுகள் பொறுமையையும், கட்டுப்பாட்டையும் குறிக்கின்றன. குரு-சுக்கிரன் நிலை, சொந்த விஷயங்கள், குடும்ப விவகாரங்கள், சொத்து நிலவரம் ஆகியவற்றில் கவனத்தையும், சுப காரிய நிகழ்ச்சிகளையும், பெற்றோர்போன்ற நெருங்கிய உறவினர் சந்திப்பையும் குறிக்கிறது. 2ல் செவ்வாய் தூண்டும் அவசர ஆத்திரப் போக்கிற்குத் தடை போடவும்.

பண விவகாரம்:—திடீர் ஏற்றத் தாழ்வுகளைக் குறிப்பதால் 2-ல் செவ்வாய் நல்ல அறிகுறியல்ல. குருவுக்கு எதிராக இருப்பதால் கையிருப்பும் கரைந்துவிடும். ஆயினும் சுக்கிரனும் புதனும் பொறுப்புகளை நிறைவேற்ற வகை செய்துவிடும்.

குடும்பமும் சூழ்நிலையும்:—குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்துஷ்டியைப பொறுத்தவரை சென்றதைவிட இது சாதகமான மாதம். ஜாகை மாற்றம் அல்லது முதலீடு சாத்தியமாகலாம். தாயாரின் செல்வாக்கு உமது வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கும்.

உத்தியோகம்:—ராசியாதிபதி சனி பத்தில் சுபனாகிய சுக்கிரன் பார்வை பெற்றிருப்பதால், ஆபீசில் பதவி உயர்வுக்கு இது ஏற்ற காலம் எனலாம். ஆனால், 12க்கு சனி பார்வை காரணமாக இது நிறைவேறச் சிறிது காலதாமதமாகும். முதலாளியின் பூரண அபிமானம் இருக்குமென்றாலும், எதிர்பார்க்கும் சகாயம் உமக்குக் கிடைக்கச் சூழ்நிலை சரியாக இல்லை.

வியாபாரிகளுக்கு:—சென்றதைவிட இம்மாதம் ஹேஷ்ய இனங்களுக்குச் சாதகமாகும். முன்பிருந்த பணத்தட்டு இப்போது எதிர்ப்படாது. பாங்கி, கம்பெனி, சங்கம் போன்றவை கஷ்ட காலத்தில் பண சகாயம் புரியும். கூட்டு நன்கு விருத்தியாகும். புதிய கூட்டாளி சேரலாம். வெளிநாட்டு வாணிபம் நம்பிக்கையூட்டும். கடிதப் போக்குவரத்து, விளம்பரம் மூலம் அது நன்கு விருத்தியாகும்.

ஜூன் 16 17 20 21 25 29 ஜூலை 4 7 9 14 16 அனுகூலமான நாட்கள்.

ஜூன் 19 23 24 26 28 ஜூலை 1 2 5 11 12 அனுகூலமற்றவை.

மீன ராசி

பூரட்டாதி 4-ம் பாதம் முதல் உத்திரட்டாதி, ரேவதி முடிய.

முன்னைவிட இம்மாதம் கிரக அமைப்பு சாதகமாயிருக்கிறது. குரு 7லிருப்பது, காரியங்களில் வெற்றியையும், சமூக ஈடுபாடுகளில் சுறுசுறுப்பையும், எதிர்ப்புகளைச் சமரஸமாகவோ, போட்டியிலோ இலகுவில் முறியடிப்பதையும், பிரசன்ன வதனத்தையும், கடிதப் போக்குவரத்து, பத்திரிகைத் தொழில், எழுத்து, பிரசுரம் ஆகியவற்றையும் குறிக்கிறது. 3ல் சுக்கிரன், ஒரு பிரயாணத்தை மேற்கொண்டு சகோதரர் அல்லது சகோதரியுடன் கருத்து வேற்றுமைகளை அகற்றவும், கடிதம்மூலம் விவாகப் பேச்சைக் காரியகரமாக்கவும் உதவி புரியும். 4ல் சூரியன், உமது நலனைவிடக் குடும்ப-பெற்றோர் நலன்களைப் பிரதானமாகக் கருதச் செய்யும். அலுவலிலும், சிரத்தையிலும் புதிய திருப்பம் காணப்படுவதால் அனுகூலமே. எட்ட நின்று காரியங்களை நடத்திச் செல்வதே உசிதமென்பதைக் கிரகங்கள் வலியுறுத்துகின்றன. குடும்ப சௌகரியங்கள், சொத்துக்கள், விவசாயம் அல்லது தோட்டப் பயிர் சாகுபடியில் அக்கறை ஆகியவற்றின் அபிவிருத்திக்கு மேற்கொண்டு அதிகக் கவனம் செலுத்துவது அவசியமாகும். முதியோர், பழைய நண்பருடன் தொடர்பு அல்லது அவர்கள் மூலம் வருமானம், உமது துறையில் பெரும் புள்ளிகளின் பரிச்சயம் பெற்று ஆதரவு கிடைத்தல் ஆகியவை மூலம் சமூகத்தில் உமது அந்தஸ்து ஸ்திரமடைய 11ம் அதிபதி சனி உதவி புரியும். மனதுக்கினிய அபிலாஷை, அல்லது அன்புக்குப் பாத்திரமானவர்பற்றி நல்ல செய்திகளை 3ல் சுக்கிரன் தரும்.

பண விவகாரம்:—தனாதிபதி ஜன்மத்திலிருந்து குரு பார்வையும் பெறுவதால் சென்றதைவிட இம்மாதம் பண வசதி அதிகமிருக்கும். நெருங்கிய உறவினருக்குப் பண உதவி செய்ய நேரலாம். பிற்பாதியில் மேலும் பண வசதி பெருகும். சிலர் வீட்டில் முதலீடு செய்யலாம். சிலர் வீடு கட்டலாம்.

குடும்பமும் சூழ்நிலையும்:—ஆரம்பத்தில் குடும்ப சௌஜன்யம் காணப்படாவிடினும் மாதம் செல்லச் செல்ல நிலைமை சீர்பெறும். சாத்தியமானவரை உறவினருடன் மோதலைத் தவிர்க்கவும். விவாகப் பேச்சு குதிரலாம்.

உத்தியோகம்:—குருவின் பார்வை பெற்ற 11ம் வீட்டிற்கு சனியின் பார்வையுமிருப்பதால், ஆபீசில் அனுகூலம் பெற ஏற்ற காலமிது. வேலையில் மாறுதல் இருக்கலாம். பிற்பாதியில் வருமான அனுகூலமும் இருக்கும்.

வியாபாரிகளுக்கு:—வியாபார விருத்திக்கும், கூட்டு விருத்திக்கும் 7ல் குருவும், 4ல் புதனும் மிக அனுகூலம். புதிய வாடிக்கைக்காரர்கள் சேருவர். பிற்பாகியில் பணம் அதிகம் புரளும். வெளிநாட்டு வர்த்தகம் மட்டும் மிக உற்சாகமூட்டக் கூடியதாயிருக்கும்.

ஜூன் 17 19 21 22 25 29 ஜூலை 4 7 8 16 அதிருஷ்ட தினங்கள்.

ஜூன் 23 24 26 28 ஜூலை 1 2 6 9 11 அதிருஷ்ட நாட்களல்ல.

★

ஸ்ரீ பி. வி ராவ் நெ 5. வாசுதேவபுரம்,
ஐஸ்ஹவுஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை—5.

கவியரசர் நிதி

★★★★★★★★★★★★★★★★★★★★

வங்கம் ஈன்றெடுத்த தவப் புதல்வர்களில் ஒருவரான ரவீந்திரநாத் தாகூரின் 100வது ஜன்ம தின விழாவை இன்னும் மூன்று வருடங்களில் கொண்டாடச் சர்க்கார் ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். சாந்திநிகேதனிலும் ஸ்ரீநிகேதனிலும் கவி தாகூர் நாட்டு மக்களுக்கு விட்டுச் சென்ற கல்வி, கலாசார ஸ்தாபனங்களை அபிவிருத்தி செய்யச் சர்க்கார் திட்டமிட்டுள்ளனர். இதற்காக விச்வ பாரதி சர்வகலாசாலை அத்தியக்ஷகர் என்ற முறையில் பிரதமர் நேரு நாட்டு மக்களுக்குச் சமீபத்தில் விடுத்துள்ள வேண்டுகோளில் தாகூரின் பிறந்த தின நூற்றாண்டு விழா நிதிக்குத் தாராளமாக நன்கொடை அளித்து, அமரத்வமடைந்த குரு தேவருக்கு அஞ்சலி செலுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

தாகூர் ஆங்கிலத்தில் எழுதியுள்ள நூல்களில் சிலவற்றைப் பிரசுரிக்கவும் சாஹித்திய அகடெமி ஏற்பாடுகள் செய்து வருகிறது. சாந்திநிகேதனில் கவியின் நினைவுக்கு ஒரு பொருட்காட்சியும் ஏற்படும். காந்திஜியும், தாகூரும் நம் நாட்டில் ஏககாலத்தில் வாழ்ந்து, மானிட வர்க்கத்துக்குச் சேவை செய்தது சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும். கவி தாகூர் நம் நாட்டுக்குமாத்திரம் சொந்தமானவரல்ல. உலகப் பிரஜை என்றே அவரை அழைக்க வேண்டும்.

குருதேவ் சிறந்த கவி, பிரபல எழுத்தாளர், கடமை வழுவாத ஆசிரியர், ஒப்பற்ற நாடகாசிரியர், ஓவியர், தேசாபிமானி. இயற்கையிலேயே கவிதை உள்ளம் படைத்த தாகூர், அக்பரைப்போல் கல்வி கற்கப் பள்ளிக்குச் சென்றாரில்லை. இவரது சகோதரர்கள் இவரைப் பள்ளிக்கு அனுப்பச் செய்த முயற்சிகள் படு தோல்வி அடைந்தன. எனினும் இந்திய, மேல்நாட்டு இலக்கியங்களை வீட்டிலேயே படித்தார். சுதந்திரத்தை விரும்பிய கவி, பள்ளிக்கூடத்தைச் சிறைக்கூடமாகவே கருதினார். 18 வயது நிரம்புவதற்கு முன்பே 7000 வரிகள் கொண்ட கவிதையை வங்காளியில் புனைந்ததுடன், ஏராளமான வசன நூல்களையும் வெளியிட்டார். வங்காளி மொழியில் தீஞ்சுவைக் கவிதைகள் இயற்ற வழி காட்டியவர் இவரே எனலாம். இயற்கைக் காட்சிகளைத் தம் கவிதைகள்மூலம் முதலில் சித்திரித்தார். 'காலைப் பாட்டு' என்ற கவிதையை முதலில் புனைந்தார். வைஷ்ணவக் கவிகளின் பாணியிலேயே கவிதைகளை எழுதத் தொடங்கினார். இவர் வங்காளியில் எழுதி ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த 'கீதாஞ்சலி', கவிதைகளுக்கு நோபல் பரிசு கிடைத்தது அனைவருக்கும் தெரிந்ததே.

தாகூரின் நாடகங்களும் பிரக்யாதி பெற்றவை. இந்திய பண்பாட்டுக்கு ஏற்ற இசை நாடகங்களை முதலில் இயற்றினார். இவை நீண்டதாக இருந்ததால், தற்கால வசதிகளுடன் கூடிய தியேட்டரில் நடிக்கக் கூடியதாக இல்லை. திறந்த வெளிகளில் நடிக்கக்கூடிய இசை நாடகங்கள், வங்க மக்களின் ஆதரவைப் பெற்றன. 'வால்மீகி பிரதிபா' என்ற நாடகம் இது சம்பந்தமாகக் குறிப்பிடத்தக்கது. இவர் பிறகு எழுதிய 'தபால் ஆபீஸ்' என்ற நாடகம் லண்டன் தியேட்டரில் நடிக்கப்பட்டது. பாரிஸ், பர்லினிலும் இது வெகுவாகப் பாராட்டப்பட்டது. தாம் எழுதிய நாடகங்களில் அவரே நடிப்பதுண்டு.

ஓவியங்கள் தீட்டுவதிலும் தாகூர் வல்லுநர். மெழுகுச் சீலையில் தீட்டிய 5000 சிறந்த ஓவியங்களை அவர் விட்டுச் சென்றிருக்கிறார்.

20-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் நாட்டில் நிகழ்ந்த அரசியல் புரட்சியில் தீவிரப் பங்கு கொண்டார் தாகூர். அவரது எழுதுகோல் திடீரென்று பட்டாக் கத்தியாக மாறியது. கனிந்த உள்ளம் படைத்த தாகூர் நாட்டு மக்களின் நல் வாழ்வுப் பிரச்னைகளில் தலையிட்டார். அன்னிய ஆட்சியின்கீழ் மக்கள் புழுக்கள்போல் நசுக்கப்பட்டது கண்டு மனம் வெதும்பினார். பொதுக்கூட்டங்கள் கவிதைகள்மூலம் மக்களிடையே புரட்சிக் கனலை மூட்டினார். சிறிது காலத்திற்கு இலக்கியச் சேவையை நிறுத்தி விட்டுச் சமூகத் தொண்டில் ஈடுபட்டார்.

பிறந்த நாட்டினிடம் பற்று அவருக்கு இருந்தபோதிலும் உலக சகோதரத்வம் பற்றி அவர் கொண்டிருந்த கருத்துக்கு இடையூறாக அது இருந்ததில்லை. சீமை ஜவுளிகளைக் கொளுத்துமாறு காந்திஜி கட்டளையிட்டதைக் குறுகிய தேசீய உணர்ச்சி என்றே தாகூர் கருதினார். தாகூர் காந்திஜியின் அன்னிய ஜவுளி எதிர்ப்புப் பிரசாரத்தைப் பகிரங்கமாகச், சில சமயங்களில் எதிர்த்ததுண்டு. இதனால் அவர் ஓர் அளவுக்குப் பொதுஜன ஆதரவை இழக்க நேர்ந்தது. கதர் பிரச்னை சம்பந்தமாக ஒரு சமயம் காந்திஜிக்கும் தாகூருக்கும் கடும் சர்ச்சை மூண்டபோது 'நான் சீமை ஜவுளியை பகிஷ்கரித்தால் லங்காஷயரில் உள்ள மில் ஊழியர்கள் அல்லவா பட்டினி கிடக்கும்படி நேரிடும்?' என்று தாகூர் கூறினார். இது கவியின் தார்மிக உள்ளத்தையும் உலக சகோதரத்வ உணர்ச்சியையும்தான் காட்டுகிறது.

இயற்கை சூழ்நிலையில் பழைய குருகுல முறைப்படி மாணவர்களுக்குக் கல்வி புகட்டுவதைத் தாகூர் பெரிதும் விரும்பினார். 20வது நூற்றாண்டு ஆரம்பத்தில் அவர் 5 மாணவர்களுடன் சாந்திநிகேதனில் ஒரு பள்ளியை நிறுவினார். இது தான் தற்போது விஸ்வ பாரதி சர்வகலாசாலையாகத் திகழ்கிறது. பள்ளி விடுதிகள், போதனாமுறை, புஸ்தகங்கள், கட்டிடங்கள் இவற்றைவிடக் கல்வி அளிக்கப்படும் சூழ்நிலையே சிறுவர்களுக்கு முக்கியமானது எனக் கருதினார். மண்ணால் கட்டப்பட்ட குடிசைகளிலும், திறந்த வெளியிலும், மர நிழலிலும் சிறுவர்களுக்குக் கல்வி அளிக்கும் முறையில் இப்பள்ளியை அமைத்தார். காந்திஜி தலைமையில் இந்தியாவில் முதல் ஒத்துழையாமை இயக்கம் நடந்தபோதுதான் சாந்திநிகேதனில் தாகூர் விஸ்வ பாரதி சர்வகலாசாலையை நிறுவினார். இதற்குக் காந்திஜியின் பரிபூர்ண ஆசியையும் அவர் பெற்றார். இச்சர்வகலாசாலையில் மேற்கு, கிழக்கு நாடுகளின் மாணவர்கள் கூடக் கல்வி பயில்கின்றனர். மதம், விஞ்ஞானம், இலக்கியம் மற்றும் பல நுண்கலைகள் இவற்றில் இங்கு ஆராய்ச்சி நடத்தப்படுகிறது. மேலைநாடும், ஆசிய நாடுகளும் தத்தம் பண்பாடுகளைப் பரஸ்பரம் புரிந்துகொள்ள வேண்டுமென்பதே தாகூர் இச்சர்வகலாசாலையை ஏற்படுத்தியதன் லட்சியமாகும். 2வது உலக யுத்தம் ஏற்படும் தறுவாயில்தான் சாந்திநிகேதனில் 'சீனா பவனம்' என்ற ஆராய்ச்சி ஸ்தாபனத்தை நிறுவினார். ஸ்ரீ தான்யுன்ஷான் என்ற சீனரும் இதன் டைரக்டராக நியமிக்கப்பட்டார். இதற்கான பணம் பூராவும் சீனாவிலிருந்து கிடைத்தது. சீனாவில் கம்யூனிஸ்ட் சர்க்கார் அதிகாரத்துக்கு வந்த பிறகு, இதற்கு ரூ. 5½ லட்சம் வழங்கியது.

நீண்ட உழைப்புக்குப் பிறகு 1941 ஆக. 7ந்தேதி தாகூர் தம் 80வது வயதில் பூதவுடல் நீத்து, புகழுடம்பு எய்தினார். மனிதர்களுடைய வாழ்க்கையில் நல்ல காலமும் கெட்டகாலமும் சம்பவிப்பது போல் ஸ்தாபனங்களுக்கும் ஏற்படுவதுண்டு. பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற மூதுரைப்படி சாந்திநிகேதனிலும் பல மாறுதல்கள் ஏற்படத் தொடங்கின. 10 வருடங்களாக விஸ்வ பாரதி சர்வகலாசாலை பல கஷ்டங்களைச் சமாளிக்க வேண்டி வந்தது. அதன் நிதி நிலைமை மோசமாகியதுடன், நிர்வாகமும் சரிவர நடைபெறவில்லை. அதில் கல்வி பயின்றவர்கள் அரசியல் முதலிய லாபகரமான துறைகளில் பிரவேசித்துவிட்டனர். தாகூர் லட்சியங்களுக்கு விரோதமான கல்வி முறைகளைப் புகுத்த விரும்பினர் சிலர். உடனே இதில் தேசீய சர்க்கார் தலையிட நேரிட்டது. இதன் நிர்வாகத்தை ஏற்க மத்திய சர்க்கார் 1957ல் விஸ்வ பாரதி மசோதாவைக் கொணர்ந்தனர். இதற்கு மூலகாரணமாயிருந்தவர் நேருவும், மௌலானா ஆசாத்தும் ஆவர். பலத்த எதிர்ப்பு இருந்தபோதிலும் மசோதா சட்டமாகியது.

தம் நாட்டின் மதப் பண்புகளையும், தார்மீகக் கருத்துக்களையும் உலகில் இச்சர்வகலாசாலை பரப்பி மக்களிடையே சாந்தியையும், சகோதரத்வத்தையும் நிலைநாட்ட உதவி புரியுமென்று நம்பு[illegible]

—கே. ஆர். எஸ்.



என். டி. ராமராவ் கண்ணீர் வடித்தார்

மக்களின் அபவாதத்தைக் கேட்டுச் சீதையைக் காட்டுக்கனுப்பி விட்டார் ராமன். அதனால் அவருக்கேற்பட்ட சோகம் சொல்லத் தரமன்று. ஆனால், மக்களும் இதனால் மனம் வருந்தினர். தங்கள் தவறுக்காக என்ன செய்யலாம் என்று தருணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். தருணமும் வந்தது. அயோத்தியிலே ராமபிரான் அஸ்வமேத யாகம் செய்யப் போகிறார் என்றும் அதற்குச் சீதை நாட்டில் இல்லாததால் பொன்னால் சீதையின் உருவம் ஒன்றைச் செய்து பக்கத்தில் வைத்துக்கொண்டு யாகத்தை முடிக்கப் போவதாகவும் கேள்விப்படுகின்றனர். உடனே சீதையிடம் தங்கள் அன்பைத் தெரிவிக்கும் முறையில் 'சீதையின் உருவம் அமைக்கத் தேவையான தங்கத்தை நாட்டு மக்களாகிய நாங்களே தந்துவிடுகிறோம்' என்று கூறுகின்றனர்.

இதைக் கேட்டதும் மக்கள் மன்னனை ராமபிரான் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது. பிராட்டியாரிடம் மக்கள் கொண்டுள்ள அன்பைக் கண்டு, அவர் மனம் குழைந்தது. மக்கள் காணிக்கையை ஏற்றுக்கொண்டார்.

இந்தக் காட்சியிலேதான் என். டி. ராமராவ் நிஜமாகவே கண்ணீர் வடித்துவிட்டார்.

லலிதா பிலிம்சார் கேவா கலரில் தமிழ், தெலுங்கு இரு பாஷைகளில் தயாரிக்கும் 'லவ—குசா' என்ற படத்திற்காக ராமர் தர்பாரில் குடிகளைச் சந்திக்கும் இக்காட்சியை வாஹினியிலே டைரக்டர் சி. புல்லையா படமாக்கினார்.

'மாதர் குல மாணிக்கம்' என்ற ஒப்பற்ற படத்தைத் தயாரித்து, ஸ்ரீ சங்கர ரெட்டிதான் இப்படத்தை ஏராளமான பொருட் செலவில் தயாரிக்கிறார். தமிழ் வசனங்களை ஏ. கே. வேலன் எழுதுகிறார். டி. வி. ஆர். சர்மா என்பவரின் கலையழகு நிரம்பிய காட்சி ஜோடனைகளை இதில் காணலாம். இப்படத்தில் என். டி. ராமராவ் ராமபிரானாகவும், ஜெமினி கணேசன் லட்சுமணனாகவும், பாலாஜி பரதனாகவும், எஸ். ஜி. ஈஸ்வர் சத்ருக்னனாகவும், அஞ்சலி தேவி சீதையாகவும், கண்ணாம்பா கோசலையாகவும், நாகையா வால்மீகியாகவும் நடிக்கின்றனர். நடனங்கள் குசல குமாரி. படம் இரு பாஷைகளிலும் முழு நீளக் கேவா கலர் படமாகத் தயாராகி வருகிறது.

தமிழ் பால நாகம்மா

விநாயகா பிக்சர்ஸார் தயாரித்து வரும் தமிழ் பால நாகம்மாவுக்காகச் சமீபத்தில் பாரமவுண்ட் ஸ்டுடியோவில் சில ரசமான காட்சிகளை டைரக்டர் டி. ஆர். ராமண்ணா படமாக்கினார்.

உலகைத் துறந்து தர்மத்திடம் சரணடைந்த பௌத்த பிக்ஷுக்களுடன் கட்டிளங்குமரி கயல் விழிக்கன்னி ஒருத்தியும் (ஈ. வி. சரோஜா) புத்த மடத்தில் இருக்கிறாள். புத்தபிக்ஷு (பட்டு அய்யர்) தர்மத்தைப்பற்றி உபதேசம் செய்யும்போது, கூட்டத்திலுள்ள ஒருவனுக்குச் சந்தேகம் ஏற்பட்டு விடுகிறது. அந்த சந்தேகத்தை இந்தக் கட்டிளங்குமரி விளக்குகிறாள். 'அடித்துத் திருத்துவதைவிட ஒருவரை அன்பினால் திருத்துவதுதான் நல்லது. இம்சை முறையைவிட அஹிம்சை முறையே சிறந்தது' என்கிறாள். கூட்டத்தில் மந்திரவாதி மாயாலனின் ஒற்றன் ஒருவன் இருக்கிறான் என்பதை அந்தப் பெண் உணரவில்லைபோலிருக்கிறது. அவன் இதை மந்திரவாதியிடம் கூறிவிடுகிறான். இந்தப் பயங்கர மாயால மந்திரவாதி யார் தெரியுமா? வேறு யாருமில்லை. எம். ஆர். ராதாதான். விநாயகா பிக்சர்ஸார் சரியான நடிகராகப் பொறுக்கிப் போட்டுள்ளார்கள். இளநங்கையாக ஈ. வி. சரோஜாவும், புத்தபிக்ஷுவாக ஜி. பட்டு அய்யரும் நடிக்கின்றனர். மற்றும் மோகனா, சந்தியா, காமெடியன் கன்னையா, ஷண்முகம் ஆகியோரும் நடிக்கின்றனர். டி. ஆர். ராஜகுமாரியின் சகோதரர்களான ராமண்ணா, சக்கரவர்த்தி, ராஜாபாதர்—மூவரும் இப்படத்தைத் தயாரிப்பவர்கள். துறையூர் மூர்த்தி கதை வசனம் எழுதியுள்ளார். விசுவநாதன், ராமமூர்த்தி சங்கீதம் அமைத்துள்ளனர்.

மாலா ஒரு மங்கல விளக்கு

நடிகை மாதுரிதேவியும் அவரது கணவன் முகர்ஜியும் தயாரித்து வரும் 'மாலா ஒரு மங்கல விளக்கு' என்ற படம் தணிக்கைக்குத் தயாராகிவிட்டது. விரைவில் இப்படம் திரைக்கு வர ஏற்பாடுகள் நடைபெறும். படத்தை மாதுரி தேவியின் கணவரான முகர்ஜியே டைரக்ட் செய்துள்ளார். கண்ணப்பா, மாதுரி, நாகையா முக்கிய பாகத்தில் நடிக்கின்றனர்.

கச்சா பிலிம் வெட்டு

கச்சா பிலிம் வெட்டினால் படத் தொழிலில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கிறது. பிலிம் வெட்டு வரப்போகிறதென்றபோதே சிலருக்கு வேலை போய் விட்டது. இந்த வருஷமும் பிலிம் வெட்டு நீடிக்குமானால், படத் தொழிலில் இருக்கும் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் வேலையை இழக்க நேரிடும் என்று தென்னிந்திய சினி டெக்னிஷியன்ஸ் கில்டின் காரியதரிசி என். கிருஷ்ணசாமி, கைத்தொழில் மந்திரி ஸ்ரீ ஆர். வெங்கடராமன் அவர்களிடம் சமர்ப்பித்த கோரிக்கையில் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:— தென்னிந்தியப் படத் தொழில் ஊழியர்களாகிய நாங்கள், ஏற்கெனவே கச்சா பிலிம் வெட்டினால் ஏற்பட்ட பயங்கர விளைவுகளை அனுபவிக்க ஆரம்பித்து விட்டோம். பிலிம் வெட்டு வரப்போகிறதென்ற உடனேயே இந்த ஆட்குறைப்பு வேலை ஆரம்பமாகி விட்டது. ஆகவேதான் நிலைமையை உங்களிடம் விளக்க இந்த அறிக்கையைச் சமர்ப்பிக்கிறோம்.

தென்னிந்தியாவில் 70 அரங்கங்கள் உள்ள 27 ஸ்டுடியோக்கள் இருக்கின்றன. இவை யாவும் சென்ற வருஷம் மும்முரமாக வேலை செய்தன. ஆனால், இந்த வருஷத்தில் இவைகளில் பாதிக்குக்கூடப் போதுமான வேலை இல்லை.

புதிய படங்கள் ஆரம்பிக்கப்படவில்லை. ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட படங்களின் வேலைதான் நடந்து வருகிறது. இந்த நிலைமை நீடிக்குமானால், படத் தொழிலில், தயாரிப்பு, விநியோகம், தியேட்டர் ஆகிய மூன்று பிரிவுகளிலும் உள்ள ஏராளமான தொழிலாளர்கள் வேலையை இழந்து தவிப்பார்கள்.

வர்த்தக மந்திரி இலாகா இறக்குமதியாகும் கச்சா பிலிம்களை மூன்று பகுதியாகப் பிரித்து, இந்தியாவின் மூன்று படப் பிடிப்புக் கேந்திரங்களான பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய இடங்களுக்குத் தருகிறது. அதன்படிச் சென்னைக்கு மூன்றில் ஒரு பங்கு கச்சா பிலிம் கிடைக்கிறது. கச்சா பிலிம் உபயோகிப்பதில் சென்னைதான் முதலில் நிற்கிறது. இங்கே தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி ஆகிய ஐந்து பாஷைகளுடன் சில சமயம் சிங்கள பாஷைப் படங்களும் எடுக்கப்படுகின்றன. தற்போதுள்ள

கச்சா பிலிம் பங்கீடு முறைப்படிச் சென்னை தன் தேவையைப் பூராவும் பெறவில்லை.

மூன்று படப் பிடிப்புக் கேந்திரங்களுக்கும் பிலிம் சப்ளை செய்யும் கம்பெனிகளின் விற்பனைக் கணக்கை எடுத்துப் பார்த்தால், இறக்குமதியாகும் கச்சா பிலிமில் பாதிக்குமேல் சென்னைதான் உபயோகிக்கிறது என்ற உண்மை விளங்கும்.

சென்னையில் 10 கோடி அடிகள் நீளமுள்ள கச்சா பிலிம் விற்கப்பட்டுள்ளது. இதில் 40% சத விகிதம் வெட்டு செய்தாலும் சென்னைக்கு 6 கோடி அடிகள் நீளமுள்ள பிலிம் கிடைக்க வேண்டும். அதாவது 600 லட்சம் அடிகள். ஆனால், தற்போது சென்னைக்குக் கிடைப்பது 460 லட்சம் அடிகள்தான். இது சரியான பங்கீடாகாது.

மற்ற கேந்திரங்களிலுள்ள படத் தயாரிப்பாளர்களின் தேவையை நாங்கள் மறுக்கவில்லை. இங்கு சிக்கன முறையைக் கைக்கொண்டு படத் தயாரிப்பாளரும் தொழிலாளரும் ஒத்துழைக்கிறோம். ஆயினும், கச்சா பிலிம் பங்கீடு முறை சரி இல்லாத குறை எங்களைப் பாதிக்கிறது. இதை மாற்றியமைக்க வேண்டியது அவசியம்.

ஆகவே, மத்ய சர்க்கார் வர்த்தக இலாகாவிடம், உங்கள் செல்வாக்கை உபயோகித்து, இதற்குப் பரிகாரம் தேடித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

இந்தியப் படத் தயாரிப்பாளர்கள் எவ்வளவு கச்சா பிலிம் வாங்கியுள்ளார்கள் என்ற புள்ளி விவரம் கீழ்க்கண்ட கம்பெனிகளின் விற்பனைக் கணக்கிலிருந்து தெரிந்து கொள்ளலாம். அவை (1) மெஸர்ஸ் கோடாக் லிமிடெட், (2) (கோடாக் பிலிம்) பூடேல் இந்தியா லிமிடெட் (கேவா பிலிம்) மெஸர்ஸ். கபூர் சந்த் அண்டு கம்பெனி. (டுபோண்ட் பிலிம்).

உபயோகக் கணக்கின்மீது பங்கீடு செய்தால் மட்டுமே தென்னிந்தியப் படத் தொழிலில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தவிர்க்க முடியும்.

தொழில் மந்திரி பொறுமையுடன் பேட்டியாளர் கூறியதைக் கேட்டார். உடனடியாக ஆவன செய்வதாக வாக்களித்தார்.

நிஜமான குற்றவாளி

சமீபத்தில் இந்தியப் பாதுகாப்பு மந்திரி ஸ்ரீ வி. கே. கிருஷ்ண மேனன் வாஹினி ஸ்டுடியோவில் நடந்த விருந்துபசாரக் கூட்டத்தில் பேசும்போது, 'கச்சா பிலிம் வெட்டை நிவர்த்தி செய்யும்படி என்னிடம் கூறுவதில் பயனில்லை. இதற்குக் காரணமான 'நிஜக் குற்றவாளி' அதோ இருக்கிறாரே, அவர்தான் என்று சென்னை கைத்தொழில் மந்திரி ஸ்ரீ ஆர். வெங்கடராமனை சுட்டிக் காட்டினார். அவர் மேலும் கூறியதாவது:—இவரிடம் சொல்லுங்கள். இவர் வர்த்தக மந்திரியிடம் வற்புறுத்தி, உங்கள் குறையைத் தீர்ப்பார். என் இலாகாவும் இந்த இறக்குமதி வெட்டினால் சங்கடப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆயினும் படத் தொழிலினால் இந்திய ராணுவம் மிகப் பயனடைந்துள்ளது என்றார்.

தங்கத்தின் மனசு தங்கம்

நகைச்சுவை நடிகர் பிரண்ட் ராமசாமி இருக்கிறாரே, அவர் ஒரு தங்கமான மனிதர். ஆகவே, அவர் தன்னுடைய படத்திற்கு 'தங்கத்தின் மனசு தங்கம்' என்று பெயரிட்டுள்ளார். ஏற்கெனவே இப்படம் 'அன்பின் ஜோதி' என்ற அதன் மூல நாடகப் பெயரையே கொண்டிருந்தது 'தங்கத்தின் மனசு தங்கம்'. ஆகவே, இது தங்கமான படமாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். சமீபத்தில் இப்படத்திற்கான இரண்டு பாடல்களைப் பதிவு செய்தனர். படப் பிடிப்பு வேலைகள் ஆரம்பமாக இருக்கின்றன. இப்படத்தில் ராஜேந்திரன், விஜய குமாரி, எம். என். ராஜம், எம். சரோஜா, பிரண்ட் ராமசாமி, டி. கே. ராமச்சந்திரன், நாராயண பிள்ளை ஆகியோர் நடிக்கின்றனர். கொட்டாரக்கரை என்ற மலையாள எழுத்தாளரின் கதைக்கு ஏ. எல். நாராயணன் வசனம் எழுதுகிறார். ஆர். எம். கிருஷ்ணசாமி டைரக்ட் செய்கிறார்.

நாகி ரெட்டி தலைவரானார்

தென்னிந்திய ஸ்டுடியோ சொந்தக்காரர்கள் சங்கத்திற்கு வாஹினி, விஜயா ஆகிய இரு ஸ்டுடியோக்களின் உரிமையாளரான ஸ்ரீ பி. நாகி ரெட்டி, தலைவரானார். தென்னிந்திய ஸ்டுடியோ சொந்தக்காரர் சங்கத்தால் இவர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கச்சா பிலிம் இறக்குமதி வெட்டினால் தென்னிந்தியப்

ராஜேஸ்வரி பிலிம்ஸ் 'சுமங்கலி'யில் ஈ. வி. சரோஜா.

'செங்கோட்டை சிங்கத்'தில் உதய குமாரும் சரோஜா தேவியும்.

படத் தொழில் பாதகமடைந்துள்ளது என்பதைச் சர்க்காரிடம் எடுத்துக் கூறி, அதற்குப் பரிகாரம் தேட ஸ்ரீ நாகி ரெட்டி, தன்னாலான முயற்சிகளெல்லாம் செய்து வருகிறார் என்பது குறிப்பிடத் தக்கது.

சந்திரகாந்தா மீண்டும் திரைப்படமாகிறது

அருணா பிலிம்ஸ் கூட்டாளிகளில் ஒருவரான ஸ்ரீ எம். ராதாகிருஷ்ணன் தற்போது தனியாக எம். ஆர். கே. ப்ரொடெக்ஷன்ஸ் என்ற பெயரில் ஒரு கம்பெனியை ஆரம்பித்து, ஜே. ஆர். ரங்கராஜுவின் புகழ் பெற்ற நாவல்களில் ஒன்றான 'சந்திர காந்தா'வை 'சவுக்கடி சந்திரகாந்தா' என்ற பெயரில் படமாக்குகிறார். சந்திரகாந்தா ஏற்கெனவே ஒரு முறை படமாக்கப்பட்டு, மக்கள் ஆதரவைப் பெற்ற கதை! 'சுவாமிகாள்! ஏன் யோகாப்பியாசம் செய்யலாமே!' என்று காளி ரத்னம் பேசி நடித்ததை இன்னும் நாம் மறக்கவில்லை.

அருணா பிலிம் கம்பெனி ஆரம்பமான போது, அவர்கள் முதல்முதல் ரங்கராஜுவின் 'ராஜாம்பாள்' என்ற நாவலைப் படமாக்கியே வெற்றி கண்டார்கள். இப்போது ஸ்ரீ ராதாகிருஷ்ணனும் தன்னுடைய முதல் படத்திற்கு ரங்கராஜுவின் கதையைத் தேர்ந்தெடுத்திருப்பதில் பொருத்தமுண்டு. இப்படத்தை கே. வேம்பு டைரக்ட் செய்வார். வி. என். சம்பந்தம் வசனம் எழுதுவார். படத்தின் ஆரம்ப வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. பாலையா, டி. கே. ராமச்சந்திரன் இருவரும் ஒப்பந்தமாகியுள்ளார்கள். மற்ற நடிகர் தேர்தல் நடைபெற்று வருகிறது.

சிவலீலா

சம்பூர்ண ராமாயணத்தைப் பிரபல நடிகர்களைக் கொண்டு மகத்தான முறையில் தயாரித்த சேலம் ரத்னா ஸ்டுடியோ அதிபர் எம். ஏ. வேணு, இப்போது 'சிவலீலா' என்று டி. கே. எஸ். சகோதரர்கள் நடித்து வந்த புகழ்பெற்ற நாடகத்தை படமாக்கப் போகிறார்.

இப்படத்தில் பல முக்கியமான கதாபாத்திரங்களுக்குச் சந்தர்ப்பமளிக்க வேண்டி இருப்பதால், இதில் பிரபல நடிகர்கள் பலர் நடிப்பார்கள். அவர்களில், சிவாஜி கணேசன், எம். கே. தியாகராஜ பாகவதர், எம். ஆர். ராதா, கே. ஆர். ராமசாமி, எஸ். எஸ். ராசேந்திரன், டி. கே. எஸ். சகோதரர்களில் ஒருவர் மற்றும் பலர் நடிப்பார்கள். பலதரப்பட்ட அரசியல் கருத்துள்ளவர்கள் நடிக்கிறார்கள்.

இப்படத்தை ஏ. பி. நாகராஜன் டைரக்ட் செய்யப் போகிறார். வெளிப்படையாக டைரக்டர் என்று பெயர் போட்டுக்கொண்டு, அவர் வருவது இது தான் முதல் தடவை ஆனாலும், ஸ்ரீ ஏ. பி. நாகராஜன்தான் அவர் கதை வசனம் எழுதியுள்ள பல படங்களின் வெற்றிக்குக் காரணம் என்பதைப் பட வட்டாரங்களில் தொடர்புள்ளவர்கள் அறிவார்கள்.

ஏ. பி. நாகராஜன் கதை எழுதுவதென்றால், படத் தயாரிப்பாளர் எல்லாவற்றையும் அவரிடம் ஒப்படைத்துவிட்டு நிம்மதியாக இருக்கின்றனர் என்று முன் ஒருமுறை குறிப்பிட்டுள்ளேன். அவர் கதை எழுதப் பொறுப்பேற்றுக் கொண்டால், கதை எழுதி அது சரியாக எடுக்கப்படுகிறதா, வசனங்கள் சரியாகப் பேசப்படுகின்றனவா என்பதை நேரில் இருந்து கவனித்துக்கொள்கிறார். அதுமட்டுமல்ல; தான் கற்பனை செய்துள்ளபடி காட்சிகள் உருவாவதற்கு அவரே சகல பொறுப்புகளையும் ஏற்று டைரக்டருடன் உழைப்பார். அநேகமாக டைரக்டரின் வேலையில் முக்காலே மூணுவீசம் பகுதியும்—இல்லை; இனிமேல் 95 நயா பைசாவின் பகுதியும் என்று கூற வேண்டும்—ஸ்ரீ நாகராஜனே செய்து விடுவார். கதாசிரியருக்கு வேண்டிய சுதந்திரம், அவருக்குக் கிடைத்துவிடுவதால் தனது திறமை அவர் நன்கு சோபிக்கச் செய்ய முடிகிறது. இவ்வாறு சுதந்திரம் அளிக்கப்படாத இடங்களிலிருந்து அவர் விலகிக் கொண்டு விடுவார்.

ஆகவே, ஸ்ரீ ஏ. பி. நாகராஜன் டைரக்ட் செய்கிறாரென்றால் 'சிவ லீலா' ஒரு மகத்தான திரை ஓவியமாக வெளி வரும் என்பதில் ஐயமே இல்லை.

பாவை விளக்கு

கல்கியில் வெளிவந்த அகிலனின் 'பாவை விளக்கு' என்ற தொடர் கதையை ஸ்ரீ விஜய கோபால் பிக்சர்ஸார் முதல் தயாரிப்பாக எடுத்து வருகிறார்கள். இக்கதைக்கான வசனத்தை ஏ. பி. நாகராஜன் எழுதி வருகிறார். சங்கீத கவனம் கே. வி. மகாதேவனிடமும் டைரக்ஷன் பொறுப்பு கே. சோமுவிடமும் ஒப்படைத்திருக்கிறார்கள் தயாரிப்பாளர்களான வி. கே. கோபன்னா, டி. விஜயரங்கம் ஆகியோர்.

மைசூர் வாசுதேவாச்சார் கீர்த்தனைகள்

ராகம் : சக்ரவாகம்] [தாளம் : கண்ட த்ரிபுடை

ஆ ஸ ரி க ம ப த நி ஸ்
அ. ஸ் நி த ப ம க ரி ஸ } 16-வது மேளம்

பல்லவி

ஜனார்த்தநம் ஸமாச்ரயேஹம் ஸததம்
3
ஸ்வநாம கீர்த்தன க்ருதாதர ஜனஹிதம் (ஜனார்த்)
3

அநுபல்லவி

ஸநாதநாகில முனி ஜனார்ச்சிதம்
2
திருதி நாத ஸன்னிபம் சுபசரிதம் (ஜனார்த்)
3 4 3 4 4

சரணம்

ரமேசம ஜப வேந்த்ராதி வந்திதம்
3 4 3
ஸமீர ஸுத ஸுஸேவிதம் குணபரிதம்
4
ஸுமாஸ்த்ர ஸுந்தர மபி ஹதாஹிதம்
3 4
சமான்விதம் வாஸுதேவ மகராஹிதம் (ஜனார்த்) (84)
4

ப:— ஜனார்தனனை, (ஜனங்களின் ஸகல பாபங்களையும் நாசம் செய்பவனை), என்றும் நான் சரணமாக அடைகிறேன். தன் நாமங்களை ஸ்மரணஞ் செய்வதில் ஆதரவுள்ள ஜனங்களுக்கு வேண்டிய நன்மை செய்பவனை, —(ஜனார்தனனை.)

அ-ப:— நித்ய முக்தர்களான ஸர்வ மஹர்ஷிகளாலும் பூஜிக்கப்பட்டவனை, கோடி ஸூர்யப்ரகாசமுள்ளவனை, சுபமான தன் சரித்ரத்தை படிப்பவர்களுக்கு வேண்டிய நன்மைகளைக் கொடுப்பவனை, —(ஜனார்தனனை.)

ச:— ஜகத்தை ஸந்தோஷிக்கச் செய்யும் ரமையின் மணாளனை— பிரம்மா, சிவன், இந்திரன் இவர்களால் நமஸ்கரிக்கப்பட்டவனை— ஆஞ்சனேய ஸ்வாமியால் சேவிக்கப்பட்டவனை, நற்குணங்கள் நிறைந்தவனை, மன்மதனைப் பழிக்கும் அழகுள்ளவனை— துஷ்ட குணங்களுள்ளவரை அழிப்பவனை— சாந்தஸ்வரூபனை, வாஸுதேவனை— பாபமற்றவனை.

(ஜனார்தனனை.)

ராகம் : சக்ரவாகம். தாளம் : கண்ட த்ரபுடை.

ஆ : ஸரிகமபதநிஸ். அ : ஸ்நிதபமகரிஸ.

I	0	0
	பல்லவி	
நிதபமமா ,கபமகரிஸ ஸரிஸநிதா தநி	ஸா ஸரிகம	பாபம, கமபத
ஐ . நா . . . . ர்த நம் . . ஸ . மா . . . ச்ர	யே ஹம் . .	ஸ த . தம் . . .
ஸ மகமாமா கமபம பப நிததநி	ஸ்ா ஸ்நிரிஸ் நி	த பமகமபத
ஸ்வ நா . ம . . கீர் . . த்தன க்ருதா .	. . த . ர ஜ	ன ஹி . தம் . . .
தநித பம்மாகா மாபமாப மகரி ஸரிஸாரிஸநி தாதநி	ஸா ஸரிகம்	பாபம கமபத
ஐ . நா . . . ர்த . . . நம் . . க . . . . மா . . . . ச்ர	யே ஹம் . .	ஸ த . தம் . .
நிதபம கரிஸரி கமபம பப நிதபத	நிஸ்ா நிதா மப	தாநித பம கமபத
ஸ்வநா . . . ம கீர் . . தன க்ருதா .	. . . . தர . ஜ .	ந . . ஹி . தம் . .
	அநுபல்லவி	
,ஸ்ஸ்நி தாநீ ஸ்ா,நி ரிஸ்ரீ க்ரி	க்ா ம்க் ரீரீ .	ஸ்நிஸ்ா ,,
,ஸ நா . . த நா . . இ ல முனி	ஜ . நா . ர்ச்சி	தா . . . .
,ஸ்ஸ்ா ரிஸ் நிதநீ ஸ்ா,ஸ் ரிஸ்ரீ, க்ரிக்ா	ரிக் ம்ாப்ம் க்ாக்ரி	ஸ்நிஸ்ா ,
. ஸ நா . . . . . த நா . . இ ல மு . னி .	ஜ நா . . . . ர்ச்சி	த ம . . . .
ஸ்நி ரீ ஸ்நி ஸ்ா நி நிதநிபதநி	ஸ்ா நின் நித	! மகரி கமபத
தி . நா தி . நா த ஸன் . . னி .	பம் சு . ப .	ச ரி தம் . . .
	சிட்டை ஸ்வரம்	
நீதபாத மபதநி ததபம தபாமகம	ரி, ஸநி	ரிஸா ரிகமபத
நிதநிபாத மாபகாம பதநிஸ் ரிக்ம்க்	,ரிஸ்நி ரிஸ்ாநி	தப மகாமபத
		(ஜனார்த்தனம்)
	சரணம்	
பபா பம கமபதநித பததபமா	மகபம கரிஸரி	கமபம பா
ரமே . ச ம . ஜ ப . வே . . .	ந்த்ரா . . தி . வம்	தி தம்
மப தாநித பாத . . பா பமகரி ஸரிகம பாபம	பமகரி ஸரிஸநி	நிதநீ ஸா
ஸ மீ . . . . . . ர ஸா . த . ஸா . ஸே . . . வி	தம் . . . கு ண .	ப . தி தம்

ஸாமாஸ்த்ர ஸாந்தரபிஹதாஹிதம்
சமான்விதம் வாஸுதேவ மக ரஹிதம்

(அநுபல்லவிமாதிரி)

ஜூன் 1-ந் தேதி உதகமண்டலத்தில் கூடிய தென் மண்டலக் கவுன்ஸில் கூட்டத்தில் மத்ய உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் தலைமை வகித்தார். இதற்கு சென்னை, ஆந்திரப்பிரதேச, கேரள முதன் மந்திரிகள் வந்திருந்தனர். மைசூர் ராஜ்யப் பிரதிநிதிகள் பார்வையாளராக வந்திருந்தனர்.

'மாதா பிதா குரு தெய்வத்'தில் சௌகார் ஜானகி

சென்னை-600 005.

Regd. No. 2[illegible]
Registered as a N[illegible] LON.
Th[illegible] Swadesamitran Weekly.

சினிமா நட்சத்திரங்களின்

பொலிவுடன் உங்கள் மேனியும் மிளிரட்டும்!

நீங்களே ஒரு சினிமா நட்சத்திரமா யிருந்தீர்களானல் — திரையிலும் சரி, வெளியிலும் சரி தினந்தோறும் உங்கள் மேனி, மாசு மறுவின்றி புதுமைப் பொலிவுடன் அழகாக நாள் முழுமையும் விளங்க வேண்டுமானல், சாவித்திரியின் முறையை நீங்களும் பின்பற்றுவீர்கள். "எனது சருமத்தைத் தெளிவாகவும் மழமழப்புடனும் வைத்திருப்பதற்குக் காரணமான தூய, வெண்மையான லக்ஸ் டாய்லெட் சோப்பின் மணங்கமழும் செழிப்பான நுரைமீது எனக்குப் பூரண நம்பிக்கை" என்கிருர் பேரழகி சாவித்திரி. நீங்களும் மேனியழகுக்காக லக்ஸ் டாய்லெட் சோப்பையே தேர்ந்தெடுங்கள்.

ஆர்.ஆர். பிக்சர்ஸ் "காத்தவராயன்" படத்தில் தோன்றும் அழகு நட்சத்திரம் சாவித்திரி

தூய, வெண்மையான

லக்ஸ் டாய்லெட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகுசாதன சோப்

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு. LTS. 564-X52 TM

Printed and Published by N. Rajagopalan, at the 'Swadesamitran' Press, 'Victory House' Mount Road, Madras. Editor: C. R. Srinivasan, B. A.

சுதேச மித்திரன்

ஜூன் 22 1958 ★ நயேபைசே 25

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1- JUL 1958
MADRAS

பொருளடக்கம்

Vol. XXIX] விளம்பி ஹு ஆனிமீ 8உ ஜூன் 22, 1958 [No. 21

சகிக்க முடியாத நெருக்கடி 3
உலகப் பலகணி —கே. பி. எஸ். 4
காற்று வாக்கிலே... —அரட்டை 5
சகுந்தலே —வடூர் நாராயணன் 6
தலைநகர் தபால் 11
இலங்கை லிகிதம் 12
அசூயை —சீதா தேவி 13
வானக் குளியல் —கோவி. மணிசேகரன் 18
மலர் மஞ்சம் —தி. ஜானகிராமன் 19
திருமுலைப்பால் —தான் 24
ஆதித்தன் காதல் —ஆர்வி 27
பாடலால் பெயர் பெற்றவர்கள் —மா. ரா. இளங்கோவன் 33
உலகியல் கதைகள் —சாலிவாஹனன் 35
தங்கப் பதுமை —அஸ்வத்தாமா 36
சிறுவர் அறிவு அரங்கம் 39
சிரிக்கத் தெரிந்தவன் —எம். வி. வெங்கடராமன் 40
கருட பஞ்சமி —மஹி 44
டோக்கியோவில் ஆசிய விளையாட்டு விழா—கே. ஆர். எஸ். 48
இப்படியும் சில பிரகிருதிகள்—ருக்கு 49
கலா மண்டபம் 51
நவ நாகரிகக் குறிப்புகள் —காசினி 54
கண்டதும் காதல் —வேதா 55

"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளிவரும் கதைகளில் பெயர்கள் சம்பவங்கள் எல்லாம் கற்பனையே அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

அட்டைப் படம் : போட்டோ—ஆர். கே. பார்த்தசாரதி.

★

புதுச்சேரி ராஜ்யம் அரியாங்குப்பம் கொம்யூனைச் சேர்ந்த டி. பாளையத்தில் 5-ந் தேதி சீப் செகரெடரி ஸ்ரீ ஏ. கிருஷ்ணசாமி ஐ. ஏ எஸ் மின்விசைசப்ளையை துவக்கி வைத்தார் இடது புறமிருந்து வலதுபுற வரிசையில்.—ஸ்ரீ பி. ஷண்முகம் (எம் எல். ஏ) ஸ்ரீ ஈ. குபேர் (எம். எல். ஏ. புதுச்சேரி ராஜ்ய காங்கிரஸ் தலைவர்), சீப் செகரெடரி ஸ்ரீ ஏ. கிருஷ்ணசாமி ஸ்ரீ டி. கே. ராமகிருஷ்ணன் (அபிவிருத்தி இலாகாக் காரியதரிசி)

★

சென்னை-600 008.



வாழிய செந்தமிழ்
சுதேசமித்திரன்
வாழ்க நற்றமிழர்
வாரப்பதிப்பு

★

சகிக்க முடியாத நெருக்கடி

பட்டணங்களில் ஜாகை நெருக்கடி சகிக்க முடியாத ஒரு தொல்லையாகி விட்டது. சென்னைபோன்ற நகரங்களில் மொத்தமுள்ள ஜனங்களில் பாதிப் பேருக்குக்கூட சரியான குடியிருப்பு வசதி கிடையாது. பெரும்பாலான மக்களின் வாழ்க்கை பரிதபிக்கத்தக்கது. சென்னை நகரத்தின் ஜனத்தொகை தற்போது 17 லட்சம். இவர்கள் சௌகரியமாக வாழக் குறைந்தபட்சம் 2½ லட்சம் வீடுகளாவது இருக்க வேண்டும். ஆனால், தற்போதுள்ள வீடுகள் ஒரு லட்சம்தான். கஷ்டப்படுவோர் சொற்ப வருமானக்காரர்களே என்று சொல்லத் தேவையில்லை. கார்ப்பொரேஷன், நகர அபிவிருத்தி டிரஸ்ட் வீடு நிர்மாணக் கூட்டுறவுச் சங்கம் போன்ற ஸ்தாபனங்கள், சென்ற சில வருஷங்களில் வீட்டு வசதியைப் பெருக்க முயற்சியெடுத்துக்கொண்டு வந்திருக்கின்றன. ஆனால், அதன் பலனுக்கும், நகர மக்களின் தேவைக்கும் வெகு தூரம்.

மேலும், இத்தகைய ஸ்தாபனங்கள் கட்டிக் கொடுக்கும் வீடுகள் உண்மையில் சொற்ப வருமானக்காரர்களுக்குப் பயன்படக் கூடியவையன்று. இதைவிட, ரஸ்தா, தண்ணீர் ஸப்ளை, விளக்கு வசதி முதலிய சௌகரியங்களுடன் கூடிய மனைகள் கூடியவரை குறைந்த விலையில் அவர்களுக்குக் கிடைக்கச் செய்து, அவர்கள் தங்களுக்குக் கட்டுப்படியாகக் கூடிய செலவில் சிறு வீடுகள் கட்டிக்கொள்ள விடுவது அவர்களுக்குப் பேருபகாரமாயிருக்கும். ஆனால், நகரங்களில் மனைகள் விலை விசேஷமாக உயர்ந்து விட்டது. இந்நிலையில், சர்க்கார் கிடைக்கக்கூடிய மனைகளை ஆர்ஜிதம் செய்து, அவற்றை சொற்ப வருமானக்காரர்களுக்குக் கூடியவரை குறைந்த விலையில் பங்கிடலாம். இந்த யோசனையை மத்திய ஜாகை வசதி மந்திரியான ஸ்ரீ கே. ஸி. ரெட்டி ஒப்புக்கொண்டு, இந்த வகையில் சீக்கிரத்தில் ஒரு சட்டம் உருவாகும் என்று அறிவித்துள்ளார். வீடு கட்டுவோருக்குக் கட்டிட சாமான்கள் எளிதாயும், கூடியவரை மலிவாகவும் கிடைக்கச் சர்க்கார் வழி செய்ய வேண்டும்.

சேரிகளைப் பற்றியவரை, பிரச்னை இன்னும் மகத்தானது. அவற்றை அடியோடு ஒழித்து விட்டு, அங்கு வாழ்வோர் அனைவருக்கும் புதிய ஜாகை வசதி ஏற்படுத்திக் கொடுப்பதென்பது சாத்தியமில்லை. அவர்கள் தற்போதுள்ள இடங்களிலேயே கூடியவரை சுகாதார வசதிகளை அமைத்துக் கொடுப்பதுதான் அனுபவ சாத்தியம். சென்னை சேரிகள் சிலவற்றில் இந்த வகையிலேயே தற்போது அபிவிருத்தி வேலை நடந்து வருகிறது. சென்னை நகரத்தில் 331 சேரிகள் இருக்கின்றன. ஆனால், சென்னை சர்க்காரும், கார்ப்பொரேஷனுமாகச் சேர்ந்து செய்திருக்கும் முயற்சியால் இது வரை அனுகூலமடைந்துள்ள சேரிகள் சுமார் 40 தான். அருவருக்கத்தக்க இச்சேரிகள் சென்னையில் மட்டுந்தான் என்பதில்லை. பல தொழிற்சாலைகள் உள்ள மதுரை, திருச்சி, கோவை போன்ற பட்டணங்களிலும் சேரிகள் அதிகரித்து வருகின்றன. இவை அனைத்தையும் அபிவிருத்தி செய்யத் தங்களுக்கு இன்னும் கணிசமான பண உதவி வேண்டுமென இந்த ராஜ்ய சர்க்கார் விடுத்துள்ள கோரிக்கைக்கு மத்திய சர்க்கார் செவி சாய்ப்பரென்று எண்ணுகிறோம். உள்ள சேரிகளை அபிவிருத்தி செய்வதுடன், மேற்கொண்டு சேரிகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுத்துக்கொள்வதும் முக்கியம். சேரி வாழ்வோர் பலரும் கூலி வேலையை நாடிப் பட்டணங்களுக்கு வந்து, சரியான ஜாகை வசதி இல்லாமல் ஆங்காங்குள்ள திறந்த வெளிகளில் குடிசை போட்டுக்கொண்டவர்கள். இனி புதிய தொழிற்சாலைகள் பட்டணங்களுக்குள் அன்றி, அவற்றின் சுற்றுப்புறங்களில் அமையுமாயின், மேற்கொண்டு சேரிகள் ஏற்படாமல் தவிர்க்கலாம். பட்டணங்களுக்கும், சுற்றுப்புறங்களுக்கும் இடையே உள்ள பஸ், ரயில் வசதிகள் அதிகரிக்கப்படுவது பட்டணங்களில் ஜாகை நெருக்கடியைக் கணிசமாகத் தணிக்க இன்னொரு உருவான வழி.



சைப்ரஸில் கொந்தளிப்பு

மத்ய தரைக் கடலில் உள்ள சைப்ரஸ் தீவில் கொந்தளிப்பு மீண்டும் ஏற்பட்டுள்ளது. அத்தீவில் வாழும் கிரேக்கர்களுக்கும் துருக்கியர்களுக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து நிகோஸியா நகரில் (சைப்ரஸின் தலை நகர்) ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு, பிரிட்டிஷ் துருப்புகள் ரோந்து வருகின்றன. இரு வகுப்பினருக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பில் 12 பேர் பலியாயினர். 30 பேருக்கு மேல் காயமடைந்தனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. சைப்ரஸில் உள்ள ராணுவத்தைப் பலப்படுத்தப் பிரிட்டனிலிருந்து படை அனுப்பப்படுகிறது. திருமண, கருமாதி ஊர்வலங்கள், சினிமாக் காட்சிகள் உள்பட எல்லாக் கூட்டங்களும் தடை செய்யப்பட்டுள்ளன.

சைப்ரஸ் தீவில் கிரேக்கர்களுக்கும் துருக்கியர்களுக்குமிடையே மனக் கசப்பு பல ஆண்டுகளாகவே இருந்து வருகிறது. சைப்ரஸ் தீவின் எதிர் காலம் பற்றிப் பிரிட்டன் திட்டம் தயாரித்துள்ளது. ஆனால், இதுவரை அத்திட்டத்தின் விவரங்கள் வெளியாகவில்லை. ஆர்ச் பிஷப் மக்காரியாஸுடன் கலந்தே சைப்ரஸ் பிரச்னைக்குப் பரிகாரம் காண முயல வேண்டுமென்று 'இயோகா' என்னும் கிரேக்க ஸ்தாபனம் வலியுறுத்தி வந்துள்ளது. சைப்ரஸ் பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் தொடர்ந்து இருக்க வேண்டும் அல்லது துண்டாடப்பட வேண்டும் என்பதே அத்தீவில் வாழும் துருக்கியர்களின் விருப்பம். கிரீஸுடன் இணைய வேண்டுமென்பது சைப்ரஸ்வாழ் கிரேக்கர்களின் கோரிக்கை. ஆகவேதான் சைப்ரஸில் இரு வகுப்பினர்களிடையே மோதல்கள் ஏற்பட்டு வருகின்றன.

சைப்ரஸ் தீவின் அரசியல் எதிர் காலம்பற்றிப் பிரிட்டன் தயாரித்துள்ள திட்டம் இனியும் ரகசியமாக உள்ள போதிலும், திட்டத்தின் விவரங்கள் கிரீஸ், துருக்கி ஆகிய இரு நாடுகளின் சர்க்கார்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டு விட்டதாக கூறப்படுகிறது. திட்டம் ஒரு சாராரையும் திருப்திப்படுத்துவதாக இல்லை என்றும் கூறப்படுகிறது. திட்டம் வெளியானதும் கலவரம் மேலும் பரவும் என்றே அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர். தீவைக் கிரேக்கர்கள், துருக்கியரிடை துண்டு போடப்படும் எத்திட்டத்தையும் எதிர்க்க வேண்டுமென்பதில் கிரேக்கர்களிடையே ஒற்றுமை ஏற்பட்டுள்ளது. துண்டாடுவதைத் தவிர, வேறு எந்தத் திட்டமானாலும் எதிர்ப்பதென்று துருக்கியர்கள் கங்கணம் கட்டிக்கொண்டுள்ளனர்.

இதுவரை பிரிட்டனுக்கு அடங்கியிருந்த துருக்கியர்கள், இப்போது பிரிட்டனுக்கும் எதிராக வகுப்புவாதக் கலவரத்தைத் தூண்டிவிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கிரீஸ் நாட்டிற்கு அணு ஆயுதங்களை அமெரிக்கா சப்ளை செய்ய ஏற்பாடாகியுள்ளது. நேட்டோ ஒப்பந்தப்படி கிரீஸின் தற்காப்புக்காக இவை பயன்படுத்தப்படுமாம்.

ஸ்ரீ வி. சக்கரை செட்டியார் காலமானர்

தொழிலாளர் தலைவரும் மாஜி மேயருமான ஸ்ரீ வி. சக்கரை செட்டியார் ஜூன் 14-ந் தேதி மாரடைப்பினால் காலமானர்

இந்தியாவுக்கு மேலும் யு. எஸ். தானிய உதவி

இந்தியாவுக்கு மேலும் ஏழு லட்சம் டன் உணவு தான்யங்களை லகுவான நிபந்தனைகளின்பேரில் தந்து உதவ அமெரிக்கா முன் வந்துள்ளது. ஏற்கெனவே உள்ள ஒப்பந்தங்களுக்குப் புறம்பாக இவ்வுதவி அளிக்கப்படுகிறது. ஜூலை மாதம் இந்த உணவு ஏற்றுமதி செய்யப்படும் என்று தெரிகிறது. இதைத் தவிர அமெரிக்க உபரி உற்பத்தியின் சப்ளைக்கு மற்றொரு உடன்பாடு ஆகஸ்டு மாதத்தில் கையெழுத்தாகும்.

இறக்குமதிக் கட்டுப்பாடு இறுகுகிறது

பண்ட இறக்குமதி லைசென்ஸ்கள் வழங்குவதற்காக அடுத்த அரை ஆண்டு காலத்தின் முதல் மூன்று மாதங்களில் இறக்குமதி அளவு மிகவும் குறைக்கப்பட முடிவு செய்யப்பட்டுள்ளது. அத்யாவசியமான இனங்கள் தவிர மற்ற எந்த இறக்குமதியையும் பிரஸ்தாப காலத்தில் அனுமதிப்பதில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த மூன்று மாதங்களில் தேவைப்படும் கச்சாப் பொருள்களுக்காகத் தற்போது இறக்குமதியாகும் கச்சாப் பொருள்களில் மிச்சம் பிடித்து வைத்து, பிரஸ்தாப மூன்று மாதங்களில் உபயோகித்துக்கொள்ள வேண்டும் என்று கூறப்படுகிறது.

ராஜாஜி எச்சரிக்கை

பிரான்ஸில் ஏற்பட்டுள்ள ராணுவ ஆதிக்கம், இலங்கையில் சிங்களவரின் மொழி ஆதிக்க உணர்ச்சியால் ஏற்பட்டுள்ள கலவரம் ஆகியவை நமக்குப் படிப்பினைகள் என்று சமீபத்தில் ராஜாஜி சென்னையில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினர். பிரான்ஸில் அரசாங்கம் திறமையற்றதாகிவிட்டதன் காரணமாக ராணுவத்தின் கை ஓங்கி, டிகாலின் ஆட்சி ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் திறமை குன்றினால் எங்கும் இந்த நிலை ஏற்படுவது நிச்சயம் என்று அவர் விளக்கினர். இலங்கையில் சிங்களத்துடன் தமிழையும் ஆட்சி மொழியாக்கினல், குடி முழுகிவிடாது என்று ராஜாஜி குறிப்பிட்டு, இந்தியாவிலும் சிறுபான்மையினரின் மொழியான இந்தியை ஆட்சி மொழியாக்க முயற்சிக்கப்படுகிறதென்றும் சட்ட மூலமாகவோ, ரகசியமாகவோ இந்தி ஆட்சி மொழியாகத் திணிக்கப்பட்டால், இலங்கையில் ஏற்பட்டதுபோல மொழித் துவேஷம் இங்கும் தலைவிரித்தாடும் என்று எச்சரித்துள்ளார்.

மின்சார வெட்டு

நீர் மின்சாரப் பகுதிகளில் தொழிற்சாலைகளுக்கான மின்சார சப்ளை வெட்டு 50 சத விகிதத்திலிருந்து 75 சத விகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது. வீட்டு சப்ளைகளை இது பாதிக்காது. நீர் மின் விசை உற்பத்தி நிலையங்களில் நீர் மட்டம் குறைந்துவிட்டதே இவ்வெட்டுக்குக் காரணம். அடுத்த சில தினங்களில் மழை பெய்தால், இந்த வெட்டு குறைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஈ. வே. ரா. விடுதலை

ஆறு மாதச் சிறைத் தண்டனை பூர்த்தியடைந்து ஜூன் 13ந்தேதி காலை திராவிடக் கழகத் தலைவர் ஸ்ரீ ஈ. வே. ராமசாமி நாயக்கர், விடுதலை செய்யப்பட்டார். கடந்த சில மாதங்களாக அவர் ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தார். விடுதலையடைந்த அவரை, திராவிடக் கழகத்தினர் ஆஸ்பத்திரி வாயிலில் வரவேற்றனர். மாலையில் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் அவருக்குப் பெரிய வரவேற்பு நடத்தப்பட்டது. அதில் அவர் பேசுகையில், சாதி ஒழிப்புக்காக இடைவிடாது தாம் போராடப் போவதாயும் தமிழ் நாடு தனி நாடாகப் பிரிய வேண்டியதை உணர்த்த தமிழ்நாடு நீங்கலாக உள்ள இந்திய தேசப் படங்களைக் கொளுத்தும் இயக்கம் நடத்தப் போவதாயும் அறிவித்தார். முன்னதாக ஈ. வே. ரா. ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

தேவிகுளம் தீர்ப்பு

தேவிகுளம் தொகுதியிலிருந்து கேரள சட்ட சபைக்கு நடைபெற்ற இடைத் தேர்தலில் கம்யூனிஸ்டு அபேட்சகர் ஸ்ரீமதி ரோஸம்மா புன்னூஸே மீண்டும் ஜெயித்தார். அவருக்குக் காங்கிரஸ் அபேட்சகரான பி. கே. நாயரைவிட [illegible]000 ஓட்டுகள் அதிகமாகக் கிடைத்தன. சோஷலிஸ்டு ஆதரவுபெற்ற சுயேச்சை அபேட்சகர் ஸ்ரீ கே. எஸ். சுப்ரமணியமும், மற்றொரு சுயேச்சை அபேட்சகர் ஸ்ரீ டொமினிக்கும் ஜாமீனை இழந்தனர். சென்ற பொதுத் தேர்தலிலும் இந்த ஸ்தானம் ஸ்ரீமதி புன்னூஸுக்கே கிடைத்தது என்பதும் தேர்தல் தகராறு விசாரணைச் சபை தீர்ப்புக் காரணமாக அது ரத்தானதும் அனைவரும் அறிந்ததே.

இந்த இடைத் தேர்தல் விளைவாகக் கேரள அசெம்பிளியில் கம்யூனிஸ்டுகள் தொகை பழையபடி 65 ஆகிவிட்டது. (5 சுயேச்சைகளின் ஆதரவைச் சேர்த்து) காங்கிரஸ் கட்சிக்கு 45 ஸ்தானங்கள் உள்ளன.

ரயில் விபத்தில் 21 பேர் பலி

மே 21ந் தேதி காலை மேற்கு ரயில்வேயில் பம்பாயிலிருந்து 390 மைல் தூரத்தில் சாரமாஜ் ஸ்டேஷனில் எக்ஸ்பிரஸ் ஒன்று தடம்புரண்டு பெரும் விபத்துக்குள்ளாகியதில், 31 பேர் மாண்டனர். 100 பேர் காயமடைந்தனர். பாயிண்ட்ஸ் தவறுதலாகப் போட்டதாலே விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. ஸ்டேஷன் மாஸ்டரும் பாயிண்ட்ஸ்மேனும் சஸ்பெண்டு செய்யப்பட்டுள்ளனர்.

—கே. பி. எஸ்.

காற்றுவாக்கிலே..........

திருஷ்டிக் கோளாறு!

கொடுமையான வெயில் வாட்டியெடுக்கிறது. இருக்கிற தொல்லைகள் போதாதென்று இதனாலும் பெருத்த தலைவலி; திருஷ்டிக் கோளாறு!

ஆத்ம சோதனை! ஒற்றுமை! ஊருக்கெல்லாம் உபதேசம் செய்யும் உத்தம சீலர்கள் பேசிக்கொண்டே யிருக்கிறார்கள். வாய் சுளுக்கிக் கொள்ளாதது விந்தையே! கோடையில் கொளுத்தும் வெயில் மூளைக்கு ஆபத்தல்லவா? குருட்டுத்தனமாகத் திட்டங்கள் தீட்டுகின்றனர். ஆட்சி முதல்வரும், கட்சித் தலைவரும் அடிக்கடிப் புத்தி சொல்லியென்ன? சொல்லச் சொல்லப் பரமார்த்த சிஷ்யர்களின் நடத்தை தலைகீழாக மாறி வருகிறது. சொன்ன பேச்சைக் கேட்டு விட்டால்தான் நாடு உருப்பட்டு விடுமே? அந்த மாதிரி தப்புத் தண்டா வழிக்கெல்லாம் போவதேயில்லை நமது காங்கிரஸ் அன்பர்கள்!

குருவை வெட்டிக் கொன்முன் கோரக்பூர் சீடன். மட்டந் தட்டி உயிரோடு சமாதி வைக்கின்றனர் காந்தி பக்தர்கள். ஸ்தாபனத்தை வலுப்படுத்தப் பத்தொன்பது அம்சத் திட்டம் தீட்டுகிறார் தலைவர். காங்கிரஸ்காரர்களிடை சண்டை, சச்சரவு, பிளவு கூடாது என்று வற்புறுத்துகிறார். சொல்லி வாய் மூடவில்லை. ஆந்திர காங்கிரஸில் மீண்டும் கோஷ்டிச் சண்டை; நிர்வாகக் குழுவினர் நால்வர் ராஜிநாமா. வாய் கிழியப் பேசுவது ஜனநாயகம். பொன்னான இதயம் படைத்தவர்களுக்குச் சுயநலம், பொதுநலம் இடையே பாரபட்சம் பாராட்டத் தெரிவதில்லை! மேலிடமே தலையிட்டு ஒட்டுப் போட்டால்தான் என்ன? பொத்தல்கள் அதிகரிக்கின்றன. ஸ்தாபனத்தைச் சீர்குலைக்க ஏதோ எதிர்க் கட்சிகள் சிரமப்படுவதாக எண்ணி மயங்குவானேன்?

எங்கு திரும்பினாலும் சுய ரூபத்தைக் காட்டுகின்றனர். போலி ஆசாமிகளையெல்லாம் சேர்த்துக் காங்கிரஸ் உறுப்பினர் ஜாபிதா தயாரிக்கப்படுவதாக மத்திய மந்திரி வருந்துகிறார். இனம் இனத்தோடுதானே சேரும்! ராஜ்ய மந்திரியொருவரே ஒரு கொலைக்குப் பொறுப்பாளி என்று உ. பி.யில் காங்கிரஸ் கமிட்டி குற்றச்சாட்டு; கோஷ்டி மனப்பான்மை செய்யும் விபரீதம், தடி, கம்பு, கத்திகள் கொண்டு மந்திரிமீது தாக்குதல். அசாதாரணமான சிக்கல் நிலை. நல்ல லட்சணம்! ஒற்றுமையின் வழி, செயலாற்றும் வழி, சகல முட்டுக்கட்டைகளையும் தகர்த்துக் கஷ்டங்களையும் சமாளித்து, நிச்சயம் வெற்றி பெறும் வழி புத்திக்கு எட்டினாலும் சித்தியாகாததில் வியப்பென்ன?

ஆசைக்கோர் அளவில்லை. அரசியல் துறவு பூண்டு சர்வோதய இயக்கத்தில் ஐக்கியமாகியும் ஆசை விடவில்லை. இந்தியாவில் பெரிய அவசர நிலை ஏற்பட்டு, மக்கள் அனைவரும் விரும்பி அழைத்தால், பதவியேற்று நாட்டுக்குத் தலைமை தாங்கத் தயாராம்! பிரிட்டிஷ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் ஜெயப்பிரகாஷ் நாராயணன் அறிவித்து விட்டார். சபலத்தைச் சொல்லிவிட்டார். அரைக் கிணறு தாண்டியாகிவிட்டது; ஐம்பது சதவிகிதம் வெற்றிதானே!

ஃ ஃ ஃ

எங்கும் ஊழல் மயம். எல்லோருக்கும் பாடம் சொல்லிக் கொடுக்கும் கல்வித் துறை அதிகாரிகளும் பொது விதிக்கு விலக்கல்ல. பரீட்சை எழுதாமலேயே பம்பாய் மாணவனொருவன் பாஸ்! ஜுரம் வந்ததால் பையன் பரீட்சைக்கு ஆஜராகவில்லை என்று தெரிந்திருந்தும் தாராளம்! பையனுக்குப் பேரதிர்ச்சி; பெற்றோர்களுக்கும் பிரமிப்பு. சுத்த அப்பாவிகள்! சும்மாயிருக்கக் கூடாதோ? தவறைச் சுட்டிக் காட்டினார்களாம். பட்டம், பதவி பெற நேர்வழியா லாயக்கு? புதுக் காங்கிரஸ்காரர்களைக் கேட்கக் கூடாதோ?

ஃ ஃ ஃ

நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து(?) வரும் நமது அபிவிருத்தித் திட்டங்களால் நாட்டில் வேலை வாய்ப்புகள் ஒரேயடியாகப் பெருகிவிட்டன அல்லவா? வடக்குப் பகுதி ரயில்வேயில் காலியான ஒருசில குமாஸ்தா வேலைகளுக்கு நாற்பதாயிரம் பேர் மனுச் செய்துகொண்டனர். விஷயம் தெரியாதவர்கள். பிச்சையெடுக்கும் தொழிலுக்கே நல்ல எதிர்காலம் உள்ளது; முதலீடு எதுவு மில்லாமல் நல்ல வருமானம் கொடுக்கும் தொழில் அதுவே என்பதை அவர்கள் அறிந்திருந்தால், அவதிப்பட்டிருப்பார்களா? 15 வயது குஜராத்தி சிறுவனுக்கிருந்த மூளை அவர்களுக்கு இல்லையே? ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்று நம் பெரியவர்கள் சும்மாவா சொன்னர்கள்?

—அரட்டை

அது திருத்துறைப்பூண்டி ஜங்ஷன். ஆலயங்களில் நடைபெறும் மூன்று கால பூஜைகளைப்போல இங்கே மூன்று காலங்களிலும் மூன்று வண்டிகளும் சந்தித்துக் கொள்ளும். அந்த நேரம் போக மற்ற வேளைகளில் சிற்றுண்டிச்சாலைக்கு உணவருந்த வந்து போவோரைத் தவிர, ஜனக் கூட்டமே இருக்காது! ஸ்டேஷன் மாஸ்டர் அறையை மைய முகப்பாக வைத்துக்கொண்டு, அதன் இருபுறத்தே இரு பெரிய வாதாமரங்கள்! உள்ளே வரும் பாதையை ஒட்டி மரப் பலகைகளை செல்பாக்கி மணலி ஐயர் வைத்திருக்கும் ஒரு புத்தகக்கடை! அதன் பக்கத்தில் காங்கிக் கூலிகளின் சாமான்களை வைத்துக் கொள்ள இரு பெரிய மரப் பெட்டிகள், வருவோர் உட்காரச் சௌகரியமாக இருக்கும். அதன் கோடியில்தான் சிற்றுண்டிச்சாலையும்! அப்புறம் ஒரு இருபத்தைந்து அடிக்கு பிளாட்பாரம் நீண்ட பள்ளத்தில் நின்றுவிடும். பின்புறம் வயல்வெளிகள்! அதையொட்டி மெயின் லைன் மூன்றைத் தாண்டியதும் கூட்ஸ் யார்ட் என்றழைக்கப்படும் தகரக் கொட்டகை. அதன் புறத்தே ஓடாமல் நின்று போன ஒரு பழைய கோச்சின் சக்கரங்களைப் பிடுங்கி எறிந்துவிட்டு, நிலையாகக் கீழே பொருத்தி, அதன் மேல் பெரிய உருவில் மூவர்ணக் கொடியை வண்ணமாகத் தீட்டி 'டிக்கெட் பரிசோதகர்கள்' அறையாக நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதன் தெற்குப் பக்கங்களில் சாரிசாரியாக நிலக்கரிக் குவியல்கள் படுத்துறங்கும் வேழங்களை நினைப்பூட்டும். அந்தக் குவியல்களுக்கு அப்பால், அதன் உச்சியிலிருந்து களைத்துப் போன எஞ்ஜின்கள் சன்னமாகப் புகை மூச்சை விட்டவண்ணமிருக்கும். அர்த்தஜாம வேளை பூஜையைப்போல இரவு பத்து மணிக்குப் பிறகு திருமறைக்காடு செல்லும் வண்டி ஒன்றுமட்டும் தனியே கிளம்பும். அது வரை ராமாயி வாதாமரத்திலிருந்து பத்தடி தள்ளிக் குந்திக்கொண்டு தன் முன்னே சாக்கு ஒன்றை விரித்து வைத்து, அதன்மேல் நிலக்கடலைக் கூறுகளைப் பரப்பி வைத்திருப்பாள். வண்டி போன பிறகுதான் விற்றுமுதல் கணக்குப் பார்ப்பது வழக்கம்!

யௌவனம் நிறைந்து வழியும் பருவப் பாத்திரத்தைத் தன்னுள்ளே பெற்றிருந்தாள் அவள். வாளிப்பான உடல் கட்டிற்கு ஏற்ற தலைக்கொண்டை கொஞ்சம் சாய்ந்தே இருக்கும். அதைச் சுற்றிலும் ஒரு முழம் கதம்பம் பன்னிப்பன்னிச் சொகுசாகச் சுற்றப்பட்டிருக்கும். விழிகளிலிருந்து புறப்படும் ஒளிகள் எப்போதும் அவளுடைய புருபுருவென்றிருக்கும் தன்மையைக் காட்டும். எந்நேரமும் இதழ்க்கடைகளின் ஓரத்தில் புன்னகைக் கொடி படர்ந்த வண்ணமிருக்கும். எவருடனும் தானே வலியச் சென்று பேசும் குணம் பெற்றிராவிடினும், கடலை வாங்குவோரிடம் கன்னங்கள் குழிய, தன் அழகுச் சிரிப்பைக் காட்டிவிட்டு ஒரு கூறுக்கு இரு கூறுகத் தலையில் கட்டி விடுவாள். அதற்காக, அந்த அவளுடைய மோகனச் சிரிப்பைத் தவருகவோ அல்லது தன்னிடம் மயங்கி விட்டதாகவோ நினைத்துத் தலையைச் சொரிந்துகொண்டு குழையும் மைனர்களை எடுத்த எடுப்பிலேயே நல்ல சூடு கொடுத்தும் அனுப்பி விடுவாள்.

ஆயினும் போகும்பொழுதும், வரும் பொழுதும் தங்கள் திருட்டுப் பார்வையால் அவளை அப்படியே விழுங்கிக் கொண்டு போக ஆசைப்படும் நாகரீக உடையணிந்த நாட்டு இளவரசர்கள், எஞ்ஜினுக்குப் போட்டியாக, அதைப் போலக் கூவாமல் புகை ஊதிக்கொண்டு நேர்வழி இருந்தும் கள்ளப் பாதையில் வந்து, அவளைக் கடந்து செல்வார்கள். பொதுவாக அவள் ஜீவனில்லாது கிடந்த ஸ்டேஷனுக்கு உயிரளித்துக்கொண்டிருந்தாள் என்ருல், தினமும் ரயிலிலேயே தன் ஜீவனத்தைக் கழிக்கும் செல்லையா மாத்திரம் திருத்துறைப் பூண்டிச் சந்திப்பை அடைந்ததும் அவளிடம் கடலை வாங்கித் திங்காமலிருப்பானு? அவள் கையால் கொடுக்கும் கடலைப் பருப்பு அவிசலாக இருந்தாலும், அந்த முகத்தைப் பார்த்துக்கொண்டே சாப்பிடுவதில் அவனுக்கு அதுவும் அமுதாக இருந்தது.

செல்லையா வண்டியில் செல்லும் ஒரு பிரபல சோடாக் கம்பெனியின் சேல்ஸ்மேன். ஒரு கம்பார்ட்மெண்டில் பாதி அவனுக்குச் சொந்தம். ஓடிச் செல்லும் ரயிலில் பாய்ந்து ஏறுவது அவனுக்குக் குழந்தை விளையாட்டு! அன்று அவனுக்கு வண்டி மாற்றம் செய்யப்பட வேண்டிய நாள். மாயவரம் லயனை விட்டுத் திருமறைக்காடு போகும் வண்டிக்குச் செல்ல வேண்டும். ஸ்டேஷனில் இறங்கி உட்கார்ந்தான். முன்னல் கோபுரம்போலச் சோடா புட்டிகள் நிறைந்த மரப் பெட்டிகள் அடுக்கியிருந்தன! அதன் பக்கத்தில் இரண்டு பெட்டிகளைத் தனியே அடுக்கி, அதன்மேல் ஜம்மென்று உட்கார்ந்தான். பொழுதோ ஓடாமல் ஊர்ந்து சென்றது. சிற்றுண்டிச்சாலைக்குச் சாப்பிட வரும் கிராக்கிகளும் அநேகமாக வந்து போய்விட்டன. அவனுக்கு இருப்பாக இல்லை. பெட்டிக்கு மேலே தலையை நீட்டி எட்டிப் பார்த்தான். ராமாயியின் முதுகுப்புறம் தெரிந்தது. அடிக்கடி அவள் அசைவதால், சொகுஸான கொண்டையின் நுனி மயிர்கள் அவளுடைய முதுகின் நிழலோடு விளையாடுவது தெரிந்தது. மெள்ள பின்னே சென்று ஒரு கனைப்புக் கனைத்தான். அவள் திரும்பிப் பார்த்துவிட்டு, மறுபடியும் நீல விளக்கொளியில் குவிந்துகிடந்த நிலக்கரி மேட்டை இமைக்காமல் பார்க்கலுற்றாள்.

'ஏன் புள்ளே, இன்னைக்கு எம்புட்டு வியாபாரம் நடந்திருக்கும்? அவன் முன்னே வந்து நின்று, சம்பிரதாயப் பேச்சைத் துவக்கி விட்டான்.

'இன்னும் கணக்கு பார்க்கல்லே!'

'ஏன், இம்புட்டு நாழியாச்சே, நீ வூட்டுக்குப் போக வேணும்?'

'போகணும்!'

'கும்மிருட்டா இருக்கே, உனக்குப் பயமாக இருக்காதா?'

'வேதாரண்யம் வண்டி போகல்லே!'

'ஏன் புள்ளே, அதுக்கா காத்திருக்கணும், அந்த வண்டிக்குத்தான் கூட்டமே இருக்காதே?'

'இருந்தாலும் எப்பவாச்சும் ஒரு கிராக்கி மாட்டும்! ஆமாம்; இன்னிக்கு நீ ஊருக்குப் போவல்லையா?'

'வேதாரண்யம் வண்டிக்குப் போவணும்! ஒரு கூறு கடலை கொடு.'

அவன் ஒரு வெள்ளி இரண்டணு துட்டை விட்டெறிந்தான். அதற்குள் கொஞ்ச தூரத்திலே பூட்ஸ் ஒலி கேட்டது. ராமாயி சரேலெனக் கூடைக் கடலையை ஒரு சாக்கை விரித்து மூடினாள். செல்லையாவுக்கு இது விநோதமாக இருந்தது.. அவன் அவளுடைய செய்கைகளையே உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தான்.

பூட்ஸ்காரன் தாண்டிச் சென்றதும்,

'ஏன் புள்ளே கூடையை மூடிவச்சே? அவருகிட்டே உனக்கென்ன பயம்?' என்ருன்.

'என்னமோ புதுசா வந்த சட்டத்திலே இதுக்கும் வரி போடுவாங்கன்னு டேஷன் மாஸ்டர் ஐயா சொன்னுங்க. வரி ஆளுங்க இந்த மாதிரித் திடீர்னு வந்து சரி பாப்பாங்களாம். அதாம் மூடி வச்சேன்!'

அவன் தா தாவென்று துப்பினான்.

'ஏன் அவிசல் கடலையா?'

'ஆமாம்!'

'இந்தா'

பதிலாக நான்கு கடலைகளை அவள் அவன் கையில் போட்டாள்.

'ஆமாம், நீ இரண்டணு கொடுத்தேயில்லே?'

'ஆமாம்!'

'ஒரு கூறுதானே வாங்கிகிட்டே?'

'ஏன்? அதுக்குள்ளாற மறந்து போச்சா?'

'மறக்கல்லே. என்கிட்டே துட்டு காசயில்லே. உனக்கு பாக்கி ஒரணு தரவேண்டுமே!'

'பரவாயில்லே, எனக்கு இன்னொரு கூறு கடலையைக் கொடுத்துடேன்.'

'வேணும், உடம்புக்கு ஒத்துக்காது, இது மணப்பாறை கடலே. ஒரு நிமிசம் இதைப் பாத்துக்க, பட்சணம் விக்கிற ஐயாகிட்ட மாத்தியாறேன்.'

'வேண்டாம் புள்ளே, எனக்குக் கடலையே கொடு; வண்டியிலே கொரிச்சுகிட்டே போவணுமே!

'அதோ இன்ஜினு பூட்டிட்டாங்களே! நீ போவல்லையா?'

சகுந்தலை

(வடுவூர் நாராயணன்)

'இதோ, இந்தப் பெட்டியெல்லாம் கொண்டு வைக்கணும். நீ ஒரு கை பிடித்துத் தூக்கி விடேன்.'

அவள் எழுந்திருந்து அவன் பின்னே சென்று தூக்கிவிட்டாள். குனிந்து மறுபடியும் நிமிர்ந்தபொழுது வலதுகால் மடித்துக்கொண்டது. பெட்டியோடு சாயப்போன அவன், சட்டென அவள் கையைப் பிடித்துக்கொண்டு சுதாரித்துக்கொண்டான். அவள் உதறிவிட்டாள்; ஜிவ்வென்று முகம் சிவந்துவிட்டது. அவன் சரிவில் இறங்கி, தண்டவாளத்தைக் கடந்து ரயில் பெட்டியில் சென்று, அங்கிருந்த கிழவனிடம் இறக்கி வைக்க வேண்டினான்.

ராமாயி தன் இடத்தில் போய் ரஸ்தாவை நோக்கி நின்றுகொண்டாள். வண்டி நின்றுகொண்டிருந்த லயனைப் பார்க்கவே பயமாக இருந்தது அவளுக்கு. அதற்காகத் திரும்பாமலும் இருக்க முடியவில்லை.

'உன்னைத்தான் புள்ளே!'

ராமாயி திரும்பிப் பார்த்தாள். செல்லையா மறுபடியும் அங்கு வந்தான்.

'என்னவாம்?' கோபமாக இருந்தாள் அவள்.

'நான் நாளைக்கு அக்கா வீடுவரை போய் வரேன். வர நேரமாகும். நீ கருக்கல்லே இங்கே வந்துவிடுவேயில்லே?'

'ஆமாம்!'

'அப்போ எனக்காக நாலு இட்லியும் ஒரு தோசையும் வாங்கி வைக்கிறியா?'

'உன் வண்டி வர நேரத்திலேதான் சாப்பாடே இங்கே கிடைக்குமே?'

'நான் திருவாரூர் போய்ச் சாப்பிட்டுக்கிறேன். இந்தா எட்டணு!'

'எட்டணு எதுக்கு? ஆறணு போருமே?'

'என்கிட்டே சில்லறையில்லே!'

'இந்தா நீ கொடுத்த இரண்டணு இருக்கு. வச்சுக்க!'

காசுகள் கைமாறின. செல்லையா சரிவில் இறங்கிவிட்டு மறுபடியும் வந்தான்.

'உன் பேரு என்ன புள்ளே?'

'ஏன்?'

'சும்மாச்சியும் கேட்கிறேன்!'

அவள் கொஞ்ச நேரம் தயங்கியபின் கீழே பார்த்துக்கொண்டே 'ராமாயி!' என்றாள்.

அதற்குள் வண்டி ஊதியது. ரயிலும் நகர்ந்தது.

'வண்டி நகர்ந்திடுச்சே!' அவள் திகிலோடு கூவினாள்.

'பரவாயில்லே' என்று பதிலுக்குக் கூறிக்கொண்டே அவன் துள்ளியோடினான். வேகமாக ஊர்ந்து செல்லும் ரயிலில் அவன் தாவி ஏறிச் செல்லும் லாகவத்தை அவள் வாய் திறந்தபடிப் பார்த்துக்கொண்டேயிருந்தாள்.

வண்டி கண்களுக்கு மறைந்ததும் சட்டென அவளுக்கு ஒன்று தோன்றியது. அதைச் செய்ய மறந்து விட்டோமே என்று அங்கலாய்த்தாள். 'அவன் பேரு என்ன, தெரியல்லையே!' என்ற எண்ணம் அவளைக் குடைந்தெடுத்தது.

அவுட்டரில் அலறிக்கொண்டிருந்தது வேதாரண்யம் வண்டி. காரைக்குடி வண்டிக்கு முதலிடம் கொடுத்து, உள்ளே வரவிட்டனர். அவுட்டரில் இருக்கும் வண்டியைப் பார்த்ததும் ராமாயிக்குக் கைகள் அரித்தன. உன்னிப்பாக நேற்று அவன் தொட்டுவிட்டுப் போன கைகள்! வெறிக்க வெறிக்க தூரத்தில் புகையைக் கக்கிக் கொண்டிருக்கும் இன்ஜினைப் பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

'ஏ, ராமாயி! ரெண்டு கூறு கடலை கொடு.'

குரல் உலுப்பி விட்டது அவளை. மருட்சியோடு முதன்முதலாக அன்று வந்த கிராக்கியைப் பார்த்தாள். அவன் பள்ளி மாணவன். பள்ளி ஆரம்பித்து நேரமாயிருப்பினும் ராமாயி கொடுக்கும் கடலையை வாங்கிக்கொண்டு, சலனத்தோடு செல்ல வேண்டிய சபலம் அவனுக்கு.

காசை விட்டெறிந்துவிட்டு நடந்து போன அவனை 'இந்தாய்யா! உன் காசு. இந்தக் காசு செல்லாது, வேறே கொடு!' என்றாள். பையன் பையைத் தடவினான். உதட்டைப் பிதுக்கி 'வேறே இல்லேயே, சாயங்காலம் வரும்போது கொண்டு வரேன்' என்றான். ராமாயி அவனைப் போக விட்டாள். தினம் தினம் பார்த்த முகம் அது. அடுத்தாற்போல 'அக்கா' என்ற குரல் அழைத்தது அவளை. ஓரணுவைக் கொடுத்துத் தன் மிஸ்கி பெருங்காய டப்பாவில் ஒரு குத்துக் கடலையை அவசர அவசரமாக அள்ளிப் போட்டுக் கொண்டாள் ஒரு மாணவி. இந்தப் பேரம் முடிவதற்குள் வேதாரண்யம் வண்டி உள்ளே வந்து நின்றது.

ராமாயியின் பார்வை அலைந்தது. தீட்சண்யமான அது, ஒரு நொடிக்குள் பிளாட்பாரத்தின் இரு கோடிகளையும் அளந்துவிட்டது. வந்தவர் அத்தனை பேரும் இறங்கி விட்டனர். திக்திக்கென்று அடித்துக்கொண்டது அவளுக்கு.

கால் மணி கழித்துச் செல்லையா வந்தான்.

'சீக்கிரம் கொடு ராமாயி. நான் போகணும்!' வந்தவன் அவசரப்பட்டான்.

'இந்நேரமுட்டும் எங்கிட்டுந்தயாம்?'

'ஒரு கிராக்கி என்னை ஏய்க்கப் பார்த்தான். ஒழுங்கா கொடுத்துட்டு வந்தேன்.'

ராமாயியின் கண்கள் அகன்றன. அகன்று அவனுடைய பரந்த மார்பில் பதிந்தன. பொட்டணத்தோடு மூன்று இரண்டணுக்களை வைத்துக் கொடுத்தாள் அவள்.

'ஏன், காசு உனக்கு வேணுமா? இனுமாக உனக்கு இட்லி யார் கொடுப்பா?'

'நான் விலைக்கு வாங்கல்லே!'

'வீட்டிலேந்து கொண்டாந்தயா? வீட்டுக்காரரு கோவிச்சுக்கல்லே?'

'எங்க வீட்டிலே...எங்க வீட்டிலே...'

செல்லையாவிற்கு ஒரு தரம் மனம் அமுக்கி விடப்பட்ட ரப்பர் பந்துபோலத்

மத்ய அரசாங்கப் போக்குவரத்து இலாகாவைச் சேர்ந்த சிர. ஆர். எஸ். பாஷ்யத்திற்கும், ராக்பெல்லர் ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஸ்ரீ ரங்கஸ்வாமியின் புதல்வர் குமாரி சௌ சுபத்ராவிற்கும் சமீபத்தில் தலைநகரில் திருமணம் நடந்தது.



ஸ்ரீ வி. கே. ஸ்ரீராமுலு சென்னை பிராந்தீய அச்சியல் பள்ளியின் பிரின்ஸிபாலாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

துள்ளியது. ராமாயியின் கண்கள் கால்களால் கீறிடும் கோட்டை வட்டமிட்டன.

'சரி. நான் வரேன், வண்டி போயிடும். நாளைக்குக் கடைசி வண்டியிலே வரேன். அதுவரையிலும் இருப்பயில்லே?'

அவள் மௌனமாக இருந்தாள்.

'என்ன புள்ளே சொல்லு?'

'இருக்கேன்.'

அவன் டக்கென மடியிலிருந்து ஒரு பொட்டணத்தை எடுத்து, அவள் கூடையில் போட்டுவிட்டுத் தலை தெறிக்க ஓடினான். ஓடுகிற வண்டியில் ஏறத்தான்!

சிறிது நேரம் ராமாயி பொட்டணத்தைத் தொடாமலே இருந்தாள். ஆனால், அதனுள் இருப்பதைப் பார்க்க அவளுக்கு ஆவலாக இருந்தது. நடுங்கும் கைகளை நிதானப்படுத்திப் பிரித்தபொழுது நெடி வாசனையோடு காட்டிலே மலர்ந்த மனோரஞ்சித மலர் மாலை இரண்டு முழத்திலிருந்தது. அவளுக்கு உவகை பொங்கியது. ஆசையோடு ஒருதரம் நுகர்ந்துவிட்டுப் பின், தலையில் சூட்டிக் கொண்டாள்.

பின்னாலிருந்து எவரோ 'உஸ்' என்று வாசனையை உறிஞ்சும் அரவம் கேட்டது. திகிலோடு திரும்பினாள். செல்லையா போல யாரோ நிற்பதாக அவளுக்குப் பட்டது.

'என்னங்க இது?' ஆசையோடு கடிந்து கொள்பவளைப்போலக் கூவிக்கொண்டே முழுதும் திரும்பியபொழுது அங்கே ஒருவருமில்லே! வெறும் பிரமை! அவளுக்கே இந்த மாற்றம் சிரிப்பாக இருந்தது. களுக்கென்று தனக்குள்ளே சிரித்தபொழுது ஒரு புதிய ஒளி அவள் மேனி முழுவதும் படர்ந்தது.

மாயவரம் வண்டி முதலில் வந்தது. பின் பத்து நிமிஷத்திற்கெல்லாம் வேதாரண்யம் வண்டியும் வந்துவிட்டது. வரவேண்டியது திருவாரூர் வண்டிதான். வந்திறங்கிய ஜனக் கும்பல் அவசர அவசரமாகச் சாப்பாட்டுக் கடையை முடித்துக்கொண்டு வண்டியிலமர்ந்து விட்டது. ஓரிரு காளை மட்டும் ஸ்டேஷனுக்கு வெளியேயிருந்த வெற்றிலைப் பாக்குக் கடையில் இரண்டு சிகரெட்டுகளை வாங்கிப் பற்ற வைத்து, பிளாட்பாரத்தின் கோடியில் வந்து நின்று, ராமாயியைப் பார்த்துக்கொண்டு புகை விட்டனர். அதில் கொஞ்சம் தைரியசாலி குறும்பாகவும் சிரித்தான். அவள் பற்களைக் கடித்தாள்.

வந்தவர்கள் நகரவில்லை. அவள் அவர்களைப் பார்த்துக் கேலியோடு ஒருதரம் காறி உமிழ்ந்தாள். அப்புறம் அங்கே நிற்க அவர்களுக்குத் தைரியமேது? ராமாயி வடக்கே நோக்கினாள்! அந்தப் பக்கமாகத்தான் திருவாரூர் வண்டி வரும்.

மாயவரம் வண்டி புறப்பட்டுப் போய் விட்டது. ஒரு மாதிரியாக ஆரவாரம் கொஞ்சம் ஓய்ந்தது. அப்பொழுது பாயிண்ட்ஸ்மேன் கையில் சிவப்பு வர்ண ஒளியுள்ள விளக்கோடு அங்கே வந்தான்.

'அண்ணே! வடக்கு வண்டி இன்னிக்கு லேட்டா?'

'ஆமாம் தங்கச்சி!'

'இந்த வண்டி போறதுக்குள்ளார வந்துடுமா?'

'வரும்' என்று சொல்லிக்கொண்டே, பல்லிடுக்கில் சுண்டு விரலையும், கட்டை விரலையும் வில் வடிவமாகப் பொருத்தி 'ஹொய்' என்று சீட்டி அடித்தான்.

தூரத்தே வண்டியின் வெளிச்சம் தெரிந்தது. ராமாயி கடையைக் கட்ட ஆரம்பித்தாள். வேதாரண்யம் வண்டிக்கும் என்ஜின் பூட்டியாகி விட்டது.

குழந்தையான கண்ணன், வேண்டப்பட்டபொழுது சிறிது சிறிதாக விஸ்வரூப தரிசனக் காட்சி தருவதுபோல மங்கலான வெளிச்சம் சற்று நேரத்தில் கண்ணைப் பறித்திடும் ஒளியாகி, அதன் உருவமாகி வந்து நின்றது.

அன்றைக்கெனக் கூட்டமே இல்லை. கடைசிப் பெட்டியிலிருந்து செல்லையா இறங்கினான். ராமாயிக்குப் படபடப்பு அதிகமாகியது. கரங்கள் வேலைகளை ஒழுங்காகச் செய்ய ஆரம்பித்தன. ஆனால், செல்லையாவின் மண்டையில் துல்லியமான துணிக்கட்டைக் கண்டதும், அவளுக்குப் பகீரென்றது. அந்த அனுதாப உணர்ச்சி ஏன்தான் பிறக்கிறதோ? உரிமைக்காரனைப்போல அவனைப்பற்றி எண்ண மறுத்தாலும் அவனுக்காக அவளால் பச்சாத்தாபப்பட முடியாமலிருக்கவில்லை.

நெற்றிக்குச் சற்று மேலே பஞ்சையும் தாண்டிக்கொண்டு குருதியின் செம்மை படர்ந்திருந்தது. அவள் உடலில் நடுக்கமிருந்தது.

'என்ன, தலையிலே கட்டு?'

'மோஷன்லே ஏறப் போறபோது இடிச்சுக்கிட்டேன்.'

'அடி பலமோ?'

'அப்படி ஒண்ணுமில்லே!'

'இன்னிக்கும் வேதாரண்யம் போவணுமா?'

'இன்னிக்கு இங்கதான் இறங்கணும்.'

'எங்க தங்குவே?'

'அந்த மாடிப் படிக்கட்டிலே!'

'காத்து வாடையா வீசுதே? உன் நோவுக்கு ஒத்து வராதே!'

மண வாழ்க்கையின் சந்தோஷங்களை அனுபவியுங்கள்

கிழத்தனத்தைப் போக்கி வாலிபம் பெறுங்கள்!

உடலில் உள்ள சுரப்பிகள் ஏதாவது பழுதடைந்தால் அகாலத்தில் முதுமையை அடைந்துவிடுமின் குறைவுகளினால் நரம்பு தளர்ச்சி, மூலம், சிறு நீர் தொந்தரவுகள், எதிலும் விருப்பமின்மை, மேக வியாதிகள் போன்ற சிக்கல்கள் நிறைந்ததும், கொடியதுமான வியாதிகள் ஏற்படலாம். நரம்புத் தளர்ச்சி போன்றதும், ஆண்-பெண்களின் நீண்டநாள் ரகசிய வியாதிகளான சக்திக்குறைவு இல்லற வாழ்க்கையில் வெறுப்பு ஆகியவைகளுக்காக இன்றே உலகப் பிரசித்திப்பெற்ற 25 வருஷ அனுபவமுள்ள (ரகசிய வியாதி நிபுணர்) டாக்டர் A. R. ராஜ்புத் அவர்களை வெட்கப்படாமல் நேரில் கலந்து ஆலோசியுங்கள். நரம்புத் தளர்ச்சி, ஆயாசம், மூலம், பௌத்திரம் போன்ற நோய்களை ஆப்பரேஷன் அல்லது இஞ்சக்ஷன் இன்றி குணப்படுத்தப்படும். கவனிப்பு:- நரம்புத் தளர்ச்சிக்கு பிரத்தியேக ஸ்பெஷல் மின்சார இயந்திரத்தால் குணப்படுத்தப்படும். எல்லா வியாதிகளும் ரகசியமாய் வைக்கப்படும்.

பார்க்கும் நேரம்: காலை 8 மணி முதல் பகல் 1 மணி வரை.
மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை. ஞாயிறும் உண்டு.

ராஜ்புத் டிஸ்பென்சரி, 13, எல்லிஸ் ரோடு.
(ரவுண்டாணு அருகில்) மவுண்ட் ரோடு, சென்னை-2.

'ஒண்ணும் பண்ணாது!'

அவளுக்கு அவனைத் தன்னோடு தன் வீட்டிற்குக் கூட்டிச் செல்ல வேண்டுமென்றிருந்தது. உடனேயே எப்படி, தானே கூப்பிடுவது?

'சாப்பிட்டாச்சா?'

'ஆச்சு.'

'நான் போகலாமா?'

'நான் சொன்னதுக்காகத்தானே இத்தினி நேரம் காத்துக்கிட்டு இருந்தே!'

'இல்லே ஒண்ணும், வேதாரணியம் வண்டி போவல்லேயே?'

'சரி! போவறதின்னு போ!'

'நான் நேத்திக்கே...'

'என்ன ராமாயி?'

'உன் பேரு என்ன?'

'அதுவா? செல்லேயா!'

'நல்ல பேரா இருக்கு!'

'நான் கேட்டால் கோவிச்சுக்குவயா?'

'என்ன அப்படிக் கேட்கப் போறே?'

'எனக்குத் தலே நோவு அதிகமா இருக்கு! கொஞ்சம் சாண உருண்டை ஒத்திப் போட்டா நல்லதில்லேயா?'

'ஆமாம்.'

'உங்க வீட்டிலே யாராச்சும், கிழவி இருக்கா?'

'ஒரு குமரிதான் இருக்கு!'

'உன் தங்கச்சியா?'

'ராமாயிதான்!'

செல்லேயா சிரித்துக்கொண்டான்.

'சரி, வா வூட்டுக்கு.'

ராமாயி தயங்கினாள். அவளுக்கு ஒரு மாதிரியான பயமிருந்தது. நேற்றுதான் நெருக்கமாகப் பழக ஆரம்பித்தான். இன்று தன்னோடு தனியாக வீட்டுக்கு வருகிறேன் என்கிறானே!

'என்ன ராமாயி, உனக்கு இஷ்டமில்லேன்னு வேணும்!'

'......'

சுதேசமித்திரன், சென்னை - 2
அறிவிப்பு

1—6—58 முதல் கல்கத்தாவில் நம் மித்திரன் வாரப்பதிப்பை விற்பனை செய்யவும். சந்தாதாரர்களுக்கு பட்டுவாடா செய்யவும் கீழ்குறித்துள்ள விலாசதாரை எமது ஏஜண்டாக நியமித்துள்ளோம். அன்னாரிடம் சந்தா செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளுமாறு மித்திரன் அன்பர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஸ்ரீ R. விஸ்வநாதன்,
நியூஸ் ஏஜண்ட்,
27A, ராஜா பஸந்த் ராய் ரோடு,
கல்கத்தா.

சர்க்குலேஷன் மானேஜர்.

அவள் மனதில் சட்டென ஒன்று தோன்றியது. 'சரிங்க. இதோ இங்க இருங்க. இதோ ஓடியாறேன்!'

'எங்கே போறே?'

'அடாடா, போவச்ச இப்படிக் கேப்பாங்களா? இதோ ஓடியாறேன்!'

அவள் பரபரவென்று நடந்து ரயில்வே கேட்டைத் தாண்டிச் சென்று, கடைப் பக்கம் திரும்பினாள். செல்லேயா வாதாமரத்தடியில் வந்து நின்றுகொண்டான். அசதியாக இருந்தது. சாய்ந்தபடியே கொஞ்சம் கண்களை மூடினான்.

'போவளாமா?'

கூடையை இடுப்பு நிறைய வைத்துக்கொண்டு ராமாயி அவனை அழைத்தாள். அவன் திடுக்கிட்டு விழித்துக்கொண்டான்.

'நீ எப்போ வந்து கூடையை எடுத்தே?'

'நல்லா இருக்கு; நீ பாத்துக்கிற லட்சணம்! சரி சரி; வா!'

செல்லேயா முன்னே செல்ல, ராமாயி பின்னே சென்றாள். முள்ளியாற்றங்கரையோடு இருவரும் நடந்தனர். இரண்டு பர்லாங் தள்ளி மேட்டுத் தெருக் கோடியில் ஆற்றங் கரையிலேயே ஒரு குடிசைக்குள் இருவரும் நுழைந்தனர்.

'இதான் உன் வீடா?'

'ஆமாம்!'

அவன் தலையைப் பிடித்துக்கொண்டான்.

'உனக்கு வேதனையா இருந்தா, இந்தக் கட்டையிலே தலே வச்சுப் படுத்துக்க! இதோ கஞ்சி கொண்டு தரேன்.'

செல்லேயா படுத்துக்கொண்டான். அவள் பரபரவென்று ஓலையைச் சுருட்டி, அடுப்பில் வைத்துப் பற்ற வைத்தாள். கஞ்சி தயாராகியது. அதை அவன் கையிலே கொடுத்துவிட்டு, உடைந்து போன இரும்பு வாணலிச் சட்டியை ஜ்வாலே மேலே வைத்தாள். அதன் எதிரே குந்திட்டு உட்கார்ந்தபடியே,

'உங்க ஊரு எதுங்க?' என்றாள்.

'எல்லா ஊரும் என் ஊரு!'

'அப்படின்னா?'

'எனக்கு யாருமே கிடையாது!'

'அக்கா இருக்கான்னியே?'

செல்லேயா உதட்டைக் கடித்துக்கொண்டான்.

'அவள் ஏதோ தூரத்து உறவுமுறை!'

'இத்தனை நாளும் ஒண்டியாவா இருக்கே!'

'ஆமாம்.'

'எங்கே, எந்தப் பக்கம் வலிக்கிறது?'

'இங்கே சோத்துக்கைப் பக்கமா!'

அவள் துணியில் வைத்து நெற்றியைப் பிடித்து ஒத்தடம் வைத்தாள். அவளுக்கு ஏதோ புதியதாக ஒரு உணர்வு ஏற்பட்டது.

'ராமாயி!'

'என்னங்க?'

'நீ கடையிலே என்ன வாங்கியாந்தே?'

'ஒண்ணுமில்லே.'

'எங்கிட்டயா மறைக்கிறே?'

'ஒண்ணுமில்லேங்க.'

'பொய்'.

'வந்து...வந்து...'

'என்ன ராமாயி!'

'கொஞ்சம் எழுந்திருங்க!'

'ஏன்?'

'எழுந்திரிச்சு வந்தால்ல தெரியும்!'

செல்லேயா எழுந்தான். ராமாயி கூடையைத் திறந்து ஒரு பெரிய பூப் பொட்டணத்தை எடுத்தாள்.

'என்ன ராமாயி இது?'

'பூ!'

'எதுக்கு?'

'இந்தாங்க. இதன் தலேப்பை...'

செல்லேயா புரிந்துகொண்டான். மேலே செய்ய வேண்டியதை அவனே செய்துவிட்டான். அங்கிருந்த ஒரு கிழிந்து போன படத்தின் முன்பு ராமாயி அவனை வரித்துக்கொண்டாள்.

'என்னங்க கூவிடிச்சே! நீங்க வண்டிக்குப் போகணுமில்லே!'

'ஆமாம்.'

அவன் அவசர அவசரமாக எழுந்தான். கலைந்துபோன கிராப்பைத் தானே சரி செய்துகொண்டு,

'நான் வரேன் ராமாயி!' என்றான்.

'ராவைக்குத் திரும்பிடுவேயில்லே!'

'ஓ!'

ராமாயி அவனை அனுப்பிவிட்டு உள்ளே வந்தாள். அவளுக்கு ஏதோ ஒரு புதிய இன்ப ஊற்று உள்ளே பாய்வதாகத் தெரிந்தது. தனக்குத் தெரிந்த ஒரு சினிமாப் பாட்டை முணுமுணுத்தாள். அரை மணிக்குப் பிறகு கூடையோடு ஸ்டேஷனுக்குப் புறப்பட்டாள்.

அன்றிரவு எல்லா வண்டியும் போய் விட்டன. செல்லேயாவைக் காணோம். அரை மணி காத்திருந்தும் அவன் வருவதாகக் காணோம். அடிவயிற்றிலே அவளுக்குப் பீதியின் அலே எழுந்தது. அச்சத்தோடு வீட்டிற்குப் போனாள்.

மறுநாளும் காணோம். ஒவ்வொரு நாளாகச் செல்லேயா இல்லாமலேயே எல்லா வண்டியும் வந்து போயின. அன்று மறுபடியும் ஒரு சோடா புட்டியோடு புதியவன் ஒருத்தன் வந்தான். அவனிடம், 'ஏங்க, செல்லேயா இப்போ எங்கே இருக்கிறாரு?' என்றாள்.

'எனக்குத் தெரியாது தங்கச்சி!'

ராமாயிக்குக் கண்முன் உலகம் இருண்டது. அவன் ஊருகூடத் தெரியாது. ரயில் சிநேகத்தை அமரத்வமாக எண்ணி விட்டாள். சோம்பிய முகத்தோடு நடக்க முடியாமல் தள்ளாடியபடியே வீடு போய்ச் சேர்ந்தாள்.

அன்றைக்குப் பிறகு அவளை ஸ்டேஷனில் யாருமே பார்க்கவில்லை!

★

தலைநகரில் கலாசாரத் துறையில் பணி செய்துவரும் ஸ்தாபனங்களில் மேலும் ஒன்று அண்மையில் துவக்கி வைக்கப்பட்டது. தேசீய கலாசாரக் கழகம் என்ற அந்தப் புதிய ஸ்தாபனத்தை மத்ய அரசாங்கத்துத் தொழிலியல் இலாகா மந்திரி ஸ்ரீ எம். எம். ஷா, ஸாப்ரூ ஹவுஸில் ஆரம்பித்து வைத்தார். சாதாரண மக்களின் சுவைகளுக்கு ஏற்ற தரமான நிகழ்ச்சிகளை நடத்தி மகிழ்விப்பதற்கான இந்தக் கழகத்தை மந்திரி வரவேற்றார். வெறுமே உயர் வகுப்பினரைத் திருப்தி செய்வதற்காக அல்லாமல் பொதுமக்களுக்குச் சேவை செய்ய இந்தக் கழகம் முன் வந்திருப்பதை மந்திரி பாராட்டினார்.

கழகத்தின் தலைவர் ஸ்ரீ கே. கே. ஷங்கரா, பொதுமக்களுக்கு அறிவூட்டுவதாகவும் பொழுது போக்கிற்குப் பயன்படுவதாகவும் இருக்கவல்ல நாடகங்களையும் இசை நிகழ்ச்சிகளையும் நடத்துவதே புதிய கழகத்தின் நோக்கம் என்று கூறினார். துவக்க நாளன்று கதம்ப நிகழ்ச்சி ஒன்றை விமரிசையாக நடத்திக் காட்டினார்கள். சாஸ்திரீய சங்கீதமும் மெல்லிசையும் ஓரங்க நாடகமும் அதில் இடம் பெற்றிருந்தன.

ஃ ஃ ஃ

தலைநகரில் பணி செய்துவரும் தென்னிந்தியக் கலாசார சங்கத்தின் மாத சஞ்சிகை 'சங்கச் செய்தி' அதன் நான்காம் வயதை அடைந்திருக்கிறது. இலவசப் பத்திரிகை ஒன்றை, ஆர்வம் குன்றாமல் திறனுற நடத்தும் இந்தச் சங்கம், கரோல் பாகில் நல்ல தமிழ் நூல் நிலையமொன்றையும் வாசகசாலை ஒன்றையும் நன்றாக நடத்தி வருகிறது. தவிர, தமிழில் வெளியாகும் சிறந்த நூல்களையும் மலிவுப் பதிப்புகளையும் அப்போதைக்கப்போது தருவித்து விற்று வரவும் செய்கிறது. சங்கம் பல துறைகளிலும் தீவிரமாக ஈடுபட்டு, பல ஆண்டுகளாகச் சிறப்பான பணி செய்து வருவதற்கு மூல காரணம்—ஸ்ரீ வைத்தியநாதன்; அவரது ஆற்றலையும் செயல் திறனையுமே குறிப்பிட வேண்டும்.

ஃ ஃ ஃ

அருமையான கதாகாலட்சேப நிகழ்ச்சிகளைக் கேட்டு மகிழும் வாய்ப்பு தலைநகர் வாசிகளுக்கு, வெகு நாட்களுக்குப் பின் மீண்டும் கிடைத்தது. இனிய தமிழில் விதவிதமான கதைகளை உருக்கமாக எடுத்துச் சொல்லக் கேட்டார்கள். உயர் நாவன்மை, புராண இதிகாசங்களில் பாண்டித்யம், இசை ஞானம் எல்லாம் ஒருங்கே கொண்ட இளம் குமாரி ஒருத்தி தனது கைவரிசையைக் காட்டி, தில்லி ஆஸ்திகர்களின் பாராட்டுதலைப் பெற்றார். சித்தூரைச் சேர்ந்த கதா காலட்சேப ரத்ன குமாரி என். ஸரஸ்வதி கரோல்பாகில் ஐந்து நாட்கள் நிகழ்ச்சிகள் நடத்தினார்.

சீதா கல்யாணத்திலும் ராம நாம மகிமையிலும் கம்பனையும் வால்மீகியையும் இடையிடையே கேட்டோம். வியாக்யானங்களுக்கிடையே வள்ளுவனாரின் குறளையும் நெறி முறைகளையும் கேட்டோம். சுவை குன்றாமல் விஷயங்களை எடுத்துச் சொல்லும் பாணியும் இனிமையான சங்கீதமும் குமாரியின் சிறப்பியல்புகள். மற்றும் ஐயப்பன் வரலாறும் வள்ளி பரிணயமும் நந்தன் சரித்திரமும் சிறப்பானவை. கதா காலட்சேபம் என்ற நமது பழம் பெருங்கலை குன்றாமல் வளர்ந்து ஓங்க, இந்தக் காலத்தில் பல இளம் வயதினர் அத்துறையில் ஈடுபட்டிருப்பது வரவேற்கத் தக்கது. குமாரி சரஸ்வதி அத்தகையோரில் ஒருவர் என்று கூறலாம்.

ஆஸ்திகத் துறையில் சற்றும் சலியாமல், ஆர்வத்துடன் இடைவிடாத பணி செய்து வரும் தில்லி பஜனை சமாஜம், குமாரி ஸரஸ்வதியின் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்து ஊக்கமளித்ததைக் குறிப்பிட வேண்டும். நாட்டிய ரத்ன ஸ்ரீ முரளீதரன் மிருதங்கமும், ஸ்ரீ கே. பி. நாராயணன் ஹார்மோனியமும் வாசித்துச் சிறப்பித்தனர். கோடை காலம் தமிழர் ஜனத்தொகை குறைந்திருக்கும் காலம் என்பர்; அப்படியிருந்தும் இந்த நிகழ்ச்சிக்குத் தலைநகரின் நாலா பக்கங்களிலுமிருந்து அன்பர்கள் திரண்டு வந்து, குமாரியின் இனிய கதா காலட்சேப நிகழ்ச்சிகளைக் கேட்டு மகிழ்ந்து வாழ்த்தினார்கள்.

புது தில்லியில் ஆலயம் என்றதுமே முதலில் நினைவிற்கு வருவது இர்வின் வீதியில் எழுந்தருளியுள்ள ஹனுமான் மந்திர்தான். பரந்த தலைநகரின் மூலை முடுக்கிலுள்ள வெவ்வேறு வகையான மக்கட் கூட்டத்தையும் கவரும் சக்தி கொண்டது அந்த ஆலயம். தொன்மையான மூர்த்தியைக் கொண்ட இந்த ஆலயம், நாகரிகம் முதிர்ந்த கன்னாட் ப்ளேஸுக்கருகாமையில் அமைந்திருக்கிறது. சாதாரணமாகவே தினசரி ஏராளமான பக்தர்கள் வந்து வழிபடும் இந்த ஆலயத்தில், செவ்வாய்க்கிழமைதோறும், ஆலயப் பிராந்தியமே ஜன சமுத்திரமாக இருக்கும்; பெரிய திருவிழாக் காட்சியே காணலாம். அங்கங்கே கூடாரங்கள் எழும்பி நிற்கும். புஷ்பக் கடைகளும் மிட்டாய்க் கடைகளும், விளையாட்டுச் சாமான்கள் கடைகளும் நிரம்பியிருக்கும். ஆயிரக்கணக்கான பக்தர்கள் பூஜைத் த[illegible]களை ஏந்தியவண்ணம் வரிசை வரி[illegible]யாக நிற்கக் காணலாம்; ஹனுமான[illegible] காலடியில் வெள்ளி நாணயங்கள் ஏராளமாகக் குவிந்து கிடக்கும். இந்த விக்கிரஹம், சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று வேத கோஷங்கள், பஜனைகளுக்கிடையே வெகு விமரிசையாகப் பிரதிஷ்டை செய்விக்கப்பட்டது. லோக் சபாவின் சபாநாயகர் ஸ்ரீ எம். அனந்தசயனம் அய்யங்கார் முன்னிலையில், ஏராளமான பக்தர்கள் கூடியிருந்த சமயம் 'பிரதிஷ்டை' நிகழ்ச்சி, சம்பிரதாய பாணியில் சிறப்புற நடந்தேறிற்று. ஸ்ரீ ஆ. வெ. குப்புசாமியின் பஜனைகளும் விழா நிகழ்ச்சியில் இடம் பெற்றன.

★



சென்னையின் பிரபல பரதநாட்டிய வித்வான் ஸ்ரீ கே. என். தண்டாயுதபாணிப் பிள்ளையின் சகோதரரும், தில்லியின் பிரபல மிருதங்க வித்வானும், நடன ஆசிரியருமான சி. டீ. என். தக்ஷிணாமூர்த்திக்கும், சீர்காழி மரவாடியின் உரிமையாளர் ஸ்ரீ ஷண்முகம் பிள்ளையின் புதல்வி சௌ. ஜயலக்ஷ்மிக்கும் சமீபத்தில் மாயூரத்தில் திருவாளப்புத்தூரில் விமரிசையாக திருமணம் நடந்தேறியது. தில்லி, சென்னை மந்திரிகள், கலாபிமானிகள் முதலானோர் ஆசிச் செய்திகளும், அன்பளிப்புகளும் அனுப்பியிருந்தனர்.

இலங்கையில் ஏற்பட்ட மொழிக் கலவரம் இப்பொழுது ஒருவிதமாகக் கட்டுக்கடங்கியிருக்கிறது. அவசர காலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டு, ஊரடங்கும் சட்டமும் அமுலுக்கு வந்த பின்னர், அசம்பாவித சம்பவங்கள் ஏதும் நடைபெறவில்லையாயினும் மக்கள் மனதிலிருந்து பீதி உணர்ச்சி முற்றும் நீங்கிவிட்டதென்று கூற முடியாது. முக்கியமான சந்துகளிலெல்லாம் ராணுவப் பாராவிருப்பதனால் பகல் நேரங்களில் மக்கள் ஓரளவு தைரியமாக நடமாட முடிகிறது. அவசர கால நிலைமை இன்னும் எவ்வளவு காலம் நீடிக்குமென்று யாரும் ஜோதிடம் சொல்லுவதற்கில்லை. நாடெங்கும் பரிபூரண அமைதி நிலவி, வகுப்புக் குழப்பங்கள் மறுபடியும் கண்டிப்பாக ஏற்படமாட்டாதென்பது நிச்சயப்படும் வரையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தளர்த்தப்பட மாட்டாதென்று ஜனப் பிரதிநிதிகள் சபையில் பிரதம மந்திரி ஸ்ரீ பண்டாரநாயகா உறுதியுடன் அறிவித்திருக்கிறார்.

அவசர கால சட்டப் பிரகடனத்தைப் பற்றியும் பொதுவாகக் கலவர நிலைமையைப் பற்றியும் பார்லிமெண்டில் இரண்டு தினங்கள்வரையில் அந்தரங்கமாக விவாதம் நடைபெற்றது. பல அங்கத்தினர்களும் தங்கள் கருத்துக்களை வெளியிட்டார்கள். அரசாங்கத்தின் கண்டிப்பான நடவடிக்கைகள் 24 மணி நேரத்துக்கு முன்னதாக எடுக்கப்பட்டிருந்தால், எத்தனை சேதங்களைத் தடுத்திருக்கலாமென்று பொருள்படுமாறு எதிர்க் கட்சித் தலைவரான டாக்டர் என். எம். பெரைரா தெரிவித்தார். இன்றைய அவல நிலைமைக்கு அரசியல் ரீதியில் பரிகாரம் தேட முற்பட வேண்டுமென்று கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஸ்ரீ பீட்டர் கெனமன் வற்புறுத்தினர். வட்டமேஜை மகாநாடு ஒன்றை உடனே கூட்டி, மொழிப் பிரச்னைக்கு ஒரு முடிவு கட்ட வேண்டுமென்று முஸ்லிம் அங்கத்தினர் ஸர் சாஸிக் பரீத் சொன்னர். தடை செய்யப்பட்ட சமஷ்டிக் கட்சித் தலைவர்கள் பேசுகையில், நெருக்கடிக்கு அரசாங்கமே காரணமென்றார்கள். வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆயுதம் தாங்கிய புரட்சி நடப்பதாகக் கூறுவது வெறும் கற்பனை என்றும் அவர்கள் தெரிவித்தார்கள்.

விவாதத்துக்குப் பிரதம மந்திரி பதிலளித்தபொழுது, குழப்பத்துக்கு இரு தரப்பிலுமுள்ள தீவிரவாதிகளே காரணமென்றும் கட்டுப்பாடாகவும் பெரிய தோரணையிலும் கலகங்கள் விளைவிக்கப்பட்டிருப்பதைக் கவனிக்கையில், சக்திமிக்க ஒரு ஸ்தாபனம் மறைமுகமாக இயங்கி வருவதாய்ச் சந்தேகிக்க இடமிருக்கிறதென்றும் கூறினர். வகுப்பு வேற்றுமையில்லாமல் ஐக்கிய

இலங்கைக் கடிதம்

★

தேசீய சமுதாயத்தை வளர்ப்பதே அரசாங்கத்தின் உறுதியான இலட்சியமென்றும் இந்த இலட்சியத்தை அடைய இயன்றதையெல்லாம் செய்வோம் என்றும் கூறிவிட்டு, 'நெருப்பைத் தொட்டால் சுடும் என்பதைச் சுட்டுக்கொண்ட பிறகுதான் சிலருக்குத் தெரிந்து கொள்ள முடிகிறது. இப்பொழுது நாம் எல்லோரும் விரல்களைச் சுட்டுக்கொண்டு விட்டோம். இது நமக்கு ஒரு நல்ல படிப்பினையாக அமைய வேண்டும்' என்று பிரதமர் தெரிவித்தார்.

ஃ ஃ ஃ

கலவரங்களுக்குப் பயந்து கொழும்பில் அகதி முகாம்களில் தங்கியிருந்த சுமார் பத்தாயிரம் தமிழர்களும் இப்பொழுது யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு விட்டார்கள். அதேபோல யாழ்ப்பாணம் அகதி முகாம்களில் வைக்கப்பட்டிருந்த சுமார் 2000 சிங்களவர்கள் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டு, அவரவர்களுடைய இடங்களுக்கு அரசாங்கச் செலவில் அனுப்பி வைக்கப்பட்டுவிட்டனர். இந்த மகத்தான வேலையில் பொதுஜன சேவா உணர்ச்சியுடைய பலர் உதவி புரிந்தது பெரிதும் பாராட்டத் தகுந்தது.

பல வாரங்கள்வரையில் இலங்கை—இந்திய ரயில் போக்குவரத்து இல்லாமலிருந்து இவ்வாரம்தான் மறுபடியும் ஆரம்பமாகியிருக்கிறது. பாதுகாப்பை முன்னிட்டு இந்த ரயில் போக்குவரத்து இப்பொழுது பகலிலேயே நடக்கிறது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திரிகோணமலை, மன்னர் முதலிய பல தமிழ்ப் பகுதிகளுக்கும் அநேக தினங்களாக ரயில் போக்குவரத்துகள் தடைப்பட்டிருந்து, இவ்வாரம் மறுபடி ஆரம்பமாகியுள்ளது. தனுஷ்கோடியில் தேங்கிக் கிடக்கும் இரண்டு வார நில மார்க்கத் தபால்கள் இவ்வாரம் கொழும்புக்கு வந்து விநியோகிக்கப்படவிருக்கின்றன. ரயில் போக்குவரத்து தடைப்பட்டதினுல் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வரும் வாரப் பத்திரிகைகள், மாத சஞ்சிகைகள் ஆகியவை ஒன்றும் இரண்டு வாரங்களாக இங்கு வரவேயில்லை. அவையெல்லாம் சேர்ந்தாற்போல இவ்வாரம் இங்கு வந்து சேரும். அரசாங்க உத்தியோகஸ்தர்கள் வேலை நிறுத்தம், தபால் இலாகா பியூன்கள் வேலை நிறுத்தம் முதலான பல வேலை நிறுத்தங்களின் காரணமாகச் சென்ற நான்கைந்து மாதங்களாகவே நில மார்க்கத் தபால் போக்குவரத்துகள் ஒழுங்காக நடைபெருதது குறிப்பிடத் தகுந்தது.

ஃ ஃ ஃ

இலங்கை இந்திய வர்த்தக சங்கத்தின் தலைவராகப் பிரபல ஆடிட்டரும் சமூக ஊழியருமான ஸ்ரீ கே. எஸ்.வைத்தியநாத அய்யர் ஏகமனதாக இவ்வாரம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். சமீபத்தில் ஸ்ரீ வி. பி. ஏ. நாயர் காலமாகியதை முன்னிட்டு இந்திய வர்த்தக சங்கத்துக்கு ஒரு புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இலங்கையிலுள்ள பிராம்மண சமூகத்தின் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஸ்தாபனமாகிய ஸ்ரீ ராமகான சபைக்கு ஸ்ரீ வைத்தியநாத அய்யர் சென்ற பல வருடங்களாகத் தலைவராயிருந்து, சமயத் துறையில் அரும் பணியாற்றி வந்திருக்கிறார். இந்திய வர்த்தக சங்கத்தில் இந்திய வியாபாரிகள் மட்டுமல்ல; பாகிஸ்தானிகள் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்துகொண்ட இந்திய வம்சாவழியினர் முதலான பலரும் உண்டு. இந்தியப் பிரஜைகளுக்குப் பல மாதிரியான சோதனைகள் ஏற்பட்டிருக்கும் இத்தருணத்தில், இந்தியப் பிரஜையான திரு வைத்தியநாதய்யர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதை இந்திய வட்டாரங்கள் மிகுந்த திருப்தியுடன் வரவேற்கின்றன. இந்தியப் பிரஜைகளின் பல திறப்பட்ட பிரச்னைகளையும் ஆராய்ந்து இயன்றவரை அவர்களுக்குப் பணியாற்ற ஸ்ரீ வைத்தியநாத அய்யர் உறுதி பூண்டிருக்கிறார்.

—ரவி

இலங்கை இந்திய வர்த்தக சங்கத்தின் புதிய தலைவர் ஸ்ரீ வைத்தியநாத அய்யர்.



'நான் ஒரு செய்தி சொல்லுகிறேன், மன்னி! அதை அம்மாவிடம் சொல்லுகிறாயா?' என்று கொஞ்சலாகக் கேட்டாள் அனுசூயா...

'அதென்ன சேதி? இப்பொழுது நீ சாரதாவின் வீட்டிலிருந்துதானே வருகிறாய்? மாப்பிள்ளை எப்படி இருக்கிறார்?'

'மிக மிக நன்றாய் இருக்கிறார். அப்பப்பா! என்ன அழகு தெரியுமா...?'

'அப்படியா, அவ்வளவு அழகாய் இருக்கிறாரா?'

'ஆம், சொன்னால் நம்பமாட்டாய்; நீயும் பார்க்க வந்திருக்க வேண்டும்.'

'உன் அகத்துக்காரரைவிட அழகாய் இருக்கிறாரா?' என்று மன்னி சிரித்துக் கொண்டே, கேட்டாள்.

அனுசூயா முகத்தைச் சுளித்துக் கொண்டு, 'ஹூம்! அகத்துக்காரராம். கல்யாணம் ஆவதற்கு முன்னலேயே அகத்துக்காரர் என்கிறாயே! அவர் எங்கே, இவர் அழகு எங்கே?' என்றாள்.

மன்னி திடுக்கிட்டாள். தலைப் பின்னலை விட்டுவிட்டு, 'அதென்ன அனுசூயா, அப்படிச் சொல்லுகிறாய்? நாளைக்கோ, நாளன்றைக்கோ, அவர்கள் மஞ்சள் குங்குமம் கொடுத்து, நிச்சயதார்த்தம் நடத்த வரப் போகிறார்கள்! இன்னும் சந்தேகம் எதற்கு?' என்று அனுசூயாவைப் பார்த்துக் கேட்டாள்.

அனுசூயா முகத்தை ஒருபுறமாகத் திருப்பிக்கொண்டு, 'எனக்கு அந்தச் சம்பந்தம் இஷ்டமில்லை, மன்னி! அதைத்தான் நீ அம்மாவிடம் சொல்ல வேண்டும்' என்றாள்.

'என்னது! உனக்கு அந்தச் சம்பந்தம் இஷ்டம் இல்லையா? நிஜமாகவா! பெண் பார்க்க வந்தபோது, மாப்பிள்ளையைப் பிடித்திருக்கிறது' என்று சொன்னயே. இப்பொழுது பிடிக்கவில்லை என்று சொல்கிறாயே; ஏன் அப்படி!'

'என்னமோ, அப்பொழுது சொன்னேன். இப்பொழுது பிடிக்கவில்லை. இஷ்டம் இல்லாத இடத்தில் கல்யாணம் செய்துகொள்ளச் சொல்லுகிறாயா?'

'அப்படி யார் சொல்லுவார்கள்? ஏனோ உன் அபிப்பிராயம் மாறிவிட்டது!'

'ஆம்; அழகுள்ளவர்களை விட்டுவிட்டு, அழகில்லாதவர்களைச் செய்துகொள்ளச் சொன்னால்...?'

'யார் அந்த அழகன்?'

'சாரதாவைப் பார்க்க வந்த மாப்பிள்ளைதான். எவ்வளவு அழகு!'

'அழகாக இருந்தால்? அவன் சாரதாவையல்லவா பெண் பார்க்க வந்திருக்கிறான்; உன்னை அல்லவே?'

'அவர்கள் இன்னும் நிச்சயம் செய்யவில்லையே. நாமும் கேட்கலாமல்லவா!'

'அதுதானு சங்கதி? அழகாக இருந்தால் மட்டும் போதுமா? அதை நம்பித் தங்கமான இடத்தை விட்டு விடலாமா? பாலையத்துப் பையன் அழகில்லை என்று யார் சொல்ல முடியும்? நீதான் சொல்லுகிறாய்! பொன் விளையும் நிலபுலன்களும் கொட்டில் நிறைந்த மாடு கன்றுகளும் அவர்களுக்கு இருக்கின்றன. அந்த ராஜு மண்டிரி வரனுக்குக் குமாஸ்தா வேலை தவிர, வேறு என்ன இருக்கிறது? ஒன்றுக்கும் கதியில்லாத ராகவையா அந்தச் சம்பந்தம் பார்ப்பது சரிதான். நமக்கென்ன தலையெழுத்து! அழகு ஒன்றை மட்டும் பார்த்து விட்டு, நல்லது கெட்டதை யோசிக்காமல் சொல்கிறாய் நீ' என்று கொஞ்சம் கண்டித்தே மன்னி சொன்னாள்.

அதற்கு அனுசூயா, 'எனக்குத்தான் பத்து ஏக்கர் நிலம் கொடுக்கிறீர்களே; அவர்களுக்கு ஆஸ்தி இல்லாவிட்டால் என்ன?' என்று கேட்டாள்.

'பசையுள்ள இடத்துக்குப் போனல், உன்னுடைய சொத்தும் சேர்ந்து ஐசுவர்யம் விருத்தியாகும். அவர்கள் வீட்டுக்குப் போய் அந்தப் பிள்ளையைப் பார்த்து விட்டு வந்து, அவனே வேண்டுமென்று அர்த்தமில்லாமல் பிடிவாதம் செய்கிறாய். இவனைவிட அழகாக இன்னொருவன் வந்தால், அவனையே செய்துகொள்வேன் என்று சொல்வாய்போல் இருக்கிறது. இதெல்லாம் இருக்கட்டும். பாவம்! அந்த ராகவையா அலைந்து அலைந்து செத்துச் சுண்ணம்பாகி, கடைசியில் இந்த மாப்பிள்ளையைப் பிடித்திருக்கிறார். அதற்குப் போட்டியாக நாம் போனல் நன்று

யிருக்குமா? யோசித்துப் பார். உன்னையில் சாரதா உன்னைவிட அழகிதான் என்றாலும் நாம் கொடுக்கும் அளவுக்கு... அவர்களால் வரதட்சிணை கொடுக்க முடியாது. அதனால் அவர்கள் நம்மிடம் சம்பந்தம் செய்ய ஒப்புக்கொள்வார்கள் என்று வைத்துக்கொள். இதனால் பாளையத்து நல்ல சம்பந்தம் கைநழுவிப் போய் விடும். ராகவையாவுக்குப் போட்டியாக மேல் விழுந்ததாக ஆகும். என்ன சொல்லுகிறாய்?'

'என்னத்தைச் சொல்கிறது! நீ என்ன சொன்னாலும் என் அபிப்பிராயம் மாறாது. நாம் போட்டிக்குப் போகாவிட்டாலும் கணிசமாகப் பத்தாயிரம் ரூபாய்கூட வரதட்சிணை கிடைக்காத இடத்தில், பெண்ணின் அழகை மாத்திரம் பார்த்து, அவன் பண்ணிக்கொண்டு விடுவானா? அவன்மட்டும் அழகில் குறைச்சலா?' ஒருவருக்குப் பயந்து கொண்டு நமக்கு வேண்டியதை விட்டு விட முடியுமா? வரதட்சிணை கொடுக்க முடியாதவர்களுக்கு அவ்வளவு அழகான மாப்பிள்ளை வருவானா? சரிதான்; இந்த விஷயத்தை எப்படியாவது அம்மாவிடம் சொல்லிவிடு மன்னி' என்று கெஞ்சினாள் அனுசூயா.

'ஆகட்டும், கட்டாயம் சொல்லுகிறேன். இதில் எனக்கென்ன கஷ்டம்?' என்று சொல்லிக்கொண்டே போன மன்னி, மனசுக்குள்ளே சிரித்துக்கொண்டாள்.

ஃ ஃ ஃ

'பாளையத்தார் கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் வீட்டு ஆள் கொண்டு வந்தான்' என்று வயலிலிருந்து சாப்பிட வந்த பத்திரையா மனைவியிடம் சொன்னார்.

'என்ன எழுதியிருக்கிறார்கள்?' என்று கேட்டாள் அவர் மனைவி அன்னபூர்ணம்மா.

'நாளன்றைக்கு நாள் நன்றாயிருக்கிறதாம். நிச்சயதார்த்தத்திற்கு வருகிறார்களாம். நமக்கு ஒன்றும் தடையில்லையே என்று கேட்டிருக்கிறார்கள். உன்னைக் கேட்டுவிட்டுப் பதில் சொல்ல வேண்டும் என்று பேசாமல் இருந்து விட்டேன். சாயங்காலம் வீரன் மூலமாகப் பதில் அனுப்ப வேண்டும். கல்யாண மாசம் கடைசியாய் விட்டது; இரண்டு மூன்று முகூர்த்தங்களே இருக்கின்றன. மனசுக்குப் பிடித்த பிறகு, தாமதம் செய்வானேன் என்று கேட்டார் பத்திரையா. அன்னபூர்ணம்மா பதில் பேசவில்லை.

'ஏன் பேசமாட்டேன் என்கிறாய்?' என்று கேட்ட பத்திரையாவின் பார்வையே கேள்விக் குறியாக அமைந்தது. அவள் சற்றுத் தயங்கினாள். 'வந்து... வந்து' என்று குழறினாள்.

'என்ன வந்தும், போயும்? சட்டுப்புட்டென்று பதில் சொல்லாமல் என்னமோ இழுக்கிறாயே!' என்றார் அவர் சற்றுக் கோபத்துடன்.

'வாயைத் திறந்தால் உங்களிடம் பயமாயிருக்கிறது. சொல்லாவிட்டால் அவளுக்குப் பயப்பட வேண்டியிருக்கிறது. நடுவில் நான் அகப்பட்டுக் கொண்டு விழிக்கிறேன். கோபித்துக் கொள்ளாமல் சற்று நிதானமாகக் கேளுங்கள்.'

'சரிதான். விஷயம் என்ன என்பதைச் சொல்லு!'

'அனுசூயா பாளையத்துப் பிள்ளையைக் கலியாணம் பண்ணிக்கொள்ள மாட்டாளாம்.'

'என்னது? செய்துகொள்ள மாட்டாளா? ஏன்?'

'அவளுக்கு அந்தப் பிள்ளையைப் பிடிக்கவில்லையாம். ராகவையா வீட்டுச் சாரதாவைப் பார்க்க ராஜமண்டிரியிலிருந்து ஒரு பிள்ளை வந்திருந்தானே, அவனைத் தான் பண்ணிக் கொள்வாளாம். அப்புறம் உங்கள் இஷ்டம்.'

'ஊஹூம். இது வேறேயா? அவனுக்கு என்ன கொம்பு முளைத்து இருக்கிறதா? அன்று பாளையத்துப் பிள்ளையைப் பிடித்தது என்று சொன்னாளே! அதற்குள் இப்பொழுது என்ன வந்து விட்டது?'

'அதென்னமோ தெரியவில்லை. நாங்கள் சொல்லிப் பார்த்தும் கேட்கவில்லை. அவளுக்கு இஷ்டம் இல்லாத பிள்ளையைப் பண்ணி வைப்பதில் நமக்கு என்ன லாபம்? சாரதாவைப் பார்க்க வந்தவர்கள் ராஜமண்டிரிக்குத் திரும்பிப் போயிருப்பார்கள். அவர்கள் விலாசம் தெரிந்து கொண்டு, போய்ப் பார்த்து வாருங்கள். நடப்பது நடக்கட்டும்.'

'சரி; பாளையத்தாருக்கு என்ன பதில் எழுதுகிறது?'

'என்னத்தை எழுதுவது? அதுவரையிலும் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லிவிட்டு, ராஜமண்டிரி வரன் நிச்சயம் ஆகிவிட்டால், உள்ளதைச் சொல்லி விடுவது.'

'ராஜமண்டிரிக்காரர்களுக்கு ஆஸ்தி பாஸ்தி ஒன்றும் இல்லை என்று கேள்விப் பட்டேனே! அதை நம்பி நல்ல சம்பந்தத்தை எதற்காக விடவேண்டும்? அவளுடைய நன்மை தீமையில் நமக்கு அக்கறையில்லையா? எல்லாம் அவள் இஷ்டம் தானா? ஒரு செல்லாக் காசுகூட இல்லாதவனைப் பண்ணிக் கொள்கிறாளாம். உயிர் போனாலும் நான் இதற்குச் சம்மதிக்க மாட்டேன். பின்னால் அவள்தான் கஷ்டப் படுவாள். நன்றாக யோசனை செய்' என்றார் பத்திரையா. அவர் பெண்ணின்



சுகத்தை விரும்பினார். அன்னபூர்ணம்மா சற்று நேரம் ஒன்றுமே பேசவில்லை.

'நீங்கள் சொல்வது சரிதான். அவள் சம்மதிக்காதபோது என்ன செய்ய முடியும்? அவரவர் கொடுத்து வைத்ததுதான் கிடைக்கும்.

'அப்படியா சொல்லுகிறாய்? சரி; நாட்கள் பறக்கின்றன. ஏதோ ஒன்றைச் சீக்கிரம் முடித்து விடுவது நல்லது' என்று சொல்லிப் பரபரவென்று சாப்பிட்டு விட்டு எழுந்து போனார் பத்திரையா.

பிறகு அன்னபூர்ணம்மா, அனுசூயா, அவள் மன்னி எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தார்கள். அப்பொழுது பத்திரையா உள்ளே வந்து மனைவியிடம் ஒரு கடிதம் கொடுத்தார்.

'நான் ராஜமண்டிரிக்குப் போகிறேன். நீ இந்தக் கடிதத்தை வீரனிடம் கொடுத்துப் பாளையத்தாருக்கு அனுப்பி விடு' என்றார். அவர் போனதும் அன்னபூர்ணம்மா அந்தக் கடிதத்தை நாட்டுப் பெண்ணிடம் கொடுத்து, 'படியம்மா, என்ன எழுதியிருக்கிறார் பார்ப்போம்' என்றாள். நாட்டுப் பெண் சாந்தா, இடக் கையில் வாங்கிப் படித்தாள். அனுசூயா குனிந்து சாப்பிட்டுக்கொண்டே கேட்டுக்கொண்டிருந்தாள்.

'மகா-ா-ா-ஸ்ரீ நாராயண பாவாவிற்கு, உபய குசலோபரி. நம் குழந்தைகளின் கல்யாணத்தை நிச்சயம் செய்ய நாளன்றைக்கு வரப்போவதாக எழுதியிருந்தீர்கள். சந்தோஷம். எதிர்பாராத சில காரணங்களால் அன்று எங்களுக்குச் சௌகரியப்படாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். கூடிய சீக்கிரத்தில், சௌகரியப்படி நாள் பார்த்து எழுதுகிறேன். சிரஞ்சீவி. ராமாராவை நான் ரொம்பவும் கேட்டதாகச் சொல்லுங்கள்.

இப்படிக்கு,
பத்திரையா.

என்று சாந்தா படித்தாள்.

'நன்றாகத்தானிருக்கிறது. எப்போது என்ன நடக்குமோ? என்ன சொல்ல முடியும்? நடந்திருக்க வேண்டிய சம்பந்தம் தடைப்படுவதால், எனக்கும் வருத்தமாகத்தான் இருக்கிறது' என்றாள் அன்னபூர்ணம்மா.

'கடைசியில் உன் பிடிவாதந்தான் ஜெயித்தது. ஏன், அனுசூயா? உன் அகத்துக்காரர் அவ்வளவு அழகா?' என்று கேலி செய்தாள் சாந்தா.

அனுசூயா தலைகுனிந்தபடியே சிரித்துக்கொண்டாள்.

ஃ ஃ ஃ

அன்று ராஜமண்டிரியிலிருந்து பெண் பார்க்க வருகிறார்களென்று பத்திரையாவின் வீடு அமர்க்களப் பட்டது. வரப் போகும் சம்பந்திகளை வரவேற்கப் பிரமாதமான ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். குறித்த சமயத்தில் மாப்பிள்ளை சந்திரனும் அவனுடைய அப்பா பத்மநாபையாவும் தம் பந்துக்கள் இருவருடன் வந்தார்கள். பத்திரையா அவர்



களை வரவேற்று, டிபன், காபி கொடுத்தார்.

அனுசூயா நாணங்கலந்த சிரிப்புடன் ஓரக்கண்ணால் பார்த்துக்கொண்டே வந்து உட்கார்ந்தாள். பிள்ளை வீட்டார் வழக்கப்படிப் பெண்ணைக் கேட்க வேண்டிய கேள்விகள் எல்லாம் கேட்டார்கள். பிறகு அவள் எழுந்திருந்து ஒய்யாரமாக உள்ளே போனாள். அதற்குப் பிறகு பத்திரையாவின் தரப்பு மனிதர் ஒருவர் சம்பந்திகளைப் பார்த்து, 'பெண் பார்த்தாய் விட்டது. வரதட்சிணையைப் பற்றி ஒன்றும் யோசிக்க வேண்டாம். அவளுக்குப் பத்து ஏகர் நிலம் கொடுப்பார்கள். அதற்குமேல் வழக்கப்படிச் சீர்வரிசைகளும் செய்வார்கள். உங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லுங்கள்' என்று கேட்டார்.

'அ...ப்...பா, பத்து ஏகராவா!' என்று மனசுக்குள்ளேயே அதிசயித்தார் பத்மநாபையா.

'சரி; ஊருக்குப் போய் எழுதுகிறோம். போய் வருகிறோம்' என்று எழுந்தார், அவர்.

'நல்லது; சீக்கிரமாகத் தெரிவியுங்கள். கல்யாண முகூர்த்தங்கள் அதிகம் இல்லை' என்று சொல்லிப் பத்திரையா ஸ்டேஷன்வரையில் போய் அனுப்பி வைத்தார்.

இந்தச் செய்தி அந்தக் கிராமத்தில் காட்டுத் தீபோல் பரவிவிட்டது.

'ராகவையாவுக்கும் பத்திரையாவுக்கும் போட்டியா!' என்று எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். 'ராகவையாவுடன் சம்பந்தம் செய்ய இஷ்டம் இல்லாததால் தானே, இன்னொரு பெண்ணைப் பார்க்க வந்திருக்கிறார்கள்? இல்லாவிட்டால் வருவார்களா? இனிமேல் ராகவையா இந்த வரனைப் பற்றிய ஆசையை விட்டு விட வேண்டியதுதான்' என்றார்கள் சிலர்.

'பத்து ஏகர் நிலம் ஸ்ரீதனம் கொடுக்கும் பத்திரையாவின் சம்பந்தத்தை விட்டு விட்டு, ஏதோ பிச்சைக் காசை வரதட்சிணையாகக் கொடுக்கும் ராகவையாவோடு சம்பந்தம் செய்வார்களா? ராகவையா, பத்திரையாவோடு போட்டி போட முடியுமா?' என்றார்கள் சிலர்.

'அனுசூயாவின் பிடிவாதந்தான் இதற்கெல்லாம் காரணமாம். செயலுள்ளவர்களுக்கு என்ன வேண்டுமானாலும் கிடைக்கும். பாவம்! சாரதாவுக்குக் கிடைக்க வேண்டிய வரனல்லவா, இது!' என்று ஊர்ப் பெண்கள் பேசிக்கொண்டார்கள். ஊரில் எங்கே பார்த்தாலும் இதே பேச்சாக இருந்தது.

ராஜமண்டிரிச் சம்பந்திகளிடமிருந்து என்ன பதில் வருமோ என்று எல்லோருமே எதிர்பார்த்தார்கள். அந்த ஊர்ப் போஸ்ட்மாஸ்டர்கூட அங்கிருந்து கடிதம் உண்டா என்று கட்டுக்களைப் புரட்டிப் பார்த்தார்.

போட்டி வந்தவுடனே சாரதா அந்த வரனைப்பற்றிய எண்ணத்தைக் கைவிட்டாள். அவள் அப்பா ராகவையாவும் வேறு வரன் தேட ஆரம்பித்துவிட்டார். அனுசூயா எப்போதும் சந்திரனுடைய அழகை நினைத்து நினைத்து மகிழ்வாள். சில சமயத்தில் சந்தேகம் எழும்பும். 'என்னைவிட அழகான சாரதாவைப் பார்த்தபின், என்னை எப்படிச் செய்து கொள்வார்?' என்று வாயவிட்டுக்கூடச் சொல்லிவிடுவாள், சில சமயம். அவள் மன்னி பக்கத்தில் இருந்தால் சிரித்துக்

கொண்டே, 'பத்து ஏகர் நிலமல்லவா கொடுக்கிறோம்!' என்பாள்.

சாரதா என்ன நினைக்கிறாள் என்று தெரிந்துகொள்ள அனுசூயாவுக்கு ஆவலாக இருந்தது. ஒரு சமயம் சின்னி என்னும் சிநேகிதி தனியாக இருந்தபோது அவளிடம், 'சாரதா என்ன செய்கிறாள்?' என்று கேட்டாள்.

'உன்னோடு நிச்சயமாகப் போட்டிக்கு வரமாட்டாள். உங்கள் அப்பாவைப் போல் அவள் அப்பா சம்பாதித்து வைத்திருக்கிறாரா?' என்றாள் சின்னி.

'சிநேகிதிக்கு நன்றாகப் பரிந்து கொண்டு வருகிறாய்! பணத்தில் என்ன இருக்கிறது? அதிர்ஷ்டம் வேண்டும். பூஜைக்குத் தகுந்த கணவன் கிடைப்பான்' என்று பெருமையோடு சொன்னாள் அனுசூயா.

சின்னி இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டாள். 'உன் அதிர்ஷ்டமும் இன்னமும் தெரியவில்லையே! என்ன பதில் வருகிறதோ?' என்று சொன்னாள்.

அனுசூயா ஒரு மாதிரி சிரித்தாள். 'இன்னும் உனக்குச் சந்தேகமா? சற்றுப் பொறு. அந்தச் செய்தியும் இன்றைக்கோ நாளைக்கோ தெரிந்துவிடுகிறது. எனக்கு நல்ல நம்பிக்கை இருக்கிறது. பெண் பார்க்க வந்தபோது அந்தப் பிள்ளை என்னை எவ்வளவு தடவை பார்த்தான் என்பது உனக்குத் தெரியாது. சாரதா இனிமேல் அவனை மறந்து விடுவது நல்லது' என்று சொல்லிப் பெருமையாகச் சொல்லிக்கொண்டாள்.

சின்னி பதில் சொல்லாமல் எழுந்து போய்விட்டாள். எல்லோரும் எதிர்பார்த்த நாள் வந்தது. தபால்காரன் இரண்டு கவர்களை எடுத்துக்கொண்டு பத்திரையா வீட்டுக்கு ஓடி வந்தான். சாப்பிட்டுவிட்டுக் கூடத்தில் படுத்துக்கொண்டிருந்த பத்திரையா, கண்ணுக்கெட்டிய தூரத்தில் அவனைப் பார்த்தவுடனேயே பரபரப்பாக எழுந்திருந்து போய், அவன் கொடுத்த கவரைப் பெற்றுக்கொண்டார். உள்ளே வந்து, 'ஏய், உன்னைத்தானே, இங்கே வா. ராஜமண்டிரியிலிருந்து கடிதம் வந்திருக்கிறது. சீக்கிரம் வா' என்று கூப்பிட்டார்.

'இதோ வருகிறேன் இருங்கள்' என்று சொல்லிக்கொண்டே, அன்னபூர்ணம்மா



வந்தவர்:—(கருமி, 60 ரூபாய் நகைகளைக் காணோம் நீங்கள்தான் சார் தேடிப் பிடித்துக் கொடுக்கணும்!

இன்ஸ்பெக்டர்:—நகைகள் எப்படிக் காணாமல் போனது?

வந்தவர்:—என்னுடைய குழந்தையின் கழுத்தில் போட்டிருந்தது! மூன்று நாட்களாகக் குழந்தையைக் காணோம்!

வந்தாள். அம்மாவின் தலைப்பைப் பிடித்துக்கொண்டே அனுசூயாவும் வந்தாள்.

'நாட்டுப் பெண் எங்கே? எல்லோரும் வந்து கேளுங்கள்' என்றார் பத்திரையா.

'ஏதோ வேலையாக ராகவையா வீட்டுக்குப் போயிருக்கிறாள். வந்ததும் சொல்லிக்கொள்ளலாம்' என்று அவசரப்படுத்தினாள் அன்னபூர்ணம்மா.

பத்திரையா கவரைப் பிரித்துக் கடிதத்தைப் படிக்கத் தொடங்கினார்:

'ஸ்ரீ பத்திரையா அவர்களுக்கு,

'எங்கள் அபிப்பிராயம் எதுவானாலும் தெரிவிக்கும்படிச் சொன்னதால், இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். உங்கள் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ள எங்கள் பையன் சம்மதப்படவில்லை'—இது வரைக்கும் படித்த பத்திரையாவின் முகம் வெளுத்தது. எதிரே இருந்தவர்களைப் பார்த்துப் பேந்தப்பேந்த விழித்தார். அனுசூயாவுக்கும் திக்கென்றது.

'பாக்கியையும் படியுங்கள் சாமி, கேட்கலாம்' என்றான், அதுவரைக்கும் ஆவலுடன் அங்கேயே நின்றுகொண்டிருந்த தபால்காரன். பத்திரையா மறுபடியும் தொடர்ந்து படித்தார்.

'முதலில் உங்கள் பெண்ணைப் பார்க்க வரவே தகராறு செய்தான். ஏற்கெனவே ராகவையாவின் பெண்ணைப் பார்த்திருப்பதால், அவளைத் தவிர, வேறு யாரையும் கல்யாணம் செய்து கொள்ள மறுக்கிறான். வயது வந்த பிள்ளை. தோளுக்கு மிஞ்சினால் தோழன் என்பதற்கு இணங்க, அவனை மீறி என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. என்னதான் நீங்கள் வரதட்சிணை அதிகமாகக் கொடுத்தாலும் அவன் இஷ்டத்துக்கு விரோதமாகச் செய்து, நான் என்னத்தைச் சாதித்துக்கொள்ளப் போகிறேன்? அதனால் அவன் போக்கில் விட்டுவிட்டேன். நீங்கள் தவறாக நினைக்கக் கூடாது. தங்கள் பெண்ணுக்கு வேறு வரன் பார்த்துக்கொள்ளக் கோருகிறேன்.

இப்படிக்கு,

பத்மநாபையா'

இதைப் படித்துவிட்டுப் பத்திரையா, அந்த மனிதரை வாயில் வந்தபடித் திட்டினார். ஆத்திரத்தோடு அந்தக் கடிதத்தைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்தெறிந்தார். தபால்காரன் அவசரமாக, 'இந்தக் கவரை ராகவையா வீட்டுக்குக் கொடுக்க வேண்டும்' என்று ஓடினான். அவன் கையில் வேறொரு கவர் இருந்தது.

அனுசூயா புஸ் புஸ்ஸென்று சீறிக்கொண்டே போனாள். அன்னபூர்ணம்மா கூடத்தில் தொப்பென்று உட்கார்ந்தாள்.

'பத்து ஏகர் நிலம் கொடுப்பதாகச் சொன்னாலும் முடியாது என்று விறைத்துக் கொள்கிறானே!'

'தப்பெல்லாம் நம் மேல்தான். காலணா ஆஸ்திக்கு வழியில்லாதவனைப் பிடித்துக்கொண்டு, பத்து ஏகரா நிலம் கொடுக்கிறேன் என்றால், ஜரித்துக்கொள்ள வேண்டாமா? சிவப்பாக வாட்ட சாட்டமாக இருக்கிறோம் என்ற பெருமை பிடிபடவில்லைபோல் இருக்கிறது. இந்தச் சம்பந்தம் தவறிப் போனதும் நமக்கு நல்லதற்குத்தான். பட்டண வாசத்து மனிதர்களை நம்பக் கூடாது. அவர்களுடைய தர்பார் செலவுக்கே நாம் கொடுக்கிற பணமெல்லாம் போதாது. நல்லது கெட்டது தெரியாத வயசு. ஏதோ இவள் பிடிவாதம் பிடித்தாள். மறுபடியும் அந்தப் பாளையத்துச் சம்பந்திகளுக்குப் பதில் எழுதுங்கள். முதல் தரமான இடம். சீக்கிரத்தில் முடித்து விடலாம்.'

'நிஜந்தான். இன்று சாயந்திரமே கடிதம் எழுதி அனுப்புகிறேன். நிச்சயதார்த்தம் செய்ய நாளையும் குறிப்பிட்டு விடுகிறேன். ஆனால், மறுபடியும் நம்

பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி" REGD

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் அசல் விஜயாகரம் மருந்து. எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்

Dr. பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,
19, தெற்குமாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்-4. போன்: 71354
கும்பகோணம் கிளை: 7, சாரங்கபாணி கோவில் கீழ வீதி.

பெண்ணாசையால் ஏதாவது தகராறு வருமோ?'

'அதெல்லாம் ஒன்றும் வராது. நடுவில் ஏதோ அவளுக்குப் புத்தி பேதலித்து விட்டது. முதலில் அதை அவள் ஒப்புக்கொள்ளவில்லையா? சீக்கிரம் கடிதத்தை எழுதுங்கள்.'

இந்தச் சமயத்தில் சாந்தா அவசர அவசரமாக வந்தாள். 'அத்தை! ராஜமண்ட்ரியிலிருந்து கடிதம் வந்திருக்கிறது. நமக்கு ஒன்றும் வரவில்லையா?'

'எல்லாம் எழுதியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன எழுதியிருக்கிறார்கள்?'

'சாரதாவைப் பண்ணிக் கொள்கிறார்களாம். நிச்சயதார்த்தத்துக்கு வருவதாகவும், நல்ல நாள் பார்த்து எழுதும்படியும் கேட்டிருக்கிறார்கள். அனுசூயாவை வேண்டாம் என்று சொல்லி விட்டார்கள்?'

'ஆமாம்; அவர்கள் சொன்னால் என்ன முழுகிப் போய்விட்டது? அவன் இல்லாவிட்டால் அவன் பாட்டன் வருகிறான்' என்று சொல்லிவிட்டு, எழுந்திருந்து போய்விட்டாள் அன்னபூர்ணம்மா.

ஃ ஃ ஃ

'அடே ராமம்! உன் மாமனார் கடிதம் எழுதியிருக்கிறாரடா! அடியே! சம்பந்தி கடிதம் எழுதியிருக்கிறார்' என்று வயிலிலிருந்து வந்த நாராயணையா கூடத்தில் செருப்பை விட்டுவிட்டுச் சமையலறையைப் பார்த்துச் சொன்னார்.

'எப்பொழுது வரச் சொல்லியிருக்கிறார்கள்?' என்று கேட்டுக்கொண்டே, அவர் மனைவி வெளியில் வந்தாள்.

'திங்கட்கிழமை நாள் நன்றாயிருக்கிறதாம். வரச் சொல்லி எழுதியிருக்கிறார்கள். வருவதாக நாளைக்கு எழுதிவிடுகிறேன். என்ன சொல்கிறாய்?'

'அப்படியே செய்யுங்கள். சீக்கிரமே நாட்டுப் பெண் வந்தால், எனக்கும் சந்தோஷந்தானே!'

அறையிலிருந்து இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த ராமராவ் வாசற்படிக்கருகில் வந்து நின்றுகொண்டு, 'உங்கள் சம்பந்தம் எங்களுக்குத் தேவையில்லை என்று எழுதிவிடுங்கள், அப்பா!' என்று கடுத்த முகத்துடன் சொன்னான்.

நாராயணையா ஒன்றும் புரியாமல், 'என்னடா சொல்லுகிறாய்! சம்பந்தம் வேண்டாமாவது?' என்று கேட்டார்.

ராமராவ் தகப்பனாரைப் பார்த்து, 'ஆமாம் அப்பா! தெரிந்த பிறகும் அவர்களோடு நமக்குச் சம்பந்தம் எதற்கு? நம்மிடம் பேசிவிட்டு, இன்னொருவனுக்குப் பெண்ணைக் கொடுக்கப் பார்ப்பதா? அவர்கள் வேண்டாமென்று சொன்ன பிறகு, நம் தலையிலேயே கட்ட வருகிறார்கள். நாமென்ன அவ்வளவு கேடு கெட்டவர்களா? எங்களுக்கு வேண்டாமென்று எழுதிவிடுங்கள்' என்று கோபத்துடன் சொன்னான்.

'அந்தச் சங்கதி உனக்கு எப்படித் தெரிந்தது? அவர்கள் எதற்காக அப்படிச் செய்கிறார்கள்?'

'தெரியாமல் என்ன? காதமா, தூரமா? பக்கத்துக் கிராமத்தில் நடப்பது தெரியாமலா போய்விடும்? நடப்பதை அப்போதைக்கப்போது அவர்கள் வீட்டுக் குடியானவனே வயலில் என்னிடம் சொல்லிவிடுவான். யாரோ ஒரு பெண்ணை யாரோ ஒரு பையன் பார்க்க வந்தாலும். அந்தப் பையனைத்தான் கல்யாணம் செய்துகொள்வேனென்று இவர் பெண் பிடிவாதம் பிடித்தாளாம். பத்திரையா ராஜமண்டிரிக்குப் போய், அவர்களை அழைத்துக்கொண்டு வந்தாராம். அதனால்தான் நாம் நிச்சயதார்த்தத்துக்கு வருவதாக எழுதியபோது, அசௌகரியமென்று எழுதி விட்டார்கள். அந்த ராஜமண்டிரிப் பையன் அவளை வேண்டாமென்று சொல்லிவிட்டான். இப்பொழுது நாம் வேண்டியிருக்கிறது. இவ்வளவு நாடகம் நடந்த பிறகு, அந்தப் பெண்ணுக்கு என்னிடம் என்ன அன்பு இருக்கப் போகிறது? முதலிலேயே எச்சரிக்கையாக இருப்பது நல்லது. வேண்டாம் என்று எழுதிவிடுங்கள்!' — இப்படிச் சொல்லிவிட்டு, அவன் வெளியே போய்விட்டான்.

தாயும் தந்தையும் ஒருவரை ஒருவர் பார்த்தபடிக் கல்லாய்ச் சமைந்து நின்றார்கள். ★

புத்தகங்களை விரும்புவோர் சிலரே ...



ஆனால் எல்லோரும் விரும்புவது

Parry's பாரிஸ் மிட்டாய்களே

ஏனெனில் அவை ருசியுள்ளவை, ஆரோக்கியமானவை, சுத்தமானவை.

தயாரிப்போர்: பாரிஸ் கன்பெக்ஷனரி லிமிடெட், மதராஸ்

PRS 319

வானக்குளியல்

(கோவி. மணிசேகரன்)

★

வருக மழையே ! தருக இன்பம் !
வானின் இறையே ! வையத் தமுதே !
உருகுக உள்ளம் பெருகுக வெள்ளம்
உந்தன் வருகை எங்கள் நலமே ! (வருக)

சருகைத் தின்னும் நிலையில் மனிதர்
சரிந்த வாழ்வில் இருப்பது சரியோ ?
சொருகும் கண்கள், இறுகும் வயிறு
சோளத் தட்டுடல் மாறி செழித்திட (வருக)

தாய்முகம் காணு சேய்போல் வாடித்
தவிக்கும் பயறின் தாய்மைத் தெய்வமே !
காய்ந்து போகா வரத்தை ஈன்று
கதிர்கள் முற்றிக் கவலை தவிர்ப்பாய் ! (வருக)

மண்ணில் வெப்பம் நீங்காக் குறையால்
மக்கள் நோய் வாய்ப் பட்டுழல் கின்ருர் !
விண்ணில் மேகத் தூது நடத்தி
விரைந்து வந்து விழிகளைத் திறப்பாய்! (வருக)

வீட்டின் கூரை சடசட சடவென
வீதியில் வெள்ளம் சலசல சலவென
காட்டில் மரங்கள் சோசோ சோவென
காற்று மாரியே வருகவ ருகவே ! (வருக)

மலர் மஞ்சம்

தி.ஜானகிராமன்.

19

இரவு முழுவதும் தூக்கம் பிடிக்கவில்லை அவருக்கு.

சாப்பிட்டு வந்து துண்டை விரித்துத் திண்ணையில் படுத்தார். ஜில்லென்றிருந்தது. ஐப்பசி மாதத்துச் சில்லிப்பு. இறுக்கமாகவும் இல்லை. குளிராகவும் இல்லை. உடலுக்கொத்த காற்ருகத்தான் இருந்தது. லேசான காற்று. எதிரே தோப்பு சலசலத்துக் கொண்டிருந்தது.

தோப்பின் சலசலப்பு என்னென்னவோ சொல்வதுபோலிருந்தது அன்று. அமைதியை ஊதி அணைக்க வருவதுபோலிருந்தது அந்த ஓசை.

முந்தா நாள் அமாவாசை. சாயங்காலம் தெற்கு உயர்ந்து நின்ற மூன்ரும் பிறைக் கீற்றைக் கண்ட காட்சி மனதில் நின்றது. வானத்தில் இல்லை. வானத்தில் ஒரே ஒளிப் பொட்டுகளாக உதிர்ந்து கிடந்தது. நரை நரையாகப் பால் ஓடிக் கொண்டிருந்தது ஒரு பக்கம்.

எதற்காக இந்த அற்பர்களைப் படைத்தாய்? பெண்ணின்பத்தைக்கூட ஏமாற்றி வாங்குகிற அற்பர்களை ஏன் படைத்தாய்? தனபாக்கியம் அப்படிப் பார்க்க முடியாத அவலட்சணமில்லை—லட்சணமுமில்லை. அந்த முப்பது வயதின் கவர்ச்சியைக் கண்டுதான் இந்தப் பயல் விழுந்திருக்க வேண்டும். ஏதோ மிருகத்தனமாக, எதையும் பொறுத்துக்கொண்டு துய்த்துவிட்டு, பிறகு வெட்கப்பட வேண்டிய அளவுக்கு அவள் விகாரமோ மூளியோ இல்லை. அங்கமாக இருக்கிறவள்தான். இவளை ஏன் ஏமாற்ற வேண்டும்? தர்மமில்லாத ஒரு நீதியும் அவனுக்குக் கோர்ட்டில் கிடைத்துவிட்டது.

நாலைந்து நாளாக, தீர்ப்பு நெருங்க நெருங்க அவன் முகத்தில் ஈயாடவில்லை. பேயறைந்தாற்போல உட்கார்ந்திருந்தான்; இன்று தீர்ப்புக் கிடைத்த பிறகு என்ன எகத்தாளம், எக்களிப்பு! அவளிடம் வந்து ஒணானைப்போல அவன் கொக்கரித்துவிட்டுப் போனது இன்னும் மறக்கவில்லை.

தனபாக்கியத்துக்குத் தோல்விதான். ஆனால், ஒரு மாத காலம் கம்பி கம்பி என்று நினைத்து நினைத்துக் கிலி பிடித்துச் சோரச் செய்துவிட்ட வெற்றியில் அவள் திருப்தியாகத் தூங்கிக்கொண்டிருப்பாள். இல்லை—பயத்தில் அவளும் கொட்டு கொட்டென்று விழித்துப் படுத்திருக்கிருளோ என்னவோ? ஆட்டி வைத்து விட்ட ஆத்திரத்தின் நிறைவு, அல்லது தப்பித்து விட்டானே என்ற பயம்—இரண்டும் அவளைத் தூங்க விடாது.

'யப்பா—கதை சொல்லுப்பா' என்றது பாலி.

'நீயா! எப்ப வந்தே?'

'இப்பதான். எனக்குக் கதை சொல்லு.'

'இன்னக்கி வாணும்...தூங்கு. நாளைக்குச் சொல்றேன்.'

'போப்பா.'

'நீ உள்ர போய்ப் படுத்துக்க...சில்லுன்னு இருக்கு இங்கே. சளி புடிச்சுக்கும்.'

'நான் இங்கேதான் படுப்பேன்...நீ கதை சொல்லு.'

'இன்னிக்கிக் கதையே வரமாட்டேங்குது. நாளைக்குச் சொல்றேன்.'

'நான் இப்ப கதை சொல்லணும்—சாலிக்கு.'

'முன்ன சொன்ன கதையிலே ஒண்ணை சொல்லித் தூங்கப் பண்ணு.'

'அதுக்குப் புதுசாத்தான் வேணுமாம்.'

'புதுசு இன்னிக்கிக் கிடையாதுன்னு சொல்லு. முரண்டினு, முதுகிலே ரண்டு வப்பியா? பித்துக்குளிமாதிரி பயப்படறியே.'

'கதை கேட்டா அடிக்கிறதாக்கும்?...நீ சொல்றயா இல்லியா?'

ராமையா பதில் பேசாமல் நட்சத்திரங்களைப் பார்த்துக்கொண்டிருந்தார். ரதம் மாதிரி ஒரு கூட்டம் வளைந்திருந்தது. ஒரு கூட்டம் சங்குமாதிரி முறுக்கியிருந்தது.

'நீ ஏம்பா இன்னிக்கி என்னைக் கோவிலுக்கு அழச்சிட்டுப் போகலெ? இன்னைக்கி ரண்டு கோயில்லியும் வாழைப் பழம், சுண்டல், பானகம் எல்லாம் குடுத்தாங்களாம்...எல்லாரும் போயிட்டு வந்தாங்க...'

அதற்கும் பதில் பேசவில்லை அவர்.

சற்றுக் கழித்து ஒழுங்காகச் சுவாசம் கேட்டது. குழந்தை நன்ருகத் தூங்கிக் கொண்டிருந்தது.

'நான் உன்னை, சொன்னபடிச் சொர்ணக்கா மகனுக்குக் கட்டிக் கொடுக்கப் போறேனு? இல்லியா?—'

ராமையாவுக்கு, உடம்பில் அரிப்பு ஊறுவதுபோல, ஒட்டடையோ மயிரோ உடம்பில் பட்டு ஊறுவதுபோல, பயம் அரித்தது. என்ன பயம் என்று தெரியாமல், கையிலகப்படாமல் அரித்த பயம்.

வைத்தீச்வரனை வேண்டிக்கொண்டிருந்தார் அவர். தியானம் செய்தார். நாம ஜபம் செய்தார். ஆனால், அவரறியாமல் அவர் மனம் எல்லாவற்றையும் விட்டு பயம் என்ற பொட்டல் வெளியில் போய் மயங்கி நின்றுகொண்டிருந்தது. திருப்பித் திருப்பிக் கொண்டு வந்தும் நழுவி நழுவி அதே இடத்திற்குத் தப்பித்துக் கொண்டு வந்து நின்றது.

குழந்தையைத் தடவிக் கொடுத்தார், பயத்தின் சுவாசம் படாமல் தடவுவது போல. தலை மயிரைக் கோதி விட்டார். ஆனால், தோப்பில் கேட்ட சலசலப்பில் அமைதியில்லை. காற்றில் ஏதோ நச்சு வாடை வீசுவதுபோலிருந்தது. அச்சுற்று, குழந்தையைத் தூக்கி உள்ளே கொண்டு விட்டு, வடிவக்காளை எழுப்பி, இடைகழிக் கதவைத் தாழிட்டுக் கொள்ளுமாறு சொல்லிவிட்டு, மீண்டும் வந்து திண்ணையில் படுத்தார்.

தெருவில் பத்துப் பதினைந்து வீடுகளுக்கப்பால் யாரோ பேசிக்கொண்டிருந்ததும் அடங்கி விட்டது. இருளின் நடையில் இப்போது ஒன்றுமே கேட்கவில்லை. எங்கோ வெகு தொலைவிலிருந்து தம்பட்டச் சத்தம் லேசாகக் கேட்டது. மூர்சென்று எப்போதோ ஒருமுறை தெரு

வில் தலை வளைத்துப் படுத்திருந்த நாய் உறுமிவிட்டு, ஓய்ந்து விடும். சாகுருவி எங்கோ காறிற்று. பழந்தின்னி வௌவால் நாலைந்து, தோப்பையும் தெருவையும் வளையப் பறந்தன.

என் சொல்லை நிறைவேற்ற முடியுமா?

திடீரென்று உள்ளேபோய், பாலியை எழுப்பி, என் சொல்லைக் காப்பாற்ற முடியுமா என்று கேட்க வேண்டும்போலிருந்தது.

இரவு முழுவதும் தூங்கவில்லை அவர். நினைவுகள் வந்து அலைந்துகொண்டிருந்தன. எழுந்து சிறிது நேரம் உட்கார்ந்து கொண்டார். பூஜை அலமாரியைத் திறந்து விளக்கை ஏற்றி வைத்து, பயந்து கையையும் காலையும் உதைத்துக் கொள்ளும் மனதை, விளக்கின் சுடரில் கட்டிப் போட வேண்டும் என்று துடித்தது. ஆனால், உள்ளே போகவும் முடியவில்லை. வடிவு நன்றாக உறங்கிக்கொண்டிருந்தாள். தூக்கம் வராத ஆத்திரத்தில் வேறு உடல் பொருமிக்கொண்டிருந்தது.

கரிச்சான் கத்தத் தொடங்கி விட்டது. இருள் பிரியவில்லை. நட்சத்திரங்கள் மேகக்குப்பல்களுக்கிடையே தூங்கி வழிந்து கொண்டிருந்தன. இன்னும் சிறிது நேரம் போனால், எல்லாம் மக்கி மடிந்து விடும்.

துண்டை உதறிப் போட்டுக்கொண்டு எழுந்தார் அவர். ஆற்றங் கரையை நோக்கி நடந்தார். மூங்கில் தோப்பு 'கிர்ர் கிர்ர்' என்று முனகிக்கொண்டிருந்தது. படித்துறைக்குக் கிழக்கே இருந்த சவுக்குத் தோப்பு மௌனமாகப் புலம்பிக் கொண்டிருந்தது.

இன்னும் அவர் மனம் இருப்புக் கொள்ளவில்லை.

காரணமில்லாமல் பயந்து சாகிற மனதைத் தைரியப்படுத்த என்ன வழி? முழுகிவிட்டு, ஒரே மூச்சாகப் பூஜையில் உட்கார்ந்துவிட வேண்டியது. பூஜை முடிந்ததும் வேறு ஒன்றையும் கவனிக்காமல் பாராயணம் செய்துகொண்டேயிருக்க வேண்டியது. இரண்டும் பலிக்காவிட்டால், தில்லைவிளாகம், அல்லது வைத்தீச்வரன்கோவில் என்று இரண்டு வாரம் போய் உட்கார்ந்துவிட வேண்டும். இந்தத் தடவை பாலியையும் அழைத்துக் கொண்டு போகவேண்டும். அந்தக் கோயில்களை விவரம் தெரிந்த பிறகு அவள் பார்த்ததில்லை. முடியிறக்க இரண்டு வயதிற்குப் பிறகு வைத்தீச்வரன் கோயிலுக்கு அழைத்துப் போய் விட்டு வந்ததுதான்...ஆனால், அவளை அழைத்துக்கொண்டு போனால், போகிறவர்கள் வருகிறவர்கள் கவனித்துக் கொண்டேயிருப்பார்கள். இரண்டு வாரமாக ஒரு குழந்தையை வைத்துக் கொண்டு, பிராகாரத்தில் பேய்பிடித்து உட்கார்ந்திருக்கும் இவன் யார்? இந்தக் குழந்தை யார்?...

தனியாகப் போவதுதான் நல்லது.

ஆறு துறையோரத்தில் சுழித்துக் கொண்டே ஓடிக்கொண்டிருந்தது. இறங்கிப் பல்லைத் தேய்த்துவிட்டு முழுகினார், ராமையா. கண் விழித்துச் சூடேறிய உடலுக்கும் தலைக்கும் இதமாக இருந்தது நீரின் வெதவெதப்பு. வெகு நேரம் தண்ணீருக்குள்ளேயே கிடந்தார்.

ஆனால், உள்ளத்தை நனைத்து இதப்படுத்த அந்தப் பிரவாகத்தாலும் முடியவில்லை. புறத்தில் குளிர்ச்சியும் இன்பமும் படபடப்ப மனம் இன்னும் துடித்தது.

அந்த இடத்தில் நிற்கப் பிடிக்காமல் எழுந்து தலையைத் துவட்டிக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தார்.

தெருவில் எங்கும் சல்சல்லென்று சாணி தெளிக்கும் ஓசைகள் கேட்டுக் கொண்டிருந்தன. ஒன்றிரண்டு வாசல்களில் கோலம் போட்டிருந்தது. அவர் வீட்டு வாசலிலும் நீர் தெளித்துக் கோலமிட்டுக் கண்ணைப் பறித்தது. வெள்ளை வெளேரென்று அரிசி மாவுக் கோலம் அமைதி வந்துவிட்டதுபோல் பளிச்சிட்டது.

ஆனால், அவர் மனம் இன்னும் அடித்துக்கொண்டு தானிருந்தது. உள்ளே போனார்.

பூஜை அலமாரியில் விளக்கேற்றி வைத்திருந்தது.

ஃ ஃ ஃ

உட்கார்ந்து வெகு நேரம் பூஜை செய்ய வேண்டும் என்று வந்தவர், தன்னையறியாமல் வேகமாக எல்லாவற்றையும் முடித்துக்கொண்டிருந்தார். அங்கும் அவருக்கு இருப்புக் கொள்ளவில்லை. மனதைக் கட்டுப்படுத்திப் பார்த்தார். உள்ளத்தில் தோய்ந்த அச்சத்தைச் சற்று விலகி நின்று பார்க்கவும் முடிந்தது அவரால். எதற்கும் பயப்படாமல் அவருக்கு இருக்க முடியும். இருந்திருக்கிறார். வைத்தீச்வரனையோ யாரையோ நினைத்துக்கொண்டு, காயம்படாமல் இருந்திருக்கிறார். ஆவி அல்லது அருவத்தை வாளால் வெட்டினால் நீரை வெட்டுகிறாற்போல, காற்றை வெட்டுகிறாற்போல. அதைப்போலப் பல துன்பங்களின் வெட்டுகள் அவர் மனதை ஒன்றும் செய்ய முடிந்ததில்லை. ஆனால், இது?...இது என்ன துன்பம், எதற்கு இந்தப் பயம் என்றே தெரியாதபோது கலவரப்படாமல் என்ன செய்கிறது?

தோட்டத்தில் போய் உட்கார்ந்து ஏதாவது படிக்கத் தொடங்கினால்தான் அவருக்கு நிம்மதி வருகிற வழக்கம். பாலியை அழைத்துக்கொண்டு கிளம்பினார். மீனாட்சி கொல்லைதான் அவருக்கு எந்த உளைச்சலிலும் ஆறுதலைக் கொடுத்து வருகிறது. அங்கு போய் பாராயணம் செய்யலாம் அல்லது மண்வெட்டியையோ களைக் கொட்டையோ எடுத்துக்கொண்டு உடலைச் சிறிது நேரம் வருத்தினால் பயம் கரையும்.

வாசலில் வந்தபோது பொழுது வெளுத்திருந்தது. உச்சி வானத்தில் கூடியிருந்த மேகக் கும்பல்கள் புதுப் பித்தளைபோலத் தகதகத்துக்கொண்டிருந்தது. தோப்பில் வால் சிட்டும் நாகணவாயும் கூட்டமாகச் சேர்ந்து ஆர்ப்பரித்துக்கொண்டிருந்தன.

மேலக் குளத்தைத் தாண்டிப் போகும்போது மீனாட்சி கொல்லை தெரியும். தூரத்திலிருந்தே நாகலிங்க மரம் எல்லாவற்றையும்விட நிமிர்ந்து நிற்பது தெரியும். கண்ணைப் பிடுங்கிப் பார்த்துக் கொண்டே போனார் ராமையா. மரத்தைக் காணவில்லை.

வேகமாக நடந்தார். பாலியும் பெரு நடையும் சிறு ஓட்டமுமாகக் கூட ஓடிற்று.

அருகே போவதற்கு முன்னமே அவருக்குப் பகீரென்றது. கொல்லை வெறிச்சென்று கிடந்தது. வேலி முழுவதும் பிடுங்கிப் போட்டிருந்தது. மூங்கில் பிளாச்சுக் கதவு அப்படியே ஓட்டுடன் கீழே தரையில் கிடத்தியிருந்தது.

என்ன அக்ரமம்!

தோட்டம் முழுவதும் அழிந்து கிடந்தது. நூறு எருமைக் கிடா புகுந்து மிதித்ததுபோல எங்கும் ஒரே அலங்கோலமாகக் கிடந்தது. நந்தியாவட்டைகள் எல்லாம் வேரோடு பிடுங்கப்பட்டு, தலைமாடு கால்மாடாகக் கிடந்தன. ரோஜாச் செடிகள், மல்லிகை, துளசிக் கன்றுகள், துண்ணூற்றுப் பச்சைப் பாத்திகள் எல்லாம் பிடுங்கி, பூமியின் மேலே நெடுஞ்சாண்கிடையாகக் கிடந்தன. கொய்யா மரத்தை வெட்டி, ஆள் உயரத்திற்கு அப்பால் மொட்டையாக நின்றது. கிளைகள் கீழே வீழ்ந்திருந்தன. நாகலிங்க மரத்தைச் சிரமப்பட்டு மொட்டையடித்திருந்தது. பாதிரி, ஒட்டு மாமரங்கள், எலுமிச்சை, நாரத்தை, கொன்றைச் செடிகள், மந்தாரை, பவழமல்லி, பன்னீர் — எல்லாம் தாறுமாறாக வீழ்ந்திருந்தன. ஒட்டு மாவில் நாலு மரமும் கலையில் வெட்டிக் கிடந்தன. பாக்கு மரம் மூன்று இடுப்பு உயரத்துக்கு முண்டமாக நின்றது. வெண்டை, கொத்தவரை, கத்திரி எல்லாம் பிடுங்கித் துவண்டு மண்ணைக் கவ்வியிருந்தன.

ஒரு ஏக்கர் கொல்லை முழுவதும் ஒரே அழிவு! ஒரே பாழ்! மிச்சமிருந்த பழைய தென்னைகள் நாலும் வடுமா இரண்டும்தான். பலா மரத்தையும் விட்டு வைத்திருந்தது. ஐந்து வருஷம் அல்லும் பகலும் விழுந்த வேர்வை இப்படி மண்ணைக் கவ்விவிட்டது.

பிரமைபிடித்து நின்றார் ராமையா!

'யப்பா — ஏம்பா எல்லாம் இப்படி முறிஞ்சு கிடக்கு?' என்று ஒரு கேள்வி கேட்டுவிட்டு, பயந்த கண்ணுடன் எல்லாவற்றையும் பார்த்து விழித்தது.

'நந்தியாவட்டை எல்லாம் இப்படி முறிஞ்சிருக்கே!' — என்று ஒவ்வொரு பாழாக, ஒவ்வொரு சலமாகப் பார்த்துச் சொல்லிக்கொண்டு வந்தது.

இத்தனை பெரிய கொல்லையையும் ஒரு ராத்திரியில் அழிக்கிற கை பேய்க்கையாகத்தான் இருக்க முடியும்!

எருமை மாடுகள் புகுந்து அழித்த அழிவில்லை இது. கிளையை வெட்டக் கூடிய அரிவாள் எருமையின் உடம்பில் இல்லை.

இவ்வளவு முழுமையுடன் அழிப்பதற்கு மனிதனால்தான் முடியும்.

ராமையாவுக்குச் சிரிப்பு வந்தது. எதற்காக இப்படி அழித்தார்கள் என்று யோசித்தபோது, அவருக்குக் கோபம் வரவில்லை. எத்தனை பெரிய கோபமாயிருந்தாலும் இப்படித் தோட்டத்தில் வளர்த்த, மருந்து கொடுத்து வளர்ப்பது

"ஏன் ஓய்! நேற்று ஆபீஸ் வரவில்லை?"

"ஒய்ப் வெளியூர் போயிருக்காள் சார்!"

"..................................?"

போல் வளர்த்தவற்றைக் கொன்று போடுவதென்றால், சிரிப்பு வராமல் என்ன செய்யும்! இவ்வளவு பலஹீனமாக, சோப்ளாங்கி மனதா ஒருவனுக்கு இருக்கும்?

நந்தியாவட்டை, குச்சியும் இலையுமாக மிதிபட்டுக் கிடந்தது. வாழை மிதிபட்டுக் கிடந்தது. துளசித் தளிர் மிதிபட்டுக் கிடந்தது. விபூதிப்பச்சை மிதிபட்டுக் கிடந்தது. மல்லிகை இலை மிதிபட்டுக்கிடந்தது. கொய்யா இலை மிதிபட்டுக் கிடந்தது. கொன்றையும் மந்தாரையும், காசித்தும்பையும் மிதியுண்டு கிடந்தன. நந்தியாவட்டையின் இலைகள் கவிழ்ந்து பின்புறத்து வெண்மை வானைப் பார்க்க மிதியுண்டு கிடந்தது. குப்புறப்போட்டு மிதித்திருக்கிறார்கள்.

விடுதிக்குள் போனார். எல்லாம் வைத்தது வைத்தபடியே இருந்தது. ஒரு புத்தகம் இடத்தைவிட்டு அசையவில்லை. சிக்குப் பலகை அசையவில்லை. உட்காரும் கம்பளிச் சவுக்கம் அசையவில்லை. பரண் அசையவில்லை. அதில் அடுக்கிய சுவடிகள் அசையவில்லை. குமாஸ்தா மேஜை அசையவில்லை. அதன்மேலிருந்த கடுக்காய் மசிக்கூடோ, பாடல் புத்தகங்களோ அசையவில்லை. வைத்தது வைத்தபடியிருந்தது அனைத்தும்.

மீண்டும் வெளியே வந்தார் ராமையா. இறைந்து மண்ணில் செருகிக்கிடந்த அழிவை மெதுவாகப் பார்த்தார். கீச் கீச்சென்று தினைக் குருவிகள் நாலைந்து அலறிக்கொண்டிருந்தன.. வால்குருவி மொட்டை நாகலிங்க மரத்தின் மேல் மிச்சமிருந்த ஒரு கிளையில் உட்கார்ந்து திருப்பித் திருப்பி ஒரு நீண்ட வாக்யத்தைச் சொல்லிக்கொண்டேயிருக்கிறது? யாரோ குழந்தை கோபித்துக் கொள்வதுபோலிருந்தது அந்தச் சொல். அவ்வளவு உரிமையும் செல்லக் கோபமும் தொனித்தன அந்தத் தனிமையில்.

'எதுக்காகச் சும்மா பாத்துட்டே நிக்கிறே — வீட்டுக்குப் போ' —

'எதுக்காகச் சும்மா பாத்துட்டே நிக்கிறே — வீட்டுக்குப் போ' —

'எதுக்காகச் சும்மா பாத்துட்டே நிக்கிறே — வீட்டுக்குப் போ' —

ராமையா மீண்டும் மீண்டும் கேட்டார். அவருக்கும் வேறு வகையாக அர்த்தப்படுத்த முடியவில்லை.

'அப்பா, ஏம்பா இப்படியெல்லாம் முறிஞ்சு கிடக்கு?' என்று மறுபடியும் பாலி கேட்டது.

'சும்மாத்தான்.'

'சும்மாத்தானா?'

'சும்மாத்தான்.'

'என்னப்பா இது?'

'என்ன?'

'சும்மா வந்து முறிச்சுப் போடுவாங்க.'

'ஏன் போடப்படாது?'

'போங்கப்பா!'

ராமையா பார்த்துக்கொண்டே நின்றார். என்ன செய்வதென்று புரியவில்லை.

ஒரு திருட்டுப் போகவில்லை. ஒரு இலை தோட்டத்தை விட்டு அப்பால் அசையவில்லை. ஒரு மொக்கு அசையவில்லை.

வையன்னா, இப்படியா உனக்குக் கோபம் வரும்? என்னை ஓங்கி நாலு அடி அடிச்சிருக்கலாமே — அதுவும் கேஸ் ஜெயிச்சப்றமுமா கோபம்? — அன்னக்கி சாலையிலே சாட்சி சொல்லிப்பிட்டு நடந்து வரப்ப, வண்டியை திருத்திட்டுக் காச்சினியே — அப்பவே நாலு போட்டிருந்தாலும் யாராலும் ஏன்னு கேட்டிருப்பாங்களா?—இதுக்காக இந்தத் தோட்டம் முழுக்க மிதிச்சுப்பிட்டியே — அட பைத்தியக்காரா!—

'யப்பா. ஏம்பா இஞ்சியே நின்னுக்கிட்டிருக்கே?'

'எங்க போறது?'

'வீட்டுக்குப் போகலாம்.?'

'இன்னும் சித்த நாழி இருப்பமே.'

'அப்படீன்னா இதெல்லாம் எடுத்துப் போட்டு நறுவிசு பண்ணுவோம் — வா. சும்மா நின்னுக்கிட்டிருந்தா?'

'நறுவிசு பண்ண வாண்டாம். வா, வீட்டுக்குப் போவம்.'

'வான்னு வரமாட்டேங்கறே. நறுவிசு பண்ணலாம்ன உடனே வீட்டுக்கு வாங்கறே. போங்கப்பா — '

வீட்டை நோக்கிப் புறப்பட்டார்கள் இருவரும். போகிற வழியெல்லாம் திரும்பித் திரும்பி நின்று நின்று பார்த்துக் கொண்டே போனார் அவர்.

20

'ஜகது...ஜகது — '

'இதோ வந்திட்டேன் மாமாவ்.'

ஜகது வாசலுக்கு ஓடி வந்தாள்.

'என்ன அண்ணா!' என்று அவர் முகக் கலவரத்தைப் பார்த்துத் திகைத்து நின்று கேட்டாள். 'என்ன உடம்பு?'

'உடம்புக்கு ஒண்ணுமில்லியே!'

'இல்லே.'

'என்னைப் பாத்தா வியாதிக்காரன் மாதிரியாயிருக்கு?'

'என்னமோ போலிருக்கீங்களே?'

'எல்லாம் போயிடிச்சு!'

'அ! என்னது!'

'மீனாட்சி கொல்லையிலே ஒண்ணும் பாக்கியில்லே. அப்படியே த்வம்சம் பண்ணிக் கிடக்கு. ஒரு செடி, ஒரு கொடி, ஒரு பூண்டு பாக்கியில்லே. எல்லாம் வேரோட பிடுங்கி மண்மேலே போட்டுக் கிடக்கு.'

'என்ன மாமாது! நல்லாச் சொல்லுங்களேன்.'

'சுப்ரமண்யன் எங்கே?'

'கொட்டில்லே இருக்காங்க.'

'கூப்பிடு...'

'உக்காருங்க.'

சுப்ரமண்யன் ஓடி வந்தான்.

'என்ன மாமா! தோட்டத்தை அளிச்சுப்பிட்டானா?'

'ஆமாம் — வந்து பாரு...அப்படியே சொர்ணக்கா ஆம்படையானை அழைச்சுக்கிட்டு வா...என்னாலெ நடக்க முடியலே.'

'அழிச்சுப்பிட்டானா...?'

'நீ போய்ப் பார்த்திட்டு வாயேன்.'

'எப்ப, என்ன, எதுக்காக?'

'நீ போய்ப் பாரேன்...கூட அவனையும் அழச்சிட்டுப் போ.'

சுப்ரமண்யன், சொர்ணக்கா புருஷன், ஜகது மூன்று பேரும் பெருநடையாக நடந்தார்கள். செய்தியைக் கேட்டு வடிவக்காளும் போனாள். ஜகதுவின் பெண்ணும் ஓடிற்று.

குழந்தைமட்டும் கூட இருந்தது.

ராமையாவுக்கு நெஞ்சு நெகிழ்ந்து கொண்டிருந்தது. குழந்தையைப் பார்க்கப் பார்க்க ஹிருதயம் அதிர்ச்சி கரைந்து அழுதுகொண்டிருந்தது. இந்தக் குழந்தைக்கு எத்தனை துரதிர்ஷ்டம்!

அவரைப் பரிவுடன் பார்த்தது குழந்தை. குழந்தை அவரைப் பார்த்து மனதிற்குள் அழுதது. குழந்தையைப் பார்த்து அவர் மனது அழுதது. ஒருவருக்கொருவர் அனுதாபப்பட்டுக் கொண்டு, பொழுதைத் தள்ளிக்கொண்டிருந்தார்கள்.

எத்தனை நேரம் இப்படி ஒருவருக்கொருவர் பார்த்து நெகிழ்ந்தார்களோ தெரியவில்லை.

'மாமா...யார் மாமா இது?' என்று பீதியும் திகிலும் முகத்தில் பரக்க ஓடி வந்தான் சுப்ரமண்யன்.

ஜகது அழுதுகொண்டே வந்தாள்.

சொர்ணக்கா புருஷன் மனதில் துக்கத்தை அடக்கிக்கொண்டிருந்தான்.

'மாமா' என்று வாயைத் திறந்ததும் அவள் நெஞ்சு உடைந்தது. அந்தக் கொல்லையை வளர்த்ததில் அவளுக்குக் கால் பங்காவது உண்டு.

'அண்ணா, நீங்க கவலைப்படாதீங்கண்ணா. இன்னும் நாலு மாசத்துக்குள்ளார பாருங்க. எல்லாத்தையும் நேத்து இருந்த மாதிரி பண்ணித் தந்திடறோம்' என்று ஜகது தேற்றினாள்.

'ஆமாம் மாமா — நீங்க ஒண்ணுக்கும் ஆயாசப்படாதீங்க. எந்தப் பாவிக்கு இப்படி இத்தனை பச்சைக் குழந்தைங்களைக் கூட்டமாக முறிச்சுக் காலிலெ போட்டு மிதிக்க மனசு வந்தது?...மாமா ...நீங்க சும்மா இருங்க. ரண்டே மாசம். நானும் இவருமாச் சேந்து சரிப்பண்ணிக் கொடுத்திடறோம்...நீங்க உள்ளார வாங்க...ஜகது...மாமாக்குக் கொஞ்சம் மோர்லே சீனியைப் போட்டுக் கொண்டா.'

'எனக்கு ஒண்ணும் வாண்டாம், சுப்ரமண்யா!'—

அவ்வளவுதான். சுப்ரமண்யன் வைய ஆரம்பித்தான். வாசலில் நின்று கொண்டு தோட்டத்தை அழித்த கையைத் திட்ட ஆரம்பித்தான். பெண்டாட்டி, அப்பன், ஆயி, குலம், கோத்திரம் எல்லாவற்றையும் இழுத்து வையத் தொடங்கினான்.

ராமையா 'சும்மா இரு சுப்ரமண்யா, யாரைப் பாத்து வையறே இப்ப?'

'நீங்க சும்மா இருங்க மாமா கிடக்கு. எலே, அழிவு காலம் வந்திரிச்சிரா இந்த ஊருக்கு...எலே — குடும்பத்தோட குடியோட அளியப்போவுதுரா எல்லாம் — நான் இன்னக்கிச் சொல்றேன்னு கேளுங்கடா — '

கோடிட்ட இடங்களில் குலமும் கோத்திரமும் அம்பலத்தில் வந்து சிரித்தன.

சுப்ரமண்யன் நடுத்தெருவில் நின்று கத்திக்கொண்டிருந்தான். சாதாரணக் கத்தல் இல்லை. சுப்ரமண்யனுக்குத் தொண்டை பெரிது. கனமான, ஆழ்ந்த தொண்டை. அது முழுவதும் அடிநாடியிலிருந்து முழங்கிற்று. தெருக்கோடி வரையில் கேட்கும் குலைநடுக்கும் குரல் அது. ஊர் வீடுகள் எல்லாவற்றிலும் வாசலில் வந்து ஆணும் பெண்ணும் குஞ்சுமாக வந்து நின்றார்கள்.

'என்னடா சேதி, சுப்ரமண்யா?' என்று கேட்டுக்கொண்டே காவேரி வந்தாள். கிட்டன் வந்தான்.

அவர்களுக்குச் சொர்ணக்கா புருஷன் செய்தியைச் சொன்னதுமே காவேரி, கிட்டன் எல்லோரும் மீனாட்சி கொல்லையைப் பார்க்க ஓட்ட ஓட்டமாக ஓடினார்கள்.

சுப்ரமண்யன் ஓயவில்லை. வேட்டியைக் காலிடுக்கில் செருகிச் செருகி விட்டுக் கொண்டு, நடுத் தெருவில் நின்று சன்னதம் வந்தவன்போலக் கத்தினான்.

உண்மையாக அவனுக்குச் சன்னதம் தான் வந்திருந்தது.

ஜகது, ராமையா யாருமே அவனை இந்த வெறியில் பார்த்ததில்லை. ஜகதுவுக்கு இந்த ஆர்ப்பாட்டமெல்லாம் பிடிக்கவும் பிடிக்காது. என்னவோ இன்று அவளும் பேசாமல் பார்த்துக்கொண்டு, கேட்டுக்கொண்டு நின்றாள். இந்த முழக்கத்தை —சண்டை முழக்கத்தைக் கேட்டு யாராவது எதிர்க் கட்சி தர, பதில் தர வரப் போகிறார்களா இல்லையா என்று பார்ப்பதுபோலிருந்தது.

'சுப்ரமண்யா, நான் சொன்னா நீ கேட்க மாட்டே?' என்றார் ராமையா.

அவன் ராமையாவைச் சட்டையே செய்யவில்லை. அதற்குள் காவேரி கொல்லையைப் பார்த்துவிட்டு ஓடி வந்தாள்.

'காளியாயிலே போக—ஆ'ணஞ்ச கொள்ளிக்கட்டைங்களா' என்று அவளும் நடு வாசலில் நின்று பெரிதாகத் தொடங்கினாள்.

'சுப்ரமண்யா, இப்பவாவது வாடா' என்றார் ராமையா.

ஆனால், இரண்டு பேரும் தெருவைப் பார்த்துச் சேர்ந்து ஆரம்பித்து விட்டார்கள். ஊர் முழுதும் வாசல் வாசலாகக் கூடி நின்றது.

கிட்டன் ஓடி வந்தான்.

(தொடரும்)



ஸோல் ஏஜண்டுகள்: தாதா & கோ.
86, நைனியப்ப நாயகன் தெரு, சென்னை-3.

ரயில் வண்டியோ அத்வானத்தில் நின்றுவிட்டது. சுற்றிக் கண்ணுக்கு எட்டியமட்டில் ஊரே தென்படவில்லை. பரந்த வயல்களும், அடர்ந்த தோப்புகளும் ஆங்காங்கே மேயும் கால்நடைகளும் என்ஜின் பழுதாகி, வண்டி நின்றுவிட்ட அத்வானத்தின் அமானுஷ்யத் தன்மையை, அதிகப் பயங்கரமாக எடுத்துக் காட்டின. சாந்தா அதிகமாகத் தன்னந் தனியே இரயில் பிரயாணம் செய்தவள் இல்லை. இன்று அவள் தனியாகத் தன் கைக்குழந்தையுடன் பிரயாணம் செய்யும்படி நேர்ந்துவிட்டது. அவளுக்குப் பிடிக்காத அந்தக் கட்டாயத் தனிப் பிரயாணத்தின்போதா வண்டி நிற்கத் தீர்மானம் செய்துகொள்ள வேண்டும்? இனிமேல் புது என்ஜினுக்குச் சொல்லி அனுப்பி, அது வந்துதான் வண்டி நகரும் என்று வண்டியிலிருந்தவர்கள் பேசிக் கொண்டார்கள். இன்னும் நான்கு மணி நேரமாவது ஆகும் என்று இதற்குமுன் இம்மாதிரி அனுபவத்துக்கு உள்ளான ஒருவர் கூறிக்கொண்டிருந்தார். அப்படி என்றால் சாந்தா ஊர் சேரும்போது இரவாகிவிடும்.

பிரயாணிகள் வண்டியைவிட்டு இறங்கி ரயில் பாதையை அடுத்து ஓடின ஒற்றையடிப் பாதையில் உலவினார்கள். சிலர் வயல்களில் திட்டுத்திட்டாய் உட்கார்ந்தனர். அநேகம் பேர்வழிகளுக்கு இந்த அனுபவம் புதிதாக இருந்ததால், ஆச்சரியமாகவும் வேடிக்கையாகவும் இருந்தது. அவசர அலுவலாகப் பிரயாணம் செய்தவர்களுக்கு இந்த எதிர்பாராத தவக்கம் கலவரத்தை உண்டாக்கியது. வண்டியின் கார்டு கீழே இறங்கிப் பிரயாணிகளுக்குத் தைரியமூட்டிக் கொண்டிருந்தார். ஒருவர் ரயில்வே நிர்வாகத்தைப் பற்றி நீண்டதொரு வசை புராணம் இயற்றிக்கொண்டிருந்தார்.

சாந்தாவிற்கு இருட்டிவிடுமே என்ற கவலையில்லை. அவள் வீட்டை விட்டுக் கிளம்பும்போது அவளுடைய கைக் குழந்தை நிர்மலிக்குப் புட்டிப் பால் கலைத்துப் புகட்டிவிட்டு, இன்னும் இரண்டு மணி நேரத்தில் அவள் போக வேண்டிய ஊரை அடைந்துவிடலாம் என்ற நம்பிக்கையில் கையில் குழந்தைக்கு ஒன்றும் ஆகாரமாக எடுத்து வரவில்லை. இப்போது அண்டைப் பிரயாணிகள் பேசிக்கொள்வதைப் பார்த்தால், வண்டி அவள் போக வேண்டிய ஊர் சேர இன்னும் ஐந்து ஆறு மணி நேரம் பிடிக்கும்போல் இருந்தது.

சூரியன் நிழல்களை நீட்டி மேற்கத்தி வானில் மையத்தைவிட்டு நழுவிக் கொண்டிருந்தான். வண்டி செத்த பாம்பு போல வளைந்து கிடந்தது. கைக் குழந்தை நெளிய ஆரம்பித்தது. தூக்கம் கலைந்து அது எழுந்து, பசியால் கத்தினால், அந்தக் கத்தலை எவ்வாறு அவள் சமாளிப்பாள்?

அவளுக்கு எதிரே ஒருத்தி அமர்ந்திருந்தாள். அவளுடன் சாந்தா இது வரை பேசவில்லை. அவள் ஒருத்திதான் சாந்தாவைத் தவிர அந்தப் பெட்டியில் ஸ்திரீ. அவளுடைய பாட்டைத் தலை, கருங்காலி மேனி, கழுத்தில் கிடந்த கருகமணி மாலை, சொருக்கு, ரவிக்கை இல்லாத உடம்பு, புடவை கட்டியிருந்த பாணி இவை யாவும் அவள் ஒரு ஆதித் திராவிட மாது என்று காட்டின. யௌவன வயதுள்ள அவளுடைய உருண்டையான கைகளும், உழைப்பால் வலுவுற்றுச் செங்குத்தாய் நின்ற மார்பகங்களும், கரிய முகத்தில் ஓடின வெள்ளை விழியுடன் ஒளிர்ந்த கரு விழிகளைக் காத்த நீண்ட இமைகளும் ஒரு பெரிய சிற்பி கருங்கல்லில் செதுக்கின சுந்தரி போல் அவளை அழகுறுத்தியன.

தங்கின வண்டி, காலத்திற்கே மடை கட்டித் தேக்கிவிட்டதுபோல, சாந்தாவிற்கு உபத்திரவமான உணர்ச்சி ஒன்று உள்ளுக்குள்ளே கிளறி எழ ஆரம்பித்தது.

அந்த ஆதித்திராவிடப் பெண்ணும் வெளியே பார்ப்பதும் உள்ளே பார்ப்பதுமாக உடலிலும் உள்ளத்திலும் வேதனை உறுத்தக் கலவரம் கொழிக்கும் முகத்துடன், சேஷ்டைகள் செய்துகொண்டாள். அவளுக்கும் சாந்தாவுடன் பேசக் கூச்சம். பொன்னும் பட்டுமாய்ப் பிரயாணம் செய்யும் அவளோடு மூக்காயிக்குப் பேச மனம் எழவில்லை. சேரி உயர வேண்டும் என்னும் பணியில் பல உயர் குல மாதர்களும், ஆடவர்களும் அவளுடைய சேரிக்கு அடிக்கடி வந்திருந்தும், அவளுக்குச் செல்வம், சாதி என்று இரத்தத்தில் ஊறிப்போன அச்சமுள்ள கூச்சம் இன்னும் களையப்படவில்லை. சமூக சேவக, சேவகிகளும் சேரியில் வாழ்கிறவர்களுடன் சமதையாக நடந்துகொள்கிறார்கள். ஆனாலும் அவர்களால் தங்களுடைய, தொன்றுதொட்டு வந்த தோரணையை மறக்க முடிவதில்லை. தாம் சீர்திருத்தக்காரர்கள் என்ற உயர்வைக் காட்டாமல் இருக்க முடிவதில்லை. இதன் விளைவாகச் சேரி வாழ் மக்களும் எத்துணை சௌகரியங்களை அடைந்தாலும், தம் பிறப்பாலும், சம்பிரதாய, சாஸ்திர காரணங்களாலும் வந்த தாழ்மை, இழிவு இரண்டையும் மறக்க இன்னும் அவகாசம் ஏற்படவில்லை.

ஓடாப் பொழுதை ஓட்டவாவது சாந்தாவிற்கு ஒரு பேச்சுத் துணைக்குத் தாகம், தாபம் ஏற்பட்டது.

'ஏனம்மா, நீ எங்கே போகிறாய்?' என்று சாந்தா அவர்களிடை கிடந்த மௌனக் குன்றில் குகை துளைத்துப் பேசப் புகுந்தாள்.

'நான்...புரத்துக்குப் போறேங்க!' என்றாள் மூக்காயி.

'எங்கேயிருந்து வர்றே?'

'ராசிமக்கநல்லூரிலேந்துங்க!'

இந்தப் பேச்சுத் துவக்கம் அவர்களுக்கிடை கிடந்த உயர்வு தாழ்வு இழுப்பைத் தளர்த்தி விட்டது. இருவரும் பேச்சிலிருந்து வம்பில் இறங்கினர்.

சூரியன் சிவந்தான். மாமுடிகள் பொன் பூச்சுச் சுவலித்தன. தரையில் இருளின் முலாம் ஏறியது. கூடு திரும்பும் பறவைக் கூட்டங்களின் முக்கோண அணிவகுப்புக்கள் கருத்த கூட்டங்களாய் வெட்ட வெளியில் பாய்ந்தன. வண்டியை விட்டிறங்கியிருந்த பிரயாணிகளும் வண்டிக்குள் வந்தடைந்தனர். வந்தடைந்தவர்கள் சன்னல்கள் வழியாகத் தலைகளை நீட்டி நீட்டி என்ஜின் வருகிறதா என்று ஏக்கமுடன் எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

சாந்தா மூக்காயியைப்பற்றி எல்லாம் தெரிந்துகொண்டாள்.

மூக்காயிக்கு வயது இருபத்தி ஒன்று. அவள் கணவன் பேச்சியப்பன் அவள் இருக்கும் கிராமத்து வெட்டியான். அவளுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன. தலைச்சன் பையன். அவனுக்கு மூன்று வயது. இரண்டாவது பெண் பிறந்து பத்து நாட்களில் இறந்துபோய் ஒரு வாரம் ஆகிறது. அவர்கள் ஊரில் ஆலயப் பிரவேசம் நடந்தது. அவர்கள் போகவில்லை. அவளைப்பற்றியவரையில் சாமி என்றால் சங்கிலிக் கருப்பனும், பெரிய கோவில் பெருமாளும் ஒரே சாமிதான். ஒரு சாமியைத் தலைமுறை தலைமுறையாகக் கும்பிட்டு, திடீரென்று வேறு சாமியைக் கும்பிடுவது வேறு மதத்துக்குப் போவது போலத்தான். 'எப்படியிருந்தா என்ன அம்மா? நாங்கள் கோவில்லே நுழைஞ்சாலும், இன்னும் ஒரு ஓரத்திலே நின்னுகிட்டுக் கையைக் கட்டிக்கிட்டுத்தானே, எங்க பண்ணை நாட்டாருகிட்டே பேசணும்?' என்றாள் மூக்காயி.

தன் ஒளியெல்லாம் சுரண்டி எடுத்துக் கொண்டு, போன திசை தெரியாமல் பகலவன் ஓடி ஒளிந்தான்.

நிர்மலி அன்னை மடியில் நெளிந்து சோம்பல் முறித்து, தன் மடக்கிய மிருதுவான கைகளை உதறி, மெத்தென்றிருந்த சிவந்த கால்களையும் உதைத்துக்கொண்டாள்.

'அம்மா எனக்குப் பிறந்த பொண்ணு புறந்த உடனேதான் போயிடுச்சு. இந்தப் பாலு மாரிலே கட்டிக்கிட்டு படுத்தற

சென்னை-600 008.

வேதனைதான் பொறுக்க முடியலீங்க' என்று கூறியபடி, மூக்காயி பால் முட்டி நிற்கும் மார்பகங்களை அமுக்கிக்கொண்டாள்.

நிர்மலி சிணுங்கி முனக ஆரம்பித்தாள். 'அம்மா பச்சைப் புள்ளைக்குப் பசிக்குமே!' என்றாள் மூக்காயி, அடர்ந்த மயிருள்ள குழந்தையின் வட்ட முகத்தை வாஞ்சையுடன் கவனித்தபடி.

நிர்மலியின் சிணுக்கமும் முனகலும் அழுகைக்கு அஸ்திவாரம் கெல்லின.

'அம்மா குளந்தைக்குப் பாலு கொடுங்க அம்மா!' என்றாள் மூக்காயி.

'நான் பாலு எடுத்தாரல்லே. இரண்டு மணி ஓட்டம்தானே என்று அசட்டியா வந்தூட்டேன்' என்றாள் சாந்தா.

'பாலு என்னாத்துக்கு? உங்க பாலு கொடுக்கிறதில்லீங்களா?'

'என்கிட்டே பாலு இல்லே.'

'என்னமா அப்படிச் சொல்றீங்க? இளம் வயசா இருக்கீங்க. பெத்த புள்ளைக்குப் பாலு சுரக்கக்கூட இல்லியா?' என்று ஆச்சரியப்பட்ட மூக்காயி, பால் வெதும்பி வேதனையுறுத்தும் மார்பகங்களை இலேசாக அமுக்கி விட்டுக்கொண்டாள்.

'இல்லேயே' என்றாள் சாந்தா.

'நாங்களாச்சும் ஏழை. சோத்துக்கு இல்லாதவங்க. பால் வத்திடும்' என்றாள் மூக்காயி.

அழும் குழந்தை அலறாமல் இருக்க, அதை அணைத்துக் குலுக்கிக் குழந்தைப் பேச்சுப் பேசி, சாந்தா சாந்தம் செய்ய முயன்றாள். குழந்தையை நிற்க வைத்து ஆட்டினாள்; தோளில் சாய்த்துக் கொண்டு குலுக்கினாள்; மடியில் இட்டு உலுக்கி மன்றாடினாள்; எழுந்தாள், நடந்தாள்; அதற்குப் புரியாச் சமாதானங்கள் எல்லாம் சொன்னாள்.

'வண்டி புறப்படும் குறியையே காணோமே!' என்றாள் சாந்தா, வண்டிச் சன்னல் வழியே தலையை நீட்டிப் பார்த்து.

'வண்டி இப்பவே கிளம்பிச்சுனாலும் வீடு சேர என்ன நேரம் ஆவுமோ? குழந்தை கத்தறது பாவுமா இருக்குது!' என்றாள் மூக்காயி.

நேரம் ஆக ஆக விக்கல், விம்மல், விசிப்பு, வியர்வை இவைகளுடன் குழந்தை உரக்கக் கத்தியது. ஒரு பிரயாணி தன் சாவிக் கொத்தை ஆட்டி வேடிக்கை காட்டிக் குழந்தையைச் சமாதானப்படுத்த முயன்றார். இன்னும் ஒருவர் மினுமினுக்கும் கடிகாரத்தை அதன் கண்முன் காட்டிக் காதில் வைத்து, குழந்தையின் கவனத்தைக் கவர முயன்றார். ஒருவர் சாகசமும் சாயவில்லை. குழந்தை போன சன்மத்தில், 'பசி வந்திடப் பத்தும் பறந்து போய் விடும்' என்ற அடியைப் படித்துவிட்டு, இன்னும் நினைவில் வைத்துக்கொண்டிருந்ததுபோல விடாமல் கத்தியது. 'அம்மா புள்ளைக்குப் பசியும் அழுவையும் களை போட்டுப் போயிடும் அம்மா' என்று தீனமான குரலில் அனுதாபமுடன் மூக்காயி கூறினாள்.

சாந்தா பதில் ஒன்றும் கூறவில்லை. குழந்தையின் அழுகையை நிறுத்திவிட வேண்டும் என்ற முயற்சியில் அவள் ஈடுபட்டிருந்தாள். வெளிச்சம் மங்கிக் கொண்டிருந்தது.

'அம்மா நான் ஒண்ணு சொல்லறேன், கேப்பீங்களா? கோவிச்சுக்க மாட்டீங்களே' என்று பணிவும் பயமும் கலந்த குரலில், தயங்கியபடி மூக்காயி சாந்தாவைக் கேட்டாள்.

இந்தக் கேள்விக்கு சாந்தா சாதித்தது ஒரு நீண்ட மௌனமே. எப்படியாவது பாலைவன மணற் குன்றுபோன்ற அவள் மார்பில் பாற்கடல்போலப் பால் பொங்கி வராதா என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள்.

'அம்மா நான் என் மாரிலே பால் முட்டிக்கிட்டிருக்க, தவிக்கிறேன். உம் புள்ளை பாலுக்குத் தவிக்குது' என்று கூறி மூக்காயி, தவிக்கும் குழந்தையைக் காண முடியாமல் தவிதவித்தாள்.

சாந்தாவிற்கு என்ன பதில் சொல்லுவது என்று புரியவில்லை. அவள் கணவர் கந்தவேலு பெரிய சிவ பக்தர். காலை முழுக்கு, கட்டுக் கட்டாய் துண்ணூற்றுப் பட்டை, சிவ பூஜை, தேவார திருவாசக பாராயணம். இதற்குப் பிறகு தான் அன்றைய உலக அலுவல்கள். அவர் ஆலயப் பிரவேசத்துக்குச் சம்மதிக்கவே இல்லை. சேரிவாசிகளை எட்ட நிற்க வைத்தேதான் இன்னும் பேசுவார். அவருக்குப் பிறந்த இந்த மகளுக்கு இப்போது உயிர் தங்க வேண்டுமானால், மூக்காயியின் பாலை ஊட்டவே வேண்டும்!

இருட்டு சாந்தாவின் உள்ளும் புறமும் மண்டிக் கிடந்தது. குழந்தை அலறல் நிற்கவில்லை. எட்டி நட்சத்திரங்கள் மினுக்கியதுபோல அவள் அந்தராத்மா அதல பாதாளத்தில் அறிவுப் பொறிகள் பறந்ததுபோன்ற எண்ணங்கள் சுடர் விட்டன. மூக்காயியின் பாலைக் கொடுத்தால் என்ன என்று அவள் தாய்மை கிண்டிக் கேட்டது. கணவனின் ஆசார வழி அவளை வேண்டாம் என்று தடுத்தது.

திடீரென்று வண்டி பின் தள்ளி நகர்ந்தது. இரண்டு கணங்களில் 'குப்'பென்று விளக்குகள் ஏற்றிக்கொண்டன.

'கொண்டாம்மா, பாலூட்டினதால் பாவம் வந்தாலும் வரட்டும். பாலில்லாதே புள்ளை சாகறதைவிடப் பறச்சி பாலால் புள்ளை புழைக்கிறது ஒண்ணும் தீம்பு இல்லே!' என்று இரைந்தபடி மூக்காயி, சாந்தா கைப்பிள்ளையை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டாள்.

குழந்தையின் குரல் ஓய்ந்தது. ரயில் ஊதியது. வண்டி முன்னேறியது. பாலருந்திய அறியாப் பிள்ளை பொக்கை வாயால் இளித்துக் காட்டியது. மூக்காயிக்கும் மார்பில் பால் வேதனை ஒழிந்தது.

வீட்டை அடைந்த சாந்தாவின் கையிலிருந்த குழந்தையைத் தன் கையில் வாங்க, பூஜை முடிந்து அப்போதுதான் எழுந்த கந்தவேலு, ஆவலோடு கையை நீட்டி, மனைவியை அணுகினான். 'எங்களைத் தீண்டாதீர்கள்!' என்றாள் சாந்தா, இரண்டடி பின் எடுத்து வைத்துக்கொண்டு.

'ஏன்?'

சாந்தா ரயிலில் பச்சிளம் குழந்தைக்குப் பால் ஊட்டியதைப் பகர்ந்து, 'குளிப்பாட்டாத குழந்தையைத் தொட வேண்டாம்' என்று வாயால் மறித்தாள்.

கந்தவேலு ஒருகணம் யோசித்து நின்றான். அந்த ஸ்திரீ வண்டியில் இல்லாமலிருந்தால், குழந்தை என்னவாயிருக்கும் என்று அவன் சிந்தித்தான்.

'சாந்தா, குழந்தை குடித்தது திருமுலைப்பால். அது அப்பாலைப் பருகிப் பசி தீர்ந்தாலும், எனக்கு அப்பால் ஓர் ஞானப் பால்போல ஆகியது. இங்கே கொண்டா! அதைக் குளிப்பாட்டாதே!' என்று கூறியபடிக் கந்தவேலு பலவந்தமாகக் குழந்தையைச் சாந்தாவின் கையிலிருந்து பிடுங்கி, அதன் வாயில் முத்தமிட்டான்.

இப்பொழுதெல்லாம் அவன் ஹரிஜனங்களை எட்டி நிற்க வைத்துப் பேசுவதில்லை. தனக்குச் சமமாகவேதான் அவர்களை நடத்துகிறான்.

★

குழந்தைகளின் வயிற்றுவலிகளை துரிதமாக சமனம் செய்வது



க்ரைப்பானில்
(க்ரைப் மிக்ஸர்)

TA

ஆதித்தன் காதல்

28. பாவை முகம்

ஆதித்தன் மாமரச் சோலையிலிருந்து, கிண்ணம்போல் கவிந்த பசும்புல் வெளிக்கு அப்பால், சாலையில் செல்லும் அந்த அழகிய சிவிகையைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். எதிரே தோன்றிய கடம்பா தேவிக்கு மெல்லிய புன்னகை ஒன்றுதான் வெகுமதியாகக் கிடைத்தது. கண் வழியே சென்ற கருத்தெல்லாம் அந்த முத்துச் சிவிகையின் மீதே லயித்திருந்தது.

இதே சிவிகையை முன்பு எப்போதோ பார்த்திருப்பதுபோல் அவனுக்குத் தோன்றியது. எங்கே பார்த்தோம் என்பதுதான் நினைவுக்கு வரவில்லை. உறையூரில் இதுபோன்ற சிவிகையை அவன் கண்டதில்லை. பொன்னும் பூவையரும் நிறைந்த கடல்முகப் பட்டணம் எதிலும் கண்டதாக நினைவு இல்லை. காஞ்சி நகர் வணிகர் வீதியிலும் இதுபோன்ற சிவிகையை அவன் பார்த்ததில்லை. அரண்மனை ஆடரவையிலிருந்து வசந்த மண்டபம் செல்லும் கன்னிமாடத் தனி வழியில் கண்டிருப்பானோ? அதுவும் சரியல்ல. அமத்திக் கணிகை ஏறி வந்த முத்துச் சிவிகை இப்படி இருக்காது. அதை இப்பொழுது பார்த்தாலும் உடனே சொல்லிவிட அவனால் முடியும். அப்படியானால், இதை வேறு எங்கே பார்த்திருக்கிறான்!

கடம்பா தேவி வியப்போடு நிற்கும் அவனைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தாள். அவனுக்குத் திடீரென்று அது நினைவுக்கு வந்துவிட்டது. காஞ்சியிலிருந்து உறையூர் திரும்பிய அன்று வேகவதி நதிக் கரையில் அந்தச் சிவிகை காத்திருந்தது. பல்லவக் கோமகளும் அவள் தோழி நாகினியும் அங்கே புனலாட வந்திருந்தபோதுதான் அதைப் பார்த்தான். இதே சிவப்புப் பட்டு வைத்துத் தைத்த சிங்காரச் சிவிகைதான்! இதே வெண் குஞ்சங்கள்தான்! சந்தேகமேயில்லை!

அநுபமா தேவியின் சிவிகை என்றதும் அவன் இதயம் வேகமாக அடித்துக் கொள்ளத் தொடங்கியது. அதுவா இவ்வளவு தூரம் தனியாக வந்துவிட்டுப் போகிறது? எதற்காக இங்கே வர வேண்டும்? இங்கே யாரைத் தெரியும்? எப்படித் தெரியும்? சிவிகையில் வந்து செல்வது யார்? ஏன்?

கடம்பர் தேவியின் முகத்தில் குறும்புப் புன்னகை ஒன்[illegible] நெளிந்து சென்றது. திகைப்பினால் திகைத்து நிற்கும் ஆதித்தனைப் பார்த்து, 'உறையூர் வீரர் இதுபோன்ற சிவிகையைப் பார்த்ததேயில்லையோ?' என்று கேட்டாள்.

'உம்...' என்று அப்போதுதான் தன் நினைவு பெற்றுத் திரும்பினான் ஆதித்தன்.

'ஒரு கணம் முன்னதாக வந்திருந்தால், அந்தச் சிவிகையைப் பக்கத்திலிருந்தே பார்த்திருக்கலாமே!' என்றாள் கடம்பா.

'சரி; அதில் வந்துவிட்டுப் போவது யார்?'

கடம்பா [illegible]த்துவிட்டு, 'அது ஒரு பெண்!' என்றாள்.

'தெரிகிறது; அ[illegible]ப் பெண்ணைத்தான் கேட்கிறேன், யார் என்று?'

'ஏன், இதற்கு முன்பு எங்கேயாவது பார்த்திருப்பதுபோல் தோன்றுகிறதோ?'

'ஆமாம்; ஆனால் அந்தப் பெண்ணையல்ல; அந்தச் சிவிகையை! காஞ்சி அரண்மனைச் சிவிகைபோல் தோன்றுகிறதே!' என்றான் ஆதித்தன்.

'அரண்மனைச் சிவிகையா?'—கடம்பா தேவிக்கு இதைக் கேட்டதும் தூக்கி வாரிப் போட்டது. உடனே மெல்லச் சமாளித்துக்கொண்டு, 'அது ஏன் இங்கேயெல்லாம் வரப் போகிறது? இதேபோல் எத்தனையோ சிவிகைகளை இந்த நாட்டில் நான் பார்த்திருக்கிறேனே! அரண்மனைச் சிவிகை என்பதற்குத் தனி அடையாளம் எதுவும் இல்லையே!' என்றாள்.

அதுவும் உண்மைதான் என்று ஆதித்தனுக்குத் தோன்றியது. இந்தச் சிவப்புப் பட்டைக்கொண்டு சிவிகையைத் தூரத்திலிருந்தவாறு அடையாளம் கண்டு கொள்ள முடியாதுதான். மேலும் காஞ்சிக் கோமகளின் சிவிகை இங்கெல்லாம் வருவதற்கு ஒரு நியாயமும் இல்லை; ராஜகுமாரி புறப்பட்டு வருகிறாள் என்றால், படையோ பரிவாரங்களோ இல்லாமலா வருவாள்? இந்த எண்ணம் தோன்றியவுடன் ஆதித்தனுக்குச் சப்பிட்டுப் போய்விட்டது. எத்தனையோ வணிகரும், கோட்டக்காரரும் சிவிகைகள் வைத்திருக்கிறார்கள். அவர்களில் யாராவது ஒருவர் வீட்டுப் பெண்ணாக இருக்கலாம் என்ற எண்ணம் தோன்றவே, அவன் திரும்பி நடக்கத் தொடங்கினான்.

'முன்னே ஒரு நாள் காலையில் உறையூர் போகும் வழியில் வந்தீர்கள். இப்பொழுது இந்த மாலையில் காஞ்சிக்குப் போகும் வழியில் வந்தீர்களோ?' என்று விசாரித்தாள், அந்தச் சோலைக் குயிலாள்.

ஆதித்தன் இதற்கு இரண்டும் கெட்டானாகத் தலையை அசைத்து வைத்தான். இப்பொழுதுதான் அவனுக்கு உண்மையிலேயே தான் வந்த காரியம் நினைவுக்கு வந்தது. தன் தந்தையிடம் முடங்கலைக் கொடுத்துவிட்டுச் சென்ற செம்பியனைப் பார்க்க வேண்டும் என்றே இத்தனை வேகமாக வந்திருந்தான். 'அது செம்பியனுக்கு எப்படிக் கிடைத்திருக்கும்? ஒருக்கால் இந்தச் சிவிகையில் வந்த பெண் இதற்குக் காரணமாக இருந்திருப்பாளோ? கடம்பா தேவி உண்மையைத் தெரிந்துகொண்டே மறைக்கிறாளோ? பார்க்கப் போனால், இப்பொழுதுதான் அந்த முடங்கலுக்கும் இந்தச் சிவிகை வந்து செல்வதற்கும் ஏதோ பொருத்தம் இருப்பதுபோல் தோன்றியது. அந்தச் சிவிகையைப் பின்பற்றிச் சென்று பார்த்துவிட்டால் என்ன என்று எண்ணினான்.

'ஆமாம்; செம்பியன் எங்கே போயிருக்கிறார்?' என்று அவளைப் பார்த்துக் கேட்டான்

'இப்பொழுது வருகிற நேரந்தான்!'

'காலையில் வெளியூர் எங்கேயாவது சென்றிருந்தாரா?'

கடம்பா தேவி இதற்குப் பதில் சொல்லாமல் கொடி படர்ந்த குடிசை வாயிலைப் பார்த்துவிட்டு, 'இதோ வந்துவிட்டேன்!' என்று சொல்லிக்கொண்டே முன்னால் ஓடினாள்.

குடிசையின் வாயிலில் மின்னல் ஒன்று வீசிச் சென்றதைப்போல் பாவை முகம் ஒன்று தோன்றி மறைந்ததை அவன் கண்கள் கண்டன. அவனுடைய வியப்பு மேலும் அதிகமாகியது. அந்த முகம் ஒரு பெண்ணுடைய முகம் போலிருந்தது. அதற்குமேல் அந்தச் சிவிகையைப் பின்பற்றிச் செல்லும் எண்ணத்தை அவன் விட்டுவிட்டான். இன்றுள்ள மாறுதல்களில் எல்லாம் ஒரு தொடர்பு இருப்பதுபோல் அவனுடைய உள்ளுணர்வுக்குப் பட்டது. திடீரெனத் தன்னையறியாத ஒரு பரவசம் அவனுக்கு உண்டாயிற்று. அந்தப் பரவச நிலையில் அவன் சிறிது நேரம் மயங்கி நின்றான். அவனை



யறியாமலே அவன் கால்கள் குடிசையை நோக்கிச் சென்றன. நல்ல காலமாக அவன் முன் ஜாக்கிரதையாகவே ராஜ உடைகளை அணியாமல் சாதாரண வீர னுடைய உடையில் வந்திருந்தான். அந்த முன் யோசனையை முன்னிட்டு, அவன் தன்னையே பாராட்டிக் கொண்டான்.

சற்றைக்கெல்லாம் வெளியே வந்த கடம்பா தேவியைப் பார்த்து, 'இங்கே வேறு யாராவது வந்திருக்கிறார்களா, என்ன?' என்று கேட்டான் ஆதித்தன்.

'ஆம்; ஊரிலிருந்து என் தங்கை வந்தி ருக்கிறாள்! யாரோ அந்நியர் வந்திருக் கிறார்கள் என்று வெளியே வர அஞ்சு கிறாள்!' என்று இடையிலே தண்ணீர்க் குடத்தை எடுத்து வைத்துக் கொண் டாள்.

'இன்னும் செம்பியனைக் காணோமே!'

'வந்து விடுவார்; வருகிற நேரந்தான்!'

ஆதித்தன் குதிரையை ஒரு மரத்திலே கட்டிவிட்டு அந்தி ஒளி மங்கிவரும் அந்தப் பிரதேசத்தின் அழகை ஒரு முறை சுற்றிப் பார்த்தான்.

'இருங்கள்; ஒரு நொடியில் தண்ணீர் கொண்டு வந்துவிடுகிறேன்!' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டாள், கடம்பா தேவி.

அவள் சென்று திரும்பும்வரையில் அவன் உட்காரக்கூட இடமின்றி அந்தச் சோலையையே சுற்றி வந்தான். அவனு டைய சிந்தனையெல்லாம் காஞ்சிக்கும் உறையூருக்குமாக மாறிமாறிப் போய் வந்துகொண்டிருந்தது. இந்தக் குடிசைக் குத் திடீரெனத் தன் வாழ்வில் ஒரு முக் கியப் பங்கும் முக்கியத்துவமும் உண் டாகி விட்டதாக அவனுக்குத் தோன்றி யது. தான் வந்த காரியத்தைவிட அந் தக் குடிசையினுள் இருப்பவளை ஒரு முறை சரிவரப் பார்த்தால், போதும் என்பதே முக்கியமாகப் பட்டது. அந்தக் குடிசையின் உள்ளே இருப்பவள் கடம்பா தேவியின் சகோதரி என்பதை யும் சற்றுமுன் கண்டது காஞ்சிக் கோம களின் சிவிகையல்ல என்பதையும் நம்ப அவன் உள்ளுணர்வு மறுத்தது. தன் உயி ரினும் இனிய பொருள் ஒன்று அங்கே ஒளிந்திருப்பதாகவே அவனுக்குப் பட் டது. அது சாத்தியமோ, சாத்தியமில் லையோ, அப்படி இருந்தால்தான் தேவலை போல் தோன்றியது. அது உண்மை யாகவே இருக்க வேண்டும் என்று அவன் எண்ணிக்கொண்டான்.

அன்று அபராஜிதனிடமிருந்து வந்த ஓலையும் அதற்கு உடனே அனுப்பிய மறு மொழியும், செம்பியனைத் தேடி வந்த காரணமும் அந்தக் காரணத்தை உறு திப்படுத்துவதுபோல் காணப்பட்ட சிவிகையும் அவனுடைய நினைவுத் திரையிலே திரும்பத் திரும்பத் தோன்றி மறைந்தன. காஞ்சியில் அப ராஜிதன் இப்போது இல்லை என்பது நிச்சயமாகத் தெரிந்ததால், காஞ்சிக் கோமகளின் சிவிகை இங்கே வந்து சென்றதற்கு முக்கியக் காரணம் இருக்க வேண்டும் என்று தோன்றியது. ஏதோ அவசரமும் அவசியமுமான சம்பவ த்தை முன்னிட்டே இதெல்லாம் நேர்ந் திருக்க வேண்டும் என்றும் பட்டது.

எல்லாவற்றையும் கிட்டத்தட்ட ஊகி த்து விட்டதுபோல் தோன்றினாலும் காஞ்சி இளவரசி இங்கே எப்படி வந்து சேர்ந்தாள், அவளுக்குச் செம்பியனை எப்படித் தெரியும், எப்போது தெரியும் என்பதெல்லாம் அவனுக்கு எட்டவே யில்லை.

கடம்பாதேவி திரும்பி வந்ததும், 'நான் கேட்டதற்கு நீங்கள் விடையே தரவில்லையே— செம்பியன் வெளியூர் எங்கேயாவது போய்விட்டு வந்தாரா?' என்று கேட்டான்.

'நேற்று ராத்திரி போனார்; இன்று மதியத்துக்குத்தான் திரும்பி வந்தார். எங்கே போகிறாரோ, வருகிறாரோ, நான் என்ன கண்டேன்? எல்லைக்காவல் வேலை வேண்டாம் என்று முட்டிக் கொள்கி றேன். அவர் கேட்டால்தானே! எங்கே, எந்தச் சமயம் புறப்படும்படி இருக் குமோ, எப்போது திரும்பும்படி நேருமோ என்பது ஒன்றும் நிச்சயமில் லாத பிழைப்பு!' என்று அலுத்துக் கொண்டாள் கடம்பா தேவி.

'சரி; இந்தச் சிவிகை இங்கே எப் போது வந்தது? அதுவாவது நிச்சயமா கத் தெரியுமோ?'

கடம்பாதேவி நினைத்தாலும் மறை க்க முடியாத கேள்வி ஒன்றைப் போட்டு விட்டதாக மகிழ்ந்தான் ஆதித்தன். ஆனால், அழகும் இளமையும் படைத்த கடம்பா தேவி, அந்தக் கேள்வியை அலட் சியமாக ஒதுக்கிவிட்டு, 'சிவிகை என்ற தும் ஞாபகம் வந்துவிட்டது. என் சகோதரியை நீங்கள் பார்க்க வேண் டாமா? அவளுக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை. அறிமுகப்படுத்தி வைக்க மறந்தே போய்விட்டேனே!' என்று கூறி னாள்.

'அதனால் என்ன; அப்புறமாகத் தெரிந்துகொண்டால் போகிறது. அவ சரம் என்ன?' என்றான் ஆதித்தன் இதைச் சொல்லி முடிப்பதற்குள் அவன் இதயமே வெடித்துவிடும்போல இருந் தது. அவள் கடம்பா தேவியின் உண்மை யான சகோதரியாக இருப்பதை விரும் பாதது போலவே, அவள் பல்லவ ராஜ குமாரியாக இருப்பதையும் அவனால் தாங்க முடியாதுபோலிருந்தது. இரண் டுக்கும் நடுவே உள்ள ஓர் அவஸ்தையில் இருப்பதே அவனுக்கு ஆறுதலைத் தந் தது.

'அந்தச் சிவிகை எப்போது வந்தது என்று கேட்டேனே...'

'ஆமாம்; கேட்டீர்கள். ஆனால் அதோ அவரே வந்துவிட்டார்! எல்லாம் அவரே சொல்லட்டுமே!' என்று கூறிவிட்டு, அவள் அவனை எதிர்கொண்டழைக்கப் போனாள்.

பசும் புல்வெளியில் பாய்ந்து, மாமரத் தோப்பை நோக்கி வந்துகொண்டிருந் தது, செம்பியன் குதிரை. ஆதித்தனைக் கண்ட அவன் முகத்தில் ஒரு மலர்ச்சி தோன்றியது. ஆரோக்கியமும் நல்ல திடகாத்திரமான கட்டுடலும் வாய்ந்த செம்பியனைத் தீராத ஆசையோடு பார்த் துச் சொக்கிப் போனாள் கடம்பாதேவி. கணவனைக் கண்ட காரிகையர் முகம் இப்படிக் களிப்புற்றுத் துலங்குவதை ஆதித்தன் வேறெங்கும் கண்டதே யில்லை.

நினைத்ததும்—நடந்ததும் ..... சந்தனு



இயற்கையில் வளர்ந்த அன்றிலும் பேடையும்போல அவர்கள் அவனுக்குத் தோன்றினார்கள்.

29. இரு சகோதரிகள்

ஆதித்தன் உறையூர் இளவரசன் என் பது செம்பியனுக்குத் தெரியாதது போலவே, சிவிகையில் வந்த இளம் பெண்கள் இன்னார் என்பதும் தெரியாது. அவர்களில் ஒருத்தியைக் கண்டதுமே கடம்பாதேவி தன் சகோதரியாக வரி த்து விட்டதுபோலவே அவனும் ஒருத் தியைத் தன்னுடன் பிறந்தவளாக வரித் துக்கொண்டு விட்டான். அதற்குமேல் அவனும் சரி, அவளும் சரி; அவர்களு டைய வரலாற்றையெல்லாம் துருவித் துருவிக் கேட்டு, அவர்களைத் துன்பப் படுத்தத் துணியவில்லை.

முதல் நாளைக்கு முதல் நாள் இரவு பாகூர்க் கோட்டத்து அதிகாரியான மார்த்தாண்ட வர்மனிடமிருந்து அவ னுக்கு ரகசிய அழைப்பு வந்தது. கடம்பாதேவி அப்போதுதான் கண் ணயரத் தொடங்கியிருந்தாள். பாகூருக்குப் போக வேண்டிய அவசி யத்தை அவள் உணர்ந்துவிட்டால், அன்று இரவு அவள் நிம்மதியாகத் துயில்கொள்ள மாட்டாள். எனவே, அவன், அவளை மெல்லத் தட்டி எழுப்பி, 'கடம்பா! நீ தூங்கு... மார்த்தாண்ட வர்மர் நெடுஞ்சாலைக்கு வந்திருக்கிறா ராம். போய்க் கேட்டுவிட்டு முடிந்தால் உடனே திரும்பிவிடுகிறேன். சிறிது நேரமானாலும் கவலைப்படாமல் தூங்கு!' என்று கூறிவிட்டுப் போனான்.

கடம்பாவின் துயில் போசுக்கெனக் கலைந்து விட்டது. இருளிலே அகல் விளக்கைத் தாண்டிவிட்டு, அவள் கொட்டுக் கொட்டென இரவெல்லாம் விழித்திருந்தாள். பொல்லெனப் புலரும் வேளையில்தான் சோலையிலே குதிரை வரும் குளம்படியோசை கேட்டது. 'வரட்டும்; சொல்கிறேன்!' என்று கறுவிக் கொண்டே வாசலில் வந்து நின்று பார்த்தபோது, அவள் பிணக்கமெல்லாம் பறந்தோடிப் போய்விட்டது. அங்கே வந்திறங்கிய சிவிகையிலிருந்து இரண்டு இளம் பெண்கள் இறங்குவதைக் கண்டு, அவள் மலைத்து நின்றாள். செம்பியன் சிரித்த முகத்தோடு அவள் அருகில் வந்து, 'இவர்கள் எல்லாரும் யார் என்று பார்க்கிறாயா? நமக்கு உறவுள்ள பெண் கள்தான். ஒருத்தி எனக்குச் சகோதரி; மற்றொருத்தி உனக்குச் சகோதரி!' என்றான்.

அந்த உறவு அவளுக்கு மிகவும் பிடித் துப் போய்விட்டது. எழிலும் யௌவன மும் கொண்ட இளையவளைப் பார்த்து, 'வாம்மா! என்னை யாரோ என்று பார்க் காதே... உன் சகோதரிதான்!' என்று வாஞ்சையோடு கூறினாள்.

பிறகு செம்பியனிடம் தனியாக வந்து, 'இந்தப் பெண்ணால்தான் இன்று நீங்கள் பிழைத்தீர்கள். இல்லாவிட்டால் உங்களை என்ன செய்திருப்பேன் தெரியுமா?' என்று கேட்டாள்.

செம்பியன் சிரித்தான். 'இதோ பார், இரைந்து பேசாதே! என்னால் இவர்கள் பிழைத்தார்கள். இப்பொழுது இவர் களால் நான் பிழைத்தேன். போதுமா?' என்றான்.

'இவர்கள் உங்களால் பிழைத்தார்களா? அப்படி என்ன, இவர்களுக்கு ஆபத்து வந்துவிட்டது?'

'நாக்கன் கண்களில் இவர்கள் தென் பட்டு விட்டால், இவர்களுக்கு வேறு என்ன ஆபத்து வரவேண்டும்? அவன் கண்களில் படும்படி அகப்பட்டுக் கொள்ளாமல், இவர்களைத் தப்புவித்து அழைத்து வந்ததே பெரிய காரியமாகப் போய்விட்டது. நாக்கனுடைய ஆட்கள் இவர்களுடைய சிவிகையை மறித்து, இவர்களுடைய பொருள்களை அபகரித் துக் கொண்டார்கள்!' என்றான்.

'ஐயையோ! அப்புறம்? நீங்கள் எப் படி அங்கே போய்ச் சேர்ந்தீர்கள்?'

'பல்லவச் சக்கரவர்த்தி கோமளத் தீவுக்கு வந்து இறங்கியிருக்கிறாராம். நாக்கனுடைய உதவியால் முத்தரையன் அவரைச் சந்திக்கப் போகிறானாம். அது விஷயமாகப் பேசவே மார்த்தாண்ட வர்மர் என்னை ரகசியமாக அழைத் திருந்தார். நாளை மறுநாள் சக்கர வர்த்தியும் அந்த முத்தரையனும் கோமளத்து ஏரிக்கரை அருகேயுள்ள பாறையில் சந்திக்கப் போகிறார்கள் என்று தெரிகிறது. அதை விசாரித்து அறியப் போன இடத்தில்தான் நாக்க னுடைய ஆட்கள் இவர்களை வழி மறித்து இம்சிப்பதைக் கண்டேன். என்னை அவர் கள் அடையாளம் கண்டு கொள்ளு முன்னே, அவர்களிடையே பாய்ந்து வாளைச் சுழற்றினேன்!'

'உம்...' என்று பயத்தினால் பெரு மூச்சு விட்டாள் கடம்பாதேவி.

'இதைக் கேட்கும்போதே பயப்படு கிறாயே! அதோ அந்தப் பெண். அதாவது உன் சகோதரி இருக்கிறாளே, அவள் என்ன தீரமாக அவர்களை எதிர்த்து நின்றாள், தெரியுமா?'

'இவள்தானே எதிர்த்து நின்றாள்? தெரியாமலா அவளை என் தங்கை யாக்கிக்கொண்டேன்? எனக்குத் தங்கை யாகக் கூடியவள் எதிர்த்ததில் என்ன ஆச்சரியம்?' என்றாள் கடம்பா. பிறகு மெல்லிய குரலில், 'நான் பெருமூச்சு விட்டது அதற்காக அல்ல; நீங்கள் தனியாக அவர்களுக்கு நடுவில் பாய்ந் தீர்களே — ஏதாவது நேர்ந்திருந்தால் என்ன ஆகிறது என்று எண்ணிப் பார்த் தேன். அதற்குத்தானே இந்த வேலையே வேண்டாம் என்று கதறுகிறேன்!' என்று கூறினாள்.

'சரி சரி; வேறு வேலையைப் பற்றிப் பின்னால் பேசிக்கொள்ளலாம். இப் பொழுது நடந்ததைக் கேள். அவர்கள் நாக்கனுடைய ஆட்கள் என்பது அப் புறம்தான் தெரிந்தது. என் வாளுக்கு எதிரே நிற்க முடியாமல் அவர்கள் கையில் கிடைத்த பொருள்களை எடுத்துக் கொண்டு இருளிலே ஓடிவிட்டார்கள். அப்புறம் நான் கூடவே இருந்து இவர் களை அழைத்து வந்தேன்!' என்று முடித்தான் செம்பியன்.

'இவர்கள் யார் என்பதைச் சொன்னார் களா? ஏன் இந்த இருட்டில் பயணம் புறப்பட்டார்கள் என்று விசாரித்தீர் களா?'

'அவ்வளவு விவரமாக நான் கேட்க வில்லை. பல்லவ இளவரசிக்காக இவர்கள் உறையூர்ப் பெரிய சோழருக்கு ஓலை கொணர்ந்திருப்பதாகத் தெரிகிறது!'

'என்னது!'

'இவர்கள் பல்லவ இளவரசியின் அந்த ரங்கத் தோழிகள் என்று சிவிகை சுமந்த ஆட்கள் கூறக் கேட்டேன். நம் முடைய பெரிய சோழரைப் பார்க்கப் போகிறார்கள் என்பது தெரிந்ததும், அதற்குமேல் இவர்களைப் பத்திரமாகக் கொண்டு போய்ச் சேர்ப்பது என் கடமை என்று கையோடு இங்கே அழைத்து வந்துவிட்டேன். இவ்வளவு தூரம் ஆன பிறகு, இவர்களை இனித் தனியே அனுப்புவது நல்லதல்ல என்று தோன்று கிறது. நீ என்ன நினைக்கிறாய்?' என்று கேட்டான் செம்பியன்.

'நான் என்ன தனியாகப் புதிதாக நினைக்கப் போகிறேன்? அது எவ்வளவு முக்கியமான ஓலையோ, என்னவோ? அதைப் பகலில் எடுத்துப் போனால், நேற்று வந்த ஆட்கள் மறுபடியும் வந்து மறிக்காமலா போய்விடுவார்கள்? அவர் களை இங்கே அழைத்து வந்ததே சரி; அவர்கள் எனக்குத் துணையாக இருப் பார்கள். அவர்கள் கொண்டு வந்த

குழந்தைகளின்
எந்த வியாதிக்கும் உயர்ந்த
சிகிச்சை அளிப்பது

"பாலசாதி"

முற்றிலும் ஆயுர்வேத முறையில் தயாரிக்கப்பட்டது. குழந்தை களுக்கு ஏற்படும் மாந்தம், காய்ச் சல், இருமல், மலச்சிக்கல், பல் முளைக்கும்போது ஏற்படும் வலி முதலியவைகளை அடியோடு அகற்றிவிடுகிறது.

ஒரு டப்பியின் விலை ரூ. 1.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

விவரங்களுக்கு கீழ்க்கண்டவருக்கு எழுதுக:

VAIDYA J. G VARADH OFFICE, NADIAD.

ஸ்டாக்கிஸ்டுகள்:—

தாமோதர் & கம்பெனி.
113, நைனியப்ப நாயக்கன் தெரு,
சென்னை-3.

ஓலையை, இன்று இரவு புறப்பட்டுப் போய் நீங்களே கொடுத்துவிட்டு வந்து விடலாம்!' என்றாள் அவள்.

'ஏது, ஏது? புதிதாக என்ன சொல்லப் போகிறேன் என்று சொல்லிக்கொண்டே, இவ்வளவு யோசனைகளையும் சொல்லி விட்டாயே! பெரிய சோழரை நான் எப்படிப் போய்ப் பார்ப்பது? பார்ப்பது இருக்கட்டும்; இவர்கள்தான் என்னை நம்பி, இந்த ஓலையைக் கொடுப்பார்களா?' என்றான் செம்பியன்.

'அவர்களைக் காப்பாற்றிய உங்களிடம் அவர்களுக்கு இந்த நம்பிக்கைகூட இருக்காதா? அவர்கள் நம்பி ஓலையைக் கொடுத்தால் சரி; இல்லாவிட்டால் நீங்கள் துணையாகப் போய்விட்டு வர வேண்டியதுதான்!'

'அப்பொழுது மட்டும் தனியாக இருக்க உனக்குப் பயமாக இருக்காதா?'

'இருக்கத்தான் இருக்கும்; நானும்தான் வருகிறேனே! உங்களுடைய ஊரையெல்லாம் நான் எப்போது பார்ப்பது?'

'அதற்கு நல்ல சமயம் பார்த்தாய்!' என்று கூறிவிட்டு, அவர்களைக் கவனிக்கும்படி அவளை அனுப்பினான் செம்பியன். அதிகமாகப் போனால், அவளுடைய பிடிவாதம் அதிகரித்துவிடப் போகிறதே என்ற பயம் வந்துவிட்டது அவனுக்கு.

அன்று பகல் எல்லாம் அவளுக்கு உறையூர் போகும் எண்ணம் வலுக்காமல் இருக்க என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ, அத்தனையும் கவனித்துக் கொண்டிருந்தான் அவன். ஆனால், அன்று மாலையில் கடம்பா தேவியே வந்து, 'பார்த்தீர்களா? நான் என்ன சொன்னேன்? அவர்களை ஆபத்தில் காப்பாற்றிய உங்களை நம்பாமல் போய்விடுவார்களா? பெரிய சோழரிடம் சேர்ப்பிக்க வேண்டிய ஓலையை அவர்கள் தனியே எடுத்துச் செல்ல அஞ்சுகிறார்கள், அதற்குப் பதிலாக நீங்களே போய்க் கொடுத்துவிட்டு வந்தால் போதும் என்று என்னிடம் சொல்கிறார்கள். பாவம், அவர்களைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது!' என்றாள்.

'அப்படியானால் நான்மட்டும் அவ்வளவு தூரம் போய், கொடுத்துவிட்டு வரவேண்டியிருக்குமே! அது உனக்குப் பரிதாபமாக இல்லையாக்கும்? அப்படித்தானே?'

கடம்பா தேவி உடனே அப்படியும் இப்படியும் ஒரு தடவை பார்த்துவிட்டு, அவசர அவசரமாக அவன் கன்னத்தை இரு கையாலும் தடவி, நெட்டி சொடுக்கி முறித்தாள். உண்மையில் அவளுக்கு இப்போது யாரிடம் பரிதாபம் இருந்தது என்பதைக் காட்டியது, அந்தச் செய்கை.

'எப்போது புறப்பட வேண்டும் என்கிறாய்?'

'அது எப்போதோ எனக்குத் தெரியாது. எல்லாம் ஒரு ஜாமம் படுத்துத் தூங்கிவிட்டு, இரண்டாம் ஜாமத்தில் புறப்படலாம்! அப்போது போனால் போதும்!' என்று அவன் முகத்தைப் பார்க்க வெட்கி, வேறு எங்கோ பார்ப்பவளைப் போலக் கூறினாள்.

'படுத்தால் அப்படியே தூக்கம்தான்! என்னை எழுப்ப உன்னால் முடியாது!' என்றான் அவன், குறும்பாக.

'தூங்குகிறவர் முகத்தைப் பாருங்கள், முகத்தை! நன்றாகத் தூங்குவீர்களே! நன்றாகத் தூங்க விடுவீர்களே!' என்று பழித்தாள்.

அன்று இரவு முதல் ஜாமத்தில், கடம்பாதேவி அவனிடம், 'இந்த இரண்டு பேரிலே யார் உங்களுக்கு உயர்வாகப் படுகிறாள், சொல்லுங்கள் பார்ப்போம்!' என்று கேட்டாள்.

'நான் கவனிக்கவில்லையே! பெரியவள் தானே!'

'பெரியவள்தான் உங்கள் சகோதரி. அழகாக இளையவளாக இருக்கிறாளே, அவள் எனக்குச் சகோதரி. இவர்களிலே எதையும் முடிவு செய்ய வேண்டியவள் யார் தெரியுமா?'

'இளையவளா?'

'ஆமாம். இவளைப் பார்த்தாலே ராஜா மகள்போல இருக்கிறாளே, அப்படியானால் ராஜ குமாரி எப்படி இருப்பாள்? நீங்கள் பார்த்திருக்கிறீர்களோ?'

'நான் காஞ்சிக்குப் போனதேயில்லை. பல்லவ இளவரசி மிகவும் அழகாக இருப்பார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்!'

'ஹ்ஹூம்; கேள்விப்பட்டிருக்கிறீர்களா?'

செம்பியன் சட்டென்று பேச்சை மாற்றி, 'பல்லவ இளவரசியிடம் உனக்கு ஏன் கோபம் வருகிறது? உன்னைவிட ஒருத்தி அழகு என்றால், அதை என் மனம் எப்படி ஒப்பும்? எனக்கு நீதான் அழகு. நீதான் ராணி! நீதான் எல்லாம்!' என்று மோவாயைப் பிடித்தான்.

'சரி, சரி; அவர்கள் காதில் விழப் போகிறது. ஓலையை எடுத்துக்கொண்டு புறப்படுங்கள். காரியம் ஆனதும் காலையிலேயே திரும்பி விடுங்கள்!' என்று கண்டித்துக் கூறினாள்.

'உத்தரவு!' என்று புறப்பட்டான் செம்பியன். அந்த உத்தரவை அட்சரம் விடாமல் அப்படியே நிறைவேற்றுவதைப் போல, ஓலையைக் கொடுத்து விட்டு உடனே திரும்பிவிட்டான்.

'சிவிகையில் பெரியவள் திரும்பி விட்டாளே, ஏன்?' என்றான் செம்பியன். ஆதித்தனை வரவேற்கும் புன்னகை அவன் முகத்திலே நெளிந்தது.

'ஓலை சேர்ந்து விட்டதைப் போய்ச் சொல்ல வேண்டாமா? உங்களைப்போல் குதிரையில் போகிறவர்களையெல்லாம் துரத்திக்கொண்டிருந்தால்...' என்றாள் கடம்பாதேவி.

'உன் தங்கை?'

'அவள் இருப்பாள். இங்கேயே இருக்கச் சொன்னாலும் இருப்பாள்போலிருக்கிறது. உறையூர் வீரருக்கு எதிரே வர அவளுக்கு என்ன வெட்கம் என்கிறீர்கள்?' என்று சிரித்தாள் அவள்.

ஆதித்தனைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டியவாறே, அவனும் சிரித்தான்.

(தொடரும்)

அனுபவ விமர்சனம்!



பாடலால் பெயர் பெற்றவர்கள்

மா.ரா. இளங்கோவன்

சில துறைகளில் நண்பர்கள் சிறந்த துணையாய் அமைகின்றார்கள். மகனுக்கு மணமுடிக்க வேண்டுமென எண்ணும் பெற்றோர் நேரிடையாக மகனையே கேட்கத் தயங்குகின்றனர். மகனுடைய நண்பனுடைய துணையை நாடுகின்றனர். அதுமுதல் அந்தக் குடும்பத்தில் நண்பனுக்கு நல்ல செல்வாக்கு ஏற்படுகின்றது. அவன் தன் தோழனின் கருத்தை விளக்கமாகப் பெற்றோர்க்குக் கூறி, ஆவன செய்கின்றான்.

மகளிடம் காணும் உடல் மெலிவையும் உள்ளச் சோர்வையும்கூட அவள் தாய் அவளுடைய தோழிகளின்மூலம் கேட்டுணரவே விரும்புவாள். அவ்வாறு கேட்பதில் அவளுக்கோர் மகிழ்ச்சி ஏற்படுகிறது என்றாலும்கூட, உண்மையான நிலையை அப்போதுதான் அவளால் உணர முடியும் என்றும் கூறலாம். இந்த முறை எப்படியோ வழக்கமாக அமைந்து விட்டது.

தலைவிக்கு உற்ற துணையாகத் தோழி அமைகின்றாள் அல்லவா? தலைவி தலைவனைப்பற்றிக் கொண்ட கருத்துக்களையும் அவனோடு உறவு கொள்வதுபற்றிய கருத்துக்களையும் அவளுக்குப் பதிலாகத் தோழியே கூறுவாள். தலைவியும் தலைவனும் தங்கள் கருத்துக்களை வெளிப்படையாகக் கூறத் தோழியின் இடையீடு நன்மையாக உள்ளது.

தலைவனும் தலைவியும் நட்பு கொண்டனர். நாளும் கண்டனர். ஊராரும் இதனை அறிந்தனர். தாய் மகளை இனித் தினைப் புனம் காக்க அனுப்பக்கூடாது என்ற முடிவுக்கு வந்துவிட்டாள். தாய் தன்னுடைய இந்த முடிவைச் செயல் படுத்துவதற்கு அகப் பொருளார் 'இற் செறித்தல்' என்று பெயர் கூறுவர். இற் செறித்தல் என்றால் வீட்டிலேயே அடைத்து வைத்திருத்தல் என்பது பொருள்.

தலைவன் வழக்கம்போலத் தலைவியைக் காண வந்தான். தாயின் செயலை அவனுக்கு எடுத்துக் கூறினாள், தோழி. அதைக் கேட்டு அவன் திடுக்கிடுவான்: 'ஐயகோ, அப்படியா நடந்துவிட்டது! அதனாலென்ன, இனி அப்படி நடவாதிருக்கும் வகையில் நான் விரைவில் அவளை மணந்து கொள்கிறேன்!' என்று அவன் கூறு

கவை மகன்

★

வான் என்றெல்லாம் அவள் எதிர்பார்த்தாள். ஆனால், அவனோ அவள் கூறியதைக் கேட்டுத் திடுக்கிடவுமில்லை. அவள் எண்ணியதுபோல மணந்துகொள்ள விரைவதாகக் கூறவுமில்லை. 'அப்படியானால் இரவில் வந்து நான் அவளைக் கண்டு மகிழ்வேன்; பின்னர் மணந்து கொள்வேன்' என்று கூறிவிட்டான். பகலில் மகள் வெளியில் செல்லக்கூடாது என்றுதானே தாய் எண்ணி, இற்செறித்துள்ளாள். இரவில் காணுவதில் தடையேதுமிருக்காதே என்றெண்ணி, அவ்வாறு கூறினான்.

தோழி தான் கூறுவதைக் கேட்டு அவன் திடுக்கிடுவான் என்று நினைத்தாள். ஆனால், அவனோ அவளே திடுக்கிடும் வகையில் பதிலைக் கூறிவிட்டான். தலைவியைத் தலைவன் இரவுக் குறியில் வந்து காணுவதும் வழக்கமாகும். தலைவியோ அவன் வரும் வழியின் துயரையெல்லாம் எண்ணித் துயர்ப்படுவாள். அவன் வந்து சேரும் வரைத் தோழி அவளுக்கு ஆறுதல் கூறுவாள். தலைவன் இரவில் வருவதைத் தோழி தடுக்கலாம் அல்லது அவன் வரும் வழியின் கொடுமையை எண்ணித் தலைவி கலங்குவதையாவது அவள் தடுக்கலாம். இரண்டையும் செய்ய முடியாமல் அவள் துன்புறுவாள். காதல் வாழ்வின் சிறப்பை உணர்ந்தவள் அல்லவா அவள்! அதனால் தான் தலைவியிடம் கொண்ட அன்பின் மிகுதியால் அவளைக் காண வரும் தலைவனைக் கடிந்து கூற அவள் தயங்குவாள்; காதலன்பால் கொண்ட அன்பின் மிகுதியால், அவன் வரும் வழியின் கொடுமையைப்பற்றி எண்ணி வருந்தும் தலைவியையும் கடிந்துகொள்ளத் தயங்குவாள். தோழியின் இந்த இக்கட்டான நிலையை விளக்கவல்லதொரு நிகழ்ச்சியினைக் காண்போம்!

'இரவில் வந்து காணுகிறேன்!' என்று கூறிய தலைவனைப் பார்த்துப் பேசுகின்றாள் தோழி:

'தலைவ, நீ தலைவியிடம் மிகுந்த அன்பு கொண்டமையின், வழியில் உள்ள துன்பங்களையெல்லாம் எண்ணாமல் வருகின்றாய். மீன்கள் மிக்குள்ள கழியை நீந்தி, நீ வருகின்றாய். அதிலுள்ள வளைந்த கால்களையுடைய முதலை அவ்வழி வருவாரைத் துன்புறச் செய்யும் என்று நாங்கள் கேட்டிருக்கின்றோம். எனவே, நீ அக்கழியை நீந்தி வரும்போது உனக்குத் துன்பம் வந்துறுமோ என்று தலைவி அறியாமையால் அஞ்சுகிறாள். நானோ இரட்டைப் பிள்ளைகள் நஞ்சினை உண்டு விட்டால், இருவரையும் கவலையோடு பேணும் தாயைப் போலுள்ளேன். எனவே, நானும் நீ இரவில் வருவது குறித்து அஞ்சுகிறேன்.'

தலைவி 'அறியாமையால்' அஞ்சுகிறாள் என்று தோழி கூறியதற்குக் காரணம் யாது? தலைவனது அன்பையும் வழியில் நிகழும் ஏதத்திற்கு அஞ்சாத அவனது ஆண்மையையும் தலைவி அறிந்தவள். ஆயினும் அவனைப்பற்றி மிகுதியாக எண்ணும்போது, அவற்றை மறந்து விடுகிறாள். அதனால், அஞ்சுகிறாள் என்பதைப் புலப்படுத்தவே, தோழி அவ்வாறு கூறினாள் எனக் கொள்ளலாம்.

இனி, இரட்டைப் பிள்ளைகள் நஞ்சினை உண்டு விட்டால் இருவரையும் கவலையோடு பேணும் தாய்க்குத் தோழி தன்னை உவமித்துக்கொண்டமைக்குரிய காரணத்தைக் காண்போம்: தலைவன் தலைவிபால் உள்ள அன்பின் மிகுதியால் வருகின்றான். எனவே, அவனைத் தடுப்பது அவளால் முடியவில்லை. அவனுக்குத் துன்பம் வருமென்று தலைவி வருந்துகிறாள். எனவே, இரவுக் குறிக்கு ஒப்புக்கொள்ளவும் அவளால் முடியவில்லை. அதனால் தலைவனுக்கும் தலைவிக்கும் துன்பமுண்டாகின்றது. இந்நிலையில் இரட்டைப் பிள்ளைகள் நஞ்சினையுண்டு விட்டால், இருவரையும் கவலையோடு பேணும் தாயைப்போலத் தோழி இருவரிடத்தும் இரக்கமுடையவளாகின்றாள்.

இவ்வாறெல்லாம் தோழி கூறுவதால் என்ன பயன் விளையும்? அவள் கூறிய உவமையின் பயன் யாது? இரண்டு மகவும் நஞ்சினை உண்டுவிடின், நஞ்சு தீர்க்கும் மருந்தே தக்கதாதல் போலத் தலைவன்–தலைவியர்க்கு நன்மை தரக்கூடுவது திருமணமே என்பதைப் பெற வைத்தாள்.

இரட்டைப் பிள்ளைகள் (கவை மகன்) நஞ்சுண்ட செய்தியினை உவமையாக எடுத்தாண்டமையால் புலவர் பெயர் கவை மகனாயிற்று.

'கொடுங்கான் முதலைக் கோள்வ
லேற்றை
வழிவழக் கறுக்குங் கானலம்
பெருந்துறை
இனமீ னிருங்கழி நீந்தி நீநின்
நயனுடை மையின் வருதி யிவடன்
மடனுடை மையி னுயங்கும் யானது
கவைமக நஞ்சுண் டாஅங்
கஞ்சுவல் பெருமவென் னெஞ்சத்
தானே'

–(குறுந்தொகை, 324)



வில்லக விரலினார்

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்பன ஐவகை நிலங்கள். குறிஞ்சி என்பது மலையும் மலைசார்ந்த இடமுமாகும். முல்லை என்பது காடும் காடு சார்ந்த இடமுமாகும். இவ்விரண்டும் வளம் குறைந்த நிலையில் காட்சியளிப்பதே பாலையாகும். வயலும் வயல் சார்ந்த இடமும் மருதமாகும். கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனப்படும். இவ்வைவகை நிலங்களுள் மருத நிலத்து வாழ்வோர் ஓய்வு மிகக் கொண்டவர்கள். மருதநிலத்தில் வாழ்வோர் பரத்தையர் உறவுடையவராக இருந்தனர்.

செல்வக்குடியில் பிறந்த இளைஞர்கள் பரத்தையர் உறவு கொள்ளப் பாணன் துணையாக அமைந்தான். பாணர் தம் துணையில்லாமலும் பரத்தையர் உறவைச் செல்வ மக்கள் பெறுவதுண்டு. கோவலன் ஆயிரத்தெண் கழஞ்சு பொன் கொடுத்தல்லவா மாதவியின் உறவினைப் பெற்றான்!

பரத்தையரோடு தலைவன் கொள்ளும் நட்பு நீடித்திருக்கும். சில வேளைகளில் தலைவன், சில நாட்கள் தலைவியிடமும் சில நாட்கள் பரத்தையரிடமும் வாழ்தலும் உண்டு. பரத்தையிடமிருந்து பிரிந்து தன்னுடைய இல்லம் வந்து சேரும் தலைவனைத் தலைவி அன்போடு வரவேற்பாள். அவன் தன்னைவிட்டுப் பிரியுமாறு செய்தவள் பரத்தைதானென்றும், தன்னிடம் வாராதவாறு அவனைக் காத்துக்கொண்டாள் என்றும் கூறி வருந்துவாள். தலைவி வருந்திக் கூறிய செய்தி பரத்தைக்குத் தெரிந்துவிடும். உடனே அவள் தலைவிக்கும் அவளது உறவினர்க்கும் தெரியும் வகையில் மறுமொழி கூறுவாள்.

இவ்வாறு நடைபெறுவதை இன்றும் காணலாம். பரத்தை தலைவியைத் திட்டுவதும், தலைவி பரத்தையைத் திட்டுவதும் புதுமையல்ல. இருவரும் தலைவன்பால் கொண்ட அன்பின் பெருக்காலேயே அவ்வாறு பேசுகின்றனர். அவ்வாறு பேசும்பொழுது தலைவன்பால் கொண்ட உறவின் சிறப்பையும் கூறிக் கொள்வார்கள். சான்றாக ஒரு நிகழ்ச்சியினைக் காணுவோம்:

பரத்தை தலைவனைப் பிணித்துக் கொண்டாள் என்று தலைவி கூறியது பரத்தைக்குத் தெரிந்துவிட்டது. தலைவியின் பழியைப் பொறாத அவள், கூறலானாள்:

'ஆம்பல்முகை வண்டு திறக்குங்கால் மலர்ந்து அதற்குத் தேனளிக்கின்றது. அவ்வாறு சிறந்த நீர் நிலையையுடைய தலைவனோடு நான் இருந்தால், இரண்டு உடலையுடையவர்களாக நாங்கள் இருப்போம். அவனோடு இன்பம் பெறுங்கால் வில்லைப் பிடித்த விரல்கள் ஒன்றோடொன்று மிகச் செறிந்து பொருந்தியிருப்பதுபோல ஓருடல்போல ஒன்றியிருப்போம். பின்னர் என்னை விட்டுப் பிரிந்து அவன் தன் மனையகம் செல்வானேயானால், மீண்டும் நான் தனியளாகி விடுவேன்.'

பரத்தையின் இந்தக் கூற்றால் நாம் அறிவன யாவை? தலைவன் இல்லாதபோது தனித்திருப்பாள். அவன் வந்தபொழுது மகிழ்வாள். அவனோடு இன்பம் பெறும்பொழுது ஓருடலாவார்கள். அவன் தன் மனையகம் சென்றதும் தணிந்திருப்பாள். இதனால், தலைவனைப் பரத்தை தன் விருப்பம்போல் நடத்தவில்லை என்பதையும், அவனது விருப்பத்திற்கேற்பவே அவள் நடந்துகொள்ளுகிறாள் என்பதையும் அறிய முடிகிறது.

தலைவனோடு ஒன்றியிருக்கும் நிலையைக் கூறும்பொழுது, பரத்தை, வில்லைப் பிடித்த விரல்கள் ஒன்றோடொன்று மிகச் செறிந்திருக்கும் நிலையைக் கூறினாள். தழுவிய கைகள் நெகிழாமல் அணைந்திருந்த நிலையையே அவள் கூறினாள்.

புதிதாகத் திருமணம் செய்து கொள்வோரை வாழ்த்தும் பெரியவர்கள் 'கவவுக்கை நெகிழாமல் தீதறுக' என வாழ்த்துதல் மரபு. கோவலன் கண்ணகி திருமணத்தின்போது வந்திருந்த சான்றோர்கள் மணவிழாவின்போது, 'கவவுக்கை நெகிழாமல் தீதறுக' எனக் கூறி மலரைத் தூவி வாழ்த்தினர். சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவரும் இவ்வுவமையை ஆண்டுள்ளார்:

'வீட்டிடந் தோறும் வில்லக
விரல்போற்
பொருந்திநின் றொருங்கெதிர்
கொள்கென்று'

என்பது சிந்தாமணி.

தலைவன்–பரத்தையின், இன்பத்தின் சிறப்பினை–நெருக்கத்தினை விளக்க வில்லக விரலை–வில்லைப் பிடித்த விரல்கள் ஒன்றோடொன்று செறிந்திருக்கும் நிலைமையை உவமை கூறினமையின். புலவர் 'வில்லக விரலினார்' என்று பெயர் பெற்றார்.

ஆம்பல்முகை வண்டு திறக்குங்கால் மலர்ந்து அதற்குத் தேனளித்து மகிழ்விப்பதுபோலத் தலைவன் கூடுங்காற் கூடி அவனுக்கு இன்பமளிப்போம் என்று பரத்தை கூறுவது சுவையுடைய பகுதியாகும்.

'பொய்கை ஆம்ப லணிநிறக்
கொழுமுகை
வண்டுவாய் திறக்கும் தண்டுறை
யூரனொடு
இருப்பின் இருமருங் கினமே
கிடப்பின்
வில்லக விரலிற் பொருந்தியவன்
நல்லகஞ் சேரி னொருமருங் கினமே'

–(குறுந்தொகை, 370)

பேசா மடந்தை பேசின கதை—6.

[சாலிவாஹனன்]

..................குடநீ ருநண்டிருக்கக்
கொல்லைக் கிணற்றுக்குக் குறையுடையோ டவள்செல்ல
நல்ல சுகந்தந்த நம்திருடன் பின்செல்ல
துலாமரத்தில் ஏற்றிவிட்டுச் சாலிழுத்தான் நம்திருடன்
பாதிச்சால் வழிவரும்போ தந்தாத்து மாநடுவில்
சுந்தரியின் மூந்தாணி சிந்துவதைப் போலிருக்க
இந்தத் திருடனதை இழுத்துவிட்டா னம்மனமாய்
நின்றிடுவா ளம்மினாள் நிமிஷத்தி லித்திருடன்
சென்றவள் தன் நகையுடைகள் சேர்த்தெடுத்து மந்திரியைக்
கண்டபடி யேசிவிட்டுக் காதம் கடந்துவிட்டான்
முக்கால் திருடனெனும் மூத்தமகன் திறன்மெச்சிப்
பக்காத் திருடன்தன் முதல்மகனும் முழுத்திருடன்
தனையழைத்து நீயும்போய் தைரியமாய்த் திருடிவிட்டு
வருவாய் புகழ்மணக்க வா நீ போ விரைவிலென
முழுத்திருடன் நகருக்கு முன்னோடி வருகையிலே
முன்னிரவில் மந்திரியை முக்கால் திருடன்தன்
தந்திரத்தால் கட்டிவைத்து தாலியையும் கெடுத்துவிட்டுப்
போனதெலாம் கோபால ராஜமன்னன் கேட்டுவிட்டு
இன்றிரவில் நானேபோய் இத்திருடன் தனைப்பிடிப்பேன்
என்றுசொலிச் சூளுரைத்து எங்கெங்கும் காவல்வைத்து
உள்ளகதை முழுத்திருடன் உணர்ந்துடனே கோமுட்டி
வேடமிட்டுத் தின்பண்டம் வெதிர்பாய் தண்ணீர்ச்சாலும்
போடுதற்காம் வெற்றிலையும் புதுப்பந்த விளக்கொன்றும்
வாங்கிக்கொண் டிருட்டினபின் வளநகரின் வெளிப்புறத்தில்
கடைபரப்பி வியாபாரம் கருத்தாய் நடத்துதல்போல்
முழுத்திருடன் விற்றிருந்தான் முன்னிரண்டாம் ஜாமம்போய்
நள்ளிரவில் நகர்சுற்றி சோர்ந்துவந்த மன்னவனும்
வெளிச்ச மிதைப்பார்த்து வெளியேறிக் காவலர்கள்
பின்தொடரச் செட்டியிடம் வந்ததட்டி யார்நீ ஏன்
இந்தவிருட் பாதையிலே இக்கடையை வைத்திருக்காய்
என்றதற்கு முழுத்திருடன்.........

(தொடரும்)



9. தலைநகர் சாம்பலாகியது

குதிரை மீது காற்றை எதிர்த்துக் கனவேகமாக விரைந்த மாளவ வீரன், மகதநாட்டுத் தலைநகரின் மறுபுறத்தில் உயர்ந்து வளர்ந்திருந்த ஒரு மலைப் பகுதியில் போய்த்தான் நின்முன். அங்கே மாளவ வீரனின் வருகைக்காகக் கணத்துக்குக் கணம் காத்துக் கொண்டிருந்தவன்போல வழிமேல் விழி வைத்து நின்று கொண்டிருந்த ஒரு வீரத் தளபதி, வீரன் குதிரைமீது வருவதைக் கண்ட அந்த விநாடியே கைகளைத் தட்டியழைத்து, இரண்டு கைகளையும் வீசி வீசி வரவேற்முன்.

தளபதியை நெருங்கிவிட்ட மாள்வ வீரன், உடனே குதிரை மீதிருந்து ஒரே குதியாகக் குதித்து இறங்கி, 'இளவரசர் ஆணையிட்டிருக்கிமுர். இன்று இரவு ஏழு மணிக்குள் மகதத் தலைநகர் எரிந்து சாம்பலாகப் போக வேண்டுமாம். கோட்டை, கொத்தளங்களிலும், அரசாங்க அலுவலகங்களிலும், அரண்மனையிலும் ஏதாவது வீரர்கள் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்தால், அவர்களைக் கொன்று தீர்த்துக் காரியத்தை நிறைவேற்ற வேண்டுமாம். மகத அரசனும், சேனபதியும், மற்றுமுள்ள எல்லாப் படையினரும் எல்லையில் யுத்தத்தில் மும்முரமாக ஈடுபட்டிருக்கும் இந்தச் சமயத்தை நழுவவிடாது, சற்றும் தாமதம் செய்யாமல், தலைநகரை வசப்படுத்த வேண்டுமாம். இவ்வாறு செய்வதால் எது வரினும் பின்னுக்கி ஓடாமல், 'போர் செய்! அல்லது மடிந்து சா!' என்ற கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் இளவரசர் உத்தரவு. இதற்கான தங்கள் பதிலைக் கேட்டுக்கொண்டு உடனே திரும்பி வரவேண்டுமென்றும் எனக்குக் கட்டளை...' என்று, குதிரைமீது காற்றினும் வேகமாக ஓடிவந்த களைப்புடனும், பெருமூச்சுடனும் சொல்லி முடித்தான்.

அந்த மலைப்புறத்தில் அந்த உத்தரவுக்காகவே அவ்வளவு நாழிகையும் காத்திருந்த அந்த வீரத் தளபதி, மீசையை நன்முக முறுக்கிவிட்டுக்கொண்டான். தனது தொடைகளையும், தோட்களையும் ஒரு தட்டு தட்டிவிட்டுக் கொண்டான். 'அஹஹஹா!' என்று ஒரு எக்காளச் சிரிப்புச் சிரித்துவிட்டு, அந்தத் தள்பதி சொல்லலானுன்:

'மா வீரனே! உடனே இளவரசரிடம் திரும்பிப் போய்ச் சொல்வாயாக; 'தளபதி தானவன் தங்கள் உத்தரவைத் தலைமேல் தாங்கி முடித்து வைக்கத் துடி துடித்துக் கொண்டிருக்கிமுன்; சற்றும் தாமதமில்லாமல், இளவரசர் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாகவே மகதத் தலைநகர் எரிந்து மண்ணோடு மண்ணுகப் போய்விடும் என்று உறுதியாகக் கூறினதாகச் சொல்வாயாக!'

இவ்வாறு சொல்லிய அடுத்த கணமே தனது இடுப்பில் செருகி வைத்திருந்த ஒரு உடுக்கையை எடுத்து 'டும் டும் டும் டும்' என்று புது முறையாக ஒரு ஒலி எழுப்பினுன். அந்த ஒலி எழும்பிய அதே நேரத்தில் அந்த மலைப் பிரதேசத்தில் அடர்ந்து வளர்ந்திருந்த செடி கொடி மரங்களின் பின்னுலிருந்தும், பெரிது பெரிதாக உயர்ந்து வளர்ந்திருந்த மலைப் பாறைகளின் பின்னுலிருந்தும் சுமார் இரண்டாயிரம் வீரர்கள் கைகளில் ஈட்டியும், வேலும், வில்லுமாக ஓடோடி வந்து தளபதி தானவனின் முன்னே அணிவகுத்து நின்றனர். சில வீரர்களின் கையில் பற்ற வைக்காத தீவட்டிகளும் கூடத் தயாராக இருந்தன. அந்தத் தீவட்டிகள் ஏற்கனவே எண்ணெயில் தோய்க்கப்பட்டிருந்த காரணத்தால், கருத்த நிறத்துடன் காணப்பட்டன. இந்த வீரர்களுக்கும் பின்னுல், மறைவான மலைப் பிரதேசத்திலிருந்து சில வீரர்கள் கையில் பெரிய பெரிய கயிற்று ஏணிகளை ஒரு சேரப் பிடித்துக்கொண்டு வந்தனர்.

தளபதி தானவன் வீரர்கள் குழுமிவிட்ட அந்த விநாடியே மகதத் தலைநகரைப் பின்புறத்தினின்றும் தாக்க உத்தரவிட்டான். அந்தக் காலாட் படையினர் தானவனைப் பின்பற்றி மகதத்தின் அழகுமிக்க தலைநகரை அழித்து, அக்கினிக்கு இரையாக்க அடங்காத ஆவேசத்துடன் ஓட்டமும் நடையுமாக நடை போட்டனர்.

தலைநகரின் பின்புற வாயிலை நெருங்கிவிட்டனர், தானவன் தலைமையில் முன்னமேயே ஏற்பாடாக மலைப் பகுதியில் நின்றுகொண்டிருந்த அந்த மாளவ வீரர்கள். மாளவ அரண்மனையிலிருந்து படை புறப்படுவதற்கு முன்னமே இளவரசன் ஜயந்தன் திட்டமிட்டு, மலைப் பகுதிக்கு அனுப்பிய அந்தப் படையினர், மாளவத் தலைநகரின் பின்புற வாயிலில் சில வீரர்கள் கையில் ஈட்டியும், வில்லும், வேலும் தாங்கிக் காவல் புரிவதைக் கண்டு கலங்கவில்லை. எந்தப் பொருளையும் மதியாது புயல் கொடு வேகமாக வீசுவதுபோன்று 'திமு திமு'வென்று அந்த வீரர்களின் கூட்டம் தலைநகரை நோக்கி ஓடியது.

தம்மை நோக்கிப் பெரும் படை திரண்டு வருவதைக் கண்ட மகதக் காவலர்கள் பெரிதும் திகைத்துப் போயினர். தலைநகரின் பின்புறமாக மாளவப் படை தாக்கும் என்று அவர்கள் கனவுகூடக் காணவில்லை. யுத்தமெல்லாம் எல்லையிலேதான் என்று எண்ணியிருந்த அவர்கள், இப்படி இரண்டாயிரம் வீரர்கள் வெள்ளம்போல் திரண்டு வருவதைக் கண்டு, பதைபதைத்துப் போயினர். என்றுலும் அவர்களது ராஜ விசுவாசமும், தாய் நாட்டின்மீது அவர்களுக்கு இருந்த பக்தியும் அவர்களுக்கு ஒரு வீராவேசத்தை உண்டாக்கியது. கையிலிருந்த வில்லில் நாணைப் பூட்டி அம்பைப் பொருத்தித் தயாராக நின்றனர், சில வீரர்கள். மாற்று வீரர்களின் மார்பை நோக்கி எறிவதற்குத் தயாராகத் தமது ஈட்டியையும், வேலையும் தூக்கிப் பிடித்துத் தருணத்தை எதிர்பார்த்து நின்றனர், சில வீரர்கள். அதற்குள் ஒரு வீரன் அபாய அறிவிப்புச் சங்கொலி எழுப்ப ஆரம்பித்துவிட்டான். மகதத்தைக் காக்கக் கடைசிவரை போராடித் தமது உயிரை இழப்பதற்கும் அந்த வீரர்கள் சிறிதும் தயங்கினதாகத் தெரியவில்லை.

தானவன் தலைமையில் திரண்டு 'திமுதிமு'வென்று ஓடி வந்த மாளவ வீரர்கள் சற்றும் தயங்காது பின்புற வாயிலைக் கடக்க முற்பட்டனர். மகத வீரர்கள் அம்பு விட்டும், வேலையும், ஈட்டியையும் எறிந்து தம்மாலானவரையில் எதிர்த் தாக்குதல் செய்தனர்.

அப்போது அவர்களுக்கிருந்த தாய் நாட்டுப் பற்று, ஒரு வீரன் நான்கு மாளவ வீரர்களைத் தாக்குப் பிடிக்கும் அளவுக்கு அவ்வளவு உயர்ந்திருந்தது. என்றாலும் அரை மணி நேரத்திற்குமேல் அவர்களால் தாக்குப் பிடித்து நிற்க முடியவில்லை. உடலில் குத்துண்டும், கைகளையும் கால்களையும் இழந்தும் குலையுயிராகவும் குத்துயிராகவும் தரை புரள வேண்டியதாயிற்று, அவர்கள் நிலை. அவர்களுள்ளும் சிலர் தரையில் விழுந்த அக்கணமே உயிரை விட்டு வீர சுவர்க்கம் எய்தினர்.

தலைநகரின் பின்புற வாசலைக் கடந்து நகரின் உள்ளே நுழைந்த மாளவ வீரர்கள், வெற்றி வெறியுடன் மகத வீரர்களின் உடல்களின்மீது காலைப் பதித்துக் கொம்மாளமடித்துக் கொண்டு சென்றனர். வாயிலுக்கு அடுத்தபடி இருந்த கோட்டையைக் கவர்ந்து விடவேண்டும் என்ற பேராவலுடன் ஒரே கருத்தாகக் கோட்டையையே நாடி ஓடினர், அவர்கள். இடையிடையே சில வீரர்களும், பொது மக்களில் வீரம்மிக்க சிலரும் திரண்டெழுந்து அவர்களைத் தாக்க முற்பட்டனர். ஆனால் அந்த ஆவேசம்கொண்ட மாளவ வீரர்களின் முன்பாக அவர்களால் நிற்க முடியவில்லை. தலைவாயிலைக் காத்து நின்ற வீரர்கள் சென்ற வழியே அவர்களும் செல்ல வேண்டியதாயிற்று!

கண்மூடித்தனமாக எதிர்ப்பட்டதையெல்லாம் தாக்கியும் மிதித்தும் அடித்தும் அழித்துக் கொண்டே சென்ற மாளவ வீரர்கள், மகதத்தின் மாபெரும் கோட்டையை நெருங்கிவிட்டனர். அங்கே வானுயர உயர்ந்து நின்ற அந்தக் கோட்டை மதில்களின் மீது ஆயுதம் தாங்கிய ஐந்நூறு வீரர்கள் பகைவர்களைத் தம் ஆயுதங்களுக்கு இரையாக்கி உயிரை மாய்க்கத் தயாராக நின்றுகொண்டிருந்தனர். 'டம, டம, டம'வென்று முரசம் அதிர்ந்தது. அந்த விநாடியே மதில்களின்மீது நின்று கொண்டிருந்த வீரர்களின் கைகளில் இருந்த வில்களிலிருந்து பல அம்புகள் மழை போலப் பொழிந்தன. மாற்று வீரர்களான மாளவ வீரர்களும் வாளாவிருக்கவில்லை. தாங்களும் அம்புகள் விடுத்து தம்மை நோக்கிவரும் அந்தக் கணைகளை உடைத்தெறிந்தனர். அவற்றுக்கும் மீறி மாளவ வீரர்களில் சிலர் அம்பு பட்டு விழாமலும் இல்லை. அதுபோன்றே இரு திறத்திலிருந்தும் வேலும், ஈட்டியும் பாய்ந்து வந்து தாக்கின. இரு தரத்தினரும் இந்தத் தாக்குதலையும் ஒருவாறு சமாளிக்கவே செய்தனர். ஆனால், இரண்டாயிரம் வீரர்களும், அதற்கேற்ற ஆயுதங்களும் கொண்ட மாளவ வீரர்களின் தாக்குதலை மகத வீரர்களால் வெகு நேரம் சமாளிக்க முடியவில்லை. பாவம், அவர்கள் நிராயுதபாணிகளாக ஆகிவிட்டனர்.

கோட்டை வாயிலை மூடியிருந்த வலுவான கதவுகளைத் தகர்க்க முடியாத மாளவ வீரர்கள், உடனே கோட்டை மதிட் சுவர்களில் தாம் கொண்டுவந்திருந்த ஏணிகளைப் பொருத்தி, அதன் மூலம் மதிலின் மேல்புறத்தை அணுக முற்பட்டனர்.

மாளவ வீரர்கள் மதிலின் மேல் புறத்தை அணுகிய உடனே அவர்களைப் பிடித்துக் கீழே தள்ளினர், மகத வீரர்கள். அப்படிப் பிடித்துத் தள்ளியதற்கும் அஞ்சாமல், தம் கையிலிருந்த ஈட்டிகளாலும், வாட்களாலும் மகத வீரர்களைத் தாக்கி மெள்ள மெள்ள மதிட் சுவரை அடைந்துவிட்டனர், சில மாளவ வீரர்கள். கீழிருந்தே நடைபெற்ற சண்டையில் உயிரை இழந்தும், கால் கைகளை இழந்து குற்றுயிராகியும் மதிட் சுவரை அடுத்த மேல் தளத்தில் விழுந்து கிடந்த நூறுக்கும் குறைவான அந்த வீரர்களையும் மதிலின் மேலேறிய மாளவ வீரர்கள் தமது வீர பராக்கிரமத்தால் புறமுதுகிட்டு ஓடச் செய்துவிட்டனர்.

அதற்குள் சில மாளவ வீரர்கள் மதிலை விட்டுக் கீழே இறங்கிக் கோட்டைவாயிற் கதவுகளைத் திறந்த மறுகணமே, வெண்கலக் கடையில் யானை புகுவதுபோல் படுவேகமாக உள்நுழைந்த மாளவ வீரர்கள், கண்டதையெல்லாம் நாசமாக்கித் தரையில் மிதித்தும், அப்பொழுதும் தம்மை எதிர்க்க முற்பட்ட ஒரு சிலரை வெட்டி வீழ்த்தியும் அமர்க்களம் செய்தனர். கோட்டையிலுள்ள தானியக் கிடங்குகளுக்கும், ஆயுதச்சாலைக்கும், அரசாங்கக் காரியாலயங்களுக்கும் தாம் கொண்டு வந்திருந்த தீவட்டிகளைக் கொளுத்தித் தீ வைத்து விட்டு, மிகுந்த ஆவேசத்துடன் நகரம் முழுமையும் சுற்றி விட்டு, அந்தக் காட்சியைக் கண்டு அளவிலாத ஆனந்தம் அடைந்தவாறே, ஊருக்கு வெளியே ஓடோடி வந்தனர். அப்பொழுது, இத்தனை சண்டையிலிருந்தும் தப்பி ஒளிந்திருந்த ஒரு வீரன், ஒரு குதிரையின்மீது வெகு வேகமாகப் போர் நடக்கும் மகத எல்லையை நோக்கி விரைவதைக் கண்ட மாளவ வீரர்கள், அவனை உடனே அம்பால் வீழ்த்திச் சுவர்க்கத்துக்கு அனுப்பினர். ஆனால், மறுகணமே மாளவ வீரன் ஒருவன் ஒரு வெண் குதிரையின்மீது ஏறிப் போர் நடக்கும் இடத்தை நாடி வெற்றிக் கொடியுடன் விரைந்தான். இளவரசர் ஜயந்தனுக்கு வெற்றிச் செய்தியை அறிவிக்கத்தான் தலைதெறிக்க அப்படி ஓடினான், அந்த வீரன். அப்போதுதான் சூரியன் மலைவாயில் விழுந்து கொஞ்சம் கொஞ்சமாக இருள் பரவத் தொடங்கியிருந்தது. அப்பொழுது மணி ஏறக்குறைய ஆறரை இருக்கும்.

(தொடரும்)

விநோதக் கணக்கு

கீழே இருக்கிற குருவி மேலே பறக்கின்ற குருவிகளைப் பார்த்து, 'ஏ! நூறு குருவிகளே! எங்கே போகிறீர்கள்?' என்று கேட்டது. அதற்கு ஆகாயத்தில் போகிற குருவிகள், 'நாங்களல்ல நூறு குருவிகள். நாங்களும் எங்களுடைய இனத்தாரும், இனத்தாரில் பாதியும், அதிலும் பாதியும், நீயும் சேர்ந்தால், நூறு குருவிகள்' என்றன. ஆகையால், ஆகாயத்தில் பறந்த குருவிகள் எத்தனை?

விடை:—36 குருவிகள்

—ரகமி.

கோமாளித் தொப்பி கொடு!

காகிதங்கள் விற்கும் ஒரு கடைக்காரரிடம் சென்று, 'கோமாளியின் தொப்பி ஒரு 'கொயர்' கொடு' என்று கேட்டுப் பாருங்கள். ஒன்று அந்தக் கடைக்காரர் உங்களைப் பார்த்துக் கோமாளித்தனமாகச் சிரிப்பார்; அல்லது உங்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்று அனுதாபப்படுவார்! ஆனால், அவரிடமே 'ஃபூல்ஸ் காப் காகிதம் ஒரு கொயர் கொடுங்கள்' என்றால், உடனே கிட்டத்தட்ட ஒரு முழம் அளவு நீண்ட காகிதங்களை எடுத்து மடித்துக் கொடுத்து அனுப்புவார். ஆனால், அந்த 'ஃபூல்ஸ் காப்' (Foolscap) என்ற பதத்திற்குத்தான் 'கோமாளியின் தொப்பி' என்று தமிழில் சரியான மொழி பெயர்ப்பாகும்.

இம்மாதிரி முழு அளவுக் காகிதத்துக்கு 'ஃபூல்ஸ் காப்' காகிதம் என்று எப்படிப் பெயர் வந்தது? பதின்மூன்றாம் நூற்றாண்டு ஆரம்பம் முதல் பதினேழாம் நூற்றாண்டு முடிவுவரை ஏறக்குறைய நானூறு ஆண்டுகளாக இந்த அளவுள்ள காகிதங்களில் உள்ள தண்ணீர் அடையாளத்தில் கோமாளிகள் அணியும் மணி கட்டிய தொப்பியின் உருவமே பதிக்கப்பட்டிருந்ததாம். அதனாலேயே 'கோமாளியின் தொப்பி' என்ற பொருளுள்ள 'ஃபூல்ஸ் காப்' என்ற பெயர் வழங்கி வந்திருக்க வேண்டுமாம். இப்பொழுது கோமாளித் தொப்பியின் உருவம் இல்லாத காகிதங்களுக்கும்கூட இந்தப் பெயர் வழங்கி வருவதுதான் ஆச்சரியம்!

உயரமும் உணவும்...

தேசத்துக்கு தேசம், மாகாணத்திற்கு மாகாணம் மக்கள் உயரத்தில் வேறுபடுகின்றனர். நமது நாட்டின் எல்லைப்புறத்திலுள்ள பட்டாணியர்களும், பஞ்சாபிலும் அதைச் சுற்றியும் உள்ள சீக்கியர்களும் மிகுந்தஉயரமுள்ளவர்களாக விளங்குகின்றனர். நம் தமிழர்களோ, அளவான உயரம் படைத்தவர்களாக உள்ளனர். வெளிநாடுகளில் பார்க்கும்போது ஜப்பானியர்களும் சீனர்களும் மிகவும் குள்ளமானவர்களாக இருக்கின்றனர்; ஆனால், அமெரிக்கர்களோ மிகுந்த உயரம் படைத்தவர்களாக இருக்கின்றனர். இவ்வாறு உயரத்தில் இடத்துக்கு இடம் மக்கள் வேறுபடுவதற்குக் காரணம், அவர்கள் உண்ணும் உணவுதானாம். ஜப்பானிலுள்ள விஞ்ஞானிகள் உயரமாக வளரும் இனத்தைச் சேர்ந்தவர்கள், உண்ணும் உணவுப் பொருள்களைக் குள்ளமாக வளரும் இனத்தார் சிலருக்குச் சில ஆண்டுகள் கொடுத்துப் பார்த்தார்களாம். சில ஆண்டுகள் கழித்து இந்த ஆராய்ச்சிக்கு உள்ளானவர்களை அளந்து பார்த்தபோது, அவர்கள் அந்த இனத்தாரின் வளர்ச்சியளவைக்காட்டிலும் சில அங்குலங்கள் அதிகமாக வளர்ந்திருந்தனராம். ஆகவே, உயரமாக வளர்வதற்கு, நாம் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் உணவே முக்கிய காரணம் என்ற முடிவுக்கு வந்தார்களாம்.

சிறுவர் அறிவு அரங்கம்

அஸ்வத்தாமா

'ரெப்ரிஜிரேடர்' கண்டு பிடித்தது யார்?

காய்கறி, பழம், இறைச்சி ஆகிய பொருள்களை வைத்து மூடிவிட்டால், பல நாட்களானாலும் கெடாதிருக்கும்படியான 'ரெப்ரிஜிரேட்டர்' (குளிர் பதனப் பெட்டி) யாரால் கண்டு பிடிக்கப்பட்டது, எப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டது என்று தெரியுமா? 1861-ம் ஆண்டில் தாமஸ் ஸீட்க்ஸிப் மோர்ட் என்னும் ஆஸ்திரேலியர்தான் 'ரெப்ரிஜிரேட'ரை முதன்முதலில் கண்டுபிடித்தார். இறந்துபோன பழங்கால மிருகமொன்றின் உடல் உறைபனியினுள் புதைந்து போய் கொஞ்சமும் கெடாமல் இருந்தது என்ற பத்திரிகைச் செய்திதான், இம்மாதிரியான 'குளிர் பதனப் பெட்டி' (ரெப்ரிஜிரேடர்)யைக் கண்டு பிடிக்க இவருக்குத் தூண்டுகோலாக இருந்ததாம்.



'கார்க்' கிடைப்பது எப்படி?

புட்டிகளின் வாய்ப்புறத்தில் அடைத்து மூடப்படும் 'கார்க்' எப்படிக் கிடைக்கிறது தெரியுமா? 'கார்க் மரம்' என்னும் ஒருவகை மரத்தின் பட்டையை உரித்துத்தான் பல அளவுகள் உள்ள கார்க்குகள் தயாரிக்கிறார்கள். பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின், கோர்ஸிகா ஆகிய நாடுகளில் இவ்வகை மரங்கள் நிறைய வளர்கின்றன. இந்த மரங்கள் கிட்டத்தட்ட 40 அடி உயரம்வரை வளரத் தக்கன. பத்துப் பதினோரு வருஷங்களுக்கு ஒரு முறை இந்த மரத்தின் பட்டையை உரித்தெடுக்கிறார்களாம். இந்தப் பட்டையையே பின்னர் புட்டிகளுக்குத் தக்க 'கார்க்கு'களாகச் செய்கின்றனர். இந்தக் 'கார்க்' மரங்கள் சுமார் 150 வருடங்கள்வரை உயிர் வாழக் கூடியவையாம்.

வெடிக்கும் மரம்!

கைத் துப்பாக்கி வெடிக்கும் அளவு ஓசையுடன் வெடிக்கக்கூடிய ஒரு மரம் இருக்கிறது! 'அட, இப்படியும் ஒரு மரம் இருக்கிறதா? அது எங்கே?' என்று ஆச்சரியப்படுகிறீர்கள் அல்லவா? ஆம், அப்படிப்பட்ட ஒருவகை மரம் இருக்கத்தான் செய்கிறது, தென்னமெரிக்காவில். இந்த வகை மரங்களுக்கு 'ஸாண்ட் பாட்' என்று பெயர். இந்த மரத்தில் பழுக்கும் பழம்தான் கைத் துப்பாக்கி எழுப்பும் ஓசையளவுக்கு ஒலித்து வெடிக்கக் கூடியது! இவ்வாறு வெடிப்பதன்மூலம் இந்த மரம் தனது விதைகளை இருபதுமுதல் முப்பது கஜம்வரை சிதறச் செய்கிறதாம்!

பிரபல ஹாஸ்ய எழுத்தாளர் சுந்தா என்னுடைய மிகவும் நெருங்கிய நண்பன் என்பதில் எனக்கு ஒரு பெருமை. அவன் என் கல்லூரித் தோழன். அந்தக் காலத்திலேயே விகடமாகப் பேசுவதற்கு அவன் பெயர் பெற்றவன். அவன் இருக்குமிடம் ஒரே கும்மாளமாக இருக்கும். அந்தச் சிரிப்புப் பழக்கம்தான் அவனை ஹாஸ்ய எழுத்தாளன் ஆக்கிவிட்டது என்று நினைக்கிறேன்.

'சர்க்கார் உத்தியோகத்தில் இருந்த என் தகப்பனுர், பம்பாய்க்கு மாற்றல் ஆகிவிட்டதால், நான் சுந்தாவை விட்டுப் பிரிய நேர்ந்தது. இப்போது பதினைந்து ஆண்டுகள் ஆகின்றன. எவ்வளவோ மாறுதல்கள் நிகழ்ந்துவிட்டன. சிறிது காலம்வரையில் அவனைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியவில்லை. பிறகு, தமிழ் நாட்டின் தலைசிறந்த ஹாஸ்யப் பத்திரிகைகளில் எல்லாம் அவன் பெயர் அடிபடத் தொடங்கியதும், அவன் என் நண்பனேதான் என்பதைப்பற்றி எனக்குச் சந்தேகம் ஏற்படவில்லை. அவனுடைய ஆயிரக்கணக்கான ரசிகர்களில் நானும் ஒருவன் ஆனேன். அவனுடைய கட்டுரைகளைப் படித்த வாசகர்கள் சிரிப்பாகச் சிரிக்கும்போது, நானே கட்டுரை எழுதிப் பாராட்டப்படுவதைப் போன்ற ஆனந்தம் எனக்கு உண்டாகும். அவன் எழுதுவது தரமான ஹாஸ்யமா, தரக்குறைவான ஹாஸ்யமா என்பது எனக்கு ஒன்றும் தெரியாது; உத்தியோகஸ்தனுக்கு இலக்கிய விஷயம் என்ன தெரியும்? ஆனுல், அவனுடைய கதை கட்டுரைகளைப் படிக்கும்போது, மனத்தில் ஓர் அமைதி ஏற்படும். நாள் முழுவதும் அலுவலகத்தில் அலுத்து வந்தவர்கள் அவனுடைய எழுத்துக்களை நாடி ஓடியதில் வியப்பு என்ன? வாசகர்களின் அபிமானத்துக்குப் பாத்திரமான அவனை, என் நண்பன் என்று கூறிக்கொள்வது எனக்கே பெருமையாக இருந்தது. அவனேடு நான் கடிதத் தொடர்பும் ஏற்படுத்திக் கொண்டேன். அவனுக்குச் சொந்த ஊர் கும்பகோணம்; சிலவிடங்களுக்கு முந்தி அவன் சுவாமிமலைக்கு ஜாகை மாற்றிக்கொண்டு எனக்கும் புதிய விலாசத்தைத் தெரிவித்தான்.

சுமார் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு தெற்கு நோக்கி வருவதற்கு எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அதைப் பயன்படுத்திக்கொண்டு, சுந்தாவையும் பார்த்துப் போகலாம் என்கிற எண்ணத்தோடு அவனுக்குக் கடிதம் எழுதினேன். அவனும் ஸ்டேஷனுக்கு வந்து என்னை வரவேற்ருன்.

சுந்தா என் நண்பன் என்பதோடு எனக்கு மிகவும் பிடித்த ஆசிரியனும் ஆகிவிட்டபடியால், அவனைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அதிகமாக இருந்தது. நான் எதிர்பார்த்தது போலவே, மற்ற எழுத்தாளர்களைப்போல், 'தொள தொள'வென்று குடுகுடுப்பைக்காரன் சட்டை இருக்குமே, அதுபோன்ற ஒரு கதர்ச் சட்டையோடும், வாயில் வெற்றிலைப் புகையிலையோடும் அவன் காட்சி அளித்தான். பதினைந்து ஆண்டுகள் அவன் உருவத்தில் பிரமாதமான மாறுதலைச் செய்ததாகத் தெரியவில்லை. நான் 'வகை தொகை' இல்லாமல் பருத்துவிட்டேன்; தொந்தியும் விழுந்துவிட்டது; நரையும் காண்கிறது. ஆனுல், அவன் ஊதவும் இல்லை, சுருங்கவுமில்லை. வயது அதிகம் ஆகியதை முகத்தில் லேசாகத்தான் காண முடிந்தது. இதற்குக் காரணம் அவனுடைய சிரிக்கத் தெரிந்த மனப்பான்மையாகத்தான் இருக்கவேண்டும்; சிரிக்கத் தெரிந்தவர்களும் சிரிக்கிறவர்களும் நீண்ட ஆயுளோடு வாழ்வார்கள் என விஞ்ஞானிகளே சொல்லவில்லையா?

'ராமு, பதினைந்து வருஷம் ஆகிறது உன்னைப் பார்த்து. அடையாளம் கண்டு பிடிக்கவே முடியவில்லையே! ஒற்றை நாடி இரட்டை நாடி ஆகிவிட்டது. இது கலியாணத் தொந்தியா, பணத் தொந்தியா?'

'எல்லாக் கேள்விகளையும் ஒரே மூச்சில் முடித்துவிடாதே! எனக்குக் கலியாணம் ஆகிவிட்டது. இரண்டு பயல்கள் இருக்கிருர்கள். நிம்மதியாக இருக்கிறேன். உன் கட்டுரைகள் வேறு என் நிம்மதியில் சிரிப்பைச் சேர்க்கின்றன. என் கதை இவ்வளவுதான்; உன் சேதி என்ன?'

'என் கதை இன்னும் சுருக்கம். எனக்கும் மணம் நடந்துவிட்டது. குழந்தை குட்டி என்ற தொந்தரவு கிடையாது. வேடிக்கையாகப் பொழுது போகிறது. பங்களாவுக்குத்தான் வருகிருயே, சாவகாசமாகப் பேசலாம்.'

வழியிலிருந்த ஒரு வெற்றிலைக் கடையில் நின்ற சுந்தா, கடைக்காரனை எனக்கு அறிமுகப்படுத்தினுன்: 'மாரிமுத்துதான் என் கட்டுரைகளுக்குத் தாய்ச் சரக்கு சப்ளை செய்கிறவன். மாரி, சரக்கு வந்துவிட்டதா?'

கடைக்காரன் சிரித்துக்கொண்டே, 'ஐயா வந்தால் அமர்க்களம்தான். எவ்வளவு கவலை இருந்தாலும் பறந்து போகும்' என்ருன்.

அவன் கொடுத்த புகையிலை மட்டையைப் பிரித்து, திருநீறு அள்ளுவது போல் இரு விரல்களால் அள்ளி அள்ளி வாயில் போட்டபடிச் சுந்தா சொன்னுன்: 'இந்த வாசனைப் புகையிலை எனக்காக என்றே கும்பகோணத்திலிருந்து ஸ்பெஷலாக வருகிறது. மாரிமுத்து தினம் எனக்காக நாலணு மட்டை கொண்டு வருகிருன். இந்தச் சரக்கு வாயில் இருந்தால்தான் என் பேனுவுக்கு மூளை வரும்; பிரளயமாக எழுத ஆரம்பித்துவிடும்.'

'கும்பகோணத்திலிருந்து இங்கே ஏன் ஜாகை மாற்றிவிட்டாய்? புகையிலைக் கடைக்குப் பக்கத்திலேயே குடி இருந்தால் நல்லதல்லவா?'

'உனக்கு விஷயம் தெரியாதா? கும்பகோணம் என்கிற பெயர் அவமானகரமானது என்று ஆராய்ச்சியாளர்கள் தீர்ப்பளித்து விட்டார்கள். குடந்தை என்பதுதான் வரலாறு ஏற்கும் பெயர். புதுப் பெயர் சூட்டிய பிறகுதான் அங்கே ஜாகை வைப்பதாகச் சபதம் செய்திருக்கிறேன். ஏதாவது சபதம் செய்து, அதற்காக வாழ்வதுதானே வாழ்க்கை?'

கல்லூரி நாட்களில் இருந்ததைப் போலவும், இப்போது தன் கட்டுரைகளில் எழுதுவது போலவும் அவன் கலகலப்பாகப் பேசுவதைக் கேட்க எனக்கும் உற்சாகமாக இருந்தது. நான் வாழ்க்கையில் மிகவும் அடிபடாதவன்; சுகபுருஷன் என்றே சொல்லலாம். என்னைப் போலவே அவனும் மகிழ்ச்சியாக இருப்பதைக் காண எனக்குத் திருப்தியாக இருந்தது.

2

'இதுதான் எங்கள் பங்களா' என்று அவன் காட்டின வீட்டைப் பார்த்தபோது எனக்குக் கொஞ்சம் தயக்கமாக இருந்தது. அதை வீடு என்றும் சொல்ல முடியாது; குடிசை என்றும் தீர்மானிக்க முடியாது. ஓட்டுக் கூரை என்று சொல்லலாம்; தென்னங் கீற்றுகளால் ஆங்காங்கு செய்துள்ள ஒட்டு வேலைகளைக் கொண்டு 'ஒட்டுக் கட்டிடம்' என்றும் கூறலாம். சுவாமி மலையில் முருகபிரான் தம் தந்தையாருக்கு உபதேசம் செய்த அந்தக் காலத்தில், கட்டிய வீடாகத்தான் அது தோன்றியது. நீள அகலத்தில் பெரியதுதான்; பழுதுகளும் அப்படித்தான் இருந்தன. பிரபல ஆசிரியனுன என் நண்பன், அந்த வீட்டில் இருப்பதை அறிய எனக்குச் சங்கடமாக இருந்தது. கட்டுரைகள் எழுதி, அவன் ஏராளமாகச் சம்பாதித்து அமோகமாய் வாழ்கிருன் என்று நான் செய்த கற்பனை பொய் ஆயிற்று.



இதுதான் எங்கள் பங்களா !

இது கல்யாணத் தொந்தியா பணத் தொந்தியா ?

'என்ன மலைக்கிருய் ராமு? இவ்வளவு வசதியான வீடு உங்கள் பம்பாயில் கிடைத்து விடுமா? இந்த அளவுக்கு அங்கே இடம் கிடைத்தால், ஆயிரம் ரூபாய் வாடகை கிடைக்குமே!'

அதுவும் சொந்த வீடு அல்ல; அவன் எழுத்தாளர்களுக்கு உடன் பிறவியான வறுமையோடுதான் வாழ்கிருன் என்று தெரிந்தபோது என் வேதனை மிகுந்தது.

'நீ அப்பாவை மறக்கவில்லையே?' என்ருன் அவன்.

அவனுடைய தகப்பனுரை எனக்கு நன்ருகத் தெரியும். அவரைப் பற்றியும் சில வார்த்தைகள் சொல்லவேண்டும். புகையிலை வியாபாரத்தில் ஏராளமாகச் சம்பாதித்தவர் அவர். குடிகாரர் என்பதைத் தவிர, அவரைப் பற்றிக் குறை சொல்வதற்கு ஏதும் இல்லை. அவர் காலமாகி இருப்பார் என்று எண்ணித்தான் அவரைப்பற்றி நான் அவனிடம் கேட்கவில்லை.

'அப்பாவா?' என்றேன்.

'அப்பாவேதான். வயதாகிவிட்டது. பார்வை மட்டும் தடுமாற்றம். மற்றப்படி திடமாக இருக்கிருர்.'

'அது சரி. அவர் புகையிலையில் ஏராளமாகச் சம்பாதித்தாரே, நான் ஏன் வாடகை வீட்டில் குடியிருக்கிறேன் என்றுதானே கேட்கிருய்? புகையிலையில் வந்தது புகையாகி இலையாகிவிட்டது! அப்பா ஓரளவு சொத்து சேர்த்ததும் அம்மா போய்விட்டாள். அந்தக் கவலையில் அப்பா தொழிலை நிறுத்திவிட்டார். அத்தோடு, சாப்பாட்டையும் மறந்துவிட்டார். பசி, தாகத்துக்குத் தீர்த்தம்தான். சொத்து போன இடம் தெரியவில்லை. மதுவிலக்கு வந்தது அப்பாவுக்கு இடி விழுந்தாற்போல் ஆகிவிட்டது. கள்ளச் சரக்கு கிடைத்தாலும் அசல் சரக்கில் உள்ள நயம் அதில் ஏது? அவரோடு பேசிப் பாரேன்.'

வீட்டின் நடை பாதையில் உட்கார்ந்திருந்த அவனுடைய தந்தையருகில் போனேன்.

'அப்பா!'

'வந்துவிட்டாயா? கும்பகோணம் தானே போயிருந்தாய்? பீமா லாட்ஜ் ஹல்வா கொண்டு வந்தாயா?' என்ருர் அவர்.

'அந்த ஹல்வாவை உங்களால் கடிக்க முடியாது. உங்களுக்காகப் பம்பாய் மிட்டாய் வாலாவிடம் ஸ்பெஷல் ஆர்டர் கொடுத்திருக்கிறேன். புதன்கிழமை வந்துவிடும். ஒரு வீசைக்குச் சொல்லிவிட்டேன். ஒரு வாரம் சாப்பிடலாம். என்னேடு ராமு வந்திருக்கிருன். என்னேடு காலேஜில் படித்தானே—'

'வா ராமு, எப்போது வந்தாய்? எங்கே இருக்கிருய்?' என்று தன் குருட்டு விழிகளை என் பக்கம் திருப்பினுர் அவர்.

'நீ அப்பாவோடு பேசிக்கொண்டிரு. நான் ஐந்து நிமிஷத்தில் வந்து விடுகிறேன்' என்று சுந்தா உள்ளே போனுன்.

'இப்போதுதான் ரயிலிலிருந்து வருகிறேன். பம்பாயில் உத்தியோகம்.'

'அங்கேயும் இந்த மதுவிலக்கு அமுலில் இருக்கிறதோ?'

'இருக்கிறது.'

'ஆனுலும் 'பிளாக்'கில் நல்ல சரக்கு கிடைக்கும். இல்லையா?'

'எனக்குப் பழக்கம் இல்லை.'

'கெட்ட பழக்கம். கூடாதுதான். ஆனுல் பழக்கம் பண்ணிக்கொண்டால் விட முடியாது. ராமு, உனக்குக் கேட்கப் பிடிக்காது. இருந்தாலும் சொல்லி விடுகிறேன். பிரின்ஸ் பிராண்டி என்று கேள்விப்பட்டிருக்கிருயா? இங்கிலீஷ் சரக்கு. அதைத் தொட்டவன் வேறு சரக்கு தொடமாட்டான். ஒருமுறை டில்லிக்குப் போயிருந்தேன். என்னேடு

அந்த ஹல்வாவை உங்களால் கடிக்க முடியாது.

மூன்று என்ன. அதற்கு மேல் போட்டால்கூட அசையமாட்டான்.

இரண்டு பேர். அங்கே ஒரு இங்கிலீஷ்காரனோடு பழக்கம் ஆயிற்று. எங்கள் நாலு பேருக்கு இடையில் ஒரு பந்தயம் வைத்தோம். மூன்று முழு பாட்டில் போட்டாலும் தடுமாறக் கூடாது என்று.'

அவருடைய பேச்சோடு இழைந்து போவதைத் தவிர வேறு வழி இல்லாமல், 'பந்தயத்தில் நீங்கள்தான் ஜயித்திருப்பீர்கள்' என்றேன்.

'அதுதான் இல்லே. அந்த இங்கிலீஷ்காரன்தான் ஜயித்தான். மூன்று என்ன, அதற்குமேல் போட்டால்கூட அசைய மாட்டான்போல் இருந்தது. தலைக்கு ஐநூறு அவனிடம் கொடுத்தோம். மறு நாள் இன்னொரு போட்டி. பனங்கள்ளு இருக்கிறதே—இங்கே மொந்தையாகத் தருவார்கள்; அங்கே பாட்டிலில் கொடுத்தார்கள். இரண்டுக்கு மேல் சாப்பிட என்னால் முடியவில்லை. குமட்டிவிட்டது. என்னோடு வந்த சாமிராஜு நாயுடுவுக்கு இந்தப் போட்டியில் ஜயம். தலைக்கு ஐந்து நூறு கொடுத்தோம்.'

அவருடைய ஆஸ்தி கரைந்த கதை முழுவதையும் நான் ஊகிக்க முடிந்தது. குடியைத் தவிர வேறு எதைப் பற்றி யாவது அவரைப் பேசவைக்க வேண்டும் என எண்ணியவனாய், 'சுந்தாவுக்கு எந்த ஊரில் பெண் வாங்கினீர்கள்?' என்று கேட்டேன்.

'உனக்குத் தெரியாதா? பெரிய இடத்துச் சம்பந்தம்தான். மாயவரத்துப் பெண். பெட்டிபோல் அடக்கம். ராமு, நான் குடித்துக் கெட்டேன் என்று சுந்தாவுக்குக்கூட வருத்தம். மாயவரம் சம்பந்தி இருந்தாரே, அவருக்குக் குடி என்றாலே பிடிக்காது. குடிகாரன் பிள்ளைக்குப் பெண் கொடுப்பதா என்று ரொம்ப யோசித்தார். பலமாகச் சிபாரிசு வைத்துத் தான் பெண் வாங்கினேன். அத்தனை நேறியான ஆசாமி, போகிறபோது 'சர்வ பாப்பர்'. அவன் பிள்ளைகள் எல்லாம் சோற்றுக்குத் தவிக்கின்றன. எதற்காகச் சொல்லவந்தேன் என்றால், கெட்டுப் போகவேண்டும் என்று விதி இருந்தால், குடித்துத்தான் கெட வேண்டும் என்பதில்லை; குடிக்காமல் இருந்தாலும் கெட வேண்டியதுதான்; இல்லையா? விதியை வெல்ல முடியுமா? மதியாலேயே வெல்ல முடியாது; சட்டத்தால் வென்றுவிட முடியுமா? இந்தச் சுயராச்சியம் வந்து, ஊரே வரண்டு போச்சு.'

நல்ல வேளையாக இந்த நேரத்தில் சுந்தா இரண்டு டம்ளர் காபியோடு வந்து சேர்ந்தான்.

'அப்பாவுக்கு மிகவும் வருத்தம். இந்த மதுவிலக்கு அவர் உற்சாகத்தையே மாய்த்துவிட்டது. எனக்குக்கூட, அது இருந்தால் இன்னும் ஜோராகக் கற்பனை ஓடுமே என்று சில சமயம் ஏக்கமாய் இருக்கிறது.'

'உன் கிண்டலை உன்னோடு வைத்துக் கொள். என்னிடம் காட்டினால், பொல்லாதவனாக இருப்பேன்' என்றுகொண்டே அவன் தந்தை காபியை உறிஞ்சினார்.

'கிண்டல் இல்லை, அப்பா. நிசமாகத்தான் சொல்லுகிறேன். காளிதாசன் போன்ற மகா கவிகள் மதுரசம் அருந்திவிட்டுத்தான் எழுத உட்காருவார்களாம். அது சரி, காபி என் தயாரிப்பு. எப்படி இருக்கிறது? பிரின்சுக்கு ஈடாகாது. இருந்தாலும்......'

அவன் தகப்பனார் டம்ளரைக் கீழே போட்டார். 'கிறுக்குப் பயல், பத்திரிகைகளுக்குக் கதை எழுதிவிட்டால், மேதாவி என்று எண்ணம். இந்தமாதிரி ஒரு பெண்சாதி அமைந்திருக்கிற போதே, உனக்கு இவ்வளவு திமிர் இருக்கிறது—'

சுந்தா சிரித்துக்கொண்டே எழுந்தான்: 'அப்பாவுக்கு வேலை கொடுத்தாகி விட்டது. என் அறைக்குப் போகலாம்.'

அந்தச் சூழ்நிலையிலிருந்து வெளியேற விரும்பிய நான், அவனைப் பின் தொடர்ந்தேன். அவனுடைய அறை



கர்ச்சனை புரிந்தாள் என்று அந்த பத்திரிகைக்காரர்கள் எழுதுவார்களே, அப்படி......

இந்த சுயராச்சியம் வந்து ஊரே வறண்டு போச்சு!.

சுத்தமாய் இருந்தது; நிறையப் புத்தகங்கள் இருந்தன.

'நிறையப் படிக்கவேண்டும். படித்தால்தான் எழுத முடியும். இல்லையா?' என்றேன். அவன் எப்படித்தான் எழுதுகிறானோ என்று நான் பல முறை வியந்தது உண்டு. அந்தக் கேள்வியை அவனிடமே கேட்டேன்.

'படித்தால்தான் எழுத முடியும் என்பது உண்மைதான்; படித்ததைத்தான் எழுத முடியும் என்று சிலர் சொல்கிறார்களே, அதுவும் உண்மைதான்.'

3

எங்களுடைய சுவாரசியமான பேச்சு தடைப்பட்டது. அறைக்குள் ஒரு பெண்மணி நுழைந்து, காலியாகக் கிடந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்தாள்.

'ராமு, வனஜா என் மனைவி. வனஜா, இவரை உனக்குத் தெரியாது. என்னோடு காலேஜில் படித்தவர். ராமு என்று பெயர்.'

கைகூப்பிய அவளை நானும் வணங்கினேன்.

'ராமு, வனஜா பெரிய வீட்டுப் பெண் என்று அப்பா சொல்லியிருப்பாரே. என் மாமனாருக்கு மாயவரத்தில் முப்பது வீடுகள் இருக்கின்றன; நூறு வேலி நிலம்.'

சொத்து பூராவையும் அவர் தொலைத்துவிட்டார் என்று அவன் தகப்பனார் கூறியது ஞாபகத்துக்கு வந்தது.

சுந்தா சிரித்துக்கொண்டே கூறினான்: 'வனஜா பிறந்த வீட்டுக்கே போவதில்லை. அப்பாவுக்குப் பிறகு அவளுக்கு அங்கே என்ன உரிமை இருக்கிறது?'

வனஜா குறுக்கிட்டாள்: 'ஆண்பிள்ளைகள் செய்கிற சட்டம் அவர்களுக்குச் சாதகமாகத்தானே இருக்கும்? தந்தையின் சொத்தில் மகளுக்குப் பங்கு இல்லை என்பது பே[illegible] இல்லையா? பாரதியார் மகாகவி என்றால் மகாகவிதான். சட்டங்கள் செய்வதும், பட்டங்கள் ஆள்வதும் இனி பெண்களின் உரிமை என்று அவர் தீர்க்க தரிசனமாகப் பாடியதிலிருந்தே அவர் மகாகவி என்று தெரியவில்லையா? பாரதி ஓர் ஆடவர்தானே என்று கேட்கலாம். அவர் தேவியை வழிபட்டவர்; அதனால்தான் அவரிடம் பெண்மை அம்சம் மிகுந்து இருந்தது.'

'ராமு, வனஜா புதுமைப் பெண். பெண் விடுதலையில் ஆர்வம் உடையவள். அவள் சொல்வதில் உள்ள நியாயத்தை நீ ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்.'

'பார்த்தால் ஒப்புக்கொள்கிறவராகத் தெரியவில்லையே!' என்றாள் வனஜா.

'என்ன சொல்கிறீர்கள் என்பதே தெரியாமல், எதை ஒப்புக்கொள்வது?' என்றேன் ஒன்றும் விளங்காமல்.

'பெண் விடுதலை வேண்டுமா, வேண்டாமா?' என்றாள் வனஜா. 'கர்ச்சனை புரிந்தாள்' என்று பத்திரிகைக்காரர்கள் எழுதுவார்களே, அப்படி அதட்டிப் பேசினாள் அவள்.

அவர்கள் ஹாஸ்யமாகப் பேசுகிறார்களா அல்லது விவகாரமாகப் பேசுகிறார்களா என்று என்னால் கண்டுகொள்ள முடியவில்லை: 'வேண்டாம் என்று யார் சொல்ல முடியும்? ஆனால்...'

வனஜா இடைமறித்தாள்: 'பெண் விடுதலையில் 'ஆனால்' கிடையாது. 'ஆனால்' என்பதே ஆடவரின் அற்ப புத்திக்கு அடையாளம். எத்தனை ஆயிரம் ஆண்டுகளாய் நீங்கள் எங்களை அடக்கி ஆளுகிறீர்கள்? இனியும் எங்களை ஏமாற்ற முடியாது; ஏமாறவும் மாட்டோம்.'

அவளுடைய குரல் ஆவேசமாக ஒலித்தது. விளையாட்டாகப் பேசிப் பொழுது போக்க வந்த இடத்தில், இந்தப் போர்க் குரல் எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால், சுந்தா அசையவில்லை. அவன் கூறினான்: 'ராமு, வனஜா சொல்லுவதில் என்ன தவறு? நெடுங்காலமாக மாதரை ஆடவர் துன்புறுத்திவிட்டார்கள். இனி; அவர்களும் விடுதலை வாழ்க்கை வாழ வேண்டும். நான் வனஜாவைத் துணைவியாகத்தான் நடத்துகிறேன். அவளை நான் ஒரு வேலையும் செய்ய விடுவதில்லை. உனக்கு நான் கொடுத்த காபி என் சொந்தத் தயாரிப்பு. சாப்பாடு ஹோட்டலில் இருந்து வருகிறது...'

'ஹோட்டலில் ஆண்கள் சமைத்த சாப்பாடு. பெண்களைச் சமையற்காரிகள் என்று கேவலப்படுத்தியதன் பலன்தான்—' என்றாள் வனஜா.

'இனிச் சமையல் தொழில் ஆண்களுக்கு; ஆளும் தொழில் பெண்களுக்கு.'

'அப்படிச் சொல்லுங்கள்!' என்று கை தட்டிவிட்டு, வனஜா வெளியேறியதும் நாடகத்தில் ஒரு காட்சி முடிவடைந்தாற்போல் இருந்தது எனக்கு.

'என்ன ராமு, வனஜா எப்படி?'

'அது சரி—' என்று மென்று விழுங்கினேன்.

'பைத்தியம் எப்போது பிடித்தது என்றுதானே கேட்கிறாய்? கலியாணத்துக்கு முந்திதான். கலியாணம் ஆனால், பைத்தியம் தெளியும் என்று என்னிடம் ஒப்படைத்தார்கள். பைத்தியமாக இருப்பதால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது! அவளோடு நானும் பைத்தியமாக நடிக்கிறேன்; நல்ல பொழுதுபோக்காகவும் இருக்கிறது...'

4

'மாமா, கிளாஸிலே எனக்குத்தான் முதல் மார்க்!' என்று கத்திக்கொண்டே ஒரு பெண் குழந்தை சுந்தாவின் கால்களைக் கட்டிக்கொண்டது.

அவளை வாரி அணைத்து முத்தமிட்டுச் சுந்தா கூறினான்: 'அப்படியானால் உனக்குப் பிரைஸ் கிடைக்குமே!'

'அண்ணாவுக்குக் கிடைக்காது; இல்லை?'

'உன் சமர்த்து அவனுக்கு வருமா? கீழே போய் விளையாடு. அண்ணா வந்தால் இங்கே அனுப்பு.'

அவள் போனதும், 'குழந்தை யார்?' என்று கேட்டேன்.

'சொல்லவில்லையா? என் தமக்கை ஒருத்தி இருந்தாளே, தெரியுமா?'

'தெரியும்.

'ஐந்து வருஷத்துக்கு முந்தி காலராவில் அவளும் அவள் பு[illegible]னும் போய்ச் சேர்ந்தார்கள். [illegible] பெண்ணும் ஒரு பையனும்தான் குடும்பத்தில் மிச்சம். நான் வளர்க்கிறேன். கல்யாணி ரொம்பச் சூடிகையான பெண். குழந்தைகளோடு பேசிக்கொண்டே இருந்தால், பொழுது போவதே தெரியாது—'

5

அவனுக்குப் பொழுது எப்படிப் போகிறது என்பதைப்பற்றி நான் யோசிக்கவில்லை. குடிப் பைத்தியமான தந்தை, புதுமைப் பைத்தியமான மனைவி, அனாதைகளான இரு குழந்தைகள், வறுமையின் அட்டகாசம்—இந்தச் சூழ்நிலையில் அவனால் எப்படிச் சிரிக்க முடிகிறது என்பதைத்தான் யோசித்துக் கொண்டிருந்தேன்.

'நான் எப்படிச் சிரிக்க முடிகிறது? —என்றுதானே யோசிக்கிறாய்?'

'அதுதான் எனக்குப் புரியவில்லை.'

'பெர்னார்ட்ஷா மீது டால்ஸ்டாய்க்குக் கோபம், ஷா அதிகப்படியாகச் சிரிக்கிறார், அழ வேண்டிய இடத்தில்கூடச் சிரிக்கிறார் என்று டால்ஸ்டாயுக்குக் கோபம்; அப்படியே ஷாவுக்குக் கடிதமும் எழுதினார். 'சிரிப்பதற்கு இல்லாமல் உலகத்தில் வேறு என்னதான் இருக்கிறது?' என்று ஷா பதில் எழுதினாராம். ஷா சொன்னது உண்மை என்றுதான் எனக்குப் படுகிறது. அப்பா பேசுவது வேடிக்கையாக இல்லையா? வனஜாவோடு பைத்தியமாகப் பழகுவது ஹாஸ்யம் இல்லையா? குழந்தைகள் கொஞ்சுவது இனிமையாக இல்லையா? இதற்காக எல்லாம் சிரிக்காமல், வேறு எதற்காகச் சிரிப்பது?' என்றான் சுந்தா.

*



இலங்கையில் கிடைக்குமிடம்:—AVRA Ltd., Colombo
"ரேடியோ ஸிலோன்"—41 72 மீட்டரில் இசை விருந்து'
வெள்ளிக்கிழமை தோறும் மாலை 6-30 லிருந்து 6-45 வரை

கருட பஞ்சமி

மலர்

வாசலில் நின்றிருந்த குழந்தைகள் வீறிட்டு அலறின. கையிலிருந்த தினப் புத்திரிகையை மேஜையின்மேல் போட்டு விட்டு வாசலுக்கு ஓடினேன். அதே சமயம் சமையலறையில் கொழுக்கட்டை செய்வதில் முனைந்திருந்த என் மனைவி லக்ஷ்மியும் வாசலுக்கு ஓடி வந்தாள். சிறியவள் கவிதா விசித்து விசித்து அழுதுகொண்டிருந்தாள். காயத்ரி மிரள மிரள விழித்துக்கொண்டு நின்றாள். 'ஏண்டி! ஏன் கத்தினாய்?' என்று அதட்டினாள் லக்ஷ்மி.

'இந்தாடீ! குழந்தை பயந்து நிற்கிறது. நீ வேறு அதட்டுகிறாயே!' என்று சொல்லி, அவளைக் கடிந்துகொண்டு சிறியவள் கவிதாவை வாரி எடுத்துக்கொண்டேன். அதற்குள் பெரியவள் காயத்ரி, 'அண்ணா! அண்ணா! பெரிய பிராந்து பறந்து வந்தது. நம்ம கவிதா வெச்சிண்டிருந்த கொழக்கட்டையை லபக்குன்னு கொத்திண்டு...' சொல்லுவதற்குள்ளேயே பயம் வந்து தொண்டையை அடைத்துக் கொள்ள, கண்களை அகல விரித்துக் கொண்டு திணறினாள் அவள். சின்னவள் அந்தச் சலுகையில் இன்னும் சற்று விசித்தாள். பருந்து குழந்தையின் கையைப் பிராண்டி விட்டதோ என்று கைகளைப் பார்த்தேன். உடலிலும், கைகளிலும் எந்தவிதமான காயமோ, கீறலோ தென்படவில்லை.

'கருட பஞ்சமியாம் அதுவுமா...!'

'ஏதோ! தவறு நேர்ந்திருக்கணும்...'

'ஒண்ணும் தப்பா நடக்கல்லியே...'

'வழக்கம்போலவேதான் மடியாப் போயி, நாகருக்குப் பூஜை பண்ணிட்டு வந்தேன்....'

'பின்னே! இந்த சமிக்ஞை...ஏதோ போறது. ஒண்ணும் குறிப்பிடறாப்பலே... நடக்கல்லே...'

'இன்னும் என்ன வேணும்? கொழந்தை கையிலேருந்து கருடன் பிடுங்கிண்டு... அம்மா தாயே, கற்பகம்! என் வயித்துலே பாலே வாரடியம்மா! ஒனக்கு அடுத்த வெள்ளிக்கிழமை அபிஷேகத்துக்குப்பால் வாங்கிக் குத்தறேன். இதற்குள் லக்ஷ்மியின் கண்களில் கண்ணீர் துளித்து விட்டது. புடவைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள். நான் குழந்தைகளை அமைக்காக்கொண்டு உள்ளே போக யத்தனித்தேன். 'ஏதானும் திங்கக் குடுத்தா உள்ளேயே வெச்சிண்டு திங்கப் படாதா?' என்று எனக்கே கேட்கும் குரலில் சொல்லிக் கொண்டேன். நான் குழந்தைகளை அதட்டிப் பழக்கமில்லை. இந்த வார்த்தைகளைக்கூடப் பொறுக்காமல் காயத்ரி, 'நான் உள்ளேயேதான்ணா தின்னேன். இந்தக் கவிதாவோ, குவிதாவோ அவள்தான் தவக்களை மாதிரி நகர்ந்து வந்து வாசல்லே நின்னுது... வந்து...'

'சரி சரி. புகார் போதும்... வா உள்ளே...' என்றேன்.

'அண்ணா...அண்ணா...இதோ பாரு ரூவா...ஐய்யா! நோட்டு...ஐய்யா.... நெறைய்ய...எனக்குப் பட்டுப் பாவாடை....' என்று குதிக்க ஆரம்பித்தாள் காயத்ரி.

'என்னடீ! ஒளர்றே! ஒண்ணுந் தேதியே ஓங்கப்பாவுக்கு சம்பளம் தர்ராளா?' என்றேன் சற்று ஆச்சரியமுடன்.

'இல்லேப்பா... இதோ....!' என்று சொல்லியபடி கையில் கற்றை நோட்டுகளுடன் என் எதிரில் வந்தாள் காயத்ரி. ஆமாம். குழந்தை சொன்னது உண்மைதான். ஒற்றை ரூபாய் நோட்டுகள், புதியனவாக, நூறுகொண்ட ஒரு புதுக் கற்றை ரிஸர்வ் பாங்கிலிருந்து நேராக வந்தது போலவே இருந்தது.

'இது ஏதுடீ! எங்கே இருந்தது...?' என்றேன் ஆச்சரியத்துடன்.

'வந்தா. நம்ம கவிதா ஒக்காந்திண்டிருந்தாளே. அதே எடத்துலே... வந்து.... அந்தப் பிராந்துதான் போட்டுட்டுப் போயிடுத்தோ என்னவோ...'

'ஆமாம். பிராந்து கொண்டுவந்து போட்டுது...போடீ பைத்தியம்...'

'இல்லேப்பா! வந்து நாங்க இங்கே வர்ரப்போ இது இல்லே... கொழக்கட்டையை எடுத்திண்டு பிராந்து நோட்டைப் போட்டுட்டுப் போயிருக்கும்...'

குழந்தையின் தீர்ப்பு என் தர்க்க புத்திக்குச் சரியாகப் படவில்லை. பருந்தாவது, நோட்டாவது...அதுவும் நம்மைத் தேடிக் கொண்டுவந்து போடவாவது? பருந்துக்கு ஒண்ணாந் தேதி எந்த ஆபீஸில் சம்பளம் தருகிறார்கள்?

'இருந்தாலும் இருக்கும். நான் பக்தியோடெதான் பூஜை பண்ணினேன். ஊரிலே என் தம்பிகளைக் காப்பாத்தான்னு வேண்டிண்டேன். நம்ம ஆத்துலேயும் பால் பொங்கட்டும்னு வேண்டிண்டேன். கருடன் கண் தெறந்திருப்பான்' என்று ஒரு புது 'லாஜிக்' படித்தாள் லக்ஷ்மி. எனக்கு உடம்பெல்லாம் சிலிர்த்தது. அப்படியும் இந்த 'எரிப்பு யுக'த்தில் நடக்குமா என்று தோன்றியது. மனம் உளைச்சல் கண்டது. பேசாமல் உள்ளே சென்றேன்.

'சரி சரி. என் தம்பிக்கி இன்னைக்கே தபாலில் அக்ஷதை அனுப்பணும்... நல்ல சகுனமாப் பணமும் வந்திருக்கு...' என்று சொல்லி, லக்ஷ்மி அக்ஷதையைப் பொட்டலம் கட்டினாள்.

அவள் பொட்டலம் கட்டியது என் மனதையும் கட்டியது. இந்த நல்ல நாளில் அவள் வீட்டில் இருந்தால், கருட பஞ்சமி நோன்பு நோற்றுவிட்டு வீட்டிற்கு வந்தவுடன், 'அண்ணா நில்லு. உனக்கு நமஸ்காரம் பண்றேன்' என்று சொல்லிக் கையில் கொழுக்கட்டை பாயஸத் தட்டைக் கொடுத்துவிட்டு, விழுந்து நமஸ்கரிப்பாள். என் தலையில் பூஜை அக்ஷதையைப் போட்டுவிட்டுப் புற்று மண் பிரசாதத்தையும் தருவாளல்லவா? இத்தனை வருஷமாக ஒரு முறைகூடத் தவறாமல் நடந்து வந்தது. இந்த வருஷம் நின்று விட்டது. அவள்...ஹூம்...புத்தியில்லாத பெண். ஏதோ பேய்த் தேரைக் கண்டு ஓடிவிட்டாள். என்ன சுதந்திரம் வேண்டியிருக்கிறது...என்னுடன் வாழவே முடியாது என்று சொல்லிப் போய்விட்டாள். இந்த நாளையப் பெண்களின் போக்கை என்னவென்று சொல்லுவது? இருபது வயதான பெண்ணுக்கு நாம் எது வரையில் சொல்ல முடியுமோ, அதுவரையில்தான் சொல்லலாம். கேட்கவில்லை என்றால்...அதன் போக்குப்படிப் போகட்டும் என்று விட்டுவிட்டேன். அவள்தான் அப்படி என்றால், அம்மாளும் அவள் பங்கில் நின்று அங்கே போய் துணை இருக்கிறாள்...ஹூம்...என் நெஞ்சை அழுத்திப் பிடித்துக்கொண்டேன்.

∴ ∴ ∴

ஆம்! என் சகோதரி ருக்மணியைத்தான் சொல்லுகிறேன். என் பின்னர் பிறந்தவள்தான். கல்வி அறிவு இருக்கட்டும் என்று என் சக்திக்கு மீறியே படிக்க வைத்துவிட்டேன். நான் படிக்க வேண்டியதையும் சேர்த்துப் படிக்க வைத்தேன். பி. ஏ. பாஸ் செய்தாள்.

வயது பதினெட்டைக் கடந்து விட்டதே; நமது வமிச வழக்கப்படி, இது வரையில் கல்யாணம் செய்து கொடுக்காததே பிசகு என்ற நினைப்பில் கல்யாணம் செய்து கொடுக்கலாம் என்று முயற்சி செய்து, ஜாதகங்களையெல்லாம் சேகரம் செய்து வந்தேன். அவை யாவையும் ருக்மணி நையாண்டி செய்து கொண்டே வந்தாள். அவள் கல்விக்கு ஒத்த வரனை என்னால் அணுக முடியவில்லை. மற்ற வரனை ருக்மணியிடம் சொல்லவும் என்னால் முடியவில்லை. அந்தச் சமயத்தில் என் பள்ளிக்கூட நண்பன் ஒருவனின் தம்பி, பம்பாய் 'ரிஸர்வ் பாங்கி'ல் வேலை செய்பவன்; நவநாகரிகமான போக்கு உடையவன்; 'வரதட்சிணை ஏதும் வேண்டாம், 'ஸிம்பிளா'க ஒரு ஐநூறு ரூபாய்க்குள் கல்யாணம் செய்து கொடுங்கள்' என்று எழுதியிருந்தான்.

அந்தக் கடிதம் வந்த அன்றே ருக்மணியும் ஒரு கடிதம் கொண்டு வந்தாள். அந்தக் கடிதத்தில் நகருக்கு வெளியிலுள்ள சுரங்கத் தொழிற்சாலை ஒன்றில் அவளுக்கு 'டைம் கீப்பர்' வேலை கிடைத்த செய்தி இருந்தது. எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. என் திட்டம் என்ன? இவள் போக்கு என்ன? நான் என்னடா வென்றால் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்கிறேன்; இவள் என்றால் உத்யோகத்தை வாங்கிக்கொண்டு வந்து நிற்கிறாளே!

'உன் எண்ணம்தான் என்ன ருக்கு?' என்றேன்.

'என்னண்ணா? இன்னமா சொல்ல வேண்டும்? இந்தப் பிள்ளை பெறும் உத்யோகம் எனக்கு வேண்டாம். நான் இப்படியே குஷியாக, சுதந்திரமாக...'

'போறும்டீ உன் பேச்சு. உன் சுதந்திரப்படி நடக்கவிட்டால் ஊர் சிரிக்கும். நம்ம குடும்ப கௌரவம் நடு வீதிக்கு வரும்...'

'அப்படியானால் இன்றைக்கு ஆபீசில் வேலை செய்யும் அத்தனை பெண்களின் மானமும் பறி போய்க்கொண்டுதான் இருக்கிறதாக எண்ணமோ, அண்ணா? பெண்கள் என்றால் அத்தனை மட்டம் இல்லை. அவர்கள் ஏரோப்ளேன்கூட ஓட்டுகிறார்கள். கல்வியறிவின் காரணமான திண்மையில் அவர்களால் சுதந்திரமாக இருக்க முடியும்.'

'ஹூம் முடியும். அப்புறம் அரைக் கிழவி ஆன பிறகு... எங்காவது சகதியில் போய் விழுவார்கள். இந்தா ருக்கு! நீ வேலைக்குப் போகக்கூடாது, ஆமாம். உடனே இந்த வேலை வேண்டாம் என்று எழுதிப் போட்டுவிடு. பம்பாய் பையன் சம்மதம் எழுதியிருக்கிறான். அடுத்த மாதம் முகூர்த்தம் வைத்துக்கொள்ளலாம்....'

'சே! அதுதான் வேண்டாம் என்கிறேன். எனக்குக் கல்யாணம் வேண்டாம். எனக்குக் கல்வி அறிவு கொடுத்தாய் அண்ணா. அதற்கு நன்றி. என் முடிவு தீர்மானமாகிவிட்டது. நான் உத்தியோகத்துக்குத்தான் போவேன். ஆமாம்.' ருக்குவின் வார்த்தைகளில் கண்டிப்பு தொனித்தது.

நானும் அதே கண்டிப்பில், 'நீ இந்த வீட்டில் இருந்துகொண்டு வேலைக்குப் போய் வந்துகொண்டிருக்கக் கூடாது. உன் தங்கை அங்கே நின்றாள், பஸ்ஸில் அவனோடு பேசினாள்; இவனைக் கண்டு இளித்தாள்' என்று பேர் வரக் கூடாது.'

'ஏன்? பஸ்ஸில் போகிறவர்கள் எல்லாம் யாரையாவது பார்த்துப் பேச வேண்டும், சிரிக்க வேண்டும் என்று சட்டம்கூடப் போட்டுவிடுவாய் போலிருக்கிறதே...... நான் அப்படிப் போனால்தானே?'

'ஏன்? பஸ்ஸில் போகாமல் தனி காரில் போகப் போகிறாயோ?'

'.......'

ருக்கு ஏதோ ஆழ்ந்து சிந்தித்தாள். அவள் மவுனம் பயங்கரமாகத் தோன்றியது. அவள் அப்படி லேசில் அடங்கி விடக் கூடியவள் அல்ல. ஏதோ புதுத் தாக்குதலுக்குத் தன்னைத் தயார் செய்து கொள்கிறாள் என்று எண்ணினேன். என் தாயாரும் எங்கள் சண்டை; வழக்கமான தமாஷ் என்று எண்ணி, பார்த்துக் கொண்டிருந்துவிட்டாள். நானும் அன்று அத்துடன் விட்டுவிட்டேன்.

அதற்கடுத்த இரண்டு நாட்களில் ருக்கு தொழிற்சாலையில் சென்று வேலையை ஒப்புக்கொண்டு வந்திருந்தாள். அவள் தொழிற்சாலைக்கு எந்த நம்பர் பஸ்ஸில் ஏறினால் சீக்கிரம் போகலாம் என்றும், எத்தனை மைல்கள் உள்ளன என்றும், அந்தத் தொழிற்சாலையை அடுத்த காலனி எத்தனை வசதியான வீடுகளாக இருக்கின்றன என்றெல்லாம் தாயிடம் சொல்லிக்கொண்டிருந்தாள்.

'அப்படியானால், நீ வேலைக்குத்தான் போகப் போகிருயா?' என்று இருந்த இடத்திலிருந்தே கத்தினேன்.

'போகப்போவது என்ன? நேற்றும் இன்றும் போய் வந்துகொண்டுதான் இருக்கிறேன்' என்ருள் அவள்.

'அப்படியானால் என் மானத்தை விலை பேசத் துணிந்துவிட்டாயா?' என்றேன் குரூரமாக.

'உன் மானத்தை நான் ஏன் விலை பேசுகிறேன்?'

'பின்னே! கையாலாகாதவன்; உடன் பிறந்தவளைச் சம்பாதிக்க விட்டுவிட்டான் என்று என்னைத் தூற்ற மாட்டார்களா?'

'என் சுதந்திரம் காரணமாக நான் வேலைக்குப் போகிறேன். ஜீவாதார உரிமை எனக்கும் உண்டு, தெரியுமா? அப்படியிருக்கையில், உன்னை ஏன் தூற்ற வேண்டும்?'

'என் வீட்டிலிருந்துகொண்டு இப்படி நடந்துகொண்டால், என்னைத்தானே அவ்வளவும் சேரும்?' என்றேன், அதே பழைய குரூரத்துடன்.

'உன் வீட்டிலா...உன் வீடு...சரி! அதற்குத்தான் ஏற்பாடு ஆகிவிட்டதே! அங்கே வேலை செய்பவர்களுக்கு எல்லாம் அங்கேயே வீடு தருகிருர்களாம். ஒரு வரிசை வீடுகளுக்கு இப்போது பூச்சு நடந்துகொண்டிருக்கிறது. அது முடிந்ததும் நாமெல்லாம் அங்கேயே போய் விடலாம்...'

'ஓஹோ... வீடா... என் சம்மதமின்றி நீ செய்யும் வேலையில் கிடைத்த வீட்டிற்கு நான் வரவேண்டுமா?'

'நான் உன்னை அழைக்கவில்லையே! நீ உன் வீட்டிலேயே இரு....' அவள் 'உன்' என்ற வார்த்தையை அழுத்தியே சொல்லி, என் முன்னைய தவறைச் சுட்டினுள்.

'இதுதான் உன் முடிவா?'

'ஹூம்...' என்ருள், ருக்கு...எனக்குக் கோபம் அளவு கடந்துவிட்டது. துண்டை எடுத்துப் போட்டுக்கொண்டு வெளியே போய்விட்டேன். அதன் பின்னர் இரண்டொரு தினங்கள்வரையில் நானும் ருக்குவுடன் பேசவில்லை. அவளும் என்னுடன் பேசவில்லை. மூன்ரும் நாள் வாசலில் கைவண்டி வந்து நின்று, என் தாயாருடன் ருக்கு அவளுடைய சாமான்களை ஏற்றிக்கொண்டிருக்கும் போதுதான் விஷயம் புரிந்தது. நான் என் அறையிலேயே இருந்துவிட்டேன்.

சாமான்கள் எல்லாம் ஏற்றிய பின்னர், ருக்கு அறையின் வாசலில் வந்து நின்றுகொண்டு, 'நான் வர்றேன்' என்ருள். நானும் அதே சமிக்ஞையுடன் 'ஹூம் பேஷா...' என்றேன். என் தாயார்தான் வந்து, 'என்னடா பண்ணறது! சிறிசு தனியாப் போயி நின்னு, ஏதாவது குப்பைக் கூடையைத் தூக்கிக் கட்டிக்கப் போறதேன்னு நான்தான் வலுவிக்கக் கூடப் போறேன்னேன். அவள் வேண்டாமின்னுள்...வந்து...ரெண்டுலே நாலுலே வந்து பாத்திண்டிரு... நீதானே ஆம்பிளைத் துணை... என்னமோ... போக்குப் பிடிக்கல்லே! ஒரு காலிலே நிக்கரு... அதையும்தான் பாப்பமேன்னு...!' என்று என்னிடம் பூசி மெழுகிவிட்டு, விடை பெற்றுக்கொண்டாள்.

நான் ஒன்றும் பதில் பேசவில்லை. அன்று போனவர்கள், இந்த மூன்று மாத காலத்தில் ஒருவராவது ஒரு தடவையாவது இந்தப் பக்கம் வரவில்லை. குழந்தைகள்தான், 'அத்தை, அத்தை' என்று உயிரை விடுகின்றன. இந்த பிகு இன்னம் எத்தனை நாட்களுக்கோ? அவளும்தான் ஆகட்டும், குழந்தைகளின் ஆசைக்காகக் கூட இந்தப் பக்கம் வருவதில்லை. எத்தனை நாட்கள் ஓடுகிறது பார்ப்போம்' என்று நானும் பேசாமல் இருந்தேன்.

ஃ ஃ ஃ

இந்தக் கருட பஞ்சமியன்று, அவளைப் பற்றிய எண்ணம் வரவும், என் மனம் குமைந்தது. அவள் செய்ததுதான் சரியா; நான்தான் தவறுதலாக நடந்துகொண்டு விட்டேனே? காலம் போகிற போக்கில் அதன் மாறுதலை ஒட்டி நடந்துகொள்ளாதது என் பிசகுதானே என்றுகூட எண்ணத் தொடங்கி விட்டது, என் மனம். இன்றைக்கு என் சகோதரியின் அசுலதையையும், புற்று மண்ணையும் நான் தரிக்காதது ஒரு குறையாகப் பட்டது.

சரி. எதற்கும் நாளை தபாலைப் பார்ப்போம். உள்ளூரில் இருந்தாலும், பிகுவின் காரணமாகப் பிரசாதத்தைத் தபாலில் அனுப்பலாம் என்று எதிர்பார்த்தேன். அடேடே! மறு நாள் ஞாயிற்றுக் கிழமை. தபால் கிடையாது என்ற விஷயம் மறுநாள்தான் புலப்பட்டது. மனம் ஏதோ ஒரு பிடியில் நிற்காமல் அலையவே, தினப் பத்திரிகையைப் புரட்டிக்கொண்டிருந்தேன். எந்தச் செய்தியும் மனத்தில் பதியவில்லை... பக்கங்களைப் புரட்டிக்கொண்டிருந்தேன். அடேடே! இது என்ன புதிய செய்தி. உண்மையிலேயே இதுதான் செய்தி, ருசிகரமான செய்தி...!

பாவையிடம் பணம் பறித்த பருந்து

உள்ளூர், ஆக 14—

பெண்ணின் கைகளிலிருந்த ஒரு கத்தை கரன்ஸி நோட்டுக்களைப் பருந்து தட்டிச் சென்றுவிட்டது. பணத்தைப் பறி கொடுத்த பெண், உள்ளூர் சுரங்க ஆபீஸில் ஒரு டைம்கீப்பராகப் பணி செய்பவர்.

சம்பள தினத்தன்று சம்பள பட்டுவாடா செய்யப்பட்டது. பெற்ற சம்பளப் பணத்தை ஆவலுடன் எண்ணிக்கொண்டிருக்கையில், திடுமெனப் பாய்ந்த பருந்து, திடுமெனத் தட்டிச் சென்றது. பணத்தைப் பறிகொடுத்த பெண்ணும், சக குமாஸ்தாக்களும் பருந்து பணத்துடன் வானத்தில் வட்டமிடுவதையும் பின்னர் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து சென்றதையும் வைத்த கண் வாங்காது, யாதும் செய்ய இயலாதபடிப் பார்த்துக்கொண்டிருந்தனர். பாடுபட்ட பெண்ணின் பணம் பரிதாபகரமாகப் பருந்தின் விளையாட்டுப் பொருளாயிற்று.

'துப்புத் துலங்கிவிட்டது' என்று கத்தினேன்.

'என்ன, என்ன?' என்று கேட்டுக்கொண்டே, லட்சுமி ஓடி வந்தாள்.

'நேற்று கருடன், கொண்டுவந்து போட்டது, உன் நாத்தனருடைய சம்பளம்' என்று கத்தினேன்.

'ஏன்? ஏதாவது கதை பண்ணப் போறேளா, இப்பமடன்னு' என்ருள் அவள்.

'கதை இல்லேடீ, செய்தி இதோ பேப்பர்லே பாரு!' நான் காட்டிய இடத்தில் லட்சுமி பார்த்தாள்.

'ஆமாம்... சுரங்கம், ஆபீஸ் டைம்கீப்பர்... எல்லாம் சரிதான்... ஆனு... பேரு போடல்லியே?'

'பேரு போடாட்டா என்ன? என் தங்கையாத்தான் இருக்கும். கருடனின் தீர்ப்பு தப்பிப் போகாது?'

'எதையும் போய்ப் பார்த்துட்டுப் பேசுங்கோ...' லட்சுமியின் யோசனையும் சரியென்று பட்டது. மேலும், நானும் ருக்குவைப் பார்த்து மூன்று மாதங்கள் ஆகிவிட்டிருந்தது. பிறந்ததிலிருந்து பிரியாமல் இருந்தவர்கள்....ஒரு சபலம். இந்தச் சாக்கில் போய் அம்மாளைப் பார்த்து வரலாம் என்று எண்ணினேன். அன்று ஞாயிற்றுக்கிழமையாக இருக்கவே, உடன் புறப்பட்டுப் பஸ் ஏறி, சுரங்கக் காலனிக்குப் போனேன்.

அங்கே போய் என் தங்கையின் பெயரையும், உத்தியோகத்தையும் சொல்லிக் கேட்டு விசாரித்துக்கொண்டு போனேன். வாசலுக்கு எதிரில் ருக்கு உட்கார்ந்திருந்தாள். என்னை அவள் எதிர்பார்க்காத நிலையில் இருந்ததால், என்னைக் கண்டு திடுக்கிட்டுவிட்டாள். 'வா...' என்று சொல்லிவிட்டு எழுந்தாள். பாவம். ருக்கு அடையாளம் தெரியாதபடி இளைத்துத் துரும்பாகிவிட்டிருந்தாள்.

'அம்மா...எங்கே...?' என்றேன்.

'அடுத்தாத்துக்கு...' என்று பாதி வார்த்தையும், பாதி சமிக்ஞையுமாகச் சொன்னுள். இன்னம் கோபத்தின் கனல் தணியவில்லை,—என்று எண்ணிக்கொண்டேன். பின்னர், என்னைத் திடப்படுத்திக் கொண்டேன். உடன்பிறந்தவருடன் என்ன பகை? 'பேப்பரைப் பார்த்தேன். உடனே ஓடிவந்தேன்.' என்று பேச்சைத் துவக்கினேன்.

'பேப்பரா? என்ன செய்தி? உன் தங்கையைப்பற்றி ஏதானும் நீ எதிர்பார்க்கருப்பலே போட்டிருக்கா?' என்று அதே கிண்டலாகக் கேட்டாள். இன்னம்பழைய வாதத்தை மறக்கவில்லை. சரி...

'ஆமாம்...இதோ பாரு!' என்று நான் கையுடன் தயாராக எடுத்துவந்த தினப் பத்திரிகையில் குறிப்பிட்டிருந்த இடத்தைக் காட்டினேன். ருக்கு அதைக் கண்களை அகல விரித்தபடிப் படித்துவிட்டு, உடன் தன்னைச் சமாளித்தபடி 'ஓஹோ! ஆமாம்; அந்தப் பெண், பாவம், சம்பளப் பணத்தை இழந்துவிட்டது. பார்க்கப் பரிதாபமாக இருந்தது!'

'அப்படியானால் அது உன் பணமாக்கும் என்று...'

'தங்கை திண்டாடுவாள்; பார்த்துக் குத்திக் காட்டலாம் என்று வந்தாயாக்கும்!' ருக்குவின் குரூரமான பேச்சு என்னுல் தாங்க முடியாததும் தவிர, அந்தப் பணம் ருக்குவால் பறி கொடுக்கப்பட்டதல்ல என்ற எண்ணம் சற்று நிம்மதியும் அளித்தது. நான் பதில் பேசவில்லை. உடனே புறப்பட்டுவிட்டேன். நான் நல்லது எண்ணி வந்தேன். ருக்கு இன்னம் தன் தவறை இறுக்கிக் கொண்டாள். சரி போகட்டும். ஏதோ நன்ருயிருந்தால் சரி.

நான் வாசலைக் கடக்கும்போது, அம்மாள் எதிரில் வந்தாள். 'வாடாப்பா குரு! வெய்யில் எறங்கினதும் நானே அங்கே வரலாம்னு இருந்தேன். சரி; வா?' என்ருள்.

'இல்லேம்மா, நான் போறேன். நீ வாயேன்...!' என்றேன்.

'வாடா உள்ளே! பாவம்... உன் தங்கையைப் பார்த்துட்டு...'

'ஆமாம், தங்கையைப் பார்த்தாச்சு... பாவம் என்ன?'

என் தாயின் கண்கள் கலங்கின. 'பாவம்! ருக்கு பணத்தைப் பறி கொடுத்துட்டு நிக்கறது. நீ வந்து..ஆறுதலா..?'

'என்ன? ருக்கு பணந்தானு அது...!'

'ஏன், ஒனக்குத் தெரியுமா?'

'ஹூம்; பேப்பர்லே போட்டிருக்கு. நான் வந்து கேட்டா, யாரோ பொண்ணேடே பணம்ங்கிருளே ருக்கு...!'

'ஆமாம்டா ஆமாம், பேப்பர்லேகூட வந்துடுத்தா? ஆமாம். பணம் பூராவும் போயிடுத்து. பாழும் பிராந்து பறிச்சுண்டு போயிடுத்து. பால்காரன், கடைக்காரன் எல்லாம் காத்தாலேயே வந்துட்டுப் போயிட்டான். உன்னைக் கேட்டா வது பணம் வாங்கி வரலாம்னு...தான் எண்ணினேன்.'

'அப்போ 'இந்தா பணம்...!' என்று சொல்லிப் பருந்து போட்ட நோட்டுக் கற்றையைக் கொடுத்தேன்...'

'ஒனக்குச் சம்பளம் வந்துடுத்தா?' என்ருள் அம்மாள்.

'இல்லே...!'

'பின்னே.. ஏது பணம்...ஏதானும் லட்சுமி கழுத்துலே கையை வெச்சுட்டியா?'

'இல்லே...'

'பின்னே'

'ஒன் சின்ன பேத்தி, அத்தை விட்ட பணத்தைத் தட்டிண்டுட்டா?'

'என்னடா புதிர் போடறே...பிரைஸ் விழுந்துதா என்ன?'

'சொல்றேன் கேளு. கொழந்தை கையில் கொழக்கட்டை வெச்சிருந்தா. பருந்து அத்தையோட பணத்தைக் குடுத்துட்டு, கொழக்கட்டையை எடுத்துண்டுடுத்து...'

'அடே! என் கவிதாக் கண்ணு...கருட பூஜை பண்ணிட்டாளா? இந்த அசடு என்னமோ கோபத்துலே கருட பஞ்சமி நோன்பு பண்ணமாட்டேன்னு. அதான் பணம் போச்சு. என் கண்ணு! அதுவும் இந்தாத்துப் பெண்தானே! கருடனுக்கு ஆகாரம் கொடுத்தவுடனே, தோஷம் சரியாப் போச்சு...அப்பா! கருடா! என் ருக்குக்கு நல்ல புத்தியைக் குடு...'

இந்தப் பேச்சுகளை உள்ளேயிருந்து கேட்டுக்கொண்டிருந்த ருக்கு, கண்களில் நீர் வழிய ஓடிவந்து, என் காலில் விழுந்து நமஸ்கரித்தாள். என் கண்களில் நீர் திரையிட்டது. மவுனமாக மனத்துள் வாழ்த்திவிட்டு, கருட பஞ்சமிப் பரிசாக அந்த நூறு ரூபாய்களைக் கொடுத்தேன். எப்படியோ கருட பஞ்சமி கருடனுலேயே நடந்துவிட்டது!

☆



டோக்கியோவில் ஆசிய விளையாட்டு விழா

[கே. ஆர். எஸ்,]

*

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிக்கு அடுத்தபடியான மிகப் பெரிய மூன்றுவது ஆசிய விளையாட்டு விழா சென்ற மே 24-ந் தேதி டோக்கியோவில் நடந்தது. இவ்விழாவில் 20 நாடுகளைச் சேர்ந்த 1409 விளையாட்டுக்காரர்கள் பங்கெடுத்துக்கொண்டனர். இதில் 131 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 13½ லட்சம் டாலர் செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தேசீய ஸ்டேடியத்தில் ஜப்பானிய சக்கரவர்த்தி ஹிரோஹிடோ சுமார் 80 ஆயிரம் மக்கள் கொண்ட கூட்டமொன்றில் விழாவைத் துவக்கி வைத்துப் பேசுகையில், போட்டியில் கலந்து கொள்ளும் நாடுகளிடையே நல்லெண்ணமும், நட்புறவும் மேலும் வளருமென்று நம்புவதாகக் குறிப்பிட்டார். சமாதானத்தின் சின்னமான 5000 புறக்கள் பறக்க விடப்படுவதுடன் 21 பீரங்கி குண்டுகள் தீர்க்கப்பட்ட பிறகு விழா தொடங்கியது. ஜப்பானிய விளையாட்டு கோஷ்டி காப்டன் ஸ்ரீ தாகேஸ் ஸுசுமா விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொண்டார். இரான் மன்னர் ஷா, மலேயா பிரதமர் ஸ்ரீ துங்கு அப்துல் ரஹ்மான், வெளி நாட்டுத் தூதர்கள், ஜப்பானியப் பட்டத்து இளவரசர் ஆகியோர் பிரசன்னமாயிருந்தனர். இந்த விளையாட்டுப் போட்டியில் ஜப்பானுக்கு முதல் ஸ்தானம் கிடைத்தது. மொத்தம் வழங்கப்பட்ட 112 தங்கப் பதக்கங்களில் 67ஐ அது தட்டிக்கொண்டு விட்டது. இந்தியாவுக்கு இப்போட்டியில் 7-வது ஸ்தானம் கிடைத்தது. அதற்கு ஐந்து தங்க மெடல்களும், 2 வெள்ளி மெடல்களும் ஒரு வெண்கல மெடலும் கிடைத்தன.

இந்திய விளையாட்டுக் கோஷ்டியைச் சேர்ந்த ஸ்ரீ மில்கா சிங் என்பவர் 400 மீட்டர் ஓட்டப் பந்தயத்திலும் 200 மீட்டர் ஓட்டப் பந்தயத்திலும் வெற்றி பெற்று நமக்கு இரு தங்கப் பதக்கங்களை வாங்கித் தந்தார். 400 மீட்டர் தூரத்தை இவர் 47 விநாடிகளில் ஓடிப் புதிய ரிகார்டை ஸ்தாபித்தார். ராணுவத்தைச் சேர்ந்த 'குட்டி ராட்சஸன்' என்றழைக்கப்படும் 30 வயதான ஸ்ரீ பர்த்துமன் சிங், ஸ்ரீ பால்கர் சிங், ஸ்ரீ மோஹிந்திர சிங் ஆகியோர் பல்வேறு போட்டிகளில் கெலித்துத் தங்க மெடல்கள் பெற்றனர். ஸ்ரீ பர்த்துமன் சிங் எடை எறிதல் போட்டியில் புது ஆசிய ரிகார்டை ஸ்தாபித்தார். 49 அடி 4 அங்குல தூரத்திற்கு இவர் எடை எறிந்ததன்மூலம் 1954-ல் மணிலாவில் தாம் ஏற்படுத்திய ரிகார்டையே முறியடித்தார். இரும்புத் தட்டை வீசி எறிதல் போட்டியில் ஸ்ரீ பால்கர் சிங் கெலித்தார். இவர் 156 அடி 4¼ அங்குல தூரம் வரை அதை எறிந்து புது ரிகார்டை ஸ்தாபித்தார். ஸ்ரீ மொஹீந்திர சிங் குதித்துத் தாவுதல் போட்டியில் வெற்றி பெற்று இந்தியாவுக்கு 5வது தங்க மெடலை வாங்கித் தந்தார்.

ஈட்டி எறிதல் போட்டியில் எலிஸபெத் தவான போர்ட் என்ற பெண்மணி 151 அடி 1¾ அங்குல தூரம் அதை எறிந்து 2-வது ஸ்தானம் பெற்றதால் நமக்கு வெள்ளி மெடல் கிடைத்தது. ஜப்பானிய பெண்மணி ஷீதா இவரை இப்போட்டியில் தோற்கடித்தார். உதைப் பந்து, 'வாலி பால்' முதலிய போட்டிகளில் நம்மவர் சரியாகச் சோபிக்கவில்லை. குத்துச் சண்டை போட்டியில் இந்தியாவுக்கு ஒரு வெள்ளி மெடலும் ஒரு வெண்கல மெடலும் கிடைத்தன.

ஆசிய ஹாக்கி விளையாட்டுப் போட்டியில் இந்தியா தோற்றது நமக்குப் பெரும் அதிர்ச்சியை உண்டாக்கிவிட்டது. இதிலிருந்து நாம் மீள வெகு காலம் பிடிக்கும். சர்வதேச ஹாக்கி விளையாட்டுப் போட்டியில் நாம் 1928-ல் நடந்த ஒலிம்பிக் போட்டி முதற்கொண்டே வெற்றி பெற்று வந்துள்ளோம். ஹாக்கி இறுதி விளையாட்டு வெற்றி தோல்வியின்றி முடிந்ததாகவே கருதிய போதிலும் பாகிஸ்தான் இந்தியாவைவிட மொத்தத்தில் அதிக கோல்கள் போட்டதால் அது வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதில் தோற்றது குறித்து நாம் மனம் கலங்காமல் சீக்கிரமே நடைபெறவிருக்கும் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியிலும் ரோமில் நடக்கவிருக்கும் 17-வது ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியிலும் வெற்றி பெறுவதில் முழு கவனம் செலுத்துவோம். ஹாக்கி விளையாட்டுப் போட்டியில் சில வட்டாரங்கள் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை என்ற புகார்கள் வந்துள்ளன. விளையாட்டை மேற்பார்வையிடுகிறவர் (அம்பையர்) தம் கடமையைச் சரியாகச் செய்யாததாலும் ஏற்பாடுகள் சரியாகஇல்லாமலிருந்ததாலுமே ஹாக்கியில் இந்தியாவிற்கு ஏற்பட்ட தோல்விக்குக் காரணம் என்று இந்தியா ஹாக்கி சம்மேளனத் தலைவர் ஸ்ரீ அஸ்வினி குமார் சமீபத்தில் டோக்கியோவிலிருந்து திரும்பியவுடன் கூறினர். சம்மேளனத்தில் சச்சரவு எதுவும் இல்லை என்றும் ஹாக்கி விளையாட்டுப் போட்டிக்கு அனுப்பப்பட்டவர்கள் ஏகமனதாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர் என்றும் சிறந்த நபர்கள் தெரிந்தெடுக்கப்பட்டதாகவும் கூறினர்.

எனினும் ஹாக்கியில் பாகிஸ்தான் நமக்குக் கடும் போட்டியாக இருப்பதை நாம் மறந்துவிடலாகாது. பாகிஸ்தான் கோஷ்டியில் ஒத்துழைப்பு அதிகம் காணப்பட்டது. அதன் வெற்றிக்குக் காரணம் இந்திய கோஷ்டிக்குக் காலதாமதமாக நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதால், அவர்களிடை ஒத்துழைப்பு எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கு இல்லை. நாம் செய்த தவறுகளிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு ரோமில் நடக்கவிருக்கும் ஒலிம்பிக் பந்தயத்தில் மீண்டும் பாகிஸ்தானுடன் விளையாடும்போது அதைத் தோற்கடிக்க உறுதி கொள்ள வேண்டும். மற்றொரு முக்கிய விஷயத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும். விளையாட்டுக்காரர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் மேலும் கவனம் செலுத்துவது அவசியம். வெளி நாடுகளிலிருந்து ஹாக்கி பயிற்சி அளிப்பவர்களை நாம் தருவிக்க வேண்டும் அல்லது நம் சிறுவர்களை வெளி நாடுகளுக்குப் பயிற்சிக்காக அனுப்ப வேண்டும். இதர நாடுகள் பயிற்சிக்காக லட்சக் கணக்கில் பணம் செலவிடுகின்றன. இவ்விஷயத்தில் மத்திய, ராஜ்ய சர்க்கார்கள் கவனம் செலுத்துமென்று எதிர்பார்ப்போம்.

கணவன்:—இந்தப் பெரிய புஸ்தகத்தைப் படித்த பிறகுதான், எனக்கு அந்த ரேடியோ எப்படிப் பாடுகிறது என்பது தெரிகிறது!

மனைவி:—சரிதான் போங்கோ! இதுக்குப் போய் அந்தப் புஸ்தகத்தைப் படிக்கணுமா என்ன? பித்தானைத் திருகினால் ரேடியோ தானே பாடுகிறது!

கடற்கரைக்கு நடந்து போய்க்கொண்டிருந்த ரகு, திடீரென்று ஓட ஆரம்பித்தான். இப்படி அப்படித் திரும்பவில்லை. ஓட்டத்தில்தான் கண்ணும் கருத்துமாக இருந்தான்.

சற்று தூரத்தில் அவனுடைய ஆருயிர்த் தோழன் ராமு, தன் வலுவு கொண்டமட்டும் கை தட்டிக் கூப்பிட்டான். தொண்டை கிழியக் கத்தினன். ஊஹூம்! திரும்பினால்தானே!

நிர்மலாகூட ஆச்சரியப்பட்டுப் போய் விட்டாள். நிர்மலா என்ன? எனக்கே ஆச்சரியமாகத்தான் இருந்தது.

இளஇளவென்று தந்தம் போன்ற வெண்மையான சரீரம். விசாலமான நெற்றி. அதன் இரு ஓரங்களிலும் தவழ்ந்து விளையாடும் அழகிய இரண்டு சுருள் மயிர்க் குஞ்சங்கள். நிச்சயமாகச் சொல்வேன், அது 'லிப்ஸ்டிக்' இல்லை. தாம்பூலத்தினல் ஏற்பட்ட சிகப்புதான். இல்லாவிட்டால், இவ்வளவு இயற்கை அழகு அந்த அதரங்களுக்கு எப்படி ஏற்படும்! கண்களாவது கண்கள்! மானுவது, மீனுவது? ஆட்கொல்லியல்லவா அவைகள்? அவற்றில் கொஞ்சம் மையையும் தீட்டி விட்டால், கவிகள்தான் அவைகளை வர்ணிக்க வேண்டும்! அவள் அழகுக் கலையின் உட்கருத்தை நன்கு அறிந்தவளாகத்தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் தன் காதுக்கு அந்தத் தோசைக் கல்லும், கழுத்துக்கு அந்தப் பாலமணி சரமும் அழகைக் கொடுக்காது என்று அவள் எப்படித் தெரிந்துகொண்டிருப்பாள்! 'சுரீரென்று' ஒளி வீசும் அந்தச் சிறிய வைரக் கம்மலும் 'ப நெக்' ஜாக்கெட்டின் மேல் அந்த மெல்லிய தங்கச் சங்கிலியும் எவ்வளவு அழகைக் கொடுத்தன! கைகளில் 'லூசாக' இரண்டே வளையல்கள்தான். இளமையின் மார்த்தவத்தில் பச்சை நரம்புகள் ஓடுவதை எடுத்துக் காட்டும் அந்த வெண்மையான சரீரத்துக்கும், மெல்லிய இழைகளுடன் கூடிய வெலவெலவென்ற அந்தக் கறுப்புக் கலர் சேலைக்கும் என்னதான் பொருத்தம்!

சாதாரண 'டிரெஸ்ஸுடன்'தான் தெருப் பக்கம் வந்து நிற்கும்பொழுதே, காரணமின்றி இப்படியும் அப்படியும் உலாத்திக் கொண்டு அசட்டுப் பார்வை பார்க்கும் பேர்வழி (ரகு) இன்றுதான் இவ்வளவு அலங்காரங்களுடன் தெருப்பக்கம் வந்து நிற்கும்பொழுது, ஓரக் கண்ணுல்கூடப் பார்க்காமல் போகிறுனென்றுல், நிர்மலாவால் எப்படி ஆச்சரியப்படாமல் இருக்க முடியும்?

இதையும் மீறி அவனைத் திடீரென்று அப்படி ஓடச் செய்ததற்கான காரணம் என்னவாக இருக்கும்!

எதிர்ப்புறம் பார்த்தேன்.

பாதியில் சேர்த்து இறுக்கிக் கட்டிப் பட்டு, குஞ்சம் விடப்பட்ட பின்னல். அதில் கொத்து கனகாம்பரம். அதே கலரில் மஸ்லின் சேலை. அதன் முந்தானை ஒரே தோள்பட்டையில் தவழ்ந்து விளையாடிக்கொண்டிருந்தது. அசந்து மறந்து காற்றில் அடித்துக்கொண்டு வந்து இன்னொரு தோள் பட்டையை அந்த முந்தானை போர்த்திக் கொண்டால்கூட அதை லேசாகத் தள்ளி விட்டுக்கொண்டிருந்தாள். இம்மாதிரி செய்தது அந்தக் கறுப்பு ஜார்ஜெட் சோளியின் முதுகுப் புறத்தில் முக்கால் பாகத்தைப் பளிச்சென்று எடுத்துக் காட்டியது. சிவப்பு மேனி. காலோடு கால் ஒட்டினமாதிரி 'ஸ்லிப்பர்'.

இந்தக் கோலத்தில் அந்தத் தெருவில் உள்ள ஓர் வீட்டிலிருந்து கடற்கரைக்குக் கிளம்பிய 'அப்சரஸின்' பின்னழகைப் பார்த்த ரகு, அவள் முன் அழகையும் பார்க்க வேண்டுமென்று ஓடுகிருனே வென்று எண்ணினேன்.

ஆனுல், அதுவுமில்லை. அவளைக் கடந்த பிறகும் அவளைத் திரும்பிப் பார்க்காமலே ஓடிக்கொண்டிருந்தான்.

ஒரு வேளை செல்வராஜன் வருகிருனோ வென்று பார்த்தேன்.

ரகு ஒரு குஷிப் பேர்வழி. வயது இருபத்து ஐந்தாகிறது. இன்னும் கலியாணமாகவில்லை. ஓர் கம்பெனியில் உத்தியோகம். ஒரு ரூம் வாடகைக்கு வைத்துக் கொண்டு, ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருக்கிருன். தனிக் 'கட்டை.' நிறைய சிநேகிதர்கள். உல்லாசப் பேர்வழி. பெரும் செலவாளி. பணம் தண்ணீர் பட்ட பாடுதான். உடம்புமுழுவதும்கடன். செலவழிப்பதிலேயே நோக்கமாக இருப்பதால், வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடிகிறதில்லை. ஆகையால்,

மூலம் கரைய
சி.எம். சாம் கருணை லேகியம்
நாகபஸ்பம்
உபயோகியுங்கள்
லேகியமும் ரூ 7-8
பஸ்பமும் 24 வில்லை
அறுவை வைத்தியம் இல்லாமலே,
எந்த வகை மூலத்தையும்
சீக்கிரம் குணமாக்குகிறது
மயப்பசாம் வைத்தியசாலை, பழனி-S.

கடன் கொடுத்தவர்களைக் கண்டுவிட்டால் தலை மறைய வேண்டியதுதான்.

இந்த வகையில் செல்வராஜனைக் கண்டால் சிம்ம சொப்பனம்தான் ரகுவுக்கு.

செல்வராஜனிடம் ரகு கைமாற்றுக் கடன் முப்பது ரூபாய் வாங்கி வருஷம் மூன்றாகிறது. இரண்டே தினத்தில் திருப்பிக் கொடுத்து விடுவதாகச் சொல்லி வாங்கினானும். பல வாய்தாக்கள், பல நெருக்கடிகளெல்லாம் சொல்லியாகி விட்டது. அவ்வளவுதான்; அவனைக் கண்டால் தலை மறைய ஆரம்பித்து விடுவான். செல்வராஜனும் லேசுப்பட்ட பேர்வழியில்லை. இங்குதான் கேட்கலாம், இங்குதான் கேட்கக் கூடாது என்ற நியதியைக் கொஞ்சம்கூடப் பார்க்க மாட்டான். நாலு பேர் மத்தியில் மானத்தை வாங்கி விடுவான்.

ஒரு வேளை செல்வராஜன்தான் பின்னால் வருவதைப் பார்த்துவிட்டு ஓடுகிறானோவென்று திரும்பிப் பார்த்தேன். செல்வராஜனைக் காணோம்.

நாகராஜனைக் கண்டால்கூடப் பெரும் பயம்தான் ரகுவுக்கு.

'ஓயாத பேச்சு' என்று சொல்கிறார்களே, அந்த ரகத்தைச் சேர்ந்தவன் நாகராஜன். பேசுவதற்கு யாராவது கிடைத்து விட்டால் போதும். 'தொண தொண' வென்று அகப்பட்டவர்களைத் துளைத்துக் கொட்டி விடுவான் 'மன்னவன்'. இன்ன விஷயம்தான் என்று வேண்டியதில்லை. அரசியலில் ஆரம்பித்து, அடுப்பங்கரை விவகாரம்வரை அலசி விடுவான் அலசி! பிறர் காரியத்தைப் பற்றிக் கவலையே கிடையாது அவனுக்கு. பசி, தாகம், நேரம் இவற்றைப்பற்றிச் சிறிதும் கவலையின்றி, இவ்வுலகில் ஓர் ஜீவன் உண்டு என்றால், அது நாகராஜன்தான் என்று எங்கள் வட்டாரத்தைச் சேர்ந்த குழந்தைகள்கூடச் சொல்லும்.

அந்த நாகராஜன்தான் வந்து விட்டானோ என்று பார்த்தேன்.

அவனையும் காணோம்.

'பின் ஏன் ஓடுகிறான் இப்படி?' என்று சற்று பின்பக்கம் கூர்ந்து கவனித்தேன்.

'சரிதான்! சரிதான்! ரகு மாத்திரமில்லை. நமக்கும் ஓட வேண்டிய அவசிய மேற்பட்டுவிட்டது' என்று எனது கால்களை நானும் கொஞ்சம் வேகமாக எடுத்து வைக்க ஆரம்பித்துவிட்டேன்.

பின்னால் தர்மராஜன் வந்துகொண்டிருந்தான்.

நாகராஜனைக்கூட ஒரு வகையில் சேர்த்துக் கொள்ளலாம்.

இந்தத் தர்மராஜன் இருக்கிறானே! மனிதன் அகப்பட்டுக்கொண்டு விட்டால், 'தொண தொண'வென்று பேசித் துளைத்துக் கொட்டுவதோடு மட்டுமில்லை.

'சரி! நன்றாகச் சிக்கிக்கொண்டு விட்டோம். என்ன சாக்கு சொன்னாலும் விடப் போகிறதில்லை. சரி, அது அணுகுண்டைப் பற்றியாவது இருக்கட்டும், அல்ஜீரியாவைப்பற்றியாவது இருக்கட்டும் அல்லது ஆட்சி மொழியைப்பற்றியாவது இருக்கட்டும், அல்லது அவன் சகதர்மிணியின் நகை அடகு விஷயமாக அவனுக்கும் அவன் மாமனாருக்குமிடையே உள்ள தகராறாகவாவது இருக்கட்டும், எதையாவது அவன் போக்கில் பேசிக் கொண்டிருக்கட்டும்' என்று அசிரத்தையாய் இருந்துவிடுவதற்கும் ஆசையில்லை.

'என்ன நான் சொல்வதென்ன? இது விஷயத்தில் உன் அபிப்பிராயம் என்ன? நான் சொல்வது சரிதானே? நீயாக இருந்தால் இதற்கு என்ன பதில் சொல்லியிருப்பாய்? ஐய! கேழ்க்கிறேன். என்ன, என்னமோ யோசித்துக்கொண்டிருக்கிறாய்?' என்ற கேள்விகளைப் போட்டு, நம்மைத் திண்டாட வைத்து விடுவான் பேர்வழி.

சற்று நேரம் தொந்தரவு இல்லாமல் நிம்மதியாய், நம் இச்சையாக உட்கார்ந்துவிட்டு வருவோம் என்று ஏகாந்தத்தை நாடிக் கடற்கரைக்குச் சென்றால், கொஞ்சம்கூட இங்கிதம் தெரியாமல் அங்கு வந்து சேர்ந்து, பிராணனை வாங்கித் தொலைத்து விடுவான்!

அதுவும் இருபத்தைந்து வயதுப் பேர்வழி ரகு, தனிமையில் கடற்கரைக்குச் செல்கிறான் என்றால், எவ்வளவு மனக் கோட்டைகளுடன் செல்வான்!

அப்படிப்பட்ட சமயத்தில் தர்மராஜன் வசம் சிக்கிக்கொண்டானென்றால்?

பாவம்! ரகு ஓடத்தானா செய்வான்? டாக்ஸியை அமர்த்திக்கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

ஏனென்றால், தர்மராஜன் கைதட்டிக் கூப்பிட்டுக்கொண்டு வந்து விடுவானே!

இப்படிக் கொஞ்சம்கூட இங்கிதம் தெரியாத சில பிரகிருதிகள்!



★

திராவிடக் கழகத் தலைவர் ஸ்ரீ ஈ. வே. ரா. பெரியார் ஜூன் 13-ந் தேதி காலை ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். திராவிடக் கழகத் தலைவர்களும் தொண்டர்களும் ஊழியர்களும் குதூகலமான வரவேற்பளித்தனர்.

★

கலாமண்டபம்

தாமரைக் குளம்

கதாசிரியர் நடராஜனும் ஒளிப்பதிவாளர் வீரபாகுவும் தயாரிக்கும் இப்படத்திற்கான காட்சிகள் சில சமீபத்தில் கோல்டன் ஸ்டூடியோவில் படமாக்கப்பட்டன. இப்படத்தின் வசனங்களை முகவை இராசமாணிக்கம் எழுதியுள்ளார். முக்கிய பாகத்தில் எம். ஆர். ராதா, வி. கோபாலகிருஷ்ணன், கே. சாரங்கபாணி, சௌகார் ஜானகி, ராஜேஸ்வரி, காக்கா ராதாகிருஷ்ணன், ஜி. சகுந்தலா. வி. எஸ். ராகவன் ஆகியோர் நடிக்கின்றனர். 'தாமரைக் குளத்'தில் தண்ணீர் எடுக்கும் உரிமையைப் பொது மக்களுக்குத் தர மறுக்கிறார் ஜமீன்தார் எம். ஆர். ராதா. இதை எதிர்த்து, மக்களின் குடி தண்ணீர் உரிமைக்காகப் போராடக் கிளம்புகிறான் கதாநாயகன். மகன் இவ்வாறு புரட்சி செய்யக் கிளம்பியதைக் கண்ட தந்தை (சாரங்கபாணி)யும் தாயும் (ராதா) கவலைப்பட்டு மகனைத் தேடி வருகின்றனர். இந்தக் காட்சிகள்தான் சமீபத்தில் படமாக்கப்பட்டன. இப்படத்தின் கதையை எழுதிய நடராஜனும் ஒளிப்பதிவாளர் வீரபாகுவும் தயாரிக்கும் இப்படத்தை வி. ஸ்ரீநிவாஸன் டைரக்ட் செய்கிறார்.

மணிமேகலையில் எம். ஆர். ராதா

வி. எஸ். ராகவன் தயாரித்து வரும் 'மணிமேகலை' படத்தில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் நடித்த பாத்திரத்தை எம். ஆர். ராதா நடிப்பார் என்று தெரிகிறது. கலைவாணர் இதில் ஒரு பெண் பித்தனாக நடித்தார். அதே வேஷத்தில் எம். ஆர். ராதா நடிக்கப் போகிறார். ஆகவே, என். எஸ். கே. நடித்த பகுதிகள் நீக்கப்பட்டு விடும். இப்படத்தில் ஸ்ரீமதி மதுரம் நடிக்கும் பாத்திரத்தையும் வேறொரு நடிகை ஏற்று நடிப்பார். 'மணிமேகலை'யில் எம். ஜி. ஆர். கதாநாயகனை நடிப்பதாக இருந்து, படக்கதையில் 'அட்சய பாத்திரம்' வருவதால், அது பகுத்தறிவு வாதத்திற்கு ஒத்து வராதென்று விலகிவிட்டதும், தற்போது கதாநாயகனாக டி. ஆர். மகாலிங்கம் நடித்து வருவதும் வாசகர்கள் அறிந்ததே. இப்படத்தின் கதா நாயகி 'மணிமேகலை'யாக பானுமதி நடிக்கிறார். புத்த பிக்ஷுவாக செருக்களத்தூர் சாமா அற்புதமாக நடித்துள்ளார்.

தேவர் பிலிம்ஸ் 'செங்கோட்டை சிங்கத்'தில் சஹஸ்ரநாமமும், பண்டரிபாயும்.

சந்தியா, குமுதினி, நாராயண பிள்ளை, சகாதேவன் ஆகியோரும் நடிக்கின்றனர். முருகதாஸாவும் வி. எஸ். ராகவனும் டைரக்ட் செய்யும் இப்படத்தின் வசனங்களை இளங்கோவன் எழுதியுள்ளார்.

கட்ட பொம்மன்

பத்மினி பிக்சர்ஸார் தயாரிக்கும் வர்ணப்படக் கட்டபொம்மனுக்காகச் சென்ற வாரம் பரணியில் சில காட்சிகள் படமாக்கப்பட்டன. 'கட்டபொம்மன்' வெகுண்டெழுந்து, போருக்குப் புறப்படுமுன் ஆத்திரத்துடன் பேசும் காட்சிகள் படமாக்கப்பட்டன. இக் காட்சியில் சிவாஜி கணேசன் வீர ரசம் ததும்பும் வசனங்களைப் பேசி நடித்தார்.

படத்தில் சிவாஜி கணேசன் கட்டபொம்மனாகவும், எஸ். வரலட்சுமி அவரது மனைவியாகவும், எஸ். எஸ். ராஜேந்திரன் வெள்ளையத் தேவனாகவும், பத்மினி அவனது மனைவியாகவும், ஓ. ஏ. கே. தேவர் ஊமைத்துரையாகவும் ராகினி அவரது மனைவியாகவும் நடிக்கின்றனர். ஹாஸ்யப் பகுதியில் கருணாநிதி தாம்பரம் லலிதா நடிக்கின்றனர். பானர்மென் வேஷத்தில் ஜாவர் சீதாராமன் நடிக்கிறார். இப்படத்தை பி. ஆர். பந்துலு டைரக்ட் செய்கிறார்.

மங்கையர் உலகம்

குடும்பக் கட்டுப்பாட்டு திட்டத்தைப் பின்னணியாக வைத்து, கவிஞர் ஜே. தங்கவேல் (சுரபி) எழுதிய இக்கதைக்காகச் சமீபத்தில் வாஹினி ஸ்டுடியோவில் சில காட்சிகள் படமாக்கப்பட்டன. வாதிராஜ், ராஜேஸ்வரி நடிக்கும் காட்சிகள் அன்று படமாக்கப்பட்டன. இவர்களைத் தவிர இப்படத்தில் மனோகர், பண்டரிபாய், சாரங்கபாணி, செல்லம், பம்பாய் மீனாட்சி, மாலி, ராகவன், ஹரிணி ஆகியோர் நடிக்கின்றனர். மல்லிகா, நரசிம்மன் என்ற இரு புதிய நடிக நடிகையரும் இதில் நடிக்கின்றனர். ஸ்ரீ பாதசங்கர் தயாரிக்கும் இப்படத்தை எம். ஆர். விட்டல் டைரக்ட் செய்கிறார்.

தேவர் பிலிம்ஸாரின் 'வாழவைத்த தெய்வம்'

'செங்கோட்டை சிங்கம்' என்ற படம் அநேகமாகத் திரைக்குத் தயாராகிவிட்ட

டாக்டர் எம். வி. ராவ் அவர்களின் குமாரியும் ஸ்ரீ எம். கே. தேவராஜனின் சிஷ்யையுமான பேபி மாதுரியின் பரத நாட்டிய அரங்கேற்றம் 1-6-58-ல் சென்னை கோகலே ஹாலில் நீதிபதி ஸ்ரீ எஸ். கணபதியா பிள்ளையின் தலைமையில் நடந்தேறியது ஸ்ரீ சித்தூர் நாகையா பாராட்டிப் பேசினார்.

தென்றே கூறலாம். இதில் கன்னட நடிகர் கன்னட நடிகை இருவர் கதாநாயகன் கதாநாயகியாக நடிக்கின்றனர். இதில் கதாநாயகன் காண்டா மிருகத்துடன் சண்டை போடுவதாக ஒரு காட்சி வருகிறது. வீரப்பா இதில் வில்லனாக நடிக்கிறார். ஒளிப்பதிவாளர் வி. என். ரெட்டி டைரக்ட் செய்துள்ள இப்படம், இம்மாத முடிவுக்குள் திரைக்கு வருகிறது. ஆகவே, தேவர் பிலிம்சார் தங்களது அடுத்த படத்திற்குச் சமீபத்தில் வாஹினி ஸ்டுடியோவில் பூசை போட்டனர். இப்படத்திற்கு 'வாழவைத்த தெய்வம்' என்று பெயர். படத்தை வாஹினி அதிபர் ஸ்ரீ நாகி ரெட்டி ஆரம்பித்து வைத்தார்.

பயனீர் பிலிம்சாரின் "கில்லாடி"

சமீபத்தில் இப்படத்திற்கான சில காட்சிகள் படமாக்கப்பட்டன. ரஞ்சன் இக்காட்சிகளில் நடித்தார். கதாநாயகனை மறைந்திருந்து ஒருவன் சுடும் காட்சியே இது. ஆனால், கதாநாயகன் சாமர்த்தியமாய் தப்பினார். உடனே பதிலுக்குச் சுட்டார். அவரைச் சுட்ட உருவம் ஓடிவிட்டது. விரைந்து சென்று பார்த்தார். உடைந்த வளையல்கள் கிடந்ததைக் கண்டு, தன்னைச் சுட்டது ஒரு பெண் என்பதை அறிந்தார். இப்படத்தை டி. பி. சுந்தரம் டைரக்ட் செய்

'பெத்த மனம் பித்'தில் கல்யாண குமாரும் தேவிகாவும்.

ஔவையார் ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள் அவர்களுக்கு (மேல் சபை உறுப்பினர்) கரூரில் நாரத கான சபையாரால் அளித்த பாராட்டு நிகழ்ச்சியைத் தொடர்ந்து நடந்த நடன விழாவில் பரமக்குடி வழக்கறிஞர் ஸ்ரீ டி. சீனிவாசய்யங்கார் குமாரி "நளினி"யின் நடனம் நடந்தது. நளினியின் அருகில் நிற்பவர் கரூர் நாரத கான சபையின் காரியதரிசி ஸ்ரீ என். வேதாந்தாச்சாரி அவர்கள்.

கிறார். ரஞ்சனுடன் ஷோபா என்ற புது முகம் நடிக்கிறாள். மற்றும் அசோகன், பட்டு, முத்துலட்சுமி ஆகியோரும் நடிக்கின்றனர்.

மனோகரின் புதிய நாடகம்

ராமாயணத்தைக் கர்ண பரம்பரைக் கதையையொட்டி 'இலங்கேஸ்வரன்' என்று நாடகமாக்கி, தமிழ் நாட்டில் பெரு வெற்றி கண்ட நடிகர் மனோகர், தன்னுடைய அடுத்த நாடகத்திற்குப் பாரத கதையைத் தேர்ந்தெடுத்துள்ளார். இந்த நாடகத்திற்கு 'சகுனியின் சபதம்' என்று பெயர். இதையும் துறையூர் மூர்த்திதான் நாடகமாக்கியுள்ளார். இதில் மனோகர் சகுனியாக நடிப்பார். சகுனியைப் பிரதான பாத்திரமாக வைத்து, அவன் கைப்பாவையாகத் துரியோதனன் இருக்க, அதனால் ஏற்படும் இன்னல்களில் பஞ்சபாண்டவர் தவிக்கும் நிலை ஏற்படும் கதையைச் சித்திரிப்பதே 'சகுனியின் சபதம்'.

மனோகர் நடிக்கும் 'இலங்கேஸ்வரன்' சினிமா படமாகப் பம்பாயில் தயாராகி முடிவடைந்துவிட்டது. இப்படம் விரைவில் திரைக்கு வர இருக்கிறது.

அபலை அஞ்சுகம்

கல்கி பத்திரிகையில் தொடர் கதையாக வெளிவந்த 'அபலை அஞ்சுகம்' என்ற கதையை அருணா பிலிம்ஸ் கூட்டாளிகளில் ஒருவரான டைரக்டர் ஆர். எம். கிருஷ்ணசாமி படமாக்கப் போகிறார். அருணா பிலிம்ஸ் கூட்டாளிகள் இருவரும் தற்போது தனித் தனியே படம் தயாரிக்கின்றனர். மற்றொரு கூட்டாளியான ராதாகிருஷ்ணன் ஜே. ஆர். ரங்கராஜுவின் 'சந்திர காந்தா' என்ற நாவலை 'சவுக்கடி சந்திர காந்தா' என்ற பெயரில் படமாகத் தயாரிக்கிறார்.

டைரக்டர் ஆர். எம். கிருஷ்ணசாமி தற்போது 'பார்த்திபன் ப்ரொடெக்ஷன்ஸ்' என்ற பெயரில் இந்த 'அபலை அஞ்சுகம்' கதையைத் தயாரிக்கிறார். காலஞ் சென்ற கி. ரா. கோபாலன் என்ற இளம் எழுத்தாளர் எழுதிய கதை இது. இதன் வசனங்களை ஏ. எல். நாராயணன் எழுதுவார். ஆர். எம். கிருஷ்ணசாமி டைரக்ட் செய்வார்.



'அரசிளங்குமரி'யில் ராஜசுலோசனாவும், பத்மினியும்

'கல்யாணிக்குக் கல்யாணம்' என்னும் படத்தில் எஸ். எஸ். ராஜேந்திரனும், மைனாவதியும்

☆ குழந்தை ஆகாரம்

நவநாகரிகக் குறிப்புகள்

காசினி

எங்கள் பக்கத்து வீட்டு மாட்டுப் பெண் சீதா தன் தலைச்சன் குழந்தையை எடுத்துக்கொண்டு புக்ககம் வந்தாள்; இவள் குழந்தை, குடித்த பாலைக் 'கக்கித்து'; இதற்கு வைத்தியம் செய்ய எங்கள் எதிர் வீட்டு மாட்டுப் பெண் சுலோசனா பெரியவர்கள் சொல்லை மீறிச் சீதாவையும், குழந்தையையும் டாக்டரைக் கலந்து வைத்தியம் செய்ய, பக்கத்து டவுனுக்கு அழைத்துச் சென்றாள் என்று முன்பு உனக்கு எழுதி இருந்தேனே, நினைவிருக்கிறதா? டாக்டர் சொன்ன யோசனைகளில் 'கக்கல்' நிற்கவில்லை. ஊசி போட மறுபடியும் டாக்டரிடம் போக வேண்டும் என்றாள் சுலோசனா; இவள் சொல்லுவதுதான் வேத வாக்கு என்றாள் சீதா. சீதாவின் மாமியாருக்கு வந்த கோபத்தில் சுலோசனா மாமியாரிடம்: 'உங்கள் அருமை மாட்டுப் பெண் இந்த ஊருக்கு வரும்முன் நாமெல்லாம் குழந்தைகள் வளர்க்கவே இல்லையா? அவளைக் கொஞ்சம் வாலைச் சுருட்டிக்கொண்டு சும்மாயிருக்கச் சொல்லுங்கள்!' என்று கத்தினாள். சீதாவைச் சும்மா இருக்கச் சொன்னாள். நல்ல வேளையாக, இந்த ரகளைகளுக்கு நடுவில் சீதாவின் தாயார் வந்தாள். குழந்தை சற்றே பெரிதானதும் சீதாவைப் புக்ககம் அனுப்புவதாகச் சொல்லி, அழைத்துக் கொண்டு போனாள்.

இப்போ சீதா மறுபடியும் புக்ககம் வந்திருக்கிறாள். குழந்தைக்கு ஊசி போட்ட பின்தான் 'கக்கு'வது நின்றதாம்! இப்போ சீதாவுக்குக் குழந்தைக்கு எது அவசியம் என்பது சுலோசனாவுக்குத்தான் எங்க கிராமத்திலேயே தெரியும் என்ற எண்ணம் அசைக்க முடியாமல் இருக்கிறது. குழந்தைக்கு எட்டு மாசமாகிறது. ஒத்தை நாடியாக இருக்கிறது. நாகரீக முறையில் தன் குழந்தையை வளர்க்கணும் என்று சீதா துடியாக இருக்கிறாள். சுலோசனா, குழந்தைக்குக் கொடுக்கும் ஆகாரம் சீரானதாக இல்லை. எலும்பு வளர, சதை பிடிக்க, குழந்தை வலுவாக இருக்க, இன்ன இன்ன சத்துள்ள ஆகாரங்கள் வேண்டும் என்று ஒரு ஜாபிதா தயாரித்தாள். இதில் பச்சைப் பட்டாணி உள்பட, குழந்தைக்குச் சுலபமாக ஜீர்ணிக்கக் கூடிய முறையில் பக்குவம் செய்யப்பட்ட காய் வகைகள், தானியங்கள், எலும்புச் சத்து, இரும்புச் சத்து, வைடமின் என்று ஏதேதோ! பட்டணத்துக்கு எழுதினார்கள். சின்னதும் பெரிதுமாக மேல் நாட்டு 'டின்' ஆகார வகைகள், அறுபது ரூபாய் பில்லுடன் வந்து நின்றது! பகவதி மாமி, அதுதான் சீதாவின் மாமியார் அசந்து விட்டாள்! கோபிக்கக்கூட முடியவில்லை. எட்டு மாதக் குழந்தைக்கு ஒரு மாதத்துக்கு அறுபது ரூபாய்க்கு ஆகாரம்! 'ஏன்; இந்தக் குழந்தைகளுக்காகத்தானே எங்கள் கணவன்மார்கள் எங்களை விட்டுப் பிரிந்து தூர தேசம் சென்று சம்பாதிக்கிறார்கள்? செலவானால் என்னவாம்?' என்பது சீதாவின் கட்சி; குழந்தைகளைச் சீராக வளர்க்க வேண்டாமோ? வருங்கால மனிதர்களாச்சே, அவர்கள்? இப்போ இந்தச் செலவைச் சந்தோஷமாகனு செய்ய வேண்டும்?' என்கிறாள் சுலோசனா! அறுபது ரூபாயில் ஒரு குடும்பம் சாப்பிடுமே, ஒரு மாதத்துக்கு! பட்டணத்தில் நீங்கள் எல்லாம் இப்படித்தான் குழந்தைகள் வளர்க்கிறீர்களா? எப்படிக் குடித்தனம் கட்டறது?' என்று நீ கேட்டிருக்கிறாய்.

உன் கடிதம் வந்த சமயம் எங்கள் வீட்டில் பேச்சுக் கச்சேரி வழக்கம்போல் நடந்துகொண்டிருந்தது.

'எங்க நாளிலே வருத்து உடைத்த புழுங்கல் அரிசிக் கஞ்சி, ஜவ்வரிசிக் கூழ், முக்யமாகப் பசுவின் பால், குழந்தை சத்தே பெரிசானா, நெய் போட்டுப் பருப்பின் சாதம், பால் சாதம் இதெல்லாம் கொடுப்போம். குழந்தைகளும் மதமதவென்றுதான் வளர்ந்தார்கள். எட்டு மாசக் குழந்தைக்கு ராகிக் கூழ் அல்லது கஞ்சி கொடுக்கலாமே! நன்னா வளருமே!' என்றாள் என் அத்தை.

'சாப்பாட்டுக்கு இல்லாதவர்களும், கைதிகளும் ராகி சாப்பிடுவா! சின்னக் குழந்தைக்கு ராகியா?' என்று நளினா தேவி வியப்புடன் கேட்டாள்.

'நீங்கள் எந்த ஊர்? ராகியின் மகிமை தெரியாதவர்கள்கூட இருக்கிறார்களா என்ன?' என்றாள் பார்வதி.

'தெரியாததனால்தானே கேட்கிறேன்? சின்ன குழந்தைக்கு ராகி ஜீர்ணமாகுமா?' என்று நளினாதேவி மறுபடியும் கேட்டாள்.

'குழந்தைக்கு மூணு-நாலு மாசம் வரை சாதாரணமாகத் தாய்ப் பாலே போதுமாக இருக்கும்—போராவிட்டால் குழந்தைக்கு ஆறு மாசம் முடியும் வரைக்கும், ராகியை நன்னா ஊற வைச்சு, அரைச்சு, பாலை வடிகட்டி எடுத்த தெளிவை இறுத்து, ஊறலை உலர்த்திப் பொடியாக்கி, வெயிலில் உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும். இதைக் கஞ்சி காய்ச்சிப் பால் சர்க்கரை போட்டுக் கொடுக்க வேண்டும். அப்புறம் ராகியை இயந்திரத்தில் பட்டு போல் அரைத்து, சலித்து, இந்த மாவைக் கூழ், கஞ்சி, இஷ்டம்போல் தயாரித்துக் கொடுக்க வேண்டும். ராகி நல்ல குளிர்ச்சி; வலிவு தரும். கூழ் குடித்த பிள்ளை குந்தாணி என்று கேள்விப்பட்டதில்லையா? குழந்தை நன்னா வளருமே!' என்றாள் என் அத்தை.

'தவிர, காய் வகை, உருளைக் கிழங்கு இவைகளை நாமே வேக வைத்து மசிச்சுக் கொடுக்கலாமே! எங்க அம்மா தினம் ஒரு உருளைக் கிழங்கைத் தோலுடன் வெந்து, உரித்து, மசிச்சு, கொஞ்சம் வெண்ணெயும் உப்பும் கலந்து, ஏழு மாதக் குழந்தைக்குக் கொடுப்பாள். அப்புறம் கொஞ்சம் ஆரஞ்சு அல்லது டொமாடோ பழ ரசமும் கொடுப்பாள். மத்தியானம் இதைக் கொடுத்தால் நாலு மணி நேரத்துக்குக் குழந்தை பசி அடங்கித் திருப்தியாக இருக்கும்—நன்னா வளரவும் செய்யும்!' என்றாள் ராஜம்-நாதன்.

'குழந்தைகளுக்கு வாழைப் பழத்தை மசிச்சு ஊட்டலாம்!' என்றாள் பார்வதி.

'மந்தம் தட்டாதோ? ஆனால் அது எங்க நாளைய அக்கியானமாக்கும்!' என்றாள் என் அத்தை.

'எல்லாருமே இப்போ வாழைப் பழம் கொடுக்கிறார்களே! ஆமாம்; நம்ம தேசத்தில் இவ்வளவு நல்ல ஆகாரங்கள் இருக்கும்போது, சுசீலா ஏன் இப்படி 'டின்' ஆகாரங்கள் வாங்கச் சொன்னாள்?' என்று ராஜம்-நாதன் கேட்டாள்.

'அதுவா—கொஞ்ச நாட்களுக்கு முன் ஒரு குழந்தை ஆகார நிபுணர் வந்திருந்தார்—அவர் தங்கள் ஊரில் உள்ள ஆகார வகைகளைச் சொல்லி இருப்பார். புரோடீன், எலும்பு, வைடமீன்போன்ற சத்துகள் குழந்தை வளர்ச்சிக்கு அவசியம் என்றிருப்பார். சுசீலா இதைக் கேட்டிருப்பாள்—பிடித்தது அனர்த்தம்!' என்றாள் பார்வதி.

பட்டண வாசிகளான நாங்களும் இப்போ, 'டின்' ஆகாரங்கள் வாங்குவதில்லை—செல்வந்தர்கள் வேண்டுமானால் குழந்தைகளுக்கு இப்படி வாங்கலாம்—சாதாரணமாக நல்ல பணக்காரர்களும் ராகிக் கஞ்சி, பசுவின் பால் இவைகள்தான் கொடுக்கிறார்கள். வசதி உள்ளவர்கள் ஆபிள், ஆரஞ்சு என்று வாங்குகிறார்கள்—மற்றவர்கள் டொமாடோ, வாழைப் பழம் என்று கொடுக்கிறார்கள். பருப்பு சாதம், பாலும் சாதம் இவைகளைக் கிண்ணியில் பிசைந்து, காக்கையையும், நாயையும், அம்புலி மாமையும் காட்டி, சந்தோஷமாக, வேடிக்கையாக ஆட்டி ஊட்டித் தானே நம் முன்னோர்கள் குழந்தைகளை வளர்த்தார்கள்? குழந்தை தன் ஆகாரத்தை சந்தோஷமாகச் சாப்பிட வேண்டும். ஆகாரம் அதன் வளர்ச்சிக்கு ஏற்றதாக இருக்க வேண்டும்—அதாவது உடம்பில் ஒட்ட வேண்டும். ரூபாயைக் கொட்டி 'டின்' ஆகாரம் கொடுத்தால்தான் குழந்தை வளரும் என்பதில்லை. பசுவின் பால், ராகிக் கஞ்சி, பழம், காய் வகை என்று நாமே தயாரித்துக் கொடுக்கலாம். இதுதான் நல்லதும் கூட. இதை எல்லாம் சீதா, சுலோசனா இருவரையும் யோசனை பண்ணச் சொல்லு. தெரிந்ததா?

★

கண்டதும் காதல்

—ஜயன்

கொஞ்சம் தயவுபண்ணி முன்னே போங்க, போங்க முன்னாலே...

முன்னேற்றத்தைப் பற்றி யார் கவலைப்பட்டாலும் படாவிட்டாலும், பஸ் கண்டக்டர்கள் அந்தத் தாரக மந்திரத்தை உச்சரிக்காமல் ஒரு நிமிடமேனும் இருப்பதில்லை. பிரயாணிகளின் முன்னேற்றத்தில் கண்ணும் கருத்துமாக இருந்தான் அவன்.

வளைந்து நெளிந்த பூங்கொடியொன்று பஸ்ஸின் மேல்பட்டையைப் பிடித்துப் படர்ந்து நின்றது. பஸ் கிளம்பியது ஒரு குலுக்கலுடன். பூங்கொடியின் உடல் துவண்டது. அவள் சாய்ந்தால், அவன் என்னமோ தாங்கத் தயார்தான். ஆனால், அது நடக்கவில்லையே!

காற்றிலே பறக்கும் சேலைத் தலைப்பு உடலில் பட்டதே புல்லரித்தது, அவனுக்கு! அவளே சாய்ந்தால், அப்பா! என்ன இன்பம்! என்ன இன்பம்!

பஸ் காலியாக இருந்தால்கூடப் பெண்கள் (அதுவும் யுவதிகள்) நின்று கொண்டேதான் வரவேண்டும் என்று ஒரு சட்டம் வந்தாலென்ன?

வெறி நாய் மானேஜரையும், கடுவம் பூனை ஹெட் கிளார்க்கையும், கோழி மூட்டும் சக குமாஸ்தாக்களையும், தாங்கு மூ[illegible]ியூனையும், பார்த்துப் பார்த்துச் சலித்துப் போன கண்களுக்கு, இந்தக் காட்சி எத்தகைய அரிய விருந்தாக இருக்கிறது!

முன் வயிறும், பின் முதுகும் தெரிய அணியும் முழங்கை நீளச் சோலி,உடம்போடு பிறந்த மாதிரி ஒட்டித் தைத்திருக்கும் அழகே அலாதி. கட்டான உடல் அமைப்பை எப்படி விளம்பரப் படுத்துகிறது அது.

அந்தப் புடவை, ஷிபானோ! சபானோ!! உள் பாவாடைத் தையல்கூடத் தெரிகிறதே, அதன் வழியாக! இந்த அலங்காரங்களுடன் கையைத் தூக்கி உயரப் பிடித்துக்கொண்டு, பஸ்ஸோடு வளைந்து, ஆடி, குலுங்கி நிமிர்ந்து பிரயாணம் செய்கையில், எப்படி ரசிக்க முடிகிறது; அனுபவிக்க முடிகிறது.

'அப்பா! என்ன அழகு; என்ன லாவண்யம்!!

'எங்கேம்மா போகணும்?'

'பாரிஸ்...'

'சில்லறையாக் கொடுங்க, நோட்டை நீட்டாதீங்க.'

'சில்லறையா?...ச்...'

குயிலின் செவ்விதழ்கள் குவிந்தன. தாமரை வதனம் வாடியது. யுவனைப் பார்த்தாள்.

பாவம், சில்லறை இல்லைபோலிருக்கிறது. இரண்டு ரூபாய்த் தாளை நீட்டுகிறாள். விழிக்கிறாள்...

அவன் ஆற அமர நிமிர்ந்து, அவள் பின்னழகையும், முன்னழகையும் விழிகளால் விழுங்கிக் கொண்டிருந்தான்.

'எங்கே சார் போகணும்?...'

'சொர்க்கத்துக்கு...'

நல்ல வேளை! இதை அவன் மெல்லத்தான் முனகினான். கண்டக்டருக்கு விளங்கவில்லை போலும்! பஸ்ஸில் ஏறும் அழகிகளைப் பார்த்துக்கொண்டே இருந்தானானால், அவன் பிழைப்பு என்ன ஆவது!

'என்னங்க எங்கே போகணும்? எத்தனை டிக்கெட்டு?'

அவன் அதட்டலில் சொர்க்கத்திலிருந்து பூமிக்கு (தவறு பஸ்ஸுக்கு) வந்தான், அந்த யுவன்.

'ஆ டிக்கெட்டா? பாரிஸ் இரண்டு.'

'ரெண்டா? ஆறணா கொடுங்க...!'

புன்முறுவல் தவழ, சுத்தமான எச்சிலைத் தொட்டு, இரண்டு டிக்கெட்டைக் கிழித்து, யுவன் கையில் கொடுத்துவிட்டு, யுவதிபால் திரும்பிய கண்டக்டர், 'டிக்கெட் வாங்கியாச்சா அம்மா?' என வினவினான்.

இரண்டு ரூபாய்த் தாளும் தானுமாகப் பரிதாபமாக விழித்தாள் யுவதி.

யுவன் முன் வந்து கூறினான், 'இரண்டு டிக்கெட்டுத்தான் வாங்கியிருக்கேனே அப்பா...!'

'ஓ்ஹோ! நீங்க வாங்கிட்டீங்களா? சரி தான். டிக்கெட் ப்ளீஸ்...' என்ற பல்லவியுடன் முன்னேறிவிட்டான் கண்டக்டர். யுவதி வியப்பு மேலிட அவனைப் பார்த்தாள்.

'ரூபாய்க்குச் சில்லறை இருந்தால் கொடுங்கள்...'

தேன்மாரி பொழிந்தது யுவன்மேல்; மெய்சிலிர்த்தது.

'ஹி...ஹி...பரவாயில்லை; ஒரு டிக்கெட்டால் என்ன முழுகிவிட்டது?'

'இல்லை; எடுத்துக்கொள்ளுங்கள்.'

'சேச்சே! அதெல்லாம் வேண்டாம். நான் வாங்கமாட்டேன். கொடுத்தது கொடுத்ததுதான்.'

அதற்குமேல் பேசவில்லை அவள். உள்ளங் கைக்குள் அடக்கிக்கொண்டு விட்டாள் ரூபாயை. பஸ் ஆடி ஓடியது.

'பாரிஸில் இறங்கி எங்கே போகணும்?' அவன் கேள்விக்குக் கிடைத்த பதில் ஒரு பார்வைதான். பரிவுதான் சொட்டியதோ அதில்? சகபிரயாணிகளின் கவனம் இந்த இளம் ஜோடியின்மீது திரும்பியது. யுவதியின் செம்பகக் கன்னம் பட்டு ரோஜாவாகியது. யுவன் நிமிர்ந்து நின்று, சட்டைக் காலரைச் சீர் செய்து கொண்டான். பெட்ரோல் மணத்தது. வண்டி புஷ்பக விமானமாகியது. நிமிடம் பறந்தது.

பச்சப்பாஸ்...திடுமென்று ஒரு குலுக்கலுடன் நின்றது பஸ். யுவதி இறங்கினாள். அவன்மீது உரசிக்கொண்டுதான் இறங்க முடிந்தது அவளால். அத்தனை நெரிசல். பின்னாலேயே அவனும் இறங்கிவிட்டான்.

'புதுக் காதலர்கள்போலிருக்கிறது.'

கண்டக்டரின் கிண்டல் பேச்சைக் கேட்டுச் சிலர் சிரித்தனர். யுவதியின் முகம் செக்கர் வானமாகியது.

'நாணம் பெண்ணின் அழகுக்குப் புது மெருகு கொடுக்கத்தான் கொடுக்கிறது'– தன்னுள் விமரிசனம் செய்து கொண்டான் அவன். அவள் முன்னேறிக்கொண்டிருந்தாள். அவனும் விடாது தொடர்ந்தான் நிழலாக.

'உங்கள் பெயர் என்ன?...' எனச் சட்டென வினவினான் துடிப்புமிக. ஆச்சர்யம் மிக அவனைப் பார்த்துவிட்டுச் சொன்னாள், அவள்.

'என் பெயரா...உம்...லதா...'

'லதாவா? என்ன லதா? பிரேமலதாவா? ஹேமலதாவா? சுவர்ணலதாவா?'

அலாரம் அடித்து ஓய்ந்தமாதிரிச் சிரித்து ஓய்ந்தான் அவன்.

'அதெல்லாமில்லை. வெறும் லதாதான்...'

'அது போதுமே, வேறு எதற்கு?'

சட்டென்று அவள் நடை தடைப்பட்டது. ஒரு கடைமுன் வந்து நின்றாள், அவள். தயக்கம்மிக அவனையும், கடையையும் மாறிமாறிப் பார்த்தாள். இதழ்க் கோடியில் மென்புன்னகை மிளிர்ந்தது. சுழலும் விழிகளில் சொக்கி நின்றான் அவன். உற்சாகத்துடன் கடைக்குள் நுழைந்தான். அவளும் கூடவே அழகு நடை நடந்து வந்தாள்.

'ஏ பையா! ஒரு சிகரெட் கொடப்பா' குஷியாகக் கூவிவிட்டு, அவள்புறம் திரும்பிக் கேட்டான்:

'உங்களுக்கு என்ன வேண்டும்?'

'எனக்கா? வந்து...'

'சும்மா சொல்லுங்கள்...'

யுவதியின் கன்னம் சுழித்தது. உதடு குவிந்தது.

'வந்து...உம்...'

தீக்குளிக்கக்கூடத் தயாராக இருந்தான் அவன். இத்தகைய அழகியின் காதலுக்காக எதையும் செய்யலாமே! தீக்குளிப்பது என்ன பிரமாதமான செயல்?

'என்ன சொல்லுங்கள்?...'

'இல்லை; சில சாமான்கள் வேண்டும். பையனிடம் சொல்லுங்கள்...'

இதழ்களிலே இளமுறுவல். கண்களில் ஓர் புத்தொளி. யுவன் இன்பசாகரத்தில் மூழ்கியே போய்விட்டான்.

'ஓ! சாமான்தானே? அதற்கென்ன? ஏ பையா! இங்கே வாப்பா! இந்த அம்மாளுக்கு என்ன வேண்டும் கேளப்பா முதலில்...'

ராணுவ அதிகாரியின் மிடுக்கும், அதிகாரமுமாக அவன் சொன்னான். இப்போது பையன்மட்டுமல்ல; கடைக்காரரும் ஓடி வந்தார்.

'என்னம்மா, என்ன வேண்டும்?'

மரியாதையும், பரிவுமாக விசாரித்தார்.

'வந்து ஒரு ஹார்லிக்ஸ், ஒரு ஓவல்டின், சாக்லெட் ஒரு பவுண்டு, பிஸ்கேட் ஒரு பாக்கெட், ரஸ்க் ஒரு பவுண்டு, ஒரு கோகோ டின், ஒரு...' டம்பப் பையின் வாய் ஜிப்பை இழுத்தவாறு நீள அடுக்கினாள், சாமான்கள் ஜாபிதாவை. பையனும் கடைக்காரரும் ஓடி ஓடிச் சாமான்களை அடுக்கினார்கள்.

'ஒரு பையில் போட்டுக் கொடப்பா...'

'பை ஆறணா சார்...'

'பரவாயில்லை...' என்றான் அவன் தாராளமாக. அவள் வெறுமனே முறுவலித்தாள். பை நிரம்பியது. இரு கைகளாலும் எடுத்து வந்து தேவியின் முன் சமர்ப்பிப்பதுபோல் யுவதியின் கையில் கொடுத்தார் கடைக்காரர். அவன் அவளையே பார்த்தவாறு சிகரெட்டைப் புகைத்துக்கொண்டிருந்தான். அவள் பையைப் பெற்றுக்கொண்டாள்.

'நான் வருகிறேன் சார், வணக்கம்...'

இதயமே வெளியேறுவதுபோன்ற பிரமை அவனுக்கு.

'அம்மா பணம்...' என்றான் பையன் அவளை அணுகி.

'அவர் தருவார்; வாங்கிக் கொள்...'

'அவரா?'

'ஆமாம்; பஸ்ஸுக்குக்கூட அவர்தானே கொடுத்தார்? இதற்கும் கொடுப்பார் வாங்கிக் கொள்.'

அவள் போயே போய்விட்டாள். 'ஆ' என வாயைப் பிளந்தான் அவன்.

'சார் பில்...'

'எத்தனை அப்பா...' மூச்சடைக்கக் கேட்டான் அவன்.

'பத்தொன்பது ரூபாய் எழுபது நயா பைசா சார்...'

'ஐயோ என்ன?'

தலை சுற்றியது. கண்கள் சுழன்றன. அதிலே ஆயிரமாயிரம் அழகிகள் சுற்றிச் சுற்றி வந்தனர். காற்றோடு கலந்த சிகரெட்டுப் புகையுடன் அவன் காதலும் வானை நோக்கிப் பறந்தது!

★



3 வாரப் பயிற்சியை பூர்த்தி செய்துவிட்டு, சொந்த ஊருக்குத் திரும்பும் காங்கிரஸ் சேவாதளத் தொண்டர்களுக்கு, தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் 10-ந் தேதி சென்னை உள்நாட்டு மந்திரி ஸ்ரீ பக்தவத்சலம் அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கினார்.



ஜெகத்ஜோதி பிலிம்ஸ் 'ஓடிவிளையாடு பாப்பா'வில் பி. சரோஜாதேவி

Regd. No. 2514.
Registered as a Newspaper in CEYLON.

சுதேசமித்திரன் புத்தகசாலை

தலைமை ஆபீஸ்:

விக்டரி ஹவுஸ், மவுண்ட் ரோடு, சென்னை-2.

அடியிற்கண்ட ரயில்வே ஸ்டேஷன்களில் எமது புத்தகசாலைகள் இருக்கின்றன.

ரயில்வே ஸ்டால்கள்:

★

1. பெங்களூர் க. மெண்ட்
2. செங்கற்பட்டு ஜங்.
3. கோயமுத்தூர் ஜங்.
4. திண்டுக்கல் ஜங்.
5. ஈரோடு ஜங்.
6. காரைக்குடி ஜங்.
7. கும்பகோணம்
8. மதராஸ் பீச்
9. மதுரை ஜங்
10. மாயூமதுரை ஜங்.
11 மாயவரம் ஜங்.
12. ஒலவக்கோடு ஜங்.
13. பொள்ளாச்சி ஜங்.
14. ரெய்ச்சூர்
15 தாம்பரம்
16. தென்காசி ஜங்
17. திருநெல்வேலி ஜங்.
18 திருப்பதி (கிழக்கு)
19. திருவாரூர் ஜங்.
20. திருச்சி ஜங்.
21. தூத்துக்குடி
22. விழுப்புரம் ஜங்.
23 விருதுநகர் ஜங்.
24 விருத்தாசலம் ஜங்.

★

மேற்படி இடங்களில் எல்லா விதமான இங்கிலீஷ், தமிழ் புத்தகங்களும், தினசரி, வாரப் பத்திரிகைகளும், அமெரிக்கா, இங்கிலாந்து, சீனு, ரஷ்யா முதலிய இடங்களில் பிரசுரமாகும் வாரப் பத்திரிகைகளும்; மாதப் பத்திரிகைகளும் கிடைக்கும்.

மானேஜர்,

சுதேசமித்திரன் புத்தகசாலை,

விக்டரி ஹவுஸ், மவுண்ட் ரோடு, சென்னை-2.

Printed and Published by N. Rajagopalan, at the 'Swadesamitran' Press, 'Victory House' Mount Road, Madras. Editor: C. R. Srinivasan, B. A.



சுதேசமித்திரன் புத்தகசாலை

தலைமை ஆபீஸ்:

விக்டரி ஹவுஸ், மவுண்ட் ரோடு, சென்னை-2.

அடியிற்கண்ட ரயில்வே ஸ்டேஷன்களில் எமது புத்தகசாலைகள் இருக்கின்றன.

ரயில்வே ஸ்டால்கள்:

1. பெங்களூர் க. மெண்ட்
2. செங்கற்பட்டு ஜங்.
3. கோயமுத்தூர் ஜங்.
4. திண்டுக்கல் ஜங்.
5. ஈரோடு ஜங்.
6. காரைக்குடி ஜங்.
7. கும்பகோணம்
8. மதராஸ் பீச்
9. மதுரை ஜங்
10. மாணுமதுரை ஜங்.
11. மாயவரம் ஜங்.
12. ஒலவக்கோடு ஜங்.
13. பொள்ளாச்சி ஜங்.
14. ரெய்ச்சூர்
15. தாம்பரம்
16. தென்காசி ஜங்.
17. திருநெல்வேலி ஜங்.
18. திருப்பதி (கிழக்கு)
19. திருவாரூர் ஜங்.
20. திருச்சி ஜங்.
21. தூத்துக்குடி
22. விழுப்புரம் ஜங்.
23. விருதுநகர் ஜங்.
24. விருத்தாசலம் ஜங்.

மேற்படி இடங்களில் எல்லா விதமான இங்கிலீஷ், தமிழ் புத்தகங்களும், தினசரி, வாரப் பத்திரிகைகளும், அமெரிக்கா, இங்கிலாந்து, சீனு, ரஷ்யா முதலிய இடங்களில் பிரசுரமாகும் வாரப் பத்திரிகைகளும்; மாதப் பத்திரிகைகளும் கிடைக்கும்.

மானேஜர்,

சுதேசமித்திரன் புத்தகசாலை,

விக்டரி ஹவுஸ், மவுண்ட் ரோடு, சென்னை-2.

பொங்கலூட்கம்

Vol. XXIX] விளம்பி ஆனிமீ 15உ ஜூன் 29, 1958 [No 22

மத்தியக் கிழக்கு அபாய அறிகுறி 3
காற்றுவாக்கிலே —அாட்டை 4
உலகப்பலகணி —கே. பி. எஸ். 5
யார் அறிவார்? —அனுத்தமா 6
இலங்கை லிகிதம் 11
தலைநகர் தபால் 12
அடங்கிய பெண் —வி. பொன்னம்மாள் 13
மலர் மஞ்சம் —தி. ஜானகிராமன் 19
டார்வின் காட்டிய ஒளி —சக்திதாஸன் சுப்பிரமணியன் 24
நவநாகரிகக் குறிப்புகள் —கார்சினி 26
ஆதித்தன் காதல் —ஆர்வி 27
கடவுளின் அறிவு —ரஞ்சனி 34
உலகியல் கதைகள் —சாலிவாஹனன் 35
தங்கப்பதுமை —அஸ்வத்தாமா 36
சிறுவர் அறிவு அரங்கம் 39
குழந்தைச் சாமியார் —கா. நா. சுப்ரமண்யம் 40
ரத்னமாலை ரகஸியம் —வி. ஆர். ராதாகிருஷ்ணன் 44
நாராயணீயம் —அனந்தராம தீட்சிதர் 47
வந்தனு வந்தனம் —வைரம் 49
கலாமண்டபம் 51
நகர அரங்கம் —ஸஞ்சாரி 54
வாஸுதேவாச்சார் கீர்த்தனை 55

"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளிவரும் கதைகளில் பெயர்கள் சம்பவங்கள் எல்லாம் கற்பனையே அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

அட்டைப் படம்: போட்டோ—எஸ். நடராஜன்.



தலைநகரில் சென்ற வாரம் தில்லி பஜனை சமாஜத்தின் ஆதரவில அருமையான கதாகாலட்சேப நிகழ்ச்சிகளை நடத்திய குமாரி ஸரஸ்வதிக்கு, சமாஜத்தின் காரியதரிசி அன்பளிப்பை வழங்கும்போது எடுத்த படம்.

சென்னை-600 008.



வாழிய செந்தமிழ் சுதேசமித்திரன் வாழ்க நற்றமிழர்
வாரப்பதிப்பு

★

மத்தியக் கிழக்கு அபாய அறிகுறி

லெபனான் உள்நாட்டுச் சண்டை அந்த நாட்டுடன் நிற்குமா. அல்லது மற்ற தேசங்களுக்கும் கைகலக்கத் தக்க ஒரு பயங்கர யுத்தமாகப் பரவி விடுமா என்று எங்கும் கலக்கம் ஏற்பட்டிருக்கிறது. லெபனானில் அந்நிய ராணுவம் தலையிட்டால், ஐக்கிய அராபியக் குடியரசு அதைப் பார்த்துக்கொண்டு வாளாவிராது; அதுவும் அப்போரில் குதிக்கும் என்று எகிப்து ஜனாதிபதி மேனாடுகளுக்கு எச்சரித்துள்ளார். தற்போது லெபனான் மேற்கத்திய கோஷ்டியின் ஆதிக்க மண்டலத்திற்குட்பட்டது. அங்குள்ள மக்கள் பலருக்கு அது பிடிக்கவில்லை. அவர்களில் பாதிப் பேர் அராபியர்; மறு பாதி கிறிஸ்தவர். எனினும் மத ரீதியில் அங்கு அரசியல் கட்சிகள் பிளவுறவில்லை. தற்போது அங்கு அதிகாரத்திலுள்ள சர்க்கார் எகிப்து-ஸிரிய ஐக்கியத்தைப் பகிரங்கமாகக் கண்டித்து வந்துள்ளனர். அந்நாடு அராபிய யூனியனுடன் சேருவதை எப்படியாவது தடுக்க வேண்டுமென மேற்கத்திய கோஷ்டி துடிப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால், அங்குள்ள எதிர்க் கட்சியினர் மேற்கத்திய உறவை வெறுப்பவர்கள்; அவர்களுக்கு ஐக்கிய அராபியக்குடியரசின் ஆதரவு கிடைப்பது இயற்கையே. தற்போது எதிர்க் கட்சியின் கலகத்தை லெபனான் சர்க்கார் தங்கள் சொந்த பலத்தைக் கொண்டு அடக்க முடியவில்லை. அந்நாட்டின் எல்லையில் பாதி பாகத்தை ஒட்டிய பகுதிகளெல்லாம் எதிர்க் கட்சியினரின் வசமிருந்து வருகின்றன. இந்நிலையில், வெளி நாடுகளிலிருந்து ஆயுதங்களும், துருப்புகளும் லெபனானுக்குள் வருகின்றனவா என்று கண்டுபிடிப்பது கஷ்டமாயிருப்பதாக அங்கு சென்றுள்ள ஐ. நா. பார்வையாளர் தெரிவிக்கின்றனர்.

பிரிட்டிஷ், அல்லது அமெரிக்கப் படைகள் லெபனானில் தலையிடுவதென்ற யோசனையைத் தாம் எதிர்ப்பதாக ஐ. நா. காரியதரிசி அறிவித்துள்ளார். ஆனாலும், அவ்விரு தேசங்களும் அவ்வாறு தலையிடும் கருத்துடன் மத்தியதரைக் கடல் பகுதியில் பெருவாரியான படைகளைக் கொண்டுபோய்க் குவித்திருக்கின்றன. பல அமெரிக்க யுத்தக் கப்பல்கள் அங்கு சென்றிருப்பதுடன், பிரிட்டிஷ் அதிகாரிகள் குறிப்பாக ஸைப்ரஸுக்கு வெகு அவசரமாகப் பலவிதமான பட்டாளங்களைக் கொண்டு போய்ச் சேர்த்திருக்கின்றனர். அத்தீவை நிரந்தரமாகத் தங்கள் தளமாக வைத்துக்கொள்வதே பிரிட்டிஷ் சர்க்கார் இப்போது அத்தீவுக்கென்று உருவாக்கியுள்ள அரசியல் திட்டத்தின் கருத்து. பிரித்தாளும் சூழ்ச்சியில் தேர்ந்த பிரிட்டிஷார், அத்தீவிலுள்ள துருக்கியரும், கிரேக்கரும் மேன்மேலும் சச்சரவிட்டுக் கொண்டிருக்கத்தக்க முறையில் அத்திட்டத்தை அமைத்திருக்கின்றனர். இது ஒருபுறமிருக்க,

ஸைப்ரஸில் குவித்துள்ள துருப்புகளை லெபனான் திக்கில் ஏவிவிடும் ஒரு அசட்டுத்தனத்தில் பிரிட்டன் இறங்குமா என்பதே தற்போது கேள்வி. அதில் தனக்கு அமெரிக்காவின் துணை இருக்கிறதென்று அது எண்ணலாம். ஆனால், அதன் பலாபலன் என்ன என்பதை அந்நாடுகள் யோசிக்க வேண்டும். லெபனான், சர்க்கார் அழைத்தால் பிரிட்டிஷ் அல்லது அமெரிக்கப் படை அந்நாட்டுக்குள் சென்று அவர்களுக்கு உதவலாம் என்பதற்கு பிரிட்டிஷ்-அமெரிக்க அதிகாரிகள் பழைய ஒப்பந்தங்களை ஆதாரமாகக் காட்டக்கூடும். ஆனால்: லெபனானை ஒட்டிய ஸிரியாவில் ஐக்கிய அராபியக் குடியரசும் தீவிர முஸ்தீபில் ஈடுபட்டிருக்கிறதென்பது மேனாடுகளுக்கு நினைவிருக்க வேண்டும். லெபனானில் அந்நியத் தலையீட்டால் மூளக்கூடிய தீ, மத்தியக் கிழக்கு நாடுகள் அனைத்துக்கும் பரவுவது மட்டுமில்லை. மேனாடுகளின் தலையீட்டைப் பார்த்துக்கொண்டு ரஷ்யா சும்மாவிருக்கப் போவதில்லை. அராபிய நாடுகளுக்கு ஏற்படும் எத்தகைய ஆபத்தும் தன்னையும் பாதிக்கக்கூடியது என்று ரஷ்யா பன்முறை அறிவித்திருக்கிறது. எனவே, லெபனானில் அந்நியர் தலையிட்டால், அந்நாட்டின் சுதந்திரம் சமாப்தியாவதுடன், அதன் பலனாக மூளும் யுத்தம் எங்கும் பரவிவிடக்கூடும். அத்தகைய ஒரு அனர்த்தத்துக்குச் சிறிதும் இடந்தராத முறையில் ஐ. நா. சங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என்பது தெரியவேண்டும்.

சொல்வதும் நடப்பதும்!

மதிப்பிற்குரிய நமது பிரதம மந்திரியின் தலைமையில் நடைபெறும் அரசாங்கத்தில் தொழிலாளர் நலனுக்கு எப்போதும் குறைவில்லை. மாநிலக் காங்கிரஸின் மாபெரும் தலைவர் சொல்லிவிட்டார். மறு பேச்சின்றி நம்புவதே நம் கடமை.

வேலை நிலைமைகள், நிபந்தனைகள், கருணை உணர்ச்சியுடன் கூடியதாக இருக்க வேண்டும்; கௌரவமாக வாழ்வதற்கு வேண்டிய அளவு சம்பளம் கொடுக்கப்பட வேண்டும்; சமூகப் பாதுகாப்பு இருக்க வேண்டும்; இவையே மத்திய அரசாங்கம் பின்பற்றி வரும் தொழிலாளர் கொள்கையின் அடிப்படை அம்சங்கள். சர்வ தேச மகாநாட்டில் இந்தியப் பிரதிநிதியான சென்னை மந்திரி விளக்கிவிட்டார். கொஞ்சநஞ்சம் இருந்த சந்தேகமும் ஓடி ஒளிந்துவிட்டது. உழைக்கின்ற மக்கள் இங்கு பிழைக்க முடியாமல் தவிக்கிறார்களா? அவர்கள் வாழ்க்கையில் கசப்பு வளர்ந்து வருகிறதா? இவ்வளவு பெரிய மனிதர்கள் இத்தனை சொல்லும் போது, அதெப்படிச் சாத்தியம்?

'என்னுடைய நிர்வாகத்திலுள்ள இலாகாக்களில் ஏதாவது ஒன்றில் வேலை நிறுத்தமில்லாமல் ஒரு வாரம்கூட இது வரை கழிந்ததில்லை. எனது அமைச்சகவை 'வேலை நிறுத்த அமைச்சரகம்' என்று பெயர் பெற்றுவிட்டது. எனக்கும் 'வேலை நிறுத்த அமைச்சர்' என்றே பெயர் கிடைத்துவிட்டது. மத்திய சர்க்கார் போக்குவரத்து மந்திரி பெருமிதம் கொள்கிறார்! இந்தத் தொழிலாளருக்கெல்லாம் பைத்தியமா?

சதா குறை கூறுவதே மாற்றுக் கட்சியினரின் தொழிலாகிவிட்டது. அவர்களுக்குத்தான் வேறு வேலையில்லை. ஆட்சியாளரின் அன்பர்களும், நண்பர்களுமாவது சும்மாயிருக்கலாமல்லவா? எக்கச்சக்கமாய் பேசித் தொலைக்கிறார்கள். இந்தியா இன்று துயரங்களுக்கு நிலைக்களனாக இருக்கிறதாம். ஆசார்யா வினோபா வருந்துகிறார். வந்த சுதந்திரம் டில்லிவரைதான்; அங்கிருந்து கீழே வரவில்லை என்று அங்கலாய்க்கிறார். நாம் ஒவ்வொருவரும் செய்யக்கூடிய ஊழல்களைப் பிறர்மீது சுமத்தி, நம்மைத் தாழ்த்திக் கொள்வதோடு, நாட்டையும் சீர்கேடச் செய்கிறோமே என்று சென்னை மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் மனம் வெதும்புகிறார். வெறும் வாயை மெல்பவருக்கு அவல் கிடைத்த மாதிரித்தான்.

முக்கியமான துறைமுகங்கள் அனைத்திலும் வேலை நிறுத்தம். தேபர்ஜி கூறுவதுபோல் மிக்க வருந்தத்தக்க வேலை நிறுத்தம். லட்சக்கணக்கான தொழிலாளர் ஈடுபட்டிருக்கும் வேலை நிறுத்தம். ஏற்றுமதி, இறக்குமதி வேலைகள் ஸ்தம்பித்துவிட்டன. புள்ளிக் கணக்குகளில் என்னதான் ஜாலவித்தை செய்தாலும் மறைக்க முடியாத உண்மை. வேலை நிறுத்தம் உடனடியாக வாபஸ் பெறப்பட்டாலும் நாட்டிற்கு ஏற்பட்டுள்ள பெருந்தங்கிலிருந்து அது மீள ஒரு மாதம் பிடிக்குமென்று இந்திய வர்த்தக சபை சம்மேளனத் தலைவர் அபிப்பிராயப்பட்டார். உருட்டினாலும், மிரட்டினாலும் உடனே வேலைக்குத் திரும்ப அந்தத் தொழிலாளர் மறுத்துவிட்டனரே? ஏற்கனவே அன்னியச் செலாவணி நெருக்கடி. இருக்கிற தொல்லைகளெல்லாம் போதாதென்று இது வேறு தலைவலி. ஒரு நாள் வேலை நிறுத்தத்தால் நாட்டுக்கு 25 லட்ச ரூபாய் நஷ்டம். கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள இயந்திரங்களும், உணவுப் பொருள்களும் சேதமடையும் ஆபத்து. தொழிலாளருக்கும் பல லக்ஷக் கணக்கில் கூலி நஷ்டம். சர்வதேச சிக்கல்களும் உண்டாகுமோ என்று சங்கடம். அனர்த்தங்களையெல்லாம் தவிர்க்க, நிதானத்துடன், தக்க முன் யோசனையுடன் நம் சர்க்கார் நடந்து கொள்ளும் என்று எதிர்பார்ப்பதில் தவறில்லையே?

இந்த வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு இல்லை; எந்தவித நியாயமும் இல்லை; இது தோல்வியுறுவது உறுதி என்று மத்திய மந்திரிக்கு திட நம்பிக்கை. துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை தேசபக்தியுள்ள தொழிலாளர்கள் ஆதரிக்கக்கூடாது என்று வேண்டுகோள். பாழாய்ப் போன உலகில் நாம் நினைத்தபடியெல்லாம் காரியங்கள் நடக்கின்றனவா? 'தொழிலாளரின் எந்தக் கோரிக்கையையும் சர்க்கார் நிராகரிக்கவில்லையே? காத்திருங்கள் என்று கூறியது குற்றமா?' என்கிறார் மந்திரி. கடந்த நான்காண்டுகளாக அரசாங்கம் அனுசரித்து வந்திருக்கும் காலங்கடத்தும் கொள்கையினாலேயே தற்போதைய நெருக்கடி ஏற்பட்டிருப்பதாக மத்திய சர்க்கார் ஊழியர் சங்கங்களின் சம்மேளனத் தலைவரே சாடுகிறார். தொழிலாளர் பால் கடுமையான கொள்கையையே பின்பற்ற வேண்டுமென்ற மனப்பான்மையுள்ளவர்கள்தான் சர்க்காரில் ஆதிக்கம் செலுத்துவதாகவும் குற்றம் சாட்டுகிறார்! அட, ஈஸ்வரா!

சாதுவான சென்னை நகருக்கு வழக்கத்துக்கு விரோதமான பெருமை. துப்பாக்கிப் பிரயோகம். நாடெங்கும் வருத்தம்; வேதனை; சர்க்காரின் தத்துப் பிள்ளையெனப் பெயர் வாங்கியிருக்கும் தேசீய தொழிற்சங்கக் காங்கிரஸும் கண்டிக்கிறது. மக்களை எச்சரிக்கை செய்வதற்காகவே துப்பாக்கிப் பிரயோகம்; அவர்களின் உயிரைக் குடிப்பதற்காக அல்ல; முன்னொரு நாள் பாராளு மன்றத்தில் பந்த் வியாக்யானம் செய்தார். சென்னையில் துப்பாக்கிப் பிரயோகத்தில் பலர் பலி; நூற்றுக்கணக்கானவருக்குக் காயம். 'பலாத்காரத்தால் எதையும் சாதித்து விட முடியாது; காந்திஜியின் கொள்கையைப் பின்பற்றி அஹிம்ஸா தர்மத்துடனேயே காங்கிரஸ் நடந்து வருகிறது!' பச்சைத் தமிழர் பொழிந்து தள்ளினார் சமீபத்தில்.

இந்த வேலை நிறுத்தம் முக்கியமாக அரசியல் நோக்கமுடையதாகும்; தொழிலாளர் நலனுக்கோ, தேச நலனுக்கோ உகந்ததல்ல; அரசியல் கட்சிகள் நலனுக்காகவே தொழிலாளர் இவ்விதம் ஸ்யாளப்படுகின்றனர் என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதறுகிறார். முற்றிலும் உண்மை என நம்பத் தயார். ஆனால், அந்தத் தொழிலாளருக்கும் அது உரைக்கும்படிக் காங்கிரஸ் நடந்துகொள்வது தானே? ஆட்சியாளர் போக்கை ஏஸர்வ் பாங்கி சிப்பந்திகளுமல்லவா கண்டிக்கின்றனர்! கடை வீதிகளும், நெடுஞ்சாலைகளும் வெறிச்சோடிக் கிடக்க, சென்னை நகரில் பூரண ஹர்த்தாலுமல்லவா அனுஷ்டிக்கப்பட்டது?

பதினைந்து ஆண்டுகளில் புரட்சி ஏற்படுமென்று ஜோசியம் சொல்லிப் பயமுறுத்துகிறார் ஒரு தலைவர். காங்கிரஸ்காரர்கள் வீட்டுக்கு வீடு சென்று, காங்கிரஸ் லட்சியத்தை விளக்கி, ஜனநாயகம், சோஷலிஸம் இவற்றில் மக்கள் பற்று கொள்ளும்படிச் செய்ய வேண்டுமென மன்றுடுகிறார் தேபர்ஜி. காங்கிரஸின் பாதையே சரியானது என்பதை மக்களுக்கு விளங்க வைக்க வேண்டாமா? வாதமும், பிடிவாதமும் அதற்குத் துணை செய்யுமா? தொழிலாளர் தவறான பாதையில் இழுத்துச் செல்லப்படுவதாகக் கூடியாகக் கதறினால்மட்டும் பலனளிக்குமா?

'யார் உனக்கு அடங்கியிருக்க மாட்டார்களோ, யாருக்கு உன்னிடம் மதிப்பு இல்லையோ, அவர்களிடம் போய் உபதேசம் செய்யக்கூடாது; உனக்கென்ன யோக்கியதை என்று அவர்கள் திருப்பிக் கொள்வார்கள்.' ஆசார்யர் அறிவுறுத்துகிறார். பெரியவர்கள் பேச்சைக் கேட்டு நடப்பதுதான் தற்போது வழக்கமில்லையே!

—அரட்டை

★



நாகி தூக்கிலிடப்பட்டார்

ஹங்கேரி நாட்டின் முன்னாள் பிரதமர் இம்ரே நாகி தூக்கிலிடப்பட்ட செய்தி சென்ற வாரம் உலகெங்கும் பரபரப்பை ஏற்படுத்தியது. சென்ற அக்டோபர் மாதம் ஹங்கேரியில் கலவரம் ஏற்பட்ட போது, அந்நாட்டின் பிரதமராகவிருந்தவர் நாகி. புரட்சி ராணுவத் தளகர்த்தராயும் பாதுகாப்பு மந்திரியாகவுமிருந்த ஜெனரல் பால் மாலீட்டரும் நாகியின் மற்றுமிரு நண்பர்களும் அவருடன் இக்கதிக்கு உள்ளாயினர். மற்றும் 5 பேர்களுக்கு நீண்டகாலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்தப் பயங்கர செய்தியை ரஷ்யச் செய்தி ஸ்தாபனமான 'டாஸ்' அறிவித்தது. ரஷ்யாவுக்கு எதிராகக் கலகம் செய்யும் எந்த நபருக்கும் இக்கதி ஏற்படுவது சகஜமென்றபோதிலும், ஸ்டாலினுக்குப் பிறகு ரஷ்யா தனது பயங்கர முறைகளை மாற்றிக் கொண்டு, சகிப்புத் தன்மையுள்ள கொள்கையைக் கையாளத் தொடங்கியுள்ளதென்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ள சமயத்தில், மேற்படி செய்தியானது உலகெங்கும் அதிர்ச்சியை உண்டு பண்ணியுள்ளது. மாலங்கோவ், புல்கானின், ஜுகோவ் ஆகியோர் கொல்லப்பட்டதாகப் பிரிட்டிஷ் பத்திரிகைகளில் செய்தி வந்ததற்கு, சோவியத் பிரதமர் மறுப்பு விடுத்ததைத் தொடர்ந்து நாகியும் அவரது சகாக்களும் மரண தண்டனைக்குள்ளான செய்தி வெளியாகியுள்ளதிலிருந்து மாலங்கோவ் முதலியவர்களுக்கும் இவ்விதக் கதி ஏற்படக்கூடுமென்ற மேற்கத்திய பிரசாரம் வலுவடைந்துள்ளது.

லெபனன் நிலைமை முற்றுகிறது

மத்யக் கிழக்கு நாடாகிய லெபனனில் கலவரம் தொடர்ந்து நடைபெறுகிறது. இந்த நெருக்கடியான நிலையில் தலையிடுமாறு அன்னியத் துருப்புகளை அழைக்கப் போவதாக அந்நாட்டுப் பிரதம மந்திரி கூறியுள்ளார். லெபனன் நிலைமை முற்றி, மேனாட்டு வல்லரசுகள் தலையீடு ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சப்படுகிறது. லெபனனுக்குள் சிரியா எல்லையிலிருந்து, ஆட்கள் கள்ளத்தனமாகப் புகுவதைத் தடுக்கச் சர்வதேசப் படையை அனுப்புமாறு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திடம் லெபனன் அரசாங்கம் கோரியுள்ளது. ஐ. நா. படை வாராவிட்டால், மேலை நாடுகளின் உதவியைக் கோரப் போவதாக லெபனன் பிரதம மந்திரி பட்டவர்த்தனமாக அறிவித்திருந்தார்.

ஐ. நா. காரியதரிசி ஜெனரல் லெபனனுக்கு விஜயம் செய்து, அந்நாட்டு அதிபருடன் சம்பாஷணை நடத்தியுள்ளார். கண்காணிப்புக் கமிஷன் அங்கத்தினர்களும் அவருடனிருந்தனர். அவர்களில் இந்தியப் பிரதிநிதி ராஜேஸ்வரதயாளும் ஒருவர். லெபனன் நிலைமையில் பிரிட்டனோ அமெரிக்காவோ தலையிடக் கூடாதென்று ஐ. நா. காரியதரிசி ஜெனரல் கண்டித்துக் கூறிவிட்டதாகத் தெரிகிறது. எல்லைகளைக் கண்காணிக்க ஐ. நா. பார்வையாளர்களே போதும் என்று அவர் கருதுவதாகவும் தெரிகிறது.

இதற்குள்ளாக மத்யதரைக் கடல் பிரதேசத்தில் ஆங்கிலோ—அமெரிக்க கப்பற் படை முஸ்தீப்பு செய்யப்படுவதாகத் தகவல் கிடைத்துள்ளது. ஐக்ய அரபுக் குடியரசும் ஸிரியாவில் படை சன்னத்தம் செய்வதில் ஈடுபட்டுள்ளதாம். லெபனனில் அன்னியத் தலையீடு ஏற்பட்டால், தமது ராஜ்யமும் தலையிட நேரிடும் என்று அதிபர் நாஸர் எச்சரித்திருக்கிறார் என்று தெரிகிறது.

இதற்கிடையே பெய்ரூத்தில் அரசாங்கத் துருப்புகளும் கலகக்காரர்களும் மோதிக் கொண்டுதானிருக்கின்றனர். பிரிட்டிஷ் தூதராலயத்துக்கெதிரில் ஏற்பட்டுள்ள கைகலப்பில் ஒருவர் கொல்லப்பட்டார்.

ஸைப்ரஸுக்கு பிரிட்டிஷ் திட்டம்

கிரேக்கர்களும் துருக்கியர்களும் தகராறு செய்துகொண்டிருக்கும் மத்ய தரைக் கடல் தீவான ஸைப்ரஸின் ஆட்சிக்கான 7 ஆண்டுத் திட்டமொன்றைப் பிரிட்டிஷ் பிரதம மந்திரி மாக்மிலன் அறிவித்துள்ளார். இந்தத் திட்டத்தின் அம்சங்கள்: பிரிட்டிஷ் கவர்னர் மற்றும் கிரேக்க, துருக்கி சர்க்கார்களின் பிரதிநிதிகள் ஒவ்வொருவர் கொண்ட கமிஷனிடம் இத்தீவின் உயர்தர ஆட்சிப் பொறுப்பு இருக்கும். நாட்டின் தற்காப்பு, வெளிநாட்டுறவு, உள்நாட்டுப் பந்தோபஸ்து ஆகியவற்றில் கவர்னருக்கு ரத்ததிகாரம் உண்டு. நாலு லட்சம் கிரேக்க ஸைப்ரஸ்வாசிகளும் ஒரு லட்சம் துருக்கி ஸைப்ரஸ் வாசிகளும் அவரவர் இன விவகாரங்களில் பூரண அதிகாரம்கொண்ட தனித்தனிச் சட்ட சபையைத் தேர்ந்தெடுப்பர். ஏழாண்டுகளுக்குப் பிரிட்டிஷ் அரசுரிமை மாறாது.

இத்திட்டத்தைக் கிரீஸ், துருக்கி இரு நாடுகளும் நிராகரித்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

கி. பாகிஸ்தானில் எட்டாவது மந்திரி சபை

கிழக்கு பாகிஸ்தானில் அவாமி லீக் கூட்டு சர்க்கார் கவிழ்ந்துவிட்டது. அரசாங்கத்தின் உணவுக் கொள்கையைக் கண்டிக்க எதிர்க் கட்சி கொண்டு வந்த வெட்டுப் பிரேரணை நிறைவேறியதை நம்பிக்கையின்மைத் தீர்மானமாகக் கருதி, மந்திரி சபையின் ராஜினாமாவைப் பிரதமர் ரஹ்மான் கான் சமர்ப்பித்தார். காங்கிரஸ் மெம்பர்கள் சர்க்கார் கூட்டிலிருந்து விலகி, எதிர்க் கட்சியுடன் சேர்ந்து ஓட்டளித்தனர்.

இப்புதிய கூட்டின் தலைவரான அபு உசேன் ஸர்க்கார் தலைமையில் புதிய மந்திரி சபை, கவர்னரின் அழைப்புக் கிணங்கிப் பதவி ஏற்றுள்ளது. இம்மந்திரி சபையில் மூன்று பேர் உள்ளனர். பாகிஸ்தான் பிரிவினை ஏற்பட்ட பிறகு, கடந்துள்ள 11 ஆண்டுகளில் கிழக்கு பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள எட்டாவது மந்திரி சபை இது.

துறைமுகத் தொழிலாளர் மீது துப்பாக்கிப் பிரயோகம்

பம்பாய், கல்கத்தா, சென்னை, கொச்சி துறைமுகங்களில் தொழிலாளர்கள் 15ந் தேதி நள்ளிரவு வேலை நிறுத்தம் செய்யத் தொடங்கினர். மற்ற துறைமுகங்களில் நிலைமை அமைதியாகவிருக்கையில், துரதிருஷ்டவசமாகச் சென்னையில் அசம்பாவிதமான நிலைமை ஏற்பட்டது. வெளியாட்களைத் துறைமுகத்தில் வேலை செய்யக் கொணர்ந்ததை எதிர்த்து ஸ்டிரைக்கர்கள் கற்களை வீசியதைத் தொடர்ந்து, போலீசார் தடியடி, கண்ணீர்ப் புகை, துப்பாக்கிப் பிரயோகங்கள் செய்ததன் விளைவாக 6 பேர் பலியாயினர். 200 பேர்களுக்குமேல் காயமடைந்தனர். துப்பாக்கிப் பிரயோகத்தை ஆட்சேபித்து, 18ந் தேதியன்று சென்னை நகரில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. கடைகளும், தொழிற்சாலைகளும் அன்று மூடப்பட்டிருந்தன. போலீஸ் துப்பாக்கிப் பிரயோகத்தைப்பற்றி விசாரணை நடத்தப் பிரதம மாகாண மாஜிஸ்டிரேட்டை சர்க்கார் நியமித்துள்ளனர். 24ந்தேதியன்று அவ்விசாரணை தொடங்கியது. கொச்சி துறைமுகத் தொழிலாளர்கள் 18—ந் தேதியன்று வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்று, வேலைக்குத் திரும்பினர். சென்னைத் துறைமுகத்திலும் நிலைமை மிகவும் அபிவிருத்தியடைந்து வருவதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

★

யார் அறிவார்?

கண் அயர்ந்துவிட்டேன்போலிருக்கிறது. அந்த மெட்டி ஓசை! என் உடலெல்லாம் வியர்த்துத் தெப்பமாகி விட்டது. அதே பரபரப்பான நடை, அதே தாளம், அதே சுருதி. என் கடைசிப் பெண் சாரதாதான் அது. ஆனால், ஒருகணம் அவள்தான்—என் மனைவிதான்—நடமாடுகிறாள் என்று நினைத்து விட்டேன். அன்று சிறு பிராயத்தில், உறக்கம் நீங்கியும் நீங்காமலும் இருக்கும் விடி வெள்ளி நேரத்திலே, அந்த மெட்டி ஓசை என் மனத்தில் என்ன பரபரப்பை உண்டாக்கியிராது! அதே புல்லரிப்பு, அதே மகிழ்ச்சி, அதே இன்ப மயமான உணர்ச்சி இன்று என்னிடம், இந்த எழுபது வயது முதிர்ச்சியில், தோன்றி விட்டதே! ஒரே விநாடிதான்—ஆயின் என்ன வலிமை! நினைவுகளின் சக்திதான் என்னே, ஆழமான தோழமையின் நெருக்கம்தான் என்னே!

என் மனைவி காமகோடி மறைந்து இன்று மூன்று வருடங்களாகி விட்டன. அவளை ஒரு நாளும் நான் பெயரிட்டு அழைத்தது கிடையாது. இல்லை, இல்லை; ஒரே ஒரு நாள் அழைத்திருக்கிறேன். அதுவும்...அதைச் சொல்லப் போனால் பெரிய கதையல்லவா?

காமகோடிக்கும் அவள் சிற்றப்பா பெண் விசாலாக்ஷிக்கும் ஒரே பந்தலில் கல்யாணம். விசாலாக்ஷியை என் அண்ணன் விச்வநாதனுக்குக் கொடுத்தார்கள். காமகோடியும் விசாலாக்ஷியும் இரட்டையர்போல் இருப்பார்கள் உருவத்தில். ஆனால், காமகோடி இரண்டு வயது சிறியவள். அவர்கள் இருவரும் நல்ல குணவதிகள், அடக்கமானவர்கள்; எங்கள் பெற்றோர்களின் இரு கண்களைப்போல் இருந்தனர். ஆனால், நடமாடும் சுபாவத்தில் அவர்களிடையே சிறிது சிறிது வித்தியாசம் இருந்தது. 'விசாலாக்ஷி நிதானமாக நடப்பாள், காமகோடி சரசர வென்று பம்பரமாகச் சுழலுவாள். இருவரும் பெரிய, கனமான, வண்டி மெட்டிகள், பத்துப் பன்னிரண்டு ரூபாய் எடையில் போட்டிருந்தார்கள். அவைகளின் ஓசையிலிருந்துதான் நாங்கள் அவர்கள் இருவரில் யார் வருகிறார்கள், யார் எங்கே இருக்கிறார்கள் என்பதை ஊகித்துக் கொள்வோம். அதுவே ஒரு வேடிக்கையாக இருந்தது எங்கள் வீட்டில்.

என் அண்ணன் விச்வநாதனுக்கு வீட்டில் தனிச் சலுகை இருந்தது. எங்கள் சிறிய தகப்பனார் வெளியூர் மாற்றப்பட்டுப் போனது முதல் அவனுக்குக் குடும்பத்தில் அவருடைய பதவி கிடைத்து விட்டது. அப்பாவுக்கு அடுத்தபடியாக விச்வநாதனுக்குத்தான் அதிக மரியாதை நடக்கும். அவன் வீட்டில் நுழையும்போதே ஓரளவு அதிகாரத் தோரணையாக வருவான். அவன் பேச்சிலும், நடவடிக்கைகளிலும் சுதந்திரம் தொனிக்கும். உள்ளே வந்து முற்றத்தில் கால் அலம்பும்போதே, 'டீ, விசாலம், காபி கொண்டு வா' என்று பணிப்பான். அவளும் அவன் கேட்கும் முன்பே தயாராக நிற்பாள். ஒரு நாளைக்கு நூறு தடவை 'விசாலம், விசாலம்' என்பான், இருநூறு தடவை 'டீ' போட்டு அழைப்பான். முதலிலெல்லாம் என் பெற்றோர்களும், மற்றும் வீட்டில் உள்ளவர்களும் சிறிது கேலியாக நகைத்து அநுபவிப்பார்கள். அதற்கெல்லாம் அவர்கள் இருவரும் கஷ்டப்பட்டுக்கொண்டதாகத் தெரியவில்லை. அவன் அவளை விரட்டியபடியே இருப்பான். அவளும் யார் முன்னிலையிலும் கணவனுக்குப் பணிவிடைகள் புரிவாள்.

இவர்கள் செய்கை என்னை நூதனமான முறையில் பாதித்துவிட்டது. பலர் முன்னிலையில் என் மனைவியைக், காணவோ, அவளுடன் பேசவோ, பழகவோ நான் அஞ்சினேன். தன் தமக்கையைப் பார்த்து ஒரு சமயம் இவள் தானாகவே எனக்குப் பணிவிடை புரிய வந்து விடுவளோ என்று அஞ்சினவனாய், நான் எப்பொழுதும் கடுமையான முகத்துடன் இருக்க ஆரம்பித்தேன்.

காமகோடியும் நானும் தனியாக இருந்த ஒரு சமயம், நான் அவளுடன் பிரியமாகப் பேசிக்கொண்டிருந்தேன். அவள் எங்கோ கவனமாக, நான் சொல்வதைக் கேட்டாளா இல்லையா என்றுகூடத் தெரிய விடாமல், அர்த்தமற்ற சிரிப்புடன் விளங்கினாள். இதுபோல இப்பால் அவள் பல தடவை இருப்பதை நான் கவனித்திருந்தது அப்பொழுது நினைவிற்கு வந்து விட்டது.

'நீ ஏன் முகவாட்டத்துடன் இருக்கிறாய்?' என்று பரிவுடன் விசாரித்தேன் நான்.

'அப்படி ஒன்றுமில்லையே?' என்று அவள் பதிலளித்தபோது, அவள் கண்டம் கரகரத்துவிட்டது.' அவள் கண்களில் நீர் லேசாகப் படர்ந்து விட்டது.

நான் பதறிப் போய் விட்டேன். 'ஏன், என்ன, காமு?' என்று அவளை நெருங்கிக் கேட்கலானேன்.

அவள் ஒரு விநாடி உடலைச் சிலிர்த்துக் கொண்



டாள். வியப்பு மேலிட, கண்களை அகல விரித்து, அவள் என்னை நோக்கியது இன்றுகூட என் நினைவில் பசுமையாக இருக்கிறது. அந்தப் பார்வை என்னை மிகவும் வேதனைக்குள்ளாக்கியது.

'ஏன், என்ன காமு, உனக்கு என்ன மனசில்? யாரேனும் ஏதேனும் சொன்னார்களா?' என்று மீண்டும் வினவினேன் நான்.

'என்னை யார் என்ன சொல்ல இருக்கிறது—யார் ஏன் சொல்லப் போகிறார்கள்?' என்றாள் அவள், நிதானமாக.

'பின்னே ஏன் இந்தக் கலக்கம்?'

அவள் பதில் பேசாமல் தலைகுனிந்து கொண்டிருந்தாள். அவள் கண்களிலிருந்து நீர்த் தாரை முத்துக் கோத்தது போல் இடைவிடாமல் வழிந்து கீழே சிந்தியது.

நான் அவள் மோவாயை நிமிர்த்தி நோக்கினேன். 'இதோ பார், உனக்கு ஏதேனும் மனக் கஷ்டம் இருந்தால், என்னிடம் சொல்லக்கூடாதா?' என்று நான் மேலும் மேலும் வற்புறுத்திக் கேட்கவும் அவள் பதில் சொல்லலானாள்:

'என்னைக் கண்டால் உங்களுக்கு அவமானமாக இருக்கிறது; நான் என்ன செய்வேன்?' என்று கூறிவிட்டு, அவள் விக்கி விக்கி அழ ஆரம்பித்துவிட்டாள்.

'இது என்ன பயித்தியம்? உனக்கென்ன குறைவு? யார் சொன்னார்கள் எனக்கு அவமானம் என்று?' என்று நான் கேட்டேன்.

'விசாலத்தைப்போலவா நான் இருக்கிறேன்? கணவன் கண்ணில் பார்வையாக இருந்தால்தானே உலகத்தார் கண்களிலும் மதிப்பாக இருக்க முடியும்?'

எனக்கு அவள் இந்த விதமாகக் குறைபட்டுக்கொள்வது கோபத்தை மூட்டியது.

'விசாலத்துக்குக் கிடைப்பது உனக்கு என்ன கிடைக்காமல் போய்விட்டது?' என்று பல்லைக் கடித்துக்கொண்டு நான் கேட்டேன்.

'கணவனின் அன்பு' என்று ரத்தினச் சுருக்கமாகப் பதில் அளித்துவிட்டு, அவள் எழுந்தே போய்விட்டாள்.

நானும் அவளை நிறுத்தவில்லை. அப்பொழுது நாங்கள் இருவரும் இருந்த மனநிலையில், வார்த்தையை வளரவிட்டால் ஒன்றும் உருப்படியாக வெளி வராது. நான் சினத்தில் சீறியிருப்பேன்; அவள் துக்கத்தில் துடித்திருப்பாள். மனத்தாங்கலில்தான் முடிவடைந்திருக்கும் எங்கள் பேச்சு.

சில நாட்கள் கழித்து ஓர் இரவு அவள் உள்ள ஏக்கம் மெதுவாக வெளிப்பட்டது. 'கல்யாணத்திலேயே எல்லோரும் சொன்னார்கள்—எனக்கு ஒன்றும் புரியாத வயது அப்பொழுது. இப்பொழுதல்லவா தெரிகிறது?' என்றாள் காமகோடி அமைதியாக.

'என்ன சொன்னார்கள்?' என்று நானும் சாந்தமாகக் கேட்டேன்.

'பெரிய மாப்பிள்ளை நல்ல சரசி. சின்னவர் ஒரு சிடுமூஞ்சிபோலும். வயசுக்கேற்ற ஆசையோ, பாசமோ, வேடிக்கையோ இல்லையே!' என்று என் வீட்டில் எப்பொழுது பார்த்தாலும் சொல்கிறார்கள்.'

'அதற்கு என்ன செய்வது? ஒரே வயிற்றில் பிறந்தாலும் அவரவர் பண்புகள் அவரவர்க்கு. அதை மாற்ற முடியுமா?' என்றேன் நான் கசப்புடன். வேட்டகத்தினர் எதற்காக என்னைப்பற்றி இழிவாகப் பேச வேண்டும் என்று எனக்கு அடக்க முடியாத கோபம் வந்தது.

'என்ன பண்போ! இயற்கைக்கு விரோதமாக ஒரு பண்பா?' என்று கேட்கும்போதே, அவள் உள்ளம் வெடித்துக் கண்ணீர் அருவியாகப் பெருகியது.

அவளுடைய பூமுகம் கசங்குவதைக் காண எனக்கு மனமில்லை. ஆகையால், கனிவோடு, அவளைச் சமாதானமூட்டினேன். அவள் தன் உள்ளக் குமுறலை மறைக்காமல் மெல்ல வெளியிடலானாள்.

'உங்கள் அண்ணாவைப் பாருங்கள்! வீட்டுக்கு வரும்போதே 'விசாலம்!' என்று அவர் அழைப்பதே ஓர் அழகு. கூட அழைத்துக்கொண்டு கோவிலுக்குப் போவதும், ஊர்க் கதையெல்லாம் கிணற்றங்கரையில் சொல்வதும்...'

'ஆமாம்! அவன் பின்னால் பெரியவர்கள் சிரிக்கிறார்கள்' என்றேன் நான்.

'ஒன்றுமில்லை. பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். அவர் எங்கள் வீட்டுக்கு வந்தாலும் மாப்பிள்ளை ஹோதாவுடன் என் அப்பா, பெரியப்பாவுடன் சமமாகப் பேசுவார். நீங்களோ பூனைக் குட்டிபோல் பதுங்கிப் பதுங்கி நிற்கிறீர்கள். ஆனால், அதற்காவது நான் அங்கே இருக்கும் போது ஒரு தடவை வந்தது உண்டா?'

"இந்தாப்பா! போன தடவை நீ க்ராப் செய்ததற்கு மேற்கொண்டு நாலணா இனும் கொடுக்கிறேன்."

"அது என்னங்க! எப்பவும் ஒரே மாதிரிதானே; நான் வெட்டி விடறேன்!"

"அதற்கில்லையப்பா! சென்ற தடவை கிராப்வெட்டிக்கொண்டு நான் சென்றபொழுது எதிரே வந்த கடன்காரனால் என்னைக் கண்டு பிடிக்க முடியவில்லை!"

'நான் எதற்கு வரவேண்டும், காமு? அசடுபோல் பேசுகிறாயே? உன் அக்காவுடன் நீ போகிறாய். திரும்பி வரும் போது அநேகமாக விச்வநாதன் வருகிறானே?'

'உங்களுக்கு எங்கே புரியப் போகிறது ஒரு பெண்ணின் மனம்!' என்று பெருமூச்சுடன் பேசி முடித்துவிட்டு, அவள் எழுந்து போய்விட்டாள்.

அது நடந்து வெகு நாட்களாகி விட்டன. என்னுடைய நடவடிக்கையில் யாதொரு மாறுதலும் ஏற்படவில்லை. என் மனசில்மட்டும் அவள் சொற்கள் நிரந்தரமாக இடம் பெற்று உளைத்து வந்தன.

இப்படியே இருக்கையில், ஒரு சமயம் கிராமத்தில் முக்கியமான ஒரு கல்யாணத்தை முன்னிட்டு எல்லோரும் போய் விட்டிருந்தனர். காமகோடி, நான், என் இரு சிறு தங்கைகள்தாம் வீட்டில் இருந்தோம். ஒரு நாள் மாலை நேரத்தில் தங்கைகள் இருவரும் என்னிடம் சொல்லிக்கொண்டு கோவிலுக்குக் கிளம்பினர். 'உங்கள் மதனியை அழைத்துப் போகவில்லையா, துணையில்லாமல் போகிறீர்களே?' என்று நான் கேட்டேன். அவர்கள் இருவரும் ஒரு சிரிப்புச் சிரித்துவிட்டு, பத்திரமாகச் சீக்கிரமே திரும்பிவிடுவதாகக் கூறிவிட்டு ஓடிவிட்டனர். அவர்களுக்கு விளையாடச் சுதந்திரம் வேண்டும்போலும். அவர்கள் தெருக்கோடி வரை போனதும், நான் எழுந்து உள்ளே வந்தேன். என் வழக்கமான மாலைத் தொழுகை முடிந்தவுடனே ஊஞ்சலில் போய் அமர்ந்தேன். உரக்க ஒரு குரல் எடுத்து, 'காமு, குடிக்கத் தண்ணீர் கொண்டு வா' என்றேன். பதில் ஒன்றும் வரவில்லையாதலால், மீண்டும் ஒருமுறை இன்னும் சற்றுப் பலமாகவே 'காமு, காமகோடி, காமூ!' என்று அழைத்தேன்.

காமகோடி கொல்லைப்புறத்திலிருந்து வாளித் தண்ணீருடன் காட்சியளித்தாள். வாளியை 'டக்'கென்று முற்றத்து ஓரத்தில் வைத்துவிட்டு, கையைத் தலைப்பில் துடைத்தபடியே என்னை நோக்கி வந்தாள். அவள் முகத்தில் வியப்பு மேலிட்டது. 'எதற்கு அழைத்தீர்கள்?' என்று பரபரப்புடன் கேட்டாள்.

'குடிக்கத் தண்ணீர் வேண்டும்' என்றேன் நான்.

அவள் வெண்கலச் செம்பிலும் டம்ளரிலுமாகப் பானையிலிருந்து குளிர்ந்த நீருடன் வந்து, ஊற்றிக் கொடுத்துக் கொண்டே, தலையை நிமிர்த்தாமல், தரையைப் பார்த்துப் பேசினாள். 'என்ன திடீரென்று இன்றைக்கு?'

'என்ன, என்ன இன்றைக்குப் புதுமை?'

'பெயரிட்டுக் கூப்பிட்ட மாதிரி இருந்ததே?' என்று அவள் கேட்கும்போது, அவளுக்கு நாணம் மிகுந்து விட்டது.

'என்றைக்காவது ஒரு நாள் ஆரம்பிக்க வேண்டியதுதானே?' என்றேன் நான்.

'ஒன்றும் வேண்டாம். குழந்தைகள் வீட்டில் இல்லாதது நல்லதாகப் போயிற்று. அண்ணாவுக்கும், மதனிக்கும் திடீரென்று என்ன வந்துவிட்டதோ என்று நினைக்கமாட்டார்களா?' என்று என்னைக் கண்டிக்க ஆரம்பித்துவிட்டாள் அவள்!

நான் ஒன்றும் புரியாமல் அவளையே பார்த்தேன்.

'நீங்கள் ஒன்றும் இனிமேல் என்னை உரக்கப் பெயரிட்டு எல்லோர் முன்னிலையிலும் அழைக்க வேண்டாம். தனிமையில் அழகாக, மெதுவாக 'காமு' என்று அழைப்பதற்கு ஈடு உண்டா! சினத்திலும், சலிப்பிலும், அலுப்பிலும், களைப்பிலும் என் பெயரை அழைப்பதைக் காட்டிலும், நீங்கள் என்னைப் பிரத்தியேகமாகக் கூப்பிடுவதையே நான் விரும்புகிறேன்' என்றாள் காமகோடி.

பிறகு,—ஏன், இப்பொழுது யோசிக்கும்போதுகூட,—அவள் கூற்று எவ்வளவு உண்மை என்பதை உணருகிறேன். அருமையாக, அன்போடு அழைக்க வேண்டிய பெயரை, ஏன் கண்டபடியும் உபயோகிக்க வேண்டும் என்று தோன்றிவிட்டது எனக்கும்.

எங்கள் வாழ்க்கைச் சக்கரம் தன் போக்கில் ஓடிக்கொண்டிருந்தது. என் அண்ணன் விச்வநாதனுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதை எங்கள் வீட்டில் ஒரு திருவிழாபோல் கொண்டாடினோம். எப்பொழுதும், எல்லோரும் குழந்தையைப்பற்றியே பேசுவோம், எண்ணுவோம். அதற்கு மறு வருஷம் காமகோடி கருவுற்றாள். அப்பொழுதும் ஒரே குதூகலம் எங்கள் இல்லத்தில். என் தாயாரும், பெரிய தங்கைகளும், விசாலாக்ஷியும் காமகோடியைப் பூப்போல் காத்தனர்; தங்கம்போல் தாங்கினார்கள்.

ஆனால், அவள் முகம் சூலிக்கு இருக்க வேண்டிய தெம்புடன் இராமல், ஏனோ வாடி வந்தது. அது ஒரு பக்கம் எல்லோரையும் கவலைப்படச் செய்தது. மேலும் அவளுக்கு மிகவும் பலவீனம்போலும். ஓரிரண்டு நாள் மயக்கமுற்று விழுந்து விட்டாள். கிரமமாக வளைகாப்பு, சீமந்தம் எல்லாம் முடிந்து, அவள் பிறந்தகம் சென்றாள். அவள் பெற்றுப் பிழைக்கும் வரை எங்களுக்கு வாயில், பல்லில் ஈரமில்லை.

புண்ணியாஹவசனத்தன்று நாங்கள் எல்லோரும் போயிருந்தோம். குழந்தை ஆணாகப் பிறந்தது வேறு தனி மதிப்பை அளித்துக்கொண்டது. அந்தப் பத்து நாட்கள் குழந்தையின் அழகைப்பற்றி எவ்வளவோ இவர்கள் கூறிக்கொண்டார்கள்.

ஆனால், என் கவனமெல்லாம் காமகோடி மீதே இருந்தது. அவள் மரச் சிலைபோல இருந்தாள். துரும்பாக இளைத்துக் கிடந்த அவள் கோலம், என்னை வெகுவாக வாட்டியது. ஆனால், அவளைத் தனிமையில் கண்டு பேச எனக்கு அவகாசமே கிட்டவில்லை. நான் என் மனக் கவலையுடன் ஊருக்குத் திரும்பி விட்டேன். ஒரே ஒரு சமயம் மட்டும் என் தாயிடம் ரகசியமாகக் கூறிக்கொண்டேன். அதன் பயனாகக் காமகோடியையும், குழந்தையையும் சீக்கிரம் அழைத்து வர முயன்றார்கள். ஆயினும் அவள் இன்னும் உடல் தேறவில்லை என்று அவள் பிறந்தகத்தினர் அவளை அனுப்ப இசையவில்லை. என் தொணதொணப்புப் பொறுக்க முடியாமல் என் தாயார் இரண்டு முறை போய்ப் பார்த்துவிட்டு வந்தாள்.

குழந்தை வீடு வந்த அன்றைக்கு, ஒரே கொண்டாட்டம்தான். அவரவர்களும் போட்டியிட்டுத் தூக்கிக் கொஞ்சுவதும், பிறருக்கு எடுத்துக் காட்டுவதுமாக வீடு கோலாகலப்பட்டது. ஒரு வாரம், பத்து நாட்கள் ஆன பிறகுதான், நான் குழந்தையை ஆற அமர எடுத்துப் பார்க்க இயன்றது.

காமகோடி முன்போல் இல்லை. அவளிடம் அதே வேகமான நடை இருந்தது. ஆனால், அந்த மெட்டி ஓசையில் பழைய துரிதமில்லை. சோர்வு கலந்த அந்த ஒலி, என் உள்ளத்தில் என்ன பாடு படுத்தியது என்பதை யார் அறிவார்கள்? காமகோடியே அறிந்துகொள்ளவில்லை என்பது பிறகு புரிந்தது.

'இயற்கையை ஒட்டியிராத உங்கள் தன்மை உங்கள் போதாத காலமா, என்னுடைய கொடுப்பினை விசேஷமா? குழந்தையுடன் வரக்கூடாது என்றுதான் நான் கடவுளை இறைஞ்சினேன். கருணை கிடைக்கவில்லை' என்று நொந்துகொண்டாள் அவள்.

'காமு, என் இதயம் உனக்கு இத்தனை நாட்கள் புரியவில்லை என்றால், இனி எங்கே புலப்படப் போகிறது? அவ்வளவுதான் நம் இருவர் கொடுப்பினையும்!' என்று நானும் அலுத்துக்கொண்டேன்.

அதன் பிறகு எனக்கும் உற்சாகம் குறைய ஆரம்பித்துவிட்டது. ஊணும், உறக்கமும்கூட எனக்குப் பாரமாக இருந்தன. தீராக் குறையாகப் பேசினேன். சிரித்தேன். என் உள்ளத்திலே கைப்புத் தோன்றவில்லை—ஒருவித ஏமாற்றம்தான் மிஞ்சியது. உலகமே ருசியற்றுச் சப்பென்றிருந்தது. காமகோடியின் முகத்திலே மீண்டும் புன்சிரிப்புக் காண அவா மட்டும் ஒரு பக்கம் என் மனத்தில் விழிப்புடன் இருந்தது. ஆனால், அதை எப்படித் தோன்றச் செய்வது என்பதுதான் எனக்குப் புரியவில்லை.

காமகோடி எனக்குச் செய்ய வேண்டிய சிச்ரூஷைகளை வழக்கம்போல் குறைவின்றிச் செய்து வந்தாள். ஆயின், நாங்கள் இருவரும் மனம் விட்டுப் பேசி எக்காலம் ஆகிவிட்டதோ! இப்படி ஒரு நிலை சில நாட்கள் இருந்தன. பெரிய குடும்பத்தின் நடுவில் இருந்தமையால், பிறருக்கு எங்கள் மன வேறுபாடு தெரியக் கூடாது என்ற காரணத்தால், நாங்கள் இருவரும் ஒப்புக்காவது சிரித்தோம், மேலுக்காவது ஒற்றுமையாக இருந்தோம். தனிக் குடித்தனமாக இருந்திருந்தால், அந்தப் பயங்கர நிலை எங்களை என்றோ பிரித்து விட்டிருக்கும்.

ஒரு நாள் நான் வெளியூர் சென்றுவிட்டு வருகையில், அடை மழையில் அகப்பட்டுக்கொண்டு நன்றாக நனைந்து விட்டேன். என் அம்மாவின் மிளகு கஷாயத்திற்கெல்லாம் கேட்காமல் அன்றிரவே கடுமையான காய்ச்சல் வந்துவிட்டது. இரண்டு நாட்கள் நினைவின்றி மயங்கிக் கிடந்தேன்.

என்னைச் சுற்றிப் பெற்றோரும், அண்ணனும், தங்கைகளும், மதனியும் வருவதும் இருப்பதும் தெரிந்தும் தெரியாமலும் இருந்தன. காமகோடியின் அண்மைக்காக ஏங்கிற்று என் உள்ளம். மூன்றாம் நாள் பிற்பகல் ஜுரம்விட்டு, அயர்ந்து உறங்கிக்கொண்டிருந்தேன். என் நெற்றியில் இதமான கை ஒன்று படுவது உணர்ந்து, நான் விழிப்புற்றேன். என்னை அறியாமலே என் கை அந்தக் கரத்தைத் தடவி அழுத்திக்கொண்டது. 'காமு!' என்று மெதுவாக அழைத்தது என் வாய்.

அதிர்ச்சியுண்டவள்போல, குலுங்கக் குலுங்க அழுதுகொண்டே, என் மார்பகத்தில் முகத்தைப் புதைத்துக்கொண்டாள் அவள்.

'அசடே, அசடே, அச்சானியம்போல இப்படித்தான் அழுவார்களா? எழுந்திரு, பார்ப்போம்' என்றேன் நான்.

எத்தனை நாட்கள் பேசாமல் திண்டாடி உள்ளம் உளைந்தோமோ, ஏக்கமுற்றோமோ—ஒன்றும் இப்பொழுது நினைவில்லை. இருவரும் முதல் சந்திப்புப்போல இன்புற்றோம். இரண்டு நாட்களுக்கெல்லாம் நான் உடல் நலம் அடைந்துவிட்டேன்.

நாங்கள் பழைய ஆனந்தத் தம்பதிகளாகி விட்டோம். எங்கள் மகிழ்ச்சிக்குக் குழந்தை மேலும் இன்பம் அளித்தான்.

அன்று பூர்ணிமை நிலவு. புதியதாக மாடியில் ஒரு தாழ்வாரம் கட்டியிருந்தனர். அங்கே அவள் ஒரு பக்கமாக அமர்ந்து, குழந்தையை மடியில் வைத்துத் தட்டித் தூங்க வைத்துக்கொண்டிருந்தாள். நானும் அங்கே சென்று அருகில் அமர்ந்துகொண்டேன். நிலவொளியில் காமகோடி என்னைக் கண்டு முறுவலித்தாள். நானும் பதிலுக்குப் புன்சிரிப்புப் பூத்தேனே தவிர, பேசவில்லை. அந்த நிசப்தமான நிலவின் அழகு, பட்டுச் சால்வையைப்போல உலகையே

6 மாதத்தில் மோட்டார் மெகானிசமும் டிரைவிங்கும் கற்றுத் தரப்படும்
குறைந்த செலவில் ஹாஸ்டல் வசதி உண்டு.

அமராவதி மோட்டார் மெகானிகல் டிரெயினிங் ஸ்கூல் அரியலூர். S.Ry.
மானேஜர்: N. P. ராமச்சந்திரன்,

அணைத்தது. ஒளி விதானத்திலே ஒலி பொத்தல் உண்டாக்கி விடுமோ என்று ஐயுறும்படியான எழில் இரவு அன்று. நாங்கள் இருந்த இடத்திலிருந்து என் அண்ணனின் அறை தெரிந்தது. விசாலாட்சி வெற்றிலை போட்டுக்கொண்டிருந்தாள். அவர்கள் இரண்டாவது குழந்தை நடராஜன் விச்வநாதனின் மடியில் கொட்டையாக விழித்துக்கொண்டு தகப்பனைப் பார்த்தது. என் மதனியும் என்னவோ சொல்லிவிட்டுச் சிரித்தாள் விச்வநாதனும் குழந்தையை இரு கைகளாலும் தூக்கிப் பிடித்தபடி என்னவோ தலை ஆட்டி ஆட்டிச் சொன்னான். அந்தக் காட்சி என்னை வெகுவாகக் கவர்ந்தது. நான் காமகோடியிடம் ஏதோ சொல்ல வாயெடுத்தேன். அவள் சட்டென்று தன் கரத்தினால் என் வாயைப் பொத்தி விட்டுத் தன் திருஷ்டியைத் தோட்டத்துப் பக்கம் திருப்பினாள். வெண்ணிலவு உருகி, தென்னை ஓலைகளின் நுனி வழியாகச் சொட்டுவதைக் கண்டு, நாங்களிருவரும் மெய்ம்மறந்திருந்தோம்.

அச்சாந்தி நிலையிலும் நான் கேட்க நினைத்த கேள்வி மட்டும் என் மனத்துள்ளே ரீங்காரமிட்டுக் கிடந்தது. மறு நாள் அதை அவளிடம் வெளியிட்டேன். 'காமு, உன் மனம் இப்பொழுதுதான் புரிகிறது எனக்கு. நான் இயற்கைக்கு ஒட்டினவன் இல்லைதான். மரியாதை, சங்கோஜம் என்றெல்லாம் என்னவோ என்னைப் பிசாசுபோல் பிடித்து விட்டன. என்னை மன்னிப்பாயா?...'

நான் இன்னும் தொடர்வதற்குள், 'அழகாகத்தான் இருக்கிறது உங்கள் பேச்சு; பேசாமலிருங்கள்!' என்று அவள் என்னை அடக்கி விட்டாள்.

ஆனால், ஒரேபடியில் கல்யாணம் செய்து கொண்ட தமக்கை விசாலாட்சியின் வாழ்க்கையைத் தன்னுடையதுடன் ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்க முடியவில்லை அவளால். ஏன், வரவர எனக்குக் கூடச் சிறிது சிறிது அதே குணம் வந்துவிட்டது. எங்கள் இருவருக்குமிடையே நெருங்கிய அன்பிருந்தபடியால், இந்த ஏக்கத்தை ஓரளவு மறக்க முடிந்ததே ஒழிய, சமயம் வரும்போது எதிர்பார்த்தலும் ஏமாறுவதும் வழக்கமாகி விட்டன.

என் அண்ணனுக்கு ஆறு குழந்தைகள், எனக்கு நான்கு. எங்கள் முதல் பெண்ணின் விவாகத்தின்போதுதான் கடைசியாகக் காமகோடி குறைபட்டுக் கொண்டது என்று நினைக்கிறேன் விசாலாட்சியை நிமிஷத்திற்கு நிமிஷம் விச்வநாதன் அழைத்து விசாரித்தது போல நான் காமகோடியுடன் கலந்து ஆலோசிக்கவில்லைதான்.

ஆனால், வயது முதிர முதிர எல்லாம் மறந்து விட்டன. எங்கள் வாழ்க்கை ஆறு எப்பொழுதோ ஒருமுறை கொப்பளித்துச் சுழலமிடும். ஆனால், வெகுவாக அமைதியாகப் பாய்ந்தது, சென்றது. இதற்காக என் சுபாவமும் அதிக மாறுதலடைந்ததாகத் தெரியவில்லை. இருவர் குணமும் ஒன்றுக்கொன்று பழக்கமாகி

''என்ன ஸார்? உங்க வீட்டு 'பம்பை' அடிக்கிறபோது 'ஐயய்யே, ஐயய்யோ''ன்னு அழறமாதிரி சத்தம் கேட்குதே!''
''அதுவா! வீட்டுக்காரன் இந்த ''பம்பு'' போட்டுக் கொடுக்கும்போது மூக்காலே அழுதுண்டே போட்டுக் கொடுத்தான். அதனாலதான் போலிருக்கு!''

விட்டது. பழக்கத்தினால் பிடித்தும் விட்டதுபோலும்.

அந்தத் தோழமை மூன்று வருடங்களுக்குமுன் அறுந்துவிட்டது. அவள் குதித்துப் பாடிக்கொண்டு, துரித காலத்தில் மெட்டியுடன், மஞ்சள் குங்குமத்துடன், புஷ்பத்துடன் மங்களகரமாகப் போய் விட்டாள். அதுவே நான் விரும்புவதும். நான் இறந்து அவள் துடிக்க நான் விரும்பவே மாட்டேன்.

பழைய நினைவுகளைத் துடைத்து விட்டு எழுந்தேன். உள்ளே கூடத்தில் என் பிள்ளைகள் இருவரும் ஊஞ்சலில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் மனைவிமார் சுவர் ஓரமாக நின்றபடி ஆலோசனை கூறிக்கொண்டிருந்தனர். என் பெண்கள் இருவரும் முற்றத்தில் என்னவோ செய்துகொண்டிருந்தனர். என்னைக் கண்டதும், 'அப்பா வருகிறார்!' என்ற எச்சரிக்கையுடன் கலையத் தொடங்கிற்று அவர்களது சிறு கூட்டம். நான் முற்றத்தில் கால் வைப்பதற்குள் என் கடைக்குட்டி, தன் அன்னையின் மெட்டி ஓசையுடன் நடந்து வந்து, செம்பில் தண்ணீர் எடுத்துக் கொடுத்தாள். நான் பின்பக்கம் போய்விட்டு வந்து கூடத்து ஊஞ்சலில் அமர்ந்தேன். என் பிள்ளைகள் இருவரும் எதிரே திண்ணையில் இருந்தார்கள்.

'அப்பா, நம் வத்சலா, கௌசல்யா கல்யாணத்தை இங்கேயே ஒரே பந்தலில் நடத்திவிடலாம், அப்பா' என்றான் சின்னவன்.

'ஆமாம் அப்பா! இரண்டும் ஒன்றாக வளர்ந்த குழந்தைகள். ஒரே பந்தலில் அழகாக மணந்து கொள்ளட்டுமே! மேலும் செலவும் கூடிவரும்' என்றான் பெரியவன்.

'நம் குடும்பத்திலும் அந்த மாதிரி இரட்டைக் கல்யாணம் வளமாகவே இருந்திருக்கிறது' என்று பெரிய மருமகள் சமையலறையிலிருந்து குரல் கொடுத்தாள்.

எங்கள் திருமணத்தைத்தான் அவள் குறிப்பிட்டிருக்கிறாள் என்றமட்டில் எனக்குத் தெரியாமல் இல்லை. நான் சற்று நேரம் யோசித்தேன். பிறகு, 'வேண்டாமடா! தனித் தனியாகவே நடக்கட்டும். செலவு ஆனால் பாதகமில்லை. இரண்டு சம்பந்தி வீட்டினரையும் கவனிக்க முடியாமல் குழப்பமாகிவிடும். மேலும், எனக்கு நின்று நிதானித்து ஒரு படியைக் கூடப் பார்க்க முடியாது. குழந்தைகள் மணையிலிருப்பதைக் கண்ணாரக் காண ஆசையாக இருக்கிறது. எனக்காகவே தனித் தனியாகச் செய்யுங்கள்' என்று தீர்மானமாகக் கூறிவிட்டு, நான் வெளியே வந்து விட்டேன். ஒரே பந்தலில் மணந்து கொண்டு காமகோடி பட்ட பாடு போதாதா? தனித் தனியே நடந்தால் ஒப்பிட்டுப் பார்க்கும் இயல்பு அவ்வளவாக இராது. அவரவர்கள் வாழ்க்கைப்படித் திருப்தியாக இருந்து விடுவார்கள் என்றே நம்பினேன் நான்.

நான் வெளிப்பக்கம் வந்ததுமே என் இரு பக்கத்திலும் என் பேத்திகள் வத்சலாவும், கௌசல்யாவும் வந்து அமர்ந்தனர். 'தாத்தா, உங்களுக்கு மிக்க நன்றி. ஒரே பந்தலில் மணம் செய்துகொண்டால், நான் எப்படி அவள் கல்யாணத்தை அனுபவிக்க முடியும்?' என்று ஏக காலத்தில் இருவரும் மற்றவளைச் சுட்டிக் காட்டிப் பேசினார்கள்.

'அதற்குத்தானடி என்மீது பழி போட்டுக்கொண்டு ஏற்பாடு செய்தேன்' என்றேன் நான் ஒரே அடியாக. இரு குழந்தைகளும் என் இரு கைகளை இறுகத் தழுவிக்கொண்டுவிட்டு ஓடின. நான் மீண்டும் வாசல் திண்ணையில் சாய்ந்தேன். உள்ளே அண்ணனும் தம்பியும் பேசுவது கேட்டது. ஆவல் மேலீட்டினால் உற்றுக் கவனித்தேன்.

'இந்தக் கிழவர் ஒருவர்! நல்ல காரியத்தை நடக்க விடமாட்டார். அவரும் பெரியப்பாவும் ஒரே பந்தலில் மணந்து கொண்டதில் என்ன குறைவு?' என்றான் சின்னவன்.

'பாரேன், சுயநலமாக, தன் ஆசைக்காக, ஆகி வந்த வழக்கத்தை விடுகிறாரே?' என்றான் பெரியவன்.

கிடக்கிறான்—இவன் என்ன அறிவான்! என் செல்வங்கள் கண் கலங்க, மனம் நலங்க நான் விடுவேனா? ஒரு காமகோடியின் கண்ணீர் போதாதா? ஒரு காலும் இடம் கொடேன். அவர்கள் மீண்டும் பேசினார்கள். கவனித்தேன்.

'அதுதானடா, அம்மா, பாவம், பொறுமையுடன் காலம் கழித்தாள். அவளுக்கும் அப்பாவுக்கும் மன ஒற்றுமையே கிடையாது!'

இவன் கண்டானோ? எங்கள் மன ஒற்றுமையும் உள்ள நேசமும் யார் அறிவார்!

என் எண்ணத்தை ஆமோதிப்பது போல், துரித காலத்தில் மெட்டி ஓசை கேட்கிறது. குட்டி— சாரதா,— எழுந்து செல்கிறாள்போலும். என் மனம்வரை அது காமகோடிதான்.

தீமையிலும் சில சமயம் நன்மை பிறக்குமென்பார்கள். அதைப்போல இலங்கையில் சமீபத்தில் ஏற்பட்ட வகுப்புக் கலவரங்களின்மூலம் தற்செயலாகச் சில நன்மைகளும் ஏற்பட இருக்கின்றன. இலங்கையில் உள்நாட்டு விமானப் போக்குவரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பது அரசாங்கத்தின் நீண்ட காலத்திய ஏற்பாடு. கொழும்பிலிருந்து வடக்கு மாகாணத்திலுள்ள யாழ்ப்பாணத்துக்கும் கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாரைக்கும் மட்டுமே இப்பொழுது விமானப் போக்குவரத்து நடந்து வருகிறது. வகுப்புக் கலகங்கள் ஏற்பட்டு, துரிதப் போக்குவரத்து நடத்தும் அவசியத்தை உணர்ந்த பிறகுதான், நாட்டில் புதிய பல விமான நிலையங்களை ஏற்படுத்துவதென்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. கிழக்கு மாகாணத்தின் முக்கிய நகரமும் தமிழர் பிரதேசமுமான மட்டக்களப்பு என்னுமிடத்தில் விமான நிலையம் அமைக்க உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மலைப் பகுதி சுகவாசஸ்தலமான நுவரெலியாவில் விமான நிலையம் அமைப்பதற்குச் சர்வே நடத்துமாறு பிரதம மந்திரி உத்தரவிட்டிருக்கிறார்.

ஃ ஃ ஃ

இலங்கையெங்கும் வகுப்புக் கலவரங்கள் ஓய்ந்து அமைதி நிலவும் சமயத்தில், சில விஷமிகள் ஒரு புது மாதிரியான இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். கையெழுத்துப் போடாமல் டைப் அடித்தும், ஸ்டென்ஸிலில் செய்தும் அனாமதேயப் பயமுறுத்தல் கடிதங்கள் தபாலில் அநேகருக்குக் கிடைத்துக்கொண்டிருக்கின்றன. இந்த விஷமக் கடிதங்களின் இலட்சியம் பொது ஜனங்களிடையில் பீதி மூட்டிக் கலவரப்படுத்துவதே தவிர, அவற்றில் சிறிதும் உண்மையில்லை என்று அரசாங்க அதிகாரி ஒருவர் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். இவ்வித அனாமதேயக் கடிதங்கள் அனுப்புவதும், அவற்றில் அடங்கிய பொய்களைப் பலர் அறிய வெளியிடுவதும் தண்டிக்கப்படக்கூடிய குற்றமாகுமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கை கலவரமடைந்தவர்களுக்குச் சற்று ஆறுதல் அளிப்பதாக உள்ளது.

ஃ ஃ ஃ

கொழும்புவிலிருந்த அகதி முகாம்கள் எல்லாம் காலியாக்கப்பட்டு, அவற்றிலிருந்தவர்கள் சொந்த ஊர்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுவிட்டார்கள். அரசாங்க இலாகாக்களில் வேலை பார்த்த பல தமிழ் அதிகாரிகளும் குமாஸ்தாக்களும் யாழ்ப்பாணத்துக்குப் போய்விட்டபடியினால், இப்பொழுது அவர்களைத் திரும்ப அழைக்கத் தீவிரமான முயற்சிகள் நடக்கின்றன. முன்பெல்லாம் அரசாங்க அதிகாரிகளுக்கு, அவர்கள் கடமையிலிருக்கும்பொழுது காயமடைந்தால் மட்டுமே நஷ்டஈடு வழங்கப்படுவது வழக்கம். இந்த விதியை இப்பொழுது மாற்றியமைத்திருக்கிறார்கள். வேலைக்கு வரும்பொழுதோ அல்லது வேலையிலிருந்து வீட்டுக்குத் திரும்பும் பொழுதோ காயம் ஏற்பட்டால்கூட நஷ்டஈடு வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. கொழும்பின் சுற்றுப் புறங்களில் பலமான ராணுவக் காவல் ஏற்படுத்தி, அந்த இடங்களிலிருந்து வெளியேறிய தமிழர்களைத் திரும்புமாறும் அரசாங்கம் கேட்டுக்கொண்டிருக்கிறது. தமிழர்கள் பிரதேசமான வட மாகாணத்தில் பதவியா என்ற குடியேற்றத் திட்டத்திலிருந்து கொழும்புக்கு வெளியேறி வந்த சிங்களவர்களில் பலரும் இப்பொழுது பழைய இடங்களுக்குத் திரும்பிவிட்டதாகக் கூறப்படுகிறது. இதைப் பின்பற்றி யாழ்ப்பாணத்துக்குச் சென்ற தமிழர்களும் கொழும்புக்குத் திரும்புவார்களென்று அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

இந்தியர்கள் சம்பந்தப்பட்ட மட்டில், அதிகத் தொகையினர் இந்தியாவுக்குத் திரும்புவதாகத் தெரியவில்லை. திரும்பிய சிலரும் திரும்பி வரும் எண்ணத்துடனேயே சென்றிருப்பதாகக் கூறப்படுகிறது. காரணம் அவர்களுக்கு இலங்கையில் பல இடங்களிலும் தொழிலும் நிலையும் இருப்பதேயாகும். சென்ற சில தினங்களாக இலங்கை—இந்திய ரயிலில் தாங்க முடியாத கூட்டம் இருந்துவருகிறது. இரண்டாவது மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளில் பெரும்பாலோர் நின்றுகொண்டுதான் பிரயாணம் செய்ய வேண்டியதாயுள்ளது. இதற்குப் பல காரணங்களுண்டு. இந்தியாவில் கல்வி பயிலும் நூற்றுக்கணக்கான இலங்கை மாணவர்கள் இந்தியக் கல்லூரிகள் திறந்துவிட்டபடியினால், ஏககாலத்தில் கூட்டமாகப் பிரயாணம் செய்கிறார்கள். விமானப் பிரயாணத்தில் செலாவணிக் கட்டுப்பாடு இலாகா விதித்துள்ள சில கட்டுப்பாடுகளும் ரயிலில் நெருக்கடி அதிகமிருக்க ஒரு முக்கியக் காரணமாகும். இது தவிர, முன்போல இந்தியப் பிரயாணிகளுக்கென்று தனி ரயில் வண்டி இல்லாமல் யாழ்ப்பாணம் போகிறவர்களும் இதில் சேர்ந்து பிரயாணம் செய்கிறார்கள். ஆகையால், ரயில் வண்டியில் ஜன நெருக்கடி அதிகமாயிருப்பதை வைத்துக்கொண்டு, ஏராளமான இந்தியர்கள் இந்தியாவுக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாக முடிவு கட்ட முடியாது.

இலங்கை இந்தியத் தலைவராகிய ஸ்ரீ எஸ். தொண்டமான் இவ்வாரம் பிரதம மந்திரியையும் கவர்னர் ஜெனரலையும் சந்தித்து, நாட்டு நிலைமையைப் பற்றிப் பொதுவாக விவாதித்தார். பிறகு இந்திய ஹைகமிஷனருடனும் அவர் பேச்சுகள் நடத்தினார்.

ஃ ஃ ஃ

சமீபத்தில் முன்னாள் இலங்கை ஸ்தானீகராயிருந்த ஸ்ரீ வில்மட் பெரைரா என்பவர் ஸ்ரீ பாலி வித்தியாலய ஆண்டு விழாவில் பேசியபொழுது, இலங்கையைத் தாயகமாகக் கொண்டுள்ள சகல வகுப்பு ஜனங்களுக்கும் சம உரிமை உண்டென்றும், அவர்கள் எல்லோருக்குமே இலங்கை சொந்தமாகுமென்றும் கூறியிருக்கிறார். ஸ்ரீ பெரைராவைப் போன்ற பிரபல சிங்களத் தலைவர்களும் தமிழ்த் தலைவர்களும் தேசீய ஒற்றுமையை வலியுறுத்திப் பேசுவதும், அறிக்கை விடுவதும் இந்தச் சந்தர்ப்பத்தில் பேருதவி புரிவதாயிருக்கும். கவியரசர் தாகூரின் சாந்திநிகேதனைப் போல ஒரு உயர்தர கலாசாரக் கல்லூரியை ஸ்ரீ பெரைரா நடத்தி வருகிறார். அவரது ஸ்ரீ பாலி வித்தியாலயத்துக்கு நேருஜி, ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட், டாக்டர் ராதாகிருஷ்ணன் முதலியவர்கள் விஜயம் செய்து, பாராட்டியிருப்பது குறிப்பிடத் தகுந்தது. —ரவி.

ஸ்ரீ டி. எஸ். நாகேஸ்வர அய்யர் குமாரனும் அல்லிட் போட்டோகிராபிக்ஸ் (பி) லிமிடெட்டைச் சேர்ந்த ஸ்ரீ என். விஸ்வநாதனின் சகோதரருமான சிரஞ்சீவி சேஷாத்ரிக்கும், ரேலிஸ் இந்தியா லிமிடெட் சப்-ஏஜெண்டான ஸ்ரீ எம். எஸ். சுந்தரேசய்யர் குமாரி சௌ. மோஹன லக்ஷ்மிக்கும் 11-6-58 அன்று சென்னை ராயப்பேட்டையில் விவாஹம் வெகு சிறப்பாக நடந்தேறியது.

தலைநகர்த் தபால்

தலைநகரில் கோடை மிகக் கடுமையாயிருக்கிறது. கடந்த பத்து நாட்களாக வெப்பந் தாங்காமல் பலர் மரணமுற்றதாகவும் மற்றும் பலர் நோயுற்றதாகவும் தினந்தோறும் செய்திகள் வெளி வந்து கொண்டிருக்கின்றன. தினம் மூன்று, நான்கு பேர்களின் உயிர்கள் உஷ்ணத் தாக்குதலுக்கு பலியாகின்றன. பாதிக்கப்படுவோரில் பெரும்பாலோர் பாலர்கள். கடுமையான ஜுரத்துடன் ஆரம்பமாகிறதாம். உஷ்ணம் நூற்றுப்பன்னிரண்டு டிகிரிவரை எட்டியிருக்கிறது. காலையிலானாலும் மாலையிலானாலும் கடும் அனல் காற்றுக்குப் பஞ்சமில்லை. உள்ளோ வெளியிலோ இருக்க முடியாத புழுக்கம். மின்சார விசிறிக் காற்றும் அனலை அள்ளிக் கொட்டுகிறது. இதெல்லாம் தவிர, அடிக்கடி 'ஆந்தி' எனப்படும் புழுதிக் காற்று வேறு மணிக் கணக்கில் பெருத்த வேகத்தில் அடித்துக்கொண்டிருக்கிறது. எங்கு பார்க்கினும் புழுதிமயம். பத்தடிக்குமுன் இருப்பதைக்கூடப் பார்க்க முடியாதபடிச் செய்யும் தாசிக் காற்று. சமீபத்தில் கோரக் காற்றினால் பல ஸ்தலங்களில் நன்கு வளர்ந்தோங்கி நின்றிருந்த பெரு மரங்கள் பல வீழ்ந்து விட்டன.

தில்லி அதிகாரிகள், அமித வெப்பத் தாக்குதலுக்குள்ளானவர்களுக்கென ஆஸ்பத்திரிகளில் நன்கு சிகிச்சை செய்யத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். உஷ்ணத் தாக்குதலைத் தவிர்ப்பதற்காக, சுகாதார அதிகாரிகள், சில வழி முறைகளைப் பிரசாரம் செய்து வருகிறார்கள். மக்கள், தத்தம் வீடுகளிலிருந்து புறப்படுமுன்னர், நிறையத் தண்ணீர் சாப்பிட வேண்டுமென்றும், தலையையும் கழுத்தையும் வெயிலில் படாதவாறு காத்துக்கொள்ள வேண்டுமென்றும், உப்பும் எலுமிச்சம் பழ ரசமும் அடிக்கடி சாப்பிட வேண்டும் என்றும் யோசனை கூறி வருகிறார்கள்.

தலைநகரை ஆந்திக் காற்று அடிக்கடி கடுமையாகத் தாக்கி வருவதற்குக் காரணம், ராஜஸ்தான் பாலைவனம், தில்லியை நோக்கிப் பரவி வருவதுதானும். அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் இப்போது ஆரம்பமாகியுள்ளன. நகரில் தூசி மண்டலத்தை கண நேரத்தில் பரப்பி புலப்பாடே இல்லாமற் செய்வதோடு, தில்லிக்கு அருகாமையில் கிராமங்களின் பயிர்ப் பச்சைகளுக்கும் பெருத்த சேதம் விளைவிக்கிறது, அந்தக் காற்று. முப்பத்தோராயிரத்து ஐநூறு ஏகரா பரப்பில் நிறைய மரங்களை வளர்த்து பாலைவன வியாபகத்தைத் தடுக்கப் போகிறார்கள். பெரிய வனத்தை உருவாக்கப் போகிறார்கள். மெஹ்ராலி பிராந்தியத்தில் பெருமளவில் மரங்கள் பயிரிடுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. பதினைந்தாண்டு காலத்தில் பூர்த்தியாகும் திட்டம் இது. என்றாலும், இப்போதைய நடவடிக்கைகளின் பலாபலன்களை இன்னும் ஐந்தாண்டுகளிலேயே தெரிந்துகொள்ள முடியும் என்று சொல்லப்படுகிறது.

ஃ ஃ

தில்லி நகரின் வரலாற்றிலேயே முனிசிபல் கார்ப்பொரேஷனின் தோற்றம் ஒரு முக்கிய கட்டத்தைக் குறிக்கிறது. இதுவரை தில்லியின் நகர நிர்வாகத்தை தனித்தனி ஸ்தாபனங்கள் தத்தம் போக்குப்படி நிர்வகித்து வந்தன. ஒரு இணைப்போ, சீரோ இல்லாதிருந்தன. தக்க அனுமதியின்றி பொது ஸ்தலங்களிலும் தனி நபர்கள் வீடுகளை விஸ்தரித்துக்கொள்ளலாயினர். இன்னும் எவ்வளவோ குறைபாடுகள் மலிந்திருந்தன. நகர நிர்வாகத்தை ஒரே ஸ்தாபனத்தின் மூலம் கட்டுப்பாடு செய்வதன் அவசியத்தை உணர்ந்தே தில்லி கார்ப்பொரேஷன் உருவாயிற்று. தில்லி அபிவிருத்தி ஸ்தாபனம்—திட்டமிடும் ஸ்தாபனமாகவும் கார்ப்பொரேஷன்—அதை நிறைவேற்றி வைக்கும் நிர்வாக ஸ்தாபனமுமாயிருக்கும். இவை இரண்டைத் தவிர, வேறு எதுவும் நகர பரிபாலனத்தில் அதிகாரம் கொண்டிராது. தவிர, தில்லியில் பஸ் போக்குவரத்தையும் மின்சாரம், தண்ணீர் சப்ளையையும், ஜல தாரைப் பராமரிப்பையும் கவனித்து வந்த தனித்தனி ஸ்தாபனங்களும் இப்போது கார்ப்பொரேஷன் வசம் ஒப்படைக்கப்பட்டு விட்டன.

தில்லி கார்ப்பொரேஷனின் முதலாவது மேயர் பதவி இந்திய விடுதலைப் போராட்டத்தில் வீரத்துடனும் தீரத்துடனும் போராடிய ஸ்ரீமதி அருணா ஆசப் அலிக்குக் கிடைத்திருக்கிறது. நகர பரிபாலனத் துறையிலே புகழடைந்துள்ள ஸ்ரீ பி. ஆர். நாயக் கமிஷனராக ஜரூராகப் பணி செய்து வருகிறார். 'தில்லி நகர நிர்வாகிகள் சமாளிக்க வேண்டிய பல பிரச்னைகளில் தண்ணீர் சப்ளைதான் கடினமானது; இதை இன்னும் ஒரு வருஷத்தில் தீர்த்து விடலாம்' என்று. அவர் சமீபத்தில் நிகழ்த்திய உரை ஒன்றில் கூறியிருக்கிறார். மற்றும் சேரிகளைத் துலக்கும் வேலையையும் தீவிரமாக ஆரம்பித்திருக்கிறார்கள். எப்போதும் ஜன நடமாட்டம் மிகுந்ததும் குறுகலானதுமான 'சாந்தினி சவுக்'கில் நடந்து வரும் டிராம் வண்டிப் போக்குவரத்தை நிறுத்திவிடப் போகிறார்கள். இந்த வண்டியினால் அசௌகரியமே மிகுந்திருந்ததாக வெகு நாளாகச் சொல்லி வந்த மக்களின் விருப்பம் நிறைவேறப் போகிறது; அதற்குப் பதிலாக பஸ்களையே விடப்போகிறாகள். இனிமேல் பஸ்களில் சுத்தமான தண்ணீர் சப்ளையாவதற்கும் கார்ப்பொரேஷன் ஏற்பாடு செய்யப் போகிறார்கள்.

தில்லியில் போக்குவரத்துப் போலீஸாரும் ஜரூராகச் செயலாற்ற முற்பட்டு விட்டார்கள். கொஞ்ச காலத்திற்குமுன்னர் தில்லி வரும் மதராஸிகள், ஒரே சைகிளில் நால்வர் அடங்கிய குடும்பமே நடமாடிக்கொண்டிருந்ததைப் பார்த்து எள்ளி நகையாடுவது வழக்கம். 'தில்லியில் போலீஸ் கட்டுப்பாடு எதுவுமே கிடையாதா?' என்று பலர் வினவியதுண்டு. ஆனால், சில மாதங்களாகவே இதுவிஷயம் கண்டிப்பு மிகுந்திருக்கக் காண்கிறோம். சைகிளில் விளக்கு இல்லாமல் போனாலும், ஒருவருக்குமேல் சவாரி செய்தாலும், அபராதம் விதித்து வருவதால் நிலைமை பெருமளவு சீரடைந்திருக்கிறது.



பாலக்காடு ஜில்லா ஜட்ஜாகவிருந்து காலஞ்சென்ற ஸ்ரீ வி. ஆர். விஸ்வநாதய்யரின் குமாரர் வி. கிருஷ்ணமூர்த்திக்கும், பாலக்காடு காலெடெக்ஸ் ஏஜெண்டு ஸ்ரீ பி. ஆர் நாராயணசாமி அய்யரின் புத்திரி சௌ. சேஷாம்பாளுக்கும் பாலக்காட்டில் விவாகம் 28-5-58-ல் நடந்தது.



அடங்கிய பெண்

வி.வொன்னம்மாள்

ஹேமாவுக்கு வரன் தேடவேண்டிய சிரமமே சாமிநாதனுக்கு ஏற்படவில்லை. நாலு வீடு தள்ளி மணியான பிள்ளையை வைத்துக்கொண்டு ஊரைச் சுற்றுவார்களா, என்ன? சந்துரு நல்ல பிள்ளை. ஒரு துர்ப்பழக்கம் கிடையாது. பாக்குப் பொடிகூடச் சாப்பிட்ட வாய்க்குப் போட்டுக்கொள்ள மாட்டான். ஆளும் சந்திரோதயம் ஆனாற்போல நல்ல அழகு. பிக்கல் பிடுங்கல் இல்லை; ஒரே பிள்ளை. நல்ல செயலான குடும்பம். எம். ஏ. படித்துக்கொண்டிருந்தான்; படிப்பிலும் நல்ல துடி; வயதும் இருபதேதான். இன்னுமா நூற்று நூற்றுப் பார்ப்பார்கள்? அப்படிப் பார்த்தாலும்கூட ஒரு குறை அரை வாயால்கூடச் சொல்ல முடியாது. நாலு வருஷங்களாகப் பழகி மனிதர்களுடைய சகல குணகுணங்களும் நன்றாகப் புரிந்துகொண்டாயிற்று. இதற்கு மேல், ஹேமாவுக்கு நல்ல வரன் எந்த உலகத்தில் தேடினாலும் அகப்படமாட்டான் என்று சாமிநாதன் தீர்மானம் பண்ணி விட்டார். அவர் மனைவி லட்சுமிக்கும் அதே எண்ணம்தான். இத்தனை பழகினதில் சந்துருவின் அம்மா கோமதி ஒரு மனிதரை எடுத்தெறிந்து பேசினதாக அவள் கேள்விப்பட்டதில்லை. ஒரு பதட்டம் கிடையாது; கோபம் கிடையாது. பெண்ணைப் பெற்றாலும், செல்லமாக, அருமையாக வளர்த்தாலும், அவள் போய் இருக்குமிடத்தில் அருமையாக அவளை வைத்துக்கொள்வது அபூர்வமில்லையா?

ஹேமாவுக்கும் அப்பழுக்குச் சொல்ல முடியாது. பெண்மையின் கவர்ச்சி உடலில் அவ்வளவாகப் பிரதிபலிக்காவிட்டாலும், பார்த்தால் நல்ல களையாக அழகாக இருப்பாள். வெடவெடவென்று ஒல்லியான தேகம்; நல்ல சிகப்பு; படிப்படியாகக் கூந்தல்; எடுப்பான மூக்கு விழிகள். பார்த்தால் ஒருவிதமான கவர்ச்சியை ஏற்படுத்துபவள்தான். அதைக் காமம் என்று சொல்ல முடியாது. ரொம்ப அடக்கமான பெண். நாளைக்குப் புக்ககத்தில் போய் எப்படி எப்படி இருக்க வேண்டி வருமோ என்று லட்சுமி பெண்ணை ரொம்பவும் கண்டிப்பாகத்தான் வளர்த்து வந்தாள். எஸ். எஸ். எல். சி.யோடு படிப்பை நிறுத்திவிட்டு வாய்ப் பாட்டு கற்றுக்கொண்டிருந்தாள் ஹேமா. நல்ல இனிமையான சாரீரம். ஒரு சினேகிதி, இன்னொன்று என்று ஒரு இடத்திற்குத் தனியாகப் போகத் தெரியாது. அந்தக் காலனியிலேயே அவள் சற்று தைரியமாகப் போய்வரும் இடம் கோமதி மாமியகம்தான்.

கோமதிக்கு ஹேமாவை மாட்டுப் பெண்ணாக்கிக்கொள்ள மனப்பூர்வமான சம்மதம். சந்துருவுக்கும் இதில் இஷ்டம் தான். வாய்விட்டுச் சொல்லாவிட்டாலும், அவன் விருப்பத்தைக் கோமதி நோந்து வைத்திருந்தாள். லட்சுமி கேட்டதற்குத் தன்வரையில் 'சரி' யென்று சொல்லிவிட்டாள். மரியாதைக்குத் தன் கணவரையும் கேட்டுவிடும்படிச் சொன்னாள்.

கோமதியின் கணவர், 'டிராவலர்' ரத்னசாமி மிக அபூர்வமாகத்தான் ஊரில் தங்குவார். ஆங்கிலக் கம்பெனி ஒன்றில் வேலையாக இருந்தவர்; எப்போதும் ஊர் ஊராகச் சுற்றிக்கொண்டிருப்பார். கை நிறையச் சம்பளம் வாங்குவார்; தாராளமாகச் செலவழிப்பார். வீட்டிலோ, வெளியிலோ அவருடைய சௌகரியம் ஒன்றும் குறைந்துவிடக் கூடாது. குடித்தனப் பொறுப்பு ஒன்றையும் அவர் இதுவரை ஏற்றுக்கொண்டதில்லை. எல்லாம் கோமதிதான். சாமிநாதன் ஹேமா விஷயமாக வந்து கேட்ட போதும், அவர் அப்படியே பதில் சொல்லிவிட்டார். 'பையனுக்கும் பிடித்து, கோமதி ஒத்துக்கொண்டுவிட்டாளோன்னோ. பின்னால் என்னை ஒன்றுமே கேட்கவேண்டாம். எனக்கு ஜாதகம், சீர் செனத்தி எல்லாம் விஷயமே தெரியாது. பயல் இந்த வருஷம் பாஸ் பண்ணிவிடுவான். அவனை மெள்ள நம்ப கம்பெனியில் வேலைக்கிழுத்து விட்டு, 'மானேஜ்மெண்ட் டிரெயனிங்'குக்காக இங்கிலாந்து அனுப்பலாமென்பது என் திட்டம். ஒரு இரண்டு வருஷம் பொறுத்துக் கொள்ளுங்கள். பிறகு, 'ஜாம், ஜாம்'

என்று நடத்திக்கொள்ளுங்கள் கல்யாணத்தை. நான் சொத்து, சொம்பெல்லாம் பிதுரார்ஜிதமாக வைத்துவிட்டுப் போவதில் நம்பிக்கை இல்லாதவன். பிழைக்க நல்ல வழியாகக் காண்பித்துக் கொடுத்துவிட்டால், அவனவன் அதிர்ஷ்டம்போல. எனக்கு என்ன வேணும்? இந்த ஊர் சுற்றெல்லாம் முடிந்து ஹாயாக ரிடையர் ஆகி, வீட்டோடு வரும்போது, சாயங்காலமாக, 'அடியே! ஒரு டம்ளர் வெந்நீர் கொடு' என்று கேட்பேன். அவள் மோவாயைத் தோள்பட்டையில் இடித்துக்கொண்டு, 'ஓடற நாளெல்லாம் ஓடிட்டு, ஓயற நாள்ளே வந்து என் உசிரை வாங்குங்கோ' என்று கோவிலைச் சுற்றக் கிளம்பிவிட்டால், 'இந்தாருங்கள் மாமா, வெந்நீர்' என்று ஹிதமாக ஒரு வார்த்தை சொல்ல ஒரு மாட்டுப் பெண் வேணும்; அவ்வளவுதான். அது உங்கள் ஹேமா செய்யமாட்டாளா?' என்று ஹாஸ்யமாகவே பேசி, விஷயத்தை முடித்துவிட்டார்.

இப்படியாக ஒரு தகாறும் இல்லாமல் ஹேமாவின் கல்யாணப் பூர்வாங்க விஷயங்கள் முடிந்துவிட்டன. பெயருக்கு நிச்சய தாம்பூலம் என்று மேளம் கொட்டி, விருந்து பண்ணி அமர்க்களமாகவில்லையே தவிர, இந்தச் சம்பந்தம் இரு வீட்டாரைப் பொறுத்தமட்டில் நிச்சயமாகவே கருதப்பட்டது.

ஹேமாவுக்கும் சந்தோஷம்தான். சந்துருவிடம் அவள் அதிகமாகப் பேசிப் பழகியதில்லை. ஆனால், அன்றுடம் அவர்கள் வீட்டிற்குப் போய் வருவதில் அவன் கோபம், குணம் எல்லா விஷயங்களும் அவளுக்கு அத்துபடியாயிருந்தன. அவன் இத்தனை மணிக்கு எழுந்திருப்பான், இத்தனை மணிக்குச் சாப்பிடுவான் என்பதுகூட அவளுக்கு மனப்பாடம்தான். கோமதியும் ஹேமாவிடம் வருங்கால மாட்டுப் பெண் என்று மாமியார் ஹோதாவில் நடந்துகொள்வதில்லை. சாதாரணமாகப் பழகுவாள். ஒரு நல்ல நாளென்றால், ஹேமாவையும் ஒத்தாசைக்கு அழைத்துக் கொள்வாள். அம்மாவுக்கு வேணுமென்பதைச் செய்து கொடுத்துவிட்டு, மத்தியான்ன வேளைகளில் கோமதியைத் தேடிக்கொண்டு வந்துவிடுவாள் ஹேமா. மாலையில் சந்துரு கல்லூரியிலிருந்து திரும்பும் வேளையில் வீட்டுக்குப் போய்விடுவாள். விடுமுறைகளில் அவன் வீட்டில் இருந்தாலும், அதற்காக அவள் ஒளிந்துகொண்டதில்லை. என்றும்போல் இருந்துவிட்டுத்தான் போவாள். 'இங்கே ஒரு 'லைப்ரரி' புத்தகம் வைத்திருந்தேனே, எங்கே தொலைந்துவிட்டது?' என்று அவன் உறுமினால், 'நான் படிக்க எடுத்துக்கொண்டு போயிருந்தேன், இதோ!' என்று அவன் மேஜைமேல் வைக்கும் அளவிற்குப் பழகி இருந்தாள் அவள். கல்யாணம்தான் நிச்சயம் நடக்கப் போகிறதே என்பதால், அவர்களிடை, சல்லாபமான பேச்சுக்களோ, காதல் பார்வைகளோ இதுவரை ஏற்படவில்லை. ஹேமாவைக் கண்டால் சந்துருவின் முன்கோபம் மறைந்து, கொஞ்சம் லேசாகப் புன்னகை புரிவான். ஹேமா முகம் சிவக்க வேறு வேலையைக் கவனிக்கப் போவாள். ஹேமா, தன் வாழ்க்கையை, 'அப்படி, இப்படி' என்றெல்லாம் கற்பனை செய்யவில்லை. 'இப்படித்தான்' என்று தெரிந்த பிறகு கற்பனைக்கு ஏது இடம்? அடக்கமான பெண் ஹேமா, கல்லூரியையும் வீட்டையும் தவிர வேறொன்றும் அறியாத இளம் வயதிலேயே, மனைவி இன்னார் என்பதையும் பெற்றோரால் உணர்த்தப்பட்டவன் சந்துரு. ஆகவே, அவர்கள் வாழ்க்கை சலனமில்லாத நீரோடைபோல ஓடிக்கொண்டிருந்தது, கல்யாணத்தை எதிர்பார்த்து. திருமணம் முடிந்தாலும் அது நீர்வீழ்ச்சியாக அடித்துப் புரண்டு குதிக்காது. இருவரும் உணர்ச்சியின் எல்லைக்குள் இருக்கப் பழக்கப்பட்டவர்கள்.

புரட்டாசி மாதம்; கன்னிக் காய்ச்சல் பிளந்து கட்டிக்கொண்டிருந்தது. ஹேமா வழக்கம்போலக் கோமதி வீட்டுக்குக் காலையிலேயே வந்துவிட்டாள். 'வெயில் கொளுத்துகிறதே என்று ஜவ்வரிசிக் கூழ் காய்ச்சி வைத்தேன். கொஞ்சம் மொட்டை மாடியில் கொண்டு இதைப் போட்டுவிட்டு வந்துவிடுகிறாயா?' என்றாள் கோமதி. போட்டுவிட்டு வந்தாள் ஹேமா. மாலை மூன்று மணிவரை உட்கார்ந்திருந்துவிட்டுத் திரும்பினாள்.

விளக்கேற்றும் சமயம்; மழைக்கான ஆர்ப்பாட்டங்களைப் பார்த்ததும்தான், ஹேமாவுக்கு வற்றல் நினைவு வந்தது. 'அம்மா, மழை ஏகமாக வரும்போலிருக்கிறதே. மாமி வற்றல் போட்டார். எடுத்து வைத்தாரோ என்னமோ தெரியவில்லையே' என்றாள் ஹேமா. 'போயும் போயும் வற்றலிடக் கோமதிக்கு இன்றுதான் நாளகப்பட்டதா? இன்னிக்குக் கோவில்லே நாக வாகனம். மழைதான் எட்டுருக்கு அடித்துக் கொட்டுமே. கோவிலைத் தினம் சுற்றிச் சுற்றி வருபவள். இது நினைவில்லையா அவளுக்கு?' என்றாள் லட்சுமி. இந்த ஒரு வார்த்தைகூடத் தன் வருங்கால மாமியாரைச் சொன்னது, 'சுருக்'கென்றது ஹேமாவுக்கு. 'நான் போய் நினைவுபடுத்திவிட்டு வந்துவிடுகிறேனே அம்மா!' என்றாள். லட்சுமிக்குத் தன் பெண்ணின் குடித்தனப் பாங்கைக் குறித்துப் பூரிப்பு ஏற்பட்டது. 'அவள் எடுத்து வைத்துக்கொள்ள மாட்டாளா? ஆனாலும் உன் வீட்டுப் பண்டம் வீணாக்க உனக்கு மனசு வரவில்லையாக்கும். போனேன், வந்தேன் என்று வந்து சேரு. மழையில் நனைந்துகொண்டு ஈரத் துணியோடு தெருவில் நடந்து வராதே' என்று வழி அனுப்பினாள்.

ஹேமா தெருவில் காலடி வைக்கும் போதே, தூற்றல் போட ஆரம்பித்துவிட்டது. எட்டி நடைபோட்டு, இடையில் இருந்த நாலு வீட்டுத் தோட்டத்தையும் தாண்டி, கேட்டைத் திறக்கும்போது மழை பெய்யத் தொடங்கிவிட்டது. அம்மா சொன்னதை நினைவு வைத்துக் கொண்டு, ஒரே ஓட்டமாகத் தோட்டத்தைக் கடந்து வாயிற் படியில் காலை வைத்தாள். ஒரு முறை தட்டியதும் சந்துரு கதவைத் திறந்தான். ஓடி வந்த வேகம் வேறு, சந்துருவைப் பார்த்ததில் ஏற்பட்ட குழப்பம் வேறு. ஹேமா முகம் சிவக்க ஒன்றும் பேசத் தெரியாது விழித்தாள். சந்துருதான் சொன்னான்: 'அம்மா சற்று முன்தான் கோவிலுக்குப் போனாள். என்ன வேணும்?' என்றான். மாமி இல்லாமல் உள்ளே போகவும் தைரியம் இல்லாமல், மழையில் நனைந்துகொண்டுபோய் அம்மாவிடம் திட்டு வாங்கவும் தைரியமில்லாமல் வாசற்படியிலேயே தயங்கினாள், ஹேமா. சந்துரு திரும்பப் பேசினான்: 'இந்த மழையில் எப்படித் திரும்பப் போவாய்? வந்தது வந்தாய். இங்கே கொஞ்சம் இருந்து வாசலைப் பார்த்துக்கொள். சாயங்காலம் 'டென்னிஸ்' விளையாடிவிட்டு வந்தது ஒரேயடியாக வியர்க்கிறது. குளிக்க வேணும். அப்பா ஆறரை மணி ரயிலில் வருவதாக எழுதியிருந்தார். அவர் வந்து கதவை இடித்தால்கூட இந்தக் கொட்டற மழையில் காதிலே விழாது; வந்தால் திறந்து விடு' என்று சொல்லிவிட்டுக் குளிக்கும் அறையைப் பார்த்துப் போனான். ஹேமா கொஞ்சம் தைரியமாக உள்ளே நுழைந்து வாயிற் கதவைத் தாளிட்டாள். பழக்கத்தின் காரணம் தைரியமாக உள்ளே வந்துவிட்டாலும், மாமி இல்லாமல் அந்த வீட்டில் தனியாக இருப்பது அவளுக்குப் 'படபட'வென்றுதானிருந்தது. சாமான் அறைக்குள் நுழைந்து பார்த்தாள். வற்றல் அங்கு ஒரு மூலையில் இருந்தது. கொஞ்சம் நிம்மதியுடன் திரும்பி வாசல் பக்கம் வந்தாள். ஜன்னலைப் பிடித்துக்கொண்டு வெளியே எட்டிப் பார்த்தாள். மழை கல்வர்ஷமாகக் கொட்டிக் கொண்டிருந்தது. ஓரிடத்திலும் வெளிச்சத்தையே



காணோம். வீட்டுக்குப் போக வேண்டுமே என்ற நினைவோடு, சோபாவிலே வந்து உட்கார்ந்துகொண்டாள். அவளுக்கு இருப்பாகவே இல்லை.

சந்துரு குளித்துவிட்டு வந்துவிட்டான். கண்ணாடி முன் நின்றுகொண்டு தலை வாரிக்கொள்ள ஆரம்பித்தான். தோளில் ஈரமான துண்டைப் போட்டுக் கொண்டு ஈரம் சொட்டும் தலை மயிரை வாரினான். இருபது வயதிற்கு நல்ல வளர்த்தி சந்துரு. வாட்டசாட்டமான உடம்பு; விசாலமான மார்பு. அழகாகத்தான் இருந்தான். அவன் உள்ளே வந்தது தெரிந்து எழுந்திருப்பதா, வேண்டாமா என்று சோபாவின் விளிம்பில் வந்து உட்கார்ந்துகொண்ட ஹேமா, அவனைக் கடைக் கண்ணால் பார்த்தாள். அவளுக்குப் பெருமையாகத்தான் இருந்தது.

முள்ளின்மேல் இருப்பதுபோல உட்கார்ந்திருந்த ஹேமாவின் உருவத்தைக் கண்ணாடியில் பார்த்த சந்துருவுக்குச் சிரிப்பு வந்தது. கையில் சீப்போடு திரும்பினான். 'எதற்கு இப்படி உட்கார்ந்திருக்கிறாய்? சரியாகத்தான் உட்காரேன்' என்றான். ஹேமா எழுந்தே நின்றுவிட்டாள். 'அம்மா...' என்று ஆரம்பித்தாள். 'உனக்கு வீட்டுக்குப் போக வேண்டும். அம்மா திட்டுவாள் இல்லையா?' என்று ஜன்னலருகில் வந்து எட்டிப் பார்த்தான். மழை இன்னும் பெய்துகொண்டுதானிருந்தது. 'இதில் எப்படிப் போவாய்? குடை வேணுமானால் தரட்டுமா?' என்று ஹேமாவைப் பார்த்தான். ஹேமா தரையைப் பார்த்துக்கொண்டிருந்தாள். மெள்ள அவள் அருகில் வந்து கையிலிருந்த சீப்பாலேயே அவள் மோவாயை நிமிர்த்தினான் சந்துரு. 'உனக்கென்ன அத்தனை பயம்? என்னை முன்னேபின்னே பார்த்ததில்லையா என்ன?' என்றான். அவன் விழிகளை நிமிர்ந்து நோக்கிய ஹேமா, அவற்றில் தேங்கிய அன்பையும் ஆதரவையும் கண்டாள். அம்மாவும் மழையும்கூட அவளுக்கு மறந்து போய்விட்டது. பார்த்தபடியே நின்றாள். சந்துருவின் இடக்கை அவளைத் தன் அருகில் இழுத்துக்கொண்டது. நிமிர்ந்திருந்த முகத்தை நோக்கிக் குனிந்தான் அவன். ஹேமா வளைந்து கொடுத்தாள். உலகம் நின்றது.

சுற்றுப்புற உணர்வோடு சந்துருவும் ஹேமாவும் எழுந்தபோது, மழை ஓய்ந்திருந்தது. 'ஹேமா' என்று அவள் காதருகில் கொஞ்சினான் சந்துரு. ஹேமா 'விருட்'டென்று எழுந்துகொண்டாள். 'அம்மா, மழை எல்லாம் விட்ட இடத்தில் அவளை 'சட்'டென்று பிடித்துக் கொண்டன. வேகமாகப் போய் வாசற் கதவைத் திறந்தாள். 'நான் வரேன்' என்று சொல்லிவிட்டு, இருட்டில் துள்ளி மறைந்தாள் அவள்.

சந்துரு நிதானமாக எழுந்து தலையை வாரிக் கொள்ள ஆரம்பித்தான். அவன் முகத்தில் புன்னகை நிலவியது. தவறு செய்ததாலோ பயத்தினாலோ ஏற்படும் கலவரம் அங்கே தோன்றவில்லை. ஹேமா என்றென்றும் அவனுடையவள்தானே!

வீட்டிற்குள் நுழைந்த ஹேமா முதலில் கடிகாரத்தைத்தான் பார்த்தாள். அவள் போய்த் திரும்ப அரைமணிகூட ஆகவில்லை என்று அறிந்தபோது, அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. நடையில் ஒரு துள்ளலோடு போய், ரேழி ஊஞ்சலில் உட்கார்ந்துகொண்டு சங்கிலியில் சாய்ந்தாள். சமையலறையிலிருந்து அம்மா 'ஏண்டி, வற்றல் என்ன ஆச்சு?' என்று குரல் கொடுத்தாள். 'திடு'மென்று இந்த உலகத்துக்கு வந்த ஹேமா, 'வற்றலா? மாமி எடுத்து வைத்திருந்தார். நான் போகும்போதே மழை பிடித்துக்கொண்டு விட்டதோன்னோ. அதனால் நின்றவுடன் வந்தேன்' என்றாள். அதற்கு மேல் லக்ஷ்மியும் ஒன்றும் கேட்கவில்லை. ஹேமாவும் ஒன்றும் சொல்லக் கூடிய நிலையில் இல்லை. இரவு சீக்கிரமாகச் சாப்பிட்டுப் படுத்த ஹேமாவின் மனதில் சந்துருவின் சிரித்த முகமும் அன்பு ததும்பும் விழிகளும்தான் பதிந்திருந்தன. அவற்றை நினைத்து மகிழ்ந்தபடியே, உறக்கத்தில் ஆழ்ந்தாள் ஹேமா.

மறுநாள் பொழுது வழக்கம்போல்தான் விடிந்தது. ஆனால், ஹேமாவுக்கு மட்டும் புதுமாதிரியாக இருந்தது. பல் தேய்ப்பதிலிருந்து கறிகாய் நறுக்குவதுவரை ரசித்து ரசித்துச் செய்தாள். லக்ஷ்மிக்குத் தன் பெண்ணிடம் காணப்பட்ட மாற்றம் ஒன்றும் தெரியவுமில்லை. அவள் கவனிக்கவுமில்லை. சாப்பிட்டவுடன் தான் மாமியகத்திற்குப் போவதா வேண்டாமா என்ற புதுப் பிரச்னை ஹேமாவுக்குக் கிளம்பியது. போக வேணுமென்று நினைத்தபோதே, மகிழ்ச்சியும் வெட்கமும் கலந்து வந்தது. போகாதிருக்கலாமென்றால் 'ஏன் வரவில்லை?' என்று மாமி கேட்டனுப்புவாள். 'ஏண்டி போகவில்லை?' என்பாள் அம்மா. இதற்கு என்ன பதில் சொல்லுவது? ஆயிரம் யோசனை பண்ணிக்கொண்டு அவள் கிளம்பும்போதே, மணி பன்னிரண்டாகி விட்டது. சந்துரு இருப்பானோ என்று எண்ணிக்கொண்டே உள்ளே காலடி வைத்தாள் ஹேமா. அவன் முதல் நாளைப் போல 'டிராயிங் ரூமி'ல் தான் இருந்தான். மேலே நடக்கத் தயங்கிய ஹேமாவைக் கோமதியின் குரல் உள்ளிழுத்தது. சாதாரணமாகத்தான் பேசிக் கொண்டிருந்தாள் கோமதி. ஹேமா கொஞ்சம் தைரியமாக மூச்சுவிட ஆரம்பித்தாள். தான் முதல் நாள் மாலை வந்தது மாமிக்குத் தெரியாது என்ற வரையில் அவள் பயம் தெளிந்துவிட்டது. சந்துருவும் சாதாரணமாகத்தான் நடந்துகொண்டான். ஓரிருமுறை தனியாகப் பார்க்க நேரிட்டபோதுகூட செய்கையாலோ, சொல்லாலோ, பார்வையாலோ, அவன் முதல் நாளை நினைவூட்டவில்லை. ஹேமா சிறிது சிறிதாகப் பழையபடி ஆகிவிட்டாள். பயம் எல்லாம் போய்விட்டது. என்றும்போல் இருந்துவிட்டு, சாயங்காலம் கிளம்பினாள். நாளடைவில் இம்மாதிரி சம்பவம் ஒன்று நடந்ததென்பது மறக்குமளவிற்கு ஹேமா பழையபடி மாறிவிட்டாள். சந்துருவும் அப்படியே.

கோடைக்காலம் ஆரம்பமாகி விட்டது. சந்துரு பரீக்ஷைக்கு மும்முரமாகப் படித்தான். அவனுக்கு இரவு டீ போட்டு பிளாஸ்கில் கொட்டி வைத்துவிட்டு வரும் வரை, ஹேமா அங்குதான் இருப்பாள். கடைசிப் பரீக்ஷையும் முடிந்தது. ஹேமா அன்றுதான் மாலையில் சீக்கிரம் கிளம்பினாள். 'இன்று வெள்ளிக்கிழமை ஹேமா. கோவிலுக்குப் போகும் வழியில் உன்னையும் கூப்பிடுகிறேன், வருகிறாயா?' என்று கேட்டுக்கொண்டே வழியனுப்ப வாசலுக்கு வந்தாள் கோமதி. 'ஆகட்டும்' என்ற ஹேமா, தோட்டத்தில் இறங்கி நடந்தாள் 'என்ன சமர்த்துப் பெண்' என்று அவளையே பார்த்துப் பூரித்துக் கொண்டிருந்தாள் கோமதி. தெருவரையில் போன ஹேமா, தபால்காரன் கொடுத்த தந்தியைக் கையெழுத்துப் போட்டு வாங்கிக்கொண்டு, உறையை உடைத்தவாறே உள்ளே திரும்பினாள். அவள் வாயிற்படிவரை வருவாள் என்று எதிர்பார்த்த கோமதி, பயந்து போனாள். பாதி தூரம் வந்த ஹேமா, மேலே நடக்கவில்லை. கையில் இருந்த தந்தியோடு அங்கேயே நின்றுவிட்டாள். படபடப்போடு ஒரே தாண்டாக அவளிடம் வந்த கோமதி, அவள் தோளைப் பிடித்து உலுக்கினாள். 'ஏண்டி, ஹேமா, ஏன் நின்றுவிட்டாய்? என்ன தந்தி? மாமாதானே வரேனென்று அடித்திருக்கிறார்?' என்று கலவரத்தோடு கேட்டாள். ஹேமா, 'மாமா மாமா' என்று குழறியவண்ணம் மேலே பேச முடியாமல் தந்தியைக் கோமதியிடம் நீட்டினாள். மேலே சொல்ல என்ன இருக்கிறது? கோயமுத்தூரில் தங்கியிருந்த ஹோட்டலிலேயே ரத்தினசாமி காலமாகி விட்டதாகத் தந்தி சொல்லிற்று. பச்சை மரம் வேரோடு பிடுங்கப்பட்டுவிட்டது. அதைத் தழுவி இருந்த கொடிகள் வாடிச் சுருண்டு விழுந்தன.

சாமிநாதன் சந்துருவோடு புறப்பட்டுக் கோயமுத்தூர் போனார். கோமதியின்

தம்பிக்குத் தந்தி கொடுத்தார். கோமதி தலை நிமிரவேயில்லை. சோகத்தோடு சுற்றிச் சுற்றி வந்த ஹேமாவையோ, மேலே என்ன செய்வதென்றறியாது திகைக்கும் சந்துருவையோ, வந்தவர்களுக்குப் பதில் சொல்லி அனுப்பிய லக்ஷ்மியையோ, அவள் கவனிக்கவுமில்லை. கவனிக்க முயலவுமில்லை. அவள் தம்பிதான் ஆக வேண்டிய காரியங்களைச் செய்து முடித்தான். கணக்கு வழக்குப் பார்த்தான். ரத்தினசாமி சம்பாதித்ததையெல்லாம் செலவு செய்திருந்தாரே தவிர, பிற்காலத்திற்கு ஒன்றும் ஏற்பாடு பண்ணவில்லை என்று விளங்கிற்று. 'இன்றைக்கிருப்பார் நாளைக்கிருப்பது நிச்சயமில்லை' என்று மனிதனைப் பற்றியே சொல்லும்போது, அவனைப்போலப் பணமும் நிலையற்றதுதானே என்று இருந்து விட்டார்போலும்.

எத்தனை நாட்களுக்கு [illegible]டவுன் பக்கத்தில் வரும்படியே இல்லாமல் செலவு செய்துகொண்டு இருக்க முடியும்? கோமதியின் தம்பி, சந்துருவையும் கோமதியையும் அழைத்துக்கொண்டு, அவன் கிராமத்திற்குப் புறப்பட்டு விட்டான். இத்தனை அமர்க்களத்தில் கல்யாணத்தைப்பற்றி எப்படிப் பேசுவது என்று சாமிநாதனும் லக்ஷ்மியும் பேசாமலிருந்து விட்டார்கள். தகப்பன் இறந்து பத்து நாட்களில் பிள்ளைக்குக் கல்யாணப் பேச்சென்றால், விரசமாக இருக்காதா? ஊர் பேர் தெரியாதவர்களா? சற்று மனப்புண் ஆறட்டும். மேலே நடக்கவேண்டியதைப்பற்றி எழுதித் தெரிந்துகொள்வது என்று இருந்துவிட்டார்கள். சந்துரு ஹேமாவிடம் துக்கத்தோடு விடை பெற்றுக்கொண்டான். கோமதி எவரோடும் ஒன்றும் பேசியவளல்ல.

மாதங்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஓடி மறைந்தன. இடையே ஓரிரு முறை சந்துரு மட்டும் க்ஷேம சமாசாரத்திற்குக் கடிதம் போட்டான். பின் அதுவும் நின்று விட்டது. தை பிறந்தவுடன் சாமிநாதன் கல்யாண விஷயத்தைப்பற்றி எழுதினார். அதற்கு உடனே பதில் வந்து விட்டது. 'அக்கா' இந்த அடியிலிருந்து தலை நிமிரவேயில்லை. அவளிடம் ஒன்றும் கேட்கவே முடியவில்லை. சந்துருவோ தன் பழைய நிலை வந்தாலன்றிக் கல்யாணம் செய்துகொள்ள மாட்டானென்று தோன்றுகிறது. அவனுக்கு இன்னும் வேலையே சரியாக ஒன்றும் கிடைக்கவில்லை. நான் அவனைக் கல்யாணம் செய்துகொள் என்று எப்படிச் சொல்வது? கடவுள் முடி போட்டிருந்தால் நடக்கட்டும் என்று பட்டும் படாததுமாகக் கோமதியின் தம்பி பதில் எழுதி விட்டான்.

உயரப் பழுத்த பழம் இனிப்பு அதிகம் என்று மற்றவற்றை ஒதுக்கியபின், அதைக் கடித்துப் பார்த்தால் பல் கூசினால் 'சை' என்று தோன்றுமே, அது போலாகி விட்டது. சொல்லப் போனால் ரத்தினசாமி போனவுடனேயே சந்துரு

வின் 'மவுசு' குறைந்துவிட்டது என்று தான் சாமிநாதனுக்குப் பட்டது. என்ன பெரிய வரன்? ஆளழகன். எம். ஏ., ஒரு பிள்ளை. இதைத் தவிர, அவனிடம் வேறென்ன விசேஷம் இருக்கிறது? அவன் அப்பா இருந்திருந்தால், அந்த மாதிரியே வேறுதான். அந்தத் தோரணையோ, செல்வாக்கோ, இப்போதோ, இனிமேலோ உண்டாகுமோ? பைசாவுக்குப் பதினறு பட்டதாரிகளாக இறைந்து கிடக்கும் இந்த நாட்களில், பட்டதாரி என்ற மட்டில் என்ன மகத்துவம்? லக்ஷ்மியிடம் கடிதத்தைப் படித்துச் சொல்லி, அசுவாரசியமாக 'சூள்' கொட்டிவிட்டு, வெளியே போய்விட்டார் சாமிநாதன். லக்ஷ்மி ஒன்றும் தெரியாதவளாக ஊஞ்சல் சங்கிலியில் சாய்ந்துகொண்டு உட்கார்ந்து விட்டாள்.

ஹேமாவுக்குத்தான் அந்தக் கடிதம் அடி வயிற்றில் நெருப்பைக் கொட்டியது போலிருந்தது. எவனை இத்தனை நாட்களாகத் தன் கணவன் என்று நினைத்திருந்தாளோ, எவனிடம் தன்னை மறந்து தன்னையே ஒப்படைத்து விட்டாளோ, அவன் தனக்குக் கணவனாகப் போவதில்லை என்று தெரிந்தவுடன், அவளுக்கு உலகமே இருளடைந்தாற்போலிருந்தது. பைத்தியம் பிடித்துவிடும் போலாகிவிட்டது. அப்பா முடிவை மாற்றிக்கொள்ள மாட்டாரா? அம்மா அப்பாவை மாற்ற மாட்டாளா என்று எதிர்பார்த்து ஏமாந்து போனாள். வெளியில் மழையாகப் பொழியும் அன்பு வற்றிப் போய்விடும். கரை உடையாமல் தேங்கி இருக்கும் அன்பு வெள்ளம் வற்றுவதில்லை. ஹேமா சந்துருவிடம் செலுத்திய அன்பு வெளியில் யாருக்குமே தெரியாது. அவனுடைய ஒவ்வொரு புன்னகையையும், ஒவ்வொரு பார்வையையும், ஒவ்வொரு சொல்லையும் அவள் பொக்கிஷமாகப் போற்றித் தன் நெஞ்சில் பூட்டி வைத்திருந்தாள். இப்போது அந்தச் செல்வத்தின் சுமை தாங்காது அவள் நெஞ்சு வலித்தது.

சாமிநாதன் கறிகாய்க் கூடையிலிருந்து வேண்டாத கத்தரிக்காயைத் தூக்கி எறிவதுபோலச் சந்துருவின் நினைவையே மனதிலிருந்து அகற்றி விட்டார். லக்ஷ்மிதான் கொஞ்சம் யோசித்தாள். எத்தனை தான் துவைத்து மனதார உடுத்திக் கிழித்திருந்தாலும், எவர்ஸில்வர் பாத்திரக்காரனிடம் பட்டுப் புடவையைப் போடும்போது ஒரு பெண் தான் அதை என்ன விலை கொடுத்து வாங்கினாள் என்பதிலிருந்து, அது எப்படி இன்னும் புத்தம் புதிதாக இருக்கிறது என்பதுவரை சொல்லிச் சொல்லி மாய்ந்து, கடைசியில் அவன் கொடுக்கும் நெய்ச் சிட்டியை வாங்கி வைத்துக்கொள்கிறாளோ, அப்படி லக்ஷ்மியும்கோமதியையும், சந்துருவையும் பற்றிப் பேசிப் பேசி, அவன் தனக்கு மாப்பிள்ளையாக வரவிருந்தான் என்பதையே மறந்துவிட்டு, அவர்கள் நினைவைமட்டும் மனதில் வைத்துக் கொண்டாள்.

தன் மனதறிந்து அம்மா ஒருவேளை வேண்டியதைச் செய்வாளோ என்று எதிர்பார்த்து ஏமாந்தாள் ஹேமா. அவளால் தான் செய்த காரியத்தைச் சொல்லவும் முடியவில்லை. எப்படிச் சொல்லுவாள்? இலேசான குற்றமா அது? தன்னிடம் தன் பெற்றோர் வைத்திருந்த நம்பிக்கையின் துரோகம் அல்லவா அது? வேறு ஏதாவது சொல்லி அவர்கள் மனதை மாற்ற அவளுக்கு வேறு காரணங்களும் அகப்படவில்லை. சந்துருவிடம் இத்தனை தீவிரமாக அவள் மனது ஈடுபட்டிருந்தது என்று இதுவரை கோடி காட்டியதில்லை. பெற்றவர்க்கு அடங்கிய பெண்ணாக நடந்திருந்த அவளுக்கு, இதிலும் அவர்கள் சொல்லுவதைக் கேட்பதைத் தவிர, வேறு வழி புலப்படவில்லை. இருதலைக் கொள்ளி எறும்பாகத் துடித்தாள் ஹேமா. அவள் மனதில் இருந்த வெப்பம் உடலை உருக்கிற்று. வியாதிக்காரியாகத் தோற்றமளித்தாள். தொட்டதற்கெல்லாம் அழுகை வந்தது. படபடப்பு ஏற்பட்டது. மகளின் தோற்றத்தைப் பார்த்துப் பெற்றோர்கள் 'டானிக்'குகள் வாங்கிக் கொடுத்தார்கள். உள்ளத்திற்குக் கொடுக்காத அவர்கள் மருந்து, உடலுக்கும் பலன் தரவில்லை. ஊர் பல மாற்றினார்கள். அதிலும் பலனில்லை. முடிவில் கல்யாணம் செய்தால் எல்லாம் சரியாகிவிடும் என்ற வேதாந்தத்தில் இறங்கி விட்டார்கள்.

அதிக அலைச்சல் இல்லாமலே இரண்டு வருஷங்களுக்குள் வேறு வரன் ஏற்பாடு பண்ணி விட்டார். பெண் பார்க்க வந்த போது ஹேமா பாபுவை நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை; அவளால் முடியவில்லை. 'நிமிர்ந்துதான் பாரேன்' என்று எல்லோரும் கேலி பண்ணியபோது, அவளுக்கு அழுகையே வந்துவிட்டது. இத்தனை நாட்களில் அவள் சந்துருவை மறக்கத் தீர்மானித்துச் சிறிது வெற்றியும் பெற்றிருந்தாள். இப்போது சந்துருவைப் பற்றிய எண்ணத்தைவிடத் தான் செய்த தவறின் எண்ணமே அவளை அதிகமாக உறுத்திக்கொண்டிருந்தது.

பாபு நல்ல வேலையிலிருந்தான். சொத்து இருந்தது; சுமாராக இருப்பான் பார்க்க. கல்யாணமும் நிச்சயமாகி விட்டது. ஹேமா 'உங்களுக்குப் பிடித்தால் சரிதான்' என்று எல்லாவற்றையும் பெற்றோரிடமே ஒப்படைத்து விட்டாள்.

திருமண நாள் நெருங்க நெருங்க ஹேமாவின் மனதில் அலை ஓயாமல் அடிக்கத் தொடங்கியது. அவள் செய்யப் போகும் காரியம் சரியா, தவறா என்று அவளால் ஆராய முடியவில்லை. சரியாக எப்படி இருக்க முடியும்? ஒரு பெண் எதை முக்கியமாகக் காப்பாற்ற வேண்டுமோ, அதைப் பறி கொடுத்துவிட்டு நிற்கிறாளே அது சரியா? ஒருவனுக்கு மனதாலும் உடலாலும் மனைவியாக இருந்துவிட்டு, வேறொருவனுக்கு இப்போது மாலையிடப் போகிறாளே அது சரியா? ஹேமா தான் செய்த தவறை நினைத்து உருகி உருகியே படுக்கையில் படுத்தாள். கல்யாணம் இரண்டு மாதங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டது. 'சுபஸ்ய சீக்கிரம்' என்பார்கள். எவ்வளவு நாட்கள்தான் தள்ள முடியும்? இதோ, அதோ என்று இரண்டு மாதங்களும் ஓடிப் போய்விட்டன.

'அம்மா, கோமதி மாமிக்குப் பத்திரிகை போட்டீர்களா?' என்று மெதுவாகக் கேட்டாள் ஹேமா. 'அவர்கள் எங்கே இருக்கிறார்களென்று யாருக்குத் தெரியும்?' என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டாள் லக்ஷ்மி. பத்திரிகை போடாமலிருப்பதே தேவலை என்று தோன்றியது ஹேமாவுக்கு. அவர்கள் செய்த தவறு அவன்மூலம் வெளிப்பட்டு விட்டால் அவள் வாழ்க்கை குட்டிச்சுவராக அல்லவா போய்விடும்? பிறகு சந்துருவா, பாபுவா என்பது போய், இருப்பதா, இறப்பதா என்ற பிரச்னை அல்லவா எழும்? அப்பா, அம்மா முகத்தில் எப்படி விழிப்பது? ஹேமா பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தாள்.

மாப்பிள்ளை அழைப்பு அமர்க்களப்பட்டது. ஏற்பாடெல்லாம் பற்றிச் சம்பந்திகளுக்கு வெகு திருப்தி. ஏகக் கூட்டம். அதைச் சமாளிக்கவே ஹேமாவைச் சேர்ந்தவர்கள் திணறினார்கள். 'பெண் தான் ஆறும் ஒல்லி; போனால் போகிறது; நம்மாத்துக்கு வந்தால் எல்லாம் சரியாகிவிடும்' என்று சொல்லிக் கொண்டார்களாம் பிள்ளை வீட்டுக்காரர்கள்.

நிச்சய தாம்பூலம் ஆரம்பமாயிற்று. 'அடேடே, சந்துருவா, வா, வா. வந்தே விட்டானே! எப்போடா வந்தே?' 'சமயத்துக்கு வந்து விட்டான் பார்!' 'நீ இல்லாமல் 'வெறிச்' சென்றிருந்தது. களைகட்டி விட்டது போ!' என்று 'கலகல'வென்று சம்பந்திகளிடையே பேச்செழுந்தது. 'சந்துரு' என்ற பெயரைக் கேட்டவுடனேயே தேள் கொட்டினாற்போலிருந்தது ஹேமாவுக்கு. நிமிர்ந்து பார்த்தவுடன் அவளுக்கு மயக்கமே வந்துவிடும்போலிருந்தது. சந்துருதான் எல்லாருக்கும் ஒரே சமயத்தில் பதில் சொல்லிக் கொண்டு, உள்ளே நுழைந்துகொண்டிருந்தான். ஆஜானுபாகுவாக இருந்தான் சந்துரு. முகத்தில் இருந்த குழந்தைத்தனம் போய், பெரிய மனிதத்தனம் வந்திருந்தது. 'கலகல'வென்று பழகினான். சாமிநாதன் குறுக்கே வந்து குசலம் விசாரித்தார். அடேயப்பா! பழைய சந்துருவாகவா இருக்கிறான்! ஆள் என்ன சவுடாலாக இருக்கிறான்! என்ன பேச்சுப் பேசுகிறான்! 'ஸென்ட்' மணம் பந்தலையே அல்லவா தூக்கியது? அவன் மாறுதல் ஒவ்வொன்றும் ஹேமாவின் பயத்தை விசிறிக் கிளப்பியது. முன்போல இருந்தாலும் தேவலை. வாய்விட்டுப் பேசவே அவனுக்குத் தெரியாது என்ற தைரியத்தில் இருக்கலாம். இப்போது இவனை என்னவென்று எண்ணுவது? உயிரே போய்விடும்போலிருந்தது ஹேமாவுக்கு. பூனைக்குப் பயந்து பொறிக்குள் பதுங்கிய எலிபோல, எவனுக்குப் பயந்து கொண்டிருந்தாளோ, அவனிடமிருந்து அவன் சுற்றத்தார்களுக்கிடையா அவள் போய் விழவேண்டும்?

சாமிநாதன் மேலாக விசாரித்துக் கொண்டு ஒதுங்கிவிட்டார். எந்தச் சந்துருவைத் தனக்கு நிகரில்லை என்று ஒதுக்கினாரோ, அவனே தனக்கு ஒரு படி மேலே போய்விட்டான் என்று விசாரித்துத் தெரிந்துகொண்ட பிறகு, அவனிடம் பேசப் பிடிக்கவில்லை அவருக்கு. அவனும் ஹேமாவைத் தனக்குக் கொடுக்காததுபற்றி அவரிடம் கேட்கவில்லை.

ஏதானும் இரைச்சல் கேட்டால் என்ன சொல்லிக் கல்யாணம் நின்றுவிட்டதோ

என்று நடுங்கினாள் ஹேமா. அவள் எதிர்பார்த்தபடி ஒன்றும் இல்லாமல், கல்யாணம் அதன் பாட்டிற்கு நடந்தது.

ஹேமா புக்ககம் வந்து சேர்ந்தாள். நாள் தவறினாலும் சந்துருவின் புகழ் பாட்டுக் கேட்க அவள் தவறவில்லை. தினம் ஒருமுறை இறந்து போன தன் அண்ணாவை நினைத்துச் சொட்டுக் கண்ணீராவது சிந்தாமலிருக்க மாட்டாள் ஹேமா மாமியார். 'இந்தப் பிள்ளை இப்படி ராஜபோகத்தில் இருப்பதைப் பார்க்கக் கொடுத்து வைக்காது கண்ணை மூடிக் கொண்டு விட்டானே! எப்படி எப்படியெல்லாம் தன் பிள்ளை இருக்க வேண்டுமென்று கோடித்தானோ, அப்படியெல்லாம் இருக்கிறானே! இந்தச் சின்ன வயதில் எந்தப் பிள்ளை கை நிறையச் சம்பாதிக்கும்? யாரானும் அவனுக்காக விரலசைத்தார்களா?, இவர்கூடக் (ஹேமா மாமனார்) கையை விரித்து விட்டாரே! யாராரையோ எப்படி எப்படியோ பிடித்து, என்னமா முன்னுக்கு வந்துவிட்டான்! காராச்சு, கோயமுத்தூரில் வீடாச்சு! 'நான்' 'நீ' என்று பெண் கொடுக்கப் போட்டி போடுகிறார்கள். அதற்குத்தான் இலேசில் இடம் கொடுக்க மாட்டேனென்கிறான். அம்மா சொன்னாலாவது கேட்பான், அவள்தான் யாருக்கு வந்த விருந்தோ என்று சந்நியாசினியாகத் தம்பியோடு உட்கார்ந்திருக்கிறாளே!' என்று வாய்க்கு வாய் சொல்லுவாள்.

சாமிநாதனே சந்துருவைக் 'கோட்டை' விட்ட ஏமாற்றத்தை வேறுவிதமாகப் பேசிச் சமாளித்துக்கொண்டு விட்டார். 'ஒரு பையன் எவ்வளவு சீக்கிரம் கெட்டுப் போகமுடியும் என்று பார்த்தாயோ லக்ஷ்மி? அவன் 'டிரெஸ்' என்ன! 'ஸென்ட்' என்ன! தலை தம்படியாக அல்லவா துள்ளுகிறான்? அப்பனைப்போலத் தான் ஊதாரியாக இருக்கிறது பிள்ளை. வீட்டிலும் காரிலும் எவ்வளவு கடனோ? வெறுங் கை எப்படி முழம் போடும்?' என்றார். லக்ஷ்மியும் அதை ஆமோதித்தாள்.

ஆறு மாதங்கள் ஓடின. சந்துரு என்ன சொல்லுவானோ என்ன எழுதுவானோ என்று பயந்துகொண்டிருந்த ஹேமா, சற்று தாராளமாக மூச்சுவிட ஆரம்பித்தாள். அது தெய்வத்திற்கே பொறுக்கவில்லையோ என்னமோ! பாபுவைக் கோயமுத்தூருக்கு மாற்றி உத்தரவு வந்து விட்டது. வீடு பார்த்து எழுதும்படிச் சந்துருவுக்கு எழுதினதற்கு அவன், 'இத்தனை பெரிய வீட்டில் நான் மட்டும் தானே இருக்கிறேன்? பேசாமல் என்னுடன் வந்து இருங்கள்!' என்று எழுதிவிட்டான். பாபுவும் அவன் அம்மாவும் சந்தோஷப்பட்டார்கள். 'எப்படித் தாராளமாய் எழுதி இருக்கிறான் பார், குழந்தை! சாமான் மூட்டை எல்லாம் தூக்கிக் கொண்டு போக வேண்டாம். 'ஜம்'மென்று போய் இறங்கலாம். சமையல்காரனும் ஆள்காரனும் இலேசில் கிடைக்கக் கூடியதா?' என்று பெருமை அடித்துக் கொண்டாள். அந்தக் 'குழந்தை'யின்

கடிதத்தைப் பார்த்துக் கலங்கியவள் ஹேமா ஒருத்திதான். தன்னால் இயன்ற வரை தடுத்துப் பார்த்தாள். 'எதற்காக அம்மா இன்னொரு இடத்தில் போய் இருக்கிறது? அவருக்கும் இடைஞ்சலாக இருக்குமோ என்னமோ!' என்று சொல்லிப் பார்த்தாள். 'அதென்னடி அது! இப்பவே பிடித்து அப்படிப் பிரித்துப் பேச ஆரம்பித்து விட்டாய்?' என்று 'மொது மொது'வென்று பிடித்துக்கொண்டாள் மாமியார். புறப்படுவதைத் தவிர வேறு வழி காண முடியவில்லை ஹேமாவால்.

சந்துரு ஸ்டேஷனுக்கு வந்திருந்தான். 'என்ன ஹேமா, முன்னைவிட இளைத்து விட்டாயே!' என்றான். 'ஏண்டா பாபு, இரண்டே பேர்தானா?' என்று கேலி செய்தான். ஹேமா பயந்து செத்துக்கொண்டிருந்தாள். இங்கே வந்ததால் சந்துரு என்ன செய்வானோ என்ற கிலி, அவளைப் பிடித்துக்கொண்டது. தான் முன் செய்த தவறைச் சொல்லி, மறுபடியும் அதே வழியில் தன்னிடம் நடந்துகொள்வானோ என்று பயந்தாள். தான் மறுத்து பாபுவிடம் அவன் தன்னைப்பற்றிச் சொன்னால், என்ன ஆகும் என்று கலங்கினாள். பாபுவைக் கோயமுத்தூருக்கு மாற்றியதே தன் துரதிருஷ்டம்தான் என்று நினைத்தாள்.

சந்துரு வீட்டில் இருந்தால் ஹேமா அறையைவிட்டு வெளியே தலையே நீட்ட மாட்டாள். வீட்டிலோ எதற்கும் ஆள். ஹேமாவுக்குத் தன் திகிலை மறைத்துப் பொழுதைக் கழிக்க வேலையுமில்லை. பாபு கூடக் கோபித்துக்கொண்டான். 'இவ்வளவெல்லாம் செய்கிறான் சந்துரு. அவன் காலடிச் சத்தம் கேட்டால் அறைக்குள் வந்து புகுந்து கொள்கிறாயே! இதென்ன, பட்டிக்காட்டுத்தனம்! நாலு மனிதர்களிடம் 'கலகல'வென்று என்றுதான் இருக்கப் போகிறாயோ!' என்று தலையில் போட்டுக்கொண்டான். அவன் என்ன சொல்லியும் ஹேமா மாறவில்லை. அவள் பயத்தின் காரணம் அவளுக்கல்லவா தெரியும்!

ஆனால், சந்துரு என்னவோ முன்னளவு ஹேமாவிடம் நெருங்கவில்லை. ஓரொரு சமயத்தில் 'ஹேமா இந்த வீட்டில்தான் இருக்கிறாளா?' என்பான். ஒருவேளை தனிமையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தானோ என்னவோ!

அந்தச் சமயமும் வந்தது. பாபு சென்னைக்கு வேலை விஷயமாக இரண்டு நாட்களுக்குப் போக வேண்டி நேர்ந்தது. ஹேமா தனியாக இருக்கமாட்டேனென்று பிடிவாதம் பிடித்தாள். 'நானும் வருகிறேன். எனக்கும் எல்லாரையும் பார்க்க வேண்டும்போலிருக்கிறது' என்றாள். பாபு 'மாட்டேனெ'ன்றான்.

'வந்து ஒரு மாதத்திற்குள் இரண்டு நாளைக்காக நீயும் வருவானேன்? வீண் செலவு. இங்கே இருந்தால் உன்னை யார் கடித்து விழுங்கிவிடப் போகிறார்கள்?' என்று இரைந்தான். தன்னைக் கடித்து விழுங்கி விடுவான் சந்துரு என்றுதானே அவள் பயந்தாள்! இதை எப்படிச் சொல்லுவாள்? கடைசியில் பாபு அவளை விட்டுவிட்டுத்தான் போனான்.

கணவனை வழி அனுப்பிவிட்டுத் தன் அறையில் வந்து உட்கார்ந்தாள் ஹேமா. இரண்டு நாட்களையும் எப்படிக் கழிப்பது என்பது பெரிய பிரச்னையாக இருந்தது. இத்தனை நாட்களும், சந்துரு நடந்துகொண்டதைப் பார்த்தால், ஒன்றும் விரசமாக நடந்துவிடாது என்று தோன்றிற்று. பின்னால் ஓசை கேட்டுத் திரும்பிய ஹேமா, நடுங்கிப் போனாள். அவள் நினைத்தது பொய்யாகிவிட்டது. சந்துரு தான் நின்றுகொண்டிருந்தான். பெண்மையின் ஒரே ஆயுதமான கண்ணீர் ஹேமாவிடமிருந்து வெளிப்பட்டது. 'நீங்கள், நீங்கள்' என்று குழறினாள் அவள். 'ஏன் அழுகிறாய் ஹேமா? நடந்தது நடந்துவிட்டது. உன்னை நான் நல்ல நிலையில், மணந்துகொள்ள வேண்டுமென்று முயற்சித்தேன். நிலைமை உயர்ந்தது. ஆனால், நீதான் ஏமாற்றிவிட்டாய்' என்றான்.

ஹேமாவுக்கு அழுகை விக்கிக்கொண்டு வந்தது. 'ஏதோ உங்களையே மணக்கப் போகிறோம் என்ற எண்ணத்தில் தெரியாத்தனமாகத் தவறு செய்துவிட்டேன். அதற்காக என்னை இப்போது பழி வாங்கிவிடாதீர்கள். இத்தனை நாட்களாக நான் படும் வேதனை எனக்குத்தான் தெரியும். உங்கள் காலில் விழுந்து கேட்கிறேன். என்மேல் நம்பிக்கை வைத்திருந்த பெற்றோருக்குத்தான் துரோகம் செய்தேன். உங்களையும் என்னையும் நம்பி விட்டுப் போயிருக்கும் என் கணவருக்கும் துரோகம் செய்யும்படி என்னை ஆக்கிவிடாதீர்கள்' என்றாள்.

சந்துரு நின்ற இடத்திலேயே நின்றான். பிறகு, மெள்ள அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்துகொண்டான். 'ஹேமா, நீ என்னை மிகவும் தவறாகப் புரிந்துகொண்டு விட்டாய். இப்போது உன்னிடம் எனக்கு எந்தவிதமான தவறான எண்ணமும் இல்லை என்பது உனக்கு இன்னுமா புரியவில்லை? உன் வாழ்க்கையில் இடையூறு ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் எனக்கு இருந்தால், நான் இதுவரை காத்துக் கொண்டிருந்திருக்க வேண்டுமா, ஹேமா? கல்யாணப் பத்திரிகையைப் பார்த்தவுடன் அத்தைக்கு ஒரு வரி எழுதி இருந்தால் போதுமே! பிறகு, எப்போதுமே உன் கல்யாணம் நடந்திருக்காதே! இதை நீ ஏன் யோசிக்கவில்லை? ஹேமா, நாம் செய்த தவறுக்காக நீ ஒருத்திதான் வேதனைப் படுகிறாய் என்று நினைக்கிறாயா? உன்னை எப்படிப்பட்ட தர்மசங்கடமான நிலையில் வைத்தேன் என்பதை எண்ணி, ஒவ்வொரு விநாடியும் நான் எப்படித் துடித்தேன் என்பதை நீ கற்பனை பண்ணிக் கூடப் பார்க்க முடியாதே, ஹேமா! வறட்டுப் பட்டதாரியாக ஒருவேளைச் சாப்பாட்டுக்குக்கூட மாமாவை எதிர்பார்த்துக்கொண்டிருந்த நான், உன்னை உடனே எப்படிக் கல்யாணம் செய்து கொண்டிருக்க முடியும்? என் அப்பா இருந்தபோது எந்த நிலையில் நீ என்னைப் பார்த்தாயோ, அந்த அந்தஸ்திற்கு வந்தாலொழிய உன்னை மணந்துகொண்டு துன்பத்திற்கு ஆளாக்கக் கூடாதென்று இரவு பகலாக நான் பாடுபட்டது உனக்குத் தெரியுமா? ஏதோ சுமாரான நிலைக்கு வந்த பிறகு உன்னைத் தேடி, நீ போன இடம் கூடத் தெரியாது நான் தவித்தது உனக்குத் தெரியுமா? எனக்குக் கிடைக்காத அதிர்ஷ்டம் பாபுவுக்குக் கிடைத்ததென்பதை அறிந்து, அதை எந்தவிதம் தடுப்பதென்று தெரியாமல் நான் புழுங்கினது உனக்குத் தெரியுமா? ஹேமா, என் மனைவியாக நீ இந்த வீட்டில் வந்து இருக்கக் கொடுத்து வைக்காவிட்டாலும், என் தங்கையாக நீ இங்கு வந்து இருக்கப் போகிறாயென்று நான் என்னைச் சமாதானப்படுத்திக்கொண்டது உனக்குத் தெரியுமா? நீ என்னை இவ்வளவு கேவலமாக நினைத்து, உன்னையும் வருத்திக் கொள்வாயென்பது தெரிந்திருந்தால், நான் பாபு என் உறவென்பதையே மறந்திருப்பேனே! இனியாவது நீ பழையபடி மாறுவாயா, ஹேமா?' என்றான். அவன் குரல் தழுதழுத்தது.

மனத் தெளிவடைந்த ஹேமா, அவன் கால்களில் விழுந்து வணங்கினாள். 'நான் அப்பா அம்மாவிடம் நடந்ததைச் சொல்லி இருந்தேனானால், நம்மிருவர் வாழ்க்கையும் எப்படியோ மாறி இருக்கும்! நான்...ஆனாலும் அடங்கிய பெண்ணாக இருந்துவிட்டேன். அந்த அடக்கம் பயத்தையும் சந்தேகத்தையும் வளர்த்து விட்டு, எனக்கு இத்தனை துயரை அளித்தது. இவ்வளவு உத்தமமான அண்ணனுக்கு நான் தங்கையாக இருக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்' என்றாள்.

ஊரிலிருந்து திரும்பிய பாபு, தன் மனைவிக்குக்கூட இவ்வளவு சரளமாகப் பழகவும் பேசவும் தெரியுமா என்று ஆச்சரியப்பட்டான்!

★

ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு வருஷ பலன் மாதவாரி எழுத ரூ. 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூபா. 2. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை

பண்டித காழியூர்

ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்

தபோ நிதி

தியாகராய நகர், மதராஸ்-17

தபால் பெட்டி 1417

மலர் மஞ்சம்

தி. ஜானகிராமன்.

20

நடுத்தெருவில் நின்று தொண்டை கிழியக் கூச்சல் போட்டாள் காவேரி.

'ஊருக்கே பிரளய காலம் வந்திடிச்சா? அழிவுகாலம் வந்திடிச்சா? ஒரு நல்ல மனுசன் மனசைப் போட்டுக் கொலை பண்ணினா என்ன? உங்க தலையிலே மண்ணை அள்ளிப்போட்டுக்கிட்டா என்ன? ரண்டும் ஒண்ணுதாண்டா பாவிகளா! அஞ்சு வருசமாக் கண்ணு மாதிரி வளத்ததையா அளிச்சுப் போட்டீங்க! உங்க கண்ணு, காது எல்லாம் அளிஞ்சு போகப் போவுதடா, ராட்சதனுகளா! நாதியில்லாதவருன்னு நெனச்சிட்டீங்களா? அவங்க மனசாலே நெனச்சாப் போதும்டா, கண்ணாலே ஒரு சொட்டுத் தண்ணிவிட்டாப் போதும், அது சமுத்ரமாப் பெருகி, உங்களையெல்லாம் அழிச்சுப்பிடும். சூடா ஒரு பெருமூச்சு விட்டாப் போதும். அந்தச் சூட்டிலே கருகிச் சாம்பலாப் போயிடுவீங்க...தைரியம் இருந்தா வெளியிலே வந்து நின்னுங்க வேண்டா, ஏன் வூட்டுக்குள்ளார முந்தானையிலே பதுங்கிட்டிருக்கிறீங்க?...'

ஊர் முழுவதும் வெளியே வாசல்களில் வந்து நின்றது. பதுங்கிக்கொண்டிருப்பதாக அவள் வையன்னவைத்தான் சொல்லிக்கொண்டிருந்தாள். வையன்னவைத் தெருவில் காணவில்லை.

இடையிடையே சுப்ரமண்யனும் கூவிக் கொண்டிருந்தான்.

ஒரு மணி நேரம் இரண்டு பேரும் கத்திக்கொண்டிருந்தார்கள். இதற்கிடையே ஊரில் ஒவ்வொருவராக அழிந்த கொல்லையைப் போய்ப் பார்த்து விட்டு வந்தார்கள்.

'மாமா, இதைச் சும்மா விடப்படாது. ஊர்லே கூட்டம் போட்டு, எந்தப் பயங்க இப்படிச் செஞ்சாங்களோ, அவங்களைக் கண்டுபிடிச்சு, அவங்க கையெல்லாத்தையும் சுள்ளி ஒடிச்சாப்பலே ஒடிச்சுப் போடணும். யாரு செய்யச் சொன்னானோ அவன் கையை எண்ணெக் கொப்பரையைக் கொதிக்கவச்சு அதுலெ விடச் சொல்லணும்' என்று கிட்டன் சொன்னான்.

'எப்படிடாலே கண்டுபிடிக்கிறது ஆளை' – இன்னொரு பையன்.

'கண்டுபிடிக்கறதுக்கும் வழி சொல்றேன். ஊரிலெ இருக்கறவங்க அத்தினி பேரையும் கூப்பிட்டு, கொதிக்கிற எண்ணெயிலெ கையை விடச் சொல்லணும், சாமி சத்தியமா. அழிச்சுப்போட்டவன் கை வெந்து போயிடும். அப்ப தானே தெரியுது.'

'நீ உடுவியா?'

'நான் உடறேண்டா. தப்பு இருந்தாத்தானே, என் கை பொரியும்? என்னை என்ன பண்ணும் சாமி?'

'அப்படி நல்ல சாமியாயிருந்தா தோட்டத்தை அளிக்கிறபோதே அவன் கைமேலே ஒரு கருநாகத்தை ஏவிவிட்டிருக்குமே!'

கிட்டனுக்குப் பதில் சொல்ல முடியவில்லை.

தலைக்குத் தலை ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

'மாமி, நீங்க போலீஸிலே போய் பிராது கொடுங்க மாமா, மறுபடியும் ரண்டு மாசம் சந்தியிலெ நிக்கிட்டும். ஆனா, உங்களை இப்படி செஞ்சதுக்குத் தப்பிச்சிர முடியாது. கட்டாயம் பள்ளிக்கூடத்திலே போட்ருவாங்க' என்றான் முத்துகிருஷ்ணன்.

'போலீஸுக்குப் போய் என்ன ஆகப் போவுது தம்பி. வேலியே பயிரை அழிக்கிறப்ப, அசலூர்க்காரங்க, சம்பந்தமில்லாதவங்க வந்தா நியாயம் தரப் போறாங்க?'

'பின்னே, அப்பறம் ராஜாங்கம்னு ஒண்ணு இருப்பானேன்?'

'ராஜாங்கம் எல்லாம் என்ன செய்ய முடியும், நீயும் நானும் ஒழுங்கா இல்லாட்டி?'

'நீங்க இப்ப உடனே போய் பிராது கொடுக்கிறதுதான் ஒழுங்கு. இல்லாட்டி இப்படியே வந்துகிட்டே போகும்.'

ராமையாவுக்குத் தனிமை வேண்டியிருந்தது. இந்தப் பேச்செல்லாம் அந்தச் சமயத்துக்கு அவருக்குப் பிடிக்கவில்லை. சத்தமேயில்லாத, சந்தடியேயில்லாத, ஒரு பட்சி அரவம்கூடக் கேட்காத ஒரு இடமாகப் போய் உட்கார்ந்துகொள்ள வேண்டும்போலிருந்தது. பிராது யோசனை சொன்னவர்களுக்கு 'செஞ்சு விடலாம். நாளைக்கே போறேன்' என்று தைரியம் சொல்லிவிட்டு, வீட்டுக்குள் போனார்.

சொர்ணக்கா. அவள் புருஷன், பிள்ளை, ஜானு, சுப்ரமண்யன் – ஐந்து பேரும் உள்ளே வந்தார்கள் – ரகசிய ஆலோசனைக்கு வருபவர்கள்போல.

ராமையாவின் ஆட்கள் இரண்டு பேர் வந்தார்கள். அவரை வாய் திறக்காமல், கண்ணீர் விடாத குறையாகச் சிறிது நேரம் பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

'சாயங்காலம் வண்டியைக் கட்டிக்கிட்டு புதுக்கரையிலே போய் எழுதிட்டு வந்திரலாம் மாமா, போலீஸிலே' என்றான் சுப்ரமண்யன்.

'ஐயா ஒண்ணும் சொல்லலியேன்னு நிக்கிறோம். அவங்களை ஒண்ணும் கேக்காம செய்யப்படாதுன்னுதான் யோசிக்கிறோம். ம்னு சொல்லுங்க–போதும். அவன் கையி, காலு, அவன் பெண்டாட்டி தாலி – எல்லாத்தையும் இஞ்ச கொண்ணாந்து போட்டுபிடறோம்' என்றான் காளி.

'இத்தினி நாளி செஞ்சிருக்கணும். ஐயாக்குப் பிடிக்காட்டி அப்பறம் மூஞ்சியிலெ முளிக்கமாட்டாங்க...'

'ஒண்ணும் செய்ய வாணாம். சும்மா இருந்தாப்போதும் நீங்க. செஞ்ச ஆள் யாருன்னே தெரியலே.'

'என்னாங்க தெரியலேங்கிறீங்க? நேத்திக்குக் கோர்ட்டிலே விட்டுப்பிட்டாங்க. இன்னக்கி இப்படி ஆயிருக்குன்னா வேற யாரு செஞ்சிருக்க முடியும்?'

'அதெல்லாம் நிச்சயமா, புள்ளியடிச்சாப்பல தெரியறவரைக்கும் யாரையும் பத்தி எதுவும் சொல்லப்படாது.'

'சந்தேகப்படவும் கூடாதுங்களா?'

'பட்டுக்கலாம். அதை நாலு பேர் காதிலே விழப்படாது.'

'இப்ப நாம் தனியாத்தானே பேசிக்க றோம்?'

'அது சரி...வெளியிலே போய் இப்படியெல்லாம் சொல்லப்படாது.'

'சொன்னா என்னவாம்! ஊர் தெரிஞ்ச ரகசியம்தானே இது?'

கேஸ் போடச் சொல்லித் தூண்டிக் கொண்டிருந்தார்கள். சுப்ரமண்யமும் மற்றவர்களும் இரண்டு நாழிகை பேசியும் அவர் மசியவில்லை. அவர்களுக்கும் வாசலில் சொன்ன பதிலையே சொல்லி அனுப்பிவிட்டு, ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டார்.

உள்ளே வடிவு ஒரு பாட்டம் அழுது விட்டு, சமைத்துக் கொண்டிருந்தாள். பாலி ஜகதுவுடன் அடுத்த வீட்டுக்குப் போய்விட்டது.

ஊஞ்சல் மந்தமாக முனகியவாறு ஆடிற்று.

அவர் மனம் சூன்யமாக இருந்தது. அழிந்த தோட்டத்தில் போய் நின்று கொண்டிருந்தது. மண்ணில் அழுந்திக் கிடந்த இலைகளையும் மொக்குகளையும் மலர்களையும் பிரமைபிடித்துப் பார்த்துக் கொண்டு நின்றது. யார் செய்திருக்கக் கூடும், எதற்காகச் செய்தார்கள் என்றெல்லாம் யோசிக்கவில்லை. பொறிகளைக் கலக்கிவிட்டாற்போல, அழிந்த காட்சி ஒன்றைத்தான் பார்த்துக்கொண்டிருந்தது. அதற்குமேல் அவர் மனம் இயங்கவில்லை.

துயரம் மிக மிக, பசியும் மிகுந்தது. நடந்த அமர்க்களத்தில் சமையலுக்கு வேறு தாமதமாகிவிட்டது. பசியை உக்கிரப்படுத்திற்று அது. ராமையா அன்று சற்றுக் கூடவே சாப்பிட்டார் — சோற்றைப் போட்டுத் துயரத்தை அமுக்குவதுபோல.

சாப்பிட்டு, ஒரு முறை வெற்றிலை போட்டுக்கொண்டதும் கவலை எல்லாம் நீங்கிவிட்டதுபோலிருந்தது. இரண்டு மணிநேரம் தூங்கினார். விழித்து எழுந்ததும் நிம்மதி மீண்டும் நீங்கிவிட்டது. தோட்டத்தின் ஞாபகம்வரவே, தூங்கிய துயரும் மீண்டும் விழித்து எழுந்தது. சாப்பிட்டுவிட்டு பகலில் சிறிதுகண்ணயர்ந்து எழுந்ததும் முகத்தைக் கழுவிக்கொண்டு தோட்டத்திற்குப் போகிற வழக்கம். இப்போது அந்த ஞாபகம் வரவே, அவருக்குத் தோட்டத்தின் அழிவு மீண்டும் கண்முன் நின்றது.

இப்போதும் அங்கு போகத் தயார்தான். ஆனால், இந்தத் துயரம் தோட்டத்தை மீண்டும் பழைக்க வைக்க வேண்டுமே என்ற கவலையில் வந்ததல்ல. இத்தனை காலம் சிரமப்பட்டதை மீண்டும் படவேண்டுமே என்ற கவலையில்லை. மனமிருந்தால் அது நடந்துவிடும். உழைப்புக்கு யாரும் பயப்படவில்லை.

ஆனால், அந்த அழிவைக் கண்ணால் காணத்தான் அ-
ருக்கு முடியவில்லை. நான் இப்போது போய் என்ன
செய்யப் போகிறேன்? என் உறுதியை யாரோ குலைத்து
விட்டார்கள், குலைக்க முடியும் என்பதை நிலைநாட்டுவது
போலத் தோட்டம் அழிந்து கிடக்கிறது? இப்போது
போய் என்ன. மீண்டும் துயரப்பட வேண்டியதுதானே?
பார்க்காமலேயே இங்கேயே இருந்தால்?

அவருக்கு வேறு என்னென்னவோ தோன்றிக்கொண்
டிருந்தது. தோட்டம் அழிந்ததும் ஒருவிதத்தில் நல்லது
என்றுதான் தோன்றிற்று. நல்லதுதான்...நல்லதுதான்...
ஆமாம்...என் உறுதிக்கு இந்தத் தோட்டமா அடை
யாளம்? இந்தப் புற அடையாளம் ஒரே ராத்திரியில்
அழிந்துவிட்டது. ஆனால், தோட்டத்தின் ஆணி வேர்
அந்த மண்ணில் இல்லை...இந்த மண்ணில் இருக்கிறது.
மண்ணாலேயே ஆன இந்த உடம்பிற்குள் குடியிருக்குப்
மனதிற்குள் ஓடியிருக்கிறது. இந்தத் தோட்டத்தை
விட்டுத் தூரப் போய்விட்டால், இந்த ஆணி வேர்

அழிந்தா விடும்? அதை நானாகக் கிள்ளியெறிந்தால் உண்டு. அகாலத்தின் நினைவு இறந்து போய், நானாக அதை அறுத்து எறிந்தால்தான் உண்டு. நான் தூர தூரப் போய்க்கொண்டிருந்தால்? எங்கேயாவது கண்காணாத இடத்தில் விலகியிருந்தால்? அவர் மனது துள்ளி எழுந்தது. இருளில் தடவித் தடவிக்கொண்டிருந்துவிட்டு, இறுதியில் காலை நரையைக் கண்டது போலிருந்தது.

ஜகது பாலியுடன் வந்தாள். பாலிக்கு அழகாகத் தலைவாரி ஜவந்திப் பூவை வைத்திருந்தாள். இரவில் மழையில் நனைந்து காலையில் பளிச்சிட்டு நிற்கும் தோட்டத்தைப்போல இருந்தாள் பாலி. முகம் கழுவிப் புஷ்பத்தின் புதுமையுடனும் பெண்மையுடனும் சிரித்துக் கொண்டே வந்தாள் குழந்தை.

'அட, தலையெல்லாம் பின்னிக்கிட்டாச்சா அதுக்குள்ளவும்? இப்பவே கிளம்பிடலாம்போலிருக்கே?' என்றார் ராமையா.

'எங்கண்ணா?' என்றாள் ஜகது.

'ஊருக்கு.'

'வைதீச்வரன் கோயிலா, தில்லைவிளாகமா - இந்தத் தடவை?'

'தஞ்சாவூர் போயிடப் போறோம்.'

'போயிடப் போறோம்கிறீங்களே.'

'ஆமாம், ஜகது. பாலி, வடிவக்கா, நான்—மூணு பேரும் போயிடப் போறோம்.'

'போயிடப் போறோம்னா?'

'ஆமாம். அங்கியே குடியேறிடப் போறோம்.'

'குடியேறப் போறீங்களா?—'

இந்தப் பேச்சைக் கேட்டு வடிவும் அங்கே வந்து சேர்ந்தாள்.

'என்னக்கா இது?'

'என்ன?'

'அண்ணா என்னமோ சொல்றாங்களே... குடியேறப் போறாங்களாம்.'

'ஆமாம் வடிவு, பங்கெல்லாம் குத்தகைக்கு விட்டுப்பிட்டு, கொஞ்ச காலம் தலைமறைவா இருக்கலாம்னு யோசனை. இந்த ஊர் மூஞ்சியிலே முளிக்காம...எனக்குக் கொஞ்ச நேரம் முன்னாடிதான் தோணிச்சு. அப்படியே செஞ்சுபிடறதுன்னு முடிவு கட்டிப்பிட்டேன்.'

'தோணறதுக்குக் காரணம்?' என்று கேட்டாள் ஜகது.

'அதான் சொன்னேனே!'

'இந்த ஊர் மூஞ்சியிலே முழிக்க வாண்டாம்னு, இஞ்ச என்ன எல்லாருமா பகையா இருக்காங்க, என்னமோ நாலஞ்சு காலாடிங்க இருந்திருச்சின்னு, அதுக்காக ஊரைவிட்டே போயிர முடியுமா?'

'போறதுன்னு முடிவு பண்ணியாச்சு.'

'நீங்க முடிவு பண்ணிப் போதுமா? நாங்க போகவிட வாண்டாமாக்கும்.'

'நீங்க போகத்தான் விடணும்... ஜகது, நீ இப்ப ஒண்ணும் சொல்லாதே. அஞ்சு வருஷம் முன்னாடியே இந்த யோசனை வந்துது எனக்கு. ஆனா முகந்தெரியாத ஊர்லெ போய் இதை எப்படி வளக்கறதுன்னு கலங்கிப் போய்த்தான் அலையற மனசைப் புடிச்சு நிறுத்திக்கிட்டுத் தங்கினேன். இந்தத் தடவை, நான் என்னமோ வெளிக்குக் காட்டிக்காம இருக்கேனே தவிர, என் மனசு சரியாயில்லே.'

'நீங்க சொல்லணுமாண்ணா, எனக்கு நல்லாத் தெரியுது. காலமே புடிச்சு எனக்கும் ஒரு வேலை ஓடலே. பைத்யம் புடிச்சாப்பலே இருக்கு.'

'அதான் சொல்றேன். என்னைக் கண்டாலே ஏதாவது வம்பு பண்ணணும் போலிருக்கு இவங்களுக்கு. நான் நாலஞ்சு வருஷம் இருந்திட்டு வர்றேன் போயி. குழந்தையை நினைக்க நப்ப இப்பவே புறப்பட்டுரணும்போலிருக்கு.'

'நாங்கல்லாம் இருக்கறப்ப குழந்தையைப்பத்தி என்ன கவலைண்ணா உங்களுக்கு?'

'தெரியுது, ஒரு ஏக்கர் தோட்டத்தை இந்தப் பாடுபடுத்தியிருக்குறானுக. மனுசங்க காபந்து எத்தினி நேரம் செய்ய முடியும் சொல்லு!'

'அப்படிப் பாக்கப் போனா, எங்கதான் இருக்க முடியும்?'

'ஆபத்திலேயே சின்னது பெரிசு ரண்டும் இருக்கு. இருக்கற இடத்திலே இருந்துகிட்டு சின்னதைச் சமாளிச்சுக்கலாம். பெரிசா வந்திச்சின்னா கொஞ்ச நாள் விலகியிருக்கறதுதான் சரி. நான் ஒண்டிக் கட்டையாயிருந்தா, சரின்னிப்பிடுவேன். ஒண்டிக்கட்டையா இருந்தா இதெல்லாம் வந்திருக்கவும் வந்திருக்காது. குழந்தையை இப்படிக் கண்ணுபடும்படியா படைச்சுப்பிட்டான். அதை நான் இன்னும் பத்துப் பன்னண்டு வருஷம் ஜாக்கிரதையாக் காப்பாத்தியாகணும்....'

வடிவு ஒன்றுமே பேசவில்லை. ஜகதுவுக்குப் பொருத்தமாக அவர் உறுதிக்கு ஈடு கொடுத்துப் பேச முடியவில்லை. அவளுக்கு அழுகை வந்து விட்டது.

'ஊர்லெ நாலு படிச்சவங்களா, பெரியவங்களா, நீங்க இருக்கீங்க. தைரியமாயிருக்கு. நீங்களும் கிளம்பறேன்னு கிளம்பிட்டா, குடியிருக்க லாயக்கா இருக்குமா? நல்லது கெட்டது எதுன்னு பிரிச்சு எடுத்துச் சொல்ல ஆள் யாரு இருப்பாங்கண்ணா?'

'நல்லது கெட்டது பிரிச்சுப் பாக்கறதுக்கு ஒருத்தன் வேணும்ங்கறது கிடையாது. எல்லாருக்கும் அந்த அறிவு இருக்கு ஜகது. மனசுக்கு எல்லாம் ஸ்படிகம் மாதிரி பொதுவா எல்லாருக்குமே படும். ஆனா தைரியமாப் பேசறதுக்குத்தான் பயப்படுவாங்க.'

'அதைத்தான் சொல்லுங்களேன்.'

'கெட்டதைப் பாத்துக்க தைரியம் இருக்கறப்ப, நல்லதை அமுங்காம காப்பாத்தறத்துக்கும் தைரியம் வரும். அதுக்கு வேளை வரணும். மனசிலே உறைக்கணும். இதெல்லாம் தானே நடக்கற சங்கதி.'

ஜகதுவுக்கு என்னென்னமோ கேட்க வேண்டும்போலிருந்தது. நிலத்தை என்ன செய்யப் போகிறார்? குத்தகைக்கு விடப் போகிறாரா? யாரிடம்! அல்லது தெரிந்தவர்கள் பண்ணையில் விட்டுவிட்டுப் போகப் போகிறாரா? அப்படியானால் அது யார்? தஞ்சாவூரில் போய் என்ன செய்யப்போகிறார்? வாடகை வீடா? அல்லது சின்னதாக வீடு வாங்கிக் கொள்ளப் போகிறாரா? பொழுது அங்கு எப்படிப் போகும்? அங்கு தெரிந்தவர்கள் ஓரிரண்டு பேர்தான் இருக்கிறார்கள்? எந்தத் தெருவுக்கு ஜாகை வைத்துக்கொள்ளப் போகிறார்? ஊரில் கூத்து யார் நடத்துவார்கள்? அப்போது இங்கு வருவாரா? இருந்து சொல்லிக் கொடுத்து விட்டுப் போவாரா?

ஒரு மூட்டை கேள்விகள் அவள் மனதில் புரண்டுகொண்டிருந்தன. ஆனால், வாய்விட்டுக் கேட்பதற்குப் பயமாயிருந்தது. கேட்டாலே பிரயாணத்தை உறுதி செய்கிறதாக ஆகிவிடுமோ என்று அவளுக்குச் சந்தேகம். கேட்காமலிருந்தால் ஒருவேளை தோன்றிய எண்ணம் தானாக அணைந்து போனாலும் போகும். அவர் ஊரை விட்டுப் போகப் போகிறார் என்ற நினைவையே ஏறிட்டுப் பார்க்க அவளுக்கு நடுங்கிற்று.

சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டு அவரிடம் விடை பெற்றுக்கொண்டு சென்றாள்.

'என்னடா ராமையா இது. திடீர்னு?'

'ஆமாம், வடிவு. நீ வேற பழைய படிக்கு ஆரம்பிக்க வாணாம். நாளைக்காலமே தஞ்சாவூர் போய் ஒரு வீடு பாத்து, கோணவாய் நாய்க்கரைப் பாத்துப்பிட்டு வரப்போறேன். நீ பேசாம கிளம்பு. கொஞ்ச நாளைக்கு நாகரீகமா இருக்கற ஜனங்களைப் பாத்துப் பழகிக்கலாம். தெனம் போது விடிஞ்சா இந்த மேலக்குட்டை, கீழக்குட்டை, சாணி தட்றது, ஊர் வம்புன்னும் எல்லாத்தையும் பாத்தாச்சு. குழந்தை எங்கே?'

'ஜகதுவோட போச்சே.'

'எனக்கு அதை நெனச்சாத்தான் பயமாருக்கு. இந்த ஊர்லெ உக்காந்து அதுக்கு ஏதாவது சொல்லிக் கொடுக்கவும் பயமாயிருக்கு. அது பேசறதைப் பாத்தா, இந்த ஊர்லெ வச்சுக்கிட்டு வீண் வம்பு அடிக்கப் பழக்கப் புடிக்கலே எனக்கு...போய் நாலு நல்லவங்க படிச்சவங்களோடவாவது பழகட்டும்... உனக்கு எங்கே இருந்தா என்ன?'

'நான் வரதுக்கென்ன இப்பி மாட்டேங்கிறேனா? நிலபுலமெல்லாம் ஜாக்ரதையாப் பாத்துக்கணும். வீட்டுக்கு நல்ல குடியா வக்கணும்.'

'நிலத்தைப்பத்தி என்ன கவலை? சுப்ரமண்யன் இருக்கான்; இல்லாட்டி சொர்ணக்கா மவன் இருக்கான். அவங்களும் இல்லாட்டி, காளி, பிச்சை ரண்டு பேரும் இருக்கானுக. வீட்டை ஜகதுவும் சுப்ரமண்யனும் பாத்துக்கறாங்க...இன்னும் நாலஞ்சு நாள்ள கிளம்பும்படியா இருக்கும்...தயாராயிரு.'

காளியும் பிச்சையும் வந்தார்கள். இருவரையும் அழைத்துக் கொண்டு மீனாட்சி கொல்லைக்குப் போனார் அவர். விடுதியிலிருந்த புத்தகங்கள், சுவடிகள், கணக்கன் மேசை, உட்காருகிற கம்பளி எல்லாவற்றையும் எடுத்து வீட்டுக்கு அனுப்பினார். கோயிலுக்குப் போய்விட்டு அவர் திரும்பி வந்தபோது மீண்டும் அந்தச் சின்னக் கூட்டம் கூடியிருந்தது—ஜகது, சுப்ரமண்யம், சொர்ணக்கா, அவள் புருஷன், மகன்—காளி, பிச்சை.

அவர் உள்ளே நுழைந்ததும் நுழையாததுமாக, 'என்னங்க இது? எங்ககிட்ட சொல்லவே இல்லியே...'

'என்னடாப்பா?'

'தஞ்சாவூருக்குப் போறேன்னீங்களாம்...இவங்க சொன்னாங்க இப்பதான்... நீங்க இந்தப் படுபாவிகிட்ட பயந்துகிட்டா போறீங்க? நான்தான் மத்தியானமே சொன்னேனே. அப்படியே செஞ்சுப்பிட்டாப் போவுது. அவன் கை, காலு, அவன் பொஞ்சாதி தாலி எல்லாத்தையும் உங்க காலடியிலே போட்டுடறோம். அப்பறம் யாருக்குப் பயப்படணும்?'

'சொல்றா நல்லா' என்றான் சுப்ரமண்யன்.

'நான் பயந்துகிட்டுப் போகலே. கொஞ்ச நாளைக்கு இந்த ஊரிலே இல்லாம இருக்கணும்; அவ்வளவுதான்.'

சுப்ரமண்யன், சொர்ணக்கா புருஷன் எல்லாரும் சற்று வியப்புடனேயே எல்லாவற்றையும் கேட்டார்கள். பகலில் சொன்னதையே திருப்பிச் சொல்லிவிட்டார் அவர்.

'இது முடிவாயிட்ட சங்கதி. இனிமே செய்ய வேண்டியது ஒண்ணே ஒண்ணுதான். இந்த வீட்டிலே யாரையாவது குடி வக்கணும். நிலத்தை உங்களுக்குள்ளே யாராவது பாத்துக்கணும். காளி, பிச்சை, சுப்ரமண்யன், சின்னக்கண்ணு—உங்கள்ள யாராவது பாத்துக்கிட்டா சரி. குத்தகைதான் வச்சுப்பீங்களோ, என்ன செய்வீங்களோ—எனக்குச் சாப்பாட்டுக்கு நெல்லு வண்டியிலே கொண்ணாந்து ஆனி ஆடியிலே போட்டுரணும், தஞ்சாவூரிலே—விறகு, புளி எப்பவாவது அனுப்புங்க.'

'நெசம்மாத்தானா?' என்றான் பிச்சை.

'நெசமாத்தான். உங்களுக்குள்ளவே முடிவு பண்ணிக்கிங்க.'

ஜகது சொன்னாள்: 'நான் ஒரு தினுசாச் சொல்றனே.'

'என்னவாம்?'

'வீட்டை நாங்க பாத்துக்கறோம். மீனாட்சி கொல்லையை சொர்ணக்கா வீட்டிலே பாத்துக்கட்டும்.'

'ரொம்ப சரி.'

'மத்த புஞ்சைங்களைக் காளி பாத்துக்கட்டும். நஞ்சைங்களை பிச்சை பாத்துக்கட்டும்.'

'அட! அட!' என்று வியந்து விட்டார் ராமையா. அவருக்கு எழுந்து கூத்தாட வேண்டும்போலிருந்தது. 'ஜகது, ஒரு அரை நிமிஷத்திலே ஜமீன் உத்தரவு மாதிரிப் போட்டுப்பிட்டியே—என்னடாப்பா! உங்களுக்கு எப்படித் தோணுது?'

'நீங்கதான் சொல்லிப்பிட்டீங்களா? எனக்கும் பிரமிச்சுத்தான் போச்சி. நாமளா இருந்தா, நாலு மணி நேரம் மென்னுமென்னு முளுங்கிட்டிருப்போம். எல்லாம்தான் முடிஞ்சு போச்சே.'

'என்ன சின்னக் கண்ணு?'

'மாமா, நீங்களும் குழந்தையும் போய் கொல்லையிலே உக்காந்திருப்பீங்க. இப்ப நானும் பையனும் போய் உக்காந்துக்கறோம். இன்னும் ஆறு மாசத்திலே வந்து ஒரு தடவை வந்து பாருங்க. எப்படியிருக்குன்னு!'

'அது உன் தோட்டம்—உன் பையன் தோட்டம். உங்களைவிட யாரு தலைப் பொறுப்பாப் பாக்கப் போறாங்க, சொல்லு.'

21

மறுநாள் காலையில் தஞ்சாவூர் புறப்பட்டு விட்டார் ராமையா. கொறடாச்சேரியில் ரயில் ஏறி, தஞ்சாவூர் போனதுமே, கோணவாய் நாய்க்கரைப் போய்ப் பார்த்தார்.

கோணவாய் கிருஷ்ண நாய்க்கருக்கு ராஜங்காட்டுக்குப் பக்கத்திலிருந்த காத்தமேடு சொந்த ஊர். பதினைந்து வருஷத்துக்கு முன்னால் மன்னார்குடி வேட்டி பத்தாறும் ஒன்பதஞ்சுமாக ஐம்பது அறுபது ஜோடிகளை எடுத்துக் கொண்டு போய், கீழ வீதியில் ஒரு திண்ணையில்போட்டு, வியாபாரம் செய்ய ஆரம்பித்தவர், இரண்டு வருஷங்களுக்குள் கிடைத்த பணத்தை வைத்துக் கொண்டு, ஒரு இரும்புக் கடை வைத்து விட்டார். அவருக்குக் காலம் ஒத்துக் கொண்டு, கையும் ஓங்கிக்கொண்டு வந்தது. இரும்புக் கடை வைத்த ஒரே வருஷத்தில் முதல் மகாயுத்தம் ஆரம்பித்து விடவே, ரொக்கம் ஏறிக்கொண்டே வந்ததும், பதினாறு வயதில் ஒரு பிள்ளை அவருக்கு. அவனுக்கு ஒரு மளிகைக் கடையைப் புது மோஸ்தரில் கண்ணாடி டப்பாக்களாக அடுக்கி வைத்துக் கொடுத்தார். ஒரே பிள்ளை. ஒரே பெண். மூத்த பெண்ணைத் தஞ்சாவூரிலேயே கலெக்டர் ஆபீசில் வேலை பார்க்கிற ஒரு உறவுக்காரப் பையனுக்குக் கட்டிக் கொடுத்ததும், அவருக்கு எல்லாக் கவலைகளும் நீங்கிவிட்டன.

அவருக்கு வாய் இடது பக்கம் சாய்ந்திருக்கும்—கீழ் நோக்கி. சதா வெற்றிலை புகையிலை, புகையிலைச் சாறு இடது ஓரத்தின் வழியாக வழிந்து கொண்டிருக்கும். அரை நிமிஷத்துக்கு ஒரு தடவை இடது கையால் அதைத் துடைத்துத் துடைத்து விட்டுக் கொண்டிருப்பார் நாய்க்கர்.

'அடெடெ ராமையாவா, வா வா! எப்ப வந்தே? எங்கேர்ந்து வர்றே?' என்று உற்சாகத்துடன் வரவேற்றார் அவர். ஹோட்டலிலிருந்து காபி வாங்கி வரச் சொன்னார். காப்பி என்ற பானத்தை எங்கேயோ ஓரிரண்டு கலியாணங்களில் குடித்திருக்கிற ராமையாவுக்கு, அமிருதமாயிருந்தது. தஞ்சாவூருக்குக் குடியேறுகிற ஆசை அந்தக் கணத்தில் ஸ்திரமாகி விட்டது.

ஊர்க் கதை எல்லாவற்றையும் சொல்லி, தஞ்சாவூரில் குடியேறுகிற எண்ணத்தைச் சொன்னதுமே, நாய்க்கருக்கு உற்சாகம் தாங்கவில்லை.

'வந்துரு ராமையா. என்னத்துக்கு ஊரிலே இருந்துகிட்டு அவதிப்படணும்? சனியன் புடிச்ச ஊர்லே யாராவது இருப்பாங்களோ? சித்தெ இரு. நானும் வர்றேன். தெக்கு வீதியிலேயே ஒரு வீடு காலியிருக்கு—நல்ல வீடு. டாக்டரு மாத்தலாகி பட்டணம் போயிருக்காரு. நல்லவங்களாப் பாத்து விடணும்னு சொல்லிட்டிருந்தாரு. பன்னண்டு ரூபாதான் வாடகை. அரண்மனை மாதிரி இருக்கும். வந்த உடனே குட்டியை பள்ளிக்கூடத்திலே சேத்துப்பிடு. நல்லாப் படிக்கட்டும்...எலே, சாமிய்யா, கடையைப் பாத்துக்கடா, ஒரு மணியிலே வந்திடறேன்' என்று ராமையாவை அழைத்துக்கொண்டு கிளம்பி விட்டார்.

தெற்கு வீதி வீடு பாரி வீடு. நாலைந்து பெரிய அறைகள், மாடியில் மூன்று அறைகள்—நூறு பேர் உட்கார்ந்து சாப்பிடக் கூடிய மொட்டை மாடி—வாசலில் பெரிய திண்ணை—குளுகுளுவென்று சார்ப்பு.

ராமையா உடனே பணத்தைக் கொடுத்து, ஞாயிற்றுக்கிழமை வருவதாகச் சொல்லிவிட்டு, மாலை வண்டியில் ஊருக்குக் கிளம்பி விட்டார்.

சுப்ரமண்யனும் ஜகதுவும் வெள்ளிக்கிழமை வரையில் அவரைத் தடுத்து நிறுத்தப் படாதபாடுபட்டு, முயற்சியைக் கைவிட்டு விட்டார்கள். சனிக்கிழமையன்று சாமான்களை ஒரு கூண்டு வண்டியில் ஏற்றிக்கொண்டு, காளியும் பிச்சையும் கிளம்பினார்கள். ஞாயிற்றுக்கிழமை உச்சி வேளைக்குக் குடும்பம் கிளம்பி விட்டது. சின்னக்கண்ணுவும் சுப்ரமண்யனும் புது வீட்டில் குடித்தனம் வைக்க உதவியாகக் கூடவே கிளம்பினார்கள். ஜகது இரண்டு மூன்று பழைய ட்ராங்குகளில் ராமையாவின் வேட்டி, பாலிக்கு வேண்டிய சாமான்கள் எல்லாவற்றையும் வைத்து, ராத்திரி போய் சமைக்காமலிருக்க, கட்டுச் சாதம், மிளகாய்ப் பொடி தூவின தோசை எல்லாவற்றையும் கட்டித் தயார் செய்து கொடுத்தாள்.

ராமையாவுக்கு விடை கொடுக்க ஊரில் பாதிக்குமேல் திரண்டு வந்திருந்தது.

(தொடரும்)

வாலிபத்தில் மறுமலர்ச்சி வேண்டுமா?
சீ.எம்.சாமி தங்க பஸ்பம்
நரம்புத்தளர்ச்சியை நீக்கி, புதுப்பலத்தையும் முறுக்கையும் தந்து, வாழ்க்கையில் இன்பத்தை அளிக்கிறது
24 நாள் பஸ்பம் அனுபானத்துடன், ரூ 25-0-0
மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.

டார்வின் காட்டிய ஒளி

சக்திதாசன் சுப்பிரமணியன



எலியைப் படைத்த கடவுள், ஏன் பூனையையும் படைத்தார்? பசுவைப் படைத்த கடவுள், ஏன் புலியையும் படைத்தார்? தவளையைப் படைத்த கடவுள், ஏன் பாம்பையும் படைத்தார்? பாம்பைப் படைத்த கடவுள், ஏன் கீரியையும் படைத்தார்.

எலியைக் கொன்று விடுகிறது பூனை. பசுவைக் கொன்றுவிடுகிறது புலி. தவளையை விழுங்குகிறது பாம்பு. பாம்பைக் கொன்று விடுகிறது கீரி.

இப்படியாக இந்த உலகத்திலே ஒன்று மற்றொன்றைக் கொன்று வாழ்கிறது. இது ஏன்?

இந்த உலகத்திலேதான் எத்தனை கோடி உயிரினங்கள்! எத்தனை கோடி உயிர் இனங்கள்! இவ்வளவு உயிர்களும் ஆண்டவன் படைப்புதானே! அப்படியிருக்க, இவை ஒன்றுடன் ஒன்று போரிடுவது ஏன்? ஒன்றை ஒன்று கொன்று தின்பது ஏன்? விழுங்குவது ஏன்? அழிப்பது ஏன்?

இப்படியாக எனக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. சந்தேகத்தை யாரிடம் கேட்டுத் தெளிவது? தந்தையாரிடம் கேட்டேன். அப்போது எனக்கு வயது ஏழு.

'பூனை ஏன் அப்பா எலியைப் பிடிக்கிறது?'

'நீ ஏன் சாப்பிடறே?'

'பசிக்கிறது.'

'அந்த மாதிரிதான். பூனைக்கும் பசிக்கிறது. எலியைப் பிடிக்கிறது.'

'பூனைதான் நம்மைப்போலச் சோறு தின்கிறது. பால் குடிக்கிறதே. போதாதோ? அப்புறம் ஏன் எலியைக் கொல்ல வேண்டும்?

தந்தையார் பதில் சொல்லவில்லை. எனக்கும் சந்தேகம் தீரவில்லை. எப்படியாவது தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசை எனக்கு. எதை? பூனை ஏன் எலியைப் பிடிக்கிறது என்பதை.

நானும் யார் யாரிடமோ கேட்டேன். எவரும் சரியாகப் பதில் சொல்லவில்லை. எனது சந்தேகமும் தீரவில்லை.

எனது தந்தையாருக்குப் பிராணிகளின்மீது மிகுந்த அன்பு. வீட்டிலே அடுப்பங்கரையிலே ஒரு பூனை வளர்ந்தது. வாசலிலே ஒரு நாய் வளர்ந்தது. கொல்லையிலே நிறைய மாடுகள் இருந்தன.

ஒரு சமயம் பூனை குட்டி போட்டது. நான்கு குட்டிகள். குட்டிகள் வெகு அழகாக இருந்தன. அவற்றை எடுத்து விளையாட வேண்டும்போல் ஆசையாக இருந்தது எனக்கு. கிட்டப் போனேன். பூனை சீறியது. பயந்து விட்டேன். குட்டியைத் தொடவில்லை. சில வாரங்கள் சென்றன. குட்டிகள் தாமாகவே என்னிடம் வந்து விட்டன. அவற்றைத் தொட்டேன்; தடவினேன்.

ஒரு குட்டி கறுப்பு. இன்னொரு குட்டி வெளுப்பு. மற்றொரு குட்டிக்கு முகம் கறுப்பு. உடல் வெளுப்பு. வேறு ஒரு குட்டிக்குக் கால் கறுப்பு. முகம் வெளுப்பு. தாய்ப் பூனையோ நல்ல வெள்ளை.

வெள்ளைப் பூனைக்குக் கறுப்பாகக் குட்டி பிறந்தது ஏன்? இது ஒரு பெரிய சந்தேகம். என் மனத்திற்குள்ளாகவே யோசித்து யோசித்துப் பார்த்தேன்; விளங்கவில்லை.

'அப்பா' என்றேன்.

'ஏனடா' என்றார்.

'பூனைக் குட்டி பார்த்தியா?'

'பார்த்தேன். என்ன அதுக்கு?'

'ரொம்ப அழகா இருக்கு. இல்லையா அப்பா!'

'ஆமாண்டா. ஆமாம்.'

'எனக்கு ரொம்ப ஆசையா இருக்கு அப்பா!'

'சரிதான்.'

'ஏன் அப்பா! பூனை நாலு குட்டி போடுமா?'

'அதான் போட்டிருக்கேடா!'

'அதனாலேதான் அப்பா கேட்கறேன்.'

'கறுப்புக் குட்டியைக் கண்டா, எனக்கு பிடிக்கல்லே அப்பா!'

'ஊஹூம்.'

'ஏன் அப்பா! கறுப்பா குட்டி போடறது?'

'அப்படித்தானடா போடும்.'

'வெளுப்பா வேறே போட்டிருக்கே!'

'வெள்ளையாகவும் போடும்; கறுப்பாகவும் போடும்.'

'வெள்ளையாகவே போடப்படாதோ?'

'எல்லாம் கடவுள் சிருஷ்டி.'

'ஓகோ! கடவுள் சிருஷ்டியா?'

அவ்வளவுதான். பிறகு நான் ஏதும் கேட்கவில்லை. ஆனால், எனது சந்தேகம் நீங்கவே இல்லை. வெள்ளைப் பூனை வெள்ளையாகக் குட்டி போடுவது சரி. வெள்ளைப் பூனை கறுப்புக் குட்டி போடுவது கடவுள் சிருஷ்டி. ஒரே குட்டி பாதி வெள்ளையும் பாதி கறுப்புமாயிருக்கிறதே! அது என்ன?

இது பெரியதொரு சந்தேகமாகவே இருந்தது எனக்கு. யாரிடம் கேட்பது? சாமியார்கள் ரொம்ப கெட்டிக்காரர்கள் என்று சொன்னார்கள். 'சரி. சாமியாரைக் கேட்டுப் பார்ப்போம்' என்று எண்ணினேன்.

எங்கள் கிராமத்திலே ஒரு சாமியார் இருந்தார். ஒரு நாள் அவரிடம் போனேன், நான். சாமியாரை வணங்கி நின்றேன்.

'வா தம்பி. எங்கே வந்தே?' என்றார் சாமியார்.

'இல்லே சாமி. உங்களிடம்தான் வந்தேன்.'

'அப்படியா! என்ன விசேஷம்?'

'இந்த உலகத்தைப்பத்தித் தெரிந்து கொண்டு போகலாம்னு வந்தேன், 'சாமி.'

'அடே! சின்னப் பையனாக இருக்கே. அதுக்குள்ளே உலகத்தைப் பத்தித் தெரிந்துகொள்ள ஆசை வந்து விட்டதா?'

'ஆமாம் சாமி.'

'என்ன தெரிய வேணும் சொல்லு?'

'வெள்ளைப் பூனை கறுப்புக் குட்டி போடுதே. அது ஏன் சாமி?'

'அதுதானப்பா கடவுள் சிருஷ்டி ரகசியம்.'

'அது சரி. பூனை ஏன் சாமி எலியைப் பிடிக்கிறது?'

'பூனைக்கும் எலிக்கும் பகை.'

'பகை எதற்கு சாமி? எல்லாம் அன்பாயிருந்தால் என்ன?'

'பகைதான் அப்பா பூபாரம் குறைக்கும் மருந்து. அதனால்தான் ஆண்டவன் அப்படி வைத்திருக்கிறான்.'

சாமியார் சொன்னது எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆனால், ஏதோ ஓர் உண்மை இருப்பதுபோல் தோன்றியது.

ஆண்டுகள் பல சென்றன. இளமையிலே எனது உள்ளத்தில் தோன்றிய ஐயப்பாடுகள் பலவற்றிற்கு விடை கண்டேன். எதிலே? டார்வின் காட்டிய ஒளியிலே. எனவே, டார்வின் காட்டிய ஒளி எல்லோருக்கும் கிடைப்பதாக. டார்வின் யார்? அவர் காட்டிய ஒளி எத்தகையது? இவைபற்றி இப்போது காண்போம், சுருக்கமாகக் காண்போம்.

விஞ்ஞான ஆராய்ச்சியிலே பெரும் புரட்சியை உண்டுபண்ணியவர் சார்லஸ் டார்வின். 'உயிர் இனங்களின் தோற்றம்' என்ற தலைப்புடன் அவர் வெளியிட்ட கருத்துக்கள் புதிய சகாப்தத்தையே தோற்றுவித்துவிட்டன. 1859-ம் வருஷம் நவம்பர் 24-ந் தேதியன்று 'உயிர் இனங்களின் தோற்றம்' புத்தக உருவில் வந்தது. 1858-ம் ஆண்டிலே அறிஞர் டார்வின், அறிஞர் ரஸ்ஸல் வாகஸ் ஆகிய இருவரும் சேர்ந்து இக்கருத்தை வெளியிட்டனர் அக்கருத்து லண்டன் லினியன் சங்கத்திலே எழுதி வாசிக்கப்பட்டது. அதுவே பின்னால் 'உயிர் இனங்களின் தோற்றம்' என்ற புத்தகமாயிற்று

மேற்படி நூல் வெளியாகி நூறாண்டுகள் ஆகிவிட்டன. இந்த நூறு வருஷங்களிலே டார்வின் காட்டிய ஒளியிலே வெகு தூரம் முன்னேறிவிட்டது உலகம்.

இந்த நூறாண்டு விழா சமீபத்தில் கொண்டாடப்பட இருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் 'டார்வின் காட்டிய ஒளி' எது என்று அறிந்துகொள்வது நல்லது அல்லவா?



2

'நான் யார்? எங்கிருந்து வந்தேன்? எங்கு செல்கிறேன்? நான் காணும் இந்த உலகம் எது? இதிலே காணப்படும் பல்வேறு உயிர் இனங்கள் எப்படி வந்தன?'



இவ்விதம் விசாரிக்கத் தொடங்கினர் நமது முன்னோர். விசாரணை எதிலே கொண்டு செலுத்தியது? மெய் ஞானத்திலே. மெஞ்ஞானம் என்ன உணர்த்தியது? நானும், நான் காணும் உலகமும், உலகில் உள்ள உயிர்க் குலங்கள் அனைத்தும் எல்லாம் ஒன்றன் பல்வேறு பரிணாமமே என்று உணர்த்தியது. அந்த ஒன்று எது? அதுவே பரம்பொருள். இவ்விதம் முடிவு கண்டனர் நமது பெரியோர்.

'இந்த உலகத்து உயிர்கள் எல்லாம் எப்படித் தோன்றின? நான் யார்? எங்கிருந்து வந்தேன்?' என்ற விசாரணையைத் தொடர்ந்து நடத்தினர் மேற்கு நாட்டுப் பெரியோர். விசாரணை எங்கே கொண்டு விட்டது? விஞ்ஞானத்தில் கொண்டுவிட்டது. விஞ்ஞானம் என்ன உணர்த்தியது? பல உண்மைகளை உணர்த்தியது. என்ன உண்மை? இந்த உலகத்தைப்பற்றிய உண்மை. உயிர்க் குலம் பற்றிய உண்மை. அதாவது என்ன?

இந்த உலகம் ஒரு மாதிரி இல்லை. உலகத்தில் உள்ள உயிர்க் குலங்களும் ஒரு மாதிரி இல்லை. மாறுகின்றன என்பதே.

இந்த உலகத்திலே உள்ள உயிர்கள் எல்லாம் மாறுகின்றன என்றால், அது ஏன்? ஏன் மாறுகின்றன? இதுதான் அடுத்த கேள்வி. இந்தக் கேள்வியை ஒட்டிய விசாரணை நடைபெற்றது. ஐரோப்பாவிலே இருந்த அறிஞர் பலரும் இது பற்றிச் சிந்தித்தனர்.

(தொடரும்)

நவநாகரிகக் குறிப்புகள்

தாசினி

★ பின்னிய சோலி

'இப்போ கடைகளில் வந்திருக்கே 'பின்னிய–சோலி' இதை நீங்கள் யாராவது வாங்கினீர்களோ? நன்று இருக்கோ?' என்று கண்ணம்மாள் கேட்டாள்.

'நான் கடை கண்ணி பக்கம் போய் ஆறு மாசத்துக்கு மேலாகப் போகிறது. இதை எல்லாம் பார்க்க எனக்கேது 'டைம்?' என்றாள் சரஸ்வதி,

வழக்கம்போல் எங்கள் வீட்டு ஹாலில் பேச்சுக் கச்சேரி நடந்துகொண்டிருந்தது. சரஸ்வதி பிறந்தகத்தில் இருந்து இப்போதுதான் திரும்பி வந்தாள். இவள் ஒரு சோஸியம் சொல்லுபவன் பேச்சில் மயங்கி, இருபது பவுன் எடை உள்ள நகையை அவனிடம் கொடுத்து விட்டாள். அகமுடையான் கோபித்துக் கொண்டு பிறந்தகம் அனுப்பி விட்டான் என்று உனக்கு எழுதி இருந்தேன். இப்போதான் மறுபடியும் வந்திருக்காள்.

'நான் பார்த்தேன். புதிய பாஷனாகக் கிளம்பி இருக்கு. எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை!' என்றாள் ராஜம்–நாதன்.

'ஒரு சோலி விலை முப்பது ரூபாயாமே?' என்றாள் சரஸ்வதி.

'ஆமாம், இதோ நான் ஒன்று வாங்கிக் கொண்டு வந்திருக்கேன்!' என்று அப்போதான் உள்ளே நுழைந்த வேதவல்லி–சாரி ஒரு சிறிய பொட்டலத்தைப் பிரித்தாள்.

சோலிக்கு நீளமான கை வைத்திருந்தது. இதன் டிஸைன் பழைய காலத்துத் துண்டு ரவிக்கைகளுக்கு இருப்பது போல் கரையும் உடலுமாக இருக்கிறது. கரையில் ருத்திராக்ஷப பேட்டுப் போட்டிருக்கிறது. உடலில் வர்ணக் கட்டங்கள். சோலியை அப்படியே தலையை நுழைத்துப் போட்டுக்கொள்ளும்படி நெய்திருந்தது. அதாவது கழுத்தின் முன் பக்கம், பின் பக்கம் இரண்டும் அப்படியே திறக்காமல் இருந்தது. சோலியை நெய்த துணியில் வெட்டித் தைக்காமல், அப்படியே நூல்களைப் பின்னிச் செய்திருந்தது. சோலியை வெளியில் எடுத்து அப்படியும் இப்படியுமாகக் கண்ணம்மாள் திருப்பினாள். சோலி பார்வைக்கு மிகவும் சிறியதாகவே இருந்தது.

'ஆமாம்; இதற்குள் நீங்கள் எப்படிப் புகுந்து கொள்ளுவீர்கள்? உங்களுக்குத் தானே சோலி?' என்று எங்கள் எல்லார் மனதிலும் இருந்த சந்தேகத்தைச் சரஸ்வதி வாய்விட்டுக் கேட்டாள். வேதவல்லி–சாரி நல்ல பருமன்–சோலியோ ஒரு பத்து வயதுக் குழந்தையின் சட்டை அளவுதான் இருந்தது!

'இது நெய்த சோலி என்பதை மறந்து விட்டீர்களே? அதுவும் இது 'நைலான்' சோலி!' என்றாள் வேதவல்லி–சாரி.

பிறகு அவள் அந்தச் சோலியைப் போட்டுக் கொண்டாள். மந்திர சமக்காளம் என்று ஒரு கதை உண்டே, அது போல் சோலியும் விரிந்துகொண்டே வந்தது. இப்போ சோலியின் ரூபமே மாறிவிட்டது என்கலாம். அழகிய வரிகளுடனும், ஒத்த வர்ண அமைப்புடனும், உடம்பில் பதிந்து நன்றாக இருந்தது.

வேதவல்லி–சாரி வாங்கிய சோலியின் விலை முப்பது ரூபாய்கள். இது 'நைலான்' நூலினால் பின்னப்பட்டது. அதனால்தான் இப்படி விலை. சாதாரண நூலினால் பின்னின சோலியின் விலை ஆறு ரூபாய்களில் இருந்து எட்டு, ஒன்பது ரூபாய்கள் வரையில் இருக்கிறது. இந்த நூல் சோலிகளைப் பெரிய அளவு, அதை விடச் சற்றே சின்ன அளவு என்று இரண்டு அளவுகளில் பின்னி இருக்கிறார்கள். 'நைலான்' சோலி அளவுக்கு விரிந்து கொடுக்காவிட்டாலும், இந்தச் சோலிகளும் ஒரு அளவிற்கு விரிந்து கொடுக்கிறது. இதை மெஷின்கள்மூலம் பின்னுகிறார்கள். நூல் சோலிகளுக்கு முன் பக்கம் திறந்து பொத்தான் வைக்கப் பட்டிருக்கிறது. 'நைலான்' சோலி தான் பார்வைக்கு ரொம்பவும் சிறியதாக, அப்படியே பின்னி இருக்கிறது. இந்த 'நைலான்' சோலிகள் ஒரு அளவில்தான் வருகின்றன. உனக்கு வேண்டுமா சொல்லு; ஒரு சாதாரணச் சோலி வாங்கி அனுப்புகிறேன். இப்போ இது ராஜம்–நாதன் சொன்ன மாதிரியில் புதிய பாஷனாகக் கிளம்பி இருக்கிறது.

'நைலான்' என்றதும் நினைவு வருகிறது. 'நைலானில்' நெய்த மேல் ஜோடுகள் மிகவும் சௌகரியமாக இருக்கிறது. ஆபீசுக்கு மேல் ஜோடுகள் போடும் ஆண்கள், பெண்கள் இருவருமே இதை வாங்க வேண்டியதுதான். சோப்புப் போட்டுச் சுலபமாகக் கசக்க முடிகிறது. சீக்கிரம் காய்கிறது. போட்டுக் கொள்ளவும் சௌகரியமாக இருக்கிறது. ஆனால், 'நைலான்' துணியில் ஒரு உஷார் வேண்டும். இஸ்திரிப் பெட்டிக்கும் இதற்கும் ஒத்துக்கொள்ளவே செய்யாது. இஸ்திரிப் பெட்டிக்கு 'அலர்ஜி' என்றுகூடச் சொல்லலாம். பார்வதி தன் அகமுடையான் துணிகளை இஸ்திரி போட்டாள். இவளிடம் எல்லாரிடமும் இருப்பது போல் மின்சார இஸ்திரிப் பெட்டி இருக்கிறது. ஆனால், இவளுடைய பெட்டி ஒரு அளவு சூடு ஏறினதும் தானே அணையும்; ஆறினால் மறுபடியும் சூடாகிக் கொள்ளும். ஏதோ நினைவில் 'நைலான்' மேஜோடுமேல் பெட்டியை வைத்து ஒரு அழுத்து அழுத்தி இருக்கிறாள். ஒரே வினாடியில் மேஜோடு இருந்த இடம் தெரியாமல் மாயமாய் மறைந்து விட்டது. நாத்தம் மூக்கைத் துளைக்க ஒரு கரிந்த துண்டுதான் பாக்கி! ஆகையால், 'நைலானை' இஸ்திரி செய்யாதே. உனக்கு எந்தச் சோலி வாங்கி அனுப்ப–நைலானா, நூலா? புதிய டிஸைன் வாங்கிக் கொள்ளேன்!

★ ஒரு காதணி

இப்போ முத்துச் சிப்பியினால் செய்த காதுக் குண்டலங்கள், தொங்கட்டங்கள் எல்லாம் வந்திருக்கிறது. அன்று மங்களம்–சின்னையா தன் பேத்திக்கு ஒரு தொங்கட்டம் வாங்கினாள். மிகவும் அழகாக இருந்தது. ஒரு வித நீல நிறம்; இதில் அதிக அகலமில்லாத நீள வாட்டமான இலைக் கொத்துப்போல் செய்திருந்தது. நீளமும் குட்டையுமான இலைகள் சேர்ந்த இலைக் கொத்து. தொங்கட்டம் சுமாருக்கு மூன்று அங்குல நீளம் இருந்தது. முத்துச் சிப்பியினால் செய்ததா? ஒருவித அழகான, பகட்டில்லாத பளபளப்புடன்

ஜொலித்தது. இதை அப்படியே காதில் வைத்து அமுக்கிக்கொள்ள வேண்டியது; அவ்வளவேதான். சுலபமாகக் கழட்டியும் விடலாம். விலை என்னமோ மூனு நாலு ரூபாய்களுக்குள்தான், பத்துப் பன்னிரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் போட்டுக்கொள்ள மிகவும் ஏர்வையான நகை. அமெரிக்கன் தங்கத்தைப் பார்த்து உண்மையான தங்கம், விலை மதிப்புள்ள நகை என்று இதைப் பார்த்து யாரும் ஏமாறமாட்டார்கள். குழந்தைகள் பயமில்லாமல் போட்டுக் கொள்ளலாம். அழகாகவும் இருக்கு. மற்றைய விவரங்கள் ரசப்பொடி உள்பட அடுத்த கடிதத்தில்.

30. அலை எறியும் ஏரி

சிங்க பல்லவ அபராஜித வர்மனுடைய கருத்தெல்லாம் இரண்டு முக்கியமான விஷயங்களிலேயே தோய்ந்திருந்தன. மற்றவை எதுவுமே அவனுக்கு ஒரு பொருட்டாகவே தோன்றவில்லை.

ஏந்திழைச் செல்வி அமத்தி மின்னலின் மோகத்தினால் தூண்டப்பெற்ற கலையுணர்வு, அவனுடைய தற்பெருமையைத் தான் தட்டியெழுப்பியது. அந்தச் சயதிலையின் கிறக்கத்தில் பேரும் புகழும் பெற வேண்டும் என்கிற ஆசை, வையகத்தைவிட விரிந்து, கடலைவிடப் பரந்து, வானைவிட உயர்ந்து நின்றது. கோமளத் திட்டினை மாமல்லையைக் காட்டிலும் மாண்பு மிக்க சொர்க்கபுரியாக்க வேண்டும் என்று அவன் உள்ளம் ஒரு புறம் துடியாகத் துடித்தது.

மறுபுறம்,—

பல்லவ நாட்டின் வடக்கிலும் தெற்கிலும் எப்போதும் சள்ளை கொடுத்துவரும் களப்பிரர்களையும் வைதும்பர்களையும் தலைவர்களையும் பாண்டியர்களையும் தலைதூக்க வொட்டாமல் அடக்கி ஒடுக்கி, பல்லவ மகா சாம்ராஜ்யத்தைப் பலப்படுத்த வேண்டும் என்கிற எண்ணம் கவிந்துகொண்டிருந்தது. வடக்கில் தொல்லை கொடுத்த இரட்டர்களைப்பற்றி இப்போது அவன் கவலைப்படவில்லை. அவனுடைய கவலையெல்லாம் தெற்கு எல்லையைப்பற்றித்தான் இருந்தது. வஞ்சம் தீர்க்கக் காத்திருக்கும் பாண்டியர்களுடைய கொட்டத்தை யாரைக் கொண்டு அடக்குவது, எப்படி அடக்குவது? இந்தக் கேள்வியே எந்த நேரத்திலும் அவனுடைய உள் மனத்தில் முணுமுணுத்துக்கொண்டிருந்தது. எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும் அதன் நறநறப்பு உறுத்திக்கொண்டேயிருந்தது. அகளங்கனைப் பார்க்கும்போது ஆதித்தனும் நாக்கனைப் பார்க்கும்போது முத்தரையனும் அவன் மனக்கண்ணெதிரே வந்து நின்றார்கள். ஆதித்தன் தோன்றியபோதெல்லாம் பல்லவ நாட்டு இளவரசி அநுபமா தேவியும் காட்சியளித்தாள்.

ஊடலிலும் உறவாடலிலும் அமத்தி நகைத்தபோதெல்லாம் தன் தோல்வியே அவன் நினைவுக்கு முன் வந்துகொண்டிருந்தது. அநுபமாவின் காதலைப் பெறுவதில் தான் தோற்று விட்டதாகவே அவன் கருதினான். காதல் போட்டி என்று எதுவும் நடவாமலே ஆதித்தன் வெற்றி கொண்டு விடுவான் என்றும் தோன்றியது. எனவே, ஆதித்தனைப் பகைத்து, அவனை அடக்குவதா, அல்லது அவனை அணைத்து வெல்வதா என்று அவனால் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை.

இந்த விஷயத்தில் மகா சேனைத் தலைவர் வாணராய பெரும் பிடுகும் பிரதான அமைச்சர் மயூர சன்மனும் அவனுக்குத் தகுந்த ஆலோசனை கூறி உதவுவார்கள் என்றும் அவனுக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. ஆதித்தனை அவர்கள் விரும்பவில்லை; அவனிடம் அவர்களுக்கு நம்பிக்கையில்லை. அப்படி நம்பிக்கையில்லாமல் போனதற்கு அவனும் கங்க சேனைத் தலைவரான பிரம்மராஜ ராயருமே பொறுப்பு. ஆகவே, அவர்களுடைய ஆலோசனை உதவியாக இராது என்றே அவனுக்குப் பட்டது. இந்த விஷயத்தைத் தானே விவேகத்துடனும் முன் யோசனையுடனும் முடிவு செய்தாக வேண்டும் என்று அவனுக்குப் பட்டது. காஞ்சியில் இருந்தால் மற்றவர்களை மரியாதைக்காகவேனும் கலந்து ஆலோசிக்க வேண்டியிருக்கும். இங்கே, கோமளத் திட்டில் அந்த நிர்ப்பந்தம் இல்லை. இங்கே அவனாகவே எதையும் முடிவு செய்யலாம். அதை நிறைவேற்றவும் வழி வகை காணலாம். அது சரியான முடிவா அல்லது தவறான ஒன்றா என்று குறை சொல்ல இங்கே யாரும் இல்லை. காஞ்சியில்தான் என்ன, அவன் உள்ளத்தில் இருப்பதை அப்படியே திறந்து காட்ட முடியுமானால், அங்கும் அவனை யாரும் குறை கூறத் துணிய மாட்டார்கள்.

ஆனால், அவன் நினைப்பதை அப்படியே எப்படி மனம் திறந்து காட்ட முடியும்? அது சாத்தியமேயல்ல. அவர்கள் வயதில் பெரியவர்கள். காரிய சாதனையைக் கருதித் துணியும் இளைஞர்களுடைய போக்கை அவர்களால் ஒப்புக்கொள்ள முடியாது. நடையைப் போலவே அவர்கள் மனப் போக்கிலும் ஒரு வேகம் இருக்காது. அவனைப்போன்றவர்களுடைய துடிப்பை அவர்கள் அநுபவ ஞானம் என்ற உரை கல்லில் இழைத்துப் பார்க்கத் தொடங்கி விடுவார்கள். ஒரு சக்கரவர்த்தியின் பேச்சுக்கும் செயலுக்கும் ஏற்ற தகுதிகளையெல்லாம் வைத்து அளவிட வந்து விடுவார்கள். விஷய கௌரவத்தையும் தாரதம்மியத்தையும் வைத்து,

திருத்துப் பார்ப்பார்கள். காதல் வசப்பட்ட ஆணிடமோ, பெண்ணிடமோ அவர்களுக்கு அவநம்பிக்கைதான் அதிகம். எதையும் பரீட்சை செய்து பார்ப்பதில், அவர்களுக்கு ஆர்வம் இல்லை. இதையெல்லாம் கொண்டு பார்த்தபோது, கோமளத் திட்டே அவனுடைய எண்ணங்களைச் செயல்படுத்திப் பார்க்க ஏற்ற இடமாக இருந்தது.

'அமத்தி, ஆதித்தனுக்கு ஆள் அனுப்பியிருக்கிறேன். தெரியுமா?' என்று கேட்டான் அவன்.

'அப்போதுதான் நான் இருந்தேனே!'

'ஆமாம், ஆமாம். நாளை இந்நேரமெல்லாம் அவன் வந்து விடுவான் என்று நினைக்கிறேன்.'

அமத்தி அவனுடைய திட்டம் ஒன்றும் புரியாமல் விழித்தாள். 'சரிதான்' என்றாள். அவன் வந்தால் பொதுவாக அவள் அவனிடமும் சரி, அபராஜிதனிடமும் சரி, எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்று அவளுக்குத் திட்டவட்டமாகப் புரியவில்லை. அன்றொரு நாள் இரவில் அவள் அவனோடு தன் மாளிகையிலே உரையாடியிருக்கிறாள். அபராஜித வர்மனுக்கு ஆகாதவள் போலவே நடித்திருக்கிறாள். சக்கரவர்த்தியாரின் இலச்சினைக் கணையாழியை வலுவிலே வழங்க முன் வந்திருக்கிறாள். ஆனால், எல்லாம் முன்னேற்பாட்டின்படிதான் நடந்துகொண்டிருக்கிறாள். இப்போது அவள் உள்ளப் போக்கே வேறு விதமாக இருந்தது. அபராஜிதனின் சகவாசத்தில் இன்பம் காணும் அமத்தி வேறு, உண்மை அமத்தியான தான் வேறு என்றே அவள் மனம் எண்ணமிட்டுக்கொண்டிருந்தது. அகமும் புறமுமாகத் தன்னைப் பூரணமாக உணர்ந்த யாரோ ஒருவர் வீசு கடல் காற்றிலே கலந்து மறைந்து தன்னைக் கவனிப்பது போல இருந்தது அவளுக்கு. அருவமான இரு கண்கள் தன்னை இந்தப் பக்கமாகவும் அந்தப் பக்கமாகவும் நோக்குவதுபோன்ற பிரமை ஏற்பட்டுக்கொண்டேயிருந்தது. அடிக்கடி மீரண்டு தன்னைச்



சுற்றும் முற்றும் அவள் பார்த்துக்கொண்டாள். மென்தோளை இரு கரங்கள் மெல்ல வருடுவதுபோன்ற ஸ்பரிச சுகத்தைக் கற்பனை செய்துகொண்டு, உடலைச் சிலுப்பிக் கொண்டாள்.

'ஏன், இப்படிச் சிலுப்பிக்கொள்கிருய்? குளிர் வாடை உனக்குப் பொறுக்கவில்லையா, அமத்தி?' என்று கேட்டான் அபராஜிதன். அவனுடைய அதிகப்படியான அன்பும் அக்கறையும் அவளுக்கு வேதனையையே தந்தன. முத்து முத்தாக வேர்வை அரும்பி நின்ற நுதலையும் அதரங்களையும், ஒருங்கே ஒளித்துக்கொள்ள முடியாமல், அவள் புன்னகையால் பசப்பினுள்.

'இந்த மோகனப் புன்னகை ஒன்றே போதுமே, ஆதித்தனை நிலைகுலையச் செய்ய–' என்றுன் அபராஜிதன்.

அமத்திக்கு இப்போது தூக்கிவாரிப்போட்டது...ஆதித்தனை மயக்குகிற வீண் பொறுப்பு அவளுக்கு எதற்காக? அது மிக மிக எளிதாகவும் இருக்கலாம்; அவசியமாகவும் இருக்கலாம். ஆனால், அபராஜிதன் வஞ்சகமாக ஏமாற்ற முயல்வது யாரை? அவளையா, ஆதித்தனையா? அல்லது இருவரையுமேயா?

அந்தக் கண நேரத்தில் அவளுக்கு அவனுடைய மனப்போக்கு தெளிவாகவே பளிச்சிட்டு விட்டது. அவள் மன்னன் அபராஜிதனிடம் ஏமாறத் தயாராகவே இருந்தாள். ஆதித்தன் அவனிடம் ஏமாந்து போகிற விஷயத்திலும் அவளுக்கு அக்கறையில்லை. ஆனால், தன்னைக் கொண்டே தன்னை வஞ்சிப்பவனுக்கு உடம்பட்டிருக்க அவள் நெஞ்சம் மறுத்தது. அந்த நொடியில் அவனோடு கொண்ட உறவெல்லாம் வேம்பாகக் கசந்தது. காரணமில்லாத துக்கம் கரை புரண்டு வந்தது. உள்ளம் சோர்வுற்றது.

அவளுடைய உற்சாகமின்மையின் உண்மையான காரணத்தை அறியாத அபராஜிதன், அவளுடைய மனச் சோர்வை மாற்றச் செய்த முயற்சிகள் யாவும் அவள் வேதனையை அதிகப்படுத்தவே செய்தன. அருகில் ஆடலாசிரியர் இல்லாத குறையை அவள் இப்போது தான் பெரிதும் உணர்ந்தாள். உள்ளத்தைக் - கொள்ளை கொள்ளும் இயற்கை எழில் மிகுந்த அந்தப் பிரதேசத்தில் சிறைப்பட்டிருப்பதுபோலவே அவளுக்குத் தோன்றியது. தங்கக் கூண்டில் பாலும் பழமுமாகக் கிடைத்தாலும் கிளிக்கு அது சிறைதானே? தங்கக் கூண்டு அரண்மனையாலேயே இருக்கட்டும்; கொஞ்சுகிறவள் அரசகுமாரியாகவே இருக்கட்டும். அதனுல், கிளிக்கு என்ன மகிழ்ச்சி? அமத்தி அந்தக் கூண்டுக் கிளியின் நிலையில் இருப்பதாகவே எண்ணிக் கலங்கிளுள்.

மறுநாள்தான் அந்தக் கலக்கம் ஒருவாறு தெளிந்தது. உறையூர் சென்றிருந்த ஒற்றன் கொணர்ந்த ஓலை அவளுடைய சோர்வைப் போக்கி, உல்லாசத்தைக் கொடுத்தது. அவசியமானுல் உறையூர் வந்து யோசனை கேட்டுச் செல்லுமாறு அபராஜிதனுக்கு விடை கொடுத்திருந்தான், ஆதித்தன்.

'பார்த்தாயா அகளங்கா! 'உறையூர்ச் சோழர்கள் உறுதி படைத்தவர்கள். அவர்களுடைய விசுவாசம் நிலையானது. பல்லவர்களைப்போலவே பாண்டியர்களைப் பகைக்கும் சோழர்களின் உறவை உதறித் தள்ளுவது உகந்ததல்ல' என்றெல்லாம் உளறினுயே! பார்த்தாயா, அந்தக் குட்டிச் சோழனின் திமிரை! போன ஒற்றனை அவமதித்து அனுப்பிய ஆதித்தனின் நட்பு இனியும் நமக்கு அவசியந்தானு?' என்று கொதித்து எழுந்தான்.

அகளங்கன் தலை குனிந்து நின்றுன். அரசனுக்கு யோசனை கூறுகிற அளவுக்கு அவனுக்கு அந்தஸ்தோ, தகுதியோ இல்லை. அந்தத் தகுதியின்மை இப்போது இந்த ஓலையினுல் மேலும் உறுதியாகி விட்டது. அந்த ஓலையைப் பன்முறை படித்த பின்பும் அவமதிப்பைக் காட்டுகிற எந்தச் சொற்களையும் அவனுல் காண முடியவில்லை. மதிப்பு, அவமதிப்பு என்பதெல்லாம் அரசர்களுக்கு மட்டும்தான் புரியுமோ, என்னவோ என்று அவன் வாளாவிருந்தான். அரசன் இவ்வளவு கோபப்படும்படி அந்த ஓலையில் என்ன இருக்கிறது என்றே அவனுக்குப் புலப்படவில்லை.

'சரி; இது வேறு யாருக்கும் தெரிய வேண்டாம். முத்தரையனைச் சந்தித்துப் பேச விரும்புகிறேன் என்று நாக்கனிடம் போய்ச் சொல். அவனுடைய ஆவலையும் தான் தடுப்பானேன்?' என்று கூறினுன்.

வல்லம் கோட்டையை விட்டு ஓடியதிலிருந்து முத்தரையன் ஒளிந்து வாழ்ந்து வந்தான். பலரும் அவன் பாண்டி நாட்டுக்குச் சென்றிருப்பதாகப் பேசி வந்தார்கள். ஆனுல், மாறுவேடம் புனைந்து, அவன் உறையூருக்கு வடகிழக்கில் உள்ள காடுகளில் வாழ்ந்து வந்தான். வல்லம் கோட்டைக்கு நேர் வடக்காகவும் காஞ்சியிலிருந்து உறையூர் செல்லும் வழியாகவும் இருந்த பகுதிகளையடுத்த காடுகளில் நம்பிக்கைக்குரிய ஒற்றர்களோடு அவன் தங்கியிருந்தான். சோழர்களை வல்லத்திலே நிலைக்க விடாமல் செய்ய அவன் செய்த முயற்சிகள் பலித்து விட்டன. பல்லவர்களின் தென் மண்டலச் சேனை வல்லம் பகுதியில் தங்கியிருப்பதைப் பயன்படுத்திக்கொண்டு, மீண்டும் எப்பாடு பட்டேனும் வல்லத்தை வசப்படுத்த வேண்டும் என்று அவன் ஓயாது திட்டமிட்டு வந்தான். பாண்டியர்கள் வென்றுலும் பல்லவர்கள் வென்றுலும் அவனைப் பற்றியவரையில் இரண்டும் ஒன்றுதான். ஆனுல், சோழர்கள் கை ஓங்குவது களப்பிரர் அழிவுக்கு அறிகுறியாகும். ஒரு காலத்தில் சோழ பாண்டிய மண்டலங்கள் இரண்டையும் ஒரு குடைக்கீழ்க் கட்டியாண்ட களப்பிர வம்சத்தின் தீராத பகைவர்கள் இந்த உறையூர்ச் சோழர்கள்தான். ஆகவே, இரவு பகலாக அந்தச் சோழர்களை எதிர்த்து வெல்ல அவன் கங்கணம் கட்டிக்கொண்டிருந்தான். சிறந்த பேச்சு வன்மையும் தந்திரங்களும் தெரிந்த முத்தரையனுக்குப் பல விதத்திலும் உதவியாக இருந்தான் பழுவூர் நாக்கன். வல்லம் கோட்டை முற்றுகையின்போது முத்தரையனை முன்னிட்டுத்தான் நாக்கன் போர்முகத்தில் இளம் கோட்புலியாரையும் உறையூர் அரண்மனையில் விஜயாலய சோழனையும் போய்ப் பார்த்தான். ஆதித்தன் மட்டும் எதிர்பாராத விதமாக வந்திரா விட்டால், வல்லம் போரின் முடிவு இப்போது வேறு விதமாக இருந்திருக்கும். ஆயினும் பல்லவ சேனையை வல்லம் பகுதியில் கண்காணிக்கும்படிச் செய்ய உதவியவன் நாக்கன்தான். 'நாம் நினைப்பதுபோல் முத்தரையன் பல்லவர்களுக்குப் பகைவர்களல்ல; விஜயாலய சோழன் உண்மையில் நாம் எண்ணியிருப்பது போல நமது நண்பனுமல்ல. அவன் சந்தர்ப்பவாதி. அவன் கைப்பற்றிய வல்லம் கோட்டையை நம்முடைய பல்லவ சேனையின் பொறுப்பிலேயே விட்டு வைத்திருப்பது நல்லது. சமயம் நேரும் போது, இதன் அனுகூலம் நமக்குத் தெரியும்' என்று நாக்கன், காஞ்சிக்கு ஓலையனுப்பினுன். அப்படி அவனை எழுதத் தூண்டியவன் முத்தரையன்தான்.

'யார் இந்த நாக்கன்?' என்று விசாரித்தான் அபராஜிதன், அந்த ரகசிய ஓலையைப் பார்த்துவிட்டு.

'பாகூர்க் கோட்டத்து மார்த்தாண்டனின் தம்பி!' என்றுர் மயூர சன்மன்.

'அப்படியா? அவனைவிட இவன் மிகவும் புத்தி கூர்மை படைத்தவனுகத் தோன்றுகிருனே!'

அபராஜித வர்மன் குறிப்பிட்ட இந்தப் பாராட்டு மொழி நாக்கனுக்கு எட்டியது. 'எல்லாம் உங்களால்தான்!' என்று முத்தரையனைச் சந்தித்தபோது கூறிக் கொண்டாடினுன். நாக்கன் இவ்வாறு பல்லவ அரசனிடம் நல்ல பெயர் எடுப்பது தனக்குப் பின்னுல் மிகவும் உபயோகமாக இருக்கும் என்று முத்தரையன் எண்ணினுன். தன் ஒரே மகளையும் தஞ்சையையும் அடையப் போவதாக எண்ணியிருக்கும் நாக்கனுக்கு, மேலும் அரசனுடைய அன்பையும் நம்பிக்கையையும் பெறும் வழிகளைச் சொல்லிக் கொடுத்து வந்தான் முத்தரையன்.

ஒரு தடவை நாக்கன் அவனைப் பார்க்க வந்தபோது, தன்னுடன் இருந்த ஒருவனைக் காட்டி, 'பாகூர் வீரரே! இவனை நீங்கள் நன்றுகப் பயன்படுத்திக் கொள்ளலாம். தஞ்சையில் விஜயாலயனுக்காகத் துர்க்கையின் கோயிலைக் கட்டிய ஜயன் என்ற சிற்பியோடு இரட்டையாகப் பிறந்த பெரும் சிற்பக் கலைஞன் இந்த விஜயன். இவனுல் பல்லவ சக்கரவர்த்தியினுடைய புகழ் இந்தப் பார் எங்கும் ஒளி வீசித் திகழும்!' என்று கூறினுன்.

நாக்கனுக்கு இந்த வாய்ப்பு பெரு மகிழ்ச்சியைத் தந்தது. 'வல்லத்தரசே! உங்களை வாழ்த்துகிறேன். உங்களுடைய அன்பை என்னவென்று சொல்வது! நான் பல்லவ அரசனுடைய பெரு மதிப்புக்குரியவனுவதில்தான் உங்களுக்கு எவ்வளவு அக்கறை! ஆனுல், இன்னெரு விஷயம்: இந்தச் சிற்பி விஜயன்...' என்று முற்றும் கூறுமல் பாதியில் நிறுத்தினுன்.

'அதைப்பற்றி உங்களுக்குக் கவலையே வேண்டாம். கலையை உயிரெனப் போற்றும் அபராஜித வர்மனுடைய கனவையெல்லாம் நினைவாக்கத் தகுந்தவன் இவன். இவனுல் உங்களுடைய உறவும் உறுதி பெறும். இவனுடைய கலைத் திறமைக்கு நிகரான ஒரு கலைஞனை எங்குமே காண முடியாது. இவனுடன் பிறந்த சிற்பி ஜயன்கூட இவனுக்கு இணையாக மாட்டான் என்றே சொல்வேன்!' என்றுன் முத்தரையன்.

அவன் சொன்னதுவரையில் உண்மையைத்தான் கூறினுன். இரட்டையர்களான ஜயன்–விஜயனைப்பற்றி அறியாதவர்களே இல்லை. கடல் கடந்தும் அவர்கள் புகழ் பரவியிருந்தது. மாமல்லபுரத்தை உருவாக்கிய மகா சிற்பிகளின் வழி வந்தவர்கள் அவர்கள். இப்போது காஞ்சிக்குத் தென்மேற்கே நடு மண்டலத்தில் வாழ்ந்து வந்தார்கள். இந்த மண்டலத்தில் பல்லவருக்கு எதிராக ஒரு கிளர்ச்சி எழுந்தது. அதை ஒடுக்க உறையூர்ச் சோழர் விஜயாலயர் செல்ல வேண்டியிருந்தது. தஞ்சையிலிருந்து முத்தரையனை விரட்டி, அங்கே தன் குல தெய்வமான துர்க்கைக்குக் கோயில் எழுப்பியிருந்தார் அந்தச் சோழ அரசர். முத்தரையன் தஞ்சையை மீட்கச் சமயம் பார்த்திருந்த போதுதான் விஜயாலய சோழர் நடுமண்டலக் கிளர்ச்சியை ஒடுக்கப் போகவேண்டியிருந்தது. துர்க்கைக்குக் கோயில் கட்டிய சிற்பி

நினைத்தபடி நடந்தால்... சந்தனு.

Tushar
VANASPATI
துஷார் வனஸ்பதி
வீடமின் ஏ & டி கூடியது.
துங்கபத்ரா இன்டஸ்ட்ரீஸ் லிட்., கர்நூல்
2 பவு. 5 பவு. & 10 பவு. டின்களில் கிடைக்கும்.



ஜயன், சோழரின் பக்கமாக நின்று ஆதரவு காட்டினான். ஆனால், விஜயனோ சோழ அரசன் தன் நாட்டுக் கிளர்ச்சியை அடக்க வந்ததை வெறுத்தான். மேலும், அவனுடைய சகோதரி சோனாட்டு வீரன் ஒருவன்மீது காதல் கொண்டதும் அவனுக்குப் பிடிக்கவில்லை. இந்தக் காரணங்களினால் ஈருடலும் ஓருயிருமாக இருந்த சகோதரர்களிடை மனவேற்றுமை அதிகரித்துவிட்டது. அவர்கள் ஒருவர் முகத்தில் ஒருவர் விழிப்பதில்லை என்ற நிலைக்கு வந்து, பிரிந்து போய்விட்டார்கள். விஜயன் நேரே முத்தரையனிடம் போய்ச் சேர்ந்தான். தஞ்சையை மீட்க இதுவே ஏற்ற தருணம் என்பதை எடுத்துக் காட்டினான். நடுமண்டலத்திலிருந்து விஜயாலய சோழர் வெற்றியோடுதான் திரும்பினார். ஆனால், அதற்குள் தஞ்சை மாநகர் பழையபடிக் கைமாறிப் போய்விட்டது. கிளர்ச்சியினால் களைத்திருந்த விஜயாலயர், முத்தரையனோடு உடனே போரிட விரும்பவில்லை. பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்று இருந்துவிட்டார். முத்தரையன் சமண சமயத்தைத் தழுவியவனாக இருந்தபோதிலும், நகர மக்களுடைய சமய உணர்ச்சியை மதித்து, சிற்ப எழிலும் சக்தியும் கொண்ட துர்க்கையின் ஆலயத்தை அப்படியே விட்டு வைத்தான். விஜயனுக்கு அதைக் காணும் போதெல்லாம் உள்ளம் குறுகுறுத்தது. அதைவிடப் பன்மடங்குச் சிறப்புக் கொண்ட பணியைச் செய்து முடிக்க அவன் துடித்துக் கொண்டிருந்தான். ஆகவே, இந்த விஜயன், நாக்கனைவிடத் தன்னுடைய லட்சிய வெற்றிக்கு மிகவும் பயன்படக்கூடும் என்பதே முத்தரையனின் அந்தரங்க எண்ணம். அந்த எண்ணம் அநேகமாக இப்போது கைகூடி விட்டது. நாக்கனைக் கொண்டே விஜயனை அவன் அபராஜிதனைச் சந்திக்கும்படிச் செய்துவிட்டான், தனிமை அமத்தியின் உருவைச் சிற்பமாகச் செய்து, விஜயன் அபராஜிதனின் மதிப்பையும் பெற்றுவிட்டான். கோமளத் தீவைக் கலைவளம் கொழிக்கும் சிற்பபுரியாக உருவாக்குகிற ஆசைக் கனலை அந்தச் சிற்பி உண்டாக்கியும் விட்டான். இதுவே முத்தரையரின் லட்சியத்தில் பாதி வெற்றியைப் பெற்றது மாதிரிதான்.

இனி எந்தச் சமயத்திலும் தனக்குப் பல்லவ அரசனிடமிருந்து அழைப்பு வரலாம் என்றே அவன் எதிர்பார்த்திருந்தான். அதுவும் இப்போது நிறைவேறி விட்டது. அதுவரையில்தான் அவன் செய்யக் கூடியதெல்லாம்; மீதி நிறைவேறுவது அதிருஷ்ட தேவதையின் அருளைப் பொறுத்தது என்று அவனுக்குத் தோன்றியது. களப்பிரர் வாழ்வை நிலைக்கச் செய்ய வேண்டிய பொறுப்பை, தான் வணங்கி வழிபடும் அருகக் கடவுள் மீது சுமத்திவிட்டு, தன்னை அழைத்துப் போக வந்த நாக்கனுடனும் மற்றோர் ஒற்றனுடனும் அவன் புறப்பட்டுவிட்டான்.

'பாகூர் வீரரே, உம்முடைய இந்தப் பேருபகாரத்துக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்? களப்பிரர் வம்சமே உங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறது. அரசரின் அழைப்பை ஏற்காமல் ஆதித்தன் புறப்பட்டு வர மறுத்ததே நல்லதாயிற்று. எல்லாம் அருகப் பெருமானின் திருவருள்! எங்களுக்கு இதனால் ஏற்படவிருக்கும் நன்மைக்கெல்லாம் நீரே பொறுப்பு என்பதை நினைக்கும்போது, என் உள்ளத்தில் எத்தனை நன்றியுணர்ச்சி பொங்குகிறது, தெரியுமா?' என்றான் முத்தரையன்.

முகத்துக்கு நேரே முகஸ்துதி செய்வதில் நாக்கனுக்கு முத்தரையன் சளைத்தவனாகத் தோன்றவில்லை. எவனுக்குத் தற்பெருமை அதிகமோ, அவன் முகஸ்துதியில் அதிகம் மயங்குவான் என்பதற்கு **நாக்கனும் சரி, முத்தரையனும் சரி;** ஒரு விளக்கமாக விளங்கினார்கள்.

'வல்லத்தரசே! நான் என்ன பெரிதாக உங்களுக்குச் செய்துவிட்டேன்! இதற்கெல்லாம் உங்களுடைய அன்புதானே காரணம்? நான் அபராஜித வர்ம பல்லவருக்கு ரகசிய ஓலை அனுப்பியதற்கு மூல காரணமே நீதானே! 'பாகூர் நாக்கன் என்று சொல்; ரகசிய ஓலையனுப்பினவன் என்று அவர் என்னை அறிந்து கொண்டு விடுவார்!' என்றுதான் அகளங்க காடவராயனிடம் கூறினேன். அடுத்த நொடியிலேயே என்னை அவர் எத்தனை மதிப்பாக நடத்தினார் தெரியுமா? எனக்கே அது மிகவும் பெருமையாக இருந்தது. அத்தனை பேரும் என்னையே தான் பார்த்தார்கள். இதற்கெல்லாம் நீர் தானே வழி வகுத்துக் கொடுத்தது? அந்த நன்றியை நான் அதற்குள் மறந்து விடுவேனா? அந்த நன்றிக் கடனை நான் செலுத்த வேண்டாமா?' என்றான் நாக்கன்.

இருவரும் இவ்விதம் பரஸ்பரம் முகஸ்துதி செய்தவாறே, உரையாடிக்கொண்டு வந்தார்கள். இருவருடைய உள்ளத்திலும் தம் தம் நோக்கத்தை எப்படி நிறைவேற்றிக்கொள்வது என்ற எண்ணமே மேலோங்கி நின்றது. முத்தரையனுடைய நாட்டையும் அவனுடைய ஒரே செல்வ மகளையும் அநேகமாக அடைந்து விட்டோம் என்றே நாக்கன் மனக் கோட்டை கட்டினான். அதுபோலவே சோழர்களின் கொட்டத்தை ஒடுக்கி, பல்லவர்களுடைய பக்கபலத்தைப் பெற்றுவிட்டதாகவே எண்ணி முத்தரையன் பகற் கனவு கண்டு நின்றான்.

பொழுது சாயப் புறப்பட்ட அவர்கள், இருளில் வழி தெரியாமல் எங்கெங்கோ சுற்றியலைந்துவிட்டு, பொழுது நன்றாகப் புலர்ந்த பிறகுதான் கோமளத் திட்டைச் சூழ்ந்த அடவியை அடைந்தார்கள். கோமளத் திட்டை எப்படிச் சொர்க்கபுரியாக்க வேண்டும் என்று சிற்பி விஜயன் மணலிலே சித்திரம் வரைந்து காட்டிக்கொண்டிருந்தான். அதைப் பார்த்துப் பூரித்து நின்றான் அபராஜிதன். அமத்தி சிற்பச் சிலையென அசையாது நின்றாள். அந்தச் சமயம் பார்த்துத்தான் நாக்கன், முத்தரையன் வந்து காத்திருக்கும் செய்தியைக் கூறினான்.

'எங்கே அந்த ஏரிக்கரை மலைக் குகை வாயில் அருகில்தானே? முன்னால் போ! இதோ வருகிறோம்!' என்று கூறிவிட்டு, அபராஜிதன் அமத்தியை நோக்கினான். அவள் கண்கள் ஏதோ கனவு காண்பவை போலத் தோன்றின. சிற்பி விஜயன் பேச்சிலும் பார்வையிலும் இதுவரையில் கண்டறியாத ஒரு புதுமை பூத்திருப்பதை அவள் உணர்ந்தாள். அவனுடைய கண்ணெதிரே அரசனுடைய போகப் பொருளாக நிற்கும் தன்னை அவள் நொந்துகொண்டாள். அந்த அவமானத்தையும் மீறிய ஒரு நாணம் அவளது செவ்விய முகத்தை மேலும் அழகுறச் செய்தது.

'ஏரியிலே தோணி இடச் சொல்லியிருக்கிறேன். வா, போகலாம்!' என்று அவளைமட்டும் அழைத்தான் அபராஜிதன்.

ஆனால், அவளோ அவன் மறந்துவிட்ட ஒரு கடமையை நினைவுபடுத்துபவள் போல் சிற்பியைப் பார்த்து, 'நீங்களும் தான்! நின்றுவிட்டீர்களே அப்படியே... அவர் உங்களை அழைக்க மறந்துவிட்டாரோ என்று மயங்குகிறீர்களா? அரசர்கள் அரசியலைப்பற்றிப் பேசினால், கலைஞர்கள் அதுவரையில் கலைகளைப்

பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி" REGD

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் அசல் விஜயகரம் மருந்து. எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும். போலிகளைக் கண்டு ஏமாறுதீர்

Dr. பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,
19, தெற்குமாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்-4. போன்: 71354
கும்பகோணம் கிளை: 7, சாரங்கபாணி கோவில் கீழ வீதி.

"டாக்டர் ஸார்! நேத்து ராத்திரி வயிற்று வலி ரொம்ப ஜாஸ்தியா போயிடுத்து. பேசாமல் தூக்கு போட்டுண்டுடலாமான்னு கூட யோசனை பண்ணிட்டேன்......"

"நீங்க ஒண்ணு! நான் ஒருத்தன் இருக்கும்போது நீங்க எதுக்கு அப்படியெல்லாம் செய்யணும்!......"

பற்றிப் பேசிக்கொண்டிருக்கலாமே!' என்றாள் அமத்தி.

'அதுவும் சரிதான். மறந்துவிட்டேன், விஜயா! நீயும் வாயேன், போகலாம்!' என்றான் அபராஜிதன்.

முத்தரையனிடம் என்ன பேச வேண்டும், எப்படிப் பேச வேண்டும் என்பதைப் பற்றித்தான் சிந்தித்தவாறு சென்றான் அபராஜிதன். ஆனால், அமத்தியோ காற்றிலே கலந்திருந்த அருவமான உருவத்தை விஜயன் வடிவாகக் கண்டாள். இரண்டு நாட்களாகப் பார்த்த விஜயன் வேறு; இப்போது தன்னிடமிருந்து மரியாதையாக விலகி நடந்துவரும் விஜயன் வேறு என்றுதான் அவளுக்குத் தோன்றியது. காற்றோடு மறைந்து, தன் கருத்தையே மயக்கிய நோக்கு அவன் கண்களிலே மிதப்பதை அவள் கண்டாள். எத்தனையோ ஜன்மங்களாகச் செவியுற்ற குரலைத்தான் அவனுடைய பேச்சிலே ஒலிப்பதாக அவள் எண்ணிக்கொண்டாள். அவன் நடந்து செல்லும் மணலில் கூடவே நடந்து செல்வதால், அவனுடைய உறவு இணைந்துவிட்ட மாதிரி ஒரு பிரமை உண்டாயிற்று அவளுக்கு. முதல் நாள் இரவெல்லாம் உண்டாகாத ஒரு தெளிவு இப்போது தெள்ளெனப் பிறந்து விட்டதாக அவள் உவகித்துக்கொண்டாள். அந்தத் தெளிவிலே எட்ட முடியாத அதன் ஆழம் தெரிந்தது அவளுக்கு. அதுவே அவளுக்கு ஒருபுறம் வேதனையை அளித்தது. அந்த வேதனையே ஒருவித இன்பத்தைக் கொடுப்பதுபோல் இருந்தது. அந்த இன்பத்தை விழுங்க ஆவெனக் காத்திருந்தது ஒரு பயம். அந்தப் பயத்தைக் கண்டு எள்ளி நகையாடியது துணிச்சல். துணிச்சலைத் தடுத்தது நாணம். கண்ணிமைகளில் கனமாகத் தொங்கியது பெண்மை. இத்தனை அவஸ்தைகளையும் உணராமல் நடந்து போய்க்கொண்டிருந்தான், அபராஜிதன். அரசனுடைய இறுமாப்புக்கு அது இலக்கணமாகவே இருந்தது. ஆனால், சிற்பக் கலைஞனான விஜயனுக்கு இந்த உதாசீனம் எங்கிருந்து வந்தது? இது எப்படி அவனுக்குப் பொருந்தும்? இது என்ன அலட்சியமா, இல்லை; பயம்தான் காரணமா? அதைப் புரிந்துகொள்ள அமத்தியினால் முடியவில்லை.

மஞ்சள் வெயில் ஏரியைப் பொன்னேரியாக்கியிருந்தது. வண்ண வண்ணப் பறவைகள் எல்லாம் சிறகடித்துக் களிநடம் புரிந்தன. நீர் நிலையின் பூங்காற்றைத் தீண்ட முடியாமல் கடற்காற்றைத் தடுத்து நின்றது மலைக் குன்று. அவள் குனிந்த தலை நிமிராமல் தோணியிலே போய் அமர்ந்துகொண்டாள். விஜயனை அவள் வாய்விட்டு அழைக்கவில்லை. ஆனால், அவனோ தனக்குரிய இடம் அங்கேதான் இருக்கிறது என்று கருதியவன்போலத் தோணியின் மறுபுறத்திலே போய் அமர்ந்துகொண்டான்.

குகை வாயிலிலே அபராஜிதனுக்காகக் காத்திருந்த முத்தரையனை அவன் கண்கள் முன்பின் கண்டிருப்பதாகவே காட்டிக்கொள்ளவில்லை. அவனுடைய பார்வை அமத்தியின் ஒயில் நடையைத் தான் பின்பற்றிச் சென்றது. அதன் வழி கால்கள் போயின.

அபராஜிதன் அத்தனை சீக்கிரத்தில் வந்தவனிடம் உரையாடிவிட்டுத் திரும்புவான் என்று அவர்களுக்குத் தோன்றவில்லை. ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளவே அவர்கள் அஞ்சினார்கள். ஒருவரோடு ஒருவர் பேசுவதற்கும் துணியவில்லை. ஆயினும் மெல்லிய பூங்காற்றில் அசைந்து நெளிந்துவரும் அலைகளைப்போல அவர்களுடைய உள்ளத்து அசைவுகள் சேராமலே விரிந்து விரிந்து போய்க்கொண்டிருந்தன. அலைகள் ஒன்றோடொன்று சேருவது ஏது? கரையிலே போய் மோதிச் சிதறும்வரையில் அவை சம தூரத்தைக் கடந்து நெருங்கும் பேச்சுக்கே இடமில்லை. அந்த அலைகளைப் போலத்தான் அவர்கள் தோணியின் இந்தக் கோடியிலும் அந்தக் கோடியிலுமாக அமர்ந்திருந்தார்கள். தளக் தளக்கென்று தோணியைச் சாடும் அலைகளின் ஓசையிலேயே அவர்கள் ஒன்றிக் கலந்திருந்தார்கள்.

அபராஜிதனை முத்தரையன் வணங்குவதும், பதிலுக்கு அபராஜிதன் தலையை அசைப்பதும் அவர்களுக்குத் தெரிந்தது. அருகில் நின்ற நாக்கனும் அகளங்கனும் இப்போது சிறிது விலகி நின்றதையும் அமத்தி கண்டாள். அரை நாழிகை நேரம்கூட அவர்கள் உரையாடிக்கொண்டிருக்க மாட்டார்கள். தூரத்திலே அவர்களை நோக்கி ஓர் ஒற்றன் குதிரையிலே விரைந்து வருவது தெரிந்தது. அந்த ஒற்றன் குதிரையை விட்டிறங்கி, அகளங்கனிடம் தனியாக ஏதோ கூறுவதையும் அவள் கண்டாள். அவன் கூறிய செய்தியைக் கேட்ட அகளங்கன், அவசர அவசரமாக அபராஜிதன் காதோடு போய் ஏதோ சொல்வதையும் அவள் பார்த்தாள்.

'ஆ!' என்று கறுவிப் பல்லைக் கடித்தான் அபராஜிதன்.

'சரி; நான் சொல்லியனுப்புகிறேன்!' என்று முத்தரையனுக்கு விடையளித்து விட்டு, அவன் ஏரிக் கரையில் இருந்த தோணியைப் பார்த்தான்.

'உண்மையா அகளங்கா! அந்த ஒற்றன் சரிவரப் பார்த்துவிட்டுத்தான் வந்திருக்கிறானா?' என்று கடுமையும் ஐயமும் கலந்து தொனிக்க உசாவினான் அபராஜிதன்.

'ஒரு நாள் முழுவதும் நன்றாகத் தேடிப் பார்த்துவிட்டுத்தான் பிரம்மராஜ ராயர் அவர்கள் இவனை அனுப்பியிருக்கிறார்கள். இளவரசி எங்கே போனாள், எப்படி, எப்போது போனாள் என்பதே தெரியவில்லையாம்!' என்று அடக்கவொடுக்கத்தோடு விடையளித்தான் அகளங்கன்.

அவ்வளவும் அமத்தியின் காதுகளில் விழுந்தது. அபராஜிதன் அதைக் கேட்டுச் சிலையாக நின்றதும் அவள் கண்களில் பட்டது.

(தொடரும்)

சுதேசமித்திரன், சென்னை - 2

அறிவிப்பு

1—6—58 முதல் கல்கத்தாவில் நம் மித்திரன் வாரப்பதிப்பை விற்பனை செய்யவும் சந்தாதாரர்களுக்கு பட்டுவாடா செய்யவும் கீழ்குறித்துள்ள விலாசதாரரை எமது ஏஜண்டாக நியமித்துள்ளோம். அன்னாரிடம் சந்தா செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளுமாறு மித்திரன் அன்பர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஸ்ரீ R. விஸ்வநாதன்,
நியூஸ் ஏஜண்ட்,
27A, ராஜா பஸந்த ராய் ரோடு,
கல்கத்தா.

சர்க்குலேஷன் மானேஜர்.

கடவுளின் அறிவு

ரஞ்சனி

—★—

பகுத்தறிவுப் பாசறையில் வளர்இளைஞன் வேலன்
பலசமயச் சீலமதும் ஏய்த்திடவே என்பான்
நகைத்திடுவான் தெய்வவழி பாடதனைக் கண்டு
நகையுடனே சிலையுடைப்பில் குதித்திடவும் செய்தான்
பகைத்திடுவான் முக்கண்ணன் வழிமுதலாம் கலையை
'பெருமாயை, ஆரியத்தின் அச்சாணி' எனவே
பகன்றிட்லோ தமிழ்முடியும், தனிப்பண்பும் வாழ
வசைமொழியோ கம்பனுடன் வில்லி இளங்கோமேல்
'தலைசார்ந்த தமிழுலகின் சிறப்பு கலைக்கோயில்
சூத்திரமே கடவுளெ'னும் உண்மையினைப் பாரான்
வெகுண்டெழுவான் பழமையெனில் பெருமூட மெனவே
சிறுமூளைத் துலாக்கோலில் விருப்பு வெறுப்பேற்றி
சகலமுமே நிறுத்திடலோ கோல்சாய்த லியல்பே
சாத்திரங்கள் குப்பையெனச் சாடிடுவான் சீறி
தகைசார்ந்த பெரியோர்தம் அனுபவக்கண் ணடி
அவையென்ப தறியாமல் அனைத்தினையும் வெறுத்து
பகவானு முட்டாள்தான் படைப்பினிலே தெரியுதென
பாமரரின் மனம்குழம்ப பலவாதம் புரிவான்
இகவாழ்வே சதமென்று சுகபோகம் துய்ப்பான்
இயல்பான ஒழுககநெறி அத்தனையும் விட்டான்
புகளூரில் வெயில்நாளில் பேரால மரநிழலில்
அயர்வுடனே ஒதுங்கிட்டு அண்ணாந்து படுத்தான்
இகழ்ச்சியதன் எக்காளம் அவன் முகத்தில் ததும்ப
எள்ளிச் சிரித்திட்டான் இறைபடைப்பில் குறையாம்
சகமாளும் மன்னவரின் நாற்படையும் இளைப்பாறும்
பெருமரத்தின் காயினுககுப் பரிமாணம் விரல்நுனியோ!
வகையான மலைப்பிஞ்சின் அளவேனோ பூசனிக்கு?
அறிவீனம் இதுவலவோ என்றானே இறுமாந்து
முகமத்தி மூக்கின்மேல் வீழ்ந்ததுவே காயொன்று
நரம்பதிரத் துடிதுடித்தான் வலிதாளா தரற்றினனே
பிகுவான பூசனிபோல் காயிருந்தால் கதியாதோ?
எனஉன்னி வியந்திட்டான் படைப்பருமை பெருமையினை
பகவானின் பேரறிவு அவன் மனத்தில் உறைத்திடவே
அன்றுமுதல் அவன் தொண்ட ரடிநிழலே கதியானன்.

பேசா மடந்தை பேசின கதை—7.

[சாலிவாஹனன்]

..............................எஜமானே திருடர் சிலர்
தினந்தோறும் இவ்வழியில் திருடிவிட்டு வருவதுண்டு
வெற்றிலையுந் தின்பண்டம் விலைகொடுத்துத் தின்றுவிட்டுப்
போகும் வழக்கமுண்டு பொழுதாக வில்லையின்னும்
ஏகும் வழியிதுதான் என்றபதில் கேட்டமன்னன்
இந்நகர்க்கு யானரசன் இத்திருடர் தமைப்பிடிக்க
உன்னுதவி வேணுமிதற் குபாயங்கள் கூறிடென
மன்னஉன் காவலரை மறைந்தெட்ட வெகுதொலைவில்
போயிருக்கச் செய்துங்கள் பொன்னணிக ளாடையெலாம்
கழற்றிக் கொடுத்திந்தக் கடைப்பைக்குள் நுழைந்திருங்கள்
திருடரெலாம் வந்தவுடன் தின்பண்டம் எடுப்பதுபோல்
பையவிழ்த்து விடுகின்றேன் படக்கென்று விளக்கவிப்பீர்
என்றுசொல்ல அதன்படியே இம்மன்னன் தந்திருக்க
கோமுட்டி வேடமிட்ட முழுத்திருடன் மன்னவனை
சாக்குப் பைக்குள் வைத்துச் சரியாகக் கட்டிவிட்டு
வாக்குப்படி மன்னன் கழற்றிவைத்த பொன்னணிகள்
ஆடைநவ ரத்நங்கள் அரசாங்க முத்திரையும்
சுருட்டி எடுத்துச்சால் சுறுக்கிட்ட பைமேலே
வைத்துவிட்டு விளக்கவித்து வழிநெடுக ஓடிவிட்டான்
விளக்கவிந்த வுடன்சொன்ன விதம்விரைந்த காவலர்கள்
இருட்டி லினம்தெரியா தவர்க்குள்ளே வாள்வீசக்
குய்யோ முறையோதான் கொலைவிழுந்த பின்னரவர்
மன்னவனைப் பைக்குள்ளே மறைந்திருக்கக் கண்டவிழ்க்க
முழுத்திருடன் தந்தையிடம் முழுப்பரிசைத் தந்துநின்றான்
இத்திருடர் திருட்டரிதா இராஜனுந்தன் சேவகர்கள்
செய்தசெயல் மிகப்பெரிதா என்றுரைத்த தாவணிக்கு
ஏற்றபதில் விக்கிரமன் இம்மன்னன் திறலென்றான்
இல்லையந்தத் திருடர்கட்கு இணையில்லை காவலாகள்
என்றுரைத்தான் பேசாதாள் இது மூன்றும் பேச்சென்றான்.

(தொடரும்)

10. வெற்றியும் விளையும்

சூரியன் மலைவாயில் விழுந்து எங்கும் இருள் சூழ்ந்த அதே நேரத்தில், குதிரையேறி யுத்த களத்துக்குப் பறந்து வந்த மாளவ வீரன் இளவரசன் ஜயந்தனுக்கு, மகதத் தலைநகர் தங்கள் கைக்குள் விழுந்துவிட்ட வெற்றிச் செய்தியை உரைத்தான்.

செய்தியை அறிந்த ஜயந்தன், தனது தந்திரம் பலித்து வெற்றி கண்டுவிட்டதை நினைத்துப் பூரித்துப் போனான். மறுகணமே முதன் மந்திரி அமாத்திய குல சேகரருக்கும், சேனாபதிக்கும் அவர்களை நெருங்கிச் செய்தியை அறிவித்தான், அவன். தங்களுக்கும் தெரியாமல் இத்தகைய மாபெரும் காரியத்தைச் சிறுவன் ஜயந்தன் சாதித்து விட்டதை அறிந்த முதன் மந்திரியும், சேனாபதியும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்களென்றாலும், ஒரு வகையில் பொருமைகூடப் பட்டார்கள் என்றும் சொல்லலாம்.

அதற்குள் மகதத் தலைநகர் மாளவத்தின் பிடிக்குள் அகப்பட்டுக்கொண்டு விட்ட வெற்றிச் செய்தி மாளவப் படை முற்றிலும் காட்டுத் தீபோலப் பரவி விட்டது. 'பூம் பூம் பூம்' என்று வெற்றி வெண் சங்கமும், 'டமடமடமடம' வென வெற்றி முரசமும் வானெட்ட முழங்கலாயிற்று. 'வெற்றி, வெற்றி, வெற்றி' என்று மாளவப் படையினர் வெள்ளம் போல் திரண்டு ஒரே குரலில் முழங்கினர். அந்த வெற்றிப் போதை வெறியில் கையில் கிடைத்த மகத வீரன் ஒவ்வொருவனையும் கிழித்தே எறிந்தனர், அவர்கள்! அத்தனை நாழிகையும் வெற்றி – தோல்வியின்றி இரு புறத்திலும் ஒரே சீரான பலத்தையே கண்டுகொண்டிருந்த அந்த யுத்த களம், அப்போது மகதம் மாளவத்தின் பிடிக்குள் அகப்பட்டு விட்ட செய்தி படைக்குக் கிடைத்த அத்தருணத்தில் மாளவப் பெருவீரர்களின் பராக்கிரமம் பன்மடங்கு அதிகமாகி, மகத வீரர்களைப் புறங்காட்டி ஓடச் செய்ததைப் பார்த்தது. ஆங்காங்கே 'ஜிகு ஜிகு' வென்று ஒளிவிட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்த தீவட்டிகளின் ஒளியில் அந்த யுத்த களம் மகா கோரமாகத் தென்பட்டது. யுத்தத்தை நிறுத்தி, ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டிய அந்த வேளையிலும் கூட மாளவ வீரர்கள் மகத வீரர்களை வம்புக்கு இழுத்துப் படுதோல்வி அடையச் செய்தனர்.

தமது தலைநகர் தந்திரமாகப் பறிபோய்விட்டதை உணர்ந்த மகத அரசனும், படை வீரர்களும் 'ஐயோ!' என்று தலையில் கையை வைத்துக் கதிகலங்கிப் போயினர். நாட்டுக்கே தலைபோன்ற தலைநகரை இழந்த பின்னர், தொடர்ந்து எக்களிப்புடன் போர் செய்வதற்கான ஆற்றல் அவர்களுக்கு இல்லாமல் போய்விட்டது. அத்துடன் வெற்றி காரணமாக ஏற்பட்ட வெறியால் மேலும் மிக அதிகமான பலம் பெற்றுவிட்ட மாளவ வீரர்களை எதிர்ப்பது அவர்களுக்கு முற்றிலும் முடியாமல் போய்விட்டது. ஆகவே, சூரியன் அஸ்தமனமாகிய இரண்டு மணி நேரத்திற்கெல்லாம் போர் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. மாளவம் வாகை சூடிவிட்டது; மகதம் மண்டியிட்டு விட்டது. வயதில் மாளவ இளவரசன் ஜயந்தனைவிட மிகப் பெரியவனான மகத மன்னன், ஜயந்தனின் பாதங்களில் வந்து வீழ்ந்து, மன்னிப்புக் கோரினன். அவனைத் தொடர்ந்து, போரில் மடிந்தவர்கள் போக மிஞ்சிய சில மந்திரிகளும், படைத் தலைவர்களும்கூட ஜயந்தனின் கால்களில் விழுந்து வணங்கினர்.

அப்படித் தனது பாதங்களில் வீழ்ந்த அனைவருக்கும், 'அஞ்சேல்!' என்று அபயம் தந்தான், மாளவ ராஜ்ய இளவரசன் ஜயந்தன். 'உங்கள் மகதம் இப்பொழுது எங்களதாகி விட்டது. எல்லோரையும் அடக்கியாள வேண்டும் என்ற ஆணவத்தில் அதை நீங்கள் இழந்துவிட்டீர்கள். உங்களுக்கிருந்த ஆணவம்தான் உங்களை இப்படி அநாதைகளாக என் முன் நிற்க வைத்திருக்கிறது. பரம்பரை பரம்பரையாக யாருக்கும் அடிமைப்படாமல் சுதந்திரமாக வாழ்ந்து வரும் மாளவ ராஜ்யத்தின் சுதந்திரத்தை மதிக்காதவர்களுக்கெல்லாம் இந்தக் கதிதான் நேரும்! இந்த உண்மையை உலகோரெல்லாம் உணர வேண்டும் என்பதற்காகவே இந்தப் போர் நடைபெற்றிருக்கிறது. இனியாவது அகங்காரத்தை விட்டு நல்லவர்களாக வாழுங்கள்; எங்கள் அரசரிடம் வந்து மன்னிப்புக் கேட்டு நல்வாழ்வு பெறுங்கள்!' என்று ஜயந்தன் அன்பும் கனிவும், அதே சமயத்தில் அரசனுக்குரிய மிடுக்கும் வாய்ந்த குரலில் கூறினன். அதைக் கேட்ட மகத அரசனும், மற்றவர்களும் கண்களில் நீர் மாலைமாலையாகக் கசியத் தங்களது அகங்காரத்தால் வந்த விளைவை எண்ணி எண்ணி, வருந்திக்கொண்டிருந்தனர்.

அன்றிரவே மாளவப் படையினரும், இளவரசரும், முதன் மந்திரியும், சேனாபதியும், மற்றவர்களும் வெந்து சாம்பலாகிக் கொண்டிருந்த மகதத் தலைநகரைப் பார்த்தனர். எத்தனை எத்தனையோ மக்களும், பொருள்களும், கட்டிடங்களும் தீக்கு இரையாகி, நாசமாகிப் போனதைக் கண்ட இளவரசன் 'ஓ' வென்று ஒருகணம் வாய்விட்டே அழுதுவிட்டான். 'மாற்றான் தலைநகர்தானே வெந்து சாம்பலாயிற்று!' என்று அவனால் சந்தோஷப்பட முடியவில்லை.

அதற்கு மாறாக, இளம் சிறுவனுக்கு உரிய கனிந்த இதயம் படைத்த அந்த இளவரசன் மனம் குமைந்து போனான். ஆனால், எல்லா வகை அனுபவங்களும் உள்ள பெரிய முதியவர்களைக் காட்டிலும் அறிவில் சிறந்தவனான அவன், மறுகணமே தன்னைச் சரி செய்துகொண்டு விட்டான். 'யுத்தம் என்று வரும்போது நேரிடையாகத் தாக்குவது போன்றே, தந்திரமாக இப்படிச் செய்வதும் தர்மந்தானே? ஆகவே, இதற்காக நாம் வருந்தக்கூடாது. ஏன், ஒருவகையில் இதற்காகச் சந்தோஷப்படவும் வேண்டும்' என்று ஜயந்தன் தன் எண்ணத்தின் போக்கை மாற்றிக்கொண்டு, முதன் மந்திரியும், சேனாதிபதியும் புடைசூழத் திரும்பவும் தமது பழைய படை முகாமுக்கே சென்றுவிட்டான்.

அடுத்த நாள் பொழுது விடிந்தவுடன் தளபதி தானவனை அழைத்தான், ஜயந்தன். இளவரசனின் உத்தரவைக் கேட்ட தானவன், ஓடோடி வந்து பயபக்தியுடன் தலைதாழ்த்தி நின்றான். இளவரசன் தானவனைப் பார்த்து ஒரு கனைப்புக் கனைத்துக்கொண்டு, 'தளபதி தானவா, நீ செய்த காரியத்திற்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறித்த காலத்தில், குறிப்பிட்ட பணியை, குறிப்பாக முடித்துத் தந்தது குறித்து எனக்கு உன்னிடம் பெரும் மகிழ்ச்சி உண்டாகிறது. அந்த மகிழ்ச்சிக்கு ஒரு அடையாளமாக இதோ, நான் அளிக்கும் முத்தாரத்தைப் பெற்றுக் கொள்வாயாக. அத்துடன், இன்றுமுதல் அடுத்த உத்தரவு வரும்வரையில் நீயே மகதத்தின் ராஜப் பிரதிநிதியாக இருந்து பணியாற்ற வேண்டும். முதலில் தலைநகரைச் சீர்திருத்துவதற்கு ஆவன செய்வாயாக!' மிகுந்த மகிழ்ச்சியுடன் கூறி, முத்துமாலையைத் தானவனுக்குப் பரிசளித்தான்.

தனது சாதனைக்கு அத்தனை பெரிய பதவி பரிசாகக் கிடைத்ததைக் கண்ட தானவன், விவரிக்க முடியாத இன்பத்துக்கு ஆளாகி, 'தங்கள் சித்தம் அடியேன் பாக்கியம்' என்று நாக்குழறச் சொல்லிவிட்டு, அவ்விடத்தை விட்டு நகர்ந்தான்.

அடுத்த சிறிது நாழிகைக்கெல்லாம் இளவரசன் ஜயந்தன் தலைமையில் மாளவப் படை தனது நாட்டின் தலைநகரை நோக்கிப் புறப்பட்டு விட்டது. இடையிடையே இருந்த சிறு கிராமங்களிலும், பெரிய நகரங்களிலும், மக்களும், ராஜப்பிரதிநிதிகளும் வெற்றியுடன் திரும்பி வரும் படையினருக்கு உற்சாகமான வரவேற்பு அளித்தனர். தலைநகர் திரும்பியதும் அவர்களுக்குக் கிடைத்த வரவேற்பும், அரசரது கட்டுக்கடங்காத மகிழ்ச்சியும், இளவரசன் ஜயந்தனின் தாய் சீலவதியார் அடைந்த சந்தோஷமும் விவரிக்கவே முடியாதது. தலைநகரென்ன; நாடே ஒரு குதூகல வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தது என்றால், அது சற்றும் மிகையாகாது.

அந்தக் குதூகலமே உருவாக இருந்த நாட்டிலே ஒரு உள்ளம் மட்டும் சொல்ல முடியாத ஆத்திரத்துடன் குமைந்துகொண்டிருந்தது. அதுதான் ஜயந்தனின் சகோதரனான வசந்தனின் உள்ளம். ஜயந்தனின் மிகுந்த அறிவும், மிகுந்த பராக்கிரமமும் அன்றுவரை வெறும் சொல்லளவில் இருந்தது. ஆனால், அன்றோ, அந்தச் சிறு வயதிற்குள் தனது அறிவாலும் வீரப் போராற்றலாலும் மாபெரும் படையையே நடத்திச் சென்று, ஆணவம் மிக்க மாற்றானின் மிகப் பெரிய படையையும் புறங்கண்டு வெற்றிக் கொடி நாட்ட முடியும் என்று ஜயந்தன் செயலிலேயே நிலைநாட்டி விட்டான். அதன்மூலம் ஜயந்தன் அறிவுக்கும், ஆற்றலுக்கும், அழகுக்கும் ஒரு பெரும் சின்னமாக ஆகி விட்டான். இதைத்தான் வசந்தனால் சகிக்க முடியவில்லை.

பேயென்று சொல்லி ஜயந்தனை அடித்துக் கொன்றுவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்த வசந்தன், 'அந்த சூழ்ச்சியும் பலிக்காமல் போய், இன்று உலகமே வணங்கத் தக்க வீர புருஷனாக ஜயந்தன் விளங்க நேர்ந்து விட்டதை நினைத்த அவன், 'வேறு எந்த வழியில்தான் ஜயந்தனை ஒழித்துக் கட்ட முடியும்?' என்று மனத்திற்குள்ளாகவே திட்டமிட்டுக்கொண்டிருந்தான். அதற்கேற்ற தருணத்தை அவன் கணத்துக்குக் கணம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

(தொடரும்)



அறிவுக் கணக்கு

கட்டியால் எட்டுக் கட்டி, கால் அரை முக்கால் மாத்து, செட்டியார் சென்று விட்டார் சிறு பிள்ளை மூன்று பேர். கட்டியும் உடைக்கக் கூடாது, கணக்கிலும் பிசகக் கூடாது.

ஒரு கிராமத்தில் செட்டியார் ஒருவர் தன் குமாரர்கள் மூன்று பேரைப் பார்த்து என் ஜீவிய தசைக்குப் பின்னால் நான் சம்பாதித்த திரவியத்தைத் தங்கக் கட்டிகளாக வைத்திருக்கிறேன். அதை நீங்கள் மூவரும் கட்டியை உடைக்காமல் சமமாகப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று சொன்னார்.

இதில் $\frac{1}{4}$ கட்டி, $\frac{1}{2}$ கட்டி, $\frac{3}{4}$ கட்டிகள் எத்தனை என்பதைக் கண்டுபிடியுங்கள்.

(விடை:— அடுத்த வாரம்)

பி. ஆர். சாமி.

சிறுவர் அறிவு அரங்கம்

அஸ்வத்தாமா

இருப்பவருக்கு இறந்தவரின் தோல்!

அழகற்று மிகவும் குரூபிகளாகப் பிறந்துள்ளவர்களுக்கும், தீக் காயங்களினாலோ அல்லது ராணுவத்தில் பட்ட புண்களினாலோ விகாரமான தோற்றம் உடையவர்களுக்கும் அழகாக இருந்து இறந்தவர்களின் தோலை உரித்து ஒட்டவைத்து, அழகுருவத்தை உண்டாக்க முடியுமாம்! இந்த அற்புதமான அரிய சாதனையைத் தம்மால் செய்ய முடியுமென்று சாதிப்பவர்களின் பெயர் என்ன தெரியுமா? ஜேம் பிரவுன், மைனர் பிரியாவ் என்பதாகும். இவர்கள் இருவரும் டாக்டர்கள்; அமெரிக்காவிலுள்ள மிஸ்ஸௌரி மாகாணத்தைச் சேர்ந்தவர்கள்.

ஒரு மனிதன் செத்துப் போய்ப் பத்து மணி நேரத்திற்குள் அவனது தோலை உரித்தெடுத்துப் பாதுகாத்து வைக்கப்பட்டால், பின்னர் அதை மேற்கூறிய குரூபிகளுக்கும் தீப்புண்ணால் தோல்கருகிப்போனவர்களுக்கும் ஒட்டவைத்து அழகான உருவம் உண்டாக்கலாம் என்பதே இவர்கள் கண்டுள்ள முறையாகும்.

சர்க்கரையிலும் 100 மடங்கு இனிப்பு!

அஸ்கா சர்க்கரையை வாயில் போட்டுத் தின்றால் வாயெல்லாம் இனிக்கிறது; உள்ளமெல்லாம் இனிக்கிறது. ஆனால், அதே சர்க்கரையைத் தொடர்ந்து சாப்பிட்டுக்கொண்டே இருந்தால், அது திகட்டிப் போகிறது; வெறுத்துப் போகிறது. இதுவே இவ்வாறிருக்க, சர்க்கரையைக் காட்டிலும் எழுநூறு மடங்கு இனிப்புள்ள ஒரு பொருளை வாயில் போட்டுக் கொள்ளவும் முடியுமா? அவ்வளவு இனிப்புள்ள அந்தப் பொருளின் பெயர் 'சாக்கரின்' என்பதாகும். இந்த சாக்கரினில் பதினான்கு தானிய எடை, ஒரு பவுண்டு (பதின்மூன்று பலம்) சர்க்கரை கொடுக்கவல்ல இனிப்பைக் கொடுக்கக் கூடியதாகும்! சர்க்கரை சாப்பிட்டால் உடலுக்குக் கெடுதல் உண்டாகக் கூடிய நீரிழிவு வியாதி உள்ளவர்கள் சாக்கரினை மிகக் குறைந்த அளவில் உபயோகப் படுத்துகிறார்கள்.

என்ன 'நியூஸ்'?

பிள்ளை பேந்தப் பேந்தத் தன் முன்னால் நிற்பதைக் கண்டால் அப்பா, 'என்ன 'நியூஸ்'டா பயலே? எதையாவது கொட்டி, உருட்டி விட்டு வந்து நிக்கறயோ?' என்று கிண்டலாகக் கேட்கிறார். இப்படி அப்பா கேட்பதிலே 'நியூஸ்' என்று ஒரு சொல் வருகிறதே,

அதற்கு என்ன பொருள்? அந்தச் சொல் எந்த மொழியைச்சேர்ந்தது? அந்தச் சொல் எப்படி வந்தது? உங்களால் சொல்ல முடியுமா? ஏன், நானாகவே தான் சொல்லி விடுகிறேனே!

'நியூஸ்' என்றால் செய்தி என்று அர்த்தம். இப்படி 'செய்தி' என்ற பொருளைக்கொண்ட இந்த 'நியூஸ்' என்ற சொல், உண்டான வகையே விந்தையானது. முதன் முதலில் செய்திப் பத்திரிகைகள் வெளியிட்டபோது, வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு ஆகிய திசைகளில் உள்ள எல்லாச் செய்திகளையும் பிரசுரித்து, எல்லாத் திசைகளுக்கும் அனுப்பப் படுகிறது என்ற உண்மையைப் பிரதிபலிக்கும் வகையில் முறையே அந்தத் திசைகளைக் குறிக்கும் ஆங்கிலச் சொற்களின் முதல் எழுத்துக்களான என். எஸ். இ. டபிள்யூ. என்ற எழுத்துக்கள் பத்திரிகையின் முகப்பில் அச்சடிக்கப்பட்டன. ஆனால், ஒரு பத்திரிகையின் சொந்தக்காரன் என். எஸ். இ. டபிள்யூ. என்றிருக்கும் தலைப்பை என். இ. டபிள்யூ. எஸ். என்று மாற்றி அச்சடித்து விட்டானாம். அதுவே உச்சரிப்பதற்கு வாகாக இருப்பதைக் கண்ட மற்ற பத்திரிகைக்காரர்களும் அவ்வாறே அச்சிடலாயினராம். இவ்வாறுதான் 'நியூஸ்' என்ற அந்தச் சொல் பிறந்தது!

மயக்கம்தரும் க்ளோரோபாரம்

ரண சிகிச்சை செய்வதற்கு முன், நோயாளிக்கு வலி தெரியாமலிருப்பதற்காக, க்ளோரோபாரம் என்ற பெயர்கொண்ட மயக்க மருந்தை முகரச் செய்வார்கள், டாக்டர்கள். இந்த க்ளோரோபாரத்தைக் கண்டுபிடித்தவரின் பெயர் என்ன தெரியுமா? டாக்டர் ஸிம்ப்ஸன் என்பவர்தான் இந்த அரிய மருந்தைக் கண்டுபிடித்தார். ஸ்காட்லாந்து தேசத்தைச் சேர்ந்தவர் இவர். சுண்ணாம்புத் தூளில் சாராயத்தை விட்டுத்தான் செய்யப்படுகிறதாம், க்ளோரோபாரம்.

சூரிய ஒளிக்கு எத்தனை பூஜ்யம்!

தலைப்பைப் பார்த்தால் வேடிக்கையாகத்தானே இருக்கிறது? ஆனால், இதோ கொடுக்கப் போகும் எண்ணுக்கு இருக்கும் பூஜ்யங்களைத்தான் எண்ணிக் கணக்குப் போடுங்களேன், பார்க்கலாம்! சூரிய ஒளியின் அளவுதான் அத்தனைப் பூஜ்யங்கள் கொண்டதாகும்!

அதாவது, சூரிய ஒளியின் அளவு 3,000,000,000,000,000,000,000,000,000 மெழுகு வத்தி வெளிச்சத்துக்குச் சமமாம்! கொஞ்சம் பூஜ்யங்களை எண்ணிக் கணக்கைத் தான் சொல்லுங்களேன்!

எப்படி, எதில் ஆரம்பிப்பது என்றுதான் தெரியவில்லை.

புரியாத விஷயத்தைப் புரிகிறமாதிரி சொல்லச் சாமர்த்தியம் நிறைய வேண்டும். அதுவும் அந்தப் புரியாத விஷயம் சொந்த விஷயமாகவும் இருந்துவிட்டால், கேட்க வேண்டியதே இல்லை.

ஆனால், தைரியமாக ஆரம்பித்து விட்டால், எப்படியோ சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லிவிட்டு, 'கதை முடிந்தது; கத்திரிக்காய் காய்த்தது' ஆச்சு என்று ஒரு வழியாக முடித்து விடலாம். எப்படி, எங்கே என்றெல்லாம் யோசனை செய்துகொண்டே, காலத்தைப் போக்கிக் கொண்டிருந்துவிட்டால், ஆரம்பும் எதுவும் செய்யாமலே, சொல்ல வேண்டியது எதையும், யாருக்குமே சொல்லாமலே, என் காலம் கடந்துவிடும். அதற்குப் பிறகு அப்பா என்றால் ஆகுமா, 'அம்மா என்றால் வருமா? வாயைத் திறந்தால் தான் பேச்சு வரவில்லை; பேச்சு மறந்து பல வருஷங்களாகி விட்டன. பேனா கிடைத்தபோது, 'காமா சோமா' என்று கிறுக்கித்தான் பார்த்து விடுகிறேனே!

அடியும் அளவும் மனிதனுடைய சிருஷ்டிதான் என்று சொன்னால், எல்லோருமே ஒப்புக்கொண்டு விடுவார்கள், ஆனால், மணியும், நிமிஷமும் விநாடியும்கூட மனிதன் தன்னையே வருத்திக்கொள்ளச் சிருஷ்டித்துக் கொண்டதுதான் என்று சொன்னால், அவ்வளவு சுலபமாக ஏற்றுக்கொண்டு விடமாட்டார்கள். உலகப் போக்கு என்கிற சோக நாடகத்துக்கு ஆதாரமாக, காலப் போக்கில் நாயகன், நாயகி வில்லன்களாகச் சகோதர மனிதர்கள் உதவி மக்கி மடியட்டுமே என்று மனிதன் தானாகவே சிருஷ்டித்துக்கொண்டு, நாடக பாத்திரமாகவும், நாடகம் பார்ப்பவனாகவும் ஒரே சமயத்தில் இருந்துகொண்டு, வேடிக்கை பார்க்க ஏற்படுத்திக்கொண்டது தான் காலம் என்கிற கருத்தும். ஆனால், அதை நம்பத்தான் இப்போது ஆள் தேட வேண்டியதாக இருக்கிறது. உண்மைக்குத்தான் இந்த நாட்களில் பிரசாரம் அதிகமாகத் தேவைப்படுகிறதுபோல இருக்கிறது.

காலம் ஒரு நேர்க் கோடு அல்ல. வளை கோடும் அல்ல அது. எந்தக் கணக்குக்கும் அகப்படாத மேலும் கீழும் போடும், சுற்றிச் சுற்றி வருகிற, பல புள்ளிகளால் ஆன, பல இந்த நிமிஷங்களால் ஆன ஒரு பாதை அது. கண்ணாம்பூச்சி விளையாடலாம்; மனிதனுக்குமட்டும் மனம் உண்டானால், காலத்துடன் தட்டாமாலை சுற்றலாம், தலை கிறுகிறுக்கலாம். அல்லது கிருஷ்ணனும் ராதையும்போல மத்து—மத்து ஆடலாம்.

ஆனால், குறிப்பிட்ட இரும்புத் தண்டவாளங்களிலே ஓடுகிற ரயில் வண்டிகளுக்குக்கூட அவ்வப்போது விபத்துக்கள் நேர்ந்து விடுகின்றன. காலப்போக்கிலே அதேபோல எத்தனையோ விபத்துக்கள் நேரிடுகின்றன. ஒரு ரயில் விபத்து நேர்ந்தது. அதில் நூற்றுக்கணக்கானவர்கள் உயிர் இழந்தார்கள் என்பதற்காகப் பயந்து, அடுத்து வரும் ரயிலில் ஏற மறுத்து விடுகிறார்களா, என்ன? நமக்கு வேண்டியவர்கள், நெருங்கியவர்கள், நம் உயிரே போன்றவர்கள்கூடத் தான் இறந்திருப்பார்கள்; அதற்காக நாம் கும்பகோணம் போக வேண்டி வருகிறபோது, ரயிலை நம்பமாட்டேன் என்று சொல்ல முடியுமா?

காலம் என்னும் இரும்பல்லாத, நேர் பாதையல்லாத போக்கிலும் தான் எத்தனையோ விபத்துக்கள். கனவிலே கால்கள் பின்ன ஓட முயற்சிக்கும் மனிதன்போல, விபத்துக்களை முன்கூட்டி அறியும் வன்மை படைத்தவன்கூட, காலப் போக்கிலே ஓடிக் கால்கள் பின்னத்தானே விபத்தையும், விபத்தின் விளைவையும் முழு மனத்துடன் எதிர்கொள்கிறான்.

திரிசங்குவை வானத்திலேயேற்றிப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஒரு முதல் ஸ்புட்னிக்கை நிர்மாணித்த விசுவாமித்திரனும்கூட 'காலமே, நில்' என்று சொல்லி வெற்றியடைந்ததாக நாம் கேள்விப்படவில்லை.

யாருமே செய்து முடிக்காத ஒரு காரியத்தை நான் செய்து முடித்துவிடுவேன் என்கிற ஒரு அசட்டுத் தைரியத்துடன் தான் பேனாவை நான் கையில் எடுக்கிறேன்.

காலம் நகைக்கிறது!

நிற்கமாட்டேன் என்கிற காலம் ஓடுவேன் என்று ஓடுகிறது. நான் மட்டும் நிற்பானேன் என்று, ஏரோட்ரோமுக்குள் வந்திறங்கிய அவசர விருந்தாளியைப் பேட்டி காண வந்த பத்திரிகை நிருபன் மாதிரி, பேனாவும் கையுமாக, பேப்பரும் தலைமயிரும் பறக்க தான் காலத்துடன் போட்டி போட்டுக்கொண்டு ஓடுகிறேன்.

ஆனால், காலத்தை வெற்றிகொள்ள எனக்கா தெரியாது? பிறக்கும்போதே கிழவனாகப் பிறந்தவனாயிற்றே நான். மற்றவர்களுக்காகக் காலம் நிற்க மறுத்தாலும், எனக்காக நின்றுதான் ஆக வேண்டும். பிறக்கும்போது கிழவனாகப் பிறந்த நான், இந்த நாற்பத்தி எட்டு வருஷங்களில் என் நடு வயதுப் பருவம் கடந்து, வாலிபம் தாண்டி, விஷயம் அறியத் துடிக்கும் இள்மை தாண்டி, இப்போது குழந்தைப் பருவத்தை எட்டியிருக்கிறேன்.

ஆ! இப்போது காலம் நகைக்கிறதா? நான் நகைக்கிறேனா? அது காலத்துக்கும் தெரியாது—எனக்கும் தெரியாது என்று தான் சொல்ல வேண்டும்.

எத்தனையோ விபத்துக்களைச் சொல்லலாம். ஆனால், இரண்டே இரண்டு விபத்துக்களை மட்டும் சொல்ல, இன்று சொல்ல வேண்டியது அவசியம், பேனா எடுத்ததற்காக,—என்று தோன்றுகிறது எனக்கு. சொல்லிவிடுகிறேன்.

விபத்துக்களைச் சொல்லுவானேன்? சந்தோஷங்களைச் சொல்லக்கூடாதா? இன்பங்களைச் சொல்லக்கூடாதா என்று யாரும் என்னைக் கேட்க மாட்டார்கள் என்றே நம்புகிறேன். 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதாலே...' என்று சொல்கிற மனிதன் ஒப்புக்காக, தன் சொல் பணப்பை நிரம்புவதற்காகச் சொல்கிறானே தவிர, இன்பத்தைப் பகிர்ந்து தர நினைப்பதில்லை. மூக்கரையன் ஊரையே மூக்கரையர் ஊராக்கிய கதை தான் இது. ஆண்டி எல்லோரையும் ஆண்டியாக்குவான்; பணக்காரன் எல்லோரையும் பணக்காரனாக்கியதாக நாம் இதுவரை கேட்டதில்லையே! துன்பத்தைப் பகிர்ந்தளித்து, மனிதனுக்குத் துன்பமூட்டிக் களிப்பது சர்வ சகஜமான காரியம். அதுதான் மனித சுபாவம் என்றே சொல்லலாம்.

ஆதலால்தான் நானும் எனக்கு நடந்த விபத்துக்களில், இரண்டை இன்று சொல்லி, உலகுக்கும் துன்பம் தரலாம் என்று எண்ணினேன்.

இந்தியாவிலே பிறக்கிற குழந்தைகளுக்குக் குழந்தைப் பருவமே கிடையாது என்பதும், அதனால்தான் இப்போதெல்லாம் கர்ப்பத்தடைப் பிரசாரம் பிரமாதப்பட்டு வருகிறது என்பதும் பிரபலமான விஷயங்கள்தான். தவிரவும் ஏழைகளாக இந்தியாவிலே பிறந்து விடுகிறவர்களுக்கு, குழந்தைப் பருவம் மட்டும் என்ன, எந்தப் பருவமுமே கிடையாது என்பதுதான் பிரஸித்தமாயிற்றே.

ஆனால், நான் என்னவோ பிறந்த அன்றே கிழவனாகத்தான் பிறந்தேன்; பணக்காரனாகவும்தான் பிறந்தேன். என் தகப்பனார்—அவரை எனக்குத் தெரியவே தெரியாது; நான் பிறந்த பன்னிரண்டாம் நாள் அவர் இறந்து போனார்—ஒரு பத்து வருஷங்களாக வக்கீல் தொழில் செய்து, வேறு பல வழிகளிலும் ஈடுபட்டு, ஒரு லக்ஷ ரூபாய் சம்பாதித்தார்.

'நியாயமாகச் சம்பாதித்திருந்தால் இவ்வளவு சேர்த்திருக்க முடியுமா, ஸார்!' என்றுதான் பக்கத்து வீட்டுக்காரர்களும், பக்கத்துத் தெருக்காரர்களும், பக்கத்து ஊர்க்காரர்களும் அவரைப் பற்றிப் பேசினார்களாம்.

ஆனால், சட்டம் தெரிந்தவன்தானே வக்கீல்? வக்கீல் அல்லாதவர்கள் நியாயமும் அநியாயமும் பேசி என்ன லாபம்?

கிராமத்துக்கு என்னைப் பெற்றுச் சீராட்டத் தன் பிறந்த வீட்டுக்குப் போயிருந்த என் தாயாரைப் பார்க்க, நான் பிறந்த பத்தா நாள் காலையில், இரவு பூராவும் ரயிலில் பிரயாணம் செய்த அலுப்புடன் வக்கீல் ஐயா வந்து சேர்ந்தார். குழந்தையும் தாயும் இருந்த அறை வாசலில் வந்து நின்றுகொண்டு, 'அடியே சாலாச்சி! பையன் அதிருஷ்டக்காரன்தான். அவன் பிறந்த அன்றே என் பாங்கிக் கணக்கில் வள்ளிசாக ஒரு லக்ஷம் ரூபாய் சேர்ந்து விட்டது' என்றாராம்.

சாலாச்சியின் அப்பா நாட்டுப்புறம். 'அவ்வளவு பணத்தையும் ஒரே பாங்கியிலா போட்டிருக்கேள்? அர்பத்நட்டு மாதிரி ஏதாவது ஆகிவிடப் போகிறதே?' என்றாராம்.

'அர்பத்நட்டு என்று ஒருவன் வர வேண்டாம்—தன் மகனே போதும்' அதைப் போக்க—என்று என் தாயாரின் தகப்பனாருக்கு அன்று தெரிய நியாயமில்லை தானே!

வக்கீல் ஐயா 'வாடா லக்ஷப் பிரபுவே!' என்று கூறித்தான், என்னைக் கையில் வாங்கிக்கொண்டாராம்.

வக்கீல் ஐயா திரும்பிப் போன ரயில் தடம் புரண்டு விட்டது. பாங்கிக் கணக்கில் இருந்த லக்ஷத்தை அவர் மறுபடியும் ஒரு தரம்கூட எண்ணிப் பார்க்காமல் தான் போய்விட்டார். யமபுரியிலே பாங்கிக் கணக்குகள் உண்டோ, லக்ஷப் பிரபுக்கள் உண்டோ என்பதுதான் யாருக்கும் இதுவரையில் தெரியாத ரகசியம் ஆயிற்றே!

ஆசைக்கு ஞாபகங்கள் ஆயிற்று. சொத்துக்குப் பிள்ளை ஆயிற்று. என் தாயார் சாலாச்சிக்கு ஒரு குறைவும் இல்லை. அப்படி ஏதாவது மனக்குறை ஏற்பட்டாலும் அதைப் போக்குவதற்கு என்று ஒரு தம்பியும் இருந்தான். அவன் பெயர் நல்ல பெயர்தான்—விநாயகம் என்று. சாத்தனூரிலே பிறந்து, பட்டணக்கரை நாகரீக மோஹத்திலே முழுகிக் கிடந்த விநாயகம்தான் என் பணத்தைக் கட்டிக் காத்து, எனக்கு வயது வரும்போது தரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டான். தாயார் தற்குறி, தாயாரின் தகப்பனார் நாட்டுப்புறம், விநாயகம் வைத்ததுதான் சட்டம்.

கிழவனாகப் பிறந்து அம்மாவுடைய கருவேப்பிலைக் கொழுந்தாக வளர்ந்து, விநாயகத்தின் வைரியாக உருவெடுத்தேன் நான். அவருக்கு நான் வைரியானேனா—அவர் எனக்கு வைரியானாரா? அது எப்படியானால் என்ன—வைரம் வளர்ந்தது என்னவோ உண்மை. நான் காலண்டர் கணக்குப்படி என் பதினேழாவது வயதைத் தாண்டி, பாங்கிக் கணக்கு, வரவு செலவுகளை ஏற்றுக்கொள்ளும் தருணத்தை எட்டிக்கொண்டிருக்கும்போது, என் மாமா விநாயகம் மறைந்து விட்டார். சில நாட்களில் அவரோடு என் லக்ஷமும் மறைந்துவிட்டது என்பது என் தாயாருக்கும் தெளிவாகிவிட்டது. எவ்வளவுதான் கண்ணை மூடிக்கொண்டாலும், தெரிந்த விஷயத்தைத் தன்னிடமிருந்தே மறைத்து வைத்துக்கொள்ள முடிகிறதா என்ன? மாமா கால்நடையாக மானஸரோவருக்கு நடந்து போய்க் கொண்டிருப்பதைப் பார்த்ததாகப் பலர் வந்து சொன்னார்கள். வேறு சிலர் அவர் பெரிய மஹானாகி, ரிஷியாகி, முனி புங்கவராகி, ஜடாமகுடதாரியாக பொதியில் மலையிலே தவம் செய்யக் கண்டதாகச் சொன்னார்கள். வேறு சிலர் அவர் கீழத் தெரு மோஹன கோமளாம்பாளை அழைத்துக்கொண்டு ரங்கூனுக்குப் போய்விட்டதாகச் சொன்னார்கள். தனக்குத் தம்பி என்று ஒருவன் இருந்ததே

கனவு என்று எண்ணத் தொடங்கி விட்டாள், என் தாயார்.

தன் கணவனைக் கவிழ்த்த ரயில் விபத்து ஒன்று; லக்ஷத்தை எடுத்துக்கொண்டு ஓடிவிட்ட தம்பி இரண்டு—ஆக இந்த இரண்டு விபத்துக்களுமாகச் சேர்ந்து என் தாயாரைச் சாய்த்துவிட்டன. 'என் தம்பியா இப்படிச் செய்தான்?' என்று அம்மா ஆதுரமாகக் கேட்டதற்கு ஆறுதலாக, நான், 'எனக்கு ஒரு அக்காள் இருந்து, அவளிடம் ஒரு லக்ஷம் இருந்திருந்தால், நானும் இப்படித்தான் செய்திருப்பேன்' என்று சொல்லிப் பார்த்தேன். ஆனால், அம்மாவுக்கு என் வார்த்தைகள் ஆறுதல் அளிக்கவில்லை.

அம்மா இருந்தவரையில் எனக்கும் எவ்வித ஆறுதலும் பிறக்க அவள் அனுமதிக்கவில்லை. நான் காணாத தகப்பனையும், கண்டறியாத லக்ஷத்தையும் எண்ணி மாயவே வேண்டும் என்று தீர்மானித்து விட்டாள் என் தாயார். தான் துன்புற்றால் தன் மகனும் துன்புற வேண்டும் என்று எண்ணாத தாயும் உண்டோ இவ்வுலகில்?

என் அம்மா செத்த அன்று நடந்ததெல்லாம் எனக்கு இப்போதும், சற்றேறக் குறைய முப்பது வருஷங்களுக்குப் பிறகும், கண்ணெதிரே நடப்பதுபோல ஞாபகம் இருக்கிறது. காலம் பின்னேக்கி ஓட மறுத்துத்தான் என்ன லாபம்? என் நினைவு அவனை வென்று வீழ்த்திவிட்டதே இவ்விஷயத்தில்.

பேசமுடியாமல் பேசினள் அம்மா: 'மாமாவைத் தேடி...'

'ஆகா! உன் காரியத்தை முடிக்க அஸ்தியை எடுத்துக்கொண்டு காசிவரை போகிறேன். அப்படியே கங்கையோடு நடந்து போய், கங்கோத்ரி தாண்டி, மானஸரோவர் போய், மாமாவைக் கண்டு விட்டு வருகிறேன்' என்றேன் நான், எகத்தாளமாக.

'அவன் அயோக்கியன் அல்ல ராஜா' என்றாள் அம்மா, மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க.

'நல்லவனாக இருந்ததனால்தான் பதினேழு வருஷங்கள் ஓடாமல் இருந்தான்' என்றேன்.

'அந்த மோஹன கோமளாம்பாள் தான்...' என்று மேலே பேசமாட்டாமல் நிறுத்தினாள் அம்மா.

'அவன் என் லக்ஷத்தைத் திருடிக் கொண்டு போய்விட்டான். அதற்கு வஞ்சமாக நான் அவனுடைய மோஹன கோமளாம்பாளைத் திருடிக்கொண்டு ஓடிவிடலாம். அதுவும் நல்ல யோசனைதான்' என்றேன் நான்.

கல்யாணம்கூடப் பண்ணிக்கொண்டு சாதாரணமாக வாழ்க்கை நடத்தத் திறமையற்றுக் கிழவனாகப் பிறந்து, குழந்தையாகிக் கொண்டிருக்கும் நான், மோஹன கோமளாம்பாளைத் திருடிக் கொண்டோடி விடுவதுபற்றிப் பேசலாம், பகலில் கனவுகள்மட்டும் வேண்டுமானால் காணலாம். நடக்கிற காரியமா அது? ஆனால், அதற்குப் பிறகு அம்மா தன் தம்பியைப்பற்றி என்னிடம் எதுவும் பேசாமலே இறந்துவிட்டாள். இறப்பதற்காக மட்டுமே மனிதர்களில் எத்தனையோ பேர்வழிகள் பிறக்கிறார்கள். அந்த ரகத்தில் சேர்ந்தவள் என் தாயார்.

நானும் அந்த ரகத்தைச் சேர்ந்தவன் தான். ஆனால், நான் இன்னும் சாகவில்லை—செத்துக்கொண்டிருக்கிறேன். அவ்வளவு தான்.

என் தாயார் இறந்தபொழுது எனக்கு வயது சாதாரணக் கணக்குப்படி பத்தொன்பது. அதற்குப் பிறகு இந்த இருபத்தி ஒன்பது வருஷங்களை நான் எப்படி, என்னமாகக் கழித்தேன் என்று என்னைக் கேட்டுப் பிரயோசனமில்லை. எனக்கே தெரியாது. வயதும் அறிவும் மழுங்கிக்கொண்டிருந்தன.

எனக்குக் கிடைக்காத அந்த லக்ஷத்தைச் செலவு செய்ய முயன்று கொண்டிருந்தேன் என்று சொல்லலாமா?

வெறும் பொழுது போக்கிக்கொண்டிருந்தேன் என்று சொல்லலாமா?

பொழுதை நான் போக்கியதாகச் சொல்ல முடியாது. அது தானாகவே போயிற்று. பொழுதுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? சூரியனுக்கு ஒரு வேலையுமில்லை;—இந்தக் காலத்தில் தேவர்கள் எல்லோருமே சோம்பேறிகளாகி விட்டார்கள்—சூரியன் அதிகாலையில் எழுந்து விடுகிறான். அஸ்தமிக்கும்வரையில் மறைவதில்லை. மறைந்தபோதும் கூட, நப்பாசைக்காக, அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தினர் செய்த மாதிரி வானத்திலே அரசு செலுத்துவதற்குச் சந்திரன் என்று ஒரு வைசிராயை ஏவி விடுகிறான், தப்ப முடியுமா அந்தச் சூரியனை? அவன் கொடுங்கோல் முன் மனிதர்களின் கொடுங்கோல் எம்மாத்திரம்—ஹிட்லராவது? ஸ்டாலினாவது?

இந்தியாவிலே பிறந்த தோஷம், இந்திய மண்ணிலே அணைந்த தோஷம், வேறு என்ன வந்தாலும் வராவிட்டாலும் எனக்கும் வேதாந்த விசாரம் நன்றாகவே வருகிறது. பற்றில்லாமல் சும்மா இருக்கப் பழகிக் கொண்டவன்தான் வேதாந்தி என்பது உண்மையானால், நான் வேதாந்திதான். பற்றறுத்துக் கொள்ள தான் எவ்விதத்திலும் பாடுபட வேண்டியதாக இருக்கவில்லை. உலக பந்தங்களை அறுத்துக் கொள்ள, அகங்கார மமதை வாசனைகளை மீற ஒவ்வொருவனும் ஏதேதோ செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். ஒரு குருவையாவது தேடியலைய வேண்டும் என்று சொல்கிறார்கள். என்னைப், பற்றியவரையில் அதற்கெல்லாம் அவசியமே ஏற்படவில்லை. எங்கே எங்கே என்று வந்த பற்றுக்கள் எதுவும் என்னைப் பற்றிக் கொள்ளவில்லை. அகங்காரத்துக்கு என்னிடம் சிறிதும் பிரியமேயில்லை. தன் தனித்தனம் அறியாத அவன் கிடக்கிறான் என்று மமதை என்னை விட்டு விலகிப் போய்விட்டது. தாயார் இறந்த போதுகூட நான் அழவில்லை. என் தாயார் என்று அவளைப்பற்றி எண்ணப் போதிய அகங்காரம் எனக்கு இருக்கவில்லை. என் மகன் என்று அவளுக்கிருந்தது. என் தம்பி என்றுகூடத்தான் இருந்தது; அதனால் என்ன?

விநாயகத்துடன் போய்விட்ட லட்சமும் என்னைப் பாதிக்கவில்லை. அது இருந்திருந்தால், எப்படிப் பாதித்திருக்குமோ? யார் சொல்ல முடியும்?

பிறந்த அன்றே என் பங்காகக் கிடைத்த ஒரு லட்ச ரூபாய் பணத்தையும், ஒரு பத்து லட்சம் நாழிகைகளையும் இழந்து விட்டேன் என்று கணக்குப் போட்டுப் பார்த்துவிட்டு, அதனாலென்ன என்று ஒதுங்கி என்னால் நிற்க முடிகிறது. சும்மாஇருப்பதுவே சுகம்என்பதைத்தான் இந்தப் பத்து லட்சம் நாழிகைகளில் ஒவ்வொரு நாழிகையையும் உணருகிறேன்; வேறு என்ன செய்யலாம்? குழந்தையாகிக்கொண்டிருந்த எனக்கு, வேறு எதுவும் செய்யத் தெரியவில்லையே. நான் என்ன செய்ய?

கதையாக அல்லவா சொல்ல ஆரம்பித்தேன்? வெறும் தத்துவம் படித்தால் போதுமா? கதையாக்கி முடித்து விடுகிறேன். வாய்தான் 'குவா குவா'வுக்குமேல் எழும்பமாட்டேன் என்கிறதே தவிர, பேனா ஓடும். ஓடிப் போன என் மாமா விநாயகம், திரும்பி வந்த விவரத்தையும் சொல்லி விடுகிறேன். ஓடிப் போனவன் திரும்பி வந்தால் அது கதை தானே!

நான் அவனைத் தேடிப் போகவில்லை, (மாமா என்று மரியாதையாக அவர் என்று சொன்னது போதுமே! இனி அவன் என்றே சொல்லுகிறேன்) அவனாகவே தேடிக்கொண்டு வந்தான். திலமாகிக் கொண்டிருந்த வீட்டின் முற்றத்திலே பாகலும் புடலும் படர்ந்திருந்தது. மஞ்சள் தாக்கணங்குருவி நடுக் கூடத்திலே ஊசலாடிக் கொண்டிருந்தது. காற்றிலே நெளிந்த, நாக்கிலே ஜலம் ஊறச் செய்த பாம்புப் பிஞ்சுகள் அவரைப் பந்தலிலே தொங்கின. சரிந்த தூணின்முட்டிலே தேன் கூடு கட்டியிருந்தது. ஒட்டடைக் கொசுவலைகள் அங்கணமெங்கும் ஜிகினா வேலை செய்தன. திண்ணை ஓரத்திலே காலைத் தொங்கப் போட்டுக் கொண்டு, ஒரு ஈர்க்குச்சியைக் கடித்துச் சுவைத்துக் கொண்டு, கடைவாய் வழிய, நாற்பத்திஎட்டு வயதுக் கைக்குழந்தையாக நான் கால வெள்ளத்தை எதிர்த்து மார் நீச்சுப் போட்டுக் கொண்டு மிதப்பாக உட்கார்ந்திருந்தேன். வந்தான் அவன்.

'என்னைத் தெரிகிறதோ, இல்லையோடா? என்ன பண்ணிக் கொண்டிருக்கிறாய் நீ, ராஜா?' என்றான் மாமா விநாயகம்.

''உன்னைத் தெரிகிறது. உனக்குத்தான் நான் என்ன பண்ணிக்கொண்டிருக்கிறேன் என்று தெரியவில்லை' என்று அண்டமே அதிர 'ஹோ! ஹோ!' என்று சிரித்தேன்.

'சொல்லேன்' என்றான் விநாயகம்.

'ராஜாவாகிய நான், ராஜ்ய பாரம் பண்ணிக் கொண்டிருக்கிறேன். இது தெரியவில்லையாடா முட்டாள்?' என்றேன்.

விநாயகம் தயங்கினான். ஒரு நிமிஷம் பேசாதிருந்தான்.

'நீ வருவாய் என்று எனக்குத் தெரியும்' என்றேன்.

'எனக்கே தெரியாதே! உனக்கெப்படித் தெரியும்?' என்றான் விநாயகம்.

நொட்டை விட்டுக்கொண்டே, ஈர்க்குச்சியைச் சப்பிச் சுவைத்தேன். 'அம்மா சாகும்போது சொன்னாள், 'நீ நல்லவன் என்று' என்றேன்.

'சொன்னாளா? அப்படிச் சொன்னாளா? பாவியடா நான்!' என்று அழத் தொடங்கினான் மாமா. எனக்கும் அழுகை வந்தது. குழந்தைகளுக்கும் கிழவர்களுக்கும்தான் அநாயாசமாக அழுகை வருமே! நான் அவனைத் தேற்றவில்லை; அவனும் என்னைத் தேற்றவில்லை.

'சாலாச்சி எவ்வளவு நல்லவள்! அவளுக்கு நான் எப்படிப்பட்ட துரோகம் இழைத்துவிட்டேன்?' என்றான் விநாயகம். 'ஆனால், நான் செய்த தவறுகளுக்கெல்லாம் எப்படி எப்படியெல்லாமோ கஷ்டப்பட்டு, கண்ணீர் வடித்து, ரத்தம் சிந்தி, பிராயச்சித்தம் செய்து விட்டேன்.'

'பிராயச்சித்தம் செய்துவிட்டாயா?'

விநாயகம் விம்மினான், புஸ்புஸ் என்று பெருமூச்சுவிட்டான். 'ஆம். பிராயச்சித்தம் செய்துவிட்டேன். இத்தனை வருஷங்களில் நான் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பேன் தெரியுமா? அடாடா சொல்லி மாளுமா?...ஏண்டா ராஜா! நீ கல்யாணமே செய்துகொள்ளவில்லையா?' என்று விநாயகம் தன்னை மறந்துவிட்டு என்னை விசாரித்தான்.

'அந்த மோஹன கோமளாம்பாள் வரட்டும் என்று காத்திருக்கிறேன். அதைச் சொன்னதும்தான் அம்மாவுடைய பிராணன் போயிற்று. கடைசி வேளை மருந்தைக்கூடச் சாப்பிடாமல் போய்விட்டாள் அவள்' என்றேன்.

'பாவம்! அந்தக் கடைசி வேளை மருந்தையும் சாப்பிட்டுவிட்டுப் போயிருக்கலாம் அவள்!'

என் மாமா விநாயகத்துக்குப் புரியவில்லை: 'மோஹன கோமளாம்பாளா? அவளை இழுத்துக்கொண்டு போன என்னிடமிருந்து என் லக்ஷத்தைப் பறித்துக்கொண்டு, அவள் என்னை இடுப்புத் துணியோடு ரங்கூனிலே தெருவில் விரட்டி விட்டாள். அப்புறம்...'

'அப்புறம்...'

'ஒரு பர்மாக்காரன் அவளிடமிருந்து பணத்தை அடித்துக்கொண்டு, அவளையும் கழுத்தை அறுத்துக் கொலை செய்து விட்டு, இரவோடு இரவாக...'

'சிங்கப்பூர் போய் ஒரு சீனாக்காரியைச் சரண் அடைந்தானா?' என்று விசாரித்தேன் நான்.

'என் அப்பா சம்பாதித்த லக்ஷம், இப்படி ஒரு சர்வதேச நிலைமையைச் சிருஷ்டிக்கத்தான் பிரயோசனப்படும் என்று எனக்கு என் அம்மா வயிற்றிலிருக்கும்போதே தெரியும்!' என்றேன். பிறகு விஷமமாக 'இப்போது என்னைத் தேடி எதற்காக வந்தாய்?' என்று கேட்டேன்.

'சும்மாத்தான், எப்படியிருக்கிறாய் என்று பார்க்க வந்தேன்.'

'எனக்கு இன்னொரு அப்பா ஏற்பட்டு, இன்னொரு லக்ஷம் கிடைத்திருந்தால் உனக்கு இன்னொரு மோஹன கோமளாம்பாள் கிடைப்பாளா பார்க்கலாம், என்று வந்தாயா?' என்று கேட்டேன். சிரித்தேன். என் சிரிப்பின் இரைச்சல் என் காதை அடைத்தது.

காதும் வாயும் அடைத்துவிட்டன. என் பேச்சு அத்துடன் முடிவடைந்துவிட்டது என்று எனக்குள் ஏதோ சொல்லிற்று. நான் பிறந்த குழந்தையாகி விட்டேன், என் நாற்பத்தி எட்டாவது வயதிலே என்று எனக்குப் புரிந்துவிட்டது.

ஆனால், என் மாமா விநாயகத்துக்கு அது புரியவில்லை. எப்படிப் புரியும்?

'பணம் கிடக்கட்டும் அப்பா' என்று ஏதோ சொல்லிக்கொண்டிருந்தான்.

நான் 'குவா! குவா!' என்று கத்தினேன்.

'புரியவில்லையே!' என்று தடுமாறினான் விநாயகம்.

'குவா! குவா!' என்றேன் நான்.

வேறு ஒன்றும் சொல்ல வாய் வரவில்லை எனக்கு. கவி சுப்பிரமணிய பாரதியார் மௌன விரத தினத்தன்று பேசத்தான் மாட்டாரே தவிர, பாடுவார். அதுபோல ஒரு லக்ஷம் பணமும், பத்து லக்ஷம் நாழிகைகளும் விரயமான நிமித்தம் எனக்குப் பாஷையற்றுப் போய்விட்டது. பேச்சு நின்று விட்டது. மற்றப்படி கிழவனாகப் பிறந்து வளர்ந்து பெரியவனாகிய அனுபவங்கள் எல்லாம் அப்படியே இருக்க, என் பேச்சுமட்டும் 'குவா குவா' பாஷையாகி விட்டது.

விஷயம் இவ்வளவுதான். நான் இப்போது குழந்தைச் சாமியாராகி விட்டேன்.

அப்படிச் சொல்வதுகூடப் பிசகு. நான் குழந்தையாகி விட்டேன். உலகத்தில் அடிபட்டுத் தேர்ந்தவனான விநாயகம், என்னைக் குழந்தைச் சாமியாராக்கி விட்டான். அதிலும் எங்கேயோ எப்படியோ அவன் லாபமடிக்கிறான் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. எனக்கு அது பற்றி ஆக்ஷேபம் ஒன்றுமில்லை.

ஆனால், குழந்தையாக இருக்க இஷ்டப்படுகிற நான், குழந்தைச் சாமியாராக இருக்கப் பிரியப்படவில்லை என்பதுதான் உண்மை. ஆனால், இதை எப்படி ஆரம்பித்து, யாரிடம் குஞ்சுக் 'குவா! குவா!' வார்த்தைகளில் சொல்வது என்றுதான் எனக்குத் தெரியவில்லை.

யாருக்காவது தெரிந்தால்...!



ரத்னமாலை ரகசியம்

வி.ஆர்.ராதாகிருஷ்ணன்

வழக்கம்போலக் கவர்னர் பங்களாவில் புத்தாண்டு தேநீர் விருந்திற்கு இவ்வாண்டும் அமோக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. கவர்னர் ஜான் புல் இந்தியர்களின் அபிமானத்தைப் பெற்றவர் என்று ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகள் அவரைப்பற்றிப் புகழ் பாடின.

அவர் பதவி ஏற்று ஆறு மாதங்களுக்குமேல் ஆகவில்லை. அவர் பதவிக்கு நியமிக்கப்பட்டவுடன், அவரைப் பற்றிப் பிரிட்டிஷ் செய்தி ஸ்தாபனங்கள் பிரமாதமாகப் பாராட்டிச் செய்திகள் அனுப்பின. அவருடைய தந்தை இந்தியாவில் கம்பெனி ஒன்றில் நிர்வாகப் பதவியிலிருந்ததாகவும், அப்பொழுது குழந்தையாக இருந்த ஜான் புல், தனது தாயாரிடமிருந்து இந்தியத் தாதிப் பெண்ணைப் பார்த்தவுடன் மகிழ்ச்சியோடு தாவி அவளிடம் வருவார் என்றும், அதிலிருந்தே இந்தியர்கள்பால் அவர் கொண்டிருந்த பற்று புலப்படுகிறதென்றும் அந்தச் செய்திகள் கூறின.

இந்தியர்களிடத்தில் இவ்வளவு பற்றுள்ளவர் என்று பத்திரிகைகள் எல்லாம் புகழும்போது, அவர் தனது பற்றுதலைப் பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டாமா? அதற்காகவே அவ்வாண்டு புத்தாண்டு விருந்தை மிகவும் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்திருந்தார், கவர்னர்.

புத்தாண்டு விழா என்றாலே பிரிட்டிஷ் ராஜ விசுவாசிகளுக்கு விசேஷமான மகிழ்ச்சி! அன்று காலையில் துரைமார்களைப் பார்த்துத் தங்கள் நல்லெண்ணத்தைத் தெரிவிக்க வேண்டும். அதற்கு முன்பே பத்திரிகையைப் பார்த்து, தனது விசுவாசத்தையும், சேவையையும் மெச்சிப் பட்டம் வந்திருக்கிறதா என்று தெரிந்து கொள்ள வேண்டும். பட்டம் வராவிட்டால் 'மனமே பொறு.. அடுத்த ஆண்டு நமக்குப் பட்டம் நிச்சயம்' என்று மனதைத் தேற்றிக்கொள்ள வேண்டும். யாருக்காவது பட்டம் கிடைத்திருந்தால் தனக்குப் பொறாமையாக இருந்தாலும், அவரைப் பார்த்து 'ஹலோ' சொல்லித் தனது மகிழ்ச்சியைத் தெரிவிக்க வேண்டும். பகலில் 'கவர்னர்ஸ் கப்' குதிரைப் பந்தயத்திற்குப் போக வேண்டும். மாலையில் கவர்னர் விருந்து – இரவிலே ஆங்கிலேயர் கிளப்பில் 'பால் டான்ஸ் ஆட வேண்டும்.' அத்தனை வேலைகளையும் செய்தால்தான் அவர் பிரமுகராக இருக்க முடியும்!

'அய்யோ, பாவம்!...இந்திய அபிமானி ஜான் புல் கவர்னராக வந்த சமயத்தில் தான் காந்திஜியின் தேசீய இயக்கமும் உச்ச கட்டத்தை அடைந்திருந்தது. பிரிட்டிஷ் தாசர்களாக இருந்த சிலர் கூடத் தங்கள் பட்டங்களைத் திருப்பி அனுப்பிக்கொண்டிருந்தனர். காந்திஜியின் கை ஓங்குகிறது. அடக்குமுறை தாண்டவமாடுகிறது...என்று பிரசாரம் அந்நிய நாடுகளில் பரவாமல் தடுக்க இந்தியப் பிரமுகர்கள் தங்கள் ஆட்சியை ஆதரிக்கிறார்கள் என்பதை உலகிற்குக் காட்ட வேண்டாமா? அதற்காகவே இவ்வாண்டு சிறப்பாகக் கொண்டாட ஜான் புல் ஏற்பாடுகள் செய்திருந்தார்.

யார் சிறையிலிருந்தால் என்ன? யார் பட்டங்களைத் திருப்பி அனுப்பினால் என்ன?

அந்த ஆண்டு பட்டம் பெற்ற பெரிய மனிதர்களும், பட்டம் பெறப் போட்டி போட்டு 'ராஜ சேவை' செய்கிற பிரமுகர்களும் கவர்னர் பெருமகனார் அழைப்பிற்கிணங்க, புத்தாண்டு விருந்திலே கலந்து கொள்ள ஏராளமாக வந்திருந்தனர். அவர்கள் மாத்திரமா?

'இந்த ஏழை மக்கள் படும் இன்னல்களைக் கண்டு மனமிரங்கி' அவர்களுக்காக உழைக்கச் சமூக சேவா சங்கங்கள் வைத்துப் பணியாற்றும் 'லிப்ஸ்டிக்' நாகரிக நாரீமணிகள் இருக்கிறார்களே, அவர்களும் அங்கே வந்திருந்தனர்.

அன்று நடந்த 'கவர்னர்ஸ் கப்' குதிரைப் பந்தயத்தில் வெற்றி பெற்ற குதிரையின் சொந்தக்காரர் ஒரு பிரபல ஹோட்டல் முதலாளி. அவரைக் கவர்னர் கைகுலுக்கி வரவேற்றதோடு, முதுகிலும் நாசூக்காகத் தட்டிக் கொடுத்தார். அச்சம்பவம் அங்கே கூடியிருந்தவர்களின் கவனத்தைக் கவர்ந்ததோடு அவர்களின் பேச்சில் பிரதான அம்சமாக விளங்கியது. 'நம்ம கவர்னர் எல்லோருடனும் எவ்வளவு 'சோஷலாகப்' பழகுகிறார், நம்ம ஹோட்டல் அய்யர் முதுகிலே தட்டிக் கொடுத்தார்,' என்றார் ஒரு பிரமுகர். 'அடுத்த ஆண்டு அவருக்கு நிச்சயமாக ராவ்பகதூர் பட்டம் கிடைத்துவிடும், சார்' என்று அங்கலாய்த்தார், ராவ்சாகிப் பட்டம் கிடைத்தாலும் போதும் என்று தவம் கிடக்கும் மற்றொரு பிரமுகர்.

கோலகலம் மிகுந்த அப்பிரமுகர் கூட்டத்திலே ஒருவர் மிகவும் அமைதி இழந்து அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தார். அவரும் பெரிய ஜமீன்தார்தான்! சமீபத்தில்தான் மைனர் நீங்கி, ஜமீன் பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டிருந்தார்.

இங்கிலாந்திற்குச் சென்று அங்கேயே இரண்டு மூன்று ஆண்டுகள் தங்கியிருந்தார். கிரிக்கெட் விளையாட்டில் சூரர் என்று பெயரும் பெற்றிருந்தார். கல்வித் துறையில் நமது 'குட்டி ஜமீன்தார்' எவ்விதப் பட்டமும் பெறவில்லை என்றாலும் பிரிட்டிஷ் பிரபுக்கள் நடந்துகொள்வது போலப் பழக்க வழக்கங்களை எல்லாம் நன்கு பழகிக்கொண்டு விட்டார்.

அங்கே அவர் அமைதியிழந்து காணப்பட்டதற்குக் காரணம் என்ன? கவர்னர் மனைவியார்–சீமாட்டியின் கழுத்தில் ஜகஜ்ஜோதியாக ஒரு ரத்னமாலை ஜொலித்துக் கொண்டிருந்தது. விருந்துக்கு வந்திருந்த சீமாட்டிகள் ஒருமுகமாக அம்மாலையின் சிறப்பைப் பற்றிப் புகழ்ந்து பேசிக்கொண்டிருந்தனர். ஒரு சிலர் நமது ஜமீன்தாரிடமே அம்மாலையை ஜாடையாகச் சுட்டிக் காட்டி, அதன் நேர்த்திமிக்க வேலைப்பாட்டை மிகவும் பாராட்டினார்கள்.



அங்கே கூடியிருந்தோரின் ஏகோபித்த பாராட்டுதலைப் பெற்ற அந்த

ரத்னமாலையைக் கவர்னர் சீமாட்டிக்கு நமது மைனர் ஜமீன்தார்தான் நான்கு நாட்களுக்கு முன்பு 'கிறிஸ்துமஸ்' பரிசாக வழங்கியிருந்தார்.

விருந்துக்கு வரும்போது தன்னைக் கவர்னர் சீமாட்டி விசேஷமாகக் கவனித்து உபசரிப்பார் என்று எதிர்பார்த்துதான் வந்தார். மற்ற விருந்தினர்களை உபசரிப்பதுபோலவே - கைகுலுக்கிப் புன்னகை புரிவதுடன், கவர்னர் சீமாட்டியின் உபசரிப்பு நின்றுவிட்டது. தன்னிடம் இரண்டு நிமிஷங்களாவது தனியாக, மற்ற பிரமுகர்களின் முன்னிலையில் பேசுவார் என்று அவர் எதிர்பார்த்தார். அப்படி நடந்தால் கவர்னர் மாளிகையில் நமது மைனர் ஜமீன்தாருக்கு விசேஷச் செல்வாக்கு இருக்கிறது என்று மற்றவர்கள் பேசுவார்கள்,–என்று நினைத்துச் சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்த அவருக்கு, சாதாரண வரவேற்புக் கிடைத்தது பெரும் அதிர்ச்சியாக இருந்தது.

ரத்னமாலையைப் பற்றிப் பலர் புகழ்ந்து, கவர்னர் சீமாட்டியிடமே பேசுவது மைனர் காதுகளிலே விழுந்தது. நமது ஜமீன்தாரைக் காட்டி, இவர்தான் கிறிஸ்துமஸ் பரிசாக இதை அளித்தார் என்று கவர்னர் சீமாட்டி கூறுவார் என்று ஆவலோடு எதிர்பார்த்துதான் அங்குமிங்கும் நடந்துகொண்டிருந்தார். ஆனால், கவர்னர் சீமாட்டி, அப்படி எதையும் சொல்வதாகக் காணோம்! தானே இதைப் பற்றிப் பேசிக்கொண்டு இருப்பவர்களிடம் சொல்லி விடலாமா என்று கூட நினைத்தார். ஆனால், அப்படித் தானே சொல்வது நாகரீகமாக இருக்குமோ என்ற சந்தேகம் வேறு தோன்றியது. இவ்விதம் வெளியே சொல்வது தெரிந்து கவர்னர் சீமாட்டி தன்னைப்பற்றித் தாழ்வாகக் கருதிவிட்டால், பிறகு 'ராவ்சாகிப்' பட்டம் எப்படிக் கிடைக்கும் என்ற அச்சம் வேறு மனத்தை உறுத்தியது.

இதனால்தான் அவர் அங்குமிங்குமாக அமைதியில்லாமல் அலைந்துகொண்டிருந்தார். அப்போது அங்கே தடபுடலாக வந்து சேர்ந்தார் ஒரு குட்டி சமஸ்தானாதிபதி! வயது அறுபதைத் தாண்டியிருந்தாலும் இளமையின் ஆசைகள் கொஞ்சமும் குறையாத பேர்வழி அவர். அவர் குட்டி ராஜா என்பதை அவரது நடவடிக்கைகள் காண்பித்தன. அவர் வந்தவுடன் கூடி இருந்த பிரமுகர்களின் கவனமெல்லாம் அவர்பால் திரும்பியது. எல்லோரும் அவரைக் கைகுலுக்கிப் பாராட்டினர். அவருக்கு அந்த ஆண்டு புத்தாண்டுப் பட்டம் கிடைத்திருந்தது. 'பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பாதுகாவலர்' என்பது அந்தப் பட்டத்தின் பெயராம். குட்டி ராஜாவிடம் நாகரீக நங்கை ஒருத்தி நெருங்கி, கவர்னர் சீமாட்டியின் கழுத்திலிருந்த ரத்னமாலையைச் சுட்டிக் காண்பித்தாள். இதை நமது மைனர் ஜமீன்தார் கவனித்தார். அவர் என்ன சொல்லப் போகிறார் என்று ஆவலோடு இருந்தார். ரத்னமாலையைக் காட்டிய நங்கையின் தாடையில் ஒரு தட்டுத் தட்டிவிட்டு, குட்டி ராஜா, சிரித்துக் கொண்டே, 'ஓ! அதுவா? நமது சமஸ்தானத்திற்குக் கவர்னரும் அவரது மனைவியும் விஜயம் செய்தபோது, நான்தான் பரிசாக அளித்தேன்' என்று கூறினார்.

இதைக் கேட்ட நமது மைனர் ஜமீன்தாருக்குத் தூக்கிவாரிப் போட்டது! முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைக்கப் பார்க்கிறானே என்று நினைத்தார். அவர் பக்கத்திலிருந்த திவான்பகதூர் மில் முதலாளி ஒருவர், 'சார், பார்த்தீர்களா, சவுடால் ராஜாவை? அவர் மாத்திரம் ஒரே அளப்பு அளக்க ஆரம்பித்து விட்டார். இன்னும் கொஞ்ச நேரத்தில் பாருங்களேன்! இந்தப் பங்களாவையே தான் கட்டிக் கொடுத்திருப்பதாகச் சொல்லிவிடுவார்' என்றார்.

'ஆமாம் சார், அவருக்கு ஏதாவது வெட்கம், மானம் இருக்கிறதா பாருங்களேன்! அந்தப் பெண்ணின் இடுப்பில் கையைப் போட்டு அழைத்துக்கொண்டு போகிறாரே!' என்று அங்கலாய்த்தார் நமது மைனர் ஜமீன்தார்.

'ஜமீன்தார் சார், இரண்டு மாதங்களுக்கு முன் நமது தொழிற்சாலையில் கட்டிடக் கல் நாட்டு விழாவிற்குக் கவர்னரை அழைத்திருந்தேன். அவர் வந்தபோது இந்த ரத்னமாலையை நான் தான் கவர்னர் சீமாட்டிக்கு அளித்தேன். இந்த சவுடால் ராஜா என் எதிரிலேயே இப்படிப் பேசுகிறாரே?' என்று கூறினார் திவான்பகதூர் மில் முதலாளி.

நமது மைனர் ஜமீன்தாருக்கு ஒன்றுமே புரியவில்லை. சவுடால் ராஜா, தான் வாங்கிக் கொடுத்ததாகச் சொன்னார்; திவான் பகதூர் மில் முதலாளி தான் கொடுத்ததாகச் சொல்லுகிறார். எல்லாப் பெரிய மனிதர்களும் இப்படிப் பொய் சொல்லுகிறார்களே, உண்மையாக வாங்கிக் கொடுத்த தான் ஒன்றும் சொல்லாமலேயே சும்மா இருந்துவிட்டோமே—என்று ஏங்கினார்.

வாரியர்

நீலீ பிருங்காதி

தைலம்

காந்தி மிக்க கருங் கூந்தல் செழிப்பாக வளருவதற்கும், கொட்டிப்போகாமலிருப்பதற்கும், கொட்டிப்போன இடங்களில் மறுபடி முளைப்பதற்கும் மிகச் சிறந்தது.

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலமும்கூட

விலை 16 oz. புட்டி ரூ. 6/- (பாக்கிங், தபால்செலவு ரூ 2 தனி)

at NEW DELHI available at

Messrs. MADRAS STORES, No. 96, Baird Road.

★ ★

ஆரிய வைத்தியர் கே. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனு பஜார், திருச்சிராப்பள்ளி-2.

(நிறுவனம்: 1936)

சாஸ்திரோக்தமாக தயார் செய்யப்பட்ட எல்லா ஆயுர்வேத மருந்துகளும் எங்களிடம் கிடைக்கும் ஜாபிதாவுக்கு 0-11 n பைசா ஸ்டாம்புடன் எழுதவும்.

'கவர்னர் மனைவிக்கு ரத்னமாலையை உண்மையில் அளித்தது யார்?' இந்த விஷயம் நமது மைனர் ஜமீன்தாரின் உள்ளத்தில் பெரும் வேதனையை உண்டாக்கியது. விருந்து முடிந்து வீடு திரும்பிய ஜமீன்தார் தமது அந்தரங்கக் காரியதரிசி அருமைநாதனிடம் விஷயத்தைச் சொன்னார். இரண்டு நாட்கள் கழித்து அருமைநாதன், 'ரத்னமாலையின் ரகசியத்தை மைனரிடம் சொல்லிவிட்டுச் சிரித்தான். இதுதான் அவன் சொன்ன ரகசியம். இந்நகரிலே பிரபல பிரிட்டிஷ் கம்பெனி ஒன்றிருக்கிறது. யாராவது கவர்னர் சீமாட்டியிடம் பேசிப் பழகி, அவரது தயவைப் பெற ஏதாவது தங்கள் அன்பைக் காட்ட விரும்புவதாகத் தெரிவித்தால், உடனே கவர்னர் சீமாட்டி அவரைத் தனியாக அழைத்துக்கொண்டு காரில் போவார், அந்தக் கம்பெனிக்கு. அந்தக் கம்பெனி வெள்ளைக்கார மானேஜர் பல விலையுயர்ந்த பொருட்களையெல்லாம் காட்டுவார், இந்த ரத்னமாலையையும் காட்டுவார். 'அதுதான்' தனக்கு மிகவும் பிடித்திருப்பதாகக் கவர்னர் சீமாட்டி கூறுவார். உடனே ஐயாயிரம், ஆறுயிரம் என்று மானேஜர் விலை கூறினாலும் கவர்னர் மனைவியின் முன்பு, பேரம் பேசுவது தமது கௌரவத்திற்குக் குறைவு என்று நினைத்துப் பணத்தைக் கொடுத்துவிட்டு, இந்தியப் பிரமுகர்கள் வந்துவிடுவார்கள்.

கவர்னர் மாளிகைக்குப் போகும் அந்த நகை, மறுபடியும் அதே கடைக்கு வந்துவிடும். பணம் கவர்னர் மனைவியாரின் பாங்கிக் கணக்குக்குப் போய்விடும். இந்த வியாபாரத்திலே அந்தக் கடைக்கு நல்ல கமிஷன் கிடைக்கும். மறுபடியும் ரத்னமாலை பரிசாக மாறும், கடைக்குத் திரும்பும். இதுதான் ரத்ன மாலையின் உண்மைக் கதை.

'அதனால்தான் சவுடால் ராஜா, தான் வாங்கியதாகச் சொன்னார், திவான். பகதூர் மில் முதலாளியும் அப்படிச் சொன்னார், நீங்களும் வாங்கிக் கொடுத்தீர்கள். இன்னும் அதை வாங்கிக் கொடுத்து வெளியே சொல்லாத பல பேர்களும் இருப்பார்கள்' என்றான் அந்தரங்கக் காரியதரிசி அருமைநாதன்.

'இதெப்படி உனக்குத் 'தெரிந்தது?' என்றார் மைனர். 'அதுவா? கவர்னர் மாளிகையின் அந்தரங்க ரகசியங்கள் பட்லருக்குத் தெரியாமலிருக்குமா?' என்று சிரித்துக்கொண்டே, ரத்னமாலை ரகசியத்தை அம்பலமாக்கினான், அருமைநாதன்.

19-வது தசகம்

1. பிராசீன பர்ஹிஸ் என்ற அரசனின் கதை

(தொடர்ச்சி)

ப்ராசீன பர்ஹிஸ் ப்ரஜா ச்ருஷ்டியையும் ரக்ஷணத்தையும் தன் பிள்ளைகளைச் செய்யும்படிக் கட்டளையிட்டுவிட்டு, ஒருமைப்பட்ட மனதுடன் ஸ்ரீ கோவிந்த சரணத்தை த்யானம் செய்துவிட்டு, பகவானுடன் கலந்துவிட்டார். இதைக் கூறும் ஸ்ரீமத் பாகவத ச்லோகம் வருமாறு:—

प्रा ी वर्हि राजर्षिः प्रजासर्गाभिरक्षणे।
आ॒दिश्य पुत्रानगमत्तपसे कपिला
श्रमम् ॥
4-29-81

तत्रैकाग्रमना वीरो गोविन्द चरणाम्बु
जम् ।
विमुक्तसङ्गोऽनु भजन्भक्त्या
तत्साम्यतामियात् ॥
4-21-82

ப்ராசீன பர்ஹி ராஜர்ஷி: ப்ரஜா
ஸர்கா பிரக்ஷணே
ஆதிச்ய புத்ரானகமத்தபஸே
கபிலாச்ரமம்
தத்ரைகாக்ரமனாவீரோ கோவிந்த
சரணாம்புஜம்
விமுக்தஸங்கோனு பஜன்பக்த்யா
தத்ஸாம்யதாமியாத்

இவ்வளவு கருத்துக்களையும் ஸ்ரீ நம்பூதிரி இச்சுலோகத்திலுள்ள

पृथु धर्मे कर्मठः

(ப்ருது தர்ம கர்மட:)

என்ற பதத்தினால் வெளியிட்டிருக்கிறார். ப்ருதுவைப்போல பகவத் பக்தி ரூபமான தர்மம் ஸ்ரீ நாரத உபதேசத்தால் ப்ராசீன பர்ஹிஸுக்குக் கிடைத்ததும் வெளியாகிறது. அதனாலேயே ஸ்ரீ நாரதர் ப்ராசீன பர்ஹிஸுக்கு விஸ்தாரமாகக் கூறியதை இங்கு குறிப்பிட்டிருக்கிறோம். இல்லாவிடில், இந்தப் பத்தொன்பதாவது தசகம் ஐந்தாவது ச்லோகத்தில்

पिताऽपि तेषां गृहयातनारद प्रदर्शि
तात्मा भवदात्मतां ययौ ॥

(பிதாபி தேஷாம் க்ருஹயாத நாரத
ப்ரதர்சிதாத்மா பவதாத்மதாம் யயௌ)

என்ற நாராயணீய ச்லோகத்தின் விளக்கவுரையில் நாரதர் விஸ்தாரமாக உபதேசித்திருப்பதை எழுதியிருக்கலாம். இங்கு ப்ராசீன பர்ஹிஸின் சிறந்த தர்மமும் கர்மமும் கூறப்பட்டிருப்பதாலேயே இந்த ச்லோகத்திலேயே பாகவதத்தின் விரிவான உபதேசத்தை எழுதியுள்ளோம், ப்ராசீன பர்ஹிஸ் தன் மனைவியான சதத்ருதியினிடம் ப்ரசேதஸ் என்ற பெயருள்ள பத்து புதல்வர்களைப் பெற்றார். அவர்கள் மிகப் பக்தியுள்ளவர்களாக இருந்தனர். அதனாலேயே நம்பூதிரி அவனுடைய குழந்தைகளைப் பகவானின் கருணையின் முளைகள்போல் இருப்பதாகக் கூறியிருக்கிறார்.

இவ்வாறு மறைபொருளாக உரைத்த அத்யாத்ம தத்வத்தை எவர் உபதேசிக்கின்றனரோ, எவர் கேட்கின்றனரோ அவர்கள் லிங்க தேகத்தினின்று விடுபடுகின்றனர் (மோக்ஷமடைகின்றனர்) என இந்தக் கட்டத்திற்கு ஸ்ரீமத் பாகவதத்தில் மைத்ரேயர் பலன் சொல்லியிருக்கிறார். இதன் காரணமாகவே இவ்வரலாற்றை இங்கு விவரித்து எழுத முயன்றோம். இதை விவரிக்கும் பாகவத ச்லோகம் வருமாறு:—

एतदध्यात्मपारोक्ष्यं गीतं देवर्षिणानघ।
यः श्रावयेद्यःशृणुयात्सलिङ्गेन
विमुच्यते ॥
4-29-83

ஏதத்த்யாத்ம பாரோக்ஷ்யம் கீதம்
தேவர்ஷிணாநக
ய: ச்ராவயேத்ய: ச்ருணுயாத்ஸ
லிங்கேன விமுச்யதே

2. ப்ரசேதஸுகள் தவம் செய்யச் செல்லுதல்

पितुः सिसृक्षानिरतस्य शासनात्
भवत्तपस्या निरता दशापि ते ।
पयोनिधिं पश्चिममेत्य तत्तटे
मनोहरं संददृशुस्सरोवरम् ॥

பிது: ஸிஸ்ருக்ஷானிரதஸ்ய சாஸனாத்
பவத்தபஸ்யா நிரதா தசாபி தே
பயோ நிதிம் பச்சிமமேத்ய தத்தடே
மனோஹரம் ஸந்த த்ருசுஸ்ஸரோவரம்

பதவுரை:—ஸிஸ்ருக்ஷா நிரதஸ்ய—ப்ரஜா ச்ருஷ்டியில் ஈடுபட்ட, பிது:—பிதாவான ப்ராசீன பர்ஹிஸினுடைய, சாசனாத்—உத்தரவின்பேரில், தே—அந்த, தசாபி—பத்து பேர்களும், பவத்தபஸ்யா நிரதா:—தங்களைக் குறித்துத் தவம் செய்வதில் ஈடுபட்டு, பச்சிமம் பயோநிதிம்—மேற்கு சமுத்ரத்தை, ஏத்ய—அடைந்து, தத்தடே—அதன் கரையில், மனோஹரம்—அழகு வாய்ந்த, ஸரோவரம்—சிறந்த குளத்தை, ஸந்தத்ருசு:—கண்டனர்.

கருத்துரை:—ஓ குருவாயூரப்பா, உலக சிருஷ்டியில் விருப்பமுள்ள ப்ராசீன பர்ஹிஸ், தன் பிள்ளைகளை உலகச் சிருஷ்டி செய்யும்படி உத்தரவிட்டார். அதனால் பத்து ப்ரசேதஸ்ஸுகளும் தங்களைத் தவம் செய்ய விருப்பம் கொண்டு மேற்கு சமுத்ரத்தை அடைந்தனர். அதன் கரையில் சிறந்த குளத்தைக் கண்டனராமே என நம்பூதிரி கேட்க, ஸ்ரீ குருவாயூரப்பனும் 'ஆம்' எனச் சொல்லித் தலையை அசைத்து அங்கீகாரம் செய்தாராம்.

விளக்கவுரை:—ப்ராசீன பர்ஹிஸ் உலகில் ஏராளமான ப்ரஜைகளை சிருஷ்டி செய்ய வேண்டும் என நினைத்தார். அதற்கு வேண்டி காம்யமான பல யாகங்களை உலகம் பூராவும் சென்று செய்தார். அக்னியில் ஹோமம் செய்தால் பாபம் விலகி, கோரிய பொருள் கைகூடுகின்றன என வேதம் கூறுகிறது. அதனாலேயே ப்ராசீன பர்ஹிஸ் இம்மாதிரி யாகங்களைச் செய்தார். இயற்கையாகவே கருணை உள்ள நாரதர், அரசனிடம் வந்து பக்தியையும் ஞானத்தையும் உபதேசம் செய்து, காம்ய கர்மங்களிலிருந்து ஓய்வுபெறச் செய்தார். ப்ராசீன பர்ஹிஸும் கபிலாச்ரமம் சென்று முக்தி அடைந்தார். ப்ராசீன பர்ஹிஸின் புண்யம் பித்ரு பக்தர்களும், பகவத் பக்தர்களுமான பிள்ளைகளைக் கொடுத்தது. அப்புத்திரர்களும் தங்கள் பிதாவின் எண்ணத்தைப் பூர்த்தி செய்ய வேண்டி ப்ரஜா ச்ருஷ்டி செய்ய விரும்பினார்கள். மனிதன் நினைக்கும் சிறியதான காரியம்கூடப் பகவானுடைய அனுக்ரஹத்தால்தான் பூர்த்தியடைய வேண்டும். அப்படியிருக்க,

பெரியதான ஜகத் ச்ருஷ்டி என்ற காரியத்தைச் செய்ய யத்தனிக்கும் ப்ரசேதஸ்கள் பகவதனுக்ரஹத்தை அடையாமல் எப்படிக் காரியத்தை ஆரம்பிப்பார்கள்? அவர்களோ இயற்கையிலேயே பக்தி உள்ளவர்கள். நல்ல பரம்பரையில் பிறந்தவர்கள். அதனால் அவர்கள் ஸ்ரீ பகவானைத் தவம் செய்து அவனது அனுக்ரஹத்தைப் பெற விரும்பினார்கள். அதையே,

भवत्तपस्या निरताः

(பவத்தபஸ்யா நிரதா:)

என்பதால் நம்பூதிரி வெளிப்படுத்தியிருக்கிறார். தபஸைப் பரிசுத்தமான இடத்தில் செய்ய வேண்டும். புண்ய தீர்த்தில் செய்வது அதிலும் விசேஷம். அதனாலேயே மேற்கு ஸமுத்ரத்திற்குச் சென்றார்கள். அங்கும் நல்ல புண்யமான ஸரஸ் இருந்தது. இது தபஸிற்கு மிகவும் சிறந்த இடம் எனக் கண்டு கொண்டார்கள். இந்த ஸரஸைப்பற்றி ஸ்ரீமத் பாகவதத்தில் கூறியிருப்பதாவது:—

प्रचेतसः पितुर्वाक्यं शिरसादाय

साधवः ।

दिशं प्रतीचीं प्रययुस्तपस्यादृतचेतसः॥

4-24-19

समुद्रमुपविस्तीर्णमपश्यन्सु महत्सरः ।

महन्मन इव स्वच्छं प्रसन्नसलि

लाशयम् ॥

4-24-20

ப்ரசேதஸ: பிதுர்வாக்யம்
சிரஸாதாய ஸாதவ:
திசம் ப்ரதீசீம் ப்ரயயுஸ்தபஸ்யா
த்ருத சேதஸ:
ஸமுத்ரமுப விஸ்தீர்ணமபச்யந்ஸு
மஹத்ஸர:
மஹன்மன இவ ஸ்வச்சம் ப்ரஸன்ன
ஸலிலாசயம்

ப்ரசேதஸுகள் பிதாவின் உத்தரவு பெற்றுத் தவம் செய்வதற்காக மேற்குத் திக்கை நோக்கிச் சென்றனர். அங்கு ஸமுத்ரம் போன்று ஓர் சிறந்த ஸரஸைக் கண்டனர். அது மஹான்களின் மனது போல் தெளிவாக இருந்தது. மேலும் அந்த ஸரஸ் ஹம்ஸம், ஸாரஸம், சக்ரவாகம் இவைகளால் சப்திக்கப் பெற்றும் உத்பலம், தாமரை, செங்கழுநீர்ப் புஷ்பம், இந்தீவரம் போன்ற மலர்களால் நிரம்பியும் இருந்ததாக ஸ்ரீமத் பாகவதத்தில் கூறப்பட்டிருக்கிறது. இம்மாதிரி இடமே தபஸிற்கு மிகச் சிறந்தது.

3. ப்ரசேதஸுகளுக்கு பரமேச்வரன் உபதேசம் செய்தல்

तदा भवत्तीर्थमिदं समागतो

भवो भवत्सेवकदर्शनादृतः ।

प्रकाशमासाद्य पुरः प्रचेतसा

मुपादिशद्भक्ततमस्तव स्तवम् ॥

ததா பவத்தீர்த்தமிதம் ஸமாகதோ
பவோ பவத் ஸேவகதர்சனாத்ருத:
ப்ரகாசமாஸாத்ய புர: ப்ரசேதஸா
முபாதிசத் பக்ததமஸ்தவ ஸ்தவம்

பதவுரை:—ததா—அப்பொழுது, இதம்—இந்த, பவத்தீர்த்தம்—தங்களுடைய தீர்த்தமான ஸரஸை, ஸமாகத:—அடைந்த, பவ:—பரமேஸ்வரன், பவத்ஸேவக தர்சனாத்ருத:—தனது பக்தர்களைக் காண்பதில் ஆவல் கொண்டவராய், ப்ரகாசம் ஆஸாத்ய—ஆவிர்ப்பவித்து, பக்த தம:—பக்தர்களுள் சிறந்தவரான பரமேஸ்வரன், தவ—தங்களுடைய, ஸ்தவம்—ஸ்தோத்திரத்தை, உபாதிசத்—உபதேசித்தார்.

கருத்துரை:—ஓ குருவாயூரப்பா, அப்பொழுது அந்த ஸ்வச்சமான ஸரஸை பரமேஸ்வரன் அடைந்தார். மேலும், அவர் தங்களுடைய பக்தர்களைக் காண விருப்பம் கொண்டவர். இவ்வாறாகத் தங்களுடைய பக்தர்களுள் சிறந்தவரான பரமேஸ்வரன் தானே நேரில் தோன்றி, தங்களுடைய ஸ்தோத்திரத்தை ப்ரசேதஸுகளுக்கு உபதேசித்தாராமே என நம்பூதிரி கேட்க, ஸ்ரீ குருவாயூரப்பனும் தலையை அசைத்து 'ஆம்' என அங்கீகாரம் செய்தாராம்.

விளக்கவுரை:—புண்ய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்ய வேண்டும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. அதனால் பாபங்கள் விலகுவதோடு, பரம பக்தர்களான மஹான்களின் ஸங்கமும் கிடைக்கும். ஸாதுக்களின் ஸங்கம் ஸர்வ க்ஷேமங்களையும் கொடுக்கும். 'பரமேச்வரன் பக்தர்களுடைய தரிசனத்திற்காகவே புண்ய தீர்த்தம் வந்தார். சுத்த ஸத்வமான பரமேஸ்வரனே இம்மாதிரிப் பக்தர்களின் தரிசனத்திற்கு வந்தால், நம் போன்றவர்களைப்பற்றிக் கேட்க வேண்டுமா? தேவ ரிஷிகளும், ராஜ ரிஷிகளும், ப்ரும்ம ரிஷிகளும் பரம பக்தரான பீஷ்மரைத் தரிசிக்கக் குருக்ஷேத்திரம் வந்ததாகப் பாகவதத்தில் மற்றொரு இடத்தில் கூறப்பட்டுள்ளது. அதாவது பீஷ்மரின் தரிசனமே பரம புருஷார்த்தம் என எண்ணி வந்தார்களாம். இந்த ச்லோகம் வருமாறு:—

तत्र ब्रह्मर्षयः सर्वे देवर्षयश्च सत्तम ।

राजर्षयश्च तत्रासन्द्रष्टुं भरतपुङ्गवम् ॥

1-9-5

தத்ர ப்ரஹ்மர்ஷய: ஸர்வே
தேவர்ஷயச்ச ஸத்தம
ராஜர்ஷயச்ச தத்ராஸந்த்ரஷ்டும்
பரத புங்கவம்

மேலும் அந்த ரிஷிகளின் பெயர்களை அங்குக் கூறியிருப்பதாவது:—

पर्वतो नारदो धौम्यो भगवान्

बादरायणः ।

बृहदश्वो भरद्वाजो सशिष्यो रेणुका

सुतः ॥

1-9-6

वसिष्ठ इन्द्रप्रमदस्त्रितो गृत्समदोऽ

सितः ।

कक्षीवान् गौतमोऽत्रिश्च कौशिकोऽथसु

दर्शनः ॥

1-9-7

अन्येच मुनयो ब्रह्मन्

ब्रह्मरातादयोऽमलाः ।

शिष्यरूपेता आजग्मुः कश्यपाङ्गिरसा

दयः ॥

1-9-8

பர்வதோ நாரதோ தௌம்யோ
பகவான் பாதராயண:
ப்ருஹதச்வோ பாத்வாஜோ
ஸசிஷ்யோ ரேணுகாஸுத:
வஸிஷ்ட இந்த்ர ப்ரமதஸ்த்ரிதோ
க்ருத்ஸமதோ ஸித:
கக்ஷீவான் கௌதமோ த்ரிஸ்ச
கௌசிகோத ஸுதர்சன:
அன்யேச முனயோ ப்ரஹ்மன்
ப்ரஹ்மராதாதயோ மலா:
சிஷ்யைருபேதா ஆஜக்மு:
கச்யபாங்கிரஸாதய:

இங்கு ஸ்ரீ பரமேச்வரனை பக்த தம: எனக் கூறியிருப்பதால், ஸ்ரீமன் நாராயணனிடத்தில் பரமசிவனுக்கு இருக்கும் பக்தியை வெளிப்படுத்துகிறார். தெய்வங்களுக்குள் அன்பிற்குக் குறைவில்லை. அப்படியிருக்க, உபாஸிப்பவர்கள் மற்றொரு தெய்வத்தினிடம் த்வேஷம் காட்டுவது சரியல்ல. இம்மாதிரி த்வேஷம் கூடாது என்பதைக் காட்டவே பரமேஸ்வரனை இங்கு பக்த தம: என்று கூறியிருக்கிறார். 'பவத் தீர்த்தம்' எனச் சொல்லியிருப்பதால், இதுவே நாராயண ஸரஸ் என்றும் குருவாயூரப்பன் கோயிலுக்கு வடபுறம் இருப்பதும் இதுவேயாகும் என்றும் அந்தத் தீர்த்தத்தைக் கங்கைக்குச் சமமானது என்றும் கூறுகிறார்கள். இப்பொழுதும் அங்கு காலையில் செய்யும் ஸ்னானத்தைக் கங்கா ஸ்னானம், கங்கா ஸ்னானம் என்று கத்துகிறார்கள்.

(தொடரும்)

வந்தனாவும் நந்தகோபாலும் ஒரு பேபி டாக்ஸியில் போய்க்கொண்டிருந்தனர். புதுமணத் தம்பதிகள் அவர்கள். கல்யாண ஸீஸன் ஆரம்பமானதும் தலை நீட்டிய முதல் முகூர்த்தத்தில் திருமணம் புரிந்துகொண்டவர்கள்.

'எங்கே போவது வந்தனா?' என்று கேட்டான் நந்தகோபால்.

அவள் முகம் சிறிது சுருங்கி விரிந்தது. ஒரு புன்னகை லாகவமாக முகத்தில் தோன்றி மறைந்தது. மாலைச் சூரியனின் பூச்சுப்போல ஒரு செம்மையும் அவள் கன்னங்களில் தோன்றி, அந்தப் புன்னகையைத் தொடர்ந்து சென்றது.

'என்னைக் கேட்டால்?'— கேட்ட நிலையில் மீண்டும் ஒரு புதிய புன்னகை பிறந்து, அவள் அதரங்களில் நிலைத்தது. அந்த நிலை ஒரு அழகான நிலையாயிருந்தது. நந்தகோபால் அதைக் கவனிக்காததுபோல டாக்ஸி ஜன்னலின் வழியாக வெளியே பார்த்துக்கொண்டிருந்தான்.

'மரீனா பக்கம் போப்பா!' என்றான் அவன்.

பத்து நிமிஷங்களில் சென்னை நகரின் பல பிரதேசங்கள் சேர்ந்த பெரிய பகுதி அந்தப் புதிய தம்பதிகளின் காலடிகளுக்குக் கீழாக நழுவி, மறைந்தது. மரீனா கடற்கரை அவர்கள் கண்களை நிறைத்துக் கொண்டு காட்சியளித்தது. வந்தனா அந்தப் புதுமையிலும் இனிய சூழ்நிலையிலும் தன்னை மறந்து காணப்பட்டாள்.

மாலை நேரம். சூழ்நிலையின் புழுக்கத்தையும் அடக்கி, அங்கே குழுமியிருந்த மக்களின் மனப் புழுக்கத்தையும் தணிக்கிற மகத்தான தொண்டைச் செய்துகொண்டிருந்தது அந்த மனோகரமான நேரம். ஆனால், அந்தத் தொண்டைப் புறக்கணித்து, இன்ப உலகத்தையே புறக்கணிப்பதுபோல் சிலர் தங்கள் மனப் புழுக்கத்தைத் தவிர்த்துக் கொள்ளாமலே தவிப்பதும் உண்டல்லவா? அந்த ரகத்தைச் சேர்ந்தவனாக இருந்தான்—இப்போது மட்டும்—நந்தகோபால்.

வானம் நீல மயமாயிருந்தது. அதைத் தாவி எட்டிவிடத் தன் அலைக் கரங்களை நீட்டி ஆர்ப்பரித்துக் கொண்டிருந்த கடல், நீல நிறத்தில் மின்னியது. கனவுலகின் ஒரு வீதிபோல் விசாலித்து [illegible] கடற்கரைச் சாலையில் வழுக்கியோடிக்கொண்டிருந்த வாகனங்கள் மீதும், நடமாடிக்கொண்டிருந்த மனிதர்கள் மீதும் செய்துகொண்டிருந்த ஒளியின் மூலஸ்தானங்களான மெர்க்குரி விளக்குகள் நீலம் பாரித்து ஜொலித்தன. வந்தனா அந்தச் சூழ்நிலையில் தன்னை ஏற இறங்கப் பார்த்துக்கொண்டாள். அவள் உடுத்தி வந்திருந்ததும் ஒரு நீல நிறச் சேலைதான். ஆனால், அந்த மெர்க்குரி விளக்கின் மாயத்தினால் அது மாநிறத்தைக் காட்டிச் சிரித்தது!

அவர்கள் இருவரும் ஒரு ஸிமெண்ட் பெஞ்சின் மீது உட்கார்ந்துகொண்டிருந்தனர்.

'உங்களுக்கு ஒன்றுமே பேசத் தோன்றவில்லையா?' என்று ஆரம்பித்தாள் வந்தனா.

'ஆமாம்.'

'அப்படியானால் இங்கே ஏன் வந்தோம் நாம்?'

'காரணமாகத்தான்.'

வில்லன் பேசும் வெட்டு வசனம் அவள் நினைவில் வந்தது.

'கல்யாணத்திற்குப் பிறகு நாம் அனுபவிக்க வேண்டிய 'தேநிலவு'ப் பிரயாணங்களின் ஒத்திகைகள் இந்தக் குட்டிப் பிரயாணங்கள் என்று எனக்கு ஆசை காட்டினீர்களே...'

'யாருடன் நீ 'தேநிலவு' அனுபவிக்க வேண்டும்? இவனுடனல்லவா?' என்று ஒரு புகைப் படத்தை அவள்முன் விட்டெறிந்தான் நந்தகோபால்.

பதறி எடுத்தாள் அந்தப் புகைப் படத்தை. அதில் அவளும் வேறு யாரோ ஒரு வாலிபனும் நின்றுகொண்டிருந்தார்கள். பின்னணியில் கலைக் கல்லூரிக் கட்டிடம் கம்பீரமாகக் காட்சியளித்தது.

'ஐயோ, இது என்ன?' என்று வீறிட்டாள் வந்தனா. அவள் கைகளினின்றும் புகைப்படம் கீழே நழுவியது.

'இந்த, இங்கே கூச்சல் போட்டு ஊரைக் கூட்டி, ஒரு பெரிய நாடகம் நடத்தாதே! யார் இந்தப் படத்தில் இருப்பவன்?'— கீழே விழுந்த படத்தை எடுத்துத் தன் கைப்பைக்குள் வைத்தபடிக் கேட்டான் நந்தகோபால். அது ஒரு பெரிய என்லார்ஜ்மெண்ட் புகைப்படம்.

'ஐயையோ! என்னை ஒன்றும் கேட்காதீர்கள். எனக்குப் பயமாக இருக்கிறது. அது யாரோ, எனக்குத் தெரியாது. நான் யாருடனும் இப்படிச் சேர்ந்து படம் எடுத்துக்கொள்ளவில்லை.' வந்தனாவின் தேகம் நடுங்கியது. அவள் முகம், சீறும் சிங்கத்தைக் கண்டு பதறும் முயலின் முகம்போலிருந்தது. தன் ஆசைக் கணவனின் முகத்தையும் பார்க்கத் தைரியமில்லாமல் அவள் வேறுபுறம் திரும்பிக் கொண்டிருந்தாள். அவள் உதடுகள், கேவி அழுத இளம் குழந்தையின் குருத்து உதடுகள் நடுங்குவதுபோல் நடுங்கின.

'சேர்ந்து எடுத்துக்கொள்ளாமல் எப்படி இப்படித் தத்ரூபமாக அமையும்? எழுதின சித்திரமல்ல இது; நன்றாகப் பார்த்தாயா?'

'என்னை நம்பவில்லையா நீங்கள்?' கொஞ்சம் தைரியம் வந்து பேசத் தொடங்கினாள் வந்தனா. 'நம் வாழ்வைக் கண்டு பொருமிய யாரோ போட்டோவில் தந்திரம் செய்து, இதை உங்கள் பார்வையில் பட வைத்திருக்கின்றனர்.'

'யாரும் என் பார்வையில் வைக்கவில்லை. நான் தேடாமல் மூர்மார்க்கெட்டில் ஓரணாவுக்குக் கிடைத்தது இது!... வந்தனா, இதற்கு ஒரு முடிவு கிடைக்க வேண்டும். உண்மையைச் சொல். உண்மையை நீ சொல்லிவிட்டால், நான் உன்னை மன்னித்து ஏற்றுக்கொள்ளக் கூடத் தயாராக இருக்கிறேன். ஏனெனில், உன்னை விரும்பி மணந்துகொண்டிருக்கிறேன். உன்னை இழக்கவும் எனக்கு இயலாது. ஆனால், எனக்குத் திருப்தியளிக்கும்வகையில் இருக்க வேண்டும் உன் சமாதானம்!'

அவள் இப்போது வீராங்கனையாக மாறினாள்.

'நான் ஏதாவது பொய் சொல்லித்தான் உங்களைச் சமாதானம் செய்யவேண்டும். இது ஏதோ ஒரு பெரிய மர்மம். சூழ்ச்சி. நானும் உங்களுக்காகத் தவம் இருந்து, உங்கள் கரம்பற்றி மகிழ்ந்திருப்பவள் தான். என்னை நீங்கள் புறக்கணித்தாலும் அதைப் பெரிதாகக் கருதமாட்டேன்; ஆனால், உங்களைத் திருப்தி செய்யப் பொய் கூற என் மனம் இடம் தராது. அது என்ன படமோ, தெரியாது. அது என் வயிற்றைக் கலக்கிவிட்டது. அதைப்பற்றி என்னிடம் பேச்சு எடுக்காதீர்கள்!'

ஐந்து நிமிஷ நேரம் அவர்களிடையே மௌனம் நிலவியது. தொலைவில் வெறித்துப் பார்த்தான் நந்தகோபால். எதிர்

எதிர்த் திசைகளில் காற்றிலும் கடுவேகமாகப் பறந்த கார்களையும், அவற்றினுள்ளே அமர்ந்து சென்றவர்களின் பல்வேறு முகங்களையும் அலுக்காமல் சிறிது நேரம் ஊன்றிக் கவனித்தான். இந்த மாய உலகத்தின் சலன நிலையை அவை நிர்ணயம் செய்து காட்டும் சின்னங்களாகத் தோன்றின அவனுக்கு.

'சரி; எழுந்திரு, பார்க்கலாம். இதைக் கண்டுபிடிக்க முடியாமலா போகிறது? பாவம், நிரபராதி என்று நீ சாதிக்க முற்படுகிறாய். உன்மேல் எனக்கு அனுதாபம் இருக்கிறது, வந்தனா. ஆனால், நகப் புண்ணைக் கண்ணாடி பிடித்துப் பார்க்க வேண்டுமா?' என்று கூறிக்கொண்டே, எழுந்து நடந்தான் நந்தகோபால். வந்தனா அவனைத் தொடர்ந்தாள்.

வந்தனாவின் அழகுக்கு அடிமைப்பட்டுத்தான் நந்தகோபால் அவளைக் கல்யாணம் செய்துகொண்டான். அவர்கள் மணம் காதல் மணம். அவள் ஒரு வெளிநாட்டு எண்ணெய்க் கம்பெனியின் சென்னைக் கிளைக் காரியாலயத்தில் 'ரிஸப்ஷனிஸ்'டாக வேலை பார்த்துக் கொண்டிருந்தாள்.

நந்தகோபால் ஒரு நாள் அவசர அவசரமாக ஒரு டெண்டரை அந்தக் கம்பெனியில் சேர்ப்பதற்காகக் கொணர்ந்திருந்தான். அந்தக் கம்பெனி நகரின் ஒரு பகுதியில் ஏற்படுத்தவிருந்த பெட்ரோல் பங்க் கட்டிடத்துக்கான டெண்டர் அது. அன்றுதான் டெண்டர்கள் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள். நந்தகோபால் ஒரு சிறந்த இளம் இஞ்ஜினீயர். நகரில் பல கட்டிடங்கள், 'பங்க்'குகள் கட்டியிருந்தான். அந்தக் கம்பெனியின் டெண்டரின் கடைசித் தேதி மறுநாள் என்று எண்ணியிருந்த அவனுக்குத் திடீரென்று ஏதோ சந்தேகம் தோன்றி, அன்றுதான் கடைசி நாள் என்பது தெரிந்தது. அவசரம் அவசரமாக டெண்டர் குறித்து, ஐந்து மணிக்குள் அதைக் கம்பெனியில் சேர்க்கக் கொணர்ந்திருந்தான். அவனே நேரில் வருவது அவசியம் என்று காரில் வந்திருந்தான்.

மணி ஐந்து அடித்து ஐந்து நிமிஷம் ஆகியிருந்தது.

'இதைக் கொஞ்சம் இன்றையத் தேதியில் குறித்து வாங்கிக்கொள்ளுங்கள், தயவுசெய்து' என்றான் நந்தகோபால்.

'சரி; அதற்கென்ன? இது ஒன்றும் பிரமாத காரியமல்ல!' என்று வாங்கிக்கொண்டாள் வந்தனா. அன்று அவள் அழகைக் கண்டு சொக்கியே நின்றான் நந்தகோபால். டெண்டர்மூலம் கிடைக்கும் வெற்றியைவிட அவளைச் சந்தித்ததில் ஏற்பட்ட வெற்றியை இட்டு நிரப்ப அவன் இதயத்தில் இடமே இல்லை. அது பூரித்து வெடித்துவிடத் தயாராக நின்றது.

டெண்டர் வெற்றியும் அவனுக்கே கிடைத்தது. பெட்ரோல் பங்க் கட்டிடத்தை மிகச் சிறப்பாகக் கட்டி, நல்ல லாபமும் அடைந்தான் அவன். கட்டிட வேலைத் தொடர்பு ஏற்பட்டதும் அந்தச் சாக்கில் ஒரு நாளைக்கு இரண்டு தடவைகள் வந்து வந்தனாவைத் தரிசிப்பான்.

பெட்ரோல் பங்க் திறப்பு தினத்தன்று அவனுக்கும் வந்தனாவுக்கும் திருமணமும் நடந்தது. 'பொன்னிற மேனியும், பூரித்த உடல் அழகும், வீணைக் குரலும் எல்லாம் ஒருங்கே படைத்து, பேசும் தெய்வச் சிலைபோன்றிருந்த வந்தனாவை அடைய இந்த ஜன்மத்தில் கொடுத்து வைத்திருக்கிறோம்' என்று எண்ணிச் சந்தோஷமடைந்தான், அவன்.

அந்த மனோநிலை ஒரு மாதத்துக்கு முன்பு இருந்தது. இப்போது அதற்கு நேர் மாறான நிலையில் பைத்தியம் பிடித்த மாதிரி அந்தப் போட்டோவின் புதிரை விடுவிப்பதே லட்சியமாக மிருகம்போல் அலைந்தான் நந்தகோபால்.

மவுண்ட் ரோடில் அவன் ஏதோ சிந்தனையாகப் போய்க்கொண்டிருந்த போது, 'டாய்! அப்பாலே போடா!... சோதா! உன்னேதாண்டா!' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டு நின்றான். நல்ல வேளை; அவனை யாரும் அப்படிச் சொல்லவில்லை! ஒரு பஸ் ஸ்டாண்டில் நாலைந்து பையன்கள் நின்றுகொண்டிருந்தார்கள். 'வெட்டி' என்ற இனத்தைச் சேர்ந்தவர்கள் அவர்கள் என்பது பார்த்தவுடனேயே தெரிந்தது.

'இருடா. படம் புடிக்கிறாங்க. நிப்பமேடா. எல்லாம் லயாறு கறுக்கா நில்லுங்கடா!' என்றான் இன்னொருவன்.

'அட சீ! உன் கண்ணு ஒண்ணரையாடா கொஞ்சம்? அதா மேயுதே, அந்தக் கழுதையல்லடா படம் புடிக்கிறாங்க? குறுக்கே போகாதிங்கடா, வாங்கடா இப்பாலே!'

நந்தகோபால் அந்தப் பையன் சுட்டிக்காட்டிய திசையில் பார்த்தான், ஒரு கழுதை ஸிகரெட் காகிதம் ஒன்றைப் பொறுக்கிக் கொண்டிருந்தது; திரும்பி எதிர்ச் சாரியில் பார்த்தான். ஆம்; இந்தக் காட்சியைத்தான், ஒருவர் காமிரா கொண்டு படம் எடுத்துக் கொண்டிருந்தார்.

நந்தகோபாலன் மனத்தில் 'பளிச்' சென்று ஏதோ தோன்றியது. 'விடுவிடு' வென்று எதிர்ச் சாரிக்கு விரைந்தான். மாடியில் இருந்த அந்தக் கம்பெனியை அடைந்தான். படம் எடுத்தவர் காமிராவை அதன் உறைக்குள் திணித்துக் கொண்டிருந்தார்.

'குட் மார்னிங், ஸார்! ஒரு போட்டோ...' என்று ஆரம்பித்தான் அவன்.

'என்ன போட்டோ?'

'நீங்கள் புகைப் படம் எடுக்...'

'இது ஸ்டுடியோ இல்லை, ஸார்! போட்டோ சாமான்கள் மொத்த விலையில் விற்கிற இடம். அதுகூட இப்போது எந்தச் சாமானுக்கும் தகராறுதான், இந்த இறக்குமதிக் கொள்கையினால்...'

'நான் சொல்ல வந்தது அது இல்லை, ஸார். என்னிடம் ஒரு போட்டோ இருக்கிறது. அதைப் பற்றிய சில விஷயங்கள் உங்களைக் கேட்கலாமென்று வந்தேன்... இதோ, இந்தப் படம்...' என்று தோல் பையைத் திறந்து அந்த என்லார்ஜ் மெண்டை (புகைப்படத்தை) எடுத்தான் நந்தகோபால். அதை அவரிடம் நீட்டி, 'இந்தப் புகைப் படம்...' என்று அவன் விளக்க ஆரம்பிக்கு முன்பே, 'இது நாங்கள் எடுத்த படம்தான்... எப்பவோ போன வருஷத்தில் எடுத்தது...ஓஹோ! இது ஏதாவது குழப்பத்தை உண்டு பண்ணியிருக்கிறதா?' என்றார் போட்டோ ஸ்தாபன சிப்பந்தி.

'குழப்பமா? இரண்டு பேர் வாழ்க்கை இதன் உண்மையைத் தேடி ஊசலாடிக் கொண்டிருக்கிறது.'

'நான் விவரமாகச் சொல்கிறேன், கேளுங்கள். இது நாங்கள் எடுத்த படம்தான். எங்களுக்கு வருகிற பிலிம் ஸ்டாக்கிலிருந்து பிலிம் டெஸ்ட் பண்ணுவதற்காக ஒரு ரோல் எடுத்து, சும்மா மேற்போக்காகக் கண்ணில் பட்டதையெல்லாம், படம் பிடிப்போம். இந்தப் படம் கலைக் கல்லூரி பஸ் ஸ்டாண்டைக் குறி வைத்து எடுத்தது; பேப்பர் டெஸ்டுக்காகப் பிறகு என்லார்ஜ் பண்ணியிருக்கிறார்கள். இப்போது, 'ஸுபர் கார்ட்' என்று ஒரு புதிய பேப்பர் வந்திருக்கிறது. அதிலே பெரிதாக்கப்பட்ட படம் இது. பஸ்ஸுக்கு நின்றிருக்கிற இருவரை அவர்கள் அறியாமல் படம் எடுத்திருக்கிறார் நமது புகைப் படக்காரர்...இந்தப் படத்திலுள்ளவர்கள் யார்?' என்று விளக்கத்தை முடித்தார் சிப்பந்தி.

'இதில் உள்ள ஸ்திரீ என் மனைவி. போன மாதம்தான் எங்களுக்குத் திருமணம் நடந்தது. அவளுக்கு ஏதாவது ஒரு அன்பளிப்பு வாங்கலாம் என்று மூர் மார்க்கெட்டுக்குள் நுழைந்த என் கவனத்தை, இந்தப் படம் வலுவிலே கவர்ந்தது... 'ஓணு ஸார், ஓணு!' என்று கூவி விற்றான், ஐயா!... ஆமாம்; இதெல்லாம் எப்ப விற்பனைக்குப் போகின்றன?...'

'இந்த மாதிரி எடுக்கிற படங்கள் ஆபீஸில் குவிந்து விடுகின்றன. எல்லாவற்றையும் தூக்கி வெளியே எறிந்து விடுகிற வழக்கம். பையன்கள் பொறுக்கிக்கொண்டு போய் வியாபாரம் செய்கிறாற்போலிருக்கிறது!'

கனவேகமாக ஓடி வந்தான் நந்தகோபால்.

'வந்தனா!'

அவள் தன் அறையில் கூண்டில் இருக்கும் கிளியின் நிலையில் இருந்தாள். இறைக்க இறைக்க ஓடிவந்து, அவளைத் தழுவிக்கொண்டான், நந்தகோபால்.

'போட்டோக் கலை இன்பத்தையும் கொடுக்கக் கூடியது; குழப்பத்தையும் விளைவிக்கக் கூடியது, வந்தனா. அதன் புதிரைப் புரிந்துகொண்டு வந்துவிட்டேன். என்னை மன்னித்து விடு. உன் பொறுமைக்கு ஒரு வந்தனம், வந்தனா!' என்றான் அவன். அவள் முகம் மலர்ந்தது.

★

கலா மண்டபம்

நாராயணன் கம்பெனியாரின் 'இல்லறமே நல்லறம்'

நாராயணன் கம்பெனியாரின் சமூகப் படமான 'இல்லறமே நல்லறம்' என்ற படத்திற்காக சமீபத்தில் குமாரி கமலா ஆடும் நடனம் ஒன்று ஜெமினி ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது. இந்த நடனம் கேவா கலரில் படமாக்கப்பட்டது. 'இல்லறமே நல்லறம்' படப் பிடிப்பு வேலைகள் பூர்த்தியடைந்து விட்டன. தணிக்கை அதிகாரியின் முத்திரையையும் பெற்று விட்டது. விரைவில் திரைக்கு வரப் போகும் படங்களில் இதுவும் ஒன்று. இப்படத்தை பி. புல்லையா டைரக்ட் செய்துள்ளார். கே. வி. ஸ்ரீநிவாசன் கதை, வசனங்களை எழுதியுள்ளார். ஜெமினி கணேசன், சாவித்திரி, ராஜம்மா மற்றும் பிரபல நடிக நடிகையர் இதில் நடித்துள்ளனர்.

'செங்கோட்டை சிங்கத்'தில் குதிரையின் அபார நடிப்பு

தேவர் பிலிம்சாரின் 'செங்கோட்டை சிங்கம்' படப் பிடிப்பு வேலைகள் முடிவடைந்து விட்டன என்றே கூறலாம். இரண்டொரு இணைப்புக் காட்சிகளே பாக்கியுள்ளன. அவையும் இன்னும் இரண்டொரு தினங்களில் முடிவடைந்து விடும். இப்படத்திலே கதா நாயகன் காண்டா மிருகத்துடன் சண்டை போடும் காட்சி பயங்கரமாக இருக்கும். ஆனால், இந்தக் காட்சியையும்விட மயிர்க்கூச்செறியும் சம்பவங்கள் பல 'செங்கோட்டை சிங்கம்' படத்தில் இடம் பெற்றுள்ளன. கதா நாயகனும் அவனது எதிரியும் சண்டை போடுகிறார்கள். எங்கே? ரயில் தண்டவாளத்தின்மீது. அது சமயம் வரப்போகும் வண்டிக்காகப் போர்ட்டர் பாயிண்டு மாற்றுகிறான் அதாவது, வண்டி எந்த பாதையில் போக வேண்டும் என்பதைப் பாயிண்டு பிளவுகளை ஒன்று சேர்ப்பதாலோ, பிரிப்பதாலோ செய்யப்படுவதைச் செய்கிறான். அப்போது தண்டவாளத்தின்மீது சண்டை போட்டுக்கொண்டிருந்த கதா நாயகனின் கால்கள் அந்தப் பாயிண்டு பிளவுகளில் இருக்கவே பாயிண்டை போர்ட்டர் போட்டதும் கதாநாயகனால் கால்களை எடுக்க முடியாமல் போய் விடுகிறது. தூரத்தில் ரயில் வண்டி வருவதைக் கண்ட எதிரிகள் கதாநாயகன் இந்த ரயிலில் அரைபட்டு ஒழிந்து விடுவான் என்று சந்தோஷத்துடன் சென்று விடுகிறார்கள். ரயிலும் நெருங்கிக்கொண்டிருக்கிறது. இன்னும் சில நிமிஷங்களில் கதாநாயகன் அதற்கு இரையாக போகிறான். அதே சமயத்தில் கதா நாயகன் விசில் அடிக்கிறான். எங்கிருந்தோ ஓடி வருகிறது அவனது குதிரை. பாயிண்டிடம் ஓடித் தன் முகத்தினால் பாயிண்டைத் தூக்கிப் போட்டு விடுகிறது. கதாநாயகன் பேராபத்தினின்றும் தப்பி, குதிரையில் சென்று விடுகிறான். இந்தக் காட்சிகள்தான் சமீபத்தில் மைசூர் பிரதேசத்திலுள்ள ஒரு அழகிய ஸ்டேஷனில் படமாக்கப்பட்டது. இக்காட்சியில் கதாநாயகனாக உதயகுமார் நடித்தார். அவருடன் தயாரிப்பாளரான சின்னப்ப தேவரும் நடித்தார். படத்தில் புலிச் சண்டைக் காட்சியொன்றும் வருகிறது. விரைவில் வெளி வரப் போகும் இந்தப் படத்தில் சரோஜா தேவி, பண்டரி பாய், மைனாவதி, உதயகுமார், சகஸ்ரநாமம், வி. ஆர். ராஜகோபால், சகாதேவன் மற்றும் பலர் நடிக்கின்றனர். கே. வி. மகாதேவன் சங்கீதம் அமைத்துள்ளார். புரட்சி தாசன் வசனங்களை எழுதியுள்ளார். வி. என். ரெட்டி இதை டைரக்ட் செய்துள்ளார். அடுத்த மாதம் இப்படம் தமிழ் நாடெங்கும் திரையிடப்படும்.

தேவர் பிலிம்சாரின் 'நீலமலைத் திருடனை' ஹிந்தியில் 'டப்' செய்ய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

★★★★★★★★★★★★★★★★★★★★

சென்ற 21-ந் தேதி ஸெயிண்ட் மேரீஸ் ஹாலில் ஒட்டேரி சமூக சேவா சங்க இராப் பள்ளிக்கூட உதவிக்காக நடந்த காட்சிகளில் குமாரி கலாவதி பாம்பு நடனம் ஆடினார்.

வர்ணப்பட நாடகக் காட்சியில் ஈ. வி. சரோஜா

அடுத்தபடியாக வெளி வரப் போகும் படங்கள் மூன்று, நான்கு படங்களில் நீங்கள் அழகான வர்ணக் காட்சிகளைக் காணலாம். அவைகளில் ஒன்று விஜயாவின் 'கடன் வாங்கிக் கல்யாணம்' என்ற படத்தில் வரும் காட்சிகள். சென்ற வாரம் வாஹினியில் இதற்காக ஈ. வி. சரோஜா நடிக்கும் காட்சிகள் சிலவற்றை பிரபல ஒளிப் பதிவாளர் மார்க்ஸ் பார்ட்லியைக்கொண்டு படமாக்கினார் டைரக்டர் பிரஸாத். 'என் செவியில் கேட்கும் இனிய குரலோசை, உன் செவியின் கேளாததேனோ!' என்ற பாடல் பின்னணியில் ஒலி செய்ய ஈ. வி. சரோஜா அபிநயத்துடன் நடித்தார். கடன் வாங்கிக் கல்யாணத்தில் ஒரு ரீல் பூராவும் வர்ணப் படமாக இருக்கும். சிறந்த கருத்துள்ள இந்த ஹாஸ்யக் கதையில் டி. ஆர். ராமச்சந்திரன், சாரங்கபாணி, தங்கவேலு, ரங்க ராவ், கணேசன், சாவித்திரி, ஈ. வி. சரோஜா மற்றும் பலர் நடிக்கின்றனர். தஞ்சை ராமையா தாஸ் வசனம், பாடல்களை எழுதியுள்ளார். பிரஸாத் டைரக்ட் செய்யும் இப்படத்தை நாகி ரெட்டி—சக்ரபாணி தயாரித்துள்ளனர்.

அசோகாவின் படத்தில் ஜெமினி கணேசன் ராஜம் ஜோடி

அசோகா பிக்சர்ஸார் தயாரிக்கப் போகும் 'பெண் குலத்தின் பொன் விளக்கு' என்ற படத்தில் ஜெமினி கணேசன், எம். என். ராஜம் ஜோடியாக நடிப்பார்கள். இப்படத்தில் சாவித்திரியும் நடிக்கக்கூடும். எம். என். நம்பியார், கருணாநிதி, முத்துலட்சுமி ஆகியோரும் நடிக்கின்றனர். முகவை இராசமாணிக்கம் வசனங்களை எழுதி வருகிறார். இது ஏற்கெனவே வெளிவந்த ஒரு தெலுங்குப் படத்தின் கதையை அடிப்படையாகக் கொண்டது. அந்தத் தெலுங்குப் படத்தை

சுதேசமித்திரன்

டைரக்ட் செய்த விட்டலாச்சாரி என்பவரே, இந்தத் தமிழ்ப் படத்தையும் டைரக்ட் செய்கிறார். விரைவில் படப்பிடிப்பு வேலைகளை ஆரம்பிக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

டாகுமெண்டரி செய்திப் படங்களுக்கு தனிக்காட்சிகள்

இந்தியாவின் ஒவ்வொரு முக்கியமான நகரங்களிலும் இனி டாகுமெண்டரி, செய்தி படங்கள் அடங்கிய காட்சிகளை தனியாக நடத்துவதென்று அரசாங்க பிலிம் டிவிஷன் தீர்மானித்துள்ளது. அவ்வாறே சமீபத்தில் பம்பாயில் இக்காட்சி துவக்கி வைக்கப்பட்டது. அப்போது விளம்பர ஒலிபரப்பு மந்திரி ஸ்ரீ கேஸ்கர் பேசும்போது, டாகுமெண்டரி படங்கள் மேல் நாடுகளில் தனிப்பட்ட காட்சிகளாகத் திரையிடப்படுகிறதென்றும், அறிவு வளர்ச்சி, உலக விவகாரம் ஆகியவைபற்றிய படங்களைமட்டும் பார்க்க விரும்புபவர்களுக்கு சௌகரியமாக இருக்கிறது என்றும் கூறி, நமது நாட்டிலும் அந்த முறையைக் கைக்கொண்டால் சௌகரியமாக இருக்குமென்றும் கூறினார். விரைவில் இந்தியாவில் மற்ற முக்கியமான நகரங்களிலும் இம்மாதிரி டாகுமெண்டரி, செய்திப் படங்களை விசேஷக் காட்சிகளாக திரையிடப் போவதாகவும் அறிவித்தார். இந்திய சர்க்கார் பிலிம் டிவிஷன் சிறந்த டாகுமெண்டரி, செய்திப் படங்களைத் தயாரித்து பரிசுகள் பெற்றிருக்கிறது. பிலிம் டிவிஷன் தயாரித்த டாகுமெண்டரிகள் பலவற்றை இதர நாடுகள் வாங்கியுள்ளன. இப்படங்கள் தனியாகத் திரையிடப்பட்டால், மற்ற படங்களைப் பார்க்க விரும்பாதவர்கள் இதைமட்டும் பார்த்துவிட்டு வர வசதியாக இருக்கும் என்பதே இதன் நோக்கம்.



கெயிட்டியிலும் பாரத்திலும் வெளியாகும் 'பாட்டாளியின் சபதத்'தில் திலீப் குமாரும் வைஜயந்தி மாலாவும்.

தாய் மகளுக்குக் கட்டிய தாலி

சமீபத்தில் இப்படத்திற்கான சில காட்சிகளை பாரமவுண்டு ஸ்டுடியோவிலே டைரக்டர் ஆர். ஆர். சந்திரன் படமாக்கினார். இக்காட்சியில் நகைச் சுவை நடிகர் தங்கவேலு நடித்தார். ஏராளமான பெண்களின் போட்டோக்களை வைத்துக் கொண்டு அவர் தமக்கே இயல்பான நகைச் சுவையுடன் அதிலுள்ள ஒரு போட்டோ பெண்ணுடன் பேசி நடித்தார். 'தாய் மகளுக்குக் கட்டிய தாலி' என்ற இப்படத்தின் கதை ஸ்ரீ அண்ணாதுரை எழுதியது. இதன் வசனங்களை அரங்கண்ணல் என்பவர் எழுதியுள்ளார். இப்படத்தில் எம். ஜி. ராமச்சந்திரன், ஜமுனா, ராஜ சுலோசனா, ஈ. வி. சரோஜா ஆகியோர் நடிக்கின்றனர். படப் பிடிப்பு வேலைகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

சபாஷ் மீனா

நடிகர் டைரக்டர் பி. ஆர். பந்துலு தயாரித்துவரும் 'சபாஷ் மீனா' என்ற படத்திற்காக சமீபத்தில் பரணி ஸ்டூடியோவில் நாடக மேடைக் காட்சிகள் சில படமாக்கப்பட்டன. நடிக மேதை ஒருவனை மிகுந்த சிரமத்தின்மீது மேடைக்குக் கொண்டு வருகிறார்கள். ஆனால், அவன் நாடகத்தின் பாதியில் ஓடி விடுகிறான். காரணம், முன் வரிசையில் உள்ளவர்களிடையே தன் தந்தையும் அமர்ந்துள்ளதைக் கண்டு விட்டதுதான். ஏனென்றால், இந்த நடிக மேதை கலை ஆர்வ மிகுதியில் வீட்டைவிட்டு ஓடி வந்து விட்ட பெரிய இடத்துப் பையன் இவன். அவனைத் தேடித்தான் தந்தை வந்திருந்தார். நடிக மேதை மேடையிலிருந்து உள்ளே சென்றவன் திரும்பி வராததைக் கண்டு சபையினர் கலாட்டா செய்ய ஆரம்பித்து விட்டனர். பிறகு, நாடக சபை உரிமையாளர் மேடைமீது தோன்றித் தந்திரமாகப் பேசி நிலைமையைச் சமாளித்து மேதைகள் எல்லோருமே இப்படித்தான் என்று கூறி, அவர்கள் மனத்தைத் திருப்பி ஓடிப்போன நடிக மேதைக்கு 'ஜே' கோஷம் போடச் செய்து விடுகிறார்.

இக்காட்சிகள்தான் சென்ற வாரம் படமாக்கப்பட்டது. இப்படத்தில் சிவாஜி கணேசன், சந்திரபாபு, சரோஜா தேவி, புது முகம் மாலினி ஆகியோர் நடிக்கின்றனர். ப. நீலகண்டன் வசனங்களையும் கு. மா. பாலசுப்ரமண்யம் பாடல்களையும் எழுதியுள்ளனர். பந்துலு டைரக்ட் செய்வதுடன் இதில் நடிப்பிலும் பங்கெடுத்துக்கொண்டுள்ளார்.

ஜூலை 11-ந்தேதி தமிழ்நாடெங்கும் 'திருமணம்'

அடுத்த மாதம் 11-ந் தேதியன்று தமிழ்நாடெங்கும் உள்ள முக்கிய நகரங்களில் 'திருமணம்' நடைபெறப் போகிறது. ஆனால், சாதாரணமாக நடக்கும் திருமணங்கள்போன்றதல்ல இது. பல லட்ச ரூபாய் செலவில் நடைபெறும் 'திருமணம்' இது. இந்தத் திருமணத்தை நடத்தப் போகிறவர் திரைக் கதை எழுத்தாளரான வலம்புரி சோமநாதன்தான். வலம்புரி பிக்சர்ஸார் தயாரித்துள்ள 'திருமணம்' என்ற படம் அடுத்த மாதம் 11-ந் தேதி தமிழ் நாடெங்கும் திரையிடப் படப் போகிறது. உருக்கமான குடும்பக் கதை. இதன் கதை, வசனங்களை வலம்புரி சோமநாதன் எழுதியுள்ளார். பீம்சிங் டைரக்ட் செய்துள்ள இப்படத்தில், ஜெமினி கணேசன், சாவித்திரி, எம். என். ராஜம், ரங்க ராவ், நாகையா மற்றும் பிரபல நடிக, நடிகையர் பலர் நடித்துள்ளனர். அதுமட்டுமல்ல. குமாரி கமலாவின் மிக அழகான நடனக் காட்சியொன்றையும் மற்றும் பல வர்ண நடனக் காட்சிகளையும் அற்புதமாகத் தயாரித்து இதில் சேர்த்துள்ளனர். திருமணத்திற்கு விஜயம் செய்ய வேண்டுமென்று பொது மக்களுக்கு வலம்புரி பிக்சர்ஸார் பத்திரிகை விளம்பரம்மூலம் அழைப்புகள் அனுப்பியுள்ளதை நீங்களே அறிவீர்கள். சென்ற வாரம் இப்படத்திற்காக தங்கவேலு, எம். என். ராஜம் நடித்த காட்சிகள் சிலவும் படமாக்கப்பட்டு, படத்தின் வேலைகள் முடிவு பெற்றன.

கணேஷ் மூவிடோனின் அடுத்த படம்

'மகா தேவி' என்ற படத்தைத் தயாரித்த கணேஷ் மூவிடோன், அடுத்தபடியாக எம். எஸ். சோலைமலையின் கதையொன்றைப் படமாக்கப் போகிறார்கள். இப்படத்தில் பிரபல நட்சத்திரங்கள் ஒருவரும் இருக்க மாட்டார்கள். இரண்டாவது படியில் உள்ள நட்சத்திரங்களும் புதிய முகங்களுமே நடிப்பார்கள். இப்படத்தை டைரக்ட் செய்து தயாரிக்கப் போகிறவர் ஸ்ரீ சுந்தர் ராவ் நட்கர்னி.



செங்கோட்டை சிங்க'த்தில் தேவர்-உதயகுமார் கத்திக் கலப்பு

நடிகர் ஸ்ரீராமின் சொந்தப் படம்

ஏற்கெனவே 'மண மாலை' என்ற படத்தை சொந்தத்தில் ஜனதா பிக்சர்ஸ் என்ற பெயரில் தயாரித்த நடிகர் ஸ்ரீராம் தற்போது ஸ்ரீராம் புரொடெக்ஷன் என்ற பெயரில் மீண்டும் ஒரு சொந்தப் படத்தைத் தயாரிப்பார். இப்படத்தின் பெயர் 'பெரிய வீட்டுப் பெண்கள்'. சமீபத்தில் இப்படத்திற்கு சிலம்புச் செல்வர் ம. பொ. சி.யின் தலைமையில் பூசை நடந்தது. பட உலகப் பிரமுகர்கள் பலர் வந்திருந்தனர். இப்படத்தின் கதை, வசனங்களை ஏ. பி. நாகராஜன் எழுதுகிறார். சங்கீதம் கே. வி. மகாதேவன், பாடல் மருதகாசி, டைரக்ஷன் சோமு. இப்படத்தில் ஸ்ரீராம், சிவாஜி கணேசன், எம். என். ராஜம், தங்கவேலு மற்றும் பல பிரபல நடிக, நடிகையர் நடிப்பார்கள்.

கவிஞர் படம் தயாரிக்கிறார்

தமிழ்ப் படங்களுக்குப் பாடல்கள் எழுதிப் புகழ் பெற்ற கவிஞர் கா. மு. ஷெரீப் தற்போது மற்றும் சில நண்பர்களின் உதவியுடன் சொந்தத்தில் ஒரு படத்தை ஆரம்பித்துள்ளார். இப்படத்திற்கு வசனம், பாடல்களை அவரே எழுதுவார். படத்தை ஏ. பி. நாகராஜன் டைரக்ட் செய்வார். சங்கீதம் அமைப்பவர் கே. வி. மகாதேவன். எஸ். எஸ். ராஜேந்திரன், பிரேம் நசீர், வி. கே. ராமசாமி, டி. ஆர். ராமச்சந்திரன், எம். என். ராஜம், முத்துலட்சுமி, கருணாநிதி, ஏழுமலை ஆகியோர் நடிப்பார்கள். இப்படத்தின் ஆரம்ப விழாவன்று சங்கீத டைரக்டர் மகாதேவன் ராஜேஸ்வரி பாடிய பாடல் ஒன்றைப் பதிவு செய்தார். படப் பிடிப்பு வேலைகள் விரைவில் ஆரம்பமாகும்.

தேடி வந்த செல்வம்

டைரக்டர் நீலகண்டன் அரசு பிக்சர்ஸ் என்ற பெயரில் தயாரித்து வரும் இப்படத்திற்காக சமீபத்தில் சில காட்சிகள் படமாக்கப்பட்டன. இக்காட்சியில் ராஜசுலோசனாவும் ராஜேந்திரனும் நடித்தார்கள். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதிய ரசமான கிராமியக் காதல் பாடல் ஒன்றைப் பின்னணியில் பாட வைத்து அதற்கு இசைய காட்சிகள் படமாக்கப்பட்டன. இப்பாடலை டி. எம். சௌந்தரராஜன் பாடியுள்ளார். சங்கீதம் அமைத்தவர் லிங்கப்பா. நீலகண்டன் டைரக்ஷனில் முனைந்திருப்பதால் வசனம் எழுதும் பொறுப்பை ஸ்ரீ சோலைமலை ஏற்றுள்ளார். ராஜேந்திரன், பாலையா, டி. கே. ராமச்சந்திரன், ராஜசுலோசனா, லட்சுமி பிரபா மற்றும் பலர் இதில் நடிக்கின்றனர்.

கண்களும் வாளும்

சிட்டடல் பிலிம்சார் தயாரித்து வரும் இப்படத்திற்காக சில இயற்கைக் காட்சிகள் சமீபத்தில் பங்களூர் லால் பாக் பூங்காவில் படமாக்கப்பட்டன. கூர்க் பிரதேசத்தில் மற்றும் சில காட்சிகளைப் படமாக்க டைரக்டர் ஜோஸப் தளியத் சென்றுள்ளார். அலெக்ஸாண்டர் டூமாஸின் 'மூன்று வீரர்கள்' என்ற கதையை அடிப்படையாகக் கொண்டதுதான் இந்த 'கண்களும் வாளும்' என்ற படம். இதில் பெரும்பாலும் புது முகங்களே நடிக்கின்றனர்.

நாடக அரங்கம்

ப்ரொடெக்ஷன் நம்பர்-3.

சென்னை அகௌண்டெண்ட் ஜெனரல் ஆபீஸ் பொழுது போக்குச் சங்கத்தின் அருங்கலைப் பிரிவினர் இம்மாதம் 10-ந் தேதி 'ப்ரொடெக்ஷன் நம்பர்- 3' என்கிற ஹாஸ்ய நாடகத்தை அவர்களது ஆபீஸ் திறந்த வெளி அரங்கில் நடித்துக் காட்டினர்.

சூபர்வைசரி டைரக்டராகத் தோன்றிய ஸ்ரீநிவாசனின் நடிப்பும், பேச்சும் தரமாக இருந்தன. நாடகத்தை டைரக்ட் செய்ததுடன், நாடகக் கதையிலும் டைரக்டராக வந்த பாலசந்தர் கச்சிதமாக நடித்தார்.

'மஞ்சுபாஷிணி' பாகம் ஏற்ற கிருஷ்ணாவின் நடிப்பு ரொம்ப ஜோர். 'செட்டியார்' பார்த்தசாரதி ஜோராக நடித்தார். கடைசியில் விருந்தளிக்கும் கட்டத்தில் அவரது நடிப்பில் கூர் கட்டவில்லை.

வில்லனாக வந்த அனந்தசயனம் நன்றாக முறைத்துப் பார்க்கிறார். அந்த அளவுக்கு நடிப்பிலும் கொஞ்சம் மிடுக்கு தேவை. வில்லன் பாகத்துக்குப் பொருத்தமான நடிகர். நல்ல பயிற்சி அளிக்கப்பட்டால் சீக்கிரமே முன்னணிக்கு வந்துவிடுவார்.

மற்றும் குமாரஸ்வாமி, மகாலிங்கம், வரதாச்சாரி, ராமமூர்த்தி, ராதாகிருஷ்ணன் ஆகியோர் நாடக வெற்றிக்கு செவ்வனே ஒத்துழைத்தனர்.

நிமிஷத்துக்கு நிமிஷம் ஹாஸ்ய நெடியுடைய வசனங்களை அமைத்து கதையை நன்கு வளர்த்துள்ளார் ஸ்ரீ பாலசந்தர்.

1955ம் ஆண்டு அக்டோபர் 17ந்தேதி ஆர்டிஸ்ட் கம்பைன்ஸார் இந்நாடகத்தை அரங்கேற்றினர். அத்துடன் ஒப்பிடும்போது இக்கலைக் குழுவினரின் நாடகம் பலவிதத்தில் நல்ல அபிவிருத்தி கண்டிருக்கிறதெனலாம். சூபர்வைசரி டைரக்டர், செட்டியார், மஞ்சுபாஷிணி ஆகிய பாகமேற்றவர்கள் இத்தடவை அளவோடு நடித்தது குறிப்பிடத் தக்கது.

இம்மாதிரியான முழு ஹாஸ்ய நாடகங்கள் மிகவும் சொற்பமே. ஆகவே, ஸ்ரீ பாலசந்தர் இத்தகைய நாடகங்களை இனியும் எழுதி அரங்கேற்றினால் ரசிகர்களின் பேராதரவு நிச்சயம் கிட்டும்.

சென்னை அகௌண்டெண்ட் ஜெனரல் ஸ்ரீ எஸ். நடராஜன், மாற்றலாகிப் போகும் டெபுடி அகௌண்டெண்ட் ஜெனரல் ஸ்ரீ எஸ். எஸ். லக்ஷ்மீரதன் ஆகிய இருவர் முன்னிலையில் அன்று இந்நாடகம் நடைபெற்றது. இருவரும் கலைக் குழுவினரை வெகுவாகப் பாராட்டினார்கள்.

மவுண்ட் ரோடில் அகௌண்டெண்ட் ஜெனரல் ஆபீஸின் புதிய கட்டிடம் தற்போது கம்பீரமாகக் காட்சிஅளிக்கிறது. அதன் அழகுக்கு அழகு ஊட்ட திறந்த வெளி அரங்கம் பெரிதும் உதவும். ஆகவே திறந்த வெளி அரங்கத்துக்கு நிரந்தரமானதோர் கட்டிடத்தை எழுப்பப் புதிய அகௌண்டெண்ட் ஜெனரல் சீக்கிரமே ஏற்பாடு செய்வாரென அந்த ஆபீஸ் கலை அன்பர்கள் எதிர்பார்ப்பது இயற்கையே.

'அன்னையின் அன்பு'

சேப்பாக்கம் இளைஞர் காங்கிரஸ் ஆதரவில் திருவல்லிக்கேணி சிறுவர் நாடக மன்றத்தார் 'அன்னையின் அன்பு' என்கிற நாடகத்தை ஜூன் 14ந்தேதி ராயப்பேட்டை உட்லண்ட்ஸ் திறந்த வெளி அரங்கில் நடித்தனர்.

கதை வசனங்களை எ. ஜி. மோகன் அமைத்துள்ளார்.

சேகர் பாகம் ஏற்ற எம். ஆர். ராஜாமணியின் நடிப்பு பாராட்டும்படி இருந்தது. 'ரவி' எஸ். சங்கரும், 'சங்கர்' எஸ். கணேசனும் துடியாக நடித்தனர். 'கந்தசாமி'யாக கே. வெங்கடராமன் வந்து நயம்பட நடித்தார்.

'டாக்டர் தாரா'வாகத் தோன்றிய உமாபதிக்கு 'மேக்கப்' போதாது. மேடைக் கூச்சம் நிறைய இருக்கிறது. 'மங்களம்' எம். ஆர். விஸ்வநாதன், 'சிவகாமி' எஸ். முரளி 'பஞ்சாட்சரம்' எம். வைத்தியநாதன் ஆகியோரது நடிப்பு பரவாயில்லை.

பரதநாட்டிய அரங்கேற்றம்

குமாரி பிரேமாவதியின் பரத நாட்டிய அரங்கேற்றம் மயிலாப்பூர் ஒய். எம். ஐ. ஏ. சஞ்சீவ காமத் ஹாலில் ஜூன் 20ந்தேதி நடைபெற்றது. 'காலைத் தூக்கி நின்றாடும்', 'ஆனந்த நடமிடும் பாதன்', 'இவன் யாரோ' ஆகிய பதங்களுக்கு அவர் அழகாக அபிநயம் பிடித்தாடினார். சுருக்கமாக தில்லானாவும் ஆடினார். பாம்பாட்டி நடனம் அழகாக இருந்தது. அதற்கு அப்ளாஸும் வாங்கினார். ஸ்ரீமதிகள் எ. வி. ஜானகி பாஷ்யம், கே. ருக்மணி இருவரும் இனிமையாகப் பதங்கள் பாடினார்கள். தஞ்சை கே. எஸ். நடராஜனின் நடனப் பயிற்சியையும், குமாரி பிரேமாவதியின் திறமையையும் பேராசிரியர் ஸ்ரீ சாம்பமூர்த்தி புகழ்ந்து பேசினார்.

—ஸஞ்சாரி

பாரத் புரொடக்ஷன்ஸ், விக்கிரமாதித்த'னில் விக்கிரமாதித்தனாகத் தோன்றும் எம். ஜி. ஆரும் ரத்னமாலையாகத் தோன்றும் பத்மினியும்

மைசூர் வாசுதேவாச்சார் கீர்த்தனைகள்

ராகம் : கமாஸ்] [தாளம் : சதுரச்ர த்ரிபுடை

ஆ : ஸ ம க ம ப த நி ஸ்
அ : ஸ் நி த ப ம க ரி ஸ

பல்லவி

உபேந்திரமாச்ரயாமி ஸந்ததம்
3
க்ருபால வால மிந்திராபதிம் (உபே)
3

அநுபல்லவி

அபார வைபவம் ஸும பூஷிதம்
4 4
த்விபார்த்தி ஹரணம் ச்ருதி பிரீடிதம் (உபே)
3 4 3

சரணம்

வாஸுதேவ மகில லோக சரணம்
3 2
வாஸவாதி வந்தித வர சரணம்
3 3
பாஸமான சாரதேந்து வதநம்
4 3 3
பாஸுராப்ஜ தள விசால நயனம் (உபே) (85)
4

ப:—எப்பொழுதும் நான் உபேந்திரனையே (ஸ்ரீ மஹாவிஷ்ணுவையே) அடைகிறேன். கருணைக்கிருப்பிடமானவனை, லக்ஷ்மீபதியை. (என்றும் அடைகிறேன்).

அ:—அளவு கடந்த மஹிமைகள் நிறைந்தவனை, புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டவனை, கஜேந்திரனின் கஷ்டத்தைப் போக்கியவனை, வேதங்களால் துதிக்கப்பட்டவனை, (என்றும் அடைகிறேன்).

ச:—வாஸுதேவனை, எல்லா உலகங்களையும் ரக்ஷிக்கிறவனை, இந்திரன் முதலிய தேவதைகளால் வணங்கப்பட்ட திவ்ய சரணாரவிந்தங்கள் உள்ளவனை, சரத்கால சந்திரன்போல் ப்ரகாசிக்கும் முகம் உள்ளவனை, தாமரை இதழ்போன்ற அழகிய விசாலமான கண்கள் உள்ளவனை, இடைவிடாது என்றும் ஸேவிக்கிறேன்.

ராகம்: கமாஸ். தாளம்: சதுரச்ர த்ரிபுடை.

| 0 0

பல்லவி

ஸ்ா ஸ்ஸி நீநீ ஸிதபாபத பம
உ. பே. .ந்தர மா. . . ச்ர யா
தபபம மாமா கமபாபா மப
க்ருபா. . . ல வா. . . ல மிக்
ஸ்ஸிரி ஸ்ஸிநீ ஸித பத பஸ் ஸித பம
உ. . . பே. . . ந்த்ர மா. .ச்ர யா.
ததபம மாமா கம பாபா மப
க்ருபா. . . ல. வா. . . ல. மிக்
ஸ்ஸிரி ஸ்ஸி நீநீ ஸிதபஸ் ஸிதபம
உ. . . பே. ந்த்ர மா. . . ச்ர யா

| காமா பதஸ்ஸி
| . . மி ஸங். .
| தாதா பதஸிஸ்
| . . தி ரா. . .
| காமா பதஸிஸ்
| . . மி ஸங். .
| தாதா பதஸிஸ்
| . . தி. ரா. . .
| காமா பதஸ்ஸி
| . . மி. ஸங். .

| ஸிதா,
| ததம்.
| ,ஸ் ஸ்ஸிஸி தபத
| . ப திம் . . . .
| தஸிபத. ,
| த தம். .
| ,ரி ஸ்ஸிஸி தபத
| . ப திம். . . . .
| ஸிதா,
| ததம்.

அநுபல்லவி

ஸ்ா ஸ்ஸி தஸிஸிப தஸிஸ்ா ஸ்ஸி ஸ்
அபா. . . . ர. . வை. . ப. வம
ஸ்ாஸிஸ் தஸிபா தஸிஸ்ா ஸ்ஸிஸ்ா
அ. பா. . . ர. வை. . ப. வம்
ம்ாக்ா ரிம்க் ரிஸ்நீ ஸ்ா
த்விபா .ர்த்தி ஹ. ர ணம்
ம்ாக்ா ரி ம் க் ரிஸ்நீ ஸ்ா
த்விபா .ர்த்தி. ஹ. ரணம்,

| ,ஸ்ா ஸ்ஸி ரிஸ்ஸ்ா
| . ஸா ம பூ. . . .
| ,க்ரிம்க் ரிஸ்ஸ்ா
| . ஸா. ம பூ. . .
| ,ஸ்ஸ்ாஸ் ஸ்ஸி
| . ச்ருதி பி ரீ
| ம்க்க்ரிஸ்ா ஸ்ஸி
| ச்ருதி . . பி. ரீ .

| ,ஸிதா,
ஷிதம்.
| ,ஸிஸிதா
ஷிதம்.
ரீதா பதஸிஸ்
டி தம் . .
ரீதா பதஸிஸ்
| . . டி தம் .
(உபேந்த்ர மாச்ரயாமி)

சரணம்

, பப பாத பதரிஸ்
.வாஸா தேவ ம. தி.
,மக ரிஸஸா ஸாமகமா பாதஸி தப
.வா. ஸ. . . வா. . தி. வம். . .
, ,நீஸி ஸ்ாஸ் ஸ்ஸிக்ரி
பாஸமான சா. . .
ஸ் ம் க் ரிப்ம்க்ரிஸ் ஸிஸ் ரிக்ரி
பா.ஸா ரா. . . .ப்ஜ த. . ள. . ,

| ஸ்ஸி ஸிதபாஸித
| ல . லோ . . க .
| மகமா பததப
| தி த. வ. ர.
| ம்க் ரிஸ் ஸா, ஸ்ஸி
| ர. . தேர். . . து
| ஸ்ா,ஸ்ஸிரீதா
| வி. சா . ல.

| பமகா மா, ,
| ச. ர ணம். .
| தஸிஸ்ஸி ஸிததா
| ச. ர ணம்.
| தஸிபா தா
| வ த. ஸம்
| பததப பதஸிஸ்
| க. ய நம்.
(உபேந்த்ர மாச்ரயாமி)

சமூக நல் அபிவிருத்தி மந்திரி ஸ்ரீ எஸ். கே. டே. சென்னை சர்க்கார் காரியதரிசிகள், இலாகாத் தலைவர்களுடன் அபிவிருத்தி திட்டம் பற்றிச் சமீபத்தில் விவாதித்தார்.



கோபி பிரதர்ஸ் 'பெண் பாவம் பொல்லாதி'ல் சாவித்திரி குழந்தையுடன் தவிக்கும் கட்டம்

Regd. No. 2514.
Registered as a Newspaper in CEYLON.

Printed and Published by N. Rajagopalan, at the 'Swadesamitran' Press, 'Victory House'
Mount Road, Madras. Editor: C. R. Srinivasan, B. A.